

May 1913. Registered No. M—163

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

“என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்.” (யோவான் 7: 38)

Vol. XIV மே மீ 1913

## ஆவிக்குரிய ஞான ஐக்கியத்தின் இன்ப இரகசியம்

### முகவுரை.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு மகிமையுண்டாவதாக. அவர், பாவ ஆத்துமாவாகிய உன்னை, கறை திரை யாதொன்றுமில்லாமல் சுத்திகரித்து, தமது மகிமையுள்ள பத்திராசனத்தின் முன்னே, நீ அவருக்கு மனையாட்டியாக நிற்கும்படி செய்திருக்கிறார்.

அவரால் நமக்கு அருளப்பட்டிருக்கும் பரிசுத்த ஆவிக்கும், நம்முடைய அருமைப் பரம பிதாவுக்கும், அவர் மூலமாய் தோத்திரமும், துதியும், உண்டாவதாக

கர்த்தராகிய இயேசு, தமது இரக்கத்தின் ஐசுவரியத்தின்படியே, எனக்கு அருளப்பட்டிருக்கிற தேவகிருபையினாலே, அவரோடு இசைந்திருக்கும் ஆத்தும ஐக்கியத்தின் இரகசியத்தை உனக்கு விளக்கிக்காட்டுவது பிரயோஜனம் என்றறிந்து ஆவியின் நடத்துதலினால் இதை எழுத முயன்றேன்.

ஆனால் தேவனோடு மனுஷன் இசைந்திருக்கும் இரகசியத்தை அறிவிப்பதற்கு நான் எம்மாத்திரம். அவர் கையிலிருக்கும் ஒரு பென்னாக மாத்திரம் இருப்பேன்.

அவரே அதை உனக்கு விளக்கிக் காட்டுவாராக.

I-வது, தற்சோதனைக்குரிய போதனை;
II-வது, ஆயத்தம்;
III-வது, பக்குவமாகுதல்;
IV-வது, சிநேகம்;

600 008

V-வது ஐக்கியம்;

VI-வது, பூரணமாகுதல்;

VII-வது முடிவுரை, என ஏழு காரியங்களை நீ கவனிக்க வேண்டும்.

## I-வது, தற்சோதனைக்குரிய போதனை.

ஆத்துமாவே! நீ தேவனோடு வாசம்பண்ணும் ஐக்கியத்தின் இன்ப இரகசியங்களை அனுபவிக்குமுன் உன்னைச் சோதிக்க தேவ ஆவியானவருக்கு ஒப்புவிக்கவேண்டும்.

தேவ ஆவியானவர் உனக்குள் இருக்கிறாரா என்பதே முதலாவது நீ கவனிக்கவேண்டிய குறிப்பு.

தேவ ஆவியானவர் உனக்குள் இருக்கிறாரா? தேவ ஆவியானவர் உனக்குள் இருக்கிறார் அல்லது இல்லை என்பதை நீ எதினால் அறிந்துகொள்ளவேண்டுமென்றால்:—

1. பாவத்தை வெறுக்கும் வெறுப்பும், பரிசுத்தத்தை விரும்பும் விருப்பமும், உனக்குள் உண்டாகியிருக்கிறதா, என்றும்

2. நிர்ப்பந்த பாவியாகிய நீ, உன் பாவங்களினிமித்தம் தேவகோபம், உன் சிரசுக்கு மேலாக நிற்பதை அறிந்து, தேவன் தம்முடைய நேசகுமாரன் மூலமாய் அருளியிருக்கிற இலவசமான இரட்சிப்புக்குள் அடைக்கலம் புகுந்திருக்கிறாயா என்றும்,

3. உனக்காக ஜீவன்விட்டு உன்னை இரட்சித்த கர்த்தராகிய இயேசுவில் அன்புகூர்ந்து அவர் வசனங்களின்படியே கிரியை நடப்பிக்கிறாயா என்றும்,

4. உலகத்திலும் உலகத்தில் உள்ளவைகளிலும் அன்புகூராமல், சகலத்தையும், அவரை அறிந்துகொள்ளுவதற்கென்று நஷ்டமும் குப்பையுமாக எண்ணியிருக்கிறாயா என்றும்,

5. அவர் நாமத்தின் மகிமைக்கென்று மனப்பூரணமாய் உன்னை ஒப்புவித்து அவருக்கே ஊழியஞ்செய்து வருகிறாயா, என்றும் உன்னை சோதித்தறியவேண்டும்.

மேலே காட்டிய ஐந்துவிதமாய் ஆவியானவர் தம்முடைய வேலையை உனக்குள் தொடங்கி நடத்தியிராவிட்டால் நீ இன்னமும் ஆவியானவருக்கு இடங்கொடுக்கவில்லையென்று அறிந்துகொள்.

ஒருவேளை, ஆவியானவர் மேலே காட்டியதில் சில கிரியைகளை உன்னில் செய்திருக்கலாம். அப்படியிருந்தாலும், நீ பூரணமாய் இந்த உலகத்தின் மாயையையும், உன்னையும் அருவருக்குமட்டும் தேவனோடு மனுஷன் இசைந்திருக்கும் இரகசிய இன்பம் இன்னதென்பது உனக்கு விளங்காது.



ஆகையால் உன்னைச் சோதித்தறிந்தபின் நீ செய்யவேண்டியதென்ன?

ஆவியானவர், உனக்கு இவ்வுலகத்தின் ஆசாபாசங்களை கசப்பாக்கி, கர்த்தராகிய இயேசுவின் இன்பத்தையும், சந்தோஷத்தையும் உனக்குத் தரும்படி, தேவனை விடாமல் பிரார்த்தித்துவா.

அதுவுமன்றி, பரிசுத்த ஆவியாகிய தேவன் உனக்குள் வேலை செய்யும்போது, எல்லா விஷயங்களிலும் அவருக்குக் கீழ்ப்படி.

அப்பொழுது கிறிஸ்துவின் நேசத்தையும், அவரின் ஐக்கிய இன்பத்தையும், அனுபவித்துக்கொள்ளுவாய்.

## ஆத்துமாவின் தற்சோதனை.

கர்த்தாவே! என்னை ஆராய்ந்து அறிந்துகொள்ளும். உலகத்தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் என்னைத் தெரிந்துகொண்ட தேவன், தமது அநாதி தீர்மானத்தின்படி, பாவியிலும் மகா பிரதானமான பாவியாகிய எனக்கு, தமது பரிசுத்த ஆவியை அருளினார். அந்த ஆவியானவர் என் பாவத்தை எடுத்துக்காட்டினதில் நான் என் பாவங்களுக்காக துக்கித்து அழுது, கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தால் சுத்தமாகும்படி விரும்பினேன். அவர் என் பாவதோஷங்களையெல்லாம் மன்னித்தார்.

இப்பொழுது என் உயிருக்குயிரான என் அருமை இரட்சகரையே என் ஆத்துமா தொடர்ந்து பற்றிக்கொண்டிருக்கிறது. அவரே எனக்கு ஞானமும், பரிசுத்தமுமானார். ஆகையால், என் முழுமனதோடும், என் முழு பலத்தோடும், அவரில் அன்புகூர்ந்து, அவர் வசனங்களின்படி, அவர் உதவியினாலேயே ஜீவிக்கிறேன்.

இன்னமும், என் விருப்பத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற என் மாமிச சுபாவமும் எனக்குள் இருக்கிறதைக் கண்டு என்னை முழுவதும் அருவருத்து அவரின் அன்பின் ஐசுவரியத்துக்குள் அடைக்கலம் புகுந்திருக்கிறேன். அவரை அறியும் அறிவுக்காக இந்த உலகத்தில் எனக்குப் பிரியமாய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் நஷ்டமும், குப்பையுமென்றருவருத்து அவருடைய சித்தத்தின்படிமாத்திரம் ஜீவிக்கிறேன்.

எல்லா மனுஷருக்காகவும், தேவகுமாரன் பிணைப்பட்டு, ஜீவனை விட்டு, எல்லா மனுஷரையும் இரட்சித்திருக்க இந்த உலகத்திலுள்ள எல்லா மனுஷர்களும் அந்த ஜீவாதிபதியை ஏற்றுக்கொள்ளாத பரிதாபம் என்னை அநுதினமும் நெருக்கி வதைக்கிறது. மேலும் இப்பொழுது, பரிசுத்த ஆவியாகிய தேவன், அந்த ஒரே வேலையை மாத்திரம் செய்யும்படி என்னை நடத்துகிறார்.

இவ்விதமாய் என்மேல் இரக்கங்கொண்ட என் பரமபிதாவாகிய தேவன், என்பேரில் விசேஷித்த தயை பாராட்டியிருக்கிறதை நான் நினைத்து என் முழு உள்ளத்தோடும் அவரை ஸ்தோத்திரிக்கிறேன்.

இப்பொழுது, என்பேரில் அன்புகூர்ந்த என் பரமபிதாவாகிய தேவனே! பாவியிலும் மகா பிரதானமான பாவியாகிய நான், உமது நேச குமாரனை அறிந்து, அவரோடு உறவாடும் ஐக்கிய இன்பத்தை வாஞ்சிக்கிறேன்.

பரிசுத்த ஆவியாகிய தேவனே! என்னை நடத்தும்.

## II-வது ஆயத்தம்.

குமாரத்தியே! கேள்! உன் தகப்பனையும் உன் தாயையும், மறந்துவிடு. அப்பொழுது இராஜா உன் அழகில் பிரியப்படுவார்.

ஆத்துமாவே! இப்பொழுது நான் உனக்கு சொல்லப்போகிறதை கருத்தாய்க்கேள்.

நீ, விரும்புகிற இந்த விருப்பமே, எல்லாவற்றிற்கும் மேலானது. ஒருவன் உலகமுழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபமென்ன?

ஆகையால் நீ உன் ஆத்தும நேசரின் இன்பத்தை அனுபவிக்க வேண்டுமென்றால், இந்த உலகத்தையும், உன்ஜீவனையும் வெறுத்துவிடவேண்டும். இதுவே நீ செய்யும் ஆயத்தம்.

ஒரு முத்து வியாபாரி, ஒரு நல்லமுத்தைக்கண்டு, தனக்குண்டான யாவற்றையும் விற்று, அதைக் கொண்டானாம். அப்படியே, உன் நேசரின் அன்பு உனக்குவேண்டுமானால், நீ உனக்குண்டான எல்லாவற்றையும் விற்றால்தான், அதைக்கொள்ளுவதற்கு உன்னிடத்தில் கிரயம் உண்டாகும்.

நீ விற்றுப்போட அல்லது மறந்துபோகவேண்டிய காரியங்களை திட்டமாய்க் காண்பிப்பேன்.

அவை எவையென்றால்:— மாயையான உன் நேச தகப்பனாகிய உலகத்தையும், உன் ஆசையோடு ஆலிக்கட்டக்கூடிய உன் நேசமுள்ள தாயாகிய பாவ மாம்சத்தையும், வெறுத்துவிட அல்லது மறந்துபோகவேண்டும்.

உன் தகப்பனாகிய இந்த உலகம்:—மகா வஞ்சனையுடன் உன்னைக் கெடுக்கும் சாத்தானுடைய பிரதான தூதுவரிலொன்று. இவன் மகா தந்திரவாதி, பண ஆசைக்கெல்லாம் வேர் இவனிலிருந்தே உண்டாகும். சகல மனுஷருக்கும் சரியாயிருக்கவேண்டுமென்றும் சகலருடைய தயவுவேண்டுமென்றும், சகலருக்கும் சமமாயிருக்கவேண்டுமென்றும், பக்தியாய் ஜீவிப்பது பைத்தியமென்றும், கர்த்தராகிய இயேசுவை எந்தச் சபையிலும்



அறிக்கை செய்வது, அந்தஸ்துக்குக் குறைவென்றும், அவரில் நிலைத்திருப்பது வெட்கமென்றும், அவரின் நாமத்தின் மகிமைக்காக எதையாவது வெறுப்பது பெரிய நஷ்டமென்றும் போதிப்பான்.

உன் மாம்ச சுபாவமாகிய தாயோ இதை அங்கீகாரம் பண்ணி, உன்னில் நிறைவேற்றப் பிரயாசை யெடுப்பாள் இன்னமும், இத்தீங்கு நிறைந்த உலகம், தன்னை வெறுத்திடும் ஆத்துமாக்களை, பொய்யான அநேகங்குற்றங்களைச் சொல்லி அவதூறு செய்யும். அதற்கும் மருளாதிருந்தால், தேவனுடைய வீரர்களை, மரணபரியந்தம் துன்பத்துக்குள்ளாக்கும். இப்படியாக உன் ஆத்துமாவுக்குத் துன்பத்தை விளைவிக்கும் இந்த உலகத்தை நீ முற்றும் வெறுத்துவிடவேண்டும். நீ உலகத்துக்கு சிலுவையிலறையப்பட்டிருக்கவேண்டும். உலகமும் உனக்குச் சிலுவையிலறையப்பட்டிருக்கவேண்டும்

மாம்ச சுபாவமாகிய பழைய மனுஷனையும், அவன் செய்கைகளையும் களைந்து போடவேண்டும்.

உன் தாயாகிய இந்த பாவமாம்சமும், சாத்தானுடைய தூதுவரில் ஒரு பிரதானமானவள்தான். மிகவும் தந்திரகாரி. உன் வீட்டுச் சத்துரு. ஓயாத தொந்தரவு செய்யும் சக்களத்தி. ஆதியில் பிசாசு விலக்கப்பட்ட கனியைக் காட்டினபோது திடீரென இழுத்துக்கொண்டுபோன இச்சகி. இவளுடைய தந்திரங்களை தேவ ஆவியினால் நிறையப்பட்ட ஆத்துமாவேயன்றி வேறொருவரும் அறியமாட்டார்கள். இவள் தேவனால் நல்ல மனுஷியாக சிருஷ்டிக்கப்பட்டபோதிலும், பின்னால் பிசாசின் ஆவியால் முற்றும் நிறையப்பட்டு, பிரிக்க ஏதுவில்லாமலே, விஷம் நிறைந்த சதிகாரியானாள். முன் சொன்ன உலகத்துக்கும் இவளுக்கும், இணைபிரிக்கப்படாத ஐக்கியமுண்டு. இவளுடைய தந்திரங்கள் அநேகமுண்டு. அவைகளை யெல்லாம் சொல்லமுடியாது.

ஆத்தும நேசரின் இன்பத்தை அனுபவிக்க நாடும் ஆத்துமா அவருடைய இன்பத்தை அனுபவிக்காதபடி தடையுண்டாக்கும், சில காரியங்களை மாத்திரம் உனக்குச் சொல்லுவேன்.

இவளுடைய முழுதந்திரமும், உன்னை ஆத்தும விஷயமாய் நடத்துவதுபோல பாசாங்குபோட்டு, முழுவதும் நரகத்தின் பாதையில் நடத்துவிப்பதுதான்.

இவளுடைய முழு விருப்பமும், நீ அவளுடைய இச்சையிலே நடக்கவேண்டுமென்றும், மாயமான தாழ்மையினால், உன் அன்பின்நேசரை நேசிக்கவேண்டுமென்றும், ஓயாமல் வீண் சிந்தனைகளை கிளப்பிவிட்டுக்கொண்டேயிருப்பாள்.

பிரசங்கம் செய்வதிலும், ஜெபிப்பதிலும், தேவன் இலவசமாய் அருளியிருக்கும், கிருபையின் ஈவுகளைப் பெறுவதிலும்கூட "நான்" என்னும் நோக்கத்தை நிறைவேற்றப் பார்ப்பாள்.

இன்னும் இவளுடைய தீமைகள் யாவையும், நிமிஷந்தோறும் கிறிஸ்துவின் பிரசன்னத்தில் விழித்திருந்தால் தெளிவாய் அறியலாம். ஒரு நினைவை கிறிஸ்துவுக்கு விரோதமாய்த் தூண்டிவிட்டு, பின்பு அவர் கோபமாயிருப்பதுபோல் காட்டி அதிகப்பாவத்தில் துணிவாய்ச் செல்லும்படி செய்து, அந்நேசருடைய ஐக்கியத்தை முற்றும் இழந்துபோகப்பண்ணுவாள்.

இவளுடைய முழு வேலையும், உன் ஆத்தும நேசரோடிருக்கும் ஐக்கியத்தை எப்படியாவது பிரித்து, உன்னை உலகத்தில் ஐக்கியப்படுத்துவதுதான்.

ஐயோ! இந்த உலகத்தில் கிறிஸ்துவை முழு இருதயத்தோடு நேசிக்கும் ஆத்துமாக்களுக்கு, மாம்ச சுபாவத்தினால் வரும் துன்பம் எத்தனை பரிதாபம் அவர்கள் இச்சுபாவத்தின் தீமையை அழிக்கப் பிரயாசமெடுப்பதில் படும் அவஸ்தைகள் கொஞ்சமல்ல. தன்னை உற்றுக் கவனித்த மகாத்துமாவாகிய பவுல், "ஐயோ! நிர்ப்பந்தமான மனுஷன் நான், இந்த மரண சடலத்தில் நின்று யார் என்னை விடுதலையாக்குவார்" என்றார். தாவீது இராஜாவும், தன் சுபாவத்தின் தீமையை அறிந்தபோது, "இதோ நான் துர்க்குணத்தில் உருவானேன்" என்றார்.

இப்படியாக, இந்த உலகத்தில், பரிசுத்தவான்கள் அனைவருக்கும், பிராண பகைஞனாகிய உன் மாம்சத்தையும், அதின் செய்கைகளையும், நீ களைந்துபோடவேண்டும். ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும், மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், போராடுகிறது. மாம்சத்தின்படி பிழைத்தால், சாவாய். ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பாய்,

தேவசமுகத்தில் எப்போதும் அழுகின பிணத்தின் வீச்சத்தைப்போல் வீசும் இம்மாம்ச சுபாவத்தின் நினைவு முழுவதையும் நீ முழுமனதால் வெறுத்துவிடவேண்டும். அப்பொழுது உன் ஆத்துமநேசர் உன் அழகில் பிரியப்படுவார்.

மேலும், உன் சுயபெலத்தால் எவ்வளவேனும் இந்த உலகத்தையும். மாமிசத்தையும் நீ வெறுத்துவிடலாமென்று உன்னைத் தேற்றிக்கொள்ளாதே. இது உன்னால் ஏலாதவேலை. மரம் மரத்தை வெட்டுமென்றாலும், எத்தியோப்பியன் தன் தோலையும், சிவிங்கி தன் கரும்புள்ளியையும், மாற்றிக் கொள்ள ஏலுமென்றாலும் இவ்வேலை செய்வதற்கு நீ ஏலாதவன்.

ஆகையால், நீ செய்யவேண்டியதென்ன? உன் ஒன்றுமில்லாமையை உணரவேண்டியதும், உன் நேசரின் பூரண பெலத்தை சார்ந்துகொள்ள வேண்டியதுமே உன்மேல்விழுந்த கடமை. அப்பொழுது உன் நேசர் உன்னைத் தமது ஆலயமாகப் பிரதிஷ்டை பண்ணுவார்.



அதுவுமன்றி, உன்னை சிறப்பித்து, அலங்கரித்து, ஆயத்தஞ்செய்யும் வகையையும், உனக்குச் சொல்லுவேன்.

உன் கல் நெஞ்சு நொறுங்க, உன் அரோசிகத்தை உணர்ந்து, கெட்ட தகப்பனுக்கும், தாய்க்கும் பிள்ளையாகிய நீ, உன் முழு இருதயத்தோடும், பிதாவாகிய தேவன், கிறிஸ்துவின்மூலமாய், இரக்கமாய் உனக்கு அருளியிருக்கிற ஈவுகளையெல்லாம், உன்னுடையதாக எண்ணி, விசுவாசத்தினால் உன்னை அலங்கரித்துக்கொள். அவரே உனக்கு அலங்காரமும், கிரீடமுமானவர்.

உன் தகப்பனும் தாயும் உன்னைப்பெற்ற நாளிலே, அம்மணமாய் வீதியிலே உன்னை எறிந்துவிட்டார்கள். நீ வீதியிலே கிடந்து தேடுவாரில்லாமல் அலறினாய் உன் துயரமான நிலைமையை கவனிக்க ஒருவருமில்லை. இப்படி நீ சகலராலும் புறக்கணிக்கப்பட்டுக் கிடக்கும்போது சர்வலோகத்தின் இராஜா அந்த வழியாய்ப் போனார். உன்னை எட்டிப்பார்த்து உன் நிர்ப்பந்த நிலைமையைக் கண்டார். அவருடைய ஆவி உன்பேரில் உருகினது. உன் சமீபத்தில் வந்து, தம்முடைய அன்பின் கரத்திலெடுத்து, அணைத்து, உன் அரோசிகங்களையெல்லாம் கழுவி, உன் மானம் காணப்படாதபடி, தம்முடைய நீதியின் வஸ்திரத்தினால் மூடி, தம்முடைய மாமிசத்தினாலும், இரத்தத்தினாலும் உன்னைப் போஷிப்பித்து, இப்படியாக உன்னை வளர்த்து இப்பொழுது வாலப்பிராயமாக்கியிருக்கிறார். அவருடைய சாயல் உன்னில் காணப்படுகிறது. அவருடைய மகிமையினால் பிரகாசமுடையவளானாய். ஆகையால் இனித் தாமதியாதே. உன்னை ஆயத்தம் செய்துகொண்டு உன் நேசருடைய இன்பத்தை அனுபவிக்க எழும்பி வா. உன் இராஜா உன் அழகைப் பார்த்து நடைக் காவனத்தில் மயங்கிநிற்கிறார். அவரின் நேச அன்பை அசட்டையாக எண்ணாதே. ஒரு நிமிஷமாவது இப்பிரபஞ்சத்தில் தாமதியாதே. உன் நேசர் உன்னை அழைக்கிறார்.

## ஆத்துமாவின் ஆயத்தம்.

பாவ மாமிசமே! உலகமே! சிற்றின்பமே! என்னைவிட்டு அகன்று போங்கள். தேவாதி தேவன் என்னைச் சந்திக்க வந்தார். அவர் தாமே என் இருதயத்துக்குள் வந்து, இன்பப்பெருக்காயிருக்க, நீங்கள் ஏன் என்னைத் தொந்தரவு செய்கிறீர்கள்? உங்கள் வஞ்சகத்தின் கசப்பை நான் அறியமாட்டேனா? ஆ! லோகமே மாமிசமே! நீங்கள் கொடுக்கும் இன்பமெல்லாம் எனக்குத் தெரியும். உங்களுடைய இன்பமெல்லாம் மாயையிலும் அதிக

லேசு. சாவிலும் அதிகக் கசப்பு. என் சிறுபிராயத்தில் அறியாமல் உங்களுடன் கூடி அனுபவித்த துன்பமெல்லாம் போதும். இப்போது நான் உங்கள் வீட்டில் தங்கினாலும் உங்களுடையவளல்ல. உங்களுக்குச் சிலுவையிலறையப்பட்ட என் நேசரோடே நானும் அறையப்பட்டிருக்கிறேன். உங்களுடைய கொடுங்கோன்மையிலிருந்து என் நேசரே உங்களுக்கு மரித்து, என்னை விடுதலைபண்ணினார். ஆகையால் நான் உங்களுடையவளல்ல. சட்டத்தின்படி விலக்கப்பட்ட நீங்கள் யாதொரு தொந்தரவும் செய்யக்கூடாது. நான் என் நேசருடையவள். அவர் தாமே தமது அளவிறந்த வல்லமையினால் உங்களுக்கு என்னை விடுதலைபண்ணினார்.

இப்பொழுதும், என் நேசர் என்னைப் பார்த்து, குமாரத்தியே! கேள்! உன் தகப்பனையும், தாயையும் மறந்துவிடு, அப்பொழுது நான் உன் அழகில் பிரியப்படுவேன் என்கிறாரே.

என் நேசரே! நீரே எனக்கு அருமையானவர். உமதன்பின் வாக்கு என்னை உருக்குகிறதே, உமது நேச வாக்கின் மதுரம் என்னைத் துவளப் பண்ணுகிறதே. ஆ! என் நேசரே! உமது இன்பத்தை அனுபவிக்கவேண்டுமானால், நான் இந்த உலகத்தையும் மாமிசத்தையும் வெறுத்துவிடவேண்டுமாக்கும். என் நேசரே! என்னை அறிந்திருக்கிறீர். என் உள்ளிந்திரியங்களும், என் அந்தகாணமுமெல்லாம் உமக்குமுன்பாக வெளியரங்கமாயிருக்கிறது. நீர் என்னை உம்முடைய நேசத்துக்குத் தகுதியாக்கும். நான் இந்த ஆபாசமான மாய உலகத்தை அனுபவித்து அதின் கசப்பினால் பித்தங்கொண்டவன்போல தத்தளித்தது போதும். முழுமனதாய் அவைகளை வெறுக்கிறேன். அவைகள் எனக்கு வேண்டாம். நீரே எனக்கு வேண்டும். உம்மை அனுபவித்துக்கொள்வதற்கு எனக்குப் பெலனில்லை ஐயா! ஆகையால் நீரே என்னை ஆயத்தஞ்செய்யும். என் வாஞ்சையும் ஆசையும் நீரே. என் தேவனே! உம்மை நோக்கி, மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுமாப்போல, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது. என் தேவனே! வறண்டதும், விடாய்த்ததுமான நிலத்திலே என் ஆத்துமா உமதுமேல் தாகமாயிருக்கிறது.

## III-வது, பக்குவமாகுதல்

ஆத்துமா பக்குவமாகுதலென்ற இந்த ஞான வளர்ச்சிக்கு, இரண்டு காரியத்தை நீ கவனிக்கவேண்டும்.

முதலாவது, உன்னை நீ நன்றாய் அறியவேண்டியதும்,

இரண்டாவது, உன் நேசரை நன்றாய் அறியவேண்டியதுமே.



ஒன்று, கீழே போவது, ஒன்று மேலே ஏறுவது. ஒன்று, உன் சுய எண்ணத்துக்கு செத்துப்போகிறது. ஒன்று, உன் நேசரை நன்றாய் அறிந்து அவராலேயே நடத்தப்படுகிறது.

இதில், முதலாவது, உன்னை அறிந்துகொள்வதைச் சொல்வேன்.

நீ, உன் ஆத்தும நேசரை முழு வாஞ்சையாய் வாஞ்சிப்பது எனக்கு நன்றாய்த் தெரியும். அவரும் முழு மனதாய் உன்னோடு வாழ ஆசையாயிருக்கிறாரென்பதும் எனக்குத் தெரியும். ஆனாலும், உன் நேசருக்கும் உனக்கும் இடையில் உங்களின் நேசம் பெருகாதபடி தடைசெய்கிற, சுய அறிவு அல்லது சுயாதீனசித்தம் என்று ஒன்றிருக்கிறது. இந்த உன் சுய நினைவு, உன் நேசர் தமமுடைய முழு அன்பினாலும் உன்மேல் பொங்கிபுரண்டாலும், உனக்கு அவருடைய அன்பைத் தெரியாதுபோகப் பண்ணுகிறது. ஆனதுபற்றி, அவர் உன்னை நேசிக்கும் வகையையும் அறிந்துகொள்ள ஏதுவில்லை. நீ அவரை நேசிக்கும் வகையையும் அறிந்துகொள்ள ஏதுவில்லை.

ஆகையால், நீ செய்யவேண்டுவதென்ன?

(1) உன் நினைவை அவர் பாதத்தின்கீழ் வைக்கவேண்டும். இது உன்னால் கூடிய காரியமுமல்ல. ஆவியானவரே உன சிந்தையின் நிர்வாகத்தை உனக்குக் காட்டி, உன்னைச் சிறுமைப்படுத்தி, நொறுங்குண்ணச் செய்யவேண்டும். ஏனெனில் ஆவியில் சிறுமைப்பட்டு, நொறுங்குண்டவர்களே, அவரை அனுபவித்துக்கொள்வார்கள்.

(2) உன் நேசரையே, நீ உனக்கு இராஜாவாக வைத்து, உன் நினைவு, பேச்சு, கிரியை, எல்லாம், அவரின் சித்தப்படிதான் இருக்க வேண்டும். நீ, உன் நேசரை யல்லாமல், ஒன்றை யோசிக்கவும், பார்க்கவும், செய்யவும் கூடாது. இப்படியாக உன்னை முழுப்பிரதிஷ்டை செய்து ஜீவித்தாயானால், உன் நேசரின் முகத்தின், மகிமையின் அறிவாகிய, ஒளி உன்னில் வீச வீச, நீ, மறுரூபமாக்கப்பட்டு, உன் நேசரின் சாயல் உன்னில் காணப்படும். 'நாமெல்லாரும், திறந்தமுகமாய் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே, காண்கிறதுபோல் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால், அந்த சாயலாகத்தானே, மகிமையின்மேல் மகிமையடைந்து, மறுரூபப்படுகிறோம்'

மேலும், நீ, பக்குவமாகிறதற்கு இன்னமும் ஒரு வழி சொல்லுகிறேன்.

உன் ஜீவியத்தில், ஒவ்வொரு நாளிலும், யாதாமொரு சந்தடியில்லாத நேரம், உன் நேசரின் முகத்தையே, ஜெபம் செய்யாமல், பார்த்துக்கொண்டேயிருக்கவேண்டும். இப்படி, நீ, ஓயாமல் அவரைப் பார்க்கப் பார்க்க, அவரின் மகிமையின் சாயல் உன்னில் தெளிவாய்க் காணப்படும்.

அப்பொழுது, உன் நேசர் உன்னைப்பார்த்து, என் ரூபவதியே! என் புறாவே! என்று கூப்பிட்டு, "மலையின் பிளப்பைப்போல், மாமிச சுபாவ பற்றுக்குள், மலையின் சிகரத்தைப்போல் 'நான்' என்னும் எண்ணமுடையவனே! உன் முகரூபத்தை எனக்குக் காண்பி, உன் சத்தத்தை நான் கேட்கட்டும், உன் சத்தம் எனக்கு இன்பமாக இருக்கிறது" என்பார். "முள்ளுகளுக்குள்ளே லீலீபுஷ்பம் எப்படியிருக்கிறதோ, அப்படியே, குமாரத்திகளுக்குள்ளே எனக்குப் பிரியமானவளும் இருக்கிறாள்" என்கிறார்.

ஆகையால், அவர் உன்னை அறிந்துகொண்டதுபோல, நீயும் அவரை நன்றாய் அறிந்துகொள். அவரே உன்னைத் தமது நேசத்துக்குப் பக்குவஞ் செய்கிறவர். அவரின் நேசத்தை நினைத்து, அவரிடத்தில் போய் தனித்துப்பேசு.

## ஆத்துமாவின் ஞான வளர்ச்சி.

"ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்", என்றுரைத்த என் அருமை நேசரே! ஆவியில் நொறுங்குண்டு, என்னை ஒன்றுமில்லையென்றறிந்து, உம்முடைய பூரண பெலத்துல் சார்ந்திருக்கக் கிருபைசெய்யும் இப்போதும், அசுத்தம் நிறைந்த தோஷியாகிய என்னை உம்முடைய பரிசுத்த இரத்தத்தால் கழுவி, உம்முடைய நீதியின் வெண்வஸ்திரம தரிப்பித்து, உமக்கு முன்பாக என்னை நிறுத்திக்கொண்டீரே! உமக்கே ஸ்தோத்திரம்.

என் ஆத்துமாவுக்கு மகிழ்ச்சியும், இன்பமுமானவரே! ஏழையேன், உம்முடனே ஒன்றாகச்சேர்ந்து, உம்முடைய சந்தோஷத்தை அனுபவிக்க ஆசிக்கிறேன். என் அன்புக்குரியவரே! நீரும் என்னுடன் கூடி, என்னுடைய சந்தோஷம் உம்மில் நிறைவாயிருக்கும்படிக்கும், உம்முடைய சந்தோஷம் என்னில் நிறைவாயிருக்கும்படிக்கும், விரும்புகிறீரோ. உம்முடைய இன்பத்தை என்னில் பெருகப்பண்ணாத இந்த "சுய அறிவு" எனக்கேன் ஐயா! என் "சுயசித்தம்" முழுவதையும் உமது பாதத்தின் கீழ் வைக்கிறேன். ஐயா! இதோ, இதை, உமது பாதத்தின் கீழ் வைத்துக்கொள்ளும்.

என் அன்புக்குரியவரே! என் ஆசை யெல்லாம் உம்மைப்பற்றித்தான் இருக்கிறது. உமது முகத்தின், மகிமையின் அறிவாகிய ஒளி என்னில் வீசச்செய்து என்னைப் பக்குவஞ்செய்யும். என் அருமை நேசரே! தேவரீர், ஒப்பில்லாத பரிசுத்தரும், அளவிறந்த நீதியுமுடையவரே. நீசனான நான் எப்படித் துணிகரமாய் உம்முடன் கூடி வாழுவேன்? நீரே உமது அளவிறந்த இரக்கத்தின் ஐசுவரியத்தின்படி என்னை இழுத்துக்கொள்ளும். அப்பொழுது உமக்குப் பின்னாலே ஓடிவருவோம்.



## ஆத்தும நேசரின் அன்பின் அழைப்பு

"என் பிரியமே! நீ ரூபவதி! உன்னில் பழுதொன்றுமில்லை. ஆபரணாதிகள் பூண்ட உன் கன்னங்களும், ஆரங்கள் பூண்ட உன் கழுத்தும் அழகாயிருக்கின்றன. வெள்ளிப்பொட்டுகளுள்ள ஆபரணங்களை உனக்குப் பண்ணுவோம்.

என் பிரியமே! என் ரூபவதியே! நீ எழுந்துவா. மாரிகாலமும் சென்று, மழையும் பெய்து ஒழிந்து, உன் அன்பின் மலர்களும் புஷ்பித்து, வாசனையும் பரிமளிக்குதே. உன் துதியின் கீதசத்தங்கள் என் செவியில் தொனிக்கிறதே. உன் அன்பின் புஷ்ப அரும்பில், பூவும், பிஞ்சும் காணப்படுகிறதே. என் பிரியமே! என் ரூபவதியே! எழுந்துவா. உன் முகரூபத்தை எனக்குக் காண்பி. உன் சத்தத்தை நான் கேட்கட்டும். உன் சத்தம் எனக்கு இன்பமாய் இருக்கிறது. நான் உன்னோடு போஜனம் பண்ணவும், நீ என்னோடு போஜனம் பண்ணவும் ஆசையாய் நிற்கிறேன்" என்றார்.

## IV-வது, சிநேக வாஞ்சை

என் ஆத்தும நேசரே! உம்முடைய வசனங்கள் என் ஆவியையும், ஊனையும் ஊடறுத்துப் பாயுதே. என் ஆவி, உம்முடைய நேசத்தின் சோகத்தால் தத்தளிக்குதே. என் புத்தி கலங்கி, என் ஞானமெல்லாம் மயங்கினாற்போல தெரிகிறதே. என் வாஞ்சையை உம்முடைய வாஞ்சையின் பலத்த கயிறுகள் இழுத்துக்கொண்டு போகிறதே. உம்முடைய அன்பின் அஸ்திரங்கள் என் ஆத்துமாவில் ஊடுருவிச் சென்றதே. எனக்கு உலகம் ஒன்றும் தெரியாமல் ஒரு மாதிரியாயிருக்கிறதே. உம்முடைய அன்பின் புஷ்பமலரின் வாசனையும், உமது பரிமள தைலத்தின் வாசனையும், என்னை மயங்கப்பண்ணுகிறது.

ஐயோ! நான் செய்யவேண்டியதென்ன? என் ஆத்தும நேசரே! என் ஆவி தொய்யும்போது எனக்கெட்டாத உயரமான கன்மலையில் என்னைக் கொண்டு போய்விடும்.

எருசலேமின் குமாரத்திகளே! என் நேசரைக் கண்டீர்களானால், அவரின் நேசமனைவி, நேசத்தால் சோகமடைந்திருக்கிற செய்தியை சொல்லுங்கள். அன்னமே! புறாவே! மயிலே! குயிலே! நீங்கள் என் நேசரிடத்தில், எனக்காகப் போய், அவரின் நேச மனையாட்டியாகிய நான், அவரின் நேசத்தால் சோகமடைந்து மயங்கிக் கிடக்கிற செய்தியை தூது சொல்லுங்கள்.

என் நேசர், பதினாயிரம் பேரில் சிறந்தவர் அவரின் மேனி வெண்மையும், சிவப்பும் உள்ளது. அவர் சிரசு தங்க மயமாயிருக்கிறது. அவர் தலைமயிர் சுருள் சுருளாயும் காகத்தைப்போல் கறுப்பாயுமிருக்கிறது. அவரு

டைய கண்கள், தண்ணீர் நிறைந்த நதியின் ஓரத்தில் தங்கும் புறாக்கண்களுக்கொப்பானவைகளும், பாலில் கழுவப்பட்டவைகளும் நேர்த்தியாய் பதிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது. அவர் கன்னங்கள் கந்தவர்க்கப் பாத்திகள்போலவும், வாசனையுள்ள புஷ்பங்களைப்போலவுமிருக்கிறது. அவர் உதடு லீலி புஷ்பங்களைப் போன்றது. வாசனையுள்ள வெள்ளைப்போளம் அதிலிருந்து வடிகிறது. அவரின் கரங்கள் படிகைப்பச்சை பதித்த பசும்பொன் வளையங்கள் போலிருக்கிறது. அவரின் அங்கம் இந்திரநீல இரத்தினங்கள் இழைத்த பிரகாசமான யானைத் தந்தங்கள்போலிருக்கிறது. அவர் கால்கள் பசும்பொன் ஆதாரங்கள்மேல் நிற்கிற வெள்ளைக்கல் தூணைப்போலிருக்கிறது அவர் ரூபம் லீபனோனைப் போலவும், கேதுரு மரங்களைப் போலவும், சிறப்பாயிருக்கிறது. அவர் வாய் முற்றிலும் மதுரமாயிருக்கிறது. அவர் முற்றிலும் அழகுள்ளவர் இவரே என்நேசர்.

என் நேசர் எனக்கு அருமையானவர். என்னைப் பெற்ற தாயும், தகப்பனும் வீதியிலே என்னை எறிந்துவிட்டபோது, என் நேசர் தமது அன்பின் மலர் கரத்தாலெடுத்து, தமது அன்பின் மார்போடணைத்து, என்மேல் நீட்டப்பட்ட தேவநீதியின் பட்டயத்துக்குத் தம்மையே பலியாகக் கொடுத்து, தம்முடைய நீதியின் வஸ்திரத்தால் என் மானம் காணப்படாதபடி மூடி, தம்முடைய அன்பின் வசனப்பாலைத் தாய்போல் எனக்கூட்டி, இப்படியாக என்னை வளர்த்துத் திருத்தி, இப்பொழுது வாலப்பிராயமாக்கியிருக்கிறார்.

இப்போதும், 'இதோ, சீக்கிரம் வருகிறேன்' என்று சொல்லிவிட்டுப் போனார். 1900 வருஷங்களாய், அவரையே நோக்கிப் பார்த்து என் கண்களெல்லாம், பூத்துப்போச்சுது. நான் என் நேசரை எங்கே சென்று தேடுவேன்? அவரை எங்கே கண்டுபிடிப்பேன்? ஐயோ! என் ஆவல், அவரைப் பார்க்க மிஞ்சுதே! நான் என் நேசரை எப்போ காண்பேன்? என் ஆவல் எப்போ தணியும்? என் துன்பம், இடறல்கள் யாவும் எப்போ ஒழியும்? என் நேசரே! உம்மை மறைவும் திரையுமின்றி, வெளிப்படையாய்த் தரிசிக்கும் நாள் எப்போ பிறக்கும்? நீர் எனக்குச் சொன்ன அடையாளங்களெல்லாம், நிறைவேறியாச்சுதே! இன்னமும் ஏன் தாமதமையா? இந்த உலகத்தார் பேரில் பொறுமையுள்ளவராயிருக்கிறீராக்கும். ஐயோ! உம்முடைய ஆசை என்னால் தாங்க ஏலுதில்லையே! என் நேசரே என் ஆவியின் கண்ணைப் பிரகாசமாக்கும் உம்மை எனக்கு நன்றாய் வெளிப்படுத்தும். உம்முடன், நிமிஷந்தோறும் கூடிவாழக் கிருபைசெய்யும். இந்தப் பாவிகளிலும் பிரதானமான பாவியாகிய மகா தோஷி, உம்மை விரும்பிவிட்டேனையா. என் சிநேகத்தின் வாஞ்சையை திருப்திசெய்யும். உம்முடைய ஐக்கியத்தில் என்னை மகிழச்செய்யும்



## ஆத்தும நேசரின் சிநேகத்தின் வாஞ்சை.

என் பிரியமே! நீ திர்சாவைப்போல் சவுந்தரியமும், எருசலேமைப் போல் வடிவமும், கொடிகள் பறக்கும் படையைப்போல், கெடியுமானவள். உன் கண்களை என்னைவிட்டுத் திருப்பு. அவைகள் என்னை வென்றது. உன் கழுத்திலுள்ள ஒரு சரப்பளியினால் என்னைக் கவர்ந்துகொண்டாய். ஆ! என் அழகிய ரூபமே! உன்மேல் ஒப்பற்ற அன்புள்ளவனாயிருக்கிறேன் என் வாஞ்சைக்கினிதாகிய கண்ணே! நீ மயங்கவேண்டாம். நான் இதோ வருகிறேன். நான் அளிக்கும் பலனும் என்னோடேதான் வருகிறது. உகத்திலுள்ள துன்பங்களுக்கும், இடறல்களுக்கும் பயப்படாதே. நான் உன்னுடனே இருக்கிறேன் நீ உன் வாஞ்சையினால் என்னை இழுத்துக்கொண்டாய். என் ஆவிக்குப் பிரியமான மானே! கலங்காதே! பயப்படாதே! உன்னை முற்று முடிய இரட்சிக்கவல்லவனாயிருக்கிறேன். என்னை நோக்கிப்பார்! என் கண் உன்மேல்தான் வைக்கப்பட்டிருக்கிறது. என் ஆசை உன்னைப்பற்றித்தானிருக்கிறது. என் உத்தமியே! எழும்பிவா. என்னுடைய இன்பத்தை அனுபவிக்க உன்னை வாஞ்சிக்கிறேன்.

பாதரட்சைகளிட்ட உன் பாதங்கள் மிகவும் அழகாயிருக்கிறது. உன் இடுப்பின் வடிவு விசித்திரத் தொழில்க்காரரின் வேலையாகிய பூஷணம் போலிருக்கிறது. உன் நாபி திராட்சரசம் நிறைந்த வட்டக்கலசம்போலிருக்கிறது உன் வயிறு லீலி புஷ்பங்கள் நிறைந்த கோதுமை அம்பாரம் போலிருக்கிறது. உன் கழுத்து யானைத் தந்தத்தினால் செய்த கோபுரத்தைப்போலவும், உன் கண்கள், எஸ்பெரோனிலே, பத்ராபீம் வாசலண்டையிலிருக்கும், குளங்களைப்போலவும், உன் மூக்கு தமஸ்குவின் திசையை நோக்கும், லீபனோனின் கோபுரத்தைப்போலவும், இருக்கிறது. உன் சிரசு கர்மேல் மலையைப்போலிருக்கிறது. உன் தலைமயிர் இரத்தாம்பரமாயிருக்கிறது.

ஆ! என் ரூபவதியே! உன் அழகைப்பார்த்து, உன் இராஜாவாகிய நான், நடைக் காவணத்தில் மயங்கி நிற்கிறேன். மனமகிழ்ச்சியை உண்டாக்கும் என் பிரியமே! நீ எவ்வளவு ரூபவதி! நீ எவ்வளவு இன்பமுள்ளவள்.

எருசலேமின் குமாரத்திகளே! எனக்குப் பிரியமானவளுக்கு மனதாகுமட்டும், அவளை எழுப்பாமலும், விழிக்கப்பண்ணாமலு மிருங்களென்று, வெளியின் மரையின் பேரிலும், வெளியின் மானின் பேரிலும் உங்களை ஆணையிடுகிறேன்.

## ஆத்தும நேசரின் அழைப்பும், ஆத்தும நேசகியின் அசட்டையும்.

நான் நித்திரை பண்ணினேன். என் இருதயமோ விழித்திருந்தது. "என் சகோதரியே"... கதவைத் தட்டுகிற என் நேசரின் சத்தத்தைக் கேட்டேன். "என் சகோ

தரியே! என் பிரியமே! என் புறாவே! என் உத்தமியே! கதவைத் திற. என் தலை பனியினாலும், என் தலைமயிர் இரவில் பெய்யும் தூறலினாலும் நனைந்திருக்கிறது'' என்றார்.

நான் அதற்குப் பிரதியுத்தரமாக, ''என் வஸ்திரத்தைக் கழற்றிப்போட்டேன். நான் எப்படித் திரும்பவும் அதை உடுப்பேன்? என் பாதங்களைக் கழுவினேன்; நான் எப்படித் திரும்பவும் அவைகளை அழுக்காக்குவேன்.'' என்றேன்.

என் நேசருக்குக் கதவைத் திறக்க நான் எழுந்தேன். பூட்டின கைபிடிகள்மேல் என் கையிலிருந்து வெள்ளைப் போளமும், என் விரல்களிலிருந்து வாசனையுள்ள வெள்ளைப் போளமும் வடிந்தது. என் நேசருக்குக் கதவைத் திறந்தேன். என் நேசரோ இல்லை; போய்விட்டார். அவர் சொன்ன வார்த்தையால், என் ஆத்துமா சோர்ந்துபோய்விட்டது. அவரைத் தேடினேன்; நான் காணவில்லை. அவரைக் கூப்பிட்டேன். அவர் எனக்கு மறு உத்தரவு கொடுக்கவில்லை. அவரின் அன்பின் வெறியால், நான் பேசுவது இன்னதென்று தெரியாமலே பேசினேன். அவர் என்னோடு பேசின ஒவ்வோரு வார்த்தைகளும், என் ஆத்துமாவில் தைக்கும், அக்கினி அஸ்திரங்கள் போலாகி, என்னை நைந்துருகப்பண்ணிவிட்டது.

ஐயோ! என் ஆத்தும நேசரை யாராவது கண்டால், அவருக்குப் பிரியமானவள் நேசத்தால் சோகமடைந்திருக்கிற செய்தியை சொல்லமாட்டீர்களா? என்றேன். வெளியிலே போய் வீதியிலே அவரைத் தேடுவேன் என்றேன். என்னைக்கண்ட காவற்காரர்கள் என்னை அடித்து, என் போர்வையையும் எடுத்துக்கொண்டார்கள். என் ஆத்தும நேசரின் அன்பின் வெறியால் புலம்பலாயினேன்.

''என் அன்புக்கும், ஆசைக்கு முரியவரே! உம்மை எங்கே காண்பேன்? என் வாஞ்சை எப்போ திருப்தியாகும்? ஐயோ! அவரின் நேச அழைப்பை அஜாக்கிரதையாய் அசட்டை செய்தேனே. ஐயோ! அஜாக்கிரதையினாலும், வீண் பெருமையினாலும், என்மேல் அன்புகூர்ந்து, என்மேல் உருகி, என்னைத் தேடிவந்து, என்னைத் தம்முடைய அன்பின் மதுரவாக்கால் அழைத்த என் அன்பின் நேசரை அனுபவித்துக்கொள்ளாமல் விட்டுவிட்டேனே! இனி நான் என்னசெய்யப்போகிறேன்? ஐயோ! என் ஆத்தும நேசரே! உமது நேசத்தின் சோகக் காய்ச்சல் என்னை வதைக்கிறதே! உமது நேச வாக்கின் இன்பம், என்னை உருகச்செய்து கொல்லுகிறதே!

என் ஆத்தும நேசரே! என் அன்பின் மீட்பரே! திரும்பிவாரும், திரும்பிவாரும். என் அஜாக்கிரதையை உணர்ந்திருக்கிறேன். உமது அன்பின் ஐக்கியத்திற்குள் என்னை வைத்துக்கொள்ளும்.



## V-வது ஐக்கியம்.

நான் கொஞ்சத்தூரம் போனவுடனே என் ஆத்தும நேசரைக் கண்டேன். அவரை என் தாயின் வீட்டிலும், என்னைப் பெற்றவளின் அறையிலும் கொண்டுவந்து விடுமட்டும், விடாமல் பற்றிக்கொண்டேன். வெள்ளைப் போளத்தினாலும், சாம்பிராணியினாலும், வர்த்தகருடைய சகலவித கந்தப்பொடியினாலும், உண்டாகிய வாசனையை வீசி, தூபஸ்தம்பங்களைப் போல வருகிற இவர் யார்?

இவரே என் அன்பின் நேசர். என் வாஞ்சையை திருப்தியாக்குகிறவர். என் நேசர் எனக்கு எவ்வளவு அருமையானவர். என் நேசர் எனக்கு என்கேதி ஊர் திராட்சத் தோட்டத்தில் முளைத்திருக்கும் மருதோன்றி பூங்கொத்து.

என் நேசரே! நீர் ரூபமுள்ளவர். என் வாஞ்சைக்குரிய இன்பமுள்ளவர்.

ஆ! என் இராஜா, தமது பந்தியிலிருக்குந்தனையும், என்னுடைய நளததைலம், தன்னுடைய வாசனையை வீசும். காட்டு மரங்களுக்குள்ளே கிச்சிலிமரம் எப்படியிருக்கிறதோ அப்படியே, குமாரருக்குள்ளே, என் நேசரும் இருக்கிறார். அதின் நிழலிலே வாஞ்சையாய் உட்காருகிறேன். அதின் கனி என் வாய்க்கு மதுரமாயிருக்கிறது. என்னை விருந்துசாலைக்கு அழைத்துக்கொண்டு போனார். என்மேல் பறந்த அவருடைய கொடி நேசமே. திராட்சரசத்தால் என்னை ஆற்றுங்கள், தேற்றுங்கள். நான் நேசத்தால் சோகமடைந்திருக்கிறேன். அவரின் இடதுகை என்தலையின் கீழிருக்கிறது. அவரின் வலதுகை என்னை அணைத்துக்கொள்ளுகிறது. அவரின் அன்பால் திருப்திசெய்யப்படுகிறேன். என் நேசர் தம்முடைய போஜன அறையில் என்னைக்கூட்டிக்கொண்டுபோய், என்னைத் தேனும் பாலும் உண்ணும்படி கெஞ்சினார். அவரோடு போஜனம் செய்யும்படி வெகுநாளாய் நானும் தீராத ஆவல்கொண்டிருந்தேன். என் நேசர் தம்முடைய அன்பினால் என்னை முத்தமிட்டு, தமது இனிமையான வசனங்களினால் என்னோடு பேசினார். அவருடைய இனிமையான வசனங்களின் தொனி என்னில் படவே, அவரின் அன்பின் அஸ்திரங்களால் குத்துண்டு, அவர் பாதத்தினருகே சுருண்டு விழுந்தேன். ஐயோ! அதமானேன். சேனைகளின் கர்த்தராகிய இராஜாவை என் கண்கள் கண்டதே என்றேன்.

அப்பொழுது, என் நேசர் தமது காயப்பட்ட கையினால் என்னைத் தாங்கி, தமது அன்பின் மடியில் என்னை இருத்தி, தமது மார்போடே அணைத்து, தமது மாம்சத்தை போஜனமாகவும், தமது இரத்தத்தைப் பானமாகவும்தந்தார். அவர் தமது மாம்சத்தை தரும்போது, இது உனக்காகக் கொய்க்கப்பட்ட என் மாம்சம் என்றார். என்னைப் பானம் பண்ணும்படி செய்தபோதும், இது உனக்காக சிந்தப்பட்ட என்னுடைய இரத்தம் என்றார்.

இப்படியாக, என்னைப் போஷித்தபோது, அப்போஜனத்தின் வரலாறுகளையும், அதினாலுண்டாகும் ஐக்கிய இன்பத்தையும், தெளிவாய்ச் சொல்லியே தந்தார். என் நேசர் என்மேல் அதிகமாய் அன்புகூர்ந்து, அவரின் இன்ப நேச ஊற்று, இந்தப் போஜனத்திலிருந்தும், பானத்திலிருந்தும், அவரிடத்திலிருந்து, சுரந்து என்னிடத்திற்கு வரும் ஐக்கிய நிலையையும், தெளிவாய்க் காட்டினார்.

இவ்வளவாய், என் நேசர் தம்மோடு ஐக்கியப்படுத்தி, எல்லா வரலாறுகளையும் சொன்னபோதிலும், தம்முடன் நான் இசைந்திருக்கும் இன்ப இரகசியங்களையெல்லாம் எனக்குக் காட்டினபோதிலும், என்னை ஒருவகையான ஆச்சரியப் பிரமைபிடித்திருந்ததினால், ஒரு பெலனுமில்லாமல், அவர் சொன்னவைகளின் கருத்தை உணர்ந்து, தைரியங்கொள்ள சக்தியுண்டானதில்லை. என் நேசர் என் சோர்வையறிந்து, வாடையே! எழும்பு. தென்றலே வீசு சந்தப்பிசின் வடிய என் தோட்டத்தில் வீசு என்றார்.

பின்பு, எனக்கு ஒன்றும் தெரியாமலே என் ஆச்சரியப் பிரமை, அன்பின் மயக்கம், நேசத்தின் சோர்பு, வர வர, நீங்கவே, என் நேசருடைய உண்மையான வாக்குகளை விசுவாசித்து, அவருடைய மடியிலிருப்பதை அறிந்துகொண்டேன். என் நேசர், தமது திருவாயின் அன்பொழுக 'இரத்தத்தின் கனியே, கனி' என்று ஓயாமல் முத்தமிட்டார். என் நேசரின் அன்பைத் தாங்க பெலன்கொடுக்கப்பட்டபோது, அவரின் அன்பில் ஆனந்தங்கொண்டேன். இரட்சிப்பின் சந்தோஷ இன்ப வெள்ளம், என் இருதயமெல்லாம் புரண்டது. என் நேசருடன் கூடி ஆனந்தக் கடலில் மூழ்கினேன்.

இப்படியாக, அவருடைய சந்தோஷத்தைப் பூரணமாய் அனுபவித்துக் கொண்டிருக்கும்போது, என் நேசருடைய திருமேனியை உற்றுக் கவனித்தேன். என் நேசருடைய திருமேனியில் சில வடுக்களைக் கண்டேன். 'இது என்ன வடுக்கள் ஐயா' என்று கேட்டேன். 'இது, உனக்காய்ப் பிணைப்பட்டு உன்னிமித்தம் பட்ட காயங்கள்' என்றார்.

என் நேசரை உற்றுப் பார்க்கப் பார்க்க, தேவாதி தேவன், வல்லமையுள்ள கர்த்தர், மகிமையின் இராஜா, எனக்காய்ப் பட்ட காயங்களை நினைத்து நினைத்து, அலறினேன். என் கண்ணீரோடே என் நேசரிடம் பேசினேன். ஐயா! என் ஆத்தும நேசரே! இந்த வடுக்கள் என் ஐயா? இந்த அவமானம் நிந்தைகள் என் ஐயா? என், எனக்காக ஜீவனை விடவேண்டும் ஐயா? இப்படி அரும்பாடுகள்பட்டு, இந்த நீசனை மீட்ட முகாந்திரம் என்ன ஐயா? மனுஷர்கள்மேல் தேவாதி தேவன் இப்படியாக அன்புகூர்ந்ததின் இரகசியம் என்ன ஐயா? இந்த ஏழைக்கு விளங்குகிறதில்லையே! என் நேசரே! என்னிடத்தில் உமக்குப் பிரியமான யாதொன்றும் இல்லாதிருக்க, இப்பொழுது' என் இருதயத்துக்குள் வந்து கொஞ்சுவதின் இரகசியம் என்ன



ஐயா? இந்த அனாதி சிநேகத்தின் இரகசியத்தைச் சொல்லமாட்டீரா? என் நேசரே! உம்முடைய அன்பின் ஆச்சரியம், என்னைப் பிரமைகொள்ளச் செய்கிறதே. உம்முடைய நேசத்தின் ஆச்சரியப் பிரமையால் திகைப்புற்றிருக்கிறேன். என் அருமை நேசரே! என்மேல் இப்படிக்கெல்லாம் அன்புகூர்ந்த முகாந்திரத்தை இந்த ஏழைக்குச் சொல்லவேண்டுமென்று என் நேசரை ஓயாமல் தொந்தரவு செய்தேன். இப்படியாக மூன்றுநாள் அலட்டிக்கொண்டேயிருந்தேன். ஒருநாள் மாலை மயங்கி, சூரியன் அஸ்தமித்த பின்பு நான் தனித்து என் நேசருடன் விளையாடிக்கொண்டிருந்தேன். என் நேசர் என்மேல் கொண்ட தம்முடைய அனாதி சிநேகத்தின் அன்பைச் சொல்லத் தொடங்கினார்.

## ஆத்தும நேசரின் வாக்கு.

'ஆ! என் பிரியமானே! நான் மனுஷர்கள்மேல் கொண்ட அனாதி அன்பின் இரகசியத்தை, நீ சற்றே பார்த்துத் தத்தளிக்கிறாயே. என் பேர் உனக்குத் தெரியுமா? நான் அதிசயமானவரே. உன்மேல் நான் கொண்ட அன்பைப் பார்த்து, பரலோகத்தின் சர்வசேனைகளும் பிரமித்து ஆச்சரியப்படுவதும் மெய்தான். ஆனாலும் உன் சிற்றறிவிற் படும்படி சில காரியங்களைச் சொல்லுகிறேன்.

ஆதியிலே, நான் மனுஷனை, சிருஷ்டித்தபோது, என்னுடைய ஜீவசுவாசத்தை அவர்களுக்குள்ளே ஊதினேன். ஆகவே மனுஷன் ஜீவாத்துமாவானான். அந்த ஜீவாத்துமா, என்னுடைய வித்தாகையாலும், அதைப் பிசாசுடனே நரகத்துக்குவிட இஷ்டமில்லாததினாலும், நான் அவர்கள்மேல் உருக்கங்கொள்ளவேண்டியதாயிற்று. இன்னமும், நான் மனுஷர்களை உண்டாக்கின நோக்கம், அவர்கள் உள்ளத்தில் நான் வந்து வாசம்பண்ணவும், அவர்களோடு கூடி, கொஞ்சி விளையாடி, என் சந்தோஷத்தை அவர்கள் நிறைவாய்ப் பெற்றுக்கொள்ளவும், அவர்கள் சந்தோஷம் என்னில் நிறைவாயிருக்கவும், சித்தமானேன்.

அவர்கள் என் நோக்கத்தை அசட்டைசெய்து, பாவத்தில் அமிழ்ந்தி, தங்கள் மனச்சாட்சியை அசுத்தப்படுத்திக்கொண்டபோதோ, மறுபடியும் அவர்கள்மேல், அதிகப் பரிதாபமாய் உருகி, என் இரத்தத்தினாலேயே, என்னோடும், என் பிதாவோடும் ஐக்கியப்படும்படி செய்தேன்.

இப்போதும், நான் உன்னோடு ஐக்கியமாயிருப்பதைக் குறித்து ஆச்சரியப்படாதே. இது, தேவன், உன்மேல் கொண்ட அனாதி சிநேகத்தின், அதிசயமான அன்பு. என் அன்பில் நிலைத்திரு. அப்பொழுது, என் சந்தோஷம் உன்னில் நிறைவாயிருக்கும். இதுநிற்க, நான் உனக்கு, இப்பொழுது சொன்னாலும் உனக்கு விளங்காத அநேகமான என் மகிமைகளுக்கு, நீ பாத்திரமுடையவனாவாய்' என்றார்.

## மறுரூப ஐக்கியம்.

நானும், என் நேசரும், தனித்திருக்கும்படி உலகத்தின் மாய்ய யாவும் தெரியத்தக்கதான உன்னதமான ஒரு மலைக்குப் போனோம். அங்கே என் நேசர் தம்முடைய மகிமையின் ரூபத்தை எனக்குக் காண்பித்தார். உடனே அவருக்கு முன்பாகத் தரையிலே விழுந்தேன். என்னைச் சுற்றிலும் அவரின் மகிமையின் ஒளி பிரகாசித்தது. அந்த ஒளியைப் பார்க்கமுதலாய் என்னாலே ஏலாமல், பயந்து, நடுநடுங்கினேன். என் நேசர் தம்முடைய அன்பின் கரத்தால் என்னைத் தொட்டுப்பிடித்து, 'பயப்படாதே! நீ, இதுமுதல் மகிமையின் பிள்ளை என்று அழைக்கப்படுவாய்' என்றார்.

பதஷ்டத்துடனும், நடுக்கத்துடனும் அவரை எட்டிப்பார்த்தேன். என் நேசரின் முகப்பார்வையில் அன்பொழுகினது. அவரின் நேசத்தால் திருப்தியானேன். அவரின் இடது கை என் தலையின் கீழிருக்கிறது. அவரின் வலது கை என்னை அணைத்துக்கொள்ளுகிறது.

நானும் என் நேசரும், வெளியின் வீதிகளில் இராத்தங்கினோம். அவரின் நேசம் தேனிலும் தெளிதேனிலும் மதுரமானது. இந்த உலகத்தின் சகல இன்பங்களும் கூடினாலும், என் நேசருடன்கூடி அனுபவிக்கும், ஒரு நிமிஷ இன்பத்துக்கு நிகரல்ல என்று அறிந்துகொண்டேன்.

என் நேசரும், நானும் ஒன்றாய்க்கூடி பள்ளத்தாக்கிலே என் நேசருக்கேற்ற கனி ஏதாவது உண்டா என்று பார்க்கவந்தோம். நாங்கள் பள்ளத்தாக்கிலே போகும்போது, முதலில் எங்களுக்கு எதிரே அலங்காரமாய், நெருங்கிய இலைகள் அடர்ந்து, மிகவும் செழிப்பாய்த் தோன்றுகிற அத்தி மரங்களைக் கண்டோம். அவைகளெல்லாம் என் நேசரால் அவருக்கேற்ற கனி கொடுக்கும்படி வளர்க்கப்பட்டவைகள். அவைகளினருகே நாங்கள் சென்று பார்க்கும்போது, அவைகளில் இலைகளேயன்றி, என் நேசருக்கேற்ற கனியுண்டாயிருந்ததில்லை. அப்பொழுது என் நேசரின் கண்களிலிருந்து நீர்த்தாரைகள் ஓடினது.

பின்னும் என் நேசர், அவைகளைப் பார்த்து, "நான் செய்யாத எந்த வேலையை இனி நான் உனக்குச் செய்யட்டும்" என்றார். என் நேசருடன் நானும் அந்த மரங்களுக்காக அழுதேன். என் நேசர் தம்முடைய அன்பின் பிதாவை நோக்கி, அம்மரங்களுக்காகப் பரிந்துபேசினார். "ஐயா! என் அன்பின் பிதாவே! இது இந்த வருஷமும் நிற்கட்டும், நான் இதைச் சுற்றிலும் கொத்தி எருப்போடுவேன். கனி கொடுத்தால் சரி, கொடாவிட்டால், நம்முடைய தோட்டத்தைக் கெடுத்துப்போடாதபடி வெட்டிப்போடலாம்" என்றார்.

பின்பு சற்று அப்புறம் போனோம் அங்கே பலஜாதி மரங்கள் மிகவும் நன்றாய்த் தெரிந்தது. அநேக பூவும் பிஞ்சும் தெரிந்தது அவைகள்



பல இடங்களிலும் சில சேதங்கள் அடைந்து கனிக்கேற்ற ஒரு பழமாவது காணப்படவில்லை. அப்போது என் நேசர், "நம்முடைய திராட்சத் தோட்டத்தைக் கெடுக்கிற சிறு நரிகளையும், குழிநரிகளையும் பிடியுங்கள்" என்று உத்தரவுபண்ணினார்.

இன்னும், சற்று அப்புறம் போனோம். அங்கே அநேக மரங்கள் காணப்பட்டது. அவைகளில் அநேக பழங்கள் புசிப்பாரில்லாமல், அவைகள் நின்ற இடங்களிலெல்லாம் நிறைந்திருந்தது. அம்மரங்கள் கசப்பான கனிகளைக் கொடுத்ததினால் "நல்ல கனி கொடாத மரமெல்லாம் அக்கினிக்கு இரையாகும்" என்றார்.

இப்படியாக, பள்ளத்தாக்கிலே சில பாகங்களை, என் நேசருடன் சென்று, அவருக்கு ஏதாவது நல்ல கனிகளுண்டாவென்று பார்த்தேன். அவைகளில் ஒன்றிலாவது, என் நேசருக்கேற்ற கனிகள் அகப்படாததினால் நான் அழுதேன். என் நேசர் என்னை தைரியப்படுத்தி "நான் நானே, என் நாமத்தினிமித்தம் இவைகளில் எனக்கேற்ற கனிகள் உண்டாகும்படி செய்வேன்" என்றார்.

ஆ! என் நேசருடைய அனாதி அன்பு, நீடிய இரக்கம், நீடிய சாந்தம், நீடிய பொறுமை, என்னை பிரமிக்கப்பண்ணிவிட்டது. ஐயோ! இவ்வுலகத்தில் அவருடைய கிருபையை அசட்டைசெய்யும் மனுஷர்களின் முடிவு எவ்வளவு பயங்கரமென்று உணர்ந்துகொண்டேன். ஆ! என் நேசர், எனக்கு எவ்வளவு அருமையானவர்! என் ஆத்தும நேசரே! உமது நேசம் எனக்கு எவ்வளவு மதுரமாயிருக்கிறது. உமது இன்பம் என் ஆத்துமாவை பெலப்படுத்தும் ஜீவ ஊற்றுப்போலிருக்கிறது. என் ஆத்தும நேசரே! ஒரு நிமிஷமாவது உம்மைவிட்டுப் பிரிய எனக்கு இஷ்டமில்லை. என்னை உமது அன்பில் உறுதிப்படுத்தும். அறிவுக்கெட்டாத உமது உன்னத அன்பை, என் இருதயத்தில் இன்னும் அதிகமாய்ப் பெருக்கி, என் இருதயத்தை விசாலமாக்கும்.

## VI. பூரணமாகுதல்.

ஆத்துமாவே! இப்பொழுது உன் அன்பின் மீட்பரின் நேச ஐக்கியத்திலிருந்து கொஞ்சி விளையாடிக் களிப்புற்றிருக்கிறாயே. இதோடே உன் சந்தோஷம் முடிந்துபோகிறதில்லை. இப்போது உனக்கு உலகம், மாம்சம், பிசாசு என்ற முச்சத்துருக்களின் சதிவினைகளுண்டே அவைகளின் குமுறலின் தீவினைகளைக் கண்ணினால் பார்க்கிறாயே. இவைகளினூடே நான் உனக்குக் கொடுக்கும் சந்தோஷத்தையா என் இரத்தப் பலன் என்று நினைக்கிறாய்? இல்லை, இல்லை, இன்னும் நீ அனுபவிக்கவேண்டிய பூரண மகிமைகளுண்டு, அவைகளை இங்ஙனம் முறையே காட்டுவேன்.

இப்பொழுது, உன் ஆத்தும நேசரைக் கண்ணாடியிற் பார்ப்பதுபோல் பார்க்கிறாய். இனி முகமுகமாய்த் தரிசிப்பாய். அப்போது உன் சந்தோ

ஷம் என்னவாயிருக்கும். உன் நேசர் பரலோகத்திலிருந்து ஆகாய மண்டலத்துக்கு வருவார். அப்பொழுது பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடுவதுபோல, பூமியிலுள்ள பரிசுத்தவான்கள், மரித்து அடக்கம் பண்ணப்பட்டவர்களும், உயிரோடிருக்கிறவர்களும், ஒரு இமைப்பொழுதில் மறுரூபமாக்கப்பட்டு, என்னிடத்தில் வந்து கூடுவார்கள். உன் அருமை நேசர் தமக்கு மனையாட்டியாய்த் தெரிந்துகொண்டு, கறைதிரையாதொன்றுமில்லாமல், சுத்திகரிக்கப்பட்டவர்களைத் தமக்கு முன்பாக நிறுத்திக்கொள்வார். அப்பொழுது, உன் சந்தோஷம் பூரணமாகும்.

இன்னமும், உன் நேசரோடே ஆயிரக்கணக்கான பரிசுத்தவான்களோடே இந்தப் பூமிக்கு நீ வந்து, உன் அன்பின் நேசரோடே ஆயிரம் வருஷம் அரசாளுவாய். அப்பொழுது உன் சந்தோஷம் அதிகப் பூரணமாகும்.

அந்த ஆயிரம் வருஷம் முடியவே, பூமியிலே மரித்துப்போனவர்களும், உயிரோடிருக்கிற சகல சிறியோரும், பெரியோரும், உன் மீட்பருடைய முன்பூக்கு நியாயத்தீர்ப்படையக் கொண்டுவரப்படுவார்கள். அப்பொழுது நீயும் உன் நேசருடன்கூடி அவருடைய நியாயத்தீர்ப்பை, கோபாக்கினையின் பிள்ளைகள்மேல் கூறுவாய். அப்பொழுது அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் உன்மேல்கொண்ட அளுதி அன்பின் இரக்கத்தின் பூரணம் இன்னதென்று அறிந்துகொள்வாய்.

கடைசியாக, மனுஷர்களை மோசம்போக்கின ஆதி வேதாளமும், அவன் கூட்டத்தாரும், அவன் வஞ்சகத்தை நம்பின சகலரும், நரகத்தின் உபாதியை அடைந்த பின், உன் நேசரும், நீயும், ஒன்றாய்க்கூடி வாழும்படி, உனக்காக உன் நேசர் ஆயத்தஞ்செய்த புதிய எருசலேம், பரலோகத்திலிருந்து இறங்கிவரக் காண்பாய். அந்த நகரத்தைக் கண்டவுடன் ஆச்சரியப்பட்டு ஆனந்தங்கொள்வாய். அந்த நகரத்தைப்பற்றி இப்போ நான் உனக்கு என்ன சொன்னாலும் விளங்காது. உலக திருஷ்டாந்தங்களினால் அந்நகரத்தை ஆவியானவர் மனுஷர்களுடைய புத்திக்கு விளங்கக்கூடிய விதமாய், வெளிப்படுத்தின விசேஷத்தில் 21-ம் அதிகாரத்தில் எழுதிவைத்திருக்கிறார். அதை நீ போய்ப் பார்த்துக்கொள். என்றாலும் நீ கண்ணினால் காணும்போது மாத்திரம் அந்த நகரத்தின் பூரணத்தை அறிந்துகொள்வாய்.

அந்த நகரம் பரலோகத்தை விட்டு இறங்கவே, உன் நேசருக்கும், உனக்கும் கலியாணம்செய்ய ஆயத்தஞ்செய்வார்கள். சுத்தமும், வெண்மையும், பிரகாசமுமான வஸ்திரம் உனக்குத் தரிப்பிக்கப்படும். பரலோகம் எல்லாம், ஆட்டுக்குட்டியானவருக்கும், அவர் மனைவிக்கும், கலியாணம் வந்தது என்று ஆர்ப்பரிக்கும் தேவ தூதர்கள் கெம்பீரிப்பார்கள். பரலோகத்தின் பட்சிகள் தங்கள் குரல்களை உயர்த்தி, இன்னிசை ஒழுகப்பாடும். தேவ தூதர்கள் தங்கள் தங்கள் வாத்தியங்களை நேர்த்தியாய் வாசித்து, வல



சாரி இடசாரி வருவார்கள். பரலோகத்தின் மணிகளெல்லாம் தங்கள் நாதங்களை முன்சொன்ன கீதங்களுக்கிசைவாக ஓசை தொனிக்கச்செய்யும்.

அந்த நாளின் ஆரவாரச் சந்தோஷங்கள் அனைத்தும், என்னைப்போல் அறிந்தவர்களுக்கே யன்றி வேறொருவருக்கும் இப்போது விளங்காது. இப்படியாக, கெம்பீரத்தொனி முழங்கவே, பரிசுத்த ஆவியாகிய தேவன், உன் கையைப் பிடித்து, உன் அன்பின் நேசர் கையில் கொடுக்கவே, உன் அன்பின் நேசர், தமது ஆசீர்வாதங்களால் நிறைந்த கரங்களால், உன்னை அணைத்து, தமது அன்பின் மடியிலிருத்தி, தமது கிருபை பொருந்திய மார்போடணைத்து, உன் கண்ணீரையெல்லாம் தாமே துடைத்து, தமது அமிர்த வாயால் முத்தமிட்டு, தம்மோடு நித்தியகாலமும் கூடி வாழும்படி வைத்துக்கொள்வார். அப்பொழுதுதான் ஆட்டுக்குட்டியானவர் உன்மேல்கொண்ட அன்பின் பூரணத்தையெல்லாம் அறிந்துகொள்வாய். நீ இனி பசியடைவதுமில்லை. தாகமடைவதுமில்லை. உன் நேசருடனே கூடி ஜீவதருக்கனியும், ஜீவத்தண்ணீரும் அருந்தி ஓயாமல் உன் நேசருடனே மகிழ்ந்திடுவாய்.

இன்னமும் உன் அன்பின் நேசர், பரலோகத்தார் யாவருக்கு முன்பாக உன்னைத் தமது பரம சபையில் நிறுத்தி ஜீவ கிரீடமும் சூட்டுவார். இப்படியாக அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் மகிமையின் பிரசன்னத்தினால், அலங்கரிக்கப்பட்டு, சதாகாலமும், அவரோடே கூடி அரசாளுவாய்

ஆகையால், ஆத்துமாவே! உன் அன்பின் நேசரின் பூரண மகிமைகளை நினைத்து, தியானித்து, அவைகளை வாஞ்சிப்பாயாக.

## ஆத்துமாவின் பூரண வாஞ்சை

நான் என் நேசருடையவள். என் நேசர் என்னுடையவர். அவர் கண்களில் கடாக்ஷம் பெறலானேன். ஆ! என் ஆத்துமநேசரே! என் வாஞ்சைக்குரியவரே! இந்த அநித்திய உலகத்திலே, பாவ சந்தோஷங்கள் நிறைந்த என் இருதயத்திலே, உம்முடைய ஐக்கிய இன்ப சந்தோஷத்தை உம்முடைய கிருபையினாலே எனக்குக் கொடுத்ததற்காக, உம்மை என் முழு இருதயத்தோடும் ஸ்தோத்தரிக்கிறேன். ஆ! என் ஆத்தும நேசரே! துன்பங்கள், நிந்தைகள், கஷ்டங்கள் நிறைந்த இவ்வுலகத்திலே உம்மை அனுபவிப்பது எவ்வளவு சொற்பம். ஆ! என் இன்பத்துக்குரியவரே! இன்னும் நீர் எனக்குக் கொடுக்கும் பூரண இன்பத்தின்மேல் முழுவதும் ஆசை கொண்டேன், ஐயா! அந்த நாள் எப்போ பிறக்கும்? அந்த நாளின் மகிமைகளை, என் நேசர் சொல்லும்போதே என் உள்ளம் பரவசமாகிறதே. அந்த நாளை நான் கண்டு, அதின் மகிழ்ச்சிகளையெல்லாம், என் நேசருடனே அனுபவிக்கும்போது, என் மகிழ்ச்சி எவ்வளவாய்ப் பெருகும்! ஆ! என் ஆத்தும நேசரே! அந்த நாளுக்காகப் பிரசவ வேதனைப்

படுகிறேன் ஐயா! அந்த நாளுக்காக என்னோடு சர்வ சிருஷ்டிகளும், பிரசவ வேதனைப்பட்டு, அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று, சுயாதீனம் பெற்றுக்கொள்ளக் கதறுகிறதே. ஆ! என் ஆத்தும நேசரே! இந்த மாயையான உலகத்தில், அனுதினமும், காற்று மும்முரமுமாகி, கடலின் அலைகளும் கொந்தளிக்கிறதே. என் ஆவி தொய்ந்துபோகிறதே. கர்த்தராகிய இயேசுவே! சீக்கிரம் வாரும்! ஆமென். கர்த்தராகிய இயேசுவே! சீக்கிரம் வாரும். என் கண்கள் உம்மை எதிர்பார்த்துப் பூத்துப்போகிறதே. சத்துருவினுடைய மும்முரத்தை அழிக்க சீக்கிரம் வாரும். பரியசக்காரர் பெருகுகிறார்கள். ஐயா! உம்முடைய பிள்ளைகள்மேல் மூர்க்கவெறி கொள்ளுகிறவர்கள் அநேகர், ஐயா! கெர்ச்சிக்கிற சிங்கமாகிய வேதாளம், என்மேல் சீறுகிறான் ஐயா! நான் என்ன செய்வேன்? என் ஆவி கலங்கித் தத்தளிக்கிறதே.

என் ஆத்தும நேசரே! உம்முடைய இராட்சியம் வருவதாக. உம்முடைய சித்தம் பரலோகத்திலே செய்யப்படுவதுபோல், இந்தப் பூலோகத்திலும் செய்யப்படுவதாக. உம்மை என் முழு இருதயத்தோடு வாஞ்சிக்கிறேன். என் ஆத்தும நேசரே! வாரும். உமது மகிமையை விளங்கப்பண்ணும். உமது மகத்துவமான நாமத்தை மகிமைப்படுத்தும். உமது இரத்தத்தினாலும், ஜீவனினாலும், அரும் பிரயாசப்பட்டு, சவதரித்த அந்தப் பூரண மகிமைகளை, சீக்கிரமாய் எனக்குக் கட்டளையிட்டருளும். பயங்கரம் நிறைந்த உமது சமூகத்தை இந்தப் பூலோகமும் அதின் குடிகளும், வெளிப்படையாய்த் தரிசித்துக்கொள்ளட்டும்.

ஆ! என் ஆத்தும நேசரே! இந்த ஏழைப் பாவிக்கு, உமது கண்களில் தயை கிடைக்கலாயிற்றே. இன்னமும் என் எஜமானே! என்னை உமது பூரண மகிமைக்குப் பாத்திரமுடையவளாக்கும். நான் மறுரூபமாக்கப்பட்டு என் ஆசைக்குரிய அன்பின் நேசரை எப்போ காண்பேன்? என் நிந்தைகள், துன்பங்கள், கஷ்டங்கள், எல்லாம் எப்போது ஒழியும்? நான் எப்போது உமது சமூகத்தில் பூரண மகிமைகளை அடைந்து நிற்பேன் ஐயா! ஆ! என் ஆத்தும நேசரே! யாதொரு கலக்கமுமில்லாத உமது, இன்ப சமூகத்தில் நிற்க ஆசிக்கிறேன் ஐயா! கர்த்தராகிய இயேசுவே! சீக்கிரம் வாரும். ஆமென் கர்த்தராகிய இயேசுவே! வாரும்.

## VII. முடிவுரை அல்லது அனுபந்தம்

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்டுக்கொள்ளப்பட்டவர்களே! நீங்கள் விசுவாசம் வைத்திருக்கிற தேவகுமாரன், பூரண மனுஷனும் பூரண தேவனுமாயிருக்கிறார். அவரில் விசுவாசம் வைத்து பாவமன்னிப்படைந்தவர்களுக்கு ஏன் பரிசுத்த ஜீவியம் செய்ய பெலன் இல்லை? கர்த்தராகிய இயேசுவின் ஞானபெலத்தில் நம்பிக்கைவைத்து அவரைச் சரி



யானபடி அறிந்துகொள்ளாததினால்தான். சர்வ வல்லமையும், சர்வ ஞானமுமுள்ள கர்த்தர், ஆதிகாலங்கள் முதலாய், மனுஷருடைய ஒன்றுமில்லாமையையும், அவர்கள் பெலவீனங்களையும், நன்றாய் அறிந்து, தம்முடைய நேச மைந்தனின் ஜீவனாலே இரட்சித்து, அந்த இரட்சிப்பைத் தாமே தம்முடைய ஆவியால், மனுஷருடைய உள்ளத்தில் ஸ்தாபித்து, தாமாகவே ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் பிரவேசித்து, தம்முடைய நேச அன்பின் இன்ப ஐக்கியத்தைப் பெருகச்செய்து, தாமே அவர்கள் இருதயங்களில் இராஜாவாக இருந்து நடத்த சித்தமாயிருக்கும்போது, கர்த்தராகிய இயேசுவின் இரட்சிப்பை அடைந்தவர்கள் உயிரற்ற பிரேதங்களைப்போல காணப்படுகிறார்களே. இதற்கு முகாந்தரம் என்ன?

I. தங்களின் ஒன்றுமில்லாமையை இன்னமும் உணரவில்லை.

II. சுயமுயற்சி செய்கிறார்கள்.

III. கர்த்தராகிய இயேசுவை நன்றாய் அறிந்துகொள்ள விரும்பவில்லை.

IV. அவரின் பெலத்தில் நம்பிக்கை வைக்கிறதில்லை. ஆகவே பரிசுத்த ஜீவியத்தின் பூரண பெலனை அறியாமல் குருடர்களைப்போல அலைந்து தடுமாறுகிறார்கள். பரிசுத்த ஜீவியம்செய்ய ஆசித்து வேண்டுதல் செய்தாலும், விசுவாசமில்லாமல் ஜெபிப்பதால், யாதொரு மாறுதலுமில்லாமல் பெலவீனராகிறார்கள்.

மேலும், கர்த்தராகிய இயேசு, 'என்னையன்றி உங்களால் ஒன்றும் செய்ய ஏலாது,' என்றுரைத்த திருவாக்கின் உண்மையைக் கவனிக்கிறதில்லை. இப்படியாக, கர்த்தராகிய இயேசுவை அறிந்தும், அறியாமலும், அவருடைய பூரண பெலத்தில் விசுவாசம் வையாமலும், அவரின் ஐக்கிய இன்ப சந்தோஷங்களனைத்திற்கும், புறம்பாக்கப்படுகிறார்கள்.

ஆகையால், எந்த மனுஷனும், முதலில் தேவ ஆவிக்கு இடங்கொடுத்து, அவரைப் பெற்றுக்கொள்ளவேண்டும். பின்பு, தேவ ஆவியானவர், முதலில் சொல்லியபடி, தம்முடைய கிரியையைப் படிப்படியாய் நம்மில் தொடங்கி, நடத்தும்போது, அவருக்கு மனப்பூரணமாய்க் கீழ்ப்படியவேண்டும். இவ்வகையாக நாம் அவருக்குக் கீழ்ப்படியவே, அவரே, எல்லா இரகசியங்களையும் நமக்குப் போதித்து, நாம் அவைகளை அனுபவிக்கும்படி செய்வார். ஆகையால் நாம் ஆவியானவருக்கு எல்லா விஷயங்களிலும் கீழ்ப்படிகிறதே உத்தமம். கர்த்தராகிய இயேசுவை நம்முடைய இருதயங்களில் மகிமைப்படுத்தும்படி அனுப்பப்பட்ட அந்த ஆவியானவரே, கிறிஸ்துவை நம்முடைய இருதயங்களில் உருவாக்கி, நம்முடைய மனக்கண் அவரைத் தரிசிக்கும்படி செய்வார். நாம் அவரைத் தரிசித்த பின்பும் அவரை அனுபவிக்கும் எல்லா இரகசியங்களையும் அவரே நமக்குப் போதிப்பார். மேலும் கர்த்தராகிய இயேசுவின் தாழ்மை, சாந்தம், அன்பு முத

லிய குணங்கள், நம்மில் பெருகும்படிக்கும் செய்வார். கர்த்தராகிய இயேசுவின் மேலுள்ள நம்முடைய அன்பு எவ்வளவாய்ப் பெருகுகிறதோ அவ்வளவாய் மாத்திரம், பரிசுத்த ஜீவியம் நம்மில் பூரணப்படும்.

இவ்வகையாய் நாம் ஆவியானவருக்கு எல்லா விஷயங்களிலும் கீழ்ப் படிந்து நம்மை மனப்பூரணமாய் அவருக்கு ஒப்புக்கொடுத்தால், கர்த்தராகிய இயேசுவே, நம்முடைய உள்ளங்களில் இராஜாவாக இருந்து, நம்முடைய சித்தத்தின்படி நாம் நடவாமல் அவருடைய சித்தத்தின்படி செய்ய, சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துவார். அப்போது அவர் உன்னில் மகிமைப்படுவார். நீ ஆத்துமாக்களுக்குப் பிரயோஜனமுடையவனாயிருப் பாய்.

இன்னமும், நீ கவனித்துக்கொள்ளவேண்டிய குறிப்புகள்:—

இந்த உலகம் உன்னுடையதல்லவென்பதை உண்மையாய் உணர்ந்து, இனிவரும் பலன்கள்மேல் நாட்டமுடையவனாய், இந்த உலகத்தை சகல விதத்திலும் அபாத்திரமானதாய் எண்ணி கழிக்கவேண்டும். கர்த்தராகிய இயேசு தன் ஜீவனாலும், இரத்தத்தினாலும், உனக்காய் ஆயத்தஞ்செய்திருக் கிற அந்தப் பரம வாசஸ்தலத்தையே நீ ஆசிக்கவேண்டும். அந்த மகிமையின் ஸ்தலத்தை நீ அடைந்துகொள்ளவேண்டுமானால், பிதாவாகிய தேவன், கர்த்தராகிய இயேசுவை, உனக்கு நன்றாய் வெளிப்படுத்த, அவரைநோக்கி, இடைவிடாமல் பிரார்த்தித்து வா, அவர் உனக்கு உடனே வெளிப்படுத்தா விட்டாலும், சோர்ந்து போகாமல் ஜெபித்து வா. நீ இவ்வகையாய் உண் மையாய் ஜெபிப்பாயானால், உன் சுய எண்ணம், சுய கிரியை படிப்படி யாய்க் குறைந்து, உன் ஒன்றுமில்லாமையை உணரவே, கர்த்தராகிய இயேசு, தெளிவாய் உன் இருதயத்துக்குள் இருப்பதை அறிந்துகொள்வாய். அவர் உனக்கு வெளிப்படுத்தப்பட்டபின்பு, அவரில் நிலைத்திரு. அவர் உன்னோடு பேசும் இனிய வசனங்களிலேயும் நிலைத்திரு. அவர் உன் னோடு கனியும், அன்பிலும் நிலைத்திரு. இப்படியாக, நீ அவரில் நிலைத்தி ருந்தால், கொடியானது செடியில் நிலைத்திருந்து கனி கொடுப்பதுபோல நீயும் கனி கொடுப்பாய். அவரின் வசனத்தில் நிலைத்திருந்தால், நீ கேட்டுக் கொள்வதெல்லாம் அருள்செய்யப்படும். அவரின் அன்பில் நிலைத்திருந்தால் மிகுதியான கனிகளைக் கொடுப்பாய். பிதாவாகிய தேவனும் உன்னில் மகிமைப்படுவார். நீ அவருக்குப் புத்திரனும், ஆவிக்குரிய திருச்சபையின் ஐக்கியத்தில் இணைக்கப்பட்டு அவருக்கு மனையாட்டியுமாகி, அவருடைய சந்தோஷத்தை அனுபவித்துக்கொள்ளுவாய்.

கர்த்தராகிய இயேசுவே! உம்முடைய ஐக்கியத்தை என்னில் பெருகச் செய்யும். ஆமென்.

Printed at the Church Mission Press, Palamcottah and
Published by the Rev. S. G Maduram, B.A.



June, 1913. Registered No. M—163.

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

MADRAS.

“என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ள[illegible]
ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்.” (யோவான் 7: 88)

Vol. XIV ஜூன்மீ 1913

## ‘ஒருக்காலும் தாகமுண்டாகாது.’

‘நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாக முண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்’. பரி· யோவான் 4: 14.

ஓ கிறிஸ்துவே, என் ஆத்துமாவின் தாகத்தைத் தீர்க்க உம்மால் கூடுமோ? என்னில் எழும்புகிற ஆசையின் பெலத்தை நீர் அறிவீரோ? நீர் ஏராளமான ஆசீர்வாதங்களை எனக்கு அருளிச்செய்த போதிலும் என் ஆசை எனக்குள் தணிந்தபாடாயில்லையே! கிடைத்த நன்மைகள் அதிக ஆசையை எழுப்பிவிடுகிறதேயன்றி, என் ஆசையைத் தணிக்கக் காணோமே! ஆதலால் இயற்கைப்படிப் பார்த்தால் எனக்கு ஒருநாளும் திருப்தி வரமாட்டாதது போல் தெரிகிறதே! இப்போது நான் விரும்புகிறவைகளை நீர் எனக்குக் கொடுத்தீரானால், அவைகள் கிடைத்தவுடன் நிச்சயமாகவே நான் இவைக விலும் மேலானவைகளை நாடுவேன். என் நினைவு எங்கெல்லாம் செல்லு கிறதோ என் ஆசை அங்கெல்லாம் செல்லுகிறதே! இப்படியிருக்க என் ஆத் துமாவின் தாகத்தைத் தீர்க்க எங்கேயிருந்து நீர் தண்ணீர் கொடுப்பீர்? என் ஆத்துமாவையும் அதின் தாகத்தையும் நீர் அறிவீரா? ‘எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும்’?

ஆத்துமாவே, உன்னை உண்டாக்கினவர் உன்னை அறிவார். உன் நினைவு உன் ஆண்டவருடைய நினைவுக்குமேல் எழும்பக்கூடுமா? உன் நினைவு எவ்வளவுதூரம் எழும்பின போதிலும் உன் ஆண்டவரின் நினைவு அதற்குமேலாக மகா உன்னதமாய் எழும்பக்கூடுமல்லவா? உன் நினைவு எவ்வளவு தூரத்துக்கு எழும்பக்கூடுமோ அவ்வளவு தூரத்துக்கு ஆசையை எழுப்பிவிடுகிறது. ஆனால் அவருடைய நினைவோ உன் ஆசையைத் திருப்தி

செய்வதற்கென்று அதற்கு மேலாக எழும்புகிறது. ஆதலால் உன் மனது உண்டாக்கப்பட்ட போக்கின்படிக்கு, உன் ஆசை உனக்குள் மகா பெரிய பர்வதம்போல் எழும்பினாலும், உன்னையும் உன் மனதையும் உண்டாக்கினவர் உனக்கு மேலாக ஆச்சரிய கிரியைகளைச் செய்யக்கூடியவராயிருக்க வேண்டும். ஒரு சிருஷ்டியில் தாமே உண்டாக்கின ஆசையை ஆண்டவர் திருப்திசெய்யக்கூடாதிருப்பாரானால், அப்படிப்பட்ட ஆசையுள்ளதாக அந்தச் சிருஷ்டியை உண்டாக்கினது ஆண்டவர்பேரில் மகா பெரிய தப்பிதமாய் எண்ணப்படவேண்டுமே. இப்படிப்பட்ட ஒரு தப்பிதத்தையும் ஆண்டவர் செய்யவில்லை. அவர் உன்னைத் திருப்திசெய்யக் கூடியவராயிருக்கிறாரென்று அவருடைய சகல பரிபூரணமும் சாட்சியிடுகிறது. ஆதலால் உன்னை ஆசீர்வதிக்கவும் உனக்கு திருப்தியைக் கொடுக்கவும் யாதொரு வருத்தமும் இருக்கமாட்டாதென்று நிச்சயித்துக்கொள்.

ஆனால் ஒழுங்கற்ற பாவ ஆசைகள் உண்டு. அவைகளைத் திருப்தி செய்ய ஒருவரும் வாக்குக் கொடுக்கமாட்டார்கள் அவைகளை எத்தனைக்கு திருப்திசெய்யப் பார்த்தாலும் வேதனை அதிகப்படுமேயல்லாமல் குறைய மாட்டாது. ஆனால் இயேசு கொடுக்கிற தண்ணீரை அவன் குடிப்பானானால், அது அவனுடைய பாவ ஆசைகளின் ஊற்றுவரைக்கும் சென்று அதை அடைத்து, ஒழுங்கீனமான பாவ ஆசைகளிலிருந்து அவனை இரட்சிக்கும். கர்த்தராகிய இயேசு உனக்கு எல்லா ஆஸ்தியையும், எல்லா இன்பத்தையும், எல்லா திறமையையும், எல்லா வல்லமையையும், எல்லாக் கீர்த்தியையும் கொடுத்தாலும், இந்த ஏராளமான ஈவுகளெல்லாம் ஒன்றுசேர்ந்து, இன்பத்துக்காக உன் ஆத்துமா தவிக்கிற தாகத்தைத் திருப்தி செய்யமாட்டாதென்பதை அறிந்துகொள். ஆனால் அவர் கொடுக்கிற தண்ணீரோ ஆத்துமாவுக்குட்சென்று ஜீவியத்தைப் பாழாக்குகிற ஆசை இச்சைகளை எழுப்புகிற நோய்களைக் குணமாக்குகிறது. உன் ஆசைகள் நல் விருப்பங்களாய் எழும்பும்படி அவைகளை மாற்றுகிறது. தேவனுடைய அன்பின் வாஞ்சைகளுக்கு இசைவான வாஞ்சைகளே உன்னிலிருந்து எழும்பும்படி செய்கிறது. தெய்வத்துக்குப் பிரியமான சகல வாஞ்சைகளையும் அவர் மெய்யாகவே திருப்திசெய்கிறார்.

நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவன் நம்முடைய இருதயங்களில் ஊற்றுகிற தேவ அன்பே கிறிஸ்துவானவர் நமக்குக்கொடுக்கிற ஜீவத்தண்ணீர். இந்தத் தண்ணீரைக் குடித்தவனுக்குள்ளே அது நித்திய ஜீவகாலமாய் தேவன்பேரிலுள்ள அன்பை எழுப்பிக்கொண்டேயிருக்கும். அதினால் அன்பின் நினைவுகளும், பரிசுத்த வாஞ்சைகளும், தேவன் பேரில் பிரியமும், அவருடைய கற்பனைகளின் வழிகளிலே உற்சாகமும் பரலோக மகிமையின்பேரில் ஆசையும் இடைவிடாமல் உண்டாகும். உனக்குள் வாசம்பண்ணுகிற கிறிஸ்துவே இந்த நீரூற்றாய் உனக்குள் இருப்



பார். அவரிலிருந்து பரிசுத்த இன்பம்நிறைந்த நீரூற்று உனக்குள் ஊறிக்கொண்டேயிருக்கும். அதினால் இடைவிடாததிருப்தி உனக்குக் கிடைக்கும். கிறிஸ்துவின் அன்பினால் வரும் இன்பத்தைத் தவிர இம்மையில் வேறொன்றையும் நீ நாடாதிருப்பாய்.

## ஆண்டவரோடு உடன் வேலையாட்கள்.

'தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாய்ப் பெறாதபடிக்கு உடன் வேலையாட்களாகிய நாங்கள் உங்களுக்குப் புத்திசொல்லுகிறோம்.' 2 கொரிந்தியர் 6: 1.

தேவனோடு உடன் வேலையாட்கள் என்ற பொருள் புதிய ஏற்பாட்டிலே பல தடவை வருகிறது. 'அவர்கள் புறப்பட்டுப்போய் எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள்; கர்த்தர் அவர்களுடனேகூட கிரியை நடப்பித்தார்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாற்கு 16: 20. ஸ்தேவான் நிமித்தமாய் எழும்பின உபத்திரவத்தினாலே சிதறப்பட்டவர்களில் சிலர் அந்தியோகியாவில்வந்து பிரசங்கித்தார்கள். 'கர்த்தருடைய கரம் அவர்களோடே இருந்தது; அநேக ஜனங்கள் விசுவாசிகளாகி, கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்.' எருசலேமிலே அப்போஸ்தலரும் மூப்பரும் கூடியிருந்தபொழுது, 'பர்னபாவும் பவுலும் தங்களைக்கொண்டு தேவன் புறஜாதிகளுக்குள்ளே செய்த அடையாளங்கள் அற்புதங்கள் யாவையும் விவரித்துச் சொல்லக் கேட்டார்கள்.' அப்போஸ்தலர் 11: 21; 15: 12. 'நாங்கள் தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிறோம்; நீங்கள் தேவனுடைய பண்ணையும் தேவனுடைய மாளிகையுமாயிருக்கிறீர்கள்' என்று பரிசுத்த பவுல் தெளிவாய்ச் சொல்லுகிறார். 1 கொரி. 3: 8. இங்கேயும் அப்போஸ்தலன் தானும் தன் உடன் ஊழியர்களும் தேவனுடைய ஸ்தானாபதிகளாயிருப்பதாகவும், தேவன் தங்களைக்கொண்டு புத்திசொல்லுவதாகவும் சொல்லுகிறார்.

கர்த்தராகிய இயேசுவின் அற்புதங்கள் இதை விளக்கிக்காட்டுகிறது. அவர் மனிதரோடுசேர்ந்து இடைவிடாமல் கிரியை செய்தார். ஒரு சிறு பையன் ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொடுத்தான். அவைகளை அவர் ஐயாயிரம் பேருக்குப் போதுமானதாயிருக்கும்படிப் பெருகச் செய்தார். மரித்த லாசருவை அவரே உயிரோடு எழுப்பினார். ஆனால் அவரோடு நின்றவர்கள் முதலில் கல்லைப் புரட்டவும் பின்பு லாசருவைக் கட்டவிழ்த்துவிடவும் கட்டளையிட்டார் மனித ஜாதியின் இரட்சிப்புக்காக அவர் தம்மைத்தாமே பலியாகச்செலுத்தினார். ஆனால் அதின் சம்பந்தமாக அவரோடு நின்ற மனிதருக்கும் ஸ்திரீகளுக்கும் பல சிறு வேலைகள் செய்யும் சிலாக்கியம் கிடைத்தது. யோவான் இயேசுவின் தாயாரைக்

கூட்டிக்கொண்டுபோனார். யோசேப்பு கல்லறையைக் கொடுத்தான். நீக்கொதேமு சுகந்தவர்க்கங்களைக் கொண்டுவந்தான். உயிர்த்தெழுதலை அறிவிக்கும்படி ஸ்திரீகளுக்குக் கட்டளை கொடுக்கப்பட்டது. கர்த்தராகிய இயேசு பரத்துக்கெழுந்தருளினபோது, பரத்தினின்று அனுப்பப்படும் பரிசுத்த ஆவியும் அவருடைய சீஷரும் ஒன்றாய்ச்சேர்ந்த இரட்சிப்பின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டுமென்று கட்டளைகொடுத்தார். அதுமுதல் தேவ ஆவியானவர் பக்தர்களுடைய உதவியினாலேயே ஆத்துமாக்களை இரட்சித்துவருகிறார். இவர்கள் மெய்யாகவே தேவனோடு உடன்வேலையாட்களாயிருக்கிறார்கள். இப்படி தேவனோடு உடன்வேலையாட்களாயிருக்க விரும்புகிறவர்களிடத்தில் காணப்படவேண்டிய விசேஷித்த இலட்சணங்கள் என்னவென்று பார்ப்போம்.

1-வது, தேவனோடு உடன் வேலையாட்களாயிருக்க விரும்புகிறவர்கள் கிறிஸ்து இரட்சகர் நிறைவேற்றிமுடித்த பூரணமும் போந்ததுமான பிராயச்சித்தப் புண்ணியத்தை முக்கியப்படுத்தவேண்டும். அதினால் மாத்திரம் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படலாம். அதை முக்கியப்படுத்திக் காட்டும்படிக்கே தேவ ஆவியானவரும் அனுப்பப்பட்டிருக்கிறார். அதிலேயே இரட்சிக்கப்படவேண்டிய ஆத்துமாவுக்குச் சொல்லக்கூடிய நற்செய்தி அடங்கியிருக்கிறது. உன் பாவம் சுமந்து தீர்க்கப்பட்டாயிற்று; அதற்கு வரவேண்டிய ஆக்கினையை தேவகுமாரன் பட்டு உத்தரித்தாயிற்று. உன் பேரில்வர இருந்த தேவகோபம் அவர்பேரில்வந்து தீர்ந்தது. உன் பாவ சாபத்தைச் சுமந்து தீர்த்த இரட்சகராக நீ அவரை ஏற்றுக்கொள்வாயானால் அவர் உன் பாவங்களையெல்லாம் உனக்கு மன்னித்து, எல்லா அநியாயமும் நீங்க உன்னைச் சுத்திகரிப்பார். இப்போதே அவரை ஏற்றுக்கொள். அவருக்கே உன்னை ஒப்புக்கொடு. உனக்காக மரித்த அவரே உன்னை இரட்சிக்க வல்லவர். அவர் உனக்குத் தமது இரட்சிப்பை அருள இப்போதே காத்துக்கொண்டிருக்கிறார். அவர் அருளும் இலவச இரட்சிப்பைப்பெற்று மகிழவேண்டியதுதான் உன் கடமை என்று ஒவ்வொரு பாவிக்கும் நாம் சொல்லலாம். ஆவியானவர் நம்மோடு சேர்ந்து இதற்குச் சாட்சிகொடுத்து, ஒவ்வொரு ஆத்துமாவும் இதை நம்பப்பண்ணுவார். மன்னிப்பைப்பெற்ற நிச்சயத்தை அவரே இருதயத்துக்கு அளிப்பார். இவ்விதமாய் தேவ ஊழியனும் தேவ ஆவியானவரும் சேர்ந்தே, கிறிஸ்துவின் புண்ணிய பலன்களைக்குறித்து சாட்சிசொல்லி ஆத்துமாக்களை இரட்சிக்கலாம். கிறிஸ்துவின் பிராயச்சித்த புண்ணியங்களின் மகத்துவத்தை உணராதவன் ஆண்டவரோடு உடன் ஊழியனாயிருக்கமுடியாது.

2-வது, தேவனோடு உடன் வேலையாட்களாயிருக்க விரும்புகிறவர்கள் தேவனுடைய வசனத்தை முக்கியப்படுத்தவேண்டும். அவர் தமது சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் தமது வார்த்தையை முக்கியப்படுத்தியிருக்



கிறார். ஆத்தும இரட்சிப்புக்கு அது அதிசயமாய் உபயோகப்பட்டுவந்திருக்கிறது. இரட்சிப்புக்காகவும் இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்களின் போதனைக்காகவும் உபயோகிக்கப்படக்கூடாத ஒரு பக்கமும் அதில் இல்லை. கர்த்தரோடு இசைந்து ஊழியஞ்செய்கிற யாவரும் அதிகமதிகமாய் இந்தப் புஸ்தகத்தைப்படித்து உபயோகிப்பார்கள். ஆத்துமாக்களுக்கு இரட்சிப்பின் வழியைக் காட்டுகிற இந்தப் புஸ்தகமே, ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணும் வழியையும் ஊழியர்களுக்குக் காட்டுகிறது. எந்தப் பேதையையும் இது இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்குவதுபோலவே, அவனை இது ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணக்கூடிய ஞானவானுமாக்கிவிடும். மூடி துரை இதற்கு உதாரணம். அவர் உலகப்படிப்பு இல்லாதவர். ஆனால் ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணினதில் இவரைப்போல் பெரியவர் இல்லை. இவருக்கு மூன்று வருஷத்துக்கு ஒரு புது வேதாகமம் வேண்டியதாயிருந்தது. அவர் அதிகமாய் அதை உபயோகித்ததால் அதற்குள் அது கந்தலாய்ப் போய்விடும். வேதத்தை அதிகமாய் உபயோகித்த அவரை ஆவியானவர் அதிகமாய் உபயோகித்தார். ஆத்துமாக்களின் இரட்சிப்புக்கென்று ஆவியானவரும் அவரும் இணைபிரியாத ஊழியர்களானார்கள். தேவனோடு உடன் ஊழியர்களாகும் வழி இதுவே.

3-வது, தேவனோடு உடன் வேலையாட்களாயிருக்க விரும்புகிறவர்கள் இருதயத்தில் எப்பொழுதும் சுத்தமுள்ளவர்களாயிருக்கவேண்டும். தேவனுடைய உடன் ஊழியன் எப்பொழும் தேவனோடு பேசவேண்டும். ஆத்துமாக்களைக்குறித்து அவரோடு பேசி ஊழியஞ்செய்யவேண்டும். தேவ கிரியை மற்றவர்களிலே பூரணப்படும்படியாக அவன் இடைவிடாமல் ஊழியஞ்செய்யவேண்டும். அப்படிப்பட்ட வேலை இவனிலே மிகுந்த பயபக்தியையும் எச்சரிக்கையையும் பரிசுத்தத்தையும் உண்டுபண்ண வேண்டும். நான் ஆண்டவருடைய கைவேலையான ஆத்துமாக்களிடத்தில் கிரியைசெய்கிறபடியால் என் கைகள் பரிசுத்தமாயிருக்கவேண்டும்; தேவன் தமது ஆசீர்வாதத்தை என் மூலமாய் மற்ற ஆத்துமாக்களுக்குக் கொடுக்கப்போகிறபடியால் என் இருதயம் பரிசுத்தமாயிருக்கவேண்டும்; கர்த்தருடைய வேலையைக் கறைப்படாமல் நான் செய்யத்தக்கதாக என் சரீரம் சுத்தமுள்ளதாய்க் காக்கப்படவேண்டுமென்று அவன் எண்ணவேண்டும். இருதயத்திலும் நினைவிலும் பேச்சிலும் பார்வையிலும் அவருடைய பரிசுத்தம் விளங்கினால் மாத்திரம் அவருடைய மகா பரிசுத்தமான ஊழியத்தில் அவரோடுகூட நாம் உடன் வேலையாட்களாய் இருக்கலாம்.

4-வது, தேவனோடு உடன் வேலையாட்களாயிருக்க விரும்புகிறவர்கள் தேவ அன்பினால் நிறைந்தவர்களாயிருக்கவேண்டும். மனித இருதயத்தைத்திறக்கிற திறவுகோல் தேவ அன்புதான். ஆதலால் அந்த அன்பு

மூந்தி நம்மிலே ஊற்றப்படவேண்டும். ஆத்துமாக்களண்டை போகிறவன் அவர்களை நேசிக்கிறதாகவும், அவர்கள் வாழ்வுக்காகக் கவலைப்படுகிறதாகவும், அவர்களுக்காகக் கஷ்டத்தையும் துன்பத்தையும் சகிக்க ஆயத்தமாயிருக்கிறவனாகவும் காண்பிக்கவேண்டும். இயேசுவின் பார்வையில் ஆத்துமாக்கள் அருமையாயிருக்கிறபடியே இவனுக்கும் அருமையாயிருக்கவேண்டும். தேவனுக்கடுத்தாப்போல், விலைமதிக்கக்கூடாத பொருள் மனித ஆத்துமாக்கள்தான். பாவ உலகம் அதைக் கடைகோடியான பொருளாக எண்ணுகிறது. வெளி. 18: 13. பரலோகத்திலேயோ ஒரு பாவியினுடைய இரட்சிப்பு மகா பெரிய சந்தோஷத்தை உண்டுபண்ணுகிறது. லூக். 15: 7, 10. தேவனோடு உடன் வேலையாயிருக்கிறவன் பரலோகத்தின் மதிப்புப்படி ஆத்துமாக்களை மதித்து, ஏராளமான ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணும்படி மகா பெரிய அன்பின் அபிஷேகத்தைத் தேடவேண்டும்.

5-வது, தேவனோடு உடன் வேலையாட்களாயிருக்க விரும்புகிறவர்கள் தேவனைப்போல் பொறுமையுள்ளவர்களாயிருக்கவேண்டும். தேவன் ஒருபோதும் பதஷ்டப்படுகிறதில்லை. அவர் நீடிய சாந்தமுள்ளவர். நெடுங்காலம் அவர் பொறுமையோடிருக்கிறார். நாமோ எல்லாம் ஒன்றுபோல கைகூடிவரவேண்டுமென்று ஆத்திரப்படுகிறோம். முதற்தடவையில் ஒரு ஆத்துமா குணப்படாவிட்டால் நாம் அதைரியப்பட்டு, நமது கடமை முடிந்ததென்றிருக்கிறோம். ஆண்டவர் அப்படிச் செய்கிறதில்லை. காலம் செல்லச்செல்ல, அதிகமதிகமான இரக்கங்களை அவர் கட்டளையிட்டு, அதிகமான அன்பினால் ஆத்துமாக்களை ஜெயிக்கிறார். யாக்கோபின் விஷயமாய் முப்பது வருஷமாய் அவர் பொறுமையோடு காத்திருந்து, நன்மையின்மேல் நன்மையை அவனுக்குக் கட்டளையிட்டு, கடைசியாய் யாப்போக் என்னும் ஆற்றில் அவனைத் தனிமையாய்க் கண்டுபிடித்து அவனை தெய்வ பிரபுவாக்கினார். தேவ ஊழியக்காரனும் பொறுமையோடு விடாமுயற்சியாய் ஜெபிக்கவேண்டும். பொறுமையோடு கிரியைசெய்து ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணவேண்டும்.

6-வது, தேவனோடு உடன் வேலையாட்களாயிருக்க விரும்புகிறவர்கள் மிகுந்த நம்பிக்கையுள்ளவர்களாயிருக்கவேண்டும். ஆத்துமாக்களுக்கென்று இவர்கள் தேவனோடு உடன் வேலையாட்களாயிருக்கிறபடியால் தேவன் செய்கிறதே மிகுதியாயிருக்கும். இவர்கள் செய்யவேண்டுவது மகா சொற்பமாகவே இருக்கும். சிறுபிராயம் முதலே ஆண்டவர் கிரியை செய்து வருகிறார். பல இக்கட்டுன்பங்கள் மூலமாய்ப் பக்குவப்படுத்துகிறார். இவ்விதமாய்த் திருவசனத்தை ஏற்றுக்கொள்ள ஆயத்தப்படுத்திவைக்கிறார். அவர் உள்ளாகக் கிரியைசெய்து ஆயத்தப்படுத்துகிறார். அவருடைய ஊழியர்கள் வெளியாகக் கிரியைசெய்து ஆதாயப்படுத்திக்கொள்ளுகிறார்கள். சமாரிய ஸ்திரீ, பவுலான சவுல், கொர்நேலியு முதலியவர்கள் கர்த்



தரால் முன்னதாகவே ஆயத்தப்படுத்தப்பட்டிருந்தார்கள். ஆதலால் எளிதாய் ஆதாயம்பண்ணப்பட்டார்கள். தேவ ஊழியருக்கு இருக்கவேண்டிய பெரிய தைரியத்துக்கும் மிகுந்த நம்பிக்கைக்கும் காரணம் இதுவே. ஒரு ஆத்துமாவிடத்தில் மிகுந்த அதைரியத்தோடு வேலைசெய்யத் தொடங்குகிறபோது, கர்த்தர் முன்னதாகவே மகா பெரிய கிரியையைச் செய்திருக்கிறார் என்று அவர்கள் கண்டு ஆச்சரியப்படுவார்கள். கர்த்தரே இவர்களுடைய மகா பெரிய தைரியத்துக்கும் நம்பிக்கைக்கும் காரணம்.

7-வது, தேவனோடு உடன் வேலையாட்களாயிருக்க விரும்புகிறவர்கள் மிகுந்த மனத்தாழ்மையும் நன்றியறிதலுமுள்ளவர்களாயிருப்பார்கள். நான் தேவனோடு அவருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை செய்யப்போகிறேன்; அவரோடு ஜீவித்து அவருடைய ஸ்தானாபதியாயிருக்கப் போகிறேன் என்ற எண்ணம் எவ்வளவு பயபக்தியை உண்டாக்கவேண்டும். அவரோடு பழகப்பழக அவருடைய உன்னத ராஜரீக மகத்துவமும் நமது நித்திய அற்பத்தனமுமே வெளிப்படும். அப்போது எந்த ஊழியனும் தன்னை நீசன் என்று உணர்ந்து, தேவனோடு உடன் ஊழியனாகும்படி கிடைத்த மகா பெரிய சிலாக்கியத்தினிமித்தம் தன்னைத் தாழ்த்தி, என்னாளும் பணிந்த சிந்தையோடு நடந்துகொள்ளுவான்.

கர்த்தர் பெரியவராயிருந்தும் தமது உடன் ஊழியரை அவர் அவமதிக்கிறதில்லை. உத்தம ஊழியரை அவர் மிகுதியாய் கனம்பண்ணுகிறார். மேலேகாட்டிய இலட்சணங்களை அவர் நம்மில் காண்பாரென்றால், மெய்யாகவே அவர் நம்மை கனம்பண்ணுவார். நம்மோடு அவர் இருப்பதாக எல்லாரும் அறிய விளங்கச்செய்வார். அநேகருடைய இரட்சிப்புக்காக நம்மை அவர் உபயோகித்து, மறுமையிலே உன்னத மகிமையை நமக்கு அருளுவார்.

## 'உன் வாயை விரிவாய்த்திற.'

'உன்னை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே. உன் வாயை விரிவாய்த்திற; நான் அதை நிரப்புவேன்'. சங்கீதம் 81: 10.

இந்தச் சங்கீதத்தின் முதல் ஐந்து வாக்கியங்களில் கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடித் துதிக்கவேண்டுமென்று ஜனங்கள் பேசிக்கொள்ளவே, கர்த்தர் அவர்களைத் தடுத்து அவர்கள்பேரில் தமக்கு இருக்கும் வருத்தங்களை வெளிப்படுத்துகிறார். ஆறும் வசனம் முதல் முடிவுவரை கர்த்தரே பேசுகிறார் அவர் பேசுகிற காரியங்களை மூன்று பாகமாகப் பிரிக்கலாம். அப்பாகங்கள் ஒவ்வொன்றையும் சுருக்கமாய்க் கவனித்துக்கொள்வோம்.

முதலாவது, முற்காலச் சரித்திரத்தில் மூன்று காரியங்களை தேவன் அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறார். 'அவர்கள் தேவனுடைய உடன்படிக்கையைக் கைக்கொள்ளாமலும் அவருடைய கட்டளைகளின்படி நடக்கச் சம்மதியாமலும், அவருடைய செயல்களையும் அவர் தங்களுக்குக் காண்பித்த அதிசயங்களையும் மறந்தார்கள்' என்று ஓர் சங்கீதத்திலே சொல்லியிருக்கிறது. 78: 10, 11. மறதிதான் அநேக தீமைகளுக்குக் காரணம். 'அவருடைய கரத்தையும் அவர் தங்களைச் சத்துருவுக்கு விலக்கி மீட்ட நாளையும் நினையாமற்போனார்கள். 78: 42. நீங்கள் இன்னும் சிந்தியாமலும் உணராமலும் இருக்கிறீர்களா என்று இயேசு சுவாமியும் தமது சீஷரைக் கடிந்துகொண்டார். முற்காலத்துச் சரித்திரங்களை நினைவுகூருவதும் அவைகளைச் சிந்தித்து உணர்வடைவதும் கிறிஸ்தவ ஜீவியத்துக்கு மகா அவசியம். ஆண்டவர் இங்கே ஞாபகப்படுத்துகிற மூன்று காரியங்களைப் பாருங்கள்.

1-வது, அவன் தோளைச் சுமைக்கு விலக்கினேன், அவன் கைகள் கூடைக்கு நீங்கலாக்கப்பட்டது என்கிறார். (6 வா). எகிப்தின் அடிமைத்தனத்தினின்று தாம் அவர்களை விடுதலையாக்கினதை அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறார். எகிப்தின் அடிமைத்தனம் இஸ்ரவேலருக்கு இருப்புக் காளவாயின் அனுபவம்போலிருந்தது. அதைக்குறித்து கர்த்தர்: எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன்; எகிப்தியர் அவர்களை ஒடுக்குகிற ஒடுக்குதலையும் கண்டேன் என்று சொன்னார் அப்பொழுது கர்த்தர் இறங்கிவந்தார், பலத்த கையினாலும் ஓங்கிய புயத்தினாலும் அவர்களை விடுதலைபண்ணினார். எக்காலமும் அவர் அவர்களுக்குச் செய்யப்போகிற காரியங்களுக்கு முன்மாதிரியாகவே எகிப்திலே பெரிய கிரியைகளையும் காமின் தேசத்திலே அதிசயங்களையும் அவர் செய்தார். உன் வாயை நீ விரிவாய்த் திறக்கவேண்டுமானால் இவைகளை நீ நினைக்கவேண்டும் என்று ஆண்டவர் சொல்லுகிறார்.

2-வது, நெருக்கத்திலே நீ கூப்பிட்டாய், நான் உன்னைத் தப்புவித்தேன் என்கிறார். (7 வா.) சிவந்த சமுத்திரத்தண்டை நடந்த சரித்திரத்தை இது ஞாபகப்படுத்துகிறது. முன்னே சமுத்திரமும் பின்னே சத்துருக்களும் இருபுறமும் மலைகளும் இருந்தது இதைக் குறித்துச் சங்கீதக்காரன்: அவர்களுடைய பிதாக்களுக்கு முன்பாக எகிப்து தேசத்துச் சோவான் வெளியிலே அவர் அதிசயமானவைகளைச்செய்தார்; கடலைப் பிளந்து, அவர்களைக் கடக்கப்பண்ணி, ஜலத்தைக் குவியலாக நிற்கும்படி செய்தார். (78: 12) என்கிறார். 'கர்த்தர் எகிப்தியரில் செய்த அந்த மகத்தான கிரியையை இஸ்ரவேலர் கண்டார்கள்; அப்பொழுது ஜனங்கள் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தரிடத்திலும் அவருடைய ஊழியக்காரனாகிய மோசேயினிடத்திலும் விசுவாசம் வைத்தார்கள்'. யாத். 14: 31. வாயை விரிவாய்த் திறக்கவேண்டுமானால் இபபடிப்பட்ட மகத்தான கிரியைகளை உணரவேண்டும்.



3-வது, மேரிபாவின் தண்ணீர்களிடத்தில் உன்னைச் சோதித்து அறிந்தேன் என்கிறார். (7 வா ) மேரிபாவின் தண்ணீர்களிடத்தில் இஸ்ரவேலர் கர்த்தரைக் கோபமூட்டினார்கள். 'இஸ்ரவேல் புத்திரர் வாதாடினதினிமித்தமும், கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரா இல்லையா என்று அவர்கள் கர்த்தரைப் பரீட்சை பார்த்ததினிமித்தமும் அவன் அந்த ஸ்தலத்துக்கு மாசா என்றும் மேரிபா என்றும் பேரிட்டான்.' யாத். 17: 7. மாசா என்பதற்குப் பரீக்ஷை என்றும் மேரிபா என்பதற்குக் கோபமூட்டுதல் என்றும் அர்த்தம். கர்த்தரைப்பற்றிய அவிசுவாசம் வாய்க்குப் பூட்டுப்போட்டுவிடுகிறது. கர்த்தர் நடப்பிக்கும் அதிசயங்களும் அற்புதங்களும் அப்போது நின்றுபோம். ஆதலால் மேரியாவின் தண்ணீர்களை நினைக்கும்படி ஆண்டவர் சொல்லுகிறார். நமது ஜீவியத்தில் இவைகளுக்கு இனமான நாட்கள் உண்டு. நாம் இரட்சிக்கப்பட்ட நாளையும் சகல பாவங்களினின்றும் விடுவிக்கப்பட்ட நாளையும் நாம் நினைப்போமாக. நாம் மாத்திரம் கர்த்தரைக் கோபமூட்டாதிருப்போமானால் எந்நாளும் ஆண்டவருடைய அற்புதங்களை நாம் எதிர்பார்க்கலாம். 'நீ எகிப்திலிருந்து புறப்பட்ட நாளில் நடந்ததுபோலவே உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்' என்று ஆண்டவர் சொல்லுகிறார். மீகா 7: 15.

இரண்டாவது, தற்காலத்தில் செய்யும்படி மூன்று காரியங்களை அவர் கற்பிக்கிறார். 'என் ஜனமே கேள், உனக்குச் சாட்சியிட்டுச் சொல்லுவேன்; இஸ்ரவேலே நீ எனக்குச் செவிகொடுத்தால் நலமாயிருக்கும்' என்று ஆண்டவர் சொல்லுகிறார். (8 வா.) அவருடைய சாட்சி மகா முக்கியமானது. தமது ஜனங்களுக்கு அவர் அற்புதங்களைச் செய்யவேண்டுமானால் அவர்கள் என்ன செய்யவேண்டும் என்று அவர் சொல்லுகிறார். என் ஜனமே கேள்.

1-வது, 'உனக்குள் வேறு தேவன் உண்டாயிருக்கவேண்டாம்; அன்னிய தேவனை நீ நமஸ்கரிக்கவும் வேண்டாம்'. (9 வா.) உன் இருதயமும் உன் சரீரமும் முழுவதும் எனக்கே கொடுக்கப்படட்டும் என்பதே இதின் அர்த்தம். தேவன் நமக்கு வெளியே தேவனாயிருப்பது போதாது. நமக்குள் அவர் தேவனாயிருக்கவேண்டும். 'நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன்' என்று ஆண்டவர் சொல்லுகிறார். 2 கொரி. 6: 16. நமது ஆவி ஆத்துமா சரீர முழுவதும் அவருக்கே கொடுக்கப்படவேண்டும். அவருக்கு முன்னே மிகுந்த பயபக்தியோடு நாம் பணியவேண்டும். தேவன் மெய்யாகவே

நமக்குத் தேவனாயிருக்கவேண்டும். பாதிக்குப் பாதி அவர் தெய்வமாயிருக்க முடியாது அவர் முழுவதுமாய்த் தெய்வமாயிராவிட்டால், அரைகுறையான தெய்வமாய் அவர் இருக்கமாட்டார் தெய்வமாக அவருக்கு நம்மைப் பூரணமாய்ப் பிரதிஷ்டை செய்யவேண்டுமென்றே அவர் கேட்கிறார். தெய்வமாக அவரிடத்தில் நமது வாயை நாம் விரிவாய்த் திறக்கவேண்டுமானால், தெய்வமாக அவருக்கு நம்மைப் பூரணமாய் ஒப்புக்கொடுக்க வேண்டும்.

2-வது, 'உன்னை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே; உன் வாயை விரிவாய்த் திற, நான் அதை நிரப்புவேன்'. (10 வா.) வாயைத் திறப்பது நமது வேலை, அதை நிரப்புவது அவர் வேலை வாயை எந்த அளவுக்கு நாம் திறக்கிறோமோ, அந்த அளவுக்கு அவர் நிரப்புவார். ஆசீர்வாதத்தை அவர் அருளுவார்; ஆனால் ஆசீர்வாதத்தின் அளவை நாமே தீர்மானிக்கவேண்டும் ஆண்டவருக்கு நமது வெறுமைதான் வேண்டும்; நமக்கு அவருடைய பூரணமே வேண்டும். கர்த்தரிடத்திலிருந்து நாம் பெரிதான காரியங்களை எதிர்பார்க்கவேண்டும். நாம் எதிர்பார்த்த அளவுக்கு கர்த்தர் தம்மை உத்தமராக விளங்கப்பண்ணுவார். எந்த அளவுக்கு நாம் பெரிய காரியங்களை ஆண்டவரிடத்திலிருந்து எதிர்பார்க்கலாம்? எகிப்திலிருந்து உன்னைப் புறப்படப்பண்ணின நாளில் இருந்தபடியே நான் இருக்கிறேன், ஆதலால் நீ உன் வாயை விரிவாய்த் திற என்கிறார் எகிப்தில் நடந்த கிரியைகள் அளவு. அவைகளை நடப்பித்த நான் இன்னும் மாறாதிருக்கிறேன். ஆதலால் நீ உன் வாயை விரிவாய்த் திற, நான் அதை நிரப்புவேன்.

3-வது, 'என் ஜனமோ என் சத்தத்துக்குச் செவி கொடுக்கவில்லை, இஸ்ரவேல் என்னை விரும்பவில்லை. ஆ, என் ஜனம் எனக்குச் செவி கொடுத்து, இஸ்ரவேல் என் வழிகளில் நடந்தால் நலமாயிருக்கும்.' (11, 13 வா.) கடந்த காலத்தில் இஸ்ரவேல் இப்படிச் செய்யவில்லை என்று ஆண்டவர் புலம்புகிறதோடு, இனிமேலாகிலும் இஸ்ரவேல் இப்படிச்செய்தால் நலமாயிருக்கும் என்று அவர் சொல்லுகிறார். இங்கே மூன்று காரியங்கள் உண்டு. முதலாவது, இஸ்ரவேல் ஆண்டவரை விரும்பவேண்டும். இரண்டாவது, இஸ்ரவேல் ஆண்டவருடைய சத்தத்துக்குச் செவிகொடுக்க வேண்டும். மூன்றாவது, இஸ்ரவேல் ஆண்டவருடைய வழிகளில் நடக்க வேண்டும் இப்படிச் செய்வது நலமாயிருக்கும் என்று ஆண்டவர் சொல்லுகிறார் கர்த்தருடைய ஜனங்களே, உங்கள் ஆண்டவர் பேரில் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள். அவருடைய திருவசனத்தை இரவும் பகலும் வாசித்துத் தியானியுங்கள். அவருடைய கட்டளைகளின் பாதையில் கவலையோடு நடவுங்கள். இதினால் உங்களுக்கு மிகுந்த பலனுண்டாகும். 'அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதினால் மிகுந்த பலனுண்டு.'



கர்த்தர் கேட்கிற இம்மூன்று காரியங்களையும் செய்துபாருங்கள். அப்போது அவர் இனிவருங் காலத்திற்குக் கொடுக்கிற வாக்குகள் உங்களுடையதாகும்.

மூன்றவது, இனிவருங் காலத்துக்கு மூன்று காரியங்களை அவர் வாக்குத்தப்பண்ணுகிறார். 'நான் சீக்கிரத்தில் அவர்கள் எதிராளிகளைத் தாழ்த்தி, என் கையை அவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாகத் திருப்புவேன் அப்பொழுது கர்த்தரைப் பகைக்கிறவர்கள் அவருக்கு இச்சகம்பேசி அடங்குவார்கள். அவர்களுடைய காலம் என்றென்றைக்கும் இருக்கும். உச்சிதமான கோதுமையினால் அவர்களைப் போஷிப்பார்; கன்மலையின் தேனினால் உன்னைத் திருப்தியாக்குவேன்.' (14-16 வா).

1-வது, சீக்கிரத்தில் தமது கையை நமது சத்துருக்களுக்கு விரோதமாய்த் திருப்பி, அவர்களை அடக்குவார். கர்த்தர் நமது பட்சத்தில் இருக்கவும் நமக்காகக் கிரியை செய்யவும் பண்ணுவதே நமது மகா முக்கியவேலை. உத்தமன் எவனுக்காகவும் கர்த்தர் கிரியைசெய்ய எழும்பிவிடுவார். நமது சத்துருக்களைத் தமது சத்துருக்களாகப் பாவித்துக் கிரியை செய்வார். சீக்கிரமாய் அப்படிச்செய்வதாக அவர் இங்கே வாக்குக் கொடுக்கிறார்.

2-வது, உச்சிதமான நன்மைகளைக் கொடுப்பார். முதல்தரமான போஜனமும் முதல்தரமான இன்பங்களும் கொடுப்பாராம். அதினால் பெலமும் திருப்தியும் என்னாளும் நமக்குக் கிடைக்கும். 'தேவனே, உமது கிருபை எவ்வளவு அருமையானது; அதினால் மனுப்புத்திரர் உமது செட்டைகளின் நிழலிலே வந்தடைகிறார்கள். உமது ஆலயத்திலுள்ள சம்பூரணத்தால் திர்ப்தியடைவார்கள், உமது பேரின்ப நதியினால் அவர்கள் தாகத்தைத் தீர்க்கிறீர்'. சங்கீதம் 36: 7, 8.

3-வது, 'அவர்களுடைய காலம் என்றென்றைக்கும் இருக்கும்' என்று ஆண்டவர் சொல்லுகிறார். அவர்கள் சத்துருக்கள் அடக்கப்படுவார்கள், ஆனால் அவர்களுடைய காலமோ என்றென்றைக்கும் இருக்கும். எக்காலமும் பரிசுத்தமாய் ஜீவிக்கமுடியாதென்றும், அப்படி ஜீவித்தாலும் எக்காலமும் அது நன்மையிராதென்றும் அநேகர் எண்ணுகிறார்கள். இது சாத்தானின் போதகம். கர்த்தருடைய பிள்ளைகளுக்கேதான் சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு, ஜீவகாலமெல்லாம் சிறப்புண்டு. ஓ பக்தரே, கர்த்தர் உத்தமரென்பதைப் பரீட்சித்துப் பாருங்கள்; பரீட்சித்து மற்றவர்களுக்குக் காட்டுங்கள். 'நம்முடைய பெலனாகிய தேவனைக் கெம்பீரமாய்ப் பாடி' ஆர்ப்பரிக்க அப்பொழுது வெட்கப்படீர்கள். (1 வா).

# பெந்தேக்கொஸ்தேயின் பரிபூரண ஆசீர்வாதம்.

## IX. அதின் பூரண ஆசீர்வாதம் எப்படி உண்டாகிறது?

(தொடர்ச்சி).

நாலாவது, நீங்கள் தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும் வேண்டுகிறேன் என்கிறார்.

*தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படுவது எவ்வளவு பாக்கியம்! கிரகிக்கக்கூடாத இரகசியம்! ஆவியானவரின் பூரண ஆசீர்வாதத்தின் அனுபவம் இதற்குத்தான் நம்மை நடத்தவேண்டும்; இதற்கே நம்மை நடத்தும்.*

*தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவேண்டுமென்பதின் அர்த்தத்தை யார் நமக்கு வெளிப்படுத்துவார்? அதின் திட்டமான அர்த்தத்தை நாம் எப்போதாவது சரியானபடி அறியக்கூடுமோ? நாம் அதை அறியத்தக்கதாக தேவன் வழிசெய்திருக்கிறார். தேவனால் நிறைந்த ஒரு மனிதனை, துன்பத்தினாலும் கீழ்ப்படிதலினாலும் பூரணமாக்கப்பட்டு தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிரப்பப்பட்ட ஒரு மனிதனைகிறிஸ்து இயேசுவில் பார்க்கிறோம். அவர் தமது தனியான உலக ஜீவியத்தில் நேரிட்ட எல்லா அவசரங்கள் பெலவீனங்களிலும் தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிரப்பப்பட்டு பரலோகத்தின் குடிகள் பூலோகத்தில் எப்படி சந்தோஷமாயிருக்கலாம் என்று காட்டினார். தேவனுடைய சித்தம் மேன்மை, அவருடைய அன்பு ஊழியம் இவைகள் எப்போதும் அவரில் காணப்பட்டது. தேவனே அவருக்கு எல்லாமுமாயிருந்தார்.*

*தம்மை வெளிப்படுத்துவதற்காகவே தேவன் உலகத்தை சிருஷ்டித்தார். அதில் அவருடைய ஞானம், வல்லமை, கிருபை வெளிப்படுத்தப்படவேண்டும். இயற்கை முழுவதும் தேவனால் நிறைந்திருக்கிறதென்று அடிக்கடி சொல்லுகிறோம். விசுவாசமுள்ள கண்கள் தேவனை எதிலும் காணலாம். உலக முழுவதும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறதென்று சேராபீன்கள் பாடுகிறார்கள். தேவன் மனிதனில் காணப்படும்படியாகவும், அவருடைய சாயலாக மாத்திரம் அவன் உழைக்கும்படியாகவும்தான் தேவன் மனிதனைத் தம்முடைய சாயலாக உண்டாக்கினார் தேவனுடைய சாயலான மனிதன் தேவனுடைய மகிமையைத் தன் ஜீவியத்தில் ஏற்றுக்கொண்டு அதைச் சுமந்து அதை வெளிப்படுத்தவேண்டும். தேவனே அவனுக்கு எல்லாமாயிருக்கவேண்டும்; அவனில் எல்லாமுமாயிருக்கவேண்டும். அவன் தேவனால் நிறைந்திருக்கவேண்டும்.*

*பாவத்தினால் இந்த தெய்வ சித்தம் அபத்தமாய்ப் போய்விட்டது. தேவனால் நிறைந்திருப்பதற்குப் பதிலாக மனிதன் தன்னாலேயும் உலகத்தினாலேயும் நிறைந்தவனானான். பாவம் அவ்வளவாக நம்மைக் குருடாக்*



*கிப் போட்டதினால் திரும்ப தேவனால் நிரப்பப்படுவது கூடுமோ என்று எண்ணக்கூடியதாயிருக்கிறது.*

*அநேக கிறிஸ்தவர்களுக்குங்கூட இப்படி நிறப்பப்படுவது விருப்பமேயில்லை. என்றாலும் இந்த ஆசீர்வாதத்தை நாம் திரும்ப அடையும்படி நம்மை இரட்சிக்கவே கிறிஸ்து வந்தார். இதற்காகவே தேவன் தமது ஆவியின் மூலமாய் நமக்குள்ளே வல்லமையாய்க் கிரியைசெய்ய ஆயத்தமாயிருக்கிறார். தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படுவதற்காகவே தேவ குமாரன் நம்மிருதயத்தில் வாசம்பண்ண விரும்புகிறார். அவர் அதை நிறைவேற்றவும் செய்வார்.*

*பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்தின் உயர்ந்த நோக்கம் இதுதான். ஆவியானவர் மூலமாய் இதை அடையக்கூடும் என்று நம்பலாம். அவர் வழியைத்திறந்து நம்மை நடத்துவார். ‘நான் என் சுயமாய் ஒன்றும் செய்கிறதில்லை.’ ‘என் சித்தத்தின்படி நான் செய்கிறதில்லை.’ ‘நான் சுயமாய்ப் பேசவில்லை’ என்று சொன்ன இயேசுவின் தாழ்மையை உன்னில் உண்டாக்குவார். இப்படித் தன்னை வெறுமையாக்கி, அவர்மேரில் சார்ந்து தன்னை ஒன்றுமில்லைஎன்று உணருகிற ஆத்துமாவுக்கு தேவனே எல்லாமாயிருக்கிறார் என்கிற நிச்சயத்தை உண்டாக்குவார். தேவனால் நிறைந்திருந்த இயேசுவை நம்முடைய ஜீவனாக நமது விசுவாசத்தின் மூலமாய் நமக்கு வெளிப்படுத்துவார். எல்லாவற்றையும் கொடுக்கிற தேவனுடைய அன்பிலும், தேவனே எல்லாமென்று எண்ணுகிற அன்பிலும் நாம் வேரூன்றச் செய்கிறார். இப்படியாக, இயேசுவுக்கு இருந்ததுபோலவே நமக்குமிருக்கும். மனிதன் ஒன்றுமில்லாமலும், தேவனுடைய அன்பு தேவனுடைய வல்லமை இவைகளே எல்லாமுமாயிருக்கும். இதின் முடிவாக நாம் தேவனுடைய பரிபூரணத்தால் நிறையப்பட்டிருப்போம்.*

*கிறிஸ்தவனே, இந்த அனுபவம் உனக்கு மிஞ்சினதென்றும், உனக்குரியதல்லவென்றும் நீ சொல்லாதபடி உன்னை வேண்டுகிறேன். உன்னைப்பற்றி தேவன் கொண்டிருக்கும் சித்தம் அது, கற்பனை வாக்குத்தத்தங்கள் இவைகளைக் கொடுத்ததில் அவருடைய சித்தம் அதுதான். தம்முடைய வாக்குத்தத்தத்தை எப்படியும் நிறைவேற்றுவார். அவரே அதைச் செய்வார். அப்படியானால் இன்றைக்கே தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவேண்டும் என்கிற வார்த்தையை தாழ்மையோடும் விசுவாசத்தோடும் உன் ஜீவியத்தின் நோக்கமாக ஏற்றுக்கொண்டு அது உனக்கு என்ன செய்யக்கூடும் என்று பார். ஆசீர்வாதத்திற்காக ஆயத்தப்பட்டிருக்கும் நிலமையில் திருப்தியாயிருக்கும் சுய நாட்டத்தைவிட்டு இது நம்மை எழுப்புகிற ஒரு பலமான கருவிபோலிருக்கும். உனக்கு எல்லாவற்றையும் கொடுக்கிற தேவனுடைய அன்பிலே நீ பலமாய் வேரூன்றவும், அதின் மூலமாய் நீ எல்லாவற்றையும் திரும்ப அவருக்குக் கொடுக்கிற அன்பிலே*

16432

நிலைத்திருக்கவும் செய்யும். கிறிஸ்து உன் இருதயத்தில் வாசம்பண்ணினால் மாத்திரம் இந்த அன்பு உன்னில் நிலைத்திருக்கக்கூடுமென்றும் தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நீ நிறைந்திருக்கக்கூடுமென்றும் உனக்கு நிச்சயமுண்டாகும். தேவன் தமது ஆவியினால் உன்னில் கிரியை செய்தால் மாத்திரம் நீ இந்த ஆசீர்வாதத்தை அடையக்கூடும் என்கிற நம்பிக்கை உன்னில் உண்டாக்கும். இதற்காக தேவன் உன்னை ஆயத்தப்படுத்தும்படி ஜெபிக்க உன்னை ஏவும். தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படும் ஆசீர்வாதத்தை தேவன் எனக்கு ஆயத்தம்பண்ணியிருக்கிறார் என்று நீ சொல்லக்கூடியவனாயும் அது உன்னை ஆயத்தப்படுத்தும்.

இந்த மகிமையான ஆசீர்வாதத்தை எதிர்நோக்கினவர்களாக நாமும் பவுல் அப்போஸ்தலனோடு சேர்ந்து, 'நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு...சதாகாலங்களிலும் மகிமையுண்டாவதாக' என்று சொல்வோமாக. தேவனுடைய மகிமையின் ஐசுவரியங்களைத் தள்ளி வேறொன்றையும் நாடாதிருப்போமாக. ஆவியின் பரிபூரண ஆசீர்வாதம் தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படுவதற்கு நம்மை வழிநடத்தும் வல்லமையாயிருக்கிறதென்று இதற்குமுன் நம்முடைய ஜீவியத்தில் உணராமலிருந்திருப்போமானால் இன்றைக்கே உணர்ந்துகொள்வோமாக.

'நான் சர்வவல்லமையுள்ள கர்த்தர்' என்று தேவன் ஆபிரகாமுக்குச் சொன்னபோது தாம் கொடுத்த தம்முடைய வாக்கை நிறைவேற்ற வல்லமையுள்ளவர் என்பதை விசுவாசிக்கச் சொன்னார். தேவ வல்லமை தம்முடைய மகிமைக்குத் தம்மை உயர்த்தக்கூடும் என்கிற விசுவாசத்திலே கிறிஸ்து கல்லறைக்குள் போனார். அந்த வல்லமையே விசுவாசிக்கிறவர்களிடத்தில் தேவசித்தம் நிறைவேறும்படி கிரியை செய்யக் காத்துக்கொண்டிருக்கிறது. 'நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்ய வல்லவராகிய அவருக்கு......மகிமையுண்டாவதாக' என்று நாம் சொல்வோமாக.

## தற்கால விசேஷங்கள்.

**துர்க்கிய யுத்த முடிவு.** மாண்டிநீகிரோ, சர்வியா, பல்கேரியா, கிரேக்கு ஆகிய நான்கு நாடுகளும் சேர்ந்து துர்க்கிய இராஜ்யத்தைச் சமூலமாய் முறியடித்துப்போட்டார்கள். கொனஸ்தந்திநோபிலாகிய தலைநகரிதவிர ஐரோப்பாவிலுள்ள மற்ற தேசம் யாவும் பிடிபட்டு துர்க்கியைவிட்டு எடுபட்டுப்போயிற்று. இனிமேல் துர்க்கி ஆசியாவிலுள்ள நாடுகளையே



அரசாட்சிசெய்யவேண்டும். துர்க்கியின் ஐரோப்பிய இராஜ்ய ஆளுகை இவ்வாறு முடிவடைந்துபோகவே, இனிமேல் துர்க்கியின் ஆசியாக்கண்ட நாடுகள் ஒவ்வொன்றாய் அதைவிட்டு எடுபடுகிறதைக் காணலாம்.

**துர்க்கியின் ஆசியாக்கண்ட நாடுகள் பிரிக்கப்படுதல்.** துர்க்கியைச் சேர்ந்த சின்ன ஆசியாநாடுகள் ஐரோப்பாவின் பெரிய இராஜ்யங்களுக்குள் வெகு சீக்கிரமாய் பிரிக்கப்பட்டுவிடும் என்று சொல்லலாம். இப்போதே இங்கிலீஷ் இராஜ்யத்தார் பாரசீகக் குடாக்கடலைச் சுற்றிய நாட்டை தங்கள் ஆசரவுக்குள் எடுத்துக்கொண்டு, அந்த நாட்டில் ரெயில் தொடர்போடுவது முதலிய பெரிய வேலைகளைத் தாங்களே செய்யப்போகிறார்கள். இவர்கள் இந்த நாட்டைக் கைப்பற்றிக்கொண்டதினால், ருஷியர் ஆர்மினியா நாட்டையும், பிரான்சு தேசத்தார் சீரியாநாட்டையும், ஜெர்மனியர் அனற்றோலியா நாட்டையும் கைப்பற்றிக்கொள்ளப் பார்க்கிறார்கள். இவர்களுக்கு இந்த நாடுகள் கிடைக்கிறபோது, கானான் தேசம் யூதருக்குக் கொடுக்கப்படும் இதெல்லாம் இன்னும் சில வருஷங்களுக்குள் நிறைவேறுகிறதைக் காணலாம்.

**கிரேக்க இராஜாவின் மரணம்.** கடந்த மாதத்தில் கிரேக்க தேசத்து இராஜா தாம் பிடித்த சலோனிக்கா நகரில் இருக்கையில் ஒரு பாதகனால் கொல்லப்பட்டார். அதற்குச் சில வாரங்களுக்குப்பின் ஸ்பானிய தேசத்து இராஜா தமது தலைநகரில் தெருவழியாய்ப் போகையில் ஒரு கொலைபாதகன் ஐந்து முறை அவரைச்சுட்டான். குண்டுகள் தமதுபேரில்படாமல் தாம் ஏறியிருந்த குதிரையின்பேரில் படும்படி அவர் மகா விவேகமாய் நடந்துகொண்டபடியால், இராஜா வெகு அரிதாய்த் தப்பினார். இராஜாக்களின் ஆளுகையைத் தொலைத்து, குடிகளின் ஆளுகையை ஸ்தாபிக்கவேண்டுமென்றெண்ணித் திரிகிற படுபாதகரால் இதெல்லாம் நடக்கிறது. ஆனால் இயேசு இராஜா உலகத்தை ஆளவரும்வரைக்கும் பூமியிலே இராஜாக்கள் இருப்பார்களென்று வேதம் கூறுகிறது. இராஜாக்களின் ஆளுகையை வெறுக்கிற சாதாரண ஜனங்களுக்குள்ளிருந்து ஒரு பயங்கர இராஜன் அந்திக்கிறிஸ்துவாய் எழும்பி, உலகம் முழுவதையும் மகா கொடுமையாய் ஆளுகிறதற்கே இதெல்லாம் ஏதுவாகும்.

**சீனா இராஜ்யத்தின் புது ஆளுகை.** சீனா இராஜ்யத்தில் சில காலமாய மகா பெரிய மாறுதல்கள் நடந்துவருகிறது. அதிலே ஆளுகை செய்த மான்ச்சு சந்ததியின் இராஜாவை ஜனங்கள் தள்ளிப்போட்டு, குடிகளின் ஆளுகையை ஸ்தாபித்திருக்கிறார்கள். குடிகளின் ஆலோசனைச் சங்கம் கடந்த மாதத்தில் முதல் தடவையாய்க் கூடினது. அச்சமயத்தில் உலகமெங்குமுள்ள கிறிஸ்து சபைகள் அந்த இராஜ்யத்துக்காக ஜெபிக்கும்படி அந்த இராஜ்யத்தின் பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டார்கள். பீக்கின்

பட்டணமாகிய தலைநகரியில் எப்பிரல் மாதம் 13உ யாகிய ஓய்வுநாள் ஜெப நாளாக ஆசரிக்கப்பட்டது. சீன இராஜ்ய மெங்குமுள்ள மிஷனெரிமாரும் உலகமெங்குமுள்ள கிறிஸ்து சபையும் சீன இராஜ்யத்துக்காக விசேஷித்த பிரகாரம் ஜெபம் செய்தார்கள். அந்த இராஜ்யத்தின் முக்கிய உத்தியோகஸ்தரிலே பல கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். ஜெபத்தோடு ஆரம்பிக்கப்பட்ட இப்புது ஆளுகை அந்த இராஜ்யத்துக்குப் பேராசீர்வாதமாய் முடியும்படி கர்த்தரை நோக்கி எப்போதும் ஜெபிப்போமாக.

**தீபேத்து இராஜ்யம்.** நெடுங்காலமாய் அயர்ந்த நித்திரை செய்த தீபேத்து இராஜ்யம் இப்போது விழித்துப்பார்க்கிறதுபோல் காணப்படுகிறது. இங்கிலாந்தும் ருஷியாவும் சேர்ந்து தன்னைக் காப்பாற்றவும் தங்கள் ஆதரவுக்குள் தன்னை வைத்துக்கொள்ளவும் வேண்டுமென்று தீபேத்து இராஜ்யம் கெஞ்சுகிறது. இனிமேல் கிறிஸ்தவ ஆளுகையோடு கிறிஸ்து மார்க்கமும் இந்த தேசத்துக்குள் பிரவேசிப்பதற்குப் பெரிதான வாசல் திறக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

## ஜீவத்தண்ணீர் பத்திரிகை.

1. சந்தாதாரர்களின் பேர் ஜாபிதா புதுப்பிக்கப்பட்டிருக்கிறபடியால், பலருக்குப் புது நம்பர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இனி நான்கு வருஷங்களுக்கு இந்த நம்பரே அவரவருக்குரிய நம்பராயிருக்கும். கடிதம் எழுதுகிற நண்பர்கள் தயவுசெய்து இந்த நம்பரைக் குறிப்பிட்டு எழுதும்படி கேட்கிறோம். சந்தாதாரரின் ஜாபிதா வெகு நீண்டதாயிருப்பதால், கடிதம் எழுதுகிறவர்களின் பேரை எளிதாய்க் கண்டுபிடிக்க இது உதவியாயிருக்கும்.

2. பல நண்பர்கள் கடந்த இரண்டு வருஷ சந்தாவையும் இன்னமும் அனுப்பவில்லை. பாக்கிகள் யாவையும் தயவாய் உடனே அனுப்புவிக்கும்படி மிகவும் விரும்பிக் கேட்கிறோம். ஏராளமான பேருக்குப் பத்திரிகையை வி. பி. தபாலில் அனுப்பி பணத்தை வசூல்செய்வது கூடிய காரியமல்ல. பாக்கிதாரர்களுக்குச் சீக்கிரத்தில் இன்னோர்தரம் கார்டுகள் அனுப்பப்படும். அப்போது உடனே பணம் அனுப்பாதவர்களுக்குப் பத்திரிகை நிறுத்தப்படும்.

3. ஜீவத்தண்ணீர் பத்திரிகை வேண்டியவர்கள் பாளையங்கோட்டை கனம்: S. G. மதுரம் ஐயரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். பிரதி ஒன்றுக்கு வருஷ சந்தா அணா 4, வருஷ தபாற்கூலி அணா 3. மாதம் தோறும் 2 முதல் 8 வரையுள்ள பிரதிகள் அரை அணாவுக்கும், 9 முதல் 17 வரை ஒரு அணாவுக்கும், 18 முதல் 26 வரை ஒன்றரை அணாவுக்கும், 27 முதல் 35 வரை இரண்டு அணாவுக்கும், 36 முதல் 43 வரை இரண்டரை அணாவுக்கும் தபாலில் போகும்.

Printed at the Church Mission Press, Palamcottah and
Published by the Rev. S. G. Maduram, B.A.



July, 1913. Registered No. M—163.

The Water of Life

ஜீவத்தண்ணீர்

" என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." (யோவான் 7: 38)

Vol. XIV ஜூலை 1913

## 'கொடுக்கிறதே பாக்கியம்.'

'வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவேண்டும்.' அப். 20: 35.

'வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்' என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வாக்கியம் ஒரு சுவிசேஷத்திலும் எழுதப்படவில்லை என்பது யாவருக்கும் தெரியும். அது மறக்கப்பட்டுப்போகாமல் என்றும் நினைவுகூறப்படவேண்டுமென்று பரிசுத்த பவுல் அதை எழுதிவைத்தது தெய்வ கிருபையே! இந்த வாக்கியம் மகா பெரிய ஞானவாசகமாயிருக்கிறது. பரிசுத்த பவுல் அதைத் தமது இருதயத்தில் பதித்து, தமது ஜீவியத்துக்குச் சட்டமாக்கியிருந்தார் என்பதாகத் தெரிகிறது. அவர் எபேசுவிலே பின்னிட்ட மூன்று வருஷ ஜீவியத்திலும் ஊழியத்திலும் இதையே உதாரணப்படுத்திக் காட்டினதாக மிலேத்துவில் கூடின மூப்பருக்குச் சொல்லுகிறார். அவர்களும் வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதில் அடங்கிய பாக்கியத்தை அனுபவத்தால் அறியவேண்டும் என்று போதிக்கிறார். ஒருவனுடைய வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் அவர் இச்சிக்கவில்லை. அவருக்கும் அவருடனே கூட இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக அவருடைய கைகளே வேலை செய்தது. இப்படி மிகுந்த சுய வெறுப்போடு பாடுபட்டு, பெலவீனரைத் தாங்குவதற்கு அவர் மாதிரி காண்பித்தார். அவர் அவர்கள் நடுவிலே வாங்குகிறவராக அல்ல, கொடுக்கிறவராக இருந்தார். தமது உத்தியோகத்தையும் ஊழியத்தையும் முகாந்தரமாக வைத்து அவர் தமது சுயலாபத்தை ஒன்றிலும் தேடவேயில்லை. அவர் கர்த்தராகிய இயேசுவின் பிரமாணத்தை அனுசரித்தவராய், தமக்குக் கிடைத்த சமயங்களில் எவ்வ

ளவு நன்மையைத் தாம் பெற்றுக்கொள்ளலாம் என்று பாராமல், எவ்வளவு நன்மையை மற்றவர்களுக்குச் செய்யலாம் என்றே பிரயாசப்பட்டார். பரிசுத்த பவுல் தமது ஜீவியத்தைப் பரீட்சித்த இந்தக் கண்டிப்பான பிரமாணத்தைக்கொண்டு தற்காலத்துச் சபையாரும் குருமாரும்தங்கள் ஜீவிய ஊழியத்தைப் பரீட்சிப்பார்களானால் எவ்வளவு நலமாயிருக்கும். அன்புதான் நித்திய ஜீவன் கிடைத்திருக்கிறதென்பதற்கு அடையாளம். 'அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து அவரை அறிந்திருக்கிறான்; அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்.' இந்த அன்பு தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையே முக்கியமாய் நாடும்.

'வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்' என்று நாம் நம்புகிறது மெய்யானால், இந்தப் பிரமாணத்தை நாம் குழந்தைகளைப்போலல்ல, புருஷர்களைப்போல கைக்கொள்ளக்கடவோம். தன்னயக்காரனாய்த் தனக்காகவே ஜீவிக்கிற ஒருவன் ஊடே ஊடே அற்ப சொற்ப நன்மைகளைச் செய்துவருவதினால் அவனுடைய ஜீவியம் பரிசுத்தமாகவேமாட்டாது. கர்த்தராகிய இயேசு எப்போதும் எல்லா விஷயத்திலும் தம்மை வெறுத்தவராய் ஜீவித்தார். பரிசுத்த பவுல் தமக்காகவல்ல, பிறருக்காகவே எப்பொழுதும் பிழைத்தார். எப்பொழுதும் எல்லா விஷயத்திலும் சய வெறுப்புடனே பிறர்வாழ்வைக் கருதும் நற்சுபாவம் நம்மில் உண்டாகாவிடில், நாம் சிருஷ்டிக்கப்பட்டதற்கு இசைவான நடு நிலைக்கு நாம் வரவேமாட்டோம். தனக்காகவே பிழைக்கிற ஆத்துமா எத்தனை சீக்கிரமாய் இமிர்ப்பிடித்து, கறண்டு வறண்ட நிர்ப்பந்த நிலைக்கு வந்துவிடும் என்பதை மனிதர் அறிந்தால் எவ்வளவு நலமாயிருக்கும்!

கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தால் வருகிற சய நன்மைகளையும் லாபங்களையும் கிறிஸ்தவ ஜீவியத்துக்கு அத்தாட்சியாக உலகத்துக்குக் காட்ட முயலுவது வீண். தேவனும் கிறிஸ்துவும் தங்களுடைய தெய்வீக மகத்துவத்தையும் கனத்தையும் வல்லமையையும் அத்தாட்சியாகக் காட்டாமல், சிலுவையையே காட்டுகிறார்கள். தேவன் உலகத்தில் அன்பு கூர்ந்து குமாரனைக் கொடுத்தார். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினால் தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். ரோ. 5: 8. 'நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே. அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும் நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே.' 2 கொரி. 8: 9. நாமும் நமக்குள்ள நன்மைகளினிமித்தமல்ல, சிலுவைக்கும் நமக்குமுள்ள சம்பந்தத்தினிமித்தமே நமது எஜமானைப்போலாகலாம். தெய்வீக மாதிரியைப் பின்பற்றுகிறவர்கள் யாவரும் அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையே பெரிதாய் எண்ணு



வார்கள். கர்த்தராகிய இயேசுவின் மூலமாய் நமக்குக் கிடைத்த மகா பெரிய நன்மைகளைக் குறித்து நாம் ஒருக்காலும் நன்றியறிதலோடே பேசக்கூடாதென்று நான் சொல்லுகிறதில்லை. அவைகளைக் கிறிஸ்துமார்க்கத்துக்கு ரூபகாரமாய்க் காட்டுவதுதான் தப்பிதம். 'நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக.' கலாத். 6: 14. அவருடைய சிலுவை பாவத்தைப் போக்குகிறபடியே, தன்னய ஜீவியத்தையும் போக்கிவிட்டு கிறிஸ்துவில் விளங்கிய சயவெறுப்பின் இலட்சணத்தையே உண்டுபண்ணும்.

'உங்கள் பரமபிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? ஆதலால் மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்.' மத். 7: 11, 12. ஆண்டவர் நன்மையானவைகளை நமக்குக் கொடுக்கிறார். வேண்டுதலினால் அவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்: எந்த அளவுக்கும் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் அதின் பலன் என்னமாயிருக்கவேண்டும்? தெய்வத்திடத்தில் பெற்ற சகல ஈவுகளையும் வைத்து மனிதரைச் சேவிக்கவேண்டும். இதுதான் உண்டாகவேண்டிய பலன். உங்கள் பரமபிதா நன்மையானவைகளை உங்களுக்குக் கொடுப்பதினால், நீங்கள் மனிதரைச் சேவிக்கவேண்டும் என்று இயேசு இங்கே சொல்லுகிறார். அன்பினால் ஊழியஞ்செய்யும் ஜீவியமே தேவன் நமது ஜெபங்களைக்கேட்டு நமக்கு நன்மைகளை அருளுகிறார் என்பதற்கு ரூபகாரமாயிருக்கவேண்டும். ஜெபத்தையும் வாக்குத்தத்தங்களையும் தன்னய ஜீவியத்துக்கென்று உபயோகிக்கப்பார்க்கிறவர்கள் நியாயப்பிரமாணத்தையும் கிறிஸ்துவின் பிரமாணத்தையும் மாற்றப்பார்க்கிறார்கள். 'கற்பனையின் பொருள் என்னவென்றால்; சுத்தமான இருதயத்திலும் நல் மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே.' 1 தீமோத். 1: 5. இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறவர்களுக்குப் பரலோக இராஜ்யத்தினுடைய எல்லையில்லாக் கிருபையின் களஞ்சிய வாசல்கள் எப்போதும் திறந்தேவைக்கப்பட்டிருக்கும். 'கேளுங்கள்...கொடுக்கப்படும்' என்பது இவர்களுக்கே செல்லும். 'கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்: அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள்.' பரி. லூக்கா. 6: 38.

ஆதலால் நம்முடைய முத்துக்களையும் களஞ்சியங்களையும் வைத்து நமது வாழ்வை அளக்காதிருப்போமாக. 'வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை' வைத்து நமது ஜீவியத்தைப் பரீட்சிப்போமாக. இதுவே பரத்தின்

அளவு. இந்த அளவுப்பிரமாணத்தை வைத்தே பரலோகத்தில் நமது ஜீவியம் கணிக்கப்படும். ஆதலால், பாவத்தாலுண்டான தன்னயத்தால் சபிக்கப்பட்ட இப்பூமியை அன்பினுலுண்டான பிராயச்சித்தப் பலியினுல் மீட்டு இரட்சித்த இயேசு இராஜாவின் உத்தம பின்னடியாராய் நாம் விளங்குவோமாக.

## 'உன் சிநேகம் ஆச்சரியம்'

2 சாமு. 1: 26.

யோனத்தான் யுத்தத்தில் மடிந்துபோனதின்பின் தாவீது யோனத்தானைக் குறித்துச் சொன்ன வார்த்தைகள் இவை. யோனத்தான் இராஜாவின் குமாரன். தாவீது குடியானவனின் குமாரன். சவுலின் குமாரனாகிய யோனத்தானுக்கும் ஈசாயின் குமாரனாகிய தாவீதுக்கும் உண்டாயிருந்த சிநேகம் மெய்யாகவே ஆச்சரியந்தான். அவர்கள் நாவினாலும் வார்த்தையினாலுமல்ல கிரியையினாலும் உண்மையினாலும் ஒருவரிலொருவர் அன்புகூர்ந்தார்கள். அவர்களுடைய சிநேகம் இடையில் குறைந்தாவது மாறியாவது போகாமல் வரவர வளர்ந்துகொண்டே போனது. இவ்விருவருடைய சிநேகத்தைக் குறித்து நாம் தியானிக்கையில் கிறிஸ்துவினிடத்தில் நமக்கு அன்பு உண்டோவென்றும், அந்த அன்பு எப்படிப்பட்டதென்றும் அறிந்துகொள்ள தேவன் உதவிசெய்வாராக.

1. அன்பின் ஆரம்பம். இவ்விருவருக்கும் சிநேகம் எப்படி ஆரம்பித்தது என்று நாம் அறியவேண்டும். 'யோனத்தானுடைய ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடே ஒன்றாய் இசைந்திருந்தது, யோனத்தான் அவனைத் தன் உயிரைப்போல சிநேகித்தான்' (1 சாமு. 18: 1). இப்படித் தன் உயிரைப்போல் சிநேகித்ததற்குக் காரணமென்ன? இதோ! பெலிஸ்தரின் பாளயம் இஸ்ரவேலருக்கு விரோதமாக அணிவகுத்து நிற்கிறது. அவர்களில் கோலியாத் என்னும் ராட்சதன் ஒருவன் இஸ்ரவேல் சேனைக்கு விரோதமாக ஆரவாரித்து நிற்கிறான். ஜீவனுள்ள தேவனையும் அவருடைய ஜனங்களையும் நிந்திக்கிறான். அவனோடு யுத்தம்பண்ணக்கூடிய தைரியம் இஸ்ரவேலருக்கில்லை. சவுல் ராஜாவும் அவனுடைய வீரரும் கலங்கித் தத்தளிக்கிறார்கள். இப்படியிருக்கையில், தாவீது என்னும் இளைஞன் தன் சகோதரருடைய சுகசெய்தியை விசாரிக்கப் புறப்பட்டு வந்தான். இதென்னவென்று அவன் விசாரித்தபோது காரியத்தை விவரமாய் அவனுக்குச் சொன்னார்கள் உடனே அவன் வைராக்கியங்கொண்டு, ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திக்கிற இந்தப் பெலிஸ்தன் யார்? சிங்கத்தையும் கரடியையும் கொன்ற எனக்கு இந்தப் பெலிஸ்தன் எம்மாத்திரம் என்று சொல்லி



அவனுக்கு நேராகப் புறப்பட்டுப் போய்த் தன் கவணிலே ஓர் கல்லை வைத்து எறிந்தான். அந்தக்கல் அவன் நெற்றியிலே பதிந்துபோனதினால் அந்த ராட்சதன் கீழே விழுந்தான். பெலிஸ்தர் ஓடிப்போனார்கள். தாவீது பெலிஸ்தனுடைய பட்டயத்தை உருவி, அவனுடைய தலையைவெட்டி, கெம்பீரமாய்த் திரும்பிவந்தான். இவைகளைப் பார்த்துக்கொண்டிருந்த யோனத்தான், தாவீது தனக்கும் தன் குடும்பத்துக்கும், இஸ்ரவேலனைத்துக்கும் கட்டளையிட்ட இந்தப் பெரிதான இரட்சிப்பினிமித்தம் தாவீதைத் தனக்குப் பிராண சிநேகிதனாக்கிக்கொண்டு தன் உயிரைப்போல் அவனை சிநேகிக்க ஆரம்பித்தான்.

விசுவாசி கிறிஸ்துவில் நேசம் வைக்கிறதற்குக் காரணமும் இதுதான். நம்முடைய சத்துருவாகிய சாத்தான் தன் சேனைதளங்களுடன் நமக்கு விரோதமாகக் கொடியேற்றி, ஆரவாரித்துக்கொண்டிருந்தான். அவனோடு யுத்தம்பண்ணக்கூடியவன் நம்மில் யாருமில்லை. நாம் பயந்து கலங்கினோம். அப்பொழுது தாவீதின் குமாரனாகிய இயேசு தனிமையாய் அவனுக்கு விரோதமாகப் புறப்பட்டுப் போய்த் தன் பிராணனைப்ம் அருமையாக எண்ணாமல், ஜீவனைக் கொடுத்து, சத்துருவின் சிரசை நசுக்கி, வெற்றிவேந்தராய் திரும்பி வந்து: என் பிள்ளைகளே நீங்கள் கலங்கவேண்டாம். நான் சத்துருவை ஜெயித்தேன். பெரிய ரட்சிப்பைச் சம்பாதித்தேன். உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக என்றார். இதைக் கண்ட விசுவாசி அவர் பாதத்தில் விழுந்து, என் பிராணநாதா! ஆபத்துக்கனுகூலா! என் ஆத்துமா உம்மோடு ஒன்றாய் இசைந்துவிட்டதையா, என் உயிரைப்போல் உம்மைச் சிநேகிக்கிறேன் என்கிறான். கிறிஸ்துவானவர் சம்பாதித்த மகத்தான ரட்சிப்பைக் கண்டவன் தன் உயிரைப்போல் அவரைச் சிநேகிக்கிறான். அப்படிச் சிநேகிக்காதவன் அவருடைய ரட்சிப்பை அறிந்தவனல்ல.

2. அன்பின் உடன்படிக்கை. 'யோனத்தான் தாவீதைத் தன் ஆத்துமாவைப்போல் சிநேகித்ததினால் அவனும் இவனும் உடன்படிக்கை பண்ணிக்கொண்டார்கள்' (1 சாமு. 18: 3). சிநேகத்திற்கு உடன்படிக்கை உண்டு. சிநேகிதர் இருவரும் ஒருவருக்கொருவர் இன்னின்னதைச் செய்வோம் என்று வாக்குறுதி செய்துகொள்வதே உடன்படிக்கை. தாவீதும் யோனத்தானும் செய்துகொண்ட உடன்படிக்கை இன்னதென்று இவ்வசனத்தில் நாம் காணாவிட்டாலும், 20-ம் அதிகாரத்திலும் மற்றும் இடங்களிலும் அவைகளைக் காணலாம். அவைகளின் சுருக்கம் இதுதான். 'யோனத்தான் தாவீதைப் பார்த்து: என் பிராண சிநேகிதனே, என் ஜீவனைப்போல் நான் உம்மைச் சிநேகிக்கிறேன், நான் என் நகப்பனோடிருந்தாலும் என் ஆத்துமா உம்மோடுதானிருக்கும். உமக்காக நான் என்னென்ன செய்யக்கூடுமோ அதெல்லாவற்றையும் நிச்சயமாகவே செய்வேன். உம்முடைய சத்துருக்கள் யாவரையும் வென்று நீர் உமது ராஜ்யத்தில் வரும்போது அடி

யேனையும் அடியேனுடைய குடும்பத்தையும் மறந்துபோகக்கூடாது' என்கிறான். அதற்கு தாவீது தன்னால் செய்யக்கூடிய நன்மைகள் என்னென்ன உண்டோ அவை யாவையும் நிச்சயமாகவே செய்வதாக வாக்குக்கொடுக்கிறான். கிறிஸ்துவானவர் புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார். விசுவாசிகளுக்கும் அவருக்கும் உடன்படிக்கை உண்டு. விசுவாசி அவரைப்பார்த்து: 'என் ரட்சகரே, நான் உம்மைச் சிநேகிக்கிறேன். உமக்கென்றே பிழைப்பேன். உம்மை மகிமைப்படுத்துவேன். உமக்காக ஊழியம் செய்வேன். உமதடியேனை நீர் கைவிடக்கூடாது. நீர் சீக்கிரத்தில் உம்முடைய ராஜ்யத்தில் வரப்போகிறீர். அப்போது உம்முடைய சிநேகிதனாகிய என்னை மறந்துபோகக்கூடாது என்கிறான்'. அதற்கு அவர் உன் சகல பாவங்களையும் மன்னித்தேன் மறந்தேன். உன்னைக் கழுவிச் சுத்திகரித்தேன். என் ஆவியை உனக்கு அருளி என் கற்பனைகளின்படி நடக்கப்பண்ணுவேன். எத்தீமைக்கும் சோதனைக்கும் விலக்கிக் காப்பேன். மரணத்தில் கூடயிருப்பேன்—உனக்காக மகிமையின் வாசஸ்தலத்தை ஆயத்தம்பண்ணப்போகிறேன். அதன்பின்பு மறுபடியும் வந்து உன்னைச் சேர்த்துக்கொள்ளுவேன். நீ என்னோடு அரசாளுவாய், உன்னைச் சிநேகிதன் என்றேன். நான் சொன்னவைகளைச் செய்து முடிக்குமட்டும் உன்னை விட்டு விலகுவதுமில்லை, கைவிடுவதுமில்லை என்கிறார். அன்பின் உடன்படிக்கை இதுதான்.

3. அன்பின் பிரதிஷ்டை. அன்புகொடுக்க நாடுகிறது. சிநேகிதர் தங்களுடைய அந்தஸ்துக்குத் தக்கபடி ஒருவருக்கொருவர் தேவையானதைக் கொடுத்துச் சந்தோஷப்படுத்துகிறது இயல்பு. ஒருவருக்கொருவர் கொடுத்து உதவாத சிநேகம் சிநேகம்அல்ல. 'யோனத்தான் போர்த்துக்கொண்டிருந்த சால்வையைக் கழற்றி அதையும், தன் வஸ்திரத்தையும், தன் பட்டயத்தையும், தன் வில்லையும் தன் கச்சையையும்கூட தாவீதுக்குக் கொடுத்தான்' (18: 4). தனக்குப் பெருமையும் மகிமையுமாயிருந்த எல்லாவற்றையும் மனப்பூர்வமாய்க் கொடுத்துவிட்டான். தன்னை ராஜகுமாரனென்று வெளிப்படுத்தும் சால்வையைக் கொடுத்து நீ ராஜகுமாரனாயிரு என்கிறான். தன் பெலத்துக்கு ஆதாரமான கச்சையைக் கொடுத்து நீ பெலனடைந்திரு என்கிறான். தன் பிராணனுக்கு ஆதரவாயிருந்த வில்லைக் கொடுத்து உன் உயிரைக் காத்துக்கொள் என்கிறான். தனக்கு ஜெயங்கொடுத்த பட்டயத்தைக் கொடுத்து நீ யுத்தம்செய்து ஜெயங்கொள் என்கிறான். இஸ்ரவேலில் சவுலுக்கும் யோனத்தானுக்குமேயன்றி மற்றொருவரிடத்திலும் பட்டயம் இருந்ததில்லை. சற்று முந்தி பெலிஸ்தரோடு செய்த யுத்தத்தில் யோனத்தான் தன் பட்டயத்தினால் சத்துருக்களை வெட்டி ஜெயமடைந்தான். அந்தப் பட்டயத்தையும் கொடுத்துவிட்டான். ஆ, இதுவல்லவா



சிநேகம்! உத்தம சிநேகம் தன்னயமுள்ளதல்ல. தன்னை வெறுமையாக்கித்
தன் சிநேகிதனைப் பலப்படுத்துகிறான்.

தேவன் நம்மேல் வைத்த அன்பை தமது குமாரனை கொடுத்ததினால்
வெளிப்படுத்தினார். கிறிஸ்துவானவர் தமது ஜீவனை நமக்காகக் கொடுத்து
தமது அன்பை விளங்கப்பண்ணினார். நாம் நம்மையும் நமக்குள்ள யாவை
யும் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்கிறதினால் மாத்திரம் அவரை நேசிக்கி
றோம் என்பதை வெளிப்படுத்தக்கூடும். நம்முடைய பெலன் சுகம், அறிவு,
வாம், செல்வம் யாவையும் அவருக்காகவும் அவருடைய ராஜ்ய விருத்திக்
காகவும் ஒப்புக்கொடுக்க மனமில்லையென்றால் கிறிஸ்துவினிடத்தில் நாம்
அன்புகூருகிறவர்களல்ல. தேவபக்தியுள்ள ஒரு அம்மாள் தன் இரண்டு
குமாரத்திகளையும் சீனாவில் சுவிசேஷ ஊழியம்செய்ய அனுப்பியிருந்தார்
கள். உத்தம பக்தியுள்ள இரு சகோதரிகளும் நல்ல வேலை செய்துவரும்
காலத்தில் சத்துருக்கள் அவர்களைக் கொன்றுபோட்டார்கள். கொஞ்சக்
காலத்துக்குப்பிறகு சீனாவிலுள்ள ஒரு மிஷனெரி அந்த அம்மாள் இருந்த
தேசத்திற்கு போய் அவர்களைப் பார்த்து; உங்களுக்கு அதிக விசனமுண்
டல்லவா என்றார், ஆம், ஐயா! என் அருமை இரட்சகருக்கு ஊழியம்
செய்யும்படி நான் அனுப்புகிறதற்கு எனக்கு இன்னொரு குமாரத்தி
இல்லையே என்பதுதான் விசனம் என்றாள்.

4. அன்பின் ஐக்கியம் இவ்விதமாய் யோனத்தான் தனக்கு ஆதா
வும், பெலனும், மகிமையுமாயிருந்த யாவற்றையும் தன் பிராண சிநேகித
னுக்குக் கொடுத்துவிட்டு வீட்டுக்கு வந்தபின், தன் எண்ணமெல்லாம் தாவீ
தின்பேரிலேயே போகிறது. கொஞ்சநேரம் பிரியக்கூடவில்லை. ஒருவர்
முகத்தை ஒருவர் பார்ப்பதும், ஒருவரோடொருவர் இன்பமாய்ப் பேசுவ
தும் ஆனந்தமாயிருக்கிறது. என்ன செய்கிறது சவுலுக்கும் பயப்பட
வேண்டும். ஆகிலும் கண்மறைவாய் வனாந்தரத்துக்குப் போய் தாவீதோடு
உறவாடவேண்டும். இராஜ அரமனையில் சகல சம்பிரமமும் உண்டு.
வேளைக்குவேளை ராஜபோஜனம், நல்ல ஸ்நானம், வேலையாட்கள், வசதி
யான படுக்கை, சகல வசதிகளும் உண்டு. காட்டிலே என்ன உண்டு? எவ்
வளவோ கஷ்டங்கள் உண்டு. என்றாலும் தாவீதின் பேரிலுள்ள அன்பு,
எல்லாச் சௌரியங்களையும் மறந்துவிடவும் காட்டுக்குப் போய் அவனோடு
தனித்து உறவாடவும் ஏவுகிறது. இதோ யோனத்தான் போகிறான்.
தாவீது எங்கேயிருக்கிறானோ என்று கண்கள் மலைச்சிகரத்தையும் குகை
களையும்தேடி அலைகிறது. அப்படியே தாவீதும் தன் சிநேகிதன் இப்போ
வந்துவிடமாட்டானா? எந்த வழி வருவான் என்று எதிர்பார்த்த கண்
ணாயிருக்கிறான். ஒருவரையொருவர் தூரத்தில் கண்டுகொள்ளுகிறார்கள்.
இவன் ஓடிப்போகிறான், அவனும் எதிர்கொண்டு ஓடிவருகிறான். ஒரு
வரையொருவர் கட்டி முத்தமிடுகிறார்கள். அன்பு பொங்கி அழுகிறார்கள்.

இனி வீண்காலம் போக்காமல் இருவரும் தனித்திருந்து பேசவேண்டிய யாவற்றையும் வாஞ்சையோடு பேசிக்கொள்ளுகிறார்கள். ஆ, அன்பர்கள் எப்படி ஒருவரையொருவர் காணாமலும் பேசாமலும் இருக்கக்கூடும்?

இயேசு நமது சிநேகிதனானால் நாம் அவரோடு தனித்து உறவாடுகிறதுண்டா? ஆலயத்துக்குச்சென்று அநேகரோடு சேர்ந்து அவரைத் தொழுதுகொள்ளுகிறோம் ஜெபக்கூட்டத்தில் மற்றவர்களோடு சேர்ந்து அவரை ஆராதிக்கிறோம். நாம் தனித்து அவரோடு பேசுகிறதில்லையென்றால் நாம் அவருக்குச் சிநேகிதர்கள் அல்ல. இரண்டு சிநேகிதர்கள் மற்றவர்களோடு இருக்கும்போது அவர்கள் பேசுகிற மாதிரி வேறே. அவர்கள் தனித்திருக்கும்போது பேசுகிற மாதிரி வேறே சிநேகிதர் இருவருடைய கனிவான சம்பாஷணைக்கு மூன்றாம் ஆள் ஒரு தடையல்லவா? மூன்றாம் ஆள் கூட நிற்கும்வரை சம்பாஷணையை மாற்றி, அவர் போனபின்பு முன்போல இருதயக்கனிவுடன் பேச ஆரம்பிப்பார்கள். நான் கோவிலுக்குப் போகிறதும் ஜெபக்கூட்டத்திற்குப் போகிறதும் போதாதா? நான் தனிமையாய்ப்போய் இயேசுவோடு பேசவேண்டுமா என்று கேட்கிறவன் அவருடைய அன்பை அறிந்தவனுமல்ல, அவருடைய சிநேகிதனுமல்ல. எங்களுடைய பிரசங்க ஊழியத்தில் கிறிஸ்துவுக்குத் தன்னை ஒப்புக்கொடுத்து ரட்சிக்கப்பட்ட ஒரு சகோதரனுண்டு. அவர் எங்களிடத்தில் அதிக அன்புவைத்திருந்தார். இயேசுவுக்கு அவர் உத்தம சிநேகிதன் எப்போதும் அவரோடு தனித்திருக்க விரும்புவார். ஒருநாள் எங்களோடு நின்று ஆவிக்குரிய சம்பாஷணை செய்துகொண்டிருந்தார். நாங்கள் செய்த சம்பாஷணை எங்களுக்கு அதிக இன்பமாகயிருந்தது திடீரென அவர் எங்களைப்பார்த்து, ஐயா கொஞ்சம் உத்தரவு கொடுங்கள், நான் தனிமைக்குப் போய்விட்டு வந்துவிடுகிறேன் என்றார். இப்பொழுது சுவாமியைப்பற்றித்தானே பேசுகிறோம். பின்னை தனிமை என்னத்துக்கு என்று கேட்டோம். இதைவிட அது மிகவும் அவசரம்; ஆவிக்குக் கீழ்ப்படிந்து உடனே போகாவிட்டால் பெரிய மோசம் என்றார். சற்றுநேரத்திற்குப்பின் திரும்பிவந்தார். அவருடைய முகத்தில் காணப்பட்ட மகிழ்ச்சியை இவ்வளவென்று சொல்லமுடியாது இயேசுவோடு தனித்துப்பேசி இன்பம்கண்ட ஆத்துமா வேறெதினாலும் திருப்தியடையாது. இதை வாசிக்கும் சகோதரனே! நீர் கிறிஸ்துவோடு தனித்துப்பேசி, அவர் உம்மோடும் நீர் அவரோடும் உறவாடுகிறதுண்டா? இல்லையானால் இன்றுமுதல் அதை ஆரம்பித்துப்பாரும்.

5 அன்பின் அறிக்கை. இருதய நிறைவின்படி வாய்பேசும். அன்பனைவிட்டுப்பிரிந்து யோனத்தான் வீட்டுக்கு வந்தபோதிலும் தாவீதைத் தன் இருதயத்தில் சுமந்துகொண்டேவந்தான் என்கலாம். சவுல் தாவீதைக் கொலைசெய்யும்படிக்குத் தன் வேலைக்காரரோடும் யோனத்தானோடும் ஆலோசித்தான். ஆ, இது யோனத்தானுடைய உள்ளத்துக்கு எப்படி



இருந்திருக்கும். யோனத்தான் வாயை மூடிக்கொண்டு சும்மாயிருந்தானா? எப்படியிருக்கக்கூடும்? உடனே அவன் சவுலைப்பார்த்து: இன்று நீரும் உமது குடும்பமும் இஸ்ரவேலனைத்தும் க்ஷேமமாயிருப்பது யார் செயல் என்று நினைக்கிறீர்? அன்று தாவீது தன் பிராணனையும் பாராமல் அந்தப் பெலிஸ்தனைக்கொன்று பெரிய ரட்சிப்பை உண்டாக்கியிராவிட்டால் இன்று நமது கதி எப்படியிருக்குமென்று யோசித்துப்பாரும் என்றான். வேறோர் சமயம் தாவீது ராஜபோசனத்துக்கு வரவில்லை. ராஜா அவன் எங்கே என்று கேட்டான். அப்போதும் யோனத்தான் தாவீதுக்காகப் பரிந்துபேசினான். உடனே சவுலுக்குக் கோபம் மூண்டது. இரண்டகமும் மாறுபாடுமுள்ளவளின் மகனே, ஈசாயின் மகனை உனக்குத் தோழனாகத் தெரிந்துகொண்டிருப்பதை நான் அறியேனோ என்று சொல்லி அவனைக் கொல்லும்படி தன் ஈட்டியை அவன்மேல் எறிந்தான். தேவச்செயலினால் அவன் தப்பித்துக்கொண்டான். தனக்கு நிந்தையும் மரணமும் நேரிடுகிறதாயிருந்தாலும் தன் பிராண சிநேகிதனை அறிக்கையிடுவதற்கு யோனத்தான் பின்வாங்கவில்லை, வெட்கப்படவுமில்லை இப்பொழுது தாவீது சீப் வனாந்தரத்திலுள்ள ஓர் காட்டிலிருக்கிறான். யோனத்தான் அவனிடத்திற்குப்போய் நடந்ததெல்லாவற்றையும் அவனுக்கு அறிவித்து, நீர் பயப்படவேண்டாம், நிச்சயமாகவே நீர் இஸ்ரவேலின்மேல் ராஜாவாயிருப்பீர் என்று சொல்லி தேவனுக்குள் அவன் கையைத் திடப்படுத்தினான்.

இயேசு நமது சிநேகிதரானால் அவரை அறிக்கைபண்ண நாம் வெட்கப்படோம் சிநேகிதரிடத்தில் அவரைப்பற்றிப் பேசுகிறது லேசு. அவரைப் பகைக்கிற சவுலின் வீட்டாரோடு பேசுகிறதுதான் கஷ்டம். மத மதிய இந்துக்களோடு நாம் பேசும்போது அவர்கள் நம்மை நிந்திப்பார்கள், துன்பப்படுத்துவார்கள். அவருடைய அன்பின் வல்லமையினால் இவைகள் ஒன்றுக்கும் நாம் அஞ்சமாட்டோம். சகோதரனே! காயப்பட்ட நேசரின் கையை நீர் திடப்படுத்துகிறீரா? இந்தப் பொல்லாத உலகத்தில் நீரல்லவா அவருக்குச் சிநேகிதன். உம்மைத்தானே அவர் நம்பியிருக்கிறார். அவர் ராஜனாக வருகிறதற்கு நீரல்லவா அவருக்கு உதவிசெய்யவேண்டும். யோனத்தான் துரோகம்பண்ணியிருந்தால் தாவீதுக்கு என்னமாயிருக்கும்? தாவீதுக்கு வேறே சிநேகிதனுண்டோ?

6. அன்பினின் முடிவு. இஸ்ரவேலருக்கும் பெலிஸ்தருக்கும் கில்யோவா மலையில் யுத்தம் நடந்தது. இந்த யுத்தத்தில் யோனத்தான் கொல்லப்பட்டான். ஆ யோனத்தானே! முன்னொரு சமயம் ஒரு வாலிபனைக் கூட்டிக்கொண்டுபோய் பெலிஸ்தரின் சேனையை மடங்கடித்தவன் நீயல்லவா? உன் பராக்கிரமம் எங்கே? உன் பட்டயத்தை யாருக்குக் கொடுத்தாய்? உன் வில் எங்கே? யுத்தத்தில் உன் இடுப்புக்குப் பெலனாயிருக்கும் உன் கச்சை எங்கே? இரண்டு கைகளும் கட்டப்பட்டவனைப்போல

மடிந்துபோனாயப்பா! யோனத்தான் என்ன சொல்லுகிறான். என் பிராண சிநேகிதனாகிய தாவீதே! என் மரணநேரத்திலும் உன்னை நினைக்கிறேன். உன்னைச் சிநேகித்தநாள்முதல் இதுவரை உனக்குத் துரோகம்பண்ணினதில்லை. என் சிங்காசனம் உனக்கே உரியது. நீ உயரும்படி நான் தாழ்ந்துபோகிறேன். நீ பெலப்படும்படி நான் பெலவீனனானேன். நீ காணப்படும்படி நான் மறைந்துபோகிறேன். என் சிங்காசனத்தில் நீ ஏறுவதற்கு என்னைப் பாதபடியாகப்போடுகிறேன் என்று யோனத்தான் சொல்லுகிறதுபோலிருக்கிறது. அருமைச் சிநேகிதன் மாண்டான் என்று கேட்டவுடன் தாவீது அழுது: என் சகோதரனாகிய யோனத்தானே! உன் வில் பின்வாங்கினதில்லையே, உன் பட்டயம் வெறுமையாய்த் திரும்பினதில்லையே. பராக்கிரமசாலியாகிய யோனத்தானே உயரமான ஸ்தலங்களிலே வெட்டுண்டுபோனாயே. ஐயோ உனக்காக நான் வியாகுலப்படுகிறேன். நீ எனக்கு வெகு இன்பமாயிருந்தாய், உன் சிநேகம் ஆச்சரியம் என்று புலம்பினான்.

சகோதரரே, இவ்விருவருடைய சிநேகத்தைத் தியானிக்கையில் நாம் கிறிஸ்துவினிடத்தில் வைத்திருக்கிற அன்பைக்குறித்து வெட்கப்படவேண்டாமா? அவர் நம்மைச் சிநேகிதர் என்றழைக்கக்கூட நாம் பாத்திரவான்களல்ல ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டுவிட்டோமல்லவா? அவரை அநேகந்தரம் காட்டிக்கொடுத்த துரோகிகள் அல்லவா? அவருக்குக்கொடுக்க மனமற்ற பிசினிகளல்லவா? ஆபத்துக்காலத்தில் அவரைக் கைவிட்ட பாதகர்களல்லவா? அவர் பேரைச்சொல்லி வயிறுபிழைக்க வகைதேடின தன்னயக்காரரல்லவா? ஆத்மநேசர் திரும்பிவரும்போது நம்மைப்பார்த்து, நீ எனக்கு வெகு இன்பமாயிருந்தாய், உன் சிநேகம் ஆச்சரியம் என்று சொல்லுவாரானால் எவ்வளவு பாக்கியம்.

## 'தேவன் உலகத்தில் அன்புகூர்ந்தார்'.

'தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்'. பரி. யோ. 3:16.

ஒரு மனிதன் மறுபிறப்பைக் கண்டடையும்படி இயேசு சுவாமி சொன்ன இந்த வாக்கியம், ஆவியானவரால் வேதத்தில் எழுதிவைக்கப்பட்டபடியால், எண்ணிறந்தபேருடைய இரட்சிப்புக்கும் இகபரவாழ்வுக்கும் காரணமாயிற்று. சிறுபிராயமுதல் இதைக்கேட்டுப்படித்து மற்றவர்களுக்குச் சொன்ன பலர் இந்த வாக்கியத்தில் அடங்கியிருக்கிறதெல்லாம் தங்களுக்குத் தெரியும் என்பதாக எண்ணலாம். ஆனால் மறுமையில் பல யுகங்



களைக் கழித்தபின்புதான் இதில் அடங்கிய அறிவுக்கெட்டாத ஆழங்கள் மனிதருக்குப் புலப்படலாம். இதை அதிகமதிகமாய்ச் சிந்திக்கிறவன் அதிசயமதிகமாய் ஆச்சரியத்தால் பிரமைகொள்வான். 'ஆ! தேவனுடைய ஐசுவரியம் ஞானம் அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது? அவருடைய நியாயத் தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்'. ரோமர் 11: 33.

'உமது மதகுகளின் இரைச்சலால் ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது' என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான். அப்படியே இந்த வாக்கியத்திலும் ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது. பூமி வானத்தை நோக்கிக் கூப்பிடுகிறது, வானம் பூமியை நோக்கிக் கூப்பிடுகிறது. வானத்தின் ஐந்து ஆழங்கள் இங்கே மனிதனின் ஐந்து ஆழங்களை நோக்கிக் கூப்பிடுகிறது. இந்த வாக்கியத்தில் பத்துப் பெரிய வார்த்தைகள் இருக்கிறது. அவைகளை ஒன்றுக்கொன்று இனமான ஐந்து காரியங்களாகப் பிரிக்கலாம்.

முதலாவது, தேவதன்மையின் ஆழம் மனித குறைவின் ஆழத்தைக் கூப்பிடுகிறது. 'தேவன் உலகத்தில் அன்புகூர்ந்தார்'. தேவன் சகல பரிசுத்தத்தையும் உடையவர், நித்தியவாசியானவர், ஒருவரும் சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவர். அவர் அளவிடப்படக்கூடாத ஆழமாயிருக்கிறார். அவரே சகல ஜீவனுக்கும் ஆசீர்வாதத்துக்கும் ஊற்றாயிருக்கிறார். சர்வலோகமெங்குமுள்ள ஜீவராசிகள் யாவும் அவருக்குள் பிழைத்து அசைந்து இருக்கிறது. சர்வலோகங்களிலும் நமது பூமியானது அளவில்லாத குறைவும் சாபமும் உள்ளதாயிருக்கிறது. இரத்த வெள்ளம் ஓடுகிற யுத்தக் களங்களைப் பாருங்கள். கண்ணீரால் நனைக்கப்பட்ட கல்லறைத் தோட்டங்களைப் பாருங்கள். சிறைச்சாலைகள், வைத்தியசாலைகள், ஏழைகளுக்கு ஏற்படுத்தப்பட்ட சாவடிகள்முதலியவைகளைப் பாருங்கள். பிரதான பட்டணங்களில் மூலை முடங்குகளாயிருக்கிற பாவக்கொடுமைக் குடியிருப்புகளைப் பாருங்கள். இந்த உலகத்தின் நிர்ப்பாக்கியத்தை யார்தான் அளவிடக்கூடும். ஆனால் இந்த உலகத்தின் நிர்ப்பாக்கியம் ஆண்டவரிடமட்டும் எட்டுகிறது. அவரைநோக்கி அது ஓலமிடுகிறது. தேவதூதரின் பாட்டைக் கடந்து அது ஆண்டவரின் உள்ளத்தைத் தொடுகிறது. தெய்வமே, நீர்தானே என்னை உருவாக்கினீர், நான் இப்படிக் கெட்டுப்போனபின்பு, நீர்தானே எனக்கு நிவாரணத்தை உண்டுபண்ணவேண்டும்; என்னைப் பெற்ற நீர்தானே என்னைச் சுமக்கவேண்டும் என்று பூமி ஆண்டவரை நோக்கி ஓலமிடுகிறது.

பூமியின் ஓலம் ஆண்டவரிடம்போய் எட்டவே, ஆண்டவர் அதற்கு மறுமொழியாக: பூமியே நான் உன்னை நேசிக்கிறேன், உனக்காக நான் கவலைப்படுகிறேன், உன் நிர்ப்பந்தத்தைப்பார்த்து நான் பரிதபிக்கிறேன்; நான் உன்னை உண்டாக்கினபடியால் நானே உனக்கு உத்தரவாதியாயிருப்

பேன்; பாவம் மரணத்துக்கென்று ஆண்டுகொண்ட பூமியிலே கிருபை நித்திய ஜீவனுக்கென்று ஆண்டுகொள்ளுமட்டும் நான் அமர்ந்திருப்பதில்லை என்று வாக்குப்பண்ணுகிறார். ஆண்டவருக்கு எந்தமட்டும் நாம் சமீபமாய் ஜீவிக்கிறோமோ அந்த அளவுக்கு நமக்கு இந்த இரு சத்தமும் கேட்கும். பூமி ஆண்டவரை நோக்கியிடும் ஓலமும் நமக்குக் கேட்கும், தேவன் பூமிக்கு அருளும் நல்வாக்கும் நமக்குக் கேட்கும். பூமிக்கும் தேவனுக்கும் நடுவே நாம் நிற்போம். பூமியின் ஓலத்தை ஆண்டவருக்குத் தெரிவிப்போம். ஆண்டவருடைய அளவற்றை அன்பைப் பூமிக்குத் தெரிவிப்போம்.

இரண்டாவது, தேவனுடைய அன்பு மனிதனுடைய விசுவாசத்தை நோக்கிக் கூப்பிடுகிறது. தேவனுடைய அன்பை எங்கும் பார்க்கலாம். நமது தேகத்தின் அவயவங்களை அவர் அமைத்திருக்கிற விதத்திலே அவருடைய அன்பைப் பார்க்கலாம். இயற்கையிலே தேவன் அருளுகிற ஈவுகளாகிய சூரிய வெளிச்சம், ஏராளமான மழை, நல்ல காலங்களாகிய நன்மைகளிலும் அவருடைய அன்பைப் பார்க்கலாம். குடும்பச் சந்தோஷம் அன்பு முதலிய பாக்கியங்களிலும் அவருடைய அன்பைக் காணலாம். கர்த்தர் கொடுத்த வேதத்தின் மூலமாயும், எல்லாவற்றுக்கும் மேலாக அவர் அருளிய சொல்லிமுடியாத ஈவாகிய அவருடைய குமாரன் மூலமாயும் அவருடைய அன்பைப் பார்க்கிறோம். ஆகவே மனித நிர்ப்பாக்கியம் ஆண்டவருக்குப்போய் எட்டவே அவருடைய அளவற்ற அன்பு பூமிக்கு வழிந்தோடிக்கொண்டிருக்கிறது. இந்த அன்பு சூரிய கதிர்போல் மனித உள்ளத்தில் வீசவே, அதிலிருந்து விசுவாசம் எழும்பும்படி செய்கிறது. 'தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம்'. 1 யோவான் 4: 16. புருஷனும் மனைவியும் ஒருவருக்கொருவர் ஆதரவாயிருக்கிறபடியால் ஒருவரையொருவர் நேசிக்கிறார்கள். ஆண்டவர் அப்படி நம்மை நேசிக்கிறதில்லை. நம்முடைய குறைவினிமித்தம் பரிதாபப்பட்டு அவர் நம்மை நேசிக்கிறார். நாம் தரித்திராயிருப்பதினால் தமது நன்மைகளை நமக்கு அருளுகிறார். அவர் காட்டுகிற அன்பு நமது விசுவாசத்தை அவர்பேரில் பலப்படுத்த வேண்டும். அவருடைய அன்பு நம்முடைய விசுவாசத்தைக் கூப்பிடுகிறது. பலமான விசுவாசத்தால் அவருடைய அன்புக்கு நாம் மாறுத்தரம் கொடுப்போமாக.

மூன்றாவது, கிறிஸ்துவினுடைய இருதயத்தின் ஆழம் பாவியினுடைய உள்ளத்திலுள்ள குறைவை நோக்கிக் கூப்பிடுகிறது. தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவனுக்கு தேவன் அவரைத் தந்தருளினார். தேவன் தம்முடைய குமாரனை எந்தப் பாவிக்கும் கொடுத்தார். தேவ குமாரனுக்கும் பாவிக்குமுள்ள வித்தியாசத்தைப்போலொத்த



வித்தியாசம் எங்குமுண்டோ? ஆயினும் தமக்குச் சமமும் சொந்தமுமான ஒரே குமாரனை தேவன் கொடுத்தார். மனிதர் அவரை நிந்தித்துப் பரிகாசம்பண்ணி, வதைத்துக் கொல்லும்படி ஒப்புக்கொடுத்தார்; கெத்சமனேயின் ஆலையிலும் கல்வாரியின் பலிபீடத்திலும் அவருடைய ஜீவன் பாவிகளுக்காக மரணத்தில் ஊற்றப்படும்படி அவர் ஒப்புக்கொடுத்தார். இது மனுஷ புத்திக் கெட்டாத ஆச்சரியம்! தேவனுடைய மகத்துவ கிறிஸ்து எவருக்காகவும் ஒப்புக்கொடுக்கப்பட்டாராம் இது என்ன பெரிய ஆழம். எவ்வளவு இளமை என்றுமில்லை, எவ்வளவு வயோதிபன் என்றுமில்லை, எவ்வளவு நீசன் என்றுமில்லை, எவ்வளவு துரோகி என்றுமில்லை, எவ்வளவாய்ப் பின்வாங்கிப்போனவன் என்றுமில்லை, எவ்வளவு படுபாவி என்றுமில்லை, எவ்வளவு பாவமற்ற மனிதன் என்றுமில்லை—எவருக்காகவும் கொடுக்கப்பட்டாராம். 'எவனோ' என்ற வார்த்தைக்குள் அடங்காத மனிதன் இல்லவே இல்லை.

நான்காவது, கிறிஸ்துவிலுள்ள தெய்வ பரிபூரணத்தின் ஆழம் அதைச் சொந்தமாக்கிக்கொள்ளக்கூடிய மனித சக்தியின் ஆழத்தை நோக்கிக்கூப்பிடுகிறது. விசுவாசிக்கிற எவனுக்கும் கிறிஸ்துவிலுள்ள எதுவும் கிடைக்கும்படிக்கு, தேவன் அவரைப் பாவிகளுக்குக் கொடுத்தார். தேவன் கிறிஸ்துவிலுள்ள எதையும் கிறிஸ்துவிலுள்ள அளவாய்ப் பாவிக்குக் கொடுக்கக்கூடும். எந்தப் பாவியும் கிறிஸ்துவிலுள்ள எதையும், கிறிஸ்துவிலுள்ள அளவாய் விசுவாசத்தால் எடுத்துக்கொள்ளலாம். தேவன் கிறிஸ்துவைக் கொடுத்தார் என்பதின் அர்த்தம் இதுவே. தேவன் கிறிஸ்துவில் அருளிய சம்பூரணத்தைப் பெற்றுக்கொள்ள இப்பூமியிலுள்ள மனுமக்கள் தாமதிக்கிறதைக் கண்டு, பரலோகத்தின் தூதர்கள் எவ்வளவாய்த் துக்கிக்கவேண்டும்! ஐயோ, ஏழை மனிதர்கள் பிதாவின் மேசையிலுள்ள சம்பூரணத்தைப் புசிப்பதற்குப் பதிலாக, மேசையின்கீழ் விழுந்துணிக்கைகளுக்கு ஏமாந்து நிற்கிறார்கள். "நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாய்" இருக்கலாம் என்று ஆண்டவர் சொல்லியிருக்க (2 கொரி 9: 8), கிறிஸ்தவர்களோ பானையில் ஒரு பிடி மாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயும் மாத்திரமே உடையவர்கள்போல் இருக்கிறார்கள். சகலவித நற்கிரியையிலும் நீங்கள் பெருகலாம் என்று ஆண்டவர் சொல்லியிருக்க, ஒரு நற்கிரியையிலும் பெருகாத எண்ணிறந்த பேர்களை கிறிஸ்து சபைகளிலே காண்கிறோம். "தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்" என்று வாக்குப்பண்ணப்பட்டிருக்க, கிறிஸ்துவிலுள்ள கிருபையின் ஐசுவரியத்தில் பெருகுகிறவர்களைக் காண்பது எவ்வளவோ அரிதாயிருக்கிறது. "நீங்கள் தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்பட அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே உங்களுக்கு அனுக்கிரகம்பண்ண

வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்" என்பதெல்லாம் வெறும் வாசகமாக இருக்கிறதேயல்லாமல், அனுபவமாகவில்லையே! தேவ அன்பு தேவ பரிபூரணத்தை இப்போதே நமக்கு அருளுவதாகத் தெரிவித்திருக்கையில், நாம் தெய்வசித்தத்தை அவமாக்கி, என்றாலும் குறைவிலேயே திருப்தியாயிருக்கிறோம்.

ஐந்தாவது, அழிவின் ஆழத்துக்குட்பட்டவர்களை நித்திய ஜீவனின் ஆழம் அழைக்கிறது. தேவனுடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவர் கொடுக்கப்பட்டார். பாவத்தால் கெட்டுப்போனவர்களைப் பார்த்து கிறிஸ்துவாலுண்டான நித்திய ஜீவன் கூப்பிடுகிறது. கருப்புமை நிறைந்த ஒரு சமுத்திரத்தையும் பளிங்குக் கொப்பான ஒளியுள்ள ஒரு சமுத்திரத்தையும் நான் கண்டேன்; பளிங்குக்கொப்பான ஒளியுள்ள சமுத்திரம் கருப்புமை நிறைந்த சமுத்திரத்துக்குள் பாய்ந்து அதைக்காணப்படாமல்போகும்படி அழித்துப்போட்டது என்று ஒரு பக்தன் எழுதியிருக்கிறார். கெட்டுப் போவான் என்பதின் அர்த்தமென்ன? ஜீவிக்காமல் அழிக்கப்பட்டுப் போவான் என்று எண்ணுகிறீர்களோ? வேதம் ஓர் இடத்திலாகிலும் அப்படிச் சொல்லவில்லை. மரணம் ஒன்றையும் அழியச் செய்கிறதேயில்லை. நிலைமையைமாற்றி, இன்னோர் நிலைமையில் ஜீவிக்கச்செய்கிறதே மரணம். ஆதாம் பாவஞ்செய்த நாளில் அவன் மரிக்கவே மரித்தான். அவன் முன்னிருந்த ஜீவிய நிலைமையும் முறையும்மாறி அன்று அவன் வேறு நிலைமைக்கும் முறைக்கும் உட்பட்டான். கெட்டகுமாரன் துன்மார்க்கமாய் ஜீவித்தகாலத்தில் அவன் மரித்தான் என்று அவன் தகப்பன் சொன்னான். "சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள்" என்று வேதம் சொல்லுகிறது 1 தீமோத். 5: 6. தன்னைச்சுற்றியிருக்கிற காரியாதிகளை அனுபவிக்கக்கூடாதிருப்பதே மரணம் என்று டிரம்மண்டு சாஸ்திரியார் சொல்லுகிறார். தள்ளப்பட்ட மனைவி தன் புருஷனுக்குச் செத்தவள். திமிர்வாதக்காரன் உலகத்தில் அநேகத்துக்குச் செத்தவன். அப்படியே கெட்டுப் போன ஆத்துமா நித்திய மரணத்துக்குள்ளானவன். அவன் தேவனுக்குச் செத்தவன். அவரை அறியவும் அனுபவிக்கவும் ஏலாதவன். இப்படிப் பட்டவனை கிறிஸ்துவால் வந்த நித்திய ஜீவன் அழைக்கிறது. ஜீவன் மரணத்தைப்பார்த்துக் கூப்பிடுகிறது. வெளிச்சம் இருளைப்பார்த்துக் கூப்பிடுகிறது. ஆனந்த பாக்கியம் நிர்ப்பாக்கியத்தைப் பார்த்துக்கூப்பிடுகிறது. தெய்வ ஜீவனே கூப்பிடுகிறது. அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள்.

மெய்யாகவே இந்த வாக்கியத்தில் ஆழங்களின் இரைச்சல் கேட்கிறது. இவைகளை உணரத்தக்க ஞானமுள்ளவன் யார்? "எவன் ஞானமுள்ளவனோ அவன் இவைகளைக் கவனிக்கக்கடவன்; ஞானவான்கள் கர்த்தருடைய கிருபைகளை உணர்ந்து கொள்வார்கள்" சங்கீதம் 107! 43.



# தற்கால விசேஷங்கள்.

யுத்தத்தின் பலனாக மார்க்க எழுப்புதல் வருவது வழக்கம். ஜெயங்கொண்டவர்கள் அகங்காரங்கொள்வதால் ஜெயம் அவர்களுக்கு முற்றிலும் நன்மையாயிருக்கிறதில்லை. ஜெயிக்கப்பட்டவர்கள் கர்த்தரை அதிகமாய்த் தேடுவதால், அபஜெயம் ஒருவிதமாய் அவர்களுக்கு ஆசீர்வாதமாய் முடிகிறது. ஜப்பானால் ஜெயிக்கப்பட்ட கொரியாதேசத்தார்மேல் கர்த்தர் ஆவியின் அருள்மாரியை ஊற்றிவிட்டபடியால் அபஜெயம் அவர்களுக்குப் பெரிய ஆசீர்வாதமாகிவிட்டது. அங்கிலேயரால் கைதிகளாய் அனுப்பப்பட்ட போவர் கூட்டங்கள் போன பல இடங்களில் அவர்களுக்குள் மார்க்க எழுப்புதல் உண்டாயிற்று. திரிப்போலியிலிருந்து திரும்பிவந்த ஆபிசீனிய சேனைகளுக்குள் மூன்றுமணி நேரத்துக்குள் சில கோல்போர்ட்டர்கள் 572 வேதாகமங்கள் விற்றுப்போட்டார்கள். இப்போதும் ஜெயிக்கப்பட்ட ஆல்பேனியா நாட்டு ஜனங்களுக்குள் பலத்த மார்க்க அசைவு உண்டாகியிருப்பதாக மிஷனெரிமார் சொல்லுகிறார்கள். முன்னே அவர்கள் கிறிஸ்தவர்களாயிருந்ததாகவும், துலுக்கர்களுடைய உபத்திரவத்தினிமித்தம் அவர்கள் மகமது மார்க்கத்தில் சேர்ந்ததாகவும் சொல்லுகிறார்கள். தீமை என்று மனிதர் எண்ணுகிற பல காரியங்கள் இப்படியே அவர்கள் அறியாத விதமாய் ஆசீர்வாதமாய் மாறும்படி ஆண்டவர் செய்கிறார்.

துர்க்கிய யுத்த முடிவில் வரும் பலன்கள் பலவுண்டு. பூர்வ ரோம இராஜ்யத்தின் கீழ்பாகம் இனிமேல் ஐந்து ராஜ்யங்களாய்ப் பிரிக்கப்பட வெகு சீக்கிரம் ஏதுவுண்டாகிவிடும். தீர்க்கதரிசனப்படி ஐந்து இராஜ்யங்களில் நான்கு இராஜ்யங்கள் அலெக்சந்தருக்குப் பின்வந்த நான்கு இராஜ்யங்களாயிருக்கவேண்டும். அலெக்சந்தருடைய தளகர்த்தரான நான்கு பேர்களில் பித்தாலோமியு எகிப்தையும், செலூக்கஸ் சீரியாவையும் கசாந்தர் கிரேக்க தேசத்தையும், லிசிமாக்கஸ் பைசந்தியத்தையும் (கொனஸ்தந்திநோபிள்) பிரத்தியேகமான இராஜ்யங்களாக்கி ஆண்டார்கள். இவை நான்கும் முன்போல சீக்கிரமாய் இராஜ்யங்களாகிவிடும் என்று நம்பலாம். எகிப்தும், கிரேக்கும் இப்போதே இராஜ்யங்களாயிருக்கிறது. இந்த யுத்தத்துக்குப்பின், கொனஸ்தந்திநோபிளும் சின்ன ஆசியாவும் முன்போல பிரத்தியேகமான இராஜ்யமாகிவிட்டது. சீரியா ஒன்றுதான் பிரிக்கப்படவேண்டும். இவைகளில் ஒன்றிலிருந்துதான் அந்திக்கிறிஸ்து எழும்புவானென்று தீர்க்கதரிசனத்தால் அறியலாம்.

மகம்மது மார்க்கம் புது உயிரடைவது துர்க்கிய இராஜ்யத்தோல்வியினால் வரும் மகா முக்கிய பலனாயிருக்கும். உலகத்திலுள்ள முக்கிய மார்க்கங்களில் மகமது மார்க்கந்தான் கடைசியாய் எழும்பின மார்க்கம். இதுவே கிறிஸ்துமார்க்கத்துக்குப்பின் இதற்கு எதிரியாய் எழும்பின ஒரே மார்க்கம். கிறிஸ்துமார்க்கத்தைப்போல் மிஷனெரிமார்க்கமாய் அது

எழும்பினபடியால் ஒரு காலத்தில் அது கிறிஸ்துமார்க்கத்தைப் பூமியிலிராதபடி அடியோடே அழித்துப்போடக்கூடிய பலத்த மோசம்கூட உண்டாயிருந்தது. இன்னமும் இதின் மூலமாகவே கிறிஸ்துமார்க்கத்துக்கு பலத்த கெடுதிகள் உண்டாகும் என்றெண்ணலாம். சில வருஷங்களாய் அதற்குப் புது உயிர்வந்திருக்கிறது. கடந்த பத்து வருஷங்களுக்குள் அது பங்காளத்தில் மாத்திரம் இருபது இலட்சம் பேரை மகமதியராக்கியிருக்கிறது. கிறிஸ்துமார்க்கம் நூறு வருஷத்தில் அத்தனை பேரை ஆதாயம்பண்ணவில்லை. ஆப்பிரிக்கா கண்டத்தில் மகமதுமார்க்கம் முள்ளில் பற்றின நெருப்பைப்போல் பரவுகிறது. இங்கிலாந்தில லிவர்ப்பூல், உலோக்கிங் என்ற இடங்களிலும், அமெரிக்காவில் புருக்லின், நியுயார்க் என்னும் பட்டணங்களிலும் துலுக்கப் பள்ளிவாசல்கள் கட்டப்பட்டிருக்கின்றன. லண்டன் பட்டணத்தில் மகா பெரிய பள்ளிவாசல் ஒன்று கட்டப்போகிறார்கள். மகமதுமார்க்கத்திலிருந்து தற்சமயம் எழும்பியிருக்கிற அப்டல் அபாஸ் என்ற அந்திக்கிறிஸ்துவை இப்போது இலட்சக்கணக்கான மகமதியர் பின்பற்றுகிறார்கள். இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் முதலாய் அநேகர் அவனை நம்புகிறார்கள். அவன் தன்னைத் திரு அவதாரமான தேவகுமாரனென்றும், தேவமகிமையின் தற்சொரூபமென்றும், உலக இரட்சகனென்றும் அழைக்கிறான். துர்க்கிய இராஜ்யத் தோல்வி முன்னிலும் அதிகமாய் இவையெல்லாவற்றையும் பெலப்படுத்தும் என்பதற்குச் சந்தேகமில்லை. கிறிஸ்தவ இராஜ்யங்களின் தோல்வி கிறிஸ்தவர்களுக்குள் மார்க்க எழுப்புதலை உண்டுபண்ணுவதுபோலவே, துர்க்கிய இராஜ்யத் தோல்வி மகமதியருக்குள் மார்க்க எழுப்புதலை உண்டுபண்ணும் என்பது நிச்சயம். மகமது மார்க்கமே அந்திக்கிறிஸ்துவின் மார்க்கமாயிருக்கலாம். 'பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து'. (1 யோவான். 2: 22). 'நித்தியரான தேவன் ஜெனிப்பிக்கிறதுமில்லை, ஜெனிப்பிக்கப்படுகிறதுமில்லை' என்று கோரானில் ஒரு வாக்கியம் இருக்கிறது. இதின்படி பார்த்தால், மகமதுமார்க்கம் பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறது என்றே சொல்லவேண்டுமல்லவா? மேலும் மகமது மார்க்கத்தில் ஆசாரியருக்கு இடமே இல்லை. அப்படியே அந்திக்கிறிஸ்துவின் மார்க்கத்தில் வலுசர்ப்பமும் மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியும் உண்டேயல்லாமல், ஆசாரியன் இருக்கமாட்டான். ஆனால் இவைகளுக்கு முன்னே இயேசு மணவாளர் திருடனைப்போல் வருவார். "விழித்துக்கொண்டு தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்."

Printed at the Church Mission Press, Palamcottah and
Published by the Rev. S. G. Maduram, B.A.



August, 1913. Registered No. M—163.

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

" என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." (யோவான் 7: 88)

Vol. XIV ஆகஸ்ற்றுமீ 1913

MADRAS

## 'உன் பாதரட்சைகளைத் தொடுத்துக்கொள்'.

'தூதன் அவனை நோக்கி: உன் அரையைக்கட்டி, உன் பாதரட்சைகளைத் தொடுத்துக்கொள் என்றான். அவன் அந்தப்படியே செய்தான். தூதன் பின்னும் அவனை நோக்கி: உன் வஸ்திரத்தைப் போர்த்துக்கொண்டு, என் பின்னே வா என்றான்'. அப்போஸ்தலர் 12: 8.

ஏரோது ராஜா யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபைப் பட்டயத்தினாலே கொலைசெய்தான். பின்பு அவன் பேதுருவைப் பிடித்துச் சிறைச்சாலையில் வைத்தான். இப்படிப்பட்ட சமயத்தில் சபையார் என்ன செய்யக்கூடும்? ஏரோதின் கையைத் தடுக்க யாரால்கூடும்? அவன் கையைத் தடுத்து, அவன் கிரியையை அவமாக்கப் பரலோகத்தின் தேவன் ஒருவரால் மாத்திரம் கூடும். அவரையே நோக்கிச் சபையார் ஊக்கமாய் ஜெபம் பண்ணினார்கள். ஆண்டவர் அவர்கள் ஜெபத்தைக்கேட்டு, பேதுருவை விடுவிக்கத் தமது தூதனை அனுப்பினார். அந்தத் தூதன் பரிசுத்த பேதுருவை விடுவித்த சரித்திரம் எக்காலத்திலுமுள்ள சபைக்கு அருமையான போதனையைக் கொடுக்கிறது. கர்த்தர் தமது சபைக்காக ஒரு காரியத்தைச்செய்யத் தொடங்குகிறபோது அதை எவ்வளவு நன்றாய்ச் செய்கிறார் என்று இதிலே பார்க்கலாம். சபைக்காக அவர் கிரியை செய்தது போலவே, பரிசுத்த பேதுருவுக்காகவும் அவர் கிரியை செய்தார் என்று சொல்லலாமே. கஷ்டப்படுகிற பக்தர்களுக்காக கர்த்தர் கிரியைசெய்யத் தொடங்குகிறபோது என்ன நேர்த்தியாய் அவர் கிரியை செய்கிறார் என்பதையும் இதிலே பார்க்கலாம்.

முதலாவது, கர்த்தர் கிரியை செய்யத் தொடங்கும்போது எல்லாக் காரியங்களுக்கும் அவரே உத்திரவாதியாயிருப்பார் பெரிய காரியங்க

ளுக்கு அவர் உத்திரவாதியாயிருக்கிறபடியே, சிறிய காரியங்களுக்கும் அவர் உத்திரவாதியாயிருக்கிறார். எதாவது ஒரு தவறுதலும் கெடுதியும் நேரிடாதபடி தமது பக்தனை அவர் ஒன்றுக்கும் உத்திரவாதியாக்கவேமாட்டார். பரிசுத்த பேதுரு சிறைச்சாலையினின்று விடுவிக்கப்பட்ட சரித்திரத்தில் இதை எல்லாம் வெகு தெளிவாய்ப் பார்க்கலாம். பெரிய காரியங்களையும் சிறிய காரியங்களையும் தேவதூதனே நடத்தினான். தூக்க மயக்கம் நிறைந்த பேதுரு எதாவது செய்யும்படி விட்டிருந்தால் அது கேவலமாகவே செய்யப்பட்டிருக்கும். சங்கிலிகள் விழுந்துபோகவும் இருப்புக் கதவு திறக்கப்படவும் தேவதூதனே செய்ததுமாத்திரமல்ல, பேதுரு அரையைக் கட்டவும் பாதரட்சைகளைத் தொடுத்துக்கொள்ளவும் வஸ்திரத்தைப் போர்த்துக்கொள்ளவும் கட்டளை கொடுத்தான். இவைகளையெல்லாம் பரிசுத்த பேதுரு தமது இஷ்டப்படி செய்ய தேவதூதன் இடங்கொடுத்துவிட்டு, பெரிய காரியங்களை மாத்திரம் தேவதூதன் செய்திருக்கலாம். அப்படியல்ல, கர்த்தர் தமது ஜனத்துக்காகக் கிரியை செய்யும்போது தாமே எல்லாவற்றையும் செய்கிறார். அவர்களுடைய பெலவீனத்தால் எந்தக் கெடுதியும் நேரிட்டு விடாதபடி ஒன்றையும் தங்கள் இஷ்டப்படி செய்ய அவர்களுக்கு அவர் விடுகிறதில்லை.

சிறிய காரியங்களைப்பற்றி நாம் பல முறையும் அளவுக்கு மிஞ்சிக் கவலைப்படுகிறோம். பெரிய காரியங்களைத்தான் கர்த்தருடைய நடத்துதலுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். சிறிய காரியங்களையெல்லாம் நமக்கு நன்மையாய்த் தோன்றுகிறபடி நாமே செய்யவேண்டுமென்று நாம் எண்ணிக்கொள்ளுகிறோம். இந்தச் சரித்திரம் அந்தப்படி போதிக்கவில்லை என்பதை அறிந்துகொள்ளுவோமாக. தேவதூதன் சங்கிலிகளையும் இருப்புக் கதவுகளையும் போர்ச்சேவகரையும்பற்றிய காரியங்களையெல்லாம் தானே பார்த்துக்கொண்டதுமல்லாமல், பேதுரு செய்யவேண்டிய சிறிய காரியங்களுக்கும் திட்டமான ஆலோசனை கொடுத்தான். நமது பரமபிதா நமது விஷயத்திலும் இப்படியே செய்வார். நம்மால் செய்யக்கூடாத காரியங்களை அவர் நமக்காகச் செய்வதுமல்லாமல், நாம் செய்யவேண்டிய காரியங்களுக்கும் அவர் திட்டமான ஆலோசனை கொடுத்து நடத்துவார். நாம் மாத்திரம் அவருக்குச் செவிகொடுத்துக் கீழ்ப்படிவோமானால் அவருடைய நடத்துதல் மகா திட்டமாய் நமக்கு விளங்கும்.

இரண்டாவது, கர்த்தர் கிரியை செய்யத் தொடங்கும்போது மிகுந்த தைரியமாயும் தாராளமாயும் எல்லாவற்றையும் செய்வார். அவர் பயப்படவுமாட்டார், பதஷ்டப்படவுமாட்டார். பேதுருவைத் தட்டி எழுப்பின தூதன் சீக்கிரமாய் அவனை எழுந்திருக்கச்சொன்னான். ஆனால் சீக்கிரமாய் அவனை ஓடிப்போகச் சொல்லவில்லை. செய்யவேண்டிய சகல சிறிய காரியங்களையெல்லாம் செய்யச் சொன்னான். மனிதன் ஒருவன் போய் விடுவித்திருந்தால், இவைகளைச் செய்யமுடியாது, உடனே ஓடிவா என்று சொல்லியிருப்பான். ஆனால் தேவனோ ஒரு காரியத்தையும் அரைகுறையாய்ச் செய்யவுமாட்டார், பதஷ்டத்தோடு செய்யவுமாட்டார். சத்துருவினுடைய சிறைச்சாலையிலே பேதுருவினுடைய ஒரு சாமானும் இருக்கக்கூடாது. எகிப்திலிருந்து இஸ்ரவேலரை விடுதலை செய்தபோது, 'எங்கள் மிருக ஜீவன்களும் எங்களோடேகூட வரவேண்டும்; ஒரு குளம்பும் பின்வைக்கப்படுவதில்லை' என்று மோசே சொன்னார். அப்படியே ஆண்டவர் எப்போதும்செய்கிறார். மேலும் அவர் எந்தக்காரியத்தையும்நன்றாய்ச்செய்கிறதுபோலவே தைரியமாயும் செய்கிறார். மனிதரில் ஒருவன் பேதுருவை விடுவித்தால், அரையைக் கட்டவும் வஸ்திரத்தைப் போர்த்துக் கொள்ளவும் சொன்னாலும், பாதரட்சைகளைத் தொடுத்துக்கொள்ளும்படி சொல்லமாட்டான். பாதரட்சைகளைப் போட்டுக்கொண்டு நடந்தால், பெரிய சத்தங்கேட்கும், காவல்காரர் விழித்துக்கொள்ளுவார்கள். அப்போது தப்பி ஓடக்கூடாமல்போய்விடும். இந்தப்படி மனிதன் எண்ணுவான். தேவனோ பாதரட்சைகளைத் தொடுத்துக்கொண்டு பலமாய் நடக்கப்பண்ணுகிறார் அவர் செய்ய ஆரம்பித்துவிட்ட காரியத்தை அற்பக் காரியங்கள் தடைசெய்துவிடமாட்டாது. 'காவல்ாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள்போலானார்கள்'. பரி. மத்தேயு 28: 4. 'உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்'. சங்கீதம் 37: 5



மூன்றவது, கர்த்தர் கிரியைசெய்யத்துவக்கும்போது சத்துருவுக்கும் அவர் ஏற்பாடு செய்வார். தேவதூதன் பேதுருவை விடுதலை பண்ணிவிட்டு, பரலோகத்துக்குப்போய்விடவில்லை. சத்துருவாகிய ஏரோதுவை அவன் பின்தொடர்ந்துபோனான். சில நாட்களுக்குப்பின் ஏரோது ஒரு பிரசங்கம் செய்தான். அதற்காக அநேகர் அவனைப் புகழ்ந்தார்கள். அப்பொழுது 'அவன் தேவனுக்கு மகிமையைச்செலுத்தாதபடியினால், உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான். அவன் புழுப்புழுத்துச் செத்தான். தேவ வசனமோ வளர்ந்து பெருகிற்று'. (23, 24). உபத்திரவத்தின் முடிவு இதுவே. 'உங்களை உபத்திரவப்படுத்துகிறவர்களுக்கு உபத்திரவத்தையும், உபத்திரவப்படுகிற உங்களுக்கு எங்களோடேகூட இளைப்பாறுதலையும் பிரதி பலனாகக் கொடுப்பது தேவனுக்கு நீதியாயிருக்கிறது'. 2: தெசலோ. 1:6. 'நீங்கள் சகிக்கிற சகல துன்பங்களிலும் உபத்திரவங்களிலும் பொறுமையையும் விசுவாசத்தையும் காண்பிக்கிறதினிமித்தம் உங்களைக்குறித்து நாங்கள் தேவனுடைய சபைகளில் மேன்மை பாராட்டுகிறோம்' என்று பரிசுத்த பவுல் சொல்லுகிறார். (4 வா). உபத்திரவத்தில் பொறுமையையும் விசுவாசத்தையும் காண்பிப்பதும், உபத்திரவம் நீங்கும்படி ஊக்கமாய் மன்றாடுவதும், விடுதலை வரும்போது பூரணமாய்க் கீழ்ப்ப

டிவதுமே நமது கடமை. அப்போது நமக்கு விடுதலை வரும், நமது சத்துருவுக்கு அழிவு வரும். தேவ வசனமோ வளர்ந்து பெருகும். தேவன் மகிமைப்படுவார். இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறில்லை என்று எல்லாரும் அறிந்துகொள்ளுவார்கள்.

## 'தேவன் அவர்களுடைய தேவன்.'

'அவர்கள் விட்டுவந்த தேசத்தையல்ல, அதிலும் மேன்மையான பரம தேசத்தையே விரும்பினார்கள். ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை. அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே'. எபிரேயர் 11: 16.

ஆண்டவருக்குச் சொந்தப்பேர்களும் உண்டு, கூட்டுப்பேர்களும் உண்டு. மனிதரைவைத்து அவருக்குப் பேர் கொடுக்கப்படுகிறது. ஆபிரகாம் ஆண்டவருடைய கட்டளைப்படி ஐப்பிராத்து நதியைக் கடந்து கானானுக்குப் போனபோது அவனுக்கு எபிரேயன் என்ற கூட்டுப்பேர் கொடுக்கப்பட்டது. அதோடு ஆண்டவருக்கும் ஒரு புதுப்பேர் கொடுக்கப்பட்டது. அவர் ஆபிரகாமின் தேவன் என்றழைக்கப்பட்டார். இப்படியே எலியாவின் தேவன் என்றும், தானியேலின் தேவனென்றும் ஆண்டவருக்குப் பேரிடப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பேர்கள் ஆண்டவருக்கு அதிகப்பிரியம் என்று சொல்லலாம். பூலோக யுத்தவீரர்களுக்கு அவர்கள் ஜெயித்த தேசங்களின் பேரால் புதுப்பேர் கொடுக்கப்பட்டதுண்டு. அந்தப்பேர்களை அவர்கள் வெகு பெருமையாய்த் தரித்துக்கொள்ளுகிறார்கள். ஆண்டவருடைய கிருபையின் மகத்துவ ஜெயத்துக்குச் சாட்சிகளாய் இருக்கிற பக்தர்களின் பேரால் ஆண்டவருக்குப் பேரிடப்படும்பொழுது, அது அவருக்கு எவ்வளவோ பெருமையாயிருக்கவேண்டும்.

1-வது, யார்நிமித்தம் ஆண்டவருக்குப் புதுப்பேர் கொடுக்கப்படுகிறது என்று பார்ப்போம். பூமியில் பெரியவர்களாய் எண்ணப்படுகிற ஐசுவரியவான்கள், ஜெயவேந்தர்கள் முதலியவர்கள் நிமித்தமல்ல; 'பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு' மரித்தவர்கள் நிமித்தமே, ஆண்டவருக்குப் புது நாமம் சூட்டப்பட்டிருக்கிறதாம். (13 வா). அவர்கள் அழிந்துபோகும் இந்த உலகத்தை வெறுத்துத் தள்ளி, அதிலும் மேன்மையான பரம தேசத்தை விரும்பினார்களாம். ஆதலால் தான் ஆண்டவர் அவர்களுடைய தேவன் என்று அழைக்கப்படுகிறார் என்று சொல்லியிருக்கிறது. பெற்றோரை விட்டுப் பிரிந்து, தூரமான இடத்தில் படிக்கிற ஒரு பையன் தன் வீட்டுக்குப் போக ஆசிக்காதிருப்பானோ? வாரத்துக்கு ஒருமுறை வருகிற கடிதமும் வேளா வேளைகளில் வருகிற



சிற்றுண்டிகளும் எனக்குப்போதும், நான் என் வீட்டுக்குப்போக விரும்ப மாட்டேன். என்று அவன் சொல்லுவானானால், அவனைப்பற்றியும் அவன் வீட்டைப்பற்றியும் நாம் என்ன சொல்லுவோம்? நரகம் வேண்டாம், மோட்சமே எனக்கு வேண்டும் என்று எல்லாரும் வாயினால் சொல்லுவோம். ஆனால் நம்முடைய சம்பாஷணை முழுவதும் பூமிக்குரியதாகவும், நம்முடைய குணமும் சிந்தையும் மாம்சத்துக் குரியதாகவும் இருக்குமானால் நாம் பரம தேசத்தை நாடுகிறவர்கள் என்று எப்படிச் சொல்லக்கூடும்? நம்முடைய குணத்திலும் நடக்கையிலும் நாம் ஆண்டருக்குரியவர்கள் என்று காட்டுகிற குறிப்புகள் இல்லாதிருக்குமானால் நாம் பரதேசிகளின் கூட்டத்தைச் சேர்ந்தவர்களென்று யார் சொல்லுவார்கள்?

பூமியிலே மெய்யாகவே நாம் அந்நியரும் பரதேசிகளுமாயிருக்க வேண்டும். அந்நியன் யார்? தன்னைச் சுற்றிலும் இருக்கிறவர்களால் அறியப்படாதவனே அந்நியன். அவனுடைய குணமும், பழக்க வழக்கமும், எண்ணம் நோக்கமும் மற்றவர்களுக்கு விளங்கமாட்டாது. 'உலகம் அவரை அறியாதபடியால், நம்மையும் அறியமாட்டாது'. பரதேசி யார்? தூரமான நாட்டில் தன் வீட்டை உடையவனே பரதேசி. பரதேசியாய் வசிக்கும் நாட்டிலே அவன் நிலையாய்க் குடியிருக்க விரும்பமாட்டான். எப்போ போய் என் வீடு சேர்வேன் என்று அவன் ஆசிப்பான். ஆண்டவரையும் அவருடைய பரம இராஜ்யத்தையும்பற்றி இவ்வித வாஞ்சையுடையவர்களாலேதான் அவருக்குப் புதுப்பேரிடப்படுகிறது. இவ்வித இலட்சணங்கள் நம்மில் உண்டா என்று சோதித்துப் பார்ப்போமாக.

2-வது, எதினால் இவர்கள் பரதேசிகளானார்கள் என்று பார்ப்போம். அவர்களுடைய விசுவாசமே இதற்குக் காரணம் என்று ஆண்டவர் சொல்லுகிறார். மகிமையின் தேவன் ஆபிரகாமுக்குத் தரிசனமானார். அதினால் ஆபிரகாம் பரதேசியாய் ஜீவிக்கப் புறப்பட்டுவிட்டான். பாபேலின் மனிதர் தங்களுக்கு ஒரு பட்டணத்தையும் கோபுரத்தையும் பூமியிலே கட்டினார்கள். ஆபிரகாமுக்கோ ஆண்டவர் அஸ்திபாரமுள்ள பரம நகரத்தைக் காட்டினார். பரமசீயோனைக்கண்ட அவன் பூமியிலுள்ள பட்டணத்தைவிட்டுக் கூடாரங்களில் வசிக்கப் புறப்பட்டுவிட்டான். ஆபிரகாமுக்கு அருளப்பட்டதைவிட மேலான வெளிப்படுத்தல்கள் பரம நகரத்தைப்பற்றி ஆண்டவருடைய வேதத்தில் எழுதிவைக்கப்பட்டிருக்கிறது. ஆபிரகாமைப்போல அதைக் காணும் கண்களும், அதை வாஞ்சிக்கும் இருதயமும், அதைப் பற்றிப் பிடித்துக்கொள்ளும் கைகளும் இல்லாததால், தற்காலத்தாருக்கு அந்த வெளிப்படுத்தல் பிரயோஜனப்படவில்லை. எவர்கள் விசுவாசத்தால் ஆண்டவருடைய வெளிப்படுத்தலை நம்புகிறார்களோ அவர்களை அது பரதேசிகளாக்கிவிடும். அவர்கள் விசுவாசமே அவர்களை அந்நியரும் பரதேசிகளுமாக்கக்கூடிய ஒரே காரியம். ஆண்டவருடைய

வெளிப்படுத்தலை நம்பாத ஒருவரும் பூமியிலே அந்நியரும் பரதேசிகளுமாவதேயில்லை. அவர்கள் நிமித்தம் ஆண்டவருக்குப் புதுநாமம் தரிப்பிக்கப்படுவதேயில்லை.

முற்காலத்தாருக்கு இல்லாத பலத்த தடைகள் தற்காலத்தாருக்கு உண்டு. அநேகருடைய அவிசுவாசத்துக்கு இவைகளே காரணம். ஆபிரகாமின் காலத்தைவிட இக்காலத்தில் உலகம் மனிதருக்கு அதிகமான இன்பங்களைக் கொடுக்கக்கூடியதாயிருக்கிறது. எண்ணிறந்த பலமான பட்டணங்கள் கட்டப்பட்டிருப்பதினால் உலகம் அநித்தியமானதென்று நம்புவது வருத்தமாயிருக்கிறது. உலகத்தில் ஏராளமான அதிசய கிரியைகள், சூட்சயந்திரங்கள், விரைவாய் ஓடுகிற வண்டில்கள் ஆகாயக்கப்பல்கள் முதலியவைகள் செய்யப்பட்டுவருகிறபடியால் பூமியே வெகு தீவிரமாய் பரலோகம்போலாகிறபடியால் வேறே ஒரு பரலோகம் அவசியமில்லை என்றும், வேறே ஒரு பரலோகம் இருப்பது நிசமல்ல என்றும் உலகத்தார் எண்ணுகிறார்கள். இவைகளால் உலக மக்கள் மயக்கப்பட்டுப்போவார்களேயல்லாமல், ஆண்டவருடைய மெய்ப் பிள்ளைகள் ஏமாற்றப்படமாட்டார்கள். 'காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்'.

3-வது, பரதேசிகளாயிருந்ததின் பலனென்ன என்று பார்ப்போம். 'தேவன் அவர்களுடைய தேவன் என்னப்பட வெட்கப்படுகிறதில்லை, அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே'. ஆம், ஆண்டவர் வெட்கப்படவேண்டிய அவசியமில்லை. பலரை விருந்துக்கு அழைத்த ஒரு மனிதன் விருந்தை ஆயத்தம்பண்ணாதிருப்பானானால் வெட்கப்பட நேரிடும். இப்பூமியின் பரதேசிகளைப் பரமதேசத்துக்கு அழைத்த ஆண்டவர் ஒரு நகரத்தை அவர்களுக்கு ஆயத்தம்பண்ணாதிருந்தால் அவர் வெட்கப்பட நேரிடும். ஆனால் ஆண்டவர் ஒரு நகரத்தை அவர்களுக்கு ஆயத்தம்பண்ணியிருக்கிறார். ஆதலால் அவர் வெட்கப்படவேண்டியதில்லை. ஆபிரகாம் அஸ்திபாரங்களுள்ள அந்த நகரத்தைக் கண்டான். அவன் காலத்திலிருந்தே அது கட்டப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டுக் காலத்துப் பரதேசிகளுக்கென்று அதைப் புதிதாய்ச் சமர்ப்பிக்க இயேசு ராஜா போயிருக்கிறார். ஆண்டவர் தமது பரதேசிகளைக் கவனித்துக்கொண்டிருக்கிறார். அவர்கள் இம்மையில் படும் பாடுகளுக்கு நூறுமடங்காய்ப் பலனளிக்க அவர் காத்துக்கொண்டிருக்கிறார். அவர் நிமித்தம் வடித்த ஒரு சொட்டுக் கண்ணீர் மறுமையில் ஒரு இரத்தினமாய்க் காணப்படும்; ஒவ்வொரு பெருமூச்சும் ஆனந்த கீதமாய் மாறிவிடும். அவர் நிமித்தம் உன் கால் தள்ளாடினதையும் உன் கை சோர்படைந்ததையும் அவர் அறிவார். அவருடன் அதிகமாய் ஜீவிக்கும்படி உலகத்தை விட்டு நீ பிரிந்ததை அவர் கவனித்திருக்கிறார். அதினிமித்தம் உனக்கென்று அவர் விசேஷித்த வாசஸ்



தலத்தை ஆயத்தம் செய்துகொண்டிருக்கிறார். அதற்குள் உன்னைப் பிரவேசிக்கச்செய்யும் நாளில் அதைக்கண்டு நீ ஆச்சரியத்தால் பிரமை கொள்வாய், உனக்கென்று அதை ஆயத்தம் செய்த அவர் வெட்கப்பட அவசியமிருக்கமாட்டாது. ஆதலால் சகோதரரே, இம்மையில் அந்நியரும் பரதேசிகளுமாய் ஜீவிக்க நாம் வெட்கப்படாதிருப்போமாக.

## 'மனுஷரைப் பிடிக்கிறவர்கள்'.

"என் பின்னே வாருங்கள்; உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" பரி. மத்தேயு 4: 19.

எனக்கு ஊழியஞ்செய்யும்படி என் ஜனங்களைப் போகவிடு என்று ஆண்டவர் பார்வோனைப்பார்த்துச் சொன்னார். எகிப்திலிருந்து மீட்கப்பட்ட இஸ்ரவேலன் ஒவ்வொருவனுடைய நெற்றியிலும், கர்த்தருக்கு ஊழியஞ்செய்யும்படி மீட்கப்பட்டவன் என்ற வாசகம் வரையப்பட்டிருந்ததென்று சொல்லலாம். பாவத்தினின்று ஆண்டவர் மனிதரை இரட்சிக்கும் நோக்கமும் இதுவே. "உங்கள் சத்துருக்களின் கைகளினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் எனக்குமுன்பாகப் பரிசுத்தத்தோடும் நீதியோடும் எனக்கு ஊழியஞ்செய்யக் கட்டளையிடுவேன்" என்று ஆண்டவர் சொல்லுகிறார். ஆதலால் பாவத்தினின்று இரட்சிக்கப்பட்ட யாவரும் தங்கள் ஜீவகாலமெல்லாம் ஆண்டவருக்கு ஊழியஞ்செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆண்டவருக்கென்று தங்களைப்போல மற்ற ஆத்துமாக்களை இரட்சிப்பதே அவர்கள் செய்யவேண்டிய ஒரேவேலை. இந்த ஊழியத்துக்கென்று ஆண்டவர் எல்லாரையும் அழைக்கிறார். எவரையும் இதற்குப் பக்குவப்படுத்துவதாக அவர் வாக்குப்பண்ணுகிறார். அவரை நம்பி இந்த ஊழியத்துக்குத் தன்னை முழுவதும் ஒப்புவிக்கிறவன் பாக்கியவான். அவரை நம்பாமல் இந்த ஊழியத்தை அசட்டை செய்கிறவன் தனக்குத்தானே கெடுதிசெய்கிறான். இம்மையில் இது விளங்காது. மறுமையில் இது மகா தெளிவாயிருக்கும். இம்மையில் இதை அறிந்து தங்கள் ஜீவியத்தை இதற்கே ஒப்புவித்து, தங்கள் காலத்தை ஆதாயம்பண்ணிக்கொள்ள ஆண்டவர் எல்லாருக்கும் போதிப்பாராக.

முதலாவது, இந்த ஊழியத்தின் மேலான இலட்சணங்களைப் பாருங்கள். உலகத்தில் எந்த ஊழியத்துக்கென்றும் ஆட்களைத் தேடுகிறவர்கள் தாங்கள் கொடுக்கும் வேலையின் இலட்சணங்களை யாவருக்கும் தெரிவிப்பார்கள். அதின் மேன்மையைக் காண்பித்து பலரை இழுத்துக்கொள்ளப்பார்ப்பார்கள். அப்படியே இந்த ஊழியத்தின் மேன்மையைச் சற்று சிந்தித்துப் பார்ப்போம்.

1-வது, இது மகா உன்னத ஊழியம். தேவன் தமது குமாரனுக்குக் கொடுத்த ஊழியம் இது. இதைச்செய்யவே தேவகுமாரன் பூமிக்கு வந்தார். "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்". "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்". இந்த வேலையையே கர்த்தராகிய இயேசு இன்னமும் பரலோகத்தில் செய்துகொண்டிருக்கிறார். அவர்தாமே செய்கிற வேலை எல்லாவேலையிலும் மேலான வேலை என்பது நிச்சயம். மேலானவைகளை நாடும்படி கட்டளை பெற்றிருக்கிற கிறிஸ்தவர்கள் மேலான ஊழியத்தை நாடவேண்டியது அவசியமாயிருக்கிறது.

2-வது, இது மகா மேன்மையான ஊழியம். உலகம் மேன்மை என்று எண்ணுவது ஆண்டவருக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது. உலகம் பணத்தையும் அதிகாரத்தையும் மேன்மையாக எண்ணலாம். ஆனால் ஆத்துமாக்களைவிட விலைபெற்ற பொருள் உலகத்தில் இல்லை என்று ஆண்டவர் சொல்லுகிறார். பணத்தை ஆதாயம்பண்ணுகிறவனைவிட ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணுகிறவன்தான் பெரியவன். "ஆத்துமாக்களை ஆகாயப்படுத்திக்கொள்ளுகிறவன் ஞானவான்" என்று வேதம் சொல்லுகிறது. பரலோகத்தில் இவர்களே மகா பெரியவர்களாய் விளங்குவார்கள்.

3-வது, இது மகா அவசியமான ஊழியம். ஆதலால் ஆண்டவர் இதை அறுப்புக்கு ஒப்பிட்டுப் பேசியிருக்கிறார். விளைந்து கிடக்கிற தானியத்தை அறுத்துக் களஞ்சியத்தில் சேர்ப்பது மகா அவசியமான வேலை. அப்படிச் செய்யாவிட்டால், விளைந்த தானியமெல்லாம் அழிந்துபோம். இதுபோலவே, ஆத்துமாக்களை வெகு தீவிரமாய் இரட்சிக்கவேண்டும். தாமதம் செய்வது ஆத்துமாக்களுக்கு மகா பெரிய நஷ்டமாய் முடியும். அவர்களை இரட்சிக்காவிட்டால், அவர்கள் கெட்டுப்போய் நரக பாதாளத்தில் விழுந்து விடுவார்கள். ஆதலால் இயேசுசுவாமி வேலையாட்களுக்காக ஜெபிக்கச்சொன்னார்.

4-வது, இது மகா வருத்தமான ஊழியம். ஆனால் இது மகா திட்டமான வேலை. மீன் பிடிக்கிற வேலைக்கு இயேசுசுவாமி இதை ஒப்பிட்டுப் பேசியிருக்கிறார். மீன் பிடிக்கப்போகிறவன் தூண்டிலை போட்டுக்கொண்டிருப்பது மாத்திரம் போதாது. மீன்களைப் பிடிக்கவும் வேண்டும். இதுபோலவே ஆத்துமாக்களை ஆசாயம்பண்ணுகிற வேலை மனிதரைப் பிடிக்கிற வேலையென்று இயேசுசுவாமி சொல்லுகிறார். முழு மனிதனைக் கொண்டுதான் முழு மனிதனைப் பிடிக்கலாம். மனிதரைப் பிடிக்கப்போகிறவன் தன் சரீரத்தின் முழுப்பெலத்தையும், தன் மனதின் முழுச்சத்துவத்தையும், தன் ஆத்துமாவின் முழு வல்லமையையும் அதற்கென்று உபயோகிக்கவேண்டும். ஆதலால்தான் இது வருத்தமான வேலை. வருத்தத்தி



னிமித்தம் உலகத்தில் மனிதர் பல வருத்தமான வேலைகளைத் தெரிந்துகொள்ளுகிறார்கள். வேலை எவ்வளவுக்கு வருத்தமோ அவ்வளவுக்கு அதிகமாய் அதைச் செய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் கீர்த்தியும் கிடைக்கும்.

5-வது, இது மகா இன்பமான ஊழியம். ஒரு பாவியை கிறிஸ்து இரட்சகரண்டை வழி நடத்துவதைப்போல மகா இன்பமான வேலை வேறே உண்டா? கிறிஸ்துவண்டைபோய் இரட்சிப்பைப் பெருகிற ஆத்துமாவுக்குச் சொல்லிமுடியாததும் மகிமையினால் நிறைந்ததுமான சந்தோஷம் கிடைக்கிறது. நமது மூலமாய் ஒரு ஆத்துமா இவ்வித சந்தோஷத்தை அனுபவிக்கிறது எவ்வளவு அருமையான காரியம். மறுமையில் அவர்களே நமக்கு மகிழ்ச்சியின் கிரீடமாயிருப்பார்களென்று வேதம் சொல்லுகிறது. இந்த மகத்துவ ஊழியத்தைச் செய்ய ஏராளமான பேர் எழும்பாதது எவ்வளவு ஆச்சரியம்!

இரண்டாவது, இந்த ஊழியத்தைச் செய்கிறவர்களுக்கு இருக்க வேண்டிய இலட்சணங்களைப் பாருங்கள். ஊழியர்களுக்கு இருக்க வேண்டிய இலட்சணங்களைக் கவனிக்கும்போது, எனக்கு இந்த இலட்சணங்கள் இல்லையே என்று ஒருவராவது கலைப்பட வேண்டியதில்லை. "உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்ராள் ஆக்குவேன்" என்று இயேசுசுவாமி சொல்லுகிறார். பிறப்பின்படி மனிதரைப் பிடிக்கத் திறமையுள்ளவர்கள் இல்லை, இயேசுசுவாமியால் திறமையுள்ளவர்களாக ஆக்கப்பட்டால் மாத்திரம் எவரும் மனுஷரைப் பிடிக்கிறவர்கள் ஆகலாம். மனுஷரைப் பிடிக்கிறவர்களாக ஆக்குவதாக இயேசு இங்கே தம்மைப் பின்பற்றுகிற யாவருக்கும் வாக்குக் கொடுக்கிறார். இந்தப்படி நாமும் அவரால் தகுதியுள்ளவர்களாக்கப்படும்படி தேடுவோமாக.

1-வது, மனுஷரைப் பிடிக்கப்போகிறவனுக்கு அன்பு வேண்டும். அன்பில்லாமல் மனிதர்செய்கிற கிரியையெல்லாம் செத்ததாகவே இருக்கும். ஆத்துமாக்களை இரட்சிக்கும் ஊழியத்தை அன்பில்லாமல் செய்ய ஒருவராலும் கூடாது. மீன்பிடிக்கிறவனுக்கு மீனைத்தவிர வேறொன்றும் அருமையாய்க் காணப்படமாட்டாது. அதுபோலவே மனுஷரைப் பிடிக்கிறவனுக்கு மனிதர் மகா அருமையாய்க் காணப்படவேண்டும். அவர்கள்பேரில் மிகுந்த அன்பு அவன் உள்ளத்திலிருந்து பொங்கவேண்டும். தேவ ஊழியனில் மனிதர் தேவ அன்பைக் காணவேண்டும். அந்த அன்பு ஒன்றுதான் பாவியை இழுக்கக் கூடும். இது இல்லையானால் வேறொன்றும் பிரயோஜனப்படமாட்டாது.

2-வது, மனுஷரைப் பிடிக்கிறவன் வெகு விழிப்பாயிருக்கவேண்டும். மீன் பிடிக்கிறவன் எவ்வளவோ விழிப்பாயிருப்பான். எப்போது மீன் கடிக்கும் என்பதே அவனுடைய ஒரே கவலையாயிருக்கும். "உங்களை நடத்துகிறவர்கள் உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்திரவாதம்பண்ணுகிறவர்

களாய் விழித்திருக்கிறார்கள்" என்று ஆண்டவர் சொல்லுகிறார் (எபிரே. 13: 17) எப்போதும் ஒன்றுபோல ஆத்துமாக்களுக்காகக் கவலைப்படுகிறவர்கள்தான் விழித்திருக்கிறவர்கள். அவர்களுக்குத்தான் அது சொந்த வேலையாகக் காணப்படும். ஊடேஊடே மாத்திரம் அதைச்செய்யப் பார்க்கிறவர்களை மனிதர் சட்டைபண்ணவே மாட்டார்கள்.

3-வது, மனுஷரைப் பிடிக்கிறவர்களுக்குத் தைரியம் வேண்டும். கடலில் மீன்பிடிக்கப்போகிறவர்களுக்கு மிகுந்த மோசங்கள் உண்டு தைரியமில்லாதவன் அதைச்செய்யமாட்டான். அதுபோலவே ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணுகிறவர்களுக்கும் தைரியம் வேண்டும். பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்களுக்குக்கிடைத்த பெரிய ஆசீர்வாதம் தைரியந்தான். அந்தத் தைரியத்தினாலேதான் அவர்கள் ஆயிரக்கணக்கான பேரை இரட்சித்தார்கள்.

4-வது, மனுஷரைப் பிடிக்கிறவர்களுக்கு மிகுந்த ஞானம் வேண்டும். ஞானமுள்ளவன்தான் ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணிக்கொள்ளுவான் என்று ஞானியாகிய சாலொமோன் சொல்லுகிறான். மீன் பிடிக்கிறவன் ஒவ்வொருவகை மீனுக்கு ஒவ்வொரு வித்தியாசமான முறையைக் கையாடிப் பிடித்துக்கொள்ளுகிறான். மனிதரும் பல வித்தியாசமான நிலைமையும் குணமுமுள்ளவர்களாய் இருக்கிறார்கள். அவரவருக்கு ஏற்றவிதமாய் நடந்துகொண்டு அவர்களை ஆதாயம் பண்ணுவதற்கு எவ்வளவோ ஞானம்வேண்டும்.

5-வது, மனுஷரைப் பிடிக்கிறவர்கள் தங்களை மறந்தவர்களாய் இருக்கவேண்டும். மீன் பிடிக்கத் தூண்டில் போடுகிறவன் மீன்கள் அவனைப்பார்க்கத்தக்கதாக உட்கார்ந்திருப்பானானால், ஒருமீனும் தூண்டிலைக் கடிக்கமாட்டாது. அதுபோலவே மனுஷரைப் பிடிக்கப்போகிறவன் ஆத்துமாக்களுக்குமுன் தன்னை மறைத்து, தன் ஆண்டவரையே காட்டவேண்டும் தன்னை முக்கியப்படுத்திப் பேசுகிறவன் ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணமாட்டான். இயேசுவின் நாமம் ஒன்றுமாத்திரம் ஆத்துமாக்களை இழுக்கக்கூடிய சக்தியுள்ளது. பரிசுத்த பவுலைப்போல இயேசுவின் நாமத்தைச் சுமக்கும் பாத்திரமாயிருக்கிறவன் அநேகரை ஆதாயம் பண்ணுவான் என்பதற்குச் சந்தேகமில்லை.

மூன்றாவது, ஊழியத்துக்குத்வேண்டிய இலட்சணங்கள் எப்படிக் கிடைக்கும் என்று பார்ப்போம். "என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" என்று இயேசுசுவாமி சொல்லுகிறார். நாம் செய்வதையும் அவர் சொல்லுகிறபடியே நாம் செய்யவேண்டியதையும் அவர் சொல்லுகிறார். நாம் அவர்பின்னே போகவேண்டும். அப்போது அவர் நம்மை மனுஷரைப் பிடிக்கிறவர்கள் ஆக்குவார். அவர் பின்னே போகவேண்டும் என்பதின் அர்த்தம் என்ன? இயேசுசுவாமி பூமியில் இருக்கையில், சரீரப்பிரகாரமாய் அவரைப் பின்பற்றலாம். இப்போது ஆவிக்குரிய பிரகாரமாய் அவரைப் பின்பற்ற வேண்டும் இதில் அடங்கிய காரியங்களை சற்று கவனிப்பது நல்லது. "என்பின்னே வாருங்கள்" என்பதின் அர்த்தமென்ன?



1-வது, மனுஷரைப்பிடிக்கிறவன் இயேசுவைப்போல் பூரணபிரதிஷ்டை செய்யவேண்டும். அவர் தமது ஊழியத்தைத் துவக்கினபோது, "இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது" என்று சொன்னார். பூரண பிரதிஷ்டைக்கு அடையாளம் இதுவே. எல்லாப் பாவத்தையும் வெறுத்துவிட்டு, எல்லாக்கற்பனைகளையும் கைக்கொள்வதே பூரண பிரதிஷ்டை. இப்படிப்பட்டவர்களை மனுஷர்களைப்பிடிக்கிறவர்களாக்குவது லேசு. மற்றவர்கள் மனுஷரைப்பிடிக்க உதவவே மாட்டார்கள்.

2-வது, மனுஷரைப் பிடிக்கிறவர்கள் இயேசுவைப்போல் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைத் தேடவேண்டும். மனுஷரைப்பிடிக்கும் ஊழியத்தை ஆரம்பிக்குமுன் இயேசுவானவர் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றார். அவருடைய சீஷர்களும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றபின்புதான் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக்கொள்ளக்கூடியவர்களானார்கள், ஊழியத்துக்கு வேண்டுமென்று காட்டியிருக்கிற அன்பு, தைரியம், விழிப்பு, ஞானம், சுயவெறுப்பு முதலிய யாவும் பரிசுத்த ஆவியானவர் மூலமாய் மாத்திரம் கிடைக்கக்கூடும். ஆதலால் ஊழியத்துக்குப் பக்குவப்படுத்தப்பட விரும்புகிறவர்கள் எல்லாவற்றிற்கும் மேலாக ஆவியானவரின் உன்னத அபிஷேகத்தையே தேடவேண்டும்.

3-வது, மனுஷரைப் பிடிக்கிறவன் இயேசுவைப்போல் குமாரனின் ஆவியை உடையவனாயிருக்கவேண்டும். இயேசுவினிடத்தில் காணப்பட்ட குமாரனின் ஆவி என்ன? பகற்காலம் இருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியையைச் செய்யவேண்டும், ஒருவனும் கிரியைசெய்யக்கூடாத இராக்காலம் வருகிறதென்று அவர் சொன்னார். நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து, அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது என்றும் சொன்னார். இதுவே குமாரனுடைய ஆவி. கூலிக்காரன் இரவு சீக்கிரம் வரவேண்டுமென்று விரும்புவான். குமாரனோ இரவு சீக்கிரம் வரக்கூடாதென்று எண்ணுவான். கூலிக்காரன் வேலை குறைகுறையாயிருப்பதைவிட்டுக் கவலைப்படமாட்டான். குமாரனோ வேலைமுடிய வேண்டுமே, பொழுதுபோகுதே என்று கவலைப்படுவான். சொற்ப ஜீவகாலத்தில் அநேக ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணவேண்டும் என்ற வாஞ்சையுள்ளவர்கள் வெகு எளிதாய் வல்லமையான ஊழியர்களாகிவிடுவார்கள்.

4-வது, மனுஷரைப் பிடிக்கிறவர்கள் இயேசுவைப்போல் ஆண்டவரை நம்பவேண்டும். இயேசுசுவாமி முதலாய்த் தம்மை நம்பவில்லை. தாமாய் ஆத்துமாக்களை இரட்சிக்கக்கூடும் என்றெண்ணவில்லை. தாம் செய்கிற சகல கிரியைகளையும் தமது பரமபிதாவே தமக்குள்ளிருந்து கொண்டு செய்வதாக அவர் சொன்னார். தன்னை நம்பினவனும் தன் சுய பெலத்தைச் சார்ந்தவனும் ஒரு ஆத்துமாவையும் ஆதாயம்பண்ணமாட்டான். அற்பமான ஒரு மனுஷனை ஆதாயம்பண்ணுவதற்கும் முதலாய் ஆண்டவருடைய சகாயத்தைத் தேடி ஊழியஞ்செய்கிறவனே சித்திபெறுவான்.

5-வது, மனுஷரைப்பிடிக்கிறவன் இயேசுவைப்போல் எப்போதும் ஆண்டவரோடு ஜீவிக்கவேண்டும். நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்று இயேசு சொன்னார். பிதாவின் சமுகத்தை அவர் இடைவிடாமல் தேடினார். ஊழியக்காரரெல்லாரும் இந்தப்படி செய்யவேண்டும். நாம் தேவனோடு உடன் ஊழியக்காரராய் இருக்கிறோம். அவர்தான் பிரதான ஊழியக்காரர். எல்லாவற்றையும் செய்கிறவர் அவர்தான். நாம் கருவிகளாய் மாத்திரம் இருக்கிறோம். அவரோடு இடைவிடாமல் நாம் ஜீவிக்காவிட்டால் அவர் நமது மூலமாய் ஆத்துமாக்களை இரட்சிக்கமாட்டார்.

இயேசுவின்பின்னே போவதின் அர்த்தம் இதுதான். அவருடைய ஜீவியமாதிரிப்படி நடப்பதே அவரைப் பின்பற்றுவதாம். மனுஷரைப் பிடிக்கிற இந்த ஊழியத்துக்கு இயேசுசுவாமி நம்மை அழைக்கிறார். அதற்கு அவர் தாமே திட்டமான மாதிரியைக் காண்பித்திருக்கிறார். இந்த ஊழியத்துக்கு நம்மைப் பக்குவப்படுத்துவதாக அவர் திட்டமான வாக்கும் கொடுத்திருக்கிறார். இந்த ஊழியத்தை ஏற்றுக்கொள்வதற்குப் போதுமான தைரியம் இவைகளின் மூலமாய் எவருக்கும் வரலாம். இந்தப்படி இயேசுவின் பின்னேபோய் மனுஷரைப் பிடிக்கிற ஊழியர்களாகிறவர்கள் யாவரும் மகா பாக்கியவான்களாயிருப்பார்கள்.

## பெந்தெகொஸ்தேயின் பரிபூரண ஆசீர்வாதம்.

X

தேவனால் எவ்வளவு பூரணமாய் அது நமக்கு
நிச்சயப்படுத்தப்பட்டிருக்கிறது.

பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்



டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம்
அல்லவா என்றார். லூக்கா. 11: 13.

யவீரு மரணத்தருவாயிலிருந்த தன் மகளுக்காக கர்த்தராகிய இயேசு
வினிடம் வந்து வேண்டிக்கொண்டபின், அவள் மரித்துப்போனதாக வழி
யிலே கேள்விப்பட்டான். அப்போது இயேசு அவனைப்பார்த்து, "பயப்
படாதே: விசுவாசமுள்ளவனாயிரு" என்று சொன்னார். மனிதனால் நிவர்த்
திக்கக் கூடாமலிருந்த இந்த துன்பத்தில் தன்னை நம்பும்படி கர்த்தர் சொல்
லுகிறார். "விசுவாசமுள்ளவனாயிரு" என்பது மாத்திரம் அவனுக்கு உதவி
செய்யக்கூடும். உலகப் பிரகாரமாய் எல்லா நம்பிக்கையும் அற்றுப்போய்,
சித்திபெறுவது கூடாத காரியம்போல் தோன்றுகிற அநேக தடவைகளில்
தேவனுடைய பிள்ளைகளுக்கு இந்த வார்த்தையே பெலத்தைக் கொடுக்கிற
தாயிருக்கிறது. பெந்தெகொஸ்தேயின் பரிபூரண ஆசீர்வாதம் வேண்டு
மென்று தேடி அடைய முயலும்போதும் இந்த வார்த்தை நமக்கு அவசிய
மாயிருக்கிறது. ஆசீர்வாதத்தின் மதிக்கக்கூடாத விலையையும், அதிலிருக்
கும் தெய்வீக தன்மையையும் பார்த்தால் தேவனுடைய வல்லமையே ஒழிய
வேறொன்றும் இதை நமக்குள்ளே நிச்சயப்படுத்தக் கூடாதென்று காண்கி
றோம். தேவனுக்குமுன் அமைதியாயிருப்போம். அப்போது, "பயப்படா
தே; விசுவாசமுள்ளவனாயிரு, தேவன் உனக்காக இதைச் செய்வார்" என்று
சொல்லும் இயேசுவின் சத்தத்தை நாமும் கேட்போம்.

உலக தகப்பன் தன் பிள்ளைகளுக்கு ஆகாரம் கொடுக்க ஆயத்தமாயிருப்
பதை விட தேவன் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப்
பரிசுத்த ஆவியைக் கொடுக்க அதிக ஆவலாயிருக்கிறார் என்று கர்த்தர் சொ
ன்னபோது, அவருடைய பிள்ளைகள் அவர் பேரில் நம்பிக்கையாயிருக்க
வேண்டுமென்பதுதான் அவருடைய நோக்கம். ஒரு தகப்பன் தன் பிள்ளை
யைப் போஷியாவிட்டால் அவன் சரியான தகப்பனல்ல என்று சொல்லு
வோம். அப்படியானால் தேவன் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்
களுக்கு பரிசுத்த ஆவியானவரையும், ஆவியானவருக்குள் வாக்குப்பண்ண
ப்பட்ட சகல ஆசீர்வாதங்களையும் கொடுப்பார் என்பது அதிக நிச்சயமல்ல
வா? நம்முடைய நினைவிலும் பேச்சிலும், நமது ஜெபத்திலும் நம்பிக்கை
யிலும், பரம தகப்பன் தமது பிள்ளைகளுக்கு தம்முடைய நிறைவான சுதந்
தரத்தைக் கொடுப்பார் என்கிற உறுதியான விசுவாசந்தான் நம்முடைய
ஆவிக்குரிய ஜீவியத்தின் அஸ்திபார சத்தியமாயிருக்கவேண்டும்.

தேவன் ஆவியாயிருக்கிறார்; தம்முடைய அளவற்ற அன்பினால் நம்மை
ஆட்கொள்ள விரும்புகிறார். ஆனால் அவர் தம்முடைய ஆவியானவர் மூல
மாய் மாத்திரம் இதைச் செய்யக்கூடுமேயொழிய மற்றவிதமாய்க்கூடாது.
அவர் தேவனாயிருக்கிறது எவ்வளவு நிச்சயமோ, தேவனுடைய பிள்ளையே,
உன்னை ஆவியானவரால் நிரப்புவாரென்பதும் அவ்வளவு நிச்சயம். இந்த

விசுவாசமில்லாமல் இந்த ஆசீர்வாதத்தை நீ அடையமுடியாது. ஒவ்வொரு வருத்தத்திலும் இந்த விசுவாசம் உனக்கு ஜெயத்தைக் கொடுக்கும். ஆகையால் "பயப்படாதே; விசுவாசமுள்ளவனாயிரு". நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்' என்று நான் உனக்குச் சொல்லவில்லையா? என்று சொல்லும் இயேசுவின் சத்தத்துக்குச் செவிகொடு. இப்போது மூன்று முக்கிய சத்தியங்களைக் கவனிப்போம்.

முதலாவது, இந்த ஆசீர்வாதம் உன்னுடைய பத்தியினாலே கிரகித்து விஸ்தரிக்கக் கூடாததாயிருந்தாலும் "விசுவாசமுள்ளவனாயிரு" ஆசீர்வாதத்தைப் பெற எதிர்பார்க்குமுன் அதைப்பற்றின காரியங்களெல்லாவற்றையும் அறிந்துகொள்ளவேண்டுமென்று நினைக்கும் சில தப்பான எண்ணங்களைப்பற்றி முதலாவது கவனிக்கவேண்டும். இப்படிப்பட்ட இரண்டு கேள்விகளை இப்போது பார்ப்போம்.

முதலாவது கேள்வி: இந்த ஆசீர்வாதம் உள்ளேயிருந்து வரவேண்டுமா, அல்லது மேலேயிருந்து வரவேண்டுமா? உள்ளேயிருந்து வரவேண்டும் என்று சில ஊக்கமான கிறிஸ்தவர்கள் உடனே சொல்லுவார்கள். பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் பூமிக்கு இறங்கி கிறிஸ்து சபைக்குக் கொடுக்கப்பட்டார். மனந்திரும்பும் நேரத்தில் நம்மிருதயத்துக்குள் வருகிறார். அவர் நமக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று நாம் இனி ஜெபிக்கவேண்டியதில்லை. அவரைப் பூரண ஆசீர்வாதமாகப் பெற்றிருக்கிறோம். நம்மை அதிகமாய் அவருக்குக் கொடுக்கவேண்டியதுதான் இப்போ அவசியம். அவருக்குப் பூரணமாய் நம்மை ஒப்புக்கொடுக்கும் அளவுக்குத்தக்கதாக அவர் பூரணமாய் நம்மை நிரப்புவார். ஆசீர்வாதம் உள்ளேயிருந்து வரவேண்டும். ஜீவத்தண்ணீர் ஊற்று முன்னமே அங்கிருக்கிறது. ஊற்று திறந்து வைக்கப்பட்டு எல்லாத்தடைகளும் நீக்கப்பட்டால் தண்ணீர் சுரந்து வரும். அது உள்ளேயிருந்து ஊறவேண்டும் என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

ஆனால் இன்னும் பலர் உள்ளேயிருந்தல்ல மேலேயிருந்து வரவேண்டும் என்று சொல்லுவார்கள். பெந்தெகொஸ்தே நாளில் பிதா பரிசுத்த ஆவியானவரைக் கொடுத்தபோது, தம்முடைய கையைவிட்டு முழுவதும் கொடுத்துவிடவில்லை. ஆவியின் பூரண ஆசீர்வாதத்தைக் கொடுப்பது இன்னும் தேவனுடைய கரத்தில்தானிருக்கிறது. தம்முடைய சித்தத்துக்கு விகற்பமாய்க் கிரியை செய்யும்படி தேவன் எதையும் கொடுக்கிறவரல்ல. அவர் ஆவியானவரைக்கொண்டுதான் கிரியை செய்கிறார். பரத்திலிருந்துதான் ஆவியானவரின் அதிகமான வல்லமை கிடைக்கிறது. பெந்தெகொஸ்தே நாளுக்கு வெகு காலத்திற் தப்பின் சமாரியா செசரியா நாடுகளில் பரலோகத்திலிருந்துதான் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். பரிசுத்த ஆவியானவர் பூரணமாகவே இன்னும் பரலோகத்தில் இருக்கிறார். பர-



லோகத்திலிருக்கும் தேவனிடத்திலிருந்துதான் ஆவியின் பரிபூரணத்தை எதிர்பார்க்கவேண்டும் என்று இவர்கள் சொல்லுகிறார்கள்.

கிறிஸ்தவ சகோதரனே, இவ்விரண்டில் எது சரியென்று உன் புத்தியினாலே நீ தீர்மானிக்குமட்டும் காத்திராதே. இவ்விரண்டு விதமாயும் தேவன் மனிதனை ஆசீர்வதிக்கக்கூடும். ஜலப்பிரளயம் வந்தபோது பூமியின் ஊற்றுக்கண்களெல்லாம் திறவுண்டது; வானத்தின் பலகணிகளும் திறவுண்டது. ஒரே நேரத்தில் கீழேயிருந்தும் மேலேயிருந்தும் தண்ணீர் வந்தது. இவ்விரண்டு வகையாயும் தேவன் மனிதனை ஆசீர்வதிக்க ஆயத்தமாயிருக்கிறார்.

நமக்குள்ளேயிருக்கும் ஆவியானவரை நாம் அறியவும் கனப்படுத்தவும் நமக்குப் போதிக்க விரும்புகிறார். ஆவியானவரின் புது ஆசீர்வாதமாகிய நாடோடிய அப்பத்தைத் தகப்பனாக அவர் நமக்குக் கொடுக்கும்படி நாம் கேட்கவும், அவர்பேரில் பூரணமாய்ச் சார்ந்து ஜீவிக்கவும் விரும்புகிறார். இப்படிப்பட்ட ஒரு கேள்வியினாலே நீ கலங்கிப்போகாதபடி உன்னைக் கேட்கிறேன் உன்னுடைய வேண்டுதலை தேவன் அறிவார். உனக்கு என்னவேண்டுமென்று அவருக்குத் தெரியும். தமது ஆவியானவரால் உன்னை நிரப்ப தேவன் ஆயத்தமாயிருக்கிறார் என்று நம்பு. அந்த விசுவாசத்தினால் இடைவிடாத ஜெபத்தோடு அவரை நோக்கிப்பார் அவர் ஆசீர்வாதத்தைத் தருவார்.

இரண்டாவது கேள்வி: இந்த ஆசீர்வாதம் படிப்படியாக வருமா, அல்லது மொத்தமாக வந்துவிடுமா? தேவன் இரண்டு விதமாயும் இந்த ஆசீர்வாதத்தை அனுப்பியிருக்கிறார். இன்னமும் அப்படியே அனுப்புவார். நமது முழு ஜீவியத்தை ஆவியானவரின் நடத்துதலுக்குப் பூராவாய் ஒப்புக்கொடுத்தலும், தேவன் அதை ஏற்றுக்கொண்டார் என்கிற விசுவாசமும்தான் இங்கே நாம் செய்யவேண்டியவைகள். அநேகந்தடவைகளில் இது ஒரே நேரத்தில் நடந்துவிடுகிறது. ஆனால் அதிகக்காலம் ஒரு ஆத்துமா காத்திருந்து ஜெபித்தாலும் அது முழுவதும் தன்னை ஒப்புக்கொடுத்து தன்னுடைய பிரதிஷ்டைப்பலிஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறதென்ற விசுவாசம் இல்லாவிட்டால் ஆசீர்வாதம் கிடையாது. ஆகையால் அந்த ஆசீர்வாதத்தின் அனுபோகம் உடனே வல்லமையோடு வந்தாலும், அல்லது அமைதியாய்ப் படிப்படியாய் வந்தாலும் ஆத்துமா தன்னை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து தம்முடைய வேலையை அவர் செய்வார் என்று எதிர்பார்க்க வேண்டும்.

ஆகவே இப்படிப்பட்ட கேள்விகள் எழும்பும்போது, நாம் விசுவாசிக்கவும், தேவனுடைய உண்மையை நம்பி அமர்ந்திருக்கவும் வேண்டும். தேவன் தமது ஆவியானவரால் நம்மை நிரப்புவதாக வாக்குக் கொடுத்திருக்கிறார். வாக்கை நிறைவேற்றுவது அவருடைய வேலை இந்த வாக்கு நிறை

வேறும்போது நீ எப்படி ஸ்தோத்திரம் செலுத்துவாயோ அப்படியே அந்த வாக்குக்காகவும் ஸ்தோத்திரம் செலுத்து. இந்த வாக்குக் கொடுத்ததினால் தேவன் பிணையாளியாயிருக்கிறார். அவரிலும் அவருடைய உண்மையிலும் களிகூரு. எதினிமித்தமும் பின்வாங்காதே. ஆசீர்வாதத்தை அருளவேண்டிய தேவன்பேரில் உன் விசுவாசத்தை வை. அப்படியானால் நிச்சயமாகவே ஆசீர்வாதத்தைப்பெறுவாய்.

## 'ஜீவத்தண்ணீர்' சந்தாப்பாக்கிகள்

1. 1912-ம் வருஷத்துக்கு சந்தாதார்களிடமிருந்து ரூ 150 இன்னமும் வரவேண்டியதாயிருக்கிறது. பாக்கிதார்களெல்லாருக்கும் கடந்த மாதம் கடிதம் எழுதினோம். அதின்பின்பு நாலைந்துபேரிடமிருந்து மாத்திரம் பணம் வந்தது. பத்திரிகைக்கு மகா சொற்பமான சந்தாப்பணம்தான் வாங்குகிறோம். பத்திரிகையைப் பெற்றுக்கொண்டபின்பு சந்தாப்பணத்தோடு செலவுசெய்த தபால் கூலியையும் நிறுத்திக்கொள்வது மகா பெரிய அநியாயமாயிருக்கிறது. இரண்டுவருஷமாய் சந்தாப்பணமும் தபால் கூலியும் கொடாதவர்களை நீக்கிப்போடுகிறோம். அப்படிநீக்கப்பட்டவர்கள் 200 பேர்போல் உண்டு. அவர்களில் ஒருவராவது பேர் நீக்கப்பட்டபின்பு பாக்கியை அனுப்பவில்லை. இப்படி வருஷா வருஷம் பத்திரிகைக்கு உண்டாகிற நஷ்டம் பெரிதாயிருக்கிறது. இனிமேல் அதிக நஷ்டத்துக்கு இடமில்லாதபடிக்கு ஒரு வருஷ பாக்கிதார்களையுங்கூட நீக்கிவிட்டால்தான் சரிப்படும் என்றெண்ணுகிறோம். வருஷாவருஷம் தவறாமல் சந்தாப்பணத்தை ஒழுங்காய் அனுப்பிவிடுகிற அநேக நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்களை நினைத்து கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறோம். கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பதாக, மற்றவர்களையும் அவர்களைப்போல் ஆக்குவாராக.

Printed at the Church Mission Press, Palamcottah and Published by the Christian Brotherhood Association

September, 1913. Registered No. M—163.

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." (யோவான் 7: 38)

Vol. XIV செப்றெம்பர்மீ 1913

## உயர்த்தப்பட்ட கப்பர்நகூம் தாழ்த்தப்பட்ட பரிதாபம்!

"வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே! நீ பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவாய்" பரி. மத். 11: 23.

கலிலேயாக் கடலின் வடமேற்கில் ஓர் அழகிய சிறு மைதானமுண்டு. பூர்வத்தில் அது கெனேசரேத் நாடென்று அழைக்கப்பட்டது. அது நீளத்தில் நாலு மைலும் அகலத்தில் இரண்டு மைலுமுள்ளது. தோற்றத்தில் அந்நாடு வளர்பிறைக்கொப்பாயிருக்கும். மலையிலிருந்தோடிவரும் இரண்டாறுகளும் இரண்டு நீரூற்றுகளும் அந்நாட்டிலுண்டு. ஆகையால் அது நீர்வளமும் செல்வமும் பொருந்திய தேசமாயிருந்தது. அங்குதான் கோராசீன், பெத்சாயிதா, கப்பர்நகூம் என்னும் பட்டணங்களிருந்தன. நமது இரட்சகர் தமது பலத்த செய்கைகளில் அதிகமானவைகளை இவ்விடத்தில்தான் செய்தார். ஆயினும் அப்பட்டணங்கள் மனந்திரும்பாமற்போனபடியால் அவைகளைக் கடிந்துகொண்டு அவைகளுக்கு விரோதமான தீர்ப்பைக் கூறினார். கொஞ்சக்காலத்திற்குள் அப்பட்டணங்கள் அழிந்துபோயின. இதிலிருந்து தேவ ஆவியின் ஒத்தாசையினால் மூன்று காரியங்களைச் சிந்திப்போம்.

I. கப்பர்நகூமின் உயர்வு. 'வானபரியந்தம உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே' என்று கர்த்தர் சொல்லுகிறாரே. எதினாலே கப்பர்நகூம் உயர்ந்தது? அதற்கருளப்பட்ட சிலாக்கியங்களினாலேயல்லவோ?

(1) உலக இரட்சகர் அங்கே வாசம்பண்ணினார். நாசரேத் அவருடைய சொந்த ஊர். அங்கே அவர் வளர்ந்தார். ஆகிலும் நாசரேத்தூரார்

அவனை ஏற்றுக்கொள்ளாமல் தள்ளிவிட்டபொழுது "கப்பர்நகூமுக்கு வந்து அங்கே வாசம்பண்ணினார்." அவர் கலிலேயாவுக்கு வந்தபோதெல்லாம் கப்பர்நகூமிலேயே தங்கிச் சுற்றிலும் வேலைசெய்துவந்தார். அங்கே அவர் வசிக்க ஒரு வீடும் இருந்தது. ஆகையால் கப்பர்நகூம் அவருடைய பட்டணம் என்று அழைக்கப்பட்டிருக்கிறது. "அவர் தம்முடைய பட்டணத்துக்கு வந்தபோது" என்று மத். 9-ல் வாசிக்கிறோம். கிறிஸ்துவானவர் அவர்கள் மத்தியில் வாசம்பண்ணினது அவர்களுக்குக் கிடைத்த பெரிய சிலாக்கியம்.

(2) அவருடைய அப்போஸ்தலரில் மிகுதியானவர்கள் கலிலேயாவைச்சேர்ந்தவர்கள். அவர்களில் பிரதானமானவர்கள் கப்பர்நகூம் பெத்சாயிதாவிலுள்ளவர்கள். கப்பர்நகூம் ஊரார் இவர்களை அறிவார்கள். இவர்கள் மீன்பிடித்து வியாபாரம் பண்ணுகிறதைக் கண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டுக் கிறிஸ்துவைப் பின்சென்றதும் அவர்களுக்குத் தெரியும். அவர்களறிந்த இந்த அப்போஸ்தலர்களும் கிறிஸ்துவோடுகூட அவருடைய சாட்சிகளாக கப்பர்நகூமில் வாசம்பண்ணினது அப்பட்டணத்தாருக்குக் கிடைத்த பெரிய சிலாக்கியம்.

(3) தம்முடைய பலத்த செய்கைகளில் மிகுதியானவைகளை அங்கே செய்தார். நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன், பேதுருவின் மாமி, அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன், திமிர்வாதக்காரன், பெரும்பாடுள்ள ஸ்திரீ, இருகுருடர், இன்னும் பற்பல அகோரமான வியாதிகளால் வேதனைப்பட்டவர்களை அவர்களுடைய கண்கள் காணக் குணமாக்கினார். மரித்துப்போன யவீரின் மகளை உயிரோடெழுப்பினார். 'நாங்கள் கேள்விப்பட்டபடி கப்பர்நகூமூரில் உன்னால் செய்யப்பட்ட கிரியைகள் எவைகளோ, அவைகளை உன் ஊராகிய இவ்விடத்திலும் செய் என்று நீங்கள் என்னுடன் சொல்லுவீர்கள்' என்ற வார்த்தையால் அவருடைய கிரியைகள் அவ்வளவு பிரபல்யமாயிருந்ததென்று தெரிகிறது. இதுவும் பெரிய சிலாக்கியமல்லவோ?

(4) அநேக உவமைகளினாலே அவர்களோடு பேசினார். விதைக்கிறவனுடைய உவமை, களைகளைப்பற்றிய உவமை, கடுகுவிதையின் உவமை, புளித்தமாவின் உவமை, நிலத்தில் மறைந்திருந்த பொக்கிஷம், முத்து தேடின வியாபாரி, பல மீன்களைப் பிடித்த உவமை, ஆகிய இவ்வுவமைகளைக்கொண்டு தேவனுடைய ராஜ்யத்தின் ரகசியங்களை அவர்களுக்குப் பிரசங்கித்தார். 'என்வாயை உவமைகளினால் திறப்பேன், உலகத்தோற்றமுதல் மறைபொருளானவைகளை வெளிப்படுத்துவேன் என்று தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது' அவ்விடத்தில் நிறைவேறிற்று. இதுவும் அவர்களுக்குக் கிடைத்தபெரிய சிலாக்கியமல்லவா?



(5) அவர் அவர்களுக்காக ஜெபம்பண்ணினார். ஒருநாள் மலையில் தம்மிடத்தில் வந்த திரளான வியாதிக்காரரைக் குணமாக்கினபின்பு, மறுநாள் 'அதிகாலையில் இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப் போய், அங்கே ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்' அந்தப் பட்டணத்திலிருந்த ஜனங்கள்பேரில் மனதுருகி அவர்களுக்காக அவர் ஒருதரமல்ல, பலதரமும் ஜெபித்திருப்பார் என்பதற்குச் சந்தேகமில்லை.

(6) ஆவியானவரின் கிரியையும் அங்கே காணப்பட்டது. ஆவியானவரை அளவில்லாமல் பெற்றுக்கொண்ட இரட்சகர் தங்குமிடத்தில் ஆவியானவர் தங்குவதும் ஆச்சரியமா? மீன்பிடித்தவர்கள் தங்கள் படவுகளைவிட்டு அவரைப் பின்சென்றது யாருடைய செயல்? நூற்றுக்கதிபதியின் புகழத்தக்க விசுவாசமும், பெரும்பாடுள்ள ஸ்திரீயின் பெரிய விசுவாசமும் எங்கேயிருந்து வந்தது? மேற்சொன்ன எல்லாச் சிலாக்கியங்களையும் கவனிக்கும்போது நிச்சயமாகவே கப்பர்நகூம் வானபரியந்தம் உயர்த்தப்பட்டது. ஆம், அது ஒரு சிறு மோட்சம்போலிருந்தது.

நமக்கருளப்பட்ட சிலாக்கியங்களைப் பார்க்கும்போது நாமும் உயர்த்தப்பட்டவர்களல்லவா? உத்தியோகநிமித்தம் அயலிடங்களுக்குப் போனவர்கள், தங்களுக்குக் கோவில்களில்லையென்றும், கோவில்களிருந்தாலும் திருவசனத்தைப் பிரசங்கிக்கத் தகுந்த ஊழியர்களில்லை என்றும் அடிக்கடி நமக்கு எழுதுகிறார்களே. நாம் அப்படிப் புலம்ப அவசரமில்லை. தேவகிருபையால் நம்முடைய நாட்டில் எத்தனையோ சிறந்த ஆலயங்கள் உண்டு. ஆராதனைகள் ஒழுங்காய் நடந்துவருகிறது. தெளிவான போதனைகளை நாம் பெற்றிருக்கிறோம். கிறிஸ்துவின் சமுகம் நமக்குக் கிடைத்திருக்கிறது. நம்மில் அநேகரை அவர் ரட்சித்துத் தமக்குச் சாட்சியாக நமது நடுவில் வைத்திருக்கிறார். உத்தம ஊழியர் கர்த்தர் அருளும் ஈவு. வேதாகமங்கள் விலை உயர்ந்த பொக்கிஷம். ஆவியானவரின் வல்ல செயல்களையும் நாம் கண்டிருக்கிறோம். நோயாளிகளைக் குணமாக்கித் துஷ்டர்களை தேவபக்தர்களாக மாற்றியிருக்கிறார். சொல்லப்போனால் கப்பர்நகூம் பட்டணத்தாரைவிட நாம் அதிகச் சிலாக்கியங்களைப் பெற்றவர்கள் என்பதற்கு ஆட்சேபனையில்லை. இந்த நன்மைகளுக்காக ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்!

II. கப்பர்நகூமூரின் பாவம். கர்த்தர் இவர்களிடத்தில் கண்ட பாவம் என்ன? 'அவர்கள் மனந்திரும்பாமற் போனார்கள்' என்பதே. அவர்கள் மனந்திரும்பாமற் போனபடியினால் அவர்களைக் கடிந்துகொண்டு அவர்களுக்கு கொடும் ஆக்கினையைக் கூறினார். 'மரண இருளின் திசையிலுள்ளவர்களுக்குப் பெரிய வெளிச்சம் உதித்தது' என்ற வாக்கின்படி பாவ அந்தகாரத்திலிருந்த அந்த ஜனங்களுக்குக் கிறிஸ்து பிரகாசிக்கிற ஒளியாகத்

தோன்றினார். சிலர் மாத்திரம் அந்த ஒளியினிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அநேகர் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

(1) இவர்களில் நிர்விசாரிகள் ஒரு வகுப்பார். கிறிஸ்துவினிடக் போய் அவர் செய்த அதிசயங்களைக் கண்டு, அவருடைய உபதேசத்தைக் கேட்ட மற்றவர்கள் இந்த நிர்விசாரிகளுக்கு விவரித்துச் சொன்னபோதிலும், இவர்கள் புறப்பட்டுப் போய் அவரைப் பார்க்க விரும்பவில்லை. எங்களுக்குப் பிரிய நேரமில்லை என்பாரும், வியாபார முயற்சி அதிகம் என்பாரும், கொடுக்கல் வாங்கலில் நாளெல்லாம் போகிறது என்பாரும், இவ்விதமாய் உலகப்பற்றிலும்பொருளின் மயக்கத்திலும், சிற்றின்ப ஆசையிலும் சிக்குண்டு தங்கள் நடுவில் எழுந்தருளியாகித் தங்களை அழைத்த பரம ராஜாவின் திருமுகத்தை அசட்டை செய்துவிட்டார்கள்.

தேவசபையில் தேவன் எழுந்தருளியிருக்கிறார். பக்தர்களின் மத்தியில் திருமைக் கிறிஸ்து மெய்யாகவே பிரசன்னமாகிறார். பூர்வகாலந் தொடங்கி ஸ்திரீ, புருஷர், பிள்ளைகள் ஏகமாய்ச் சபைகூடி தேவனைச் சந்திப்பதும், திருவசனத்தைக் கேட்பதும் தேவ ஏற்பாடாகவேயிருக்கிறது. தேவாராதனைகளையும் ஜெபக்கூட்டங்களையும் அசட்டை செய்கிறவர்கள், மனுஷரையல்ல, தேவனையே அசட்டைசெய்கிறார்கள். யார், யார் தேவ சமுகத்தை வெறுத்து, தேவாராதனைகளை அசட்டை செய்கிறார்களோ, தேவன் அவர்களைக் கலங்கச்செய்வார். அவர்கள் பலப்படுவதில்லை. இதை வாசிக்கும் சகோதரனே! சபைகூடி வருதலை நீ இதுவரை அசட்டைசெய்தவனானால் இனி ஒருபோதும் அப்படிச் செய்யாமல், உன் ஜீவனின் அதிபதியைச் சந்திக்கவும் அவரால் ஆசீர்வதிக்கப்படவும் தேவாராதனைக்கு ஒழுங்காய்ப்போ.

(2) கொஞ்சத்தூரம் அவரைப் பின்பற்றி அப்புறம் பின்வாங்கிப்போனவர்கள் இன்னொரு வகுப்பார். இவர்கள் லோத்தின் மனைவிக்கொப்பானவர்கள். அவள் கொஞ்சத்தூரம் ஜீவன் தப்பும்படி ஓடினபோதிலும் திரும்பிப் பார்த்து மோசம்போனவள். இவர்கள் காரியமும் அப்படித்தான். அவருடைய அற்புதங்களைக்கண்டு அதிசயப்பட்டார்கள். அவர் போனவிடமெல்லாம் கூடவே வழிநடந்தார்கள். புல்லின்மேல் பந்தியிருந்து அற்புதமாய்ப் பெருகின அப்பத்தைத் திருப்தியாய்ப் புசித்தார்கள். கடற்கரையோரம் நின்று அவருடைய உபதேசங்களுக்குச் செவிகொடுத்தார்கள். அவர்களுக்கு ஜீவனுண்டாகும்படி அவர்கள் தம்மோடு ஒன்றாய் ஐக்கியப்படவேண்டுமென்று அவர் போதித்ததை ஏற்றுக்கொள்ள அவர்களுக்கு மனதில்லை. 'நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாமலுமிருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச்



சொல்லுகிறேன்' என்றார். 'இது கடினமான உபதேசம் யார் இதைக் கேட்பார்கள்' என்று சொல்லிக்கொண்டு 'அதுமுதல் அநேகர் அவருடனே கூட நடவாமல் பின்வாங்கிப்போனார்கள்'.

கப்பர்நகூமியரைப்போன்ற கிறிஸ்தவர்கள் நமக்குள்ளுண்டு. பஜனைப்பிரசங்கம், கதாப்பிரசங்கம் முதலிய பொதுவான பிரசங்கங்களில் இவர்களுக்கு வெகு பிரீதி. ஈசல் மொய்த்தாற்போல் மொய்ப்பார்கள். முகமலர்ச்சியோடு கேட்பார்கள். ஆனால் பாவங்களைக் கண்டித்து உணர்த்தும் பிரசங்கங்களோ அவர்களுக்குக் கடினமான உபதேசம். மனந்திரும்பாதிருந்துகொண்டு கிறிஸ்தவர்களாயிருக்கப் பார்க்கிறார்கள். அது ஒருபோதும் கூடாது. ஜீவன் வேண்டுமானால் கிறிஸ்துவைச் சொந்தமாக்கிக்கொள்ளவேண்டும். கிறிஸ்து சொந்தமாகவேண்டுமானால் சொந்தமாயிருந்த பாவம் நீங்கவேண்டும். பாவத்தைவிட்டுத் திரும்புதல் கடினம்தான். கர்த்தர் உதவியால் அது கடினமல்ல. இருமனமுள்ளவர்களே! லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்.

(3) வெகுதூரம் அவரைப் பின்பற்றியும் நன்மையடையாமற்போனவர்கள் இன்னொரு வகுப்பார். அவர்செய்த பிரசங்கத்தில் ஒன்றையாகிலும் இவர்கள் தவறவிட்டவர்களல்ல. அற்புதக்கிரியைகளைக்கண்டு அதிகமாய்ப் புகழ்ந்துகொண்டார்கள். அவரைக் கொஞ்ச நேரம் விட்டுப் பிரியமாட்டார்கள். அவர் படவில் ஏறி அக்கரைக்குப் போய்விட்டார் என்று கண்டால், தொடர்ந்து செல்ல வேறு படவுகள் இல்லாமற்போனாலும், கரையைச்சுற்றியாகிலும் விரைவாய் நடந்து அவரைக் கண்டு களிகூருவார்கள். அப்படியிருந்தும் இவர்கள் நன்மையடையாததற்குக் காரணமென்ன? இவர்கள் கேள்விப்பிரியராயிருந்தார்களே யன்றி செய்கைப் பிரியராயிருந்தார்களில்லை. சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கும் சிந்தை அவர்களிடத்தில் காணோம். மனந்திரும்பாமற் கெட்டுப்போனார்கள்.

தற்காலத்தின் பெரிய குறையும் இதுவே. வேத அறிவு அதிகம். பிரசங்கக் கேள்வி அதிகம். மார்க்க சம்பந்தமாய் எடுத்துக்கொள்ளுகிற முயற்சி அதிகம். கீழ்ப்படிதலோ இல்லை. கீழ்ப்படியாமையின் மக்களிடத்தில் கிரியை செய்கிறவன் பிசாசு. நம்முடைய செய்கைகள் பிசாசின் செய்கையாயிருக்கும்போது நமக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் என்னத்துக்கு? நமக்கு ஆலயங்கள் என்னத்துக்கு? ஆராதனைகள் என்னத்துக்கு? காணிக்கைகள் என்னத்துக்கு? பிரசங்கக்கூட்டங்கள் ஜெபக்கூட்டங்கள் என்னத்துக்கு? பத்திரிகைகள் என்னத்துக்கு? பிசாசு நம்மை ஆண்டுகொண்டு அவன் கிரியைகள் நம்மிடத்தில் காணப்படும்போது மற்றவைகளைக் குறித்து நாம் என் மேன்மை பாராட்டவேண்டும்? அறிவுக்கும் செய்கைக்கும் வித்தியாசம் மிகுதி. அதைக் குறித்து கர்த்தர் என்ன

சொல்லுகிறார்? என்னிடத்தில் வந்து என் வசனத்தைக் கேட்டு அதின்படி செய்தவனைக் கன்மலையின்மேல் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். என்னிடத்தில் வந்து என் வசனத்தைக்கேட்டு அதின்படி செய்யாதவனை மணலின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடுவேன். ஆபத்து வந்தபோது ஒரு வீடு நின்றது, மற்றதோ விழுந்து முழுவதும் அழிந்தது என்றார். இதில் ஆண்டவரிடத்தில் வந்ததில் இருவருக்கும் வித்தியாசமில்லை. வசனத்தைக் கேட்டு அறிந்துகொண்டதில் இருவருக்கும் வித்தியாசமில்லை. ஆனால் ஒருவன் அறிந்தபடி செய்தான். மற்றவனோ அப்படிச் செய்யவில்லை. தேவபயமற்று, திருவசனத்துக்குக் கீழ்ப்படியாதிருந்துகொண்டு, வேத அறிவைக் குறித்தும் மற்றச் சிலாக்கியங்களைக் குறித்தும் மேன்மை பாராட்டுகிறவர்களே, நிச்சயமாகவே நீங்கள் நம்பியிருக்கிற நம்பிக்கை விழுந்து, முழுவதும் அழிந்துபோகும் காலம் வருகிறது.

III. கப்பர்நகூமின் தண்டனை. ‘நீ பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவாய். நியாயத்தீர்ப்பு நாளிலே உனக்கு நேரிடுவதைப்பார்க்கிலும் சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும்’ என்றார்.

சிலாக்கியங்களின் அளவுக்குத் தக்கதாகத் தண்டனையுமிருக்கும். சிலாக்கியங்களை நன்குமதிக்கும்போது ஆசீர்வாதம் மிகுதி. அவைகளை அசட்டைபண்ணும்போது ஆக்கினையும் மிகுதி. ‘எவனிடத்தில் அதிகம் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகம் கேட்கப்படும்’. உயர்த்தப்பட்ட கப்பர்நகூம் தாழ்த்தப்படும். வானபரியந்தம் உயர்த்தப்பட்டபடியால் பாதாளபரியந்தம் தாழ்த்தப்படும். ஒருவன் எவ்வளவுக்கு உயரத்திலிருந்து விழுகிறானோ அவ்வளவுக்குச் சின்னாபின்னமாய்ப் போவான். உன்னதத்திலிருந்த தூதன் பாவம் செய்தபோது பாதாளத்துக்குரிய இருண்ட பிசாசானான். ‘தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும். முள் செடிகளையும் முட்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும் சபிக்கப்படுகிறதற்கேற்றதாயுமிருக்கிறது; சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு.’ எபி. 6: 7, 8.

‘உனக்கு நேரிடுவதைப்பார்க்கிலும் சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும்’ என்றார். விசுவாசிகள் யாவரும் மோட்சத்திற்குரியவர்களானாலும் அனுபவ அளவில் வித்தியாசமுண்டு. தண்ணீர் நிறைந்த அநேக பாத்திரங்களிருக்கிறது. எல்லாம் நிறைவாயிருந்தாலும் பாத்திரங்களின் அளவுக்குத்தக்கபடி சிலவற்றில் கொஞ்சமாகவும் மற்றவைகளில் அதிகமாகவும் இருக்கும். கள்ளனும் பவுலும் குணப்பட்டவர்கள்தான். மோட்ச பேரின்பத்தை இருவரும் அனுபவிப்பார்கள். ஆயினும் மகிமையில் இருவருக்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கும். அப்படியே நரக



வேதனையிலும் வித்தியாசமுண்டு. சோதோம் நாட்டாருக்கிருக்கும் வேதனையைவிட கப்பர்நகூம் பட்டணத்தாருக்கு வேதனை அதிகமாயிருக்கும். ‘எஜமானுடைய சித்தத்தை அறிந்தும் அதின்படி செய்யாதவர்கள் அநேக அடிகளால் அடிக்கப்படுவார்கள்.’

தங்களுக்கு அருளப்பட்ட சலாக்கியங்களுக்கு ஏற்றபடி நடந்துகொள்ளாதவர்களின் முடிவு மிகவும் பயங்கரம். தேவனிடத்தில் பட்சபாதமில்லை. நியாயத்தீர்ப்புவரை நாம் காத்திருக்கவேண்டியதில்லை. இப்பொழுதே ஆக்கினை வரக்கூடும். கர்த்தரால் விசேஷித்த தயவுபெற்ற ஜனம் அவருடைய நாமத்தை உலகத்தாருக்கு முன் நிந்தைக்குள்ளாக்கும்போது, அவருடைய கோபம் தப்பாமல் அவர்கள்மேல் வரும். இயேசுவானவர் தம்மை ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு ரட்சிப்பாயிருக்கிறார்; அசட்டைக்காரருக்கு ஆக்கினையாயிருக்கிறார். அவருடைய ரத்தம் விசுவாசிகளுக்குப் பெரிய ஆசீர்வாதம்; அவிசுவாசிகளுக்குப் பெரிய சாபம். அவருடைய வசனம் கீழ்ப்படிகிறவர்களுக்கு நித்திய ஜீவன்; கீழ்ப்படியாதவர்களுக்கு நித்திய மரணம். அவருடைய ஆவி ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்குத் தேற்றரவாளர்; எதிர்த்து நிற்கிறவர்களுக்குக் கொடிய சத்துரு. அவருடைய ஊழியர் ரட்சிப்பை விரும்புவோருக்கு ஜீவ வாசனை; கெட்டுப்போகிறவர்களுக்கு மரண வாசனை. ஆ! சகோதரரே, ‘உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்’ ‘நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்’.

S. பரமானந்தம்.

## பெந்தெகொஸ்தேயின் பரிபூரண ஆசீர்வாதம்.

### X.

### தேவனால் எவ்வளவு பூரணமாய் அது நமக்கு நிச்சயப்படுத்தப்பட்டிருக்கிறது.

(தொடர்ச்சி).

இரண்டாவது, மற்றவர்கள் உனக்கு உதவிசெய்யாமற் போனாலும், மற்றவர்கள் உனக்கு எதிர்த்து நின்றாலும் விசுவாசமுள்ளவனாயிரு. சபையில் அநேகர் தாங்கள் இருக்கிற நிலைமையில் திருப்தியாயிருந்து இந்த ஆசீர்வாதத்தைப் பெறக் கொஞ்சமும் ஆவல் இல்லாதவர்களாயிருக்கிறார்களென்பது துக்கமான காரியமே. அவர்கள் மார்க்க விஷயமான பரிசுத்தத்தையும், போதிக்கிறவர்களின் ஊக்கத்தையும், மார்க்க விஷயமாயும் தர்ம விஷயமாயும் செய்யப்படும் வேலைக்காகக் கொடுக்கப்படும் உதாரத்துவமான நன்கொடைகளையும், படிப்புக்காகவும் மிஷன் ஊழியத்திற்காகவும் எடுக்கப்

படும் சிறந்தை இவற்றை எடுத்துக்காட்டி இப்படிப்பட்ட நன்மையான காரியங்களுக்காக நாம் தேவனைத் துதிக்கவேண்டும் என்று சொல்லுவார்கள். இப்படிப்பட்டவர்கள் லவோதிக்கேயா சபையாரைப்போல் 'நான் ஐசுவரியவானென்றும், திரவிய சம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும்' சொல்லமாட்டார்கள். ஆனால் அவர்கள் சொல்வதில் லவோதிக்கேயா சபையின் ஆவி கொஞ்சம் இருக்கிறதென்று சொல்லலாம். ஆவியானவரால் நிரப்பப்படவேண்டுமென்பதை அவர்கள் உணருகிறதில்லை. 'ஆவியே நீ காற்றுத்திசை நான்கிலுமிருந்துவந்து, கொலையுண்ட இவர்கள் உயிரடையும்படிக்கு இவர்கள்மேல் ஊது' என்று ஆவியை நோக்கித் தீர்க்கதரிசனம் உரைக்கும்படி கொடுக்கப்பட்ட கட்டளையை மறந்துவிடுகிறார்கள். இவைகளைப்பற்றி நீ அவர்களோடே பேசும்போது ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். நீ சொல்லுகிறது அவர்களுக்கு விளங்காது. பரிசுத்த ஆவியானவரை அவர்கள் விசுவாசிப்பார்கள். ஆனால் ஆவியின் பரிபூரண ஆசீர்வாதந்தான் சபைக்குத் தேவையான ஒரே ஆசீர்வாதம் என்பதை அறியாமற் போகிறார்கள்.

இன்னும் சிலர் நீ பேசும்போது எல்லாம் சரியென்று ஒப்புக்கொள்ளுவார்கள். ஆனால் அவர்களுக்கு அது சரியானபடி விளங்கமாட்டாது. இதைப்பற்றி அடிக்கடி யோசித்து ஜெபித்திருந்தாலும் அவர்கள் யாதொரு பலனையும் அடைந்திருப்பதில்லை. பழையகாலத்துச் சபையும் இதே நிலைமையில் தானிருந்ததென்று அவர்கள் சொல்லுவார்கள். சபையின் தரித்திரத்தையும் பெலவீனத்தையும்பற்றி நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான்; தேவனுடைய வாக்கைக்குறித்து நீங்கள் போதிக்கிறதெல்லாம் வெகு மாட்சிமை பொருந்தியதாயிருக்கிறது. ஆவியானவரின் வல்லமையான கிரியையினால் நடக்கக்கூடும் என்று நீங்கள் எதிர்பார்க்கும் காரியங்களெல்லாம் விரும்பப்படத்தக்கதுதான். ஆனால் இது பெற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் கானான்தேசத்தை வேவுபார்க்கப்போன பத்துப்பேரைப் போன்றவர்கள். தேசம் மாட்சிமையான தேசம். ஆனால் அதிலிருக்கும் சத்துரு அதிக பலமுள்ளவன். நாங்களோ ஜெயிக்கக்கூடாதபடி அதிக பெலவீனராயிருக்கிறோம் என்று சொல்வதுபோலிருக்கிறது. பூரணமாய்ப் படைத்தலிலும் இந்த ஆசீர்வாதத்திற்காக எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தலிலும் காணப்படும் குறைவுதான் அவிசுவாசத்திற்குக் காரணமாயிருக்கிறது. இதுதான், 'நாம் உடனே போய் அதைச் சுதந்தரித்துக்கொள்ளுவோம்; 'நாம் அதை எளிதாய் ஜெயித்துக்கொள்ளலாம்' என்று சொன்ன காலேப்புக்கு இருந்த தைரியம் அவர்களுக்கிராதபடி தடுத்துப்போடுகிறது.

சகோதரனே, நீ ஆவியினால் நிரப்பப்படவேண்டுமானால் இப்படிப்பட்ட தர்க்கங்களினாலே பின்வாங்கிப் போகாதே. விசுவாசமுள்ளவனா



யிருந்து தேவனுடைய சர்வ வல்லமையிலே சார்ந்திரு. தேவனால் கூடுமா என்று கேளாமல் தேவனால் கூடும் என்று சொல். கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பக்கூடியவராயிருந்த தேவன் இப்போதும் தமது ஜனங்களின் நடுவிலிருக்கிறார். தமது தெய்வீக ஜீவனை உன் இருதயத்தில் வல்லமையோடு வெளிப்படுத்தக்கூடியவராயிருக்கிறார். 'நான் சர்வ வல்லமையுள்ள தேவன்; நீ எனக்கு முன்பாக நடந்துகொண்டு உத்தமனாயிரு' என்று ஆபிரகாமுக்குச் சொல்லப்பட்டது உனக்குச் சொல்லப்பட்டதாக எடுத்துக்கொள். தேவன் செய்வதாக வாக்குக் கொடுத்திருக்கிறவைகளை உன் இருதயத்தில் சரியானபடி உணர்ந்து அவைகளை நிறைவேற்றக்கூடிய அவருடைய வல்லமையை நம்பு. தம்முடைய ஆவியினாலே உன்னைப் பெலப்படுத்தும்படி பிதாவானவரிடம் வேண்டிக்கொள். நாம் நினைக்கிறதற்கும் கேட்கிறதற்கும் அதிகமாகக் கொடுக்க வல்லமையுள்ளவராகிய அவரைப் பணிந்துகொண்டு அவருக்கு மகிமையைச்செலுத்து. தேவனுடைய சர்வவல்லமையில் சார்ந்திருக்கும் விசுவாசம் உன் ஆத்துமாவை நிரப்பினால், எவ்வளவு கஷ்டமாயும் நடக்கக்கூடாததாயும் தோன்றினாலும் தேவன் தமது ஆவியினாலே உன்னை நிரப்பக்கூடும் என்கிற நிச்சயமுள்ளவனாயிருப்பாய். 'விசுவாசமுள்ளவனாயிரு'.

மூன்றாவது, உன்னிலுள்ளவைகளெல்லாம் இந்த ஆசீர்வாதத்திற்குத் தகுதியற்றவைகளாகவும் பாத்திரமற்றவைகளாகவும் காணப்பட்டாலும் 'விசுவாசமுள்ளவனாயிரு'. ஒரு மனிதன் ஆவியினால் நிரப்பப்படும் இவ்வாசீர்வாதத்திற்காக ஜெபிக்கும்போது அவனுடைய முன்னான கிறிஸ்தவ ஜீவியத்தைப்பற்றிய எண்ணம் அவன் மனதில் உண்டாகும். தேவகிருபை தன் இருதயத்தில் நடப்பித்திருக்கும் காரியங்களையும், ஆவியானவருடைய இடைவிடாப் போராட்டத்தையும் விசுவாசி நினைக்கிறான். அவன் தன்னுடைய முயற்சிகளையும் வேண்டுதல்களையும் பூரணமாய் ஒப்புக்கொடுக்கக் கடந்தகாலத்தில் தான் எடுத்திருக்கும் பிரயாசங்களையும், தான் விசுவாசத்தைப் பிரயோகித்ததையும்பற்றி யோசிக்கிறான். அப்புறம் தான் அந்த நிமிஷத்திலிருக்கும் நிலைமையையும், தன்னுடைய அவிசுவாசம், பாவம், பெலவீனம் இவைகளையும் பார்த்து மனம் தளர்ந்து போகிறான் இவ்வளவு வருஷங்களில் எவ்வளவு கொஞ்சத் தேற்சி காணப்பட்டிருக்கிறது. கடந்த காலத்தில் எல்லாம் அபஜெயமும் உண்மையற்ற ஜீவியமுமாய்த் தானிருந்திருக்கிறது. இனிவருங்காலத்தில் நன்றாய் ஜீவிக்கலாம் என்று எதிர்பார்க்கிறதில் பிரயோஜனமென்ன? அவனுடைய எல்லா ஜெபங்களும் விசுவாசமும் இவ்வளவு கொஞ்சத் தேற்சியை மாத்திரம் உண்டாக்கியிருக்குமானால் இப்போ உடனே எல்லாம் மாறிவிடும் என்று அவன் எப்படி எதிர்பார்க்கலாம்? பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட ஒரு மனிதனின் ஜீவியத்தின் பக்கத்தில் தான் அறிந்திருக்கிறபிரகாரம் தன்னுடைய ஜீவியத்தை வைத்துப்

பார்க்கிறான். அப்போது ஆவியினால் நிரப்பப்பட்ட மனிதனைப்போல் தான் எப்போதாவது ஜீவிக்கக்கூடுமோ என்று எண்ணுகிறான். இதற்குத் தன்னைத் தகுதியற்றவனாக எண்ணி அதற்காகப் பிரயாசப்பட தைரியம் இல்லாமல் போகிறான்.

கிறிஸ்தவனே, இப்படிப்பட்ட எண்ணங்கள் உன்னை வருத்தப்படுத்தும்போது நீ செய்யவேண்டியது ஒன்றுதான். அதாவது விசுவாசமுள்ளவனாயிரு. உலகத் தகப்பன் தன் பிள்ளைகளுக்கு ஆகாரம் கொடுப்பதைவிட அதிக ஆத்திரமாய்த் தம்முடைய பிள்ளைகளுக்கு பரிசுத்த ஆவியைக் கொடுக்கிற பிதாவின் கரங்களில் உன்னை ஒப்புவி. விசுவாசமுள்ளவனாயிருந்து தேவ அன்பிலே நம்பிக்கை கொண்டிரு. உன்னுடைய படைப்பும் ஒப்புக்கொடுத்தலும் உன்னுடைய விசுவாசமும் பக்தியும் உன்னை ஆசீர்வதிக்கும்படி தேவனுடைய பிரியத்தை எழுப்பமாட்டாது. உன்னை ஆசீர்வதிக்க அவர் தன்னிலே அதிக விருப்பமுள்ளவராயிருக்கிறார். உன்னில் அவரே எல்லாக் கிரியைகளையும் செய்வார். தேவன் ஒரு தகப்பனைப்போல உன்னை நேசிக்கிறார். அவருடைய பிள்ளையாக நீ பூரண சுகத்தையும் சந்தோஷத்தையும் அனுபவிக்க வேண்டுமானால் உனக்கு வேண்டிய ஒரே காரியம் ஆவியினால் நிறைந்திருப்பதுதான். இந்த அன்பிலே களிகூரும்படியாக வழியை இயேசு தமது இரத்தத்தினாலே திறந்து வைத்திருக்கிறார். இந்த அன்பிற்குள் நீ பிரவேசித்து, அதிலே நிலைத்திருந்து, சூரிய வெளிச்சம் உன்னைப் பிரகாசிப்பித்து உன்னை உற்சாகப்படுத்துகிறதுபோல அது உன்னிலும் உன்னைச்சுற்றிலும் பிரகாசிக்கிறதென்பதை விசுவாசத்தினாலே நீ உணரவேண்டும். இந்த அன்பிலே நம்பிக்கைகொள். இந்த அன்பின் பிரியத்திலல்ல, உன்னை நிரப்பவேண்டுமென்று அது கொண்டிருக்கிற சொல்லிமுடியாத வாஞ்சையிலே நம்பிக்கை வைத்திரு. உன்னை ஆவியினாலே நிரப்ப உன் தகப்பன் அன்போடு காத்துக்கொண்டிருக்கிறார். அவரே உன்னை நிரப்புவார்.

உன்னிடத்திலிருந்து அவர் எதிர் பார்க்கிறதென்ன? உன்னுடைய அபாத்திர நிலைமையிலும் ஒன்றுமில்லாமையிலும் உன்னை அவருக்கு ஒப்புக்கொடுத்து, இந்த வேலையை அவர் உன்னில் செய்யும்படி விட்டுவிடுவதுதான். ஆயத்தமாக உன்னில் நடப்பிக்கவேண்டியவைகளையெல்லாம் செய்ய ஆவலாயிருக்கிறார். தமது ஆவியானவர் மூலமாய் உனக்கு உதவி செய்வார் என்று நீ நிச்சயஞ் சொல்லலாம். விட்டுவிடவேண்டியவைகளை விட்டுவிடவும் இந்தபொக்கிஷத்தைப் பெற்றுக்கொள்ளவும் தக்கதாக அமைதியாகவும் இரகசியமாகவும் உள்ளான மனிதனில் நிச்சயமாகவே உன்னைப் பலப்படுத்துவார். அவருடைய வார்த்தையில் அமர்ந்திருந்து அவருக்குக் காத்திருக்கத்தக்கதான விசுவாசத்தை உனக்குக்கொடுப்பார். வருங்காலத்துக்குரிய காரியங்களையெல்லாம் அவரே பார்த்துக்கொள்ளுவார். இந்த



ஆவியின் பூரண ஆசீர்வாதத்தைப் பெற்ற நிலைமையில் நீ நிலைத்திருக்கத் தக்கதாக அவர் உனக்கு உதவி செய்வார்.

தேவ ஆவியால் நிரப்பப்பட்ட ஒரு மனிதன் ஜீவிக்கவேண்டிய விதத்தைப்பற்றி நீ உன் மனதில் பெரிய எண்ணம் கொண்டிருக்கலாம். நீ அந்த விதமாய் ஜீவிக்கக்கூடாதென்று எண்ணுகிறாய் அல்லது, அதைப்பற்றியே ஒன்றும் நீ அறியாமலிருக்கிறதினால் இப்படி ஒன்றும் தெரியாத ஜீவியம் செய்ய எப்படிப் பிரயாசப்படுகிறதென்று எண்ணலாம். கிறிஸ்தவனே, இப்படிப்பட்ட எண்ணங்களையெல்லாம் விட்டுவிடு. ஆவியானவர் உன்னிலிருந்தால் அவர்மாத்திரந்தான் அது எப்படிப்பட்ட ஜீவியம் என்று உனக்குப்போதிக்கக்கூடும், ஏனென்றால் அவரே அந்த ஜீவியத்தை உன்னில் உண்டாக்குகிறவர். உன்னை ஆவியினால் நிரப்புகிற பொறுப்பை தேவன் தம்பேரில் எடுத்துக்கொள்ளுகிறார். நீபத்திரமாய் வைத்துக் கொள்ளத்தக்க பொக்கிஷமாக அவரை உனக்குக் கொடாமல், உன்னைக் காத்து நடத்தும் வல்லமையாக அவரை உனக்குக் கொடுக்கிறார். ஆகையால், ஆத்துமாவே விசுவாசமுள்ளதாயிரு. அன்பில் நம்பிக்கை கொண்டிரு.

ஆவியானவரின் ஆசீர்வாதத்தையும் வல்லமையையும்பற்றி கர்த்தராகிய இயேசு வாக்குக்கொடுக்கும்போது பிதாவாகிய தேவனைக்காட்டிப் பேசுகிறார். "பிதாவின் வாக்குத்தத்தம்" என்றும் அதை அழைக்கிறார் (லூக். 24: 49). "வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்" என்று காட்டுகிறார் (எபி. 10: 23). ஆவியானவர் தேவனிடத்திலிருந்து வந்த வல்லமையென்று போதித்ததில் தேவனுடைய வல்லமையைக்காட்டுகிறார் (அப். 1: 8). தகப்பனைப்போல தேவன் தமது பிள்ளைகளுக்கு இந்த ஆசீர்வாதத்தைக் கொடுப்பாரென்று சொன்னபோது, தேவனுடைய அன்பை நமக்குக் காட்டுகிறார். இந்த ஆசீர்வாதத்தின் எண்ணமும், அதை அடையவேண்டுமென்ற வாஞ்சையும் தேவனிடத்திற்கு நம்மை வழிநடத்தட்டும். இது அவர் கொடுக்கவேண்டிய ஒரு ஈவும் அவர் மாத்திரம் செய்யக்கூடிய கிரியையுமாயிருக்கிறது. அமைதியான வணக்கத்துடனே நாம் தேவன்பேரில் சார்வோமாக. அப்போது அவர் செய்யவேண்டியதைச் செய்வார். மகிழ்ச்சியோடே அவரை நம்பக்கடவோம், அப்போது நாம் நினைக்கிறதற்கும் ஜெபிக்கிறதற்கும் அதிகமாய் அவர் செய்யக்கூடும். அவர் அதிக அன்புள்ளவரானதால் பூரண ஆசீர்வாதத்தைச் சந்தோஷமாய் நமக்குக் கொடுப்பார். ஆகையால் "விசுவாசமுள்ளவனாயிரு" தேவன் உன்னை ஆவியினால் நிரப்புவார். "இதோ நான் ஆண்டவருக்கு அடிமை. உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது. உமது பார்வைக்கு நலமானபடி எனக்குச் செய்வீராக" என்று தாழ்மையோடு சொல். "உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவர். அவரே அதைச் செய்வார்."

# வேதாகம ஆராய்ச்சி.

இந்த மாசமுதல் ஒழுங்காக கர்த்தருடைய வேதாகமத்தை யாவரும் படிக்கத்தக்கதான ஓர் முறையைப் பிரசுரிக்க விரும்புகிறோம். இந்த முறை கடந்த வருஷம் அக்ற்றோபர் மாத முதல் வாரந்தோறும் (Life of Faith) "விசுவாச ஜீவியம்" என்ற சீர்மைப் பத்திரிகையில் கனம் ஜோசப் W. கெம்ப் ஐயரவர்களால் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. இதைத் தமிழில் மொழிபெயர்த்துப் பிரசுரிக்கும்படியாக உத்தரவு கிடைத்திருக்கிறது. கர்த்தருடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து பேதைகளை ஞானிகளாக்கும் என்கிற நம்பிக்கையோடு இதைப் பிரசுரிக்கிறோம். இந்த முறையை நன்குமதிக்கிறவர்கள் அதை வாசிக்கிறதோடு அந்தந்த முறையில் வரும் சங்கதிகளைப் படிக்கும்படியாகவும் கேட்கிறோம். தேவாவியானவர் தாமே உங்களோடிருந்து இந்த முறையை அவரவர் ஆவிக்குரிய ஜீவிய வளர்ச்சிக்கனுகூலமாக உபயோகிப்பாராக.

## கனம் யோசேப்பு W. கெம்ப் ஐயரவர்களால் நடத்தப்படும் நமது வேதாகமப் பாடமுறை.

**வேத முழுவதிலும் 66 ஆகமங்கள் உண்டு. 36 ஆசிரியர்கள் அவைகளை எழுதியிருக்கிறார்கள். 1600 வருஷ சரித்திரம் அடங்கியிருக்கிறது.**

1. பாடம்.

### பழைய ஏற்பாடு. 39 ஆகமங்கள்.

**பஞ்சாகமம் (5).**
1. ஆதியாகமம்.
2. யாத்திராகமம்.
3. லேவியராகமம்.
4. எண்ணாகமம்.
5. உபாகமம்.

**சரித்திராகமம் (12).**
1. யோசுவா.
2. நியாயாதிபதிகள்.
3. ரூத்.
4. I சாமுவேல்
5. II சாமுவேல்
6. I ராஜாக்கள்
7. II ராஜாக்கள்
8. I நாளாகமம்
9. II நாளாகமம்
10. எஸ்றா
11. நெகேமியா
12. எஸ்தர்

**பாட்டாகமம் (5).**
1. யோபு.
2. சங்கீதம்
3. நீதிமொழி.
4. பிரசங்கி.
5. உன்னதப்பாட்டு

**தீர்க்கதரிசனாகமம் (17).**

**பெரியது (5).**
1. ஏசாயா
2. எரேமியா
3. புலம்பல்
4. எசேக்கியேல்
5. தானியேல்

**சின்னது (12).**
1. ஓசியா.
2. யோவேல்
3. ஆமோஸ்
4. ஒபதியா
5. யோனா
6. மீகா
7. நாகூம்
8. ஆபகூக்
9. செப்பனியா
10. ஆகாய்
11. சகரியா
12. மல்கியா

## புதிய ஏற்பாடு. 27 ஆகமங்கள்.

| சரித்திரம். | நிருபம். | தீர்க்கதரிசனம். |
| --- | --- | --- |
| 1. மத்தேயு | 6. ரோமர் | 27. வெளிப்படுத்தல் |
| 2. மாற்கு | 7. i கொரிந்தியர் | |
| 3. லூக்கா | 8. ii கொரிந்தியர் | |
| 4. யோவான் | 9. கலாத்தியர் | |
| 5. அப்போஸ்தலர் | 10. எபேசியர் | |
| | 11. பிலிப்பியர் | |
| | 12. கொலோசேயர் | |
| | 13. i தெசலோனி. | |
| | 14. ii தெசலோனி. | |
| | 15. i தீமோத்தேயு | |
| | 16. ii தீமோத்தேயு | |
| | 17. தீத்து | |
| | 18. பிலேமோன் | |
| | 19. எபிரேயர் | |
| | 20. யாக்கோபு | |
| | 21. i பேதுரு | |
| | 22. ii பேதுரு | |
| | 23. i யோவான் | |
| | 24. ii யோவான் | |
| | 25. iii யோவான் | |
| | 26. யூதா | |

## அதிகாரம் 1. வேதாகமம். அதற்கிடப்பட்டபேர்களும், நாமங்களும்.

### I வேதாகமம்.

தேவ வசனத்திற்குச் சாதாரணமாய் வழங்குகிற பேர் வேதாகமம். இங்கிலீஷில் "பைபிள்" (Bible). இது "ஆகமங்கள்" அல்லது "புஸ்தகங்கள் என்றர்த்தம் கொள்ளும் "Ta Biblia" என்னும் கிரேக்க பதத்திலிருந்து வருகிறது. கிரேக்குப் பாஷையில் பன்மையில் வழங்குகிற இப்பேர் நமது பாஷயில் ஒருமையில் வழங்குகிறது. ஒருமைப் பேருக்கொப்ப அது இருவித கருத்துக்கொள்ளும் (a) இப்புஸ்தகத்தில் 66 ஆகமங்களிருக்கிறபடியால் இது பல புஸ்தகங்களடங்கிய ஓர் புஸ்தகசாலை யென்னலாம். (b) மற்றெல்லாப் புஸ்தகங்களிலும் விசேஷிர்ச்சதானதால் அதைப் "புஸ்தகம்" என்றழைப்பது சரியே. சங். 40: 7லும், எபி. 10: 7லும் "புஸ்தகச்சுருள்" என்ற ஒருமைப்பதமே வழங்கியிருக்கிறது. மற்றெல்லாப் புஸ்தகங்களுக்கும் இது மேலானது, சிறந்தது. சங். 40: 7ன் பேரில் லுத்தர் வியாக்கியானம் எழுதும்போது "உலகத்தில் ஒரே புஸ்தகம் மாத்திரமுண்டு. அது வேதாகமமே. ஒரே ஒரு ஆள்மாத்திரம் உண்டு அவர் கிறிஸ்துவே" சர் உவால்ற்றர் ஸ்காட் என்னும் ஆசிரியர் தமது கடைசி வியாதிப்படுக்கையிலிருக்கும்போது தமது மருமகனைப்பார்த்து "தயவுசெய்து புஸ்தகத்திலுள்ளவற்றில் சிலதை எனக்கு வாசித்துக்காட்டும்" என்று சொல்ல மருமகன் அவரை நோக்கி "எந்தப் புஸ்தகம்" என்று

கேட்டார். அப்போது அந்தப்பக்தன் "புஸ்தகம் என்றழைக்கப்படத்தக்கது ஒன்றே, அது வேதாகமம். உலக முழுவதிலும் அதற்குப் 'புஸ்தகம்' என்ற பேரே வழங்குகிறது. மற்றப்புஸ்தகங்களையெல்லாம் இதோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவைகளைத் தாள்கள் பிரதிகளென்றே சொல்லவேண்டும். வேதாகமம் ஒன்றே முடிவான பூரண புஸ்தகம். அதின் வெளிச்சம் கல்லறையின்பேரிலும் நித்தியகாலமும் பிரகாசிக்கிறது. அதுவே ஒரே புஸ்தகம்" என்றார்.

ஆம், மெய்யாகவே அது புஸ்தகங்களில் சிறந்தது. அதுவும் ஓர் புஸ்தகம் என்று சொல்லாமல் அது ஒன்றே புஸ்தகம் என்று சொல்லவேண்டும். பின்வரும் வாக்கியங்களை வாசித்துப்பார்க்க. மாற். 12: 26; லூக். 3: 4, 20: 42; அப். 1: 20, 7: 42; இதற்கு (1) உடன்படிக்கையின் புஸ்தகம் (யாத். 24: 7.) என்றும் (2) நியாயப்பிரமாணப் புஸ்தகம் (உபா. 31: 26) என்றும் (3) கர்த்தருடைய புஸ்தகம் (எசா. 34: 16.) என்றும் (4) மோசேயின் புஸ்தகம் (எஸ்ற. 6: 18.) என்றும் பேர் வழங்கியிருக்கிறது.

## II. தேவவசனம் (மாற்கு 7: 13.)

வேதாகமத்துக்கிடப்பட்டிருக்கிற எல்லாப் பேர்களிலும் இதுவே கருத்துள்ளதும் பொருத்தமானதுமாம். மனுஷர்களால் எழுதப்பட்ட புஸ்தகங்களுக்கும் இதற்குமுள்ள வித்தியாசத்தைத் தெளிவாய்க் காட்டுகிறதும் தவிர, மற்றெல்லாப் புஸ்தகங்களுக்கும் இது மேலானதென்பதையும் தெரிவிக்கிறது.

தேவவசனம் என்ற பதம் புதிய ஏற்பாட்டில் 40 தடவை வருகிறது.

1. இயேசு தாமே வழங்குகிறார். மாற்கு 7: 13.

2. அப்போஸ்தலர் நடபடியில் 14 தடவை வருகிறது. 4: 31; 6: 2,7; 8: 14; 10: 36; 11: 1; 12: 24; 13: 5, 6, 44, 46; 17: 13; 18: 11; 19: 20.

3. பவுல் தமது நிருபங்களில் வழங்குகிறார் ரோ. 9: 6; 10: 17;

4. பேதுரு இப்பதத்தை உபயோகிக்கிறார். I பேது. 1: 23.

5. யோவான் தமது முதலாம் நிருபத்தில் வழங்குகிறார். 1 யோ. 2:14.

6. வெளிப்படுத்தலில் யேசுவுக்குத் "தேவனுடையவார்த்தை" என்ற பேர் வழங்கியிருக்கிறது (வெளி. 19: 13).

இந்தப்பேர் வேதத்தில் பல இடங்களில் சற்று மருவி வருகிறது.

வசனம் அல்லது திருவசனம் (யாக். 1: 21—23).
கிறிஸ்துவின் வசனம். (கொலோ. 3: 16).
விசுவாசத்தின் வார்த்தை (ரோ. 10: 8).
கிருபையுள்ள வசனம் (அப். 20: 32).



இராஜ்யத்தின் வசனம் (மத். 13: 19).
ஜீவவசனம், (பிலிப். 2: 14).
கர்த்தருடைய வசனம் (1 பேதுரு 1: 25).
பொறுமையைக்குறித்துச் சொல்லிய வசனம் (வெளி. 3: 10).
தீர்க்கதரிசன வசனம் (2 பேதுரு 1: 19).
ஒப்புரவாக்குதலின் உபதேசம் (2 கொரி. 5: 19).
நீதியின் வசனம் (எபி. 5: 13).
சாட்சியின் வசனம் (வெளி. 12: 11).
சத்தியவசனம். (2 தீமோ. 2: 15).

மேலேகாட்டியபடி ஒற்றுமையான பல அத்தாட்சிகளைப் பார்க்கும்போது, வேதாகமம் திவ்விய அதிகாரமுள்ளதென்பதைக் காட்டுகிறதல்லவா?

## III. வேதவாக்கியம் அல்லது வேதஎழுத்து

வேதவாக்கியம் என்ற வார்த்தைக்குச் சரியான "Scripture" என்ற அங்கிலேய பதம், எழுத்து என்றர்த்தங்கொள்ளும் "Scriptura" என்ற லத்தீன் பதத்திலிருந்துண்டானது. இந்த வார்த்தை பழைய ஏற்பாட்டில் ஒரே இடத்தில் மட்டும் வருகிறது (தானி. 10: 12) சுவிசேஷங்களில் 24 தடவையும் பின்னை ஆகமங்களில் 28 தடவையும் இந்தப்பேர் காணப்படுகிறது. ஆதிக்கிறிஸ்தவர்கள் வேதாகமம் முழுவதற்கும் இந்தப் பெயரையே வழங்கினார்கள். பின்வரும் வசனங்களை எடுத்துப்பார்க்க.

1. வாக்கியம் அல்லது வேதவாக்கியம் மாற்கு 12: 11; லூக். 4: 21. யோ. 2: 22; ரோ. 4: 3.

2. வேதவாக்கியங்கள் மத். 22: 29; மாற்கு 12: 24; லூக். 24: 27; யோ. 5: 39; அப். 17: 11; வேத எழுத்துக்கள் 2 தீமோ. 3: 15.

இரண்டு இடங்களில் மட்டும் "பரிசுத்த" என்ற வார்த்தையைச் சேர்த்து வழங்கியிருக்கிறது 2 தீமோ. 3: 15; ரோ. 1: 4.

## IV பழைய புதிய ஏற்பாடுகள்

'ஏற்பாடு' என்றால் 'உடன்படிக்கை' என்றர்த்தம். இந்தக் கருத்தில் இந்தப்பேர் பழைய ஏற்பாட்டாகமத்துக்கு எந்தத்திருப்புதலிலாவது வழங்கப்படவில்லை. புதிய ஏற்பாட்டின் பழைய திருப்புதலில் 13 தடவை வழங்கியிருக்க புதுத்திருப்புதலில் 2 தடவைமாத்திரம் வழங்கியிருக்கிறது. தேவனுக்கும் அவருடைய ஜனத்துக்குமுள்ள சம்பந்தத்தைக் காட்ட இப்பதம் உபயோகித்திருக்கிறது. பிந்தின காலத்தில் இச்சம்பந்தத்தை விஸ்தரித்துக் காட்டிய புஸ்தகங்களுக்குப் பேராயிற்று. பழைய புதிய ஏற்பாடுகளை இரண்டு வித்தியாசமான புஸ்தகங்களென்று நாம் எண்ணக்கூடாது. சிலர் பழைய ஏற்பாட்டை வேதாகமம் என்றும் புதிய ஏற்பாட்

டைச் சுவிசேஷமென்றும் சொல்லுகிறார்கள். இதுசரியல்ல, இவ்விரண்டும் பிரத்தியேகமான இரு ஆகமங்களல்லவே அல்ல. இவ்விரண்டும் சேர்ந்துதான் முழுவேதாகமம் ஆகிறது ஓர் பக்தன் சொல்வதுபோல, "புதியஏற்பாடு பழைய ஏற்பாட்டில் மறைந்தும், பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டால் வெளிப்பட்டும் இருக்கிறது" என்றேசொல்லவேண்டும். லூக். 22: 20; 1. கொரி. 11: 25; எபி. 9: 15—18. இவ்வசனங்களைப் பார்க்க.

இரண்டாம் நூற்றாண்டில் யூதருடைய வேதாகமத்துக்குப் பழைய உடன்படிக்கை என்றும் கிறிஸ்தவர்களுடைய வேதாகமத்துக்குப் "புதிய உடன்படிக்கை" யென்றும் பேர்வழங்கிற்று. மூன்றாம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஒரிஜன் என்பவர் "திவ்விய ஆகமங்கள் எவையென்றால் பழைய புதிய உடன்படிக்கைகள் என்றழைக்கப்பட்டவைகளே" என்கிறார்.

## V. தேவனுடைய வாக்கியங்கள்

ஆரம்பகாலத்தில் இப்பதம் தேவவசனம் வைக்கப்பட்டிருந்த இடத்தை அல்லது தேவனுடைய வார்த்தையானது வெளிப்படுத்தப்பட்ட இடத்தைக் குறித்தது. சிலவேளைகளில் "தேவவாக்கு" என்றும் அழைக்கப்படுகிறது. 2 சாமு. 16: 23. ராஜாக்களின் புஸ்தகங்களிலும் நாளாகமங்களிலும் இடத்துக்குப் பதிலாக 15 தடவை வருகிறது. "வேதாகமம்" என்ற பதத்திற்குப் பதிலாக புதிய ஏற்பாட்டில் 4 தடவை வழங்கப்பட்டிருக்கிறது. ஜீவவாக்கியங்கள் அப். 7: 38. தேவனுடைய வாக்கியங்கள் ரோமர் 3: 2. எபி. 5: 12: 1 பேதுரு. 4: 11.

## ஜீவத்தண்ணீர் பத்திரிகை.

புது மானேஜர். பாளையங்கோட்டை மேரி ஆர்டன் ஸ்கூல் Mr. G. D. தேவதாசன் உபாத்தியாயரவர்கள் செப்றெம்பர் மாதம் முதல் இந்தப் பத்திரிகைக்கு மானேஜராக ஏற்படுத்தப்பட்டிருப்பதால், பத்திரிகை விஷயமான சகல காரியங்களுக்கும் அவர்களுக்குக் கடிதம் எழுதிக்கொள்ளவும், சந்தாப் பணங்களை அவர்களுக்கே அனுப்புவிக்கவும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

S. G. மதுரம்,
*Editor.*

Printed at the Church Mission Press, Palamcottah and Published by the Christian Brotherhood Association.

October, 1913. Registered No. M. 163.

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JAN 1914
MADRAS

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." (யோவான் 7: 38)

Vol. XIV அக்றோபர் 1913

## இரண்டில் ஒன்று!

தேவனிடத்தில் இரண்டில் ஒன்றேயல்லாமல் மூன்றாவது இடம் கிடையாது. அந்தவேலை பார்ப்பேன் அல்லாவிட்டால் இந்தவேலை பார்ப்பேன்; இரண்டும் போய்விட்டால் இன்னொரு வேலைதான் என்று மனுஷர் பேசுகிறதுபோல இங்கே பேசயிடமில்லை. ஆசீர்வாதம் அல்லது சாபம். இரண்டில் ஒன்றுதான். அனலாயிரு அல்லது குளிராயிரு. இல்லாவிட்டால் வாந்திதான். மூன்றாவது நிலைமை இல்லவேயில்லை. சகோதரனே! கர்த்தர் இந்தச் சிறுபிரசங்கத்தின் மூலமாய் உன்னோடு பேசப்போகிறார், கவனமாய்ச் செவிகொடுத்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்.

1. இரண்டே ஜாதிகள் உண்டு—இது ஆணுமல்ல பெண்ணுமல்ல. புருஷனிலிருந்து பெண்ணுண்டானபடியால் அவர்கள் ஒரு ஜாதியேயன்றி இரு ஜாதியாகார். அல்லது கவிஞர் பாடினபடி இட்டாரும் இடாதோருமல்ல. உலகத்தில் பல ஜாதிகள் இருக்கிறார்கள். அவர்கள் பற்பல வகுப்பாய்ப் பிரிந்து பல வர்ணங்களால் அழைக்கப்பட்டு வருகிறார்கள். இவர்கள் உடை நடை பாவனையிலும், குணம் ஒழுக்கம் ஆசாரங்களிலும். பாஷை நிறம் தொழிலிலும், இன்னும் பல வகையிலும் ஒருவருக்கொருவர் பேதப்பட்டிருப்பது உண்மையே. இதினிமித்தம் ஒருவனை உயர்ந்த ஜாதியென்றும் மற்றவனைத் தாழ்ந்த ஜாதியென்றும் சொல்லுவது நியாயமோ? 'மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் தேவன் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணினார்' என்ற சத்தியத்தை நம்பினவன் மேல்ஜாதி, கீழ்ஜாதி என்று பேசமாட்டான்.

நெடுங்காலம் நிலைகொண்ட மேற்கூறிய வித்தியாசங்களை பலவந்தத்தினால் அல்லது வேறு பிரயத்தனத்தினால் அழிக்கப்பார்ப்பது அசாத்தியம்.

எல்லாரும் சேர்ந்து பொது விருந்துண்பதினாலே அல்லது தேயிலை காப்பிப் பானம்பண்ணுவதினாலே இவ்வித்தியாசங்கள் ஒழிந்துபோம் என்று நினைப்பது தப்பு. வானமழைபொழிந்து, வெள்ளம் புரண்டோடி, வயல்வரப்புத் தெரியாமல் ஏகமாய் மூடிக்கொள்வதுபோல, அருள்மாரி ஊற்றப்பட்டு இருதயங்கள் தேவன்பினால் நிரப்பப்படும்போது, சகல வித்தியாசங்களும் தானே ஒழிந்துபோம். பரம ஈவை ருசிபார்த்த தேவனுடைய பிள்ளைகளில் அநேகர் உன்ஜாதி, என்ஜாதி என்பதை முற்றிலும் மறந்து, ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூர்ந்து, கூடப்பிறந்தாரைவிட நெருங்கிய ஐக்கியமாய் உறவாடிவருவது நாம் அறியாத விஷயமோ?

அப்படியானால் இரண்டு ஜாதிகள் உண்டென்று சொல்வானேன்? கர்த்தருடைய பார்வையில் இரண்டு ஜாதிகள் உண்டென்பது மெய்தான். ஒன்று ஏசாயா 1: 4-ல் சொல்லப்பட்டிருக்கிற 'பாவமுள்ள ஜாதி.' இன்னொன்று 1 பேதுரு 2: 9-ல் வருகிற 'பரிசுத்த ஜாதி'. உலகத்தின் பாவங்களைச் சுமந்துதீர்த்த இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவன் பாவமுள்ள ஜாதியைச் சேர்ந்தவன். அவன் மாம்சத்தின்படி பிறந்து, ஜென்ம சுபாவத்திலே வளர்ந்து, தேவ ஆக்கினைக்குட்பட்டவனாயிருக்கிறான். சிலுவை நாயகனின் திருப்பாதம்பணிந்து, அவர் நாமத்தில் பாவமன்னிப்பையும் சுத்தாங்கத்தையும் பெற்றுக்கொண்டவனே பரிசுத்த ஜாதியைச் சேர்ந்தவனாயிருக்கிறான். சகோதரனே! இவ்விரண்டில் நீ எந்த ஜாதியைச் சேர்ந்தவன் என்பதைத் தீர்மானி.

2. இரண்டே வாசல்கள் உண்டு —ஒன்று இடுக்கமான வாசல்; மற்றது விரிவான வாசல். இடுக்கமான வாசலுக்கு வழி நெருக்கம். விரிவான வாசலுக்கு வழி விசாலம். இடுக்கமான வாசல் ஜீவனுக்குப் போகிறது. விரிவான வாசல் கேட்டுக்குப் போகிறது. இடுக்கமான வாசலைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர் விரிவான வாசலில் பிரவேசிக்கிறவர்களோ அநேகர். நாம் எல்லாரும் வழிநடக்கிறோமென்பது சத்தியம். ஆனால் எந்த வாசலில் பிரவேசித்து, எந்தப்பாதையில் நடக்கிறோம் என்பதைத் திட்டமாய் அறியவேண்டும். இரண்டு பாதைகளிலும் நடக்க ஒருவனாலும் கூடாது.

இடுக்கமான வாசல் என்பது மறுபிறப்பைக் குறிக்கும். ரட்சிக்கப்படாதவனுக்கு இவ்வாசல் தெரியாது. நெருக்கமான வழி என்பது மறுபடிபிறந்த விசுவாசியின் ஜீவியத்தைக் குறிக்கும். அவன் தன்னை வெறுத்து, தேவசித்தத்திற்குக் கீழடங்கி, துன்பத்தைச் சகித்து, சோதனைகளை மேற்கொண்டு, சகலத்திலும் ஜாக்கிரதையாயிருந்து, அடக்க ஒடுக்கமாய்ப் பிரயாணம் செய்கிறான். இந்தப்பாதையில் பிரயாணம் செய்கிறவர்கள் சிலரானபடியால், அடிக்கடி தான் ஒருவனே தனிமையாக நடப்பதாகத் தோன்றும்



MADRAS

ஆகிலும் ரட்சகரின் சமுகமும் ஆவியானவரின் தேற்றரவும் அவனைப் பலப்படுத்துகிறது.

விரிவான வாசல் என்பது ஜென்ம சுபாவத்தா[illegible] குறிக்கும். வழிவிசாலம் என்பது அவர்களுடைய கெட்ட ஜீவியத்தைக் குறிக்கும். அவர்கள் கிறிஸ்துவின் சித்தமாகிய நுகத்தை ஏற்றுக்கொள்ளாமல் தங்கள் மாம்சமும் மனசும் விரும்பினதை யெல்லாம் செய்வார்கள். யாதொரு கட்டுகாவலில்லாமல் தங்கள் மனங்கொண்டபடியே நடப்பார்கள். இந்தப் பாதையில் பிரயாணம் பண்ணுகிறவர்கள் அநேகர். சகோதரனே! நீ நிச்சயமாகவே இவ்விரண்டில் ஒரு பாதையில் செல்லுகிறாய். சிறு மந்தை போகிற ஜீவபாதையில் செல்லுகிறாயா? திரள்கூட்டம் போகிற கேட்டின் பாதையில் செல்லுகிறாயா? உன் ஆண்டவருக்கு உத்தரவு சொல்லு.

3. இரண்டே எஜமான்கள் உண்டு—கர்த்தராகிய இயேசு ஒரு எஜமான். பிசாசு ஒரு எஜமான். சத்துருவாகிய பிசாசு ஆதிமுதல் சகல மனுஷரையும் கெடுத்துப்போட்டான். பாவத்தின் வஞ்சனையால் எல்லாரையும் தனக்கடிமையாக்கிக்கொண்டான். பாவிகளை ரட்சிக்க இயேசு மகாராஜன் புறப்பட்டுவந்தார். அநேகரை அவன் கையினின்று ரட்சித்து வருகிறார். ரட்சிப்பைப் பெற்றவர்கள் அவர் கொடியின் கீழ் நின்று சாத்தானோடு போராடி ஆத்துமாக்களை விடுவிக்க முயலுகிறார்கள். சாத்தானும் தன் திரள் சேனையோடு கிறிஸ்துவின் போர்வீரருக் கெதிர்த்து நிற்கிறான். இருசேனைக்கும் யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. யுத்தத்திற்கு எப்படியும் முடிவு வரவேண்டும். யுத்தங்கள் பொதுவாய் சமாதானத்தோடு முடியும் அல்லது ஜெயத்தோடு முடியும். இயேசுராஜா ஒருபோதும் சாத்தானோடு சமாதானமாக மாட்டார். ஆகையால் இந்த யுத்தம் ஜெயத்தோடுதான் முடியும். சீக்கிரத்தில் சாத்தான் பக்தர்கள் காலின் கீழாவான். இயேசு மகாராஜா புவியில் அரசாளுவார். அவருடைய தாசர்கள் அவரோடரசாளுவார்கள். சாத்தானைச்சேவித்தவர்கள் ஆக்கினைக்குள்ளாவார்கள். 'என்னோடிராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்' என்று கர்த்தர் சொன்னார். சகோதரனே! நீ யாருடைய பட்சத்திலிருக்கிறாய்? யாருக்கு ஊழியம் செய்துவருகிறாய்? இரண்டு எஜமான்களுக்கு ஊழியம்செய்ய ஒருவனாலும் கூடாது. இரண்டு எஜமான்களுக்கு ஊழியம்செய்யப்பிரயாசப்படுகிறவன், பிசாசுக்கே ஊழியம் செய்தவனாகத் தீர்ப்படைவான்.

4. இரண்டே பக்கங்கள் உண்டு—ஒன்று வலது பக்கம். இன்னொன்று இடதுபக்கம். இயேசுவானவர் தமது மகிமையும், பிதாவின் மகிமையும் பொருந்தினவராய் சகல பரிசுத்த தூதர்களோடும்வந்து, மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார். சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகக் கூட்டிச்சேர்க்கப்படுவார்கள். அவர்களை இரண்டு பிரிவாய்ப்

பிரித்துத் தமது வலது பக்கத்திலும் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார். தமது வலதுபக்கத்தில் நிற்கிறவர்களைப்பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே! உலகமுண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள் என்பார். ஆ! ஆசிர்வாதம் நிறைந்த இவ்வார்த்தைகளைக் கேட்பவர்களுக்கு எவ்வளவு ஆனந்தமாயிருக்கும்!

இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: சபிக்கப்பட்டவர்களே! என்னை விட்டுப் பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள் என்பார். இவ்வார்த்தைகளைக் கேட்பது எவ்வளவு பயங்கரம்! அந்நிமிஷமே நரகத்தின் பயங்கரங்கள் அவர்களை மூடாதோ? தங்கள் நிமித்தம் சாபமாகி, மரத்தில் தொங்கின ரட்சகனை, புறக்கணித்த பாவிகள் சாபத்திற்குள்ளாவது நியாயம் தானே. சகோதரனே! நீ தூரத்தில் நின்று வலது பக்கம் நிற்பவர்கள் யார், இடதுபக்கம் நிற்பவர்கள் யார் என்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பாயோ? நிச்சயமாகவே இரண்டிலொரு பக்கத்தில் நீயும் நிறுத்தப்படுவாய். நீ எந்தப்பக்கம் நிறுத்தப்படுவாயென்று உனக்குத் தெரியுமா?

5. இரண்டே இடங்கள் உண்டு.—ஒன்று மோட்சம் இன்னொன்று நரகம். மோட்சமென்பது மகிமையின் தேவன் வாசம்பண்ணுகிற இடம். அது பிதாவின் வீடென்றும், பரமதேசமென்றும் அழைக்கப்படுகிறது. அங்கே கேருபின்களும் சேராபின்களும் எண்ணிக்கைக்கடங்காத தூதர்களுமுண்டு. அந்நகரத்தின் சிறப்பை வர்ணிக்க நாவால் முடியாது. பொன், முத்து, ரத்தினங்களின் அலங்காரம் ஒப்பிடுவதற்கு எம்மாத்திரம்! தேவனுடைய மகிமையே அத்தேசத்திற்கு வெளிச்சம். தேவபுத்திரர் சஞ்சரிக்க அங்கே அநேக வாசஸ்தலங்களுண்டு. அவர்கள் பாவம், நோய் பாடு, மரணமுதலிய தீமைகளுக்கு விலகிப் பரிசுத்தமும் ஆனந்தமும் மகிமையும் நிறைந்தவர்களாய்ப் பிரகாசிப்பார்கள். அவர்கள் தூதர்களோடும், பிரதான தூதர்களோடும் சகல பரிசுத்தவான்களோடும் சேர்ந்து தேவனோடு சதா நித்ய காலமாய் வாழுவார்கள். அவர்களுடைய சரீரம் கிறிஸ்வுக்கொப்பான மகிமையுள்ளதாயும், அவர்களுடைய ஜீவியம் சொல்லி முடியாத பாக்கியம் நிறைந்ததாயுமிருக்கும். தங்களுக்குக் கிடைத்த இந்த மகத்துவமான ரட்சிப்பினிமித்தம் ஆனந்தபரவசமடைந்து தேவனையும் ஆட்டுக்குட்டியானவரையும் இடைவிடாமல் துதிப்பார்கள்.

நரகமானது பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்ட இடம். இடதுபக்கம் நின்ற சபிக்கப்பட்டவர்கள் அங்கே போவார்கள். தேவனுடைய நீதியுள்ள கோபாக்கினை அவர்கள்மேலிறங்கும். அக்கினியும் கந்தகமும் கடுங்கோடைக் கொந்தளிப்பும் அவர்கள் குடிக்கும் பாத்திரத்தின் பங்கு. தூங்கிக்கொண்டிருந்த மனச்சாட்சி முழு



பலத்தோடு எழும்பிக் கிரியை செய்யும். அவர்கள் செய்த பாவங்களும் அக்கிரமங்களும் பர்வதங்கள்போல் உயர்ந்து நிற்கும். கிருபையின் காலத்தை அசட்டைசெய்து தேடிவந்த ரட்சகனைக் கவனியாமற் போனேனே என்று பாவி புலம்புவான். சகல துன்மார்க்கரும் பொல்லாதவர்களும் ஒருவரையொருவர் பீறிக் கொர்ச்சிப்பார்கள். எங்கே பார்த்தாலும் வேதனையும் பற்கடிப்புமாயிருக்கும். ஐயோ! ஐயோ! ஐயோவெனப் பாவிகள் அலறித் தவிப்பார்கள். அன்பின் பெருக்கு எவ்வளவோ ஆக்கினையின் பெருக்கும் அவ்வளவே. அவர்களுக்கு விமோசனமில்லை! அவர்களுடைய புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும். அவர்களுடைய வாதையின் புகை சதா காலங்களிலும் எழும்பும். கர்த்தராகிய இயேசுவே இவைகளைச் சொன்னவர். தர்க்கிக்க மனதுள்ளவர்கள் அவரோடு தர்க்கிக்கட்டும்.

இதை வாசிக்கும் சகோதரனே! நீ எந்த இடத்துக்குப் போவாய்? இரண்டிலொரு இடத்திற்கு நீ தப்பாமல் போகவேண்டுமே. நீ மறுப்பிறப்படைந்து, ஜீவபாதையில் நடந்து, இயேசு மகாராஜாவுக்கு ஊழியம்செய்து வந்திருந்தால் ஆசிர்வதிக்கப்பட்ட வலது பக்கம் நிற்பாய். மகிமையின் ராஜ்யத்தில் பிரவேசிப்பாய். நீ குணப்படாதிருந்து, மனங்கொண்டபடி நடந்து, பிசாசுக்கு ஊழியம் செய்துவந்தால், சபிக்கப்பட்ட இடது பக்கத்தில் நிறுத்தப்படுவாய். நித்திய நரகமே உன் பங்காகும். இது சத்தியம்! இன்று நீ மரிக்க நேரிட்டால் உன் நம்பிக்கை என்ன? நாளைக்கு இருப்பாயென்பது என்ன நிச்சயம்? இரக்கம் நிறைந்த இயேசு உனக்காகத் தமது ஜீவனைக் கொடுத்தாரே. உன்னை ரட்சிக்க எவ்வளவோ வாஞ்சையாயிருக்கிறாரே. இதுவரை ரட்சிக்கப்படாதிருப்பது உன் கவலையீனந்தானே. இப்பொழுது நீ முழங்காலூன்றி: என் அருமை இயேசுவே! இன்றுமுதல் நான் உம்முடையவன், என்னை ரட்சியும் என்று முழு மனதோடே சொல்லு. எத்தனையோ பெரும்பாவிகளைக் கிருபையாய் ரட்சித்த மீட்பர் உன்னை நிச்சயமாகவே ஏற்றுக்கொண்டு ஆசிர்வதிப்பார். நீ இம்மையிலும் மறுமையிலும் பாக்கியம் பெற்றிருப்பாய். இனித்தாமதியாதே!

S. பரமானந்தம்.

## * 'வல்லமையாய்ப் பலப்பட வேண்டிக்கொள்ளுகிறேன்.'

'நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்பட . . . உங்களுக்கு அநுக்கிரகம்பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்'. எபேசியர் 3: 16, 19

* கடந்த மேய் மாதம் டக்கரம்மாள்புரம் ஆவிக்குரிய கூட்டத்தில் செய்யப்பட்ட முதலாம் பிரசங்கத்தின் குறிப்பு,

இந்த வாக்கியம் தமிழ் நாட்டுச் சபைகளுக்கு இந்த வருஷம் தேவனால் கொடுக்கப்பட்ட விசேஷித்த ஒரு செய்தியாயிருக்கிறது. கடந்த வருஷத்தின் கடைசியில் முதல் இந்திய அத்தியக்ஷகர்களுக்குப் பட்டாபிஷேகம் கொடுக்கப்பட்டபோது கல்கத்தா நகர் அத்தியக்ஷாலயத்திலே இந்த வாக்கியத்தின்பேரில் பிரசங்கம் செய்யப்பட்டது. இந்துதேசத் திருச்சபை இந்த நாளிலே மகா முக்கியமான ஒரு ஆவிக்குரிய பதவிக்கு வந்தெட்டியிருக்கிறது என்றும், ஆதலால் இந்தச்சபை ஆவியானவரால் பலப்படுத்தப்படும் அனுபவத்தையும் கிறிஸ்துவானவர் இருதயத்தில் வந்து வாசஞ்செய்யும் பாக்கியத்தையும், தேவனுடைய அன்பை பூரணமாய் அறியும் ஆனந்தத்தையும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிரப்பப்படும் உன்னத மேன்மையையும் முன்னில்லாதபிரகாரம் பெற்றனுபவிக்கக்கூடிய நிலைமைக்கு வந்தெட்டவேண்டுமென்றும் அன்று கூறி அறிவிக்கப்பட்டது. எபேசு சபைக்கு இந்த உன்னத ஆசீர்வாதங்கள் கிடைக்கவேண்டுமென்று பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் இங்கே ஜெபிக்கிறார். முதல் இந்திய அத்தியக்ஷகர்களுக்கு இந்த எல்லா அனுபவங்களும் மேலான விதமாய்க் கிடைக்கவேண்டுமென்று அவர்களுடைய அத்தியக்ஷ பட்டாபிஷேக நாளில் செய்யப்பட்ட ஜெபத்தை நாமும் என்னாளும் ஊக்கமாய்ச் செய்து வருவோமாக. அதினால் அவர்கள் இந்த ஆவிக்குரிய அனுபவங்களுக்கு அவர்களுடைய மேலான நிலைமையில் நமக்கு முன்மாதிரியாக என்னாளும் ஜீவிக்கும்படி கெஞ்சுவோமாக. அவர்களால் குறிக்கப்பட்ட தமிழ் நாட்டுச் சபைகளாகிய நாமும் இந்த மேலான அனுபவங்களுக்கு வந்தெட்டும்படியாக ஊக்கமாய் வாஞ்சித்து ஜெபிப்போமாக. 'எழும்பு, எழும்பு, சீயோனே உன் வல்லமையைத் தரித்துக்கொள்,' என்று ஆண்டவர் கட்டளையிடுகிறார். உன் தேவன் உனக்கு வல்லமையைக் கட்டளையிடச் சித்தமாயிருக்கும்போது நீ பலட்சயப்பட்டுக் கிடப்பானேன்'. 'இஸ்ரவேலின் தேவன் தம்முடைய ஜனங்களுக்குப் பெலனையும் சத்துவத்தையும் அருளுகிறவர்; தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக.'

எபேசியர் நிருபம் தேவன் தம்முடைய ஜனங்களுக்கு அருளும் பெலனையும் சத்துவத்தையும் விளக்கிக் காட்டுகிற நிருபம் என்பதை எல்லாரும் அறிவோம். ரோமர் நிருபத்தில் கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தால் கிடைக்கிற பரிபூரண இரட்சிப்பு வெகு விஸ்தாரமாய் விவரிக்கப்பட்டிருக்கிறது. கொரிந்தியர் நிருபங்களில் தேவனுடைய கிருபையின் மகத்துவம் பாவம் பெருகின சபையில் எவ்வளவாய்ப் பெருகக்கூடும் என்று காட்டியிருக்கிறது. கலாத்தியர் நிருபத்தில் கிறிஸ்துவின் சிலுவையினால் வரும் விடுதலை விஸ்தரித்துக் காட்டப்பட்டிருக்கிறது. இவ்விதமாய் விடுதலைபெற்ற மனிதன் கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் எப்படி பலப்படக்கூடும் என்ற சத்தியம் எபேசியர் நிருபத்தில் காட்டப்



பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் இரட்சிப்பைக் குறித்து நிச்சயமுடையவர்களாய், அவர் நமக்கு அருளும் கிருபையின் மகத்துவத்தை உணர்ந்தவர்களாய், அவரால் வரும் விடுதலையைப் பெற்றவர்களாய் நாமும் இந்த பலத்த சத்துவத்தின் வல்லமையைப்பெறும் விதத்தைத் தியானிப்போமாக. இதின் பலனாக நமது தேவன் நமக்குப் பலத்தைக் கட்டளையிடுவாராக.

முதலாவது, யாருக்கு இந்த வல்லமை அளிக்கப்படலாம் என்று பார்ப்போம். எபேசுசபையார் கிறிஸ்துவினுடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவேண்டுமென்று பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் இங்கே ஜெபிக்கிறார். எபேசு சபையாரைப்பற்றி முதலாம் அதிகாரத்தில் பல காரியங்களை வாசிக்கிறோம். இவர்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகள். (1: 1); கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் (1: 3); கிறிஸ்துவுக்குள் உலகத்தோற்றத்துக்குமுன்னே தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். (1: 4). 'அவருக்குள்' (இங்கிலிஷிலே 'In whom' என்று வரும் இடங்களைப் பார்க்கவும்) இவர்களுக்கு ஏழு பெரிய ஆசீர்வாதங்கள் உண்டு. மீட்பு உண்டு (1: 7). சுதந்தரம் கிடைத்திருக்கிறது (1: 12). அவருக்குள் இரட்சிப்பைப்பெற்றார்கள் (1: 13). அவருக்குள் ஆவியால் அவர்கள் முத்திரை போடப்பட்டார்கள் (1: 13). அவருக்குள் மாளிகையாக இசைவாய் இணைக்கப்பட்டார்கள் (2: 21). அவருக்குள் தேவனுடைய வாசஸ்தலமானார்கள் (2: 22). அவருக்குள் தேவனிடத்தில் சேரும் சிலாக்கியத்தைப் பெற்றார்கள் (3: 12). என்ன மகத்துவ சிலாக்கியங்கள்! இவைகளைச் சிந்தித்து உணருகிற எவரும் ஆச்சரியத்தால் பிரமை கொள்ளலாமே! ஷேபாவின் இராஜஸ்திரீயைப் பிரமிக்கச் செய்த சாலொமோனின் மகத்துவம் இவைக்கு எம்மாத்திரம்! கிறிஸ்துவுக்குள் இவ்வளவு உன்னத சிலாக்கியங்களைப்பெற்ற இவர்கள் ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவேண்டுமென்று அப்போஸ்தலன் ஜெபிக்கிறார். சிநேகிதரே, கிறிஸ்துவுக்குள்ளான சகல சிலாக்கியங்களுக்குள்ளும் நாம் பிரவேசித்து அனுபவிப்போம். ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாக நாம் ஆவியானவராலே வல்லமையாய்ப் பலப்படும்படி நாடுவோமாக.

இரண்டாவது, எந்த அளவான வல்லமையைத் தேடவேண்டும் என்று பார்ப்போம். இந்த நிருபத்தில் கிறிஸ்துவுக்குள்ளான மேலான ஆசீர்வாதங்கள் விஸ்தரித்துக் காட்டப்பட்டிருக்கிறபடியே அவைகளின் அளவும் பரிமாணமும் காட்டப்பட்டிருக்கிறதைப் பார்க்கலாம். ஆசீர்வாதங்களின் ஜாபிதாவைக்கண்டு ஆச்சரியப்பட நேரிடுமானால், அவைகளின் அளவைப் பார்க்கும்போது முன்னிலும் அதிகமாய் ஆச்சரியப்பட நேரிடும். தமிழிலே 'படியே' (இங்கிலிஷிலே 'according to') என்று வருகிற இடங்களைப் பார்த்தால் இது தெரியவரும். தமது தயவுள்ள சித்தத்

தின்படியே நம்மைச் சுவிகாரப் புத்திரராக்கியிருக்கிறார் (1: 6). அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே பாவங்களை மன்னிக்கிறார் (1:7). தமது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக நம்மைச் சுதந்தரமாக்கியிருக்கிறார் (1: 12). காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி அவர் தமது கிருபையைப் பெருகப்பண்ணுகிறார் (1: 9). அவருடைய பலத்த சத்துவத்தால் நமக்கு அளிக்கப்படுகிற வரமாகிய அவருடைய கிருபையின்படி நம்மை ஊழியக்காரராக்குகிறார் (3: 7). அவர் நமக்கு அருளச் சித்தமாயிருக்கும் வல்லமையின் அளவென்ன? அவர் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமையின்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்தில் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவத்தை காண்பிக்க விரும்புகிறார் (1: 19). கிறிஸ்துவினுடைய அற்புதங்களிலெல்லாம் பெரிய அற்புதமாகிய அவருடைய உயிர்த்தெழுதலில் விளங்கிய தெய்வ வல்லமையை நம்மிலும் விளங்கச் செய்வாராம். மேலும் நாம் அவருடைய ஆவியானவராலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவேண்டுமென்று அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே அநுக்கிரகிக்கவேண்டுமென்று பரிசுத்த பவுல் ஜெபிக்கிறார் (3: 19). அதாவது பூமியில் நாம் அறிந்திருக்கிற எந்த அளவின்படியுமல்ல, பரலோகத்தில் தெய்வத்தின் ஐசுவரியத்துக்குரிய அளவின்படி நாம் பலப்படவேண்டுமாம். இன்னும் ஓர் அளவையும் கொடுக்கிறார். நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே நமக்குச்செய்ய அவர் வல்லவராயிருக்கிறார் (3: 20). எந்த அளவாய் நாம் பலப்படக்கூடும் என்றெண்ணுகிறோமோ, அதற்கு மகா மேலான அளவாக அவர் நம்மைப் பலப்படுத்துவார். சகோதரரே, தேவ வல்லமையை நாடுகிற நாம், நமது மனுஷ அளவை ஒழித்து, தெய்வ அளவை எடுத்துக்கொள்ளுவோமாக. தேவன் தமக்குச் சித்தமான அளவாய் நம்மைப் பலப்படுத்தும்படி கெஞ்சுவோமாக.

மூன்றாவது, இந்த வல்லமையை எப்படிப்பெறலாம் என்று பார்ப்போம். இந்த வல்லமை ஆவியானவராலேயே வருகிறதென்று வாக்கியம் சொல்லுகிறது. 'நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவேண்டும்' என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். ஆவியானவரைப் பெறும் விஷயத்தில் எபேசு சபை மூன் மாதிரியான சபையாக வைக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சபையில் பலர் ஒரே நாளில் பரிசுத்த ஆவியைப் பெற்று, அந்நிய பாஷைகளைப் பேசி தீர்க்கதரிசனம் சொன்னார்கள். ஆனால் இந்த நிருபத்திலே படிப்படியாய் ஆவியானவரின் வல்லமையைப் பெறும் வழியையே அப்போஸ்தலன் முக்கியப்படுத்திக் காட்டுகிறார். ஆனால் வல்லமையாய்ப் பலப்படத் தக்கதாக



ஆவியானவரைப்பெறும் முறையைப்பற்றிமட்டும் இரண்டு காரியங்களை இப்போது எடுத்துக்காட்டுவோம்.

1-வது, இந்த வல்லமையான பலத்தை அறிந்து வாஞ்சிக்கவேண்டும். அறியாதவர்கள் வாஞ்சிக்கமாட்டார்கள். வாஞ்சிக்காதவர்கள் பெற்றுக்கொள்ளமாட்டார்கள். வல்லமையாய்ப் பலப்படுத்தப்படும்படி எபேசியருக்காக இருமுறை ஜெபிக்கிற அப்போஸ்தலன் முதல் தடவை 'ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற' ஆவிக்காகவே ஜெபிக்கிறார் (1:17-22). 'விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்தில் காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்று நீங்கள் அறியும்படிக்கு அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக் கண்களைக்கொடுக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்'. (19 வா). அறிவுதான் முதலில் வரவேண்டும். அதற்காகத் தெளிவை அளிக்கும் ஆவியும், தெளிவாய்க் காணக்கூடிய கண்களும் வேண்டும். நாம் தெளிவாய்க் காணவேண்டியது நமக்குக் கொடுக்கப்படக்கூடிய வல்லமையைத்தான். அது பலத்த சத்துவத்தின் வல்லமை என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார் பலத்த என்பதற்குறிய மூல வார்த்தை நம்மைப் பற்றிப்பிடிக்கிற வல்லமையைக் குறிக்கும். சத்துவம் என்பதற்குரிய மூலவார்த்தை நாம் பற்றிப் பிடிப்பதற்கு வேண்டிய வல்லமையைக் குறிக்கும். வல்லமை என்பதற்குரிய மூல வார்த்தை எதையும் செய்யக்கூடிய சத்துவத்தைக் காட்டும். 'தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம்' என்பதில் வல்லமை என்பதற்கு எதிர்த்து நிற்கக்கூடாத மகா பெரிய பலத்தைக் காட்டும வார்த்தை உபயோகிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதமாய் நம்மைப் பற்றிப்பிடிக்கும் தெய்வ வல்லமை முதலில் வரவேண்டும். பின்பு அவரை நாம் பற்றிப் பிடிக்கும் வல்லமை வரும். அதின் பின்புதான் நாம் எதையும் செய்து முடிக்கக்கூடிய வல்லமையும், ஒருவரும் எதிர்த்து நிற்கக்கூடாத வல்லமையும் வரும்.

மேலும் இந்த எல்லா வல்லமைகளும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், பரமேறுதல், தேவனுடைய வலது பாரிசத்தில் உட்காருதல், சகலத்தையும் கீழ்ப்படுத்துதல், எல்லாவற்றையும் நிரப்புதல் இவைகளிலே பிரத்தியட்சமாய் விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. காண்பதற்குத் தெளிவான கண்கள் இருக்குமானால் ஆவியானவர் இந்த வல்லமையை நமக்குக் காட்டுவார். இதேவித வல்லமைக்காக நாமும் பலமான வாஞ்சை கொள்வோம்.

2-வது, இந்த வல்லமைக்காக ஜெபிக்கவேண்டும். எபேசியருக்காகப் பரிசுத்த பவுல் ஊக்கமாய் ஜெபிக்கிறார். (3: 14-19). அவருடைய ஜெபங்களிலெல்லாம் இதுவே மகா பயபக்தியான ஜெபம். மகா உன்னதமான ஜெபம். எபேசியர் நிருபம் புதிய ஏற்பாட்டின் இமாலய பர்வதம் என்று சொல்லலாம். அந்தப் பர்வதத்தின் உயர்ந்த சிகரம் இந்த ஜெபமே.

மலை எறுவதுபோலவே இந்த ஜெபத்தின் விண்ணப்பங்கள் ஒன்றின்மேலொன்றாய் எழும்புகிறது. தேவ ஆவியானவரால் வரும் வல்லமையில் அது தொடங்கி, கிறிஸ்துவின் உள்ளான குடியிருப்புக்கு ஏறி, அதிலிருந்து கிறிஸ்துவின் அறிவுக்கெட்டாத உன்னத அன்பின் உச்சத்துக்கு எட்டி, அதிலிருந்து ஒரே மொத்தமாய் தேவனுடைய சகல சம்பூரணத்தைப் போய்த் தொட்டுவிடுகிறது. அநேகர் தேவ ஆவியானவரால் வரும் வல்லமையான பலத்தைப் பெறவே பயப்படுகிறார்கள். அதற்குமேலாக எழும்ப அவர்கள் நினைக்கிறதேயில்லை. ஆகலால் அவர்களுடைய ஜெபங்கள் உயிரும் உண்மையுமற்றுப் போகிறது. அதினால் அவர்கள் விரும்புகிற ஆரம்ப ஆசீர்வாதம் முதலாய் அவர்களுக்குக் கிடைக்கிறதில்லை. ஆனால் பரிசுத்த பவுலைப்போல யார் ஒரே திசையாய் மேல்நோக்கி எழும்பிவிடுகிறார்களோ அவர்களுக்கு 'அவரைப்பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் தைரியமும் திட நம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது': (12 வா). இந்தச்சிலாக்கியத்தை உபயோகித்து, அவர்கள் தேவனுடைய பலத்த சத்துவத்தின் வல்லமையைப் பெற்றுக்கொள்ளலாம். மிகுதியாய் ஜெபிக்கிறவன் மிகுதியாய் பெலப்படுவான். ஜெபத்தியானத்தைக் குறைக்கிறவன் பெலவீனப்பட்டே போவான். சகோதரரே, இந்த நாட்களில் நமக்குக் கிடைத்திருக்கும் மகா பெரிய சிலாக்கியத்தை மிகுதியான ஜெபத் தியானத்தில் உபயோகித்து, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுவோமாக.

நான்காவது, இந்த வல்லமையை எப்படி உபயோகிக்கலாம் என்று பார்ப்போமாக. வல்லமை பெற்றதை உணர விரும்புகிறவன் அதைக் காணமாட்டான். வல்லமையைப் பெற்றபின் அதை உபயோகிக்க விருப்பமற்றவன் அதை இழந்து போவான். தேவன் அருளும் சத்துவத்தின் வல்லமையை உபயோகிக்கும் முறையையும் இந்த நிருபத்தில் பார்க்கலாம். முதலில், சபையின் ஐக்கியத்துக்காகவும் பக்திவிர்த்திக்காகவும் இந்த வல்லமையை உபயோகிக்கவேண்டும். சபையின் ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவுக்குத்தக்கதாகக் கிரியைசெய்து, பொதுவான பக்திவிர்த்தியை உண்டுபண்ணவேண்டும். (4: 16). நாலாம் அதிகாரம் முழுவதிலும் இந்த ஊழியம் முக்கியப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஊழியத்தில் குறையுக் காணப்படுகிறவன் தேவாவியானவரைத் துக்கப்படுத்தி வல்லமையை இழந்துவிடுவான் (4: 30). இரண்டாவது, குடும்ப ஜீவியத்தின் சகல சம்பந்தங்களிலும் இந்த வல்லமையை உபயோகித்து, குடும்ப பக்தியையும் பரிசுத்தத்தையும் அதிகரிக்கவேண்டும். (5 அதி). மூன்றாவது, பிசாசின் அரண்களை எதிர்த்துப் போர்செய்வதிலே இந்த வல்லமையை உபயோகிக்கவேண்டும். பொல்லாத ஆவிகளின் சேனைகளோடு போராட்டம் செய்வதற்குத் தேவனுடைய பலத்த சத்துவத்தின் வல்லமை



யும், தேவனுடைய சர்வாயுத வர்க்கமும் வேண்டும். நான்காவது, மிஷனெரி ஊழியத்துக்காகவும் தேவனுடைய சகல பரிசுத்தவான்களுக்காகவும் ஜெபிக்கவும் இந்த வல்லமையை உபயோகிக்கவேண்டும். ஜெபத்தினால் பெற்ற வல்லமையை ஜெபத்திலே உபயோகிக்கவேண்டும். சகலவிதமான வேண்டுதல், இடைவிடாத வேண்டுதல், போராட்டமானவேண்டுதல் முதலான ஜெபம் செய்ய பெலவீனரால் முடியாது. சிநேகிதரே, நமது தேசத்தில் நடக்கவேண்டிய மகா கடினமான ஊழியங்களினிமித்தம் நாம் வல்லமையாய்ப் பலப்படுவோமாக.

*வீரர்கள் குறைகள் யாவும்—தீர்த்திடும் வல்லவரே!*
*யுத்தத்தில் முன்செல்ல ஏவும்—சேனைத்தளகர்த்தரே!*

## வேதாகம ஆராய்ச்சி.

கனம் யோசேப்பு W. கெம்ப் ஐயரவர்களால் நடத்தப்படும்

### வேதாகமப் பாடமுறை.

### 2-ம் பாடம்.

### வேதாகமத்தின் அமைப்பும் அதன் பிரிவுகளும்.

கவனிப்பு. பாடம் ஆரம்பிக்குமுன் சற்றுநேரம் ஜெபி. பின்பு முன் படித்த பாடத்தை 10 நிமிஷம்போல் ஞாபகப்படுத்திக்கொள்.

### வேதாகம அமைப்பு.

**அதன் புஸ்தகங்களும் அவைகளின் பிரிவுகளும்.** வேதாகமம் 36 ஆசிரியர் எழுதிய 66 புஸ்தகம் உள்ளது. மோசேயின் காலமுதல் வெளிப்படுத்தல் எழுதிய யோவான் அப்போஸ்தலன் காலம் வரையும், 1600 வருஷ சரித்திரம் உள்ளது. இவ்வாசிரியர்கள் பற்பல அந்தஸ்துள்ளவர், ராஜாக்கள், மேய்ப்பர், கவிஞர், தீர்க்கதரிசிகள், போர்வீரர், செப்படவர், முனிகள், தத்துவசாஸ்திரிகள், ஆயக்காரர், வைத்தியர், பரிசேயர் ஆகிய பலர்தான் புஸ்தகங்களை எழுதினவர்கள். அவர்கள் முக்கியமாய் எபிரெய, கல்தேய, கிரேக்க பாஷைகளில் அவைகளை எழுதினார்கள். நாம் எண்ணக்கூடியபடி பல பாஷை நடைகளில் இவை எழுதப்பட்டிருக்கின்றன.

**இப்புஸ்தகங்கள் எழுதப்பட்ட இடங்கள்.** வனாந்தரம், தீவு, குகை, அரண்மனை, ஆற்றங்கரை, தெருவீதி, சிறைச்சாலை முதலியவை. இடவித்தியாசம் பலவிருப்பினும், ஆதி துவக்கி அந்தம் வரையும் அவற்றில் ஒற்றுமையிருக்கிறது. ஒரே பெரிய ஆசிரியரான தேவன் தாமே ஒவ்வொருவரோடுமிருந்து எழுதினதே இதற்குக் காரணம்.

# I வேதாகமப் பிரிவுகள்.

i. சாதாரணமாய் பைபிள் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரண்டு பங்குகளாக வகுக்கப்பட்டுள்ளது.

## 1. பழைய ஏற்பாடு.

இங்கிலிஷ் வேதாகமத்தில் பழைய ஏற்பாடு 39 புஸ்தகமுள்ளது. ஆனால் எபிரெயுவில் 24 புஸ்தகந்தானுண்டு. எப்படியெனில் 1 & 2 சாமுவேல், 1 & 2 ராஜாக்கள், 1 & 2 நாளாகமம், எஸ்றா, நெகேமியா, 12 சின்ன தீர்க்கதரிசன ஆகமங்கள், இவை ஒவ்வொரு புஸ்தகமாக எண்ணப்பட்டன. யொஸிபியஸ் என்னும் சரித்திரக்காரன் தம் காலத்தில் ரூத்தையும் நியாயாதிபதிகளையும் ஒன்றாகவும், புலம்பலையும், எரேமியாவையும் ஒன்றாகவும் சேர்த்து எபிரேய பாஷை எழுத்துக்களின் தொகைப்படி 22 புஸ்தகமாக எண்ணப்பட்டதென்றும் சொல்லுகிறார்.

(i) புஸ்தகங்களின் தொகுப்பு. பழைய திருப்புதிலிலுள்ள 39 புஸ்தகங்களையும் நான்கு பங்குகளாகப் பிரிக்கலாம். ஆயினும் அவை புஸ்தகங்கள் எழுதப்பட்ட காலக்கிரமப்படி பிரிக்கப்பட்டவையல்ல.

(1) பஞ்சாகமம் (5) ஆதியாகமம் 50, யாத்திராகமம் 40, லேவியராகமம் 27, எண்ணாகமம் 36, உபாகமம் 34.

(2) சரித்திராகமம் (12). யோசுவா 24, நியாயாதிபதிகள் 21, ரூத் 4, 1 சாமுவேல் 31, 2 சாமுவேல் 24, 1 ராஜாக்கள் 22, 2 ராஜாக்கள் 25, 1 நாளாகமம் 29, 2 நாளாகமம் 36, எஸ்றா 10, நெகேமியா 13, எஸ்தர் 10.

(3) பாட்டாகமம் (5). யோபு 42, சங்கீதம் 150. நீதிமொழிகள் 31, பிரசங்கி 12, உன்னதப்பாட்டு 8.

(4) தீர்க்கதரிசனாகமம். (1) பெரிய தீர்க்கத்தரிசிகள், 5, ஏசாயா 66, எரேமியா 52, புலம்பல் 5, எசேக்கியேல் 48 தானியேல் 12.

(2) சின்னத் தீர்க்கதரிசிகள் 12,
ஓசியா 14, யோவேல் 3, ஆமோஸ் 9, ஒபதியா 1, யோனா 4, மீகா 7, நாகூம் 3, ஆபகூக் 3, செப்பனியா 3, ஆகாய் 2, சகரியா 14, மல்கியா 4. 39 புஸ்தகங்களிலும் 929 அதிகாரங்களுண்டு. எளிதில் மனதில் பதியத்தக்கதாக ஒவ்வொன்று 12 புஸ்தகங்களுள்ள 2 பாகங்களும், ஒவ்வொன்று 5 புஸ்தகங்களுள்ள 3 பாகங்களும் என்று வைத்துக்கொள்ளலாம்.

(ii) எபிரேயு வேதாகமத்தில் பழைய ஏற்பாடு மூன்று பங்குகளுள்ளது.

a. நியாயப்பிரமாணம். இது மோசேயின் 5 புஸ்தகங்களைக் குறிக்கும்
b. தீர்க்கதரிசனாகமங்கள். இவை காலக்கிரமப்படி முந்தினவை பிந்தினவை எனப் பிரிக்கப்பட்டுள்ளன.



1. முந்தினவை, யோசுவா, நியாயாதிபதிகள், 1 & 2 சாமுவேல் 1 & 2 ராஜாக்கள்.
2. பிந்தினவை, ஏசாயா, எரேமியா, எசேக்கியேல் எழுதிய புஸ்தகங்களும் 12 சின்ன தீர்க்கதரிசனாகமங்களும்.

c. சங்கீதங்கள் அல்லது பரிசுத்த எழுத்துகள். சங்கீதம், நீதிமொழிகள், யோபு, உன்னதப்பாட்டு, ரூத், புலம்பல், பிரசங்கி, எஸ்தர், தானியேல், எஸ்றா, நெகேமியா, 1 & 2 நாளாகமம்.

நம்முடைய இரக்ஷகர் காலத்திலிருந்த பழைய ஏற்பாட்டின் பிரிவுகள் இவைகளே, லூக்கா 24: 44.

## 2. புதிய ஏற்பாடு.

புதிய ஏற்பாடு மூன்று பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதில் 260 அதிகாரங்களுள்ள 27 புஸ்தகங்களுண்டு.

(1) a. சரித்திரபாகம் 5. மத்தேயு 28, மாற்கு 16, லூக்கா 24, யோவான் 21, அப்போஸ்தலர் 28.

b. நிருபபாகம் 21. ரோமர் 16, 1 கொரிந்தியர் 16, 2 கொரிந்தியர் 13, கலாத்தியர் 5, எபேசியர் 6, பிலிப்பியர் 4, கொலொசேயர் 4, 1 தெசலோனிக்கேயர் 5, 2 தெசலோ. 3, 1 தீமோத்தேயு 6, 2 தீமோத்தேயு 4, தீத்து 3, பிலேமோன் 1, எபிரேயர் 13, யாக்கோபு 5, 1 பேதுரு 3, 2 பேதுரு 3, 1 யோவான் 5, 2 யோவான் 1, 3 யோவான் 1 யூதா. 1.

c. தீர்க்கதரிசனபாகம். வெளிப்படுத்தல் 22.

இப்பிரிவுகள் பூரணமானவை என்று சொல்லக்கூடாது. ஏனெனில் சரித்திராகமங்களில் தீர்க்கதரிசன, உபதேச பாகங்களும் நிருபங்களில் சரித்திர, தீர்க்கதரிசன பாகங்களுமிருக்கின்றன.

ii. வேதாகமம் அதிகாரங்களாகப் பிரிக்கப்படல். இது 1263-ல் மரித்த கார்டினல் ஹியுகோடி ஸாங்க்ரோ என்பவரால் லத்தீன் வேத அகராதி எழுதுவதற்கு உதவியாயிருக்கும்படி செய்யப்பட்டது. இவ்வதிகாரங்கள் மனப்பாடம் செய்வதற்கு உதவியாயிருந்தபோதிலும், ஒழுங்காய் பிரிக்கப்படவில்லை. ஒழுங்காயிருக்கும் இடத்திலுங்கூட அவை கருத்து மாறவும் மங்கவும் செய்கின்றன. ஆதலால் ஒரு புஸ்தகத்தின் சாராம்சத்தை அறிய அவைகளைச் சட்டைபண்ணாமல் வாசிப்பதே நன்று.

iii. வாக்கியங்களாகப்பிரித்தல். இது அதிகாரங்களாகப் பிரித்த 300 வருஷங்களுக்குப்பின் ராபர்ட் ஸ்தேவான் என்பவரால் செய்யப்பட்டது. இவர் முதலில் கிரேக்க புதிய யேற்பாட்டை வாக்கியம் வாக்கியமாகப் பிரித்தெழுதினார். 1560-ல் சீர்திருத்தக்காரரால் பிரசுரிக்கப்பட்ட ஜினேவா வேதாகமம்தான் வாக்கியம் வாக்கியமாகப் பிரிக்கப்பட்டுள்ள

முதல் வேதாகமம். தள்ளுபடி ஆகமங்களை நீக்கிவிட்டு அச்சிடப்பட்ட முதல் வேதாகமமும் அதுவே.

வேதாகமப் புதுத் திருப்புதல் செய்தவர்கள் துவக்கத்தில் அதிகாரம், வாக்கியமாக பிரிப்பதை விட்டுவிட்டார்கள். ஆயினும் இப்போது அப்படி அதிகாரம் வாக்கியமாகப் பிரிப்பதால் இருக்கிற பிரதிகூலத்தைப் பார்க்கிலும் அதிகமாய் அநுகூலமிருப்பதாகக்கண்டு, முன்போலவே அதிகாரம் வாக்கியமாகப் பிரித்து அச்சிடுகிறார்கள்.

## II. வேதாகம அமைப்பு.

(௨) சாமர்வில் என்னும் வேத சாஸ்திரியார் வேத புஸ்தகத்தைப்பற்றிக் கொடுக்கும் சிறந்த வர்ணிப்பை இங்கு வரைவது நலம்:—

பரிசுத்த வேதாகமத்தை 1700 வருஷங்களாய்க் கட்டி முடிந்த ஒரு மாட்சிமையான ஆலயத்துக்கு ஒப்பிடலாம். அதைக் கட்டிமுடித்த கொற்றனும் சிற்பாசாரியும் தேவனே. சிருஷ்டிப்பில் விளங்கிய அவரது விசித்திரமான கைவேலையை இவ்வாலயத்தின் எப்பாகத்திலும் காணலாம். இதில் விசாலமும் வெவ்வேறு விஸ்தீரணமுமுள்ள 66 அறைகளுண்டு. அதிலுள்ள 31,163 வாக்கியங்களும் லீபனோனின் சோலையிலுள்ள எந்த உத்திரத்தையும், அதன் கேணியிலுள்ள எந்தக் கல்லையும்விட மேலானது. கட்டடமோவெனில் சாலொமோன் அல்லது செருபாபேல் கட்டினதைப் பார்க்கிலும் எவ்வளவோ சிறப்பானது. இந்த அலங்காரமான ஆலயம் தேவனுடைய முழுக்குடும்பத்துக்கும் உறைவிடம். இங்கே அவர்கள் போஷிக்கப்படுகிறார்கள், பராமரிக்கப்படுகிறார்கள், போதிக்கப்படுகிறார்கள், நித்தியத்துக்கென்று ஆயத்தம் செய்யப்படுகிறார்கள். இதனுள் தேவனுடைய குடும்பம் அல்லது சபைமாத்திரமல்ல தேவனே காணப்படுகிறார். இந்த ராஜாவினிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு உள்ளே பிரவேசிப்போம். அலங்காரமான தோட்டமாகிய ஏதேன் தோட்டத்தின் வழியாய் நடந்து முதலில் புராதனமான ஒரு கட்டடத்தைப் பார்க்கிறோம். இதில் 5 அறைகளிருக்கிறது. இவை நீதி நியாயத்தைக் காட்டும் அறைகளாம்—அதாவது மோசேயின் ஐந்து ஆகமங்கள். முன்மண்டபம் இவைதான். அப்பால் கூட்டமான 12 அறைகளுக்கு வருகிறோம். இவைதான் அக்கட்டடத்திலுள்ள புத்தகசாலை. இதில் சரித்திர ரிக்கார்டுகளையும், யோசுவா முதல் எஸ்தர்வரையுமுள்ள சபையின் 1000 வருஷ ரிக்கார்டுகளையும் காண்கிறோம். இதைக்கடந்து பரிசுத்தவான்கள் தேகாப்பியாசம் செய்யும் அப்பியாசஸ்தலத்துக்கு வருகிறோம். இதுதான் யோபின் புஸ்தகம். அங்கிருந்து பாட்டுக்கச்சேரி நடக்குமிடத்துக்கு வருகிறோம்—சங்கீதபுஸ்தகம், இங்கேதான் கவிபாடும் பாடகரும், பாடகிகளும் வீணையோடும் கைத்தாளங்களோடும் பாடுகிறார்கள். அப்பால் வியாபாரம் நடக்கு மறைக்கு வரு



கிறோம். நீதிமொழிகள். அதற்கடுத்தாப்போல் விசேஷமான ஒரு சிறிய அறையிருக்கிறது. இதுதான் வழிதவறினவர்கள் கண்டிக்கப்படும் ஸ்தலம்.—பிரசங்கி. அதைக் கடந்ததும் புலம்புகிறவர்களுடன் அநுதாபம் காட்டும் அழகான அறையொன்றிருக்கிறது—புலம்பல். கட்டடத்தின் இப்பாகத்தில் பலயிடங்களில் கீழ்நாட்டுப் பூந்தோட்டங்கள் உண்டு. இவை ரூத்தும் உன்னதப்பாட்டும். அடுத்தாப்போல் உச்சித அலங்காரம் பொருந்திய பதினைந்து அறைகளைக் காணலாம். உள்ளே பிரவேசித்தால் கண்ணுக்குத் தோன்றும் அலங்காரத்தால் பிரமிப்புண்டாகும். இவைதான் தீர்க்கதரிசன அறைகள்.

இவைகளைக் கடந்ததும் தற்கால முறையாய்க் கட்டப்பட்டுள்ள பாகத்துக்கு வருகிறோம். உள் பிரவேசித்ததும் எவ்வளவேனும் பழுதில்லாத வெள்ளைக்கற்களால் கட்டிய நான்கு அறைகளைக் காண்கிறோம். அவைகளின் சுவர்களில் பரிசுத்த ஆவியானவரின் கைகொண்டு வரைந்ததும், கட்டடத்தின் சொந்தக்காரரான ஆண்டவரின் முழுச்சாயலுமான படங்களைக்காணலாம். இவைதான் நான்கு சுவிசேஷங்கள். இவைகளைக் கடந்தவுடனே உருளைகள் உருளுகிறதினாலும், கீச்சிடுகிறதினாலும் இன்னுமனேக யந்திரங்கள் வேலை செய்வதாலுமுண்டாகக்கூடிய விநோத தொனிகளைக் கேட்கிறோம். ஒவ்வொரு யந்திரமும் சொல்லமுடியாத வேகத்துடன் அசைகிறது. அசையச்செய்யும் வல்லமையைத் தேடிப் பார்த்தால் கண்ணுக்குத் தென்படுகிறதில்லை. ஏனென்றால் அது மேலேயிருந்து வருகிறது. இதுதான் கட்டடத்தின் தொழிற்சாலை—அப்போஸ்தலர் நடபடிகள். அங்கிருந்து புறப்பட்டு ஒன்றன்பின் ஒன்றான இருபத்தொரு வெகு அலங்காரம் பொருந்திய அறைகளைக் காண்கிறோம். அவைகளில் 14 அறைகளின்மேல் கண்ணியமான ஒரே ஒரு பெயர் வரையப்பட்டிருக்கிறது. இது புறஜாதிகளின் அப்போஸ்தலன் என்பதே. மற்றவைகளில் யோவான், யாக்கோபு, யூதா என்னும் பெயர்கள் வரையப்பட்டிருக்கக்காணலாம். இவைதான் அப்போஸ்தலருடைய நிருபங்களாகிய அறைகள். இவைகளில்தான் கர்த்தர் தம்முடைய வீட்டின் மிகவும் விலையுயர்ந்த பொக்கிஷங்களைச்சேர்த்து வைத்திருக்கிறார். கடைசியாக நாம் கட்டடத்தின் அந்தத்துக்கு வருகிறோம். இங்கே வெளிச்சமும் நிழலும் விநோதமாய்க் கலந்துள்ள ஒரு ஆச்சரியமான மேல்வீட்டைப் பார்க்கிறோம். அதன் சொல்லிமுடியாத அலங்காரக்காட்சிகள் நம் கண்ணுக்கெதிர்ப்படுகின்றன. இதுதான் வெளிப்படுத்தல் என்னும் அலங்கார மேல்வீடு. இங்கே மணவாளனை கிறிஸ்துவானவர் தாமே வருமளவும் பூமியிலிருக்கும் கிறிஸ்து சபையின் நிலைமையைக் காணலாம். இதன் தட்டட்டியில் ஏறிச் சற்று சுற்றிப் பார்ப்போம். வெகு அழகான புல் வெளியொன்று தெரிகிறது. அதிலே ஜீவத்தண்ணீர் ஓடும், சுத்தஜலமுள்ள நதி பாய்கிறது. அதன் கரைகளில் பன்னிரண்டு விதமான கனிகள் கொடுக்கும் ஜீவ விருக்ஷம் நிற்கிறது. அதன் இலைகள் ஜாதிகள் சொஸ்தமாகிறதற்கான மருந்து. நமக்கு நேரே வெகு உயரத்தில் நித்திய மலைகளின்மேல் ஜோதிப்பிரகாசமும் மகிமையும் பெற்றிலங்கும் புதிய எருசலேமாகிய பொன்னகர் தெரிகிறது. அதன் அஸ்திபாரம் விலையேறப்பெற்ற கற்களால் போடப்பட்டது. அதன் சுவர்கள் வச்சிரக்கற்களாலும் அதன் வாசல்கள் முத்துக்களாலும் செய்யப்பட்டவை. அதற்கு சூரியனும் சந்திரனும் தேவையில்லை கர்த்தரின் மகி

மையே அதைப் பிரகாசிப்பிக்கும். ஆட்டுக்குட்டியானவரே அதன் வெளிச்சம்.

(b) வேதாகமத்தின் அமைப்பை வேறோர் விதமாய்ச் சீர்தூக்கிப் பார்த்தால் அடுக்கடுக்கான சத்தியங்கள் உள்ளவை என்னலாம்.

சரித்திரக்கோர்வையானவை.
சரி தப்பிதம் என்று காட்டும் சன்மார்க்கத்துக்குரியவை.
ஜெப ஸ்தோத்திரங்களைக் காட்டும் ஆவிக்குரியவை. [வை
நியமங்களையும் ஆட்களையும் குறிப்பிடும் முன்னடையாளமான
யூதர், புறஜாதியார், தேவனுடைய சபையைக் குறித்தவை.
இன்னும் நிறைவேறயிருக்கும் வருங்காலத்துக்கடுத்தவை.

(c) பின்வருபவற்றை வேதாகமத்தில் காலியான ஒரு பக்கத்தில் வரைந்துகொள்ளுதல் நலம்.

வேதாகமத்தில் 66 புஸ்தகங்கள், 1189 அதிகாரங்கள், 31,163 வாக்கியங்கள் (இங்கிலிஷில்) 773,746 வார்த்தைகள், 35,66,480 எழுத்துகள் உண்டு. வேதாகமத்தில் மத்தியும், மிகவும் சிறிதுமான அதிகாரம் 117-ம் சங்கீதம். 'மத்திவசனம் சங்கீதம் 118: 8. பழைய யேற்பாட்டில் சிறிய புஸ்தகம் ஒபதியா.

இங்கிலிஷ் வேதாகமத்தில், எஸ்றா 7: 21-ல் J என்ற எழுத்துத் தவிர மற்றைய 25 எழுத்துக்களையும் காணலாம்.

## ஜீவத்தண்ணீர் பத்திரிகை.

புது மானேஜர். பாளையங்கோட்டை மேரி ஆர்டன் ஸ்கூல் Mr G. D. தேவதாசன் உபாத்தியாயரவர்கள் செப்றெம்பர் மாதம் முதல் இந்தப் பத்திரிகைக்கு மானேஜராக ஏற்படுத்தப்பட்டிருப்பதால், பத்திரிகை விஷயமான சகல காரியங்களுக்கும் அவர்களுக்குக் கடிதம் எழுதிக்கொள்ளவும், சந்தாப்பணங்களை அவர்களுக்கே அனுப்புவிக்கவும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

S. G. மதுரம்,
*Editor.*

## நோட்டீஸ்.

கனம்: S. பரமானந்தம் ஐயரவர்களின் 'சுவிசேஷ பிரசங்கங்கள்' (Gospel Addresses) என்ற புஸ்தகம் இரண்டாந்தரம் பிரசுரிக்கப்பட்டு முன்னிலும் குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது. தபால்கூலி நீங்கலாக பிரதி ஒன்றுக்குக் கிரயம் அணா 6. வேண்டியவர்கள் அடியில்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**Revd. S. Paramanandham,**
*F. C. Mission*
*Royapuram*
*Madras.*

Printed at the Church Mission Press, Palamcottah and Published by the Christian Brotherhood Association.

November, 1913. Registered No. M—163.

2 JAN 1914 MADRAS.

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." (யோவான் 7: 38)

Vol. XIV நவம்பர்மீ 1913

## விலைப்பிரசங்கம்.

'என் கண்கள் எப்போதும் கர்த்தரை நோக்கிக்கொண்டிருக்கிறது; அவரே என் கால்களை வலைக்கு நீங்கலாக்கிவிடுவார்' சங். 25: 15.

நாம் கர்த்தரைக் கண்டநாள் எவ்வளவு இன்பநாள்! மோட்சம் நம்முள்ளத்தில் உதித்ததுபோலிருந்ததே. அது இன்பநாள், இன்பநாள் என்று ஆண்டவர் நாமத்தை ஆவலோடு போற்றினோமே. அந்நாளில் பெற்ற ஈவு வரவரப் பெருகவேண்டுமேயன்றி அது எவ்விதத்திலும் குறைந்துபோகக் கூடாது. சந்தோஷத்தின்மேல் சந்தோஷத்தையும், பெலத்தின்மேல் பெலத்தையும், மகிமையின்மேல் மகிமையையுமடைந்த கிறிஸ்துவின் ரட்சண்ய மகத்துவத்தை நாம் எங்கும் பிரஸ்தாபிக்கவேண்டுமென்பது தேவனுடைய வாஞ்சையும் தீர்மானமுமாயிருக்கிறது. இதற்கென்றே தமது குமாரனைத் தந்தார், ஆவியை அனுப்பினார், அருமையான வாக்குகளை அருளிச் செய்தார், கிருபையின் எத்தனங்களை நியமித்தார், விசேஷித்த சிலாக்கியங்களையும் கட்டளையிட்டார். அனாதி தேவன் மாறவில்லை, அருமை ரட்சகர் மாறவில்லை, ஆவியானவர் மாறவில்லை, தேவனுடைய கிருபை வரங்களும் அவர் நம்மை அழைத்த அழைப்பும் மாறவில்லை. எவ்வளவு வாஞ்சையோடு நம்மில் ரட்சிப்பைத் தொடங்கினாரோ அவ்வளவு வாஞ்சையோடு அதைப் பூரணப்படுத்த அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். இப்படியிருக்க அவருடைய பிள்ளைகளின் ஜீவியம் வேறுவிதமாயிருப்பதற்குக் காரணமென்ன? சந்தோஷத்துக்குப் பதிலாகச் சஞ்சலமும், அனலுக்குப் பதிலாகக் குளிரும், அன்புக்குப் பதிலாகப் பகையும், சுத்தத்திற்குப் பதிலாக அசுத்தமும், ஜெயத்திற்குப் பதிலாகத் தோல்வியும் காணப்படுவோ

னேன்? நன்றாய் ஓடின கால்கள் வலையில் சிக்கிக்கொண்டபடியினாலல்லவா? சாத்தானுடைய தந்திரங்கள் தெரியாதவைகள் அல்லவேயென்று அப்போஸ்தலனைப்போல நாம் சொல்லக்கூடியவர்களல்ல. அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரிந்திருந்தால் அவன் வலைகளில் அகப்பட்டிருக்கமாட்டோம்.

1. வலையின் விசேஷம். பல வகையான வலைகள் உண்டு. அவைகளைக்கொண்டு மீன்களையும் மிருகங்களையும் பட்சிகளையும் பிடிப்பார்கள். வலையின் விசேஷம் என்னவென்றால், அவைகளைத் தனித்தனியே பிரித்துப் பார்த்தால் மிகவும் அற்பமும் பெலவீனமுமாகத் தோன்றும். நார்க்கயிறுகளினால் வலைகளையும், மயிரிழைகளால் கண்ணிகளையும் பின்னுகிறார்கள். அவைகள் வலைகளாகப் பின்னப்பட்டபின்போ மகா பெலமுள்ளவைகளாயிருக்கும். மிருகங்களுக்கு அரசனாகிய சிங்கம் ஒருநாள் வனாந்தரத்தில் நித்திரை செய்கையில் ஒரு சுண்டெலி அதை மிருகமென்று அறியாமல் அதின்மேல் ஏறி உலாவினதாம். மிருகேந்திரனுக்குக் கோபமூண்டு அந்தச் சுண்டெலியைக் கொல்ல எத்தனித்தபோதிலும், அந்தச் சிறு ஜெந்துவைக் கொல்லுவது தன் அந்தஸ்துக்குக் குறைவென்றாற்போல் மன்னித்துவிட்டதாம். சிலநாள் பொறுத்து இந்தச் சிங்கம் ஒரு வலையில் அகப்பட்டுக்கொள்ளவே, வலையைக் கிழித்துக்கொண்டு உயிர் தப்பக்கூடாமல் அந்தச் சின்னச் சுண்டெலி தன் பக்கமாய் வருவதைக் கண்டு: நான் உனக்கு இரங்கவில்லையா, இச்சமயம் நீயும் எனக்கு இரங்கவேண்டுமென்று மன்றாட சுண்டெலி தன் கூரிய பற்களால் வலையைக் கத்திரித்துச் சிங்கத்தைத் தப்பவைத்ததென்று ஓர் கதையுண்டு. பெலவீனமான நூலானாலும் வலையாகப் பின்னப்பட்டபின் சிங்கத்தின் பெலத்துக்கும் மிஞ்சினதாய்ப் போய்விட்டதல்லவா?. .

ஆவிக்குரிய ஜீவியத்தில் தேவனுடைய பிள்ளைகள் அகப்பட்டுக்கொள்ளுகிற கண்ணிகளும் வலைகளும் இப்படிப்பட்டவைகளே. பார்வைக்கு அற்பமாகத் தோன்றும். ஆயினும் அவைகள் அற்பமானவைகளல்ல. ஒரு சிறு பார்வை என்னும் நூலால் பின்னப்பட்ட வலையில் தாவீது அகப்பட்டுக்கொண்டு பட்டபாடு எவ்வளவு! ஒரு சிறு பொய் என்னும் கண்ணியினால் ஆபிரகாமுக்குண்டான நிந்தையும் சஞ்சலமும் கொஞ்சமல்ல. ஒரு சிறு கோபம் பக்தனாகிய மோசேயை கானானை இழக்கப்பண்ணிற்றே. பொருளாசை என்னும் வலையில் அகப்பட்ட யூதாசின் கதி என்னமாயிற்று? இது சின்னப்பாவம், அது அற்பப்பாவம் என்று பேசவேண்டாம். சிறு நெருப்பு பெருங்காட்டைக் கொளுத்தும். சிறு நரிகள் பெரிய தோட்டங்களைக் கெடுக்கும். ஐயோ! பாவம் என்னைப் பலமாய் ஆண்டுகொண்டதே, என்னமாய் நான் தப்பப்போகிறேன் என்று கலங்குகிற என் சகோதரனே! அந்தப் பாவங்கள் எப்போ ஆரம்பித்தது, எப்படி ஆரம்பித்தது என்று கொஞ்



சம் யோசிக்கமாட்டாயா? ஆரம்பம் மகா அற்பமாயிருந்ததல்லவோ? அவ்வளவு மோசம்போல் அப்போது தோன்றவில்லையே. அந்த ஒரே பார்வை, அந்த ஒரே பேச்சு, அந்த ஒரே பழக்கம், அந்த ஒரே சிநேகம், அந்த ஒரே கடிதம், அந்த ஒரே புஸ்தகம், இன்று உன் கால்களைக் கட்டிக் கீழே உருட்டிவிட்டதல்லவோ? பழைய சந்தோஷம் எங்கே? சிம்சோனே! உன் பழைய வல்லமை எங்கே? பழைய வெற்றி எங்கே? பழைய ஜெப வாஞ்சை எங்கே? பழைய வேத ஆராய்ச்சி எங்கே? பழைய ஆத்மதாகம் எங்கே? ஐயோ கண்ணிகளும் வலைகளும் காலைச் சுற்றிக்கொண்டது பொய்யோ?

2. வலை விரிக்கப்படுகிற இடம். வலையைப்பற்றிப் பேசின சங்கீதக்காரன் வலைகள் விரிக்கப்படுகிற இடத்தைப்பற்றியும் பேசியிருக்கிறான். 'அகங்காரிகள் வழியோரத்திலே எனக்கு வலையை விரித்து எனக்குச் சுருக்குகளை வைக்கிறார்கள்' என்றான் (சங். 140: 5). நாம் கடற்கரையோரம் நின்று மீன்பிடிக்கப் போகிறவர்களைப் பார்ப்போமானால் ஒருநாள் வடக்குநோக்கியும், இன்னொருநாள் கிழக்குநோக்கியும், வேறொருநாள் தென்கிழக்காகவும் தங்கள் படவுகளை வலித்துப்போவதைக் காணலாம். ஏன் இப்படியென்று கேட்டால் மீன்கள் எந்தெந்தச் சமயத்தில் எங்கெங்கே அகப்படக்கூடுமென்பதை அறிந்து அவைகள் வருகிற வழியிலே வலைகளை விரிக்கிறோம் என்பார்கள். சமுத்திரமெங்கும் மீன், எங்கே போட்டால் தானென்னவென்று அவர்கள் ஒருபோதும் சொல்லார்கள். இராமுழுவதும் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லையே என்று சீஷர்கள் சொன்னபோது நீங்கள் படவுக்கு வலதுபுறமாக வலைகளைப் போடுங்கள் என்று இரட்சகர் சொல்லவில்லையா? பட்சிகளைப் பிடிக்கிறவர்களும் அவைகள் நடமாடும் இடங்களை அறிந்து அங்கே வலைகளை விரித்து அவைகளைப் பிடிக்கிறார்கள். மான், மரை, முயல் முதலான மிருகங்களைப் பிடிக்கிறவர்களும் அவைகள் மலைச்சார்புகளிலிருந்து மேய்ச்சலுக்கு இறங்கிவரும் வழியோரங்களில் தங்கள் வலைகளை விரித்து அவைகளைப் பிடித்துக்கொள்ளுகிறார்கள்.

நம்முடைய வழியோரங்கள் என்றால் எவை? நம்முடைய வழியோரங்கள் நமது ஜீவியமே. நாம் அகப்படக்கூடாத இடத்தில் அல்ல, நாம் போக்கும் வரத்துமாயிருக்கிற இடத்திலேயே நமக்கு வலைகள் விரிக்கப்பட்டிருக்கின்றன. சாத்தான் நமது ஜீவியத்தை அறிவான். பகலை நாம் எப்படிச் செலவிடுகிறோமென்பது அவனுக்குத் தெரியும். நம்முடைய இரவும் அவனுக்கு மறைவானதல்ல. நாம் எங்கே அகப்படுவோம், எதிலே சிக்குவோமென்பதை அவன் திட்டமாய் அறிந்திருக்கிறான். நம்முடைய வழியோரங்களை நாமும் அறிந்துகொண்டால் நல்லது. நான் எங்கே குடியிருக்கிறேன்? யாரோடு வசிக்கிறேன்? என் உத்தியோகம் என்ன? என்

ளோடு வேலை செய்கிறவர்கள் யார்? அவர்கள் எப்படிப்பட்டவர்கள்? நான் எப்படிச் சம்பாத்தியம் பண்ணுகிறேன்? என் சிநேகிதர்கள் யார்? மறைவான சிநேகம் எனக்குண்டா? நான் யாரோடு அடிக்கடி பேசுகிறேன்? என் பேச்சு எப்படிப்பட்டது? நான் அடிக்கடி செய்கிற பாவமெது? அதற்கு என்னைத் தூண்டிவிடுகிற சோதனை என்ன? நான் வாசிக்கிற புஸ்தகங்கள் எப்படிப்பட்டவை? இரவில் பிந்திப் படுக்கைக்குப் போகிறேனா? அப்படியானால் இரவில் நான் போகிற இடங்கள் எவை? இப்படிப்பட்ட கேள்விகளினால் நம்முடைய வழியோரங்களை அறிந்துகொள்ளலாம். பாவமானவைகளன்றி, கர்த்தர் நமக்கருளின நன்மைகளுங்கூட சில சமயங்களில் நமக்குக் கண்ணிகளாகலாம். ஐசுவரியம், அதிகாரம், அறிவு, சாமர்த்தியம், சௌந்தரியம், இனியகுரல், பாட்டுவரம், பேச்சுவரம், இப்படிப்பட்டவைகளிலும் சாத்தானால் கெடுக்கப்பட்டவர்கள் அநேகர்.

3. **வலை விரிக்கப்படுகிற விதம்.** 'அவர்கள் எனக்கு மறைவாய் வைத்த வலைக்கு என்னை நீங்கலாக்கிவிடும்' (சங். 31: 4). 'எவ்வகையான பட்சியானாலும் சரி அதின் கண்களுக்கு முன்பாக வலையை விரிப்பது விருதா' இரையைமாத்திரம் கவனித்து உல்லாசமாய் நடந்துவரும் பட்சிகள் மறைவாய் வைக்கப்பட்ட கண்ணியில் அகப்பட்டுக்கொண்டு தவிக்கிறதே. அப்படியே மீன்களும் புறம்பே காணப்படுகிற இரையை ஆவலோடு விழுங்க, மறைக்கப்பட்டிருந்த தூண்டிலில் மாட்டிக்கொண்டு துடிக்கின்றனவே. மிருகங்களும் மேய்ச்சலைமாத்திரம் கவனித்து சமீபித்துவர, மறைமாய் விரிக்கப்பட்ட வலையிலோ அல்லது குழியிலோ விழுந்து கதறுகிறதே. வலைகள் நம்முடைய வழியோரங்களில் விரிக்கப்பட்டிருக்கிறது மாத்திரமல்ல, அவைகள் நம்முடைய கண்களுக்கு மறைக்கப்பட்டிருக்கிறதென்பதை யோசிக்கும்போது நமதுள்ளம் நடுங்குகிறதே. ஆத்ம சத்துருவாகிய சாத்தான் ஆதித்தாய் ஏவாளுக்கு, அந்தக் கனியைக் காண்பித்தானேயன்றி அவளுக்கும் அவள் சந்ததிக்கும் வரப்போகிற கேட்டை மறைத்துப்போட்டானே. ஆகான் என்பவனுக்கு எரிகோவின் கொள்ளைப்பொருளைக் காண்பித்தானேயன்றி அவனும் அவன் குடும்பமும் கற்களுக்கு இரையாவதை மறைத்துப்போட்டானே. கேயாசுக்கு நாகமானின் வெள்ளியையும் மாற்று வஸ்திரத்தையும் காண்பித்தானேயன்றி அவனுக்கும் அவன் குடும்பத்துக்கும் வரப்போகிற பயங்கரமான குஷ்டரோகத்தை மறைத்துப்போட்டானே. யார் விஷயத்திலும் இப்படியே அவன் செய்கிறான். கர்த்தராகிய இயேசுவுக்கும் அவன் விரித்தவலை மறைவான வலைதான். அவரோ அவன் தந்திரங்களை அறிந்துகொண்டு அவன் வெட்டின குழியிலே அவனையே தள்ளிவிட்டார். அவ்வளவு ஞானப்பார்வை நமக்கில்லாதிருந்தால் நாம் எவ்வளவு பயபக்தியாய் நடந்துகொள்ளவேண்டும்! சத்துரு ஒருவன் ஒரு குடும்பத்தைக் கொல்லும்படி இரகசியமாய்



அந்த வீட்டுக்குள் பாஷாணத்தைப் போட்டுவிட்டான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவன் எதிலே போட்டிருக்கிறான் என்பது தெரியாமற் போனால் அவ்வீட்டார் தாங்கள் உட்கொள்ளக்கூடிய ஆகாரம், தண்ணீர் முதலிய சகல வஸ்துக்களையும் உடனே அப்புறப்படுத்தி சட்டிபானைகளை உடைத்தெறிந்து வீட்டை முழுவதுமாய் சுத்தம்பண்ணுவார்களல்லவோ? நமது ஆத்துமாவுக்குக் கேட்டையும் நித்திய நிந்தையையும் வருவிப்பதற்கு நமக்குத் தெரியாதபடி மறைவாகக் கண்ணிகள் வைக்கப்பட்டிருப்பது மெய்யானால் நாம் எவ்வளவு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

4. **வலை விரிக்கப்படுகிற நோக்கம்.** நம்மைப் பிடிப்பதற்காக மாத்திரமல்ல, நம்மைக் கொல்லுவதற்காகவே விரிக்கப்பட்டிருக்கிறது. பிடிபட்ட மீன்களும் பட்சிகளும் மனுஷனுக்கு ஆகாரமாகின்றன. எங்கே வலைகள் விரிக்கப்பட்டிருக்கிறதோ அவ்வலைக் குரியவனும் அங்கேயே காத்திருக்கிறான் என்கிற சத்தியத்தை நாம் மறக்கக்கூடாது. எங்கே கண்ணிகளுண்டோ அந்தக்கண்ணிகளை வைத்த வேடனும் அங்கேயே மறைந்திருக்கிறான். சாத்தானில்லாத கண்ணிகளும் வலைகளும் இல்லை. சிலந்திப்பூச்சியின் வலையை நாமெல்லாரும் பார்த்திருக்கிறோம். வீட்டு மூலைகளிலாவது, மேற்கூரைகளிலாவது மெல்லிய தன் வலையைப்பின்னி, வலையின் மத்தியில் யாதொரு அசைவின்றி பதுங்கியிருக்கும். ஒரு ஈயாவது வேறே பூச்சியாவது பறந்துவந்து அவ்வலையில் சிக்கிக்கொண்டால் உடனே தீவிரமாய் ஓடிப்பாய்ந்து அந்தப் பூச்சியைப் பிடித்து, அதைப் பறக்கவொட்டாமல் தன் நூலால் சுற்றிக்கட்டி அதின் உயிரை வாங்கிவிடும். நமக்கு வலைகள் மறைவாய் விரிக்கப்பட்டிருக்கிற நோக்கம் இதுதான். நம்முடைய வழியோரங்களில் நமக்குக் கண்ணிகளையும் வலைகளையும் மறைவாகவைத்து அவனும் அங்கே மறைந்து பதுங்கியிருக்கிறான். நாம் அகப்பட்டுக் கொண்டவுடனே நம்மைப் பாய்ந்து பிடித்துக்கொள்ளுகிறான். குருவிகள் வேடன் கையில் அகப்பட்டுத் தவிப்பதுபோல் நமது ஆத்துமா தவிக்கிறது. அவனுடைய கூரிய நகங்கள் நம்மேல் பதிந்து அவனுடைய பயங்கரமான பற்கள் நம்மேல் இறங்குமானால் நமக்கு எப்படியிருக்கும்? நாம் வலையில் சிக்குண்டு பாவம் செய்தபின் நமது ஆத்ம நிலைமை இதுதானல்லவோ? 'பாவம் செய்யும் ஆத்துமா சாகும்.' நமது ஜீவனைப்போக்குவதே வலை விரிக்கப்பட்டிருப்பதின் நோக்கம்.

5. **வலைக்குத் தப்பும் ஓரே வழி.** நம்முடைய கண்கள் இடைவிடாமல் கர்த்தரை நோக்குவதுதான். 'என் கண்கள் எப்போதும் கர்த்தரை நோக்கிக்கொண்டிருக்கிறது; அவரே என் கால்களை வலைக்கு நீங்கலாக்கிவிடுவார்'. வலைகள் என் கால்களுக்கு விரிக்கப்பட்டிருக்கும்போது நான் கீழே கவனமாய்ப் பார்த்து நடப்பதல்லவோ நியாயம். அப்படியிருக்க நான் மேல்நோக்கிப் பார்ப்பதினால் பிரயோஜனம் என்ன? ஒரு தகப்பன்

கரடுமுரடான காட்டுப்பாதையில் பிரயாணம்போகிற தன் மகனைப்பார்த்து: அப்பா! மேலேபார்த்த கண்ணாய்ப்போகாமல், கீழே பள்ளம் மேடு பார்த்துப்போவென்று சொல்லானோ? என் ஆண்டவரும் என்னைப்பார்த்து: மகனே! எங்கே பார்த்தாலும் உனக்குக் கண்ணிகளும் வலைகளும் வைக்கப்பட்டிருக்கிறது, அவைகள் எங்கேயிருக்கிறதென்று ஆராய்ந்து பார்த்து, ஜாக்கிரதையாய் நடந்துபோவென்று சொல்லாமல், நீ என்னை நோக்கிப்பார் நான் உன்னை விடுவிப்பேன் என்று சொல்வதின் ரகசியம் என்ன? தேவகிருபை என்பது இதுதான். என்னைப் பாரப்படுத்த என் ஆண்டவருக்குப் பிரியமில்லை. என் பெலவீனத்தை அவர் நன்றாய் அறிவாரே. ரட்சிப்பின் விஷயத்திலும் நாம் பெற்றுக்கொள்ளும் வேறேஎந்த ஆசீர்வாதத்திலும் நாம் செய்யும்படி அவர் கட்டளையிட்டிருப்பது கொஞ்சம், அவர் நமக்காகச் செய்வதோ அதிகம். நான் அவரை விசுவாசிக்கிறேன், அவர் எனக்கு மகத்தான ரட்சிப்பைக் கட்டளையிடுகிறார். இந்த ரட்சிப்பைச் சம்பாதிக்க அவர் பட்ட பாடு எவ்வளவு! நான் அவரில் ஒட்டிக்கொள்ளுகிறேன், அவர் என்னை மிகுந்த கனிகளைக் கொடுக்கப்பண்ணுகிறார். ஜீவனும் சாரமும் இடைவிடாத போஷிப்பும் அவருடையதுதான். நான் அவர் பின்னே போகிறேன், அவர் என்னை மனுஷரைப் பிடிக்கிறவனாக்குகிறார். வாக்கும் ஞானமும் வல்லமையும் தைரியமும் அவருடைய கிரியைதான். அதுபோலவே என் கண்கள் அவரையே நோக்கியிருக்கிறது, எனக்குத் தெரியாத சகல கண்ணிகளுக்கும் சகல வலைகளுக்கும் என்னை அதிசயமாய் விலக்கி ரட்சிக்கிறார். எங்கே வலைகள் உண்டு, எங்கே கண்ணிகள் உண்டு, எங்கே குழிகள் உண்டென்று இதுவே வேலையாய் நான் கீழ் கவிழ்ந்த கண்ணாய் இங்குமங்கும் தேடித் திரிவேனானால் என் ஜீவியம் நிர்ப்பந்தமாயிருக்குமல்லவோ? அப்படித் தேடினாலும் சாத்தானுடைய தந்திரங்களைக்கண்டு அவனுடைய வலைக்குத் தப்பும் சக்தி எனக்கில்லையே. என் அருமை ரட்சகருக்கு ஸ்தோத்திரம். அந்தப் பாரமான வேலையைத் தாம் எடுத்துக்கொண்டார். எனக்கு ஒரு சிறு வேலை கொடுத்தார். அது ஒரு வேலையுமல்ல. அது எனக்கு இன்பமாயிருக்கிறது. என் உயிருள்ள ரட்சகரின் திரு முகத்தைப்பார்த்த கண்ணாய் ஜீவிப்பேன். நான் எங்கேயிருந்தாலும், எங்கே போனாலும், என்னவேலை செய்துகொண்டிருந்தாலும், என் இருதயம் கர்த்தரையே நோக்கிக்கொண்டிருக்கும். வலைகளையும் கண்ணிகளையும்பற்றி எனக்குக் கவலையில்லை. சாஸ்திரிகளின் கண்கள் நட்சத்திரத்தை நோக்கிக்கொண்டிருந்தபோது அவர்கள் செவ்வையான வழியில் நடந்தார்கள். பிரகாசமான விடிவெள்ளி நட்சத்திரமாகிய என் ஆண்டவர் எனக்குப் போதித்து, நான் நடக்கவேண்டிய வழியை எனக்குக் காண்பிப்பார். இதுவே ரகசியம்.

கர்த்தரையே நோக்கி ஜீவித்த என் சகோதரனே! எத்தனையோ தரம்



உன் ஆண்டவர், பேதுருவின் வெண்கல விலங்குகள் கழன்று விழுந்தது போலவும், சிம்சோனைக் கட்டியிருந்த கயிறுகள் அறுந்து விழுந்ததுபோலவும், கண்ணிகள் தெறிக்கவும் நீ தப்பவும் அவர் உனக்குக் கிருபைசெய்ததில்லையோ? நாம் சில சமயங்களில் நட்சத்திரத்தைப் பார்க்க மறந்து வழி தப்பிச் சஞ்சலத்துக்குள்ளாவது மெய்தான். மறுபடியும் மேல்நோக்கிப் பார்ப்போமாக. ஓர் கப்பலிலிருந்த ஒரு சிறுவன் அங்குமிங்கும் ஓடியாடினபின், பாய்மரத்தின் மேலேறிப்பார்க்க ஆசைப்பட்டான். ஒருவருக்கும் சொல்லாமல் அவ்வுன்னதமான மரத்திலேறி உச்சியில் சேர்ந்தான். அவன் அங்கிருந்து கீழே பார்த்தபோதோ, கப்பல் இங்குமங்கும் சாய்வதையும், தண்ணீரின் ஆழத்தையும் கண்டு கலங்கி, மாலுமியைக் கூப்பிட்டு: மாலுமியே! நான் விழுந்து சாகப்போகிறேனே என்று அலறினான். பையனுடைய மோசத்தை அறிந்த மாலுமி அவனைப்பார்த்து: சிறுவனே! மேலே பார்! மேலே பார்! என்று கூவினான். அவன் மேலே பார்த்தான். மேலேபார்த்தவண்ணமாய் இப்பொழுது கீழே இறங்கு என்றான். அவன் மேலே பார்த்துக்கொண்டே இறங்கினபடியால் அச்சமின்றி இறங்கி உயிர் தப்பினான். இதை வாசிக்கும் என் சகோதரனே! அதுவே உனக்கும் கட்டளை. நீ கர்த்தரோடு நெருங்கிச் சஞ்சரிப்பாயானால், உன் கண்கள் எப்போதும் அவரையே நோக்கிக்கொண்டிருக்குமானால் உன் எல்லாப் பயத்துக்கும், சத்துருவின் சகல தீமைகளுக்கும் அவர் உன்னை நீங்கலாக்கி ரட்சிக்கிறவர் என்பதை நீ அறிந்துகொள்வாய்.

S. பரமானந்தம்.

## "நீ எரிச்சலாயிருக்கிறது நல்லதோ?"

"யோனா கடுங்கோபங்கொண்டு, கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி; ஆ கர்த்தாவே, நான் என் தேசத்தில் இருக்கும்போதே நான் இதைச்சொல்லவில்லையா? இதினிமித்தமே நான் முன்னமே தர்ஷீசுக்கு ஓடிப்போனேன். நீர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவரும், தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமான தேவனென்று அறிவேன். இப்போதும் கர்த்தாவே, என் பிராணனை என்னைவிட்டு எடுத்துக்கொள்ளும், நான் உயிரோடிருக்கிறதைப்பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும் என்றான். அதற்கு கர்த்தர்: நீ எரிச்சலாயிருக்கிறது நல்லதோ என்றார்." யோனா 4: 1—4.

யோனாவின் தீர்க்கதரிசன புஸ்தகத்தில், நினிவேப்பட்டணத்தின் சரித்திரம் முக்கியப்படுத்தப்படாமல், யோனா தீர்க்கதரிசியின் நடக்கையே முக்கியப்படுத்தப்பட்டிருக்கிறதைப் பார்க்கலாம். நினிவேயின் குணப்படுதல்

மகாமுக்கியமான காரியந்தான். ஆனால் யோனாவுடைய ஆவிக்குரிய பயிற்சியே இந்தப் புஸ்தகத்தின் முக்கிய நோக்கமாகக் காணப்படுகிறது. ஆண்டவர் தமது ஊழியக்காரனைப் பயிற்றுவிப்பதற்கு உபயோகிக்கிற முறைகளைப் பார்த்து நாம் ஆச்சரியப்படவேண்டியதாயிருக்கிறது. ஊழியர்கள் இதைச் சரியானபடி உணருவார்களானால் மிகவும் நன்மையாயிருக்கும் இலட்சக்கணக்கான ஜனங்களடங்கிய ஒரு பெரிய பட்டணத்தின் குணப்படுதலைப் பார்க்கிலும் அதில் ஊழியஞ்செய்ய அனுப்பப்பட்ட ஒரே மனிதனுடைய ஆவிக்குரிய ஜீவியமே ஆண்டவருடைய பார்வையில் மகா முக்கியமாய் எண்ணப்படுகிறது. தேவ ஊழியரானவர்கள் இதை உணர்ந்து கொள்ளத்தக்கதாக மூன்று காரியங்களை எடுத்துக் காட்டுவோம்.

1-வது, தேவ ஊழியக்காரனிடத்தில் இருக்கவேண்டிய மேலான இலட்சணம் என்ன? மகா பெரிய பரிதாபமே! கர்த்தர் ஒரு மனுஷனுடைய கையிலே இரட்சிப்பின் செய்தியைக்கொடுத்து, அதை ஏற்றுக் கொண்டவர்களுக்கு நித்திய ஜீவனையும் அதை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு அழிவையும் கூறி அறிவிக்கும்படி அவனை அனுப்பும்போது, அந்த ஒரு மனிதன்பேரில் இருக்கும் உத்தரவாதத்தையும் பொறுப்பையும் யார் அளவிடக்கூடும்? இந்த உத்தரவாதமான ஊழியத்தைப்பெற்ற மனிதன் உடனே பயபக்தியுள்ளவனாகி, இந்தப் பெரிய ஊழியத்தைச் செய்யத் தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ளவேண்டும். தன்னை இந்தப்பெரிய ஊழியத்துக்கு அனுப்புகிற ஆண்டவர் தாமே அதற்கு வேண்டிய மேலான குணங்களைத் தனக்கு அருளும்படி கெஞ்சவேண்டும். தன்னை அனுப்புகிற ஆண்டவர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர் என்று யோனா அறிந்திருந்தான். அந்த குணங்களுக்காகத்தானும் கெஞ்சவேண்டும். ஆண்டவருடைய அளவில்லாத பரிதாபமே யோனாவை நினிவேக்கு அனுப்புவதற்குக் காரணம். நான் நினிவேக்காகப் பரிதபிக்காதிருப்பேனோ என்று ஆண்டவர் சொல்லுகிறார். ஆத்துமாக்கள் பேரில் பரிதாபமற்றவன் அவர்களுக்கு ஊழியக்காரனாயிருக்க முடியாது. ஒருவேளை யோனாவின் ஊழியத்தைப்போல அவனுடைய ஊழியம் ஆசீர்வதிக்கப்பட்டதுபோல காணப்பட்டபோதிலும், ஆத்துமாக்கள்பேரில் பரிதாபமற்ற ஊழியக்காரன்பேரில் ஆண்டவர் பரிதாபம் கொள்ளமாட்டார் என்பது நிச்சயம். தேவ ஊழியரே, நமக்குக் கொடுக்கப்பட்ட தேவ ஊழியம் நமது ஜீவியத்தை உயர்த்தத்தவறிவிடுமானால், ஆண்டவர் கூட நமக்காகப் பரிதபிக்கக்கூடாத நிலைமைக்கு நாம் விழுந்துவிடுவோம் என்றெண்ணி எச்சரிக்கையாயிருப்போமாக.

2-வது, தேவஊழியக்காரன் விலகிக்கொள்ளவேண்டிய அற்பத்தனம் என்ன? தன்னை அனுப்புகிற தன் ஆண்டவர்பேரில் சந்தேகங்கொண்டு, அவருடைய நடத்துதலைக்குறித்து இடறலடைவதுதான் ஊழி



யக்காரனிடத்தில் காணப்படக்கூடாத அற்பத்தனம். இப்படிப்பட்ட அற்பத்தனம் உடனே கீழ்ப்படியாமைக்கும் அஜாக்கிரதைக்கும் வழி நடத்திவிடும் என்பது நிச்சயம். யோனாவின் காரியம் இப்படியே இருந்தது. ஆண்டவர் நினிவேயின்பேரில் கடுங்கோபங்கொண்டவர்போல அதற்கு அழிவைக் கூறும்படி என்னை அனுப்புகிறார். ஆனால் அவர் மகா சீக்கிரமாய்க் கோபத்தைவிட்டு மாறி இரக்கத்தைப் பாராட்டிவிடுவார். ஆதலால் நினிவேக்குப்போவதில் பிரயோசனமில்லை என்றெண்ணி, தர்ஷீசுக்குப் போனானாம். அற்ப பயபக்தியில்லாமல் ஆண்டவரிடத்திலும் அதைச் சொல்லுகிறான். என் தேசத்தில் இருக்கும்போதே நான் இதைச்சொல்லவில்லையா? இதினிமித்தமே நான் முன்னமே தர்ஷீசுக்கு ஓடிப்போனேன் என்கிறான். ஆண்டவர் நினிவேயின் மனந்திரும்புதலைப்பார்த்து அதை அழிக்காமல் மனதுருகினது அவனுக்கு மகா பெரிய வருத்தமாயிருக்கிறது. நீர் இப்படிச்செய்ததினிமித்தம், உமது ஊழியத்தில் இருப்பதைப்பார்க்கிலும் நான் சாகிறது நல்லது என்று அவன் சொல்லுகிறான். கர்த்தர்பேரில் சந்தேகங்கொள்ளுகிற ஊழியக்காரன் இவ்வளவு கீழான "நீச நிலைமைக்கு இறங்கிவிடுவான் என்பது இதினால் விளங்குகிறது. ஐயோ, ஊழியக்காரரின் அவிசுவாசமும் அற்பத்தனமும்தான் சபைகளின் சகல குறைவுகளுக்கும் காரணம்! ஊழியக்காரர் தங்களுக்கு இருக்கவேண்டிய மேலான இலட்சணங்களை நாடுமுன் சபைகள் உயிரடையவும் உயர்வடையவும் கூடாது. தேவனாகிய பரமபிதாவே, ஏழைப்பாவிகளாகிய ஊழியர்களுக்கு இரங்கும்!

3-வது, அற்பத்தனமுள்ள ஊழியக்காரரை ஆண்டவர் நடத்தும் விதமென்ன? அவர்களோடு அவர் எந்நேரமும் போர்புரிகிறார், நான் உனக்குச் சத்துருவாய் மாறிவந்தேன் என்று அவர் பிலேயாமைப் பார்த்துச் சொன்னார், அதுபோல, கீழ்ப்படியாமையின் பாதையில் செல்லுகிற எந்த தேவ ஊழியக்காரனுக்கும் அவர் சத்துருவாய் மாறி நிற்பார். எந்த மனிதனுக்கு கர்த்தர் சத்துருவாய் மாறி நிற்கிறாரோ அந்த மனிதனுக்கு ஐயோ! யோனாவைப்போல் தண்டனையின்மேல் தண்டனை வந்தும் அதைச் சற்றும் உணராமல், தங்கள் அன்பற்ற ஜீவியத்தில் உறங்கொண்டு நிற்கிற ஏழைப் பாவிகளான எத்தனையோ ஊழியர் இக்காலத்திலும் உண்டு. கர்த்தருடைய கண்டிப்பான நடத்துதல்களைப் பார்த்துப் பணிந்துவிடுவதற்குப் பதிலாக, அவர்கள் மென்மேலும் ஆண்டவர் பேரிலே தான் எரிச்சலடைகிறார்கள். ஐயோ, என்ன பரிதாபம்! நீ எரிச்சலாயிருக்கிறது நல்லதோ என்று ஆண்டவர் கேட்கிறார். ஆம், நான் மரணபரியந்தம் எரிச்சலாயிருக்கவேண்டியதுதான் என்று அற்பத்தனமாய் யோனா சொல்லுகிறான். ஊழியரே, நம்மில் காணப்படுகிற அற்பத்தனத்தோடு கர்த்தர் நித்திய போர் புரிவார் என்பதை அறிந்துகொள்ளுங்கள். அவர் தமது இரட்சிப்பின்

மகத்துவ கிரியைகளிலே நம்மைத் தம்மோடு ஐக்கியப்படுத்திக்கொள்ள விரும்புகிறார். நாமோ மதிகேட்டுக்குத் திரும்பாமல், ஊழியத்தின் பொருட்டு எஜமானில் விளங்கிய மேலான இலட்சணங்களை நாடித் தேடுவோமானால் எந்நாளும் உபயோகிக்கப்படுவோம். எஜமானோடு எந்நாளும் நமக்கு இன்ப ஐக்கியமும் கிடைக்கும்.

## நீ கிறிஸ்தவனா?

இங்கிலாந்தின் கரையில் ஓர் கப்பல் அமிழ்ந்திப்போயிற்றாம். அதனருகில் நின்ற ஓர் வள்ளக்காரன் அக்கப்பலிலுள்ளவர்களைத் தப்புவிக்க மனமற்று யாதொரு முயற்சியும் செய்யவில்லை. நியாயாதிபதி அவனை விசாரணைசெய்து, அவன் யாதொரு பிரயத்தனமும் செய்யவில்லை என்றறிந்து, 'நீ அங்கிலேயன்தானா' என்று கேட்டாராம். அப்படியே, பிசாசின் கையினின்று ஆத்துமாக்களை இரட்சிக்கும் வேலைக்கு உதவிசெய்யாதவனை, உதவி செய்யாதவர்களைப் பார்த்து, 'நீ கிறிஸ்தவனா' 'நீங்கள் கிறிஸ்தவர்களா,' என்று கேட்கமாட்டாரோ?.

2. இரண்டு எஜமான்களுக்கு ஊழியம்செய்ய ஒருவனாலும் கூடாது (மத். 6: 24). என்று இரட்சகர் சொல்லியிருக்க, தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியம்செய்து பாம்புக்குத் தலையையும், மீனுக்கு வாலையும் காட்டுகிற 'விலாங்கு' கிறிஸ்தவர்களைப் பார்த்து, 'நீங்கள் கிறிஸ்தவர்களா' என்று கேட்கமாட்டாரோ?.

3. ஒளியின் பிள்ளைகளாய் நடக்கவேண்டியதிருக்க (எபே. 5: 8) அந்தகாரத்தின் கிரியைகளைத் தள்ளிவிட்டு ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளவேண்டியதிருக்க (ரோ. 13: 12). கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைந்து நடந்து நடித்துக் காட்டுகிற 'வௌவால்' கிறிஸ்தவர்களைப் பார்த்து 'நீங்கள் கிறிஸ்தவர்களா' என்று கேட்கமாட்டாரோ?.

4. மற்றவர்கள் தங்களுக்குச் செய்யவேண்டும் என்று விரும்புகிறபடி தாங்களும் செய்யவும் (மத் 7: 12). யாக்கோபு அப்போஸ்தலன் சொல்லுகிற ராஜரீக பிரமாணத்தை நிறைவேற்ற (யாக் 2: 8) வும் மனமற்றிருக்கும் ஆத்துமாக்களைப் பார்த்து, 'நீங்கள் கிறிஸ்தவர்களா' என்று கேட்கமாட்டாரோ?.

5. மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னிக்க, ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறைபாடுண்டானால் அந்தக் குறையை அவனுக்கு மன்னிக்க (மாற் 11: 25) மனமற்றிருக்கும் மனநிலைமை உடையவர்களைப் பார்த்து, 'நீங்கள் கிறிஸ்தவர்களா' என்று கேட்கமாட்டாரோ?.



6. உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருக்கும்படி போதிக்கப்பட்டிருக்கிற கர்த்தருடைய பிள்ளைகளே (ரோ. 12: 18). சமாதானமில்லாதிருந்தும் சமாதானம் சமாதானம் என்று சொல்லி என் ஜனத்தின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்கி (எரே. 6: 14), கிருபையின் எத்தனங்களைக் கையாடி வருகிற கர்த்தருடைய பிள்ளைகளென்றழைக்கப்படுகிறவர்களைப் பார்த்து 'நீங்கள் கிறிஸ்தவர்களா? என்று கேட்கமாட்டாரோ?.

7. வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், நன்மாதிரியாயிருந்து (1 தீமோ. 4: 12), மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்களுக்கு முன்பாக பிரகாசிக்க வேண்டியதிருக்க (மத். 5: 16), ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு உலகத்திலே சுடர்களைப்போல பிரகாசிக்கவேண்டியதாயுமிருக்க (பிலி. 2 14), உங்களிலும் மற்றவர்களை இரட்டிப்பாய் நரகத்தின் பிள்ளைகளாக்குகிறவர்களைப் பார்த்து (மத். 23: 15), 'நீங்களும் கிறிஸ்தவர்களா' என்று கேட்கமாட்டாரோ?.

8. நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன் (யோ. 13: 15) என்று சொன்ன மகத்வமுள்ள ஆண்டவரின் மாதிரியைப் பின்பற்ற வேண்டியதிருக்க, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளும்படி (1 பே. 4: 5). போதிக்கப்பட்டிருக்கக்கொள்ள, மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொள்ளவேண்டியதிருக்க (கொலோ. 3: 12), நான் என்ற ஆணவம் கொண்டு, பெருமை என்னும் மேடைகளை அகற்றாமலும், பெருமை என்னும் பானையை உடைத்து தீவெட்டியைப் பிடியாமலும் இருக்கிற கிறிஸ்துவின் அடியார்களென்றழைக்கப்படுகிறவர்களைப் பார்த்து, 'நீங்களும் கிறிஸ்தவர்களா' என்று கேட்கமாட்டோரா?.

9. எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கவும் (பிலி. 4: 11), உங்களுக்கிருக்கிறவைகள் போதுமென்றெண்ணவும், நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடக்கவும் (எபி. 13: 5). வேண்டியதிருக்க, சுமை தாங்கியாகிய அவர்மேல் பாரத்தை வையாமல் எப்போதும் ஓயாத கவலை கொண்டிருக்கும் கர்த்தாவின் பிள்ளைகளென்றழைக்கப்படுகிறவர்களைப் பார்த்து, 'நீங்கள் கிறிஸ்தவர்களா' என்று கேட்கமாட்டாரோ?.

நீ கிறிஸ்தவனா? அப்படியானால் அவர் உனக்குக் கற்பிக்கிறபடி செய். ஒன்று குளிராயிரு' அல்லது அனலாயிரு. வெதுவெதுப்பாயிராதே. இருந்தாயானால் வெளி. 3: 15,16-ன் பிரகாரம் நடக்குமே. ஆகையால் ஜாக்கிரதை.

# வேதாகம ஆராய்ச்சி.

## கனம் யோசேப்பு W. கெம்ப் ஐயரவர்களால் நடத்தப்படும் வேதாகமப் பாடமுறை.

### 3-ம் பாடம்.

நம் வேதாகமப் பாடங்களை நாம் படிக்க ஆரம்பிக்கும்போதே, நம் கையிலிருக்கும் வேதாகமம் நமக்கு எப்படிக்கிடைத்தது என்று அறிந்திருக்க வேண்டியது முக்கியமான ஓர் விஷயம். கிறிஸ்தவர்களில் மிகுதியான பேருக்கு வேதாகமம் நமக்கு எப்படிக் கிடைத்தது என்று தெரியாது. இது அனாவசியம் என்று நாம் எண்ணலாகாது. நமக்குக் கிடைத்திருக்கும் பிரதிகள் பூர்வீக பிரதிகளுக்குச் சமானமானவையோ அல்லது சற்றுக் கூட்டிக் குறைத்துள்ள பிரதிகளோவென்று அறிவது வெகுமுக்கியமான ஓர் காரியம்.

**I. பூர்வீக கையெழுத்துப் பிரதிகள்.** பூர்வீக கையெழுத்துப் பிரதிகள் என்ற பதங்களைக் கேள்வியுறாத பலர் இவ்வேத பாடங்களைக் கற்பதால், அவை, அச்சடிக்கும் வித்தை கண்டுபிடிக்காத பதினைந்தாம் நூற்றாண்டுகளுக்கு முன்னுள்ள காலத்தைக் குறிப்பிடுகிறது என்று அறியவேண்டும். அக்காலத்தில் வேதபுஸ்தகம் மற்றெல்லாப் புத்தகங்களைப்போலவே கையினால் எழுதப்பட்டது. அப்படி எழுதப்பட்ட பூர்வீக பிரதிகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆயினும் சமீப காலத்தில் பூமியைத் தோண்டியெடுத்திருக்கும் பல ஆச்சரியமான பொருட்களைக் கவனிக்கையில் பூர்வீகப் பிரதிகளையே கண்டெடுக்கக்கூடுமெனத் தோன்றுகிறது. அவை இன்னமும் அழியாதிருக்கலாம்; ஓர்வேளை தேவன் தம்முடைய அளவில்லாத ஞானத்தின்படியே அவை இன்னும் மறைந்திருக்கட்டும் என்று வைத்திருக்கிறார் போலும்.

**காணமற்போன பிரதிகள்.** அவை காணமற்போனதற்குப் பல காரணங்களிருக்கலாம்:—

1. பூர்வீக பிரதிகளிலநேகம் இற்றுப்போதல் முதலிய இயற்கைக் காரணங்களால் காணமற் போயிருக்கலாம். அக்காலத்திய புஸ்தகங்கள் அல்லது சுருள்கள் பதனிட்ட தோலால் அல்லது பேப்பிரஸ் என்ற ஓர் வகை எகிப்திய மரப்பட்டையாற் செய்யப்பட்டவை. ஏடுகள் நாள்பட்டு கிழிந்துபோவது போலவே அக்காலத்திய புஸ்தகங்களும் நாளடைவில் இற்றுப்போயிருக்கலாம்.

2. பக்தியுள்ளயூதர்கள், வேதாகம நகலொன்று உபயோகிக்கக்கூடாதபடி பழசாய்ப் போகும் விஷயத்தில், அதைப் பக்திவிநயமாய்த் தகுந்த அடக்கமுறைகளுடன் ஜெப ஆலயத்தின் சுவரில் புதைத்து வைப்பது வழக்கம்.



3. மேற் கூறிய காரணங்கள் போக யுத்தங்கள் உபத்திரவங்கள் நேரிட்ட காலங்களில் அழிந்துபோகக்கூடிய வஸ்துக்களில் எழுதப்பட்ட இப்பிரதிகளைப் பத்திரப்படுத்துவது வெகு கஷ்டமான ஓர் காரியம். உதாரணமாக கி. மு. 721-ல் சமாரியா பிடிபட்டு, வடதிசையிலுள்ள கோத்திரத்தார் அசீரியரால் சிதறடிக்கப்பட்டார்கள். 2 ராஜாக்கள் 17: 5—23. கி. மு. 600—586-ல் எருசலேம் பட்டணம், தேவாலயம், ராஜாவின் புஸ்தகசாலைகள் நேபுகாத்நேச்சாரால் அழிக்கப்பட்டன. 2 ராஜாக்கள் 24, 25. கி. மு. 167-ல் அந்தியோகு எப்பிபேனஸ் என்பவன் யூதர்களைக் கொடூரமாய் இம்சிக்கையில் புஸ்தகச் சுருளான நகல்கள் யாவற்றையும் சுட்டெரிக்கக் கற்பித்தான். கி. பி. 70-ல் தீத்துவினால் எருசலேம் அழிக்கப்படுகையில் எபிரெய வேதாகமங்கள் யாவும் மறுபடியும் சுட்டெரிக்கப்பட்டன மூன்றாம் நான்காம் நூற்றாண்டுகளில் முதலாய் கட்டுக்கட்டான வேதாகமக் கையெழுத்துப்பிரதிகள் பிரித்தானியாவிலுள்ள பட்டணங்களில் அக்கினிக்கு இரையாயின. ஆயினும் முதல் முதல் எழுதிய பூர்வீக பிரதிகள் அழிக்கப்பட்டுப்போயினவென்பதற்குத் தகுந்த ரூபகாரமில்லை. வருஷந்தோறும் பூர்வீகக் கையெழுத்துப் பிரதிகளுக்குச் சமமான பிரதிகள் கீழ் தேசங்களில் பூமியைத் தோண்டுகிறவர்களால் கண்டெடுக்கப்படுகின்றன. ஓர்வேளை வெண்கல சர்ப்பத்தை இஸ்ரவேலர் நமஸ்கரித்ததுபோல ஜனங்கள் அவைகளை வணங்காதபடி, அவைகள் அழியும்படி கர்த்தர் செய்தாலும் செய்திருக்கலாம். 2 ராஜா. 18: 4.

2. பூர்வீகக் கையெழுத்துப்பிரதிகள் அகப்படாமலிருக்க, நமக்குக் கிடைத்திருக்கும் வேத புத்தகம் பூர்வீகத்தில் எழுதப்பட்டுள்ள புஸ்தகந்தான் என்பது எப்படித் தெரியும்? இதற்கு பூர்வீக பிரதிகள் இல்லாமலே, வேறநேக விதமான நியாயங்கள் கொண்டு ரூபிக்கலாம். எப்படியெனில் அவைகளிலிருந்து எடுக்கப்பட்ட நகல்களாலும், செய்யப்பட்ட மொழிபெயர்ப்புகளாலும், ஒத்து வாக்கியங்களாலும், அவைகளிலிருந்தெடுத்தெழுதிய வாக்கியங்களாலுமே.

**இதற்கிணையான ஆச்சரியப்படத்தக்க தற்கால சம்பவம்.** பூர்வீக பிரதிகள் அழிந்துபோயினும், சரியான நகல் ஒன்று மற்றநேக ஆதாரங்கள் மூலமாய் திட்ப நுட்பமாய் பிறப்பிக்கலாம் என்பதற்கு அமெரிக்காவின் ஐக்ய மாகாணங்களிலுள்ள சிநேகிதர் ஒருவர் பின்வரும் திருஷ்டாந்தத்தைச் சொன்னார். 1863-ம் ஆண்டு ஜனுவரி மாதம் 1-உ ஆபிரகாம் லின்கன் என்னும் பிரஜாதிபத்திய அதிபதி 40 லட்சம் அடிமைகளை விடுதலையாக்கின விளம்பரம் ஒன்றுக்குத் தம் கையெழுத்தும் முத்திரையும் போட்டதாகச் சொல்லுகிறார்கள். அது சாதாரணமான மட்டிக் கடுதாசியில் பிரஜாதிபதியின் சொந்தக் கைகொண்டே நான்கு பக்கங்களில் எழுதப்பட்டது. சில மாசங்கள் சென்றதும் இப்பத்திரம் சுகாதார விதிகளைக் கவனித்த ஒரு சங்

கத்தாருக்குதவியாகும் பொருட்டு ஷிக்காகோ நகரில் நடந்த ஒரு பெரிய சந்தையின் முதலாளிகளுக்கு அனுப்பப்பட்டது. அவர்கள் அதை அந்நகரவாசி ஒருவருக்கு பெருந் தொகைக்கு விற்றார்கள். அது 1871-ம் வருஷம் அந்நகரில் உண்டான பெரு நெருப்பில் அழிந்துபோயிற்று. ஆனால் அந்த விளம்பரத்திலடங்கிய வாசகம் முழுவதையும் கண்டுபிடித்துக் காட்டக்கூடும். எப்படி? அக்காலத்திலுள்ள பத்திரங்கள், வர்த்தமானப் பத்திரிகைகள், புஸ்தகங்கள், கடிதங்கள் முதலியவைகளிலிருந்தும், பிரான்சு, ஜெர்மன் முதலிய பாஷைகளில் அதை மொழிபெயர்த்தும், உபந்நியாசங்கள், பத்திரிகைகள், புஸ்தகங்களில் எடுத்துரைக்கப்பட்டவையினின்றும் உள்ள சமாச்சாரங்களை ஒருங்கு சேர்த்து எந்த நியாயஸ்தலத்தாருக்கும் திருப்தி உண்டாகத் தக்கவிதமாய் அந்தப் பூர்வீக விளம்பரத்தை ஒருவன் நிலைநிறுத்தக்கூடும்.

வேதாகம விஷயமாய்ப் பார்த்தாலோ வேறெந்தப் பூர்வீக புஸ்தகத்துக்கும் இல்லாத பிரகாரமாய் வேண்டிய கையெழுத்துப் பிரதிகளும் மொழிபெயர்ப்புகளுமுண்டு. வர்ஜில் என்பவரின் கையெழுத்துப் பிரதியான உயர்தர இங்கிலீஷ் புஸ்தகங்களுக்குப் பத்து ஆதாரம் பொறுக்கி எடுத்தால் வேதாகமத்துக்கு அப்படி ஆயிரம் எடுக்கலாம். இதனால் நாம் நம் வேதாகமத்தின் கலப்பின்மையையும் அதனுற்பத்தியின் உண்மையையும் நமக்குக் காட்டும் ரூபகாரங்கள் போதுமானவை என்றறியலாம்.

இக்கையெழுத்துப் பிரதிகளிலிருந்துண்டான நகல்களைப் பார்ப்போம்.

## II. பரிசுத்த வேதாகமங்களைப் பத்திரப்படுத்தல்.

1. இவை முதலாவது உடன்படிக்கைப் பெட்டியினுள் வைக்கப்பட்டிருந்தன. உபாகமம் 31: 9, 24—26.

மோசே பஞ்சாகமங்களை யெழுதியதும் அவை பத்திரமாயிருக்க உடன்படிக்கைப்பெட்டியினுள் வைத்தான். யோசுவா 1: 8ல் யோசுவா வாசித்ததாகச் சொல்லப்பட்டிருக்கும் கையெழுத்துப்பிரதி மோசே வனாந்திரத்தில் எழுதியதாயிருக்கவேண்டும். அப்பால் யோசியா ராஜாவின் ஆளுகையில் ஆலயத்தில் இல்க்கியாவால் கண்டெடுக்கப்பட்டதும் (2 ராஜா 22: 8.) ஆகாயவெளியில் ஒரு மரப்பீடத்தினின்று எஸ்றாவினால் வாசிக்கப்பட்டதும் (நெகே 8: 4,) யோசுவா வாசித்த அதே புஸ்தகந்தான்.

2. கையெழுத்துப் பிரதிகள். நாம் முன் கவனித்தபடி பூர்வீகக் கையெழுத்துப் பிரதிகள் இப்போது கிடையாது. ஆனால் அவைகளின் நகல்கள் உண்டு. அவைகளிலிருந்து வேதாகமத்தின் பூர்வீக வாசகத்தை நாம் அறியலாம். வாஸ்தவமாகவே இந்நகல்களை ஆயிரக்கணக்காயெண்ணலாம். 40 அல்லது 45 வருஷங்களுக்கு முன்னே வேதாகமத்தைப் புதுத் திருப்புதல் செய்ய பல ஞானிகள் ஒன்றுகூடியபோது, அவர்கள் பழைய



ஏற்பாட்டிற்கு 2000 கையெழுத்துப் பிரதிகளும் புதிய யேற்பாட்டிற்கு 3000 பிரதிகளும் வைத்திருந்தார்கள். ஒவ்வொரு பிரதியும் முழுப் பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் உள்ளதாயிராமல் அவற்றின் பாகங்களாயிருந்தாலும், ஒத்துப்பார்த்து ஆராய்ந்து திருப்பக்குறைந்தபக்ஷம் 5000 கையெழுத்துப் பிரதிகள் இருந்தன. இக்கையெழுத்துப் பிரதிகளில் பழமையானவை மூன்று—அலக்சந்திரியன், வற்றிகன், சைனேய்ற்றிக். இவை அப்போஸ்தலர் காலத்துக்கடுத்தாற்போல் வேதாகமம் இன்னவிதமாயிருந்ததெனக் காட்டுகிறது. இவைகள் கி. பி. 300க்கும் 450க்கும் இடையிலுள்ளவை.

கையெழுத்துப் பிரதிகள் இருவகை. கையெழுத்துப் பிரதிகள் ஒற்றெழுத்துப்பிரதிகள், சேர்க்கை எழுத்து அல்லது கூட்டெழுத்துப் பிரதிகள் என இரு வகைப்படும்.

ஒற்றெழுத்துப் பிரதியென்றால் எழுத்துக்கள் ஒன்றோடொன்று சேராமல் பெரிய எழுத்தில் எழுதப்பட்டது என்றும், சேர்க்கை எழுத்துப் பிரதி என்றால் விரைவாய் அல்லது எழுத்துக்களை ஒன்றோடொன்று சேர்த்து எழுதப்பட்ட பிரதியென்றும் அர்த்தம். இவ்வகையான எழுத்து மாதிரிகளைப் பார்த்துத் தான் கையெழுத்துப் பிரதி எழுதப்பட்ட காலத்தை நிதானிக்கலாம். பூர்வகால கிரேக்க கையெழுத்துப் பிரதிகள் யாவும் ஒற்றெழுத்தில் எழுதப்பட்டன. பத்தாம் நூற்றாண்டுபோல்தான் நாம் இப்போ எழுதும் வண்ணம் எழுத்துக்களைச் சேர்த்து எழுத ஆரம்பித்தார்கள். சேர்க்கையெழுத்துப்பிரதிகள் ஒற்றெழுத்துப் பிரதிகளிலும் பிந்தியவையாதலால் ஒருவாறாய்ச் சேர்க்கை எழுத்துப் பிரதிகள் ஒற்றெழுத்துப் பிரதிகள்போல அவ்வளவு திட்டவட்டமானவை அல்ல என்று எண்ணுகிறார்கள்.

மூன்று முக்கிய கையெழுத்துப் பிரதிகளையும் காலக்கிரமப்படி பார்ப்போம்.

1. வற்றிக்கன். இதுதான் எல்லாவற்றிலும் பழமையானது. நாலாவது நூற்றாண்டிலிருந்திருக்கிறது. இது ரோமச்சபையின் பொக்கிஷமாக ரோமாபுரியிலுள்ள பாப்புவின் அரமனைப் புஸ்தகசாலையில் ஐந்நூறு அல்லது அறுநூறு வருஷங்களாயிருக்கிறது. சீர்திருத்தக் காலத்திலுள்ள கல்விமான்கள் ஒருவரும் அதை எடுத்து வாசியாதபடி வெகு பத்திரமாய்ப் பாதுகாத்து வருகிறார்கள். ஆயினும் ஒன்பதாவது பியூக்ஸ் என்னும் பாப்புவானவரின் அனுமதியின்பேரில் பல நகல்கள் எடுக்கப்பட்டன. அவைகளில் அநேகத்தை இங்கிலாந்திலுள்ள புஸ்தகக் காட்சிசாலையில் காணலாம். ஆதியாகமத்தில் ஓர் பாகம், 32 சங்கீதங்கள். எபிரெயர் நிருபத்தில் 9-ம் அதிகாரம் 14-ம் வசனத்துக்கு மேலுள்ள பாகம் இதில் இல்லாதபடியால் இது பூரணமான ஒரு பிரதியல்ல. இது புத்தகவடிவமாய்க் கட்டப்பட்டுள்ள 750 தாள்

கள் உள்ளது. ஒவ்வொரு பக்கத்திலும் மூன்று பத்தியுண்டு. எழுத்துக்களியாவும் ஒரு வார்த்தைக்கொருவார்த்தை இடையில்லாமல் பெரிய எழுத்தில் எழுதப்பட்டுள்ளவை. யோவான் 3: 16ஐ இங்கிலிஷில் வார்த்தைக்கு வார்த்தை இடையில்லாமல் பெரிய எழுத்தில் எழுதிப்பார்த்தால், இப்பிரதி எழுதப்பட்டிருக்கும் விதத்தை ஓர் விதமாயறியலாம்

2. சைனேற்றிக். இது மிகவும் விலையேறப்பெற்ற ஒரு பிரதி. இது கிரேக்க சபை வசமாய் ருஷியரின் தலைநகரான சென்ற் பீற்றர்ஸ்பர்க் நகரத்திலுள்ள புஸ்தகசாலையில் வைக்கப்பட்டிருக்கிறது. இது 1859-ல் ஜர்மன் வித்வ சிரோமணியான திருஷண்டார்வ் பண்டிதரால் சீனாய்மலையிலுள்ள ஒரு மடத்தில் கண்டெடுக்கப்பட்டது. இதுவும் கிட்டத்தட்ட வற்றிகன் பிரதியைப்போல பழமையானதுதான். இதில் பழைய யேற்பாட்டில் அதிகமான பாகமும், புதிய ஏற்பாடு முழுவதும், தள்ளுபடி யாகமங்களில் சிலவையு மிருக்கின்றன.

3. லண்டன் பொருட் காட்சி சாலையில் இருக்கும் அலக்சந்திரியன். இது மற்ற இரண்டைப்போல் அவ்வளவு பழமையானதல்ல. ஆயினும் ஐந்தாம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்திருக்கிறது. இது இங்கிலிஷ்காரரின் பெரும் பொக்கிஷமாக லண்டன் மா நகரிலுள்ள பிரிட்டிஷ் பொருட்காக்ஷி சாலையில் வைக்கப்பட்டிருக்கிறது. லண்டன் நகருக்குப் போய் அதைப் பார்த்தால், அது இன்னும் புதிதாய்க்காணப்படும் தோற்றமும், அதன் எழுத்துக்களின் தெளிவும் பார்க்கிறவர்களுக்கு பிரமிப்பையுண்டாக்கும். பழைய யேற்பாட்டில் பத்துத் தாள்களும், மத்தேயு சுவிசேஷத்தில் இருபத்தைந்து தாள்களும், யோவான் சுவிசேஷத்தில் இரண்டு தாளும், கொரிந்தியர் நிருபத்தில் மூன்று தாளும் இதில் இல்லை.

இது மிகவும் கவனிக்கத்தக்க ஓர் விஷயம். 1611-ல் இங்கிலிஷ் பழைய திருப்புதல் வேதாகமம் மொழிபெயர்க்கப்படுகையில் வற்றிகன் பிரதியைப்பார்க்க இடமில்லாது போயிற்று. பார்க்க முயன்றவருக்கும் கூட அதைக் காண்பிக்க மாட்டோம் என்று மறுத்து விட்டார்கள். சைனேற்றிக் பிரதி அப்போ கண்டுபிடிக்கப்படவில்லை. இங்கிலாந்தின் முதலாம்சார்ல்ஸ் அரசனுக்குக் கொன்ஸ்தாந்திநோப்பிளின் சிரேஷ்ட குருவான ஸிரில் லூக்கர் இனும் அளித்த அலக்சந்திரியன் பிரதி 1628 வரையும் லண்டன் நகர் வந்து சேரவில்லை. 17 வருஷம் பிந்திவந்தமையால் மொழி பெயர்ப்புக்கு அது அனுகூலப்படமுடியவில்லை. ஆயினும் பழமையான இப்பிரதிகளால் நமக்குக் கிடைத்த சத்தியங்கள் பூரணமாயிருக்கிறபடியால் பழைய திருப்புதலிலுள்ள எந்த ஒரு சிறிய காரியத்தை முதலாய் மாற்ற அவசியமில்லை.

Printed at the Church Mission Press, Palamcottah and Published by the Christian Brotherhood Association.

December, 1913. Registered No. M—163.

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

THE REGISTRAR OF BOOKS
2 JAN 1914
MADRAS

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, [illegible]
ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." (யோவான் [illegible]38)

Vol. XIV டிசம்பர்மீ 1913

## ஏனோக்கு
## தேவனோடு சஞ்சரித்துக்கொண்டிருந்தான்.

ஆதியாகமம் 5: 24.

ரோமாபுரியில் கிறிஸ்தவர்கள் மரணமாய் அடக்கம்பண்ணப்பட்டிருக்கிற நில அறைகளிலே, அடிக்கடி ஒரு பாதரட்சையின் படத்தை வரைந்து அதின்பேரிலே 'தேவனுக்குள்' என்ற வாசகம் எழுதப்பட்டிருக்கிறதைப் பார்க்கலாம். பரிசுத்த ஜீவியத்துக்கு இதை அடையாளமாக அந்தக்காலத்துக் கிறிஸ்தவர்கள் வைத்திருந்திருக்கிறார்கள். இது ஆச்சரியமல்ல. ஆதியாகமத்தின் இரண்டாம் அதிகாரமுதல் ஆண்டவர் தாமே இந்த உவமானத்தை உபயோகித்திருக்கிறார். தேவன் ஏதேனில் மனிதனோடு உலாவினார். பாவமில்லாத காலத்திலேயே இந்தமுறை ஆரம்பித்து விட்டது. பின்பு ஏனோக்கு தேவனோடு உலாவினான் என்று வேதம் சொல்லுகிறது. ஜலப்பிரளய காலத்திலிருந்த நோவாவும் தேவனோடு உலாவினான். புதிய ஏற்பாட்டில் இந்த உவமானம் வெகு சாதாரணமாய் உபயோகிக்கப்பட்டிருப்பதை எவரும் பார்க்கலாம்.

இந்த ஜீவியத்துக்கு ஏனோக்கு முதலாம் மாதிரியாக மனிதருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறான். அவன் முந்நூற்று அறுபத்தைந்து வருஷம் ஜீவித்ததே முன்மாதிரியான ஒரு குறிப்பு என்று சொல்லலாம். பூமியின் ஒரு வருஷம் முந்நூற்று அறுபத்தைந்து நாட்கள் அடங்கியதாயிருக்கிறது. ஏனோக்குக்கு ஒவ்வொருநாளும் ஒவ்வொரு வருஷமாகக் கொடுக்கப்பட்டது. அவ்வளவு காலத்தையும் அவன் ஆண்டவரோடு பின்னிட்டுவிட்டு, மறு உலகத்துக்குப் போனான். உலக சரித்திரத்தை, ஆதி-முற்பிதாக்க

ளின் காலம், மத்திய தீர்க்கதரிசிகளின் காலம், பின்னான கிறிஸ்தவகாலம் என்ற மூன்று காலமாகப்பிரிக்கலாம். இந்த மூன்று காலங்கள் ஒவ்வொன்றிலும் ஆண்டவர் ஒவ்வொரு பரிசுத்தவானை முன்மாதிரியாகக்காட்டி, பரலோகத்துக்கு எடுத்துக்கொண்டார். கொடுக்கப்பட்டிருக்கிற இந்த மாதிரிப்படி நடக்கிறவர்கள் அதேவித முடிவை எதிர்பார்க்கலாம். இயேசு இராஜா வரும்நாளில் அவர்கள் இவர்களைப்போல உயிரோடே மறுரூபமாக்கப்பட்டு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். ஆதலால் நாம் ஏனோக்கைப்போல தேவனோடு ஜீவிக்கப் பழகுவோமாக.

முதலாவது, தேவனோடு நடந்துபோக விரும்புகிறவன் அவர் போகிற வழியே தானும் போகவேண்டும். பாவமில்லாத காலத்தில் தேவன் வந்து மனிதனோடு உலாவினார். பாவமுள்ள காலத்தில் மனிதன் போய் தேவனோடு உலாவவேண்டும். 'ஏனோக்கு தேவனோடு உலாவினான்.' மனிதன் போகிற வழியில் தேவன் இப்போது போகமுடியாது. மனிதனே தேவனோடு போகவேண்டும். முதற்பிறப்பான இரு மனிதரும் இதற்கு உதாரணமாயிருக்கிறார்கள். காயீன், ஆபேல் என்ற அவர்கள் இருவருக்கும் தேவன் தம்மிடத்தில் சேரும் வழியை வெளிப்படுத்தியிருந்தார். விசுவாசத்தினாலே ஆபேல் பாவப்பிராயச்சித்தப் பலியைச் செலுத்தி அங்கீகரிக்கப்பட்டான். காயீனோ கர்த்தர் காட்டிய முறைக்குமாறாக, பாவப்பிராயச்சித்தப் பலிக்குமுன் சமாதான பலியைச் செலுத்தப்போனதால், தள்ளப்பட்டு, கர்த்தரைவிட்டு விலகி காரிருளுக்குள் பிரவேசித்தான். விசுவாசத்தினாலே ஏனோக்கு தேவனோடு உலாவினான். தேவன் வெளிப்படுத்தின முறையை அங்கீகரிப்பதே விசுவாசம். பிராயச்சித்தப்பலியிலேயே பாவிக்கும் தேவனுக்குமுள்ள சம்பந்தம் ஆரம்பிக்கவேண்டும். இங்கே ஆரம்பிக்காதவன் ஆண்டவரோடு உலாவ ஆரம்பிக்கமாட்டான். இதிலே தேவனுடைய வழியை ஏற்றுக்கொள்ளாதவன் மற்றவைகளிலே தேவனுடைய வழியை ஏற்றுக்கொள்ளமாட்டான். இதுவே தடை. மனிதன் தான் ஆண்டவரிடத்தில் போய், உம்மோடு சஞ்சரிப்பேன், உமது வழியில் நானும் வருவேன், உம்மோடு வர எனக்கு இடங்கொடும் என்று சொல்லிக் கெஞ்சவேண்டும். ஆரம்பமுதல் கடைசிவரையும் அவர் போகிற வழியிலே தானும் போகவேண்டும். இப்படிச் செய்கிற எவனும் தேவனோடு உலாவலாம்.

இரண்டாவது, தேவனோடு நடந்துபோக விரும்புகிறவன் தேவன் வெறுக்கிறவைகளைத் தானும் வெறுக்கவேண்டும். ஒரு திசையில் முன்னேறிச்செல்லும்போது, அதற்கு எதிரான திசையைவிட்டு வெகுதூரம் போய்விடுவோம் என்பது நிச்சயம். தேவனோடுகூட நாம் அதிகமாய் வழிநடந்துபோவோமானால், அவருக்குப் பிரியமில்லாதவைகளைவிட்டு வெகுதூரம் பிரிந்துவிடுவோம் என்பது நிச்சயம். ஏனோக்கு அப்படியே



செய்தான். 'அவன் தேவனுக்குப் பிரியமானவன் என்று அவன் எடுத்துக்கொள்ளப்படுவதற்குமுன்னமே சாட்சிபெற்றான்' எபிரே. 11: 5. தேவன் வெறுக்கிறவைகளை வெறுத்து, தேவன் விரும்புகிறவைகளை விரும்புகிறதினாலேயே எந்த மனிதனும் ஆண்டவருக்குப் பிரியமாயிருக்கலாம். பிசாசு, மாம்சம், உலகம் ஆகிய மூன்றையும் கிறிஸ்தவன் வெறுக்கவேண்டும். பிசாசினால் உண்டாகிற சகல உபதேசங்களையும் பழக்கவழக்கங்களையும் அவன் விட்டுவிடவேண்டும். பாவம் என்று அறிந்த எதையும் செய்வதும், கடமை என்று அறிந்த எதையும் செய்யாதிருப்பதும் பிசாசினாலேயே உண்டாகிறது. மாம்சம் என்பதிலே பொருளாசையும், தேக இச்சையும், அதிகாரப்பிரியமும் அடங்கியிருக்கிறது. இவைகளைத் தேடுகிறவன் உலகத்திலே இவைகளைக் கண்டுபிடிப்பான். ஆனால் இவைகளெல்லாவற்றையும் சமூலமாய் வெறுக்காதவன் தேவனோடு வழிநடந்துபோகமுடியாது. 'இரண்டுபேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்துபோவார்களோ?' ஆமோஸ் 3: 3. கர்த்தரோடு ஒருமனப்பட்டவன் மாத்திரம் அவரோடு வழிநடந்துபோகலாம். எல்லா விஷயத்திலும் அவருடைய பிரியப்படி நடக்க மனமற்றவன் அவரோடு உலாவித்திரியமாட்டான் என்பது நிச்சயம்.

மூன்றாவது, தேவனோடு நடந்துபோக விரும்புகிறவன் அவருக்கு முன்னும், அவருக்குப்பின்னும் போகக்கூடாது. ஏனோக்கு தேவனோடு நடந்துபோனான். அவருக்கு முன்னாகிலும் அவருக்குப் பின்னாகிலும் அவன் போகவில்லை. பலர் ஆண்டவருக்குமுன்னும் அல்லது அவருக்குப்பின்னும் போகப்பார்ப்பதினால் அவரோடு வழிநடந்துபோகத் தவறிவிடுகிறார்கள். மோசே இதற்கு உதாரணமாயிருக்கிறான். ஒருகாலத்தில் அவன் ஆண்டவருக்குமுன்னே போனான். இஸ்ரவேல் ஜனத்தைச் சிறைமீட்பதில் ஆண்டவர் மெத்தத் தாமதமாயிருக்கிறார் என்று அவன் எண்ணி, அவன் தன் பட்டயத்தைக்கொண்டு அவர்களைச் சிறைமீட்கத் துவக்கினான். அதற்காக நாற்பது வருஷம் ஆண்டவர் அவனை வனாந்தரத்தில் ஆடுமேய்க்கச் செய்தார். இப்படியே அநேகர் தங்கள் படிப்பு, உத்தியோகம், விவாகம், குடியிருப்பு, சகவாசம் முதலிய விஷயங்களில் தெய்வ நடத்துதலுக்கும் சகாயத்துக்கும் காத்திராமல் தங்கள் சுய இஷ்டப்படி நடந்துகொள்வதினாலே, தெய்வ ஐக்கியத்தைவிட்டுப் பிரிந்துவிடுகிறார்கள். கர்த்தர் அவசரமின்றித் தாமதிக்கிறார் என்றெண்ணி தெய்வசித்தத்துக்கு விரோதமான பல காரியங்களைச் செய்துவிடுகிறார்கள். இது ஒருபக்கத்துத் தப்பிதம். மறுபக்கத்தில், பலர் தேவசித்தம் திட்டமாய்க் காட்டப்பட்டபின்பு அதற்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படியாமல் பின்வாங்கிவிடுகிறார்கள். நாற்பது வருஷ முடிவில் கர்த்தர் மோசேயை அழைத்து, எகிப்துக்குப் போகச் சொன்னபோது அவன் போக்குச்சொன்னான். அப்போது அவன் ஆண்

டவரோடு நடவாமல் அவருக்குப்பின்னே போகப்பார்த்தான். கர்த்தர் ஒரு காரியத்தைக்குறித்துத் திட்டமான கட்டளை கொடுத்தபின்பு அதற்குக் கீழ்ப்படியத் தாமதிக்கிறவர்கள் அவரோடு நடவாமல் உடனே பின்வாங்கிப் போவார்கள் என்பது நிச்சயம். யோனாவின் காரியம் அப்படியிருந்தது. கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் அவன் வேறே இடத்துக்குப் புறப்பட்டமாத்திரத்தில் கர்த்தர் அவனுக்குச் சத்துருவாய் மாறினார். ஆதலால் கர்த்தரோடு நடந்துபோக ஆசிக்கிற எவரும் இந்த இரண்டுவிதத் தீமைகளுக்கும் விலகிக்கொள்ளவேண்டும்.

நான்காவது, தேவனோடு நடந்துபோகிறவன் அடிக்கடி அவரைத் தொடவேண்டும். இருவர் ஒன்றாய் நடந்துபோகிறபோது அடிக்கடி ஒருவரையொருவர் தொட நேரிடலாம். ஆண்டவரோடு நாம் நடந்துபோகிறபோது அடிக்கடி பல விசேஷித்த கிரியைகளுக்கென்று அவர் நம்மைத் தொடுகிற நேரங்களும் இருக்கவேண்டும். அப்படியே நாமும் பல சமயங்களில் ஆண்டவரைத் தொடவும்வேண்டும். எந்த அளவுக்கு நமது ஐக்கியம் நெருங்கியதாயிருக்கிறதோ அந்த அளவுக்கு நமது பாக்கியம் பெரியதாயிருக்கும். பெரிய காரியங்களை நடப்பிக்கும்படி அவர் நம்மைப் பிடிப்பார், நாம் அவரைப் பிடிக்கலாம். அதோடு நாடோடிய ஜீவியத்தில் நாம் அவரோடும், அவர் நம்மோடும் செய்கிற சம்பாஷணை நமக்குப் பெரிய ஆனந்தத்தையும் தைரியத்தையும் கொடுக்கும். இவ்விதமாய் ஏனோக்கைப்போல நமது ஜீவகாலமெல்லாம் கர்த்தரோடு வழிநடந்துபோகிறவர்களாயிருக்க நாமெல்லாரும் பிரயாசப்படுவோமாக.

## நெருப்பை மூட்டினார்கள்.

அப். 28: 2.

அப்போஸ்தலனாகிய பவுலும் அவரோடிருந்தவர்களும் கப்பற் சேதத்திற்குள்ளாகி அதினின்று தப்பி மெலித்தா தீவுக்கு வந்து சேர்ந்தார்கள். அவ்வேளையில் அந்நியராகிய அந்தத் தீவார் மழைக்காகவும் குளிருக்காகவும் நெருப்பை மூட்டினார்கள். பவுல் சில விறகுகளை வாரி நெருப்பின்மேற் போட்டார். நெருப்புபற்றி எரியும்படி, குளிர் நீங்கி அவர்களுக்கு அனலுண்டாகும்படி, விறகுகளை வாரிப்போட்டார்.

இயேசு இரட்சகர் 'பூமியின்மேல் அக்கினியைப் போட வந்தேன்' என்றார். லூக். 12: 49. அந்த அக்கினி எது? மனிதருள்ளத்தில் வைக்கும்படி வந்த 'தேவ அன்பு'. அது இப்பொழுதே பற்றி எரியவேண்டுமென்று விரும்புகிறேன் என்றார். அக்கினி பற்றி எரிந்தால்தான் அதிக அனலுண்டாகும். புகைந்தால் அனலில்லை. அப்படியே அக்கினியாகிய தேவஅன்பு



இருதயத்தில் பிரவேசித்து பற்றி எரியவேண்டுமென்பது இரட்சகரின் தாற்பரியம் அப்படிக்கிருக்க, இந்த அக்கினி சில வேளாவேளைகளில் புகைகிறதாக மாத்திரமிருக்கிறது. ஆராதனைக்கு வருவார்கள், அது காலிலே புகைதல்; ஜெபம்பண்ணுவார்கள். அது வாயிலே புகைதல்; வேதம் வாசிப்பார்கள். அது கண்ணிலே புகைதல், இப்படி புகையவேண்டுமென்பது இரட்சகரின் நோக்கமல்ல. கிறிஸ்தவர்களாயிருப்பதினால் இவைகளெல்லாம் செய்யவேண்டிய கடமைகளே. ஆனால் அது பற்றி எரியவேண்டுமென்று இரட்சகர் விரும்புகிறார். அந்நியராகிய அந்தத் தீவார் நெருப்பை மூட்டினார்கள்; அது எரியும்படி பவுல் சில விறகுகளை வாரிப்போட்டார். மழையும் குளிருமாயிருந்த சமயத்தில் அவர் காய்ந்த விறகுகளைப் பொறுக்க எவ்வளவு பிரயாசப்பட்டிருக்கவேண்டும். அவர்களுக்கு அனலுண்டாக்க இவ்விதமாகப் பிரயாசப்பட்டார். குளிர்ந்த உலகத்திலிருக்கும்போது நாம் குளிர்ந்து போகக்கூடிய நிலைமையிலிருக்கிறோம். 'ஆகையால் நெருப்பை மூட்டி விறகுகளை வாரிப்போட்டு அனலடையப் பிரயாசப்படவேண்டுமே. நெருப்புமுண்டு, விறகுமுண்டு; இலவசமாய் அவருடைய கிருபையினாலே கையளிக்கப்பட்டிருக்கின்றன. உபயோகிக்க மனதைக் காணோம். அறிவாளிகளும், திறமையுள்ளவர்களும், பல தாலந்துகளை உடையவர்களும்கூட குளிர்ந்துபோயிருக்கிறார்கள். காரணமென்ன? நெருப்பை மூட்டப் பிரியமில்லை, விறகுகளை வாரிப்போட மனமில்லை. ஆகையினால் அனலுமில்லை.

நெருப்பை மூட்டி எப்போதும் அனலைக் காத்துக்கொள்ளக்கூடிய ஹேதுக்களில் சிலவற்றைப் பார்ப்போம்.

1. வேதவசனம். சத்திய வசனத்தை வாசிப்பது அனலைக் காத்துக்கொள்ளக்கூடிய ஒருவழி. சில புஸ்தகங்கள் அறிவை அனலாக்கும், ஆனாலோ இருதயத்தைக் குளிர்ச்சியாக்கிவிடும். சத்திய வசனத்தால் போஷிக்கப்படுகிற ஆத்துமா அனலைக் காத்துக்கொள்ளும். ஒவ்வொரு விஷயங்களையும் நாம் அறிந்துகொண்டு நடக்கும்படி தேவன் தம்முடைய தூதர்களை நம்மிடத்தில் அனுப்புகிறதில்லை. யாக்கோபு, மனோவா முதலியவர்களுக்கு அனுப்பினதுபோல இப்போ அனுப்புகிறதுமில்லை. பவுலுக்குத் தரிசனத்தில் தோன்றினதுபோல இப்போ நமக்குத் தெரிவிக்கிறதுமில்லை. எசேக்கியா கொர்நேலியு முதலியவர்களுக்கு அனுப்பினதுபோல விசேஷித்த ஆட்களை அனுப்புகிறதுமில்லை. ஆனால் எல்லா ஆலோசனைகளும் சத்திய வேதத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. சத்திய வசனத்தை வாசிக்க வாசிக்க பரிசுத்த ஜீவியத்திற்கு வழி. சத்திய வேதமுண்டு, ஒன்றுக்கு பத்துப் புஸ்தகங்களிருக்கலாம். இருந்தாலதென்ன? சாப்பிட்டால்தானே பசிதீரும். வாசித்தால்தானே ஆத்ம பசிதீரும். அப்படி சாப்பிட்டாலும் சாப்பிடுகிற ஆகாரம்ஜீரணித்தால்தானே சுகம். எவ்வளவுக்கு

ஜீரணமாகிறதோ, அவ்வளவுத்தானே சுகம். அப்படியே சத்திய வச
னத்தை வாசித்து உட்கொள்ளவேண்டும். எந்நாளும் வாசிக்க நேரமில்லை
என்பார் சிலர். எவ்வளவுவேலையிருந்தாலும் சாப்பிட நேரமில்லையா?
அநேகர் குளிர்ந்துபோயிருப்பதற்குக் காரணமென்ன? இந்த திவ்ய அனல்
எப்போதும் இருக்கவேண்டுமே அப்படியானால் அனலைக் காத்துக்கொள்
வக்கூடிய வழிவகையாகிய சத்திய வசனத்தை வாசித்து ஒவ்வொரு நாளி
ளிலும் இந்த திவ்ய அனலை அடைந்துகொள்ளவேண்டும்.

2. ஜெபம். அனலைக் காத்துக்கொள்வதற்கு ஜெபமும் சிறந்த வழி.
அநேக பக்தர்கள் ஜெபத்தின் மூலமாகவே இந்த அனலைக் காத்துக்கொண்டு
வந்திருக்கிறார்கள். விசேஷமாக தனிஜெபத்தை விட்டுவிடுகிறவர்களிடத்
தில் இந்த அனலில்லை குளிர்ந்துபோய்தானிருப்பார்கள். சில சமயங்
களில் நெருப்பு புகைகிறபோது பற்றி எரியும்படி ஊதாங்குழல்கொண்டு
அல்லது விசிறிகொண்டு விசிறுவார்கள். ஏன்? பற்றி எரிய அனல்கொண்டு
எரியவே. அப்படியே ஜெபமும் இந்த திவ்ய அக்கினி அணைந்துபோகா
மலும், அனல் குறைந்துபோகாமலும் உபயோகிக்கப்படுகிற விசிறிக்குச்
சமானமே. காலையில் எழுந்திருந்தவுடனே ஜெபம் செய்தால் போதும்
கடமை தீர்ந்தது என்று எண்ணுகிறவர்களில்லையா? 'சோதனைக்குட்படாத
படிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்' 'இடைவிடாமல் ஜெபம்பண்
ணுங்கள்' என்பது சத்திய வேதம் பிரமாணமாச்சுதே. அனல் குறைவு
பட்டபோது இந்த விசிறியை உபயோகிக்காமல் குளிர்ந்து போய் தாங்கள்
செய்யவேண்டிய கடமைகளை முதலாய் செய்ய மனமற்றுப் போனவர்க
ளில்லையா? நிச்சயமில்லாமற் ஜெபிக்கிறதிலும் பிரயோஜனமில்லை. தந்தி
மூலமாய் சமாச்சாரம் அனுப்பும்போது, நம்முடைய சங்கதி கோரின
இடத்திற்குப் போய்ச்சேரும், எப்படியாவது பதில் கிடைக்கும் என்று எதிர்
பார்த்தலோடு தந்தி அடிக்கிறோம். அப்படியே நிச்சயத்தோடு ஜெபிக்க
வேண்டும். ஜெபத்தின் மூலமாய் இந்த திவ்ய அனலைக் காத்துக்கொள்ள
வேண்டும்.

3. தியானம். 'வழியிலே அவர் நம்முடனே பேசி வேதவாக்கியங்
களை நமக்கு விளங்கக் காட்டினபோது நம்முடைய இருதயம் நமக்குள்ளே
கொழுந்துவிட்டு எரியவில்லையா?' லூக். 24: 32. இப்படித் தியானித்துக்
கொண்டிருக்கும்போது அக்கினி பற்றியெரிந்தது என்கிறார் ஒருவர். தியா
னிப்பதும் சம்பாஷிப்பதும் இந்த திவ்ய அனலைக் காத்துக்கொள்ளுவதற்கு
சிறந்த வழிகளில் ஒன்று. தங்கள் சாவகாச நேரத்தை இப்படி தியானத்
தில் செலவிடுவோர் அநேகரைக் காணோமே. வீண்பேச்சுப் பேசுவதிலும்,
சீட்டு விளையாடுவதிலும், பிக்னிக்குப் போவதிலும், விருந்துகள் செய்து
காலத்தைப் போக்குவதிலும் தங்கள் சாவகாச நேரத்தைக் செலவிடலாச்
சுது. அந்த நேரத்தை இப்படி இரட்சகரோடு தியானத்தில் கழித்தால்



ஆகாதா? அவர் செய்திருக்கிற நன்மைகளை, ஆசீர்வாதங்களை எண்ணி
எண்ணி, நீர் எனக்கு எவ்வளவு அருமையாயிருக்கிறீர், எனக்குச் செய்தி
ருக்கிற நன்மைகளுக்கு நான் எம்மாத்திரம், என் வீடு எம்மாத்திரம் என்று
இவ்விதமாக தியானத்தில் காலத்தைச் செலவிட்டால் இந்த திவ்ய அனல்
குறையாமலிருக்குமே. அல்நாஷ்கர் ஆகாசத்தில் கோட்டை கட்டினது
போல சாவகாச நேரத்தை, வீண்சிந்தனைகளிலும், வீண் ஆசைகளிலும்,
கேவலமான எண்ணங்களிலும் செலவிடுகிறதில்லையா? இவைகளால் இந்த
திவ்ய அனல் குறைந்தேபோகும். தியானத்தின் மூலமாய் இந்த திவ்ய
அனலைக் காத்துக்கொள்ளவேண்டும்.

4. சகோதர ஐக்கியம். பக்திவிருத்தி உண்டாவதற்கும் சகோதர
அந்நியோந்யத்தில் வளருவதற்கும் ஐக்கியக்கூட்டங்கள் ஏற்படுத்தப்பட்டி
ருக்கின்றன. 'சபை கூடிவருதலை விட்டுவிடாதேயுங்கள்' என்கிறார்
பவுல். பக்திவிருத்தியில் ஒருவரை ஒருவர் தேற்றவேண்டும். சகோதர
ஐக்கியம் குறைந்தால் அனலும் குறையும். ஏதோ அற்பசொற்ப காரணங்
களையிட்டு இதை நெகிழவிடுகிறவர்களில்லையா? ஒரு சகோதரன் ஒரு
போதகரிடம் போய், 'நான் கோவிலுக்கும் வரமாட்டேன், கூட்டங்
களுக்கும் வரமாட்டேன், மற்ற கிறிஸ்தவர்களோடு ஐக்கியமாயுமிருக்கமாட்
டேன், கிறிஸ்தவனாயிருப்பதற்கு முதலாய் எனக்கு மனமில்லை; அவர்
அப்படிப்பட்டவர், இவர் இப்படிப்பட்டவர். அவன் அப்படிச் செய்கி
றான், இவன் இப்படிச் செய்கிறான், ஆகையால் சபையைவிட்டு என்
பேரை எடுத்தாலும் நல்லதுதான் என்க, போதகர் என்னென்னமோ
நியாயங்கள் சொல்லியும் அவனுக்கு ஒவ்வவில்லை. கடைசியாக, போத
கர், 'சகோதரனே! நீ சொல்கிற இவ்வளவு காரணங்களையும் ஒரு கடிதத்
தில் எழுதித் தா என்றாராம். அப்படியே எழுதிக்கொடுத்தான். போதகர்
அவனைப் பார்த்து, கடைசி நியாயத்தீர்ப்பு நாளில் உன்னிடத்தில் கணக்குக்
கேட்கப்படும்போது இந்தக் கடிதத்தை உன்னிடத்தில் கேட்கிறவரிடத்தில்
கொடு என்றாராம். உடனே பயம் இவனை ஆட்கொண்டது. மனித
ரிடத்தில்தான் நான் இப்படிச் சொல்லலாம், தேவாதி தேவனிடத்தில் இப்
படிச் சொல்லவும் வாய்வருமோ! நான் செய்யவேண்டியதை இதுமுதல்
செய்வேன் என்பதாக பிரதிக்கினை பண்ணினானாம். சகோதர ஐக்கியத்தி
னால் இந்த திவ்ய அனலைக் காத்துக்கொள்ளவும் வேண்டும்.

5. மற்றவர்களுக்கு நன்மைசெய்தல். பவுல் நெருப்பை மூட்டவும்
மற்றவர்களுக்கு அனலை உண்டாக்கவும் சில விறகுகளை வாரிப்போட்டார்.
'உன் சகோதரன் 'பசியாயிருந்தால் அவனுக்குப் போசனங்கொடு, அவன்
தாகமாயிருந்தால் அவனுக்கு பானங்கொடு, இப்படி நீசெய்வதினால் அக்கி
னித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய்' ரோமர். 12: 20. விசேஷ
மாக நம்முடைய சத்துராதிகளுக்கு நாம் நன்மை செய்யும்போது இந்த

திவ்ய அனல் குறையாமலிருக்கும். பவுல் காய்ந்த விறகுகளை வாரிப் போட்டாரே. அவைகளெவை? மத். 5: 41-ல் கண்டவைகள்தான். அவைகள்தான் அந்த காய்ந்த விறகுகள். இன்னொன்றையும் நாம் மறந்து போகவேண்டாம்.

அனலடைந்த வஸ்துக்கள் சீக்கிரம குளிர்ந்துபோகவும் கூடும். நாம் குளிர்ந்துபோகக்கூடிய நிலைமையில்தான் இருக்கிறோம். ஆவிக்குரிய வளர்ச்சியில் குளிர்ச்சி உண்டாகக்கூடிய ஆட்களோ, இடங்களோ, சந்தோஷங்களோ, காரியங்களோ எல்லாவற்றையும் விலக்கவேண்டும். அனலடைந்திருக்கிற வஸ்துக்களின் பக்கத்திலிருப்பவைகளுக்கும் அனல்தாவும். அனலடைந்திருக்கிறவர்கள் தான் மற்றவர்களுக்கு அனல் உண்டாக்கக்கூடும். மற்றப்படி இல்லை. உப்புத்தன்மையுள்ள வஸ்துக்களை அக்கினியில் தெளித்தால் அனல் குறையும். கோபம், பொறாமை, பகை முதலிய உப்புத்தன்மையுள்ள கார வஸ்துக்கள் இந்தத் திவ்ய அனலைக் குறைக்காதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். நமக்காக மாத்திரம் நாம் பிழைக்கிறதில்லை. ஒன்று அனலாயிரு, அல்லது குளிர்ச்சியாயிரு, வெதுவெதுப்பாயிருக்கவேண்டாம். அனலாயிருந்தால் மற்றவர்களும் அனலடைவார்கள். குளிர்ச்சியாயிருந்தால் மற்றவர்களுக்கும் குளிர்ச்சி தாவும். ஒரே நேரத்தில் அனலாகவும் குளிர்சியாகவும் இருக்கமுடியாது. ஒன்று அனலாயிருக்கவேண்டும். அல்லது குளிர்ந்துபோயிருக்கவேண்டும். நம் நிலைமை என்ன? ஞானசூரியனாகிய கிறிஸ்தேசுவிடத்திலிருந்து அனலைப் பெற்றுக்கொண்டு ஜீவிக்கக் கிருபை செய்வாராக.

## வேதாகம ஆராய்ச்சி.

கனம் யோசேப்பு W. கெம்ப் ஐயரவர்களால் நடத்தப்படும் வேதாகமப் பாடமுறை.

### 4-ம் பாடம்.

### வேதாகமத்தின் முக்கியமான மொழி பெயர்ப்புகள்.

இந்தப்பாடத்தில் வேதாகமத்தின் முக்கிய மொழி பெயர்ப்புகளைப் பற்றிப் படிக்கப்போகிறோம். கையெழுத்துப் பிரதிகளுக்கும் மொழிபெயர்ப்புகளுக்குமுள்ள வித்தியாசம் நமக்குத் தெளிவாய்த் தெரியவேண்டும். கையெழுத்துப் பிரதிகள் என்றால் முதலில் எழுதப்பட்ட பாஷையிலுள்ள வேதப் புஸ்தகத்தின் நகல்கள். மொழி பெயர்ப்பென்றால் அதை வேறு பாஷையில் எழுதுவதாம்



### I. வேதாகமத்தின் முக்கிய மொழி பெயர்ப்புகள்.

முதல் முதல் வேதாகமம் இன்ன வருஷத்தில்தான் மொழி பெயர்க்கப்பட்டது என்று சொல்ல முடியாது. பூர்வீகத்தில் மொழி பெயர்க்கப்பட்ட மொழி பெயர்ப்புகளில் டார்கம்ஸ், செப்துவஜின்று, பெஷிற்றா, வல்கேற் (இவைதான்) முக்கியமானவை.

### நியாயப்பிரமாணத்தின் மொழிபெயர்ப்பு.

1. டார்கம்ஸ் (Targams) இந்தக் கல்தேய வார்த்தைக்கு மொழி பெயர்த்தல் என்றர்த்தம். கி. மு. 588-ல் யூதர் பாபிலோனிய சிறையினின்று மீண்டு வரும் காலத்தில் எபிரேய பாஷையை முற்றிலுமாய் மறந்து தங்களை அடிமைகொண்டவர்களின் கல்தேயபாஷையில் நன்றாய்ப் பழகியிருந்தனர். ஆனதுபற்றியே, நெகேமியா 8: 8-ல் எஸ்றா நியாயப் பிரமாணத்தை ஜனங்கள் காதுகள் கேட்க வாசிக்கையில், ஜனங்கள் வாசித்ததையறியும் பொருட்டு மொழிபெயர்த்துச் சொல்வது அவசியமாயிற்று. இக்காலம் தொடங்கி உயர்தர எபிரேயு பாஷையானது கற்றறிந்தோர்க்கு மாத்திரம் விளங்கத்தக்கதாயும், ஜெபாலய ஆராதனைகளில் வாசிக்கையில் சாதாரண ஜனங்களுக்கு விளங்க மொழி பெயர்க்கவும் வேண்டியதாயிற்று நெகேமியாவிலுள்ள வாசகந்தான் முதல் முதல் டார்கம்ஸ், அல்லது மொழி பெயர்ப்பைப்பற்றிச் சொல்லியிருக்குமிடம். இது சம்பந்தமாய் நாம் எண்ணவேண்டியது அது மறு பாஷையில் சொல்லப்பட்ட வாய்மொழி விஸ்தரிப்பே யன்றி எழுத்து மொழிபெயர்ப்பல்ல. காலாகாலத்தில் இம்மொழி பெயர்ப்புகள் எழுத்திலமையப்பெற்றதால். வேத வாக்கியங்கள் பிழையறத் திட்டமாய் நமக்குக் கிடைப்பதற்கு ஏதுவாயிற்று.

2. செப்துவஜின்று. இது வேதாகமத்தை எபிரேய பாஷையினின்று கிரேக்க பாஷைக்குத் திருப்பிய ஒரு மொழி பெயர்ப்பு. கி. மு. 285விருந்து இருக்கிற இதுதான் பழைய ஏற்பாட்டின் வெகு முக்கியமான ஒரு மொழி பெயர்ப்பு இங்கிலீஷ் பழைய திருப்புதல் வேதாகமம் இங்கிலீஷ் பேசுபவருக்கு எவ்வளவு அருமையானதோ அவ்வளவுக்கு இம் மொழிபெயர்ப்பு பூர்வத்தாரின் அருமையான வேதாகமமாக எண்ணப்பட்டது. எபிரேயு பாஷை வழங்கப்படாத நாட்களில் ஜனங்கள் தேவனைப் பற்றி அறியும் அறிவை இழந்துபோகாதபடி இது துணையாயிற்று. ரோமானித்த குருமார் ‘தேவனுடைய விசேஷித்த பராமரிப்புச் செயலுக்கு இது ஒரு அடையாளம் என்றும் மனுஷ ஜாதியின் ரக்ஷிப்புக்கென்று தேவனேற்படுத்திய நியமத்தில் இது ஒரு இணைச் சங்கிலி’ என்றும் இதைப்பற்றிப் புகழ்ந்து பேசியிருக்கிறார்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுலும், அவருடைய அப்போஸ்தலர், ஆதித் திருச்சபையின் சுவிசேஷகர், கிறிஸ்து மார்க்கத்தின் ஆரம்ப நாட்களில் யூதர் புறஜாதியானவராலும்,

முக்கியமாய் உபயோகிக்கப்பட்ட வேதாகமம் இதுவே. செப்துவஜின்று என்பதற்கு எழுபது என்றர்த்தம். அரசனான பிதோலோமி பிலதெல்பியு பழைய ஏற்பாட்டை எபிரேயுவிலிருந்து கிரேக்க பாஷைக்குத் திருப்பும்படி 70 அல்லது சரியானபடி 72 மூப்பரை அல்லது கல்விமான்களை வரவழைத்து ஏற்படுத்தினான் என்று சொல்லும் பாரம்பரையின் பேராலே இதற்கு இப்பெயரிடப்பட்டிருக்கிறது.

இதன் பாகங்கள் யாவும் ஒன்றுபோல் செம்மையாய்த் திருப்பப்பட்டவையல்ல. சில பாகங்கள் தெளிவுற மொழிபெயர்க்கப்படவில்லை. மிகவும் திட்டவட்டமாய்த் தெளிவாய்த் திருப்பப்பட்டவை பஞ்சாகமங்கள் யோபு, சங்கீதங்கள், நீதிமொழிகள். பிரசங்கியின் புஸ்தகம் வெகு சேவலமாய்த் திருப்பப்பட்டிருந்தது. தானியேல் புஸ்தகமோ ஆதிக் கிறிஸ்தவ சபையார் புறக்கணித்துத் தள்ளத்தக்கதாக அவ்வளவு பிழைகளுள்ளதாயிருந்தது.

இம்முக்கிய மொழிபெயர்ப்பைப்பற்றித் தெளிவாயறிய விரும்புவோர் ஹேஸ்றிங் என்பவரெழுதின வேதாகம அகராதியின் நாலாம் பாகத்தில் 437-ம் பக்கம் பார்க்க.

### வேறு முக்கிய திருப்புதல்கள்.

3. பெஷிற்றா. இத்திருப்புதல் இன்ன காலத்திலிருந்துள்ளது எனத் தெரியாது, ஆயினும் இரண்டாம் நூற்றாண்டிலிருந்திருக்கலாம்: சீரியாக் மொழி பெயர்ப்புகளிலெல்லாம் இது சிறந்தது. இது எளிய பாஷை நடையில் எழுதப்பட்ட தெளிவான ஒரு திருப்புதல். அக அத்தாட்சிகளைக் கவனித்துப் பார்க்குமிடத்து இது எபிரேய பாஷையை நன்றாயறிந்த கிறிஸ்தவ யூதர்களால் திருப்பப்பட்டதென நம்பப்படுகிறது. பஞ்சாகமங்களும் யோபும் வெகு நேர்த்தியாய்த் திருப்பப்பட்டிருக்கின்றன. இதில் 2 பேதுருவில் இரண்டாம் மூன்றாம் அதிகாரங்கள், யோவான், யூதா, வெளிப்படுத்தல் தவிர பழைய புதிய ஏற்பாட்டு கனோன் வேதாகம புஸ்தகங்கள் யாவுமுண்டு.

4. வல்கேற். கி. பி. 385-ல் தம் காலத்து வேத வித்வசிரோமணிகளில் சிறந்தவர்களுள் ஒருவரான ஜெரோம் என்னப்பட்ட எசபியஸ் ஹைரோனிமஸ் என்பவர் வேதாகமம் முழுவதையும் லத்தீன் பாஷையில் திருப்பினார். அந்தத் திருப்புதலுக்குத்தான் ‘வல்கேற்’ என்று பெயர். லத்தீன் பாஷையில் அதற்கு நாடோடிய, சாதாரண என்று பொருள்படும். இருள் நிறைந்த அக்காலத்தில் வெகு ஜனங்களுக்குத் தெரிந்திருந்த வேதாகமம் இதுதான். பூர்வீக இங்கிலீஷ் மொழி பெயர்ப்புகள் இதிலிருந்துதான் செய்யப்பட்டன. ரோமானித்திய டௌவே திருப்புதலுக்கு ஆதாரமும் இதுதான். ரோமானிக்காரால் இது வெகுவாய் மதிக்கப்பட்டுள்ளது.



புஸ்தகம் பிரசுரிக்கும் ஒருவர் ஒரு பத்தியில் எபிரேயு பாஷையிலும், மற்றொரு பத்தியில் கிரேக்க பாஷையிலும் மத்தியில் லத்தின் பாஷையிலும் பிரசுரித்தபோது, ஒரு குருவானவர் அப்படிச் செய்தது இரு கள்ளர் நடுவில் நம்முடைய ரக்ஷகரைச் சிலுவையில்லறைந்ததை அவருக்கு ஞாபகப்படுத்திற்று என்று சொன்னாராம். இம்மொழிபெயர்ப்பைப் பற்றி அறிய விரும்புபவர் ஹேஸ்றிங்ஸ் வேதாகம அகராதி, 4-ம் பாகம் 873-ம் பக்கத்திலுள்ள சவிஸ்தாரமான விஸ்தரிப்பைப் பார்க்க.

5. வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு சமயங்களில் செய்யப்பட்ட மற்றத்திருப்புதல்கள்.

1. எத்தியோப்பிக், 2. காப்றிக், 3. பேர்போன கோதிக் திருப்புதல், 4. ஆர்மினிய திருப்புதல், 5. அராபிக் மொழிபெயர்ப்பு.

இம்மொழிபெயர்ப்புகள் யாவும் ஆதி எபிரேய வாசகத்தை அறிவதற்குப் பெரும்பாலும் உபயோஜனமானவை. வார்த்தைகளில் வித்தியாசம் இருந்தாலும் முக்கியமான எல்லாக் காரியங்களிலும் அவையாவும் ஏகமாய் ஒத்திருப்பது இப்பரிசுத்த புஸ்தகங்கள் எவ்வளவு பத்திரமாய்க் காக்கப்பட்டுவந்திருக்கின்றனவென்பதைக் காட்டும். மொத்தமாய்ச் சொன்னால், யாதொரு வாக்குத்தத்தம் மங்காமலும் அல்லது யாதொருசத்தியம் பிசகாமலும் இப்புஸ்தகங்கள் அவை எழுதப்பட்ட வண்ணமாகவே நமக்குக் கிடைத்திருக்கின்றனவென்று நாம் சொல்லலாம்.

### II. முக்கியமான இங்கிலீஷ் வேதாகமத் திருப்புதல்கள்.

1. இங்கிலீஷ் வேதாகமச் சரித்திரம். உயிர்ப்பியிலுள்ள சேட்மான் என்பவரிலிருந்து ஆரம்பிக்கிறது. 7-ம் நூற்றாண்டில் இவர் பழைய ஏற்பாட்டுச் சரித்திரங்களைப் பாட்டாகக்கட்டினார்.

2. பீட் என்பவரின் திருப்புதல். கி. பி. 735. கண்ணியம் பொருந்திய பீட் என்னப்பட்ட இவர், அவர் காலத்தில் மேல் ஐரோப்பாவிலுள்ள வித்வான்கள் யாவரிலும் சிரேஷ்டமானவர். தாம் மரிக்கும் நாளிலே யோவான் சுவிசேஷம் 20-ம் அதிகாரத்தை ஆங்கிலோ சாக்ஸன் பாஷையில் மொழி பெயர்த்தார். இதைப்பற்றிய சரித்திரமென்னவெனில், தம் அந்திய நேரத்தின் கடைசிமணி நேரத்தில் தம் காரியதரிசி ஒருவருக்கு 20-ம் அதிகாரத்தின் கடைசி வசனங்களை மொழி பெயர்த்துச் சொல்லிக் கொண்டிருந்தாராம். எழுதுகிறவன், ஐயா முடிந்தது, என்று சொல்ல மரிக்கும் அப்பரிசுத்தவான் முடிந்தது. என் தலையை உயர்த்து; நான் அடிக்கடி ஜெபித்துவந்த என் அறையில் நான் உட்காரட்டும்’ என்று சொல்லி அறையின் தளவரிசையில் உட்கார்ந்திருக்கையில் ‘பிதாவுக்கும் குமாரனுக்கும், பரிசுத்தாவிக்கும் மகிமையுண்டாவதாக’ என்று பாடினார், பாடி முடிந்ததும் ஆவி பிரிந்தது.

3 இதற்கு அடுத்தாற்போல் அரசனை மொழி பெயர்ப்புக்காரர் ஒருவர் வருகிறார். இவர் மகா அல்பிரட் அரசன், கி. பி. 901. இவர் தாமே ஒரு பெரிய கல்விமான். வேதத்தின் மீது மிகப் பிரீதிகொண்டு அதன் பல பாகங்களை மொழி பெயர்த்தார்.

4. **உக்லிவ் உடைய வேதாகமம்.** கி. பி. 1380. லத்தீன் பாஷையிலிருந்து, முதல் முதலாய் இங்கிலீஷில் திருப்பப்பட்ட பூரணமான திருப்புதல் இதுவே. இங்கிலீஷில் வேதாகமத்தைத் திருப்பியவருள் முதல்வர் உக்லிவ்தான். இவர் 'சீர்திருத்தத்தின் விடிவெள்ளி' என்றழைக்கப்படுவது தகுதியே. வேதாகமத்தை மொழிபெயர்த்து அதைப் பரவச்செய்ததினிமித்தம் இவர் லண்டன்மா நகரில்பிளாக்பிரையர்ஸ் என்னுமிடத்திலுள்ள டொமினிஷியன் மடத்தில் நடந்த ஒரு அத்தியக்ஷர் கூட்டத்தில் பகிரங்கமாய்க் குற்றவாளி என்று தீர்க்கப்பட்டார். இவரை விசாரணை செய்கையில் அவர்கள் கூடியிருந்த கட்டடம் பூமியதிர்ச்சியினால் குலுங்கி விழுமாப்போலிருந்தது. கொஞ்ச நேரமாய்க் கூட்டம் கலைந்து விடுவது போல்தோன்றிற்று. ஆனால் அக்கிராசனுபதியாயிருந்த சிரேஷ்ட அத்தியக்ஷராகிய கோர்டினி, விசாரணை நடந்தேறவேண்டியதே, ஏனென்றால் 'பூமிக்குள்ளிருந்து வெளியே வர முயற்சிக்கும் கெட்ட வாயுக்களால் உண்டாகும் பூமியதிர்ச்சியானது அக்காலத்து நடபடிகளின் தன்மையைக் காட்டும் ஒரு அடையாளம் என்றும், உக்லிவ் வேதாகமத்தை மொழிபெயர்த்து அதைப் பரவச்செய்வதாலுண்டாக்கும் கெட்ட வாயுக்கள் தடுக்கப்பட்டாலொழிய திருச்சபைக்கு மோசமுண்டாக்கும்' என்றும் சொன்னார். உக்லிவ்வுக்கு மரணாக்கினை விதிக்கப்பட்டது. ஆனால் அவர் எதிர்பார்த்திருந்ததற்கு நேர் விரோதமாய் லட்டர் வர்திலுள்ள தம்முடைய சொந்த வீட்டிலேயே மரணமானார்.

திடீரென திமிர்வாதத்தால் பீடிக்கப்பட்டு, 1384-ம் வருஷத்தின் கடைசித் தினத்தில் தேகவியோகமானார். புள்ளர் என்னும் திருச்சபைச் சரித்திரக்காரன் இவர் அநேக வேட்டை நாய்களால் அடிக்கடித் துரத்துண்ட முயலைப்போன்ற இவர் தாம் உட்கார்ந்திருந்த வண்ணமாய் மரித்தது ஆச்சரியமே என்றுரைக்கிறார். 1428-ல் அவருடைய எலும்புகளைத் தோண்டி எடுத்து சுட்டெரித்தார்கள். அந்தச் சாம்பல் சுவிவ்ற் நதியிலிருந்து ஆவன் நதியோடும் பின்பு செவர்ன் நதியோடும் கலந்து சமுத்திரம் சேர்ந்தது. இது உலகமெங்கும் பரம்பியிருக்கிற அவருடைய வேலைக்கு ஒரு முன்னடையாளம்போலிருக்கிறது

### தீண்டேலின் பெரிய வேலை

5. **தீண்டேலில் திருப்புதல்.** 1525 இதுதான் முதல் தடவையாய் இங்கிலீஷில் அச்சிடப்பட்ட வேதாகமம். உக்லிவ் காலத்தில் கையெழுத்துப் பிரதியாய்த்தானிருந்தது. அப்படிப்பட்ட பிரதி யொன்றின் கிரயம்



40 பவுண் அல்லது 600 ரூ. அவர் காலத்தில் சாதாரண ஜனங்கள் இத்தொகை கொடுத்து வாங்கமுடியாது. உல்லியம் திண்டேல் வேதாகமம் அச்சிடப்பட்டு ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படவேண்டும் என்று சாதித்தார். அவர் வேதாகமத்தைத் திருப்பியதினிமித்தம் கொடிய துன்பங்களடைந்தார். தம் சுயதேசத்திலிருந்து ஜர்மனியிலுள்ள ஹாம்பர்க் நகரத்துக்குத் துரத்துண்டார். அங்கிருந்து கலோனுக்கும் அப்பால் உவர்ம்ஸ் பட்டணத்துக்கும் துரத்தப்பட்டார். அங்கேதான் வேதாகமம் அச்சிடப்பட்டு, வெளிக்குத் தெரியாமல் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டது. ஜனங்கள் அதை வாசிக்க ஆரம்பித்தார்கள். பாப்புவானவருக்கு அதிரடிபிடித்தது. பிரசங்கிப்போர் திகைக்கலானார்கள். லண்டன் அத்தியக்ஷர் பரி. பவுலின் அத்தியக்ஷாலயத்தில் வேதாகமத்துக்கு விரோதமாய்ப் பிரசங்கித்தார். அநேகம் பிரதிகள் பரி. பவுலின் சிலுவைக்குமுன் சுட்டெரிக்கப்பட்டன. அப்படியிருந்தும் ஜனங்கள் வேதாகமம் வேண்டும் என்று விரும்பலானார்கள். கடைசியாய் ஒரு சிநேகிதனுடைய சதியாலோசனையால் திண்டேல் பிடிபட்டு, அதிகாரிகளிடம் ஒப்புவிக்கப்பட்டு பிரஸல்ஸ் நகரத்தினருகேயுள்ள வில்வோட் மாளிகையில் சிறையிலடைபட்டார். 1536-ம் வருஷம் அக்டோபர் மீ 6-ம் உயன்று அவர் தொண்டையைப்பிடித்து நெரித்துக்கொன்று, அவர் சரீரத்தை கழுவிலேற்றி அக்கினிக்கு இரையாக்கினார்கள். அவர் கடைசியாய், "கர்த்தாவே இங்கிலாந்து தேச அரசனின் கண்களைத் திறந்தருளும்" என்று ஜெபித்தார். அவர் ஜெபமும் கேட்கப்பட்டது.

### வேறு திருப்புதல்கள்.

6. **கவர்டேலின் திருப்புதல்.** 1535. 7. **மத்தேயுவின் வேதாகமம்.** 1537. 8 **றவர்னரின் வேதாகமம்** 1539. 9. **பெரிய வேதாகமம்.** 1539. 10. **ஜினிவா வேதாகமம்.** 1557—1560. 11. **அத்தியக்ஷருடைய வேதாகமம்.** 1568. 12. **பார்க்கருடைய வேதாகமம்.** 1572.

13. **பழைய திருப்புதல் என்னப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட திருப்புதல்.** 1611. இத்திருப்புதலைக் குறைவற்றதாகச் செய்து முடிக்க எடுத்துக்கொண்ட சிரமம் கொஞ்சமல்ல, அங்கீகரிக்கப்பட்ட இத்திருப்புதலைச் செய்துமுடிப்பது சாமானியமான ஒரு வேலையாயிருக்கவில்லை. ஜேம்ஸ் அரசன் சிம்மாசனம் ஏறியதும், 1604, ஜனுவரி; 14, 16, 18உகளில் ஹாம்றன் கோர்ட்டில் மேல் சபையைச் சேர்ந்தவரடங்கிய கூட்டம் ஒன்றுகூடச்செய்தார். அக்கூட்டத்தின் இரண்டாம் தினத்திலே பியூற்றன் வகுப்பாருக்குப் பிரதிநிதியும் தேறிய வித்வானும் வேதசாஸ்திரியுமான ரேயினால்ட்ஸ் ஆக்ஸ்போர்ட் "வேதாகமத்திருப்புதல் ஒன்று இருப்பது நலம்" என் அரசரிடம் மொழிந்தார். 1607 வரையும் இவ்வேலை ஆரம்பமாகவில்லை. பின்னர் அம்மொழிபெயர்ப்பைச் செய்து முடித்தவர் 47 பேர். அவர்கள் ஆறு பவுஞ்சுகளாகப்பிரிந்து ஆக்ஸ்

போர்ட், கேம்பிரிட்ஜ், உவெஸ்ற்மினிஸ்றர் என்னுமிடங்களிலிருந்து இவ்வேலையைச் செய்தனர். 1611-ல் இது பிரசுரமாயிற்று. அந்நாள் தொடங்கி அது ஜனங்களின் இருதயத்தைக் கவர்ந்துகொண்டது. புதுத்திருப்புதல் முதலாய் அதை மிஞ்சக்காணோம். இது சம்பந்தமாய் 1881-ல் புதிய ஏற்பாட்டைத் திருப்பியவர் அதன் முகவுரையிற் கூறியுள்ளதை இங்குவரைவது நன்று. "இப்பெரிய திருப்புதலை நாங்கள் கவனமாயும், திட்பநுட்பமாயும் வரிவரியாயும் படிக்கவேண்டியதிருந்தது." அதை எவ்வளவாய்ப் படித்தோமோ அவ்வளவுக்கு அதன் எளிய நடையையும், மாட்சிமையையும், வல்லமையையும், இன்பமான மொழிகளையும், பொதுவான திட்டவட்டத்தையும், வாசிக்கையில் தொனிக்கும் இன்ப கீத ஓசையையும், இங்கிதமான தாளத்தையும் வியக்கவேண்டியதாயிருந்தது" என்பதே.

அதன் மேன்மையைப்பற்றி எழுதப்பட்டுள்ளவற்றிலெல்லாம் பேபர் (Faber) எழுதியது கவனிக்கத்தக்கதாகும்.

"அது ஒருபோதும் மறக்கக்கூடாத கீததொனிபோலவும், புதிதாய் மனந்திரும்பிய ஒருவன் ஆவலாய்க் காத்திருக்கும் ஆலயத்தின் மணியோசையைப்போலவுமிருக்கிறது. அது ஒரு ஜாதியாரின் மனதின் ஓர்பாகமாயும், அவர்கள் ஆத்தும தயாத்தில் அவர்கள் நங்கூரமாயுமிருக்கிறது. மரித்தோரைப்பற்றிய ஞாபகம் அதை எடுத்ததும் மறைந்துபோகிறது. பால்யத்தின் பலமான பழக்கங்கள் யாவும் அதன் வாக்கியங்களில் தீட்டப்பட்டிருக்கின்றன. ஒரு மனுஷனின் அகோரமான சஞ்சலங்களும், சோதனைகளும் அதன் வார்த்தைகளில் மறைந்திருக்கின்றன. அவனுக்குச் சந்தோஷமான நேரங்களைக் கொடுப்பதுவும், அவனில் காணப்படும் இரக்கம், அமைதல், சுத்தாங்கம், மனஸ்தாபம், நன்மைசெய்ய யிருக்கும் விருப்பம் யாவும் இந்த இங்கிலீஷ் வேதாகமத்தால் அவனுக்குக் கிடைப்பதே. அது அவனுக்குச் சந்தேகத்தால் ஒருக்காலும் மங்காததும் எதிர்பேசுபவரால் கறைப்படாததுமான ஒரு பரிசுத்தமான பொருள்.

புதுத்திருப்புதல். 1881. புதுத்திருப்புதல் வெளிக்கு வந்து 30 வருஷமாகிறது. அதைச் செய்து முடிக்க பெருஞ் செலவு சென்றதோடு, பெரிய பெரிய கல்விமான்களின் திறமையெல்லாம் இதில் வேலை செய்யலாயிற்று. அப்படியிருந்தும் ஆக்ஸ்போர்ட் அச்சுக்கூடத்தார் வருஷந்தோறும் இதற்கு ஐந்து மடங்கதிகமான பழையதிருப்புதல் வேதாகமங்களையே அச்சிடுகிறார்கள். கேம்பிரிட்ஜ் அச்சுக்கூடத்திலும் அப்படியே பழைய திருப்புதலைப் புதுப்பித்தலில் பெருஞ் சங்கடங்கள் இருந்தது வாஸ்தவமே. "அப்புதுப்பித்தலை செய்தவர்கள் அநேக இடங்களில் தப்பிதம் செய்திருக்கிறது நிசம்தான். ஆயினும் கிட்டத்தட்ட மூன்றூறு வருஷங்களாய் அதிக நாகரீகமடைந்திருக்கிற நாம் அவர்களுடைய தவறுகளைக் கண்டுபிடித்தால், அதில் நமக்குக் கீர்த்தியில்லை. ஆனால் அவர்கள் கை



வேலையிலுள்ள தப்பிதங்களை அர்த்தம் கெடாதபடிதிருத்தின கல்விமானுக்கே அல்லது கல்விமான்களின் கூட்டத்தாருக்கே புகழ்ச்சி தக்கது.

இங்கிலீஷ் மொழிபெயர்ப்பைப்பற்றி தெளிவுற அறிய விரும்புபவர் ஹேஸ்றிங்ஸ் என்பவருடைய வேத அகராதியில் 5 புஸ்தகம் 236-ம் பக்கம் பார்க்க.

நமது தமிழ் வேதாகமம்.

இங்கிலீஷ் வேதாகமம் 1611-ம் ஆண்டு அச்சிடப்பட்டு பிரசுரமானது. இதற்குச் சரியாய் 100 வருஷங்களுக்குப் பின்பு தமிழ் புதிய ஏற்பாடு திருப்பப்பட்டு முடிந்தது. இதைச் செய்தவர் தரங்கன்பாடி சீகன் பால்க் ஐயர். ஆனால் 1715-ல்தான் அது அச்சிடப்பட்டது. சூல்ச் ஐயர் 1728-ல் பழைய ஏற்பாட்டை குறையாயிருந்ததை மொழி பெயர்த்து அச்சிட்டார். 1773-ல் பெப்ருவியஸ் ஐயர் ஏறக்குறைய வேதாகமம் முழுவதையுமே மூலத்துக்கிசைய மொழி பெயர்த்து அச்சிட்டார்.

(1816-ல் இரேனியுஸ் ஐயர் புதிய ஏற்பாட்டை மொழி பெயர்த்தார். 1850-ல் பெர்சிவல் ஐயரும் யாழ்ப்பாணத்தாரும் கருகலான திருப்புதல் ஒன்று செய்தார்கள். 1857 ரோமானித்தார் இந்தியாவுக்கு வந்த 300 வருஷங்களுக்குப் பின் நான்கு சுவிசேஷங்களையும் அப்போஸ்தலர் நடபடிகளையும மொழி பெயர்த்தனர்.)

நம் கையில் இப்போது இருக்கும் வேதாகமம் மொழிபெயர்ப்பு 1863-ம் ஆண்டு எப்பிரல்மீ ஆரம்பித்து 1868-ம் ஆண்டு முடிவு பெற்றது. இதைத் திருப்பியவர் யாவரும் வேத சாஸ்திரத்தில் தேறினவர். தமிழ் பாஷையில் வல்லவர்கள் சார்ஜென்று அத்தியக்ஷர், கால்வேல் அத்தியக்ஷர், பேவிஸ் ஐயர், பிரதர்ட்டன் ஐயர், டிப் ஐயர், கில்னர் ஐயர், கோலப் ஐயர், ஸ்கடர் ஐயர், ஸ்பால்டிஸ் ஐயர், திரேசி ஐயர், பவர் ஐயர் முதலானி.

## தற்கால விசேஷங்கள்.

பத்துக் கோத்திரத்தைச்சேர்ந்த இஸ்ரவேலரில் சிலர் பல மாதங்
களுக்குமுன் எருசலேமுக்கு வந்தார்கள். ஒப்பாரி செய்யும் இடத்தில்
ஒரு மிஷனெரி அவர்களைக் கண்டு அவர்கள் யார் என்று கேட்டார். தாங்
கள் முதலாம் ஆலயம் அழிக்கப்படுமுன் சிதறடிக்கப்பட்ட இஸ்ரவேலரின்
பின்னடியாரென்றும், அவர்கள் கோத்திரத்தைச்சேர்ந்த பத்தாயிரம் பேர்
திகிரிஸ் நதியின் கீழ்கரையோரமான கிராமங்களில் வசித்துவருவதாயும்
சொன்னார்கள். முதலாம் ஆலயம் அழிக்கப்படுமுன்னதாகவே அவ்வி
டத்தில் குடியேறின அவர்கள் மற்ற ஜாதிகளோடு கலவாமல் முற்றிலும்
பிரத்தியேகமாகவே இன்னமும் ஜீவித்துவருகிறார்கள். கர்த்தராகிய இயே
சுவின் காலத்தில் கானானில் பேசப்பட்ட அரமேயிக் பாஷையையே
இவர்கள் இப்போதும் பேசுகிறார்கள். 'இஸ்ரவேல் மலைகளே, நீங்கள் உங்
கள் கொப்புகளைவிட்டு, என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு உங்கள் கனிகளைக்
கொடுப்பீர்கள். அவர்கள் சமீபமாய் வந்துவிட்டார்கள்.' எசேக். 36: 8.

கானானின் வடபாகத்திலுள்ள ஓர் பூதப்பட்டணம். கானானில்
யோப்பாவுக்கு வடகிழக்கே தெல்லுபில் என்ற ஒரு சிறு பட்டணம் இருக்

கிறது. அதில் யூதர் மாத்திரம் குடியிருக்கிறார்கள். வேறே ஜாதியான ஒரு ஆள் முதலாய் அங்கே இல்லை. அதின் தெருக்கள் வெகு சுத்தமாயிருக்கிறது. இரவில் பட்டணம் முழுவதும் நேர்த்தியாய்த் தீபம் ஏற்றப்பட்டிருக்கிறது. வீடுகள் வெகு அழகாய்க் கட்டப்பட்டிருக்கிறது. தண்ணீர் ஓட சாக்கடைகளும், ஸ்நான ஸ்தலங்களும், நந்தாவனங்களும் நன்றாய்ச் செய்யப்பட்டிருக்கின்றன. யூதர்களே அந்தப் பட்டணத்தை ஆளுகிறார்கள். எபிரேய பாஷைதான் அந்தப் பட்டணத்தில் பேசப்படுகிறது. யூதருடைய ஓய்வுநாளாகிய சனிக்கிழமையில் அந்தப் பட்டணத்திலுள்ள சகல கடைகளும் அடைக்கப்படுகிறது. அந்த நாளில் அந்தப் பட்டணத்துக்குள் ஒரு வண்டியும் வரக்கூடாது. யூதருக்குக் கானான் தேசம் கொடுக்கப்பட்டால், தேசம் முழுவதும் இப்படி ஆகிவிடலாமே!

**இங்கிலாந்தின் யூதப் பிரதம நியாயாதிபதி.** சர் ரூபஸ் ஐசக்ஸ் என்ற யூதன் இங்கிலாந்தின் பிரதம நியாயாதிபதியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறார். இது மகா பெரிய உத்தியோகம். முதல்தடவையாக ஒரு யூதன் இதற்கு இப்போதுதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார். இங்கிலாந்தின் பார்லமெந்திலே பதினாறு யூதரும், மந்திரிமார்களிலே மூன்று யூதர்களும் இருக்கிறார்கள்.

**இந்துமார்க்கத்தின் கடினமான நீதிமுறை** மகா கடினமான முறையாய் இந்துமார்க்கத்தார் நீதியைத் தேடுகிறார்கள். இதற்கு இரண்டு உதாரணங்களைச் சமீபத்தில் வாசித்தோம். வட இந்தியாவில் புண்ணியம்பெற விரும்புகிறவர்கள் ஸ்நானம் செய்கிற ஒரு கிணற்றுக்கு எழுபத்திரண்டு படிகள் இருக்கிறது. அதில் ஒருவன் முதல்தரம் ஸ்நானம்பண்ணிவிட்டு, ஒருபடி ஏறினான்; பின்பு இறங்கி இரண்டாம்தரம் ஸ்நானம்பண்ணிவிட்டு இரண்டுபடி ஏறினான்; பின்பு இறங்கி மூன்றாம்தரம் ஸ்நானம்பண்ணிவிட்டு மூன்றுபடி ஏறினான். பின்பு நான்காம் தடவை ஸ்நானம்பண்ணிவிட்டு நான்குபடி ஏறினான். இப்படியே எழுபத்திரண்டுபடி ஏறும்வரைக்கும், ஒவ்வொருதடவை ஸ்நானம்பண்ணிவிட்டு, ஒருபடி அதிகமாய் ஏறினான். ஏன் இப்படிச்செய்கிறாய் என்று கேட்டதற்கு, தன் ஊரிலிருக்கிற ஒரு கல் விக்கிரகத்துக்குப் பிரியமாயிருக்குமென்றெண்ணி அப்படிச் செய்ததாகச் சொன்னான்.

**கூர் ஆணிகளுள்ள வண்டியில் பிரயாணம்.** நான்கு உருளைகளின் மேல் ஒருவன் ஒரு பலகையை மாட்டி, கூர்மையான நுனிகளையுடைய நூற்றைம்பது இரும்புக்கம்பிகளை அப்பலகையில் பதித்து, அதின்மேல் அவன் படுத்துக்கொண்டு, வெகுதூரமான இடத்திலிருந்து கல்குத்தாவிலுள்ள காளிகோவிலுக்குப் போனான். அவன் தன் இடுப்பில் ஒரு சிறு துண்டுமட்டும் கட்டிக்கொண்டு அந்தக் கூர்மையான இரும்பின்மேல் படுத்திருந்தான். ஊர் ஜனங்கள் அந்த வண்டியை உருட்டிக்கொண்டுபோனார்கள். இது சில மாதங்களுக்குமுன் நடந்தது. கர்த்தராகிய இயேசுவினிடத்திலிருந்து பாவ மன்னிப்பாகிய இரட்சிப்பை நமது தேசத்தார் இலவசமான ஈவாகப் பெறுவதற்குப் பதிலாக இப்படிப்பட்ட வீணான வதைகளை அனுபவிக்கிறார்கள். கர்த்தர் நமது தேசத்து ஜனங்களைப் பிடித்த குருட்டாட்டத்தைச் சீக்கிரமாய் நீக்கும்படி ஊக்கமாய் ஜெபிப்போமாக.

Printed at the Church Mission Press, Palamcottah and Published by the Christian Brotherhood Association.



January, 1914. Registered No. M—163.

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." ([illegible])

Vol. XV ஜனுவரி [illegible] 1914

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 - APR 1914
MADRAS

## புதுவருஷ ஜெபம்.

"கர்த்தாவே, வருஷங்களின் நடுவிலே உம்முடைய கிரியையை உயிர்ப்பியும்: வருஷங்களின் நடுவிலே அதை விளங்கப்பண்ணும்." ஆபகூக் 3: 2.

"கர்த்தாவே உயிர்ப்பியும்." தற்காலத்தில் உலகத்திலுள்ளவைகளெல்லாம் புது உயிரடைகிறது. தேசங்கள் உயிரடைகிறது. ஜாதிகள் உயிரடைகிறது. மார்க்கங்கள் உயிரடைகிறது. சாஸ்திரங்கள் உயிரடைகிறது. வியாபாரங்கள் உயிரடைகிறது. கிறிஸ்து சபையிலே மாத்திரம் புது உயிரைக் காணோம். பழைய உயிரற்ற முறைப்படியே எல்லாம் நடக்கிறது. இது கர்த்தரால் உண்டான புதிய கிரியை என்று சொல்லக்கூடியது ஒன்றுமில்லை. இவன் புதிய ஆவியைப் பெற்றிருக்கிறான் என்று ஒருவரைக்குறித்தும் சொல்லக்கூடவில்லை. கிறிஸ்து சபையில் புதிதான பல தீமைகள் எழும்பியிருக்கின்றன. ஆனால் எண்ணிறந்தபேர் இரட்சிக்கப்படுவதற்கேதுவான பலத்த கிரியைகள் இல்லை. "கர்த்தாவே, உயிர்ப்பியும்". தமிழ் நாட்டுத் திருச்சபை இவ்வருஷம் புது உயிரடையக்கூடாதா? இதை வாஞ்சிக்கிறவர்கள் யார்? இதற்குக் கருவிகளாயிருக்க நாடுகிறவர்கள் யார்?

"என் தேவனே, இந்நாட்டிலும்
உம் ஆவி ஊற்றிடும்.
எல்லாரையும் உயிர்ப்பியும்,
மா கிரியை செய்திடும்."

முதலாவது, உயிர்ப்பிக்கும் கிரியை கர்த்தருடையது. "கர்த்தாவே, உயிர்ப்பியும்." பரத்திலிருந்தே உயிர்வரவேண்டும். கர்த்தர் ஒருவர் மாத்திரம் உயிரைக் கொடுக்கக்கூடும். உயிர் வருவது மகா பெரிய அற்புத கிரியை. ஒரு ஆத்துமாவையாவது ஒரு சபையையாவது உயிரடையச்செய்வது

மனுஷ வல்லமைக்கு மிஞ்சின ஒரு வேலை. ஆனால் மனிதனும் தேவனும் சம்பந்தப்படாமல் இது நடக்கிறதில்லை. உயிர்ப்பிக்கும் கிரியையைக்காண விரும்புகிறவன் கர்த்தருடைய கரத்தையே நோக்கவேண்டும். அவர் எப்போது கிரியை செய்வார், என்னவிதமாய்க் கிரியை செய்வார் என்பதை அவன் அறியவேண்டும். பலத்த விசுவாசத்தால் அவன் அதை எதிர்நோக்கவேண்டும். "கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்." (ஆமோஸ் 3: 7). உயிர்ப்பிக்கப்போகிறதாக கர்த்தர் வெளிப்படுத்துவார். அவருக்குக் காத்திருக்கிறவர்கள் அதைக் காண்பார்கள். ஆதலால் நமது தேவனாகிய கர்த்தர் நமக்கு இரங்கி நமது நாட்டை உயிர்ப்பிக்கும்படியாக நமது கண்கள் அவரையே நோக்கியிருப்பதாக.

இரண்டாவது, உயிர்ப்பிக்கும் கிரியை ஜெபத்துக்கு உத்தரவாக மாத்திரம் நடக்கும். "கர்த்தாவே, உயிர்ப்பியும்" என்று தீர்க்கதரிசி ஜெபிக்கிறான். முதலாம் பெந்தெகொஸ்து ஜெபத்துக்கு உத்தரவாக அனுப்பப்பட்டது. அதற்குப்பின்பு உண்டான மார்க்க எழுப்புதல் யாவும் ஜெபத்தின் பலனாகவே வந்தது. இனிமேலும் மிகுதியான ஜெபத்தினாலேயே மார்க்க எழுப்புதல் வரக்கூடும். இதற்கு ஏராளமானபேர் உதவிசெய்யலாம். எவரும் ஜெபிக்கலாம். சொற்பமாய் ஜெபிக்க ஆரம்பித்தவுடன் அதிகமான ஆவி அருளப்படும், போராட்டமாய் ஜெபிக்கும் வல்லமை வந்துவிடும். நான் பெலவீனன், என் ஜெபம் அவசியமில்லை என்று ஒருவரும் எண்ணவேண்டாம். சபைகளில் காணப்படுகிற பாவங்களையும் குறைவுகளையும் நினைப்போமாக. வல்லமையற்ற ஊழியங்களைக் கவனிப்போமாக. "கர்த்தாவே, உயிர்ப்பியும்" என்று இவ்வருஷம் இடைவிடாமல் கெஞ்சுவோமாக.

மூன்றாவது, உயிர்ப்பிக்கும் கிரியை தேவனுடைய பிள்ளைகளில் ஆரம்பிக்கவேண்டும். "கர்த்தாவே, உயிர்ப்பியும்." "உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ?" சங்கீதம் 85: 6. கர்த்தரால் மீட்கப்பட்ட ஜனங்கள் அவரில் மகிழ்ந்திருக்கும் சீருக்கு வருவதுதான் மார்க்க எழுப்புதல். இவர்கள் இந்த மகிழ்ச்சியை இழந்துவிடுவதினாலேதான் திரும்ப உயிர்ப்பிக்கப்படுவது அவசியமாயிருக்கிறது. இவர்கள் கர்த்தரைவிட்டு விலகின பாவத்தை உணர்ந்து அறிக்கையிட்டு முந்தின மகிழ்ச்சியைப் பெற்றுக்கொள்ளும்போது மார்க்க எழுப்புதல் ஆரம்பிக்கிறது. இவர்களில் அது ஆரம்பித்தபின்பு, அநேகர் புதிதாய் குணப்படுவார்கள். "கர்த்தாவே, உயிர்ப்பியும்" என்று ஜெபித்த தீர்க்கதரிசி அந்த அதிகார முடிவில் ஆனந்த மகிழ்ச்சியைப் பெற்றான். சகோதரனே, இந்த வருஷம் நீ உயிர்ப்பிக்கப்படுவாயா?



# "ஈசாக்கோடே என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன்."

"இஸ்மவேல் உமக்கு முன்பாகப் பிழைப்பானாக என்று ஆபிரகாம் தேவனிடத்தில் விண்ணப்பம்பண்ணினான். அப்பொழுது தேவன், உன் மனைவியாகிய சாராள் நிச்சயமாய் உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள் அவனுக்கு ஈசாக்கு என்று பேரிடுவாயாக. என் உடன்படிக்கையை அவனுக்கும் அவனுக்குப் பின்வரும் அவன் சந்ததிக்கும் நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன்." ஆதியாகமம் 17: 18, 19.

"நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய்" ஆண்டவர் எப்போதும் நமக்காகக் கிரியை செய்கிறார் என்று வேதம் சொல்லுகிறது. ஆண்டவர் மேலான நன்மைகளை வாக்குப்பண்ணுகிறார். மனிதரோ குறைவானவைகள் போதும் என்றெண்ணுகிறார்கள். ஆண்டவருடைய வாக்குத்தத்தத்துக்கும் மனிதருடைய ஜெபத்துக்கும் இடையிலே இதினால் பெரும்பிளப்பு உண்டாயிருப்பதைக் காணலாம். ஆபிரகாமைப் போலொத்த பலத்த விசுவாசிகளுடைய ஜீவியச்சரித்திரத்திலுமுதலாய் இதற்கு உதாரணத்தைப் பார்க்கலாம். இப்புது வருஷத்தில் கர்த்தரிடத்திலிருந்து பெரிதான காரியங்களை எதிர்பார்க்கத்தக்கதாக, இந்தக் காரியத்தைச் சற்றே தியானிப்போம்.

ஆண்டவருடைய வாக்குத்தத்தம். ஆபிரகாமுக்கு ஆண்டவர் கொடுத்த வாக்குத்தத்தம் மகா பெரிதென்று எல்லாரும் அறிவோம். கல்தேயர் தேசத்திலிருந்து அவனை அழைத்தபோது "உன்னைப் பெரிய ஜாதியாக்கி உன்னை ஆசீர்வதிப்பேன்" என்று ஆண்டவர் சொன்னார் (12: 2). பின்பு கானான் தேசத்தில் அவனைச் சந்தித்து, "உன் சந்ததியைப் பூமியின் தூளைப் போலப் பெருகப்பண்ணுவேன்" என்று சொன்னார். பின்னும் ஓர் முறை அவர் அவனை வெளியே அழைத்து, நீ வானத்தை அண்ணாந்துபார், நட்சத்திரங்களை எண்ண உன்னால் கூடுமானால் அவைகளை எண்ணு என்று சொல்லி, பின்பு அவனை நோக்கி, உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார்." ஆண்டவருடைய வாக்குத்தத்தங்கள் எப்போதும் இப்படியே மனிதபுத்திக்கு எட்டக்கூடாதவிதமாய் மகா பெரிதாய் இருக்கிறது. பழைய ஏற்பாட்டில் பூமிக்குரிய வாக்குத்தத்தங்கள் ஏராளமாயுண்டு. புதிய ஏற்பாட்டில் ஆவிக்குரிய வாக்குத்தத்தங்கள் அநேகம் உண்டு. "தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறது". இவைகள்தவிர, ஆபிரகாமைப்போல் ஆண்டவர் ஒவ்வொரு விசுவாசிக்கும் அவர்களுடைய ஜீவிய ஆரம்பத்தில் பூமிக்குரியதும் பரத்துக்குரியதுமான பல ஆசீர்வாதங்களை வாக்குப்பண்ணு

கிறார். ஆரம்பகாலத்தில் அவர்கள் அவைகளை நம்பி எதிர்பார்க்கிறார்கள். ஆபிரகாம் தேவனை விசுவாசித்ததுபோல் இவர்களும் தேவனை விசுவாசிக்கிறார்கள். ஆனால் காலம் செல்லச்செல்ல, அவர்களுடைய விசுவாசம் பெலவீனப்பட்டு, அவர்களுடைய எதிர்பார்க்குதல் குன்றிப்போகிறது. ஆபிரகாமிலும் முதலாய் இதைப் பார்க்கிறோம். பக்தரே, இந்தப் புதுவருஷ ஆரம்பத்தில் உங்கள் முன்னான ஜீவியத்தைச் சிந்தித்துப்பாருங்கள். ஆரம்பகாலத்தில் நீங்கள் கொண்ட ஏதாவது நம்பிக்கை இன்னமும் நிறைவேறாதிருக்கிறதா? அது வருமென்ற நம்பிக்கை உங்களில் தளர்ந்துபோயிருக்கிறதா? நீங்கள் தளர்ந்துபோய்விட்டதால், உங்கள் ஆண்டவரும் அதைப் பற்றித் தளர்ந்து சோர்ந்துபோய்விட்டார் என்று எண்ணுகிறீர்களோ? "கர்த்தராகிய அநாதிதேவன் சோர்ந்துபோவதுமில்லை, இளைப்படைவதுமில்லை; இதை நீ அறியாயோ?" வாக்குத்தத்தத்தைப்பற்றிச் சோர்படைந்துபோன ஆபிரகாமை அவர் எப்படித் தைரியப்படுத்தினார் என்று பாருங்கள்.

ஆபிரகாமின் ஜெபம். "இஸ்மவேல் உமக்கு முன்பாகப் பிழைப்பானாக என்று ஆபிரகாம் தேவனிடத்தில் விண்ணப்பம்பண்ணினான்."(18வா) இஸ்மவேல் இப்போது பதிமூன்று வயதுள்ளவனாயிருந்தான். முன்னோர் முறை ஆபிரகாம் ஆண்டவரைப்பார்த்து, "கர்த்தராகிய ஆண்டவரே, அடியேனுக்கு என்னதருவீர்? நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே என்றான்" (15: 2). இதற்குப்பின்பு அவனுடைய அடிமைப் பெண்ணாகிய ஆகார் அவனுக்கு இஸ்மவேலைப் பெற்றாள். ஆபிரகாம் உடனே இஸ்மவேல் போதும் என்று எண்ணி, வாக்குத்தத்தத்தை மறந்துவிட்டான். வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலாக இஸ்மவேல் ஆசீர்வதிக்கப்பட்டால் போதும் என்று எண்ணி, "இஸ்மவேல் உமக்குமுன்பாக பிழைப்பானாக" என்று ஜெபிக்கிறான். ஆபிரகாம் தனக்குக் கொடுக்கப்பட்ட மகத்துவ வாக்குத்தத்தத்தை மட்டுப்படுத்திப்போட்டான், நீண்டகாலம் காத்திருந்து தவித்துப்போனான் என்று ஆண்டவர் கண்டு, அவனிடத்தில் வந்து "நான் உன் மனைவி சாராளை ஆசீர்வதித்து, அவளாலே உனக்கு ஒரு குமாரனைத் தருவேன்" என்றார். "அப்பொழுது ஆபிரகாம் முகங்குப்புற விழுந்து நகைத்து, நூறுவயதானவனுக்குப் பிள்ளைபிறக்குமோ? தொண்ணூறு வயதான சாராள் பிள்ளைப்பெறுவாளோ? என்று தன் இருதயத்திலே சொல்லிக்கொண்டு, இஸ்மவேல் உமக்குமுன்பாகப்பிழைப்பானாக" என்று ஜெபித்தான். ஆண்டவரோ, நீ கேட்டபடி இஸ்மவேலை ஆசீர்வதிக்கிறேன்; ஆனால் நான் ஈசாக்கை வாக்குப்பண்ணியிருக்கிறபோது, இஸ்மவேலோடே திர்ப்தியாயிராதே என்று சொன்னார். இஸ்மவேலோடு அல்ல, ஈசாக்கோடுதான் நான் உடன்படிக்கைபண்ணக்கூடும். அடிமையானவளின் மகனல்ல, சுயாதீனமுள்ளவளின்மகனே உனக்குஅருளப்பட்ட வாக்குத்தத்தத்துக்குச் சுதந்தரவாளியாவான் என்று ஆண்டவர் சொன்னார்.



சர்வவல்லவராகிய நான், உனக்கு அருளிய உன்னத வாக்குத்தத்தத்தைப் பரிபூரணமாய் நிறைவேற்ற வல்லவராயிருக்கிறேன்; உன்னை நம்பப்பண்ணின வாக்கை இதோ நிறைவேற்றப்போகிறேன்; "வருகிற வருஷத்திலே குறித்த காலத்திலே" சாராள் உனக்கு ஈசாக்கைப் பெறுவாள் என்று தேவன் வாக்குத்தப்பண்ணினார். அப்படியே ஒரு உற்பவகாலத்திட்டத்திலே ஈசாக்கு பிறந்தான். ஆபிரகாமின் உள்ளம் நகைப்பினால் நிறைந்தது, வாக்குத்தத்தம் மகத்துவமாய் நிறைவேறிவிட்டது. சகோதரனே, உன் உள்ளத்தைப் பூரிப்பாக்கக்கூடிய ஈசாக்கு யார்? உன் விசுவாச ஜீவிய ஆரம்பத்தில் ஆண்டவர் உனக்கு வாக்குப்பண்ணின நன்மை என்ன? நெடுங்காலம் ரத்தாமதித்த அது இந்த வருஷம் வந்துவிடும் என்று நீ நம்பக்கூடுமா? உன் ஆண்டவர் அதை இந்த வருஷம் கட்டளையிட்டுவிட்டால் உன் ஜீவியம் எப்படியிருக்கும்?

தேவனுக்கு மகிமை. ஆபிரகாமை இப்படி தைரியப்படுத்தினபின்பு ஆண்டவர் சற்றுபொறுத்துவந்து சாராளையும் பெலப்படுத்தினார். அவளும் அவிசுவாசத்தைக் காட்டினபோது, "கர்த்தர் ஆபிரகாமை நோக்கி சாராள் நகைத்து, நான் கிழவியாயிருக்கப் பிள்ளைப்பெறுவது மெய்யோ என்று சொல்வானேன்? கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ? உற்பவகாலத் திட்டத்தில் உன்னிடத்திற்குத் திரும்ப வருவேன்; அப்பொழுது சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என்றார்" (18: 13, 14). "ஆபிரகாமும் சாராளும் வயதுசென்று முதிர்ந்தவர்களாயிருந்தார்கள். ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு சாராளுக்கு நின்றுபோயிற்று" (11 வா). இதற்குப்பின் வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலான குமாரனைக் கொடுப்பதுதான் ஆண்டவருடைய மகத்துவ வல்லமைக்கு ஏற்றதாயிருக்கும். மற்றப்படி இயற்கை முறைப்படி நடந்ததென்று மனிதன் சொல்லுவானேயல்லாமல், கர்த்தரால் நடந்ததென்று மனிதன் சொல்லமாட்டான். மேலும், ஆபிரகாம் தன் சரீரம் செத்துப்போனதையும் சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் அறிந்திருந்தும், வாக்குத்தத்தத்தைக்குறித்து அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி விசுவாசத்தில் அசைவில்லாதிருந்ததே ஆண்டவருக்கு மகிமையை வருவிக்கிறதாயிருந்தது. இயற்கை முறைப்படி நடக்கக்கூடியதை நம்புவது விசுவாசமாய் எண்ணப்படமாட்டாது. இயற்கையாய் நடக்கக்கூடாதவைகளை, கர்த்தர் சொல்லுவதினிமித்தம் நம்புவதே விசுவாசம் இவ்வித விசுவாசம்தான் ஆண்டவரை மகிமைப்படுத்தும். ஆதலால் ஆண்டவர் ஆபிரகாமின் சரீரம் செத்து, சாராளின் கர்ப்பம் சக்தியற்றுப்போகுமட்டும் காத்திருந்தார். அதற்குப் பின்புதான் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றக்கூடியதாயிருந்தது. அதற்குப்

பின்பு செய்வதுதான் ஆண்டவருடைய வல்லமைக்குப் புகழ்ச்சி. அதற்குப் பின்பு நம்புவதுதான் ஆண்டவரை மகிமைப்படுத்தும் முறை. சிநேகிதரே, வாக்குத்தம் நிறைவேறுவதற்கு நீண்டகாலம் செல்லவேண்டியது அவசியும். அதினுல் அதைரியப்படவேண்டாம். கர்த்தர் குறித்த நேரம் கடைசியாய் வரும். அப்பொழுது வாக்குத்தத்தம் மகிமையாய் நிறைவேறும். நம் மகிழ்ச்சியாக்கும் ஈசாக்கு நமக்கும் கொடுக்கப்படுவான். ஆதலால் நா விசுவாசத்தில் பலமாயிருப்போமாக.

## "பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க நாடுங்கள்."

எபிரேயர் 12: 14.

ஏதாகிலும் ஒன்றின்பேரில் ஒருவருக்கு நாட்டமும் தேட்டமுமுண்டாகுமானுல், அதைப் பெற்றுக்கொள்ளுமுன் அவர் அமர்ந்திருடார். பரிசுத்தமுள்ளவர்களாயிருப்பதற்கு கிறிஸ்தவர்களுக்கு இந்நாட்டமும் தேட்டமும்தான் தேவை. பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க அவ பேராவல்கொள்ளவேண்டும். இந்தப் பேராவல் இல்லாததினுலேதான் அவர்களில் மிகுதியான்வர்கள் அவபக்தராய் நிலைத்திருக்கிருர்ாகள். பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க நாடுகிறவர்கள் பரிசுத்தமுள்ளவர்களாக்கப்படுவார்கள். அவர்களைப் பரிசுத்தமாக்க ஆண்டவர் போதுமான எத்தனங்களை உண்டுபண்ணியிருக்கிருர். பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க நாடாதவர்களையோ அவர்களுடைய அவபக்தியிலே அவர் விட்டுவிடுவார். "அநியாயம் செய்கிறவன் இன்னும் அநியாயம் செய்யட்டும். அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும். நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். இதோ, சீக்கிரமாய் வருகிறேன்" என்று இயேசு இராஜா விளம்பரம்பண்ணுகிருர். பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க நாடுகிறவர்களுக்கு உதவியாக, எபிரேயர் நிருபத்தில் காட்டப்பட்டிருக்கிற முறையை இங்கு விஸ்தரித்துக் காட்டுகிறோம். அநேகருக்குப் பிரயோஜனமாக கர்த்தர் தாமே இதை உபயோகிப்பாராக.

முகவுரையாக: நம்மைப் பரிசுத்தம்பண்ணுகிறவரைப் பாருங்கள். அவரையே இந்நிருபம் ஆரம்பமுதல் கடைசிவரை முக்கியப்படுத்திக் காட்டுகிறது. "பரம அழைப்புக்கு பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்" என்று சொல்லுகிறது (3: 1). பரிசுத்தம்பண்ணுகிறவராக அவரைக் கவனித்துப்பாருங்கள். "பரிசுத்தஞ்செய்கிறவரும் பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிருர்கள். இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படவில்லை . . . . . அன்றியும் அவர் தேவ



காரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது. ஆதலால் அவர் தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினுலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிருர்" (2: 11, 17, 18), நம்மைப் பரிசுத்தம்பண்ணுகிற தேவனுடைய குமாரன் நம்மில் ஒருவரைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர். நம்மைச் சகோதரர் என்று சொல்ல வெட்கப்படாதவர். நம்முடைய சுக துக்கங்கள் யாவையும் அனுபவித்து அறிந்தவர். நம்மிடத்தில் மிகுந்த அனுதாபமுள்ளவர். நம்முடைய பெலவீனங்களைப் பார்த்து பரிதபிக்கிறவர். நமது தவறுதல்களினிமித்தம் நம்மைத் தள்ளிப்போடாதவர், நமக்கு உதவிசெய்ய வல்லவர். நம்மைப் பரிசுத்தம்பண்ணக்கூடியவர், நம்மை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவர். இவரை நோக்கிப்பார்க்கிற எவருக்கும் பூரண நம்பிக்கை வருகிறது. இவரால் பரிசுத்தமாகலாம் என்ற பூரண நம்பிக்கை உண்டாகிறது. மகா திறமைசாலியான ஒரு உபாத்தியாயரிடம் படிக்கிற ஒரு வாலிபன், அவருடைய போதனையினுல் உயர்ந்த பரீட்சை கொடுத்துத் தேறிவிடலாம் என்று நம்பிக்கைகொள்வதுபோல, இவர் மூலமாய்ப் பரிசுத்தமாகலாம் என்று எவரும் பூரண நம்பிக்கைகொள்ளலாம். தமது ஜனத்தைப் பரிசுத்தம் செய்கிறவர் இவரே. இவர் எவ்விதமாய்ப் பரிசுத்தமாக்குகிருர் என்பதை இந்நிருபத்தில் விஸ்தாரமாய்ப் பார்க்கலாம். அவைகளை ஒவ்வொன்ருய்க் கவனிப்போமாக.

1-வது, இவர் தமது இரத்தத்தால் நம்மைப் பரிசுத்தமாக்குகிறர். "அந்தப்படியே இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினுலே ஜனத்தைப் பரிசுத்தம்செய்யும்படியாக நகரவாசலுக்குப் புறம்பே பாடுபட்டார். ஆகையால் நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் போகக்கடவோம்" (13: 12, 13). திரு இரத்தத்தால் வரும் சுத்திகரிப்பையும் பரிசுத்தத்தையும்பற்றி இந்த நிருபத்தில் பலமுறையும் வாசிக்கிறோம். ஆரம்பமுதல் கடைசிவரையும் இதைப் பார்க்கலாம். 'இவர் தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார்" (1: 3). 'கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்" (9: 14). கிறிஸ்துவின் இரத்தத்தால் துர்மனச்சாட்சி நீங்க இருதயம் தெளிக்கப்படலாம் (10: 22). இது மகா பெரியபாக்கியம். பாவம்செய்த ஆத்துமா துர்மனச்சாட்சியினுல் நித்திய காலம் வாதிக்கப்படவேண்டும். ஆனுல் கிறிஸ்துவின் திரு இரத்தம் அதை நம்புகிற எந்தப் பாவியினுடைய உள்ளத்திலுமிருந்து பாவத்தாலுண்டான துர்மனச்சாட்சியைச் சமூலமாய் எடுத்துப்போட மகத்துவ வல்லமையுள்ள

தாயிருக்கிறது. துர்மனச்சாட்சியினின்று விடுதலைபெறாத எந்த ஆத்துமாவும் பரிசுத்த ஜீவியத்தை ஆரம்பிக்கத் தைரியங்கொள்ளமாட்டாது. பாவம் மன்னிக்கப்பட்டது, இருதயம் சுத்திகரிக்கப்பட்டது என்ற நிச்சயமுள்ள எந்த ஆத்துமாவும், இதற்குமுன் பாவமே செய்யாத ஆத்துமாவைப்போல தைரியமாய்ப் பரிசுத்த ஜீவியத்தை ஆரம்பிக்கலாம். இந்த தைரியத்தைக் கொடுக்கிற திரு இரத்தம் மீட்கப்பட்ட பாவிக்கு மகா அருமையானது. பரிசுத்த ஜீவியத்துக்கு இந்த மகத்துவ இரத்தத்தின் சுத்திகரிப்பு என்றும் தேவை.

"பாவம் முற்றும் போக்கும் பேரன்பும்,
என்னைத் தூய்மையாக்கும் இரத்தமும்,
மாசில்லாமல் காக்கும் சக்தியும்
இயேசுவில் உண்டே."

2வ-து, கிறிஸ்து தமது பரிசுத்தத்தை நமக்கு ஒரே மொத்தமாய் அருளுகிறார். "பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்" (10:14) "இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்" (10: 10). பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க நாடுகிறவர்களுக்கு இதிலே மகா அருமையான ஒரு சிலாக்கியம் அடங்கியிருக்கிறது. கிறிஸ்துவின் பிராயச்சித்தப் பலியினாலே இந்த மகா பெரிய பாக்கியம் அளிக்கப்படுகிறது. கர்த்தராகிய இயேசு இந்தப் பூமியிலே முப்பத்துமூன்று வருஷம் பாவமில்லாத பரிசுத்தராய் ஜீவித்தார். அதின்பின்பு அவர் பாவபிராயச்சித்தப் பலியாய் மரித்தார். அவர் அப்படி மரித்தபடியினாலே, அவர் மூலமாய்ப் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பைத் பெறுகிறவர்களுக்கு, அவருடைய பரிசுத்தம் முழுவதும் சொந்தமாகக் கொடுக்கப்படுகிறது. அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தத்தில் பூரணராக்கப்பட்டவர்களாயும் தேவனால் எண்ணப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் பார்வையிலும் மனிதருடைய பார்வையிலும், பூரணராக்கப்பட்டவர்களாய்க் காணப்படாதபோதிலும், அவர்கள் கிறிஸ்துவுக்குள்ளிருப்பதினிமித்தம் தேவனுடைய பார்வையில் அப்படிக் காணப்படுகிறார்கள். இது தேவனுடைய பிள்ளைகள் யாவருக்குமுரிய கிருபையின் நிலைமை. இந்த நிலைமையை இழந்துவிடாதிருக்கவும், இதற்கு குறைவாகக் காணப்படாதிருக்கவுமே அவர்கள் நாடவேண்டும். இராஜகுமாரனுக்கப்பட்ட ஒருவன் இராஜகுமாரனைப்போல் நடக்க நாடவேண்டாமோ?

3-வது, கிறஸ்து தமது ஆவியால் நம்மைப் பரிசுத்தம்பண்ணுகிறார். "பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார். இதைக்குறித்து பரிசுத்த ஆவியானவரும் நமக்குச் சாட்சிசொல்லுகிறார். எப்படியெனில், அந்த நாட்களுக்



குப்பின்பு நான் அவர்களோடேபண்ணும் உடன்படிக்கையாவது, நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் வைத்து, அவைகளை அவர்களுடைய மனதில் எழுதுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்பதை உரைத்தபின்பு அவர்களுடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை என்பதைச் சொல்லுகிறார்" (10: 14-17). ஆவியானவர் சாட்சி பகருவதினாலும் மற்றும் அநேகவிதமாயும் நமக்கு உதவிசெய்கிறார். நமக்கு உதவிசெய்யும்படிக்கே அவர் அனுப்பப்பட்டிருக்கிறார். நமது மேலான நிலைமைக்குச்சரியாக நமது நடக்கையைச் சரிப்படுத்தும்படியாக தேவ ஒத்தாசை நமக்குத் தேவை. அதற்கென்று ஆவியானவர் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறார். அவருடைய நடத்துதலுக்குக்கிசைந்து ஜீவிக்கிறவர்களை அவர் பரிசுத்தம்பண்ணுகிறார். ஆதலால், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க நாடுகிறவர்கள் ஆவியானவரின் சகாயத்தைத் தேடவேண்டும்.

4-வது. கிறிஸ்து தமது வசனத்தால் நம்மைப் பரிசுத்தமாக்குகிறார். பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் வசனத்தை நமக்கு ஞாபகப்படுத்துகிறதாக மேலே பார்த்தோம். நம்மைப் பரிசுத்தம்பண்ணுவதற்கு கர்த்தருடைய வசனம் செய்கிற கிரியையையும் இந்த நிருபத்திலே பார்க்கலாம் "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும் கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது" (4: 12). பரிசுத்தமாக்குகிறதில் கர்த்தருடைய வசனம் செய்கிற கிரியை என்னதென்று அநேகருக்குத் தெரியாது. அதைக் கரிசனையாய் வாசிக்கிறவர்களுக்கு அது சரி எது, தப்பிதம் எது என்று திட்டமாய்க் காட்டுகிறது. ஆண்டவர் அமைந்திருக்கிறபடி மனிதருடைய மனச்சாட்சியும் கர்த்தருடைய வசனம் சரி என்று சொல்வதையே சரி என்றும், கர்த்தருடைய வசனம் தப்பிதம் என்று சொல்வதையே தப்பிதம் என்றும் சொல்லும். இருதயத்தில் வாசம்பண்ணுகிற தேவ ஆவியானவரும் இவை இரண்டுக்கும் இசைவாகவே எப்போதும் சாட்சிகொடுப்பார். இவை மூன்றும் தெய்வத்தால் ஏற்படுத்தப்பட்ட சாட்சிகளாயிருப்பதால், மூவருடைய வாக்கும் ஏகவாக்காகவே இருக்கும். இவைகளுடைய சாட்சிப்படித் தப்பிதமானவைகளை விலக்கி, சரியானவைகளைக் கைக்கொள்வதினாலேயே பரிசுத்தத்தில் தேறிவரலாம். "நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்" என்றும், "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும், உம்முடைய வசனமே சத்தியம்" என்றும் இயேசுசுவாமி சொன்னார். பரிசுத்தமுள்ள

வர்களாயிருக்க நாடுகிறவர்கள் கர்த்தருடைய வசனத்தின்படி தங்களைக் காத்துக்கொள்ளவேண்டும்.

5-வது, கிறிஸ்து நம்மைச் சிட்சித்துத் தமது பரிசுத்தத்துக்கு நம்மைப் பங்குள்ளவர்களாக்குகிறார். 'இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார்' (12: 10). கர்த்தருடைய வசனமும், நமது மனச்சாட்சியும், தேவ ஆவியானவரும் ஒன்று சேர்ந்து சொல்லும் ஆலோசனையை நாம் அலட்சியம் செய்து நடக்கும்போது, ஆண்டவர் நம்மைச் சிட்சித்துச் சரியான வழியில் நடத்துவார். ஆதலால் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க நாடுகிறவர்களுக்குப் பலமுறையும் மற்றவர்களைவிட அதிகத் தண்டனைகள் வருவதுபோல காணப்படும். ஆனால் அதெல்லாம் ஆண்டவருடைய பரிசுத்தத்துக்கு நம்மைப் பங்குள்ளவர்களாக்கும்படிக்கே அனுப்பப்படுகிறது. ஆதலால் சிட்சைக்குத் தப்பவேண்டுமானால், வசனத்தைக் கவனித்து நடக்கவேண்டும்.

6-வது, கிறிஸ்துவின் மூலமாய் தேவனோடு செய்யும் இன்ப சகவாசத்தினால் அவர் நம்மைப் பரிசுத்தமாக்குகிறார். 'மேலும் தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால், அவர்களை முற்று முடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிறார்' (7: 25). நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படிக்கு அவர் பாடுபட்டார். 'சகோதரரே, நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் புதிதும் ஜீவனுமுள்ள மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால்...விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடு சேரக்கடவோம்.' (10: 19-22). இந்த நிருபத்தின் முக்கிய செய்தி இதுவே. மனிதர் தேவனோடுகூட இன்பசகவாசம் செய்யப்பழகவேண்டும். அதற்கு இருந்த தடைகள் யாவையும் கர்த்தராகிய இயேசு நீக்கிவிட்டார். தேவனோடு சகவாசம் செய்யும் நேரங்களை வரவர அதிகப்படுத்துகிறவர்கள் அதிகப் பரிசுத்தமாய் ஜீவிப்பார்கள். தேவசகவாசத்தைக் குறைக்கிறவர்கள் பரிசுத்த ஜீவியத்தில் தளர்ந்தே போவார்கள். ஆதலால் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க நாடுகிறவர்கள் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்து தேவனோடு ஜீவிக்கப் பழகவேண்டும்.

7-வது, இயேசுவின் இரண்டாம் வருகையினிமித்தம் எல்லாரும் பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும். 'பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க நாடுங்கள். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே' (12: 14). மூலபாஷையின்படி இந்த வாக்கியம்: எந்த அளவான பரிசுத்தமில்லாமல் ஒருவன் கர்த்தரைத் தரிசிக்க முடியாதோ, அந்த அளவான பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க நாடுங்கள்' என்றிருக்கிறது. இயேசு இராஜா



வரும்போது அவரைத் தரிசிக்க வாஞ்சிக்கிற எவரும் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவேண்டும். தாங்கள் விரும்புகிற அளவுப்படியல்ல, அவர் குறித்திருக்கிற அளவுப்படி பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டும். அவர் வருகிறபோது அவரைத் தரிசிக்கும் நம்பிக்கையைக் கொண்டிருக்கிற எவனும் அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான் என்று பரிசுத்த யோவான் அப்போஸ்தலனும் சொல்லுகிறார். (1 யோவான் 3: 3). அவர் வரும் நாளில் பரிசுத்தம் ஒன்றுதான் மகா முக்கியமாயும் பெரிய அவசியமாயும் காணப்படும். அதிகப் பரிசுத்தமுள்ளவனாய் ஜீவித்தேனில்லையே என்று எந்த மனிதனும் அன்று துக்கப்பட நேரிடும். சகோதரரே, இயேசு இராஜாவின் வருகை சமீபமாயிருப்பதால், அவர் வரும் நாளுக்கு வேண்டிய அளவான பரிசுத்தமுள்ளவர்களாய் ஜீவிக்க எல்லாரும் நாடுவோமாக.

முடிவுரையாக: ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரை திரும்பவும் நோக்கிப் பாருங்கள். 'நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பப்பண்ணின சமாதானத்தின் தேவன் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு தமக்கு முன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படி செய்ய உங்களைச் சகலவித நற்கிரியையிலும் சீர் பொருந்தினவர்களாக்குவாராக. அவருக்கு என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்' (13: 20). பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க நாடுகிற யாவருக்குள்ளும் கிறிஸ்து வசித்து, அவர்களை ஆண்டவருக்குப் பிரியமான பரிசுத்தமுள்ளவர்களாக்குவார்.

## 'மனதை அடக்குகிறவன்'.

'பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும், தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்' நீதி. 16: 32.

தேவனுடைய சிருஷ்டிகளில் மனிதன் மாத்திரம் மனசையும் நினைவையும் உடையவனாயிருக்கிறான். இது மகா பெரிய சக்தி, இதினால் அவன் தேவனோடு சம்பந்தமுள்ளவன் என்று காட்டுகிறான். இதினிமித்தம் அவன்பேரில் மகா பெரிய உத்திரவாதமும் இருக்கிறது. பாக்கியம் பெரிதாயிருக்கும்போது கணக்கும் அதிகமாய்க் கேட்கப்படும்.

மனிதனுடைய நினைவு கிரியையை உண்டாக்குகிறது. ஒரே கிரியையைப் பலமுறை செய்வதினால் பழக்கம் வருகிறது. பழக்கம் பலப்படும்போது ஒரே வித குணம் உறுதிப்படுகிறது. இம்மையின் குணத்துக்குத்தக்கதாக மறுமையின் பங்கு இருக்கும். இவையெல்லாவற்றுக்கும்

மூலாதாரம் நினைவே. ஆதலால் ஒரு பட்டணத்தை அடக்குவதைவிட, தன் மனதை அடக்குவதே மகா முக்கியம். 'எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள். அதினிடத்திலிருந்து ஜீவ ஊற்று புறப்படும்' நீதி. 4: 23

மனதை ஒருமுகப்படுத்துவது மகா பெரிய அவசியம் என்பதைப் பலவிதமாய்க் காட்டலாம். ஒரே பொருளின் பேரில் மனதின் நினைவைச் செல்லப்பண்ணுவது தியானம் என்றழைக்கப்படுகிறது. நன்மையானவைகளைத் தியானிப்பதினால் வரும் லாபமும், தீமையானவைகளைத் தியானிப்பதினால் வரும் கெடுதியும் எல்லாருக்கும் தெரியும். மனிதன் தன் மனதினால் எப்படிப்பட்ட காரியங்களைத் தியானிக்கிறானோ அவனுடைய ஜீவியம் அந்தப்படியே இருக்கிறதென்று வேதம் சொல்லுகிறது. 'அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்' நீதி. 23: 7. ஆதலால் தாவீது இராஜா, 'நான் உமது நாமத்திற்குப் பயந்திருக்கும்படி என் இருதயத்தை ஒருமுகப்படுத்தும்' என்று ஜெபிக்கிறார். சங்கீதம் 86: 11. இருதயத்தை ஒருமுகப்படுத்தாதவர்களுடைய ஜீவியம் மேலே ஏறாமல், கீழே இறங்கியே போய்விடும்.

மனதில் சிந்தனை செய்யும் பொருள் அதற்கு இனமான தியானத்தை உண்டுபண்ணுகிறது. மனதில் உண்டாகும் காட்சியே சிந்தனை என்று சொல்லலாம். நமது கண்களை நாம் மூடிக்கொண்டாலும் நமது மனதிலே ஒரு காட்சியை நாம் முன் நிறுத்திக்கொண்டிருக்கலாம். பாட்டுகளை உண்டுபண்ணுகிறவர்கள் தாங்கள் பாடப்போகிற பாட்டுகளை முன் நிறுத்தி யோசிக்கிறார்கள். கட்டடம் கட்ட யோசிக்கிறவர்கள் அந்தக் கட்டடப் படத்தை மனதின் முன் நிறுத்துகிறார்கள். பரிசுத்த ஜீவியத்தின் விஷயமாய் இந்த மனதின் காட்சி மகா முக்கியமானது. உத்தியோகம் பெறுவதையும் அதிகாரம் பண்ணுவதையும் மனதின் முன் நிறுத்தி தியானிக்கிறவன் மகா பெரிய தன்னயக்காரனையும் பேராசைக்காரனாகவும் மாறிவிடுவான். அசுத்த இச்சைக்கு ஏவுகிற காட்சிகளை மனதின் முன் நிறுத்திக்கொள்ளுகிறவன் அசுத்த கிரியைகளுக்குத் தப்பமாட்டான்.

ஆதலால் தேவன் இருதயத்தைப் பார்க்கிறார். மனிதனுடைய இருதயத்தின் சிந்தனையை வைத்து அவனுடைய ஜீவியத்தைக் கணிக்கிறார். தீமையானவைகளைச் சிந்திக்கிற இருதயம் ஆண்டவருடைய பார்வையில் சுத்தமாயிருப்பதாக எண்ணப்படமாட்டாது. இருதயத்தின் நினைவை அடக்காதவன் தன் நாவினாலும் செய்கையினாலும் பாவஞ்செய்யாதிருக்க முடியாது. ஆதலால் துணிகரமான பாவத்துக்கு விலக விரும்புகிறவன் தாவீதைப்போல, 'என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும் என் இருதயத்தின் தியானமும் உமது சமுகத்தில்



பிரீதியாயிருப்பதாக' என்று கெஞ்சவேண்டும். பின்வரும் மூன்று காரியங்களையும் செய்வது மனதை அடக்குவதற்கு உதவியாயிருக்கும்.

1-வது, கர்த்தருடைய வசனத்தால் மனதை நிரப்பவேண்டும். 'நான் உமக்கு விரோதமாய்ப் பாவம் செய்யாதபடிக்கு உமது வாக்கை என் இருதயத்தில் வைத்துவைத்தேன்' என்றும், 'வீண் சிந்தனைகளை நான் வெறுத்து உமது வேதத்தில் பிரியப்படுகிறேன்' என்றும் சங்கீதக்காரன் சொல்லுகிறார். கர்த்தருடைய வசனத்தின் பேரில் பேராவல்கொண்டு அதை வாசிக்கவேண்டும். கர்த்தருடைய வசனத்தின் பொருள் தொடர்ச்சியாய் நமது மனதிலே தங்கவேண்டும். வேதத்திலுள்ள ஒரு புஸ்தகத்தை நினைத்தால் அதின் பொருளெல்லாம் மனதில் வரக்கூடியதாயிருக்கவேண்டும். இப்படியிருந்தால், எந்த நேரத்திலாகிலும் தீமையான நினைவுக்கு விலகவேண்டுமானால், வேதபுஸ்தகமில்லாமல் கர்த்தருடைய வசனத்தைத் தியானிக்கத் துவக்கிவிடலாம். அதினால் மனதைச் சிதறவிடாமல் காத்துக் கொள்ளலாம்.

2-வது, போதுமான அளவுக்கு எப்போதும் மனதுக்கு நல்ல வேலை கொடுக்கவேண்டும். வேலையற்ற மனதுக்கு சாத்தான் வேலை கொடுப்பான். எந்த மனிதனுக்கும் பிரயோஜனமான வேலை போதுமானமட்டும் இருக்கவேண்டும். அதிலிருந்து அவன் மனது வேறே காரியத்துக்குச் செல்ல இடமில்லாதிருக்கவேண்டும். இந்தப்படி பரிசுத்த பவுல் போதிக்கிறார். 'கடைசியாக சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள். அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்' பிலிப்பியர் 4: 8, 9. இப்படிச் செய்தால் தீமையான சிந்தை உண்டாக இடமிருக்கமாட்டாது. எப்போதும் ஆவிக்குரியவைகளையே சிந்திக்க நாம் இவ்விதமாய்ப் பழகிவிடலாம்.

3-வது, கர்த்தரை நோக்கி அமர்ந்து காத்திருக்கும் பழக்கத்தை நாம் உண்டுபண்ணவேண்டும். மனதை அடக்குவதற்கு இது மகா பிரயோஜனமான முறை, 'தாயின் பால் மறந்த குழந்தையைப்போல என் ஆத்துமாவை அடக்கி அமரப்பண்ணினேன்' என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான் (131: 2). கர்த்தரை நோக்கி அமர்ந்து காத்திருக்கும் நேரத்தில் மனதில் ஒன்றையும் நினைக்கவும் கூடாது, இருதயத்தில் ஒன்றையும் விரும்பவும் கூடாது. சரீரம் ஆத்துமா ஆவியாவும் அமர்ந்திருக்கவேண்டும். பூரணமாய் மனதை அடக்கும் முறை இதுவே. மனதினால் ஒன்றையுமே நினையாதிருக்க நாம் பழகிவிடும்போது, நமக்கு இஷ்டமான திசையில் மாத்திரம் நமது நினைவை நடத்துவது எளிதாயிருக்கும். அப்பொழுது நமது

இருதயத்தையும் சிந்தையையும் நாம் எப்போதும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளலாம். அதினால் ஜீவனும் சமாதானமும் எப்போதும் நமக்குக் கிடைக்கும்.

## ஓர் ஆலயத்தைப் பழுதுபார்க்க 500 பவுண் சேகரித்த முறை.

இங்கிலாந்திலுள்ள பிரிஸ்றல்பட்டணத்தில் பரிசுத்த சிலாவின் ஆலயம் என்ற ஓர் ஆலயம் இருக்கிறது. சில மாதங்களுக்கு முன் அதின் கூரை பழுதுபட்டிருப்பதாகக் காணப்பட்டது. அதை உடனே பழுதுபார்க்க வேண்டியதாயிருந்தது. அப்பொழுது சபையின் முக்கியஸ்தர்கள் ஒன்றுகூடி அதைப்பற்றி வெகுவாய் ஜெபம் செய்தபின்பு அதற்குவேண்டிய 500 பவுணையும் ஜனங்களிடத்திலிருந்து சேகரிக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. சபையாரின் பொதுவான கூட்டத்தில் அது அங்கீகரிக்கப்பட்டது. அப்படித் தீர்மானிக்கப்பட்ட நாளிலிருந்து ஏழுவாரம் ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டது. அந்த ஏழு வாரங்களின் கடைசி நாளாகிய கடந்த அக்றோபர் மாதம் 20-ம் தேதியை விசேஷித்த நன்கொடைகளை அனுப்பும் நாளாக நியமித்து, அன்று இரவு ஒரு ஸ்தோத்திர ஆராதனை வைக்கத் தீர்மானித்தார்கள். அந்த நாள் வரை சபையின் முக்கியஸ்தர்கள் பலமுறை கூடி அதற்காக ஊக்கமாய் ஜெபம்செய்தார்கள். பிரிஸ்றல் பட்டணத்தில் இந்தச் சபை ஜனங்கள் அதிக எளியவர்கள்தான். ஆயினும், சபை முக்கியஸ்தர்கள் ஜெபத்தின் வல்லமையை அறிந்தவர்களானதால் மிகுந்த நம்பிக்கையோடு ஜெபித்து வந்தார்கள்.

அக்றோபர் மாதம் 20-ம் தேதி காலை வரை பணமாகவும் வாக்குப்பண்ணப்பட்ட தொகைகளாகவும் 430 பவுண் வந்திருந்தது. அன்று இரவு 8 மணிக்கு ஸ்தோத்திரம் ஆராதனை வைக்கப்படுமுன் 70 பவுண் வரவேண்டும். அன்று காலை 8 மணி முதல் குருவானவர் ஆலயத்திலேயே இருந்து, கொண்டுவரப்பட்ட காணிக்கைகளை வாங்கினார். பல எளியவர்கள் வெகு சொற்பமான காணிக்கைகளை மட்டும் கொண்டுவந்தார்கள். அரை பென்னிகளும் பார்திங்குகளும்கூட வந்தது. மாலை $7\frac{1}{2}$ மணிக்குள் 45 பவுண் மட்டும் வந்திருந்தது. இன்னும் அரைமணி நேரத்துக்குள் 25 பவுண் எப்படி வரக்கூடும் என்று சிலர் சந்தேகித்தார்கள். ஆனால் முதல்மணி அடிக்கப்படவே, மிகுந்த சுயவெறுப்பினால் காணிக்கை சேர்த்திருந்த இன்னும் பலர் வந்தார்கள். எட்டு மணிக்கு இரண்டு நிமிஷம் இருந்தபோது 500



பவுனும் பூராவாய் வந்துவிட்டது. ஆனால் அடுத்த இரண்டு நிமிஷத்துக்குள் இன்னும் ஆறு பவுண் வந்தது. ஆராதனையை ஸ்தோத்திர கீதத்தைப் பாடி ஆரம்பித்தார்கள். 506 பவுண் வந்திருப்பதாக குருவானவர் தெரிவித்தார். ஆராதனை முழுவதும் உற்சாகமாய் நடந்தேறினது.

அன்று பகலில் நடந்த ஒரு சிறு சம்பவத்தைச் சொல்லுகிறோம். மத்தியானத்துக்கு மேல் குருவானவர் ஆலயத்திலுள்ள தமது அறையில் தனிமையாய் உட்கார்ந்துகொண்டிருந்தார். ஒருமணி நேரமாய் இரண்டு மூன்று பென்னிகள் மட்டும் வந்திருந்தது. அந்த மீதி நாளுக்குள் முழுத்தொகையும் வந்துவிடும் என்று நம்புவது மிகவும் அரிதாயிருந்தது. அப்போது குருவானவருடைய இரண்டு சிறு பிள்ளைகள் தங்களுடைய காணிக்கைகளைக் கொண்டு வந்தார்கள். அவர்களில் இளையவன், ஆறு வயதுள்ள ஒரு சிறுவன், அந்த அறை எங்கும் பார்த்துவிட்டு, சுவரில் தொங்கின ஒரு வாக்கியத்தைச் சத்தமிட்டு வாசித்தான். 'வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர்' என்பதுதான் அந்த வாக்கியம். கர்த்தராலே கொடுக்கப்பட்ட வாக்காக, அந்த நேரத்தில் அது மிகுந்த நம்பிக்கையைக் கொடுத்தது. அந்தப்படியே, வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர் என்று இந்த விஷயத்திலும் ரூபிக்கப்பட்டது.

## தற்கால விசேஷங்கள்.

1914-ம் வருஷம், தீர்க்கதரிசன நிறைவேறுதல்களிலே சற்று முக்கியமான வருஷம் என்று சொல்லலாம். நேபுகாத் நேச்சார் எருசலேமைப் பிடித்த முதல் படையெடுப்பாகிய கி. மு. 606-ம் வருஷத்திலிருந்து கணக்குப்பார்த்தால், அது முதல் 1914 வரை 2520 வருஷங்களாகும். வேதத்திலே ஒரு காலம் என்பது 360 வருஷம் என்பதாகத் தோன்றுகிறபடியால், ஏழு காலங்கள் என்பது 2520 வருஷங்களாகும். லேவியராகம் 26: 18, 21, 24 வில் இப்படி ஏழுகாலங்களாய் இஸ்ரவேல் ஜாதியைத் தண்டிப்பதாக ஆண்டவர் சொல்லியிருக்கிறார். புறஜாதியாரின் காலம் என்பது கி. மு. 606-ல் ஆரம்பித்ததும், அது 2520 வருஷம் நீடித்திருப்பதும் மெய்யானால், 1914-ல் அது முடிவடையலாம். அந்த ஏழு காலங்கள் முடிந்த பின்பு யூத ஜாதியையும், யூதரின் தேசத்தையும் நினைப்பதாக ஆண்டவர் வாக்குப்பண்ணியிருக்கிறார். (லேவி, 26: 42). வருஷக்கணக்கு சரிப்படியிருந்த போதிலும் கர்த்தர் தமது சொந்த ஜனத்தை அவர்களுடைய சொந்த தேசத்தில் சேர்க்கும் காலம் சமீபித்துவிட்டது என்று சொல்லலாம்.

ருஷியாவில் குடிவெறி அதிக பயங்கரமாய்ப் பெருகியிருக்கிறதாகத் தெரியவருகிறது. பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்குள்ளேதான் அது ஆரம்

பித்திருக்கிறது. மாஸ்கோ மாகாணத்திலுள்ள பள்ளிக்கூடங்களில் எட்டு வயதுக்கும் பதிமூன்று வயதுக்கும் இடையிலுள்ள பிள்ளைகள் 18134 பேரில் 12152 பேர், (100-க்கு 66 வீதம்), குடிகாரராம். அதற்கு மேலான வயதுள்ள 10,404 பிள்ளைகளுக்குள் 4753 பேர் (100-க்கு 45 வீதம்) குடிகாரராம். தேசத்திலுள்ள குடிகாரரில் 100-க்கு 90 பேர் பள்ளிக்கூடங்களில் குடிக்கப்பழகினவர்களாம். இது மகா பயங்கரமான ஸ்திதி என்று சொல்லலாம். இதை உணர்ந்து, யோவான்ஸ்நானன் ஏரோதுவின் குடிவெறியினால் கொல்லப்பட்டதாக எண்ணப்படுகிற செப்டெம்பர் மீ 11-ம் தேதியை விசேஷித்த ஜெபநாளாக அத்தேசத்துத் திருச்சபையார் நியமித்திருக்கிறார்கள்.

**கல்லறையின் எழுத்துக்கல்லின்மேல் கட்டப்பட்ட ஆலயம்.** யுகாந்தாவிலே கல் கிடைப்பது வெகு கஷ்டம். அங்கே ஒரு அத்தியக்ஷ ஆலயம் கட்டப்பட்டபோது, அஸ்திபாரமாகப்போடக் கல்கிடையாததால், யுகாந்தாவில் மரித்த பில்க்கிங்றன் என்ற மிஷனெரியுடைய கல்லறையின் மேல் வைக்கப்பட்டிருந்த ஞாபகக்கல்லை இடித்தெடுத்துக்கொண்டுவந்து, ஆலயத்துக்கு அஸ்திபாரக்கல்லாக உபயோகித்தார்களாம். இது நல்ல காரியம். யுகாந்தா சபையை ஸ்தாபித்தவர்களில் மக்கே, கனிங்ஹ்றன், பில்க்கிங்ற்றன் என்ற மூவரும் விசேஷித்தவர்கள். அவர்களால் கட்டப்பட்ட சபைக்கென்று கட்டப்பட்ட ஆலயத்துக்கு அவர்களில் ஒருவருடைய கல்லறைக்கல் உபயோகிக்கப்பட்டது நல்ல ஒரு குறிப்பென்று சொல்லலாம்.

**வானத்தை அளாவிய கட்டிடங்கள்.** சில மாதங்களுக்குமுன் நியுயார்க் பட்டணத்திலே தரைக்குமேலே 785 அடி உயரமும் 57 மெத்தைகளுமுள்ள ஒரு கட்டடம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. தரைக்கு 120 அடிக்குக் கீழே அதற்கு அஸ்திபாரம் போடப்பட்டது. அது 200 அடி நீளமும் 155 அடி அகலமுமாயிருந்தபோதிலும் அதின் 57 மெத்தைகளின் சகல அறைகளையும் சேர்த்துப்பார்க்கையில் 27 ஏக்கர் இடம் இருக்கிறதாம். அந்தக் கட்டடத்துக்கு மொத்தச்செலவு 24 லட்சம் பவுன். உலகத்திலுள்ள கட்டடங்களில் இதுதான் மகா உன்னதமானது. 30 அல்லது 40 மெத்தைகளுள்ள அநேக கட்டடங்கள் அமெரிக்காவில் உண்டு. ஆனால் 901 அடி உயரமும் 60-க்கு மேல் மெத்தைகளுமுள்ள ஒரு கட்டடம் சீக்கிரம் கட்டப்படுமாம். நியுயார்க் பட்டணத்தில் இப்போது நிலம் ஒரு அடி சதுரம் 120 பவுனுக்கும் ஒரு ஏக்கர் ஐம்பது லட்சம் பவுனுக்கும் விற்கப்படுகிறது.

Printed at the Church Mission Press, Palamcottah and Published by the Christian Brotherhood Association.

February, 1914. Registered No. M—163.

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." (யோவான் 7: 38)

Vol. XV பெப்ருவரி மீ 1914

## 'ஒளியிலே நடந்தால் ... சுத்திகரிக்கும்.' 1 யோ. 1: 7.

இந்த வசனத்தில் இரண்டு பெரிய காரியங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்று ஒளியையும் ஐக்கியத்தையும்பற்றியது. மற்றது இவைகளுக்குப் பலனாகவரும் சுத்திகரிப்பைக் குறித்தது.

I. ஒளியையும் ஐக்கியத்தையும்பற்றியது. உலகத்தில் ஒருவிதமான ஐக்கியம் உண்டு. இதனால் அவரவர் தன்தன் ஜாதியாரை நேசிக்கிறார்கள். பணக்காரர் பணக்காரரை நேசிக்கிறார்கள். கல்விமான்கள் கல்விமான்களை நேசிக்கிறார்கள். ஒரே பாஷையைப் பேசுகிறவர்கள் ஒருவரையொருவர் நேசிக்கிறார்கள். மார்க்க அபிமானமும் அன்புக்குக் காரணமாயிருக்கிறது. நாமெல்லாரும் இப்படிப்பட்ட ஐக்கியங்களுக்குட்பட்டிருக்கிறோம். ஆனாலும் இந்த ஐக்கியங்கள் சரியான அஸ்திபாரத்திலிருந்து உற்பத்தியானவைகளல்ல. இச்சையும் கொடுமையுமாகிய பாவங்களுக்கென்று ஐக்கியப்பட்டிருக்கிறவர்களுமுண்டு. (தீத் 1: 11—14). இது அருவருக்கப்படவேண்டியது. உலகத்தின் ஐக்கியங்கள் நிலைத்திருக்கமாட்டாது. கர்த்தருடைய வசனத்தில் இவைகளுக்கு 'இச்சை' என்று பெயர் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளைக் குறித்து 1 யோ. 2: 15-17ல் சொல்லியிருக்கிறதைப் பாருங்கள்.

நமது பிரசங்க வாக்கியத்தில் தேவன் 'ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்' என்று சொல்லியிருக்கிறது. தேவன் ஒளியிலிருக்கிற விதம் நமக்குத் தெரியுமா? தேவனை ஒருக்காலும் ஒருவனும் காணவில்லையே! ஆனாலும் தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து அவரை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். அவரிடத்திலிருந்து வகையைக் கற்றுக்கொள்ளவேண்டும். மெய்யாகவே

இயேசுவோடிருந்த அவருடைய சீஷரும் மற்ற ஆதிக்கிறிஸ்தவர்களும் அதிக ஐக்கியமுள்ளவர்களாயிருந்தார்கள். அவருடைய மாதிரியில் நாம் பின்பற்றத்தக்கவைகள் என்ன?

1. அவர் வெளிச்சமாயிருந்தார், அதாவது தம்மிலே கொஞ்சமும் இருளில்லாமல் இருந்தார். உலகத்துக்கு அவர் குற்றமில்லாதவராய்க் காணப்பட்டது எப்படியோ (யோ. 8: 46) அப்படியே உள்ளபடி குற்றமில்லாதவராயிருந்தார். அவரை விசாரித்தபோதும் 'அந்தரங்கத்தில் நான் ஒன்றும் பேசவில்லை' என்று சொன்னார் (யோ. 18: 20, 21). தமது சீஷரையும் பார்த்து 'என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்' என்றார் (யோ. 15: 15). நாமோ எத்தனை காரியங்களில் இருளுள்ளவர்களாயிருக்கிறோம். சில வருஷங்களுக்கு முன் ஒருவர் என்னை நோக்கி 'என் அந்தரங்க பாவங்களை மனுஷர் கேட்கச் சொல்லுவதிலும் நரகத்தில் தள்ளுண்டுபோவது எனக்கு நலமாயிருக்கும்' என்று சொன்னார். வெட்கமும் பயமுமில்லாத மனுஷரை உலகத்தில் காண்பது அபூர்வம். மார்க்க எழுப்புதல்கள் நடக்கும்போது பாவங்களை அறிக்கையிடும்படி ஆவியானவர் அநேகருடைய மனதை ஏவுகிறார். அப்பொழுது அநேகர் தங்கள் மேன்மைக்கும் உத்தியோகத்துக்கும் பங்கம் வந்துவிடுமென்று நினைத்து வாயை மூடிக்கொண்டு இருந்துவிடுகிறார்கள். எல்லா அந்தரங்க பாவங்களையும் மனுஷர் கேட்க அறிக்கை செய்துவிடவேண்டுமென்று நான் சொல்லுகிறதில்லை. உலக மேன்மையும் உத்தியோகமும் அறிக்கையிடுவதற்குத் தடையாயிருப்பதே குற்றமென்று சொல்லுகிறேன். ஒரு உத்தியோகம் போய்விட்டால் வேறே உத்தியோகத்தைக் கொடுக்க தேவனுக்குச் சக்தி இல்லையா? மனுஷடைய இருதயம் தெய்வ சமூகத்தைவிடக் கூட்டாளிகள் கூட இருப்பதை அதிகமாய் உணரும் தன்மையுடையது. ஆதலால் கூட்டாளிகள் முன் பாவத்தை அறிக்கையிடுவதில் காணப்படும் உணர்வில் பத்திலொரு பங்குகூட இல்லாமல் தெய்வ சமூகத்தில் அறிக்கையிட்டுக்கொள்ளுவோம் என்று சொல்லி இருதயங்களை 'இருளடைய' (ரோ. 1: 21) வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மனுஷரைவிட தேவன் பாவத்தைக் கொஞ்சமாகவா பகைக்கிறார்? அல்லது தேவனா, மனுஷரா, யார் நமக்கு அதிக நன்மையை அல்லது தீமையைச் செய்யக்கூடும்? அப்படியானால் தெய்வ சமூகத்தில் உணர்வில்லாமல் பாவ அறிக்கைசெய்வது எவ்வளவு புத்தியீனம்? பூர்வத்தில் தாவீது உரியாவுக்கும் அவன் மனைவிக்கும் விரோதமான பாவத்தைச் செய்தான். ஆனாலும் அது அவர்களுக்கு விரோதமாயிருந்ததிலும் பதினாயிரமடங்கு தேவனுக்கு விரோதமாயிருந்ததென்று உணர்ந்து 'தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவம் செய்தேன்' என்றான். இவ்விதமாய்த் தங்களை வெளிச்சமாக்குகிறவர்களே கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள்.



இது நம்முடைய ஐக்கியத்துக்கு முதலாவது படி. சிநேகிதருக்குள் களங்கமில்லாமலிருந்தால் அதன்மேல் உண்டாகிற ஐக்கியம் உண்மையானதாயிருக்கும். தேவன் தமது பிள்ளைகளுடைய மரியாதையைக் குலைக்கிறவரல்ல; காப்பாற்றுகிறவர். ஆதலால் அவர்களுடைய எல்லாப் பாவங்களையும் மனுஷருக்கு வெளிப்படுத்தமாட்டார். ஆனாலும் உலகத்தில் அவரவருக்கு தேவன் குறித்துவைத்திருக்கிற அந்தஸ்தும் மதிப்புமுண்டு. தேவனுடைய பிள்ளைகளுக்கு அடிக்கடி சன்மார்க்கரென்ற பெயர் கிடைக்கிறதில்லை. ஆதலால் நமது பாவம் மனுஷர் முன்பாக வெளிப்பட்டால் அதைத் தாங்கிக்கொள்ள ஆயத்தமாயிருப்பதோடு நாமே அறிக்கைபண்ண வேண்டுமென்று ஆவியானவர் நம்மை ஏவினால் கீழ்ப்படியவும்வேண்டும். இதன்மேல் உண்டாகிற ஐக்கியம் உண்டாகட்டும், நம்மை அற்பமாய் எண்ணுகிறவர்கள் எண்ணட்டும். தேவனுக்குச் சித்தமான ஐக்கியத்தை மாத்திரமே நாம் தொடங்கவேண்டும்.

2. அவர் வெளிச்சத்திலே நடந்தார் அதாவது வேதத்தின்படி நடந்தார். பிசாசின் சோதனைகளை வேதத்தின் வெளிச்சத்திலே கண்டுஜெயித்தார் (மத். 4: 1–11). வேதத்தின் உட்பொருளைப் பரிசேயர் முதலானவர்கள் அறியாதிருக்க அவர் நன்றாய் அறிந்திருந்தார் (மத். 7: 12, 22: 35–40, 23: 23). தமது ஜீவியம் முழுவதிலும் வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக இன்னின்னதைச் செய்தார் என்று அடிக்கடி பார்க்கலாம். இதின் சம்பந்தமாக அவர் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருந்தபடியால் (லூக். 4:1). வேதத்தை வெகு திட்டமாய் நிறைவேற்றினார் என்று சொல்லவேண்டும்.

நம்முடைய சன்மார்க்கம், பரிசுத்தம், விசுவாசம், ஜெபஸ்தோத்திரங்கள் எல்லாவற்றிற்கும் வேதமே வெளிச்சமாயிருக்கிறது (2 பேது. 1: 19). இரண்டுபேர் பிரயாணமாய்ப் போகையில் ஒரு இரவு ஓர் காட்டு மடத்தில் தங்க நேரிட்டது. அவர்கள் பயத்தோடு அங்கே படுத்துக்கொள்ள மனமற்றிருக்கும்போது அவர்கள் இருந்த அறைக்கு அடுத்த அறையில் ஏதோ சத்தம் கேட்கிறதையறிந்து ஒருவன் போய்ப்பார்த்தபோது அங்கே இரண்டு பேர் நம்முடைய வேதத்தை வாசித்துக்கொண்டிருக்கிறதைக் கண்டான். அப்போது பிரயாணிகள் இருவருக்கும் மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று. ஏன்? கர்த்தருடைய வேதம் சமாதானத்துக்கும் ஐக்கியத்துக்கும் காரணமாயிருக்கிறதினாலல்லவா? இதை அவிசுவாசிகளும் நன்றாய் அறிந்திருக்கிறார்கள்.

பாவ அறிக்கையைக் குறித்து முந்தின பிரிவில் கவனித்தோம். ஆனாலும் இந்தப் பிரிவில் சொல்லிய உபதேசத்தைக் கவனிக்காவிட்டால் பாவ அறிக்கையினால் பிரயோஜனம்வராது. பெரியவர்களுடைய பாவங்களைக் குறித்து அதிகமாய்ப் பேசிக்கொள்ளுகிறவர்களும் தங்கள் சொந்தப் பாவங்களைச் சிரித்துக்கொண்டு சொல்லுகிறவர்களும் வெளிச்சத்தில் நடக்கிறவர்

களல்ல. அவர்கள் இருளை விரும்புகிறார்கள். மெய்யான ஐக்கியம் பாவ அறிக்கையில் உற்பத்தியாகிப் பரிசுத்தத்தினாலேயே வளருகிறது. வெட்கமில்லாமல் பாவத்தைச்செய்து மனந்திரும்பாமல அதை வெளிப்படுத்துகிறவர்கள் தாங்கள் கெட்டுப்போவதுடன் அதைக் கேள்விப்படுகிற மற்றவர்களும் தங்கள் துன்மாதிரியைப் பின்பற்றுவதற்குக் காரணமாயிருக்கிறார்கள். குருக்களுடைய பாவங்களாலும் பக்தியுள்ளவர்களென்று பெயர் பெற்றிருந்தவர்களுடைய பாவங்களாலும் அநேக கிறிஸ்தவர்கள் தைரியங்கொண்டு மென்மேலும் கெட்டுப்போகிறார்கள். இதனாலேதான் பூர்வ திருச்சபையில் வேசித்தனம்பண்ணினவர்களை 9 வருஷமும் விபசாரம் செய்தவர்களை 18 வருஷமும் சபைக்குப் புறம்பாக்கிவைக்கும் வழக்கம் இருந்தது. இக்காலத்தில் 1 கொரி. 5: 11ல் சொல்லியிருக்கிற கட்டளை நமது சபையில் நிறைவேற்றப்படாதபடியால் வெளிச்சத்துக்கும் ஐக்கியத்துக்கும் பெரிய நஷ்டம் நேரிட்டிருக்கிறது. ஆதலால் பரிசுத்த ஆவிக்காக ஊக்கமாய் ஜெபித்து வேதத்தை மிகுந்த கவனமாய் வாசித்து அதின்படி செய்யவேண்டும் என்ற பிரமாணத்தைக் கொண்டவர்கள் ஐக்கியத்தில் தேறுவார்கள்.

பரிசுத்த ஆவியானவர் நமது கண்களைப் பிரகாசிப்பிக்காவிட்டால் வேதமாகிய வெளிச்சத்தை நாம் பார்த்து நடப்பதும் கூடாத காரியம். ஏனென்றால் சன்மார்க்கமாய் நடக்கவேண்டுமென்ற பொதுப்பிரமாணத்தை எல்லாரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். வேதத்தையும் வெகுவாய் எல்லாரும் மெச்சிக்கொள்ளுகிறார்கள். ஆனாலும் அதின்படி நடப்பது கூடாதென்று சொல்லுகிறார்கள். கிறிஸ்துவின் பிரமாணங்களாகிய தாழ்மைக்கும் நேர்மைக்குமுள்ள ஒற்றுமை தெரியாமல் தாழ்மைக்குப் பதிலாக இழிவையும் நேர்மைக்குப் பதிலாக மேட்டிமையையும் கையாடியும், வீண்சிந்தனைகளைப் பண்ணியும், சோம்பலாயிருந்தும், மனுஷர் முன்பாக அறிக்கையிடத்தகாதவைகளை அறிக்கையிட்டும், அறிக்கையிடவேண்டியவைகளை அறிக்கையிடாமலிருந்தும் இன்னும் பலவிதமாயும் தப்பிப்போகிறார்கள். ஆதலால் அபிப்பிராய பேதங்களும் விகற்பங்களும் உண்டாகி ஐக்கியம் கெட்டுப்போகிறது. ஒரே ஆவியினால் நடத்தப்படுகிறவர்கள் மாத்திரம் ஐக்கியமாயிருக்கக்கூடும்.

3. அவர் உலகத்துக்கு ஒளியாயிருந்தார் (யோ. 8: 12). அதாவது தாம் வெளிச்சமாயிருந்ததும் வெளிச்சத்தில் நடந்ததும்மாத்திரமல்ல; மற்றவர்களுக்கும் பிரகாசித்தார். அப்படியே நமக்கும் கட்டளைகொடுத்திருக்கிறார் (மத். 5: 14, 16). 'பரிசுத்த ஆவியின் ஐக்கியம்' நம்மனைவரோடுங்கூட இருக்கவேண்டுமென்பது தேவசித்தம்தான் (2 கொ. 13: 14). திருவசனமாகிய சன்மார்க்கத்தைப் போதிப்பதிலும் அதினிமித்தம் பாடுபடுவதிலும்தான் பரிசுத்த ஆவியின் வெளிச்சம் நமக்கு அதிகமாய் வேண்டும்.



மற்றவர்களுக்கு வெளிச்சத்தைக் காட்டுகிறதென்றால் சத்தியத்தை அவர்களுக்குப் போதிப்பதுதான். அதுமாத்திரமல்ல இம்மையின் வாழ்வு அற்பமென்பதையும் மறுமையின் வாழ்வு பெரிதென்பதையும் மற்றவர்களுக்கு வெளிச்சமாய்க் காட்டுவதற்கு ஏற்ற வகை சத்தியத்தினிமித்தம் துன்பத்தையும்பாடுகளையும் அனுபவிப்பதுதான். நமது இரட்சகர் தமது உயிர்த்தெழுதலையும் பின்வரும் மகிமைகளையும்பற்றி மிகவும் தெளிவாய் அறிந்திருந்தபடியால் உற்சாகமாய்ப் பாடுகளைச் சகித்தார். பவுலப்போஸ்தலனுக்கும் தெளிவான கண்களும் புத்தியும் இருந்தபடியால் 'இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால் எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்' என்று சொல்லியிருக்கிறார் (1 கொ. 15: 19). இம்மையில் அவருக்குப் பாடுகள் அதிகம். மறுமையிலோ பெரிய மகிமை உண்டு. நம்முடைய காரியம் என்ன? சத்தியத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் நம்மில் அநேகர் உண்டு. ஆனாலும் சத்தியத்தினிமித்தம் பாடுபடுகிறவர்களாயிருந்தால் மாத்திரம் மற்றவர்கள் நமது வெளிச்சத்தைச் சரியானபடி பார்க்கக்கூடும். கர்த்தராகிய இயேசுவின் சிலுவைதான் உலக முழுவதையும் அவரிடத்துக்கு இழுத்துக்கொள்ளுகிற பெரிய வெளிச்சமாயிருக்கிறது. அப்படியே அவருடைய பக்தர் அவருக்காகப் பட்ட பாடுகள்தான் உலக முழுவதும் சுவிசேஷ ஒளி பிரகாசிப்பதற்குக் காரணமாயிருக்கிறது.

நாம் நிர்ப்பந்தமான பாவிகள். சத்தியத்தைப் பிரசங்கிக்கிறோம். சில வேளை பாடுகளையும் படுகிறோம். ஆனாலும் அடிக்கடி அந்தப் பாடுகள் கிறிஸ்துவுக்காக நாம் படுகிறவைகளாயிராமல் நம்முடைய பாவங்களுக்குத் தண்டனையாயிருக்கிறதென்று காண்கிறோம் (1 பேது 3: 20). இதனால் என்ன பிரயோஜனம்? நாம் பாடுபடும்போது தேவ ஆவியானவர் இது கிறிஸ்துவுக்காகப் படுகிற பாடு என்று நம்முடைய ஆவியோடுகூடச் சாட்சிகொடுத்தால் அதுவே மகிமையாயிருக்கும்.

கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்து அதினிமித்தம் பாடுபடுகிறவர்களுக்குள் உண்டாயிருக்கிற ஐக்கியத்தைப்போல் உலகத்தில் வேறெங்கும் கிடையாது. முதலாவது இதின் அஸ்திபாரம் சத்தியமாகிய பாறையில் போடப்படுகிறதென்று பார்த்தோம் இரண்டாவது இந்த ஐக்கியம், மரம், புல், வைக்கோல் முதலிய அழிந்துபோகிறவைகளால் கட்டப்படாமல் (1 கொ. 3: 12) என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறதாகிய கர்த்தருடைய வசனத்தினால் கட்டப்படுகிறதென்று பார்த்தோம் (1 பேது. 1: 25). மூன்றாவது, மரணத்தையும் ஊடுருத்துச்செல்லுகிறதாகிய நீதியினிமித்தம் துன்பப்படுதல் என்ற மேற்கூரை போடப்பட்டுக் கட்டடம் முடிவாகிறதென்று பார்த்தோம். உலகத்திலுள்ள ஐக்கியங்கள் உலகத்தோடு முடிந்துபோம். ஒளியில் உண்டாகிற தேவனுடைய பிள்ளைகளின் 'அன்பு ஒருக்காலும் ஒழி

யாது' (1 கொ. 13: 8). பூர்வ இரத்தச்சாட்சிகள் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தின விதத்தைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இங்கிலாந்து தேசத்திலுங்கூடச் சத்தியத்தினிமித்தம் சுட்டெரிக்கப்பட்ட இரத்தச்சாட்சிகளில் ஒருவர் மற்றொருவரைப் பார்த்து 'தைரியமாயிரும்; இன்று நாம் ஏற்றுகிற தீபம் கர்த்தருடைய கிருபையால் ஒருக்காலும் அணையாதிருக்கும்' என்றார். ஒளியிலே நடந்தால் நாமும் இப்படியே ஐக்கியப்பட்டிருப்போம்.

II. சுத்திகரிப்பைக்குறித்து. அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்' 'இரத்தம்' என்பதை மாம்சத்தின்படி தாற்பரியப்படுத்தலாகாது. கிறிஸ்துவின் மரணம் என்பது பொருள். தேவகுமாரன் நமக்காகப் பாடுபட்டதினால் நம்மைச் சுத்திகரிக்கும்படி சம்பூரண கிருபை உண்டாயிருக்கிறது. நாம் கவனித்தபடி ஒளியிலே நடக்கிறவர்களுக்குத் தேவன் இந்தக் கிருபையைக் கொடுக்கிறார். வெளிச்சமானது முதலாவது எல்லா அசுத்தங்களையும் நம்முடைய கண்களால் கண்டு அருவருக்கும்படி காட்டுகிறது. பின்பு தேவன் அந்த அசுத்தங்கள் நீங்க நம்மைச் சுத்திகரிக்கிறார். மகா கேவலமான புண்களைப் பாவத்துக்கு ஒப்பனையாக ஏசாயா தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறார் (ஏசா. 1: 6). அதை உவமையாக வைத்துக்கொண்டு இயேசுவின் இரத்தம் நம்மைச் சுத்திகரிக்கிற விதத்தைக் கவனிப்போம்

1. இருக்கிற புண்கள் அதிக நோவுண்டாக்கி மரணத்துக்குக் காரணமாகாமல் செய்கிறது. இயேசுவின் இரத்தம் நல்ல மருந்து. அதை நம்முடைய பாவமாகிய இரணங்களில் போட்டால் உடனே அந்த இரணங்களின் வேதனை நின்றுபோம். அவைகளால் நாம் சாவதில்லை. அதாவது இயேசுவின் புண்ணியங்கள் முதலாவதாக நமது பாவத்தின் பலனாக வருகிற மரணத்தை நீக்கிவிடுகிறது. 'பாவமன்னிப்பாகிய மீட்பு' என்பது இதுதான் (எபே. 1; 7).

2. புதிதாக வேறு புண்கள் உண்டாகாமல் செய்கிறது (எபி. 9: 14). 'செத்த கிரியைகள்' என்றால் ஜீவன் இல்லாமல் உண்டாகிற கிரியைகள் என்று அர்த்தம். சரீரத்திலிருக்கிற இரத்தத்தில் ஓர் பாகம் செத்ததாயிருந்தால் புண்கள் உண்டாகும். அப்படியே நம்முடைய உள்ளான மனுஷனில் உணர்வில்லாமல் எந்தக் கிரியைகளைச் செய்கிறோமோ அவைகள் செத்த கிரியைகள். சாதாரணமாக மனுஷர் பொய், வீண்பேச்சு, தமாஸ் பண்ணிச் சிரித்தல் முதலியவற்றைப் பாவமென்று எண்ணுகிறதில்லை. அப்படியே ஞான ஜீவன் குன்றிப்போனவர்கள் பயங்கரமான பாவங்களையும் பாவமென்று எண்ணாமல் செய்கிறார்கள். அவர்கள் மனச்சாட்சி மழுங்கிப்போனபடியால் அவர்களுடைய கிரியைகள் செத்தவைகளாயிருக்கின்றன. இப்படிப்பட்டவர்களும் ஒளியிலே நடக்கும்படி தங்களை ஒப்புக்கொடுத்தால் இயேசுவானவர் தமது இரத்தத்தின் பலனை அவர்களுக்குக்



கொடுத்து இனிமேல் கெட்ட இரத்தமும் புண்களும் உண்டாகாதிருக்கச் செய்வார். அதாவது மனச்சாட்சியைக் கூர்மையுள்ளதாக்குவார்.

3. இருக்கிற புண்களெல்லாம் ஆறிப்போகப்பண்ணுகிறது (வெளி. 1: 6). அதாவது முழுவதும் பரிசுத்தமாக்கப்படுகிறோம். நம்மைச் சுத்திகரிக்கிறவர் பரிசுத்த ஆவியானவர்தான். ஆனாலும் இயேசுவின் இரத்தமே எல்லாவற்றுக்கும் காரணமாயிருக்கிறது. முதலாவது அந்த இரத்தம் நமது பாவமன்னிப்புக்குக் காரணமாயிருக்கிறதென்று பார்த்தோம். இரண்டாவது கவலையீனமான பாவங்களினிமித்தமும் இயேசு மரித்தார் என்பதை நாம் கேள்விப்படும்போது மனச்சாட்சி உணர்த்தப்பட்டுக் கூர்மையடைகிறதென்று பார்த்தோம். மூன்றாவது, எந்தப் பாவத்தைக்குறித்தும் ஆவியானவர் நம்மை உணர்த்தும்போது 'இதினிமித்தம் இயேசு மரித்தார்' என்பதே அவர் நம்மில் உறைக்கப்பண்ணுகிற பலத்த நியாயம் (1 யோ. 1: 2). இவ்விதமாய் நாம் உணர்த்தப்படுவதே பரிசுத்தமாகுதலின் ஓர் முக்கிய பாகமாயிருக்கிறது. இதுமாத்திரமல்ல, இயேசு நமக்காக மரிக்காவிட்டால் ஆவியானவர் நமக்கு அருளப்படுவது கூடாதகாரியம். அவரைப் பெற்றுக்கொள்ள நம்மைப் பாத்திரராக்கினது இயேசுவின் மரணமே. ஆவியானவர் கீழ்ப்படியாதவர்களிடத்தில் சகவாசம்செய்கிறவரல்ல; இயேசு மரித்து உயிர்த்தெழுந்து மகிமையடைந்த பின்புதான் 'கீழ்ப்படிகிறவர்களுக்கு' ஆவி அருளப்பட்டது (அப். 5: 32) அதற்குமுன் அருளப்படுவது கூடாது (யோ. 7: 39) இக்காலத்திலும் காரியம் இப்படியே இருக்கிறது. ஆதலால் இயேசுவின் இரத்தமே சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கிறது.

## இழந்துபோனதை ரட்சிப்பதே தேவனுடைய சித்தம்.

இந்தச்சிறியரில் ஒருவனாவது கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல. மத். 18: 14.

நமது ரட்சகர் "சிறியர்" என்று அழைக்கிறவர்கள், 2-ம், 3-ம் வசனங்களில் சொல்லிய பிள்ளைகளையும் 6-ம் வசனத்தில் "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச்சிறியர்" என்று சொல்லிய பெலவீன விசுவாசிகளையும் குறிக்கலாம். ஒரு மனுஷன் காணாமற்போன ஆட்டைக் கண்டுபிடித்து எவ்விதமாய்ச் சந்தோஷிப்பானோ அவ்விதமாகவே பெலவீனமான அற்பவிசுவாசிகளில் ஒருவராவது கெட்டுப்போவது பரம பிதாவுக்குப் பிரியமில்லை. அருமை ரட்சகர் தாம் பிதாவின் சித்தத்தைச் செய்கிற

தாகச் சொல்லியதின் கருத்து என்னவென்றால் கெட்டுப்போனதை ரட்சிப்பதே தமது பிதாவின் சித்தம். அந்தப் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றவே தாம் பரத்திலிருந்து வந்ததாகச் சொல்லுகிறார். "அவர் எனக்குத் தந்தவர்களில் ஒருவரையும் இழந்துபோகாதிருப்பதே என்னை அனுப்பின பிதாவின் சித்தம்" யோ. 6. 39. "குமாரனைக் கண்டு அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் நித்திய ஜீவனை அடைவதே . . என்னை அனுப்பினவருடைய சித்தம்" யோ. 6. 40. ஆகவே மனுஷர் ரட்சிக்கப்படவேண்டுமென்பதே பரமபிதாவின் சித்தம். நமது ஜீவகாலத்தின் ஒவ்வொரு மணி நேரத்திலும் நடக்கும் மிகவும் சிறிய காரியங்களாகிய தேவ நடத்துதலெல்லாம் இந்தச்சிறியரில் ஒருவராகிலும் கெட்டுப்போகாமல் ரட்சிக்கப்படும்படிக்கு வெளிப்பட்ட தேவ அன்பின் பெருக்கேயொழிய வேறல்ல. கிறிஸ்து பரத்திலிருந்து இறங்கி வந்ததும், அவருடைய உபதேசமும் கிரியைகளும், அவருடைய ஜீவியம், பாடு, மரணமும் எல்லாம் இதே நோக்கத்தோடு தான் நடந்தது. ரட்சிப்புண்டாக்கவே பிதாவின் சித்தம் வெளிப்பட்டது. பிதா தமக்குத் தந்த யாவையும் ரட்சிப்பதே அவருடைய பரிபூரண சித்தமென்றறிந்து ரட்சகர் தம்மை முற்றிலுமாய் அவருக்குக் கையளித்தார்.

நாமும் நம்மைப் பிதாவின் சித்தத்துக்குக் கீழ்ப்படுத்தும்போது மனுஷரை ரட்சிக்கும்படியான பிதாவின் சித்தத்தை அருமை ரட்சகர் எவ்விதமாய் நிறைவேற்றினாரோ, அவ்விதமாகவே நாமும் நிறைவேற்றவேண்டியது நமது கடமையல்லவா? ரட்சகருடைய ஜீவியத்தின் நோக்கம் மனுஷரை ரட்சிப்பதே. அதுவே நம்முடைய ஜீவியத்தின் ஒரே நோக்கமாயிருக்கவேண்டும். கிறிஸ்து இயேசுவிலுள்ள ஜீவனே நம்மிலும் இருக்கிறது. பிதாவின் மகிமையைத் தேடுவதும், பிதாவின் அன்பை வெளிப்படுத்தும் கருவிகளாயிருப்பதும், பிதாவானவர் உலகத்தில் நிறைவேற்றச் சித்தமாயிருக்கும் ஊழியத்தைச் செய்ய நம்மை முற்றிலும் ஒப்புக்கொடுப்பதும் நமது பாக்கியம். ரட்சகரும் இப்படியே செய்தார். பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதில் ரட்சகர் செய்து முடித்தாற்கும் நாம் செய்யப்போகிறதற்கும் அனந்த வித்தியாசமுண்டு. ஆனால் பரமபிதாவின் சித்தம் அவருக்கு இன்பமும் சந்தோஷமுமாயிருந்ததுபோல நமக்கும் அப்படியேயிருக்கவேண்டும். பிதாவின் சித்தத்தை எவ்வளவுக்கதிகமாய் அறிந்துகொள்ளுகிறோமோ [illegible] பெற்றுக்கொள்வதற்காக எவ்வளவுக்கதிகமாய் நம்மை மனதார ஒப்புக்கொடுக்கிறோமோ அவ்வளவுக்கதிகமாய் கிறிஸ்து இயேசுவுக்குள் அவருடைய சாயலைத்தரித்து அவருக்குள் வளருவோம்.

கிறிஸ்தவர்களில் அநேகர் தவறிப்போகிற ஒரு காரியம் உண்டு. அதென்னவென்றால், தங்களுடைய சொந்தப் பிரயோஜனத்துக்கான விஷயங்களில் மாத்திரம் பிதாவின் சித்தம் இன்னதென்றறிய முயலுவார்கள்.



தாங்கள் எப்படிப் பாக்கியசாலிகளாகலாம் என்பதே அவர்கள் முழுப்பிரயாசம். பிதாவின் சித்தத்தை அறிந்துகொள்ளும்படி தாங்கள் அவருக்குக் கீழ்ப்படிவதும் தங்களை அவருக்கு ஒப்புக்கொடுப்பதும் மற்றவர்கள் ரட்சிக்கப்படும்படியாகத் தங்களை முற்றிலும் மறந்து ஜீவிப்பதுமே கிறிஸ்துவிடத்தில் விளங்கிய பரமசிந்தை என்பதை உணராமற்போகிறார்கள். கிறிஸ்துவில் குடிகொண்டிருந்த சிந்தை இதுவே. இவ்வித சிந்தையை நமக்குள் உண்டாக்கவே பரிசுத்தாவியானவர் அருளப்படுகிறார். இவ்வித சிந்தையை நாம் அணிந்துகொள்ளும்போது தான் தேவசாயலை அடைகிறோம். தேவ அன்பு நம்மை நிரப்பும் அப்பொழுதுதான் நம்மிலிருந்து அன்பும் ஆசீர்வாதமும் வழிந்தோடும்.

"இந்தச் சிறியரில் ஒருவனாவது கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல". இந்த வார்த்தைகளின் கருத்தை அறிந்து அந்த ஆவியினால் ஏவப்பட்டவர்கள் தான் அநாதசாலைகள் ஏற்படுத்தி வீடுவாசலற்றவர்களுக்குத் தர்மசாலைகளுண்டாக்கி, இந்தியாவில் பஞ்சத்தால் வருந்துபவர்களுக்கு பஞ்சநிவிர்த்திக்கேற்ற ஏற்பாடுகள் செய்து, ஆப்பிரிக்காவின் கொடிய அடிமை வியாபாரத்தையும் கட்டோடு ஒழியும்படி செய்தார்கள். சிறியர்களுக்காகக் கவலைப்படுகிறவர்களுக்கு இவைகள் மிகுந்த உற்சாகத்தைக் கொடுக்கிறதல்லவா? தேசாதேசங்களில் அலைந்து திரிகிற ஏழைகள் நடுவில் வேலை செய்பவர்களுக்கு மிகுந்த பொறுமையையும் உற்சாகத்தையும் உண்டாக்கத்தக்கது. தாங்கள் பரமபிதாவின் சித்தத்தையே செய்கிறோமென்றறிவது அவர்களுக்கு எவ்வளவு நம்பிக்கையையும் சந்தோஷத்தையும் கொடுக்கிறது. அது மாத்திரமல்ல, தேவன் தங்கள் மூலமாய் தமது பரிசுத்த சித்தத்தை நிறைவேற்றுகிறாரென்பது அவர்களுக்கு மிகுந்த ஊக்கத்தைக் கொடுக்கிறது. இவர்களெல்லாரும் தங்கள் சுயபிரயோஜனம், சொந்த அலுவல்களைத் தள்ளிவிட்டு பிரமபிதாவின் அன்பு நிறைந்த சித்தத்தை நிறைவேற்றுவதினால் கிடைக்கக்கூடிய பாக்கியத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கிரியைகளைச் செய்கிறவர்கள் தேவகுமாரனோடும் சகல பரிசுத்தவான்களோடும் ஐக்கியப்பட்டவர்களாய்த் தேவசித்தத்தை அறிந்து அதை நிறைவேற்றுவதினால் மாத்திரம் கிடைக்கக்கூடிய தேவமகிமைக்குப் பங்காளிகளாகிறார்கள்.

பரமபிதாவின் சித்தம் இன்னதென்றறிந்து அதைக் கைக்கொண்டு தன்னை முற்றிலும் மறந்து சமூலமாய் அவருக்குக் கையளித்து ஜீவிக்கிற விசுவாசியின் பாக்கியத்தை என்ன சொல்ல! இதை வாசிக்கிறவனே, உனக்கும் இப்பாக்கியத்தில் பங்கு கிடைக்கவேண்டுமானால் இதை வாஞ்சித்து உனக்குச் சொந்தமாகுமட்டும் இதையே கேட்டுக்கொண்டிரு. பிதாவே, உமது சித்தத்தை அறியவும், அதின்படி நடக்கவும், என்னை

மறந்து முற்றிலும் உமக்கென்றே ஜீவிக்கவும் அருள்தாரும் என்று நாடோறும் ஜெபி. பரிசுத்தாவியானவர் பிதாவின் சித்தத்தை முற்றிலும் உனக்கு வெளிப்படுத்தி அன்பு நிறைந்த தேவசித்தத்தை அறியும் அறிவால் உன்னை நிரப்பும்படி அவருக்காக கெஞ்சு. இந்தக்கிருபையை நீ பெற்றுக்கொள்ளுமட்டும் காத்திரு—வாஞ்சையோடு ஜெபி. கொஞ்சம் அறிந்திருக்கிறதைக் கொண்டு திருப்தியாயிராதே. தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் அவருடைய சித்தத்தை அறியும் அறிவாலும் நிரப்பப்படவேண்டுமானால் உன் இருதயம் விசாலமாகிறதோடு உனக்கு அதின்மேல் பேராசையுமுண்டாக வேண்டும். எல்லாவற்றிலும் மேலாகக் கிறிஸ்து உன்னில் பரிபூரணமாய் வாசம்செய்யவேண்டும். அவருக்குள் பரமபிதாவின் சித்தம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அவர் நம்மில் வாசம் பண்ணினால் அவருடைய ஆவியும் சிந்தையும் நமக்குண்டாகும்.

தேவனுடைய சித்தத்தின்படி செய்வதே பரலோகத்தின் மகிமை, அதுவே பரலோகத்துக்குப்போகும் வழி. அதுவே நமது மூத்தசகோதரருடைய சாயல், அதுவே நமது ஆவிக்குரிய மன்னா. இழந்துபோனவர்களை ரட்சிக்கிற விஷயத்திலும் நாம் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறோம். இவ்விதமாய் நாம் அவரோடு ஐக்யப்பட்டு அவருடைய சித்தமே நமது சித்தமும் இன்பமுமாகும். கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுகிறதினாலும் பரிசுத்தாவியின் நிறைவையடைகிறதினாலுமே இந்த பாக்கியம் நமக்குக்கிடைக்கும். ஆகவே நாம் கிறிஸ்துவையும், அவருடைய ஜீவியத்தையும், அவர் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றின விதத்தையும், நாம் நன்றாய் அறிந்து அவரையே நமது எஜமானும் ஆண்டவருமாக நாம் ஒப்புக்கொண்டு ஜீவிப்போமானால் மெய்யாகவே நாம் அவருடைய சிந்தையைத் தரித்துக்கொண்டு இழந்துபோன உலகத்தை எஜமானுடைய சித்தத்தின்படி ரட்சித்துக்கொள்ளக்கூடியவர்களாவோம்.

## தேவனுக்கே மிக மேன்மை.

இந்த மாதமுதல் மேலேகண்ட தலைப்பின் கீழ் தேவனுடைய பிள்ளைகளின் ஜீவியத்தில் விளங்கிய விசேஷித்த தேவ நடத்துதல், திவ்ய பராமரிப்பு முதலிய விஷயங்களில் அவ[illegible] அனுபசாட்சியைச் சுருக்கமாய் எழுதுவது அநேகருக்குப் பிரயோஜனமாயிருக்குமென்று நம்புகிறோம். எழுதினவர்களின் பேர்காட்டப்படாமல் பேரின் முதலெழுத்து அல்லது எழுத்துகள் மாத்திரம் போடப்படும். இதை வாசிக்கும் தேவனுடைய பிள்ளைகளில் யாராவது தங்கள் அனுபசாக்ஷியைச் சுருக்கமாய் எழுதியனுப்பக் கேட்கிறோம்.

என் தகப்பனார் மிஷன் ஊழியர். சிறு வயதில் என் பெற்றோர் என்னை வெகு கவலையோடு வளர்த்தார்கள். அவர்கள் கற்பித்தவைகளில் நான்



மறந்துபோகாமற் கைக்கொள்வது எதுவென்றால், எந்த விஷயத்திலும் ஒழுங்காயிருப்பது, கடமையை நிறைவேற்றுவதில் ஜாக்ரதையாயிருப்பதே. நான் படித்த பள்ளிக்கூடங்களில் வாலிபனாக எனக்கு அநேக சோதனைகள் நேரிட்டதுண்டு. ஆனால் தேவ ஒத்தாசையினாலும், என் கடமைகளை என் கருத்தாயிருந்ததினாலும் அவைகளுக்குத் தப்பினேன். நான் வளர வளரத் தேவன் நான் முற்றிலும் பெலவீனனென்றும் அவருடைய ஒத்தாசையன்றியில் நான் ஏதும் செய்ய ஏலாதென்றும், இந்த உலகம் ஓர் பயிற்சிசாலையென்றும் கர்த்தரை நம்புகிறவர்கள் ஒருக்காலும் கைவிடப்படமாட்டார்களென்றும் அதிகமதிகமாய்க் கற்பிக்கிறார். எனக்காக ஜெபிக்கும்படி கேட்கிறேன்.

சில வருஷங்களுக்கு முன் நான் இரவில் வண்டிப்பிரயாணம் செய்தேன். என்னோடு 4 வண்டிகள் வந்தது. ஊரைக்கடந்த நடுக்காடான பாதையில் வரும்போது உத்தேசம் 12 திருடர் தடிகளோடு வந்து வண்டிக்காரரை அடித்து வண்டிகளை அவிழ்த்துவைத்துச் சிலவண்டிக்காரரிடமிருந்து பலவந்தமாய்ப் பணங்களைப் பிடுங்கி கடைசியாக வண்டிகளுக்குள் பிரவேசித்துப் பிரயாணிகளான பெண்கள் நகைகளைப் பிடுங்கி தடுத்த ஆண்களைக் காயமுண்டாக அடித்து இம்சித்தார்கள். என் வண்டி மத்தியிலிருந்தது. அடிகள் விழுகிறதைக்கேட்டு என் உடலெல்லாம் நடுங்கின போதிலும் பரமபிதாவை நோக்கி மற்றவர்களுக்காகவும் எனக்காகவும் ஜெபித்தேன். என் வண்டியின் முன்னால் திருடன் எறிப்பார்த்து நான் படுத்திருந்த நிலைமையிலேயே யிருந்ததினால் ஆளில்லையென்று சொல்லிப் போய்விட்டான். நான் அவனைக் கண்டேன். அன்று இரவு அவன் கண்ணுக்கும் கம்புக்கும் தப்பினவர்கள் ஒருவருமில்லை. ஆண்டவர் என்னை அந்த இரவு அதிசயமாய்க் காத்தார். நானிருந்த வண்டிக்காரனுக்கிருந்த ஆச்சரியம் அதிகம். அவனுக்கு மட்டும் "கர்த்தர் தமது தூதனைக்கொண்டு என்னைக் காத்தார்" என்றேன். அவருக்கே மகிமை யுண்டாவதாக.

## வேதாகம ஆராய்ச்சி

கனம் யோசேப்பு W. கெம்ப் ஐயரவர்களால் நடத்தப்படும்

வேதாகமப் பாடமுறை.

5-ம் பாடம்.

### வேதபுஸ்தகத்தை தேவவசனமாக ஒப்புக்கொள்வதற்கு நியாயங்கள்.

1. இயேசுவானவர் தாமே வேதாகமத்தைப்பற்றிக் கொடுத்த சாக்ஷி—அவர் யாதொரு சந்தேகமின்றி வேதவாக்கியங்கள் தேவ அதிகாரமுள்ளவை என்று ஒப்புக்கொண்டதும், அவைகளை மதித்து, அவைகளை

ஆராய்ந்துபாருங்கள் என்று கட்டளையிட்டதுமல்லாமல், அவைகளிலிருந்து எடுத்துரைத்ததும், அவைகளை ஒருக்காலும் மீறக்கூடாது என்று ஆக்ஞாபித்ததும், வேத புஸ்தகம் திவ்ய அதிகாரமுள்ளதுதான் என்பதற்கு எதிர்பேசக்கூடாத பலத்த நியாயமாகும். எப்படியெனில்:—

(a) பழைய ஏற்பாட்டின் சரித்திரங்களில் அவர் உறுதியான விசுவாசமுள்ளவராயிருந்தார் என்பதை பின்வரும் குறிப்புகளால் காணலாம்.

1. சிருஷ்டிப்பு. மத்தேயு 19: 4.
2. ஜலப்பிரளயம், நோவா. லூக்கா 17: 26, 27.
3. யாக்கோபின் ஏணி. யோவான் 1: 51.
4. சோதோம், கொமோரா. மத்தேயு 11: 23, 24.
5. லோத்தின் மனைவி. லூக். 17: 52.
6. யோனாவின் சரித்திரம். மத். 12: 39-41.
7. நினிவே பட்டணத்தார். லூக். 11: 30
8. நாகமான். லூக். 4: 27.

தவிரவும், வெண்கல சர்ப்பம், மன்னா, அடிக்கப்பட்ட கன்மலை, இவைகளையும் எடுத்துரைத்தார். தாம் தேவன் என்பதை சங்கீதத்தின் மூலமாய் ரூபித்தார். சோதிக்கப்படுகையில் உபாகமத்திலிருந்து எடுத்துரைத்தார். தாம் உலகத்துக்கு வந்த நோக்கத்தை சீஷர்களுக்கு வெளியிடும்போதும், பரிசேயரோடு தர்க்கிக்கும்போதும், "மோசே என்னைக் குறித்து எழுதியிருக்கிறானே" என்று அடிக்கடி சொன்னார். சிலுவையில் தொங்கிய கடைசி நேரத்திலும் வேதவாக்கியங்கள் உண்மைதான் என்று தெரியக்காட்டினார். உயிரோடெழுந்தபின்பு "மோசேயின் நியாயப்பிரமாணத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்து," சீஷருக்குப் போதித்தார். மத். 12: 40, 22: 32-45, லூக். 17: 32, யோவான் 10: 34, 35 இவைகளையும் பார்க்க. நம்முடைய ரக்ஷகருடைய சாட்சி திடச்சாக்ஷியாயிருக்கிறது. அவருடைய மரணத்துக்கு முன்னும் உயிர்த்தெழுதலுக்குப் பின்னும் பழைய ஏற்பாட்டிலிருந்து அவர் எடுத்துக்கூறிய வசனங்களைக் கவனிக்குமிடத்து அவர், வேத புஸ்தகம் சத்தியமானது, தேவ அதிகாரமுள்ளது என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறார் என்று நிச்சயிக்கலாம்.

(b) புதிய ஏற்பாட்டில், அவர் பரத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் காலத்தில் இது எழுதப்படாதிருந்தபோதிலும், யோவான் 14: 26ஐ கவனிக்கையில், சீஷர்கள் தேவ ஆவியின் ஏவுதலுள்ளவர்களாயிருப்பார்கள் என்பதை முன்னதாக வெளிப்படுத்தினார். மேலும் யோவான் 16: 12, 13-ல் தாம் எடுத்துக்கொள்ளப்பட்டபின்புதான் அவர்களுக்கு எல்லாம் பரிபூரணமாய் வெளிப்படுத்தப்படும் என்பதைச் சொல்லியிருக்கிறார். இது சம்பந்தமாக யோவான் 15: 27, அப். 1: 7, மத். 28: 19, 20, அப். 19: 15, 17ஐ பார்க்க.



2. வேத புஸ்தகமே ஒரு சாக்ஷி. யாத். 4: 10—15, உபா. 4: 2, எரே. 7: 9, எசே. 3: 4. இவ்வசனங்களில் வேத புஸ்தகம் கர்த்தருடைய வசனம் என்பதற்குப் போந்த அத்தாக்ஷியுண்டு. "தேவன் சொன்னார்" என்ற வார்த்தைகள் ஆதியாகமத்தில் பத்து முறையும், இதற்கொப்பான, "கர்த்தர் சொன்னார்" "கர்த்தர் பேசினார்" "கர்த்தருடைய வார்த்தையுண்டாயிற்று" என்னும் பதங்கள் பழைய ஏற்பாட்டில் 4000 முறையும் வழங்கியிருக்கிறது.

மேலும் புதிய ஏற்பாடு, பழைய ஏற்பாட்டில் சொல்லியது சத்தியம் என்று பலமாய் ரூபிக்கிறது. 2 பேது. 1: 20, 21. 1 பேது. 1: 10, 11. அப்போ. 1: 16, 28: 35, 1 கொரி. 2: 13, 14: 37; 1 தெச. 2: 13, 2 பேது. 3: 1-2. இப்பாகங்களைப் பார்க்கும்போது அப்புஸ்தகங்களை எழுதியவர்கள் தேவ ஏவுதல் பெற்று எழுதினதாகத் தெரியவரும். இதை நாம் ஒப்புக்கொள்ளாமல், அவர்கள் நல்ல மனிதர்களாயிருந்ததினாலே அவைகளை எழுதினார்கள் என்போமாகில், ஞானத்திலும், சத்தியத்தின் உபதேசத்திலும் நிகரில்லாத இப்புஸ்தகம் அவர்களால் எழுதப்படக்கூடிய ஒரு புஸ்தகமாகாதே. அல்லது துஷ்டரான பலர் கூடி தங்கள் உடன் சிருஷ்டிகளான மனுஷரை மோசம்போக்க எழுதிய ஒரு புஸ்தகம் என்போமாகில், துஷ்டர் கையினின்று பிறக்கக்கூடிய புத்தகம் இதுவோ?

3. வேத புஸ்தகத்தின் ஆகமங்களிலுள்ள ஒற்றுமை. வேதபுஸ்தகம் 66 ஆகமங்களடங்கிய ஓர் பெரிய புஸ்தகம். இதில் 1600 வருஷ சரித்திரம் உண்டு. அதை வெவ்வேறான மூன்று பாஷைகளில் எழுதிய 36 ஆக்கியோன்களும் ஒருவருக்கொருவர் தூரத்தில் வசித்தவர்கள், பற்பல அந்தஸ்துள்ளவர்கள். அவர்கள் எழுதியவற்றில் வேற்றுமையும், விகற்பமும் இருக்குமாயின் இருக்கக்கூடியதே என்றெண்ண இடமுண்டு. ஆனால் வேதாகமம் முழுவதிலும் இருக்கும் பூரணமான இசைவையும், பொருளின் ஒற்றுமையையும் கவனிக்கும்போது ஒவ்வொருவரும் அந்தந்தப் பாகத்தை ஆவியானவரால் நடத்தப்பட்டு எழுதினார்கள் என்பது விசதமாயிருக்கிறது.

4. வேதாகமப் பொருளின் தன்மை—இப்புத்தகத்தில் மாத்திரம் தேவன், சிருஷ்டிப்பு, மனுஷன், பாவம், மீட்பு, [illegible], பிராயச்சித்தம், புத்திரசுவிகாரம், உயிர்த்தெழுதல், மோக்ஷம், நரகம் இவைகளைப்பற்றிய திட்டமான போதனையுண்டு. வேதபுஸ்தகம் அற்பக் காரியங்களைப்பற்றி ஒன்றுஞ் சொல்லாமல் இப்படிப்பட்ட மகத்தான விஷயங்களைப்பற்றித் தெளிவாய் விளங்கத்தக்கபிரகாரம் உரைக்கிறது. அது தன் உபதேசங்களிலும், மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகளையும் தோற்றங்களையும் வகையறுக்கிறதிலும் முற்றிலும் நிகரற்றது.

5. வேதாகமத்தாலுண்டாகும் நன்மைகள்.—

1. வேதாகமமில்லாத தேசம் வெளிச்சமில்லாத தேசம். இங்கிலாந்தில் கிறிஸ்துமார்க்கம் செல்லுமுன் அதன் ஜனங்கள் வஸ்திரந் தரியாத மிலேச்சரும், நீதி நியாயம், ஒழுக்கம் அற்று அலைந்து திரிகிறவர்களுமாயிருந்தார்கள். இப்போ என்ன மாறுதல்! இதினால் ஒரு ஜாதியாருக்கு அது செய்திருக்கும் நன்மை பட்டப்பகல்போல் தெளிவாயிருக்கிறது.

2. குடும்ப ஜீவியத்திலும் ஒரு வீட்டார் எவ்வளவு தூரம் வேதாகமத்தை மதித்து அதன்படி நடக்கிறார்களோ அவ்வளவுக்கு அக்குடும்பம் பரலோக சாயல் அணிகிறது.

3. தனித்தனியான் விஷயமாயும் அது ஆத்துமத்துக்கு மாத்திரமல்ல சரீரத்துக்கும் தேவையான சுகாதார விதிகளைக் கற்பிக்கிறது. மாம்சத்தின் கிரியைகளை அது கண்டித்து சுத்தமாயும் மிதமாயும் நடக்கப் போதிப்பதுடன் ஆத்துமப் பிரகாரமாகவும் சரீரப்பிரகாரமாகவும் ஒருவனுடைய ஜீவியகாலமுழுவதிலும் அவனை வழிநடத்துகிறது.

6. ஆத்துமத்தின்மேல் அதற்கிருக்கும் தெய்வீக வல்லமையும் அதன் எல்லா அவசியத்துக்கும் ஏற்றதுவாயிருத்தலும்.—இப்புஸ்தகத்தை வாசிப்பதால் ஆத்துமத்தின் தேட்டம் நிறைவாகிறது. பயங்கள் அமைந்து போகிறது. சந்தேகங்கள் நிவிர்த்தியாகிறது. அதன் வாஞ்சைகள் திருப்தியாகிறது. அதன் தத்துவங்களோவெனில் சீனன் ஒருவன் "என் இருதயத்தை உண்டாக்கினவர் அந்தப் புஸ்தகத்தை எழுதினார்" என்று சொல்லியபடி அதினால் விசாலமடைகிறது. 18-ம் நூற்றாண்டில் வேத விரோதிகளான லிற்றன் பிரபுவும், கில்பெட் வெஸ்ற் என்பவரும் கிறிஸ்துமார்க்கத்துக்கு விரோதமாய்க் கட்டுப்பாடுபண்ணி, வேத உபதேசங்களில் குற்றங் கண்டுபிடிக்கும் நோக்கமாய் புதியயேற்பாட்டைச் சில மாதங்களாய் ஆராய்ந்து பார்த்தார்கள். அப்பால் அவர்கள் ஒன்றுகூடியபோது தாங்கள் குற்றங்கண்டுபிடிக்கப் பிரயத்தனித்த வேத புஸ்தகத்தின் மூலமாகவே குணப்பட்டவர்களாய் ஒருவரையொருவர் சந்தித்தார்கள். அவர்கள் குணப்படக் காரணமாயிருந்தவைகள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் சரித்திரமும் சவுலின் குணப்படுதலின் சரித்திரமுமே. பின்னால் அவர்களில் ஒருவர் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப்பற்றியும் மற்றவர் பரிசுத்த பவுலின் குணப்படுதலைப்பற்றியும் புஸ்தகம் எழுதலானார்கள்.

7. நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள்.—இதை மூன்று பங்காகப் பிரிக்கலாம்.

1. ஜாதிகளுக்கு விரோதமான தீர்க்கதரிசனங்கள். தீரு. எசேக். 27. பாபிலோன். ஏசா. 13: 19, 21: 9, எரே. 51, 52; நினிவே. நாகூம் 2: 8, 3: 7. எகிப்து. எசேக். 30: 13, 32: 12. இப்பட்டணங்களைச் சந்திக்கும் பிரயாணிகள் அவைகளின் ஸ்திதியைப்பற்றிச் சொல்லும் விஷயங்கள் வேதத்தோடு வார்த்தை வார்த்தையாய் ஒத்திருக்கிறது.



2. இயேசுவானவரைப்பற்றிய தீர்க்கதரிசனங்கள். சரித்திர சம்பந்தமாய்ப் பரீட்சித்துப் பார்க்குமிடத்து நிறைவேறியிராத தீர்க்கதரிசனம் ஒன்றுமே கிடையாது.

3. யூதருக்கு விரோதமான தீர்க்கதரிசனங்கள். பெரிய பிரெடரிக் என்னும் ருஷிய சக்கரவர்த்தி தம் குருவானவரைப் பார்த்து வேத வாக்கியங்கள் உண்மை என்பதற்குச் சுருக்கமான ஓர் அத்தாட்சி சொல்லும் என வினவ, அவர் 'யூதர்கள்' என்றாராம்.

### வேறு நியாயங்கள்.

1. மற்றெல்லாப் புஸ்தகங்களைவிட இதில் விளங்கிய சிறந்த உபதேசம்.

2. தன்னை விரோதிப்பவர்களை எதிர்த்து ஜெயிக்கும் அதன் வல்லமை.

3. அதை ஏற்றுக்கொள்பவரின் நடக்கைக்கும் அதை அசட்டை பண்ணுபவரின் நடக்கைக்குமுள்ள வித்தியாசம்.

4. ஆராய்ந்துமுடியாத அதன் புதைபொருள்கள்.

5. பரிசுத்த ஆவியானவரின் முத்திரை.

இப்பேர்ப்பட்ட அநேக நியாயங்களைப் பார்க்கிற நாம் வேத விரோதிகளுக்கு அஞ்ச நிமித்தமில்லை. வேத புஸ்தகம் மெய்யாகவே ஜீவனுள்ள தேவனுடைய வசனம்தான்.

## விசேஷித்த நோட்டீஸ்

ஜனுவரி மாதத்துப் பத்திரிகையில் பாக்கி வைத்திருக்கும் சந்தாதார்கள் தங்கள் பாக்கியை அனுப்பிவிடும்படி மிகவும் தயவாய்க் கேட்டுக்கொண்டோம். சிலர் மிகுந்த அன்போடு அனுப்பிவிட்டார்கள். அவர்களுக்கு மிகுந்த நன்றி சொல்லுகிறோம். நாளதுவரை கைக்கு வந்த சந்தாக்களை மறுபக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம். 1913-ம் வருஷத்துக்கும் அதற்கு முன்னுள்ள வருஷங்களுக்கும் பாக்கி வைத்திருக்கிறவர்களுக்கு அடுத்தமாசத்துப் பத்திரிகை (மார்ச்சு) வி. பி. மூலமாய் அனுப்பப்படும். வி. பி. யை மறுக்கிறவர்களுக்குப் பத்திரிகை அனுப்பப்படமாட்டாதென்கிற விபரத்தை நண்பர் யாவரும் கவனித்துக்கொள்ளும்படியாக மிகவும் அன்பாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

G. D. DEVADASON,
Manager, Water of Life.

## 1913-ம் வருஷத்துக்கு செப்டெம்பர் மீ முதல் வந்த சந்தா வரவு.

| | Rs. | A. | P. |
|---|---|---|---|
| Mrs. Cornelius, Madras | 6 | 14 | 0 |
| Rev. T. K. Itty, Royapuram | 6 | 2 | 0 |
| ,, D. Paukyanathan, Ranipet | 8 | 8 | 0 |
| Rev. J. C. Perkins, Dindigal | 4 | 6 | 0 |
| ,, W. P. Elwood, Palani | 2 | 11 | 0 |
| ,, M. Iswariah, Chingleput | 3 | 6 | 0 |
| ,, C. D. Vellu Pillai, Ceylon | 3 | 10 | 0 |
| Mr. D. S. James, Negapattam | 3 | 0 | 0 |
| ,, S. V. Selvanayagam, Mousagalle | 3 | 10 | 0 |
| ,, John Devasahayam, Madras | 0 | 8 | 0 |
| ,, G. Manuel, Seramban | 5 | 0 | 0 |
| Rev. G. M. Arulanandam | 2 | 0 | 0 |
| ,, E. P. Holten | 3 | 4 | 0 |
| Dr. E. F. Waits, Mysore | 1 | 14 | 0 |
| Mrs. G. G. Brown, Ceylon | 12 | 8 | 0 |
| Mr. S. Gnanamuthu, Kandy. | 1 | 14 | 0 |
| Rev. Samuel Joseph, Arupukotai | 1 | 14 | 0 |
| Mr. M. Daniel, Tirupuvanam | 1 | 2 | 0 |
| Rev. M. Thiruthuvathasan Melur | 1 | 2 | 0 |
| Mr. J. D. Devavaram, Tranquebar | 1 | 2 | 0 |
| Rev. S. M. Devadoss, Madras | 2 | 6 | 0 |
| Mr. K. S. Duraisamy, Coimbatore | 0 | 7 | 0 |
| Miss Samboornam ,, | 0 | 7 | 0 |
| Mr. I. Gabriel, Madura | 0 | 7 | 0 |
| ,, G. Samuel Pillai, Tirupatur | 0 | 7 | 0 |
| ,, K. S. Sholayappan, N. Arcot | 0 | 7 | 0 |
| ,, M. Muthusamy Pillai, Guntur | 0 | 7 | 0 |
| Rev. G. Kantayya, Masulipatam | 0 | 7 | 0 |
| Mr. J. Lazarus, Trivandrum | 0 | 7 | 0 |
| Mr. J. S. Cornelius, Pollachi | 0 | 7 | 0 |
| Rev. Joseph John, Madanapalle | 0 | 7 | 0 |
| Mr. Arul Christopher, Palam | 0 | 8 | 0 |
| ,, David Koilpillai, Mudalur | 0 | 7 | 0 |
| ,, J. S. Packianathan, Sholinger | 0 | 7 | 0 |
| ,, James David, Kotiagalle | 0 | 8 | 0 |
| Achy Ammal, Satiyamangalam | 0 | 7 | 0 |
| Rev. A. Sathianathan, Ceylon | 1 | 8 | 0 |
| Mr. A. Anthonimuthu, Ambasamudram | 0 | 7 | 0 |
| Mrs. Y. David, Palamcottah | 0 | 8 | 0 |
| Mr. D. John, Tiruvallur | 0 | 7 | 0 |
| ,, S. M. Chinnappan, Govipaliam | 0 | 7 | 0 |
| Mrs. Nallamuthu, Madras | 0 | 7 | 0 |
| Mr. P. R. Ratnam, Penang | 0 | 12 | 0 |
| ,, S. W. V. Arumugam, Klang | 1 | 8 | 0 |
| ,, D. Arul Samuel, Tiruvannamalai | 0 | 7 | 0 |
| ,, V. Peter, Kiuross | 1 | 0 | 0 |
| Mrs. Ruth Samuel, Rangoon | 1 | 0 | 0 |
| Rev. J. H. Maclean, Conjeevaram | 5 | 6 | 0 |
| ,, N. David, Hyderabad | 0 | 7 | 0 |
| Miss A. M. Tisdall, Kandy | 0 | 12 | 0 |
| Mr. S. D. Jesudas, Thattaparai | 0 | 7 | 0 |
| Rev. K. P. Gnanakan, Nagari | 0 | 7 | 0 |
| Mr. M. S. Devasirushti, Munnar | 0 | 7 | 0 |
| ,, J. G. Vedanayagam, Palamcottah | 0 | 4 | 0 |
| ,, V. David ,, | 0 | 4 | 0 |
| ,, C. S. Kandiah, Ceylon | 0 | 7 | 0 |

### 1914-ம் வருஷ சந்தா வரவு

| | Rs. | A. | P. |
|---|---|---|---|
| Mrs. V. Arumanayagam, Cuddalore | 1 | 3 | 0 |
| ,, Mary Gnanayya ,, | 1 | 4 | 0 |
| Mr. T. N. Samuel, Ceylon | 0 | 7 | 0 |
| ,, F. J. ArulappaPillai, Pakala | 0 | 7 | 0 |
| ,, J. L. Paul, Rangoon | 0 | 7 | 0 |
| ,, J. Lazarus, Trivandrum | 0 | 7 | 0 |
| ,, J. S. Cornelius, Pollachi | 0 | 7 | 0 |
| ,, D. Koilpillai, Mudalur | 0 | 7 | 0 |
| ,, T. D. Maduranayagam, Ceylon | 0 | 7 | 0 |
| Mr. P. R. Ratnam, Penang | 0 | 12 | 0 |
| ,, D. Arul Samuel, N. Arcot | 0 | 7 | 0 |
| ,, D. Devadasan, Ceylon | 0 | 8 | 0 |
| Mrs. M. Muthiah, Madurantakam | 0 | 7 | 0 |
| ,, S. Vedamuthu ,, | 0 | 7 | 0 |
| Mr. P. Gnanamani ,, | 0 | 7 | 0 |
| Miss D. Jeevaratnam ,, | 0 | 8 | 0 |
| Mr. John Swamidoss, Tuticorin | 0 | 7 | 0 |
| ,, E. M. Gabriel, Rangoon | 0 | 7 | 0 |

Printed at the Church Mission Press, Palamcottah and Published by the Christian Brotherhood Association.

March, 1914. Registered No. M—163.

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

OFFICE OF THE REGISTRAR ... MADRAS

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." (யோவான் 7: 38)

Vol. XV மார்ச்சுமீ 1914

## கர்த்தரைப் பற்றிக்கொள்ளுகிறவன்.

"உமது நாமத்தை நோக்கிக் கூப்பிடுகிறவனும், உம்மைப் பற்றிக் கொள்ளும்படி விழித்துக்கொள்ளுகிறவனும் இல்லை" ஏசாயா 64: 7.

கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறவனும், கர்த்தரைப் பற்றிக்கொள்ளும்படி விழித்துக்கொள்ளுகிறவனும் இல்லாத காலம் மகாகொடிய காலமாய் இருக்கும் என்பது நிச்சயம். அக்காலத்தில் கர்த்தருடைய கிரியைகள் என்று சொல்லப்படத்தக்க பலத்த கிரியைகள் நடக்கமாட்டாது. உங்கள் தேவன் எங்கே என்று புறஜாதிகள் இகழ்ச்சியாய்ச் சொல்லக்கூடியதாயிருக்கும், அக்காலத்தில் கர்த்தருடைய சபை பாழாயிருக்கும். அக்கிரமம் அதிகப்படும், அதை அடக்கக்கூடியவர்கள் இருக்கமாட்டார்கள், தேவகோபம் ஜனத்தின்மேல் வரும், அழிவு தீவிரமாய் வரும்.

கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறவர்களும், கர்த்தரைப் பற்றிக்கொள்ளும்படி விழித்துக்கொள்ளுகிறவர்களுமே கிறிஸ்து சபையின் இரட்சிப்புக்கும் வாழ்வுக்கும் காரணர்களாயிருக்கிறார்கள். வெளிப்படையாக இது தெரியமாட்டாது. மனிதர் இதை ஒப்புக்கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் கர்த்தர் இதை அறிவார். அவருடைய பிள்ளைகளுடைய போராட்ட ஜெபமே அவரைக் கிரியை செய்யும்படி ஏவுகிறது. அவரைப் பற்றிக்கொள்ளும்படி விழித்துக்கொள்ளுகிறவன் இல்லையானால், கிரியை செய்ய ஏலாதவர்போல் அவர் அமைதலாயிருப்பார். விழித்துக்கொண்டு அவரைப் பற்றிப்பிடிக்கிறதே அவரைக் கிரியைசெய்யப்பண்ணும் ஏதுகரமாயிருக்கிறது. பற்றிப்பிடிக்கிறது என்ற வார்த்தை யாக்கோபின் சரித்திரத்தை ஞாபகப்படுத்துகிறது. அவன் ஒரு நடு இராத்திரியிலே ஆண்டவரைப் பற்றிப்பிடித்

துக்கொண்டு, "நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போக விடேன்" என்று போராடினான். அப்பொழுது ஆண்டவர் அவனுக்கு இஸ்ரவேல் என்று பேரிட்டு, அவனை ஆசீர்வதித்தார். யாக்கோபு தனக்கானவைகளை விரும்பி ஆண்டவரோடு போராடினான். ஆதலால் அது பரிந்து மன்றாடுகிற மேலான ஜெபத்துக்கு மாதிரியாகமாட்டாது. ஆனால் இந்தவித ஜெபத்துக்கும் ஏற்ற சில போதனைகள் இந்தச் சரித்திரத்தில் உண்டு. அவைகளை மாத்திரம் இங்கே கவனிப்போம்.

1-வது, கர்த்தரைப் பற்றிக்கொள்ளுகிறவன் விடாப்பிடியாய்ப் போராடவேண்டும். யாக்கோபிடத்தில் இதைப் பார்க்கிறோம். தடைகளினிமித்தம் போராட்டத்தை அவன் நிறுத்தவில்லை. தேவதூதன் அவன் தொடையைத் தொட்டதினால், அவன் தொடைச் சந்து சுளுக்கினபோதிலும், யாக்கோபு தன் பிடியை விடவில்லை. அவன் தேடின ஆசீர்வாதம் அவனுக்குப் பெரிதாய்க் காணப்பட்டபடியால் அவனுக்கு வந்த தடையும் இடையூறும் அற்பமாய்த் தெரிந்தது. வேதனையினிமித்தம் தான் பிடித்த பிடியை விட்டுவிட்டு, எக்காலமும் தாழ்வான நிலைமையில் ஜீவிக்கவா? அது கூடாது. ஆசீர்வாதத்தை நாடி, தெய்வத்தை அவன் பிடித்திருக்கிறான். ஆசீர்வாதத்தைப் பெறுமுன் போராட்டத்தை அவன் நிறுத்துவதில்லை. அப்படிப் போராடிப் பற்றிப்பிடித்தவன் ஆசீர்வதிக்கப்பட்டதும், புது நாமம் பெற்றதும் ஆச்சரியமல்ல. கர்த்தரைப் பற்றிக்கொள்ளும்படி அவன் விழித்துக்கொண்டதின் பலனாக அவனுக்குக் கொடுக்கப்பட்ட நாமம், இப்படிப்பட்ட போராட்ட ஜெபத்துக்கு என்றும் நித்தியசாட்சியாய் அவனுடைய ஜனத்துக்குரிய நாமமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

2-வது, கர்த்தரைப் பற்றிக்கொள்ளுகிறவன் தொடைச் சந்துச் சுளுக்கைப்போலொத்த பரீட்சைக்கு ஆயத்தப்பட்டிருக்கவேண்டும். நாம கர்த்தரைப் பற்றிப்பிடிக்கத் துவக்கும்போது, நமது நோக்கத்தின் உத்தமத்தை அறியும்படி, அவர் நம்மைப் பரீட்சிக்கிறார். அவருடைய பரீட்சையின் அர்த்தத்தை அறியாமல் அநேகர் தாங்கள் பிடித்த பிடியை விட்டுவிடுகிறார்கள். இது மகா பரிதாபமான காரியம். இப்படிச் செய்கிறவர்கள் வேதத்தையும், தெய்வ நடத்துதலையும் சரியானபடி அறியாதிருக்கிறார்கள். பாருங்கள்! எல்லா விஷயத்திலும் யாக்கோபு நிர்ப்திகாமானவனாயிராதிருந்தும், அவன் தம்மைப் பற்றிப்பிடித்ததினிமித்தமும், தடை இடையூறு முதலானவைகளினிமித்தம் தன் பிடியை அவன் விடாதிருந்ததினிமித்தமும், பரலோகத்தின் தேவன் அவனைத் தூதருக்கும் மனிதருக்கும் முன்பாக ஆசீர்வாதத்தினாலும் கனத்தினாலும் முடிசூட்டினார். இதின் அர்த்தமென்ன? தேவன் எந்த மனிதனையாகிலும் அதிகமாய் ஆசீர்வதிக்கவேண்டுமானால், அந்த மனிதனால் அவர் மேற்கொள்ளப்படவேண்டும். அந்தப்படி பாவமனிதனால் மேற்கொள்ளப்பட இடங்கொடுக்க அவர் ஆயத்தமாயிருக்



கிறார். யாக்கோபின் சரித்திரத்தால் அவர் அதைத் தெளிவாய்க் காட்டுகிறார். நமது தேவனின் மகத்துவம் இதுவே. போராட்ட ஜெபத்தின் நோக்கம் இதுவே. தூளும் சாம்பலுமான மனிதன் தம்மை மேற்கொண்டுவிட்டான் என்று சொல்லிக்கொண்டு அவர் அவனை ஆசீர்வதித்துவிடவேண்டுமாம். இது என்ன மகத்துவம்! இந்த மகத்துவத்தின் முன்னே நமது நீசகுணம் மகா பெரிதாய்க் காணப்படுகிறது. அதென்ன? எத்தனை மகா அற்பமான தடைகளினிமித்தம் கர்த்தரைப் பற்றிப்பிடித்த பிடியைப் பலமுறை நாம் விட்டுப்போட்டோம் என்பதுதானே. இன்னமும் கொஞ்சம் நமது பிடியை விடாதிருந்தோமானால் நாமும் நமது தேவனை மேற்கொண்டு ஆசீர்வாதத்தைப் பெற்றிருக்கலாமே! இதுவரையாய நமக்குக் கிடைத்திருக்கிற ஆசீர்வாதங்களைவிட, நாம் தேவனை மேற்கொண்டு சம்பாதித்த ஆசீர்வாதங்கள் எத்தனை அதிக அருமையாய் நமக்குக் காணப்படும்!

3-வது, கர்த்தரைப் பற்றிக்கொள்ள விரும்புகிறவனுக்குத் தொடைச் சந்துச் சுளுக்குத் தடையாயிருக்கமாட்டாது. தேவதூதன் யாக்கோபைப் பரீட்சிக்கும்படி அவனுடைய தொடைச் சந்தைத் தொட்டு, அதைச் சுளுக்கப்பண்ணினார் என்பது மெய்தான். ஆனால் அதற்குமேலாக தேவதூதன் ஒன்றும் செய்யவில்லை. அவன் செய்ய நினைத்தால் எவ்வளவோ செய்திருக்கலாமே. நாம் படிக்கவேண்டிய பாடம் என்னவென்றால் கர்த்தரால் வரும் பரீட்சை மிதமிஞ்சி வராமல் மட்டாகவே வரும் என்பதுதான். நமக்குப் பரீட்சை வரலாம். ஆனால் நாம் போராடி மேற்கொள்வதற்குத் தடையான யாதொன்றும் நமக்கு வரமாட்டாது. யாக்கோபின் தொடைச்சந்து நரம்பு சுளுக்கினபோதிலும் அவனுடைய கைகள் கட்டப்பட்டிருக்காமல், சுயாதீனமாய் விடப்பட்டிருந்தது. கர்த்தரைப் பற்றிப் பிடித்துக்கொண்டு போராடுவதற்கு, கைகள்தானே வேண்டும். ஆதலால் கால்களை நொண்டியாக்கின தெய்வம் கைகளைக் கட்டாமல் விட்டுவிட்டார். அவைகளைக்கொண்டு போராடி யாக்கோபு மேற்கொண்டுவிட்டான். கர்த்தர் எல்லாருக்கும் இப்படியே செய்கிறார். எந்த மனிதனுக்கும் எவ்வித பரீட்சையும் வந்தபோதிலும் அவன் கர்த்தரைப் பற்றிக்கொள்வதற்குத் தடையானதொன்றும் அவனுக்கு வரவேமாட்டாது என்பது நிச்சயம். தன் கஷ்ட காலத்தில் கர்த்தரைப் பற்றிக்கொள்ளாததினால் எந்த மனிதனும் கெட்டுப்போகலாமேயல்லாமல், கர்த்தர் தன்னைக் கெடுத்துப்போட்டார் என்று எவனும் சொல்ல இடமிருக்கவேமாட்டாது என்பது நிச்சயம்.

யாக்கோபைப்போல கர்த்தரைப் பற்றிக்கொள்ளுகிறவர்கள் இல்லாத வீட்டுக்கும் நாட்டுக்கும் ஐயோ! கர்த்தரைப் போராட்டமாய்ப் பற்றிப் பிடித்துக்கொள்ளுகிறவர்கள்தான் நமது நாட்டுச் சபைக்குத் தீராத அவசியம். எவரும் கர்த்தரைப் பற்றிக்கொள்ளக் கூடியதாயிருக்கையில், ஏராளமான ஜனங்களடங்கிய சபைகளில் இப்படிப்பட்ட சிலர்கூட இல்லா

திருப்பது எத்தனை பரிதாபம்! தமிழ் நாட்டில் எண்ணிறந்த ஊழியர்கள் உண்டு. இவர்களில் கர்த்தரைப் பற்றிக்கொள்ளும்படி விழித்துக்கொள்ளுகிறவர்கள் எத்தனைபேர் உண்டு? பாவத்துக்கும் பாதாளத்துக்கும் விரோதமாய்ப் போர்செய்வதற்கு வெள்ளையடிக்கப்பட்ட சுவர்கள் என்னமாய்ப் பிரயோஜனப்படும்? இதை வாசிக்கிற அருமையானவர்களே, கெட்டுப்போகிற உலகத்தின் மத்தியிலே நாம் கிறிஸ்துவுக்காக கர்த்தரைப் பற்றிப்பிடித்துப் போராடுகிறவர்களாய் இருக்கவேண்டாமா? நான் உம்மை விடமாட்டேன் என்று எப்போதாகிலும் சொன்னதுண்டா? இப்போது எதைக் குறித்தாகிலும் சொல்லிக்கொண்டிருக்கிறோமா? எத்தனைக்கு அதிகமான காரியங்களைக்குறித்து யார் இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கிறார்களோ அவர்களே இந்த நாட்டுக்குப் பெரிய இரட்சகர்கள் என்றெண்ணப்படுவார்கள்.

## ‘குமாரனாயிருந்தும் பாடு’.

எபிரேயர் 5: 8.

‘அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து, நீர் தேவனுடைய குமாரனேயானால் இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான். அவர் பிரதியுத்தரமாக, மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்’ பரி. மத்தேயு 4: 3, 4.

யோர்தானில் இயேசு ஞானஸ்நானம் பெற்றதற்கும், வனாந்தரத்தில் அவர் சோதிக்கப்பட்டதற்குமுள்ள வித்தியாசம் மகா பெரிது. அங்கே அவர் மேசியாவாக ஏற்றுக்கொள்ளப்பட்டார். திரள் ஜனங்களுக்குமுன் யோவான் அவரை அறிக்கைசெய்து அவருக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அவர் தேவனுடைய குமாரனென்று பரலோகம சாட்சி பகர்ந்தது. தேவ ஆவியானவர் வெளிப்படையாய் அவர்மேல் வந்து இறங்கினார். இப்போது அவர் வனாந்தரத்தில் இருக்கிறார். துஷ்டமிருகங்கள் அவரைச் சூழ்ந்திருக்கிறது. நாற்பது நாட்களாய் அவர் ஒன்றும் சாப்பிடவில்லை. இப்படிப்பட்ட சமயத்தில் சாத்தான் அவரிடத்தில் வந்து, நீர் தேவனுடைய குமாரனேயானால் இந்தக்கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்று கேட்டான். தேவகுமாரனுக்கு வந்த இந்தச் சோதனையிலிருந்து மூன்று முக்கிய பாடங்களை நாம் கற்றுக்கொள்ளக்கடவோம்.

முதலாவது, பரலோகத்திலிருந்து வந்த எந்தச் சத்தத்தையும் சாத்தான் சந்தேகிக்கப்பண்ணுகிறான். ‘இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்’ என்று சில நாட்களுக்குமுன்தான் பிதாவானவர் சாட்சி பகர்ந்தார். அவர் அதைச் சந்தேகிக்கும்படியாக இவ்வளவு சீக்கிரமாய்ச் சாத்தான் அவரை ஏவுகிறான். அவர் தேவனுடைய குமாரன் என்பதே அவருடைய ஜீவியம் முழுவதுக்கும் அஸ்திபாரமான மூல சத்தியம். இது உண்மையில்லை என்றால் அவர் மனுமக்களில் ஒருவரான சாதாரண மனுஷனாகவே இருப்பார். அவருடைய ஜீவியம் பாவமில்லாத பரிசுத்தமுள்ளதாய் இருக்கமுடியாது. அவருடைய ஊழியத்தால் மனுமக்களுக்கு இரட்சிப்பு வரமாட்டாது. ஆதலால் இதுவே மூலாதாரமான முக்கிய சத்தியம். இதைச் சந்தேகிக்கப் பண்ணிவிட்டால் போதும். ஆ, சாத்தானுக்கு இதெல்லாம் எவ்வளவு நன்றாய்த் தெரிந்திருக்கிறது. அவனுக்கேற்ற சமயமும் வாய்த்தது. தேவகுமாரன் பசியும் பட்டினியுமாய் இருக்கிறார். பிதாவானவரும் நாற்பது நாளாய் அவருக்குப் போஜனம் கொடுக்க நினைக்கவில்லை. காகங்களைக் கொண்டும் மன்னாவினாலும் பலரை அதிசயமாய்ப் போஷித்த சுவாமி இவரை மறந்துவிட்டார். ஆதலால் இவரை எளிதாய் விழுங்கிவிடலாம் என்று சாத்தான் எண்ணி, தேவனுக்கும் அவருக்குமுள்ள சம்பந்தத்தைச் சந்தேகிக்கும்படி அவரைச் சோதிக்கிறான். நீர் தேவனுடைய குமாரனேயானால் என்று அவன் துணிகரமாய்ச் சொல்லுகிறான். இவ்விதமாய் நாம் பார்க்கிறபடி, பரலோகத்திலிருந்து வந்த சத்தத்தைச் சந்தேகிக்கப்பண்ணுவதே சாத்தானின் முக்கிய வேலை. தேவனால் அங்கிகரிக்கப்பட்ட எந்த மனிதனிடத்திலும் சாத்தான் வந்து அவனைத் தாக்குகிறான். நாம் விசுவாசத்தால் தேவனுடைய பிள்ளைகளாக்கப்பட்டிருப்பதையும் தேவன் நமதுமேல் அன்பு வைத்திருப்பதையும் நாம் சந்தேகிக்கும்படி அவன் நம்மையும் சோதிப்பான். முற்காலத்தில் பெரிதான ஆவிக்குரிய அனுபவமுடையவர்களை முதலாய் அவன் தப்பவிடமாட்டான். கர்த்தர் நல்லவர் என்று நமது ஜீவகாலமெல்லாம் நாம் அறிந்திருந்தாலும், நமதுபேரிலும் அவன் தன் அக்கினி யாஸ்திரங்களை எய்வான். நம்மைச் சோதிப்பதற்கும் தகுதியான நேரத்தை அவன் கண்டுபிடிப்பான். மிகுதியான வேலையினால் தளர்ச்சியடைந்து, வியாதியினால் பலட்சயப்பட்டு, விரோதத்தால் அதைரியப்பட்டிருக்கிற நேரங்களில் அவன் நம்மிடத்தில் வந்து நீயும் தேவனுடைய குமாரனா? உன்னை இவ்வளவு தூரம் கஷ்டப்படும்படி அவர் வைத்திருக்கும்போது, நீ உன்னை தேவனுடைய பிள்ளை என்று எண்ணிக்கொள்வதற்குச் சற்றும் நியாயமில்லையே என்று சொல்லுவான். அருமையானவர்களே, சாத்தானால் மோசம் போகாதிருங்கள். தேவகுமாரன் நாற்பதுநாள் போஜனமற்றிருந்தார் என்பதை நினையுங்கள். நாம் தேவனுடைய பிள்ளைகள் என்பதற்கு வயிறு நிறையப் போஜனமும் வீடுநிறையப் பொருளும் அடையாளமல்ல. ஆண்டவர் நம்மை நம்பப்பண்ணின அவருடைய வார்த்தையே நாம் தேவனுடைய

பிள்ளைகள் என்பதற்கு ஆதாரம். 'மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்'.

இரண்டாவது, நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருப்பதினாலே, கஷ்டமில்லாதிருப்போம் என்றெண்ணாதிருப்போமாக. தேவகுமாரனாகிய இயேசு இரவும் பகலும் நாற்பதுநாள் உபவாசமாயிருந்தபின்பு, 'அவருக்குப் பசி உண்டாயிற்று'. இது இயற்கைக்கு விரோதம். பாவிகளுக்குப் பாடும் நோவும் வருவது இயற்கை. பாவமில்லாத அவருக்குப் பசியும் சோதனையும் வருவது சரியல்ல. பின்னான காலத்தில் அவர் தமக்கு வரும் பாடுகளை முன்னறிவித்தபோது, பேதுரு அப்போஸ்தலன் அவரைப் பார்த்து, 'இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்துகொள்ளத் தொடங்கினான்'. மனுஷ அபிப்பிராயப்படி பார்த்தால் இது சரிதான். துன்பத்தையும் கஷ்டத்தையும் அனுபவிக்கிறவன் மகா பெரிய பாவி, தன் பாவத்தின் பலனை அனுபவிக்கிறான் என்று உலகம் சொல்லும். ஆனால் இது எப்போதும் உண்மையல்ல. தேவகுமாரனுக்கு வந்தபாடு அவர் பாவத்தினிமித்தம் வரவில்லை என்பதை அறிவோம். அவருக்குப் பாடும் துன்பமும் வந்த நோக்கம் நமக்குத் தெரியும். அவர் தமது ஜனங்களுக்காகப் பரிதபிக்கக்கூடிய பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு அவர்களுடைய பாடு துன்பங்களை அவர் அனுபவிக்க வேண்டியதாயிருந்தது. கல்லை அப்பமாக்கிச் சாப்பிட்டுப் பசியைத் தீர்த்துக்கொள்ள அவருக்குச் சக்தியிருந்தபோதிலும், அவர் அப்படிச் செய்யாமல், தேவசித்தப்படி பாடுபடுவதையே அவர் தெரிந்துகொண்டார். இதுவே நமக்கும் மாதிரி. பாடு துன்பம் வந்தவுடனே தேவன் நம்மைக் கைவிட்டுவிட்டார். நாம் ஆண்டவருடைய பிள்ளைகள் என்பது நிச்சயமல்ல என்றெண்ணாதிருப்போமாக. 'ஆ! என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்' என்று கிதியோனைப்போல் நாம் சொல்லாதிருப்போமாக. நியாயாதி. 6: 13. கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்கத் தீர்மானிக்கிறவர்கள் யாவரும் துன்பப்படுவார்கள் என்பது நிச்சயம். கிறிஸ்துவைப்போல் பிறர் இரட்சிப்புக்காக ஜீவிக்க விரும்புகிறவர்கள் பாடு சோதனைகள் மூலமாகவே அவரைப்போல் பக்குவப்படுத்தப்படவேண்டும். அவைகளுக்கு விலகிக்கொள்ளப் பார்க்காமலும் அவைகளின் மத்தியில் அதைரியங்கொள்ளாமலுமிருந்து, தேவசித்தப்படி அவைகளைச் சகித்து, கிறிஸ்தவ அனுபவத்தில் தேர்ச்சியடைய விசுவாசத்தைக் கையாடி வருவோமாக.

மூன்றாவது, தேவன் பசியையும் பட்டினியையும் வரவிடும்போது, சாத்தான் காட்டுகிற வழியாய் நாம் விடுதலையைத் தேடாதிருப்போமாக. ஏனெனில், சாத்தானின் நாமத்தினாலே நல்ல நாட்களை அனுபவிப்

பதைப் பார்க்கிலும், தேவனுடைய நாமத்தினாலே நாம் பசியையும் பட்டினியையும் அனுபவிப்பதே நல்லது. தேவகுமாரன் காட்டின மாதிரி இது தேவன் தமது குமாரனைப் பசியாயிருக்க வைத்துவிட்டார். சாத்தான் அவரைப் பார்த்து, கல்லுகளை அப்பங்களாக்கிச் சாப்பிடும் என்று சொன்னான். தேவகுமாரன் அவனைப்பார்த்து, என் சரீரத்துக்குப் போஜனம் கிடைக்காவிட்டாலும், என் ஆத்துமாவுக்கு கர்த்தருடைய வசனமாகிய போஜனம் உண்டு; அதை அதிகமாய் தியானித்து அதினால் பிழைத்து வருகிறேன். என் பிதா சரீரப் போஜனத்தைக் கொடுக்கும்போது நான் புசித்துக்கொள்வேன் என்பதாகச் சொல்லிவிட்டார். நாமும் இப்படியே செய்யவேண்டும். சாத்தான் நமது கஷ்டகாலத்தில் நம்மிடத்தில் வந்து மனுஷன் பிழைக்கவேண்டாமா? தேவன் போஜனம் கொடுக்காவிட்டால், நீ போஜனத்தைத் தேடிக்கொள்ளவேண்டியதுதானே; எத்தனை பேருக்கு ஏராளமான அவசரமற்ற ஐசுவரியத்தை அவர் கொடுத்திருக்கிறார். உன்னை ஏன் தரித்திரத்தில் வைக்கவேண்டும்? நீ போய், பாவமான முறையில் பணத்தைத் தேடு என்று சொல்லுவான். சிநேகிதரே, அவனுக்குச் செவிகொடாதிருப்போமாக. பாவ வழியில் துணிந்து போவது அதிகத் தீமையை வருவிக்கும் என்றறிவோமாக. ஆண்டவர் விலக்கின கல்லை அப்பமாக்கிக் கொள்ளுகிறவனுக்கு ஆண்டவர் கொடுத்த அப்பம் கல்லாய்ப் போய்விடும் என்று ஒருவர் சொல்லுகிறார். இது மெய்யான சொல், கர்த்தர் ஒப்புக்கொள்ளக்கூடாத காரியம் நமக்கு நன்மையல்ல, கர்த்தருடைய ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும். அவர் கொடுக்கும் ஆசீர்வாதம் கொஞ்சமாயிருந்தாலும் அதில் சாபம் கலந்திராது. மேலும் பிரியமானவர்களே அப்பத்தைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலை நாம் முக்கியப்படுத்துவோமாக. அப்பம் இன்பந்தான். ஆனால் கீழ்ப்படிதல் அதைவிட நமக்கு அதிக இன்பமாயிருப்பதாக. அப்பம் அவசியந்தான், ஆனால் தேவனுக்குப் பிரியமாய் ஜீவிப்பது அதைவிட அவசியம் என்றறியக்கடவோம். அப்பத்துக்காக மாத்திரம் ஜீவிக்கிறவர்களாக நாம் ஒருக்காலும் காணப்படாதிருப்போமாக. தேவனுக்காகப் பிழைக்கிறவர்களே மெய்யாய்ப் பிழைக்கிறவர்கள், மற்றவர்களெல்லாரும் செத்தவர்கள்.

## 'தேவனுக்கே மிக மேன்மை'

'அவர் என் ஆத்துமாவுக்குச் செய்ததைச் சொல்லுவேன்' சங். 66: 16.

நான் குணப்பட்ட நாளும் தேதியும் எனக்கு ஞாபகமில்லை. குழந்தைப்பிராயத்திலேயே மறுபிறப்படைந்தேன். ஆனாலும் அதன்பின் நான் செய்த பாவங்கள் மிகவும் ஏராளம் என்பதை துக்கத்தோடு ஒத்துக்கொள்ளு

கிறேன். பெருமை, அசுத்த இச்சை, கோபம், அசட்டை, மாயம், அவிசுவாசம், அன்பில்லாமை, பிடிவாதம், வெட்கம், பயம் இப்படிப்பட்டவைகளாலுண்டாகிற பாவங்களில் அடிக்கடி விழுந்தேன். சிலவேளைகளில் என் பாவங்கள் மன்னிக்கப்பட்டதுண்டோவென்பதை நான் சந்தேகித்ததுமுண்டு. சிலவேளை கர்த்தரைவிட்டுப் பின்வாங்கும்படிக்கும் என் கெட்ட இருதயம் என்னைச் சோதித்ததுண்டு. அப்படிப்பட்ட சமயங்களில் கர்த்தர் அன்பினால் என் இருதயத்தை வசப்படுத்திக்கொண்டார். என் ஏராளமான பாவங்கள் மன்னிக்கப்பட்டதென்கிற நிச்சயத்தை எனக்குத் தந்தார். ஆனாலும் பொதுவாக என் சிறுவயதுமுதல் 'நல் மனச்சாட்சியோடே தேவனுக்குமுன்பாக நடந்துவந்தேன்' (அப். 23: 1) என்று நான் சொல்லலாம்.

சிலவேளை என் அறிவீனத்தால் என்னிடத்தில் பாவமில்லை என்றும் எப்பொழுது பாவ அறிக்கை செய்யவேண்டியதில்லை என்றும் நான் நினைத்ததுண்டு. பாவமன்னிப்புக்காக ஜெபித்தவர்களை நான் குறைகூறினதுமுண்டு. இதைக் கண்டிக்கும்பொருட்டு ஆண்டவர் ஒரு பயங்கரமான அனுபவத்தை எனக்கு நியமித்தார். 1897-ம் வருஷம் இரகசியமான ஓர் பாவத்தைச் செய்யும் வழக்கத்தில் விழுந்தேன். நான் வெகுவாய் ஜெபித்தாலும், பிரயாசப்பட்டாலும் பிரதிஷ்டைகளைப்பண்ணினாலும் ஒரு பிரதிஷ்டை ஜெபத்தை என் சொந்த இரத்தத்தினால் எழுதிவைக்கப் பிரயாசப்பட்டாலும், அநேகமுறை கர்த்தரிடத்தில் அழுது கெஞ்சினாலும் அநேக வருஷங்களாய் அந்தத் துர்ப்பழக்கம் என்னைவிட்டு எடுபடவில்லை. அது முதல் என்னிடத்தில் பாவமில்லை என்ற எண்ணம் என்னைவிட்டு வெகுவாய்ப்போய்விட்டது. சுருக்கி எழுதுகிறேன், கடைசியாக 1906-ம் வருஷம் என் பாவங்களில் ஒன்று என் சிநேகிதர் ஒருவருக்கு மிகவும் கேவலமாய் வெளிப்பட்டுப்போக நேரிட்டது. அதினிமித்தம் நான் எவ்வளவாய் என் மனதைத் தேற்றிக்கொள்ளப் பிரயாசப்பட்டாலும் தேறுதலடையாமற்போனேன். கர்த்தர் தமது கரத்தை நீட்டி என்னை ஆறுதல்படுத்தாதிருந்தால் என் மனவேதனையினால் அந்த வருஷமே செத்துப்போயிருப்பேன். நான் எனக்காகப் பிழைத்தால் என் மரியாதைபோனதோடு நானும் போகவேண்டியதுதான். ஆனாலும் என் மரியாதை என் ஜீவனல்லவே! கிறிஸ்து அல்லவோ எனக்கு ஜீவன். ஆதலால் கிறிஸ்து தமது சித்தத்தை என்னில் நிறைவேற்றும்பொருட்டு நான் இன்னும் உலகத்தில் உயிரோடிருக்கலாம் என்ற எண்ணத்தை தேவன் என் மனதில் அனுப்பி என்னைத் தைரியப்படுத்தினார். இதற்குப்பிறகும் நான் அதிகமாய்த் தனி ஜெபங்களில் அழுததுண்டு. விசேஷமாய் என் எல்லாப் பாவங்களையும் ஒரு படம்போல் ஆவியானவர் காட்டினபடியால் அவைகளை ஒரு புஸ்தகத்தில் எழுதிவைத்துக்கொண்டு தனி ஜெபம் செய்யும்படி காட்டுக்குப்போய்



அதைத் தெய்வசமுகத்தில் வாசித்துப் பரிசுத்தமாகுதலாகிய பலனுக்காக (ரோ 6: 22) அழுது கெஞ்சுகிற வழக்கத்தை உண்டுபண்ணிக்கொண்டேன்.

1907-ம் வருஷம் அக்ற்றோபர் மாசம்போல் அதற்குமுன் இல்லாத பிரகாரம் என் முழு இயற்கையும் ஒன்றாய்த் திரண்டுநிற்க என் கடைசியான பிரதிஷ்டை ஜெபத்தைச் செய்து தெய்வசமுகத்தில் அதை எழுதிவைத்தேன். 1909-ம் ௵ நவம்பர் ௴ ஆரம்பத்தில் எனக்கு வைசூரி கண்டு நான் பெலவீனமாய்ப் படுத்திருக்கையில் இயேசுகிறிஸ்து என் காரியங்களையெல்லாம் தாமே பொறுப்பாய்ப் பார்க்கும்படி கணக்கொப்புக்கொண்டுபோனார் என்ற தெளிவுண்டாயிற்று. 1912-ம் ௵ நவம்பர் மாசம் 5-ம்தேதி இரவு நான் நித்திரைசெய்கையில் 'உன் பாவத்தை நீக்கி உன்னைச் சுத்திகரித்தேன்' என்ற நிச்சயத்தைக் கர்த்தர் என் ஆத்துமாவில் தந்தார். அதுமுதல் 2 தீமோ. 2: 21 ல் சொல்லியபடி எந்த இடத்தில் கர்த்தர் என்னை உபயோகிக்கச் சித்தமாயிருக்கிறாரோ என்று பார்த்துக்கொண்டிருக்கிறேன். இக்காலத்திலும் மறதியாகவும் அறியாமலும் செய்கிற பாவங்கள் என்னிடத்தில் உண்டு. ஆனாலும் முந்தின வருஷங்களில் என்னிலிருந்த பெருமையோடு இவைகளை ஒத்துப்பார்க்கும்போது கர்த்தர் என்னிடத்தில் பலத்த கிரியையைச் செய்திருக்கிறாரென்று தைரியமாயும் சந்தோஷமாயும் சொல்லுகிறேன். கர்த்தருடைய கிரியை நாளடைவில் வளர்ந்துவருகிறது அவருக்கே ஸ்தோத்திரம்.

## வேதாகம ஆராய்ச்சி

கனம் யோசேப்பு W. கேம்ப் ஐயரவர்களால் நடத்தப்படும்
வேதாகமப் பாடமுறை.

### 6-ம் பாடம்.

#### வேதாகமம் திவ்ய ஏவுதலுள்ளது.

இப்பொருள் மிகவும் முக்கியமான ஓர் விஷயம் (Froude) பிரௌட் என்பவர் "வேதாகமம் திவ்ய ஏவுதலுள்ளது என்பதுதான் நம் முழு நம்பிக்கைக்கும் அஸ்திபாரம். அந்த ஏவுதல் எவ்வளவு தூரம் உள்ளதென்றும், எந்த அளவுக்கு எதெதை நமக்கு உண்மையென்று நிச்சயமாய்க் காட்டுகிறதென்றும் நாம் தெளிவற்றிருப்பின் அது விசனிக்கத்தக்கது" என்று சொல்லுகிறார். வேதாகமம் மனுஷனாலுண்டாயிற்றோ அல்லது தேவனாலுண்டாயிற்றோ? இது வெகு முக்கியமான ஓர் கேள்வி. அது தேவனாலுண்டானதாயிராவிடில், விசுவாசிக்கு வருங்காலத்தைப் பற்றிய அவனு

டைய பெரும் நம்பிக்கையும், எதிர்பார்க்குதலும் முற்றிலும் அவமாகும். வேத வசனம் திவ்ய ஏவுதலுள்ளதென்பதற்கு காலஞ்சென்ற பரிசுத்தவான் ஜியார்ஜ் முல்லர் ஓர் சமயம் கூறியதென்னவெனில், "பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடுமடங்கிய வேதாகமத்தை எழுதிய தேவ மனுஷர் தேவனாகிய பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் எழுதினார்கள். அவரே அவர்கள் பேனாக்களை உபயோகித்தார். எழுதினது மோசேயல்ல, தேவனே மோசேயைக் கொண்டு, மோசேயின் பஞ்சாகமங்களிலடங்கியவற்றை எழுதினார். எழுதினது தானியேல் அல்ல, தேவனாகிய பரிசுத்த ஆவியானவரே தானியேலைக்கொண்டு எழுதினார். அப்படியே எரேமியா அல்ல பரிசுத்தாவியாகிய தேவனே எரேமியாவைக்கொண்டு எழுதினார். இவ்வண்ணமாகவே புதிய ஏற்பாட்டிலும் எழுதினது பேதுரு, பவுல், யோவான் அல்ல. பரிசுத்தாவியாகிய தேவனே பேதுரு, பவுல் யோவான் மூலமாய் எழுதினார். சுவிசேஷகர் எழுதியதும் இவ்வண்ணமாய்த்தான். எல்லாம் பரிசுத்தாவியாகிய தேவனாலேயே அவர்களைக் கருவியாகக்கொண்டு எழுதப்பட்டது" என்பதே. இப்பாடம் படிப்பதில் நம் மனதில் இருக்கவேண்டியது இதுதான். சிறிதுநேரம் ஜெபத்தில் தரித்து பின்னர் அடியில் வரும் வசனங்களைப் பார்க்க 2 தீமோ. 3: 16; 1 கொரி. 2: 13; 2 பேதுரு 1: 21; லூக்கா 1: 70, யாத் 4: 12, எரே. 30: 2. இப்பொருளை மூன்றுவிதமாய்க் கவனிப்போம் —1. திவ்ய ஏவுதலின் உண்மை. 2. அதன் தன்மை. 3. அதன் அளவு.

1. திவ்ய ஏவுதலின் உண்மை. இதன் முக்கியத்தை உணர்ந்தறியாதவர் வேத வசனத்தில் யாதொரு தேர்ச்சியும் அடைவது கூடாத காரியம். வேதாகமம் மெய்யாகவே திவ்ய ஏவுதலுள்ளதுதான் என்பதை பூரணமாய் நம்புகிறவர்களைக் குறைகூறுபவர் இக்காலம் அநேகர். முற்காலத்தில் நம் முன்னோர்கள் இது விஷயமாய் எண்ணியிருந்த எண்ணத்தையும் மதிப்பையும் கவனிக்கும்போது, வேதாகமம் பூரணமாய் அல்லது வார்த்தை வார்த்தையாய் திவ்ய ஏவுதலுள்ளது என்பதைச் சந்தேகிக்காத, அல்லது மறுக்காத தேவ ஊழியர் உள்ள ஒரு திருச்சபையின் பிரிவாரைக் காண்பது அபூர்வம். இதுவே தற்காலத்தில் வேதாகமத்தையும், ஆவிக்குரிய காரியங்களையும் பற்றி பொதுவாய்க் காணப்படும் அசட்டைக்குக் காரணம் என்னலாம். ஆகையினாலேயே இது விஷயமான நம் நம்பிக்கையில் நாம் உறுதியுள்ளவர்களாயிருப்பதும், வேத வாக்கியங்கள் இதுவிஷமாய்ப் போதிக்கிறதென்னவென்றும், கடந்த காலங்களில் திருச்சபை இதைப்பற்றிக் கொண்டிருக்க அபிப்பிராயமென்னவென்றும் அறிந்திருப்பது வெகு அவசியம். சீர்திருத்தலின் காலத்துக்கு முன்னால் உள்ள சபையின் போதனை யாதெனில், "உற்பத்தியில் தெய்வீகமானது, வார்த்தையிலும் பொருளிலும் உண்மை தவறாதது" என்பதே. ரோமானித்தார் முதலான சகல



சபையும் இதே விசுவாசமுள்ளதாயிருந்திருக்கிறது. 12-ம், 13-ம் நூற்றாண்டுபோல்தான் தல்மூத்திய யூதரால் முதல்முதல் ஆக்ஷேபனை உண்டாயிற்று. பின் 16-ம், 17-ம் நூற்றாண்டில் நியாயகாரண வாதிகளால் ஆக்ஷேபிக்கப்பட்டது. அதுதொடங்கி இதுவரையும் ஆக்ஷேபிக்கப்படாத புத்தகம் ஒன்றுமே கிடையாது. ஆயினும் எல்லா ஆக்ஷேபனைகளையும் வென்றுகொண்டு இந்நாள்வரையும் நிலைநிற்கிறது.

2. திவ்ய ஏவுதலின் தன்மை. சிலர் நம்மை வேதாகமம் பூராவாய் திவ்ய ஏவுதலுள்ளதல்ல என்று நம்ப விரும்புகிறார்கள் அதென்னவெனில் வேதாகமம் தேவனுடைய வசனந்தான், ஆயினும் முற்றிலுமாயல்ல தெளிவாய்ச் சொல்லின், வேதாகமத்தின் சில புத்தகங்கள் அல்லது பாகங்கள்தான் திவ்ய ஏவுதலுள்ளது, தேவனுடைய வசனமல்லாத மிகுதியான பாகமும் சேர்ந்துள்ளது என்பதுதான். அப்படியானால் அதில் எப்பாகம் திவ்ய ஏவுதலுள்ளது என்று தீர்மானிக்கிறது என்ற கேள்வியுண்டாகிறது. இதற்கு உத்தரவு சொல்லத்தக்கவன் யார்? முன் ஆதார[illegible]னிக்கச் சொன்ன வசனங்களை ஆராய்கையில், அவை வேதாகமத்தின் எந்தப் பாகத்தையும் மற்றதைவிட விசேஷித்துக் காட்டவில்லை என்பது விளங்குகிறது. மற்றவர்கள் பொதுவான ஏவுதலுள்ளது என்கிறார்கள். அதாவது கவிஞர் எவ்வித எழுப்புதல்கொண்டு பாட்டுகள் வரைகின்றனரோ, அவ்வண்ணமான ஓர் ஏவுதல்கொண்டெழுதினர் என்கிறார்கள். இப்படிச் சொல்வது வேதாகமம் தெய்வீகமானது என்பதை மறுக்கிறதாகும். அத்துடன் பல பிரௌனிங், ஷேக்ஸ்பியர், டெனிசன் முதலான கவிஞர் தங்களுக்குரியதென்று அவர்கள் ஓர்காலும் பாராட்டாத ஓர் உயர்ந்த நிலைக்கு அவர்களை உயர்த்துவதாகும். இப்படிப்பட்ட கொள்கையை நாம் ஒருபோதும் ஒப்புக்கொள்ளுகிறதில்லை ஆயினும் பலர் அதன் வார்த்தைகள் அல்ல, எண்ணங்கள்தான் திவ்ய ஏவுதலுள்ளது. என்றாலும் வேதாகமத்தை மற்றெல்லாப் புத்தகங்களிலும் விசேஷமானதாயும் தனிமையாய் நிகரற்ற ஓர் புத்தகமாகியுமிருக்கத்தக்கதாய்ச் செய்கிற ஏதோ ஒரு "அறியக்கூடாத தன்மை" அதிலிருக்கிறது. இந்த அறியக்கூடாத தன்மையைத்தான் திவ்ய ஏவுதல் என்கிறோம்.

இவ்வித அரும்பொருளைச் சிந்திக்கையில் வேதவாக்கியங்கள் இதைப்பற்றிச் சொல்லுகிறதென்னவென்றே நாம் கவனிக்கவேண்டியது. மனுஷ அபிப்பிராயங்கள் பயனற்றவை. வேத வாக்கியங்கள் சொல்லுகிறதென்ன? "நியாயப்பிரமாணத்தையும் சாக்ஷிபாகமத்தையும் கவனிக்கவேண்டும்." வேதாகமம் பூரணமாய் திவ்ய ஏவுதலுள்ளதென்று வேதவாக்கியங்கள் உறுதியாய்ச் சொல்லுகின்றன 2 தீமோத்தேயு 3:16 பார்க்க. 2 பேதுரு 1: 21-ல், 'தேவனுடைய பரிசுத்த மனுஷர் பரிசுத்தாவியினால் ஏவப்பட்டுப் பேசினார்கள்' என்று சொல்லியிருக்கிறது. இதில் வேத வசனம் திவ்ய ஏவுதலுள்ள

தென்பதலடங்கிய தெய்வீக மனுஷீக சம்பந்தத்தைக்காண்பிக்கிறது. தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறபடி இரண்டையும் ஒப்புக்கொள்ளவேண்டும். வேதாகமம் தெய்வீகமானதெனினும், மனுஷனாலுண்டானதென்பது வாஸ்தவம். தேவனுக்கு மனுஷனுடைய மனசு, நாவு, பேனாக்களை கருவியாக உபயோகிப்பது பிரியமாயிற்று. இதனால் வேதாகமத்தை எழுதினவர் கிரமபோனிலுள்ள ரெக்காடுகளைப்போல் வெறும் யந்திரங்களாய் மாத்திரம் இருந்தார்களென்பது தகுதியல்ல. ஒவ்வொரு புத்தகமும் அதனை எழுதியவரின் விசேஷித்த குணாதிசயங்களைக் காட்டும் சாட்சியாயிருக்கிறது. அவர்களுடைய வெவ்வேறான குணம், சந்தர்ப்பம், நிலைமை, பாஷைநடை முதலியவற்றை எங்கும் தெளிவாய்க் காணலாம். எழுதபபட்ட வார்த்தை தேவ வசனம்போலிருக்கிறது; ஆனால் அது தேவனுடைய வார்த்தையாயிருப்பதுபோலவே மனுஷனுடைய வார்த்தையாயுமிருக்கிறது. ஆகவே திவ்ய ஏவுதலுள்ள தேவ வசனம் நம் புத்திக்கு விளங்கத்தக்கதான பாஷையில் எழுதப்பட்ட வேதாகமமாயிருக்கிறது.

இத்தோடே நாம் மனதில் அத்தியாவசியமாய்க் கொள்ளவேண்டிய இன்னொன்றுண்டு. யாதெனில் எழுதியவர் தம் நினைவு, பாஷை முறைப்படி எழுதினாலும், ஒவ்வொருவரும் தேவாவியானவரால் நிறைந்திருந்தவர்களாயும், அவருடைய சமுகத்தினாலும் வல்லமையாலும் ஆட்கொள்ளப்பட்டவர்களாயுமிருந்தார்கள். ஆகையால்தான் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாயிராமல், பரிசுத்தாவியானவர் போதிக்கிறவைகளால்'' எழுதப்பட்டிருக்கின்றன. அதில் வரையப்பட்டிருக்கும் சம்பவங்கள், சரித்திரங்கள், தீர்க்கதரிசனங்கள், பிரமாணங்கள், கண்டனங்கள், எச்சரிப்புகள், வாக்குத்தத்தங்கள் யாவும் வார்த்தை வார்த்தையாய் உண்மையாயிருக்கச்செய்த ஜீவனுள்ள தேவனிடத்திலிருந்தே புறப்பட்டன. இது மெய்யாகவே ஆச்சரியமான ஓர் இரகசியம். அவைகள் பிரமிக்கத்தக்கவிதமாய் ஒன்றாயிணைக்கப்பட்டிருக்கும் முறையைப் பார்க்கும்போது, ''நம்முடைய தேவனாகிய கர்த்தருக்குரிய இரகசியங்களில் ஒன்று'' என்றே நாம் சொல்லவேண்டியது. இதைப்பற்றி பர்தன் குருவானவர் ''திவ்ய ஏவுதலின் முறையானது நம்மைச் சூழக் காணப்படும் ஆயிரமான அதிசயங்களிலொன்று. அதைப் பூரணமாய் கிரகித்தறிய முடியாது, விவரித்துச்சொல்லதும் அரிது'' என்கிறார்.

திவ்ய ஏவுதலுக்கும் வெளிப்படுத்தலுக்கும் வித்தியாசம் உண்டு. ஒருவனுக்கு தெய்வீக வெளிப்படுத்தல் இருக்கலாம், ஆயினும் அதை எழுதுவதற்கு அவனுக்கு திவ்ய ஏவுதலில்லாதிருக்கலாம். வேறொருவனுக்கு வெளிப்படுத்தப்படாததும் முன்னமே தெரிந்ததுமான ஒரு விஷயத்தை எழுத திவ்ய ஏவுதலிருக்கலாம். திருஷ்டாந்தமாக, வேதாகமத்தில் வெளிப்படுத்தலேயில்லாமல் எழுதப்பட்டவை அதிகமிருக்கிறது. சரித்திராகமங்



களை யெழுதியவர்க்கு அவற்றின் சரித்திரம்யாவும் தெரிந்த விஷயம்தானே. அவர்களுக்கு இச்சரித்திரங்களை உண்மையாய்த் திட்டவட்டமாய் எழுதுவதற்கு தேவையாயிருந்தது திவ்ய யேவுதலே. வேறுவிதமாயறியக்கூடாத சத்தியங்களை தேவ அறிவிப்பினால் அறிவதே வெளிப்படுத்தலாகும். அச்சத்தியங்களை உண்மையாயும் திட்டவட்டமாயும் எழுதுவதற்கோ திவ்ய ஏவுதல் அவசியம். சரித்திரம், தீர்க்கதரிசனம், சுவிசேஷ அழைப்பு, கண்டிப்பு, எச்சரிப்பாகிய வேதாகமப் பொருளை பிழையற உண்மையாய் எழுதுவது திவ்ய ஏவுதலையடுத்தது. எழுதியவர்க்கு அறிவு எப்படிக் கிடைத்தாலும், திவ்ய ஏவுதல் பெற்றெழுதினால் மாத்திரம் அதை பிழையறச் செய்யக்கூடும். இந்த ஏவுதல் வேதாகமம் முழுவதிலுமுண்டு. ஆயினும் அப்படிப்பெற்ற ஏவுதல் எழுதப்பட்ட பொருளிலும் இருக்கிறது என்றெண்ணக்கூடாது; உதாரணமாக மனுஷனுடைய விழுதலைப்பற்றிய சரித்திரம் இருக்கிறது. இதில் சாத்தான் பேசிய வார்த்தைகளும் திவ்ய ஏவுதல்பெற்றுப் பேசப்பட்டவை என்று சொல்லப்படாது. அப்படியே பல கெட்ட அல்லது ஞானமற்ற மனுஷரின் கிரியைகளும், வார்த்தைகளும் வேதாகமத்திலுண்டு. இவ்விஷயங்களில் திவ்ய யேவுதல் சொல்லப்பட்ட வார்த்தைகள், அல்லது செய்யப்பட்ட கிரியைகளிலில்லாமல், அவை பிசகின்றி எழுதப்பட்டதிலேயே உள்ளது. அப்படிப்பட்டவை வேதாகமத்திலிருக்க வேண்டுமென்பது தேவசித்தம். யோபு, அவனுடைய சிநேகிதர் விஷயத்திலும் இப்படித்தான். அவர்கள் பேசிய வார்த்தைகளநேகம் ஆவியானவரால் ஏவப்பட்டவையல்ல. இதிலுள்ள ஏவுதலெல்லாம் அதைப் பிழையற வேதாகமத்தில் எழுதியதில்தான் அடங்கியிருக்கிறது.

3. திவ்ய ஏவுதலின் அளவு வேதாகமத்திலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் திவ்ய ஏவுதலுள்ளதா? ஆம், உள்ளதுதான். வேதாகமம் பூராவாய் திவ்ய ஏவுதலுள்ளதோடு, வார்த்தை வார்த்தையாயுமுள்ளது. சிலர் அதன் கருத்துகள்தான் ஏவுதலுள்ளதேயொழிய வார்த்தைகள் அல்ல என்கிறார்கள். இது ஒவ்வாது. காசன் என்னும் பண்டிதர் 'எண்ணங்கள் மாத்திரம் திவ்ய ஏவுதலுள்ளவை, வார்த்தைகள் அல்லயென்போமானால் அது இயற்கைக்கு விரோதமானது உண்மையில்லாதது' என்கிறார். ஸாயிர் என்பவர் 'நினைவுக்கும் வார்த்தைக்குமிடையில் எல்லைக்குறியைக் காண்பது அபூர்வம். அப்படிப் பிரிப்பது மோசமாக முடியும்' என்கிறார். கனோன் கெஸ்றாட் 'சரீரமும் ஆத்மாவும் ஒன்றுபொருந்தியிருக்குமாப்போல் நினைவும் வார்த்தையும் ஒன்று' என்கிறார். ஆகையால் வேதாகமத்தின் வார்த்தைகள் 'தேவனுடைய வார்த்தைகள்' என்னலாம். 2 பேதுரு 1: 21 ரோமர் 15: 4; அப்போ. 4: 25; 1 கொரிந் 2: 13. கடைசியில் சொல்லப்பட்டிருக்கும் வசனத்தை 9-ம் வசனமுதல் வாசிக்க. பின்வரும் வசனங்களையும் பார்க்க. யாத் 3: 14, 4: 12; 2 சாமு. 23: 2; எரே. 1: 9, 7: 1, 30;

2; ஓசியா. 12: 10; லூக். 1: 70; ரோமர். 12: 19. இவ்வசனங்களில் எண்ணங்களல்ல வார்த்தைகளே கொடுக்கப்பட்டனவெனத் தெரியும். இவ்வித பூரணமான திவ்ய யேவுதல் முதல் முதல் எழுதப்பட்ட பிரதிகளுக்குத்தான் உரியதேயல்லாமல் பின்னால் எடுக்கப்பட்ட நகல்களுக்கும், மொழிபெயர்ப்புகளுக்கும் உரியதல்ல.

4. **வேதாகமம் திவ்ய ஏவுதலுள்ளதென்பது அதன் சத்தியங்களில் ஒன்று.** இது சம்பந்தமாய் 5-ம் பாடத்தின் 2-ம் பாகம் பார்க்க. அப்போஸ்தலருக்கும் திவ்ய ஏவுதல் அவசியமாயிருந்தது. அப்படிப்பெற்று எழுதியதாயும் சாட்சியிடுகிறார்கள்.

1. **திவ்ய ஏவுதலவசியம்.** இயற்கையாய் அவர்களுக்கிருந்த அறிவைவிட ஏதோ வேறொரு துணையில்லாவிடில் அவர்கள் இயேசுவின் ஜீவிய விருத்தாந்தத்தை திட்பநுட்பமாய் எழுதமுடியாது. அவர்கள் அறிவுக்கும், ஞாபகத்துக்கும் தெய்வீக உதவி தேவையிருந்தது. யோவான் 14: 26. மேலும் திவ்ய ஏவுதலின்றி வருங் காரியங்களை அவர்கள் முன்னுரைக்க முடியாது. யோவான் 16: 13

2. **திவ்ய ஏவுதல் பெற்றெழுதிய சாக்ஷி.** 1 கொரிந். 2: 10—13; 1 கொரி 14: 37; 1 தெச. 2: 13; 2 பேது. 3: 15; 1 யோவான் 4: 6. அப்போஸ்தலர் சுவிசேஷ நியமங்கள் தங்களுக்கு தேவாவியானவரால் வெளிப்படுத்தப்பட்டனவென்கிறார்கள். இது அவர்கள் காலத்திலுள்ளவராலும், பின்னடியாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

## 16-ம் வருஷ கன்வென்ஷன் கூட்டங்கள் 1914.

டக்கரம்மாள்புரம்—மேய்மீ 25—29. (வைகாசிமீ 12—16).

‘‘உங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளுங்கள்; நாளைக்கு கர்த்தர் உங்கள் நடுவி
லே அற்புதங்களைச் செய்வார்'' யோசுவா 3: 5. இந்த வாக்கியமே ஆவிக்குரிய கூட்
டங்களுக்கு ஆதாரம். கர்த்தர் ஒரு சபைக்கு அதிசய கிரியைகளை நடப்பிக்கவேண்டு
மானால் அந்தச் சபை தன்னைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளவேண்டும். நாளைக்கு
அவர் அதிசய கிரியைகளை நடப்பிக்கவேண்டுமானால், இன்று அந்தச் சபை தன்னைப்
பரிசுத்தம்பண்ணிக்கொள்ளவேண்டும். திருநெல்வேலிச் சபைநடுவில் கர்த்தருடைய
பலத்த அதிசய கிரியைகள் நடப்பிக்கப்படும்படிக்கு, இந்தச் சபையின் பெரியோ
ரும் இதின் வாழ்வை நாடுகிற யாவரும் ஒன்றுகூடி இந்தச் சபைக்கென்று தங்களைப்
பரிசுத்தம்பண்ணிக்கொள்ளவேண்டும். ‘‘அவர்களுக்காக நான் என்னைத்தானே பரி
சுத்தமாக்குகிறேன்'' என்று சொன்ன அருமை எஜமானின் மாதிரிப்படி, திருநெல்வே
லிச் சபைக்காகத் தங்களைப் பரிசுத்தமாக்கிக்கொள்ளுகிறவர்களே இந்தச் சபைக்கு
உப்பாயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட வாஞ்சையுள்ள தேவனுடைய பிள்ளைகள்
யாவரும் இந்த வருஷத்தின் கூட்டங்களுக்கு வரும்படியாக இயேசு இராஜாவின் திரு
நாமத்தால் அழைக்கிறோம்.



கர்த்தர் திருநெல்வேலிச் சபையில் நடப்பிக்கவேண்டிய அதிசய கிரியைகள் பல உண்டு. பலமான பாவ உணர்வு, திட்டமான குணப்படுதல், உறுதியான தற்பிரதிஷ்டை, விடாமுயற்சியான ஜெபம், சுயவெறுப்பான ஊழியம் இவைகளே நமக்குள் நடப்பிக்கப்படவேண்டிய அற்புத கிரியைகளில் முக்கியமானவைகள். இவைகளை ஆண்டவர் நமக்காக நடப்பிக்கவேண்டுமானால், இவைகளுக்காகக் கவலைப்படுகிற ஆண்டவருடைய பிள்ளைகள் ஒன்றுகூடி தங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளவேண்டும். எந்நேரமும் ஆண்டவர் அதிசய கிரியைகளைச் செய்யக்கூடியவராயினும், நாம் நம்மைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளும்போதுதான் அவர் அற்புத கிரியைகளை நடப்பிப்பார். கடந்த வருஷம் மேய் மாதத்தில் 800 பேர் சுவானிக் என்ற இடத்தில் ஒன்றுகூடி, சர்ச் மிஷனெரி சங்கத்துக்காகத் தங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொண்டபோது, ஆண்டவர் அந்தச் சங்கத்துக்கு ஒரு லட்சம் பவுனை ஒரே மாதத்தில் கொடுத்தார். திருநெல்வேலிச் சபைக்காகத் தங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ள வாஞ்சிக்கும் 800 பேரை கர்த்தர் இவ்வருஷக் கூட்டத்துக்கு அழைத்துக்கொண்டுவருவாராக.

கூட்டங்களுக்கு வருகிறவர்கள் தங்குவதற்கு ரூ. 875-ல் ஒரு கட்டடமும் கூட்டங்களை நடத்துகிறவர்கள் தங்குவதற்கு ரூ. 125-ல் ஒரு கட்டடமும் இவ்வருஷம் கட்டப்படுகிறது. இவைகளுக்கு உற்சாகமாய்ப் பணச்சகாயம் அனுப்புவிக்கும்படி தேவனுடைய பிள்ளைகளெல்லாரையும் கேட்டுக்கொள்ளுகிறோம். சாதாரண சாப்பாடு பொருந்தாதவர்களுக்குப் போன வருஷ ஏற்பாட்டின்படி விசேஷித்த சாப்பாட்டுக்கும் ஒழுங்குசெய்யப்படும்.

இவ்வருஷக் கூட்டங்களுக்காக ஊக்கமாய் ஜெபிக்கும்படி எல்லாரையும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

கன்வென்ஷன் நடத்துகிற சகோதரர்.

## நோட்டீஸ்

ஜீவத்தண்ணீர்ப் பத்திரிகை விஷயமான கடிதங்களும் சந்தாக்களும் அடியிற்காட்டிய விலாசத்துக்கு அனுப்பும்படிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

Mr. G. D. DEVADASON,
*Manager, Water of Life,*
*Mary Arden's School,*
*Palamcottah.*

### சந்தா வரவு.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| Dr. ஹார்டி, காஞ்சிபுரம் ... ... ... | 4 | 14 | 0 |
| Miss வார்பி, புதுச்சேரி ... ... ... | 7 | 9 | 0 |
| Rev. லாசரு மரியான், புங்கனூர் ... ... | 1 | 8 | 0 |
| ,, C N. ராமசாமி, சீயோன்மலை ... ... | 7 | 2 | 0 |
| ,, S வேதமாணிக்கம், போடிநாயக்கனூர் ... ... | 3 | 4 | 0 |

| | | | |
|---|---|---|---|
| Miss S ஹுனிஸ், வேலூர் | 0 | 8 | 0 |
| Mr. A. அருளப்பன், வேலூர் | 2 | 0 | 0 |
| ,, மதான், கோசஞ்சேரி | 0 | 7 | 0 |
| ,, T. பாலசுந்தரம், சாத்தூர் | 0 | 7 | 0 |
| ,, T S. ஞானக்கண், முக்காம்பாக்கம் | 2 | 3 | 0 |
| ,, S M. ராஜ், ரங்கூன் | 1 | 0 | 0 |
| ,, D டேவிட், முட்டுவால் | 2 | 10 | 0 |
| ,, ஜாண் சாலோமோன் பங்களூர் | 0 | 7 | 0 |
| ,, G சுந்தரம், காசரேத்து | 0 | 9 | 0 |
| ,, P. D. ஜாண், அல்கிரனோயா | 0 | 7 | 0 |
| ,, Z P. சகரியா, திருவல்லா | 2 | 6 | 0 |
| ,, துரைசாமி, திசையன்விளை | 0 | 7 | 0 |
| ,, A. S தாசன், எட்டியான்தோட்ட | 2 | 0 | 0 |
| ,, D. யோசேப்பு, குடைக்கானல் | 0 | 8 | 0 |
| ,, ஐயாசாமி, சமாதானபுரம் | 0 | 4 | 0 |
| ,, G. Y. பொன்னையா, மைலாப்பூர் | 0 | 7 | 0 |
| ,, M. வேதநாயகம் கோபிசெட்டிபாளயம் | 0 | 7 | 0 |
| ,, J. ஜோசப், கால்ஹாட்டி | 1 | 0 | 0 |
| Mrs. Claudia சாமுவேல், பெங்களூர் | 0 | 8 | 0 |
| ,, நல்லையா, பாளையங்கோட்டை | 0 | 4 | 0 |
| Mr. S ஏசுதாசன், ஹல்கிரனோயா | 0 | 8 | 0 |
| ,, S. ஜோசப் டேவிட், மடல்சீம | 0 | 8 | 0 |
| ,, S. ஏசுதாசன், செல்லகுடி | 0 | 7 | 0 |
| ,, அருமைநாயகம், சாத்தூர் | 0 | 7 | 0 |
| ,, பாக்கியமுத்து, ஆலம்பட்டி | 0 | 7 | 0 |
| ,, ஜாண் தேவசகாயம், சென்னை | 1 | 0 | 0 |
| ,, Ges. ஆசீர்வாதம், வாவுனியா | 0 | 14 | 0 |
| ,, G. ஏசுதாசன், மூக்குப்பீரி | 0 | 7 | 0 |
| ,, E தேவதாசன், பாளையங்கோட்டை | 0 | 4 | 0 |
| Miss ஜெல், உதகமண்டலம் | 0 | 8 | 0 |
| ,, M. தாமஸ், கல்குத்தா | 0 | 7 | 0 |
| Mr. N S பொன்னையா, பாளையங்கோட்டை | 0 | 4 | 0 |
| ,, M. முத்துசாமி, செந்தசிந்தலா | 0 | 10 | 0 |
| Rev A பாக்கியநாதன், பிண்டுலா | 0 | 7 | 0 |
| Mr P. D. ஜாண், ஹல்கிரனோயா | 0 | 7 | 0 |
| ,, வெநாயகம், கொளும்பு | 0 | 8 | 0 |
| ,, M. ஞானசுந்தரம், மல்காணகிரி | 0 | 13 | 0 |
| ,, உல்பிரட் ஹென்சிரி | 1 | 0 | 0 |
| ,, சோமசுந்தரம் | 0 | 8 | 0 |
| ,, D V கந்தசாமி | 0 | 14 | 0 |
| ,, Y. சாமுவேல், மாட்டுப்பட்டி | 6 | 2 | 0 |

Printed at the Church Mission Press, Palamcottah and Published by the Christian Brotherhood Association.

409

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 1914 MADRAS

April, 1914. Registered No. M. 163.

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

" என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." (யோவான் 7: 38)

Vol. XV ஏப்ரல்மீ 1914

## 'என்னைத் தொடாதே.'

இயேசு அவளை நோக்கி: என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை. நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கும் என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு என்றார் யோவான். 23: 17.

'என்னைத் தொடாதே' என்று இயேசுசுவாமி தமது ஊழியகாலம் முழுவதிலும் ஒருக்காலும் சொன்னதில்லை. எண்ணிறந்தபேர் தம்மைத் தொடும்படிக்கு அக்காலத்தில் அவர் இடங்கொடுத்தார். அவரைத் தொட்டு அநேகர் சொஸ்தமடைந்ததுண்டு. ஆனால் உயிர்த்தெழுந்தநாளின் அதிகாலையிலேயே தமக்கு அருமையானவர்கள்முதலாய் இனிமேல் தம்மைத் தொடக்கூடாதென்று அவர் கட்டளை கொடுத்தார். இதிலே மகா முக்கியமான அர்த்தம் உண்டு. அதை எல்லாக் கிறிஸ்தவர்களும் திட்டமாய் அறியவேண்டியது அவசியம்.

முதலாவது, முன்னிருந்த கிறிஸ்துவாக இனிமேல் அவரை எண்ணக்கூடாது. முன்னே அவர் மாம்சத்தில் வெளிப்பட்ட கிறிஸ்துவாக இருந்தார். இப்போது அவர் ஜன்ம சரீரத்தை அல்ல, ஆவிக்குரிய சரீரத்தை உடைய கிறிஸ்துவாக இருக்கிறார். ஆதலால் இனிமேல் மாம்சத்தின்படி அவரை அறியவும், மாம்சத்தின்படி அவரோடு ஐக்கியப்படவும் முடியாது. பரிசுத்த பவுலும் இப்படியே போதிக்கிறார். 'இதுமுதற்கொண்டு நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம். நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்

‘படி அறியோம்’ என்று அவர் சொல்லுகிறார் 2 கொரி. 5: 15. கொஞ்சக்காலம் அவர் மாம்சத்தில் வெளிப்பட்டிருந்தார். அது நிலையானதல்ல, மாறிப்போகிற ஒரு அனுபவம். வானத்திலிருந்து வந்த கர்த்தர் என்பதே அவருடைய மெய்யான நாமம். கர்த்தராக அவர் வானத்துக்கு ஏறிப்போய், பிதாவோடு வீற்றிருப்பதே அவருக்குரிய சரியான இடம். அங்கே வீற்றிருக்கையில் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் அவருக்கு உண்டு. உலகத்தின் பாவத்தைச் சுமக்கும்படி அவர் பூமிக்கு வந்திருந்த சொற்பக்காலத்தில் அவரை அறிந்த அறிவு சரியான அறிவல்ல. பாவத்தைச் சுமந்து மரித்து உயிர்த்தபின்பு, அவரை வானத்துக்குரிய கர்த்தராகவே மதிக்கவேண்டும். தேவ சிம்மாசனத்தில் வீற்றிருக்கிற ஆண்டவராகவே அவரைக் காணவேண்டும். ‘அவர் பரலோகத்துக்குப்போய், தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார். தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது’ 1 பேதுரு. 3: 22. ‘சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது.’ சகல அதிகாரத்தையுமுடைய ஆண்டவராக அவர் உயிர்த்தெழுந்து வந்திருக்கிறார். ஆதலால் அவரைப்பற்றி முன்னிருந்த அறிவு போதாது. உயிர்த்தெழுந்த இரட்சகராக இப்போது அவரை அறியவேண்டும். உயிர்த்தெழுந்த அவரைச் சரியானபடி அறிந்தால்தான், அவரைச் சரியானபடி கிட்டிச்சேரும் வழியையும் அறியலாம்.

இரண்டாவது, முன்னான முறைப்படி இனிமேல் அவரைக் கிட்டிச்சேரக்கூடாது. முன்னே எவரும் அவரண்டை போகலாம். யாவரும் அவரைத் தொடலாம். அவருக்குப் பிரியமானவன் அவருடைய திருமார்பிலும் முதலாய்ச் சாய்ந்துகொள்ளலாம். அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்ல என்றும், கர்த்தராகிய தம்மை நாம் தடவியாகிலும் கண்டுபிடிக்கலாம் என்றும் காட்டும்படிக்கு முன்னே அவர் அப்படி இடங்கொடுத்தார். ஆனால் இப்போதோ மகா உன்னதமானவராயிருக்கிறார். இப்போதும் நாம் அவரை இடைவிடாமல் கிட்டிச்சேரலாம். ஆனால் முன்போல மாம்சமுறையாயல்ல, மேலான முறையாய்த் தேடவேண்டும். உன்னதமான அவரைப் பயபக்தியாய் நாம் கிட்டிச்சேரவேண்டும். ஸ்திரீகள் செய்தபடி பயபக்தியில்லாமல் கிட்டிச்சேருவது சரியல்ல. சீஷர்கள் கலிலேயாவில் கண்டபோது செய்தபடி சாஷ்டாங்கமாய் விழுந்து பணிந்துகொள்வதே உயிர்த்தெழுந்த எஜமானுக்கேற்ற புதிய முறை. இயேசுவின் நாமத்தை எளிதாய் வீணிலே வழங்குகிறவர்களும், இயேசுவின் சமுகத்தில் பயபக்தியின்றி துணிந்து செல்லுகிறவர்களும் இக்காலத்திலும் அநேகர் உண்டு. அவர்களை அவர் தம்மிடத்தில் வரவிடுவதில்லை. ‘என்னைத் தொடாதே’ என்று அவர்களைப்பார்த்து அவர் சொல்லிவிடுவார். இப்படிப்பட்ட தாழ்வான முறை ஒழிந்துபோகவேண்டும். ஆவிக்குரிய முறை ஆரம்பிக்கவேண்டும். உயிர்த்தெழுந்த நாளிலேயே இப்புதுமுறை ஆரம்பிக்கவேண்டும்.



ஆதலால் ‘என்னைத் தொடாதே’ என்று ஆண்டவர் சொல்லுகிறார். உயிர்த்தெழுந்து, மகத்துவமானவருடைய சிங்காசனத்தில் வீற்றிருக்கிற தேவகுமாரனை ஆவிக்குரிய முறைப்படி விசுவாசத்தோடும், பயபக்தியோடும் கிட்டிச்சேரப் பழகுகிறவர்கள் பாக்கியவான்கள்.

மூன்றாவது, முன்னான அளவுப்படி இனிமேல் அவரிடமிருந்து ஆசீர்வாதங்களைத் தேடக்கூடாது. மனிதர் முன்னே அவரிடமிருந்து பெரிதான ஆசீர்வாதங்களைப் பெற்றார்கள்; அவர் சரீரப்பிரகாரமாய் நம்மோடு இராதபடியால், இக்காலத்தில் நாம் அவரிடமிருந்து அப்படிப்பட்ட பெரிய ஆசீர்வாதங்களைப் பெறமுடியாதென்று நாம் எண்ணுகிறோம். காரியம் அப்படியல்ல. நான் போகிறது உங்களுக்கு நலமாயிருக்கும் என்று அவர் தாமே சொன்னது மற்றப்படி மெய்யாயிருக்கமாட்டாது. சரீரத்தில் இருந்தபோது அவர் ஒரேநேரத்தில் எல்லா இடங்களிலும் இருக்கவில்லை. அவர் இருந்த சொற்ப இடத்திலுள்ளவர்களுக்கு மாத்திரம் அவரால் நன்மை கிடைத்தது. இக்காலத்திலேயோ தமது ஆவியானவர் மூலமாய் அவர் எங்கும் இருக்கிறார். ஆவியானவர் மூலமாய் எல்லா இடங்களிலும் சகல காரியத்தையும் நடப்பிக்க அவர் வல்லவராயிருக்கிறார். இயேசுவானவர் சரீரத்திலிருந்த காலத்தில் செய்த முறைப்படி ஆவியானவர் சகலத்தையும் செய்வார். அவைகளைவிட மேலான காரியங்களையும் அவர் செய்வார். நாம் எவைகளுக்காக விசுவாசிக்கிறோமோ அவைகளெல்லாம் நமக்கு நடக்கும். எந்த அளவாய் விசுவாசிக்கிறோமோ அவ்வளவு பலமாய் சகலமும் நடக்கும். அவர் பூமியிலிருக்கையில் நடப்பித்தவைகளெல்லாம் அவருடைய வல்லமையின் அளவைக் காட்டுகிறது. வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் அவருக்கு இருக்கிறதென்பதை அது உறுதிப்படுத்துகிறது. பழைய முறைப்படி அவரைத் தொடுகிறவர்கள் இதையெல்லாம் அறியமாட்டார்கள். புதிய முறைப்படி ஆவியானவரால் நடத்தப்பட்டு அவரைக் கிட்டிச்சேருகிறவர்கள் மாத்திரம் இவ்வித மேலான ஆசீர்வாதங்களை அனுபவிப்பார்கள்.

## ‘தெபொராளாகிய நான் இஸ்ரவேலிலே தாயாக எழும்புமளவும்.’

(நியா. 5: 7).

தெபோராள், ஸ்திரீகளுக்குள் சிறந்த ஓர் மாது என்று சொல்லலாம். ஏனெனில் அவள் காலத்தில் இஸ்ரவேலர் தேவனைவிட்டுப் பின்வாங்கிப்போன பாவத்தால், கானானியரால் மிகவும் நெருக்கப்பட்டார்கள். அவளோ, மெய்த்தேவனாகிய யெகோவாவை அறிந்து ஆராதித்துவந்தாள். மற்ற

ஜனங்களுக்கு மார்க்கவிஷயமாக சிறந்த முன்மாதிரியாயிருந்தாள். ஒரு தேசத்தைக் கட்டியாளும் நியாயாதிபதியாக அவள் பெற்றிருந்த புகழ்ச்சியைப் பார்க்கிலும் தேவபக்தியுள்ள உத்தமியாகவிருந்தது பெரிய புகழ்ச்சியே. ஒரு பெருமாட்டியாக அல்லது ஓர் அரசியாக எண்ணப்படுவதைப்பார்க்கிலும், சரியான ஸ்திரீயாக மதிக்கப்படுவது நலமே. ஒருவன் ராஜாவாக அல்லது பிரபுவாக இருப்பதைவிட சரியான மனுஷனாக நடந்துகொள்வது புகழப்படத்தக்க காரியமே. தெபொராள் என்ற வார்த்தைக்கு தேனீ என்றர்த்தம்.

தெபொராள் சிறந்த ஸ்திரீயாக இருந்தது மாத்திரமல்ல, ஓர் நல்ல மனைவியாகவும் இருந்தாள். லபிதோத்தின் மனைவி லபிதோத் என்ற தன் புருஷனுக்கு எல்லா விஷயத்திலும் பதிவிரதாபத்தினியாக நடந்துகொண்டாள். இப்பேர்ப்பட்ட மனைவி அவனுக்கு இல்லாதிருந்தால், அவனுடைய பெயர் வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கவேமாட்டாது. அவனுடைய கற்பையும் உத்தமமுமான மனைவி வரம்பெற்றவளாக ஓர் ஜாதியை முன்னின்று திறமாக நடத்திக்கொண்டுபோகையில், அவளுடைய புருஷனாகிய லபிதோத்தும் தன்னுடைய மனைவியின் வீரச்செய்கைகளைக் கண்ணுற்று, மற்றவர்களைப்போல தானும் சகல விஷயங்களிலும் அவளைப் பின்பற்றி நடந்துகொண்டான். தெபொராள் ஒரு பக்தியுள்ள ஸ்திரீயும் நல்ல மனைவியுமாக இருந்ததுமாத்திரமல்ல இஸ்ரவேலிலே மகிமைபெற்ற தாயாகவும் இருந்தாள். தெபொராளாகிய நான் இஸ்ரவேலிலே தாயாக எழும்புமளவும்' (நியா. 5: 7). அவள் ஒரு தீர்க்கதரிசியாகவுமிருந்தாள். ஜனங்களுக்குத் தான் சொன்ன சகல செய்திகளும் தேவனிடத்திலிருந்து நேரே பெற்றுக்கொண்டவை. அவள் தேவனோடே வசித்துவந்தபடியால், சகல ஆலோசனைகளையும் அதிகாரத்தோடே பேசிவந்தாள். தேவ செய்தியை, தேவன் விரும்புகிற முறையாகவும் தேவவல்லமை பெற்றும், தேவ நாம மகிமைக்கேதுவாகவும் சொல்லிவந்தாள். தேவ செய்தியை மற்றவர்களுக்குச் சொல்ல விரும்பும் எவரானாலும், அந்த செய்தியை கலப்பாய்ப் பேசாமலும், அலங்கார வார்த்தைகளால் சிறப்பிக்காமலும், சமயத்திற்குத் தக்கதாக மாறுதல்பண்ணாமலும், தங்களுக்குக் கொடுக்கப்பட்டபடியே ஜனங்களுக்குப் போதித்துவிட்டு, பின்னால் வரும் பலன்களுக்காக தேவனையே எதிர்பார்க்கவேண்டும்.

தெபொராள் தீர்க்கதரிசியாக விருந்ததுமாத்திரமல்ல, நியாயாதிபதியாகவும் இருந்தாள். அது மிகக் கஷ்டமும் உத்தரவாதமுமான வேலை. அவள் 'பேரீச்சமரத்தின் கீழே' குடியிருந்து இஸ்ரவேலை நியாயம் விசாரித்தாள் என்று வாசிக்கிறோம் (நியா. 4: 45) இஸ்ரவேலருக்கும் அவர்களை ஒடுக்கி வந்த கானானியருடைய ராஜாவாகிய யாபீனுக்கும் ஓர் யுத்தம் ஆரம்பித்தபொழுது, தனக்கு உதவியாக பாராக்கை தளகர்த்தனாக ஏற்படுத்தினாள்



அவனோ அந்த உத்தியோகத்தை ஒப்புக்கொள்ள சற்று தாமதித்தான். அவள் மறுபடியும் அவனை ஏவினபொழுது, 'நீ என்னோடே கூட வந்தால் போவேன்; என்னோடே கூட வராவிட்டால், நான் போகமாட்டேன்' (நியாய. 4: 8) என்று சொல்லிவிட்டான். பின்பு தெபொராளும் அவனோடே கூடப்போனாள். பாராக் தைரியமடைந்து யுத்தஞ்செய்தான். காரியம் ஜெயமாகமுடிந்தது. கர்த்தருடைய சேனையில் முன்நின்று நடத்த தெபொராளைப்போலொத்த உத்தம வீரர்களும் பாராக்கைப்போலொத்த பின்செல்லும் மனுஷரும் வேண்டும்.

அநேக நல் விஷயங்களை முன்னின்று நடத்தும் முகாமைக்காரரான பெரியோரும், மேற்சொன்ன தாயாகிய தெபொராளிடத்தில் காணப்பட்ட பரிசுத்தமும், அன்பும், நன்மைசெய்கிற சுபாவமும் ஆகிய நல்ல லக்ஷணங்களை அணிந்துகொள்வார்களானால், திறமையான காரியக்காரரும், தேசாபிமானிகளும், குணபூஷணமுமுள்ளவர்களாவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. திருச்சபைச் சரித்திரத்திலானாலும் சரி, தேச சரித்திரத்திலானாலும் சரி, தாயடைவான லக்ஷணமே முன்னின்று நடத்துவோரிடத்தில் இருக்க வேண்டியது. குடும்பத்தில் தாயே விசேஷித்தவள். திருச்சபையிலும் தேச அரசாட்சியிலும், உலக முழுவதிலும் தாயடைவான சுபாவமுள்ள பெரியோர் இருப்பார்களானால் சத்தியமும் நியாயமும் நிலைபெறும். உலகத்தில் மற்றெல்லாச் செல்வாக்குகளால் உண்டாயிருக்கும் நன்மைகளைப் பார்க்கிலும், தேவ பக்தியுள்ள ஓர் தாயின் செல்வாக்கால் பிறக்கும் நன்மைகளே அனந்தம்

ஒருநாள் பள்ளிக்கூடமொன்றில், ஒரு உபாத்தியாயர் பிள்ளைகளுக்குப் போதிக்கையில் 'ஓர் நேர்மையான மனுஷன் தேவனுடைய சிறந்த கிரியையாயிருக்கிறான்' என்று பேசினபோது, அந்த வகுப்பிலுள்ள பிள்ளைகளில் ஒரு பையன் எழும்பிநின்று, உபாத்தியாயருக்கு நேரே தன் கையை நீட்டி, 'அப்படியல்ல ஐயா, என் தாயார்தான் தேவன் சிருஷ்டித்தவர்களில் சிறந்தவர்கள்' என்று சொன்னானாம். மெய்யாகவே அந்தச் சிறுவன் சொன்னது சரி. தன் தாயைப்பற்றிய மேலான எண்ணத்தினாலே பையன் அவ்விதமாய்ச்சொன்னான். அநேக நல்ல மனுஷர்களுடைய ஜீவிய சரித்திரங்களை வாசித்துத் தியானிக்கும்பொழுது, அவர்களிடத்தில் காணப்பட்ட நற்குணங்கள் .அவர்களுடைய நல்ல தாய்மாரைப்பற்றினதாகவே பார்க்கிறோம் பெஞ்யமீன் வெஸ்ற் என்பவர் சிறுவனாயிருக்கும்போது, ஓர் சமயத்தில் தமது சின்னத்தங்கையின் சாயலை ஒரு கடுதாசியில் கண்டமட்டும் கிறுக்கி படம் வரைந்திருந்தாராம். அவர் தாயார் அதைப் பார்த்தவுடனே, தன் மகனை ஆசையோடு கையிலெடுத்து, மனம் உகந்து முத்தமிட்டு என் அருமைப்பிள்ளாய்! நீ பெரியவனாகும்போது முதற்தரமான சித்திரக்காரனாவாய்' என்று சொல்லி முன்னறிவித்தபடியே, உலகத்தில்

பிரக்கியாதிபெற்ற சித்திரக்காரர்களில் வெஸ்ற் என்பவரும் ஒருவரானார், தான் இவ்வளவு தேறின மனுஷனானதற்கு காரணம், தமது அருமைத் தாய் தமது இரு கன்னங்களிலும் கொடுத்த அன்பின் முத்தமே என்று அடிக்கடி சொல்வாராம்.

கிறிஸ்துவுக்காக பலரை ஆதாயம்பண்ண விரும்புகிறவர்கள், தாங்கள் யாரை ஆதாயம்பண்ண விரும்புகிறார்களோ, அவர்களுடைய பக்தியுள்ள தாய்மாரை முன்னிறுத்திப்பேசுவதினால், குணப்படாத சிறியோரையும் பெரியோரையும் கிறிஸ்துவண்டை நடத்தலாம். எப்படியென்றால், விசேஷித்த மிஷன்கூட்டங்கள் நடந்த ஓர் இடத்திற்கு வெகு ஆத்திரமாய்ப் புறப்பட்டுப்போன ஒரு போதகர், கப்பல் வேலையாட்களில் ஒருவனைக் கண்டு, அவன் அருகில் போய் நின்று, இன்று இரவு நடக்கப்போகிற விசேஷித்த மிஷன் கூட்டத்திற்கு என்னோடே கூட வருவாயா? என்று கேட்டார். உடனே அந்த மனுஷன் 'ஓ! எனக்கு மிஷன் கூட்டங்களைப் பற்றிக் கவையில்லை' என்று கோபதாபமாய்ச்சொல்லி மறுத்துவிட்டான். இதைக்கேட்ட போதகர் சற்று தளர்ச்சியடைந்தவராய்க் கொஞ்ச தூரம் போகவே அவர் மனதில் ஓர் நல்ல யோசனை தட்டுப்பட்டது; அதாவது அந்த முரட்டு மனுஷனிடத்தில் இனி அவன் தாயைப்பற்றிப்பேசியாவது, கூட்டத்துக்கு அழைத்துப் பார்ப்போம் என்று நினைத்து மறுபடியும் அந்த மனுஷனண்டை வந்து மிகுந்த பரிதாபத்தோடு, 'அப்பா! நான் உன்னைக் கூட்டத்துக்கு வரவேண்டுமென்று அழைக்கிற சமயத்தில் உன் அன்புள்ள தாயார் உன் பக்கத்தில் இருந்திருப்பாளானால், அவள் என்ன சொல்லியிருப்பாள் என்று நினைக்கிறாய்? இப்படிப்பட்ட விசேஷித்த கூட்டத்துக்கு நீயும் போ, நானும் போகிறேன் என்று சொல்லியிருப்பாளல்லவா?' என்று போதகர் உள்ளங்கனிந்து சொல்லவே, சுமார் 60 வயதுள்ள அந்த துஷ்ட மனிதன் மறுபேச்சுப்பேசாமல், போதகரோடு கூடப்போய், அந்த இரவில் நடந்த கூட்டத்திலேயே தன்னை அருள்நாதருக்கு ஒப்புவித்தான். ஸ்கொத்லாந்து தேசத்தில் எழும்பின பக்தர்களில் விசேஷித்தவரான ஜான் நாக்ஸ் என்பவருடைய தாய் அவருடைய இளம்பிராயத்தில் அவருக்காகச்செய்த ஜெபம் அவருடைய மனதை மாற்றும் கருவியாயிருந்தது. ஆகவே உத்தமரான பெரியோருடைய முன்மாதிரியைக் கவனித்துக்கொள்வது நலம். தெபொராளைப்போலொத்த பெரியோரை எழுப்பும்படி கர்த்தரை நோக்கி ஜெபிப்போமாக.



## 'எங்கள் விசுவாசத்தைவர்த்திக்கப்பண்ணவேண்டும்'

லூக். 17: 5.

நமது ரட்சகருடைய அப்போஸ்தலருக்குள்ளும் நமக்குள் காணப்படுகிற சில பெலவீனங்கள் இருந்ததென்பதை நாலு சுவிசேஷங்களிலும் காணலாம். இந்தப்பெலவீனங்களிலொன்று தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்ற வாக்குவாதம். இதிலிருந்து உற்பத்தியாகக்கூடிய கேள்விகளிலொன்றை மத். 18: 1-ல் பார்க்கலாம் இந்த வாக்கியத்திலடங்கிய கேள்வியையும் இதின் சம்பந்தமாகவே அப்போஸ்தலர் கேட்டிருக்கலாம். நமக்குள்ளும் பெலத்த விசுவாசிகளாயிருந்து ஏராளமான அற்புதங்களைச் செய்யவேண்டுமென்ற ஆசை அநேகரைப்பிடித்திருக்கிறது. ஆனாலும் மலைகளைப் பேர்க்கத்தக்கவிசுவாசமும் பிரயோஜனமற்றதாயிருக்கக்கூடுமென்று வேதத்தில் சொல்லியிருப்பதைப் பாருங்கள் (1 கொ. 13: 2)

அப்படியானால் நமது கடமை என்ன? இதற்கு உத்தரவாக நமது வாக்கியத்திலடங்கிய கேள்விக்கு நமது ரட்சகர் சொன்ன பிரதி யுத்தரத்தையும் (லூக். 17: 5—10) பவுல் அப்போஸ்தலன் மூலமாய்க் கர்த்தர் வெளிப்படுத்தியிருக்கிற வேறு சில காரியங்களையும் சிந்திப்போம் (ரோ 12: 3—8. 1 கொ. 7: 7. 12: 28—31)

மேலே காட்டிய வசனங்களைக் கவனித்துப் பார்க்கையில் சில அருமையான சத்தியங்கள் நமக்கு வெளிப்படுகிறது:

1. விசுவாசத்தையும், வரங்களையும், வேலைகளையும் கர்த்தர் எல்லாருக்கும் ஒன்றுபோல கொடாமல் அவரவருடைய திறமைக்குத்தக்கதாக மத் 25: 15) வெவ்வேறு அளவாகப் பகிர்ந்து கொடுத்திருக்கிறார். அது ஓரே சரீரத்தில் அநேக அவயவங்களும், அவயவங்கள் ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறான வேலைகளும் இருப்பதுபோலிருக்கிறது. ஆதலால் கிறிஸ்துவின் சரீரமாகியசபையில் தேவன் நம்மொவ்வொருவருக்கும் தனித்தனியே குறித்திருக்கிற இடம் எது என்று விசாரிப்பதே நமது கடமை. இதை மறந்து நம்மில் அநேகர் பிழைப்புக்கடுத்த கவலைகளிலும், பொருள் தேடும் ஆசையிலும், பேர் பிரஸ்தாபத்தை விரும்புவதிலும் நாட்களைப் பின்னிட்டு வருகிறோம். சிலகாலம் கிறிஸ்தவனாயிருந்து மறுதலித்துப்போன ஒருவரிடத்தில் அவர் மறுதலித்துப் போன காரணம் என்னவென்று நான் கேட்ட போது அவர்'மாற்கு 16:17, 18ல் விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்கள் சொல்லப்பட்டிருக்க, என்மூலமாய் அவைகள் நடவாதபடியால் மறுதலித்துவிட்டேன்' என்றார். ஐயோ பாவம்! தனக்குக் குறிக்கப்பட்ட இடம் இன்னதென்று அறியாமல் போனார். ஆனாலும் அற்புதங்கள் இக்காலத்தில் நடப்பது கூடாதோ என்று கேட்டால் கூடாதென்று நான்

சொல்லுகிறதில்லை. இக்காலத்திலும் அற்புதங்களைச்செய்கிறவர்கள் உண்டு. அவர்களில் ஒரு வகுப்பார் தேவனுக்குப் பிரியமானவர்கள் (1 கொ 12: 28. லூக் 9: 49, 50). மற்றொரு வகுப்பார் அவருக்குப் பிரியமில்லாதவர்கள் (மத் 7: 22, 23) கிறிஸ்து சபையை மொத்தமாய் நாம் பார்க்கும்போது அற்புதங்கள் நடந்துவரும் இடங்களிலும் தப்பிதம் உண்டு; அற்புதங்கள் நடவாத குறைவோ இதிலும் அதிகம். ஆனாலும் நமது கடமை என்ன? தேவன் நமக்குப் பகிர்ந்து கொடுக்கச் சித்தமாயிருக்கிற வரம் எது என்று கண்டுபிடிப்பதே. அவர் கொடுக்கிற வரங்களில் அற்புதங்கள், பாஷைகள் தீர்க்கதரிசனம் முதலிய வரங்கள் மாத்திரமல்ல, ஊழியஞ்செய்தல், போதித்தல், பகிர்ந்து கொடுத்தல், முதலாளி ஸ்தானம், இரக்கம் செய்தல் முதலியவைகளும் வரங்கள் என்றே சொல்லப்பட்டிருக்கிறது (ரோ 12: 6—8). ஆதலால் ஒருவரை யொருவர் அற்பமாய் நினைக்கலாகாது (1 கொ 4: 7). நாம் பெற்ற வரங்களுக்குத் தக்கதாய்க் கணக்கு ஒப்புவிக்க வேண்டுமென்பதே நமது முக்கிய நோக்கமாயிருக்கவேண்டும்.

2. தேவன் நம்மில் அவரவருக்குப் பகிர்ந்த அளவான விசுவாசத்தையும் வரங்களையும் வேலையையும் பெற்றுக்கொள்வது எப்படியென்று கவனிப்போம். நமது வாக்கியத்திலடங்கிய கேள்விக்கு ஆண்டவர் சொன்ன உத்தரவே இதற்கு முக்கியமான பிரமாணம். 'உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் செய்தபின்பு நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமையை மாத்திரம் செய்தோமென்று சொல்லுங்கள்' (லூக் 17: 10). இக்காலத்தில் உலகத்தின் பல பாகங்களிலும் சன்மார்க்கத்துக்கும் கிறிஸ்துவைப்பற்றும் அறிவுக்கும் சம்பந்தமில்லாத விசுவாசத்தை விருத்திபண்ணவும், அதன் மூலமாய்ப் பெரிய காரியங்களைச் செய்யவும் அநேகர் முயற்சிக்கிறார்கள். கிறிஸ்தவர்களிலும் சிலர் அந்நிய பாஷை பேசும் வரம், அல்லது வேறு வரம் தங்களுக்குவேண்டுமென்று தேவனிடத்தில் குறித்துக்கேட்டு சங் 78: 29—31 வரைக்குமுள்ள காரியம் தங்கள் ஜீவியத்தில் நிறைவேறப் பெற்றிருக்கிறார்கள். நமது கடமையோ தெளிவாயிருக்கிறது. கர்த்தராகிய இயேசுவின் கிருபையால் நம்முடைய பாவம் மன்னிக்கப்பட்டதென்று விசுவாசிப்பதும், எல்லா மனுஷருக்காகவும் ஜெப தோத்திரங்களைப் பண்ணுவதும், தேவகற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதால் பரிசுத்த ஆவியைப் பெற்று (அப் 5: 32). ஆவியின் கனிகளைக் கொடுப்பதுமே நாம் செய்யவேண்டிய காரியம். முழு இருதயத்தோடும் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தால் எப்படியாவது அவர் நமக்குக் குறிக்கப்பட்ட இடத்தில் நம்மைச் சேர்ப்பார்.

பாவத்தினால் மெய் விசுவாசம் சாகிறது. கீழ்ப்படிதலால் அது பெலனடைகிறது. இந்தச் சத்தியத்தை வேதத்தின் பல இடங்களில் நாம் காணலாம். யோ. 16: 9. 'அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே



பாவத்தைக் குறித்தும்' ஒருவன் எவ்வளவாய் மனம் சம்மதித்துப் பாவம் செய்கிறானோ அவ்வளவாய் இயேசுவை விசுவாசியாமலிருக்கிறானென்பது கருத்து. 'பாவஞ்செய்கிறவன் அவரைக் காணவுமில்லை; அறியவுமில்லை' எந்தப் பாவமும் மெய் விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடத்தக்கது. அவைகளில் சிலவற்றை வேதத்தில் வெகு திட்டமாய்க் குறிப்பிட்டிருக்கிறது. உதாரணமாக யோ. 5: 44, 47; 3: 18, 19; 2 தெச. 2: 10—12; 1 தீமோ. 1: 19; 4: 1; 5: 8; 6: 10, 21. வாசித்துப்பார்க்க. புறமதஸ்தருடைய சன்மார்க்க ஒழுங்கையல்ல, புதிய ஏற்பாட்டில் காட்டிய சன்மார்க்க ஒழுங்கை ஒருவன் கைக்கொண்டு நடந்தால் அவன் பாவநாசராகிய கிறிஸ்துவினிடத்துக்கு வழிநடத்தப்படுவான். அவர் அவனுக்கு விசுவாசத்தையும் வரங்களையும் வேலையையும் தக்கபடி பகிர்ந்து கொடுத்துத் தமது அவயவமாக அவனைச் சேர்த்துக்கொள்ளுவார். மேலும் ஒருவன் எந்த மார்க்கத்தானாயிருந்தாலும் தேவனுடைய சித்தத்தின்படி செய்யவேண்டுமென்ற நோக்கம் அவனுக்குள் இருந்தால் அவன் கிறிஸ்துமார்க்கமே சத்தியமென்று அறிந்துகொள்வான் (யோ. 7: 17). ஆதலால் தேவனுடைய மார்க்கம் ராஜபாதை. விசுவாசத்தையாவது வரங்களையாவது அடைவதற்குக் குறுக்கு வழிகளும் உபாயங்களும் கிடையாது. ராஜபாதையில் நடப்பவன் பேதையானாலும் இடறி விழுவதில்லை. ராஜபாதையில் நடவுங்கள் என்றால் தேவனுக்குக் கீழ்ப்படியுங்கள் என்று அர்த்தம். இப்படிச் செய்தால் தேவன் தமக்குச் சித்தமானபடி விசுவாசத்தை வர்த்திக்கச்செய்வார்.

# வேதாகம ஆராய்ச்சி

கனம் யோசேப்பு W. கெம்ப் ஐயரவர்களால் நடத்தப்படும்
வேதாகமப் பாடமுறை.

## 7-ம் பாடம்.

### வேதாகமத்திற்குரிய திவ்ய அதிகாரம் (வேதாகமக் கனோன்).

'கனோன்' என்ற பதம் 'மாதிரி' அல்லது 'சட்டம்' என்று பொருள்படும். திருச்சபை, 'கனோன்' என்று சொல்வதில் இருவித கருத்துகள் உண்டு. ஒன்று, வேதாகமத்திற்குரிய திவ்விய அதிகாரமென்றும், மற்றொன்று நமது விசுவாசத்துக்கும் நடக்கைக்கும் சட்டமென்றும் ஆகும். பழைய புதிய திருப்புதல்களில் அடங்கிய பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாட்டிலுள்ள 66 ஆகமங்களே திவ்ய அதிகாரமுள்ளவை. அப்போக்கிரிப்பா அல்லது சந்தேக ஆகமங்கள் இதில் சேரமாட்டாது. 'கனோன்' என்ற வார்த்தையின் இரண்டாவது அர்த்தம், நாம் மேற்சொன்ன பழைய

ஏற்பாடு, புதிய ஏற்பாட்டின் ஆகமங்கள் தேவாவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டு விசுவாசத்துக்கும் நடக்கைக்குமுரிய சட்டமாக அருளப்பட்டிருக்கிறது என்பதே கலா. 6: 16. பரி. பவுல் அப்போஸ்தலனும் இதே கருத்தாகவே சொல்லுகிறார். பிரமாணம் அல்லது சட்டம் என்கிற வார்த்தை பிலி. 3: 16; 2 கொரி. 10: 13, 15, 16-ல் வருகிறது. திவ்விய அதிகாரம் பெற்று எழுதப்பட்ட பரிசுத்த வேதாகமத்தின் பல பாகங்களை கூட்டிச் சேர்த்திருக்கிற விஷயத்திற்கும், திவ்விய அதிகாரமுள்ளதும் சர்வ சம்மதமாய் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறதுமான ஆகமங்களின் பேர் அட்டவணைக்கும் ‘கனோன்’ என்ற பதத்தை உபயோகிக்கிறதுமுண்டு. ஒரிஜன் என்பவர் ‘அப்போக்கிரிப்பல்’ என்ற பதத்திற்கு எதிராக ‘திவ்ய அதிகாரமுள்ள ஆகமம்’ என்னும் தொடர்மொழியை தமது புஸ்தகங்களில் அடிக்கடி உபயோகிக்கிறார். அப்போக்கிரிப்பா ஆகமங்களைக்கொண்டு யாதொரு உபதேசத்தையும் ரூபிக்க அவைகளை பிரயோகிக்கிறதில்லை.

## வேதாகமத்திற்கு அவசியமான திவ்விய அதிகாரம்.

புதிய ஏற்பாட்டு ஆகமங்களின் திவ்விய அதிகாரத்தைப்பற்றி பிஷப் வெஸ்ற்காட் எழுதியிருக்கிற பிரபந்தத்தில் ‘கனோன்’ என்ற பதத்தைப்பற்றிய சரித்திரம் விபரமாய் எழுதப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலர் சிறையிருப்புக்கு போனகாலம் வரை தேவன் தமது திருச்சித்தத்தை வெளிப்படுத்த சில ஆட்களை வைத்திருந்தார். அக்காலத்தில் இஸ்ரவேலருக்குள்ளிருந்த ஆசாரியரும் தீர்க்கதரிசிகளும் ஆவியினால் நிறைவைப் பெற்று போதித்து வந்தார்கள். இவர்கள் இல்லாத காலத்தில் ஜனங்களுக்குள் பல தப்பறைகளும், மூடபக்தியும் எழும்பினபடியால், அதை நிராகரிக்கவும் ஜனங்களை சரியான பாதையில் நடத்தவும் உண்மையாய் எழுதப்பட்டச் சட்டப்புஸ்தகம் தேவையாயிருந்தது. ஆகவே, வேதாகமமே அந்த விஷயத்தில் ஏற்ற நூலாகயிருந்தது. இது தவிர பல புஸ்தகங்கள் எழுதப்பட்டு, சத்தியம் வேதாகமத்தோடே கலந்துபோகக்கூடியதாயுமிருந்தது. அவைகள் யூதஜாதியின் சரித்திரத்தைக் காட்டுகிற நல்ல புஸ்தகங்களாயிருந்தபோதிலும், தேவாவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட பரிசுத்த வேதாகமத்தோடு சேர்க்கப்படத்தக்கவைகளேயல்ல, ஆதலால் ‘தள்ளுபடி’ (அப்போக்கிரிப்பா) ஆகமங்கள் என்றழைக்கப்படுகின்றன.

## திவ்விய அதிகாரமுள்ள தனித்தனி ஆகமங்கள் கோர்வையாக சேர்க்கப்பட்ட விதம்.

1. பழைய ஏற்பாடு, பல ஆகமங்களும் ஒன்றாய் இணைக்கப்பட்ட முறை நாம் படிப்பதற்கு இன்பமாயிருக்கிறது. யூதர்களால் திவ்விய அதிகாரமுள்ளதென்று ஒப்புக்கொள்ளப்பட்ட எல்லாப் புஸ்தகங்களும் ஒன்றாய் சேர்க்கப்பட்ட முறையே ‘கனோன் உண்டான விதம்’ என்றழைக்கப்படுகிறது. அதே புஸ்தகங்கள் திவ்ய அதிகாரமுள்ளவைகளாக புராட்டஸ்டாண்டு சபைகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.



இப்புஸ்தகங்கள் ஒன்றாய்ச் சேர்க்கப்பட வெகுகாலம் சென்றது. எப்படிச் சேர்க்கப்பட்டது என்று தெளிவாய்ச் சொல்வதும் கஷ்டம். ஆங்கஸ் என்பவர் தாம் வேதாகம சம்பந்தமாய் எழுதிய ஓர் புஸ்தகத்தில் சொல்லுகிறதாவது:—‘இதைப்பற்றிய விசாரணைக்கு ஓர் எல்லையிருக்கவேண்டும்; இவ்வாகமங்கள் ஒவ்வொன்றிற்குமுரிய திவ்விய அதிகாரத்தைக் கண்டுகொள்ளும் வழிஒன்றே விசாரிப்பதுதான் மனுஷருடைய வேலை. சாதாரணமாய் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற புஸ்தகங்கள் ஒவ்வொன்றிற்கு அங்கீகரிப்புக்குப் பாத்திரமான தன்மை இருக்கவே இருக்கிறது. திருச்சபை ஓர் ஆகமத்தை ஒப்புக்கொண்டிருப்பதினால், வேதாகமத்தின் மேன்மைக்கும் அதிகாரத்திற்கும் அது பாத்திரமாக எண்ணப்படவேமாட்டாது. ஆனால் எந்தப் புஸ்தகம் தேவனால் அருளிச் செய்யப்பட்டது என்று ரூபகாரமாகுமோ, அதினால் மாத்திரம் திவ்விய அதிகாரமுள்ளதாக அங்கீகரிக்கப்படும்.

இவ்வாகமங்கள் பாதுகாக்கப்பட்டு நமக்குக் கிடைத்தது எப்படி என்று பார்ப்போம். முந்தின இரண்டாம் தேவாலயம் கட்டப்பட்டு 20 வருஷங்களுக்குப்பின், எஸ்றா, நெகேமியா, ஆகாய், சகரியா, மல்கியா ஆகிய இவர்கள் அடங்கிய ஓர் மகா சபையாலும், பிற்காலத்தில் நீதிமான் என்றழைக்கப்பட்ட சீமோன் என்பவராலும் பழைய ஏற்பாட்டு கனோன் முற்றுப்பெற்றதாக எண்ணுகிறார்கள். நாம் இப்பொழுது வைத்திருக்கிற பழைய ஏற்பாட்டுக் கனோன் மேற்சொன்ன மகா சபையின் (மகா ஜுனகோக்) வேலை என்று அதி பூர்வ யூத கிரந்த கர்த்தாக்கள் தங்கள் நூல்களில் எழுதி சாக்ஷி கொடுத்திருக்கிறார்கள். படிப்படியாய்ச் சேர்க்கப்பட்ட விபரம் பார்ப்போம்:—

### பஞ்சாகமம்.

நியாயப்பிரமாண ஆகமங்களானது, தேவாலயக் கூடாரத்திலே உடன்படிக்கை பெட்டியின் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்தன (உபா. 31: 9, 24, 26).

### சரித்திராகமம்.

யோசுவாவின் புஸ்தகத்திலிருந்து இஸ்ரவேலருக்கு ராஜா ஏற்படுத்தப்பட்டதுவரையுள்ள சரித்திரங்கள் பின்னானகாலத்தில் நியாயப்பிரமாண புஸ்தகத்தோடு சேர்க்கப்பட்டது (யோசு. 24: 26; 1 சாமு. 10: 23). ஆலயம் கட்டப்படும்போது சாலொமோன் ராஜா நியாயப்பிரமாணப் புஸ்தகத்தை ஆலயத்திலே பத்திரப்படுத்திவைத்தான் (2 ராஜா. 22: 8; எசா. 34: 16).

### பாட்டாகமம்.

சாலொமோன் திவ்விய ஏவுதலால் ஏவப்பட்டு சில புஸ்தகங்களை எழுதி, முன் சேர்த்துவைக்கப்பட்டிருந்தவைகளோடு வைத்து வேதாகமத்தை மிகவும் சிறந்ததாக்கினான்.

### தீர்க்கதரிசன ஆகமம்.

சாலொமோனுடைய காலத்திற்குப்பின், யோனா, யோவேல் ஆமோஸ், ஏசாயா, ஓசியா, மீகா, நாகூம், செப்பனியா ஒருவர் பின் ஒருவராய் எழும்பி, சிறையிருப்புக்கு முன் தீர்க்கதரிசனம் உரைத்துவந்தார்கள். அவர்கள் எழுதின தீர்க்கதரிசன புஸ்தகங்களெல்லாம் சேர்ந்து பெரியதாயிற்று. சிறையிருப்புக்குச் சமீபகாலத்திலும், சிறையிருப்பின் காலத்திலும் இருந்த எரேமியா ஒபதியா, ஆபகூக் எசேக்கியேல் தானியேல் தீர்க்கத்தரிசிகளால் எழுதப்பட்ட புஸ்தகங்களும் சிறையிருப்புக்குப் பின்னானகாலத்தில் இருந்த ஆகாய், சகரியா, மல்கியா என்பவர்களுடைய தீர்க்கத்தரிசனப் புஸ்தகங்களும் முந்தினவைகளோடு சேர்க்கப்பட்டது. இவ்விதமாக பழைய ஏற்பாட்டு கனோன் படிப்படியாய் நடந்தது என்று பார்க்கிறோம். இப்படிப்பட்ட புஸ்தகதிரட்டு நமது கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் காலத்திலும் இருந்தது என்று வாசிக்கிறோம் (லூக். 24: 27, 44.

2. புதிய ஏற்பாட்டு கனோன் பழைய ஏற்பாட்டைப்போலவே புதிய ஏற்பாடும் ஒன்றின் பின் ஒன்றாய் கூட்டிச் சேர்க்கப்பட்டவைகள் அப்போஸ்தல அதிகாரமுள்ளதாகவிருந்த புஸ்தகங்களை மாத்திரம் திருச்சபை ஏற்றுக்கொண்டது பரிசுத்த ஆவியின் ஏவுதலால் பரிசுத்த மனிதர்கள் எழுதினதாக ரூபகாரமான புஸ்தகங்கள் எல்லாவற்றையும் பூர்வ சபைகளில் ஒவ்வொன்றும் ஆராய்ந்து, திரட்டிச் சேர்த்ததாக காணப்படுகிறது. இவ்விதமாக புதிய ஏற்பாட்டுப் பிரதிகள் அநேகம் இருந்தது. புதிய ஏற்பாட்டு முக்கிய பாகங்கள் சேர்க்கப்பட்ட காலம் தெரியாது. எப்படியும் அப்போஸ்தலனாகிய யோவானுடைய மரணத்திற்கு சற்று முன் சேர்க்கப்பட்டிருக்கலாம் என்று அநுமானிக்கிறார்கள். விசுவாசத்துக்கும் நடக்கைக்கும் எக்காலத்திலும் வேண்டியதான ஓர் நிலையான சட்டப்புஸ்தகமாக இருப்பதற்காக பிரிவு பிரிவாக இருந்தவைகளைத் திரட்டி "புதிய ஏற்பாடு" என்ற ஒரே பாகமாக்கினார்கள். பழைய ஏற்பாட்டைப்போலவே புதிய ஏற்பாடும் படிப்படியாய் கோர்வையாகச் சேர்க்கப்பட்டவைகளே. கி. பி. 170 முதல் நடந்தேறினது. முதலாவதாக அப்போஸ்தலர்கள் சுவிசேஷ சத்தியங்களை வாய்மொழி சாட்சியாய் பகர்ந்து வந்தார்கள் (மாற். 16: 15; அப். 1: 21, 22; 1 கொரி: 15: 1—10). ஆரம்பத்தில் வாய்மொழி போதனையே போதுமானதாயிருந்தது. பின்



னான காலத்தில் சரியான ஆதாரங்களான எழுத்து ரெக்காடுகள் தேவையாயிற்று. இவ்விதமாக சுவிசேஷங்கள் எழுதப்பட்டது. சபைகளில் நேரிட்ட பல அவசரங்களினிமித்தம் பல இடங்களுக்கும் நிருபங்கள் எழுதப்பட்டு அனுப்பப்படவேண்டியதாயிற்று. ஆகவே புதிய ஏற்பாட்டில் நிருபங்களின் பாகம் வந்தது. எபிரேயருக்கு எழுதின நிருபமும், வெளிப்படுத்தின விசேஷமும் அது எழுதப்பட்டு வெகுகாலத்துக்குப் பின் தான் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் நிருபங்களோடு கூட இவைகளும் நாலாம் நூற்றாண்டின் கடைசியில் தான் ஒப்புக்கொள்ளப்பட்டன.

### அப்போகிரிப்பா ஆகமங்கள்.

கனோனில் சேர்க்கப்படாத புஸ்தகங்களே அப்போகிரிப்பா ஆகமங்கள் என்று சொல்லப்படுகிறது. இப்புஸ்தகங்களுக்குக் கொடுக்கப்பட்ட அப்போக்கிரிபபா என்ற கிரேக்கு வார்த்தைக்கு "மறைவான" என்று அர்த்தம். அவைகளை எழுதினவர்கள் யாரென்று தெரியாதபடியாலும், அந்தப் புஸ்தகங்களின் விஷயமாய் சொல்லப்படும் நியாயங்கள் போலியானவைகளாயுமிருப்பதால் அவ்வித பெயர் வந்தது. 'திவ்ய அதிகாரமுள்ள ஆகமங்களோடு அவைகள் சேர்க்கப்படாவிட்டாலும, பலர் பரிசுத்த வேதாகமத்தோடே சேர்த்துவைத்திருந்தார்கள் என்று கவனிக்கிறோம்:—

1534 வருஷம் முடிவான 'லூத்தருடைய வேதாகமம்' என்றழைக்கப்பட்ட புஸ்தகங்களில் அப்போகிரிப்பா ஆகமங்கள் பழைய ஏற்பாட்டுக்கும் புதிய ஏற்பாட்டுக்கும் இடையில் வைக்கப்பட்டிருந்தது. 'ஜெனிவா வேதாகமம்' கவர்டேல் மத்தேயு, கிரேன்மர் என்பவர்களுடைய வேதாகமத்திலும், பிஷப்ஸ் வேதாகமத்திலும், 1611-ம் வருஷத்து பழைய திருப்புதலிலும் இவைகள் இருந்ததாகப் பார்க்கிறோம். ஆனால் 1629-ம் வருஷத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட திருப்புதலாகிய பழைய திருப்புதலில் அவைகள் சேர்க்கப்படவில்லை. புரோட்டஸ்டாண்டு சபைகள் யாவும் இந்த ஆகமங்களை விசுவாசத்துக்குச் சட்டமாகமாவது, திவ்ய அதிகாரமுள்ளவைகளாகவாவது ஒப்புக்கொள்ளுகிறதேயில்லை. 1648 வருஷ உண்டான வெஸ்றமினிஸ்றர் அறிக்கையில் "அப்போகிரிப்பா ஆகமங்கள் திவ்ய ஏவுதலால் எழுதப்பட்டவைகளுமல்ல திவ்ய அதிகாரமுள்ளவைகளுமல்ல ஆதலால் மனுஷரால் எழுதப்பட்ட புஸ்தகங்களாக மதித்து பிரயோகிக்கலாம்" மென்று தீர்மானித்தார்கள். இவ்வாகமங்களில் 14 புஸ்தகங்களுண்டு சரித்திர சம்பந்தமாய் இப்புஸ்தகங்கள் யூதருடைய நிலமையையும் பழைய ஏற்பாட்டுக்கும் புதிய ஏற்பாட்டுக்கும் இடையிலுள்ள காலத்தில் நிகழ்ந்த யூத சரித்திரத்தையும் தெளிவாய்க் காட்டுகிறது.

## அப்போகிரிப்பா ஆகமங்களின் பெயர் அட்டவணை.

1. எஸ்றுவின் மூன்றும் ஆகமம்.
2. எஸ்றுவின் நான்காம் ஆகமம்.
3. தோபியாவின் ஆகமம்.
4. யூதீதின் ஆகமம்.
5. எஸ்தர் ஆகமத்தின் குறைப்பங்கு.
6. ஞான ஆகமம்
7. சீராக்கின் குமாரன் இயேசுவின் ஆகமம்.
8. பாரூக் தீர்க்கதரிசியின் ஆகமம்.
9. மூன்று வாலிபரின் பாட்டு.
10. சூசன்னாளின் சரித்திரம்.
11. பெல்லையும் வலுசர்ப்பத்தையும் குறித்துச்சொல்லிய ஆகமம்.
12. மனாசேயின் ஜெபம்.
13. மக்கபேயரின் முதலாம் ஆகமம்.
14. மக்கபேயரின் இரண்டாம் ஆகமம்.

---

## "கிறிஸ்துவின் ஆவி."

"கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" ரோமர் 8: 9.

இந்த அதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவரைப்பற்றி நாம் அதிகமாய் வாசிக்கிறோம். அவர் ஜீவனுடைய ஆவியானவர் (2 வா). அவர் மாம்சத்தின் செய்கைகளை அழிக்கிறவர் (13 வா). அவர் தேவனுடைய பிள்ளைகளை வழிநடத்துகிறவர் (14 வா). அவர் புத்திரசுவிகாரத்தின் ஆவியானவர் (15 வா). நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அவர் சாட்சிபகருகிறார் (16 வா). ஜெபம்செய்ய அவர் நமக்கு உதவிசெய்கிறார். கிறிஸ்துவின் ஆவியானவரை ஒப்பிட்டுக் காட்டியிருக்கிற நான்கு பேர்களைப் பார்ப்போம்.

1. பரிசுத்த ஆவியானவர் காற்றுக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறார். காற்றைக் காணமுடியாது; ஆனால் காற்றின் கிரியைகளை எல்லாரும் காணலாம். அதுபோலவே தேவ ஆவியானவருடைய ஆவிக்குரிய கிரியைகளை நாம் காணலாம். பெருமையுள்ள இருதயத்தை அவர் கீழ்ப்படுத்திவிடுகிறார். கடின நெஞ்சை அவர் இளகச்செய்கிறார். புதிய இருதயத்தையும் புதிய ஆவியையும் அவர் கொடுக்கிறார். இவைகள் அவருடைய அமைதலான கிரியைகள். பெந்தேகொஸ்தே நாளில் செய்தபடி, பலத்த காற்றைப்போல ஏராளமான ஜனங்களையும் அவர் ஒரே நேரத்தில் அசைத்துவிடக்கூடும்.



2. பரிசுத்த ஆவியானவர் புறாவுக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறார். உலக ஆரம்பத்தில் அவர் ஜலத்தின்மேல் அசைவாடி ஒழுங்கையும் அழகையும் உண்டுபண்ணினார். அப்படியே தேவ ஆவியானவர் ஒரு இருதயத்தில் பிரவேசிக்கிறபோது சமாதானத்தையும் அன்பையும் அவர் பிறப்பிக்கிறார். புறாவானது சாந்தத்துக்கும் சமாதானத்துக்கும் அமைதலுக்கும் அடையாளமாயிருக்கிறது. பாவத்துக்குப் பின்பு ஒரு ஆத்துமாவுக்கு வரக்கூடிய மகா பெரிய தீமை அமரிக்கையின்மையே என்று ஒரு பெரிய போதகர் சொல்லுகிறார். மரணம்வரைக்கும்கூட தங்கள் ஆத்துமாவை அமைதலின் நிலைமைக்குக் கொண்டுவராத பல கிறிஸ்தவர்கள் உண்டென்று இன்னொருவர் சொல்லுகிகிறார்.

3. பரிசுத்த ஆவியானவர் தைலத்துக்கும் எண்ணெய்க்கும் ஒப்பிடப்பட்டிருக்கிறார். துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தை அவர் கொடுக்கக்கூடும். அவர் தைரியமற்றவர்களுக்குப் பெரிய நம்பிக்கையையும், ஆறுதலற்றவர்களுக்கு ஆனந்த சந்தோஷத்தையும் அவர் கொடுப்பார்.

4. பரிசுத்த ஆவியானவர் முத்திரைக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறார் (எபே. 1: 13). எபேசுவிலே ஏராளமான உத்திரங்கள் விற்கப்படுவதுண்டு. அவைகளை வாங்கிக்கொண்ட மனிதன் தன் முகரை அவைகளுக்கு வைத்து, வண்டிகளில் அவைகளை அனுப்புவான் அப்படியே ஆண்டவருடைய பிள்ளைகள் அவருடைய ஆவியால் முத்திரைபோடப்படுகிறார்கள். அதினால் அவர்கள் ஆண்டவருடைய பிள்ளைகளென்று அறியப்படுகிறார்கள்.

5. பரிசுத்த ஆவியானவர் அக்கினிக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறார். ஆத்துமாவின் பெரிய வியாதி குளிர்ச்சியே என்று ஒருவர் சொல்லுகிறார். நமது பெரிய அவசரம் பணமும், உலக மேன்மையுமல்ல. பரிசுத்த ஆவியின் அபிஷேகமும் அக்கினி நாவுமே நமது பெரிய அவசரம். ஒரு யுத்தத்தில் ஒரு போர்வீரன் காயப்பட்டான். மற்றவர்கள் அவனை கவனிக்கப் போனார்கள். அவனோ, என்னை இழுத்துத் தூர எறிந்துவிட்டு, யுத்தத்துக்கு பீரங்கிகளை உபயோகியுங்கள் என்று சொன்னான். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றால் கிறிஸ்துவின் ஊழியத்தில் நாமும் இவ்வளவு ஆத்திரமுடையவர்களாவோம்.

---

## 16-ம் வருஷ கன்வென்ஷன் கூட்டங்கள் 1914.

டக்கரம்மாள்புரம்—மேய்மீ 25—29. (வைகாசிமீ 12—16).

"உங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளுங்கள்; நாளைக்கு கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார்" யோசுவா 3: 5. இந்த வாக்கியமே ஆவிக்குரிய கூட்டங்களுக்கு ஆதாரம். கர்த்தர் ஒரு சபைக்கு அதிசய கிரியைகளை நடப்பிக்கவேண்டுமானால் அந்தச் சபை தன்னைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளவேண்டும். நாளைக்கு அவர் அதிசய கிரியைகளை நடப்பிக்கவேண்டுமானால், இன்று அந்தச் சபை தன்னைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளவேண்டும். திருநெல்வேலிச் சபைநடுவில் கர்த்தருடைய பலத்த அதிசய கிரியைகள் நடப்பிக்கப்படும்படிக்கு, இந்தச் சபையின் பெரியோரும் இதின் வாழ்வை நாடுகிற யாவரும் ஒன்றுகூடி இந்தச் சபைக்கென்று தங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளவேண்டும். "அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்" என்று சொன்ன அருமை எஜமானின் மாதிரிப்படி, திருநெல்வேலிச் சபைக்காகத் தங்களைப் பரிசுத்தமாக்கிக்கொள்ளுகிறவர்களே இந்தச் சபைக்கு உப்பாயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட வாஞ்சையுள்ள தேவனுடைய பிள்ளைகள் யாவரும் இந்த வருஷத்தின் கூட்டங்களுக்கு வரும்படியாக இயேசு இராஜாவின் திருநாமத்தால் அழைக்கிறோம்.

கர்த்தர் திருநெல்வேலிச் சபையில் நடப்பிக்கவேண்டிய அதிசய கிரியைகள் பல உண்டு. பலமான பாவ உணர்வு, திட்டமான குணப்படுதல், உறுதியான தற்பிரதிஷ்டை, விடாமுயற்சியான ஜெபம், சுயவெறுப்பான ஊழியம் இவைகளே நமக்குள் நடப்பிக்கப்படவேண்டிய அற்புத கிரியைகளில் முக்கியமானவைகள். இவைகளை ஆண்டவர் நமக்காக நடப்பிக்கவேண்டுமானால், இவைகளுக்காகக் கவலைப்படுகிற ஆண்டவருடைய பிள்ளைகள் ஒன்றுகூடி தங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளவேண்டும். எந்நேரமும் ஆண்டவர் அதிசய கிரியைகளைச் செய்யக்கூடியவராயினும், நாம் நம்மைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளும்போதுதான் அவர் அற்புத கிரியைகளை நடப்பிப்பார். கடந்த வருஷம் மேய் மாதத்தில் 300 பேர் சுவாணிக் என்ற இடத்தில் ஒன்றுகூடி, சர்ச் மிஷனெரி சங்கத்துக்காகத் தங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொண்டபோது ஆண்டவர் அந்தச் சங்கத்துக்கு ஒரு லட்சம் பவுனை ஒரே மாதத்தில் கொடுத்தார். திருநெல்வேலிச் சபைக்காகத் தங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ள வாஞ்சிக்கும் 300 பேரை கர்த்தர் இவ்வருஷக் கூட்டத்துக்கு அழைத்துக்கொண்டுவருவாராக.

கூட்டங்களுக்கு வருகிறவர்கள் தங்குவதற்கு ரூ. 375-ல் ஒரு கட்டடமும் கூட்டங்களை நடத்துகிறவர்கள் தங்குவதற்கு ரூ. 125-ல் ஒரு கட்டடமும் இவ்வருஷம் கட்டப்படுகிறது. இவைகளுக்கு உற்சாகமாய்ப் பணச்சகாயம் அனுப்புவிக்கும்படி தேவனுடைய பிள்ளைகளெல்லாரையும் கேட்டுக்கொள்ளுகிறோம். சாதாரண சாப்பாடு பொருந்தாதவர்களுக்குப் போன வருஷ ஏற்பாட்டின்படி விசேஷித்த சாப்பாட்டுக்கும் ஒழுங்குசெய்யப்படும்.

இவ்வருஷக் கூட்டங்களுக்காக ஊக்கமாய் ஜெபிக்கும்படி எல்லாரையும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

கன்வென்ஷன் நடத்துகிற சகோதரர்.

Printed at the Church Mission Press, Palamcottah and Published by the Christian Brotherhood Association.

May, 1914. Registered No. M. 163.

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." (யோவான் 7: 38)

Vol. XV மேமீ 1914

## கிதியோன்

அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கிப் பார்த்து: உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ; நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்றார். நியாயாதிபதிகள். 6: 14.

கிதியோன் தைரியமும் ஜாக்கிரதையுமுள்ள ஓர் வீரன். ஆனால் சில சமயங்களில் அவன் கோழைத்தனமும் காட்டியிருக்கிறான். அவனுடைய தைரியத்துக்கு மூன்று முக்கிய காரணங்களுண்டு.

முதலாவது, தேவன் தன்னோடிருக்கிறாரென்கிற நிச்சயமுள்ளவனாயிருந்தான். தேவன் தமது ஜனங்களைக் கைவிட்டார். சத்துருக்கள் தீடீரென்று வருவார்கள். ஆகையால் சத்துருக்கள் வரும்போது ஒளித்துக்கொள்ளவேண்டுமென்பதுதான் கிதியோனின் இயற்கையான எண்ணம். ஆனால் கிதியோனைத் தேவன் நன்றாய் அறிந்தார். இவ்வித கோழைத்தனமிருந்தபோதிலும் அவனுக்குள் தைரியமும் நம்பிக்கையுமுண்டு என்று கண்டு தமது தூதனை அனுப்பினார். அவர் தரிசனமாகிக் கிதியோனை நோக்கி 'பராக்கிரமசாலியே, கர்த்தர் உன்னோடே இருக்கிறார்' என்றார். கிதியோனும் மீதியானருக்குப் பயந்து ஆலைகளினருகில் கோதுமையைப் போரடித்துக்கொண்டிருந்தான். என்றாலும், கோழையாகிய தன்னைத் தேவன் பலசாலியென்றழைப்பதால் அதுவே தன்னைப்பற்றிய தேவனுடைய எண்ணம் என்று நம்பி எப்படியும் அவருடைய வாக்கின்படியே தேவன் தன்னோடிருப்பாரென்றும் தன்னைப் பராக்கிரமசாலியாக்குவாரென்றும் நிச்சயித்துக்கொண்டான்.

இரண்டாவது, தேவனே தன்னை அழைத்தனுப்புகிறார் என்கிற நிச்சயமுள்ளவனாயிருந்தான். தேவன் தன்னோடிருக்கிறாரென்கிற நிச்சயமுண்டானவுடன் தனக்குண்டான அழைப்பு திவ்ய அழைப்புத்தானோவென்று பரீட்சிக்க விரும்பினான். 'என்னோடே பேசுகிறவர் தேவரீர் தான் என்று எனக்கு ஒரு அடையாளம் காட்டும்' என்றான். ஒரு வெள்ளாட்டுக்குட்டியை ஆயத்தம்பண்ணினான். கர்த்தருடைய தூதனானவர் அதின் இறைச்சியைப் பாறையில் வைக்கச் சொன்னார். அவன் அப்படியே செய்தான். அப்பொழுது அக்கினி எழும்பி எல்லாவற்றையும் பட்சித்துப்போட்டது. கர்த்தருடைய தூதனானவரும் மறைந்துபோனார். தன்னோடே பேசினவர் கர்த்தருடைய தூதன்தானென்று நிச்சயித்துக்கொண்டான். ஆகையால் தேவனே தன்னை அழைத்திருக்கிறார் என்று அறிந்தான்.

மூன்றாவது, தேவனே தன்னை நடத்துகிறார் என்றும் நிச்சயமுள்ளவனாயிருந்தான். தான் நடக்கவேண்டிய விதம் இன்னதென்று தேவன் காட்டினார். அதையும் நிச்சயப்படுத்தும்படி அடையாளம் கேட்டான். மயிருள்ள தோலைக் களத்திலே விரித்து பனி தோலில் மாத்திரம் பெய்திருக்கவும் தரையெல்லாம் காய்ந்திருக்கவும் வேண்டும் என்று கேட்டான். கர்த்தர் அப்படியே செய்தார். மறுநாள் தரையெல்லாம் நனைந்திருக்கவும் தோல் மாத்திரம் காய்ந்திருக்கவும் வேண்டுமென்று கேட்டான். அப்படியுமாயிற்று. ஆகவே தன்னை நடத்துகிறவர் தேவன்தானென்று நிச்சயித்துக்கொண்டு தைரியமாய்க் கிரியை செய்தான். அவனுக்கு மூன்றுவிதமான தைரியம் இருந்தது.

முதலாவது, தன் சொந்தக் குடும்பத்திலேயே தைரியம் காட்டினான். அவனுடைய பெற்றோர், சகோதரர் சகோதரிகள் மத்தியிலிருந்த தைரியம் காட்டினான், இங்கேதான் முதலாவது தைரியம் காட்டவேண்டும். இரவிலே புறப்பட்டு தன் ஊரிலுள்ள விக்கிரகங்களையெல்லாம் நாசமாக்கினான். ஊரார் கூடிக் கிதியோனின் தகப்பனைப் பார்த்து 'உன் மகனை வெளியே கொண்டுவா, அவன் பாகாலின் பலிபீடத்தை வெட்டிப் போட்டான். அவன் சாகவேண்டும், என்றார்கள். யோவாஸ் அவர்களைப் பார்த்து 'பாகால் தேவனானால் அது தானே தனக்காக வழக்காடட்டும்' என்றான். தன் மகனுக்கும் விக்ரக நிக்கிரகன் என்றர்த்தம் கொண்ட யெருபாகால் என்று பேரிட்டான். இவ்விதமாய்க் கிதியோன் தன் தகப்பனையும் குடும்பத்தையும் ஆதாயப்படுத்திக்கொண்டான். அவர்களுக்குப் பயப்படாமல் அவர்கள் முன்புக்குத் தைரியம் காட்டினான்.

இரண்டாவது, திரள்கூட்டத்துக்கு முன்பாகவும் தைரியம் காட்டினான். மீதியானருக்கு விரோதமாக யுத்த எக்காளம் தொனித்தது. 32,000 இஸ்ரவேலர் அவனைப் பின்பற்றினார்கள். யுத்த ஆயுதம் கிடையாது.



யுத்த அப்பியாசமுமில்லை. மீதியானியர் யுத்தத்தில் கைப்பழகினவர்கள். அவர்களுக்குப் போதுமான ஆகாரமும் யுத்த ஆயுதங்களுமுண்டு. கிதியோன் இப்பொழுது செய்யத்தக்கதொன்றுமில்லை. ஆண்டவர் தனக்குக் கற்பிக்கிற படியே செய்கிறான். பயங்காளிகளையும் கோழைகளையும் வேறாயும் தைரியமுள்ளவர்களை வேறாயும் பிரிக்கச்சொன்னார். 32,000 பேரில் 10,000 பேர் தவிர மற்றவர்கள் போய்விட்டார்கள். இதுவும் உதவாதென்று சொல்லி மறுபடியும் பரீட்சித்து 300 பேரை மாத்திரம் ஆண்டவர் கொடுத்தார். கிதியோனும் அதைரியப்படத்தக்கதாக, காரியங்கள் நடந்தது. என்றாலும் இதுவே தேவ நடத்துதல் என்று நிச்சயித்து அந்த 300 பேரை மாத்திரம் வைத்துக்கொண்டு மற்றவர்களை அனுப்பிவிட்டான்.

மூன்றாவது; சத்துருக்களிடத்தில் காட்டின தைரியம். மீதியானியர் வெட்டுக்கிளிகள்போல் தரையிலே காணப்பட்டார்கள். அவர்கள் ஒட்டகங்களுக்கும் ரதங்களுக்கும் கணக்கில்லை. ஆனால் கிதியோனுக வந்த 30,000 பேரில் 20,000 பேர் கோழைகளாய்ப் போய்விட்டார்கள் மற்ற 10,000 பேரும் ஓடியிருக்கலாம். ஆனால் அவர்களிடத்தில் ஓடத் தைரியம் இருந்தது. என்றாலும் அவர்களிடத்தில் சுறுசுறுப்பில்லை சத்துருக்களுக்கு விரோதமாக முன்சென்று எதிர்க்கவோ, பின்வாங்கி நிற்கவோ எப்படிச் செய்யவும் சுறுசுறுப்பு வேண்டும். 10,000 பேரில் 300 பேர் மாத்திரம் தண்ணீரை அள்ளிக் குடித்தார்கள். மற்றவர்கள் குனிந்து முழங்காற்படியிட்டு நாய்களைப்போல நக்கிக் குடித்தார்கள். ஆகையால் அவர்களையும் வேண்டாமென்று தள்ளிவிட்டார். முன்னிலும் அதிகக் கோழைத்தனம் கிதியோனுக்கு இருந்திருக்கலாம். மறுபடியும் கர்த்தர் அவனைத் தைரியப்படுத்துகிறார். இரவில் சத்துருக்களின் கூடாரத்துக்குப் போகச் சொல்லுகிறார். அங்கேதான் தைரியம் உண்டாயிற்று. மீதியானியரின் பாளயத்தில் ஒருவன் சொப்பனம் கண்டு சொல்லுகிறான். சுட்ட அப்பம் உருண்டுவந்து மீதியானரின் பாளயத்தைக் கவிழ்த்துப்போட்டது. மற்றவன் சொப்பனத்தை வியார்த்திக்கிறான். அது யோவாசின் குமாரனாகிய கிதியோன்தான் என்றான். சத்துருக்களின் நடுவிலிருந்து கிதியோனுக்குத் தைரியம் கட்டளையிட்டார். கிதியோன் தன்னை நோக்கிப்பார்த்துத் தன் தாழ்வை, தைரியக்குறைவைக் கண்டான். இதோ, தேவன் அவனைத் தெரிந்துகொண்டார். அதிகாரம் கொடுத்தனுப்புகிறார். தைரியம் காட்டி நடத்துகிறார். இதை உணர்ந்தான், தைரியம் கொண்டான். கிதியோன் எழும்பித் தேவன் தனக்குக் காட்டின முறையைக் கையாடி, அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தவனாய் ஜெயம் பெற்றான்.

கிறிஸ்தவனே, தேவன் உன்னோடிருக்கிறார் என்று நம்புகிறாயா? தேவனே உன்னை அழைத்திருக்கிறார் என்ற நிச்சயம் உனக்குண்டா? தேவன் உன்னைத் தைரியப்படுத்திப் பெலப்படுத்துவார் என்று அவருடைய

நடத்துதலுக்கு இணங்கிக் கீழ்ப்படிவாயா? உன்னை நோக்காதே, உன் குறைவை, பெலவீனத்தைக் கவனியாதே. சத்துருவின் மும்முரத்தைப் பற்றிச் சிந்தியாதே. தேவனுக்குக் கீழ்ப்படி. உன்னையே பெலப்படுத்துவார், உபயோகிப்பார், மகிமைப்படுவார்.

## ஒருமனம், ஓரிடம்.

**"அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்தில் வந்திருந்தார்கள்."** அப்போஸ்தலர் 2: 1.

"பரிசுத்த ஆவியை விசுவாசிக்கிறேன்" "பிதாவிலும் குமாரனிலுமிருந்து புறப்படுகிற பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன்". இவ்வார்த்தைகளைத் திருச்சபை பலநூற்றாண்டுகளாக உபயோகித்து வருகிறது. தேற்றரவாளன் என்று இயேசுவானவர் அவருக்குப் பேரிட்டார். இந்தப் பேரைப்போல் நமக்கு அருமையான பேர் வேறொன்றுமில்லை. இங்கே ஒரு கூட்டமான விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரின் உன்னத ஈவுக்காகக் காத்திருக்கிறதைப் பார்க்கிறோம், இவர்கள் யார்?

1-வது, **இவர்கள் மெய்விசுவாசிகள்.** கிருபையின் அதிசயம் அவர்களில் நடந்திருந்தது. ஆதலால் அவர்களுக்கு ஆவியானவரின் ஈவு வாக்குப்பண்ணப்பட்டது. அவர்கள் அந்த ஈவைப்பெற வாஞ்சித்தார்கள். தேவன் விசுவாசிகளான தமது பிள்ளைகளுக்குப் பரிசுத்தஆவியை அனுப்பி, அவருடைய ஒளியினாலே அவர்களுடைய இருதயங்களைப் போதித்துப் பிரகாசிப்பித்தார்.

2-வது, **இவர்கள் அன்புள்ளவர்கள்.** இயேசுவை முழு இருதயத்தோடு அவர்கள் நேசித்தார்கள். அவருக்காக எல்லாவற்றையும் அவர்கள் வெறுத்துவிட்டார்கள். இப்போது அவருக்காகத் தங்கள் ஜீவனையும் கொடுக்க அவர்கள் ஆயத்தமாயிருந்தார்கள். ஆகலால் அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரின் உன்னத வரம் அருளப்பட்டது. இப்படிப்பட்ட தமது பிள்ளைகளை ஆண்டவர் தமது ஆவியால் அபிஷேகம் பண்ணாதிருப்பதில்லை.

3-வது, **இவர்கள் ஒருமனப்பட்டவர்கள்.** இவர்களுக்கு ஒரே நோக்கம் இருந்தது. தமது ஜனங்கள் ஒன்றாயிருக்கும்படி கர்த்தராகிய இயேசு ஜெபித்தார். சிதறுண்ட தேவனுடைய பிள்ளைகளை ஒன்று சேர்க்கும்படி அவர் மரித்தார். அவர்கள் ஒரே குடும்பத்தார். உலகத்திலிருந்து எடுத்து, ஒரே சபையாய்ச் சேர்க்கப்பட்டவர்கள். இவர்கள் விசுவாச வீட்டார் ஆதலால் அவர்கள் ஒரு இடத்தில் கூடி இருந்தார்கள். தங்கள் எஜமா



னோடு பஸ்கா விருந்தை ஆசரித்த அதே அறையில் அவர்கள் ஒன்றுகூடியிருந்தார்கள். சகோதரர்கள் ஒருமித்திருக்கக்கூடிய இடத்தில் கர்த்தர் என்றென்றும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் அருளுகிறார்.

4-வது, **இவர்கள் காத்திருந்தார்கள்.** எதையாகிலும் எதிர்பார்த்துக் காத்திருப்பது சற்று வேதனையுள்ளது. பரீட்சை எழுதின பையன் அதின் பலனை அறியக்காத்திருப்பது அதிககவலையுள்ள காலமாயிருக்கும். வியாதியஸ்தனைப் பார்க்க வர வைத்தியன் தாமதிக்கிறபோது, அவன் ஆத்திரமாய் எதிர்பார்ப்பான். அன்புள்ள மனைவி தன் எஜமானின் வருகையை எதிர்பார்த்து அமைதலற்று இருக்கலாம். வியாபாரத்துக்குப்போன கப்பலை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற வியாபாரி கவலையாய்க் காத்திருப்பான். பரிசுத்த பவுலைப்போல் திடீரென்று பாவ உணர்வடைந்து குணப்பட்ட மனிதன், ஆவியானவரின் அருள் மாரியைக் கொண்டுவருகிற மனிதனின் வருகைக்காக மூன்று நாளாய் அவனைப்போல் ஜெபித்துக் காத்திருப்பான். கர்த்தரை நோக்கிக் காத்திருக்கிற ஒருவரும் வெட்கப்பட்டுப் போவதேயில்லை.

5-வது **இவர்கள் ஜெபம் செய்துகொண்டிருந்தார்கள்.** அப்போஸ்தலர்களும் ஸ்திரீகளும் இயேசுவின் தாயாரும் அங்கே ஜெபித்துக்கொண்டிருந்தார்கள். பத்துநாட்களாய் அவர்கள் ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள். அவர்கள் காத்திருந்ததும் ஜெபித்ததும் வீணாயிருக்கவில்லை என்று அறிவோம்.

"அவர் என்னை மகிமைப்படுத்துவார்" என்ற ஒரே விதிப்படி ஆவியானவர் எப்போதும் கிரியை செய்கிறார், "எவர்கள் தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிறார்களோ அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறார்கள்" என்பதே தேவனுடைய இராஜ்யத்தின் ஒரே தூக்குநூல் பிரமாணம்.

"வாரும், தேவ ஆவி, வாரும்,
எங்கள் ஆத்துமத்திலே;
எங்களுக்குயிரைத்தாரும்,
வாரும் சுத்த ஆவியே!
ஞானதீபம், ஞானதீபம்,
சுவாமி நீரே ஏற்றுமே."

இப்படிப்பட்ட ஒரு பாட்டை எந்நேரம் அதிகாலையில் வாஞ்சையோடு தவறாமல் பாடுவோமானால், அநேக ஜெபங்களைப்பார்க்கிலும் இது பலத்தகாரியங்களை நடப்பிக்கும் என்று ஒரு பெரிய பரிசுத்தவான் எழுதியிருக்கிறார். அதிகாலைதோறும் ஆவியானவருக்காக ஆவலோடு ஜெபிப்போமாக. ஒருமனப்பட்டு ஓரிடத்தில் செய்யும் பொதுவான ஜெபத்தையும் பெருகச்செய்வோமாக.

# கிறிஸ்தவர்கள் என்கிற பேர்.

"முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று". அப்போஸ்தலர் 11: 26.

கிறிஸ்தவன் என்ற வார்த்தை வேதத்திலே இன்னும் இரண்டு இடங்களிலே வருகிறது. அப். 26: 28; 1 பேதுரு 4: 16. கிறிஸ்து என்ற வார்த்தைக்கு அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று அர்த்தம். ஆதலால் பரிசுத்த ஆவியால் அபிஷேகம் பெற்றவனே கிறிஸ்தவன் என்று சொல்லலாம். பரிசுத்த ஆவியுடையவனே மெய்யான கிறிஸ்தவன். "எவர்கள் தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிறார்களோ அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறார்கள்." பலர் கிறிஸ்தவன் என்ற பேரைத் தரித்திருக்கலாம். ஆனால் கிறிஸ்துவின்பேரில் விசுவாசமும் கிறிஸ்துவின் சகோதரர் பேரில் அன்பும் இல்லாதவர்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லமுடியாது. ஆதலால் உத்தம கிறிஸ்தவர்களுக்கு இருக்கவேண்டிய இலட்சணங்கள் என்னவென்று பார்ப்போம்.

1-வது, கிறிஸ்துக்குள்ளான மனுஷனே கிறிஸ்தவன். பரிசுத்த பவுல் தம்மைக்குறித்து அப்படிச் சொல்லுகிறார். (2 கொரி 12: 2). எல்லா விசுவாசிகளும் உலகத்தோற்றத்துக்குமுன் கிறிஸ்துவுக்குள் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறார்கள். மெய் விசுவாசத்தால் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டவனே கிறிஸ்தவன். "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், அவன் புதுசிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" அதெப்படி என்று பாருங்கள். "அநியாயக்காரர் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசி மார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்". இப்படி கழுவபட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, நீதிமான்களாக்கப்பட்டவர்களே கிறிஸ்துவுக்குள்ளானவர்கள். ஆவிக்குரிய ஜீவனெல்லாம் கிறிஸ்துவுக்குள்ளிருக்கிறது; அவரே அந்த ஜீவன்; அவரோடு ஐக்கியப்படாத ஒரு ஆத்துமாவுக்கும் ஜீவன் இருக்கவேமாட்டாது. மரத்தோடு ஒட்டியிராத ஒரு கிளைக்கும் உயிர் இருக்கமாட்டாது. கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தின் அவயவமாய் அவரோடு இணைக்கப்பட்டவனே கிறிஸ்தவன். "நான்



பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள் என்று அவர் சொல்லுகிறார். மெய்விசுவாசம் ஒன்றுதான் கிறிஸ்துவோடு இவ்வித ஐக்கியத்தை உண்டுபண்ணக்கூடும். ஆதலால் நாம் விசுவாசமுள்ளவர்களோவென்று நம்மை நாமே சோதித்து அறியவேண்டியது அவசியமாயிருக்கிறது.

2-வது, கிறிஸ்துவுக்காக ஜீவிக்கிறவனே கிறிஸ்தவன். கிறிஸ்தவன் தன்னை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறான். அவன் தனக்குச் சொந்தமானவனல்ல, கிறிஸ்துவுக்கே சொந்தமானவன். அவன் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவன், இரத்தத்தால் வாங்கப்பட்டவன், கிருபையினால் கீழ்ப்படுத்தப்பட்டவன், பிரிக்கப்படக்கூடாத எண்ணிறந்த கட்டுகளால் அவன் கிறிஸ்துவோடு கட்டப்பட்டவன். ஆதலால் அவன் கண்கள், அவன் வாய், அவன் நாவு, அவன் காதுகள், அவன் கைகள், அவன் கால்கள், அவன் முழங்கால்கள், அவன் கரங்கள், அவன் அறிவு, பணம், செல்வாக்கு யாவும் அவன் எஜமானுக்கே ஒப்புக்கொடுக்கப்படும். அவன் பரிசுத்த பவுலைப்போல் தன்னை கிறிஸ்துவின் அடிமை என்று அழைப்பான். ஒருநாள் ஒரு யந்திரசாலையிலே ஒருபாக கட்டடம் இடிந்து விழுந்தது அது இடிந்துவிழுந்துவிடும் என்று பல நாட்களாய் வேலையாட்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அங்கே வேலைசெய்த பையன்களில் ஒருவன் அது இடிந்துவிழுந்த நாளின் அதிகாலையில் தன் தாயைப் பார்த்து, அம்மா, இன்று நான் வேலைக்குப் போகமாட்டேன், இன்று அந்தக் கட்டடம் இடிந்துவிழுந்துவிடும், நான் போனால் அதில் அகப்பட்டுச் செத்துப்போவேன் என்று சொன்னான். அவன் தாயோ மகா எளியவள். அவள் அவனைப் பார்த்து, என் மகனே, நமது கஷ்டம் மிகுதி, இன்றைக்கு நீ வேலைக்குப் போய் சம்பளம் வாங்கிக்கொண்டுவராவிட்டால் நாம் வீட்டு வாடகை கொடுக்கமுடியாது, ஆதலால் என் மகனே, நீ இன்றைக்கு வேலைக்குப் போகத்தான் வேண்டும் என்று சொன்னாள். சற்றுநேரம் இப்படி அவர்கள் வாதாடினபின்பு மகன் தாயைப் பார்த்து, அம்மா நான் உங்களுக்காக வேண்டி இன்றைக்கு வேலைக்குப் போகிறேன் என்று சொல்லிப் போனான். அன்று கட்டடம் இடிந்துவிழுந்து அவன் மரித்தான். நாம் கிறிஸ்தவர்களானால், இரட்சகா, நான் உமக்காகப் போகிறேன் என்று சொல்லக்கூடியவர்களாயிருக்கவேண்டாமா? கடினச் சிலுவையைச் சுமக்கவோ, கஷ்டமான வேலை செய்யவோ, உலகத்தின் உபத்திரவத்தைச் சகிக்கவோ, என் இரட்சகா, நான் உமதுநிமித்தம் போகிறேன் என்று சொல்லவேண்டாமா?

3-வது, கிறிஸ்துவைப்போல் இருக்கிறவனே கிறிஸ்தவன். தேவன் மனிதனுக்குக் கொடுத்த அவரது சாயல் பாவத்தால் அதிகமாய்க் கெட்டுப்போனபோதிலும், இன்னும் அவருடைய பிள்ளைகளில் ஒருவாறு அவருடைய சாயலைப் பார்க்கலாம். இந்த சாயல் ஒருநாளில் பூரணமாக்கப்படும். ரோமர் 8: 29. கிறிஸ்துவினுடைய ஜீவியத்தில் இரண்டு முக்கிய குறிப்பு

களைப் பார்க்கலாம். ஒன்று, அவர் தமக்குப் பிரியமாய் ஜீவிக்கவில்லை என்பது ரோமர் 15: 3. இது அவருடைய உள்ளான ஜீவிய முறை. அடுத்தது, அவர் நன்மை செய்கிறவராய்ச் சுற்றித்திரிந்தார் என்பது, அப்போஸ். 10: 38. இது அவருடைய வெளியான ஜீவியம். அவர் செய்த சில முக்கிய காரியங்களைப் பாருங்கள்.

(1) அவர் வேதாகமத்தை நேசித்தார். அவரைப்போல் அதை வாசித்து, மனதில் பதித்து, உபயோகப்படுத்துகிறவர்கள் அவருடைய இலட்சணத்தை உடையவர்கள் என்று சொல்லலாம்.

(2) அவர் மற்றவர்களுக்காக ஜீவித்தார். பரிசுத்த மாற்கு சுவிசேஷம் முதலாம் அதிகாரத்தில் அவர் செய்த ஒரு ஓய்வுநாள் வேலை எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. முதலிலே அவர் ஜெப ஆலயத்தில் போதித்தார் (21 வா). பின்பு ஒரு பிசாசைத் துரத்தினார் (26 வா). அதின் பின்பு சுரமாயிருந்த ஒரு ஸ்திரீயைச் சுகமாக்கினார் (31 வா). பின்பு பட்டணத்திலுள்ள ஏராளமான வியாதியஸ்தரைச் சுகப்படுத்தினார் (33 வா). பின்பு சற்றுநேரம் நித்திரைசெய்துவிட்டு, அதிகாலமே எழும்பி, வனாந்தரமான ஓரிடத்தில் போய் ஜெபம்செய்தார். பின்பு பிரசங்கமும் ஊழியமும் திரும்ப ஆரம்பித்துவிட்டது. இவரைப்போல் நம்மை மறந்து ஜீவிக்கும் குணம் நமக்கு வேண்டும்.

(3) அவர் பிறர் குற்றங்களை மன்னித்தார். கிறிஸ்துவைப்போல் இருக்க விரும்புகிறவர்கள் அவரைப்போல் மன்னிக்கவேண்டும். ஒருவர் பேரிலும் மனவருத்தத்தைப் பேணி வைக்காதிருக்கக்கூடாது. எல்லாரையும் சந்தோஷப்படுத்துவதே நமது முக்கிய வேலையாயிருக்கவேண்டும்.

(4) அவர் மற்றவர்களுக்காக் ஜெபித்தார். இப்பவும் அவர் மற்றவர்களுக்காகவே எப்போதும் ஜெபித்துக்கொண்டிருக்கிறார். அவர் செய்த அற்புதங்களெல்லாம் ஜெபத்துக்கு உத்தரவாகவே செய்யப்பட்டன. யாருக்காக நாம் ஜெபிக்கிறதில்லையோ அவர்களை நாம் நேசிக்கவில்லை என்பது நிச்சயம்.

4-வது, கிறிஸ்துவோடு இருக்கிறவனே கிறிஸ்தவன் அப். 4: 13. உத்தம கிறிஸ்தவனுக்குப் பரலோகத்தில் எல்லை பூலோகமட்டும் வந்து எட்டுகிறது. நீங்கள் சீயோன் மலைக்கு வந்து சேர்ந்தீர்கள் என்பதின் அர்த்தம் இதுதானே. கிறிஸ்துவின் சமுகம் உத்தம கிறிஸ்தவனுக்கு எப்போதும் நிச்சயமும் உறுதியுமாயிருக்கிறது. நீ தெருவில் நடந்துபோகும்போதும், பிரயாணம் செய்யும்போதும், வேலை நடப்பிக்கும்போதும் அவர் உன்னோடு நடந்துபோவார். வேத வாக்கியங்களைக்கொண்டு உன்னோடு சம்பாஷணை செய்வார். நீ போஜனம் புசிக்க உட்காரும்போது, அவர் உன் அப்பத்தை ஆசீர்வதித்துக் கொடுப்பார். நீ இளைப்பாறும்போது, அவர்



மார்பில் சாய்ந்து தூங்குவாய். நீ விழிக்கும்போது அவர் இன்னும் உன்னண்டை இருப்பார். உன் வாழ்வு காலத்தில் அவர் உன்னைப் பிரகாசிப்பிப்பார். உன் தாழ்வு காலத்தில் அவர் உன்னைக் கையைப் பிடித்து நடத்துவார். சகல நாட்களிலும் நான் உன்னுடனேகூட இருக்கிறேன் என்பதே அவர் கொடுத்த வாக்கு. உனக்கு உதவிசெய்யவும் உன்னோடு சம்பாஷிக்கவும் மனிதர் ஒருவரும் இல்லாதிருக்கும்போதும், அடுத்த நிமிஷம் உன்னோடு ஒருவரும் வரக்கூடாதிருக்கும்போதும் அவர் உனக்குச் சமீபமாயும் அருமையாயும் இருப்பார். பயணவர்தனம் அவர் ஒருக்காலும் சொல்லமாட்டார். மற்றவர்கள் வருவார்கள், போவார்கள், அவரோ ஒருக்காலும் போகார். நீங்காத நித்திய நேசர் அவர்.

(1) நீ இந்த இலட்சணங்களின்படி கிறிஸ்தவனா? அப்படியானால் உன்னை மெய்க் கிறிஸ்தவனாக்கின தெய்வ கிருபையை நினைத்துத் துதி செலுத்து. மெய்க் கிறிஸ்தவனாக என்னாளும் நடந்துகொள்.

(2) உறுதியான தீர்மானத்தோடு பிறரை உத்தம கிறிஸ்தவர்களாக்கும்படி பலத்த பிரயாசம் எடுத்துக்கொள்ளாதவன் உத்தம கிறிஸ்தவனாயிருக்கக்கூடுமோ?

கிறிஸ்துவுக்குள்ளும், கிறிஸ்துவுக்காகவும், கிறிஸ்துவோடும், கிறிஸ்துவைப்போலும் இருப்பது இம்மையிலேயே பரலோகவாசியாய் ஜீவிப்பதற்குச் சமமல்லவோ? இவ்விதமாய் இம்மையில் ஜீவிக்கிறவர்களே உலகத்துக்கு உப்பாயும், பூமிக்கு ஒளியாயும், மனிதர்களுக்கு இரட்சகர்களாயும் விளங்குவார்கள். இவர்களால் கிறிஸ்து என்ற நாமம் இம்மையிலும் மறுமையிலும் மகிமைப்படும்.

## "ஒரு நாளில் ஏழுதரம் துதி"

'உமது நீதி நியாயங்களினிமித்தம், ஒரு நாளில் ஏழுதரம் உம்மைத் துதிக்கிறேன்' சங்கீதம் 119: 164.

தாவீது இராஜா ஒரு நாளில் மூன்றுதரம் ஜெபித்தார். சங்கீதம் 55: 17. ஆனால் ஒருநாளில் ஏழுதரம் துதித்ததாக அவர் இங்கே சொல்லுகிறார். தாவீது எழுதின அநேக சங்கீதங்கள் ஜெபத்தோடு ஆரம்பித்து, துதியோடு முடிகிறது. சிலதடவை அவைகள் அழுகையாக ஆரம்பித்து, அல்லேலூயாவாக முடிகிறது. ஆண்டவரை நாம் மெய்யாய் ஒருநாளில் ஏழு தரம் துதிக்கவேண்டும். சரீரசுகம், மனச்சுகம், சந்தோஷம் நிறைந்த வீடு, இன்பமான வீடு, அன்புள்ள சிநேகிதர் முதலிய பூமிக்குரிய சகல ஆசீர்வாதங்களுக்காகவும் நாம் அவரைத் துதிக்கலாம். ஆனால் இவைகளுக்கு மேலான ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் நமக்கு அருளப்பட்டு, நமது பாவங்

கள் மன்னிக்கப்பட்டு நாம் ஆண்டவருடைய பிள்ளைகளாகி, ஆவியானவர் நமக்கு அருளப்பட்டு நமது ஜெபங்கள் கேட்கப்பட்டு, தேவனால் நாம் நித்தம் காக்கப்பட்டு, தேவனும் நாமும் ஐக்கியப்பட்டு ஜீவிப்போமானால், நித்தியகாலமும் கூட ஆண்டவரைத் துதிக்கப்போதாதென்றே சொல்லவேண்டும். நாம் அடிக்கடி நமக்கு வரும் குறைவுகளைப் பெரிதாக எண்ணிக்கொண்டு, நமக்குக் கிடைத்த ஆசீர்வாதங்களை மறந்துவிடுகிறோம். ஒரு அம்மாள் செய்ததுபோல வருஷம் முழுவதும் நமக்கு வரும் நன்மைகளையும் நஷ்டங்களையும் மகாதிட்டமாய் எழுதிவைத்துப் பார்ப்போமானால், அவளுக்கு வந்ததுபோல, ஆசீர்வாதங்களே குறைவுகள் நஷ்டங்களுக்கு மேலாக இருக்கும் என்று அறியலாம். ஒரு பெரிய பக்தன் தமக்குக் கஷ்டம் நஷ்டம் விரோதம் வருத்தம் நேரிட்டபோதெல்லாம், தமது வீட்டுக்குச் சமீபத்திலிருந்த ஆஸ்பத்திரிக்குப்போய், அங்குள்ள வியாதியஸ்தர்படும் அகோரகஸ்திகளைப் பார்த்து, பயபக்தியாகி மிகுந்த அமரிக்கையும் நன்றியறிதலுமான சிந்தையோடு வீட்டுக்குத் திரும்பிப்போவாராம். ஆம். ஜெபம் மூன்றுமடங்கு எழும்பவேண்டுமானால், துதி ஏழுமடங்கு எழும்பவேண்டியது அவசியம். இது ஜெபமே அவசியமில்லாமல், எல்லாம் துதியாகவே இருக்கும் பரம இராஜ்யத்துக்கு நம்மை ஆயத்தப்படுத்தும்.

1-வது, துதிப்பது கிறிஸ்துவில் காணப்பட்ட இலட்சணம். "அவர் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணினார்". அந்தப் பாத்திரம் அவர் பட்டு உத்தரிக்கப்போன பாடுகளுக்கு அடையாளமாயிருந்தது, தாவீது இராஜாவும், கர்த்தரை நான் எக்காலத்திலும் துதிப்பேன் என்று சொன்னார். எக்காலம் என்று சொல்லும்போது வாழ்வுகாலமும் தாழ்வுகாலமும் அதில் அடங்கியிருக்கிறது. லூத்தருக்கு கொடிய ஆபத்தான சமயங்கள் வரும்போது, நாம் 46-ம் சங்கீதத்தைப்பாடி ஆண்டவரைத் துதிப்போம் வாருங்கள் என்று சொல்லுவாராம்.

2வது, ஆண்டவரைத் துதிப்பது மற்றவர்களுக்கும் பிரயோஜனமாயிருக்கும். இருகண் குருடாயிருந்த ஒரு பரிசுத்தவான் சுவாமி, என்னுடைய குருட்டுக்கண்களுக்காக நான் உம்மைத் துதிக்கவில்லையே; எனக்கு வந்த பல ஆசீர்வாதங்களுக்காக நான் உம்மைத் துதித்திருக்கிறேன். ஆனால் எனக்கு அனுப்பப்பட்ட இந்த முள்ளுக்காக நான் உம்மைத் துதிக்கவில்லையே; என் கண்களிலிருந்து வரும் கண்ணீரில் வானவில் காணப்படுகிறதாகச் சொல்லும், அப்போது குருட்டு கண்களும் சீர் கொடுத்த ஈவென்று சொல்லித் துதிப்பேன் என்பாராம். இப்படிப்பட்ட சிந்தையைப்பார்த்து, மற்றநேசர்கள் கஷ்டங்கள் மத்தியில் ஆண்டவரைத் துதிக்க எவப்படுவார்கள்.

3-வது, ஆண்டவரைத் துதிப்பது நமக்கு ஆசீர்வாதத்தை வருவிக்கிறது. கர்த்தரைத் துதிப்பது இன்பமும், ஏற்றதுமாயிருக்கிறது. ஆனால்



நாம் கர்த்தரைத் துதிக்கவேண்டுமானால் அவரைத் துதிக்கும் துதியை அவர் நமது வாயிலே கொடுக்கவேண்டும். "ஆண்டவரே, என் உதடுகளைத் திறந்தருளும், அப்பொழுது என் வாய் உமது புகழை அறிவிக்கும்" என்று சங்கீதக்காரன் சொல்லுகிறார். துதியில் அடங்கிய இருதய சந்தோஷமும் நிறைவேற்றப்பட்ட ஆவியும் அருமையான ஆசீர்வாதங்கள்.

4-வது, ஆண்டவரைத் துதிப்பது அவரை கனம் பண்ணுகிறது. ஸ்தோத்திரபலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான் என்று ஆண்டவர் சொல்லுகிறார். மனிதர் அவரவருக்குரிய கனத்தைத்தேடாமல் விடார்கள். ஆனால் தங்களால் ஆண்டவருக்கு வரவேண்டிய கனத்தைப்பற்றி அவர்கள் கவலைப்படுகிறதில்லை. மறுமையில் நித்தியகால துதி அவருக்கு உரியதாக எண்ணப்படுமானால், இம்மையில் ஒரு நாளில் ஏழுதரம் துதிப்பது அதிகம் என்று சொல்லலாமோ?

---

## வேதாகம ஆராய்ச்சி

கனம் யோசேப்பு W. கெம்ப் ஐயரவர்களால் நடத்தப்படும்

வேதாகமப் பாடமுறை.

8-ம் பாடம்.

### பஞ்சாகமம்.

பஞ்சாகமம்:—ஆதியாகமம் 50 அதி. யாத்திராகமம் 40 அதி. லேவியராகமம் 27 அதி. எண்ணாகமம் 36 அதி. உபாகமம் 34 அதி. 'மோசே என்னைக் குறித்து எழுதியிருக்கிறான்' (யோவான் 5: 46). பழைய ஏற்பாட்டின் முதற்பங்கு பஞ்சாகமம் என்று அழைக்கப்படுகிறது. அதில் 2000 வருஷச் சம்பவங்கள் உண்டு. இவைகளில் முக்கியமானவை:—உலக சிருஷ்டிப்பு, மானிட படைப்பு, மானிடர் பாவத்துக்குட்பட்டு விழுதல், பாவப் பிராயச்சித்தம், ஜலப்பிரளயம், பாபேல், ஆபிரகாமின் அழைப்பு, எபிரேய ஜனத்தின் உயர்வு, அடிமைத்தனம், விடுதலை, ஆசரிப்புக்கூடாரம், அதோடு சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்கள், இஸ்ரவேலரின் பிரயாணங்கள், நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு, மோசே இவர்களின் சரித்திரமுமே.

பெயர். பஞ்சாகமம் என்ற பெயர் செப்துவஜின்த் திருப்புதலிலிருந்து உண்டாயிற்று அது எழுத்தின் பிரகாரம் '5 புஸ்தகச்சுருள் என்றர்த்தங்கொள்ளும் ஒரு தொடர்வார்த்தை. எபிரேயு கையெழுத்துப்பிரதியில், பஞ்சாகமம் பல பங்குகளாகப் பிரிக்கப்பட்ட ஒரு தனிச்சுருளாயிருக்கிறது, பழைய யேற்பாட்டிலாவது, புதிய யேற்பாட்டிலாவது, அது 5 புஸ்

தகங்கள் அடங்கியதாகச் சொல்லப்படாமல் ஒரே ஒரு புஸ்தகமாக எப்போதும் பாவித்துப் பேசப்பட்டிருக்கிறது. சமீபகாலத்தில் சமய பரீக்ஷைக்காரர் யோசுவாவையும் பஞ்சாகமத்தோடு சேர்த்து அவைகளை ஆறாகமம் எனப் பெயரிடுகின்றனர். அதின் நோக்கம் யாதெனில் ஐந்து மாத்திரமல்ல ஆறு ஆகமங்களும் கல்வி சம்பந்தமாய் ஒரே தொகுதி என்கிறார்கள். ஒருவர் யோசுவாவையும் நியாயாதிபதிகளையும் சேர்த்து ஏழு ஆகமம் எனப் பெயரிடுகிறார். பூர்வீக கிரேக்க சபை, ரூத்தையும் சேர்த்து எட்டாகமம் எனப் பெயரிட்டது. ஆனால் அவ்வாகமங்களின் சரித்திரமாவது அவைகளின் உள்ளான தன்மையாவது அவ்விதமாய் பாகிக்கும்படி இடங்கொடுக்கிறதில்லை. பஞ்சாகமத்தில் அடங்கியிருக்கிற புஸ்தகங்களுக்கு ஒப்புக்கொள்ளப்பட்ட திருப்புதலில் கொடுக்கப்பட்டிருக்கும் பெயர்கள். ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம், பஞ்சாகமம் என்றவார்த்தையைப்போல, இப்பெயர்களும் செப்துவஜிந்த் திருப்புதலிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. எபிரேயு பாஷையில் வேதத்தின் இம்முதல்பாகம் 'நியாயப்பிரமாணம்' என்றும் (யோசு 1: 7). அல்லது அதிலும் திட்டமாக 'நியாயப்பிரமாணப் புஸ்தகம்' என்றும் (யோசு. 8:34). 'மோசேயின் நியாயப் பிரமாணப் புஸ்தகம்' என்றும் (யோசு 8: 30) 'தேவனுடைய நியாயப்பிரமாணப் புஸ்தகம்' என்றும் (யோசு. 24: 26). 'மோசேயின் புஸ்தகம்' என்றும் (எஸ்றா 6: 18). 'மோசேயைக்கொண்டு கட்டளையிடப்பட்ட கர்த்தருடைய நியாயப்பிரமாணப் புஸ்தகம்' என்றும் (2 நாளா. 34: 14). அழைக்கப்படுகிறது இதைப்போலொத்த பெயர்களையுடைய மற்ற ஒத்துவாக்கியங்கள்:—(எஸ்றா. 7: 6). (நெகே 8: 1). (2 நாளா. 34: 30). (2 இராஜா. 22: 8). (2 நாளா. 17: 9). புதியயேற்பாட்டில் பஞ்சாகமம் சாதாரணமாக நியாயப்பிரமாணம் என்றழைக்கப்படுகிறது (மத். 22: 36-40). (யோவா. 8: 5-17). சில இடங்களில் மோசே என்ற பெயரானது அவனால் அறிவிக்கப்பட்ட நியாயப்பிரமாணமடங்கிய பஞ்சாகமத்தைக் குறிக்கிறது. (லூக். 24: 27). பஞ்சாகமம் முழுமையும் நியாயப்பிரமாணம் என்றழைக்கப்படுகிறது. ஏனெனில் சட்ட நிருபணம் அதின் முக்கிய அம்சமாயிருக்கிறது.

**ஆக்கியோன்** பஞ்சாகமத்தை எழுதினவர் மோசேதானென்பது பூர்வீக யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்குமுள்ள ஏக அபிப்பிராயம் சமீபகாலத்தில் தான் இதைப்பற்றிய சந்தேகங்கள் எழும்பியிருக்கின்றன. மோசேதான் இதின் ஆக்கியோன் என்பதற்கு ஏராளமான அத்தாட்சிகளுண்டு. அவரே எழுதினார் என்பதற்கு அத்தாக்ஷிகள். யாத் 17: 14; 24: 3, 4, 7; எண் 33: 2; உபா 31: 22; தனக்கு வெளிப்படுத்தப்பட்ட கர்த்தருடைய வார்த்தைகளை மோசே சொல்லுகிறார்; பின்பு அவைகளை எழுதுகிறார். பின்பு எழுதப்பட்ட புஸ்தகத்தை ஜனங்களுக்கு முன் வாசிக்கிறார். இன்



னும் வாசித்துப் பார்க்கவும். யாத். 34: 27; உபா. 28: 58-61; 31: 26; லேவியராகமத்தில், நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டதென்று 54 தடவை சொல்லியிருக்கிறது. மொத்தம் 27 அதிகாரங்களில் 20 அதிகாரங்கள் 'கர்த்தர் மோசேயை நோக்கி' என்று ஆரம்பிக்கின்றன.

மோசேயின் கடைசி நாட்களும் அதன்பின் யோசுவா தலைவனாக நியமிக்கப்பட்டதுமான சரித்திரம் மோசே மரணமடைந்தபின் யோசுவாவால் எழுதப்பட்டு உபாகமத்தின் கடைசி நாலு அதிகாரங்களாக சேர்க்கப்பட்டிருக்கலாம். என்றாலும் மோசே அவைகளையும் எழுதியிருக்கலாம் என்பதும் கூடியதே. ஏனெனில் அந்தச் சம்பவம் மோசேக்கு தேவனால் சொல்லப்பட்டிருந்தது. எண். 27: 12-14.

பழையயேற்பாட்டின் மற்றப் புஸ்தகங்களின் அத்தாக்ஷி. பின்வரும் வாக்கியங்களை ஒன்றோடொன்று ஒத்துப்பார்க்க.

**யோசுவா. கி. மு. 1451.** யோசு. 1: 1, 7; 23: 16; உபா. 5:32, 29: 9, 31: 7, 23.

**சாமுவேல். கி. மு. 1100.** 1 சாமு. 12: 5-8; யாத். 3: 10.

**தாவீது. கி. மு. 1042.** 1 இராஜா 2: 1-3; உபா. 17: 14-20, 29: 9.

**சாலோமோன் கி. மு. 1004.** 1 இராஜா. 8: 22, 23, 53; யாத். 19: 56; உபா. 14: 2.

**யோசபாத். கி. மு. 912.** 2 நாளா. 17: 7-9; 31: 9-12.

**யோசியா. கி. மு. 624.** 2 நாளா. 34: 14, 18, 29, 30; உபா. 17: 18, 19.

**தானியேல் கி. மு. 607 முதல் 534 மட்டும்.** தானி. 9: 11-13; லேவி 26: 14-18; உபா 28: 15.

எஸ்றா பஞ்சாகமத்தை எழுதினவர் அல்ல என்பது இந்த வாக்கியத்தினால் பகிரங்கமாய்த் தெரிகிறது. ஏனெனில் தானியேல் எஸ்றாவுக்கு 120 வருஷங்களுக்கு முன் தானியேல் ஆகமத்தை எழுதினான்,

**எஸ்றா. கி.மு. 536 முதல் 457 மட்டும்.** எஸ்றா. 9: 10-15; யாத் 23:32, 33; உபா. 7: 2, 3. பஞ்சாகமத்தை எழுதினவர் மோசே என்று எஸ்றா தானே வெளிப்படையாய்ச் சொல்லுகிறார். எஸ்றா. 3: 2, 6: 18; நெகே. 8: 1-8.

**நெகேமியா கி. மு. 446—434 கி. மு.** நெகே. 1: 8, 9; உபா. 4: 27; உபா. 30: 2-5.

**மல்கியா. கி. மு. 420.** மல். 4: 4; யாத். 3: 1; உபா. 1: 6; 4: 10. ஆக்கியோன் பேரில்லாத வேறு அநேக ஆதார வாக்கியங்கள் பஞ்சாகமத்

நறகுணம். பழையயேற்பாடு முழுமையிலும் மோசே இதை எழுதினவர் என்பதை சந்தேகிக்கும் ஒரு வசனமாவது இடையாது.

புதியயேற்பாட்டின் சாக்ஷி நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சாக்ஷி. பழையயேற்பாடு கிறிஸ்துவுக்கு 100 வருஷங்களுக்கு முன் முடிவடைந்தது. 250—கி. மு. 150-க்கும் இடையிலுள்ள செப்துவஜிந்த் புஸ்தக ரூபமாயிருந்தது. இந்த வேதாகமத்தையே நம்முடைய கர்த்தரும் அவருடைய சிஷர்களும் வழங்கிவந்தார்கள்.

(a) யேசுவானவர் 12 தடவை மோசே என்றபெயரைச் சொல்லுகிறார். மாற்கு. 10: 3; உபா. 24: 1-4; மாற். 12: 26; யாத். 3: 2-6; யோவா. 3: 14; எண். 21: 9; யோ. 5: 45, 46; ஆதி. 3: 15; 12: ; 22: 18, எண். 24: 17; உபா. 18 15, 18.

(b) அவர் நியாயப்பிரமாணத்தைக் குறித்து 13 தடவை சொல்லியிருக்கிறார். 5 தடவை நியாயப்பிரமாணத்தை மோசேயோடு சம்பந்தப்படுத்திப்பேசுகிறார். யோ. 7: 19, உபா. 33: 4; யோ. 10: 34; யாத். 7: 1; மத். 5: 7; 18: 40; 11:14; 12: 5; 22: 36-40; 23: 23; லூக். 14, 17; யோ. 7: 23; 15: 25.

(c) பஞ்சாகமத்திலுள்ள வாக்கியங்களை 7 தடவை எடுத்துச் சொல்லியிருக்கிறார். உபா. 6: 13, மத். 4: 10; யாத். 3: 6, மத். 22: 36, யாத். 20: 12, மத். 19: 18, உபா. 6: 5, மத். 22: 37, உபா. 8: 3, மத். 4: 4, லூக். 4: 4, உபா. 6: 16, மத். 4: 7, லேவி. 19: 18, மத். 19: 19, 22: 39.

(d) பஞ்சாகமத்திலுள்ள சம்பவங்கள் உண்மையென்று தாமே சொல்லுகிறார். மத். 24: 37, ஆதி. 6: 7. லூக். 17: 32, ஆதி. 19: 17, 26. யோ. 6: 31. யாத். 16: 4, 35, மத். 8: 4, 10: 15, 11: 23, 17: 3, 23: 35. லூக். 16: 29, 31, 17: 28, 20: 37, 24: 27, யோ. 3: 14, 8: 17, 56. பஞ்சாகமம் மோசேயினால் எழுதப்பட்டதென்பதை கர்த்தர் மொத்தத்தில் 45 தடவை ரூபிக்கிறார். ஆனால் சமய பரீக்ஷைக்காரர் இயேசுவானவர் பஞ்சாகமத்தைப்பற்றிய தமது அபிப்பிராயத்தில் தப்பெண்ணங்கொண்டாரென்றும் தாம் பேசும்போது அக்காலத்து ஜனங்களின் பொது அபிப்பிராயத்தை எடுத்துச்சொன்னாரென்றும் அவைகளின் தப்பிதத்தை அறிந்திருந்தும் அதைத் திருத்துவது தமது கடமையல்லவென்று எண்ணினாரென்றும் சொல்லுகிறார்கள். நாம் கிறிஸ்துவை அப்படியறியவில்லையே.

(e) அப்போஸ்தலர் சாக்ஷி.

மத்தேயு. மத். 2: 2, எண். 24: 17; யோவான். யோ. 1: 17; யாத். 20: 1; உபா. 14: 44.

பவுல். 1. கொரி. 10: 8, யாத். 17: 6; எண். 20: 1,

யாக்கோபு. யாக். 2: 10, 11; உபா. 27: 26; யாத். 20: 13, 14,



பேதுரு. 1 பேதரு. 3: 6; ஆதி. 18: 12.

வேறு ஆதார வாக்கியங்கள். அப். 3: 22; ரோ. 10: 5, 19; 1 கொ. 9: 9; அப். 13: 39; 15: 5; 28: 23; எபி. 10: 28; அப். 15: 21; 2 கொரி. 3: 15.

வெளி. 15: 3-ல் பரலோகத்தில் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டைப் பாடினதாகச் சொல்லியிருக்கிறது. யாத். 15-ம் அதிகாரம், மோசேயின் பாட்டு அல்லவென்றால் பரலோகத்தில் பொய் சொல்லப்படுகிறதென்று நினைக்கவேண்டியதாகும். பஞ்சாகமத்திலிருந்து புதியயேற்பாட்டில் கொஞ்சங்குறைய 243 ஒத்துவாக்கியங்கள் உண்டு.

வேறு அத்தாக்ஷிகள். 1. இவ்வாகமங்களின் பாஷை நடை மோசேயின் வயதுக்கும் குணத்துக்கும் ஒத்திருக்கிறது. தெளிவும் சாதாரணமுமான எபிரேயு பாஷை நடையில் எழுதப்பட்டிருக்கிறது. உபயோகிக்கப்பட்டிருக்கிற எகிப்திய வார்த்தைகளைக்கொண்டு, இது எகிப்திய வாசியினால் எழுதப்பட்டிருக்கவேண்டுமென்று உறுதியாய்ச் சொல்லலாம்.

2. சடங்கு சன்மார்க்கப் பிரமாண ஒழுங்கு மோசேயின் காலத்திற்கு ஒத்திருக்கிறதேயொழிய பிந்தின காலத்திற்குரியதாகத் தோன்றவில்லை.

3. மோசே தகுந்த படிப்புள்ளவராயிருந்தார். அப். 7: 22. ஜனங்களின் பாரம்பரியத்தைப்பற்றி தகுந்த அறிவுடையவராயிருந்தார். யாத். 2: 7-10. மோசேயைப் போன்ற நியாயப்பிரமாணிக்கன் ஒருவன் தமது நியாயப்பிரமாணத்தையும் தமது முன் சந்ததியாரின் சரித்திரத்தையும் எழுதிவைக்கிறது கூடிய காரியம்தான்.

இதின் ஆக்கியோன் மோசேயைத் தவிர வேறொரு மனுஷனென்றாவது இந்த சரித்திரத்தில் வேறொரு காலமென்றாவது சொல்ல வழியில்லை. இதை எழுதினவனுக்கு எகிப்தும் சீனாய் வனாந்தரமும் படம்போல் தெரிந்திருக்கிறது.

இப்பஞ்சாகமம் சொந்த உபயோகத்துக்கென்று வெளியாக்கப்பட்ட ஒரு சொற்பக்கூட்டத்தாருக்கல்ல. எபிரேய ஜாதி முழுமைக்கும் பொது உபயோகத்திற்காக வெளியாக்கப்பட்டது. உலகத்தின் மற்றப் புத்தகங்களோடு கலந்து போகாதபடி பிரித்துவைக்கப்பட்டு தேவனால் தமது பரிசுத்த ஆசரிப்புக்கூடாரத்தில் பத்திரப்படுத்தப்பட்டிருந்தது. எபிரேயர், பஞ்சாகமம் திவ்ய ஏவுதலினால் எழுதப்பட்டதென்றும் உலகத்திற்கும் தங்களுக்கும் உபயோகத்திற்காக தேவனால் கொடுக்கப்பட்டதென்றும் மதித்து வருகிறார்கள். இதுவே சமய விரோதிகளின் எல்லா ஆக்ஷேபனைகளுக்கும் மேலான ஆதாரங்கள்,

111



## சந்தா வரவு

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| Mr. G. D. ரெயினின், பாலாங்கொடா ... ... | 0 | 7 | 0 |
| ,, V. டேவிட், பாளையங்கோட்டை ... ... | 1 | 0 | 0 |
| ,, P. M. ஜோசப், ஆய்குடி ... ... | 0 | 15 | 0 |
| ,, J. சீனிவாசகம், மணல்காடு ... ... | 0 | 4 | 0 |
| ,, P. ஆசீர்வாதம், நெய்யூர் ... ... | 2 | 5 | 0 |
| ,, V. ஜேம்ஸ், கல்லக்குறிச்சி ... ... | 2 | 2 | 0 |
| ,, G. சிமியோன், சவுண்டபாடி ... ... | 0 | 7 | 0 |
| ,, A. V. ஞானம், பூண்டுலோயா ... ... | 0 | 15 | 0 |
| ,, I. V. சிகாமணி, நாவலபிட்டியா ... ... | 1 | 7 | 0 |
| ,, S. D. டாசன், நாஞோயா ... ... | 0 | 15 | 0 |
| ,, G. எசயடியான், விண்டுலா ... ... | 0 | 15 | 0 |
| ,, A. டேவிட், கம்பம் ... ... | 0 | 15 | 0 |
| ,, K. C. பிலிப்பு, கூதாட்டுக்குளம் ... ... | 0 | 8 | 0 |
| ,, I. A. தங்கையா, விட்ராட் ... ... | 0 | 15 | 0 |
| ,, S. கிறிஸ்டியான், கண்காணியார்புரம் ... ... | 0 | 15 | 0 |
| ,, I. B. டேவிட், ஆராத்தங்கி ... ... | 0 | 8 | 0 |
| ,, A. S. ஜேக்கப், மூணார் ... ... | 0 | 7 | 0 |
| ,, S. எப்ராயீம், ... ... ... | 0 | 7 | 0 |
| ,, G. S. பொன்னுசாமி ... ... ... | 0 | 7 | 0 |
| ,, I. S. ... ... ... | 0 | 7 | 0 |
| ,, மோசே, மூணார் ... ... ... | 0 | 7 | 0 |
| ,, D. P. Nallatamby, உடுத்துறை ... ... | 1 | 0 | 0 |
| ,, V. சாமுவேல், பாலாங்கொடை ... ... | 1 | 7 | 0 |
| ,, M. C. ஆபிரகாம், வாலவாம் ... ... | 2 | 3 | 0 |
| Rev. I. ரோலண்ட், மதுரை ... ... | 3 | 12 | 0 |
| ,, தங்கம் காபிரியேல், மதுரை ... ... | 0 | 14 | 0 |
| ,, D. ஏசுதாசன், கோயில்பட்டி ... ... | 6 | 10 | 0 |
| ,, C. N. ஏம்ஸ், பசுமலை ... ... | 9 | 6 | 0 |
| ,, Frank. A. Ross, சங்கரன்கோயில் ... ... | 3 | 1 | 0 |
| ,, A. பரமானந்தம், பங்களூர் ... ... | 1 | 15 | 0 |
| ,, S. ஞானமுத்து, கரிசல்குளம் ... ... | 0 | 15 | 0 |
| Miss. C. சொர்ணம், மதுரை ... ... | 2 | 5 | 0 |
| ,, A. எல்வின், சாகுபுரம் ... ... | 2 | 0 | 0 |
| Miss. Cox, நாகர்கோயில் ... ... ... | 10 | 11 | 0 |
| Major ஞானதேசிகர், நெல்லூர் ... ... | 0 | 15 | 0 |
| Rao Sahib. M. ஆபிரகாம் பண்டிதரவர்கள், தஞ்சாவூர் ... | 0 | 7 | 0 |
| ... | 1 | 15 | 0 |

Printed at the Church Mission Press, Palamcottah and Published by the Christian Brotherhood Association.

June, 1914. Registered—No. M. 163.

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." (யோவான் 7: 38)

OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 1914 MADRAS.

Vol. XV ஜூன்மீ 1914

## ஆபிரகாமின் கீழ்ப்படிதல்.

விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது கீழ்ப்படிந்து தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான். எபிரேயர் 11: 8.

வீரதீரச் செய்கைகளுக்கெல்லாம் ஆதாரம் விசுவாசமே. உலகத்தில் மனுஷர் தாங்கள் நம்பாதகாரியங்களுக்காகப் பிழைத்திருக்கிறதுமில்லை, மரிக்கிறதுமில்லை. சந்தேகம் கொள்ளுகிறவன் தைரியஸ்தனாகவேமாட்டான். சத்தியத்தை ஒப்புக்கொண்டு அதன்பேரில் கிரியை செய்கிறதற்கு விசுவாசமே அவசியம். விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாய் நடப்பது கூடாத காரியம். விசுவாசமில்லாமல் நமது நடக்கையும் ஸ்திரப்படாது. இந்த அதிகாரத்தில் "விசுவாசத்தினால்" என்கிற பதம் 31 தடவை வருகிறது. கிரியையினாலல்ல, தேவன்பேரில் வைக்கும் விசுவாசத்தினாலேயே இந்த அதிகாரத்தில் சொல்லப்படுகிற வல்ல கிரியைகள் நிறைவேறின.

I. ஆபிரகாமின் கீழ்ப்படிதலான சிந்தை. தேவன் அவனைப் புறப்பட்டுப் போகச்சொன்னவுடனே புறப்பட்டான். அதினால் தன் தைரியத்தைக் காட்டினான். "உன் தேசத்தையும், உன் ஜனத்தையும் உன் தகப்பன் வீட்டையும் விட்டு நான் காண்பிக்கும் தேசத்துக்குப்போ" என்பது தேவகட்டளை. ஆபிரகாம், தான் போகிற இடம் இன்னதென்றறியாமல் புறப்பட்டான். இவ்விதக்கட்டளை நமக்கு எப்போதாகிலும் கிடைத்திருக்கிறதா? ஒருவேளை நம்முடைய தேசத்தை விடவேண்டாம். நம்

மைச்சுற்றிலுமிருக்கிறவைகளை விடவேண்டியதிருக்கும். நம்முடைய வேலை—நம்முடைய சிநேகிதர்—நாம் தேவனுக்கு ஊழியம் செய்யாதபடி நமக்குத் தடைசெய்கிறவைகள்—இவைகளை நாம் விட்டுப் புறப்படவேண்டும். அதினிமித்தம் என்ன நஷ்டம் வந்தாலும் சரி. பாவத்தையும், உலகத்தையும் இயேசுகிறிஸ்துவுக் கேற்காத எதையும் விட்டுவிடுவதால் நமக்கு லாபமுண்டு. ஆபிரகாம் கீழ்ப்படிவத்தக்கதாகத் தேவன் அவனுக்கு நல் வாக்களித்ததுண்டு. “நான் உன்னைப் பெரியஜாதியாக்குவேன்” இவ்வாக்கு அவனைத் தைரியப்படுத்தினது மெய்தான். நாம் ஆண்டவருக்காக எவைகளை விட்டு விடுகிறோமோ அவைகளைப்பார்க்கிலும் அதிகமானவைகளை அவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். “ஆபிரகாமே, நான் உன்னை ஆசீர்வதிப்பேன். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன். உன்னைச் சபிக்கிறவர்களைச் சபிப்பேன். “இதிலே காணப்படுகிற வாக்குத்தத்தமும் சாபமும் நிறைவேறுதலடைகிறது. இஸ்ரவேல் ஜனத்தைத் துன்பப்படுத்தின ஜாதிகளெல்லாம் தேவனுடைய உக்கிரத்தின் பாத்திரத்தை ருசிபார்த்ததென்னலாம். இன்னும் அவர்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்கு அதே தண்டனை கிடைக்கும். தற்காலத்தில் ஆபிரகாமின் பேர் அதிகக்கனமடைகிறது. கிறிஸ்துவின் நாமத்தைவிட ஆபிரகாமை அநேகர் மதிக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் மாத்திரமல்ல, இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத யூதரும், மகமதியரும் ஆபிரகாமைக் கனம்பண்ணுகிறார்கள். “நான் உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்” என்பதும் தேவவாக்கே.

கீழ்ப்படிகிற சிந்தையுள்ளவனாய் தேவனுக்கேற்காதவைகளை வெறுத்துத்தள்ளி அவரைப் பற்றும் மெய் விசுவாசத்தினால் ஏவப்பட்டு பெரிய காரியங்களைச் செய்வாயானால் அவர் உன் பேரையும் பெருமைப்படுத்துவார்.

ஆபிரகாமின் பேர் பிரஸ்தாபத்துக்குப் பெரியசோதனை நேரிட்டது. ஆபிரகாம் ஜெயித்த ராஜாக்களின் கொள்ளைப்பொருள்கள் அவன் பாதத்தண்டையிருந்தன. அவனை எடுத்துக்கொள்ளும்படி சோதோமின் ராஜா கேட்டான். ஆபிரகாம் பிரதியுத்தரமாக “உம்முடையதை நீர் எடுத்துக்கொள்ளும். என்னோடு வந்த மனிதருக்கு வேண்டியதைக் கொடும். தேவன் ஆபிரகாமை ஐசுவரியவானாக்கியிருக்க மனுஷனால் அவன் ஐசுவரியவானானான் என்று சொல்ல இடங்கொடேன்” என்றான்.

லோத்தின் மந்தை மேய்ப்பருக்கும் தன் மந்தை மேய்ப்பருக்கும் வாக்குவாதம் உண்டான சமயத்திலும் அவனுக்கு ஓர் சோதனை நேரிட்டது. ஆபிரகாம் லோத்தை நோக்கி உனக்குப் பிரியமான இடத்தைத் தெரிந்துகொள். தேசம் உனக்கு முன்பாக இருக்கிறது. நீ அந்த வழியாய்ப்போனால் நான் இந்த வழி போவேன். நீ இந்த வழி போனால் நான் அந்த வழி போவேன் என்றான்.



இவ்விதமாய் ஆபிரகாம் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்துக்கேற்க நடந்திருக்கிறான் என்று பார்க்கிறோம், அதாவது “உங்களில் எவனாவது பெரியவனாயிருக்க விரும்பினால் அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன்” தனக்கென்று எதையும் தெரிந்துகொள்வதல்ல, மற்றவர்களுக்கு நன்மையானதைக் கொடுக்கிறதே பெருந்தன்மையாம். தன்னை வெறுத்து மற்றவர்கள் திருப்தியடையும்படி செய்கிற ஆத்துமாவே இயேசுவின் சிந்தையுள்ளதும் சுயவெறுப்புள்ளதுமாம். ஆகவே இவ்வித வாக்குத்தத்தங்கள் ஆபிரகாமுக்குச் செய்யப்பட்டபடியால் அவன் ஆண்டவருக்குக் கீழ்ப்படிந்து நடந்தான்.

II. ஆபிரகாமின் கீழ்ப்படிதலான செய்கை. ஆண்டவர் அவனைப் புறப்படச் சொன்னவுடன் புறப்பட்டு கானான் தேசத்திற்குள் வந்தான். அவன் போனவுடன் செய்த முதற்காரியமென்ன? தனக்கு நல்ல ஓர் வீடு கட்டவில்லை, திராட்சத்தோட்டம் நாட்டவுமில்லை. தன் பேர்ப் பிரஸ்தாபத்திற்காக ஓர் நகரத்தை யுண்டாக்கவுமில்லை. அவன் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினான். இந்தத்தேச முழுவதையும் உனக்குச் சொந்தமாகத் தருவேனென்று ஆண்டவர் சொன்னார், தேசம் ஆண்டவருடையதுதான் என்கிற நிச்சயமுள்ளவனாய் முதல் முதல் அவருக்கே ஓர் பலிபீடம் கட்டுகிறான். அந்நியதேசத்தில் ஆண்டவருடைய கொடியை ஏற்றுகிறான். அந்தகாரம் நிறைந்த இடத்தில் தீபஸ்தம்பம் நாட்டுகிறான். அவன் இடம் பெயர்ந்து நூதன இடத்தில் கூடாரம் அடிக்கும்போதெல்லாம் கர்த்தருக்குப் பலிபீடம் கட்டுகிறான்.

மேபிளவர் (Mayflower) என்ற கப்பலில் யாத்திரை செய்த சந்நியாசிகள் (Pilgrim Fathers) தாங்கள் கரை யேறின தேசத்தில் என்ன செய்தார்களென்று எண்ணுகிறீர்கள்? அவர்கள் கரை இறங்கினவுடன் முழங்காற்படியிட்டு ஜெபித்து தாங்கள் குடியிருக்கும் குடிசைகளை யுண்டாக்குமுன் ஓர் மலையுச்சியில் ஓர் கோவிலை கட்டினார்கள். அத்தேசத்தில் தற்காலத்தில் காணப்படும் அரசாட்சி முறை நாகரீகம் முதலியவை உலகத்திலுள்ள எத்தேசத்துக்கும் சிறந்த மாதிரியாயிருக்கிறதல்லவா? தேவன் உனக்கு ஓர் கானானைக் கொடுத்தால் நீ என்னசெய்வாய்? அவருக்கென்று ஓர் பலிபீடம் முதலில் கட்டுவாயா? அதைக் கொடுத்தவர் அவரேயென்று ஒப்புக்கொண்டு சகல கனத்திற்கும் மகிமைக்கும் அவரே காரணர் என்று அவரை மகிமைப்படுத்துவாயா? ஓர் எளிய குடும்பத்தைச்சேர்ந்த ஓர் பெண் தன் குருவானவரிடத்தில் 3 பவுனைக்கொடுத்து “ஐயா, இதை ஆண்டவருக்காக உபயோகியுங்கள்” என்றாள். குருவானவர் அவளுடைய தரித்திர நிலைமையை அறிந்தபடியால் “இவ்வளவு பணம் உனக்கெப்படிக் கிடைத்தது?” என்று கேட்க அவள், “கடந்த வாரத்தில் எனக்கு ஒரு வகையான சொத்து கிடைத்தது, அதின் ஓர் பாகத்தை நான் ஆண்டவருக்குக் கொடுக்

கிறேன்" என்றான். அவளுக்குக் கிடைத்த சொத்து சொற்பம். அவள் கொடுத்ததோ அதில் மிச்சமான பாகம். அவன் தனக்குக்கிடைத்த சுதந்தர பாகத்தில் கர்த்தருக்கென்று ஓர் பலிபீடம் கட்டினான்.

உனக்கு அதிகப்பணம் உண்டா? உன் பேர் பிரஸ்தாபமாகிறதா? நீ சொற் சக்தியுள்ளவனா? இவைகளெல்லாம் தேவன் உனக்குத் தந்தவைகள் என்று எண்ணுகிறாயா? இவைகளில் கர்த்தரை முதல் முதல் மகிமைப் படுத்துகிறாயா? அல்லது உன் மகிமையைத்தான் முதலாவது நாடுகிறாயா? உனக்கிருக்கும் வாக்கு வல்லபத்தை உன் சுயபிரயோஜனத்திற்காக உபயோகிக்கிறாயா? உன் திறமை, சாமர்த்தியம் இவைகளால் சுயபிரயோஜனத்தை யுண்டாக்க நாடுகிறாயா? இது லோத்தின் சிந்தை. உலகத்தானுடைய நோக்கம். சோதனைகள் நிறைந்த இடத்தில் கர்த்தருடைய நாமத்தை முன் நிறுத்தி நீ கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்று மற்றவர்களுக்குச் சாட்சி கொடுக்கிறாயா? ஆபிரகாம் தான் போன ஓரிடத்தில் கர்த்தருக்குப் பலிபீடம் கட்டவில்லை. அந்த இடத்திற்குப் போனதினால் அவனுக்கு வெட்கமும் நிந்தையுமுண்டாயிற்று. தேசத்தில் பஞ்சமுண்டானபோது தேவ உத்தரவன்னியில ஆபிரகாம் எகிப்துக்குப் போனான். அங்கே கர்த்தருக்குப் பலிபீடம் கட்டவில்லை. தன் சொற்ப வேலைக்காரரோடு ஐந்து ராஜாக்களை எதிர்த்து ஜெயித்த வீரனாகிய ஆபிரகாம் எகிப்தின் ராஜா தன்னைக் கொன்றுபோடுவானென்று பயந்து சாராளைப் பார்த்து 'நீ என் சகோதரியென்று சொல்' என்று சொல்லச் சொன்னான். இது பாதிப்பொய். பார்வோனுக்கோ இது முழுப்பொய். நீயும் எகிப்தைப்போன்ற இடத்துக்குப் போக நேரிட்டால் அங்கே கர்த்தருக்கென்று பலிபீடம் கட்டாவிட்டால் நீ அடுத்தவிட்டு வெளியேறுமுன் சாத்தான் உன்னைக் கொள்ளையிட்டுவிடுவான். சோதனைகளுள்ள இடத்துக்குப் போக நேரிட்டாலும் தேவன் அங்கேயிருக்கிறார். நீ தேவ ஒத்தாசையை அங்கேதான் அதிகமாய்த் தேடவேண்டும் என்கிற ஆத்திரம் உனக்கிராவிட்டால் உன் விசுவாசம் பெலவீனப்படும்.

III. ஆபிரகாமின் கீழ்ப்படிதலான ஈகை. ஆபிரகாம் தனக்கருமையானதைக் கர்த்தருக்கென்று கொடுத்தான். தேவன் தனக்குத் தந்தவைகளில் முதற்றரமானதை அவருக்கே கையளித்தான். ஒருநாள் தேவ கட்டளை பிறந்தது. 'ஆபிரகாமே உன் புத்திரனும் ஏகசுதனுமாகிய ஈசாக்கை நான் காண்பிக்கும் மலைநனொன்றில் தகனபலியிடு' என்பதே. ஈசாக்கையும் வேலைக்காரரையும் கூட்டிக்கொண்டு பலியிடுவதற்கு வேண்டிய கட்டை, நெருப்பு முதலியவைகளை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். கட்டளைக்கு எதிர்த்துப் பேசவில்லை. சாராளை முத்திசெய்து புறப்படும்போது தன் மகன் ஈசாக்கு எப்படியும் தன்னோடு வருவானென்ற நிச்சயம் அவனுக்கிருந்தபடியால் தேவகட்டளையைப்பற்றி யாதொன்றும் அவளுடன்



சொல்லவில்லை. தேவவாக்கு எப்படியும் நிறைவேறும். வாக்கையளித்தவரே கட்டளையும் கொடுக்கிறார். வாக்கை நிறைவேற்றவேண்டியது அவருடைய கடமை. கட்டளைக்குக் கீழ்ப்படியவேண்டியது தன் கடமை. தான் கீழ்ப்படிகிறதினால் ஈசாக்கு மரித்துப்போனாலும் தமது வாக்கை நிறைவேற்ற அவனை உயிரோடெழுப்பித் தருவார் என்று நம்பினான். ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும். இஸ்மவேலிடத்திலல்ல. இதுதான் தேவவாக்கின் பொருள். தேவவாக்கு அநேக சமயங்களில் தேவகட்டளைக்கு விரோதமாய்க் காணப்படலாம். மிகவும் எளியவனான ஓர் பக்தனிருந்தார். அவருக்கு 8 பிள்ளைகளுண்டு. அவர்களைப் படிப்பிக்க ஏலாதவராயிருந்தார். ஒருநாள் வியாபாரியொருவன் அவரிடத்தில் வந்து 'இந்தக் கடிதத்தில் உமது கையெழுத்தைப் போடும். இன்னும் 6 மாதத்தில் உமக்கு பதினாயிரம் பவுண் கொடுக்கிறேன்' என்றான். ஆனால் அந்தப் பக்தனோ 'என் தேவன் உன் குறைவையெல்லாம் நிறைவாக்குவார்' என்ற வாக்குத்தத்தத்தைப் பிடித்திருந்தார். தன் பிள்ளைகளைப் படிப்பிக்கும் வழி எப்படியுண்டாகும் என்ற கவலையும் இருந்தது. ஆனால் வியாபாரி கொடுத்த கடிதத்தைப் படித்துப்பார்க்கவே அதில் சற்று பொய், ஏமாற்று கலந்திருந்ததாகக் கண்டு வியாபாரியைப் பார்த்து 'நான் என் பிள்ளைகளுக்குப் பதினாயிரம் பவுண் வைத்துவிட்டு மரிக்கிறதைப் பார்க்கிலும் "உத்தம தகப்பன்' என்ற பேர்மட்டும் இருக்குமானால் அதுவே போதுமானது. இந்தக் கடிதத்தில் ஒப்பமிடமாட்டேன்' என்றார். அந்த மனிதனுடைய பிள்ளைகள் சீக்கிரம் முன்னுக்கு வந்தார்கள். அவர்களெல்லாரும் உண்மையுள்ள வியாபாரிகளும் தொழிலாளிகளுமாயிருக்கிறார்கள்.

உவில்லியம் உவில்பர்வோர்ஸ் என்பவருடைய ஞாபக சின்னத்தின் மேல் வரையப்பட்டிருக்கிற வாசகமாவது:—இவரால் இங்கிலாந்து தேசத்தின் பழக்கவழக்கங்கள் சீர்திருத்தமடைந்தது. இவரால் உலகத்தில் அடிமைத்தனம் கட்டோடே ஒழிந்தது' என்பதே. இவர் ஓர் ஐசுவரியவான். இளமையில் இவர் சீர்கெட்டவராய் அலைந்துதிரியும் காலத்தில் சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவின் காட்சிபெற்றார். அதுமுதல் கிறிஸ்துவின் சுயவெறுப்பான அன்பின் ஆவி அவரைப் பிடித்துக்கொண்டது. சூதாட்டம், குடிவெறி, துன்மார்க்கம் முதலிய பாவங்களில் தன் தோழரானவர்களிடத்திலேயே போய் தான் அதுமுதல் கிறிஸ்தவனாய் ஜீவிக்க விரும்புவதாயும் தன் பழைய பாவங்களைக் கட்டோடே விட்டுவிட்டதாயும் தேவ கிருபையைப் பெற்று ஜனோபகாரமான வேலைக்குத் தன்னை ஒப்புக்கொடுத்ததாயும் சாட்சி பகர்ந்தார். இவருடைய ஊழியத்தின் பலனாக இங்கிலாந்து தேசத்துப் பிரபுக்களுக்குள் நல்லொழுக்கம் சீர்திருத்தமடைந்தது. அடிமைத்தனம் இவருடைய முயற்சியினால் நின்றுபோயிற்றென்று அறிவோம்.

இப்படியே ஆபிரகாமும் கிறிஸ்துவின் மரண காட்சியைக் கண்டான். ரட்சகர்தாமே 'ஆபிரகாம் என் நாளைக் காண வாஞ்சையாயிருந்தான். கண்டு களிகூர்ந்தான்' என்கிறார். ஆகையினால்தான் தன் மகனைப் பலியிடப் போகும்போது தேவன்......பார்த்துக்கொள்வார் என்று நம்பிக்கையோடு சொன்னான். யேசுவின் சிலுவைக்காட்சி தேவனுடைய உன்னத அன்பை நமக்குக் காட்டுகிறது. தேவன் பாவிகளுக்குக் கொடுக்கக்கூடிய பெரிய ஈவாகத் தமது ஒரே பேறான குமாரனைத் தந்தருளினார்.

## வேதாகம ஆராய்ச்சி

கனம் யோசேப்பு W. கெம்ப் ஐயரவர்களால் நடத்தப்படும் வேதாகமப் பாடமுறை.

### ஆதியாகமம்.

### 9. பாடம்

பஞ்சாகமத்தின் பொருளடக்கத்தைத் தொகுப்பாய்ப் பார்த்தபின் அதின் முதலாம் ஆகமத்தை இப்பொழுது படிக்கவந்திருக்கிறோம். ஆகமம் முழுவதையும் ஒருதரம் வாசிக்கவேண்டும். இந்த தகம் முழுவதையும் வாசிக்க நேரமில்லாவிட்டால் முதல் 11 அதிகாரங்களை யாவது ஒரே மொத்தமாய் வாசிப்பது நல்லது. இதை வாசிக்கக் குறைந்த பட்சம் 35 நிமிஷங்கள் செல்லும். மீதியான 39 அதிகாரங்களையும் இன்னொரு தடவை வாசிக்கலாம்.

வேதாகமம் முழுவதையும் ஓர் பிரமாண்டமான கட்டடமென்று வைத்துக்கொண்டால் ஆதியாகமம் அந்தக் கட்டடத்தின் முன் மண்டபமென்னலாம். இந்தப் புஸ்தகத்தின் ஆரம்பத்திலேயே தேவனுடைய நாமம் முத்திரை வெட்டாக எழுதியிருக்கிறது. அவர் இருக்கிறார்—தமது வல்லமையுள்ள வசனத்தினாலே சகலத்தையும் சிருஷ்டித்தார் என்பதே இதில் காட்டப்பட்டிருக்கிற ஆரம்ப சத்தியம்.

இந்தப் புஸ்தகத்துக்கு முகவுரையே கிடையாது. ஆக்கியோனைப் பற்றிய விபரமும் சொல்லப்படவில்லை. தேவன் உண்டு, சிருஷ்டிகளின் ஆரம்பம் இவைகளையே முதலில் காட்டுகிறது. காலங்கள் ஏற்படுமுன் வீணான காரியங்களைக் குறித்து உத்தேசமாய்ச் சொல்லாமலும் இவைகள் ஏன், இப்படி நடந்தனவென்று நியாயம் பேசாமலும் 'அப்படியே ஆயிற்று' என்று மாத்திரம் சொல்லியிருக்கிறதைப் பார்க்கலாம்.

I. ஆகமத்தின் பெயர். ஆதியிலே என்ற கருத்துக்கொண்ட 'பெரஷித்' என்னும் எபிரேய பதத்தைக்கொண்டு இவ்வாகமம் ஆரம்பிப்பதால் இதற்கு 'ஆதியாகமம்' என்னும் பெயர் வந்தது. 'ஆதியிலே தேவன்' என்று ஆரம்பிப்பதால் கணக்குக்கடங்காத அதி பூர்வகாலத்தைக் குறிக்கிறதென்றும் குறிக்கப்படும் எந்தக் காலத்துக்கும் முன்னுள்ளதென்றும் தெரிகிறது.



II. சரித்திரகாலம். உலகத்தில் எந்தப் பிரபலமாயுள்ள எந்தச் சரித்திரத்துக்கும் முந்தினது. ஏறக்குறைய 2500 வருஷங்களின் உலக சரித்திரத்தையடக்கியிருக்கிறது.

III. ஆக்கியோன். மோசே தற்கால ஆக்ஷேபனைக்காரர் மோசே எழுதினாரென்பதை ஒப்புக்கொள்ளாமல் மறுத்தபோதிலும் அவரே எழுதினாரென்பது பொதுப்பட யாவராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அவராலே எழுதப்பட்டதென்பது லூக். 24: 27; ஆதி. 3: 15; 22: 18; 49: 10; லூக். 16: 29, 31. இவ்வசனங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் தெரியவரும். ஆக்கியோனின் பாஷை நடை தெளிவும் சுருக்கமுமானது. வீண்வார்த்தைகளை உபயோகிக்கவில்லை. தேவன் உலகத்தினின்று ஓர் ஜனத்தைத் தமக்கென்று தெரிந்துகொண்டு தமது சத்தியத்தை அவர்கள் மூலமாய் உலகத்துக்கு வெளிப்படுத்துகிறார் என்பதையே சாதிக்கிறார்.

IV. பொருளடக்கம். உற்பத்திகளின் புஸ்தகம் என்றழைக்கலாம். வஸ்துக்களின் ஆரம்பத்தை இந்த ஆகமம் நமக்குத் தெரிவிக்கிறது. இதைத் தவிர வேறொன்றிலும் நமக்குத் திருப்திகரமான சரித்திரம் கிடையாது.

(1) ஆதி. 1-ல் வானமும் பூமியும் உண்டான வரலாறு சொல்லியிருக்கிறது. சாஸ்திரிகள் பூமியைப் பரிசோதிக்கிறவர்கள், ஞானிகள் கண்டுபிடித்த எதுவும் வேதாகமத்தின் முதல் வசனத்தில் சொல்லியதைவிடத் திட்டமாய்க் காட்டுகிறதில்லை.

(2) ஆதி. 1-ல் மனுஷ ஜாதியின் வரலாறு. முன்னுண்டாயிருந்த யாதாமொரு சிருஷ்டியிலிருந்து மனுஷன் உண்டானவனல்ல. அவன் தேவசாயலின்படி உண்டாக்கப்பட்டவன் (ஆதி. 1: 27). அறிவு மனச்சாட்சி சித்தம் முதலிய வரங்களோடும் தேவனோடு சம்பாஷிக்கத்தக்க தன்மையோடும் உண்டாக்கப்பட்டான்.

(3) விவாக உற்பத்தி. முதல் விவாகம். (2: 21-25 ஒடு. எபேசி. 5: 22, 23 ஒத்துப்பார்க்க.

(4) ஓய்வுநாள் உற்பத்தி. (2: 2, 3).

(5) பாவம், மரணம் இவைகளின் உற்பத்தி. ஆதி. 3, 4. ரோமர். 5: 10. ஆதியாகமத்தில் மாத்திரம் தீமை உலகத்தில் தோன்றின விபரம் சொல்லப்பட்டிருக்கிறது. இதையே புதியேற்பாட்டில் எடுத்துக் கூறியிருக்கிறது. தீமையுண்டான விதத்தைச் சொல்லியபின் சத்யவேதம் அதினாலுண்டான கேடுபாடுகளை எடுத்துரைக்கிறது.

(a) குடும்பத்திலுண்டான கேடு. (b) பழைய உலகத்துக்கு நேரிட்ட தண்டனை. (c) நோவாவின் குடும்பத்தில் உண்டான தீங்கு. (d) சமபூமியின் பட்டணங்களுக்கு நேரிட்ட ஆக்கினை. (e) முற்பிதாக்களுக்குள்ளே உண்டான பொல்லாப்பு. (f) கானானிலும் எகிப்திலும் உண்டான

திங்குகள். (g) கொலை, விபசாரம், களவு, பொய் பொருளாசை முதலிய பாவங்களால் நேரிட்ட பொல்லாப்பு.

(6) பலியின் உற்பத்தி. (ஆபேல், நோவா).

(7) ஜாதிகள், பாஷைகள் இவைகளின் உற்பத்தி (அதி. 10). ஆகவே உண்டாயிருக்கிற சகலத்தின் உற்பத்தியையும் ஆதியாகமத்தில் காணலாம்.

V. ஆகமத்தின் அமைப்பும் பிரிவுகளும். சங்கிலித்தொடர்போல் ஒன்றோடொன்று இணைத்தான பதினொரு பிரிவுகள் இவ்வாகமத்தில் காணப்படுகிறது. ஒவ்வொரு பிரிவும் 'வரலாறு இவைகளே' என்ற வார்த் தைகளைக்கொண்டு ஆரம்பிக்கிறது. அவை மனுஷனுடைய வம்சவரலாறு களே. சரித்திர சம்பவங்களைப் பார்க்கிலும் மனுஷன் ஆண்டவருடைய பார்வையில் விசேஷித்தவன் என்பதை அது விளக்குகிறது. அந்த வரலாறு களாவன:—

1. வானமும் பூமியும் சிருஷ்டிக்கப்பட்ட வரலாறு அதி. 2: 4—4: 26.
2. ஆதாமின் வம்சவரலாறு அதி. 5: 1—6: 8.
3. நோவாவின் வம்சவரலாறு அதி. 6: 9—9: 29.
4. நோவாவின் குமாரருடைய வம்சவரலாறு 10: 1—11: 9.
5. சேமுடைய வம்சவரலாறு 11: 10—26.
6. தேராகுடைய வம்சவரலாறு 11: 27—25: 11.
7. இஸ்மவேலின் வம்சவரலாறு 25: 12—18.
8. ஈசாக்குடைய வம்சவரலாறு 25: 19—35: 29.
9. ஏசாவின் வம்சவரலாறு 36: 1—8.
10. ஏசாவின் குமாரருடைய வம்சவரலாறு 36: 9—43.
11. யாக்கோபுடைய சந்ததியின் வரலாறு 37: 1—50: 26.

மேற்காட்டிய பிரிவுகளைத் தெளிவாய் அறிந்துகொள்ளும்பொருட்டு வேதாகமத்தில் அந்த வாக்கியங்களுக்குக் கீழே கோடுபோட்டுக்கொள்ள வேண்டும். எல்லாப் பிரிவுகளையும் கூட்டித்திரட்டிப் பார்க்கில், வேதாக மத்திலுள்ள மற்ற ஆகமங்களைப்போலவே, இவ்வாகமமும் பேதமின்றி இசைவிணைப்பாயிருக்கிறது. அடியில்வரும் பொருளடக்கத்தைப் பார்த்த வுடனே இவ்வாகமம் இரண்டு முக்கிய பிரிவுகளுள்ளதாகக் காணலாம். முதலாம் பிரிவில் 1—11 அதிகாரங்கள் வருகிறது. இரண்டாம் பிரிவு 12—50 அதி.

| பூர்வகால சரித்திர பாகம் அதி. 1—11. | பூர்வபிதாக்களுடைய சரித்திரபாகம் அதி. 12—50. |
|---|---|
| 1. சிருஷ்டிப்பு | 1. ஆபிரகாம். |



| | |
|---|---|
| 2. தவறுதல். | 2. ஈசாக்கு. |
| 3. ஜலப்பிரளயம். | 3. யாக்கோபு. |
| 4 பாபேல். | 4. யோசேப்பு. |

I. முற்கால சரித்திரபாகம் அல்லது உலக சரித்திரம் (1—11 அதி). பின்வரும் நாலு சத்தியங்கள் இந்தப் பிரிவிலுண்டு:—

1, உலக சிருஷ்டிப்பு 1—2 அதி.
2. ஆதி மனுஷருடைய தவறுதல் 3—4 அதி.
3. ஜலப்பிரளயம் 5—9 அதி.
4. ஜாதிகள் சிதறுண்டது 10—11 அதி.

இந்த நாலு சத்தியங்களையும் மனப்பாடம் பண்ணிக்கொள்வது நலம்.

1. உலக சிருஷ்டிப்பு 1-ம் அதிகாரத்தில் உலக சிருஷ்டிப்பு பொதுவாகவும் 2-ம் அதிகாரத்தில் விபரமாகவும் சொல்லப்பட்டிருக் கிறது. காலஞ்சென்ற கனம்: W. E கிளாட்ஸ்டன் சொன்னதாவது: 'ஆதியாகமத்தின் முதல் அதிகாரம் வேதாகமத்தின் அஸ்திபார அதிகாரம் என்றும், அதிலுள்ள முதல் வாக்கியம் அஸ்திபார வாக்கியம்' என்பதே. அபர்டீன் பட்டணத்து வித்வசிரோமணியாகிய ஸ்டாக்கர், 'வேதாகமத் தில் திவ்ய அதிகாரமுள்ளது என்று சொல்லக்கூடுமானால், அது ஆதி யாகமத்தின் முதல் அதிகாரமே' என்று சொல்லியிருக்கிறார். ஸ்கொத் லாந்து தேசத்தில் எழும்பிய பரிசுத்தவான்களில் சிரேஷ்டமானவரான ஹோரேஷியஸ் பானர், 'விசுவாசத்தினாலே மாத்திரம் இந்த முதல் அதிகா ரத்தை வாசித்துச் சரியாய் அறிந்துகொள்ளலாம்; ஏனென்றால் இதிலடங் கிய சத்தியங்களுக்கு ஏதாவது மனுஷசாக்ஷியம் அல்லது அநுபோகம் ஆதாரமாக இராமல், தேவனுடைய வசனம் மாத்திரம் ஆதாரமாயிருக்கிறது (எபி. 11: 3). இவ்வாகமத்தின் முதல் அதிகாரத்திலடங்கிய பூலோக முன் சரித்திர நடபடிகளைப்போலவே வெளிப்படுத்தின விசேஷத்திலடங்கிய பின் சரித்திர நடபடிகளும் விசுவாசத்தினால் மாத்திரம் அறிந்துகொள்ளக் கூடியவை. விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தை யினால் உண்டாக்கப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்; ஏனென்றால் விசு வாசத்தினாலேதான், நமக்கு முன்னே நடந்தவைகளையும் நமக்குப் பின்னே நடக்கப்போகிறவைகளையும் அறிந்துகொள்ளக்கூடும். இந்த முதல் அதிகா ரத்தில், தேவனை நமது சிருஷ்டி கர்த்தாவாக விசுவாசிக்கிற சத்தியம் வெளிப் படையாயிருக்கிறது' என்று சொல்லியிருக்கிறார்.

வேதாகமத்தின் முதல் வாக்கியம் எத்தனை நேர்த்தியாயிருக் கிறது! 'ஆதியிலே தேவன்'. 'தேவன் உண்டு' என்ற சத்தியத்தை ரூபிக்க வேதாகமம் பிரயத்தனிக்கிறதேயில்லை. சிருஷ்டிப்பின் கிரியை

களைக் கவனிக்குமிடத்து, சிருஷ்டிகராகிய தேவன் ஜீவனுள்ளவர் என்று பார்க்கிறோம். இந்த முதல் வாக்கியமே இவ்வாகமத்தின் மொத்தப் பொருளடக்கமாகவும், உண்டான யாவும் ஜீவனுள்ள தேவனாலேயே ஆயிற்று என்றும் ருசுப்படுத்துகிறது. அவர் சிருஷ்டிக்கிறார், அசைவாடுகிறார், உண்டாக்குகிறார், கிரியைசெய்கிறார், பேசுகிறார்.

'ஆதியிலே தேவன்' என்ற வசனம் சகல கள்ளக்கோட்பாடுகளையும் தள்ளி, பின்வரும் கொள்கைகளை நிராகரிக்கிறது:—

(1) நாஸ்திகம். தேவன் இல்லை என்று மறுக்கிற கொள்கை.

(2) சடப்பொருள் உபதேசம். சடப்பொருள்களெல்லாம் ஆதிமுதலாகவிருக்கிறதென்ற உபதேசம்.

(3) பல தேவவணக்கம். இயற்கையானது பல தேவர்களால் உண்டானது என்று சாதிக்கிற கொள்கை.

(4) ஜகத்துவாதம். சமஸ்தமும் பிரமம் என்று சொல்லுகிற கொள்கை.

(5) அஞ்ஞானம். இயற்கையானது உள்ளபடியே இருக்கிறது. தேவன் ஒருவர் ஒருவேளை இருக்கலாம் அல்லது இல்லாதிருக்கலாம் என்று சந்தேகிக்கிற கொள்கை.

மேற்சொன்ன 'ஆதியிலே தேவன்' என்ற வசனம், தேவனை சிருஷ்டிக்கப்பட்ட எல்லாவற்றுக்கும் மேலானவர் என்றும் அவைகளுக்கு பிரத்தியேகமானவர் என்றும் விளக்குவிக்கிறது. ஆதி. 1—2: 3 வரை 28 வாக்கியத்துக்குள்ளே 46 தடவை தேவன் கிரியைசெய்கிறதாகக் காண்பிக்கிற குறிப்புகள் வருகிறது. எல்லாம் அவருடைய சித்தத்தின்படியே செய்யப்பட்டதாக அறிந்துகொள்ளுகிறோம்.

பேசுகிறவர் யாரென்றும் செய்கிறவர் யாரென்றும் தப்பெண்ணம் கொள்ளாதபடிக்கு தெய்வீக ஆளாக தேவன் விவரிக்கப்படுகிறார். 'அவர் பேசினார்; அது முடிந்தது.' இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கக் கட்டளையிட்டார்' ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில் வருகிற 'ஆதியிலே' என்ற வார்த்தைக்கும், பரி. யோவான் சுவிசேஷம் முதலாம் அதிகாரத்தில் வருகிற அதே வார்த்தைக்கும் பெரிய வித்தியாசம் உண்டு. ஒன்று சிருஷ்டிக்கிற வல்லமையின் ஆதியையும் மற்றது நித்தியத்தின் ஆதியையும் குறிக்கிறது. ஆதி. 1-ம் அதி. முதல் வாக்கியத்துக்கும் இரண்டாம் வாக்கியத்துக்கும் இடையில் நடந்த அநேக விஷயங்கள் எழுதப்படவில்லை.

பூமி அல்லது சடப்பொருள் முதலாவது சிருஷ்டிக்கப்பட்டதென்று சொல்லப்படவில்லை. 1-ம் வாக்கியத்துக்கும் 2-ம் வாக்கியத்துக்கும் இடையில் அநேக காலங்களுண்டென்று அனுமானிக்கலாம். ஆதி எப்



போது உண்டானதென்று ஒருவராலும் சொல்லமுடியாது. கிறிஸ்துவுக்கு முன் 4000 வருஷம் என்றாவது, சிருஷ்டிக்கப்பட்ட காலம் பத்து லட்சம் வருஷத்துக்கு முன்னென்றாவது சாஸ்திரம் தீர்மானித்துவிட்டாலும், வேதாகமத்தின் முதல் வாக்கியத்துக்கும் இந்த சத்தியங்களுக்கும் யாதொரு விகற்பமுமில்லை. 2-ம் வாக்கியம் பூமியின் ஆதி நிலைமையோ, பாவத்தினால் உண்டான நிலைமையையோ குறிக்கிறதென்ற விஷயம் கவனிக்கப்படத்தக்கது. 'பூமியையும் வெறுமையாயிருக்கச் சிருஷ்டியாமல் அதைக் குடியிருப்பாகச் செய்தார்' என்று ஏசாயா 45: 18-ல் சொல்லியிருக்கிறது. இதைப்பற்றி விஸ்தாரமாய் இப்போது கவனிக்க ஏதுவில்லை. ஆறுநாள் படைப்புகளையும் அடியில் காட்டிய விபரப்படி மும்மூன்று நாட்களாகப் பிரித்துக் கவனிக்கலாம்.—

| சடப்பொருள் யுகம். | ஜீவப்பொருள் யுகம். |
|---|---|
| 1. ஒளி. | 1. வெளிச்சத்தின் சுடர்கள். |
| 2. வானங்கள். | 2. மச்சம், பறவைகள். |
| 3. பூமியும் தாவரங்களும். | 3. உயிர்ப்பிராணிகளும், மனிதனும் |

'ஒருநாள்' என்று சொல்லும்போது, 24 மணிநேரமுள்ள நாளோ அல்லது நீண்ட காலயுகத்தைக் குறிக்குமோ என்று நினைக்கலாம் (சங். 90: 4; 2 பேது. 3: 8). சிருஷ்டிப்பில் திரியேக தேவன் மூவரும் சம்பந்தப்பட்டவர்களே. பிதா. (அப். 4: 24; 14: 15; ரோ. 1: 25-35); குமாரன் (யோவா. 1: 3; 1 கொரி. 8: 6; கொலோ. 1: 16, 17; எபி. 1: 2); பரிசுத்த ஆவி (யோபு. 33: 4; சங். 33: 6; 104: 30; ஏசா. 40: 12–14).

2. ஏதேனிலிருந்து ஆதி மனுஷர் துரத்தப்பட்டது (ஆதி. 3-4). இது ஒப்புமையுமல்ல, உவமானமுமல்ல; வாஸ்தவமாக நடந்த சத்தியமே (2 கொரி. 11: 3; 1 தீமோ. 2: 13, 14; ரோ. 5: 12). மத்தேயு ஹென்றி என்பவர் சொல்லுகிறபடி, வேதாகமத்தில் வருகிற பல துக்க செய்திகளெப்படியோ அப்படியே இதுவும் இருக்கிறது.

3. ஜலப்பிரளயத்துக்குக் காரணமாயிருந்த தீமைக்கு நடத்தின இறங்குபடி (ஆதி. 5-9). ஆதி மனிதர் தவறினது முதல் பாவத்தின் பயங்கரமான முடிவு இன்னதென்பது காயீனுடைய உத்தரவிலிருந்து அறிந்துகொள்ளலாம். சீரழிவு வேகமாய் வந்துவிட்டது. தேவ புத்திரர் மனித புத்திரரோடு சம்பந்தம் கலந்ததினாலே தவறிப்போன ஜனத்தின்மேல் தேவ தண்டனை வந்தது. பேழைக்குள்ளிருந்த 8 பேரைத் தவிர மற்ற யாவரும் அழிந்தார்கள்.

4. பாஷை தாறுமாறு (ஆதி. 10-11). 10-ம் அதிகாரத்தில் வருகிற வம்ச வரிசை கவனிக்கப்படத்தக்கது. வெளியரங்கமான ஐக்கியத்துக்கு அடையாளமாக பாபேல் கோபுரம் கட்டப்பட்டது. ஒரு கோபுரம்

கட்டவேண்டுமென்ற ஆசை நன்றாய்த்தானிருந்தது. அவ்வாறு ஜனங்கள் ஏகமாயும் உற்சாகமாயும் எழும்பி வேலையைச் செய்தபோதிலும், பார்க்கர் சாஸ்திரியார் சொல்லுகிறபடி 'தப்பிதமான வழியில் சென்ற பந்துக்கட்டு' என்னும் மனுஷ எண்ணத்தைத் தேவன் எவ்விதமாய்க் குலைக்கிறார் என்று 11: 7-ல் பார்க்கலாம். அதின் பலன் 8, 9-ம் வா-ல் வருகிறது.

II பூர்வ பிதாக்களின் சரித்திரபாகம் (அதி. 12-50) இப்பொழுது இவ்வாகமத்தின் பின்பாகத்திலுள்ள 39 அதிகாரங்களடங்கிய பெரிய பாகத்தைக் கவனிக்கலாம். அடியில் வரும் குறிப்பின்படி 4 பெரிய ஆள் களுடைய பெயர்களைக்கொண்டு இந்தப்பாகத்தைப் படிக்கலாம். (1) ஆபி ரகாம், 12-25 அதி. (2) ஈசாக்கு, 25-28 அதி. (3) யாக்கோபு, 28-36 அதி (4) யோசேப்பு, 37-50 அதி.

1. **ஆபிரகாம்.** 12-25 அதி. இவனுடைய அழைப்பின் சம்பந்தமாய் கொடுக்கப்பட்ட கட்டளையும் வாக்குத்தத்தமும் கவனிக்கப்படத்தக் கதே. அந்த வாக்குத்தத்தத்தில் எழுவகையான ஆசீர்வாதங்களடங்கியிருக் கிறது (12: 2, 3). வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்கு மறுபடியும் புதுப்பிக்கப் பட்டது (13: 14-16; 17; 5-8; 18: 18; 22: 16-18); ஈசாக்குக்கும் மறுபடி யும் புதுப்பிக்கப்பட்டது (20: 3, 4). யாக்கோபுக்கும் புதுப்பிக்கப்பட் டது (28: 13, 14; 35: 11-12).

2. **ஈசாக்கு** (25: 19-27: 5). ஈசாக்கின் சரித்திரமானது தொடர்ந் தேர்ச்சியாய்ச் சொல்லப்படாதபட்சத்திலும் மேலேகாட்டிய வாக்கியங் களைச் சேர்த்து வாசிப்பதினால் ஒரு மொத்த சரித்திரமாகலாம். இந்த சரித் திரம் முற்பிதாக்கள் மூவரிலும் மிக சுருக்கமானது.

3. **யாக்கோபு.** (அதி. 28-36). இவனுடைய பிறப்பு, ஈசாக்கை ஏமாற்றினது, வீட்டைவிட்டு ஓடினது, பெனுவேலின் தரிசனம் ஆகிய இவைகளை வேதாகமத்தைப் படிக்கிற ஒவ்வொருவரும் ஆராயவேண்டிய குறிப்புகள். உடன்படிக்கையின் தூதனுவரால் ஆசீர்வதிக்கப்பட்டு, புதிய நாமத்தைப் பெற்றுக்கொண்டான். 'தேவப்பிரபு' என்றர்த்தமுள்ள 'இஸ்ரவேல்' என்றழைக்கப்படுகிறான். யாக்கோபின் ஜீவியத்தின் விசேஷ போதனையை நீதி. 3: 5, 6-ல் பார்க்கலாம்

4. **யோசேப்பு** (37-50 அதி.) இவன் யாக்கோபின் முதிர் வயதில் பிறந்தவன் ஆதலால் தகப்பன் விசேஷமாய் நேசித்தான். யோசேப்பின் ஜீவியத்தில் அதிகமான வாழ்வும் தாழ்வுமுண்டு. எகிப்தின் அடிமைத்தனம் 39: 1-6; சோதனை 39: 7-12; அவதூறு 39: 13-19; சிறையிருப்பு 39: 20-23; கொடுமை 40: 1-4; அசட்டைசெய்யப்பட்டது 40: 5-15. கடைசி யாக எகிப்தின் அதிபதியாக உயர்த்தப்பட்டது.



# இஸ்ரவேலர் செய்த நாலு தப்பிதங்கள்.

'அவர்கள் பரிசுத்த ஸ்தலத்தில் இஸ்ரவேலின் தேவனுக்குச் சர்வாங்க தகனபலி செலுத்தாமலும், தூபங்காட்டாமலும், விளக்குகளை அணைத்துப் போட்டு, மண்டபத்தில் கதவுகளையும் பூட்டிப்போட்டார்கள்' (2 நாளா. 29: 7).

தேவாலய விஷயமாய் இஸ்ரவேலர் செய்த நாலு தப்பிதங்கள் இங்கே காட்டப்படுகிறது. தேவாலயமே தேவன் தமது ஜனங்களைச் சந்திக்கிற இடம். ஜனங்கள் கூடிவருகிற ஸ்தலம். தேவனை ஆராதிக்கவும் பாடவும் இந்த இடத்திற்கு வருவார்கள். இது பழைய ஏற்பாட்டு ஆலயம். ஆனால் புதிய ஏற்பாட்டு ஆலயம் விசுவாசியின் சரீரமே. இந்த வாக்கியத்தைக் கொண்டு சில போதனைகள் கற்றுக்கொள்வோம்:—

1. **கதவை அடைத்தார்கள்.** ஜெப ஜீவியக் கதவு அடைபட்டால் தேவனுக்கும் நமக்கும் ஐக்கியமில்லை. பாவம் எப்பொழுதும் மனிதனைத் தேவனைவிட்டுப் பிரிக்கிறது. 'என் இருதயத்தில் அக்கிரம சிந்தைகொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார் (சங். 66: 18). இஸ்ரவேலரின் ஆலயத்தில் பாட்டிருந்தது, தூபமிருந்தது, ஜெபமிருந்தது. அடைபட்ட போதோ, ஒன்றும் நடக்கவில்லை. உன் இருதயம் எப்படிப் பட்டது? துதி, ஜெபம் உண்டா? இல்லையானால் அடைபட்டிருக்கிறது. முகத்தில் சந்தோஷமில்லாததற்குக் காரணமென்ன? உன் இருதயம் அடைபட்டிருக்கிறது.

2. **விளக்குகளை அணைத்துப்போட்டார்கள்.** எல்லாம் இருள் மோசே 40 நாள் மலையில் இருக்கையில் முகம் பிரகாசித்தது. இருதயத்தில் தீபமில்லாதவன் ஆண்டவருக்காக சாட்சிகொடான். தூக்கமயக்கமாயிருக்கிறான். யோவான் ஸ்நானகன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான். ஆனால் சிலர் புகைகிற கொள்ளிக்கட்டைகள் போலிருக்கிறார்கள். ஜீவியத்தில் ஓயாத முறுமுறுப்பு, திருப்தியில்லை. அவர்களிடமிருந்து வீசக்கூடிய நற்கிரியையாகிய வெளிச்சம் யாதுமில்லை. கர்த்தராகிய இயேசு, 'நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்' என்று சொல்லியபடி இருக்கிறோமா?

3. **தூபங்காட்டவில்லை.** பலியின் தூபம் தேவனுக்கும் பிரியம். சுகந்த வாசனை எழும்பும்போது தேவன் முகருவார். ஆ! உன்னில் தூபம் உண்டா? தற்பிரதிஷ்டை செய்திருக்கிறாயா? இயேசு சுவாமியின் ஜீவியம் வாசனைபொருந்தியதாயிருந்ததே. ஒரு சிறுபிள்ளை டாக்டர் மில்லர் தெருவழியே போகிறதைப் பார்த்து "அவர் முகதரிசனை என்னை மாற்றினது" என்று சொன்னதாம். அன்பின் வாசனையாகிய தூபம் உன்னில் உண்டா?

4. **பலிசெலுத்தவில்லை.** கிறிஸ்துவே பூரண பலி. நமக்காகத் தம்மையே கொடுத்தார். நாமும் நம்மை ஜீவபலியாக தேவனுக்குப் படைக்கவேண்டும் (ரோமர் 12: 1).

பிரியமான சகோதரரே, நமது சரீரமாகிய ஆலயத்தில் நமது ஆண்டவர் வாசம்பண்ணத்தக்கதாக நமது இருதய கதவைத் திறந்துகொடுப்போமாக. "இதோ! வாசற்படியிலே நின்று தட்டுகிறேன், ஒருவன் என் சத்தத்தைக் கேட்டுக் கதவைத் திறந்தால் அவனிடத்தில் நான் பிரவேசித்து அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்" (வெளி. 3: 20).

## தேவனுக்கே மகிமையுண்டாவதாக!

நான் இந்து மார்க்கத்தில் பிறந்து, அஞ்ஞான பெற்றோர்களால் வளர்க்கப்பட்டு, பதினெட்டு வயதுவரை மெய்த்தெய்வத்தைப்பற்றிய அறிவில்லாமல், பற்பல தெய்வங்களை வணங்கி, அந்தகாரத்தில் மூழ்கி, பாவபாசங்களால் கட்டுண்டவனாயிருந்தேன்.

சிறுபிராயத்தில் மிஷன் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருக்கும்போது, வேத போதனையடைந்து, கிறிஸ்து இரட்சகரை அந்தரங்கத்தில் விசுவாசித்து, கிறிஸ்தவக் கோவிலுக்கும் சில சமயம் போய் வந்தேன்.

இந்த விசுவாசம் அறிவோடு கூடியிராமல், பிள்ளைப்பக்திக்கேற்றதாய் மாத்திரமிருந்ததினால், நான் மிஷன் பள்ளிக்கூடத்தை விட்டுவிட்டு, இந்துப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்கும்போது, இந்து டிராக்ற்று சொஸைற்றியின் வேத விரோத பிரசங்கிகளின் போதனைகளினாலும், அஞ்ஞான உபாத்திமார்களின் உபதேசங்களினாலும், என் விசுவாசங்குன்றி, நானும் கிறிஸ்து மார்க்க விரோதிகளின் கூட்டத்தில் சேர்ந்து, கிறிஸ்து இரட்சகரையும், அவர் ஊழியர்களையும் தூஷிக்கும் வேத விரோதியாகிவிட்டேன். அக்காலத்தில் பற்பல மாம்ச இன்பங்களுக்கும் இடங்கொடுத்து, பாவங்களிலும் அக்கிரமங்களிலும் மரித்தவனாயிருந்தேன். ஆனாலும் இந்து மார்க்கத்தின் பக்தி முறைப்படி ஆத்ம ஈடேற்றம் அடையலாமென்றெண்ணி, இந்து தெய்வங்களின் நாமங்களை (ராம, ராம, சிவ, சிவ) அடிக்கடி மனதில் உச்சரித்து, தியானித்தும் வந்தேன். திருச்செந்தூருக்கு மாதாந்தம் போனேன். என் தமயனார் காவடிஎடுத்து ஆடினபோது, நானும் இடும்பசுவாமி ஆடினேன். சுப்பிரமணியன் என்ற இந்து தெய்வத்தின்பேரில் மிக்க பக்தி வைராக்கியமுண்டு. இன்னும் பற்பல நியமங்களையும் செய்து வந்தேன். ஆனாலும் என்னுடைய பாவ பாசங்களினின்று நான் விடுதலையடையவுமில்லை. விடுதலை அடைய மனம் உண்டாகவுமில்லை. "தெய்வம் எப்படியோ அப்படியே பக்தர்களும்" என்றபடி பாவம் நிறைந்த இந்து



தெய்வங்களைப்போலவே நானும் பாவபாசங்களுக்கு அடிமையாகவே இருந்தேன்.

தேவச்செயலால் நான் மறுபடியும் ஆத்மவிசாரியாகும்படியான சில சம்பவங்கள் என் ஜீவியத்தில் உண்டாக, மறுபடியும் மிஷன்பள்ளிக்கூடத்தில் சேர்ந்துபடிக்க நேரிட்டது. சிறு பிராயத்தில் என் இருதயத்தில் விழுந்த தேவ வசனமாகிய விதை முளைக்க ஆரம்பித்தது. வேத போதனையை ஆவலாய்க் கேட்டேன். வேத ஆராய்ச்சி பண்ணினேன். பற்பல சன்மார்க்க புஸ்தகங்களையும் வாசித்தேன். இந்து தெய்வங்களையும், இந்து மார்க்க தப்பறைகளையும் வெறுக்க ஆரம்பித்தேன். இரக்ஷகபெருமானாகிய இயேசு சுவாமியே மெய்த்தேவனென்றும், உலக இரட்சகர் என்றும் அறிந்து, விசுவாசித்து அந்தரங்கத்தில் ஜெபித்தும் வந்தேன். சிலகாலம் அந்தரங்க விசுவாசியாயிருந்தபின் பின்னர், என் விசுவாசத்தை என் உடன் மாணாக்கருக்கும், பெற்றோர் மற்றோருக்கும் தெரியப்படுத்தி, இயேசு கிறிஸ்துவே பரிசுத்தமுள்ள மெய்த்தேவன், பாவநாசகர் என்று சாட்சி கூறத்துவங்கினேன். உடன் மாணாக்கர்களும், பெற்றோர் முதலானோர்களும் என்னைத் தூஷிக்கவும், துன்பப்படுத்தவும் ஆரம்பித்தார்கள். "ஆனபடியால் நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (II கொரி. 6: 17) என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொன்னபடியே நானும் என் பெற்றோர்களையும் இனஜனத்தார்களையும் வெறுத்துவிட்டு, அவர் அடியார்களோடு சேர்ந்துகொண்டேன். 1894ம்௵ ஏப்பிரல்மீ 8உ ஞானஸ்நான தீட்சைபெற்று திருச்சபையில் சேரும் சிலாக்கியமும் பெற்றேன். இயேசுசுவாமியின் நாமத்தில் உத்தம விசுவாசம் வைத்து, அவரை என் இருதய கமலத்தில் என் ராஜவாக நான் ஏற்றுக்கொள்ளவே, அவர் என் பாவங்களையும் எனக்கு மன்னித்தது மாத்திரமல்ல, நான் முந்தி சந்தோஷமாய்ச் செய்துவந்த என் பாவ இன்பங்களையெல்லாம் வெறுக்கவும் செய்தார். இரட்சிப்பின் சந்தோஷத்தையும் நிச்சயத்தையும் என் இருதயத்தில் அருளினார். தினம் தினம் அவர் என்னை புதுப்பித்து, பரிசுத்தமாக்கி, பாவத்தின்மேல் ஜெயம் தந்தும் வருகிறார். அஞ்ஞான தெய்வங்களை நான் சேவித்துவந்த காலத்தில் இப்படிப்பட்ட ஆத்ம நன்மைகளுக்கு நான் தூரமானவனாயிருந்தேன்.

"கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன். முன்பு யூதரிலும், பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவன் எவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது" என்ற சத்தியத்திற்கு நானும் அனுபவ சாட்சி கூறுகிறேன்.

1148



**சந்தா வரவு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Mr. Ponniah, Palamcottah 1914 | ... | ... | 0 | 7 | 0 |
| Rev. H. A. D. Moorehouse, Ooty | ... | ... | 1 | 6 | 0 |
| B. W. Roy Esq., Ranipet | ... | ... | 2 | 0 | 0 |
| Mr. R. I. Alexander, Coonoor | ... | ... | 1 | 6 | 0 |
| „ A. P. Maduram Raj, Kaluthuretti | ... | ... | 1 | 6 | 0 |
| „ John D. Peter, Kattoreddipatti | ... | ... | 0 | 15 | 0 |
| „ A. E. Abraham, Galle | ... | ... | 0 | 15 | 0 |
| „ S. Muthusami, Pillai Melasaitalei | ... | ... | 0 | 15 | 0 |
| „ P. Joseph Catechist, Paganady | ... | ... | 0 | 15 | 0 |
| Daniel Anbudayan Esq., | ... | ... | 0 | 15 | 0 |
| Mr. Peter Isaac, Ariankavu | ... | ... | 0 | 15 | 0 |
| „ M. Gnanamuthu, Sholamalai | ... | ... | 0 | 15 | 0 |
| „ Guru Manikam, Karur | ... | ... | 0 | 15 | 0 |
| Miss A. Balasundaram, Royapettah | ... | ... | 0 | 15 | 0 |
| Mr. P. Davamoni, Pragasapuram | ... | ... | 0 | 15 | 0 |
| „ G. Lazarus | ... | ... | 0 | 15 | 0 |
| Rev. S. Samuel, Villupuram | ... | ... | 0 | 15 | 0 |
| Mr. P. V. Daniel, Rangoon | ... | ... | 0 | 7 | 0 |
| Rev. P. Jacob, Jabalpore | ... | ... | 1 | 6 | 0 |
| Mr. James Solomon, Rangoon | ... | ... | 0 | 8 | 0 |
| „ J. A. Muthuvelu, Ceylon | ... | ... | 1 | 6 | 0 |
| „ R. Zacharia, Vellore | ... | ... | 1 | 6 | 0 |
| „ Dharmakan, Ilanji | ... | ... | 1 | 6 | 0 |
| „ Jesudason Gnanapragasam, Mookupiri | ... | ... | 0 | 3 | 0 |
| „ D. Samuel, Pudukottah | ... | ... | 0 | 7 | 0 |
| „ Joshua, Panrutti | ... | ... | 1 | 0 | 0 |
| „ S. Samuel, Tiruvathi | ... | ... | 0 | 7 | 0 |
| | | | 0 | 7 | 0 |

## நோட்டீஸ்

ஜீவத்தண்ணீர் மானேஜராகிய Mr. G D. தேவதாசன் அவர்கள் கர்த்தருடைய ஊழியத்துக்கென்று தெரிந்தெடுக்கப்பட்டு வேத கலாசாலையில் சேரப்போகிறபடியால் பத்திரிகை விஷயமான கடிதங்களும் சந்தாக்களும் அடியில் காட்டிய விலாசத்துக்கு அனுப்பும்படி நண்பர் யாவரையும் கேட்டுக்கொள்கிறேன். ஜுன் ஜுலை மாசப் பத்திரிகைகள் பிந்திவிட்டதற்காக சந்தாதார்கள் தயவுசெய்து மன்னிக்கும்படி கேட்கிறேன். இனிமேல் பத்திரிகைகள் ஒழுங்காய் வருமென்று நம்புகிறேன். பாக்கி சந்தாதார்கள் உடன் பணமனுப்பக் கேட்கிறேன்.

**Rev. R. V. Asirvadam,**
*C. M. S. Office*
*Palamcottah.*

Printed at the Church Mission Press, Palamcottah and Published by the Christian Brotherhood Association Tinnevelly.

OFFICE OF THE REGISTRAR OF ... 29 SEP 1914 MADRAS

July, 1914. Registered No. M. 163

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

“ என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்.” (யோவான் 7: 38)

Vol. XV ஜுலை 1914

## ரட்சிக்கப்பட்டவனின் சாட்சி.

ருஷியா தேசத்திலுள்ள பின்லாண்ட் நாட்டிலிருந்து ஓர் சிறு கப்பல் இங்கிலாந்துக்குப் புறப்பட்டது. வழிநெடுகக் காற்றும் புசலுமே அதன் பங்காயிருந்தது. கரைக்குச் சமீபிக்கிற சமையத்தில் பெரும் புசலடித்து சில நிமிஷங்களுக்குள்ளாக கப்பல் மிகுந்த அபாயத்திலிருந்து, கப்பல் உடைந்து நொறுங்கி, மாலுமியும் பிரயாணிகள் யாவரும் சமுத்திரத்தில் ஒவ்வொருவராய் மாண்டார்கள். ஒரு மனுஷன் மாத்திரம் உடைந்த கப்பல் துண்டில் ஒன்றைப்பற்றிக்கொண்டு சகாயத்துக்காக அபயமிட்டுக் கொண்டேயிருந்தான். இந்தச் சமயத்தில் கப்பல் அமிழ்ந்துபோன இடத்துக்குச் சமீபத்திலுள்ள பிளிமத் துறைமுகத்தில் ஓர் யுத்தக் கப்பல் தங்கியிருந்தது. அந்தக் கப்பலில் ஜோயி என்ற ஓர் மனிதன் வேலைசெய்து கொண்டிருந்தான். அவன் குணப்பட்டுத் தன்னைக் கர்த்தருக்கு ஒப்புவித்தவன். கப்பலில் ஆண்டவருக்கு நற்சாட்சியாய் ஜீவித்துவந்தான். அவனுக்குப் பலத்த சோதனைகளுந் துன்பங்களும் இருந்தது. என்றாலும் அவனுடைய வெளிச்சம் பிரகாசித்துக்கொண்டு வந்தது. மோசத்திலிருந்த பின்லாண்ட் தேசத்தானாகிய மனுஷனுடைய சத்தத்தை ஜோயி கேட்டுக்கொண்டான். கடல் மிகவும் அமளியாயிருந்தது. யாரும் அச்சமயம் சகாயம் செய்ய ஏலாத நிலைமையில் இருந்தது. ஜோயி என்பவன் அவன் சத்தத்தைக் கேட்டதுமுதல் அவனுக்குள் மிகுந்த அனுதாபமும் கிறிஸ்துவின் சிந்தையுமுண்டாகி தன் மாலுமியினிடத்தில் ‘ஐயா, அதோ ஓர் மனுஷன் மிகுந்த அபாய நிலைமையிலிருக்கிறான். அவன் பரிதாப சத்தம் என் காதுகளில் விழுகிறது. நான் எப்படியும் போய் அவனை ரட்சிக்கவேண்டும்.

தயவுசெய்து உத்தரவு கொடும்' என்றான். மாலுமி அவனைப்பார்த்து 'அது உன்னால் கூடாது உன் ஜீவனை இழந்துபோக நேரிடும். கடல் அதிகக் கொந்தளிப்பாயிருக்கிறது' என்றார். ஜோயி பிடிவாதமாய், ஐயா, எனக்கு உத்தரவு கொடும், நான் பிரயாசப்படுகிறேன். நான் பார்த்துக்கொண்டிருக்க அந்த மனுஷன் சாகிறது எனக்கு வருத்தமாயிருக்கிறது என்றான். மாலுமி அவன் மதியீனமான துணிகரத்துக்காக வருத்தப்பட்டுக் கடைசியில், 'நல்லது, உன்னால் கூடுமானால் பார்' என்றார். ஜோயி உடனே குதித்து அந்த மனுஷனண்டை நீந்திப்போனான். அலைகள் ஒன்றின்பின்னொன்றாய் அவன்மேல் மோதியும் தைரியம் விடாமல் தன்னைக் கர்த்தருக்கொப்புவித்து அந்த மனுஷன் ரட்சிக்கப்படுவதற்காகக் கர்த்தரைநோக்கி வேண்டிக்கொண்டு அந்த மனுஷனண்டை மிகுந்த பிரயாசத்தோடே போய் அவனை கப்பலண்டை கொண்டுவரக் கப்பலிலுள்ளவர்கள் இருவரையும் தூக்கியெடுத்தார்கள். ஜோயி மிகுந்த சந்தோஷமடைந்து கர்த்தரை துதித்தான். மறுநாள் மாலுமி கப்பலிலுள்ள 500 வேலையாட்களையும் வரவழைத்து அவர்களெல்லாருக்கு முன்பாக ஜோயியின் வீரதீரச் செய்கைக்காக அவனைப் புகழ்ந்துகொண்டு அவனைத் தனியே அழைத்து 'இப்படிச்செய்ய உன்னை ஏவின காரணமென்ன?' வென்று கேட்டார். ஜோயி மாறுத்தரமாக, 'ஐயா, நான் மரணத்துக்குப் பயப்படுகிறதில்லை. ஏனென்றால் இயேசுகிறிஸ்து என் ரட்சகராயிருக்கிறார்' என்றான்.

ஜோயி ரட்சித்த அந்தப் பின்லாண்ட் தேசத்து மனுஷன் தன்னுடைய நன்றியறிதலை வெளிப்படுத்த விரும்பியும் அங்கிலேய பாஷை நன்றாய்த் தெரியாததால் ஜோயி தன் வேலையைச் செய்துகொண்டு திரியும் இடமெங்கும் அவன் பக்கத்திலேயே நின்று அவன் முகத்தை உற்றுப் பார்த்து 'நல்லவர், பக்ஷமுள்ளவர், என்னைக் காப்பாற்றினீர்' இப்பேர்க்கொத்த வார்த்தைகளைத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருந்தான். ஜோயி அவனுடைய உயிரைக் காப்பாற்றினது போதுமென்றிராமல் அவன் ஆத்துமா ரட்சிக்கப்படவேண்டுமென்ற வாஞ்சையுள்ளவனாய் அவன் குணப்படும்படி ஜெபித்துக்கொண்டு வந்தான். இருவரும் எங்கே போனாலும் ஒன்றாய்ப் போவார்கள், ஜோயி தன்னால் கூடியமட்டும் ரட்சிப்பின் வழியை அவனுக்கு விவரித்துக் காண்பித்தான். பாஷை தெரியாததால் அதை விளங்கப்பண்ணுவது கூடாததாயிருந்தது. கடைசியாக ஓர் சிநேகிதன் பின்லாண்ட் பாஷையில் அச்சடித்திருந்த ஓர் சுவிசேஷத்தை அவனுக்குக் கொடுக்கவே அதை வாசிக்க வாசிக்க இயேசுகிறிஸ்துவின் அன்பையும் அவருடைய ரட்சிப்பின் வழியையும் நன்றாய் அறிந்து குணப்பட்டான். சிறிதுகாலத்துக்குப்பின் அவன் தன் சொந்த தேசத்துக்குத் திரும்பிப்போய் தான் ரட்சிக்கப்பட்ட விதத்தைத் தன் தேசத்தாருக்குச் சாட்சியாய் அறிவித்து அநேகர் ரட்சிக்கப்படுவதற்குக் கருவியாயிருந்தான்.



## தேவனுக்கே மிகமேன்மை

சில வருஷங்களுக்குமுன் ஓர் சனிக்கிழமை சாயந்தரம் என் கையில் யாதொரு பணமுமில்லாமல் செலவழிந்து போயிற்று. மாதக் கடைசியானதால் சம்பளம் போடுகிறதற்கு முன் வீட்டுச்செலவுகளுக்கும் மறுநாள் காணிக்கைக்குங்கூட வழியில்லாமலிருந்தேன். மற்றவர்களிடத்தில் போய்க் கடன் வாங்குவதும் தகாதென்று என் மனதில் உணர்ந்து ஆண்டவரை நோக்கி என் மனதின் வருத்தங்களையும் அவசரத்தையும் சொல்லிவிட்டு உலாவும்படியாக வீட்டைவிட்டுப் புறப்பட்டேன். சற்றுத்தூரம் போனபோது என் சிநேகிதனொருவர் 4 அணாவை யெடுத்து என்னிடம் கொடுத்து 'இது நான் உங்களுக்குத் தரவேண்டிய பணம். மறதியினால் 3 மாதமாகிவிட்டது. என் கைக்குறிப்பைப் பார்த்தபோது தான் நான் இதைத் திரும்பக் கொடுக்கவில்லையென்று கண்டேன். தயவுசெய்து வாங்கிக்கொள்ளுங்கள்' என்று சொல்லித்தரவே நான் ஆண்டவரைத் துதித்து என் சிநேகிதரிடத்தில் சகல விவரத்தையும் சொல்லி இருவரும் ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினோம்

## வேதாகம ஆராய்ச்சி

### கனம் யோசேப்பு W. கெம்ப் ஐயரவர்களால் நடத்தப்படும் வேதாகமப் பாடமுறை.

### யாத்திராகமம்.

ஆகமத்தின் பேர். செப்துவஜின்த் திருப்புதலில் 'பிரயாணம்' என்றர்த்தங்கொள்ளும் கிரேக்குப் பதத்திலிருந்து இந்தப் பேர் வருகிறது. எபி 11: 22-ல் இவ்வார்த்தை இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்ட பிரயாணத்தைக் குறிக்கிறது. புதிய ஏற்பாட்டின் மற்றப் பாகங்களில் இந்த வார்த்தை மரணம் என்ற கருத்துள்ளதாய் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது (லூக் 9: 31, 2 பேது. 1: 15). இவ்வாகமத்தின் மொத்தப் பொருள் 'மீட்பு' என்பதே. மரணவாதையினின்று பஸ்கா ஆட்டுக்குட்டியின் ரத்தத்தால் உண்டான மீட்பு. பார்வோனின் அடிமைத்தனத்தினின்று தேவனுடைய வல்லமையால் கிடைத்த மீட்பு. கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற ரத்தத்தால் விசுவாசிகள் மீட்கப்படுவதற்கும், அவருடைய வல்லமையால் அவர்களுடைய சத்துருக்கள் ஜெயிக்கப்படுவதற்கும் இது முன் குறிப்பு.

இவ்வாகமத்தின் திறவுகோல் வார்த்தை பஸ்கா. திறவுகோல் வசனம் யாத். 12: 23. ஆதியாகமத்துக்கும் யாத்திராகமத்துக்கும் நெருங்கின சம்பந்தமுண்டு. யாத்திராகமம் ஆதியாகமத்தின் தொடர்ச்சியென்னலாம். யாத்திராகமத்தில் யாதொன்றும் ஆரம்பிக்கவுமில்லை, முடிக்கவுமில்லை

பஷ்ப திருப்புதலின்படி யாத்திராகமத்தின் முதல் பதமாகிய 'மேலும்' என்ற வார்த்தையினால் அதற்குமுன் ஏதோவொன்று நடந்திருப்பதாகத் தெரிகிறது. மகாகனம் உவர்ட்ஸ்வர்த் அத்தியக்ஷாவர்கள் சொல்லுகிறபடி 'ஆதியாகமத்தில் பூமியானது அந்தகாரத்தினின்று வெளிச்சத்துக்குவருகிறது. யாத்திராகமத்தில் இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்தினின்று சுயாதீனமாகிய வெளிச்சமடைகிறார்கள். ஆதியாகமத்தின் துவக்கத்தில் பூமியானது சிருஷ்டிப்பினால் தற்காலஸ்திதிக்குவருமுன்னிருந்த போராட்ட நிலைமை காட்டப்பட்டிருக்கிறது. அதுபோல யாத்திராகமத்திற்கு முன்னான இஸ்ரவேலின் நிலைமை ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்ததென்று சொல்லலாம். சிருஷ்டிப்பில் பூமியானது ஜலத்தினின்று உண்டாக்கப்பட்டது. அதின்மேல் ஆவியானவர் அசைவாடிக்கொண்டிருந்தார். அப்படியே கிறிஸ்துவுக்கு முன்னடையாளமானவனும் இஸ்ரவேலின் தலைவனும், மத்தியஸ்தனும், நியாயப்பிரமாணிக்கனுமான மோசே ஜலத்தினின்று எடுக்கப்பட்டான். மேலும் தங்கள் பிள்ளைகளை ஜலத்திற்கு இரையாகக்கொடுத்த இஸ்ரவேலரும் சிவந்த சமுத்திர ஜலத்தின் வழியாய் புது ஜீவனடைந்து அதின்மேல் ஆவியானவர் மேகத்தில் அசைவாடிக்கொண்டிருக்க அவர்களெல்லாரும் மோசேக்குள் மேகத்திற்குள்ளாகவும் சமுத்திரத்திற்குள்ளாகவும் ஞானஸ்நானம் பெற்றார்கள். ஆதியாகமத்தில் பூமியானது ஜலத்தினின்று ஆவியானவரால் உண்டாக்கப்பட்டது. யாத்திராகமத்தில் இஸ்ரவேலர் ஜலத்தினின்று ஆவியானவரால் புது ஜீவனடைந்தார்கள்' என்று சொல்லலாம்.

**ஆகமத்தின் ஆக்கியோன்.** மோசே எழுதினார் என்பதை ஆக்ஷேபிக்க முகாந்தரமில்லை. அவரே எழுதினாரென்பதற்குப் பலத்த நியாயங்கள் பலவுண்டு. எகிப்தில் நீண்டகாலம் வசித்தவனும் சீனாய் தீபகல்பத்தைக் கண்ணாரக்கண்டு சகல விஷயத்தையும் திட்டமாய் அறிந்தவனுமான ஒருவனேயொழிய வேறொருவனும் இவ்வாகமத்தை எழுதியிருக்கக்கூடாது. மோசேயின் காலத்துக்கும் எரேமியாவின் காலத்துக்கும் இடையிலுள்ள எந்த இஸ்ரவேலனுக்காவது இவ்விரண்டு லக்ஷணங்களில் ஒன்றாவது இருப்பது கூடாதகாரியம். அக்காலத்திலுள்ள ஒருவன் இவ்விரண்டு விஷயங்களையும் அறிந்திருப்பானென்பது நம்பக்கூடிய காரியமுமல்ல. இஸ்ரவேல் ஜனங்களை மீட்பதற்கு முக்கிய கருவியாயிருந்த அற்புதங்களின் சரித்திரம் ஓர் பலத்த நியாயமாகும். ஏனென்றால் அக்காலத்துக்குப்பின் கானான் தேசத்தில் தோன்றிய எவனும் இவ்வித அற்புதங்களை எகிப்துக்கேற்றவிதமாய்க் கண்டுபிடித்துச் சொல்லமுடியாது.

மேலும் இந்தப் புஸ்தகத்தின் சரித்திரம் வனாந்தர ஜீவியம், கூடார ஜீவியத்தைத் தெளிவாய்க் காட்டுகிறது. இவ்விதமாய்ப் பின்னான காலத்திலுள்ளவர்கள் யோசனைசெய்து கண்டுபிடிப்பது சாத்தியமல்ல. இவ்வாக



மத்தில் மோசேயின் ஜீவிய சரித்திரமும் அவருடைய ஊழியமும்தான் மிச்சமாய்க் காட்டப்பட்டிருக்கிறது.

## ஆகமத்தின் பிரிவுகள்.

இயற்கையாக இவ்வாகமம் மூன்று பிரிவாகும்.

1. இஸ்ரவேலர் எகிப்திலுள்ள கால சரித்திரம் அதி. 1—12.
2: ,, எகிப்திலிருந்து சீனாய்க்குப்போன கால சரித்திரம் 13—18.
3. ,, சீனாய்மலையிலிருந்த கால சரித்திரம் 19—40.

இப்பிரிவுகளும் அவைகளுக்கேற்பட்ட அதிகாரங்களும் மனதில் நன்றாய்ப் பதிந்திருக்கவேண்டும். எகிப்தில், இடையில், சீனாயில் இம்மூன்று பதங்களும் ஞாபகத்திலிருந்தால் பிரிவுகளும் அதிகாரங்களும் சற்றுநேர அப்பியாசத்தால் தெளிவாகும்.

### I. இஸ்ரவேல் எகிப்திலிருந்த காலசரித்திரம். அதி. 1—12.

இப்பிரிவுக்குள்ளடங்கினதாய் நாலு வார்த்தைகளை ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். அவையாவன:—மோசே, பார்வோன், வாதைகள், பஸ்கா, இவைகளை வரிசையாய் மனனம்பண்ணினால் சரித்திரக்கோர்வை மனதில் தெளிவாகும்.

1. மோசே அதி. 1—4. யாக்கோபு எகிப்துக்குப்போன கால முதல் இஸ்ரவேலரின் அடிமைத்தனம்வரைக்குமுள்ள சரித்திரம் முதலாம் அதிகாரத்தில் வருகிறது. இது கிட்டத்தட்ட 115 வருஷ காலசரித்திரம். இக்காலத்தில் இஸ்ரவேலர் மிகவும் செழித்துச் சமாதானம் பெற்றிருந்தார்கள். ஆபிரகாம் அழைக்கப்பட்டதுமுதல் இஸ்ரவேலரின் பிரயாணம் வரைக்குமுள்ள காலம் உத்தேசம் 430 வருஷமென்கலாம். எகிப்துக்குப் போனதுவரைக்குமுள்ள 215 வருஷங்களில் இஸ்ரவேலரின் தொகை 70 மாத்திரம்தான். எகிப்துக்குப் போனதுமுதல் பிரயாணம்வரைக்குமுள்ள 215 வருஷங்களில் 70 பேர் 6 லக்ஷம் புருஷர்களாகப் பெருகி மொத்த ஜனத்தொகை 20 லக்ஷமாகிவிட்டது. இஸ்ரவேலர் எகிப்திலிருந்த காலத்தில் உலகமே விருத்தியடைய ஆரம்பித்தது என்கலாம். அதுவரை தனித்தனி ஆட்களின் சரித்திரமாயிருந்ததுபோக அதுமுதல் ஒரு ஜாதியின் சரித்திரமாக மாறிவிட்டது. 'தேவன், ஆபிரகாமை நோக்கி' 'ஈசாக்கை நோக்கி' 'யாக்கோபை நோக்கி' என்று சொன்னகாலம் கடந்து 'இஸ்ரவேலரை நோக்கி' என்று ஓர் ஜாதியோடு பேசும்படியாகக் காரியங்கள் விருத்தியடைந்துவிட்டது. இந்த ஜாதியோடு அவர் உடன்படிக்கை செய்கிறார். அந்த ஜாதியின் விசுவாசத்தினாலும் கீழ்ப்படிதலினாலும் பரிசுத்தமுள்ள ஒரே தேவனும் அவர்கள் மீட்பருமாகிய கர்த்தர் உலகத்துக்கு வெளிப்படுத்தப்படுகிறார்.

அந்நிய ஜாதியாரான இஸ்ரவேலர் பெருகிப்போகாதபடி புதிய பார்வோன் அவர்களைக் குரூரமாய் நடத்த ஆரம்பித்தான். அவர்களைச் சுமை சுமக்கிற வேலையில் கஷ்டப்படுத்தும்படி அவர்கள்மேல் ஆளோட்டிகளை நியமித்தான். தேவனுடைய ஜனங்களுக்கு உலகம் எப்போதும் சத்துருவாகத்தானிருக்கிறது சிலவேளைகளில் உலகத்திலுள்ள பரிசுத்தவான்களை அவர்கள் சொந்த மார்க்கத்தாரே துன்பப்படுத்தியிருக்கிறார்கள். இங்கிலாந்திலுள்ள ஸ்மித்பீல்ட், கால்ச்செஸ்றர் என்னும் இடங்களும், ஸ்காத்லாந்திலுள்ள கிராஸ்மார்க்கட் முதலிய இடங்களும், ஐரோப்பாவிலுள்ள வேறு சில இடங்களும் அவைகள் பேசக்கூடுமானால் மார்க்கவேஷம் தரித்த மனுஷரே தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைத் துன்பப்படுத்தி நாசம் பண்ணினார்கள் என்று சத்தமிட்டுச் சாட்சியிடும். இவர்கள் எவ்வளவுக்கு அதிகமாய்த் துன்பப்படுத்தினார்களோ அவ்வளவுக்கதிகமாய் அவர்கள் பெருகிப்பலத்தார்கள். இதுவே கிறிஸ்துமார்க்கத்தில் அடிக்கடி காணப்படும் அற்புதக் கிரியை. மிகுந்த உபத்திரவத்தின் காலமே திருச்சபைக்கு அதிகச் செழிப்பும் அனுகூலமுமான காலமாய் இருந்துவந்திருக்கிறது.

இராஜாவின் கொடிய கட்டளை கைக்கொள்ளப்படவில்லை. இராஜாவின் கோபத்திற்குப் பயப்படாமல் தேவனுக்குக் கீழ்ப்படிந்த ஸ்திரீகளுக்குத் தேவன் பலனளித்தார். அக்கிரமத்துக்கு முடிவில்லை. இன்று களவு செய்கிறவன் நாளைக் கொலைசெய்கிறான். எபிரேய ஜனங்களை அளிக்கும்படி தான் முன்செய்த பிரயத்தனம் தவறிப்போனபடியால் எபிரேய ஆண்பிள்ளைகளையெல்லாம் கொலைசெய்யும்படி ராஜா கட்டளைகொடுக்கிறான்.

அதி. 2—4 வரையுள்ள அதிகாரங்களில் மோசேயின் பிறப்பு, அதிசய பராமரிப்பு, அவனுடைய பயிற்சிகாலம், அழைப்பு, அவனுக்குக் கிடைத்த தேவகட்டளை இவைகள் அடங்கியிருக்கிறது. மோசே தன் பெற்றோருக்கு மூன்றாவது குழந்தை. அவன் சகோதரன் பேர் ஆரோன். சகோதரி பேர் மீரியாம். ஆரோன் மோசேக்கு மூன்று வயதுக்கு மூத்தவன். மீரியாம் 14 வயதுக்கு மூத்தவள். அப். 7: 17—44 ஓடு ஒத்துப்பார்க்க.

2. பார்வோன் அதி. 5—7. இவன் இஸ்ரவேலை ஒடுக்கினவன் இவன் சரித்திரத்திலும் 4 வார்த்தைகள் ஞாபகத்திலிருந்தால் நல்லது. போராட்டம், குரூரம், யெகோவா, நியாயத்தீர்ப்பு என்பவைகளே.

மோசேயும் ஆரோனும் தேவனுடைய ஸ்தானாபதிகளாகப் பார்வோனிடத்துக்குப் போய் இஸ்ரவேலரைப் போகவிடவேண்டுமென்று கேட்டார்கள். பார்வோனோ தன் இருதயத்தைக் கடினப்படுத்தி, இஸ்ரவேலரை முன்னிலும் அதிகக் கண்டிப்பாய் நடத்தினான். மோசே அதைரியமடைந்து ஆண்டவரிடத்தில் தெரிவித்தான். அவர் அவனைப்பார்த்து 'நான் பார்வோனுக்குச் செய்வதை இப்பொழுது காண்பாய்' என்றார் (அதி. 6: 1).



கர்த்தர் 'யெகோவா' (உடன்படிக்கையின் தேவன்) என்னும் நாமத்தால் தம்மை வெளிப்படுத்துகிறார். முற்பிதாக்கள் இந்த நாமத்தை அடிக்கடி உச்சரித்தபோதிலும் அதின் கருத்தை அவர்கள் நன்றாய் அறிந்துகொள்ளவில்லை. அதி. 6: 6—8 வசனங்களில் தமது உடன்படிக்கையைத் தாம் நிறைவேற்றுகிறவர் என்பதைக் காண்பிக்கும்படி 'நான் உங்களை விடுவிப்பேன், உங்களை...நீங்கலாக்குவேன்,' 'உங்களை மீட்டுக்கொள்வேன்,' 'உங்களை......சேர்த்துக்கொள்வேன்,' 'உங்களுக்குத் தேவனாயிருப்பேன்' 'உங்களைக் கொண்டுபோவேன்,' 'உங்களுக்கு ..கொடுப்பேன்' என்று ஏழு தடவை சொல்லியிருக்கிறார். சத்துருக்கள் மும்முரம் செய்தாலும் தம்முடைய ஜனங்களும் விசுவாசிக்காமற்போனாலும்கூட அவருடைய உடன்படிக்கை உண்மையுள்ளதே. இந்தச் சத்தியம் மோசேக்கு மிகுந்த தைரியத்தையும் உற்சாகத்தையும் கொடுத்து அவனுடைய பயங்களெல்லாம் நீங்கிப்போயிற்று. இவ்விதமாகவே, ஆண்டவர் அதைரியங்கொண்ட தமது ஊழியர்களைப் பெலப்படுத்துகிறார்.

3. வாதைகள் அதி. 7—12. வாதைகள் மொத்தத்தில் பத்து. ஒவ்வொன்று மூன்று வாதைகளையுடைய மூன்று பெரிய பிரிவுகளாக்கலாம். நான்காவது பிரிவுமற்றெல்லாவற்றிலும் விசேஷித்ததான கடைசி வாதை. முதல் மூன்று வாதைகளும் இஸ்ரவேலர்பேரிலும் எகிப்தியர்பேரிலும் வித்தியாசமில்லாமல் நேரிட்டது. கடைசி 7 வாதைகளும் எகிப்தியருக்கு மாத்திரம் நேரிட்டது.

பார்வோனின் இருதயக்கடினம் மொத்தத்தில் 19 தடவை வருகிறது. இதில் 11 தடவைகளில் கர்த்தர் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தினதாகவும் மூன்று தடவை பார்வோன் தன் இருதயத்தைக் கடினப்படுத்தினதாகவும் 5 தடவை பார்வோனுக்கு இருதயக்கடினமுண்டாயிற்றென்றும் சொல்லியிருக்கிறது. தேவகிருபைக்கு எதிர்த்துநிற்பதால் ஒரு மனுஷனுடைய இருதயம் கடினப்பட்டுப்போகும் என்னும் பிரமாணத்துக்கேற்கப் பார்வோன் தேவகிருபைக்கு எதிர்த்துநிற்குமளவில் தன் இருதயத்தைக் கடினப்படுத்திக்கொண்டான். மேற்சொன்ன பிரமாணம் தேவனுடைய ஏற்பாடானதால் தேவனே கடினப்படுத்தினார் என்று சொல்லியிருக்கிறது. இவ்விதம் கடினப்பட்டவிதம் மூன்று:—

(1) அவன் இருதயம் கடினப்பட்டது. (2) அவனே தன்னிருதயத்தைக் கடினப்படுத்தினான். (3) அவன் தன்னைப்பொல்லாத வழிகளில் நடக்கவிட்டுவிட்டதால் தேவன் அவனிருதயத்தைக் கடினப்படுத்தினார்.

வாதைகளாலுண்டான போராட்டம் அஞ்ஞான உலகராஜாவுக்கும் தெய்வீக பரம ராஜாவுக்கும் நடந்தது. போராட்டம் கொஞ்சக்காலமாத்திரமிருந்தது. ஆனால் மிகவும் பயங்கரமானதும் ஜெயத்தோடு முற்

றுப்பெற்றதாயுமிருந்தது. எகிப்தில் அந்தக் காலத்திலுண்டாயிருந்த விக்கிரகாராதனை பலமாய்த் தாக்கப்பட்டது. மிருக வணக்கம், சூரிய வணக்கம், ஜல வணக்கம், தேசத்தின் கொடுங்கோன்மை இவைகள் வாதைகளால் நிலைகுலைந்தது. இவ்வாதைகள் யாத். 7; 8 வசனமுதல் 12; 31 வரை விபரமாயும் சங். 78: 42-51லும் 105: 27-36லும் சுருக்கமாயும் காட்டப்பட்டிருக்கிறது.

4. **பஸ்கா** அதி. 12. வேதமுழுவதிலும் இது ஓர் முக்கிய அதிகாரம். திவ்ய வெளிப்படுத்தலிலும் மீட்பின் கிரியையிலும் இது ஓர் முக்கிய சம்பவத்தைக் குறித்துக்காட்டுகிறது. தேவன் தமது சித்தத்தை இதினால் வெளிப்படுத்துகிறார் அல்லது வேதசரித்திரத்தில் இது ஓர் முக்கிய சம்பவம் என்று சொல்லலாம். இவ்வதிகாரத்தின் முக்கிய கருத்து ‘இரத்தம்’. ரத்தத்தை நான் காணும்போது கடந்துபோவேன். ஆட்டுக்குட்டி தெரிந்து கொள்ளப்பட்டு, கொல்லப்பட்டு, புசிக்கப்பட்டது.

## II. எகிப்திலிருந்து சீனாய்வரைக்குமுள்ள சரித்திரம் அதி. 13—18.

**எகிப்திலிருந்து புறப்படல்** 13: 1—19. இஸ்ரவேல் எகிப்திலிருந்து அணியணியாய்ப் புறப்பட்டார்கள். அவர்கள் புறப்பட்ட இரவு நினைவுகூறவேண்டிய இரவுதான். யுத்தவீரரான புருஷர் 6 லக்ஷம்பேர். ஆகவே புறப்பட்ட மொத்த ஜனத்தொகை 20 லக்ஷம் என்று சொல்லலாம். அவர்களோடு புறப்பட்ட ‘பலஜாதியான ஜனங்கள்’ எகிப்திலிருந்து பயந்து அவர்களைப் பின்சென்றார்கள். எகிப்தியர் தங்கள் நகைகளை எபிரேயருக்கு இரவலாகக் கொடுத்தது மிகவும் அதிசயிக்கத்தக்கது. அடிமைத்தனத்தின் சுமைகள் நீங்கின, துன்பப்படுத்தின கொடூரன் தோல்வியடைந்தான். தேவனுடைய ஜனங்கள் மகிமையான விடுதலையடைந்தார்கள். நாம் வணங்குகிற தேவன் விடுவிக்க வல்லவர். இன்னும் விடுவிப்பார். யோ. 8: 36.

2. **பிரயாணங்கள்** அதி. 13: 20—18. கானானுக்குப்போகும் சுருக்கவழி சூவேஸ் பூசந்திவழியாகப் போய் பெலிஸ்தரின் தேசத்தைக் கடந்துபோவதே. கிட்டத்தட்ட 100 மைல் தூரமிருக்கும். 4 அல்லது 5 நாள்பிடிக்கும். இந்தவழியாய்ப் போக தேவன் அவர்களுக்கு இடங்கொடுக்கவில்லை. இதற்குப்பதிலாக சிவந்த சமுத்திரத்தின் வனாந்தர மார்க்கமாய் வழிநடத்தப்பட்டார்கள். தேவனே அவர்கள் வழிகாட்டி. அவர் அவர்களைச் சுகபத்திரமாய் நடத்திக்கொண்டுபோனார்.

## III. சீனாய்மலையிலிருந்த கால சரித்திரம் அதி. 19—40.

இந்தச் சரித்திரத்திலுமுள்ள பொருளடக்கத்தை 4 வார்த்தைகளால் குறிக்கலாம். நியாயப்பிரமாணம், கூடாரம், கன்றுக்குட்டி, ஆசாரியத்துவம்.



1. **நியாயப்பிரமாணம்** அதி. 19—24. ரெவ்தீமிலிருந்து இஸ்ரவேலர் சீனாய்க்குப்போய் மலைக்கு எதிரே பாளயமிறங்கினார்கள். சீனாய் என்றால் ‘கர்த்தருடைய புதர்’ என்றர்த்தம். சூவெஸ் ஜலசந்திக்கும் சிவந்த சமுத்திரத்தோடுசேர்ந்த அக்கபா ஜலசந்திக்கும் இடையிலுள்ள ஓர் மலை. ஜனங்களுக்காகப்பிரமாணங்களையும்கட்டளைகளையும் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும்படி மோசே மலையில் ஏறினான். ஆண்டவர் அக்கினியில் பிரசன்னமாகி இடிமுழக்கம் மின்னல் இவைகளின் மத்தியில் நியாயப்பிரமாணத்தை அருளினார் (உபா. 33: 2). இதில் சன்மார்க்கப்பிரமாணம், சடங்குப்பிரமாணம், துரைத்தனப்பிரமாணம் எல்லாம் அடங்கியிருந்தது

2. **கூடாரம்** அதி. 25—31; 35—41. கூடாரம் மூன்றுபாகமாகவிருந்தது. 1. வெளிப்பிரகாரம், அதிலுள்ள சாமான்கள். 2. பரிசுத்தஸ்தலம், அதின் பணிமுட்டுகள். 3. மகா பரிசுத்தஸ்தலம், அதின் பணிமுட்டுகள். தேவாலயக் கூடாரத்தைப்பற்றிமட்டும் கற்றறிய விரும்புகிறவனுக்குப்போதுமான ஆவிக்குரிய ஆதாரமுண்டு.

பலிபீடம் (அதி. 1). தேவாட்டுக்குட்டிக்கும், கடல்தொட்டி(அதி. 3). ஜலத்தினாலும் ஆவியினாலும் அடையக்கூடிய மறுபிறப்புக்கும். சமுகத்தப்பங்களை வைக்கும் மேசை (அதி. 6). ஜீவ அப்பத்துக்கும் பொன்னாற் செய்த குத்துவிளக்கு (அதி. 8, 9). உலகத்தின் ஒளிக்கும். தூப பீடம் (அதி. 14-16). ‘அவருடைய நாமத்தினால் வேண்டிக்கொள்வதற்கும்., கிருபாசனம் (அதி. 17). நமது ஆண்டவரின் பரிந்துபேசுதலுக்கும் முன்னடையாளமான குறிப்புகள்.

3. **பொன் கன்றுக்குட்டி** அதி. 32—34. இந்த அதிகாரங்களில் மோசேயைக் காணாததால் ஜனங்கள் பாவத்தில் விழுந்த சரித்திரம் சொல்லியிருக்கிறது. ஜனங்கள் ஆரோனிடத்தில் சேர்ந்து தங்களுக்கு ஓர் கன்றுக்குட்டியைச் செய்யக் கேட்டார்கள். கன்றுக்குட்டியை வணங்கினதுமல்லாமல் அஞ்ஞான சடங்காசாரங்களோடு சம்பந்தப்பட்ட துன்மார்க்க கிரியைகளுக்கும் உட்பட்டார்கள். தேவனுடைய சித்தத்திற்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்துவந்த இஸ்ரவேலருக்கு விரோதமாய் தேவகோபம் மூண்டது. மோசே கூடாரத்துக்குள் வந்தபோது அவர்கள் நடுவில்போய் அவர்கள் களியாட்டுகளை நிறுத்தி கன்றுக்குட்டியைக் கவிழ்த்துப்போட்டு அதை நொறுக்கித் தூளாக்கித் தண்ணீரில் கலக்கி அதையே ஜனங்கள் குடிக்கும்படி செய்தான்.

4. **ஆசாரியத்துவம்** அதி. 28, 29, 39 40. ஆசாரிய நியமுகம், உடுப்பு, பிரதிஷ்டை இவைகளின் விபரம்காட்டியிருக்கிறது. இந்தப் புஸ்தகத்திலிருந்து 25 வசனங்கள் இருக்கிறபடியேயும் 19 வசனங்களின் பொருளும் நமது இரட்சகராலும் அவருடைய சீஷராலும் புதிய ஏற்பாட்டில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| எபிரேயர் 11. 23. | யாத். 2. 2 | 1 கொரி. 10. 4. | யாத். 17. 6 |
| அப். 7. 30. | ,, 3. 2 | எபி. 9: 19-22 | ,, 24. 6-8 |
| எபி. 12. 24. | ,, 12. 7 | 1 பேது. 2. 9. | ,, 19. 6 |
| யோவான். 7. 31. | ,, 16. 15 | எபி. 12: 18-20. | ,, 19. 12 |

## 'எனக்கு ஊழியம் செய்கிறவன்.'

*ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக் கடவன், நான் எங்கேயிருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார். யோவான். 12: 26.*

'ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால்' என்று இரட்சகர் சொல்லும்போது அவருக்கு ஊழியக்காரனாவது நமது இஷ்டத்துக்குவிடப் பட்டிருக்கிறது. நமக்குப் பிரியமானால் ஊழியக்காரனாயிருக்கலாம், ஊழியக்காரனாயிராமலுமிருக்கலாம் என்று கருத்துக்கொள்ளுகிறது. மெய்தான் அவருக்கு ஊழியம் செய்வது கட்டாயமல்ல. பட்டாளத்துப் போர்ச் சேவகனைப்போலக் கட்டாயமான ஊழியம் அவருக்கு அவசியமில்லை. மனதாரச்செய்யும் ஊழியர்தான் அவருக்குத் தேவை. அடிமைகளுக் குரிய பயத்தோடு செய்யும் ஊழியமல்ல, அன்பினால் ஏவப்பட்டுச் செய்யும் ஊழியமே அவருக்குப் பிரியம்.

I. ஊழியத்தின் அழைப்பு. அவருடைய ஊழிய அழைப்பு யாவருக்குமுரியது. இயேசுநாதர் கிருபைபொருந்திய பல அழைப்புகள் அருளிச்செய்திருக்கிறார். அவைகளெல்லாம் மனுஷஜாதியனைத்துக்கும் உரிய அழைப்புகளே. 'ஒருவன் தாகமாயிருந்தால், என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன்.' ஒருவன் என் சத்தத்தைக்கேட்டுக் கதவைத்திறந்தால் நான் அவனிடத்தில் பிரவேசிப்பேன்.' 'என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால்......அவன் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான்.' மேற்சொல்லிய அழைப்புகளைப்போலவே 'ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால்' என்னும் அழைப்பும் யாவருக்குமுரியது. அவருடைய ஊழியம் சிலருக்கு மாத்திரம் கிடைத்திருக்கிற ஓர் சலாக்கியமல்ல. யார் யார் இந்த அழைப்புக்குக் கீழ்ப்படிகிறார்களோ அவர்களுக்கெல்லாம் கிடைக்கும். ஊழியம் செய்யும்முறை இன்னதென்றும், இயேசுவைப் பின்செல்லுகிறது இன்னதென்றும் இந்த வசனம் போதிக்கிறது. அருமை இரட்சகர் நடந்த பாதை தாழ்மையின் பாதை, சார்ந்து ஜீவிக்கும் பாதை, பூரண கீழ்ப்படிதலின் பாதை, தன்னை மறந்து ஜீவிக்கும் பாதை, பாடுகளின் பாதை, மரணத்தின் பாதை பலன்கிடைக்கிறதற்கு வழியும்



இதுவே. இந்தப் பாதையில் நாம் நடக்கவேண்டுமானால் உலகத்தார் அருமையாக எண்ணுகிற பல காரியங்களை விட்டுவிடவேண்டியதுவரும். கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்வதால் கிடைக்கும் உள்ளான சந்தோஷத்தை ருசிபாராதவர்கள் தங்களுக்குச் சந்தோஷமாய் பாவிக்கிற உலக இன்பங்களையும் விட்டுவிடவேண்டும். இவ்விதமாய் நாம் கர்த்தருக்கு ஊழியம் செய்தால் அவருக்காக நாம் எவைகளைத் தள்ளிவிட்டோமோ அவைகளைப்பார்க்கிலும் மேலான காரியங்கள் நமக்குக் கிடைக்கும். ஆனால் நாம் கிறிஸ்துவின் ஊழியத்தைத் தள்ளிவிட்டு உலக இன்பங்களைப் பின்பற்றுவோமானால் ஊழியஞ்செய்யத்தக்க நல்ல சலாக்கியத்தை இழந்துபோகிறதுமல்லாமல் நாம் தேடுகிறவைகளையும் அடையாமற்போவோமென்பதற்குச் சந்தேகமில்லை. சுயநயத்தோடு நமது ஜீவனை இரட்சிக்கத் தேடுவோமானால் இந்த ஜீவனிலும் இதற்குப் பின்வரும் ஜீவனிலும் நாம் பெறக்கூடிய சகல சந்தோஷங்களையும் இழந்துபோவோம். ஆனால் கிறிஸ்துவுக்காகச் செய்யும் ஊழியத்தில் நமது ஜீவனை இழந்துவிடுவோமானால் மெய் ஜீவனை அடையாமற்போவதில்லை.

II. ஊழியஞ்செய்யும் இடம். 'நான் உன்னோடிருப்பேன்' என்பது வேறே. 'நான் எங்கேயிருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்' என்பது வேறே. 'நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை' என்னும் வாக்குத்தத்தம் மாறாததே. நாம் பாவம்செய்யும்போதும் அவருடைய சமுகம் நம்மோடுதானிருக்கிறது. ஆனால் அவர் துக்கமுள்ளவராய்க் காணப்படுகிறார். 'நான் எங்கேயிருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்' என்னும்போது ஆண்டவர் இருக்கிற இடத்தில் நாம் இருக்கத் தெரிந்துகொள்வதைக் குறிக்கும். சுருக்கிச் சொல்லின், இயேசு நம்மோடிருப்பார் என்பது ஓர் வாக்குத்தத்தம். நாம் அவரோடிருப்போம் என்பது இன்னோர் சலாக்கியம். உள்நாட்டு யுத்தம் நடக்கும் காலத்தில் ஒரு சிநேகிதர் ஆபிரகாம் லின்கன் என்பவரைப்பார்த்து, 'தேவன் நமது பக்ஷத்திலிருப்பதுதான் எல்லாவற்றிலும் பெரிய சலாக்கியம்' என்றார். லின்கன் பிரதியுத்தரமாக, 'அல்ல, அல்ல, நாம் தேவனுடையபக்ஷத்திலிருப்பதே பெரிய சலாக்கியம்' என்றார். இயேசுநாதர் இப்போது எங்கேயிருக்கிறார்? கல்லறையினின்று உயிர்த்தெழுந்துவிட்டார். அங்கே பாவத்துக்கும் மரணத்துக்கும் அதிகாரமில்லை. 'எங்கேயிருக்கிறேனோ, என் ஊழியக்காரனும் அங்கேயிருப்பான்.' உலகம் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. நாமும் உலகத்துக்கு அபாத்திரராய்ப்போவோம். தமது ஜனங்கள் எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர் இருக்கிறார். 'இரண்டுபோராவது மூன்றுபோராவது என் நாமத்தினாலே எங்கேயிருக்கிறார்களோ அவர்கள் நடுவில் நானும் இருக்கிறேன்' என்கிறார். அவரோடிருப்பது நமக்குச் சந்தோஷமாயிருக்கிறதா? பொல்லாப்புக்கு விரோதமாய் நடக்கும் போராட்டத்தில்

அவர் கூடயிருந்து உதவிசெய்கிறார். தம்மோடுகூடப் பாடுகளையும் துன்பங்களையும் அனுபவிக்க யார் தெரிந்துகொள்வார்களோ அவர்களோடு இருக்கிறார். அவர் உன்னதங்களில் வீற்றிருக்கிறார். நாமும் அவரோடு கூட நித்தியகாலம் தங்கியிருக்கும்படி நம்மை அழைக்கிறார்.

III. **ஊழியத்தின் பலன்.** 'ஒருவன் எனக்கு ஊழியம் செய்கிறவனானால் பிதாவானவர் கனம்பண்ணுவார்.' அங்கிலேய பட்டாளத்தைச் சேர்ந்த போர்ச்சேவகர் தங்கள் ராஜாவுக்காகவும் தேசத்துக்காகவும் தாங்கள் இருக்கிறோம் என்றெண்ணப்படுவதையே பெருமையென்று எண்ணுகிறார்கள். ராஜபக்திக்குப் பலனுண்டு. ராஜாவுக்காகச் செய்யும் அற்ப ஊழியத்தில் வைராக்கியம் பாராட்டுகிறவர்களுக்கு மேலான பதவியும் அந்தஸ்தும் கிடைக்கும். ஊழியத்தின் பலன் எப்போதும் ஓர் பொருளாயிராது. பலனை எதிர்நோக்காமல் செய்யும் ஊழியமே அவர்களுக்குப் பலனாகும். நாம் கர்த்தரைப் பின்பற்றுவோமானால் நாம் எதிர்பார்த்திராத பலன் நமக்கு ஏராளமாய்க் கிடைக்கும். அவரோடுகூட நாம் தீமைக்கு எதிர்த்துநின்று ஜெயிப்போமானால் ராஜாவினால் கிடைக்கக்கூடிய கனத்திலும் அதிகமான கனம் நாம் பெற்றுக்கொள்வோம். அவருக்கு ஊழியம் செய்வது நமக்குச் சந்தோஷமும் மகிழ்ச்சியுமாயிருப்பதாக.

## 'ஆவியானவரால் கிடைக்கும் அருமையான விடுதலை'.

(ரோமர், 8: 2).

ரோமர் 8-ம் அதிகாரம் முதல் வாக்கியமானது அதற்கு முன்னானவைகளுக்கு முடிவுரையாகவும் பின்னானவைகளுக்கு முகவுரையாகவும் இருக்கிறது. 'ஆனபடியால் கிறிஸ்து இயேசுவுக் குட்பட்டவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை'. எல்லாரும் பாவஞ்செய்து ஆக்கினைத் தீர்ப்புக் குட்பட்டிருக்கிறோமென்றாலும் இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தின் மூலமாய் கிருபையினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். இயேசுகிறிஸ்து சிலுவையில் செலுத்திய பிராயச்சித்த பலியின் மூலமாய் நாம் நீதிமான்களாகிறோம்.

ரோமர் 6-ம் அதி-ல் கிருபையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருப்பதினால், 'கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா' (வா. 1). என்ற கேள்வி வருகிறது. கூடாதே. தேவன் ஓர் புதிய சுபாவத்தை நமக்கு அருளியிருப்பதால் பாவத்துக்கு மரித்து நீதிக்குப் பிழைக்கும் ஒரு புதிய அனுபோகம் அடைகிறோம். ரோமர் 7-ம் அதி-ல் பழைய சுபாவத்துக்கும் புதிய சுபாவத்துக்கும் உண்டாகிற போரா



ட்டத்தைப் படம்போல பார்க்கிறோம். பாவத்தினால் வரும் ஆக்கினை நீங்கிப்போயிற்று. தேவனுக்கு முன்பாக குற்றமற்றவர்களான நிலைமையில் இருக்கிறோம். அப்படியானால் இந்த போராட்டம் ஏன்? இந்தப் போராட்டம் நடந்துகொண்டிருக்கும்போதே நான் தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்பட்டிருக்கிறேனா? என்னில் பாவ சுபாவத்தை உணரும்போது ஆக்கினைத் தீர்ப்பில்லை என்று நான் எப்படிச் சொல்லக்கூடும் என்று கேட்பாயோ? அதைப்பற்றி யாதொரு சந்தேகமில்லை, உன்னில் பாவமிருக்கலாம். ஆனால் நீ பாவத்திலிருக்கிறதில்லை. இந்த அதிகாரத்திற்கு திறவுகோல் வாக்கியம் 2-ம் வசனம்:—'கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே' இந்த அதிகாரத்தில் வருகிற 'பாவம்' என்கிற வார்த்தை பாவ சுபாவத்தையே குறிக்கும். கிறிஸ்துவின் இரத்தம் பாவக்குற்றத்திலிருந்தும் தண்டனையிலிருந்தும் முற்றிலும் கழுவி சுத்தமாக்குகிறதுபோல கிறிஸ்துஇயேசுவின் ஜீவனுடைய ஆவியின் பிரமாணமும் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கத்தக்கது.

நம்முடைய பாவ சுபாவத்திலிருந்து நம்மை முற்றிலும் விடுதலையாக்கக்கூடிய ஓர் பிரமாணம் நமக்குள் இருக்கிறது. 'பிரமாணம்' என்ற பதம் காரியங்களை நடப்பிக்கும் ஓர் ஒழுங்கு என்றும் பொருள்படலாம். 'சர்க்கார் தேசத்தில் காரியங்களை நடபிக்கும் ஒழுங்குக்கு 'தேசப்பிரமாணம்' என்றும், இயற்கையில் தேவன் சகல காரியங்களையும் நடப்பிக்கும் ஒழுங்குக்கு 'இயற்கைப் பிரமாணம்' என்றும், ஆவியானவர் ஆத்துமாக்களில் கிரியை நடப்பிக்கும் ஒழுங்குக்கு 'ஆவியின் பிரமாணம்' என்றும் சொல்லலாம். ஆவியானவர் நடப்பிக்கும் ஒழுங்கானது பாவம் நம்மில் செய்யும் ஒழுங்கிலிருந்து முற்றிலும் நம்மை விடுதலையாக்குகிறது. ஒவ்வொரு சுபாவத்துக்கும் ஒவ்வொரு எஜமான் உண்டு. சுபாவம் மாறும்போது எஜமான் மாறுவதுண்டு. புதிய சுபாவம் அல்லது தெய்வீக சுபாவம் அடையுமுன்னே, நாம் மாம்சத்திற்குட்பட்டு, பாவத்தினாலே நடத்தப்பட்டு சிறையாக்கப்பட்டோம். ஆனால் புதிய சுபாவம் வந்தபின்போ, கிறிஸ்து இயேசுவின் ஜீவனுடைய ஆவியின் பிரமாணம், பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்குகிறது.

இப்பொழுது கவனிக்கவேண்டிய காரியம். இந்த விடுதலை எப்படி கிடைக்கும்? பாவம், மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று ஆவியானவர் விடுதலையாக்குகிற பதினொரு வகையான முறைகள் இவ்வதிகாரத்தில் காட்டப்பட்டிருக்கிறது. அவையாவன:—

(1) நீதியை அங்கீகரித்து பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறார். 'மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடா

த்தை தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவ மாம்சத்தின் சாயலாகவும் பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச்செய்தார்' (வா. 3, 4). இந்த பாவ சுபாவத்தைப் பேணிப்பாராமல் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவேண்டியதே. மரணத்துக்குள்ளாக்க வேண்டும். நியாயப்பிரமாணத்தின் நீதி நம்மில் நிறைவேறும்போதுதான் அப்படியாகும். தேவனுடைய பிரமாணமாகிய அவருடைய வசனத்தை வாசித்து நமது உள்ளம் தேவ அன்பால் நிரப்பப்படவேண்டும். அதை இரவும் பகலும் நாம் தியானித்து வரவேண்டும்.

(2) **ஆவியின் சிந்தையுள்ளவர்களாய் ஜீவிக்கும்படி செய்கிறார்.** 'மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள் ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மாம்ச சிந்தை மரணம்: ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்' (வா. 5, 6). 'சிந்தை' என்றபதம் நமது வீடுகளில் அடிக்கடி வழங்குகிற ஒரு வார்த்தை. தாயார் அடிக்கடி பிள்ளைகளைப் பார்த்து 'உங்கள் தகப்பனார் சொல்லுகிறதைச் சிந்திக்கவேண்டும்; எதிர் பேசாமல் உடனே அதைச் செய்யவேண்டும்' என்று சொல்லுகிறதுண்டு. கிறிஸ்து இயேசுவிலுள்ள ஜீவ ஆவியானவர் நம்மை ஆவியின் சிந்தையுள்ளவர்களாயிருக்கும்படி செய்கிறார். ஆவிக்குரிய விஷயங்களைக் கவனிக்கத்தக்க சிந்தையை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். ஆகவே எப்பொழுதும் நாம் மாம்சத்தினாலே நடத்தப்படாமல் ஆவியானவராலே நடத்தப்படும்படி அவருடைய நடத்துதலுக்காக அவரையே நோக்கிப் பார்க்கவேண்டும்.

(3) **நம்மில் வாசஞ்செய்கிறார்.** 'தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால் நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள்' (வா. 9). நம்மில் உண்டாகிற புதிய சுபாவம் நமக்குள் நல்ல கிரியைசெய்துகொள்ளட்டும் என்று விட்டுவிடாமல். நம்மில் வாசஞ்செய்து கிரியை நடப்பிக்கிறார். பரிசுத்த ஆவியானவர் நம்முடைய சரீரத்தை அவருடைய ஆலயமாக்குகிறார். கர்த்தராகிய இயே பாவமில்லாத ஒரே சரீரத்தில் அவதாரமானார். ஆனால் பரிசுத்த ஆவியானவரோ லக்ஷக்கணக்கான பாவமுள்ள சரீரங்களில் அவதாரமாகிறார். பரிசுத்த ஆவியானவர் நம்மில் வாசஞ்செய்து தமது சிந்தையை நமக்குக் கொடுத்து தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படியவும், தேவனுடைய சித்தத்தை இன்பத்தோடு செய்துவரவும் உதவிசெய்கிறார். இவ்விதமாக தேவாவியானவர் விசுவாசிகள் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் வாசஞ்செய்கிறார், ஏனென்றால் 'கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல'.



(4) **சாவுக்கேதுவான சரீரங்களை உயிர்ப்பிக்கிறார்.** 'இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்' (வா. 11). சில வியாக்கியானிகள் இந்த வசனத்தின் பொருளை சரீர மரணத்துக்கும், சரீர உயிர்த்தெழுதலுக்கும் தாற்பரியப்படுத்துகிறார்கள். ஆனால் இதற்கு மேலான கருத்து அதிலடங்கியிருக்கிறது என்று பார்க்கிறோம். 'மரணம்' என்று சொல்லப்படாமல் 'சாவுக்கேதுவான' என்று சொல்லியிருக்கிறது. தேவ ஆவியானவர் நம்மைப் பாவத்திற்கு மரிக்கவும் கிறிஸ்துவுக்குள் பிழைக்கவும் செய்கிறார் என்பது நிச்சயமல்லவா? பரிசுத்த ஆவியானவர் நமது சரீரங்களை ஆள்கொண்டு தீமைக்கேதுவானவைகளைக் கீழடக்கிப் போடுகிறது மாத்திரமல்ல தேவனுக்கு முன்பாக நம்மை பரிசுத்தவான்களாக நிறுத்தவும் வல்லவராயிருக்கிறார்.

(5) **சரீரத்தின் செய்கைகளை அழிக்க வல்லமை தருகிறார்.** 'மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்' (வா. 13). தேவன் தமது சித்தத்தை நம்மில் நடப்பிக்க இடங்கொடுப்போமானால் முழுச்சரீரமும் ஆவியானவருடைய சித்தத்தின்படி செய்யும் அடிமையாகிவிடும்.

(6) **நம்மை நடத்துகிறார்.** 'எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்' (வா. 14). தேவன் நம்மைத் தமது நீதியின் வழியில் நடத்துவதினாலே, பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்குகிறார்.

(7) **புத்திரசுவிகாரத்தின் ஆவியை அருளுகிறார்.** 'திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தன ஆவியைப்பெறாமல், அப்பா பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்' (வா 15). நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது, ஒரு அடிமையைப்போல நடந்து தண்டனைக்கு பயப்பட்டதுண்டு. விடுதலையடைந்தபின்போ, தகப்பனோடு பேசிய பழகிக்கொண்டிருக்கும் ஓர் பாலகனைப்போல இருக்கிறோம். அடிமைத்தன ஆவி இனி இல்லை. பரமபிதாவின் இன்ப சமுகத்தைத் தரிசிக்க விரும்பும விருப்பமும், பிள்ளையடைவான கீழ்ப்படிதலும் அந்த ஆவியால் கிடைக்கிறது.

(8) **நாம் தேவனுடைய பிள்ளைகளும் அவருடைய இராஜ்யத்தின் சுதந்தரருமாயிருக்கிறோம் என்று சாட்சிகொடுக்கிறார்:**—'நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே' (வா. 16, 17). நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருப்பதால் தேவசுபாவம் அடைகிறோம். தேவனுடைய பிள்ளை தேவசாயலைக் காண்பிக்கிறதாயிருக்கவேண்டுமல்லவா? நம்மில் அவ்வித சாயல் காணப்படுகிறதா?

(9) **நம்மை நம்பிக்கையினால் நிரப்புகிறார்.** 'அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்' (வா. 24). மகிமையடைவோம் என்கிற நம்பிக்கை ஆவியானவரால் நமக்குக் கிடைத்திருக்கிறது. 'சரீர மீட்பு' (வா. 23) என்பது சரீர உயிர்த்தெழுதல் என்று பரிஷ்காரமாய் பொருள்படும். கிறிஸ்து இயேசுவின் இரத்தத்தினாலே நமது சரீரங்கள் கிரயத்

துக்குக் கொள்ளப்பட்டிருக்கிறபடியினால் எவ்வித அசுத்தமும் தீட்டும் காணப்படலாகாது. தேவனுடைய ஆலயமாகிய நமது சரீரம் எப்பொழுதும் பரிசுத்தமாயிருக்கவேண்டும்.

(10) நமது பெலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறர். 'அந்தப்படியே ஆவியானவரும் நமது பெலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார்' (வா. 26). நமது பாவங்களில் அல்ல, நமது பெலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார் என்பதைக் கவனிக்கவும். பரி. பவுல் அப்போஸ்தலன் நமது பாவத்திலல்ல நமது பெலவீனங்களில் மேன்மை பாராட்டுகிறார். நம்முடைய நம்பிக்கை மிகவும் பெலவீனமானது, அவ்வித நம்பிக்கையை ஆவியானவர் தயவாய் ஸ்திரப்படுத்துகிறார்.

(11) நமக்காக வேண்டுதல் செய்கிறர். 'ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்' (வா. 26). 'ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறார்' (வா. 27). 'நம்மில்' வேண்டுதல் செய்கிறார் என்று சொல்லப்படாமல், 'நமக்காக' வேண்டுதல் செய்கிறார் என்று சொல்லப்பட்டிருப்பதை கவனிக்கக்கடவோம், கிறிஸ்து இயேசுவிலுள்ள ஜீவனுடைய ஆவியானவர் நமக்காக வேண்டுதல் செய்கிறார். 'தேவனுக்கும் மனிதருக்கும் மத்தியஸ்தர் ஒருவரே;...மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே'. மத்தியஸ்தர்கள் பலர் உண்டு. மோசே ஒரு மத்தியஸ்தன். தாவீதும் பவுலும் மத்தியஸ்தர்கள்தான். மாம்சத்தின்படியான நம்முடைய தகப்பன்மாரும் தாய்மாரும் நமக்காக எப்படி வேண்டுதல் செய்யவேண்டுமென்று அறிவார்கள். ஆனால் பரிசுத்த ஆவியானவரோ 'வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு' எவ்வளவு ஊக்கமாய் நமக்காக வேண்டுதல் செய்கிறார்!

நம்மைச் சுற்றிலும் மடிந்துபோகிற ஏராளமான ஆத்துமாக்களை நினைத்து நமது இருதயம் உடைந்து ஜெபித்துவருகிறோமா? தேவனுடைய சபையில் பலர் தப்பான மார்க்கமாய்த் தவறிப்போகிறதைப் பார்த்து கண்ணீர் சிந்தினதுண்டா? இவ்வுலகத்தில் தீமை அதிகரிக்கிறதைக் கண்ணுற்று, பெருமூச்சோடு கர்த்தர் தம்முடைய பிள்ளைகளைத் தீமையினின்று காக்கும்படி வேண்டுதல் செய்ததுண்டா? இவ்விதமாகவே பரிசுத்த ஆவியானவரும் நமக்காக நம்மோடு, நமது மூலமாய், தேவனுடைய சித்தத்தின்படி வேண்டுதல் செய்கிறார்.

'கிறிஸ்து இயேசுவிலுள்ள ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.

## நோட்டீஸ்

ஜீவத்தண்ணீர் பத்திரிகை விஷயமான கடிதங்களும் சந்தாக்களும் அடியில் காட்டிய விலாசத்துக்கு அனுப்பும்படியாகவும் பாக்கி சந்தாதாரர்கள் உடன் பணமனுப்பும்படியாகவும் கேட்டுக்கொள்கிறேன்.

**Rev. R. V. Asirvadam,**
*C. M. S. Office*
*Palamcottah.*

Printed at the Church Mission Press, Palamcottah and Published by the Christian Brotherhood Association Tinnevelly.

1149

OFFICE OF THE REGISTRAR ...
29 SEP 1914
MADRAS

August, 1914. Registered No. M. 163

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." (யோவான் 7: 38)

Vol. XV ஆகஸ்ற்று 1914

## தேவ தயவும் கண்டிப்பும்.

'தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்'. ரோமர். 11: 22.

பதிமூன்று வருஷங்களுக்கு முன்னே 'நானே உலகரட்சகர்' என்னும் பேரால் ஒரு சிறு புஸ்தகத்தை எழுதி அதை அச்சிடும்படிக்கு கனம். உவாக்கர் ஐயரவர்கள் மூலமாக சென்னை கல்வி அபிவிர்த்தி சங்கத்தாருக்கு அனுப்பியிருந்தேன். அச்சங்கத்தார் அப்புஸ்தகத்திலுள்ள ஓர் வசனத்தினிமித்தம் அதை அச்சிட ஆட்சேபித்துத் திரும்ப அனுப்பிவிட்டார்கள். அதை மாற்றினதின்பேரில் அச்சிட்டார்கள். அந்த வாக்கியம் எதுவாயிருக்கலாமென்று நீங்கள் அறியவிரும்புவீர்கள். 'கர்த்தர் உங்களுக்கு நன்மை செய்யவும் உங்களைப் பெருகப்பண்ணவும் எப்படி உங்கள்மேல் இரம்மியமாயிருந்தாரோ, அப்படியே கர்த்தர் உங்களை அழிக்கவும் உங்களை அதம்பண்ணவும் இரம்மியமாயிருப்பார்' என்பதே அவ்வாக்கியம் (உபா. 28: 63). தேவன் மோசேயைக்கொண்டு இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னவார்த்தைகளே இவைகள். அதாவது தமது சத்தத்திற்குச் செவிகொடுக்கிறவர்களை ஆசீர்வதிப்பதில் தேவன் எவ்வளவு தயவுள்ளவராயிருக்கிறாரோ, அப்படியே தமது சத்தத்திற்குச் செவிகொடாதவர்களைத் தண்டிப்பதில் அவ்வளவு பயங்கரமானவராயிருப்பார் என்பதே மோசேயின் கருத்து. வேதாகமத்தின் மொத்தக்கருத்தும் அதுவே. விசுவாசியை ரட்சிக்க அவர் எவ்வளவு நீதியுள்ளவராயிருக்கிறாரோ, அப்படியே அவிசுவாசியை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க அவ்வளவு நீதியுள்ளவராயிருப்பார் என்பதை யார் மறுக்கக்கூடும்? 'தேவன் அன்பாயிருக்கிறார்' என்கிற வேதம் அநேகருக்கும் பிரியம். 'தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறார்' என்கிற வேதமோ அநேகருக்குப் பிரியமில்லை.

தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்! அவருடைய தயவு மோட்சத்திலும் இன்பமானது; அவருடைய கோபமும் நரகத்திலும் பயங்கரமானது. வெயிலுக்கு ஒதுங்கும் நிழலும், பட்சிக்கிற அக்கினியும், ஒருவரும் கிட்டிச்சேரக்கூடாத ஒளியும், நம்மை மார்போடணைத்துக்கொள்ளும் தகப்பனும் அவர். புத்திக்கெட்டாத உன்னத ஞானம் அவர் நம்மைக் கைதாங்கி நடத்தும் கருணாநிதியும் அவர். வெட்டாந்தரையை நீரூற்றாக்கிவிடுவோர்; ஆறுகளை வறண்ட ஸ்தலமாக்கிவிடுவோர். வல்லமை அவருடையது; தயவும் அவருடையது. பட்சம் அவருடையது; பயங்கரமும் அவருடையது. இவ்விருதன்மைகளும் அவரிலுண்டு.

ஒன்றுக்கொன்று எதிரான இருதன்மைகளமைந்த அநேகந்திருஷ்டாந்தங்கள் இவ்வுலகிலுண்டு. அவைகள் எவ்வளவு பிரயோஜனமாயிருக்கிறதோ அவ்வளவு பயங்கரமாகவுமிருக்கிறது. நெருப்பினால் எவ்வளவு பிரயோஜனம்! கைப்பிசகினால் பெரிய பட்டணங்களையும் அது சாம்பலாக்கிவிடும். ஏரியின் ஜலம் மனுஷருக்கும் மிருகங்களுக்கும் தோட்டம் வயல்களுக்கும் எவ்வளவு பிரயோஜனம்! அது பாய்கிற இடங்கள் எவ்வளவு செழிப்பும் கண்களுக்குப் பசுமையுமாய்த் தோன்றுகின்றன! உடைத்துக்கொள்ளுமானால் வயல்கள் எங்கே? கிராமங்கள் எங்கே? மின்சாரச் சக்தியினால் வண்டிகள் ஓடுகிறது; அச்சயந்திரங்கள் தன் வேலையை நடத்துகிறது; ஆலயங்களுக்கும் வீடுகளுக்கும் பிரகாசமான வெளிச்சம் கொடுக்கிறது. கொஞ்சம் தவறினால் க்ஷணப்பொழுதில் எத்தனை உயிர்கள் மாண்டுபோகிறது! ரெயில் என்ஜினுடைய வல்லமையினால் பிரயோஜனம் எவ்வளவு, ஆபத்துகளும் எவ்வளவு! வல்லமையான இவைகளுக்குள் பிரயோஜனமிருக்கிறதுபோலவே பயங்கரங்களும் இருக்கிறது. தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்! அன்பாயிருக்கிற தேவன் பட்சிக்கிற அக்கினியாகவுமிருக்கிறார்.

I. நாம் தேவனை உண்டாக்கக்கூடாது. தேவனை உண்டாக்குகிறதென்றால் என்ன? தேவனை அவர் இருக்கிறபடி அறிந்துகொள்ளாமல், நாம் நினைக்கிறபடிதான் தேவன் இருப்பாரென்றெண்ணும்போது தேவனை நாம் உண்டாக்குகிறவர்களாயிருக்கிறோம். இந்துக்களுக்குள் முப்பத்து முக்கோடி தேவர்கள் உண்டெனச் சொல்லப்படுகிறதே. இத்தனை ஏராளமான தேவர்கள் உண்டானதெப்படி? அவனவன் தன்தன் புத்திக்குத் தோன்றின பிரகாரம் தெய்வமிருக்குமென்றெண்ணி தன்தனக்கு ஒரு தெய்வத்தை உண்டாக்கிக்கொண்டதினால் அல்லவா? அந்தந்தத் தெய்வத்துடைய குணம் இன்னதென்று அவர்கள் நினைத்துக்கொண்டபடியே அவைகளைக் கொண்டாடிப் பூசித்துவருகிறார்கள். தெய்வங்கள் என்று பேச்சுக்குச் சொல்லுகிறோமேதவிர அவைகளைத் தெய்வங்களென்று நாம் ஒப்புக்கொள்ளுகிறதில்லை. என்றாலும் கிறிஸ்தவர்களாகிய நாமும் தெய்வங்களை உண்டாக்கு



கிறதில்லையோ? நம்முடைய கைகளினாலே உண்டாக்காவிட்டாலும் நம்முடைய மனதிலே உண்டாக்குகிறோமல்லவா? தேவன் எப்படியிருப்பாரென்று நாம் எண்ணிக்கொள்ளுகிறோமோ அதுவே நம்முடைய தெய்வம். அந்த எண்ணத்துக்கேற்றாற்போலவே நமது ஜீவியமுமிருக்கும். தெய்வம் எப்படியோ பக்தனும் அப்படியே. (As is the god so is the worshipper). ஒருவன் தேவனை ஒருவிதமாய் நினைத்துக்கொள்ளுகிறான். இன்னொருவன் இன்னொருவிதமாய் நினைத்துக்கொள்ளுகிறான். இப்படி அவனவன் தன்தன் மனம்போல் தேவனிருப்பாரென்றெண்ணிக்கொண்டால் நாமும் மனதிலாவது அநேக தேவர்களை உண்டாக்குகிறோமல்லவா? 'உன்னைப்போல் நானும் இருப்பேன் என்று நினைவுகொண்டாய்' என்று தேவன் கேட்பதும் சரிதானே. சகோதரரே, தேவன் இப்படியிருப்பார் அல்லது அப்படியிருப்பார் என்று நாம் எண்ணிக்கொள்ளாமல் அவர் எவ்விதமாக வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறாரோ அவ்விதமாக அவரை அறிந்து, அவ்விதமாக அவரை ஏற்றுக்கொண்டு, அவ்விதமாக அவரை வணங்குவதே நம்முடைய கடமை.

நாம் செய்கிற இன்னொரு தப்பிதமும் உண்டு. தேவனுடைய தன்மையில் ஒன்றை முக்கியப்படுத்தி மற்றதை மறந்துவிடுகிறோம். ஒரு பிள்ளை தூரத்தில் பிரகாசித்த மின்னலைப்பார்த்து ஆ, எவ்வளவு பிரகாசம்! எவ்வளவு அழகு! பாம்பைப்போல் நெழிந்தது. பட்சியைப்போல் பறந்தது. மின்னலே மறுபடியும் வா, உன்னைப்பார்க்க ஆசைப்படுகிறேன் என்கிறது. தூரத்தில் அநேக வருஷங்களாக வளர்ந்துநின்ற ஒரு விருக்ஷம் அந்த மின்னலால் அடிபட்டு முறிந்து விழுந்தது. அந்த விருக்ஷம் மின்னலைக் குறித்து என்ன சொல்லும்? ஆ, பயங்கரமான மின்னலே, இத்தனை வருஷக்காலம் ஓங்கி வளர்ந்துநின்ற என்னை ஒரு நிமிஷத்திலே இரண்டாய் ஒடித்துப் போட்டுவிட்டாயே, இனி நான் எப்படிப் பிழைக்கப்போகிறேன் என்று புலம்பாதோ? பிள்ளை மின்னலைக்குறித்துச் சொன்னதும் உண்மைதான். விருக்ஷம் மின்னலைக் குறித்துச்சொன்னதும் உண்மைதான். ஆனால் பிள்ளை சொன்னதும் பாதிச்சத்தியம், விருக்ஷம் சொன்னதும் பாதிச்சத்தியம். மின்னல் பிரகாசமும் பயங்கரமுமானதென்று சொல்வதே முழுச்சத்தியம். சகோதரனே! உன் தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் அறிந்துகொள். தயவுள்ளவர் தயவுள்ளவரென்று சொல்லி பாவத்தில் நிலைத்திராதே. கண்டிப்புள்ளவர் என்று மாத்திரம் நினைத்து பயந்து பின்வாங்காதே. அன்பும் பயங்கரமுமான உன் தேவனை அறிந்து பணிந்துகொள்.

II. தேவனுக்குள் தயவும் பயங்கரமுமுண்டு. கிருபையின் காலத்திலிருக்கிற நமக்கு தேவனுடைய தயவும் அன்பும் பிரதானமாய் எடுத்துக் கூறப்படுகிறபடியால் அவருடைய பயங்கரத்தை நாம் முற்றிலும் மறந்து

போகிறோம். 'உமது கோபத்தின் வல்லமையையும் உமக்குப் பயப்படத்தக்கவிதமாய் உமது உக்கிரத்தையும் அறிந்துகொள்ளுகிறவன் யார்?' என்று சங்கீதக்காரன் சொன்னார் (சங். 90: 11). தேவனோடு நெருங்கிச் சஞ்சாரஞ்செய்த தேவபக்தர்கள் யாவரும் கர்த்தர் பயங்கரமானவரென்றும் பரிசுத்தவான்களின் சபையில் அஞ்சப்படத்தக்கவரென்றும் அறிக்கைசெய்திருக்கிறார்கள். இவர்கள் தேவனுடைய தயவை அதிகமாய் ருசித்தவர்கள். ஆகிலும் அவருடைய கண்டிப்பையும் பயங்கரத்தையும் மறந்தவர்களல்ல. தேவனுடைய பயங்கரமான கிரியைகளை நாம் உணரவேண்டும். பூர்வ உலகத்தைப் பாருங்கள். மகா ஆழத்தின் ஊற்றுக்கண்களெல்லாம் பிளந்தன. வானத்தின் மதகுகளும் திறவுண்டன. நாற்பதுநாள் இரவு பகல் பூமியின்மேல் பெருமழை பெய்தது. மலைகளெல்லாம் ஜலத்தால் மூடப்பட்டு பதினைந்து முழ உயரத்துக்கு மேலே பெருகினது. புருஷர் ஸ்திரீகள் பிள்ளைகள் முதல் சர்வஜீவன்களும் மாண்டழிந்தன. அவர்களுடைய அழிவு எவ்வளவு பயங்கரமாயிருந்திருக்குமென்று சற்று யோசித்துப்பாருங்கள். உனக்காகத் தம் நேசமைந்தனைக் கொடுத்தவர் தாமே இப்படி அவர்களை அழித்தார். வெள்ளத்தின் அலைகள் பேழையை மோதுகிறது. உயரியிருந்தும் பேழையின்மேல் ஜலப்பிரவாகப் கொட்டுகிறது. ஜலத்தின் மீது மிதக்கும் இலையின்மேல் எறும்பு தங்குமாறு ஆழமான ஜலத்தின்மீது மிதக்கும் பேழைக்குள் நோவா தங்கினான். அவன் தன் மனைவி பிள்ளைகளைப் பயபக்தியுடன் பார்த்து இந்தப் பெரிய உலகத்தில் நாம்மாத்திரம் உயிரோடே தப்பினோம். தேசத்தின் ஜனங்கள் யாவரையும் தேவன் அழித்துப்போட்டார். அவர் நமக்குப் பாராட்டின தயவையும் அவர்களிடத்தில் காண்பித்த கண்டிப்பையும் பாருங்களென்று சொல்லியிருப்பானல்லவா?

சோதோம் கொமோராவை நோக்குங்கள். கிழக்கே சூரியன் உதயமாகிறது. வானத்திலிருந்து இறங்கின தூதர்கள் லோத்தோடும் அவன் குடும்பத்தோடும் பேசி ஜீவன்தப்ப ஓடும்படி துரிதப்படுத்துகிறார்கள். அவர்கள் தாமதித்தபோது கைகளைப் பிடித்திழுத்து வெளியேவிட்டார்கள். உடனே கர்த்தர் வானத்திலிருந்து அக்கினியையும் கந்தகத்தையும் வருஷிக்கப்பண்ணி அப்பட்டணங்களையும் அவைகளின் எல்லாக்குடிகளையும் அழித்துப்போட்டார். இங்கே தேவனுடைய தயவையும் பயங்கரத்தையும் பாருங்கள்.

பின்னும், 'மோசேக்குஎதிர்த்துநின்ற கோராகு தாத்தான் அபிராம் முதலானவர்கள் உயிரோடே பாதாளத்திலிறங்குகையில் அவர்கள் அலறின பயங்கரமான சத்தத்தால் மற்றவர்கள் தங்கள் இடங்களைவிட்டு ஓட்டம்பிடித்தார்கள். 250 பிரபுக்களை அக்கினிவந்து பட்சித்தபோது அவர்கள் மனைவிகளும் பிள்ளைகளும் மற்றவர்களும் என்னமாய் அலறியிருப்பார்கள்! இதோடு திற்காமல் மறுநாள் 14,700 பேர் வாதையினால் செத்துப் பிரேதங்களாகக் கிடந்த காட்சி இன்னும் எவ்வளவு பயங்கரமாயிருந்திருக்கும்? தேவன் மோசேயையும் ஆரோனையும் பார்த்து: நீங்கள் சபையைவிட்டுப் பிரிந்துபோங்கள், ஒரு நிமிஷத்திலே அவர்களை அதமாக்குவேன் என்றார்; அப்படியே செய்தார். இம்மட்டும் அவர்களுக்கு அவர் பாராட்டின அவருடைய மகா தயவையும் இப்போ சம்பவித்த நடுங்கத்தக்க காரியங்களையும் மோசே கண்டபோது தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்த்தாயாவென்று ஆரோனிடம் பேசியிருக்கமாட்டானா?



திருஷ்டாந்தங்களை விவரிக்கப்போனால் இடங்கொள்ளாது. தம் சொந்த எருசலேமுக்கு அவர் பாராட்டின தயவும், அப்பட்டணத்துக்கு நேர்ந்த பயங்கரமான அழிவும் இவ்வளவென்று சொல்லமுடியுமா? அக்காலத்தில் மாத்திரமல்ல இப்பொழுதும் 'அவர் மனுப்புத்திரரிடத்தில் நடப்பிக்கும் கிரியையில் பயங்கரமானவராகவேயிருக்கிறார்' மெசினாப்பட்டணத்தின் அழிவு எவ்வளவு பயங்கரம்! சமீபத்தில் பூமியதிர்ச்சியாலும் அக்கினியினாலும் ஜப்பானுக்கு நேரிட்ட அழிவு கொஞ்சமல்ல. 'பூமியிலே பாழ்க்கடிப்புகளை நடப்பிக்கிற கர்த்தருடைய செய்கைகளை வந்து பாருங்கள்.' எங்கே பார்த்தாலும் ஆபத்து, எங்கே பார்த்தாலும் நாசம். பூமியிலும், பூமியின்கீழ் சுரங்கங்களிலும், மலைகள்மீதும், சமுத்திரங்களிலும், தீவுகளிலும் அவர் பயங்கரமான காரியங்களை நடப்பிக்கிறார். கணக்கற்ற மாந்தர் நினையாதநேரம் ஆபத்துக்குள்ளாகிறார்கள். அவருடைய கோபத்துக்கு முன்நிற்பவன் யார்? உலகத்தில் இன்னும் என்னென்ன சம்பவிக்குமோவென்று மனுஷர் கலங்கித்தவிக்கிறார்கள்.

நமது தேசம் அநேக ஆபத்துகளுக்குத் தப்பியிருப்பது மெய்தான் இதுவரை தேவகோபம் நம்மேல் மூளாதிருப்பது அவருடைய பெருந்தயவே. ஆகிலும் சபைகளின் நிர்ப்பந்தமான நிலைமையையும், கிறிஸ்தவர்களுடைய துணிகரமான அக்கிரமங்களையும், தேவ ஊழியக்காரரின் துரோகங்களையும், சபையாருக்குள் காணப்படுகிற வேத அசட்டை, ஜெப அசட்டை, ஆலய அசட்டை, பகை விரோதம் உலக சிந்தை முதலிய பாவங்களையும் கவனிக்கும்போது, தேவன் ஒருவேளை பயங்கரமானவிதமாய் நம்மையும் சந்திப்பாரோவென்று நாம் அஞ்சிநடக்கவேண்டாமா? நாம் பெற்றுக்கொண்ட கிருபைக்கும் மற்றெல்லாச் சிலாக்கியங்களுக்கும் விரோதமாய் நடக்கும்போது தேவன் நம்மைத் தப்பவிடுவாரோ? தேவபயமற்றுப்போனதல்லவோ தற்காலத்தில் நாம் பார்க்கிற சகல பாவங்களுக்கும் குழப்பங்களுக்கும் காரணம்.

## III தேவனுடைய பயங்கரத்தை அறிவதினால் பலனென்ன?

கிருபையின் காலத்தில் தேவனுடைய பயங்கரத்தைப் பிரசங்கிப்பது அவசரமாவென்று யாராகிலும் ஒருவர் கேட்கலாம். வேனிற்காலத்தில்

தன் வீட்டைக் கட்டுகிற ஒருவன் மாரிகாலத்தையும் நினைத்துக் கட்ட வேண்டியது அவசரமோவென்று நான் கேட்கிறேன். எல்லாக் காலங்களையும் கவனித்து உறுதியான வீட்டைக் கட்டுகிறவனே புத்திமான். காலங்களின் மாறுதல்கள் ஒன்றையும் கவனியாமல் வேனிற்காலத்தை மாத்திரம் மனதிலெண்ணி ஒருவன் வீடு கட்டுவானானால் அவ்வீடு சொற்பக்காலம் பிரயோஜனமுள்ளதுபோல் தோன்றினாலும் பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, பெரும்புசலடித்து அந்த வீட்டின்மேல் மோதும்போது அது விழுந்து முழுவதும் அழிந்துபோகுமல்லவோ? தேவனுடைய குணங்களைச் சரியாய் அறிந்துகொள்ளாதவனுடைய காரியமும் இப்படியேயிருக்கும்.

சிறுபிள்ளைகள் காகிதப் படவுகள் செய்வதையும் தண்ணீரில்விட்டு விளையாடுவதையும் நாம் கண்டிருக்கிறோம். ஒரு சிறு காகிதத்தை எடுத்து மடித்து ஒரு நிமிஷத்திலே படவுசெய்து தண்ணீரில் விட்டு காற்றினால் அது வேகமாய் ஓடுவதைக் கண்டு சந்தோஷப்படுவார்கள். அவர்கள் சமுத்திரத்தில் பிரயாணஞ்செய்யும் நீராவிக் கப்பல்களைப்போய்ப் பார்ப்பார்களானால்: இந்த உயர்ந்த பாய்மரங்கள் என்னத்துக்கு? இந்தக் கயிறுகள், ஆணிகள், இரும்புச்சங்கலிகள், தாழ்ப்பான்கள், திருகாணிகள், திரைகள், கொக்கிகள், ஜலசூத்திரங்கள், தொட்டிகள் ஆகிய இவைகளெல்லாம் என்னத்துக்கு? எங்கள் காகிதப் படவு இவையொன்றுமில்லாமல் நன்றாய் ஓடுகிறதே என்று சொல்லுவார்கள். மாலுமி என்ன சொல்லுவான்? நான் நற்காலத்துக்கு மாத்திரமல்ல பொல்லாத வேளைக்கும் ஆயத்தமாயிருக்கிறேன். இப்பொழுது எல்லாம் அமைதலாயிருக்கிறது. ஆகிலும் திடீரெனப் புசல் வரலாம், மழை அடிக்கலாம், சொரிமணலில் அகப்படலாம் எத்தனையோ ஆபத்துகளை எதிர்பார்த்து நாங்கள் கப்பலைக் கட்டுகிறோம் என்பானல்லவா? நேரிடக்கூடிய சகல மோசங்களையும் முன்னறிந்து அதற்குத் தப்பத்தக்கதாய்த் தன் கப்பலைக் கட்டுகிறவன் புத்தியுள்ளவனேயல்லாமல் பயங்காளியென்று சொல்லக்கூடாது.

உலகத்தில் வீடுகளையும் கப்பல்களையும் கட்டுவதில் இவ்வளவு முன்ஜாக்கிரதைவேண்டுமானால் ஆவிக்குரிய வீட்டைக் கட்டுகிற நமக்கு எவ்வளவு முன்ஜாக்கிரதை வேண்டும்! தேவனுடைய தன்மையை நாம் சரியாய் அறிந்துகொள்ளாவிட்டால் அவரைச் சந்திக்க நாம் எப்படி ஆயத்தமாயிருக்கக்கூடும்? எந்தச் சாயலாக அவரை அறிகிறோமோ அந்தச் சாயலாகவே நாம் மாறுகிறோம். சகோதரனே! வெளிப்படப்போகிற மகிமையில் தேவனை நீ சந்தோஷமாய்ச் சந்திக்கவும், சகிக்கக்கூடாத அந்தப் பயங்கரமான நாளில் நீ தைரியமாய் அவருக்குமுன் நிற்கவும் இந்த அறிவு உன் ஜீவியத்தை ஊன்றக்கட்டுகிறது. நம்முடைய பிதா மகா பெரியவரும் வல்லவருமாயிருப்பது நமக்குப் பெருமைதானே. அவருடைய பிள்ளைகள்,



நடுங்கவேண்டியதென்ன? குணப்படாதவர்கள் நடுங்கட்டும். பட்டணங்களை அழித்துச் சத்துருக்களை வெட்டி நாசம்பண்ணின போர்வீரன், தன் வீட்டுக்குத் திரும்புகையில் அவனுடைய பிள்ளை தகப்பனைச் சந்திக்க வாசலில் காத்துநிற்கிறது. தகப்பனைக் கண்டதும் பிள்ளை தன் கைகளை நீட்டி ஆவலோடு பாய்கிறது. பெற்ற தகப்பன் பிள்ளையைத் தூக்கித் தன் மார்போடணைத்து இரு கன்னத்திலும் முத்தமிடுகிறான். அந்த வீரனுக்குள் பட்சத்தையும் பயங்கரத்தையும் பார்க்கிறோமே. அவன் சத்துருக்களுக்குப் பயங்கரமானவனும் பெற்ற பிள்ளைக்கு அருமையான தந்தையுமல்லவோ?

சகோதரரே! தேவனுடைய தயவையும் அவருடைய கண்டிப்பையும் முகமுகமாய் நீங்கள் பார்க்கும் நாள் சீக்கிரம் வருகிறது. நீதியுள்ள நியாயாதிபதி ஜுவாலித்து எரிகிற அக்கினியோடு வந்து சிங்காசனத்தில் உட்காருவார். சகல ஜனங்களும் கூட்டிச்சேர்க்கப்பட்டு இரண்டாகப் பிரிக்கப்படுவார்கள். வலதுபக்கம் நிற்பவர்களைப் பார்த்து என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே என்பார். ஆ! எவ்வளவு தயவு! என்ன பாக்கியம்! இடதுபக்கம் நிற்பவர்களைப் பார்த்து சபிக்கப்பட்டவர்களே என்பார். ஆசீர்வாதம் புறப்பட்ட அதே வாயிலிருந்து சாபம் புறப்படுகிறது, என்ன பயங்கரம்! இவ்விதமாய் அவர்கள் நித்திய ஜீவனையும் இவர்கள் நித்திய ஆக்கினையையும் அடையப்போவார்கள். இதை வாசிக்கிற சகோதரனே, சகோதரியே நீ எங்கே போவாய்? பயங்கரமான தேவகோபத்துக்கு நீ தப்பவேண்டுமானால் அவருடைய தயவை இன்றே பற்றிக்கொள். இதுவரை காலம் கடத்தினது போதும். இந்த நாள் உனக்கு ரட்சிப்பின் நாளென்று அறிந்துகொள். உனக்காக உயிர்விட்ட அன்பரை நோக்கிப்பார். அவர் உன்னை ரட்சிப்பார். சீக்கிரத்தில் அவருடைய கோபம் பற்றியெரியும். இப்பொழுது அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்.

தேவ ஊழியக்காரரான என் சகோதரருக்கோர் வார்த்தை. சபையில் ஜீவன் இல்லையே, மாறுதல் இல்லையே, எல்லாம் தூக்கமயக்கமாயிருக்குதே என்று விசனப்படுகிறீர்களா? சீனாய் மலையைப் பிரசங்கியுங்கள். சீனாய் மலையில் வந்துநிற்காத பாவி கல்வாரி மலையை நோக்கமாட்டான். தேவனுடைய கண்டிப்பையும் பயங்கரத்தையும் வேதத்திலிருந்து எடுத்து, அந்தப் பயங்கரத்தை நீங்களே உள்ளத்தில் உணர்ந்தவர்களாக ஜனங்களுக்குப் பிரசங்கியுங்கள். தேவ தயவைப் பிரதானமாய்ப் பிரசங்கித்த அப்போஸ்தலன் அவருடைய பயங்கரங்களை ஒருபோதும் மறந்தவரல்ல. 'கர்த்தருக்குப் பயப்படத்தக்கதென்று அறிந்து மனுஷருக்குப் புத்திசொல்லுகிறோம்' என்கிறார் (2 கொ, 5: 11) இது கன நித்திரையின் ஆவி சபைகளை ஆண்டுகொண்டிருக்கிற காலம். தேவ தயவையும் தேவ அன்பையும் பயங்கர

மாணவிதமாய் அசட்டைபண்ணுகிற காலம். சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிற காலம். அருமை ரட்சகரைக் காலின்கீழ் மிதித்துக் கிருபையின் ஆவிக்கு எதிர்த்துநிற்கிற காலம். குணப்படாதவர்கள் தங்களைக் குணப்பட்டவர்களாக எண்ணிக்கொண்டிருக்கிற காலம். ஆவியினால் மறுபிறப்படையாதவர்கள் தங்களை தேவனுடைய பிள்ளைகள் என்று தேற்றிக்கொள்ளுகிற காலம். தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்துக்கொண்டு அதின் வல்லமையை இழந்துபோயிருக்கிற காலம். சகோதர அன்பு பறந்துவிட்ட காலம். இது கடைசிக்காலமாகிய கொடிய காலம். சகோதரரே! நாம் காலத்தை அறிந்தவர்களாகப் போதிக்கவேண்டும். எது குணப்படுதல் எது குணப்படுதல் அல்லவென்று திட்டமாய் எடுத்துக்காட்டவேண்டும். யார் தேவனுடைய பிள்ளைகளென்பதை வேதவாக்கியங்களைக்கொண்டு தெளிவாய்க் காண்பிக்கவேண்டும். சகல பாவங்களையும்விட்டு முற்றிலுமாய் மனந்திரும்பும்படி வற்புறுத்திப் பேசவேண்டும். ஒவ்வொரு பிரசங்கத்தையும் கவலையோடு ஆயத்தஞ்செய்து ஊக்கமாய் ஜெபித்து, தேவசமுகத்தினின்று, முகத்தாட்சணியமின்றிப் பேசவோமாக. பட்டயத்தைக் கையில் எடுத்தபின்பு இரத்தஞ் சிந்தாதபடிக்கு தன் பட்டயத்தை அடக்கிக்கொள்ளுகிறவன் சபிக்கப்பட்டவன் கர்த்தருடைய வேலையை அசதியாய்ச் செய்கிறவன் சபிக்கப்பட்டவன் (எரே. 48: 10). கர்த்தர் உங்களையும் உங்கள் ஊழியத்தையும் ஆசீர்வதிக்கவேண்டுமானால் தேவ தயவையும் அவருடைய பயங்கரத்தையும் கூறி அறிவியுங்கள். கர்த்தர் கூடயிருப்பார். ஆவியின் பெலனை அருளுவார். இருதயங்களைப் நொறுக்குவார். பலனைக் கட்டளையிடுவார். உங்கள் ஊழியத்தின் பலனே உங்கள் மோட்ச சந்தோஷம். காலம் மகா சமீபம். உத்தம ஜீவியமும் உத்தம ஊழியமுமே என்றும் நிலைக்கும் பாக்கியம்.

எஸ். பரமானந்தம்.

## கிறிஸ்து இரட்சகரின் மனுஷாவதார நோக்கம்.

### I. பாவிகளைத் தேடுதல் லூக். 19: 10.

இவ்வருஷ துவக்கத்தில் சென்னை கவர்னர் துரை பற்பல பட்டணங்களுக்குப் போய், ஜனங்களைச் சந்தித்து, பல காரியங்களையும் கவனித்துப் போனகாரணம் அநேகருக்குத் தெரியாது. கவர்னர் துரையும் தாம் வந்த நோக்கத்தை ஜனங்களுக்குத் திட்டமாய்த் தெரியப்படுத்தவில்லை. இயேசு சுவாமியோ தாம் உலகத்துக்கு வந்த நோக்கத்தை திட்டமாயும் தெளிவாயும் வெளிப்படுத்தியிருக்கிறார். ‘இழந்துபோனதைத் தேடவும், இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்’ என்று சொன்னார்.



தேவசாயலில் உண்டாக்கப்பட்ட மனுமக்கள் யாவரும் அவருக்கு விரோதமாய் பாவங்களையும் அக்கிரமங்களையும் செய்து, அவருக்குச் சத்துருக்களாய்ப் போனாலும் பாவிகளின் நேசரோ பாவிகளை மறந்துபோகாமலும், தள்ளிவிடாமலும், ‘அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்” என்று திருவாக்குரைத்தபடியே தமது அநாதி உன்னத நேசத்தை பாவிகளுக்குக் காட்டும் நோக்கமாய், பாவிகளாகிய நம்மைத் தேடிவந்தார்.

இழந்துபோனதைத் தேடவந்தார். பிதாவாகிய தேவன் தமது பிள்ளைகளாகிய மனுமக்களை இழந்துபோனார். நாம் பாவம் செய்யும்போது பாவம் நம்மை தேவனைவிட்டுப் பிரிக்கிறது. கெட்டகுமாரனைப் போல் சுயஇஷ்டத்தின்படி செய்து, தகப்பனைவிட்டுத் தூரமானவர்களாய்ப்போனோம் (எபே. 2: 13). ‘நாமெல்லாரும் ஆடுகளைப்போல் வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்’ (ஏசா. 53: 6). லேகியோன் பிசாசு பிடித்தவன்போல் பிசாசுக்கு அடிமைகளாகி, கிருபையின் சிலாக்கியங்களை அசட்டைபண்ணி, நம்மையும், மற்றவர்களையும் கெடுத்தவர்களாயிருந்தோம். யூதாசைப்போல் பணஆசைக்கு இடங்கொடுத்து, பொல்லாதவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடந்து, உலகமக்களோடு சேர்ந்து, இரட்சகருக்குத் துரோகிகளாயிருந்தோம். இவ்விதமாய் நாம் தேவ ஜீவனையும் தேவமகிமையையும் தேவ சமாதானத்தையும், சந்தோஷத்தையும், நித்திய ஜீவனையும் இழந்தவர்களானோம். எபேசு சபையின் முன்னிலைமைபோல் நாமும் ‘கிறிஸ்துவை சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களாயுமிருந்தோம்’.

ஓர் சீமாட்டி குதிரையின்மேல் சவாரிபோகும்போது அவள் விரலில் போட்டிருந்த கலியாண மோதிரம் கழன்று, பக்கத்திலிருந்த சாக்கடைத் தண்ணீருக்குள் விழுந்துவிட்டது. அவளுக்கு எத்தனையோ வேறு மோதிரங்கள் இருந்தாலும், இது தன் புருஷனால் கலியாணத்தில் தனக்கு அளிக்கப்பட்ட மோதிரமானதினாலும், தான் அதை அருமையாய் நேசித்துவந்ததினாலும், உடனே குதிரையைவிட்டு சாக்கடைத் தண்ணீருக்குள் இறங்கி தன் அழகிய சுத்தமான கரங்களினால் அந்த மோதிரத்தைத்தேடி எடுத்தாளாம். அப்படிப்போல் நாமும் தேவ அன்பின் கரத்தில் மோதிரங்களைப் போல் பிரகாசிக்கவேண்டியவர்கள், பாவச்சேற்றில் விழுந்து, அமிழ்ந்து கிடந்தோம் (சங். 40: 1). இப்படிப்பட்ட நீச நிலைமையிலிருந்த நம்மையே இயேசு சுவாமி தேடி, இரட்சிக்க வந்தார்.

‘அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத் தாமே வெறுத்து, அடிமையின் ரூபமெடுத்து’ ‘விண்ணுலகைவிட்டு, மண்ணுலகம் வந்தார்

தேவனானவர் மனுஷனானார் மகிமையானவர், சிறுமையானார் ஆவியானவர், ஜீவியானார். அரூபமானவர் ரூபியானார். ஆ! என்ன ஆச்சரியமான அன்பு: அன்பைப்பெருக்கி நமதாருயிரைத்தேடி வந்தார்.

ஆதாம் பாவம் செய்தபோது அவனைத் தோட்டத்தில் தேடினார். தாவீது பாவம் செய்தபோது, அவனை வீட்டில் தேடினார். யோனாவை கப்பலில் தேடினார். சமாரியா ஸ்திரீயை கிணற்றண்டை தேடினார். பவுலை வழியில் தேடினார். சகேயுவை மரத்தில் தேடினார்.

சிநேகிதனே, உன்னையும் இயேசு சுவாமி தேடி நிற்கிறார். நீ எங்கே இருக்கிறாய்? ,கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள். அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக்கூப்பிடுங்கள்' என்று தீர்க்கதரிசியானவர் உன்னையும் ஏவுகிறார். அருமை இரட்சகர் இப்போதும் தமது அன்பின் கரங்களை நீட்டி, உன்னை தம்மண்டை சேர்த்து, ஆசீர்வதிக்க ஆயத்தமாயிருக்கிறார் சகேயுவைப்போல் நீயும் அவரை ஆவலாய்த் தேடி, உடனே கீழ்ப்படிதலோடு அவரை உன் இருதயத்தில் ஏற்றுக்கொண்டு, உன் பாவங்களை எல்லாம் உண்மையாய் அறிக்கையிடு. உடனே அவர் உனக்குத் தமது இரட்சிப்பை அருளுவார். இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார்.

## No. 1. பிலேயாம்

"நீதிமான் மரிப்பதுபோல் நான் மரிப்பேனாக"

இரண்டு வகையான மரணமுண்டு:— நல் மரணம், துர்மரணம்; நீதிமானுடைய மரணம், பாவியினுடைய மரணம்; நல் நம்பிக்கையோடு அடையும் மரணம், யாதொரு நம்பிக்கையில்லாமல் மரிக்கும் மரணம். சுவிசேஷபுரத்து வட்டத்தில் ஒரு பேயாடி இருந்தான். அவன் மகா கெட்டவன். கிறிஸ்து மார்க்கம் மெய் மார்க்கமென்றறிந்தபோதிலும் தன்னாலானமட்டும் அதை அழித்துப்போடப் பார்த்தான். அவன் பந்துக்களில் அநேகம்பேர் ஞானஸ்நானம் பெற்றுக் கிறிஸ்தவர்களானபோதிலும் கிறிஸ்து மார்க்கத்தை முழுப்பகையாய் விரோதித்து வந்தான். அப்படிப்பட்ட மனுஷனுக்கு மோசமான வியாதி கண்டது. மரணாவஸ்தையில் அகப்பட்டான். அப்போது அவனுக்குண்டான பயம், திகில், கலக்கம் இவைகளைச் சொல்லி முடியாது. அவனுக்கு ஆறுதல் யாதொன்றுமில்லை. அழுதான், கதறினான், கத்தினான், ஐயையோவென்று புலம்பினான். பக்கத்தில்நின்ற ஜனங்களைப் பார்த்து, 'அஞ்ஞானசடங்குகளோடு என்னை அடக்கம்பண்ணவேண்டாம் அதெல்லாம் வீண் விருதா, பேய் பிசாசு ஒன்றுமில்லை. அதினாலே ஜனங்களை ஏமாற்றினேனேயல்லாமல் வேறல்ல. ஆகையால் அதெல்லாம்



வேண்டாம் என்று சொன்னான். பின்னும் அதிகமாய் வேதனைப்பட்டு— கெட்டுப்போனேனே! கெட்டுப்போனேனே!, என்று பயங்கர சத்தமிட்டு உடனே செத்துப்போனான். அப்படிப்பட்ட மரணம் அடைய யார் விரும்புவான்? துஷ்டன் மரிப்பதுபோல் நான் மரிக்காதிருப்பேனாக என்றல்லவா சொல்லுவோம்? நீதிமானுடைய நல்மரணமோ எல்லாராலும் விரும்பப்படத் தக்கதாயிருக்கிறது. இங்கிலாந்து தேசத்தில் ஓர் பக்திமான் சாகயிருந்தார். அவர் முகம் எல்லாம் மலர்ந்தது. என் ரக்ஷகரை சீக்கிரம் காண்பேன், மோட்சானந்தம் அடைந்து களிப்பேன் என்று சொன்னார் பக்கத்தில் நின்றவர்களைப் பார்த்து, 'எனக்கு மரணம் வந்துவிட்டதே, ஏதாவது கூர், பயம், வருத்தம் காண்கிறீர்களா?' என்று கேட்டார். அதற்கு அவர்கள் அவருடைய மலர்ந்த முகத்தையும், சமாதானத்தையும் பார்த்து ஆச்சரியப்பட்டு, 'இல்லை!, இல்லை! அப்படிப்பட்டது ஒன்றும் காணோம். மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? என்பது போலிருக்கிறதே' என்று அறிவித்தார்கள். சகோதரனே! சகோதரியே! நீதிமான் மரிப்பதுபோல் நானும் நீயும் மரிப்போமாக.

இப்படி ஜெபஞ்செய்த மனுஷனுடைய சரித்திரத்தைச் சற்றுக் கவனித்துப் பார்ப்போம். அவன் பெயர் பிலேயாம். அவன் வரலாறு எல்லாம் வேதத்தில் ஆதியோடந்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நல்ல ஜெபஞ்செய்தான். நல் விருப்பங்கொண்டான். நல் மரணம் விரும்பினான். அவன் முடிவோ மகா பரிதாபம். ஆ! பாருங்கள். நமக்கு நல் ஆசை விருப்பங்களிருந்தபோதிலும் பலவித சிலாக்கியங்களைப்பெற்று அநுபவித்தாலும் அதற்குத்தக்கதாக நடவாமற்போனால் நமக்கு நல்ல கதி கிடைக்குமென்று நாம் நினைக்கலாகாது.

I. பிலேயாம் பெற்ற சிலாக்கியங்களைக் கவனித்துப்பாருங்கள். அஞ்ஞானம் நிறைந்த தேசத்தில் அவனுக்கு மெய்யறிவு அருளப்பட்டது. தேவன் அவனுக்குத் தரிசனமானார். தம்முடைய சித்தத்தை அவனுக்கு வெளிப்படுத்தினார் பரம ரகசியங்களை அறியும்படி அவன் கண் திறக்கப்பட்டது, அவன் வாயிலிருந்து தேன் போன்ற அருள் வசனங்கள் புறப்பட்டது. இயேசு ரக்ஷகரை முன் அறிவிக்கும் தீர்க்கதரிசியானான். அவன் உரைத்த தீர்க்கதரிசன வாக்கியங்கள் வெகு இனிமையாயும் அருமையாயுமிருக்கின்றன. அவனைக்கொண்டு கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதித்தார். அவன் மூலமாய்ப் பெரிய காரியங்களைச் செய்தார். அவன் செல்வாக்கு அந்தத்திசை எங்கும் சென்றது. நல்ல அறிவாளி மெத்த கீர்த்தியான பிரசங்கி. பேர்போன தீர்க்கதரிசி. தனக்கு உண்டான சிலாக்கியங்களை அவனே காட்டியிருக்கிறான் (எண் 24: 16). அவன் அஞ்ஞானியுமல்ல, புத்தியீனனுமல்ல, அவபக்தனுமல்ல. மெய்த்தேவனை அறிவான். ஜெபத்தியானம் செய்வான். இயேசுவின் இரட்சிப்பையும் ராஜ்யத்தை

யும் கண்டு அறிவித்தான். நல்ல கதியை விரும்பினான். "நீதிமான் மரிப்பதுபோல் நானும் மரிப்பேனாக' என்று வேண்டிக்கொண்டான். என்றாலும் சீர்கெட்டு நம்பிக்கையற்று நிர்ப்பந்த மரணம் அடைந்தான் என்று பார்க்கிறோம்.

பிரியமான சகோதரனே! நாமும் அநேக சிலாக்கியங்களைப் பெற்றிருக்கிறோம். நாம் பாவ இருளில் நடவாமல் தேவனுடைய வெளிச்சத்தில் நடக்கத்தக்கவர்களாயிருக்கிறோம். தேவனையும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும் அறியும்படிக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். நமக்கு வேத அறிவுமுண்டு. கிருபையின் யத்தனங்களுமுண்டு. பக்திக்கடுத்த ஏற்பாடுகளுமுண்டு. இவைகளுக்குப் பாத்திரவான்களாய் நடப்போமாக. ஒரு மனுஷன் வியாதியினால் வருத்தமடைந்து சாகும் நிலைமையிலிருந்தான். அவனுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லவும், இயேசுவின் அன்பை எடுத்துக்காட்டவும் போதகர் போய்ச் சமீபத்தில் நின்று ஆரம்பித்தார். அவனோ நிறுத்தினான். 'ஐயா! அது வேண்டாம். வேத சத்தியங்கள் எல்லாம் எனக்கு நன்றாய்த்தெரியும். சிறு பிராயமுதல் அறிவேன். ஆனாலும் அதின்படி நான் நடக்கவில்லை. என் இருதயத்தைக் கடினப்படுத்திவந்தேன். பாவத்தில் சிக்கிக்கொண்டேன். தேவாவியானவரைத் துக்கப்படுத்தி அவித்துப்போட்டேன். இப்போது எனக்கு லாபமில்லை. அறுப்புக்காலம் சென்றது; கோடை காலமும் முடிந்தது. நானோ ரக்ஷிக்கப்படவில்லை என்பதுபோலிருக்கிறது. என்னைக் கெடுத்துப்போட்டேன்; என்னைக் கெடுத்துப்போட்டேன்' என்று கதறிச் செத்துப்போனான். பிரியமானவர்களே! மோசம் போகாதிருங்கள். நீதிமானுடைய மரணம் அடையவேண்டுமானால் குணப்பட்டு சீராய் நடந்து பரிசுத்த ஜீவியம் செய்யுங்கள்.

II. பிலேயாம் விரும்பின கூலியைக் கவனித்துப் பாருங்கள். (யூதா. 11; 2 பேது. 2: 15).

அவன் கெட்டுப்போனதற்குக் காரணம் என்ன? உலக ஆஸ்தியை விரும்பினான். அநீதத்தின் கூலியை இச்சித்தான். பொருள் ஆசை அவனை வஞ்சித்தது. பண ஆசை அவனைக் கெடுத்துப்போட்டது. 'தேவனுக்குக் கீழ்ப்படிவேன், பணத்தையும் பெற்றுக்கொள்வேன்' என்று எண்ணினான். 'இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது. தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது'. ஐசுவரியத்தைப் பார்த்தான்; இச்சித்தான்; மனமயங்கினான்; நல்வழி தப்பிப்போனான். 'பாவத்தின் சம்பளம் மரணம்' என்பதுபோல அவன் விரும்பின கூலி சாவுக்கு ஏதுவான காரணமாயிற்று. உலகப் பொருளை வாஞ்சித்து பரம பொக்கிஷத்தை இழந்துவிட்டான். ஐசுவரியத்தின்பேரில் நோக்கமாயிருந்ததினாலே தேவ கிருபை அவனுக்குக் கிடை-



யாமற்போயிற்று. மோட்ச பிரயாணம் என்ற புஸ்தகத்தில் ஒருவனுடைய காரியம் காட்டப்பட்டிருக்கிறது. அவன் நிலைமை மெத்தப்பரிதாபமானது. அவன் வஸ்திரம் எல்லாம் கந்தை, தலை கவிழ்ந்து நிற்கிறான். அவன் கையில் ஒரு மண் வெட்டியுண்டு. அதைக்கொண்டு ஓர் குப்பையில் தோண்டிக் கிளறிக் கிண்டிக்கொண்டிருக்கிறான். அவன் தலைக்குமேலே ஒரு பொற்கிரீடம் உயரத் தொங்கவைக்கப்பட்டிருக்கிறது. அவன் அதை எட்டிப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக இருக்கிறது. அவனோ அதைப் பார்க்கிறதுமில்லை. அதைக் கவனிக்கிறதுமில்லை. அவன் கவனம் எல்லாம் அந்தக் குப்பையின்மேல் செல்லுகிறது. கிரீடத்தைப் பார்க்கிலும் அவனுக்குக் குப்பையே பிரியம். புத்தியீனன், பைத்தியகாரன் எனறு சொல்வோமல்லவா? ஆ! யோசித்துப் பாருங்கள். அப்படிப்பட்ட அநேக பைத்தியகாரர் கிறிஸ்தவசபையிலுண்டு. அற்ப வாழ்வினிமித்தம் நித்திய ஜீவ கிரீடத்தை இழந்து போகிறார்கள். ஒரு சொற்ப லாபத்தினிமித்தம் மோட்ச நன்மைகளை அசட்டை செய்கிறார்கள். சிநேகிதரே! எச்சரிக்கையாயிருங்கள். பிலேயாம் விரும்பின கூலியை நீங்கள் விரும்பாதேயுங்கள், 'ஒருவன் இந்த உலக முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும் தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?'

III. பிலேயாம் செய்த போதனையைக் கவனித்துப்பாருங்கள் (வெளி. 2: 14).

தேவனுடைய தீர்க்கதரிசியானாலும் தவறிப்போனான். இஸ்ரவேல் புத்திரரைச் சபிக்க தேவன் இடங்கொடாததினாலே தான் விரும்பின கூலியை அவ்வாறு பெற்றுக்கொள்ள ஏதுவில்லை என்று கண்டு உபாயம் பண்ணினான். கர்த்தருடைய உத்தரவின் பிரகாரம் இஸ்ரவேல் ஜனங்களை ஆசீர்வதித்தான். தேவன் அருளின வாக்கை சொல்லாமற் போகவில்லை. தேவன் கட்டளையிட்டதை அவன் செய்யாமல் இருக்கவில்லை என்றாலும் பிற்பாடு பாலாக் என்னும் ராஜாவினிடத்தில் ரகசியமாய்வந்து அவனுக்குத் துற்போதனை செய்து கர்த்தருடைய ஜனங்களைக் கெடுத்துப் போட வகை காட்டினான். இஸ்ரவேலருக்குப் பெண் கொடுத்து அதினால் வேசித்தனம் பண்ணவும் விக்கிரகாராதனை செய்யவும் அவர்களைத் தூண்டிவிடும்படிக்கு அவனுக்குப் போதனை செய்தான். ஐயோ! மற்றவர்களுக்கு ஜீவ வழிகாட்டவேண்டியவன் பாவஞ்செய்யப் போதிக்கிறான். தேவ ஊழியக்காரன் என்னப்பட்டவன் பிசாசின் வேலையைக் செய்கிறான். இப்போது இந்தத் தீர்க்கதரிசியினுடைய வேலையினால் உண்டான பலனைப் பாருங்கள். அதோ! பாகால் பேயோர் என்று சொல்லப்பட்ட இடத்தில் ஓர் கல்லறைத் தோட்டமுண்டு. அங்கே போய் அந்தக் கல்லறைகளை எண்ணுவோம் வாருங்கள். பத்து, இருபது, ஐம்பது, நூறு, இருநூறு, ஆயிரம், மூவாயிரம், பத்தாயிரம், இருபதாயிரம், இருபத்து நாலா-

யிரம் கல்லறைகளுண்டு. யாருடைய கல்லறை? வாதையினால் செத்தவர்களுடைய கல்லறை. பீலேயாமுடைய துற்போதனையால் பாவஞ்செய்ததினிமித்தம் கர்த்தரால் அழிக்கப்பட்டவர்களுடைய கல்லறை. பீலேயாம் என்னும் தீர்க்கதரிசியின் போதனையால் மோட்ச கதியடைந்தவர்கள் எத்தனை பேர்? ஒருவனுமில்லை. அவன் உபதேசத்தினாலே மடிந்து மாண்டு நரக பாதாளத்தில் விழுந்தவர்கள் தொகை என்ன? இருபத்து நாலாயிரம் பேர். எவ்வளவோ பயங்கரமான காரியம். சகோதரரே! யோசித்துப் பாருங்கள். உங்கள் போதனையினாலும் நடக்கையினாலும் பக்கத்து ஜனங்கள் மோட்சத்துப் போவார்களா? அல்லது நரகத்துக்குப் போவார்களா? பெற்றோரே! உங்கள் பிள்ளைகள் மோட்ச பதவியடைவதோ, நித்திய நரகம் அநுபவிப்பதோ, எது உங்களுக்குப் பிரியம்?

IV. பீலேயாம் அடைந்த மரணத்தைக் கவனித்துப் பாருங்கள்.

வெகு கீர்த்தியான ஜெபம் பண்ணினான். நல்ல கதியை விரும்பினான். அவன் முடிவோ பயங்கரம் (எண். 31: 8; யூதா. 13, 22). அஞ்ஞானிகள் நடுவில் மரணமடைந்தான். கர்த்தருடைய சத்துருக்களோடு எண்ணப்பட்டுச் செத்துப்போனான். தேவ துரோகியாக மரித்தான். யாதொரு நல் நம்பிக்கையில்லாதவனாக மரித்தான். நிர்ப்பந்த மனுஷனாக மரித்தான். சண்டாளப்பாவியாக மரித்தான். 'நீதிமான் மரிப்பதுபோல் நானும் மரிப்பேனாக' என்று மன்றாடின மனிதன் துஷ்டன் மரிப்பதுபோல மரித்துப்போனான். அப்போது அவன் ஜெபம் எங்கே? ஆ! சிநேகிதரே! நல் நடக்கையில்லாதவன் நல் மரணம் அடையான். கோவிலுக்கு வந்து வெகு கீர்த்தியாய் ஜெபஞ்செய்தாலும் பொல்லாதவர்களாக நடப்போமானால் நம்முடைய முடிவு பரிதாபமாயிருக்கும். இவைகளை வாசிக்கிற சகோதரரே! உங்கள் காரியம் எப்படி? வீட்டிலே உங்கள் நடக்கை எப்படி? தினந்தோறும் வார நாட்களில் உங்கள் ஜீவியம் எப்படிப்பட்டது? இவ்வுலகத்தில் சமாதானத்தோடு ஜீவியஞ்செய்து ஏற்றகாலத்தில் நல் மரணம் அடையவேண்டுமானால் இயேசுநாதருக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். சீர்ப்பட்டு பரிசுத்தமாய் நடந்துகொள்ளுங்கள்.

T. W.

## நோட்டீஸ்.

இந்த மாதப் பத்திரிகை முதல் காலஞ்சென்ற கனம் T. உவாக்கர் ஐயரவர்களின் பிரசங்கங்களில் சிலவற்றை மாதந்தோறும் பிரசுரிக்க யோசித்து கனம் அம்மாளவர்களின் சம்மதத்தோடு செய்கிறோம். தேவாவியின் ஒத்தாசையினால் அவைகள் அநேகருக்குப் பிரயோஜனப்படுமென்று நம்பி ஜெபத்தோடு அனுப்புகிறோம்.



# பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்குண்டாயிருக்கிறது.

(எபே. 1: 7).

I இந்த மீட்பு அநாதி நித்திய கால சம்பந்தமுள்ளது. எபே 1: 4. கிறிஸ்துமார்க்கம் நேற்று வந்ததுதானே, ஐரோப்பியர் நூறுவருஷங்களுக்கு முன் கொண்டுவந்ததுதானே, அல்லது 1914 வருஷங்களுக்கு முன் கிறிஸ்து பிறந்ததின் பின் உண்டானதுதானே என்று சிலர் பேசலாம். இன்னும் சிலர் ஆண்டவர் ஏவாளுக்கு வாக்குத்தத்தம் செய்தபிறகு தானே கிறிஸ்துவைப்பற்றிய எண்ணமுண்டானது என்கலாம். சத்தியவேதமோ அவர் உலகத்தோற்றத்துக்கு முன் கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டார் (எபே. 1: 4). என்று சொல்லுகிறது. நாம் வாசஞ்செய்கிற பிரமாண்டமான உலகம் உருவாகுமுன்னே நம்மைத் தெரிந்தாரென்றால் ஆண்டவர் பார்வையில் இந்த உலக சிருஷ்டிப்பு மேலானதோ மீட்பின் மகத்வம் மேலானதோ என்பதை சிந்தித்துப் பாருங்கள். உலகம் காணப்படுவதற்கு முன், மீட்கப்பட்ட சபை ஒன்றை உலகத்திலிருந்தெடுக்கவேண்டும் என்று கருதியே, ஆண்டவர் உலகத்தைச் சிருஷ்டித்தார் என்று சொல்லலாமல்லவா! தற்காலம் நடக்கிற மீட்பின் கிரியைக்கு ஒழுங்கு சட்டம் (Plan & programme) முதலியவை எல்லாம் ஆண்டவர் அநாதியாய் யுகாயுகங்களுக்கு முன் குறித்துப்போட்டார். உண்டாகக்கடவது என்ற வார்த்தையால் உலகத்தின் சிருஷ்டிப்புகளைப் படைத்த ஆண்டவர், வார்த்தையாகிய தேவன் தாமே அவதாரமாய் உலகத்தில் வந்து உயிரைக் கொடுத்து பாவமன்னிப்பாகிய மீட்பைச் சம்பாதிக்கச் சித்தமானார். 'காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளும் ஏகமமாய்க் கூட்டப்படவேணும் என்ற சத்தியம் அறிந்தவராய்க் கிரியைசெய்தார். ஆ! இம்மையின் புகழுக்காகவும், கீர்த்திக்காகவும், பேருக்காகவும், பொருளுக்காகவும் மாத்திரம் கிறிஸ்தவராயிருப்பது மோசமான காரியம். இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால் எல்லா மனுஷரிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம் (1 கொரி. 15: 19). இந்த உலகத்தின் ஆசாபாசங்களில் சிக்கி நித்தியமானவைகளை இழந்துபோகாதபடி எச்சரிக்கையாயிருப்போமாக. நாம் செய்கிற ஒவ்வொன்றையும் நித்தியத்துக்கென்றே செய்வோமாக.

II இம்மீட்பு ஒப்பற்ற பேரன்பு அடங்கியது. உலகத்திலுள்ள ஆயிரக்கணக்கான பாஷைகளில் சொல்லவேணுமானால் பரலோகத்தின் பாஷைகளிலும் காதுக்கும் மனதுக்கும் இன்பமான வார்த்தை அன்பே. கிருபையில் ஐசுவரியமுள்ள கர்த்தர் நீசராகிய நமக்கும், தூயராகிய தமக்கும் மத்தியில் அன்பின் வடிவான அருமை ரக்ஷகனை நிறுத்தி அவரில், அவர் மூலமாய் நம்மைப் பார்க்கிறார். அன்றியும் கர்த்தருக்கு முன் நமது அவலக்ஷணம் அந்தக்கேடு காணப்படாதபடிக்கு நம்முடைய கிருபையென்னும் ஆடையால் நம்மைப் பொதிந்து அலங்கரித்துவிடுகிறார். கர்த்தருக்கே ஸ்தோத்திரம்.

1150



உலகத்திற்கும் பிசாசுக்கும், மாம்சத்துக்கும் மனசுக்கும் அடிமைகளா யிருந்த நம்மை இரக்ஷகர் மீட்டார். அது மாத்திரமல்ல அடிமைத்தனத் தின் அதிகாரியாகிய பிசாசின் கிரியைகளை அழித்தார் 1 யோ.3: 8. பாவத் தின் சம்பளமாகிய மரணத்தைப் பரிகரித்தார் 2 தீமோ. 1: 10. பாவம் மர ணம் என்பவைகளின் பிரமாணித்தினின்று விடுதலை செய்தார் ரோமர். 8: 2. வல்லவராயிருந்து பாவத்தின்மேல் ஜெயம் தந்தார் 1 கொ. 15: 55, 56. மீட்படைந்த கர்த்தருடைய பிள்ளை கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலுள்ள ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும், ஆசீர்வதிக்கப்பட்டு எபே. 1: 3). பரலோகத்துக்குப் பக்குவப்படுகிறான். மீட்படையாதவனுடைய நிலை மையோ அந்தகாரம் 5: 7. அவன் சிந்தனைகள் வீணானவைகள் 4: 17. புத்தி இருளடைந்து போயிற்று. இருதயம் கடினமானது. அறிவீனமே பாடமானது 4: 18. மனச்சாட்சி செத்துப்போயிற்று. அவயவங்கள் அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது 4: 19. மற்ற ஜனங்களுக்கு முன்பாக கெட்டுப்போகிற பழைய மனுஷனை போர்த்துக்கொண்டு நாசமுள் வனாய்க் காணப்படுகிறான் 4: 22. வாயைப் பொய்க்கும், கோபத்துக்கும், வம்புக்கும் ஒப்புக்கொடுத்துக் கேட்டிலே கெட்டழிகிறான். மீட்படையாத சகோதரனே! இன்றைக்கே அவர் இரத்தத்தைச் சொந்தமாக்கி பாவமன் னிப்பை உடனே ஏற்றுக்கொள்.

III இம்மீட்பு அதி உன்னத வளர்ச்சியுடையது. அதாவது கிறிஸ் துவின் நிறைவான வளர்ச்சிக்குத்தக்கதாக பூரண புருஷராகும் வரைக்கும் (எபே. 4: 11) இது வளரக்கூடியது. துர்க்குணத்திலுருவான பாவமாம்சத் தோடு நித்திய ஜீவன் அனுபவிக்க முடியாது. இந்தப் பாவ மாம்சம் செத்து ஜீவ சாயல் பெறவேண்டும். பல கிறிஸ்தவர்கள் தாங்கள் பாவத் துக்குச் செத்தவர்கள் என்றறியாமல் பாவத்திலே செத்துப்போகிறதுண்டு. 1-வது கிறிஸ்தவன் கிறிஸ்துவோடு தன்னையும் தன் பாவத்தையும் வைத்து அடக்கம்பண்ணுகிறான். 2-வது கிறிஸ்தவன் கிறிஸ்துவோடு எழுந்தவனா யிருக்கிறான். 3-வது பறக்கிற கிறிஸ்தவனாயிருக்கிறான். 4-வது பரம கிறிஸ்தவனாயிருக்கிறான். எபே. 2: 7. இப்பொழுது எல்லாம் கிறிஸ்த வனுடைய காலின்கீழே கிடக்கிறது. பாவமோ, பிசாசோ, உலகமோ, எல்லாம் கீழேதான். இவனோ கிறிஸ்துவோடு மேலே இருந்து பரலோக பாக்கியத்தை இம்மையிலேயே ருசித்து இன்பத்தில் இளைப்பாறுகிறான் 1: 3.

IV இம்மீட்பு பரமானந்த பதவி பயக்கும் 1: 9. கடைசிகாலில் இரக்ஷகர் வரும்போது ஆயிரமாயிரமான தூதர்களும், உயிர்த்தெழுந்த பக்தர்களும் அவரோடு வர பூலோகத்திலிருந்து மறுரூபமாகிற விசுவாசிகள் அவரைச் சந்திக்க பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளு மாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள் கூட்டப்படுகிற அன்றையத்தினம் எவ்வளவு மாக்ஷிமையாயிருக்கும். இந்த மாக்ஷிமையான நாளுக்கென்று கர்த்தர் நாமெல்லாரையும் ஆயத்தம் செய்வாராக.

Printed at the Church Mission Press, Palamcottah and Published by
the Christian Brotherhood Association, Tinnevelly.

September, 1914. Registered—No. M. 163

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." (யோவான் 7: 38)

OFFICE OF THE REGISTRAR
29 SEP 1914
M.

Vol. XV செப்டெம்பர் மீ 1914

## "எங்களுடைய போர்."

"எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது." 2. கொரி 10: 4.

யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் குறித்துக் கேள்விப்படு கிறோம். ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும் ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்புகிறது. இதினால் பலவிடங்களிலுமுள்ள தேவனுடைய பிள்ளைகள் உலகத்துக்கு என்ன சம்பவிக்குமோவென்று கலங்குகிறார்கள். எருசலேம் ஆலயம் அழிந்தால் உலகமே அழிந்துபோகுமென்பது யூதரு டைய தாற்பரியம். எருசலேம் அழிந்தது. ஆகிலும் முடிவு உடனே வர வில்லை. இப்படிப்பட்ட காரியங்கள் சம்பவிக்கவேண்டியதென்றும், ஆனா லும் முடிவு உடனே வராதென்றும், கர்த்தர் சொல்லியிருக்கிறபடியால் நாம் கலங்காமல் அவர் பேரில் நம்பிக்கையாயிருக்கவேண்டும். ஆகிலும் இவைகள் அவருடைய வருகைக்குமுன் காணப்படவேண்டிய அடையா ளங்கள் என்பதையும் நாம் மறந்துபோகலாகாது. யுத்தம் ஓயவும் சமாதா னமுண்டாகவும் ஊக்கமாய் ஜெபிப்பது நமது கடமை. மேற்காட்டிய வசனத்தில் மூன்றுகாரியங்களைக் கவனிக்கலாம். அந்தமூன்றையும் மூன் றுவார்த்தைகளாக எடுத்துக்கொள்ளலாம். போர், போராயுதங்கள், போ ரின் பலன்.

I. போர். தேவனுடைய பிள்ளைகளுக்குப் போராட்டமுண்டு. "மாம் சத்தோடும் ரத்தத்தோடுமல்ல; துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகாரலோகாதிபதிகளோடும், வானமண்டலங்களி லுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்ட

முண்டு." மாம்சத்துக்குரிய போர்வீரரிடத்தில் விளங்கும் வீரதீரத்தை ஆவிக்குரிய போர்வீரர் கவனிப்பது நல்லது. யுத்தத்தில் வெற்றியடையும்படி அவர்கள் எவ்வளவு ஆயத்தம் செய்கிறார்கள்! இந்தப்போருக்கென்று தங்களை முழுவதுமாய் ஒப்புக்கொடுத்து விடுகிறார்கள். தங்கள் அருமையான மனைவி பிள்ளைகளை மனப்பூர்வமாய் விட்டுப்பிரிகிறார்கள். சேனாபதியின் சொல்லுக்குக் கீழடங்கி அணியணியாகச்சேர்ந்து எத்திசை போகவேண்டுமோ அத்திசைமுன்னேறிச் செல்லுகிறார்கள். தங்கள் பிராணனையும் அவர்கள் அருமையாக எண்ணுகிறதில்லை. தங்கள் வீடுகளுக்குத் திரும்புவோமென்கிற நிச்சயமில்லை. எவ்வளவோ ஏராளமான பணங்களை இந்தப்போருக்காக உற்சாகமாய்க் கொடுத்துவிடுகிறார்கள்.

இயேசுவின் போர்வீரராகிய நாம் வெட்கப்படவேண்டியவர்களாயிருக்கிறோம். ஐயோ! நாம் எவ்வளவு அபாத்திரர், போர்வீரர் என்னும்பேர் நமக்குத்தகுமோ? போர்வீரருக்குள் ஐக்கியமில்லையே? சேனாபதிக்குக்கீழ்ப்படியும் சிந்தையில்லை. முன்னேறிச்செல்லத் தைரியமில்லை. சமூலமாய் நம்மைப் பிரதிஷ்டை செய்யவுமில்லை. சத்துருவின் தந்திரங்களை நாம் கவனிக்கிறதில்லை. தேவனுடைய ராஜ்யத்துக்காகச் செலவழிக்கவும் செலவழிக்கப்படவும் நமக்கு மனதில்லை. இயேசுராஜா மகிமைப்படவேண்டுமென்கிற நாட்டமில்லை. இன்னும் எவ்வளவோ குறைவுகள் நம்மிடத்திலுண்டே; இப்படிப்பட்ட நம்மையும் தமது போர்வீரராக வைத்திருப்பது என்ன அதிசயம்! ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு சகல மகிமையும் அவருக்கே உண்டாகத்தக்கதாக இப்படிப்பட்ட பெலவீனரையும் கோழைகளையும் ஒன்றுக்கும் உதவாதவர்களையும் தமது சேனையில் சேர்த்து அவர்களை நடத்தி அவர்களுக்கு ஜெயத்தைக்கொடுப்பது அவருடைய திருவுளத்திற்குப் பிரியமாயிருக்கிறதாக்கும்.

இயேசுராஜாவின் கொடியின் கீழ்நின்று ஆத்துமாக்களை ரட்சிப்பதற்கு ஆயிரக்கணக்கான போர்வீரர் சேனைசேனையாகப் புறப்பட்டால் எவ்வளவு மாட்சிமையாயிருக்கும்! நம்மையும் நமது செல்வம் பெலன் யாவற்றையும் ராஜாவின் பாதத்தில் காணிக்கையாகப் படைத்துவிட்டு அவருடைய ராஜ்யத்துக்காக யுத்தஞ்செய்வோமானால் எவ்வளவு மேன்மையாயிருக்கும்! நமக்கு அருமையானவர்களை ஆண்டவரின் பாதுகாப்புக்கு ஒப்புவித்து நமது பிராணனையும் அருமையாய் எண்ணாமல் சுவிசேஷ ஊழியத்துக்காகப் போராடுவோமானால் பலன் எவ்வளவு மிகுதியாயிருக்கும்! நமது சத்துருவாகிய சாத்தானின் தந்திரங்களையும் மறைவிடங்களையும் அறிந்து அவனுக்குச் சற்றும் இடங்கொடாமல் தைரியமாய் அவனுக்கு எதிர்த்துநிற்போமானால் ஜெயம் எவ்வளவு பெரிதாயிருக்கும்! போரில்லாமல் ஜெயமில்லை, சிலுவையில்லாமல் கிரீடமில்லை என்கிற சத்தியத்தை மனதில் வைத்துக்கொள்வோமாக.



**II. போராயுதங்கள்.** போருக்குப் போராயுதங்கள் வேண்டும். பலவகையான போராயுதங்கள் உண்டு. சிலபோராயுதங்கள் போர்வீரர் தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கும், மற்றவைகள் சத்துருக்களை நிர்மூலமாக்குகிறதற்கும் உதவும்; நம்முடைபோர் மாம்சத்துக்குரிய போரல்ல. நமது போராயுதங்களும் மாம்சத்துக்கேற்றவைகளல்ல. ஆகிலும் மாம்சத்துக்குரிய போராயுதங்களைப் பார்க்கிலும் ஆவிக்குரிய போராயுதங்கள் அதிகப் பலமுள்ளவைகள். ஏனென்றால் அவைகள் மனுஷனால் உண்டானதல்ல, தேவனால் உண்டான தேவபலமுள்ள போராயுதங்களாயிருக்கிறது. இந்தப் போராயுதங்களைக் குறித்தும் அவைகளைத் தரித்துக்கொள்ளவேண்டிய விதத்தைக்குறித்தும், அப்போஸ்தலன் எபேசியர் 6-ல் விவரமாய்ச் சொல்லியிருக்கிறார். அதிலே இடுப்புக்குக் கச்சையுண்டு மார்புக்குமார்க்கவசமுண்டு, கால்களுக்குப்பாதரட்சையுண்டு, ஒருகைக்குக் கேடகமுண்டு, மறுகைக்குப் பட்டயமுண்டு, தலைக்குத் தலைச்சீராவுண்டு. ஆனால் முதுகுக்கோ ஆயுதத்தைக் காணோம். கிறிஸ்தவபோர்வீரன் சத்துருவுக்கு முதுகுகாட்டவேகூடாதென்பது சேனாபதியின் தீர்மானபடியால் முதுகுக்கு ஆயுதம் கொடுக்கப்படவில்லை.

இப்பொழுது ஆயுதங்களின் விவரங்களைச் சுருக்கமாய்ப் பார்ப்போம். (1) சத்தியம் என்னும் கச்சை அரையில் கட்டப்பட்டிருக்கவேண்டும். கிறிஸ்துவைக்குறித்து "நீதி அவருக்கு அரைக்கட்டும் சத்தியம் அவருக்கு இடைக்கச்சையுமாயிருக்கும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. (ஏசா 11: 5) சேனாபதியைப்போலவே அவருடைய சேனைக்கும் அரைக்கச்சை கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசுவானவர் சத்தியமும் சத்தியத்தைக் குறித்துச் சாட்சிகொடுக்கிறவருமாயிருந்தார். போர்வீரன் உண்மையுள்ளவனாயிருக்கவேண்டும். கர்த்தர் உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறார். உள்ளானமனுஷனுடைய இடுப்புக்குப்பெலன் சத்தியமே. "என் பிள்ளைகள் சத்தியத்தில் நடக்கிறார்களென்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை" என்று யோவான் சொன்னான். (2) மார்பைக்காக்கவேண்டிய ஆயுதம் நீதி; சுயநீதியாகிய அத்தியிலையும் அழுக்குக்கந்தையும் ஒன்றுக்கும் உதவாது. கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் நாம் கிருபையாய்ப் பெற்றுக்கொண்ட தேவ நீதியே நமது மார்பைக்காக்கக்கூடிய மார்க்கவசம். பெரும்பாவியாயிருந்த நான்என் ரட்சகர்மூலமாய் நீதிமானாக்கப்பட்டேன் என்கிற நம்பிக்கையை உடைக்க சாத்தானின் சேனையால்கூடாது (3) சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை. கோலியாத் வெண்கலப் பாதரட்சை தரித்திருந்தான். லேசாய்க் கிழிந்துபோகக்கூடிய சாதாரணமான பாதரட்சை போருக்கு உதவாது. கல் இடறியோ, கூர்மையான குச்சிகள் பாய்ந்தோ, காலில் காயமுண்டாகுமானால் போர்வீரன் நடப்பது அசாத்தியம். ஆகை

யால் போருக்கேற்ற பெலமான பாதரட்சைகள் வேண்டும். அது சமாதானத்தின் சுவிசேஷத்துக்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை என்றுசொல்லப்பட்டிருக்கிறது. தேவசமாதானத்தைப் பெற்றுக்கொள்ளாதவன் மற்றவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க ஆயத்தமுள்ளவனல்ல, "உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக்கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்" என்று பேதுரு சொல்லியிருக்கிறார் (1 பேது. 3: 15). தேவனே நான் ஆயத்தமாயிருக்கிறேன், என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது என்றுசங்கீதக்காரன் சொன்னதுபோல நாமும்பாடவோ, ஜெபிக்கவோ, புத்திசொல்லவோ, பிரசங்கிக்கவோ, வேறெந்த நன்மைசெய்யவோ எப்பொழுதும் ஆயத்தமாயிருப்போமாக. இதுவே நம்முடைய கால்களுக்கு பெலனான பாதரட்சை. (4) விசுவாசம் என்னும் கேடகம், இது கையில் பிடித்து நிற்கவேண்டிய பிரதான ஆயுதம். எல்லா ஆயுதங்களிலும் இது மேலானது. மார்க்கவசம் முக்கியந்தான். ஆனால் இதுவோ எப்பக்கத்திற்கும் உதவக்கூடிய இணையிலா ஆயுதம், பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் இந்தக்கேடகம் அவித்துப்போகக்கூடியது. சத்துருவின் சோதனைகளை அஸ்திரத்துக்கு ஒப்பிட்டிருக்கிறது. அஸ்திரம் மகாவேகமாய்ப் பாயக்கூடியதும் படுகாயப்படுத்தக்கூடியதுமான ஆயுதம். பின்னும் அது அக்கினியாஸ்திரமென்றும் சொல்லப் பட்டிருக்கிறது. சர்ப்பங்களில் கொள்ளிவாய்ச்சர்ப்பங்கள் அக்கினிபோன்ற விஷமுள்ளவை. அதினால் கடியுண்டவன் எரியுது எரியுதென்று கதறுவான். அக்கினியாஸ்திரங்களும் அதைப்போலவே, கொடிய விஷமுள்ளவை. அது போர்வீரனைக் காயப்படுத்தி அக்காயத்தில் விஷத்தை ஊற்றிக் கொல்லக்கூடியதாயிருக்கிறது. சாத்தான் வேகமாய் அனுப்பின பொல்லாத சிந்தனைகள் நமதிருதயத்தில் பாய்ந்து, நரகத்தீயை அங்கே கொளுத்தினதினால் உண்டான வேதனை கொஞ்சமல்ல. என்றாலும் வெண்கலச்சர்ப்பத்தை நோக்கின பார்வை, கொள்ளிவாய்ச் சர்ப்பத்தின் விஷத்தை அவித்து, மரணத்தை அகற்றிவிட்டதுபோல, அருமை ரட்சகரை நோக்கும் விசுவாசப் பார்வையினால் எப்பேர்ப்பட்ட அக்கினியாஸ்திரங்களும் அவிந்துபோகக்கூடும். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். விசுவாசமாகிய கேடகத்தைப் போர்வீரன் எக்காலத்திலும் பிடித்தவனாக நிற்கவேண்டும். (5) இரட்சணியமெனும் தலைச்சீரா, முழுச்சரீரத்திற்கும் சிரசே பிரதானம். தலையைக்காப்பாற்ற ஆண்டவர் தலைச்சீராவைக் கொடுத்தார். இதை இன்னும் தெளிவாக 1. தெசலோனிக்கேயர் 5: 8-ல் இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவென்று அப்போஸ்தலன் அழைக்கிறார். இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் என்கிற நிச்சயம் போர்வீரனுக்கிருக்கவேண்டும். அந்த நிச்சயமில்லாதவன்போர்வீரனாகமாட்டான், போரில்ஜெயிக்கவுமாட்டான். (6)தேவ



வசனமாகிய ஆவியின் பட்டயம். இதுவரை நாம் பார்த்த போராயுதங்கள் போர்வீரனைக் காக்கக்கூடியவைகள். பட்டயமோ சத்துருவைச் சங்கரிக்கக்கூடியது. சேனாதிபதி வனாந்தரத்தில் தம்மை எதிர்த்த சத்துருவை இந்த ஆயுதத்தைக்கொண்டே மேற்கொண்டார். தேவவசனமாகியபட்டயத்தைப்பிடிக்க, உபயோகிக்க நாம் நன்றாய்ப்பழகவேண்டும். ஆவியானவரால் நாம் போதிக்கப்படவேண்டும். இருபுறமும் கருக்குள்ள இந்தப் பட்டயம் போர்வீரனுடையகையைவிட்டு நீங்கலாகாது. இவைகள் எல்லாவற்றோடும் இன்னும் ஒரு காரியத்தை நாம் கவனிக்கவேண்டும். நம்முடைய சேனாபதியாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனை நோக்கி பரிசுத்தவான்களாகிய சகல போர்வீரரையும் அவர் ஆசீர்வதிக்கவும் இந்தப்போரில் நமக்கு வெற்றி கொடுக்கவும் ஊக்கமாய் ஜெபிக்கவேண்டும்.

III. போரின் பலன். மாம்சத்துக்குரிய போரின்பலன் எவ்வளவு பயங்கரம், மாம்ச போராயுதங்கள் கண்காணக்கூடிய பிரமாண்டமான கோட்டைகளையும், பலத்த அரண்களையும், மனுஷர் வாசஞ்செய்யும் அழகான வீடுகளையும் நிர்மூலமாக்கி விடுகிறது. இந்தப்போர் நடக்கும் பட்டணம் பாழாய்ப்போகும். ஆயிரக்கணக்கான மனுஷர் தங்குவதற்கிடமில்லாமலும் சாப்பிட உணவில்லாமலும் ஏங்கித்தவிப்பார்கள். எத்தனையோ மனுஷர் கைகால்கள் இழந்து சரீரத்தில் பலவிடங்களிலும் காயப்பட்டுக் குற்றுயிராய் விடப்படுவார்கள். இன்னும் அநேகர் குண்டுகள்பட்டும் பட்டயத்தால் வெட்டுண்டும் பிரேதங்களாவார்கள். தங்கள் உயிர்க்குயிரான புருஷரை இழந்த நேசமனைவிகளின் துயரம் எவ்வளவு! அருமைத்தகப்பன்மாரை இழந்த பிள்ளைகளின் புலம்பலும் அழுகையும் எவ்வளவு! மனுஷருடைய பாவத்தின் தண்டனைகளில் யுத்தம் மகா கொடூரமானது. வெளிப்படுத்தின விசேஷத்தில் இரண்டாம் முத்திரை உடைக்கப்பட்டபோது சிவப்புக்குதிரை புறப்பட்டது. மூன்றாம் முத்திரை உடைபட்டபோது கருப்புக்குதிரை புறப்பட்டது. நான்காம் முத்திரையில் மங்கின நிறமுள்ள குதிரை புறப்பட்டது. இதில் சிவப்பு யுத்தத்திற்கும், கருப்பு பஞ்சத்துக்கும், மங்கல் சாவுக்கும் அடையாளமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எங்கே யுத்தமுண்டோ, அங்கே பஞ்சமும் சாவுமுண்டு. தாவீது இஸ்ரவேலரைத் தொகையிட்டபோது கர்த்தர் இந்த மூன்று தண்டனைகளையும் அவனுக்கு முன்வைத்து ஒன்றைத் தெரிந்துகொள்ளச் சொன்னார். அப்பொழுது தாவீது நான் கொடிய இடுக்கணில் அகப்பட்டிருக்கிறேன் என்று புலம்பினான்.

ஆவிக்குரிய போரின் பலனோ அளவிலடங்கா ஆசீர்வாதம். கெட்டுப்போன பாவிகள் தேவனுடைய மகிமையான ரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும்படி செய்வதே இந்தப்போரின் நோக்கம். இந்தப்போரின் மூலமாய்

அந்தகாரத்திலிருந்த அநேகர் ஆச்சரியமான ஒளியைக் கண்டிருக்கிறார்கள். தேவப்பகைஞராயிருந்த அநேகர் அவரோடு சமாதானம் பெற்றிருக்கிறார்கள். செத்த நிலைமையிலிருந்த அநேகர் நித்திய ஜீவனுக்குட்பட்டிருக்கிறார்கள். பிசாசின் மக்களெனச் சொல்லப்பட்ட அநேகர் தேவபுத்திரராயிருக்கிறார்கள். பிசாசின் சிறைகளாயிருந்த அநேகர் இயேசுவுக்கு உத்தம ஊழியராயிருக்கிறார்கள். இந்தப் போர் மண்ணுக்குரியவர்களை விண்ணுக்குரியவர்களாக்கியிருக்கிறது. மாம்சதேகிகளை மகிமையான தேகிகளாக்கியிருக்கிறது. உலகமக்களை பரமசுதந்தரராக்கியிருக்கிறது. நரகத்துக்குரியவர்களை மோட்சவாசிகளாக்கியிருக்கிறது. இன்னும் என்ன சொல்லலாம்? இந்தப்போர் அநேகருடைய கண்ணீரைத் துடைத்து ஆறுதல் படுத்தியிருக்கிறது. கவலை விசாரத்தை நீக்கி மெய்ச்சமாதானத்தைக் கொடுத்திருக்கிறது. விதவைகளைத்தேற்றி, ஏழைப்பிள்ளைகளை ஆதரித்து, பேதைகளை ஞானியாக்கி, மிலேச்சர்களை உயர்த்தியிருக்கிறது. ஆ! சுவிசேஷ ஊழியத்தின் வல்லமை எவ்வளவு பெரிது! ஆவிக்குரிய இந்தப் போர் கிறிஸ்துவினாலும் அவருடைய உத்தம போர்வீரராலும் நடத்தப்பட்டிராவிட்டால் இந்த உலகத்தின் கதி எப்படியிருக்கும்? பலவானின் கையிலிருந்து பாவிகள் எப்படி விடுவிக்கப்படுவார்கள்?

கிறிஸ்துவின் போர்வீரராகிய தேவனுடைய பிள்ளைகளே! தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற சர்வாயுதவர்க்கங்களைத் தரித்துக்கொண்டு சேனாபதியைப்பின் செல்லுவோமாக. இந்தப்போரில் பலகஷ்டங்கள் உண்டு. 'நீயும் இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கனுபவி' என்று அப்போஸ்தலன் தீமோத்தேயுவுக்கு எழுதினார். எல்லாத்தீங்குக்கும் விலக்கிக்காக்க கர்த்தர் கூடயிருக்கிறார். யுத்தத்தில் எந்தப் பக்கம் ஜெயங்கொள்ளுகிறதோ அந்தப் பக்கத்தில் சேர்ந்து கொள்ளுவது மனுஷருக்கு இயல்பு. ஆவிக்குரிய இந்தப்போரில் எந்தப்பக்கம் ஜெயமுண்டாகுமோவென்று நாம் கலங்கவேண்டியதில்லை. இயேசுவே ஜெயிப்பார்! இயேசுவே ஜெயிப்பாரென்று பரலோகம் பாடுது. இயேசுவே ஜெயிப்பாரென்று மறுமைக்குட்சென்ற திரளான சாட்சிகள் பாடுகிறார்கள். இயேசுவே ஜெயிப்பாரென்று பாவியர்சேனை பாடுது. இயேசுவே ஜெயிப்பாரென்று சாத்தானும் சொல்லுகிறான். ஆம், இயேசுவே ஜெயிப்பார். அவர் வல்லமையும் பராக்கிரமுமுள்ள கர்த்தர். அவர் யுத்தத்தில் பராக்கிரமமுள்ளவர். நாம் அற்பராயிருந்தாலும் நாம் அவரைப்பின்சென்று போவோமானால் அவருடைய ஜெயம் நம்முடைய ஜெயமாகும். அவருடைய ஆளுகையிலும் மகிமையிலும் நமக்கும் பங்குண்டாகும். அவருடைய வெற்றி அவருடைய சேனைக்கு வெற்றி. யார் இந்த ராஜாவைச் சேவியாமலும் அவருக்காகப் போர் செய்யாமலும் இருக்கலாம்? இயேசு மகாராஜாவின் போருக்கு இன்னும் ஆட்கள்தேவை. என் சகோதரனே! யாருடைய பட்சத்திலிருக்கி



றாய்? கர்த்தர் வருங்காலம் சமீபமாகுது. ஆண்டவரே! இதோ அடியேன் இருக்கிறேன், என்னை அனுப்பும், நான் போகிறேன் என்று சொல்லி இயேசு ராஜாவின் சேவகத்தில் பேர் எழுதிக்கொள்.

சேனைகர்த்தரே! இயேசுநாதரே!
தேவரீரையே, ஸ்தோத்திரிப்போம்,
உம்மால் வல்லமை, உம்மால் மகிமை
உம்மால் வெற்றியைக் கண்டடைவோம்.
சோர்வும் சோம்பும்
நீக்கி வீரராக
யாரும், வாரும், யுத்தம் பண்ணுவோம்
செல்லும் வெல்லும்
ஆரவாரமாக
யேசுநாதர் நம்பிப்போகிறோம்.

எஸ். பரமானந்தம்.

## No. 2. 'நீ நம்பியிருக்கிற இந்த நம்பிக்கை என்ன?

(2 ராஜா. 18: 19).

தேவனுடைய ஜனங்களைப் பார்த்துப் புறமதஸ்தர் கேட்ட கேள்வி இது. தேவ பக்தனாகிய எசேக்கியா இராஜாவினிடத்தில் அவபக்திக்காரர் கேட்ட கேள்வி; மெய் விசுவாசியினிடத்தில் அவிசுவாசிகள் கேட்ட கேள்வி; பரியாசக்காரருடைய கேள்வி; தேவனுடைய சபையை நிந்திக்கவும் தூஷிக்கவும் உலகத்தார் கேட்ட கேள்வி. அந்தக் காலத்தில் யூத ராஜ்யத்துக்கு மோசம் வந்ததுபோலிருந்தது. அசீரியாவின் சர்வசேனை படையெடுத்து பெரிய சமுத்திரம்போல் அங்கே வந்து பாளயமிறங்கிற்று. அரணான சகல பட்டணங்களையும எளிதாய்ப் பிடித்துக்கொண்டு, அப்புறம் எருசலேம் நகரத்தை முற்றிக்கைப் போட்டார்கள். எசேக்கியாவும் அவன் ஆலோசனைக்காரரும் தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, நாலு பக்கமும் ஏராளமான யுத்தவீரர் வந்து தங்களை வளைந்துகொண்டிருந்தார்கள். வடக்கே பார்த்தாலும் பாளயம், தெற்கே பார்த்தாலும் சேனைவம், கிழக்கே பார்த்தாலும் படை, மேற்கே பார்த்தாலும் எதிர்ச்சேனை. அந்த சேனையை எதிர்த்து ஜெயிக்க அவர்களுக்குப் படையுமில்லை, பெலனுமில்லை; உலகப் பிரகாரமாய்ப் பேசினால், அந்தக் கனமோசத்திற்குத் தப்பித்துக்கொள்ள வழியுமில்லை, வகையுமில்லை. அப்படிப்பட்ட சமயத்தில் அசீரியா தேசத்துப் பிரபுக்கள் பெருமையோடும் மேட்டிமையோடும் வந்து சக்கந்தம் பேசி, இவ்விதமாய் கேள்வி கேட்டார்கள். எசேக்கியா

ராஜாவை நிந்தித்து, "நீ நம்பியிருக்கிற இந்த நம்பிக்கை என்ன?" எகிப்தியருடைய சகாயத்தை நம்புகிறாயா? உன் சொந்த பராக்கிரமத்தை நம்புகிறாயா? உன் தேவனாகிய கர்த்தரை நம்புகிறாயா? நீ யாரை நம்பினாலும் உன்னை அழித்துப்போடுவேன். என்னுடைய கைக்குத் தப்புவிப்பார் ஒருவருமில்லை. என் வல்லமை தேவ வல்லமைக்கும் மிஞ்சினது என்று வீம்பு பேசியும் தேவனைத் தூஷித்தும் விளம்பரம்பண்ணினார்கள்.

பிரியமான ஜனங்களே! நம்மிடத்திலும் இந்தக் கேள்வியை பரமசேனையும் கேட்கிறதுண்டு; பாதாள சேனையும் கேட்கிறதுண்டு. நம்மைச்சூழ பற்பல மோசங்களும் சோதனைகளும் இருக்கின்றன. "மாமிசத்தோடும், இரத்தத்தோடும் அல்ல, துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு" (எபே. 6: 12). கீழான நரகத்தில் நம்மை ஆழ்த்திப்போட பொல்லாத ஆவிகள் வகைபார்க்க, நம்முடைய ஆத்துமாவை முற்றிலும் கெடுத்துப்போட சாத்தான் தந்திரம்செய்ய—நமக்கு மோசமில்லையா? ஆ! பாருங்கள்! நம்முடைய ஜீவன் அநித்தியம்; மரணமோ சமீபம்; பிசாசின் வல்லமை மிகுதி; நமக்கோ பெலனுமில்லை, திராணியுமில்லை. நித்திய ஜீவன் உண்டென்பது மெய். அப்படியானால் சகோதரனே, சகோதரியே "நீ நம்பியிருக்கிற இந்த நம்பிக்கை என்ன?" நல் நம்பிக்கையா? வீண் நம்பிக்கையா? தேவனாலுண்டான உத்தம நம்பிக்கையா? பிசாசினாலுண்டான கள்ள நம்பிக்கையா? இத்தாலி தேசத்தில் விசூவியஸ் மலையின் கோபாக்கினியாலே முற்றிலும் அழிந்துபோன ஓர் பட்டணமுண்டு. அதற்குப் பாம்பிப் பட்டணம் என்று பெயர். அந்தப் பட்டணத்தை பார்த்து இருக்கிறேன். அந்தக் காலத்தில் கல்விப்பொருளிலும் செல்வப்பொருளிலும் பெயர்விளங்கின பட்டணம். ஒருநாள் இராத்திரி சாராயக்கடையில் அநேகம்பேர் உல்லாசமாய்ப்பேசிக் குடித்துக்கொண்டிருக்கையிலும், ரொட்டிக்காரன் அடுப்பில் ரொட்டிகளைச் சுட்டுத் தன் வேலையைச் செய்துகொண்டிருக்கையிலும், பட்டணத்து வாசலில் போர்ச்சேவகர் நின்று காவல் காத்துக்கொண்டிருக்கையிலும், வீடுகளில் அநேகர் மோசம் வருமென்று அறியாமல் சுகநித்திரை செய்கையிலும், திடீரென்று விசூவியஸ் மலை அக்கினிகக்கி அக்கினி பிரவாகம் எங்கும் ஓடிவந்ததினாலே அந்தப் பெரிய பட்டணமுழுவதும் பஸ்பமாய்ப் போய்விட்டது. ஆயிரமாயிரமான ஜனங்களும் அக்கினிக்கிரையானார்கள். மோசம் வராதென்று நம்பினார்கள். சுகமும் க்ஷேமமும் உண்டு என்று நம்பினார்கள். அவர்களுடைய நம்பிக்கையோ அவநம்பிக்கையாய் முடிந்தது. சகோதரரே! தேவனுடைய நீதியுள்ள கோபாக்கினி பற்றியெரிந்து இந்தப் பூலோகத்தையும் அதின் பொல்லாத கிரியைகளையும் பட்சித்துப்போடும் காலத்தில் உங்கள்



நம்பிக்கை நல் நம்பிக்கையாய் விளங்குமா? வீண் நம்பிக்கையாய்க் காணப்படுமா? இப்போது அவரவர்கள் கொண்ட நம்பிக்கையைச் சற்று பரிசோதனை செய்வோமாக

I. உலகப் பொருளை நம்புவார் உண்டு. இந்த வகுப்பார் யோபின் புஸ்தகம் 31: 24ல் நாம் வாசிக்கிறபடி "பொன்னின்மேல் தங்கள் நம்பிக்கையை வைத்து, தங்கத்தைப் பார்த்து 'நீ என் ஆதரவு' என்று சொல்லுகிறவர்கள்." பரி. பவுல்அப்போஸ்தலன் சொல்லுகிறதுபோல(1 தீமோ. 6: 17-18) நிலையற்ற ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கை வையாமல் நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைக்க இவர்களுக்குப் புத்தி சொன்னாலும் அதைக் கேளாமலும் கவனியாமலும் போகிறார்கள். 'பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது' என்பது நிசம். பொருளாசையினாலே எலிசாத் தீர்க்கதரிசியின் வேலைக்காரன் கேயாசியும் தேவதண்டனை அடைந்து குஷ்டரோகியானதோடுகூட பரிசுத்த ஊழியத்திலிருந்து தகாதவனென்று தள்ளப்பட்டான். பொருளாசையினாலே உலக இரட்சகரோடு சகவாசம்செய்த யூதாசும் தன் சிறந்த சிலாக்கியங்களையெல்லாம் இழந்துவிட்டுப் பயங்கரமான முடிவை அடைந்தான். பொருளாசையினாலே ஏராளமான கிறிஸ்தவர்கள் இயேசுவின் அன்பை உணராமலும், மோட்ச நன்மைகளை நாடாமலும் விருதாவாகக் கெட்டுப்போனதுண்டு. இனி கெட்டுப்போவார் வேறநேகருமுண்டு. ஒரு திருஷ்டாந்தத்தை மாத்திரம் சொல்லுகிறேன். சில வருஷங்களுக்குமுன் ஐந்தாறு பேர் தங்கள் சுயதேசத்தையும் இனபந்துக்களையும் விட்டு ஆப்பிரிக்கா தேசத்திலே கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கப் புறப்பட்டுப்போனார்கள். கிறிஸ்துவின் அன்பினாலே நெருக்கி ஏவப்பட்டவர்கள்போல் அவர்கள் எல்லாரும் காணப்பட்டார்கள். ஏனென்றால் அந்த தேசத்தின் கீழ் பாகத்திலே பல மோசங்களும் வருத்தங்களும் நேரிடக்கூடியதேயல்லாமல் அங்கே சுகக்ஷேமம் யாதொன்றுமில்லை. உகாந்தா தேசத்தில் தேவ ஊழியஞ்செய்யப் புறப்பட்டுப்போனார்கள். கடல் யாத்திரைசெய்து யாதொரு அபாயமுமின்றி ஆப்பிரிக்காவிலே போய்ச்சேர்ந்து அங்கே இறங்கினார்கள். அங்கே போய்க் கொஞ்சக் காலத்திற்குப் பின்பு அவர்களில் ஒருவனுடைய மனம் பேதப்பட்டுப்போயிற்று. அவன் பட்டம் பெறாதவன் என்றாலும் சுவிசேஷத்தைப் பிரபல்லியமாக்கும்படி புறப்பட்டுப் போனவன். தேவ ஊழியஞ்செய்வதில் பல சங்கடங்கள் உண்டு என்று கண்டு விலகிப்போனான். வியாபாரம் செய்வதில் மிகுந்த லாபம் உண்டு என்று கண்டு ஆப்பிரிக்கா தேசத்தில் வர்த்தகஞ்செய்ய ஆரம்பித்தான். பொருளாசை அவனைப் பிடித்து வசப்படுத்திற்று. அந்த தேசம் எங்கும் சென்று யானைத்தந்தம் முதலானவைகளைச் சம்பாதித்து வியாபாரம் பண்ணினான். அவன்

பேர் அந்தத் திசை எங்கும் பிரசித்தமாயிற்று. பண சம்பாத்தியம்செய்து பெரிய ஆஸ்திமானானான். அவன் பரம சிந்தையெல்லாம் உலக சிந்தையாக மாறினது. இப்போது, வர்த்தமான பத்திரிகையாலே அவன் முடிவைப்பற்றிக் கேள்விப்பட்டோம். கொங்கோ என்னும் நாட்டிலே தூக்கு மரத்தில் ஏற்றப்பட்டு செத்துப்போனான். அந்த நாட்டார் அவன்பேரிலே மனஸ்தாபம்கொண்டு அவனைக் குற்றவாளியாகப் பிடித்துக் கொலைசெய்தார்கள். ஆ! பாருங்கள்! எவ்வளவு பரிதாபமான காரியம். ஸ்டோக்ஸ் துரை கிறிஸ்துவின் ஸ்தானாபதியாகப் போன இடத்தில் பொல்லாதவனாக மரணமடைந்தான். தேவ ஊழியக்காரன் நன்னெறியில் நில்லாமல் குற்றவாளியாகப் போய்விட்டான். தங்கத்தைப் பார்த்து, 'நீ என் ஆதரவு' என்று சொன்ன மனுஷன் உலகப்பொருளால் வஞ்சிக்கப்பட்டுத் திக்கற்றவனாய் விடப்பட்டான். சிநேகிதனே! 'நீ நம்பியிருக்கிற இந்த நம்பிக்கை என்ன?' உலகப் பொருளை நம்பாதேயுங்கள். 'நிலையற்ற ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கை வைக்காதிருங்கள்'. 'ஐசுவரியம் விருத்தியானால் இருதயத்தை அதின்மேல் வைக்காதேயுங்கள்.'

II. **மாய்மாலத்தை நம்புவார் உண்டு.** மாயக்காரரின் நம்பிக்கை வேத புஸ்தகத்தில் வீண் நம்பிக்கை என்று வெகு திட்டமாக நாம் பார்க்கலாம் (யோபு 27: 8). 'மாயக்காரன் பொருளைத்தேடி வைத்தாலும் தேவன் அவன் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்போது அவன் நம்பிக்கை எங்கே?' ஆம், இது உண்மை. ஒரு மனுஷன் பக்தி வேஷத்தைத் தரித்துக்கொண்டு தன்னைக் கிறிஸ்தவன் என்றும் நீதிமான் என்றும் பாசாங்கு காட்டினாலும் தேவன்வந்து அவன் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்போது அவன் நம்பிக்கை எங்கே? அவன் வெளி வேஷத்தினாலே லாபம் என்ன? அவன் மாய்மாலத்தினாலே பிரயோஜனம் என்ன? ஒன்றுமில்லையே! 'மாயக்காரரின் நம்பிக்கை அழிந்துபோம்; அவனுடைய வீண் எண்ணம் அற்றுப்போய் அவனுடைய நம்பிக்கை சிலந்திப்பூச்சி வீடுபோலிருக்கும்' (யோபு 8: 13, 14). பாருங்கள்! சிலந்திப்பூச்சியானது அதிக ஜாக்கிரதையோடு தன் கூடு கட்டுகிறது. அதைப் பார்த்தால் வெகு விசித்திர விநோதமாய்த் தோன்றும். அதிலே சுகமாய்த் தங்கலாம் என்று நினைக்கிறது. ஆனாலும் ஒரு அடி அடித்தால் சிலந்திப்பூச்சியின் வீடு முற்றிலும் அழிந்தேபோகும். கொஞ்சம் காற்று வீசினால் அதைச் சமூலமாக எடுத்து வாரிக்கொண்டு போகும். அந்தப் பூச்சியின் நூலை கையாலே தொட்டாலும் அது உடனே கெட்டுப்போம். 'மாயக்காரரின் நம்பிக்கையும் அப்படியே அழிந்துபோம். அது நிலைக்காது. அது பிரயோஜனப்படாது. அது ஒன்றுக்கும் உதவாது. மனுஷன் பார்க்கிறபடி தேவன் பார்க்கமாட்டார்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் (1 சாமு. 16: 7). பிரியமான சகோதரரே! மோசம் போகாதிருங்கள். மினுங்குகிறது எல்லாம்



பொன்னல்ல "எல்லா விளக்கும் விளக்கல்ல, சான்றோர்க்கு பொய்யா விளக்கே விளக்கு". கிறிஸ்துவின் திருநாமத்தைத் தரித்துக்கொண்டவர்கள் எல்லாரும் கிறிஸ்தவர்களல்ல. அநேக மாயக்காரர் உண்டு.

சில வருஷங்களுக்குமுன் இங்கிலாந்து தேசத்தில் விபரீதமான ஒரு காரியம் நடந்தது. துஷ்டனான ஒரு மனுஷன் குருவின் வேஷத்தைப் போட்டுக்கொண்டான். குருப்பட்டம் பெற்றவன்போல தன்னைக் காட்டி வெள்ளை அங்கியையோ கறுப்பு ஸ்றோலையோ பட்டத்துக்குரிய உடுப்புகளையெல்லாம் அணிந்துகொண்டு ஐயன்மாருடைய பேர்ஜாபிதாவில் தனக்கென்று ஒரு பேரை எடுத்துக்கொண்டு சில மாசக்காலமாய்ச் சுற்றித்திரிந்தான். அநேக ஆலயங்களில் ஆராதனையை வாசித்து வெகு நேர்த்தியாகப் பிரசங்கம் பண்ணினான். சிலருக்கு ஞானஸ்நானம் கொடுத்து வேறே சிலருக்குக் கலியாணம் நடப்பித்தான். கடைசியில், பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான் என்பதுபோல அவனும் அகப்பட்டான். தண்டனைக்குள்ளானான். ஏனென்றால் அவன் கள்ளனேயன்றி குருவல்ல. அவன் காரியத்தைக் கவனித்துப் பாருங்கள்! குருவின் வேஷத்தைப் போட்டுக்கொள்வதால் அவன் குருவா? ஒரு நல்ல குருவின் பெயரைத் தனக்கு எடுத்துக்கொண்டாலும் அவன் குருவா? வெள்ளை அங்கி தரித்துக்கொண்டு பீடத்தில் ஏறிப் போதித்தும் அவன் குருவானானா? ஞானஸ்நானம் கொடுத்து, கலியாணம் நடப்பித்து வந்தாலும் அவன் உள்ளபடி குருவா? அல்ல! அல்ல! அவன் சூதன்; வஞ்சகன்; எத்தன்; கள்ளன்; சம்பளத்துக்காக மாத்திரம் குருவேஷம் பூண்டான். லாபத்தை விரும்பி பாசாங்கு காட்டினான். எத்தனை ஜெபங்களை வாசித்தாலும் எவ்வளவு சாதுரியமாய்ப் பிரசங்கித்தாலும் திவ்ய பணிவிடை செய்து வந்தாலும் அவன் கள்ளனேயல்லாமல் குருவல்ல. அவன் நடப்பித்த கலியாணமும் கலியாணமல்ல. ஆ! சகோதரரே! கிறிஸ்தவ வேஷம் பூண்டு கிறிஸ்துவின் பெயரைத் தரித்துக்கொள்வதினாலே கிறிஸ்தவர்களாகிவிட்டோம் என்று நாம் நினைக்கலாகாது. ஜெபபுஸ்தகத்தை வாசித்தாலும் கோவிலுக்கு ஒழுங்காய் வந்தாலும் கிருபையின் எத்தனங்களை கையாடினாலும் நம்முடைய இருதயத்தில் தேவாவியைப் பெற்றுக்கொள்ளாவிட்டால் நாம் கிறிஸ்தவர்களல்ல, 'புறம்பாக யூதனானவன் யூதனல்ல—உள்ளத்திலே யூதனானவனே யூதன்' (ரோமர். 2: 28, 29). அப்படிப்போல 'புறம்பாக கிறிஸ்தவனானவன் கிறிஸ்தவனல்ல; உள்ளத்திலே கிறிஸ்தவனானவனே கிறிஸ்தவன்' ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்'. சகோதரனே! பரமமேய்ப்பனானவர் மகிமையோடு வந்து, செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கும்போது—நீ வலது பக்கத்தில் இருப்பாயா? இடதுபக்கத்தில் இருப்பாயா? சகோதரியே! அந்நாளிலே நீ செம்மறியாடாய் விளங்குவாயா? வெள்ளா

டாய் விளங்குவாயா? 'நீ நம்பியிருக்கிற இந்த நம்பிக்கை என்ன?' புத்தியீன பாவியே! சிலந்திப்பூச்சியைப்போல நூல்போன்ற வீட்டை நம்புகிறாயா? வீண் நம்பிக்கையை விட்டுவிடுங்கள். வேஷங்காட்டுவதை விட்டுவிடுங்கள். ஆத்தும ரக்ஷிப்பை நாடித்தேடுங்கள். உத்தம பக்தியை விரும்பிக் கொள்ளுங்கள். புதிய சுபாவத்தை அடையும்படிக்குக் கவலைப்படுங்கள். மாய்மாலத்தை நம்பாதிருங்கள்.

III. சுயநீதியை நம்புவார் உண்டு. பரிசேயர் எல்லாரும் 'தங்களை நீதிமான்களென்று நம்பினார்களாம்' (லூக். 18: 9). ஜீவன் போனாலும் தங்கள் சுயநீதியை விடமாட்டார்கள். ஒரு காலத்தில் பவுல் அப்போஸ்தலனும் அந்த வகுப்பைச் சேர்ந்தவனாயிருந்தான். மெய்தான், அவன் ஒருபோதும் மாயக்காரனல்ல, கபடமாக அல்ல, உள்ளபடியே தன் சுயநீதியினாலே ரக்ஷிப்புண்டாகும் என்று விசுவாசித்து வந்தான். சொல்லவேண்டுமானால், லோபியானவன் தன் திரவியங்களை ஆசையோடு பற்றிப்பிடித்துக்கொள்வதைப் பார்க்கிலும் சவுல் என்பவன் தன் புண்ணிய கிரியைகளை அதிக ஆவலோடு பற்றிப்பிடித்தான். பிலிப்பியர் 3-ம் அதி-ல், அவைகளை ஒவ்வொன்றாய் விரித்துச் சொல்லுகிறான். பொருளாசைக்காரன் தன் நாணயங்களை எண்ணிப்பார்த்தாற்போல அவன் தன் நீதியின் பொக்கிஷங்களை எண்ணிச் சொல்லுகிறான். விருத்தசேதனம் ஓர் நாணயம்; ஜாதிப் பெருமை ஓர் நாணயம்; வேதவிசுவாசம் ஓர் நாணயம்; பக்திவைராக்கியம் ஓர் நாணயம்; சன்மார்க்க ஜீவியம் ஓர் நாணயம். இவைகளையெல்லாம் எண்ணி எண்ணிப் பெருந்தொகை என்றறிந்து சந்தோஷப்பட்டான்; ஆனாலும் கிறிஸ்துநாதர் அவனுக்குத் தரிசனமானதோடு தன் நம்பிக்கை வீண் நம்பிக்கையென்று அறிந்துகொண்டான். தன் சுயநீதியின் நாணயங்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து நஷ்டம் என்று எண்ணிக் குப்பையென்று எறிந்துவிட்டான். கிறிஸ்தவனே! கிறிஸ்தவளே! 'நீ நம்பியிருக்கிற இந்த நம்பிக்கை என்ன?' சுயநீதியினால் ஒன்றுமில்லை என்று அறிவாயா? புண்ணிய கிரியைகள் உதவாதென்று தெரியாதா?

ஸ்கொத்லாந்து தேசத்திலே அநேக சபைகளில் ஒரு வழக்கமுண்டு. ராப்போஜனத்தைப் பரிமாறும் போதெல்லாம் பரிசுத்த பந்தியில் வந்தவர்களுக்கு ஒரு சீட்டைக் கொடுப்பார்களாம். பெரும்பாலும் மாசந்தோறும் மாத்திரம் ராப்போஜனம் பரிமாறப்படும். ஆகையால் ஒழுங்காய் வருகிறவர்களுக்கு வருஷத்துக்கு 12 சீட்டுகள் கிடைக்கக்கூடும். அப்படிப்பட்ட ஒரு சபையில் போதகர் ஒருவர் சுயநீதியால் இரட்சிப்பு வராது என்பதைப் பற்றி அதிக வல்லமையோடு பிரசங்கம் பண்ணினார். தேவச்செயலாய் விருத்தாப்பியமான ஒரு அம்மாள் அந்தப் பிரசங்கத்தைக் கேட்டு மனதிலே அதிக கலக்கமடைந்தாள். அந்த அம்மாள் சுயநீதிக்காரி சிறுபிராயமுதல் அந்தசபையைச் சேர்ந்து ராப்போஜனத்திற்கு தவறாமல் வந்தவள் என்



றாலும் தன் சொந்த கிரியைகளினால் இரட்சிப்பு உண்டென்று ஒரே பிடிவாதமாய் நம்பி வந்தவள். 60 வருஷக்காலமாய் கர்த்தருடைய பந்திக்கு ஒழுங்காக வந்தவள். ஆகையால் 700 ராப்போஜன சீட்டுகள் அவளுக்கு உண்டு. வீட்டுக்குப் போய் அவைகளை எடுத்துக்கொண்டு வந்து போதகரிடத்தில் காண்பித்து, 'இந்த 700 சீட்டுகள் என் ரக்ஷிப்புக்கு உதவாதா' என்று கண்ணீரோடு கேட்டாளாம். அதற்கு அவர் உதவாது என்று சொல்லவே, அந்த உத்தமி, ஒன்றுமில்லையா ஐயா? என்று அதிக கிலேசத்தோடு திரும்ப விசாரித்தாள். 'ஒன்றுமில்லை' என்று போதகர் சொல்லக்கேட்டு தன் ஜீவனைக் கொடுக்கிறதுபோல அந்த சீட்டுகளையெல்லாம் கிழித்துப் போட்டாள். அப்புறம் அவள் மனதில் தெளிவுண்டாகிப் புண்ணியநாதராகிய இயேசுக்கிறிஸ்துவின் நீதியை நம்பி ஆறுதல் அடைந்துகொண்டாள். ஆ! எத்தனையோ கிறிஸ்தவர்கள் இன்னமும் தங்கள் சுயநீதியின் கந்தைகளைப் போட்டுக்கொண்டு அருள்நாதரின் பூரண நீதியை நம்பாதிருக்கிறார்கள். என் பிரிய சிநேகிதரே! உங்கள் சுயநீதியை நம்பாதேயுங்கள்! உங்கள் ஜெபங்களை நம்பவேண்டாம். உங்கள் தர்மங்களை நம்பவேண்டாம். உங்கள் நேர்ச்சைகளை நம்பவேண்டாம். உங்கள் நன்கொடைகளை நம்பவேண்டாம். இயேசுவின் நீதியைப் பெற்றுக்கொள்ளுங்கள். புண்ணியநாதரைப்பற்றிக்கொண்டிருங்கள்.

IV. தேவரக்ஷகரை நம்புவார் உண்டு. 'அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்' (சங். 2: 12). பரி. பவுல் அப்போஸ்தலனைப்போல இவர்கள் தங்கள் விசுவாசத்தை அறிக்கைசெய்து 'எல்லா மனுஷருக்கும் விசேஷமாக விசுவாசிகளுக்கும் ரக்ஷகராகிய ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைத்து இருக்கிறோம்'. (2 தீமோ. 4: 10) என்று கெம்பீரித்து சொல்லுவார்கள். உண்மையோடு அப்படிச் சொல்லக்கூடிய கிறிஸ்தவன் பாக்கியவான். இரக்ஷகராகிய ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறேன். 'ரக்ஷகராகிய தேவன்' ஆனதினாலே சகல பாவங்களிலும் ஆபத்துகளிலும் நின்று என்னை விடுவிப்பார் 'ஜீவனுள்ள தேவன்' ஆகையினாலே என்பேரில் அவர் வைத்த அன்பும் கரிசனையும் ஒருபோதும் ஒழிந்துபோவதில்லை. 'ரக்ஷகராகிய ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறேன்'.

சீமை தேசத்தில் ஒரு உத்தம கிறிஸ்தவன் மரணத்தறுவாயில் இருந்தான். அப்போது ஒருவன் அவன் விசுவாசத்தைச் சோதிக்கும்படி 'நீ நம்பியிருக்கிற இந்த நம்பிக்கை என்ன?' என்று கேட்டு விசாரித்தான். சாகவிருக்கிற பக்தன் வேதபுஸ்தகத்தைக் காட்டி 'இதிலே சொல்லப்பட்ட இயேசுவை நம்புகிறேன்' என்றான். அப்புறம் தன் நெஞ்சில் கையை வைத்து 'இங்கே வாசம்செய்யும் இயேசுவை நம்புகிறேன்' என்றான். கடைசியாக, தன் கண்களை ஏறெடுத்து, வானத்தைச் சுட்டிகாட்டி 'அங்கே

வேண்டுதல் செய்யும் இயேசுவை நம்புகிறேன்' என்றான். பார்த்தீர்களா? வேதநாயகராகிய இயேசுவை நம்பினான்; பாவநாசகராகிய இயேசுவை நம்பினான்; வானராஜாவாகிய இயேசுவை நம்பினான். அப்படிப்பட்ட நம்பிக்கை ஒருக்காலும் தவறிப்போவதில்லை. வேதவாக்கியங்களால் இயேசுவை அறிந்துகொள்ளுங்கள். இருதயத்தில் இயேசுவை ஏற்றுக்கொள்ளுங்கள். வானத்தில் ஏறின இயேசுவை நம்பிக்கொள்ளுங்கள்.

'நீ நம்பியிருக்கிற இந்த நம்பிக்கை என்ன?'. உலகப்பொருளை நம்பாமலும் மாய்மாலம் சுயநீதி இவைகளை நம்பாமலும் 'ரக்ஷகராகிய ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறேன்'.

T. W.

---

# கிறிஸ்துவின் மனுஷ அவதார நோக்கம்.

## II. இயேசு பாவிகளை அழைத்தல்.

மத். 9. 13 லூக் 19. 10ல் இயேசுரட்சகர் பாவிகளைதேடிவந்தார் என்று பார்த்தோம். பாவிகளை தேடுகிறவராக மாத்திரமல்ல, பாவிகளைக் கூவியும் அழைக்கிறார். பரலோகத்தில் தேவதூதர்களால் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று போற்றப்பட்டவர், பூலோகத்தில் அசுத்த பாவிகள் மத்தியில் வந்து வாசம்பண்ணி அவர்களோடு உறவாடி "ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதர் என்று அழைக்கப்பட்டு பாவிகளையே அன்பாய் ஏற்றுக்கொண்டு, மனந்திரும்பின பாவிகளுக்கு பாவமன்னிப்பை அருளிவந்தார். இப்போதும் அவர் அன்பான அழைப்பின் சத்தம் தொனித்துக்கொண்டே இருக்கிறது. நீதிமான்களை அல்ல பாவிகளையே மனந்திரும்ப அழைக்கவந்தேன்" என்றார்.

### I. மனக்கடினப்பட்ட பாவிகளை அழைக்கிறார்.

பார்வோனை பத்துத்தரம் அழைத்தார். எருசலேம் பட்டணத்தாரை அழுகையோடே அழைத்தார். யூதாசை எச்சரித்து அழைத்தார். குணப்படாத பாவிகளெல்லாரையும் "மனந்திரும்புங்கள் மனந்திரும்புங்கள்" என்று அழைக்கும் சத்தம் கேட்கிறதே. இதை வாசிக்கிறவனே! நீ மனந்திரும்பி இருக்கிறாயா? இல்லையானால் உடனே மனந்திரும்பு, மனந்திரும்புகிற பாவிக்கே பாவமன்னிப்பு உண்டு. மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள், என்று வேதவசனம் கூறுகிறது. "இதோ, இப்பொழுதே அநுக்கிரககாலம்; இப்பொழுதே ரக்ஷணியநாள்" (2 கொரி 6. 2)



### II. இருமனமுள்ள பாவிகளையும் அழைக்கிறார்.

இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்யக்கூடாது என்று ரக்ஷகர் போதித்தாரே. இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களை பரிசுத்தமாக்குங்கள் என்று பரி. யாக்கோபு எச்சரிக்கிறார். இருமனமுள்ளவர்கள் தேவனுக்கு பிரியமாய் இருக்கமுடியாது. உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. உலகமும் வேண்டும் மோக்ஷமும் வேண்டும் என்பது கூடாதகாரியம். பொல்லாதவர்களின் சிநேகமும் தேவனுடைய பிள்ளைகளின் சிநேகமும் கிடைப்பது அரிது. "உன்தேவனாகிய கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும், முழு மனதோடும் அன்பு கூறுவாயாக" யென்பதே இரட்சகருடைய அன்பின் கட்டளை. அரைகுறையாக அல்ல தம்மைத்தாமே முழுவதுமாய் சிலுவையில் ஒப்புக்கொடுத்த அருமை ரட்சகரையே நோக்கிப்பார். "லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்" என்று ரட்சகர் எச்சரித்து உன்னையும் அழைக்கிறார்.

### III. பாவப் பாரம்சுமந்து தவிக்கிற பாவிகளையும் அழைக்கிறார்.

வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று ரட்சகர் அன்பின்கரம் நீட்டி அழைக்கிறார். தம்மிடத்தில் வரும் எந்தபாவிகளையும் தள்ளவே மாட்டார். சிலுவையில் அவருடைய கரம் தம்மிடத்தில் வரும்பாவிகளை ஏற்றுக்கொள்ள நீட்டப்பட்டிருக்கிறதைப் பார்க்கலாம். பாவப்பாரம் சுமந்து தவிக்கிறபாவியே, இயேசுவண்டைவா. கிறிஸ்தியானைப்போல சிலுவையையே நோக்கிப்பார். கள்ளனைப்போல், உடனே நோக்கிப்பார். பாவியான ஸ்திரியைப்போல் இயேசுவின் திருப்பாதத்தண்டை கிட்டிச் சேர்ந்து உன்பாவத்தை உண்மையாய் அறிக்கையிடுவாயானால் அவர் உடனே உன்பாவங்களை யெல்லாம் மன்னித்து உன்னையும் பார்த்து "உன் விசுவாசம் உன்னை ரக்ஷித்தது, சமாதானத்தோடே போ" வென்று சொல்லும் அன்பின் சத்தம்கேட்டு அவர் ரட்சிப்பில் மகிழ்ந்து பாடித்துதிப்பாய்.

### IV. பெலவீன பாவிகளையும் அழைக்கிறார்.

தாவீது தவறிப்போனபொழுது அவனையும், பேதுரு மறுதலித்தபொழுது அவரையும் திரும்ப அழைத்து ஆதரித்து பெலப்படுத்தி தம்முடைய ஊழியத்திற்கு அனுப்பினாரே. வாசிக்கிறவனே, நீயும் குணப்பட்டவனாய் இருந்தாலும் உன்னுடைய அவிசுவாசத்தினாலும், கீழ்ப்படியாமையினாலும், மாம்ச பெலவீனத்தினாலும் அடிக்கடி தவறிவிழுந்தவனாயிருக்கலாம்.

ஆனாலும் நீ சோர்ந்து போகவேண்டியதில்லை. இயேசுவின் வாக்கும், வல்லமையும் உன்னைப்பலப்படுத்தி ஸ்திரப்படுத்த ஆயத்தமாய் இருக்கின்றன. 'என்கிருபை உனக்குப்போதும். பெலவீனத்திலேஎன்பலம் பூரணமாய் விளங்கும்' என்று வாக்குரைத்த வல்லவரின் சத்தம் உன்னையும் அழைத்துக்கொண்டிருக்கிறதே. உன் குறைவை அவரிடத்தில் அறிக்கையிட்டு அவரிடத்தில் நிறைவையே பெற்றுக்கொள்ள, உன்னைவழுவாதபடி காக்க வல்லபரன்என்று அவரையே நம்பு. அப்பொழுது 'என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு' என்று நீயும் அப்போஸ்தலனோடு கூடச் செல்லக்கூடியவனாய் இருப்பாய்.

## V. அஞ்ஞானிகளாகிய பாவிகளையும் அழைக்கிறார்.

ஒவ்வொரு பாவிக்காகவும் மரணத்தை ருசிபார்த்த இயேசுசுவாமி இந்து தேசத்தின் முப்பதுகோடி ஜனங்களையும் ரட்சிக்கக்கூவி நிற்கிறாரே. மிஷனெரிமார் மூலமாயும் பள்ளிக்கூடங்கள் வைத்தியசாலைகள் மூலமாயும் அவர்களை அழைக்கிறார். யுத்தம், கொள்ளைநோய், பஞ்சம் இவைகளைக் கொண்டும் தம்மை ஏற்றுக்கொள்ள அவர்களை ஏவுகிறார். 'நீங்கள் உலகமெங்கும்போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்' என்ற கட்டளை நமது காதுகளில் எப்போதும் தொனித்துக்கொண்டிருக்கிறதே. அவர் காணாமல்போன பாவிகளைதேடி கூவி அழைக்கும்போது நீயும் அவரோடு கூடச்சென்று அழைக்கவேண்டாமா? காணாமல்போன ஆடுகளைத் தேடிக்கண்டுபிடிக்குமளவும் காணும் உம்மோடு கூடத்தேடவலியருளும் நல்ல மேய்ப்பரே' என்று நீயும்பாடி ஜெபி. அப்போமெய்யாகவே நீயும் ஆடுகளைத்தேடிக்கண்டு பிடிக்கும் நல்ல மேய்ப்பனாவாய்.

---

### சந்தா வரவு.

| | | | |
|---|---|---|---|
| **July.** | | | |
| Mrs. E. Camlious, Madras | 6 | 14 | 0 |
| ,, G. S. Devadason, | 1 | 8 | 0 |
| ,, R. P. Raj நற்போதகம் & பாலியர்நேசன் | 1 | 14 | 0 |
| ,, Matthew Antony, Bethel | 0 | 7 | 0 |
| ,, Asirvatham Nadar, Ceylon | 1 | 6 | 0 |
| ,, A. Gnanamoni, Nagerkoil | 10 | 4 | 6 |
| ,, Y. Jacob Catechist | 0 | 7 | 0 |
| **August.** | | | |
| Mrs. E. Walker, Coonoor | 1 | 0 | 0 |
| ,, Katie David, Palamcotttah | 0 | 4 | 0 |
| Mr. J. S. Devadason, Salem | 0 | 7 | 0 |
| ,, V. S. Chelliah Nadar, B. A. | 0 | 7 | 0 |
| ,, M. Devasagayam Nadar, Kylasapuram | 0 | 7 | 0 |
| Miss. S. Munisamy, Coimbatore | 0 | 14 | 0 |
| Mr. P. Jebamoni, Sivakasi | 0 | 15 | [illegible] |
| Mrs. M. A. Chellia, Uduvil | 5 | 0 | 0 |
| Mr. J. A. Masillamoni, Nazareth | 0 | 9 | 0 |
| ,, P. Rajaratnam, Suramangalam | 0 | 7 | 0 |
| ,, P. S. Manikam, Tirupatur | 0 | 8 | 0 |
| ,, J. T. Jesudason, Trivandram | 1 | 0 | 0 |
| ,, P. Sivaram, Jalarpet | 0 | 5 | 0 |

Printed at the Church Mission Press, Palamcottah and Published by the Christian Brotherhood Association, Tinnevelly.

April, 1915. Registered—No. M. 163

21 DEC 1915 MADRAS

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." (யோவான் 7: 38)

Vol. XVI ஏப்ரல் மீ 1915

## 17-ம் வருஷ கன்வென்ஷன் கூட்டங்கள், 1915.

### டக்கரம்மாள்புரம். மேய் மீ 24—27. (வைகாசி மீ 11—14).

'தேவனுடைய இராஜ்யம் அதற்கேற்ற கனிகளைத்தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்' பரி. மத்தேயு 21: 43.

திராட்சத்தோட்டத்தைத் தோட்டக்காரருக்குக் குத்தகையாக விட்டுப்போன வீட்டெஜமான், 'கனிகாலம் சமீபித்தபோது, அதின் கனிகளை வாங்கிக்கொண்டுவரும்படி தன் ஊழியக்காரரைத் தோட்டக்காரரிடத்தில் அனுப்பினான்' (34 வ). திருநெல்வேலி நாட்டுச் சபைக்கு இது மகா முக்கியமான பருவ காலம். தேவனுடைய இராஜ்யத்துக்கேற்ற மிகுந்த கனி இக்காலத்தில் நமது சபைகளிலே காணப்படவேண்டும்.

சபைகளிலே துணிகரப் பாவங்கள் ஒழிந்துபோகவேண்டும். திட்டமாய்க் குணப்பட்டவர்களின் தொகை மற்றவர்களைவிட அதிகமிருக்கவேண்டும் ஓய்வுநாள் மீறுதலும் குடிவெறியும் காணப்படாதே போகவேண்டும். வேத அறிவும் ஜெபதபமும் பெருகிவரவேண்டும். உலக நேசமும் சிற்றின்பப் பிரியமும் அற்றுப்போகவேண்டும். சுயவெறுப்பும் பரிசுத்த ஜீவிய வாஞ்சையும் அதிகரிக்கவேண்டும். சுவாமிக்காகவும் சபைக்காகவும் பக்தி வைராக்கியம்கொண்டவர்கள் எழும்பவேண்டும். எழும்பிப் பிரகாசிக்கிற ஜீவியங்கள் எங்கும் காணப்படவேண்டும். சுவாமிக்குரிய தசமபாக காணிக்கையை எல்லாரும் கொடுக்கவேண்டும். சுவிசேஷ பிரபல்ய வாஞ்சை பலப்படவேண்டும். புறமதஸ்தருக்குச் சுவிசேஷம் ஒழுங்காய் அறிவிக்கப்படவேண்டும் மிஷனெரி சங்கவேலை பலமாய் நடத்தப்படவேண்டும். ஊழியர்கள் யாவரும் ஆவியைப் பெற்றவர்களாயிருக்கவேண்டும். குருமார் சத்திய உபதேசத்தில் நிறையப்பட்டவர்களும் மாசில்லா நடக்கையினால் அலங்கரிக்கப்பட்டவர்களுமாயிருக்கவேண்டும்.

திருநெல்வேலி நாட்டுச் சபைக்காக இப்படிப்பட்ட பலத்த வாஞ்சைகொண்ட தேவனுடைய பிள்ளைகள் யாவரும் இவ்வருஷக் கன்வென்ஷன் கூட்டங்களுக்கு வரும்படி இயேசு இராஜாவின் நாமத்தினால் அழைக்கிறோம். திருநெல்வேலி நாட்டின் வாழ்வுக்காகப் பரிசுத்த ஜீவியத்தில் பழக்கிவிக்கப்படவேண்டிய மற்ற அநேக விச

வாசிகளான பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டுவரும்படி கேட்கிறோம். அநேக ஆண்டவருடைய பிள்ளைகள் ஒன்றுகூடி தேவனுடைய இராஜ்யத்தின் நன்மைகள் நமது சபைகளில் ஏராளமாய் அருளப்படவும், அந்த இராஜ்யத்துக்கேற்ற கனிகள் நமது நடுவிலே மிகுதியாய்ப் பெருகவும் ஐக்கமாய் மன்றாடுவோமாக.

இவ்வருஷக் கூட்டங்கள் திங்கள் மாலையில் ஆரம்பித்து வியாழன் மாலையில் முடியும். கூட்டங்களுக்காக எல்லாரும் விடாமுயற்சியாய் ஜெபிப்போமாக.

இந்தத் தடவை மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் இக்கூட்டங்களுக்கு வந்து மூன்று முறை பிரசங்கம் செய்து மிஷனெரி கூட்டமும் நடத்துவார்கள்.

கன்வென்ஷன் நடத்துகிற சகோதரர் பேரால்,

S. G. மதுரம்.

## ‘கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவன்.’

எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு அவரையே நாங்கள் அறிவித்து எந்த மனுஷனுக்கும் புத்தி சொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம். அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்.’ கொலோ. 1: 28, 29.

பாவமன்னிப்பும் விடுதலையும் கிறிஸ்தவ ஜீவியத்தில் கிடைக்கும் ஆரம்ப ஆசீர்வாதங்களாய் மாத்திரம் இருக்கிறது. அவைகள் அவசியமானாலும் இயற்கையானவைகளல்ல. வியாதியாயிருக்கிற பிள்ளை சுகமடைய வேண்டுமென்று தாய் விரும்புவாள். வியாதி வந்தால் சுகம் வரவேண்டியது அவசியமாயிருக்கிறது. ஆனால் சுகம் மாத்திரம் போதுமென்று தாய் விரும்பமாட்டாள். பூரண பிராயத்துக்குத் தன் பிள்ளை வளரவேண்டுமென்றே தாய் விரும்புவாள். அதுபோல் பாவநோய் வந்துவிட்டதால் மன்னிப்பும் விடுதலையும் முந்தி வரவேண்டும். கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாவதே நம்மைக்குறித்த தேவசித்தம். உத்தம கிறிஸ்தவன் எவனும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாகும்படி ஆண்டவர் அருளும் பலத்த சத்துவத்தின்படி போராடிப் பிரயாசப்படவேண்டும்.

கிறிஸ்துவுக்குள் தேறினவன் என்பதின் அர்த்தமென்ன? தேறினவன் என்று திருப்பப்பட்டிருக்கிற மூல பாஷையின் வார்த்தை முடிவு அல்லது நிறைவேறுதல் என்ற அர்த்தமுள்ளதாயிருக்கிறது. ஒரு பொருள் உண்டாக்கப்பட்ட நோக்கத்தை அது சரிவர நிறைவேற்றுமானால் அது பூரணமானது அல்லது தேறினது என்று சொல்லப்படலாம். இந்த நோக்கத்தைச் சரிவர நிறைவேற்றவே உலகத்திலுள்ள சகலமும் வாஞ்சையோடு முயற்சிக்கிறது. அப்படியே மெய்க்கிறிஸ்தவனுக்கும் மாதிரி மனிதனா



ஒருவர் இருக்கிறார். அவருடைய ஜீவியம் உலகத்திலுள்ள யாவருக்கும் தெரியத்தக்கதாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. மீட்பைப் பெற்ற மனிதன் எவனும் அந்த மாதிரியை முன்னிறுத்தி ஜீவிக்கவேண்டும். அதை அடைந்தாயிற்று, தேறினவனானேன் என்று அவன் எப்போதாகிலும் முழு தைரியமாய்ச் சொல்லக்கூடாமல் போனாலும், பரிசுத்த பவுலைப்போல எந்த மனிதனும் தனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி அந்த ஒரு நோக்கத்துக்காகப் போராடிப் பிரயாசப்படவேண்டும்.

ஆண்டவர் கொண்டிருக்கிற நோக்கத்தை இந்த நிருபத்திலுள்ள ஒரு வாக்கியத்தை வைத்துக் கவனிப்போம். ‘நீங்கள் எல்லா ஞானத்தோடும் ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும், சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத்தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும், சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும் நீடிய சாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும் உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம்’ (1: 9-11). இந்த ஜெபம் வீணாய்ச் செய்யப்படவில்லை. இதின்படி கிறிஸ்தவர்கள் ஜீவிக்கவேண்டுமென்றே இது செய்யப்பட்டது. கிறிஸ்தவர்களில் காணப்படவேண்டிய தேர்ச்சியின் அளவை இது காட்டுகிறது. இதிலுள்ள ஒவ்வொரு குறிப்பையும் எடுத்துக்கொண்டு சுவாமிக்கு முன்னே நம்மைச் சோதித்துப்பார்க்கக் கடவோம். இவைகளிலே நாம் தேறுகிறோம் என்று நாம் உண்மையாய்ச் சொல்லக்கூடுமோ?

அநேகர் கிறிஸ்துவுக்குள் தேறினவர்களாகாததற்குக் காரணமென்ன? பரிசுத்த பவுல் இதற்காகப் போராடிப் பிரயாசப்படுகிறேன் என்று இங்கே சொல்லுகிறார். தேறினவனாகும்படி கர்ப்ப வேதனைப்படுகிறேன் என்பதாக அவர் சொல்லுகிறார். இப்படிப்பட்ட போராட்டமும் கர்ப்பவேதனையும் இல்லாததே சகல தீமைக்கும் காரணம். தேறினவர்களாகவேண்டுமென்ற கவலையும் ஆத்திரமும் அவர்களுக்கு இல்லை. அறிவீனமும் பெலவீனமும் காரணம் என்றும், தங்களைப்போலொத்தவர்கள் இப்படி ஜீவிக்க அவசியமில்லை என்றும், அப்படி ஜீவிக்காதேபோனாலும் சுவாமி அவர்களுடைய குறைகளை மன்னித்துப்போடுவாரென்றும் அநேகர் துணிவுகொண்டிருக்கிறார்கள். எல்லாருக்குமுள்ள பெலவீனமே எனக்கும் இருக்கிறதென்று அநேகர் தங்களைத் தேற்றிக்கொள்ளுகிறார்கள். நான் தேறினவனாகவேண்டும் என்ற மேலான ஒரே நோக்கத்தோடே ஜீவிப்பதே நன்மையும் மேன்மையும் இன்பமுமானது என்று மனிதர் கண்டுகொள்ளாததே சகல தீமைக்கும் காரணம். அறிவீனம் காரணம் என்பது பொய்.

பெலவீனம் காரணம் என்பதை சுவாமி ஒப்புக்கொள்ளமாட்டார். அவருடைய பலத்த வல்லமை நமக்குள்ளே கிரியை செய்யும் என்று இந்த வாக்கியம் சொல்லுகிறதே. அநேகர் குறைவாய் ஜீவிப்பதினிமித்தம் நாம் அப்படி ஜீவிப்பது சரியாய் எண்ணப்படுமோ? அப்படியானால் அநேகர் கெட்டுப்போகிற வழியிலே போகிறதினால் நாமும் அதிலே போகலாமே! என் பெலவீனத்தை சுவாமி பொறுத்துக்கொள்ளுவார் என்று எண்ணுவதும் மோசம். எந்த அளவு மன்னிக்கப்படும் என்று உத்தமகிறிஸ்தவன் கேளாமல், எந்த அளவாய் ஜீவித்தால் புகழப்படுவேன் என்றே கேட்பான். ஆண்டவர் கடைசியிலே பொறுத்துக்கொள்ளக் கூடியது எவ்வளவு என்று அறியவிரும்பாமல் ஆண்டவர் கடைசியிலே பலனளிக்கக்கூடிய அளவு என்ன என்றே அறிய விரும்புவான். அவன் மனிதரை நோக்காமல் கர்த்தருடைய வசனத்தின் போதனையையே நோக்குவான். மனிதரை நோக்குகிறவன் பரிசுத்த பவுலைப்போலொத்த மனிதரை நோக்கக்கடவன். அவர் தாமே தேறினவராகும்படி போராடிப் பிரயாசப்பட்டார். எந்த மனிதனையும் தேறினவனாக நிறுத்தும்படி எல்லா ஞானத்தோடும் உபதேசித்து புத்தி சொன்னார். எந்த மனிதனும் தேறினவனாகவேண்டும். எந்த மனிதனும் தேறினவனாகலாம். இதுவே வேதாகமப் போதனை. பரிசுத்த பவுலைப்போல அதற்கென்று போராடிப் பிரயாசப்படாததினாலேயே அநேகர் தேறினவர்களாகாமற் போகிறார்கள்.

**கிறிஸ்துவுக்குள் தேறினவர்களாகாததினால் வரும் மோசமென்ன?** உத்தம வாஞ்சையும் ஊக்கமான போராட்டமுமில்லாததினால் நம்மில் காணப்படும் குறைவுகளை தேவன் மன்னிக்கவே மாட்டார் என்பது நிச்சயம். அவைகள் மன்னிக்கப்படும்படி நாம் ஒரு முகாந்தரமும் காட்டி ஜெபிக்க முடியாது. பிரயாசப்பட்டால் நாமே நிவிர்த்திபண்ணிக்கொள்ளக்கூடிய குறைவுகளை ஜீவகாலமெல்லாம் பேணிக்கொண்டிருப்பது மகா பெரிய மோசம் என்று மனிதர் அறியவேண்டும். அப்படி அறிய மனசில்லாமல் துணிகரமாய் ஜீவிப்பதே பாவத்தால் வரும் குருட்டாட்டமாயிருக்கிறது. வரப்போகிற மோசத்தை உணராதிருப்பதே பாவ பலனாய் வரும் குருட்டாட்டம். யார்தான் தேறிவிட்டார்கள் என்று பலர் கேட்கத்துணிவதுண்டு. ஆனால் அப்படிக் கேட்கிறவர்களிடத்தில் கடைசி நாளில் சுவாமி கேட்கிற கேள்வி ஒன்று உண்டு. ஊக்கமான வாஞ்சையினாலும் போராட்டமான பிரயாசத்தினாலும் நீ அடையக்கூடிய தேற்சியை நீ அடைந்தாயா என்றுதான் அவர் கேட்பார். உன் சொந்த கவலைத்தாழ்ச்சியினாலும் சோம்பலினாலும் நீ உன் ஜீவியத்தைக் கெடுத்துக்கொண்டிருக்க, தேவன் உனக்கு இரக்கங்காட்டமுடியுமோ? இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்கப் போராடுங்கள்; அநேகர் உட்பிரவேசிக்க விரும்பியும் அவர்களாலே கூடாமற்போகும் என்று இயேசு சுவாமி சொல்லுகிறார். பரி. லூக்கா 13: 24.



சாதாரண விருப்பம்போதாது, விருப்பம் மாத்திரம் காட்டுகிறவர்கள் பிரவேசிக்கமாட்டார்கள்; போராடுகிறவர்கள்தான் பிரவேசிப்பார்கள் என்று இயேசு சுவாமி சொல்லுகிறார். அவருடைய எச்சரிப்பை அவமதிக்கிறவன் மோசமடைவான். விரும்பாததினாலும் பிரயாசப்படாததினாலுமல்ல, போதுமான அளவு விரும்பாததினாலும் கூடியஅளவு போராடாததினாலுமே பிரவேசிக்கக்கூடாமற் போகும் என்கிறார். இதை உணர சுவாமி ஞானங் கொடுப்பாராக.

போராடிப் பிரயாசப்படுகிறவர்கள் தேறினவர்களாகிறது எளிது. கிறிஸ்துவுக்குள் அவர்களுக்குஜீவிய நிறைவு சம்பாதித்து வைக்கப்பட்டிருக்கிறது. அதை வெளிப்படுத்தி, அதைத்தேட ஆத்துமாவை ஏவுகிறார். முழுபலத்தோடு அதைத்தேடுகிற ஆத்துமாவுக்கு அவர் தமது பலத்த வல்லமையால் உதவி செய்கிறார். அப்போது அந்த ஆத்துமா பரிசுத்த பவுலைப்போல் நானும் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படிப் போராடிப் பிரயாசப்படுகிறேன் என்று சொல்லலாம்.

## ‘முள் முடியை அவருக்குச் சூட்டினார்கள்’

பரி. மாற்கு 15: 17.

முள் முடிசூட்டப்பட்ட இரட்சகரான இயேசுவை உணர்வோடும் அனுதாபத்தோடும் நாம் நோக்கிப்பார்த்து, அவருடைய பாடுகளின் ஐக்கியத்தை அறியவேண்டும். முள் முடி சூட்டப்பட்டவர் யாரென்றும் அவர் முள் முடிசூட்டப்பட்ட அவசியம் என்ன என்றும் நாம் உட்கார்ந்து சிந்தைசெய்வோமாகில், சுவாமி அதின் இரகசியத்தை நமக்கு வெளிப்படுத்துவார். இப்படிப்பட்ட தியானத்துக்கு ஏதுவாகப் பின்வரும் குறிப்புகளை எழுதுகிறோம். நமது இரட்சகர் முள் முடிசூட்டப்பட்டவராய் நமக்கு முன் நிறுத்தப்பட்டிருப்பதால் நாம் அறியவேண்டிய காரியங்களெவை?

**1-வது, அது மகா பெரிய துயர காட்சியாய் நமக்குக் காணப்படுவதாக.** முள் முடிசூட்டப்பட்டவராய் இயேசுவானவர் நமக்குக் காணப்படும்போதும் அவருடைய தெய்வீக மகத்துவத்தை நாம் மறக்கமாட்டோம். அவர் வானத்தையும் பூமியையும் படைத்து ஆண்டுவந்த தேவன், நம்மை மீட்க அவர் பூமிக்கு வந்தபோது எவ்வளவு நீசத்தனமான நிந்தையை அவர் சகிக்க நேரிட்டது என்று நாம் காண்பது மகா பெரிய துயரத்தை அது நம்மில் உண்டாக்கவேண்டாமா? மிகுந்த துயரத்தைக் காட்டுகிற மூன்று குறிப்புகளைப் பாருங்கள்.

(1) அவர் தமது வல்லமையை மறந்தவராய் தம்மைத்தாழ்த்தச் சித்தங்கொண்டதால் பாவ மனிதர் தங்கள் மூர்க்ககுணத்தை அவரிடத்தில் காட்டக்கூடியதாயிற்று. தங்கள் கையில் அவர் அகப்பட்டுக்கொண்டபடியால் அவருக்கு எதையும் செய்யலாம் என்று அவர்கள் எண்ணினார்கள். சர்வ வல்லவரான அவரைத் துப்பவும் குட்டவும் கன்னத்தில் அடிக்கவும் முள்முடியைச்சூடி பரியாசம்பண்ணவும் நேரிட்டது மகா பெரிய பரிதாபமில்லையா? மகா உன்னத மகிமைக்குப் பாத்திரரான அவர் மகா பெரிய நிந்தைக்குள்ளாக்கப்படுவது மிகுந்த துயரமில்லையா? அவர் தெய்வ வல்லமையை உபயோகிக்காவிட்டாலும், ஆட்டைப்போல் சத்தமிடாதிருப்பது ஆச்சரியமில்லையா? அவபக்த உலகம் அவரைச் சுற்றிப்போடும் உல்லாச சத்தம் பக்தருக்கு வேதனையையும் துயரத்தையும் கொடுக்காதிருக்கக்கூடுமோ? உத்தம அன்பு இவ்வளவு அன்பற்ற விதமாய் எப்போதாகிலும் நடத்தப்பட்டதுண்டோ? நமதுமேல் வைத்த அன்பினால் நமது எஜமான் இவ்வளவு நீசக்கோலமாக நேரிட்டது மகா பரிதாபமில்லையா?

(2) 'நான் இராஜாதான்' என்று சொன்ன அவரைப் பரியாசம் பண்ணும்படி முட்கிரீடம் சூட்டினதும் பரிதாபமே! இந்த அற்பமனிதன் யூதரின் இராஜாவாம்; இவனுடைய பைத்தியத்துக்குத்தக்கதாக இவனைப் பரியாசம்பண்ணுவோம் என்பதுபோல் சொல்லி இப்படிச்செய்தார்கள். அவர்கள் செய்தது கெட்டிக்காரத்தனமான பரியாசந்தான். ஆனால் நம்முடைய வேதனைக்குக் காரணமென்ன? அவர் மெய்யான இராஜாதானே. அவர் ஏமாற்றமான இராஜாவானால் இதெல்லாம் நியாயமாயிருக்கலாம். ஆனால் சர்வ பூமிக்கும் சுதந்தரவாளியான இராஜாவுக்கு இப்படிச் செய்யப்படத்தகுமோ? அவருடைய உத்தம அடியானுக்கு இது மகா பெரிய துயரமாயிராதோ?

(3) முட்கிரீடம் வேதனையைக்கொடுக்கிற பரியாசமாயிருந்ததும் துயரமே! வெறும் பரியாசத்துக்கு முட்கிரீடம் அவசியமில்லை, வைக்கோல் கிரீடத்தைப்போன்றது போதும். பரியாசத்தோடு வேதனையையும் கொடுக்கவே முட்கிரீடம் சூட்டப்பட்டது. வாரினால் அடித்த வேதனை போதாதென்றெண்ணி, முட்கிரீடத்தைச் சிரசில்வைத்து அடித்தும் வேதனைப்படுத்துகிறார்கள். தேகத்தின் வேதனை போதாது, பரிசுத்த சிரசையும் வேதனைப்படுத்த அவசியமாம்! அமைதலாய்ச் சிந்தைசெய்கிற ஆத்துமா இதிலும் மேலானவைகளை அறியலாம். 'எனக்கு உண்டான என் துக்கத்துக்குச்சரியான துக்கம் உண்டோ என்று என்னை நோக்கிப்பாருங்கள்.' புலம்பல் 1: 12.

2-வது, இயேசுவின் முட்கிரீடம் நமக்கு மகா பெரிய எச்சரிப்பாய்க் காணப்படுவதாக. இந்த மகா பெரிய துயரகாட்சியிலே மகா பெரிய எச்சரிப்பு அடங்கியிருக்கிறது. போர்ச்சேவகர் செய்த பாதகத்தை நாமும்



செய்யாதபடி எச்சரிக்கப்படுகிறோம். கிறிஸ்தவனே, இயேசுவின் சிரசின்மேல் முட்கிரீடம் சூட்டாதே. 'இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்களைக் குற்றவாளிகளென்று தீர்த்தும், அவைகளையே செய்கிறவனே, நீ தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குத் தப்பிக்கொள்ளலாமென்று நினைக்கிறாயோ? ரோமர். 2: 3.

(1) கிறிஸ்துவின் தன்மையையும் அதிகாரத்தையும் அவமதிக்கிறவர்கள் அவருக்கு முட்கிரீடஞ் சூட்டுகிறவர்களே. அவர் நல்ல மனிதன், ஆனால் தேவகுமாரனல்ல என்று சொல்லத்துணிகிற பாதகர் இக்காலத்திலும் அவருக்கு முட்கிரீடம் சூட்டப்பார்க்கிறார்கள். அவருடைய போதகத்தையும் உபதேசத்தையும் அவமதிக்கிற அநேகர் உண்டு. அவருடைய கட்டளைகளைத் துணிகரமாய் மீறுகிற எண்ணிறந்தபேர் சபைகளிலும் உண்டு. கிறிஸ்துவின் அன்பையும் சகவாசத்தையும் நாடாதவர்கள் சபைகளிலும் ஊழியங்களிலும் அநந்தம்பேர் உண்டு. என்னோடு இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான் என்ற அவருடைய வசனத்தின்படி இவர்களெல்லாரும் அவருக்கு முட்கிரீடம் சூட்டுகிறவர்கள்தானே.

(2) மாய்மாலக் கிறிஸ்தவர்களும் அவருக்கு முட்கிரீடம் சூட்டுகிறவர்களே. ரோம போர்ச்சேவகர்கள் கிரீடம் சூட்டினார்கள்; ஆனால் அவரை இராஜாவாக்கும்படி அப்படிச் செய்யவில்லை. அவர் கையிலே அவர்கள் கோலைக்கொடுத்தார்கள். ஆனால் அது செங்கோலல்ல. பேர்க் கிறிஸ்தவர்களும் மாய்மாலக்காரரும் இப்படியே செய்கிறார்கள். வாயினால் அவர்கள் கிரீடம் சூட்டி உள்ளத்தில் சபிக்கிறார்கள். இருதயத்தில் உத்தமமில்லாதவர்கள் அவருக்கு முட்கிரீடம் சூட்டுகிறவர்களே. இவர்கள் முழங்காலில் நிற்கும்போதே அவரை அவமதிக்கிறார்கள்; நற்கருணைப்பந்தியிலேயே அவரைக் கனவீனம்பண்ணுகிறார்கள். அவர் தெய்வமானால் அவரைச் சேவியுங்கள், அவர் இராஜாவானால் அவருக்குக் கீழ்ப்படியுங்கள். உத்தமராயிருங்கள். இயேசுவுக்கு முன் பேருக்கு முழங்காலை முடக்குவதும் பணிவதும் இப்போதும் பாதகர்தான்.

(3) விழிப்பும் ஜெபதியானமுமில்லாத உத்தம கிறிஸ்தவர்களும் அவருக்கு முட்கிரீடம் சூட்டுகிறவர்களே. கிறிஸ்துவுக்கு நம்மைப் பிரதிஷ்டை பண்ணின நாளில் எவ்வளவோ கவலையாய் ஜீவிப்போம்; அவரை இடைவிடாமல் கனம்பண்ணுவோம், ஒருநாளும் சின்னம்பண்ணமாட்டோம் என்று வாக்குப் பண்ணினோம். ஐயோ, ஜெபதியானக் குறைவினால் எவ்வளவாய்த் தவறிப்போனோம்! மாம்ச இச்சையும், கோபகுணமும், பாவப்பேச்சும் பெருகினதால் நமது உள்ளம் முள்ளுக்காடாய்ப் போயிற்றே! அம்முள்ளுகள் நமது எஜமானுக்கு முட்கிரீடமாயிற்றே. நீ முள்ளுகளை வளர்த்தாய், நமது ஆண்டவரோ அவைகளைச் சிரசில் அணிய

நேரிட்டது. முட்கிரீடம் சூட்டப்பட்ட எஜமான் நமக்கு முன்னே எச்சரிப்பாய் நிற்கிறார்

3-வது, இயேசுவின் முட்கிரீடம் நமக்கு மகா பெரிய போதனையைக் கொடுப்பதாக. கிதேயோன் சுக்கோத்தின் மனிதரைப்பிடித்து முள்ளுகளால் கீறி, அவர்களுக்குப் பாடம் படிப்பித்தான். கிறிஸ்துவின் முட்கிரீடம் நமக்குப் படிப்பிக்கவேண்டிய அருமையான பாடங்கள் உண்டு. அவைகளில் சிலவற்றைச் சொல்லுகிறேன்.

(1) கர்த்தருக்கு ஊழியஞ்செய்து, மனிதருக்குப் பிரயோஜனமாயிருக்க விரும்புகிறவன் உலகத்தால் அவமதிக்கப்பட்டுப் பாடுபட நேரிடும். உலகத்தில் நல்ல மனிதருக்குப் புகழ்ச்சி வருவது அபூர்வம். நன்றாய்ப் பழுத்த பழம்தான் குருவிகளால் அதிகமாய்க் கொத்தப்படும். தேவ குமாரனைப்போல் பூரணபழமான பரிசுத்தன் யார்? அவருக்கே உலகம் முட்கிரீடம் சூட்டினதே. உலகத்தின் விரோதத்துக்குப் பயந்து பரிசுத்தத்தின் பாதையைவிட்டு விலகாதே. முட்கிரீடத்துக்குத் தப்பும்படி, தெய்வத்தைச் சேவிக்கத்தவறாதே.

(2) வீண் கவலைக்கும் முறுமுறுப்புக்கும் முட்கிரீடம் நல்ல மருந்தாயிருக்கிறது. தங்களுக்குத் தாங்களே முட்கிரீடத்தை உண்டுபண்ணிக்கொள்ளுகிறவர்கள் அநேகர் உண்டு. தங்களை வாதிக்கும்படி அவர்கள் புதிதுபுதிதான முறைகளைக் கண்டுபிடிப்பார்கள். தங்களால் வந்ததும் தாங்களே நீக்கிவிடவேண்டியதுமான வேதனைகளை தேவன் நீக்கவில்லை என்று அவர்கள் முறுமுறுக்கிறார்கள். பெற்றோர் பிள்ளைகள் விஷயமாய் சுவாமியை நம்பாமல் வீண் கவலைகளை உண்டுபண்ணிக்கொள்ளுகிறார்கள். அவசியமற்ற அவசியங்களையும் பயத்துக்கிடமில்லாப் பயங்களையும் உண்டுபண்ணி. இப்படிப்பட்ட முள்ளுகளால் தங்களைக் கீறிக்கொள்ளுகிறவர்களுக்கு சுவாமிசெய்யவேண்டியதென்ன? இயேசு இராஜா முட்கிரீடத்தைத் தரித்தபோது நமது நோய்களையும் துக்கங்களையும் அநுபவித்தாயிற்று. அவர்பேரில் துயரத்தையும் பாரத்தையும் கவலையையும் வைத்துவிட மனமற்றவர்கள் தங்களுக்கே முட்கிரீடத்தைச் சூட்டிக்கொள்ளுகிறார்கள்.

(3) முட்கிரீடம் உலகத்தின் மேன்மைகளையெல்லாம் அவமாக்கிவிடுகிறது. உலகத்திலுள்ள கிரீடாதிபதிகளெல்லாம் முட்கிரீடதாரியான இயேசு சுவாமியின் பக்கத்தில் நிறுத்தப்படும்பொழுது ஒன்றுமில்லாதவர்களாக எண்ணப்படுகிறார்கள். முட்கிரீடம் அவர்களுடைய கிரீடங்களையெல்லாம் புகையாய் புகைந்து போகப்பண்ணுகிறது. அது மாத்திரமல்ல, கிறிஸ்து தரித்த முட்கிரீடம் பொன் விலையற்றுப்போகவும், இரத்தினங்கள் ஒளிமங்கிப்போகவும் உலகத்தில் மனிதருக்குள் மேன்மையாய் எண்ணப்படுவதெல்லாம் அருவருப்பாய் மாறிவிடவும் செய்கிறது. அவருடைய உத்தம பக்தரெல்லாம் அப்படியே எண்ணுகிறார்கள். என் எஜமான் முட்கிரீ



டம் தரித்த இந்தப்பட்டணத்தில் நான் பொற்கிரீடம் தரிக்கமாட்டேன் என்று எருசலேமைப் பிடித்த ஒரு கிறிஸ்தவ யுத்தவீரன் சொன்னான் ஓ கிறிஸ்தவனே, உன் எஜமான் முட்கிரீடம் தரிப்பிக்கப்பட்டு கஷ்டவேதனையடைந்த இந்த பூமியில் நீ இன்பமாயும் சொகுசாயும் ஜீவிப்பாயோ? இயேசு இராஜா சிலுவையில் தொங்குகையில் நீ படுக்கையில் கிடந்து சோம்பலாய்க் காலம் கழிப்பாயோ! அவர் நிர்வாணமாக உயர்த்தப்பட்ட பூமியில் நீ பட்டும் பணியும் கட்டிப் பெருமைபாராட்டுவாயோ? அவர் நீசத்தனமாய் நடத்தப்பட்டிருக்க நீ சுகபோகத்தில் கிடந்து உழலுவாயோ? இவ்விதமாய் இயேசு இராஜாவுக்குச் சூட்டப்பட்ட முட்கிரீடம் உலகத்தின் வீண் மகிமையை விட்டுப்பிரித்து நம்மைக் குணமாக்குவதாக. முட்கிரீடம் தரித்தவராய் நமது எஜமானை நோக்குகிற நமக்கு மாம்சத்தின் இன்பமும் ஜீவனத்தின் பெருமையும் கவர்ச்சியற்றுப்போகவேண்டாமா? நமது இராஜா நம்மைத் தம்மிடம் அழைக்குமளவும் அவரைப்போல் பாடுகளையும் துக்கங்களையும் பாவ பாரத்தையும் சுமப்பதல்லவோ நமது பங்காயிருக்கவேண்டும்.

4-வது, இயேசு இராஜாவின் முட்கிரீடம் நம்மைப் பலமாய் ஏவி எழுப்புவதாக. முதலாவது மெய்யான மனந்திரும்புதலுக்கு இது நம்மை ஏவுவதாக. நம்முடைய பாவம் முட்கிரீடத்தை அவருக்குச் சூடியிருக்க, பாவத்துக்குக் காரணமான நமது மாம்சத்தை நாம் வாரால் அடித்து அதை முள்ளுகளால் கீறிச் சிறுமைப்படுத்துவது நியாயமல்லவோ? நீங்கள் உங்கள் இருதயங்களைக் கிழித்து உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்புங்கள் என்பதின் அர்த்தம் இதுதானே. இயேசு இராஜாவின் சிரசைக் கிழித்த முட்கள் நமது உள்ளத்தைக் கிழிப்பதாக. நமது ஜீவியம் இனிப் பாவத்துக்குச் சாயாதபடி கிறிஸ்துவின் கிரீட முள்ளுகளால் அதை வேலியடைப்போமாக.

இரண்டாவது, கிறிஸ்துவின் முட்கிரீட முள்ளுகளுக்குள் நமது ஆத்துமாவின் கூட்டைக் கட்டுவோமாக. அது பாவிகளுக்கேற்ற சுகபத்திரமான ஒதுக்கிடமாயிருக்கும். பிசாசும் பாவமும் அங்கே உன்னைத்தொடமாட்டாது. நமது நாட்டின் பட்சிகள் முட்செடிகளுக்குள்ளும் முள்வேலிகளுக்குள்ளும் தங்கள் கூடுகளைக் கட்டுகிறதைப் பார்க்கிறோமே, சுகபத்திரமாயிருக்கவே அவைகள் அங்கே கூடுகட்டுகிறது. கிறிஸ்துவின் பாடுகளின் அடைக்கலத்துக்குள் நாம் தங்கிச் சுகமாய்த் தாபரிப்போமாக.

மூன்றாவது, நமது இராஜாவானவர் மகா ஊக்கமாய் நேசிக்கவும் முழு உள்ளத்தோடும் போற்றிப்புகழவும் அவருடைய முட்கிரீடம் நம்மை ஏவுவதாக. உத்தம பக்தருடைய பார்வையில் முட்கிரீடம் சூடினவராய் நிற்கிற அவர்களுடைய எஜமான் முற்றிலும் அழகுள்ளவராய் விளங்குகிறார். முட்கிரீடகாட்சி அதிகமாய் அவர்களில் அன்பைப் பொங்கப்பண்ணுகிறது.

அன்பு பொங்கி அவரைப் போற்றுகிறார்கள், புகழுகிறார்கள், துதித்து ஸ்தோத்திரிக்கிறார்கள், தொழுது வணங்குகிறார்கள். அவருக்கு எதைக் கொடுக்கலாம், எதைச் செய்யலாம், அவர் நிமித்தம் எதை வெறுக்கலாம் எதைச் சகிக்கலாம், அவருக்காக யாரை ஆதாயம் பண்ணலாம் எப்படிப் பிழைக்கலாம் மரிக்கலாம் என்று வாஞ்சை கொள்ளுகிறார்கள். கர்த்தர் நமது பக்தர் யாவருக்கும் இவ்வித வாஞ்சையைப் பெருகப்பண்ணுவாராக.

5-வது, இயேசு இராஜாவின் முட்கிரீடம் ஜெயக்கிரீடத்துக்கு அடையாளமாயிருக்கிறது. பாவத்தால் வந்த சாபத்தோடே உலகத்தில் முள் வந்தது. ஆதலால் முள்ளெல்லாம் பாவத்தின் ஜெயத்துக்கு அடையாளம் என்று சொல்லலாம். பாவத்துத்துக்குக் கிரீடம் முள்தான். ஆதலால் பாவத்தை ஜெயிக்க வந்த நமது இராஜா அதை ஜெயித்ததற்கு அடையாளமாக அதின் கிரீடத்தைத் தமது தலையில் தரித்துக்கொண்டிருக்கிறார். ஆதலால் முட்கிரீடம் தரித்தவராய் நிற்கிற நமது ஜெயவேந்தரை அவருடைய ஜெயத்தினிமித்தம் வாழ்த்துவோமாக. எங்கள் மகத்துவ ஜெயவேந்தரான இயேசு இராஜாவே, நீர் என்றும் வாழ்க!

## 'கர்த்தரை வைத்த இடம்'

'கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்'. பரி. மத்தேயு 28: 6.

கர்த்தராகிய இயேசுவின் பிறப்புதினத்தையும் உயிர்த்தெழுதலின் நாளையும் கிறிஸ்து சபை மகா பெரிய பண்டிகை நாட்களாகக் கொண்டாடுகிறது. அப்பண்டிகைகளின் முதல் நாட்களை பரலோக தூதர் பூலோகத்துக்குவந்து விசேஷித்தவிதமாய் ஆசரித்ததே இதற்குக்காரணம். தாங்கள் அந்நாளை விசேஷித்து ஆசரித்ததுமன்றி, பூலோக பக்தர்கள் அவைகளை விசேஷித்தவிதமாய்க் கொண்டாடவும் செய்தார்கள். இரு பண்டிகையின் ஆசரிப்பும் அதிக இருட்டாயிருக்கும்போதே ஆரம்பித்தது. இரண்டு நாளிலும் பரலோக தூதர்கள் பூலோக மனிதருக்குப் பிரசங்கம் செய்தார்கள். ஒரே வித்தியாசம் மட்டும் உண்டு. கிறிஸ்மஸ் தினம் ஆனந்த கீதத்தோடு சந்தோஷமாய் ஆசரிக்கப்பட்டது. ஆனால் ஈஸ்த்தர் பண்டிகைநாளோ நன்றியறிதலோடே பயபக்தியாய் ஆசரிக்கப்பட்டது. பரலோக மாதிரியைப் பின்பற்றி பூலோகம் இந்நாட்களை இன்னமும் ஆசரிப்பது நியாயமே; நடு இராத்திரியிலேயே ஆசரிப்பை ஆரம்பிப்பதும் பழைய முறையேயல்லாமல் இடையில்வந்த புது முறையல்ல. இப்படி அதிக இருட்டோடே ஆண்டவரை ஆராதிக்க வருகிற சபைக்கு ஊழியம்செய்கிற மனிதர் தேவதூதராய் மாறிவிடுவார்களாக. முதல் நாளில் தேவதூதர் கூறிய சத்தியத்தை விளக்



கிக்காட்டுவதற்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகம் அவர்களுக்கு அருளப்படுவதாக. 'கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்'.

முதலாவது, கர்த்தரை வைத்த இடத்தை நாம் ஏன் பார்க்கவேண்டும் என்று கவனிப்போம். கிறிஸ்துவின் கல்லறையைப் பார்க்கப்போகையில் மகா பயபக்தியோடு போகவேண்டும். பரிசுத்த தியானம்தான் பயபக்தியை உண்டாக்கும். அந்தச் சமயத்தில் நம்மிடத்தில் இருக்கவேண்டிய ஆவிக்குரிய சிந்தை என்ன?

1-வது, நமது இராஜா இக்கல்லறையில் படுத்திருக்கச் சித்தங்கொண்டது எத்தனை மகத்தான தாழ்மை என்று சிந்திப்போம். இது எத்தனை ஆச்சரியம்! இது எத்தனை அன்பு. நமதுமேல்வைத்த அன்பினிமித்தம் நமது ஆண்டவர் எவ்வளவு தாழ்வான இடத்துக்கு இறங்க நேரிட்டது என்று தியானிப்போம்.

2-வது, நமது பாவங்கள் க்ஷமிக்கப்பட்ட இடமாக அதைப் பார்ப்போம். அவரை அவ்விடத்துக்குக் கொண்டுபோன பாவத்தை வெறுத்துத் தள்ளுவோம். கர்த்தரை வைத்த இடத்திலே நமது பாவங்களுக்காகப் புலம்பி அழுவோம்.

3-வது, எஜமான் வாத்தாமதித்தால் நாமும் படுத்திருக்கவேண்டிய இடமாக அவரை வைத்த இடத்தைப் பார்ப்போம். பாவிகளான நாம் மண்ணுக்குத் திரும்புவது நிச்சயம். நாம் எவ்வளவு ஏராளமான நிலங்களைச் சுதந்தரித்தாலும், ஆறு அடி நிலந்தான் நமக்குக் கடைசியாகக் கிடைக்கும். தேவகுமாரனுக்கும் அவ்வளவு இடந்தான் தேவையாயிருந்தது.

4-வது, கர்த்தரை வைத்த இடத்தைப் பார்க்கையில் கல்லறையில் நமக்குக் கிடைக்கும் தோழமையைப் பார்க்கலாம். இம்மானுவேல் இங்கே படுத்திருந்தார். என் தேகமே, நீயும் இங்கே தைரியமாய்ப் படுத்திருக்கலாம். எண்ணிறந்த பக்தர்கள் இங்கே இன்பமாய் இளைப்பாறுகிறார்கள். எஜமான் வருமளவும் நீயும் நானும் அவருடைய பாதுகாப்புக்குள் இங்கே இளைப்பாறலாம்.

5-வது, கர்த்தரை வைத்த இடத்தைப் பார்க்கையில், நீ நெடுங்காலம் இங்கே படுத்திருக்கமாட்டாய் என்று அறியலாம். இயேசு இராஜா மூன்று நாள்மட்டும் இங்கே படுத்திருந்தார். அவரை நித்தியமாய் இதற்குள் அடைத்துவைக்கும் நோக்கமாய் இதை அடைத்த கல் அதோ புரட்டப்பட்டுக்கிடக்கிறது. இனி இதைத் திரும்ப அடைக்க ஒருவனாலும் கூடாது. இது நீ நித்திரை செய்யும் இடம். விடியற்கால எக்காளம் தொனிக்கும்போது நீயும் மகிமையாய் விடுதலைபெற்று எழும்புவாய்.

6-வது, கல்லறையின்பேரில் வெற்றிகொண்டாடும்படி கிறிஸ்துவை வைத்த இடத்தைப் பார்ப்போம். அங்கே நின்று 'கர்த்தரைப் பாடுவேன்,

அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார்' என்று புகழ்ந்து போற்றுவோமாக. 'மரணமே, உன் கூர் எங்கே? பாதாளமே, உன் ஜெயம் எங்கே' என்று ஆர்ப்பரிப்போமாக.

7-வது, கிறிஸ்துவோடு கூட அடக்கம்பண்ணப்பட்டு அவரோடு புதிய ஜீவனுக்கு உயிர்த்தெழும்படி அவரை வைத்த இடத்தைப் பார்ப்போமாக. எண்ணிறந்த பக்தர்கள் விசுவாசத்தால் இங்கே பாவத்துக்கு மரித்து, நீதிக்கு உயிர்த்தெழுந்ததுண்டு. அதற்காகவே கிறிஸ்துவின் கல்லறை இன்னமும் திறந்துவைக்கப்பட்டிருக்கிறது. அவ்விதமாய் ஆவிக்குரிய உயிர்த்தெழுதலை அடைந்தவர்கள் அவரோடு உன்னதத்துக்கும் ஏறி மனதினாலும் இருதயத்தினாலும் அவரோடு பரலோகத்திலேயே இடைவிடாமல் வாசம் செய்து வருகிறார்கள். இதை வாசிக்கிறவர்களெல்லாரும் இவ்வித உன்னத நோக்கமாய் கிறிஸ்துவை வைத்த இடத்தை வந்து பார்க்கக்கூடுமானால் எவ்வளவு பாக்கியமாயிருக்கும்; கிறிஸ்து உயிர்த்தெழுந்த தினத்தில் நமக்கு ஆவிக்குரிய உயிர்த்தெழுதல் இதினால் உண்டாகலாம். அப்போது இருமடங்கு சந்தோஷத்தோடு இப்பண்டிகையை ஆசரிக்கலாம்.

இரண்டாவது, கர்த்தரை வைத்த இடத்தில் எவைகளைப் பார்க்கலாம் என்று கவனிப்போம். கர்த்தரை வைத்த இடத்தைப்பார்க்க நாம் பயபக்தியான சிந்தையோடு போவதுமன்றி, அந்தக் கல்லறைக்குள் மிகுந்த அமைதலாய்ப் பிரவேசித்து அங்கே இருக்கிறவைகளை ஒவ்வொன்றாய்ப் பார்ப்போம்.

1-வது, கல்லறையின் வாசலிலேயே சுகந்தவர்க்க வாசனை வீசுகிறது. அருமை எஜமானின் தேகத்தைச்சுற்றி நூறு இராத்தல் சுகந்த வர்க்கம் கட்டப்பட்டிருந்தது. அந்தச் சுகந்தவர்க்கத்தை இயேசு இராஜா கல்லறையிலேயே வைத்துவிட்டு எழும்பிவிட்டார். அதின் வாசனை வாசலுக்கு வெளியே வீசுகிறது. அன்பினால் ஏவப்பட்ட பக்தன் ஒருவன் அதைக் கொண்டுவந்து கொடுத்தான். அவனுடைய அன்புக்கு அது அடையாளம். உயிர்த்தெழுந்த எஜமானை முழு இருதயத்தோடு நேசிக்கிறவர்கள் தேவை அவர்களுடைய அன்பின் வாசனை வெகுதூரம் எட்டுவதாக.

2-வது, தேவதூதரைப் பார்க்கலாம். உயிர்த்தெழுந்த எஜமான் தமது தூதரைக் கல்லறையில் இருக்கவைத்துவிட்டுப்போனார். அவர்கள் பரலோக செய்தியை அறிவிக்கிறவர்களாய் அங்கே உட்கார்ந்திருந்தார்கள். கல்லறைத்தோட்டத்தைக்காட்டி கிறிஸ்தவர்கள் பிள்ளைகளைப் பயப்படுத்துவதுண்டு. அவைகள் ஆவிகளின் குடியிருப்பென்றெண்ணித் தாங்களும் பயப்படுவதுண்டு. அவைகள் தேவதூதரின் குடியிருப்பென்று கிறிஸ்துவின் கல்லறை போதிக்கிறது. அப்படியே நாமும் நம்பிப் போதிப்போமாக. ஜீவகாலத்தில் நம்மைக் காக்கிற தேவதூதர்கள் நமது மரணத்துக்குப்



பின் நமது தேகத்தின் தூசியைக் கல்லறையில் காக்கிறார்கள் என்பதுபோல் இது காட்டுகிறது.

3-வது, நமது எஜமானின் தேகத்தைச்சுற்றிக் கட்டப்பட்ட பிரேதச் சேலைகளைக் கல்லறையில் பார்க்கலாம். இதை நமக்கென்று நமது எஜமான் தமது கல்லறையில் வைத்துவிட்டுப்போயிருக்கிறார். இந்தச் சீலைகள் கட்டப்பட்ட மாதிரி கிடக்கையில், எஜமானுடைய தேகம் அதிலிருந்து வெளியேறி, பூட்டப்பட்ட கல்லறையையும் கடந்துவந்துவிட்டது. இதுவே உயிர்த்தெழுதல். சீலைகள் கிடந்த விதம் உயிர்த்தெழுதலை ரூபிக்கிறது. உயிர்த்தெழுதலின் நிச்சயத்தை நமக்குக் கொடுக்கும்படிக்கு அந்தச் சீலைகளும் கல்லறைக்குள் கிடந்தன, பரி. யோவான் 20: 7.

4—வது, இயேசு இராஜாவின் சிரசை மூடின துண்டையும் அங்கே பார்க்கலாம். அதைத் தனியே ஒரு இடத்திலே சுருட்டிவைத்திருக்கிறது. உயிர்த்தெழுந்தபின் நமது எஜமானுக்கு அது அவசியமில்லை. நமக்கு அதினால் ஒரு விசேஷித்த பிரயோஜனம் உண்டு. ஆறுதலற்ற துக்கசாகரத்தில் மூழ்கினவர்களுடைய கண்ணீரைத்துடைக்க அது உதவும். எஜமானுடைய முகத்தை மூடின துண்டிலே உங்கள் துயரத்தை மாற்றும் வல்லமை உண்டு. உன்னை விட்டுப் பிரிந்த மரித்தோர் உயிரோடெழும்புவார்கள் என்று அது சாட்சி பகருகிறது.

5—வது, நமது எஜமான் சிலுவையில் தொங்கினபோது உடுத்திருந்த சிறு வஸ்திரத்தை அங்கே பார்க்கலாம். அவருடைய வஸ்திரத்தைப் பாதகர் உரிந்துகொண்டபோது, இதை அவருக்கு உடுத்துவித்தார்கள். சிலுவையிலே இது நமது ஆண்டவருக்கு அவசியந்தான். இப்போது இது நமக்குவேண்டும். சிலுவையின் காட்சியையும் சரித்திரத்தையும் இது நமக்கு ஞாபகப்படுத்திக்கொண்டேயிருக்கும்.

6-வது, கல்லறையை மூடிய கல் புறட்டப்பட்டுக்கிடக்கிறதைப் பார்க்கலாம். 'கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்து இறங்கிவந்து, வாசலிலிருந்த கல்லைப் புரட்டித்தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தான்.' உயிர்த்தெழுந்த எஜமானின் சத்துருக்களே, நான் உட்கார்ந்திருக்கிற இக்கல்லை இனிமேல் கல்லறையின் வாசலுக்குப் புரட்ட உங்களால் கூடுமோ என்பதுபோல் அவன் சொல்லலாம். கல்லறையைச் சுற்றிப்பார்த்த நாம் தவித்துப்போயிருக்கலாம். நாமும் தேவதூதனோடு அந்தக் கல்லில்போய் உட்கார்ந்து இளைப்பாறுவோம். தேவ குமாரனுடைய உயிர்த்தெழுதலின் சரித்திரத்தைப்போல் பாவிகளுடைய உள்ளத்துக்கு இளைப்பாறுதலைக் கொடுக்கும் விஷயம் வேறொன்றுமில்லை.

7-வது, புரட்டப்பட்ட கல்லிலே ரோம இராஜ்யத்தின் முத்திரையைப் பார்க்கலாம். உலத்தின் மகா பெரிய இராஜ்யத்து முத்திரையைப்

பரலோக இராஜ்யம் கீழேபோட்டு மிதிக்கிறது. அந்த முத்திரையை மனிதர் தொடாதபடிக்கு, ஆயுதந் தரித்த மனிதர் காவல் காத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களைவிட அதிக பலவான்களான தூதர்கள் வந்துவிடவே, காவலாளர் பயத்தினால் திடுக்கிட்டு செத்தவர்கள்போலானார்கள். துராத்தனங்களும் அதிகாரங்களும் உலக வல்லமைகளும் தேவனுடைய இராஜ்யத்தின் பலத்த சத்துவத்திற்குமுன் நிற்கமுடியாமல் விழுந்துபோம் என்பதற்கு இதுவே பலத்த ரூபகாரமாயிருக்கிறது. உலகத்தில் சாத்தானின் ஆளுகை இன்னமும் நீடித்திருக்கிறது. அநேக தீமைகள் இன்னும் நிலைத்திருக்கிறது. பூமியின் பல பாகங்கள் இன்னமும் இருளிலேயே இருக்கிறது. ஆனால் இயேசு இராஜாவின் உயிர்த்தெழுதலின் வல்லமைக்குமுன் இவைகள் எம்மாத்திரம். போரடிக்கும் களத்திலுள்ள பதரைப்போல் இவைகள் பறக்கடிக்கப்படும் காலம் சமீபிக்கிறது. தேவனுடைய இராஜ்யத்தின் வல்லமையை பூரணமாய்ப் பெற்று பிசாசின் வல்லமையை அவமாக்குகிற வீரரை சுவாமி நமது நாட்டில் எழுப்புவாராக.

## ஓர் ஆராதனைச் சரித்திரம்

எனக்கு முன்னிருந்த வரிசையிலே பருத்ததலையுடைய ஒரு மனிதன் இருந்தான். இதற்குமுன் அவன் ஆலயத்துக்கு வந்ததேயில்லை. அவன் தன் முகாந்தரத்தை எனக்குச் சொல்லியிருக்கிறான். ஜெபம் மூடபக்திக்கு அடையாளம்; மாறாத பிரமாணங்கள்தான் உலகத்தை ஆளுகிறது; இந்தப் பிரமாணங்களில் ஒன்று மாற்றப்படும்படி ஜெபிப்பதற்குப் பதிலாக உலகம் அழிக்கப்படும்படி ஜெபிக்கலாம்; ஜெபம் அவபக்தியான காரியம். நடக்கக்கூடாத காரியத்துக்காக ஜெபிப்பது பைத்தியம் என்று அவன் சொல்லுவான். அவன் ஆலயத்துக்கு வந்தால் மாய்மாலமாயிருக்கும் என்பான். ஜனங்கள் ஆலயத்துக்குப் போகும்போது அவன் வயலில் வேலை செய்துகொண்டிருப்பான். ஆலயத்துக்குப் போகிற மூடபக்திக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்று அதினால் காட்டுவான்.

ஆயினும் இன்று அவன் ஆலயத்துக்கு வந்து எனக்கு முன்னிருந்தான். ஒரு ஞானப்பாட்டுப் புஸ்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டிருந்தான். முதல் பாட்டுப் பாடப்படும்போது அவன் அதை நன்றாய்ப் பாடினான். அவன் தாய் சிறு பிராயத்தில் அதைப் படிப்பித்திருக்கவேண்டும். பின்பு அவனை மறந்துவிட்டேன். ஆனால் முழங்காற் படியிட்டு ஜெபிக்கையில் அழுகைச் சத்தத்தைக்கேட்டு எட்டிப் பார்த்தேன். அவன் அமர்ந்த சத்தமாய் அழுதுகொண்டிருந்தான். கடலிலும் தரையிலும் ஆகாயத்திலும்



யுத்தஞ்செய்கிற நமது சக்கரவர்த்தியின் சேனைகளுக்காக குருவானவர் அப்போது ஜெபம் செய்தார்.

'எங்கள் பிதாக்களின் தேவனே, நாங்கள் உம்மை முழு இருதயத்தோடும் துதிக்கத்தக்கதாக, எங்கள் சத்துருக்களின் மூர்க்கமானபலத்தை உடைத்தருளும்' என்று அவர் திடீரெனச்சொன்னார். ஆலயம் நிறைய வந்திருந்த ஜனங்களுக்குள் அப்போது மிகுந்தபயபக்தி உண்டாயிற்று. பயங்கரமான யுத்தக்களத்தின் காட்சி எல்லாருடைய கண்களுக்கும் முன்வந்து நின்றது. சேனைகள் துவளுகிறதும் குண்டுகள் வெடிக்கிறதும் மனிதர் மாளுகிறதுமான பயங்கர சம்பவம் எல்லாருடைய ஞாபகத்திலும் வந்தது. அப்போதான் அந்த பலத்த மனிதன் உடைந்து அழுதான். திடீரென குருவானவருடைய சத்தமும் உடைந்துவிட்டது. பின்னும் துவக்கினார், அப்போதும் உடைந்துவிட்டது. தாம் ஆயத்தம்செய்த ஜெபத்தைச் செய்யாமல் பின்பு தமது மனதில்வந்தபடியே ஜெபித்தார். தகப்பனையும் தாயையும் பார்த்து, பப்பா மம்மா என்று இனி அழைக்கவராமல் மாண்டுபோன மக்களினிமித்தம் துயரப்படுகிற பெற்றோருக்காக அவர் ஜெபித்தார். அப்போது எனக்கு முன்னிருந்த அந்த மனிதன் அடக்கமுடியாமல் அழுதான். ஊமையான பிரமாணங்கள் உலகத்தைஆளாமல், பரிதபிக்கும் கண்களையும் இரட்சிக்கும் கரங்களையுமுடைய தெய்வம் உலகத்தை ஆளுகிறார் என்று அப்போது நம்பி ஜெபித்தான். இவனுடைய மகன் ஒருவனும் யுத்தக்களத்தில் போர்முகத்தில் நிற்கிறான். அவனுக்காக தேவனை நோக்கி இவன் பிரார்த்திக்கிறான். வேறே எதை இவன் செய்யக்கூடும். இவ்விதமாய் புத்தியினால் கண்டுபிடிக்கக்கூடாத தெய்வத்தை இவன் ஆபத்துநேரத்தில் தானாய் இயற்கை அறிவின்படி கண்டுபிடிக்கிறான். தேசம் முழுவதுக்கும் இராஜ்யம் முழுவதுக்கும் இதே மாறுதல் வந்திருக்கிறது. திரையைச்சுருக்கினவுடன் மறைந்திருந்தபொருள் முன்னிற்பதுபோல யுத்தம்துவக்கினவுடன் தேவன் சகல ஜனத்துக்கும் முன்னிற்கிறார். எல்லா இடங்களிலும் ஆலயங்கள் ஜனங்களால் நிரம்பிவிடுகிறது. எல்லாக்கண்களும் பரத்தைநோக்குகிறது. யுத்தக்களத்தின் புகை தேவனுடைய முகத்தை வெளிப்படுத்திவிட்டது.

ஜெபம் முடிந்து பிரசங்கம் ஆரம்பித்தது. குருவானவர் தமது தலையை நிமிர்த்தி, சத்தத்தை உயர்த்தித்துவக்கினார். அவருடைய கண்கள் பிரகாசித்தது. தேவனுடைய நாமத்தை அறிக்கையிடுகிற ஜாதி செய்யத்துணிந்த காரியங்களை அறிவீர்கள்; அவபக்தரான துருக்கியர் செய்யாத கொடூரங்களை இவர்கள் செய்கிறார்கள்; நூற்றுக்கணக்கான வருஷங்களாக மகிமையாய் நின்ற ஆலயங்களை இடித்துத் சுட்டெரிக்கிறார்கள்; மனிதகோபமாகிய பலிபீடத்தின்மேல் ஸ்திரீகளையும் பிள்ளைகளையும் தகனிக்கிறார்கள்; பத்துக்கற்பனைகளுக்கு மேலான அறிவை அடைந்துவிட்டோம்

என்று அகங்காரத்தால் இது உண்டாகிறது. இவ்வித கிரியை உண்டுபண்ணுகிற அறிவு வானத்தின்கீழ் இராதபடி அழிவதாக. இந்த அக்கிரமத்துக்கு ஜெயம் வரும்படி யார்தான் இயேசுவின் நாமத்தால் ஜெபிக்கக்கூடும் என்று அவர் சொன்னார். இதற்குமேல் அவர் பேச இடமிருக்கவில்லை.

திடீரென சபையாருக்குள்ளே பலத்த அசைவு உண்டாயிற்று. ஒரு மனிதனைப்போல எல்லாரும் குதித்து எழும்பிவிட்டார்கள். எல்லாரும் தங்கள் இருகைகளையும் உயர்த்தி, ஆமென், ஆமென் என்று சத்தமிட்டார்கள். குருவானவர் பேச ஏலாமல் நிறுத்திவிட்டார். ஜனங்களுடைய முகங்களைப் பார்த்துத் திகைத்தவராய் அவர் நின்றார். பின் ஒருவர் பின் ஒருவராய் அமைதலாகி உட்கார்ந்தார்கள். எனக்கு முன்னிருந்த மனிதன் கடைசிவரைக்கும் கையை உயர்த்திநின்றான். ஆலயத்துக்கு வந்து பழக்கப்படாத இவன் பிரசங்கத்தால் எழுப்பப்பட்டுப் போட்ட சத்தமே இதற்கெல்லாம் காரணம். கடைசியாய் உட்கார்ந்ததும் இவன்தான். அன்று பிரசங்கம் முடிக்கப்படவில்லை. ஜனங்கள் அமர்ந்தவுடனே குருவானவர், ஜெபம்பண்ணக்கடவோம் என்றார் 124-ம் சங்கீதம் பாடப்பட்டது. 'மனுஷர் நமக்கு விரோதமாய் எழும்பினபோது, கர்த்தர் நமது பக்கத்திலிராவிட்டால்—அவர்கள் கோபம் நம்மேல் எரிகையில் நம்மை உயிரோடே விழுங்கியிருப்பார்கள்.' ஜெயகீதம்போல் அது பாடப்பட்டது. எங்கள் பிதாக்கள் முற்காலத்தில் இச்சங்கீதத்தை இப்படியே பாடினதுண்டு. அவர்கள் சத்தம் எங்கள் காதுகளில் தொனித்ததுபோலிருந்தது. மார்க்க சுயாதீனத்துக்காகப் பாடுபட்ட காலத்தில் எங்கள் பிதாக்களும் இப்படியே பாடினார்கள். அதினால் அவர்கள் ஜெயம் பெற்றார்கள். சுயாதீனத்துக்காகச் செய்யும் யுத்தம் ஜெயம் பெறுவது நிச்சயமே! இக்காலத்தில் பாடுகிற எங்களுக்கும் நிச்சயமாய் ஜெயம் கிடைக்கும். பட்டயத்துக்கும் குண்டுக்கும் மேலான சர்வவல்ல[illegible]ளுகிய கர்த்தரின் பலம் எங்களுக்கு உண்டு. இந்த யுத்தத்தால் அவரையே நாங்கள் கண்டுகொண்டோம். நாங்கள் தேவனைக் கண்டுகொண்டோம்

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

May, 1915. Registered—No. M. 163

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

THE REGISTRA… 21 DEC 1915 … MADRAS

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." (யோவான் 7: 38)

Vol. XVI மே௴ 1915

## 17-ம் வருஷ கன்வென்ஷன் கூட்டங்கள், 1915.

### டக்கரம்மாள்புரம். மே௴ 24—27. (வைகாசி௴ 11—14).

'தேவனுடைய இராஜ்யம் அதற்கேற்ற கனிகளைத்தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்' பரி. மத்தேயு. 21: 43.

திராட்சத்தோட்டத்தைத் தோட்டக்காரருக்குக் குத்தகையாக விட்டுப்போன வீட்டெஜமான், 'கனிகாலம் சமீபித்தபோது, அதின் கனிகளை வாங்கிக்கொண்டுவரும்படி தன் ஊழியக்காரரைத் தோட்டக்காரரிடத்தில் அனுப்பினான்' (34 வா). திருநெல்வேலி நாட்டுச் சபைக்கு இது மகா முக்கியமான பருவ காலம். தேவனுடைய இராஜ்யத்துக்கேற்ற மிகுந்த கனி இக்காலத்தில் நமது சபைகளிலே காணப்படவேண்டும்.

சபைகளிலே அணிகரப் பாவங்கள் ஒழிந்துபோகவேண்டும். திட்டமாய்க்குணப்பட்டவர்களின் தொகை மற்றவர்களைவிட அதிகமிருக்கவேண்டும். ஓய்வுநாள் மீறுதலும் குடிவெறியும் காணப்படாதே போகவேண்டும். வேத அறிவும் ஜெபதபமும் பெருகிவரவேண்டும். உலக நேசமும் சிற்றின்பப் பிரியமும் அற்றுப்போகவேண்டும். சுயவெறுப்பும் பரிசுத்த ஜீவிய வாஞ்சையும் அதிகரிக்கவேண்டும். சுவாமிக்காகவும் சபைக்காகவும் பக்தி வைராக்கியம்கொண்டவர்கள் எழும்பவேண்டும். எழும்பிப் பிரகாசிக்கிற ஜீவியங்கள் எங்கும் காணப்படவேண்டும். சுவாமிக்குரிய தசமபாக காணிக்கையை எல்லாரும் கொடுக்கவேண்டும். சுவிசேஷ பிரபல்ய வாஞ்சை பலப்படவேண்டும். புறமதஸ்தருக்குச் சுவிசேஷம் ஒழுங்காய் அறிவிக்கப்படவேண்டும் மிஷனெரி சங்கவேலை பலமாய் நடத்தப்படவேண்டும். ஊழியர்கள் யாவரும் ஆவியைப் பெற்றவர்களாயிருக்கவேண்டும். குருமார் சத்திய உபதேசத்தினால் நிறையப்பட்டவர்களும் மாசில்லா நடக்கையினால் அலங்கரிக்கப்பட்டவர்களுமாயிருக்கவேண்டும்.

திருநெல்வேலி நாட்டுச் சபைகளாக இப்படிப்பட்ட பலத்த வாஞ்சைகொண்ட தேவனுடைய பிள்ளைகள் யாவரும் இவ்வருஷக் கன்வென்ஷன் கூட்டங்களுக்கு வரும்படி இயேசு இராஜாவின் நாமத்தினால் அழைக்கிறோம். திருநெல்வேலி நாட்டின் வாழ்வுக்காகப் பரிசுத்த ஜீவியத்தில பழக்குவிக்கப்படவேண்டிய மற்ற அநேக விச

வாசிகளான பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டுவரும்படி கேட்கிறோம். அநேக ஆண்டவருடைய பிள்ளைகள் ஒன்றுகூடி தேவனுடைய இராஜ்யத்தின் நன்மைகள் நமது சபைகளில் ஏராளமாய் அருளப்படவும், அந்த இராஜ்யத்துக்கேற்ற கனிகள் நமது நடுவிலே மிகுதியாய்ப் பெருகவும் ஊக்கமாய் மன்றாடுவோமாக.

இவ்வருஷக் கூட்டங்கள் திங்கள் மாலையில் ஆரம்பித்து வியாழன் மாலையில் முடியும். கூட்டங்களுக்காக எல்லாரும் விடாமுயற்சியாய் ஜெபிப்போமாக.

இந்தத் தடவை மகாகனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் இக்கூட்டங்களுக்கு வந்து மூன்று முறை பிரசங்கம் செய்து மிஷனெரி கூட்டமும் நடத்துவார்கள்.

கன்வென்ஷன் நடத்துகிற சகோதரர் பேரால்

S. G. மதுரம்.

---

# மேலான ஜெபம்

'வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகம்'.

எபே. 3: 20.

'அவர் உம்மிடத்தில் ஆயுசைக் கேட்டார்; நீர் அவருக்கு என்றென்றைக்குமுள்ள தீர்க்காயுசை அளித்தீர்' என்று 21-ம் சங்கீதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பரமபிதா தம்மைநோக்கி வேண்டுதல் செய்யும் பிள்ளைகளுக்கு இரங்குகிற விதம் இதுவே. கேட்டது ஆயுசு, அருளப்பட்டதோ தீர்க்காயுசு. நாம் கேட்பது கொஞ்சம் அவர் அருளுவதோ அதிகம். நாம் ஏற்றபடி ஜெபிக்க அறியோம். ஒருவேளை ஜெபித்தாலும் தேவசம்பூரணத்தை அறியாதவர்களாக ஜெபித்திருக்கிறோம். அதிகம் கேட்டால் கொடுப்பாரோ என்கிற அச்சம் நமக்குண்டு. என்றாலும் கிருபையுள்ள தேவன் நமது விருப்பத்துக்கும் வேண்டுதலுக்கும் மிகவும் அதிகமாய் நமக்கு நன்மைசெய்து வந்திருக்கிறார். நாம் வேண்டிக்கொண்டதை மாத்திரம் அவர் கொடுத்திருப்பாரானால் எவ்வளவு குறைவாகப் பெற்றிருப்போம். அவர் நமக்குச் செய்த நன்மைகளும் நம்மை நடத்திவந்திருக்கிற விதமும் ஆச்சரியமாயிருக்கிறதல்லவா?

இந்நிருபத்தில் அப்போஸ்தலன் எபேசுவிலுள்ள கிறிஸ்தவர்களுக்காக இருமுறை ஜெபிக்கிறார். அவ்விண்ணப்பங்கள் எவ்வளவு அருமையானவைகள்! முதல் அதிகாரத்தில்: அவர்கள் தேவனை அறிந்துகொள்ளும்படிக்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்றும், தேவன் அவர்களை அழைத்ததினால் அவர்களுக்குண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தேவனுக்குண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும், தேவன் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி அவரில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிற அவர்களிடத்திலும் அவர் நடப்பிக்கக்கூடிய வல்லமையின் மகா மேன்மை



யான மகத்துவம் இன்னதென்றும் அவர்கள் அறிந்துகொள்ளும்படிக்குப பிரகாசமான மனக்கண்களைக் கொடுக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறார். மூன்றாம் அதிகாரத்தில் இன்னும் நாலு மேலான ஆசீர்வாதங்களுக்காக மறுபடியும் ஜெபிக்கிறார்.

I. முதலாவது, உள்ளான மனுஷனில் அவர்கள் வல்லமையாய்ப் பலப்படும்படி. அவர்கள் அக்கிரமங்களையும் பாவங்களையும் விட்டு தேவனிடத்திற்குத் திரும்பினது மெய். இரட்சிப்பின் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு விசுவாசிகளானதும் மெய். தேவனுடைய பிள்ளைகள் என்பதற்கு அடையாளமாக ஆவியின் அச்சாரத்தைப்பெற்றுக்கொண்டதும் மெய். ஆகிலும் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கவும், சோதனைகளை மேற்கொள்ளவும், பாவங்களை ஜெயிக்கவும், உலகத்தை வெறுக்கவும், துன்பங்களைச் சகிக்கவும், மற்றவர்களை ஆதாயம் பண்ணிக்கொள்ளவும் அவர்களுக்கு உன்னத வல்லமை வேண்டும். அதற்காக ஊக்கமாய் ஜெபிக்கிறார்.

நமதாண்டவர் தமது சீஷர்களை அழைத்தார். கூடவைத்துப் போதித்தார். அவர்கள் கண்முன் அற்புத கிரியைகளைச் செய்தார். அவர்களுக்குமுன் பரிசுத்தமாக நடந்தார், எவ்வளவோ மேலான சிலாக்கியங்களை அவர்கள் பெற்றிருந்தார்கள். ஆகிலும் உன்னத வல்லமையை அவர்கள் பெற்றாலன்றி உலகத்துக்கு ஆசீர்வாதமாகயிருக்கமாட்டார்கள் என்று இரட்சகர் அறிந்து காத்திருக்கும்படி கட்டளையிட்டார். அவர்கள் ஆவியினால் உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பெலப்பட்டபோது கிறிஸ்துவுக்கு உத்தம சாட்சிகளானார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் தன் சொந்த அநுபவத்தில் கண்ட இந்த உள்ளான வல்லமையைக் குறித்து மகா திட்டமாய்ப் பேசியிருக்கிறார். சகோதரனே! இந்தப் பரம வல்லமையின் மகத்துவம் உனக்குத் தெரியுமா? தற்காலத்துக் கிறிஸ்தவர்களுக்கு வல்லமை எவ்வளவு அவசரம்! ஆராதனையில் வல்லமை விளங்கவேண்டும். ஜெபங்களில் வல்லமை விளங்கவேண்டும். பாட்டில் வல்லமை விளங்கவேண்டும். பிரசங்கத்தில் வல்லமை விளங்கவேண்டும் வேதவாசிப்பில் வல்லமை விளங்கவேண்டும். ஓய்வுநாள் வகுப்புகளில் வல்லமை விளங்கவேண்டும். இது மாத்திரமல்ல, விசுவாசியின் சிரிப்பிலும் விளையாட்டிலும் அவனுடைய சகல கிரியைகளிலும் வல்லமை காணப்படவேண்டும். ஞாயிறில் ஒரு பக்தியும் மற்ற நாட்களில் அவபக்தியும் கிறிஸ்துமார்க்கமல்ல. ஆராதனையிலிருக்கும்போது அமர்ந்த முகமும் வெளியேறினவுடன் பிசாசின் முகமும் விசுவாசிக்கு லட்சணமல்ல. எப்பொழுதும் எல்லா விடங்களிலும் அவன் ஆசீர்வாதமாகயிருக்கவேண்டும். இப்படிப்பட்ட ஜீவியம் அவர் நமக்குள் தமது ஆவியினால் வல்லமையாய்க் கிரியை செய்யும்படி இடம் கொடுப்பதினால் மாத்திரம் ஆகும். இவனே ஜீவதண்ணீர் பாயும் கிறிஸ்தவன்.

II. இரண்டாவது, விசுவாசத்தினாலே கிறிஸ்து அவர்கள் இருதயங்களில் வாசமாயிருக்கும்படி. பாவத்தினால் மனுஷன் இழந்துபோன பேராசீர்வாதம் இவ்விண்ணப்பத்தில் அடங்கியிருக்கிறது. ஒரு வீட்டைக் கட்டுகிறவன் அதில் வாசம்பண்ணுகிறான். தேவன் வாசம்பண்ணும்படி உண்டாக்கின வீடு மனுஷன், பாவஞ்செய்து தேவனை இழந்தான். என்றாலும் வீடு காலியாயிருக்கவில்லை. சாத்தான் மனுஷனை ஆண்டுகொண்டான். அவன் யாருடைய உள்ளத்தில் வாசம்பண்ணுகிறானோ அவர்களுக்கு வேறே நரகம் வேண்டியதில்லை. மனுஷன் செய்யும் சகல பாவங்களுக்கும் உள்ளே கிரியை செய்யும் இந்தப் பிசாசே காரணம். பிசாசின் கிரியைகளை அழிக்கவும் பாவிகளை இரட்சிக்கவும் மனுஷகுமாரன் வந்தார். சாத்தான் உள்ளத்தைவிட்டு ஒழியவேண்டும்; கிறிஸ்து உள்ளத்தில் வாசம்பண்ணவேண்டும். இதுவே இரட்சிப்பு, இதுவே நமக்குப் பாக்கியம்.

தேவன் மனுஷர் உள்ளத்தில் வாசம்பண்ணுவது புதிதாய்த் தோன்றின உபதேசமல்ல. பழைய ஏற்பாட்டில் அநேக இடங்களில் 'நான் அவர்களுக்குள் உலாவி அவர்களோடு வாசம்பண்ணுவேன்' என்றும், 'இதை நான் விரும்பினபடியால் என்றென்றைக்கும் இதிலே வாசம்பண்ணுவேன்' என்றும், 'உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான் நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்' என்றும் ஆண்டவர் சொல்லியிருக்கிறார். அப்போஸ்தலனாகிய பவுலுக்கு இந்தச் சத்தியத்தைப்போல் ஆனந்தமானது வேறில்லை. 'இனி நானல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்' என்று தம்மைப்பற்றிச் சொல்லுகிறார். மற்றவர்களுக்கு எழுதின நிருபங்களில்: 'கிறிஸ்து உங்களில் இருந்தால்' என்றும், 'இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறார்' என்றும், 'கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும்' என்றும்; கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கும்படி' என்றும், கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள்ளிருக்கிறார்' என்றும், எழுதியிருக்கிறார்.

நமது இரட்சகர் தாம் நமது இருதயத்தில் வசிப்பதைக் குறித்து 'நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடு வாசம்பண்ணுவோம்' என்றும், 'நான் உங்களிலிருப்பதை அந்நாளில் நீங்கள் அறிவீர்கள்' என்றும், 'ஒருவன் என் சத்தத்தைக்கேட்டுக் கதவைத் திறந்தால் அவனிடத்தில் நான் பிரவேசித்து அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்' என்றும் சொல்லியிருக்கிறார்.

கிறிஸ்துவை உடையவனே உத்தம கிறிஸ்தவன். அநேகருடைய கிறிஸ்து பரத்தில் மாத்திரமிருக்கிறார். அவர் நம்மெல்லார் மேலும், எல்லாரோடும், எல்லாருக்குள்ளும் இருக்கிறவர் என்கிற சத்தியத்தை மறந்துவிடுகிறார்கள். இன்னும் சிலருக்கு கிறிஸ்து வாயில் மாத்திரம் தங்குகி



றார். அவரைப்பற்றித் தெரிந்ததெல்லாம் பேசுவார்கள். உள்ளத்திலேயோ அவருக்கு இடமில்லை. இன்னும் சிலர் விஷயத்தில் கிறிஸ்து ஒரு ஞாபகம்போல இருக்கிறார். அவரைப்பற்றி வேளாவேளை யோசித்துக்கொள்ளுவார்கள். கர்த்தர் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார் என்று சொல்ல அறியார்கள்.

கிறிஸ்துவானவர் இருதயத்தில் வாசம்பண்ணவேண்டுமென்பது அப்போஸ்தலனுடைய மேலான வாஞ்சை. வாசம்பண்ணுதல் என்கிற வார்த்தையில் சகலமும் அடங்கியிருக்கிறது. அவர் ஒரு வழிப்போக்கனைப்போலவும் இராத்தங்க வந்தவரைப்போலவும் இருந்தால் நமக்கு என்ன பிரயோஜனம்? வழிப்போக்கனுக்கும் வீட்டிலுள்ளவர்களுக்கும் என்ன சம்பந்தம்? இராத்தங்குகிறவன் விடியுமுன் எழுந்து போய்விடுவானே. அவனால் நமக்கென்ன லாபம்? ஆனால் நம்மோடு வாசம்பண்ணுகிறவர்களால் நமக்கு அதிகப் பிரயோஜனமும் ஒத்தாசையும் உண்டு. ஒன்றாய் ஒரு வீட்டில் வாசம்பண்ணி ஒருவருக்கொருவர் ஒத்தாசையும் ஆதரவுமாயிருக்கிற சில நல்ல குடும்பங்களை நாம் கண்டிருக்கிறோம். என் ஆத்மநேசர், எனக்காக ஜீவனைக் கொடுத்தவர் என்னோடு வாசம்பண்ணுவது உண்மையானால் எனக்குக் குறைவேது? என்னைப் பட்டினி போட்டு அவர் மாத்திரம் சாப்பிடுவாரா? என் கமுசும், கோட்டும் கிழிந்திருக்கும்போது அவர் மாத்திரம் நேர்த்தியாய் உடுத்திக்கொள்வாரோ? என் அடுப்பில் நெருப்பு மூட்டாதிருக்கும்போது அவருக்கு மாத்திரம் கறியும் பொரியலும் நடக்குமோ? என் கையில் காசில்லாமலிருக்கும்போது அவர் மாத்திரம் பணத்தை எடுத்து செலவு செய்துகொள்வாரோ? என் தலை பறட்டையாயிருக்கும்போது அவர் மாத்திரம் சீப்பையும் பிரஷையும் எடுத்து தலைவாரிக்கொள்வாரோ? நம்மை நேசிக்கிற ஒரு சிநேகிதன் இப்படிச் செய்யமாட்டானே. ராஜாதிராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமாகிய என் செல்வப்பிரபு, என் ஜீவநாயகன், என் உத்தம தோழன், என்னோடு வாசம்பண்ணும்போது அவருடையதெல்லாம் என்னுடையதுதானே. என் அருமை இரட்சகர் என் உள்ளத்தில் வசிக்கும்போது எனக்கு ஒரு குறைவுமில்லை என்று விசுவாசி பாடுகிறான். சகோதரனே! கிறிஸ்து உன் இருதயத்தில் வசிக்கிறாரா?

(இன்னும் வரும்).

எஸ் பரமானந்தம்.

## ‘அவன் சுத்தமானான்’

(2 இராஜா 5: 14).

நாகமானுடைய சரித்திரம் உங்கள் எல்லாருக்கும் தெரியும். அவனுக்கிருந்த அவலக்ஷண வியாதியும்—அவன் வீட்டிலே அடிமைவேலை செய்த ஒரு சிறு பெண் சொன்ன புத்தியும்—அவன் இராஜாவினுடைய அநுமதியைப் பெற்று பிரயாணம் போனதும்—எலிசா தீர்க்கதரிசி யோர்தான் நதியில் ஸ்நானம்பண்ண உத்தரவு கொடுத்ததும் அதினாலே நாகமான் விசனத்தோடு பேசின வார்த்தைகளும்—பின்பு அவனுக்குப் புத்தி வந்து அவன் ஏழுதரம் முழுகி சுத்தமடைந்ததும் பெரியோருக்கு மாத்திரமல்ல சிறியோருக்கும் தெரிந்த விஷயங்களே. என்றாலும் இந்த சரித்திரத்திலுள்ள சில விசேஷங்களை எடுத்துக்காட்டி அதின்பேரில் போதனைசெய்வது மிகவும் பிரயோஜனமென்று எண்ணுகிறேன். ஆகையால் நாகமானுடைய வரலாறுகளைச் சற்றுநேரம் சிந்தித்துக்கொள்வோம்.

I. தன் நிலைமையை உணர்ந்தான். நாகமான் ஓர் பெரிய பிரபு. மிகவும் கீர்த்திமான்; மகா பராக்கிரமசாலி; அவனுக்கு அந்தஸ்து இருந்தது. ‘தன் ஆண்டவனிடத்தில் பெரிய மனுஷனும் எண்ணிக்கையுள்ளவனுமாயிருந்தான்.’ அவனுக்கு ராஜ தயவு கிடைத்தது. அவன் இரதத்தில் ஏறி பட்டணத்து வீதிகளில் உலாத்தும்போது கனவான்கள் முதலாய் நமஸ்காரம் செய்வார்கள் அவன் பரிவாரங்களோடு இரதத்தை ஓட்டிக்கொண்டு போகையில் சாதாரணமான ஜனங்கள் பொறாமைகொண்டு ஒருவரோடொருவர் பேசி, ‘பார்த்தீர்களா’ நாகமானுடைய சிறப்பு எவ்வளவு! அவன் இரதத்தில் பூட்டின குதிரைகள் எத்தனை! அவன் சேவகர், வீரர்—எத்தனை! அவன் மேன்மை, மகிமை, சம்பிரமம் எத்தனை! அவனைப்போல இவ்வுலகத்தில் பாக்கியவான் யார்? என்று சொல்லிக்கொள்வார்கள் அந்தஸ்து மாத்திரமல்ல அவனுக்கு அதிகாரமுமிருந்தது. சீரியருடைய சேனையில் ‘படைத்தலைவனாய் இருந்தான்.’ அவர்களுடைய பட்டாளத்தில் அவனே பிரதானி. ஆயிரமாயிரமான போர்ச்சேவகர் அவன் சொற்படியே நடப்பார்கள். அவன் வாவென்றால் குதிரை வீரர் உடனே வருவார்கள்; அவன் போவென்றால் சர்வசேனையும் புறப்பட்டுப்போகும். அவன் வார்த்தையை எதிர்ப்பார் ஒருவருமில்லை. அந்தஸ்தும் அதிகாரமுமாத்திரமல்ல, அவனுக்குக் கீர்த்தியும் இருந்தது. அவன் மூலமாய் அந்தத்தேசத்திற்கு ஜெயமும் உண்டாயிற்று; சுயாதீனமுமுண்டாயிற்று. படையெடுத்து யுத்தம்பண்ணிச் சத்துருக்களை முறியடித்து வெற்றி சிறந்துவந்திருந்தான். ‘அவனைக்கொண்டு கர்த்தர் சீரியாவுக்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டார்.’ அவன் கீர்த்தி பிரதாபம் நாலுதிசையும் பிரசித்தமாயிற்று ஆனாலும் கீர்த்தி அதிகாரம் அந்தஸ்தும் இருந்தபோதிலும் நாகமான் என்பவன் பாக்



கியசாலியல்ல சொல்லவேண்டுமானால் அந்தத்தேசம் எங்கும் நாகமானைப்போல நிர்ப்பந்தமான மனுஷன் ஒருவனுமில்லை. அவனுக்கு இருந்த குறைவு என்ன? ‘குஷ்டரோகியாயிருந்தான்’ ஆ! பாருங்கள்! உயர்ந்த வஸ்திரங்களைப் போர்த்துக்கொண்டாலும் அந்த ரோகத்தை மறைக்கமுடியுமா? இராஜ போசனத்தைப் புசித்துக்கொண்டாலும் சரீர சுத்தம் உண்டாகுமா? அரண்மனை வீட்டில் வாசஞ்செய்தாலும் மனசுக்குச் சந்தோஷமிருக்குமா? இல்லை! இல்லை! அந்த இழிவான வியாதியினாலே அவன் வாழ்வு எல்லாம் தாழ்வாய் மாறினது; இன்பம் எல்லாம் துன்பமாயிற்று. பிரபு என்றாலும் தன்னை நீசன் என்று அறிந்துகொண்டான். மாளிகையில் உட்கார்ந்தும் ‘குஷ்டரோகியாயிருந்தான்.’ சம்பிரமமாய்ச் சாப்பிட்டும் ‘குஷ்டரோகியாயிருந்தான்.’ வெற்றிவேந்தனானாலும் ‘குஷ்டரோகியாயிருந்தான்’. அந்தரோகமானது அவன் சௌக்கியத்தையெல்லாம் கெடுத்துப்போட்டது. அவன் நித்திரையையும் கெடுத்துப்போட்டது. அவன் சந்தோஷத்தையெல்லாம் கெடுத்துப்போட்டது கண்ணாடியில் தன் முகத்தைக் காணும்போதெல்லாம் பெருமூச்சு விடுவான். குஷ்டம் பிடித்த தன் தேகத்தைப் பார்த்துத் துயரப்படுவான். அதைப்பற்றி அவனுக்குத் தீராத கவலை இருந்தது. இரவும் பகலும் தன் கேவல ஸ்திதியை உணர்ந்து மனவேதனைப்பட்டான். அவன் வாசலில் கிடந்து பிச்சைகேட்ட தரித்திரன் அவனைவிட மகா பாக்கியவான் என்பதற்குச் சந்தேகமில்லை.

பிரியமான சகோதரரே! உங்கள் பாவவியாதியைக் குறித்து உங்களுக்குக் கவலை விசாரமுண்டா? உங்கள் பாவ நிலைமையை உணருகிறீர்களா? ஐயோ! பாவஞ்செய்தேன் என்று வாயினாலே அறிக்கைசெய்தாலும் இன்னும் தங்கள் தீயகுணத்தைக் கொஞ்சமாகிலும் உணராத சபையார் எத்தனை? பாவ உணர்வுள்ள கிறிஸ்தவன் சும்மா இருக்கமாட்டான். துக்கப்படுவான்; விசாரப்படுவான்; கவலைப்படுவான். அநேகருக்கு அறிவுண்டு, சிலருக்குமாத்திரம் உணர்வும் உண்டு. சீரியா தேசத்தில் ஒரு காலத்தில் ஓர் கலியாணம் நடந்தது. அத்தேசத்துப் பெண்கள் யாவரும் முக்காடு இட்டுக்கொள்வார்கள். அந்தப்பெண் ஒரு ஆஸ்திமானுடைய மகள். ஆகையால் அவளோடு மாப்பிள்ளைக்கு உயர்ந்த பரிசம் கிடைத்தது. கலியாணம் நடந்து முடிந்தது. மாப்பிள்ளை கிரகத்திற்குப் போய்விட்டார்கள். அங்கே மாப்பிள்ளை பெண்ணின் முக்காட்டை எடுத்து அவள் முகத்தைப் பார்க்கும்போது ஐயோ! பரிதாபம், குஷ்டரோகியாயிருந்தாளாம்! தெரியாமல் குஷ்டரோகப் பெண்ணை விவாகம் செய்தான். சகோதரனே! சகோதரியே! உன் இருதயத்தின்மேல் ஓர் முக்காடுண்டு. அதினாலே உன் பாவ குஷ்டரோகம் தென்படமாட்டாது. தேவனோ அதை எடுத்துப்போட்டு உன் அந்தரங்கத்தையெல்லாம் கவனிக்கிறார். அதோ! அந்த மறைவான பாவம் அவருக்குத் தெரிகிறது. அவலட்சணமான அந்தத் துர்ச்செய்கை

அவருக்கு அருவருப்பாயிருக்கிறது. ஐயோ! உன் உள்ளிந்திரியங்களைப் பரிசுத்த கர்த்தா ஊடுருவப் பார்க்கையில், 'அதிலே சுகமேயில்லை; அது காயமும் வீக்கமும் நொதிக்கிற இரணமுமுள்ளது; அது சீழ் பிதுக்கப்படாமலும், கட்டப்படாமலும் எண்ணெயினாலும் ஆற்றப்படாமலும் இருக்கிறது.' கொடிய குஷ்டரோகம், ஈனகுஷ்டரோகம், முழுக்குஷ்டரோகம். இதை உணருகிறாயா? அப்படியானால் உன் கவலை எங்கே? உன் கண்ணீர் எங்கே? உன் விசாரம் எங்கே?

II. பரிகாரத்தைத் தேடினான். நாகமான் மெத்தவும் புத்திமான். தன் ரோகம் தீர வகை தேடினான். பரிகாரம் காணப்பிரயாசை எடுத்தான். துக்கசாகரத்தில் மூழ்கி அங்கே அமிழ்ந்துபோவதினாலே லாபமில்லை என்று அறிந்துகொண்டான். தரையில் விழுந்து தூசியில் புரண்டு கூப்பாடு போடுவதால் வியாதி நீங்காது என்று கண்டு, தன்னாலானமட்டும் பிரயத்தனம் செய்தான். அவன் சாப்பிட்ட மருந்து எவ்வளவு! அவன் பார்த்த பக்குவங்கள் எத்தனை! அவன் பூசின தைலங்கள் எத்தனை! நாட்டு வைத்தியர் பார்த்திருப்பார்கள். ராஜ வைத்தியரும் பார்த்திருப்பார்கள். அயல் தேசத்து வைத்தியரும் பார்த்திருப்பார்கள். தைலம் பூசச்சொல்லுவார் சிலர்; பத்தியம் காக்கச்சொல்லுவார் சிலர்; பூர்த்தியாய்ச் சாப்பிடச்சொல்லுவார் சிலர்; ஸ்நானம் பண்ணச்சொல்வாருமுண்டு. ஸ்நானம் பண்ணாதே என்பாருமுண்டு. ஆனாலும் பக்குவம் செய்தும் ஔஷதம் சாப்பிட்டும் நாகமான், 'சற்றாகிலும் குணமடையாமல் முன்னிலும் அதிக வருத்தப்பட்டான்'. கடைசியில் அவனுடைய மனைவிக்கு இஸ்ரவேலின் சிறு பெண் தீர்க்கதரிசியின் வல்லமையைத் தெரிவித்தபோது, சமாரியர்நாடு தூரம் என்று எண்ணாமல் அங்கேயும் ஆத்திரத்தோடு புறப்பட்டுப்போனான். தன் வியாதி நீங்க எங்கும் போவான்; எந்தச் செலவும் செய்வான். தூரம் என்று பார்க்கமாட்டான். சங்கடமென்றும் எண்ணமாட்டான்.

சகோதரரே! பாவ பரிகாரத்தை ஆசையோடு தேடுகிறீர்களா? அதை முழு இருதயத்தோடு விரும்புகிறீர்களா? நாகமானுக்கு இருந்த ஆசையும் ஆத்திரமும் உங்களுக்கு உண்டா? பாவரோகம் தீரவும் ஆத்தும இரக்ஷிப்பு அடையவும் என்ன பிரயத்தனம் செய்கிறீர்கள்? இந்துக்கள் காசிக்குப் போவார்கள்; ராமேஸ்வரத்துக்கும் போவார்கள்; புண்ணியஸ்தலங்கள் எங்கும் போவார்கள். தெரியாமல் போவார்கள். நீங்கள் சும்மா இருப்பதென்ன? இங்கிலாந்து தேசத்தில் ஓர் அம்மாளை அறிவேன். அவளுக்கு வியாதி உண்டாகி வருத்தப்பட்டாள். வியாதி நீங்கும்படி பிரயாசப்பட்டாள்; அதற்கென்று பாடுபட்டாள்; பணச்செலவு செய்தாள்; இயன்றமட்டும் வகை பார்த்தாள். இங்கிலாந்து தேசத்தில் பார்த்தாள்; தூரதேசங்களிலும் பார்த்தாள்; பேர்போன வைத்தியர் எங்கெங்கேயுண்டோ அங்கே எல்-



லாம் ஓடினாள். மருந்தினாலே சுகம் வராததினாலே மருந்தையெல்லாம் தள்ளிப்போட்டாள். விசுவாசமுள்ள ஜெபத்தினாலே ஆரோக்கியம் உண்டாகும் என்று சிலர் சொல்லக்கேட்டு அந்த வகையையும் கையாடினாள். ஒன்றும் பயன்படவில்லை. சரீரசுகம் உண்டாக இப்படியெல்லாம் முயற்சிபண்ணினாள். சிநேகிதரே! பாவம் நீங்க நீங்கள் என்ன பிரயத்தனம் செய்கிறீர்கள்? இரக்ஷிப்பின் விஷயத்தில் உங்கள் வாஞ்சை விருப்பம் ஊக்கம் வைராக்கியம் எவ்வளவு? ஆ! உலக காரியங்களில் நமக்கு அபிமானம் உண்டு. சொத்தைச் சம்பாதிக்க மெத்த பிரயாசை. சம்பாதித்ததைக் காப்பாற்ற அதிக கவலை! சரீரத்தைப்பேண போதுமான முயற்சி, என்றாலும் அநேகருடைய பாவக்குஷ்டம் இன்னமும் நீங்காமலிருக்க, அவர்கள் அதைப்பற்றிக் கவலைப்படாமல் இருப்பது நியாயமா? பிரியமானவர்களே! இரட்சிப்பைக் கருதி நாடித்தேடுங்கள். 'பூமியிலுள்ளவைகளையல்ல மேலானவைகளை நாடுங்கள்.' மோட்சபிரயாணியைப்போல நாசபட்டணத்தைவிட்டு பரமசீயோனை நோக்கி, 'நித்திய ஜீவன்! நித்திய ஜீவன்!' என்று கூவி ஆசையாய் ஓடி மோட்சத்தைத் தேடுங்கள்.

III. பிசகாய் நடந்தான். அவன் உற்சாகம் நல்லது; அவன் புத்தியீனமோ நல்லதல்ல. அவன் எடுத்தகாரியம் சரி; அவன் நடந்த மாதிரியோ சரியன்று. பெரியோருடைய உதவியை நம்பினான்; ராஜாவின் சகாயத்தை நாடினான்; மனுஷனுடைய பெலனைச் சார்ந்தான்; அதிகாரிகளுடைய சிபார்சில் நம்பிக்கைவைத்தான். புத்தியீனம்! 'மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும் கர்த்தர்பேரில் பற்றுதலாயிருப்பதே நலம். பிரபுக்களை நம்புவதைப்பார்க்கிலும் கர்த்தர்பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்.' மேலும் தேவனுடைய ஈவை விலைக்குவாங்க விரும்பினான். கிரயம் கொடுக்க யோசித்தான். உலகப் பொருளை நம்பினான். அதினால் சகலமும் ஆகும்; சகலமும் உண்டாகும் என்று தப்பெண்ணங்கொண்டு தவறிப்போனான். நல்ல கிரயத்தைக் கொண்டுபோனான். 'பத்துத் தாலந்து வெள்ளியையும் ஆறாயிரம் சேக்கல் நிறைபொன்னையும் எடுத்துக்கொண்டுபோனான்.' 'பத்து தாலந்து வெள்ளி' என்றால் உத்தேசம் அரை லட்சம் ரூபாய் ஆகும் (ரூ. 51,300) 'ஆறாயிரம் சேக்கல் நிறைபொன்' என்றால் சுமார் $1\frac{1}{2}$ லட்சம் ரூபாய் ஆகும். இப்படிப்பார்த்தால் குறைந்தபட்சம் 2 லட்சம் ரூபாய் எடுத்துக்கொண்டுபோனான். தவிரவும் விலையுயர்ந்த வஸ்திரங்களையும் கொண்டுபோனான். புத்தியீனனே! 'தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக்கொள்ளலாம்' என்று நினைக்கிறாயா? அவனைக் கவனித்துப் பாருங்கள்! ரதங்களோடும் குதிரை வீரரோடும் புறப்பட்டுப்போகிறான். பெருமையோடும் டம்பத்தோடும் புறப்பட்டுப் போகிறான். கட்டியக்காரன் அவன் முன்னாலே ஓடி, 'நாகமான் வருகிறான்; பெரிய பிரபு வருகிறான். இடங்கொடுங்கள், வழி விடுங்கள், பணிந்துகொள்ளுங்கள்'

என்று கூறி அறிவிக்கிறார்கள். அவன் வசமாக ராஜகிருபம்-சிபார்சு காகிதம் இருக்கிறது. அவன் பக்கத்தில் திரவியம் வஸ்திராதிகள் இருக்கின்றன. ஆ! நாகமானே! நாகமானே! நீ செய்கிற முறை நல்லதல்ல! நீ நம்புகிறபடி காரியம் நடக்காது. டம்பத்தினாலுமல்ல, பணத்தினாலுமல்ல, ராஜகிருபத்தினாலுமல்ல-கர்த்தருடைய கிருபையினாலே மாத்திரம் ஆகும்.

பிரியமான ஜனங்களே! ரக்ஷிப்பைத் தேடும் விஷயத்தில் எத்தனையோ பேர் தவறிப்போகிறார்கள். தேவனுடைய தயவை பெறவேண்டுமென்று நேர்ச்சை செய்கிறார்கள்; தேவாலயத்துக்கு நன்கொடை கொடுக்கிறார்கள் தங்கள் வீடுகளுக்குப் பெரியோரை கூப்பிட்டு ஜெபம்பண்ணக் கேட்கிறார்கள். வேறனேக காரியங்களைப் புத்தியீனமாய்ச் செய்கிறார்கள் மோசம் போகவேண்டாம். தேவனுடைய கிருபை கைமாறில்லாக் கிருபை சீமைதேசத்தில் ஒரு ஸ்திரீ ஜுரத்தினாலே அதிக வருத்தப்பட்டாள். அவளுக்குக் கொடிய தாகம் இருந்தது. வைத்தியன் வந்து பார்த்து, 'இவளுக்கு வேண்டிய மருந்தென்னவென்றால் முந்திரிகைப்பழம் வாங்கித்தரவேண்டும் என்றான். ஆனால் முந்திரிகைப்பழம் அந்த ஊரில் கிடைப்பது வருத்தம். அங்குள்ள ஓர் பிரபுவின் தோட்டத்தில் மாத்திரம் கிடைக்கும். ஆகையால் அந்த வியாதிக்காரியின் மகள் பிரபுவின் வீட்டுக்கு ஓடி முந்திரிகைப் பழத்துக்காகக் கெஞ்சிக் கேட்டாள். பிரபுவின் உத்தரவின்பேரில் அவன் மகன் இரக்கம் பாராட்டி ஒரு கூடைநிறைய சேர்த்தியான பழத்தைக் கொடுத்துவிட்டான். அந்தச் சிறுபெண் பழத்தை வாங்கிக்கொண்டு இரண்டு காசைக் கொடுக்கப்போனாள். அந்தப் பழத்துக்கு இரண்டு காசு ஈடாகுமா? பிரபுவின் மகன் சிரித்து, 'இல்லை, உன் காசு வேண்டாம். அதை வைத்துக்கொள். என் தகப்பனார் இலவசமாய்க் கொடுப்பது வழக்கம். அவர் ஒருபோதும் கிரயத்துக்குக் கொடுத்ததில்லை; கொடுப்பதுமில்லை என்றான். ஆ! சகோதரரே! என் பரமபிதாவுக்கு உங்கள் காசுவேண்டாம். உங்கள் துட்டுவேண்டாம். உங்கள் புண்ணிய கிரியையும்வேண்டாம். அவர் இலவசமாய்க் கொடுப்பது வழக்கம். அவர் ஒருக்காலும் கிரயத்துக்குத் தரமாட்டார்.

IV. தேவனுடைய வழியை அசட்டைசெய்தான். நாகமான் என்பவன் ஏமாறிப் போனான். ராஜ கிருபத்தினால் சகாயமில்லை; பணத்தினாலும் பிரயோஜனமில்லை; பெரியோர் சிபார்சால் ஒன்றுமில்லை. இஸ்ரவேலின் அரசனாலும் யாதொரு உதவியும் இல்லை. எலிசாவின் வீட்டுக்கு ஆடம்பரமாய் வாகனமேறிப்போகும்போது தீர்க்கதரிசியானவன் அவனைக் கண்ணியமாய், உபசாரமாய் ஏற்றுக்கொள்ளவில்லை; வெளியே வந்து வைத்தியம் பார்க்கவில்லை வேலைக்காரனை அனுப்பி 'நீ போய், யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம்பண்ணு' என்று மாத்திரம் சொன்னான். அது



தேவனுடைய உத்தரவு என்றாலும் நாகமானுக்குப் பிரியமில்லை. அவன் பார்வைக்கு யோர்தான் நதி சிறுநதி; சிற்றாறு; அதின் ஜலத்தில் விசேஷமில்லை. அவன் புத்திக்கு அது தகுந்த பரிகாரமாய்த் தோன்றவில்லை. விசனப்பட்டான், கடுங்கோபங்கொண்டான். 'உக்கிரத்தோடு திரும்பிப்போனான்'. பெரிய காரியம் செய்ய தேவன் சொல்லியிருந்தால் உடனே செய்திருப்பான்; லட்சம் ரூபாயைச் செலவுசெய்து மருந்து சாப்பிட உத்தரவானால் சந்தோஷமாய்க் கொடுத்திருப்பான். ஆனால் பாருங்கள்! தேவன் கொடுத்த உத்தரவு லேசானாலும் மனுஷனுடைய பெருமைக்கு மகா வருத்தமான உத்தரவு. நாகமான் தன் மேன்மையை விட்டுவிடவேண்டும்; தன் பெருமையை விட்டுவிடவேண்டும்; தன் ரதத்திலிருந்து இறங்கிவரவேண்டும்; தன் உயர்ந்த வஸ்திரங்களைக் களைந்துபோடவேண்டும்; நிர்வாண குஷ்டரோகியாய் நதியிலே மூழ்கவேண்டும். தனியே—தானாய்—ஒருவனாய் ஒண்டியாய்ப் போய் நதியில் ஸ்நானம் பண்ணவேண்டும். ஒன்றுமில்லாதவனாய், வேறே கதியற்றவனாய்—நீசனாய்—பிணியாளியாய்—நிர்வாணியாய்—நிர்ப்பந்தனாய்—நிர்ப்பாக்கியனாய்—குஷ்டரோகியாய் அதன் ஜலத்தில் முழுகவேண்டும்.

ஆ! சகோதரரே! இரட்சிப்பின் வழி அநேகருக்கு வருத்தம். 'யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்கு பைத்தியமாயும் இருக்கிறது' தன்னைத் தாழ்த்திப்போட மனுஷனுக்குப் பிரியமில்லை. தன் சுயநீதியின் வஸ்திரங்களைக் களைந்துபோட அவனுக்கு சம்மதமில்லை. தன் பாவத்தின் காயத்தை—வீக்கத்தை—ரணத்தைக் காட்ட அவனுக்கு மனமில்லை. பாவியாய்—பாதகனாய்—நிர்வாணியாய்—நீசனாய்—சண்டாளனாய்—பொல்லாதவனாய்—துன்மார்க்கனாய்—துரோகியாய்—திக்கற்றவனாய் வந்து விளங்க அவனுக்குப் பிரியமில்லை. ஆனாலும் வேறே வழி இல்லை. பிரியமானவர்களே! வேறே வழி இல்லை. அதோ! யோர்தான் உங்கள் பக்கமாய் ஓடுகிறது. அதிலே ஸ்நானம்பண்ணுங்கள்.

'பாவதோஷம் நீக்கிட
மீட்பரின் ரத்தம்தானே;
தீய குணம் மாற்றிட
மீட்பரின் ரத்தந்தானே'

'அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்'. உங்கள் பெருமையின் ரதத்தை விட்டு இறங்கி உங்கள் சுயநீதியாகிய கந்தை வஸ்திரங்களைக் களைந்துபோட்டு ஸ்நானம்பண்ணுங்கள். அப்பொழுது சுத்தமாவீர்கள்.

V. ஸ்நானம் பண்ணிச் சுத்தமானான். நாகமானுடைய காரியம் நன்றாய் முடிந்தது. வேலைக்காரர் நியாயத்தைக்காட்ட அவனுக்கு நல்ல புத்தி வந்தது. தேவனுடைய உத்தரவுக்கு இணங்கினான். ரதத்திலிருந்து

இறங்கிவிட்டான். தன் குஷ்டரணங்களை மூடின அந்த கிழிந்த வஸ்திரங்களை களைந்து, ரோகியாய் விளங்கி, ஆற்றிலே இறங்கி ஸ்நானம் செய்தான். ஏழுதரம் முழுகினான் 'சுத்தமானான்'. குஷ்டரோகம் முற்றிலும் நீங்கி, அவன் மாம்சம் ஒரு சிறு பிள்ளையின் மாம்சத்தைப்போல மாறி அவன் சுத்தமானான்.' சர்வாங்க சுத்தம் அடைந்துகொண்டான். சுத்தனாய், தூயனாய், புது மனுஷனாய்—மாசில்லாத தேகியாய் தன் வீட்டுக்குப் போனான்.

சபையாரே! அவ்வாறு நாமும் சுத்தமாவோமாக. சபையின் பரிசுத்தம் எல்லாம் இயேசுவின் இரத்தத்தால் மாத்திரம் உண்டானது. வெற்றி சிறந்த சபையாரைக் கேட்டு விசாரிப்போம்—வெள்ளை அங்கிகளைத்தரித்து தேவனுடைய சிங்காசனத்துக்கு முன்பாக நிற்கிறவர்களே! எங்கேயிருந்து வந்தீர்கள்? அதற்கு அவர்கள் ஏகவாக்காய் மாறுத்தரம் சொல்லி 'மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தோம்; எங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தோம்' என்று கெம்பீரிக்கிறார்கள். பரி. பேதுருவைக்கூப்பிட்டு விசாரியுங்கள். 'பேதுருவே! நீர் மூன்றுதரம் ஆண்டவரை மறுதலித்தீரே உம்முடைய பாவம் இரத்தாம்பரசிவப்பாயிருந்ததே அது பஞ்சைப்போலானது எப்படி? என்று விசாரிக்க அப்போஸ்தலனானவன், 'இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி என்னைச் சுத்திகரித்தது' என்கிறார். மகதலேனா மரியாளைக் கூப்பிட்டு விசாரியுங்கள். 'மரியாளே, ஏழு பிசாசுகள் உன்னைப் பிடிக்கவில்லையா? நீ எப்படி சுத்தமானாய்?' என்று நாம் வினவ, அந்தப் பாக்கியவதி 'இரக்ஷகருக்கு ஸ்தோத்திரம்! அவருடைய இரத்தம் சகல பிசாசுகளையும் துரத்தி என்னைச் சுத்திகரித்தது' என்பாள்.

'அவன் சுத்தமானான்'. சகோதரரே! நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள்; ஆகிலும் எல்லாருமல்ல', இந்தச் சபையில் சுத்தமாகாத சகோதரன் யார்? பாவரோகம் நீங்காத சகோதரி எவள்?

'சுத்தமில்லாததென்ன?
மா திவ்விய ஸ்நானமுண்டே!
உன் பாவம் நிவாரணமாகும்
சமூலம் இக்ஷேத்திலே.'



## மனலய சாதனம்

மனலய சாதனம். மனுஷன் தேவனோடு ஐக்கியமாயிருப்பதற்கு நல்நடத்தை அல்லது நல்லொழுக்கம் சாதனமாயிருக்கும்.

'வேத மார்க்கத்தின் மேய வேதியரொழுக்கம் வேதம்
ஓதற நெறியைப்பற்றி யுற்பவ தோட்டத்தாலே
சாதகமான பாவஞ் சருவிடா தகற்றி யொல்லுந்
தீதினற் கருமம் யாவுஞ் சிந்தையாற் செய்தல் வேண்டும்'.

இரக்ஷிப்பு அடைய கிறிஸ்துமார்க்கத்திற் சொல்லும் சாதனங்களில் முக்கியமானது ஒன்றுளது. அதாவது, கிறிஸ்துபகவான் பூலோகத்தில் வசிக்கும்போது, எவ்வளவு உத்தமராயும் சன்மார்க்கராயும் பரிசுத்தராயும் ஜீவித்தாரோ, அப்படியே அவருடைய தொண்டர்களும், அவர் அடிவணங்கி, தேவகிருபையைப் பெற்று, அவரைப்போல் நடக்கவேண்டுமென்பது. இச்சத்தியத்தைக் கைக்கொண்டு நடக்கிற யாவரும் ஜீவமுக்தியடைவர் என்பதிற் சந்தேகமில்லை. ஏனென்றால் சர்வோத்தர சம்மதமாய் சகல மதங்களிலும் பாவ கிருத்தியங்களை ஒழித்து பரம குணங்களை அணிந்து சன்மார்க்கமாய் ஜீவிக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்து மதத்தில் ஆதியோடந்தமாய்ப் பாவக் கிருத்தியங்கள் வெகுவாய்க் கண்டிக்கபட்டிருக்கிறதுமன்றி, அவைகளையே செய்துகொண்டு தங்கள் ஜீவகாலத்தைப் பின்னிடுகிறவர்கள் நரகத்திற்கு ஆளாவார்கள் என்றும் சொல்லியிருக்கிறது. தேவகிருபையைப் பெற்று யாதொரு பாவத்தொழில் அன்னியில் சன்மார்க்கத்தில் ஜீவிப்பவர்கள் மோக்ஷத்திற்கு ஆளாவார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. உங்கள் பரமபிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல நீங்களும் பூரண சற்குணராயிருங்கள் என்று கிறிஸ்து பகவான் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். நான் பரிசுத்தராயிருப்பதுபோல் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்பது தேவகட்டளை. ஆனால், பலவீனமான பாவ இயல்புடைய மனுஷன் எப்படி பரம சாயலாய் தேவனைப்போல் நடக்கிறது என்ற சந்தேகம் மனுஷருக்குள் ஜெனிக்கலாம். இத்தகைய சந்தேகங்களை நிவிர்த்திக்கும்பொருட்டு தேவனே கிறிஸ்துவாய் மனுஷாவதாரம் செய்து மனுஷர் நடக்கவேண்டியதற்குச் சன்மார்க்கமான முன்மாதிரியைக் காட்டியிருக்கிறார். அந்த முன்மாதிரிப்படி விசுவாசத்துடன் நடக்கிற பக்தர்கள் நிச்சயமாய் மோக்ஷம் என்ற இரக்ஷிப்பை அடைவார் என்பது திண்ணம். 'நீங்கள் கிருபையினால் இலவசமாய் இரக்ஷிக்கப்பட்டீர்கள்'. ரோமர். 3: 24. அவ்வண்ணம் நடக்கவேண்டியதைப்பற்றி அன்ரூ மரே (Andrew Murray) என்னும் ஒரு பரிசுத்தவான் எழுதிய புஸ்தகத்தில் கண்ட கருத்தை அனுசரித்து இதன்பின் வருகிற சங்கதிகளை வாசிக்

கிறவர்களுக்குப் பிரயோஜனமாக எழுதியிருக்கிறேன். அதைக் கருத்துடன் வாசித்து சிந்தித்து தியானித்துப் பாருங்கள்.

## கிறிஸ்துவைப்போல் ஜீவி

*நாம் எல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியில் காண்கிறதுபோலக் கண்டு ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம். 2 கொரி. 3: 18.*

அச்சராப்பியாசஞ் செய்கிற பிள்ளைகளுக்கு உபாத்திமார் முன்மாதிரி எழுத்து வரைந்து காட்டுகிறார்கள். அப்புறம் அதைப் பார்த்து எழுதிப் பழகித் தங்களுடைய மாதிரி முன் எழுத்துப்போலாகும் வரையும் எழுதச் செய்கிறார்கள். மாணவர் அதை ஒப்புக்கொண்டு கீழ்ப்படிந்து வெகு பொறுமையுடன் தினசரி அநேக மணி நேரம் எழுதிப் பழகுகிறார்கள். கவனமாயும் கரிசனையாயும் பிரயாசப்பட்டு எழுதுகிற பள்ளிபிள்ளைகள் சீக்கிரம் நன்றாய் எழுதப் படித்துக்கொள்வதினால் தங்கள் ஆயுள்பரியந்தம் நன்றாய் எழுதிவருகிறார்கள். அதனால் உலகத்தில் முன்னுக்கு வருகிறார்கள். கவலைத்தாழ்ச்சியாகவும் சோம்பலாகவும் தெம்பாய் எழுதிப்பழகுகிற பிள்ளைகளோ தங்கள்வாழ்நாள் எல்லாம் கிருச்சாவட்டமாய்க் கோணலான எழுத்து எழுதுகிறார்கள். அவர்கள் உலகததில் முன்னுக்கு வருகிறதில்லை. அவர்களை உயர்ந்த காரியங்களுக்கு எழுதச் சொல்லவுமாட்டார்கள்.

அதுபோலவே ஆத்ம விர்த்தி விஷயமுமிருக்கிறது கிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாய் தமது அடியவர் இருதயத்தில் வாசஞ்செய்யுமபோது சுவிசேஷத்தில் அவர் நடந்த மாதிரியைத் தங்களுக்கு முன்மாதிரியாக வைத்து அவருடைய மகிமையைக் கண்ணாடியில் காணுவதுபோற் கண்டு அந்தச் சாயலாகவே தாங்களும் மறுரூபபபடுகின்றனர். இது பரிசுத்த ஆவியின் கிரியை. விசுவாசமுள்ளவர்களாய் ஞானஸ்நானம் பெற்ற காலம் முதல் தங்கள் ஆயுள்பரியந்தம் கிறிஸ்து பகவானின் முன்மாதிரியைத் தங்களுக்கு முன்மாதிரியாக வைத்து ஜீவிக்கிறார்கள். பார்த்தவர்கள் அவர்களை மெய்யாய் கிறிஸ்தவதாசர் என்று மதிக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவோடு உலகத்திற்கும் அதன் வீண் ஆடம்பரத்துக்கும், மாம்ச இச்சைகளுக்கும், பிசாசின் எல்லாக் கிரியைகளுக்கும் சிலுவையில் அறையப்பட்டவர்களாய்ப் பிழைக்கிறார்கள். அவைகளிலிருந்து கிறிஸ்துவின் ஆவி அவர்களை எல்லாச் சன்மார்க்கத்திலும் நல்லொழுக்கத்திலும் நடத்துகின்றது.

அவருடைய முன்மாதிரியை நாம் பின்தொடரவேண்டிய விஷயத்திலும், அவருடைய பரம குணங்களை நாம் பெறவேண்டிய விஷயத்திலும் சில முக்கிய குறிப்புகளைக் கவனிப்போமாக.



(1) கிறிஸ்துவில் தரித்திருத்தல், (2) அவரைப்போல் பிறருக்கு ஊழியஞ்செய்தல், (3) தன்னை ஒறுத்தல், (4) தன்னைப் பலியிடுதல், (5) பரமபிதாவுடன் ஐக்கியமாயிருத்தல், (6) அன்பு பாராட்டல், (7) மன்னிக்கும் சுபாவம். இவை ஒவ்வொன்றைப்பற்றியும் சில முக்கிய கவனிப்புகளை இங்கு வரைகிறேன். அவரைப்போல் நாமும் ஜீவிக்கக்கூடுமானால் இம்மையில் நமக்கு என்ன பலன் கிடைக்கும், மறுமையில் அதின் லாபம் என்னவென்று சற்று யோசித்துப் பார்ப்போமாக.

### 1. கிறிஸ்துவில் தரித்திருத்தல் (Abiding in Christ).

'கிறிஸ்துவில் தரித்திருக்கிறவன் அவர் எவ்வாறு உத்தமராய் நடந்தாரோ அவ்வாறே அவனும் நடக்கவேண்டும்.' 1 யோவா. 2: 6. பரம ஜீவனைக் கொடுக்கிற கிறிஸ்துவின் சித்தப்படி நாம் நடக்கவேண்டுமென்பதைப் பேராவலுடன் மனப்பூர்வமாய்த் தெரிந்துகொள்ளும் பக்ஷத்தில், மெய்யாய் கிறிஸ்து நம்முடைய இருதயத்தில் வந்து தங்கியிருந்து நமக்கு அவர் சித்தப்படி நடக்கத்தக்க ஞானத்தையும் பலத்தையும் கொடுப்பார். ஒவ்வொரு நினைவும், சிந்தையும், வார்த்தையும் செய்கையும் அவர் ஒப்புக்கொள்ளக் கூடியதாயிருக்கும்படி நடக்க நாம் மனப்பூர்வமாய்ப் பிரயாசப்பட்டால், ஆரம்பத்தில் அதிகத் தவறுதலாயிருந்தாலும், வரவரச் சீர்திருந்தி நிமிஷா நிமிஷம் நாழிகைதோறும் தினந்தினம் அவர் சித்தத்துக்கு ஏற்க நடக்கத் தக்க சக்தியுண்டாகும். கிறிஸ்து திராக்ஷச்செடி, அவருடைய உண்மையான அடியார்கள் திராட்சக்கொடிகளாயிருக்கிறார்கள். மனுஷீக துர்ச்சுபாவமுள்ள விஷச்செடி வெட்டப்பட்டு, இனிமையான கனிதரும் திராட்சச்செடியாகிய இயேசு பகவானின் பரிசுத்த தெய்வ சுபாவத்தில் ஒட்டிவைக்கப்படுகிறது. நன்றாய் ஒட்டுப்பிடித்து உயிருண்டானபின், தொண்டனான கொடியும் மதுரமான திராட்சப்பழங்களைக் கொடுக்கிறது. அதாவது, கிறிஸ்து பகவான் எவ்வளவு சிறந்த முன்மாதிரியாக பரம குணங்களினால் அலங்கரிக்கப்பட்டு பூரண மனுஷனாய் இருந்தாரோ, அப்படியே அவனும் அவர் அடிச்சுவடுகளில் நடந்து அவரைப்போல் நினைக்கிறான், பேசுகிறான் சகலமும் செய்கிறான். அவ்வித பூரணமடையும்படி அவரே கிருபை அருளிச்செய்கிறார்.

### 2. பிறருக்கு ஊழியம்: தன்னை ஒறுத்தல்.

'உங்கள் பரமஎஜமானும் ஆண்டவனுமாகிய நான் உங்கள் பாதங்களைக் கழுவினால், எனது அடியார்களாகிய நீங்களும் ஒருவர் பாதத்தையொருவர் கழுவுங்கள்' அதாவது, அவ்வளவு அன்பும் தாழ்மையுமுள்ள ஊழியத்தை நீங்கள் ஒருவருக்கொருவர் செய்யுங்கள். எவனாவது என்னைப் பின்பற்ற விரும்பினால் அவன் தன்னைத்தானே வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். மத்தேயு 16; 24.

1084



பலவான்களாயிருக்கிற நாம் பலவீனமானவர்களைத் தாங்கவேண்டும். ரோ. 15: 1, 3, 7. நமக்குத் தாழ்ந்தவர்களை நாம் அவமதியாமல், அவர்களுக்கு வேண்டும் விஷயங்களில் சகாயம் புரியவேண்டும். கூடுமான சமயங்களில் எல்லாம், நாம் பரோபகாரம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்.

### 3. தன்னைத் தத்தஞ்செய்தல் (Self-sacrifice).

மனுக்குலம் உய்யும்பொருட்டு நமது அருமை இரக்ஷகர் தம்முயிரைத் தியாகஞ்செய்ததுபோல் நாமும் நம்முடைய சகோதரர்களின் நன்மையின் பொருட்டு நம்முடைய உயிரையுங்கூட அவர்களுக்காகக் கொடுக்கவேண்டும்.

பரோபகாரத்தின்பொருட்டு தன்தேகமுபற்றி, அன்புபாராட்டல் முதலானதைத் தியாகம்பண்ணுதல் மெய்யான அன்புக்கு அடையாளமாயிருக்கிறது. தன் சுகத்தை மறந்து பிறர் பாக்கியத்தை நாடுதல் மிகவும் ஆசீர்வாதமுள்ளது. இப்படிப்பட்ட சிறந்த குணத்தை நாம் குடும்ப ஜீவியத்திலும், வேலைக்காரரை நடத்திவருவதிலும், பிறருடன் செய்யும் எவ்வித சம்பந்தமான நடத்தையிலும் காட்டலாம். மரித்தோரிலிருந்து கிறிஸ்து உயிர்த்தெழுந்த பரம ஜீவியத்தை நாம் அவருடைய முன்மாதிரியைப் பூரணமாய்ப் பின்தொடர்ந்து ஜீவிப்பதால் காட்டலாம். நாம் இடைவிடாது கிறிஸ்துவில் ஐக்கியமாயிருக்கும் ஜீவியம் துன்மார்க்கத்தில் கிடக்கும் உலகத்திலுள்ள ஜீவர்கள் யாவரையும் உன்னத பதவிக்குக் கொண்டுவரும்படி முயல்வதேயாம். அவ்வாறு மீட்கும் சிலாக்கியம்பெற்றவர்கள் மெய்யாய்ப் பாக்கியவான்கள்.

### 4. பரமபிதாவுடன் ஐக்கியம்
### (Oneness with the Heavenly Father)

'நாம் ஒன்றாயிருக்கிறதுபோல நீர் எனக்குத் தந்தவர்களும் நம்முடன் ஒன்றாயிருக்கும்படி உம்முடைய நாமத்தினாலே அவர்களைக் காத்தருளும்'. கிறிஸ்துநாதர் சாக்ஷாத் கடவுளுடன் கடவுளாயிருக்தார். உயிர்த்தெழுந்த பின்னரும் பிதாவுடன் வீற்றிருப்பவராகவும் வேதம் சொல்லுகிறது. அவர் விசேஷித்த தெய்வத் தன்மைபொருந்தியவராயும் பக்தஜன பரிபாலனராய் நித்தியம அவர் அனுகூலமாய்ப் பிதாவிடம நமக்காகப் பரிந்து மன்றாடும் மத்தியஸ்தராயிருப்பதாகவும் சொல்லியிருக்கிறது. அதுபோலவே கிறிஸ்துவும் தமது தொண்டர்கள் பிதாவோடும் தம்மோடும் ஒன்றாய் ஐக்கியமாயிருக்க விருப்பமுற்றிருக்கிறார். தற்பொழிவு சாபமாகையால கிறிஸ்தவன் அப்படி ஜீவிக்கப்படாது. மெய் பக்த குழாத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவரையொருவர் மனப்பூர்வமாய் நேசிக்கிறதைப பிறர் பார்க்கும்போது ஆச்சரியத்துக்கு இடமுண்டாய் அவர்களைப் பின்பற்ற உலகத்தாரை ஏவுமல்லவா?

(இன்னும் வரும்).

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

June, 1915. Registered—No. M. 163

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

" என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, [illegible]
ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." (யோவா[illegible]

Vol. XVI ஜூன் 1915

[stamp] 2[illegible] DEC 1915 MADRAS

## 'அவர் அதிகாலையில் இருட்டோடே எழுந்தார்'

'அவர் அதிகாலையில் இருட்டோடே எழுந்து புறப்பட்டு
வனாந்தரமான ஓரிடத்திற்குப் போய், அங்கே ஜெபம்பண்ணினார்'.
பரி. மாற்கு. 1: 35.

அதிகாலை ஜெபத்தியானத்தைப்பற்றி உவில்லியம் லா என்ற பக்தன் எழுதியிருக்கிறதைச் சுருக்கமாய் இங்கே எழுதுகிறேன்.

"சுகத்தோடிருக்கிற கிறிஸ்தவன் எவனும் அதிகாலையில் எழும்புவான் என்று நம்புகிறேன். சமுசாரிகளும் வியாபாரிகளும் வேலைக்காரரும் அதிகாலையில் எழும்புவதைவிட கிறிஸ்தவன் அதிகாலையில் எழும்புவது அதிக நியாயமாயிருக்கிறது.

1. வேலை செய்யவேண்டிய நேரத்தில் படுத்திருக்கிறவனைக் கண்டால் இயற்கையாய் நாம் அவனை அவமதிக்கிறோம். கர்த்தரைத் துதிக்க வேண்டிய நேரத்தில் ஒருவன் அசமந்தமாய் தூக்கத்திலும் இருளிலும் அடைபட்டுக் கிடக்கும்போது, பரலோகம் அவனை எவ்வளவாய் அவமதிக்கும் என்பதை இது நமக்குப் போதிப்பதாக.

2. ஜெபமானது தேவனிடத்தில் மகா சமீபமாய்ச் சேரும்வழியாகவும் அவரை மிகுதியாய் அனுபவிக்கக்கூடிய முறையாகவும் இருக்கிறது. அதுவே நமது ஆத்துமாவின் உன்னத வேலையாகவும், நமது சத்துவங்களை உபயோகிக்கக்கூடிய மேலான ஊழியமாகவும்,- பரலோக பக்தரை நாம்

பின்பற்றவேண்டிய நல்ல மாதிரியாகவும் இருக்கிறது. நமது இருதயம் தெய்வத்தால் நிரம்பி பரிசுத்த வாஞ்சைகளால் பொங்கிக்கொண்டிருக்கும்போது நாம் மனிதன் ஏறக்கூடிய மேலான படியில் ஏறியிருக்கிறோம். சர்வ பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறவருடைய சமுகத்தில் நிற்கிறோம். மரணம் மகிமையால் விழுங்கப்படுவதற்கு முன் இதற்கு மேலாக நாம் ஏறவதில்லை ஆனால் நித்திரையோ நமது சரீரத்திற்குரிய அற்பமும் மந்தமுமான அனுபவமாயிருக்கிறது. அதை நாம் உணர்வற்ற நிலைமையிலும் வீணான சொப்பனங்களிலும் கழிக்கிறோம். தூக்கம் பிடித்த மிருகங்களை நாம் அதிகமாய் விரும்புகிறதில்லை. ஆதலால் அதிகாலையில் தியானஞ் செய்யவேண்டிய நேரத்தை நித்திரையில் கழிக்கிறவன் ஆத்துமாவின் மேலான அனுபவத்தை வெறுத்து சரீரத்திற்குரிய அற்பமான நன்மையை நாடுகிறான்; தேவதூதருக்கு மகிமையாக எண்ணப்படுகிற வேலையைத் தள்ளி மிருகத்துக்கு முதலாய்க் குறைவாக எண்ணப்படுகிறநிலைமையைத் தெரிந்துகொள்ளுகிறான்.

3 அதிகாலைக்குப் பிந்தி எழும்புகிற அநேகர் எழும்பினவுடனே வேதம் வாசித்து தியானஞ் செய்கிறவர்களாய் இருக்கலாம். ஆனால் எழும்பினவுடன் தியானஞ் செய்வதினாலே பிந்தி எழும்புவது சரியாகிவிடுமா? ஏதாவது கொஞ்சநேரத்தை ஜெபத்தியானத்தில் செலவிடுவதினாலே அதிகாலையின் நல்ல நேரத்தை வீணாய்க் கழிப்பது மன்னிக்கப்படுமா? எழும்பினவுடன் ஜெபத்தியானஞ் செய்வது உன் கடமையாயிருப்பதுபோல, ஜெபத்தியானஞ் செய்வதற்கென்று எழும்புவதும் உன் கடமையில்லையா? ஜெபத்தியானஞ் செய்யப் பிந்திப்போவதினாலே உன் ஆண்டவருக்குச் சோம்பேறியின் ஜெபத்தியானத்தை ஏறெடுப்பது சரியா?

4. ஜெபத்தியானத்துக்கென்று அதிகாலையில் எழும்பாதவன் எந்த நற்காரியத்தையும் செய்யவேண்டியபடி செய்யவுமாட்டான், தன் ஜீவியத்தில் கையாடவேண்டிய சுயவெறுப்பைச் சரியானபடி கையாடவுமாட்டான். தேகத்துக்குக் கொடுக்கிற நீண்ட தூக்கம் நமது குணங்களுக்கெல்லாம் சோம்பலையும் மந்தத்தையும் கொடுக்கும் என்பது நிச்சயம். நித்திரைக்கு அடிமைப்பட்டவன் சோம்பலுக்கு அடிமையாயிருப்பான். முழு ஜாக்கிரதையோடு ஒரு நேரமும் இருக்கமாட்டான். சிற்றின்பத்துக்கும் சுகபோகத்துக்கும் ஏற்றவைகள் அவனுக்குப் பிரியமாயும் சுயவெறுப்புக்கும் கஷ்ட ஜீவியத்துக்கும் ஏதுவானவைகள் அவனுக்குப் பிரியமற்றவைகளாயும் இருக்கும். அதிகாலையில் தூங்குகிறவன் பகல் முழுவதும் தூங்காவிட்டாலும் தூக்கத்துக்கு இனமானவைகளையே விரும்புவான் என்பது நிச்சயம்.

5. அவசியமான அளவுக்கு மிஞ்சி தேக இன்பத்தைத் தேடுகிறவன் ஆவிக்குரிய இன்பங்களை அனுபவிக்கக்கூடிய அளவு அனுபவிக்கக் கூடாத



வனாயிருப்பான். போஜனமும் நித்திரையும் சரீரத்துக்கு அவசியமானவைகள். ஆனால் அவசியத்துக்கு மிஞ்சி அவைகளை இன்பத்துக்கென்று அனுபவிக்கத் தொடங்கும்போது அவைகள் மெதுவாய் ஆனால் நிச்சயமாய் ஆவிக்குரியவைகளின் பேரிலுள்ள இன்பத்தைக் குறைத்து ஆத்துமாவை உணர்வற்றதாக்கிவிடும்.

6. ஜெபத்தியானம் குறிக்கப்பட்ட அளவான நேரம் மட்டும் செய்துவிடவேண்டிய ஒரு காரியமாயிருக்குமானால் அதிகாலை நேரத்தை எப்படிச் செலவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் ஜெபதியானம் மணித்திட்ட அளவுக்குள் அடங்கிய காரியமல்ல. மனித ஆவி தேவ ஆவியைச் சந்தித்து அகமகிழ்ந்து அனல் மூழுவதே ஜெபதியானத்தின் நோக்கம். தேக சொகுசும் இவ்வித ஜெபதியானமும் ஒன்றுக்கொன்று பொருந்தமாட்டாதென்பது நிச்சயம். சகலவிதமான சுயவெறுப்பு இவ்வித தியானத்தோடு பொருந்துமேயல்லாமல் மெல்லின ஜீவியம் அற்பமாகிலும் இதற்கு ஒத்துக்கொள்ளவேமாட்டாது.

7. அவசியமற்ற தூக்கத்துக்கு வரும் சோதனையை மேற்கொள்ள ஏலாதவன் மற்ற எந்தச் சோதனையையும் ஜெயிக்க ஏலாதவனாயிருப்பான். அவன் தன்பேரில் என்ன ஜெயம் பெற்றிருக்கிறான் என்பதைச் சோதித்துப் பார்க்கட்டும். எந்த வலது கையைத் தறித்து எறிந்துவிட்டான்? எந்த வலது கண்ணைப் பிடுங்கி எறிந்துவிட்டான்? சமுசாரி வேலைக்குப் போகிற நேரத்தில் ஜெபதியானத்துக்கு எழும்பத்தக்கதாகத் தன்னைத்தானே கண்டிப்புப் பண்ணிக்கொள்ளாதவன், வேறே எந்த விஷயத்தில் தன்னைக் கண்டிப்பாய் நடத்திவிடுவான்? துணிகரமான பாவத்திலின்று விலகிக்கொள்ள முதலாய் அவன் தன்னைக் கண்டிப்புப் பண்ணிக்கொள்வான் என்பது நிச்சயமல்ல.

8. அதிகாலையில் செய்ய வேலையில்லாததினால் பிந்தி எழும்புகிறோம் என்று பலர் சொல்லுவார்கள். ஜெபதியானம் உலக வேலையைவிட மகா முக்கியமான வேலை என்று இவர்கள் எண்ணுகிறதுமில்லை, இவர்கள் செய்யவேண்டிய மகா முக்கியமான வேலை இன்னதென்று இவர்கள் அறியவுமில்லை. தங்கள் கடின இருதயத்தை மாற்றி ஆவியானவரால் வரும் ஆத்தும இன்பம் முழுவதையும் இவர்கள் பெறவேண்டியதாயிருக்கிறது. ஆனால் இது எவ்வளவு பெரிய வேலை என்பதை இவர்கள் அறியாதிருக்கிறார்கள்.

9. நமது ஆண்டவர் அதிகாலையில் எழும்பி இருட்டோடே வனாந்தரத்துக்குப் போய் ஜெபித்தார். சில நாட்களில் இராமுழுவதையும் அவர் ஜெபத்தில் பின்னிட்டார். அன்னாள் தீர்க்கதரிசி மிகுந்த வயசுகாலத்தில் தேவாலயத்தைவிட்டு நீங்காமல் இரவும் பகலும் உபவாசித்து ஜெபம்

பண்ணி ஆராதனை செய்துகொண்டிருந்தான். ஆதி கிறிஸ்தவர்கள் பகலில் ஆராதனை செய்ததோடு பல நூற்றாண்டுகளாய் நடுஇராத்திரியில் ஆலயங்களில் கூடி ஆராதித்தார்கள். அவர்களுடைய மனதின் போக்கை இது காட்டுகிறதல்லவா? ஜெபிக்கக்கூடிய நேரத்தையும் நித்திரையில் பின்னிட்டால் உன் போக்கு இதற்கு விரோதமாயிருக்கிறதாகத் தெரிகிறதே! அவர்கள் ஜெபதியானத்துக்குப் புதுநேரங் கண்டுபிடித்ததினால் தியானத்தின் ஆவி அவர்களில் பலமாய்க் குடிகொண்டிருந்ததென்றும், நீ நியாயமான தியான நேரத்தை விலக்கிப்போடுவதாய் உன்னில் ஜெபதியானத்துக்குரிய ஆவி குறைந்துபோயிருக்கிறதென்றும் தெரிகிறதல்லவா! ஆதிக்கிறிஸ்தவர்கள் எக்காலத்திலுள்ளவர்களுக்கும் விழிப்பிலும் ஜெபத்திலும் சயவெறுப்பிலும் முன்மாதிரிகளாய் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

10. வேதத்தைப்பார்க்கையில் கிறிஸ்தவர்கள் ஆண்டவரிடத்திலிருந்து ஜீவனையும் ஆவியையும் சந்தோஷத்தையும் பெற்று, உலக ஆசைகளையும் சரீர இச்சைகளையும் வெறுத்தவர்களாய் இனிவரும் உலகத்துக்கும் அங்கே கொடுக்கப்படும் புதிய சரீரத்துக்கும் ஆயத்தப்படுகிறார்கள் என்று சொல்லியிருக்கிறது. அவர்கள் பரிசுத்த ஆவியின் ஆலயங்கள், வெளிச்சத்தின் பிள்ளைகள், விழித்திருக்கும் கன்னியாஸ்திரிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். ஜெபவாஞ்சையற்றவர்கள் இப்படி அழைக்கப்பட்ட பாத்திரராவது எப்படி? வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற அளவாக நமது மார்க்கத்தின் ஆவி நம்மைப் பற்றிப்பிடிக்குமானால் நாம் இப்படிப்பட்ட சோம்பலான நித்திரைக்கு இடங்கொடுப்போமோ என்று யோசித்துப்பாருங்கள்.

11. அதிகாலையில் இருட்டோடே எழும்புவது சயவெறுப்புக்கு உதாரணமாகும், சரீர இன்பத்தை வெறுக்கிற முறையாகும், காலத்தை ஆதாயம்பண்ணுவதற்கேதுவாகும், ஜெபத்தின் ஆவியைப் பெறுவதற்கு அனுகூலமாகும். ஆதலால் இதினால் மிகுந்த பிரயோஜனம் உண்டாகும். ஜீவியத்திலிருந்து சோம்பலையும் மெல்லினத்தையும் அகற்றுவதற்கும், உன்னை எல்லா விஷயத்திலும் நீயே ஆண்டு நடத்துவதற்கும் ஏதுவாகும்.

12. எல்லாவற்றிலும் மேலாக, பரிசுத்த ஆவியின் அருள்மாரியைப் பெறுவதற்கு இது உன்னை ஆயத்தப்படுத்தும். நீ உன் ஜீவியத்தினின்று சோம்பலை அகற்றி தேவனை அதிகமாய்த்தேடவும் உன் ஜீவியத்தை ஒழுங்குப்படுத்தவும் ஆரம்பிக்கும்போது மெய்யாகவே தேவ ஆவியானவர் உனக்கு உதவிசெய்ய வருவார். இவ்வித கவலையோடு தண்ணீர் பாய்ச்சப்படுகிற ஜீவியத்தில் சுவாமி பெரிய விளைச்சலைக் கட்டளையிடுவார் என்பது நிச்சயம். அப்பொழுது உன் ஆத்துமா அனல் மூண்டு எழும்பும். உன் ஆவி பரவசமாகும். உன் வாய் உணர்வோடு பேசும். உன் ஜெபம்



ஆரோக்கியத்தைக்கொண்டுவரும். பக்தரும் பரிசுத்தவான்களும் ஊக்கமான உத்தம தியானத்தால் பெற்ற பேராசீர்வாதங்களை நீயும் பெறுவாய். அப்போது ஏதாவது ஒருவேளை தெய்வ சமுகம் உன்மேல் விசேஷமாய் நிழலிடும், நீ பரமாகருக்குள் புகுந்துவிட்டதுபோலிருக்கும், அப்போது வார்த்தைகளால் விஸ்தரிக்கக்கூடாத ஆத்தும ஆனந்தத்தால் ஆண்டவரை ஆராதிப்பாய்'.

சகோதரனே, இதுமுதல் அதிகாலையில் இருட்டோடே எழுந்து ஜெபத்தியானஞ் செய்ய சுவாமி உன்னை ஏவுவாராக.

## மேலான ஜெயம்

(தொடர்ச்சி.)

'வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகம்'

எபே. 3: 20.

இதற்கு முந்தின விண்ணப்பங்களில் பரிசுத்த ஆவியினால் நாம் உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படுவதைக் குறித்தும், விசுவாசத்தின் மூலமாய் அருமை இரட்சகர் நமது இருதயங்களில் வாசஞ்செய்வதைக் குறித்தும் சுருக்கமாய்ப் பார்த்தோம். இனிவரும் இரண்டு விண்ணப்பங்களையும் நாம் ஏற்றபடி தியானித்து தேவாசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள தேவன் நமக்குக் கிருபை செய்வாராக.

3. மூன்றாவது, அறிவுக்கெட்டாத தேவஅன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவேண்டுமென்று ஜெபிக்கிறார். அறிவுக்கெட்டாததை அறிவதெப்படி? தேவன் அறிவுக்கெட்டாதவராயிருப்பதுபோல அவருடைய அன்பும் அறிவுக்கெட்டாததாகவேயிருக்கிறது. ஓர் பாடத்தை நாம் படித்துமுடிப்பதுபோல் தேவனுடைய அன்பின் பூரணத்தை நாம் அறிந்துவிட்டோம் என்று சொல்லக்கூடியவர்களல்ல. இயல்பாய் அன்பற்ற நாம் அவருடைய அன்பை அறியலாம், அதில் தேறலாம், அதில் வளரலாம், அதில் பெருகலாம், இம்மையிலும் மறுமையிலும் அவ்வதிசய அன்பை அறிந்துகொண்டே போகலாம். ஆகிலும் அது ஒருபோதும் அறிந்து முடித்துவிடக்கூடிய அன்பல்ல. ஆகையால் அது அறிவுக்கெட்டாத அன்பென்றும் அப்போஸ்தலன் சொன்னது சரியே.

அது அறிவுக்கெட்டாததாயினும் அதை அறிந்து வளர்ந்துகொண்டே போகத்தக்க வழியை அப்போஸ்தலன் காண்பிக்கிறார். முதலாவது அன்பிலே வேரூன்றி நிலைபெற்றவர்களாயிருக்கவேண்டும் என்கிறார். சிலருடைய அன்பு முள்ளிற்பற்றின நெருப்புக்குச் சமானமாயிருக்கிறது.

முள்ளில் நெருப்புப்பற்றிக்கொண்டால் எவ்வளவு பிரகாசமாய்த் தோன்றும்! எவ்வளவு சத்தம் அதிலே கேட்கும்! ஆனாலும் பானையில் சூடேறு முன்னே அவைகள் அவிந்துபோம். 'முள்ளிற்பற்றின நெருப்பைப் போல் அணைந்துபோவார்கள்' என்று சங்கீதக்காரன் சொல்லுகிறார். விசேஷித்த கூட்டங்களில், விசேஷித்த சமயங்களில் இவர்களுடைய உள்ளம் அன்பினால் பொங்குவது மெய்தான். ஆனாலும் அவ்வுணர்ச்சி வெகுகாலம் நிலைத்திருக்கிறதில்லை. அவர்களில் பற்றின அன்பின் அக்கினி மற்றவர்களுக்கு அனல் கொடுக்குமுன்னே அவிந்துபோகிறது. அவர்களுடைய அன்பு 'காலையில் காணும் மேகத்தைப்போலவும் விடியற்காலையில் ஒழிந்துபோகிற பனியைப்போலவும்' ஒழிந்துபோகிறது.

இன்னும் சிலருடைய அன்போ கற்பாறை நிலத்தில் முளைத்த செடிக்கு ஒப்பாகவிருக்கிறது. அது சீக்கிரம் முளைத்தபோதிலும் ஆழமாக வேர் செல்லாதபடியால் உலர்ந்து பட்டுப்போகிறது. இவர்கள் தேவன்பை ருசிக்கிறார்கள். அவ்வன்பில் சிலகாலம் மகிழுகிறார்கள். ஆகிலும் பரீட்சைகாலத்தில் நிலைநிற்கக்கூடாமல் பின்வாங்கிப்போகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் அறிவுக்கெட்டாத அன்பை அறிந்துகொள்ளும் ஜீவியத்தில் வல்லவர்களாவதெப்படி? உயரமும் விசாலமுமான ஒரு பெரிய மரத்தைக் காண்கிறோம். அது அவ்வளவு பெரிய மரமானதெப்படி? அது சிறு செடியாயிருந்தகாலமுதல் அதைப் பிடுங்குவதும் நட்டுவதும், பிடுங்குவதும் மறுபடி நட்டுவதுமாகவேயிருந்தால் இவ்வளவு பெரிய மரமாகுமா? அது முளைத்துத் தரையில் வேரூன்றினகாலமுதல் அங்கேயே அது நிலைபெற்றிருந்தபடியினால் அல்லவா இவ்வளவு பெரிய மரமாயிற்று. சகோதரரே! எக்காலத்திலும் எந்த நிலைமையிலும், அவருடைய அன்பை ருசித்த நாம் அந்த அன்பிலேயே நிலைத்திருந்தால்மாத்திரம் அறிவுக்கெட்டாத அன்பை அறிய வல்லவர்களாவோம். ஆகையால்தான் 'என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்' என்று இரட்சகர் சொன்னார். 'தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்' என்று யூதா எழுதினார். அன்பில் வேரூன்றி நிலைபெற்றிருந்த அப்போஸ்தலன் 'நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு என்றும் நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்' என்று ஜெயகீதம் பாடினார். எந்த மேலான ஜீவியமும் பிரயாசமில்லாமல் கிடைக்கமாட்டாது.

இரண்டாவது, சகல பரிசுத்தவான்களோடுங்கூட அறிந்துகொள்ள வேண்டும் என்கிறார். தேவன்பின் பெருக்கம் ஒருவனுக்கே வெளிப்பட்டதல்ல. அவருடைய அன்பை ருசித்த பரிசுத்தவான்களுடைய அனுபவம் நட்சத்திரத்திற்கு நட்சத்திரம் மகிமையில் வித்தியாசப்பட்டதுபோலிருக்கிறது. கிறிஸ்துவின் ஜீவியத்தை நாலு சுவிசேஷகர் எழுதினார்கள். ஒவ்



வொன்றினுடைய விசேஷமும் அருமைதான். கர்த்தரின் பல தாசர்கள் நிருபங்களை எழுதினார்கள். ஒன்றுக்கொன்று தாழ்வானதல்ல எல்லாம் அருமையாகவும் பிரயோஜனமாகவுமேயிருக்கிறது. ஒரு பட்டணத்தைப் போய்ப்பார்க்கிறவன் அதின் சகல காரியங்களையும் அறிந்துகொள்ளக்கூடியவனல்ல. ஒருவனுடைய புத்திக்கும் பார்வைக்கும் தோன்றாத விஷயங்கள் இன்னொருவனுக்கு வெளிப்படக்கூடும். அவனும் கவனியாத பல காரியங்களை வேறொருவன் கவனித்துச் சொல்லுவான். இப்படிப் பலருடைய சாட்சியின் மூலமாய் அப்பட்டணத்தைப்பற்றி நாம் அதிகமாய் அறிந்துகொள்ளக்கூடியதாயிருக்கிறது. தேவனோடு நெருங்கிச் சகவாசம் செய்யும் பிள்ளைகளுடைய அனுபவமும் இதுவே. கர்த்தருக்குப்பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளும்போது அவர்களுடைய அனுபவம் அறிவில் விர்த்தியடைவதற்கும் ஜீவியத்தில் பலப்படுவதற்கும் எவ்வளவு ஒத்தாசையாகயிருக்கிறது!

மூன்றாவது, கிறிஸ்துவின் அன்பை உணர்ந்துகொள்ளவேண்டும் என்கிறார். கிறிஸ்துவில் வெளிப்பட்டது தேவனுடைய அன்பே. இயல்பாய் நம்மில் அன்பில்லை. அவர் நமக்குப்பாராட்டின அன்பை அறிந்துணர்வதினாலே நமக்கு அவர்பேரில் அன்புண்டாகிறது. கிறிஸ்துவின் அன்புக்கு அகலம், நீளம், ஆழம், உயரம் உண்டென்று பேசுகிறார். இதைப் பலரும் பலவிதமாய் அருத்தப்படுத்துகிறதுண்டு. வேதத்திற்குப் பொருந்தின அருத்தமே நமக்குப்போதும். சர்வ வல்லவருடைய சம்பூரணத்தைப்பற்றி யோபின் புஸ்தகத்தில்: அது வானத்தைப்பார்க்கிலும் உயரமும், பாதாளத்தைப்பார்க்கிலும் ஆழமும் பூமியைப்பார்க்கிலும் நீளமும், சமுத்திரத்தைப்பார்க்கிலும் அகலமுமானதென்று சொல்லியிருக்கிறது. அகலத்தில் எத்தேசத்தார்களையும் எப்பாஷைக்காரரையும் எந்த நிலைமையிலுள்ளவர்களையுஞ்சேர்த்து அணைத்துக்கொள்ளக்கூடிய அவ்வளவு விசாலமானதும்; நீளத்தில் அது நேற்றுமுந்தாம்நாள் உண்டானதாயிராமல் அநாதிகாலமுதலுள்ளதும் இடையில் நின்றுபோகாமல் என்றென்றும் நிலைத்திருக்கிறதுமான நித்திய அன்பாகவும்; ஆழத்தில் அது அக்கிரமத்திலும் பாவத்திலும் அமிழ்ந்து, நிற்கநிலையில்லாமல் நிலையாத ஆழத்தில் அமிழ்ந்துபோன பாவிகளைக் கைதூக்கி இரட்சிக்கும்படி ஆழத்திலிறங்கின அதிசய அன்பாகவும், உயரத்தில் அது தாழ்விலிருந்த அற்பர்களாகிய நம்மை விண்ணுலகத்திற்கு உயர்த்தி மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டின மகா உன்னத அன்பாகவும் இருக்கிறது. இவ்விதமாய் நாம் அன்பில் வேரூன்றி நிலைபெற்று, சகல பரிசுத்தவான்களோடு சேர்ந்து, கிறிஸ்துவில் விளங்கிய அளவற்ற அன்பை எப்பொழுதும் தியானித்து உணருவதினால், அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகக்கூடுமென்று பார்க்கிறோம்.

4. நாலாவது, தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படும்படியாக ஜெபிக்கிறார். இது மற்றவைகளைப்பார்க்கிலும் உன்னதமான விண்ணப்பம்போல் தோன்றுகிறது. தேவன் மகா பெரியவர்! அவருடைய பரிபூரணம் எவ்வளவோ பெரியது! அந்தப் பரிபூரணத்தால் நாம் நிரப்பப்படுவது கூடிய காரியமாவென்று நினைக்கலாம். சமுத்திரம் மகா பெரிதுதான். ஒரு தண்ணீர்க்குடத்தைச் சமுத்திரத்தில் அமிழ்த்தினால் குடம் நிறைந்துபோகுமேயல்லாமல் சமுத்திரம் வற்றிப்போகாது. தேவன் தமது தன்மையிலும் ஆசீர்வாதங்களிலும் வற்றாச்சமுத்திரம்போலிருக்கிறார். அவருடைய பரிபூரணத்தினால் எண்ணிறந்த பரிசுத்தவான்களை அவர் நிரப்பினாலும் அவருக்குள் அவர்கள் நிரப்பப்பட்டவர்களாயிருப்பார்களேயன்றி அவருடைய பரிபூரணம் குறையாது. இந்த மேலான ஜீவியத்தைக் காண்பிக்கும் அநேக வாக்கியங்கள் உண்டு. 'உங்கள் பிதா பூரண சற்குணராயிருப்பதுபோல நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்' என்றும் 'இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத்தப்பி திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகவேண்டும்' என்றும், 'தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது . . . அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது விசுவாசிகள் அவரவர் பெற்றுக்கொள்ளக்கூடிய அளவுக்குத்தக்கபடி தேவன் அவர்களை நிரப்புகிறார். நாம் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல் நமது ஜீவியத்தாலும் ஊழியத்தாலும் அவருடைய திருநாமத்தை மகிமைப்படுத்தவேண்டுமென்பது தேவனுடைய பூரண வாஞ்சையாயிருக்கிறது. இந்த வாஞ்சையை அவர் தமது குமாரன் மூலமாய் நம்மில் நிறைவேற்றிவருகிறார். நாம் நம்மிலே ஒன்றுமில்லாதவர்களென்றாலும் அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபையைப் பெற்றுக்கொள்ளக்கூடிய பெரிய சிலாக்கியம் நமக்கு அருளப்பட்டிருக்கிறது.

அப்போஸ்தலன் வேண்டிக்கொண்ட இவ்வளவு பெரிய ஆசீர்வாதங்கள் தங்களுக்குக் கிடைக்கக்கூடியதோவென்று எபேசு சபையார் நினைக்கலாம். எபேசு சபையாரே! நீங்கள் பெற்றுக்கொள்ளக்கூடாத மிஞ்சின காரியங்களுக்காக நான் ஜெபம்பண்ணத்துணிந்தேன் என்று நினைக்கிறீர்களோ? அப்படி நினைக்கவேண்டாம். நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிறதற்கு அவர் வல்லவராயிருக்கிறாரென்று அறிந்துதான் இப்படி ஜெபிக்கிறேன். என்று சொல்லி அந்த நிச்சயத்தினாலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரிக்கிறார்.

சகோதரரே! இது எவ்வளவு மேலான ஆசீர்வாதங்கள் நிறைந்த விண்ணப்பங்கள் பார்த்தீர்களா? ஒவ்வொரு விண்ணப்பமும் ஒரு மோட்சம்



போலிருக்கிறதே. அவைகளில் ஒரு விண்ணப்பம் நம்மில் நிறைவேறினாலும் நமது ஜீவியம் எவ்வளவோ ஆசீர்வாதமாயிருக்குமே. இந்த அருமையான ஜெபத்தை நமது சொந்த ஜெபமாக்கி எப்பொழுதும் ஜெபித்துவருவோமானால் பவுலின் தேவன் நமக்கு இரங்காதிருப்பாரா?

என் அருமைப்பிதாவே! நான் உம்முடைய ஆவியினாலே என் உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து என் இருதயத்தில் வாசமாயிருக்கவும், நான் அன்பிலே வேரூன்றி நிலைபெற்றவனாகி சகல பரிசுத்தவான்களோடுங்கூட கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து, அறிவுக்கெட்டாத அந்த அன்பை நான் அறிந்துகொள்ள வல்லவனாகவும், தேவரீருடைய சகல பரிபூரணத்தாலும் நான் நிரப்பப்படவும் நீர் உமது மகிமையின் ஐசுவரியத்தின்படியே எனக்கு அனுக்கிரகம்பண்ணவேண்டுமென்று என் அருமை இரட்சகர் மூலமாக வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

எஸ். பரமானந்தம்.

## மனலய சாதனம்

(தொடர்ச்சி)

### 5. கடவுளின்பேரில் சார்பு (Dependence upon God.)

குமாரன் தாமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை. பிதா எதைச்செய்கிறாரோ அதையே குமாரனும் செய்கிறார். அப்படியே அவருடைய தொண்டர்களும் அவர் சித்தப்படி அவர் செய்த மாதிரியாய்ச் செய்ய விரும்புகிறார்கள். பிதாவின் சித்தத்தை அறிய விருப்பமுற்று இராமுழுவதும் ஜெபத்தில் தரித்திருந்தார். அவர் அடியார்களாகிய நாமும் அவர் சித்தம் இன்னது என்பதை எல்லா விஷயத்திலும் அறிந்து அப்படியே செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர் சித்தம் இன்னது என்பது வேதத்திலும் சுவிசேஷத்திலும் தெளிவாய்க் காட்டப்பட்டு இருக்கிறது. அப்படித் தெளிவில்லாத மற்ற விஷயத்திலும் அவர் நமக்குத் தெளிவாய்க் காட்டவேணுமென்று நாம் பூரண விசுவாசத்துடன் ஜெபத்தில் தரித்திருந்தால் அவர் அதைக் காட்டுவார். மனுஷன் சுய சித்தத்தின்படிசெய்ய நாடுகிறான். அப்போது அவனுக்குக் கவலையும் துன்பமுமுண்டாகிறது. ஆனால் பூரணமாய் அவர் சித்தத்தை நாடி அதன்படி செய்யும்போது அவனுக்குக் கவலையுமில்லை, உத்தரவாதமுமில்லை. அந்த உறுதியான நம்பிக்கையே சரியானதைச் செய்ய நமக்கு விருப்பத்தையும் சக்தியையுங் கொடுக்கிறது. நம்முடைய இரட்ச

கரே நமக்கு முன்மாதிரியாக இருக்கட்டும். அவர் நம்மில் கிரியை செய்வார். அப்போது அது நம்முடைய ஆத்துமாவுக்குச் சமாதானத்தையும் இளைப்பாறுதலையுங் கொடுக்கிறது. பரம பிதாவே எனக்கு எல்லாமாயிருக்கிறார் என்று நம்பிப் புத்திரன் பிதாவுடன் ஜீவிக்கிறதுபோல நாமும் ஜீவிக்கவேண்டும். இந்தப் பாடத்தைப் படிக்கும்படி எங்களுக்குப் போதித்தருளும். உம்முடைய ஒரே குமாரனை நீர் பழக்குவித்ததுபோல் நான் செய்ய வேண்டிய எல்லாவற்றையும் எனக்குக்காட்டி என்னை வழிநடத்தியருளும்!

## 6. அன்பு. (Love.)

'நான் உங்களை நேசித்ததுபோல் நீங்களும் ஒருவரையொருவர் நேசியுங்கள்' (யோவான் 15: 12). நிமிஷாநிமிஷம் பரிசுத்த ஆவி மூலமாய் நான் உங்களுக்கு நேசத்தைப் பொழிகிறதுபோல் நீங்களும் அதே அளவாய் உங்கள் முழு பலத்துடன் ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டுங்கள். அன்பானது தன் நயத்தை நாடாமல் பிறர் நன்மையைக் கருதுகிறது. அன்பு சினமடையாது, கோபங்கொள்ளாது, இறுமாப்பாயிராது. 1. கொரி. 13. தேவன் நமக்கு எப்படி எல்லா விஷயத்திலும் அன்புபாராட்டுகிறாரோ அப்படியே நாமும் ஒருவர்க்கொருவர் சகோதர ஐக்கியத்தைக் காட்டி நன்மை செய்கிறவர்களாயிருக்கக்கடவோம். பிறனிடத்தில் அன்பாயிரு என்ற கட்டளையைச் சிரமேற்கொண்டு தேவாவியின் பலத்தினால் அதைப் பிறருக்கு வெளியாகவும் காட்ட முயலக்கடவோம்.

ஒவ்வொரு நிமிஷமும் என் அருமை நேசருடன் ஜீவிக்கிறேன் என்ற அனுபவத்தை எனக்குக் கொடுத்தருளும்: உம்முடைய பரிசுத்த ஆவி என்னில் வாசமாயிருந்து என்னை வழி நடத்தக்கடவது! தன்னயமாகிய பழைய சுபாவம் மரிக்கக்கடவது! நீர் என்னை நேசிக்கிறதுபோல நான் பிறனை நேசிக்க எனக்குச் சக்தியைத்தாரும்!

## 7. மன்னிக்கும் சுபாவம்

## (The Forgiving Disposition.)

கிறிஸ்து உங்களுக்கு எப்படி மன்னித்தாரோ அப்படியே நீங்கள் ஒருவருக்கொருவர் பொறுமையாயிருந்து அவர்கள் செய்த தப்பிதங்களை அவர்களுக்கு மன்னியுங்கள்.

கிருபையினால் தேவனிடமிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதங்களில் மன்னிப்பு பிரதானமானது. அது மகா மகிமைபொருந்தியது. பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டு தாம் மீட்கப்பட்டோமென்ற உண்மையைப் பரிசுத்தவான்கள் இம்மையிலும் மறுமையிலும் மறக்கமுடியாது. அவர்கள் அன்பை அனல்மூட்டிவிட இதைப்பார்க்கிலும் பலமானது வேறொன்றுமில்லை. மன்னிக்குங் கிருபைக்கு நாம் எல்லாரும் பெருத்த



கடனாளிகள். வேதாகமத்தை நாம் நன்றாய்க் கவனித்தால், தேவன் நமக்கு மன்னிப்பு அருளும் தன்மை நாம் பிறருக்கு மன்னிக்கும் சுபாவத்துடன் பிரிக்கப்படாமல் சம்பந்தப்பட்டிருக்கிறது. அவரைப்போல் நாமும் மனிதருக்கு மன்னிக்கவேண்டும். பிறருக்கு நாம் மன்னியாவிட்டால் தேவனும் நம்முடைய பாவத்தை மன்னிக்கவில்லையென்பதற்கு அது அத்தாக்ஷியாயிருக்கிறது. மன்னிக்கும் இலக்ஷணம் நம்முடைய இருதயத்திலும் ஜீவியத்திலும் இருக்கவேண்டும். சிலசமயங்களில் மற்றவர்கள் நம்மை அவமதித்தார்கள், கோபமூட்டினார்கள், அவமரியாதை செய்தார்கள் என்று அவர்கள் பேரில் விரோதத்தை நம்முடைய மனதில் பேணிவைக்கிறோம். அது சரியல்ல. மனதாரப் பிறருக்கு மன்னிக்கும் சுபாவம் சந்தோஷத்தைத் தரும். இலவசமாய் அவருடைய கிருபையினால் கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள் என்று ரோமர் 3: 24ல் சொல்லப்பட்டிருக்கிறது. இதுதான் கிறிஸ்துமார்க்கத்தின் மூலோபதேசம். அதாவது இலவசமாய் இரக்ஷிப்புக்கிடைக்கிறது என்ற விசுவாசந்தான் கிறிஸ்தவ ஜீவியத்திற்கு அஸ்திபாரமாயிருக்கிறது. ஆனால் அதுமாத்திரம் போதாது. விசுவாசத்தின்பின் கிரியையும் காணப்படவேண்டும். கிரியைதான் அஸ்திபாரத்தின்மேல் கட்டப்படும் மாளிகையாய் இருக்கிறது. யாக்கோபு 2: 17-ல் கிரியையில்லாத விசுவாசம் செத்த விசுவாசம் என்று சொல்லியிருக்கிறது. உத்தம ஜீவியத்திற்கு கிரியை அதிக அவசியமானது என்பதையே இவ்விக்ஞாபனத்தில் வற்புறுத்திகாட்டியிருக்கிறேன்.

முடிவுரை. எல்லாச் சமயங்களிலும் சன்மார்க்கமாய் நடப்பது உத்கிருஷ்டமென்று சொல்லியிருப்பதாக ஆரம்பத்தில் எடுத்துக்காட்டியிருக்கிறது. ஆனால் சன்மார்க்க ஒழுக்கத்தைப்பற்றி கிறிஸ்து சமயத்தில் சொல்லியிருப்பதற்கும், இதர சமயங்களில் சொல்லியிருப்பதற்கும் ஒரு வித்தியாசமுண்டு. கிறிஸ்து சமயத்தில் ஆதியோடந்தமாய்ப் பாவ கிருத்தியங்கள் கண்டிக்கப்பட்டுவந்திருக்கின்றது. தேவ கட்டளைகளைக் கைக்கொள்வதே மகா விசேஷமான கடமையாகக் காட்டியிருக்கிறது. உம்முடைய கட்டளைகள் நித்திய ஜீவன் என்று கிறிஸ்துபகவான் போதித்திருக்கிறார். மற்றச் சமயங்களில் பக்தி, சுத்தம், நித்திய கர்மானுஷ்டானங்கள் விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருந்தாலும் தேவகட்டளையை மீறினால் நிச்சயமாய்த் தண்டனை வரும் என்பதையும், அதைக் கைக்கொண்டால் இம்மையில் மனப்பாக்கியமும் மறுமையில் நித்தியானந்தமும் கிடைக்குமென்றும் வற்புறுத்திச் சொல்லவில்லை. இதை நன்குவிளக்கிக் காட்டும்பொருட்டு கிறிஸ்துமார்க்கத்தில் தேவனால் கொடுக்கப்பட்ட பத்துக் கட்டளைகளும் எவ்வளவாய் மதிக்கப்பட்டது என்பதை எடுத்துக்காட்டுகிறேன்.

ஆதியில் தேவன் தமக்கு ஒரு ஆலயத்தைப் பரலோகத்திலிருக்கிற மாதிரிப்படி பூலோகத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் உபாசனை செய்யும் பொ

ருட்டு கட்டும்படி கட்டளையிட்டிருந்தார். அதின் பிரகாரம், மண்டபம், மூலஸ்தானம் அல்லது பிரகாரம், பரிசுத்தஸ்தலம், மகா பரிசுத்தஸ்தலம் என மூன்று பாகங்கள் இருந்தது. அதில் மகா பரிசுத்த ஸ்தலத்தின் மத்தியில் உடன்படிக்கைப் பெட்டியில் பத்துக்கட்டளைகள் வைத்திருந்தது. அதன் இருபக்கங்களிலும் கேருபின்கள் வைக்கப்பட்டிருந்தன. அந்தப் பெட்டியின்மேல் தேவமகிமை பிரசன்னமாய் இருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் அடங்கிய உன்னத உத்தம போதனை என்னவென்றால்: தேவ கட்டளைகள் தேவ தன்மையாயிருக்கிறது. அதுவே தேவ இலக்ஷணம். அதைக் கைக்கொள்ளுகிறவர்கள் தேவ தன்மையடைகிறார்கள்.' என்பதே பரலோகத்தில் தேவதூதர்கள் தேவ சன்னிதானத்தில் நின்று கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று ஆர்ப்பரித்துக்கொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் பாவ கிருத்தியமுள்ள எந்த மனுஷனும் பரிசுத்த தேவ சந்நிதியில் கிட்டமுடியாதென்பது பரிஷ்காரமாயிருக்கிறது.

இந்த முக்கிய சத்தியத்தை ஜனோபகாரமாய் பரிஷ்காரமாய் விளக்கிக் காட்டும்பொருட்டே கிறிஸ்து பகவான் பூலோகத்தில் மனுஷாவதாரம் செய்தார். தமக்கு விரோதிகளாயிருந்தவர்களின் திரள்கூட்டத்தைப்பார்த்து என்னில் பாவம் உண்டென்று உங்களில் யார் சொல்லக்கூடும் என்று கேட்டார் இதனால் அவர் பாவமற்ற புண்ணிய புருஷனாய் ஜீவித்தார் என்பது விளங்குகிறதல்லவா? இதை விசேஷமாய் விளக்கிக்காட்டும் எண்ணத்துடன்தான் அவருடைய பரம குணங்களில் சிலவற்றை யெடுத்துக் காட்டி விஸ்தரித்திருக்கிறேன். அது மனுஷர் அனுஷ்டானத்திற்கு ஓர் சிறந்த முன் மாதிரி. ஆகையால், இதை வாசிக்கிற சிநேகிதர்களே! மேற்கண்ட அவருடைய முன்மாதிரியை பின்பற்றி நித்திய இரக்ஷிப்பைப் பெற வேண்டுமென்று உங்களை விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

'ஜீவன் முத்தருக்கு நல்குந் திவ்விய சிந்தை ஞானம்
மேவருங் குணங்க டீர்க்க விசுவாசம் விரதஞ் சீல
தாவருங் நலங்களெல்லாந் தந்தருள் புரியுந் தூயல்
தேவனல்லாவி யுள்ளந் திகழ்கா ஜெபித்தல்வேண்டும்'
'அந்தரங்கத்தில் பாவ மருவருப் பாதல் வேண்டும்
புந்தியிற் புனிதமாகி புதுப்பிறப் படைதல் வேண்டும்
சொந்தநீதியினு ரோபந் துறந்துமெய் விசுவாசத்தால்
சந்ததங் கிறிஸ்துயேசு நீதியைத் தழுவல் வேண்டும்.'

A. S. அப்பாசாமிபிள்ளை,



## No. 5.

## 'இவ்விதமாக இயேசு தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்'

பரி. யோவான் 2: 11.

இது ஓர் விசேஷித்த சம்பவம். கிறிஸ்துநாதருடைய ஜீவிய சரித்திரத்தில் இந்த ஒரு விசைமாத்திரம் அவர் தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார். விளங்கப்பண்ணினார் என்பதாகச் சொல்லியிருக்கிறது மெய்தான். அவர் மறுரூபமானபோது:-அவருடைய திவ்விய மகிமை வெளிப்பட்டது. அவருடைய மகிமையைக் கண்டோம் அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது. என்று (யோவா. 1: 14) சொல்லததக்கதாக—அவருடைய மகிமைப் பிரகாசம் மூன்று சீஷர்களுக்குப் பிரத்தியட்சமாய்க் காணப்பட்டது என்றாலும் அந்தச் சமயத்தில் அது தானாய், சுயமாய், இயல்பாய் தென்பட்டது என்று சொல்லலாம். நமது ஆண்டவர் அப்பொழுது கிரியையினாலே அதைக் காண்பித்தார், வெளிப்படுத்தினார் என்று நாம்வாசிக்கவில்லை. நிசந்தான் அவர் உயிரோடே எழுந்து மேகவாகனத்தில் ஏறிப் பரலோகத்துக்குப் போனதிலும் அவர் மகிமை உள்ளவராக விளங்கினார். ஆனாலும் அந்த விசேஷித்த சமயத்தில் முதலாய் அவர் தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார் என்று நாம் வாசிக்கிறதில்லை. கானாவூரிலே ஒரு சிறு வீட்டிலே சாதாரணமான ஜனங்களுக்குள்ளே நம்முடைய அருள்நாதர் தம்முடைய மகிமையை வெளிப்படுத்த சித்தமானார். மகா தாழ்மையோடு வந்த தேவ மைந்தன் முப்பது வருஷகாலம் அற்புத கிரியைகளைச் செய்யாமலும், தமக்குள் இருக்கப்பட்ட தேவவல்லமையை வெளியரங்கமாய் காட்டாமலிருந்த மனுஷகுமாரன் திடீரென்று இந்த சமயத்தில் தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார். இரண்டு படங்களை எடுத்துக்காட்டுகிறேன். அதற்கும் இதற்குமுள்ள வித்தியாசத்தைக் கவனித்துப்பாருங்கள். அதோ! மனுஷன் தன் மகிமையைக் காண்பிக்கிறான் ரோமருடைய இராயன் வெற்றி சிறந்தவனாய் பலவித ஆடம்பரங்களோடு தன் இராஜமேன்மையைக் காட்டும்படிக்கு ரோமாபுரியில் பவனி புறப்பட்டுப்போகிறான். புஷ்பங்களினாலே அலங்கரிக்கப்பட்ட ராஜரதத்தில் ஏறிப் பொற்கிரீடம் சூடி வெகுடம்பத்தோடு பட்டணப்பிரவேசம் செய்கிறான். அவன் முன்புக்குக் கட்டியக்காரன் ஓடி அவன் இராஜமகிமை, நாம தேயம் ஜெய விசேஷங்களை கூறி அறிவிக்கிறான். அவனைச்சூழ அநேக பிரபுக்களும் உத்தியோகஸ்தரும் போகிறார்கள். வில்வீரர், கால்வீரர், குதிரைவீரர், ரதவீரர், திரள் கூட்டங் கூட்டமாய் பவனி போகிறார்கள். ஆயிரம் ஆயிரமான ஜனங்கள் ராயனைப்புகழ்ந்து அவன் மகிமையைப் பிரஸ்தாபித்து எப்பக்கத்திலும்

ஆர்ப்பரித்து ஓடுகிறார்கள். அவர்களை சந்தோஷப்படுத்த ராயனானவன் திரளான திரவியங்களை வாரி எடுத்து அந்த ஜனக்கூட்டத்தில் அவைகளை இனமாக வீசிப்போடுகிறான் (இறைத்துப்போடுகிறான்) அவ்விதமாக ரோம இராயன் தன் மகிமையை வெளிப்படுத்தினான். இன்னமும் பாருங்கள். இராஜாதி இராஜன் நீசக்கோலமெடுத்து யாதொரு ஆடம்பரமில்லாமல் சில சிநேகிதரோடு மாத்திரம் ஓர் சிறு வீட்டிலே பிரவேசிக்கிறார். அவருக்கு பொற்கிரீடமுமில்லை, பட்டத்துவஸ்திரமுமில்லை, பரிவாரமுமில்லை, சாதாரண மனுஷனாக விளங்குகிறார். அந்த வீட்டிலே கொஞ்சம் கவலை யுண்டு. கலியாண வீட்டிலே ரசம் குறைந்துபோனது, அந்த வீட்டார் செய்த விருந்து வந்த ஜனங்களுக்குக்காணாது. அதினாலே அந்த வீட்டெஜமானுக்கு வெட்கமில்லையா. அதோ அருள்நாதன் அந்தக் கவலையை நீக்குகிறார். அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும், என் வல்லமையைப் பாருங்களென்று அவர் சொல்லவில்லை. வெளியரங்கக் காட்சியினாலே தம்முடைய மகிமையை அவர் வெளிப்படுத்தவில்லை. அந்தரங்கமாய், ஒருவருக்கும் சொல்லாமல், யாதொரு வீண் ஆடம்பரமுமில்லாமல் தண்ணீரானது இரசமாகமாற அற்புதம் செய்தார். குறைவுகளை நீக்கினார், எல்லாரையும் திருப்தியாக்கினார். வருத்தப்பட்டோருக்கு உதவிசெய்தார். இவ்விதமாக இயேசு தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்.

என் பிரியமான சகோதரரே, இன்றைக்குப் பெரிய விசேஷமில்லை மகா உற்சவம் நடக்கவில்லை. சாதாரணக் கூட்டத்தாராகவே வழக்கம்போல தேவாலயத்தில் கூடி வந்திருக்கிறோம். வழக்கம்போல இராப்போஜனம் பரிமாறப்படும். ஆகையால் கிறிஸ்துநாதர் இந்த சமயத்தில் தம்முடைய மகிமையை விளங்கச்செய்ய மாட்டார் என்று சொல்லாதிருங்கள். சாதாரணக் கூட்டங்களில் வருவது அவருக்கு மெத்தப்பிரியம், எங்கெங்கே குறைவு, கவலை நல்லாசை யுண்டோ அங்கே யெல்லாம் வந்து சகாயம் செய்து தம்முடைய மகிமையை வெளிப்படுத்துவார். 'நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் திருப்தியடைவார்கள்' இயேசு அவளை நோக்கி நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச்சொல்லுகிறேன் என்றார்(யோ: 11: 40) இப்பொழுது இந்த சுவிசேஷ வாக்கியத்தின் சம்பந்தமாய் மூன்று காரியங்களைமாத்திரம் வெகு சுருக்கமாய் சிந்தித்துக்கொள்வோமாக.

I—வறுமையுள்ளவர்களைத் திருப்தியாக்கி இவ்விதமாய்த் தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்.

சமீபத்திலே மதுரை ஜில்லாவிலே வரண்ட பூமியெல்லாம் செழித்தோங்கத்தக்கதாக ஓர் அதிசயம் நடந்ததென்று உங்களெல்லாருக்கும் தெரியும். பெரிய ஆறு என்னும் நதியின் வெள்ளமானது மேற்றிசையில் ஓடா



மல் கீழ்திசையில் இறங்கத்தக்கதாக வழிவகை செய்திருக்கிறார்கள். அந்த வேலையை மேற்பார்த்த துரை வெகு திறமையோடு அந்த வேலையெல்லாம் முடித்திருக்கிறார்கள். அதினாலே அநேகருடைய வறுமை தீர்ந்துபோயிற்று ஏராளமான ஜனங்கள் வருத்தமில்லாமல் ஜீவனம்பண்ண இடமாயிற்று நடந்த காரியத்தை சற்று கவனித்தால் பெரிய அதிசயமென்று எல்லாரும் சொல்லுவார்கள். அந்த விசேஷத்தை அறிந்தவர்கள் யாவரும் அந்த துரையினுடைய கிரியை வல்லமையைப்பற்றி புகழ்ந்து பேசுகிறார்கள். நல்ல காரியந்தான் ஜனங்களுடைய கஷ்டத்தை நீக்குவது பசியினால் வருந்துவோரைப் போஷிப்பித்து திருப்தியாக்குவது பெரிய உபகாரம் என்பதற்கு சந்தேகமில்லை. என்றாலும் மலையில் அந்தவேலை நடக்கையில் சென்ற செலவு எவ்வளவு, ஜீவநாசம், பிராண அபாயம் எவ்வளவு? எத்தனையோ வேலையாட்கள் ஜுரத்தினாலும் வேறே அபாயத்தினாலும், மாண்டுபோனார்கள். சீர்மை தேசத்திலிருந்து எத்தனையோ பெரிய யந்திரங்களை வருத்தத்தோடு கொண்டுவரவேண்டியதாய் நேரிட்டது. கிறிஸ்து நாதருடைய அற்புத கிரியைகளோ அப்படியல்ல. வருத்தமில்லாமல் காலதாமதமுமில்லாமல் தம்முடைய தேவ வல்லமையைக்கொண்டு கிரியை செய்கிறார். அந்த வீட்டிலேவந்தார். அங்கிருந்த வறுமையைக் கண்டார், வேறே கருவிகளைத் தொடாமல் அங்கே வைக்கப்பட்ட கல்ஜாடிகளை உபயோகப்படுத்தினார். வானதூதருடைய உதவியை விரும்பாமல் அந்த வீட்டுவேலைக்காரர் மூலமாய் அற்புதம் செய்தார். எல்லாரையும் திருப்தியாக்கி சந்தோஷப்படுத்தினார். பரி: யோவனுடைய சுவிசேஷத்தில் ஆண்டவர் செய்த அற்புதங்களுக்கு அடையாளம் என்று பேர். ஆம். முன்னடையாளமாக அந்த வீட்டாரை திருப்திசெய்தார். கிறிஸ்துநாதருடைய விசேஷித்த வல்லமை இன்னதென்று உங்களுக்குத் தெரியுமா. 'தவனமுள்ள ஆத்துமாவை கர்த்தர் திருப்தியாக்கி பசியுள்ள ஆத்துமாவை நன்மையினால் திருப்தியாக்குகிறார் (சங்: 107: 3). அப்படியானால் தவனமுள்ள ஆத்துமா இங்கே யுண்டா? இயேசு ரட்சகரை அழைத்து அவர் கொடுக்கும் ஞானபோஜனத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். இன்றைக்கு ஒருவிருந்து இங்கேயும் ஆயத்தமாயிருக்கிறது கலியாண விருந்தைப்பார்க்கிலும் மகா மேன்மையான விருந்து. விசுவாசியே இந்த திவ்விய விருந்தில்வந்து இயேசுவின் மகிமையை அறிந்து கொள்வாயாக. ஆண்டவரே பசியாயிருக்கிறேன். என் ஆத்மா தவனமாயிருக்கிறது ஜீவ அப்பத்தினாலே என்னை திருப்தியாக்கும்' பரமரசத்தைத் தந்து என்னைப்பெலப்படுத்தும். உம்முடைய மகிமையைக் காண்பித்து என்னை சந்தோஷப்படுத்தியருளும். ஆமென்.

II. 'சாதாரணமானவைகளை விசேஷப்படுத்தி இவ்விதமாய் தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்.

தென்தேசத்து இராஜஸ்திரிக்கு சாலொமோன் இராஜா தன் மாளிகையைக் காண்பித்தான். அவனுடைய மகிமை எப்படிப்பட்டது 'தந்தத்தினால் செய்த அரண்மனைகள்' அலங்காரமான கட்டடங்கள், விசித்திர விநோதமாய் விளங்கின சிம்மாசனம், திரளான உத்தியோகஸ்தருடைய சிறப்பு, ஆயிர மாயிரமான பொற், பாத்திரங்கள் இப்படிப்பட்டவைகளே; ஒருகாலத்தில் பிரான்சு தேசத்து அரசனும் இங்கிலாந்து தேசத்து அரச

னும் ஒருவரை யொருவர் சந்திக்கும்படி வெகு சிறப்போடு புறப்பட்டார்கள். இரண்டுபேருக்கும் வீண் பெருமை இருந்தது. தங்கள் மேன்மை மகிமையைக் காண்பிக்கும்படி இரண்டுபேரும் யோசித்தார்கள். பொற்கிரீடம், பொன் ஆபரணங்கள், இராஜ சின்னங்கள் இவைகளையெல்லாம் தரித்துக் கொண்டு புறப்பட்டுப்போனார்கள். இருபட்சத்தாருக்கும் பரிவாரம் அதிகம். ஒரு பெரிய மைதானத்தில் அந்த சந்திப்பு நடந்தது. எங்கேபார்த்தாலும் மகிமை, ஆடம்பரம், அலங்காரம் இராஜாக்களின் ரதமோ தங்கம். பட்டுத்து வஸ்திரங்களோ தங்கம். பரிவாரக்காருடைய கோலமோ தங்கம் எல்லாம் தங்கம் ஆகையால் அந்த இடத்துக்கு சுவர்ணமைதானம் என்று பெயர்.

கிறிஸ்துநாதருடைய மகிமையோ மகாவித்தியாசமானது, அவரைக் கவனித்துப்பார்த்தால் அந்த வீட்டிலே என்னவஸ்துகளுண்டு. அங்கே கல் ஜாடிகள் உண்டு. யூதருடைய சுத்திகரிப்புக்காக, சாதாரண ஆகாரங்களுக் காக வழக்கமாய் வைக்கப்பட்ட ஜாடிகள். அதின்மூலமாய் தம்முடைய மகிமையைக் காண்பித்தார். சாதாரணமான வீடு, சாதாரணமான ஜாடிகள் என்றாலும் ஆண்டவருடைய மகிமை விளங்கும் விசேஷித்த கருவியாயின

பிரியமான சகோதரரே. உங்கள் வீடுகளில் இருக்கிற பிள்ளைகளோ உங்கள் சாதாரணமான உத்தியோகங்களோ. அவைகளில் இயேசுவின் மகிமையை அறிந்துகொள்ளுங்கள். விசேஷமாய் தேவாராதனை; நற்கருணை கிருபையின் எத்தனங்கள். இவைகளை அசட்டைசெய்யாதிருங்கள். அவைகள் கல்ஜாடிகள். வெறும் ஜாடிகள். வீண் ஆகாரங்களென்று நினைக்கிறீர்களோ அல்ல. அல்ல. மெய்தான் அநேகருக்கு வெறும் ஆகாரங்களாய்க் காணப்படும். மெய்கிறிஸ்தவனுக்கோ இந்த சாதாரணமான ஆராதனைகளில் பேராசிர்வாதமுண்டு. அதின்மூலமாய் ஆண்டவர் கிரியைசெய்கிறார். "நீங்கள் ரட்சிப்பின் ஊற்றிலிருந்து மகிழ்ச்சியோடே தண்ணீர் மொண்டு கொள்ளுவீர்கள் (ஏசா: 12: 3.)

III. பெரிய மாறுதலை உண்டுபண்ணி இவ்விதமாக தமது மகிமையை வெளிப்படுத்தினார்.

தண்ணீரை ரசமாக்கினார், அதின் தன்மையை மாற்றி அற்புதம்செய்தார். அடையாளம் என்று சொன்னேனே. சந்தேகமா? அவர் இவ்வுலகத்தில் வந்ததற்கு முகாந்திரமென்ன? நரகத்தினின்று நம்மை இரட்சித்தருள வந்தார் என்று சொல்லுவீர்களோ. அதற்காகமாத்திரமல்ல. நம்முடைய சிந்தை, வார்த்தை, கிரியை, நம்முடைய சரீரம் ஆத்தும ஆவி இவைகளையெல்லாம் மாற்றித்திருத்தி மறுரூபப்படுத்த வந்தார். உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோம. 12: 1.)

ஆ! சகோதரரே! நம்மைப் பிரகாசிப்பித்து நம்முடைய மனுஷனுக்குக் காரியங்களை முற்றிலும் மாற்றிப் பரிசுத்தமாக்கி மறுரூபப்படுத்தச் சித்தமுள்ளவராயிருக்கிறார். இவ்விதமாக இயேசு தம்முடைய மகிமையை வெளிப்படுத்துவாராக.

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

July, 1915. Registered—No. M. 163

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

" என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." (யோவான் 7: 38)

Vol. XVI ஜூலை 1915

MADRAS

## 'அத்திப்பழக் காலமாயிராதபடியால்'

'அத்திப்பழக் காலமாயிராதபடியால் அவர் அதினிடத்தில் வந்தபோது அதில் இலைகளையல்லாமல் வேறொன்றையும் காணவில்லை' மாற்கு 11: 13.

மரணத்தீர்ப்பின் நாள் நெருங்கவே ஆக்கினைக்குள்ளான மனுஷன் அங்கலாய்த்துத் தவிக்கிறான். மரணத்திகில் அவனை ஆண்டுகொள்ளுகிறது. அவன் யாதொன்றும் செய்யக்கூடாமற்போகிறான். நமதாண்டவருடைய காரியமோ அப்படியல்ல. சீக்கிரத்தில் தமக்கு நேரிடப்போகிற கடும்பாடுகளையும் குரூரமான மரணத்தையும் அவர் அறிந்திருந்தும் மறைவான இடந்தேடி ஒளித்துக்கொள்ளவில்லை, தமது கிரியையில் சற்றும் தளரவுமில்லை. ஜனங்களுக்கு உபதேசிக்கவும் நோய்களைக் குணமாக்கவும் வாஞ்சையுள்ளவராகக் காலைதோறும் அவர் எருசலேமுக்கு வருகிறதும், மாலையில் பெத்தானியாவுக்குத் திரும்புகிறதுமாயிருந்தார். திங்கள் காலையில் அவர் எருசலேமுக்கு வரும்வழியில் ஒரு அத்திமரத்துக்குச் சம்பவித்ததை மாற்கு எழுதிவைத்திருக்கிறார். மார்க்கவிரோதிகளும் மற்ற அநேகரும் ஆண்டவர் இந்த அத்திமரத்தைச் சபித்ததைக்குறித்து இந்நாள்வரை தர்க்கிக்கிறதுண்டு. கனிகாலமில்லாதபோது கனியைத் தேடுவதும் கனியில்லாததற்காக மரத்தைச் சபிப்பதும் சரியாவென்று கேட்கிறார்கள். இந்த அற்புதத்திலிருந்து இரண்டு மூன்று குறிப்புகளை நமக்குப் பிரயோஜனமுண்டாகக் கவனிப்போம்.

1. இயேசுவின் பசி. 'அவருக்குப் பசியுண்டாயிற்று.' பெத்தானியாவிலிருந்து புறப்பட்டவர் ஒன்றும் சாப்பிடாமலே வெளியேறி

விட்டதாகத் தோன்றுகிறது. 'வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்' என்று அந்தப் பரிசேயன் சொன்னதுபோல, யூதரில் ஒரு வகுப்பார் திங்களையும் வியாழனையும் உபவாச நாட்களாக ஆசரித்துவந்தார்கள். இது தேவஏற்பாடாகயிராமல் அவர்களுடைய சுய ஏற்பாடாகயிருந்தது. நமதாண்டவர் இந்த ஆசாரத்துக்குள் கீழடங்கிச் சாப்பிடாதிருந்தார் என்று நாம் நினைக்கக்கூடாது. கப்பர்நகூமூரில் பேதுருவின் வீட்டைவிட்டு அதிகாலையில் புறப்பட்டு வனாந்தரமார்க்கம் சென்று ஜெபித்ததுபோல, இங்கேயும் ஜெபம்பண்ணும்படியாக இருட்டோடே பெத்தானியாவை விட்டு வயல்வெளிக்கு வந்திருக்கலாம். அப்படி வந்தவர் சாப்பாட்டை மறந்து ஆத்துமாக்கள்பேரிலுள்ள வாஞ்சையினால் நகரத்தைநோக்கி நடந்திருக்கலாம். 'பகற்காலமிருக்குமட்டும் என்னை அனுப்பினவருடைய கிரியையைச்செய்யவேண்டும், ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது' என்ற அவருடைய சொந்தப்பிரமாணம் இப்போ அவரை அதிகமாய் நெருக்குகிறது. இராப்போஜனத்தில் சேருகிறவர்கள் ஒன்றும் சாப்பிடாமல் உபவாசத்தோடு சேருகிற வழக்கம் நமக்குள் உண்டு. ஜெபவேளையும் காலைப்பலிசெலுத்தும் நேரமும் வருமுன்னே யூதர்கள் பொதுவாய்ச் சாப்பிடார்கள். நமதாண்டவர் சாப்பிடாதிருந்தது இது காரணமோ என்னமோ தெரியாது. ஒருவேளை காலைப்போஜனத்துக்கு வழிவகையில்லாத அவருடைய தரித்திரம்தான் காரணமோ தெரியவில்லை. காரணம் எதுவாயிருந்தாலும் ஒன்று நிச்சயம். அன்று காலையில் அவருக்குப் பசியுண்டாயிற்று. அந்தப்பசியினால் தூரத்தில் நின்ற ஒரு அத்திமரத்தண்டைபோய் ஆசையோடு அண்ணாந்துபார்த்து அதின் கிளைகளில் கனியைத் தேடினார்.

ஆண்டவரே! இங்கே என்னதேடுகிறீர் என்று ஒருவன் கேட்டால், வயிறுபசிக்கிறது நாலைந்து பழங்கள் அகப்பட்டால் சாப்பிடலாமே என்று பார்க்கிறேன் என்று அவர் சொல்லமாட்டாரா? சகலத்தையும் உண்டாக்கின சர்வத்துக்கும் மேலான தேவன் அவர். சமுத்திரம் அவருடையது. ஆறுகள் அவருடையது. கனிவர்க்கங்கள் அவருடையது. போஜனவகைகள் அவருடையது. நான் தாகமாயிருந்தால் உனக்குச் சொல்லேன், ஆறுகள் யாவும் என்னுடையவைகளே. நான் பசியாயிருந்தால் உனக்குச் சொல்லேன், வனாந்தரத்திலுள்ள யாவும் என்னுடையவைகளே என்று அவர் சொல்லக்கூடும். இவ்வளவு ஐசுவரியமுள்ளவராயிருந்தும் அவருடைய தரித்திரத்தினாலே நாம் ஐசுவரியவான்களாகும்படிக்கு நமது நிமித்தம் அவர் தரித்திரரானாரே. இது எவ்வளவு கிருபை! பாவம் ஒன்றுதவிர மற்றெல்லாவற்றிலும் நமக்கொப்பாகி சரீரத்தின் பாடுகள், தவிப்பு, பசி, தாகம், கண்ணீர் முதலிய யாவற்றையும் அவர் அனுபவித்திருக்கிறபடியால் நமக்காகப் பரிதபிக்கவும் நமக்கு உதவிசெய்யவும் அவர் ஏற்ற ரட்சகராயிருக்கிறார்.



2. **அத்திமரங்களின் விபரம்.** பலஸ்தீனாவில் அத்திமரங்கள் ஏராளமுண்டு. பெத்தானியா, பெத்பகே, ஒலிவமலை, எருசலேம் முதலான இடங்கள் அத்திமரங்களால் நிறைந்து ஒரு பெருஞ்சோலையாகத் தோன்றும். தீத்துராயன் எருசலேமை முற்றிகைபோட்டு அதின் சோலைகளை அழிக்குமுன்னே தேசம் மிகவும் செழிப்பாகயிருந்தது. அத்திமரத்தின் நிழல் மகா குளிர்ச்சியாயும் அதின் கனி மதுரமாகவுமிருக்கும். 'அவரவர் தங்கள் தங்கள் திராட்சச்செடியின் நிழலிலும் அவரவர் தங்கள் தங்கள் அத்திமரத்தின் நிழலிலும் சுகமாய் குடியிருந்தார்கள்' என்பது யூதருக்குள் வழங்கிவந்த ஒரு சுலோகம். நமது தேசத்தில் ரஸ்தாமார்க்கமாய் இருபக்கங்களிலும் மரங்கள் நிற்பதுபோல பலஸ்தீனாவில் முக்கியமாக ரஸ்தாமார்க்கமாய் இவ்வத்திமரங்கள் நடப்பட்டிருந்தன. அவைகளில் படியும் தூசி மரங்களின் வளர்ச்சிக்கு அனுகூலமென்றெண்ணப்பட்டது. அவைகளில் உண்டாகும் கனிகள் யாவருக்கும் பொது.

நமதாண்டவர் தூரத்தில் ஒரு அத்திமரத்தைக் கண்டு அதில் கனியைத் தேடிப்போனார். அநேக அத்திமரங்கள் அவர் அருகில் நின்றன. அவைகளில் இலைகள் இல்லாததினால் அவைகளை அவர் நோக்கவில்லை. இந்த மரத்தில் இலைகளிருந்தபடியால் கனிகளும் இருக்குமென்று எண்ண இடமிருந்தது. அத்திமரங்களுக்கும் மற்ற மரங்களுக்கும் வித்தியாசம் இதுவே. மற்ற மரங்களில் முன்பு இலைகளும், பின்பு பூவும், அப்புறம் காயும், அப்புறம் கனியுமுண்டாகும். அத்தியிலோ முதல் மறைவான பூவும், அப்புறம் காயும், அப்புறம் இலையுமுண்டாகும். 'அத்திபூத்தாப்போல' என்கிற பழமொழியுமுண்டு. காய்கள் சூரிய உஷ்ணத்தால் வெதும்பி உதிர்ந்துபோகாதபடி, இலைகள் காய்களை மூடி அதின் கனிகளைப் பாதுகாக்கும். 'கனி முந்த இலை பிந்த' என்று இவ்வத்திகளைக்குறித்துச் சொல்லலாம்.

'அத்திப்பழக்காலமாயிராதபடியால்' என்று மாற்கு சொன்னது இயேசுவானவர் கனியைத் தேடிப்போனது தப்பிதம் என்று காட்டும்படிக்கல்ல, இதுவரை அருடைய மகத்துவங்களைக் கண்ணாரக்கண்டு அவர் வாக்கிலும் செய்கையிலும் வல்லமையும் ஞானமுமுள்ள ஆண்டவரென நிச்சயித்திருந்த சீஷர்கள் இந்த விஷயத்தில் அவர் தப்பிதம்செய்தாரென்று சொல்லத்துணிவார்களா? அத்திமரங்களைக் குறித்துச் சரித்திரக்காரர் சொல்லுகிறதைக் கவனித்தால் ஆண்டவர் கனியைத் தேடிப்போனது நியாயமெனத் தெரியவரும். வருஷத்தில் ஜனுவரி, பெப்ரவரி மாதங்கள் தவிர மற்றக்காலமெல்லாம் அத்திமரத்தில் கனிகள் காணப்படும். வருஷத்தில் இருமுறை கனிகளைச் சேர்ப்பார்கள். ஒருமுறை திரளாகச் சேர்த்தபின் மறுபடியும் கனிசேர்க்குங்காலம் வரும்வரை அந்த மரம் முற்றிலும் கனியற்றிருக்கமாட்டாது. ஏதோ சொற்பமாய் இங்கே கொஞ்சம் அங்கே கொஞ்

சம் கனிகள் இருக்கிறதுண்டு. இதற்குப் பின்கனி என்று பெயர். இந்தப் பின்கனி முற்றிலும் அற்றுப்போகுமுன்னே மறுபடியும் கனிகொடுக்க ஆரம்பிக்கும். இதில் முன்பு தோன்றும் கனிகளுக்கு முதல் கனி என்று பெயர். இந்த முதல்கனியில் ஜனங்களுக்கு அதிகப்பிரியம். "அது கையிலிருக்கும்போதே விழுங்குகிறதுமான முதல்கனி" என்று சொல்லப்பட்டிருக்கிறது. "அத்திமரத்தில் முதல்தரம் பழுத்த கனிகளைப்போல உங்கள் பிதாக்களைக் கண்டுபிடித்தேன்" என்று கர்த்தரும் சொல்லுகிறார் (ஏசா 28: 4; ஓசி 9: 10.)

மேலும் நமதாண்டவர் பலஸ்தீனா தேசத்திற்கு அந்நியரல்ல. அவர் அங்கே பிறந்து வளர்ந்தவராதலால் அத்திப்பழங்களின் விஷயம் அவருக்கு நன்றாகத்தெரியும். 'அத்திப்பழக்காலமாயிராதபடியால்' என்று மாற்கு சொன்னது சரிதான். விரோதமாகச் சொல்லாமல் உண்மையைச் சொன்னார். அத்திப்பழங்களைச் சேர்க்குங்காலம் இன்னும் வரவில்லை என்பதே அவர் கருத்து. ஆண்டவர் கூடை கூடையாகக் கனிகளைச் சேர்க்கும்படி மரத்தண்டை போகாமல் பசியைக் கொஞ்சம் தீர்த்துக்கொள்ளும்படிக்கு 'அதில் ஏதாகிலும் அகப்படுமோ என்று பார்க்கவந்தார்'. ஊதா நிறம் போன்ற பின்கனி ஏதாகிலும் இருக்கலாம் அல்லது, இலைகளிருந்தபடியால் முன்கனியாவது தோன்றியிருக்கலாம. இரண்டுமில்லை. இது முன் ஒரு போதும் கனி கொடுத்ததுமில்லை. இப்போ கனி கொடுக்கிறதுமில்லை. இனிக் கனிகொடுக்கபபோகிறதுமில்லை. ஆகையால் அது கனியற்ற மலட்டு மரமென்பது வெளியாகிவிட்டது.

3. இயேசு மரத்தைச் சபித்தல். 'இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக்கடவது என்றார், உடனே அத்திமரம் பட்டுப் போயிற்று' (மத். 21: 19). தமிழ் வேதாகமத்தில் 'இயேசு அந்த மரத்தைப் பார்த்து' என்றிருக்கிறது. இங்கிலீஷில் அந்த மரத்துக்குப் பிரதியுத்தரமாக அவர் சொன்னது என்றிருக்கிறது. அதாவது, அந்த மரம் தன்னிடத்தில் கனியிருக்கிறதென்று சொல்லி அவரை அழைத்தது போலவும், தம்மை ஏமாற்றின அந்த மரத்தோடு அவர் பேசி அதைச் சபித்ததுபோலவும் நாம் அறிந்துகொள்ளுகிறோம்.

பசிதாங்காக் கோபத்தினால் ஏழை மரத்தைச் சபித்தது நியாயமாவென்று விரோதிகள் கேட்கிறார்கள். மரத்தைச் சபித்ததற்குக் காரணம் பசியல்ல. ஆண்டவர் தமக்காகக் கவலைப்படுகிறவரல்ல. வனாந்தரத்தில் அவருக்குப் பசியுண்டானபோது சாத்தான் அவரைத் தந்திரமாய்ச் சோதித்தும் அவனுக்கு அவர் இணங்கவில்லை. நாவறண்டு தாகத்தோடிருந்த சமயத்திலுங்கூட தன் போஜன பானத்தை மறந்து, என் பிதாவின் சித்தப்படி செய்வதே எனக்குப் போஜனம் என்றார். இங்கே பசிமிஞ்சி நடக்கக் கூடாமல் மரத்தடியில் படுத்துக்கொள்ளவில்லையே. எப்போதும்போல



நகரத்துக்குப்போய் தம்முடைய ஊழியத்தை நிறைவேற்றி மலைப்பாதை நடந்து பெத்தானியாவுக்குத் திரும்பினார். எத்தனையோதரம் பசியோடும் தாகத்தோடும் இருந்திருக்கிறார். யாரைச் சபித்தார்? யாரைக் கெடுத்தார்? ஆகையால் மரத்தைச் சபித்ததற்குக் காரணம் பசியல்ல. வேறே மேலான ஒரு நோக்கம் இருக்கவேண்டும்.

மேலும் தனக்கும் பிரயோஜனமற்று, பிறருக்கும் பிரயோஜனமற்று, நிலத்துக்கும் கேடான இந்த மலட்டுமரம் பட்டுப்போனால் என்ன? லூக்கா 13–ல் மூன்று வருஷமாய்க் கனியைத் தேடிவருகிறேன், ஒன்றையும் காணவில்லை, நிலத்தையும் கெடுக்கிறது, இதை வெட்டிப்போடு என்கிற உவமையைச் சொன்னபோது அது அநியாயம் என்று ஒருவரும் எதிர்க்கவில்லை. கோடரியானது மரங்களின் வேரருகே வைக்கப்பட்டிருக்கிறது, நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் என்று யோவான் பிரசங்கித்தபோது அது நியாயந்தான் என்று ஜனங்கள் ஒத்துக்கொண்டார்கள். அது தப்பிதமென்று ஒருவரும் சொல்லவில்லை. 'கர்த்தராகிய நான் பச்சையான மரத்தைப் பட்டுப்போகப்பண்ணுவேன்' என்று தீர்க்கதரிசி சொன்னபோது ஒருவனும் எதிர்த்து நிற்கவில்லை. சில சமயங்களில் இடி இடித்துப் புசலடித்துப் பெருமழைபெய்து அத்திமரங்களில் அநேகம் அழிந்துபோகிறதே, அப்போ தேவனோடு சண்டைபோடுகிறவன் யார்? மரத்தினடியில் நிற்கிறவர் இன்னார் என்று அறிந்தவன் வாய்திறக்கமாட்டான். அவர் உண்டாக்கின மரத்தைப் பட்டுப்போகப்பண்ண அவருக்கு அதிகாரமுண்டு. மேலும் விளையாட்டுக்காக அதைச் சபிக்காமல் சர்வ ஜனத்துக்குப் பெரிய எச்சரிப்பாக அந்த மலட்டு மரத்தைச் சபித்தாரானால் அவரைக் குற்றப்படுத்துகிறவன் யார்?

ஆண்டவர் செய்த அற்புதங்கள் அநேகமுண்டு. அவைகள் ஜனங்களுக்கு நன்மையுண்டாக அவருடைய கிருபையிலிருந்து சுரந்தவைகள். இந்த அற்புதமோ அவரை நியாயாதிபதியாகக் காட்டுகிறது. பாவிகளை ரட்சிக்கிறதுமாத்திரமல்ல, குணப்படாதவர்களை ஆக்கினைக்கேதுவாக நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் அவருக்குண்டென்று இந்த அற்புதம் வெளிப்படுத்துகிறது. அத்திமரம் யூதஜனங்களுக்கு அடையாளம். இந்தப் பட்டுப்போன அத்தியின் மூலமாய் ஆண்டவர் அப்பொழுதிருந்த யூத சபையோடு பலமாய்ப் பேசினார். தாங்கள் மாத்திரம் தேவனுடைய ஜனங்களென்றும், தாங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளென்றும், சொல்லி மற்றவர்களை மகா நீழ்ப்பாய் நினைத்தார்கள். மனுஷருடைய பார்வைக்குத் தங்களை நீதிமான்களாகக்காட்டினார்கள். அவர்களுடைய சிறப்பான ஆலயமும், ஆராதனைகளும், பண்டிகைகளும், புறம்பான ஆசாரங்களும் தூரத்திலுள்ள மனுஷரைக் கவர்ந்துகொண்டது. ஆண்டவர் இந்த யூத அத்தியைப் பார்த்து அதில் கனியிருக்குமென்று ஆவலோடு தேடிவந்தார். ஐயோ! ஏமாறப்பட்டுப்

போனார். எல்லாம் இலைகளேயன்றிக் கனியொன்றுமில்லை. உள்ளத்தில் உண்மையில்லை, ஜீவனில்லை, அன்பில்லை, விசுவாசமில்லை, வேத அறிவில்லை, மேசியா வந்தபோது அவரை ஏற்றுக்கொள்ளவுமில்லை. அவர்களுடைய ஆசாரங்களாகிய இலைகளையும், மாயமாகிய மரத்தையும், அநீதியாகிய வேரையும் அடியோடே பட்டுப்போகப்பண்ணினார். ரோமருடைய கோடரியால் அவர்கள் வெட்டுப்பட்டு உலகமெங்கும் சிதறுண்டுபோனார்கள். ஆலயமும் பட்டணமும் அடியோடே அழிக்கப்பட்டது. மாயமும் அநீதியுமாகிய அவர்களுடைய மார்க்கம் வேரோடே பட்டுப்போகவேண்டியது நியாயம். அந்த மரத்தின் கனியை ஒருவனும் ஒருக்காலும் புசிக்கக் கூடாது என்று திருவுளம்பற்றினார். இந்த அற்புத உவமானத்தின்படி யூதஜாதி வெகுகாலமாய்ப் பட்டுப்போன நிலைமையிலிருந்தாலும் அந்த மரத்தைப்போல் முற்றிலுமாய் அழிந்துபோவார்கள் என்று நாம் நினைக்கக் கூடாது. அவர்கள் கர்த்தரிடமாய்த் திரும்புங் காலம் வருகிறது. கர்த்தர் அவர்களுக்கு இரங்குவார். அப்பொழுது 'மரித்தோரிலிருந்து ஜீவனுண்டானதுபோலிருக்கும்'.

இது நமக்கும் ஒரு பெரிய எச்சரிப்பல்லவா? நாம் திருச்சபையின் அங்கங்கள். நமக்கு ஞானஸ்நானமுண்டு, இராப்போஜனமுண்டு, விசுவாசப்பிரமாணமுண்டு, வேதாகமமுண்டு, தேவாராதனைகளுண்டு, விசேஷித்த கூட்டங்களுண்டு, இன்னும் அநேக சிலாக்கியங்களுண்டு. நம்மிடத்தில் கனிகள் உண்டா? ஆண்டவர் புசிக்கத் தேடுகிறது இலைகளல்ல, கனிகளே. நாம் கனியற்றிருந்தால் நமது முடிவு பயங்கரமாயிருக்கும். தேவனிடத்தில் பட்சபாதமில்லை. 'ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான், நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்'.

எஸ். பரமானந்தம்.

## No. 6.

## விலையேறப்பெற்ற தைலம்.

'ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றினாள்' பரி. மத். 26: 7.

'முள்ளுகளுக்குள்ளே லீலிப்புஷ்பம் எப்படியிருக்கிறதோ அப்படியே எனக்குப்பிரியமானவளும் இருக்கிறாள்' என்று உன்னதப் பாட்டுக்காரன் சொன்ன வசனம் இந்த ஸ்திரீயினுடைய சரித்திரத்தில் திருஷ்டாந்தமாயிற்று. முட்செடிகள் நெருங்கின காட்டிலே இந்த லீலிப்புஷ்பங்கள்



வெகு சேர்த்தியாயும், சிவப்பு நிறமுள்ளதாயும் செழித்தோங்கி நன்றாய் வளருமாம். இந்த அதிகாரத்தை சற்று கவனமாய் வாசித்தால் முள் அதிகமென்று அறியலாம். இதற்கு முந்தின சம்பவத்தை வாசித்துப்பாருங்கள். பிரதான ஆசாரியரும், வேதபாரகரும், ஜனத்தின் மூப்பரும் அரண்மனையிலே கூடி ஆலோசிக்கிறார்கள். கொலைபாதகம் செய்யத் தீர்மானிக்கிறார்கள் மூர்க்கமாய் பேசிக்கொண்டிருக்கிறார்கள். மாசற்ற ரட்சகரைப்பிடித்து வதைக்க எத்தனிக்கிறார்கள். கொலைபாதகர்கள் சண்டாளப்பாவிகள் முள் அல்லவா?

பிந்தின சம்பவத்தையும் வாசித்துப்பாருங்கள். யூதாஸ் என்பவன் துரோகம் செய்கிறான். இருட்டு நேரத்தில் தந்திரமாய்ப்போய் அருள்நாதரைக்காட்டிக்கொடுக்க ஒப்பந்தம் பண்ணுகிறான். முப்பது வெள்ளிக்காசுக்காக நித்திய செல்வத்தை இழந்துவிடுகிறான். பரம வஸ்துவை விற்றுப் போடுகிறான். அவனை என்ன சொல்லுவோம்? சண்டாளத் துரோகி; பூமிக்குப்பாரம்; முள் அல்லவா? அப்புறம் இடையில் காட்டின சங்கதியைப் பாருங்கள். ஒரு ஸ்திரீ அன்போடு வந்து நல்ல கிரியையைச்செய்கிறாள். விலையேறப்பெற்ற தைலத்தை ஊற்றித் தான் நேசிக்கும் நாதனை அபிஷேகம் பண்ணுகிறாள். லீலிப்புஷ்பம் என்பதற்குச் சந்தேகம் உண்டா? தைலத்தின் வாசனையால் மாத்திரமல்ல அந்த லீலிப் புஷ்பத்தின் நற்கந்தத்தினாலும் அந்த வீடு முழுவதும் நிறைந்தது என்று சொல்லத்தகும். (உன். 2:2) அந்தக் காலத்தில் எப்படியோ, அப்படியே இந்தக் காலத்திலும் இருவகை ஜனங்களுண்டு. சிலருடைய அவிசுவாசத்தையும் தகாத கிரியைகளையும் பார்த்து அறிந்து நல்ல நிலத்தைக் கெடுக்கும் முள் என்று ஆண்டவர் தீர்மானிக்கிறார். வேறே சிலருடைய பக்தி விசுவாசத்தையும் சந்தோஷத்தோடு கண்டு நல்ல வாசனைபொருந்திய லீலிப் புஷ்பங்கள் என்று மகிழ்ந்து சொல்லுகிறார். சகோதரனே! சகோதரியே! நீ முள்ளா? லீலி புஷ்பமா? வேஷக்காரனா? மெய்பக்திமானா? தேவதூதர் எல்லாரும் கவனித்துப் பார்க்கத்தக்கதாக கிறிஸ்து நாதர் ஒவ்வொரு மெய் விசுவாசியையும் குறிப்பித்துக்காட்டி 'அதோ முள்ளுகளுக்குள்ளே லீலி புஷ்பம் எப்படியிருக்கிறதோ! அப்படியே எனக்குப் பிரியமானவளும் இருக்கிறாள்' என்கிறார். இப்பொழுது பக்தியுள்ள இந்த ஸ்திரீ செய்த நற்கிரியையைச் சற்று நேரம் மாத்திரம் தியானம் செய்வோமாக. ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற...தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றினாள்.

1. நன்றியறிதலைச் செலுத்தும்படி அந்த தைலத்தை ஊற்றினாள்.

குஷ்டரோகியாய் இருந்த சீமோன் வீட்டிலே இந்தக் காரியம் நடந்தது. அந்த சீமோன், மார்த்தாள் மரியாளுடைய தகப்பன் என்பது (இறந்து போன தகப்பன்) சிலருடைய அபிப்பிராயம். அப்படியல்ல, அவன் காலஞ்சென்ற மார்த்தாளுடைய புருஷன் என்று வேறு சிலர் உத்தேசிக்கிறார்கள்.

இன்னும் சிலர் மார்த்தாளுடைய தகப்பனுமல்ல, புருஷனுமல்ல கிட்டின பந்துக்களாய்மாத்திரம் இருந்தான் என்று சாதிக்கிறார்கள். காரியம் எப்படியிருந்தாலும் பரவாயில்லை. மரியாளுடைய தகப்பனாயிருந்தாலும் சரி மைத்துனன் என்றாலும் சரி, பந்துக்கள் என்றாலும் சரி, ஜீவித்துப்போன சிநேகிதன் ஆனாலும் சரி, இன்னமும் உயிரோடிருக்கிறவன் ஆனாலும் சரி ஆண்டவர் அவனுக்குக் காண்பித்திருந்த பெரிதான தயவை அவன் கொஞ்சமெனிலும் மறக்கவில்லை. முந்தி குஷ்டரோகியாயிருந்தவன் இயேசுவின் சக்தியினாலே சுத்தமானான். முந்தி அருவருப்பான அந்த வியாதியினிமித்தம் அந்தக் குடும்பத்தில் மிகுந்த கிலேசமும் கவலையுமிருந்தன. இப்பொழுதோ அருள் நாதரின் கிருபையினாலே அந்த வீட்டில் சந்தோஷக்கூட்டம் கெம்பீரசத்தமுண்டு. அப்படி உண்டான பெரிய மாறுதலை நினைக்கும்போது மரியாளுக்கு நல்ல உணர்வு உண்டாகி நன்றியறிந்த மனதோடு ஜீவ தயாபரரான இயேசுவினிடத்தில் வந்து கனிந்த சிந்தையோடு அவரைப் பணிந்து அபிஷேகம் பண்ணுகிறாள். **குஷ்டரோகம் நீங்கினதற்காக நன்றியறிதல்.** இன்னமும் பாருங்கள். இரட்சகரோடு பந்தியிருக்கிற அந்த பாக்கியவான் யார்? அவருடைய பக்கத்தில் உட்கார்ந்து அவருடைய திவ்ய சம்பாஷணையை அன்போடு கேட்டுக்கொண்டிருக்கிற அந்த சிஷன் யார்? லாசரு அல்லவா? இவளுடைய சகோதரனாகிய லாசரு மரித்துப் பாதாளத்தில் இறங்கி, அப்புறம் அற்புதவிதமாய் கிறிஸ்துவின் வல்லமையால் உயிரோடே திரும்பின லாசரு. உயிரற்றுப்போனவன் இப்பொழுது போஜனம் பண்ணுகிறான். சந்தோஷம் கொண்டாடுகிறான். ஜீவ அதிபதியாகிய இயேசுவோடு சம்பாஷித்து சந்தோஷிக்கிறான். அந்த நேச சகோதரனைப்பார்க்கும்போது மரியாள் மனதில் அன்பு பொங்கி அவனுக்கு உயிர் தந்த ரட்சகருக்கு ஸ்தோத்திரம் செலுத்த ஓடிவருகிறாள் **புது ஜீவனை தந்ததற்காக நன்றியறிதல்** இன்னும் ஓர் காரியம். அவருடைய சிரசின் மேல் மாத்திரமல்ல. பரி. யோவான் சொல்லுகிற பிரகாரம் அவருடைய பாதங்களிலும் அந்தத் தைலத்தை ஊற்றினாள். அதற்கு முன் அடிக்கடி அந்தத் திருபாதங்களின் அருகே உட்கார்ந்து ஜீவோபதேசத்தைக் கேட்டிருந்தவள் அல்லவா? கிறிஸ்துவின் பாதம் பாவிக்குச் சரணம். அந்தச்சரணாரவிந்தத்தை அபிஷேகம்பண்ணி தன் நன்றியறிதலைக் காண்பித்தாள். **ஞானோபதேசம் செய்ததற்காக நன்றியறிதல்.** என் பிரிய சகோதரரே! உங்களுக்கு நன்றியறிந்த மனமுண்டா? பாவ குஷ்டரோகம் நீங்கின சகோதரரே, அக்கிரமங்களில் செத்தும் இயேசுவால் புது நித்திய ஜீவனை அடைந்த விசுவாசிகளே! அருள் வாக்கின் வல்லமையை உங்கள் அநுபோகத்தில் அறிந்திருக்கிற கிறிஸ்தவர்களே நீங்கள் எல்லாரும் வாருங்கள் வாருங்கள். நன்றியறிதலோடு வந்து ஸ்தோத்திரபலியை செலுத்துவோமாக. 'ஆண்டவரே, என் குஷ்டரோகம் நீங்கி நான் சுத்தமானதற்காக உமக்கே ஸ்தோத்திரம், அருள் நாதரே! பாவத்தில் மரித்த என்னை உயிர்ப்பித்து



ரட்சித்ததற்காக உமக்கே ஸ்தோத்திரம்' இயேசு ஐயரே! நித்திய ஜீவ வசனங்களைத்தந்து எனக்கு மோட்ச வழியைக் காட்டினதற்காக உமக்கே ஸ்தோத்திரமுண்டாவதாக. ஆமென்.

## II. தன்னுடைய அன்பைக்காட்டும்படி அந்தத் தைலத்தை ஊற்றினாள்.

ஒருவனுடைய அன்பின் அளவு அவன் ஈவினாலே தெரியும். யோனத்தான் தாவீதை வெகுவாய் நேசித்தான் அதினாலே சொந்த வஸ்திரத்தையும் ஆயுதவர்க்கங்களையும் கழற்றி அவனுக்கு கொடுத்துவிட்டான். அது லேசான ஈவு என்று நினைக்கிறீர்களா? ஆகாஸ்வேரு ராஜா எஸ்தரை அதிகமாய் நேசித்ததினாலே தன் ராஜ்யத்தில் பாதிமட்டும் அவளுக்குக் கொடுக்கும்படி சம்மதித்தான். 'தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனைத்தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்' அப்படியானால்—இந்த ஸ்திரியின் அன்பு எவ்வளவு என்றுபார்ப்போம். 'விலை யேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தைக் கொண்டுவந்தாள் (யோவா 12:3). ரோமருடைய ராஜ்யத்தில் அது ஓர் விசேஷித்த தைலம். விலையுயர்ந்த தைலமானதால் பெரியபிரபுக்களின் வீடுகளில்மாத்திரம் அதைக்காணலாம். மரியாள் என்பவள் எவ்வளவுகாலம் பிரயாசப்பட்டு பணங்களைச்சேகரித்து அதைச்சம்பாதித்தாளோ தெரியாது. அந்தத் தைலம் உத்தேசம் ரூ. 1,000 பெறும் சேர்த்தியான பாணியில் அந்த தைலத்தைவைத்து அதிகமான விலைக்குக்கொடுப்பார்கள். வாசனையுள்ள தைலம், அதிக வருத்தத்தோடு சம்பாதித்ததைலம், அப்படிப்பட்ட தைலத்தை ஊற்றினாள். ஆனால் சொல்ல வேண்டுமென்றால் அந்தத் தைலத்தை விட மரியாளுடைய அன்பு இயேசுவுக்கு விலையேறப்பெற்றது. அந்தத்தைலத்தின் வாசனையைப்பார்க்கிலும் அவளுடைய அன்பின் சுகவாசனை ஆண்டவருக்கு மெத்த அருமையானது இன்னொரு விசேஷத்தைக் கவனித்துப்பாருங்கள். அந்தத் தைலம் எங்கேயிருந்து வந்தது? அது இந்து தேசத்துத் தைலமாம். ரோம வியாபாரிகள் இந்துதேசத்தில் சென்று இந்தவகை தைலத்தைக் கொண்டுவந்து வியாபாரம் பண்ணுவார்கள். இந்திய கிறிஸ்தவர்களே! அன்றைத்தினம் ஊற்றினதைலம் உங்கள் சொந்த தேசத்துத்தைலம், அப்படியானால் அன்பான அந்தக்கிரியையில் உங்களுக்கு ஓர் விசேஷித்த பங்கு உண்டு. உங்கள் தைலத்தை அல்லவா மரியாள் ஊற்றினாள்? இன்றைக்கும் என் ஆண்டவர் இந்த தேசத்தை விரும்புகிறார். ஆனாலும் புறதேசத்து ஸ்திரீயால் நீங்கள் செலுத்தவேண்டாம் சகோதரர்களே, கொண்டுவந்து அன்போடு ஊற்றுங்கள். மேலும் இந்த தேசத்து தைலம் என்றால் நளதம் என்னும் தைலமல்ல. இந்திய ஸ்திரீகளின் நேசமாகிய தைலம். சகோதரியே, உன் இருதயமாகிய பாணியில் நல்ல தைலமுண்டா? இயேசுவை நேசிக்கிறாயா? அப்படியானால் நேசரின் சிரசிலும் பாதத்திலும் அதை ஊற்றிவிடு. அப்பொழுது இந்தவிடம்மாத்திரமல்ல் பரலோக வீடும் அதின் பரிமளத்தினால் நிறைந்திருக்கும்.

**III. இயேசுவின் மரணத்தை தெரிவிக்கும்படி அந்தத்தைலத்தை ஊற்றினள்.**

'என்னை அடக்கம்பண்ணுவதற்கு எத்தனமான செய்கையாயிருக்கிறதென்று' ஆண்டவர் அறிவித்தார் (மத். 26:22) பரிசேயர் முதலானவர்கள் யோசித்த காரியம் அந்தக் குடும்பத்துக்குத் தெரியாமலிருக்கவில்லையென்று நாம் நினைக்கலாம். மரணமானது அந்த வீட்டிலே வந்து நிழலிட்டதுபோலிருந்தது. அந்தத் திருச் சரீரத்தை மற்வர்கள் வதைத்துக் கொலைசெய்தாலும் நானாவது அதைக் கனம்பண்ணி தைலாபிஷேகம் செய்வேன் என்பதுபோல மரியாள் வந்து இப்படிச்செய்தாள். அவள் நோக்கம் எப்படியிருந்தபோதிலும் தம்முடைய மரணத்தை தெரிவிக்கும் அடையாளமாக ரட்சகர் அந்தச் செய்கையைப் பாராட்டினார். பிரியமானவர்களே! இதின்பொருளை நான் அதிகமாய் விஸ்தரித்துக்காட்ட அவசியமில்லை. நன்றியறிதலைச்செலுத்தமாத்திரமல்ல, அன்பைக் காட்டுவதோடுகூட கிறிஸ்துவின் மரணத்தை அறிவிக்கவும் அந்தப் புண்ணிய மரணத்தினாலுண்டான சகல நன்மைகளையும்பெற்றனுபவிக்கவும் பரிசுத்த நற்கருணையில் சேருகிறோம். 'இந்த அப்பத்தைப் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தை தெரிவிக்கிறீர்கள் (iகொரி.11:26). ஆகையால் மறுபடியும் வந்து அந்த மரணபுண்ணியத்தில் பங்கு பெற்று சந்தோஷமாயிருப்பீர்கள். திரும்பவும் வந்து தேவாட்டுக்குட்டியின்மேல் கைகளை வைத்து உங்கள் பாவங்களை அறிக்கையிடுங்கள் மீளவும் வந்து இயேசுவின் ரத்தத்தில் ஸ்நானம் பண்ணுங்கள். விசுவாசத்தோடு சேர்ந்து அவர் சிரசின்மேல் அன்பின் தைலத்தை ஊற்றி மரியாள்போல் அவருடைய ஆசீர்வாதத்தைப்பெற்று சமாதானத்தோடுபோய்ப் பரிசுத்த ஜீவியம் செய்யுங்கள்.

T. W.

## ஓர் சிறந்த பக்தன்.

பிரியமானவர்களே நாம் கூடிவந்திருக்கும் இச்சமயம் மிக முக்கியமானது. நம்மெல்லாருடைய இருதயங்களும் துக்கம் நிறைந்திருக்கின்றன. இங்கே நாம் சேர்ந்து வருவதற்கு காரணமாகிய மரண சம்பவம் பெரிய துக்கமே. கடந்த ஐந்து வருஷகாலங்களாய் நமது மத்தியில் சிறந்த தேவஊழியம் செய்துவந்த நமது அருமை சகோதரராகிய ஆர்தர் திடீரென்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அவரது அருள் நிறைந்த முகத்தை இனி என்று பார்க்கப்போகிறோம்? அவரது கனிந்த வார்த்தைகளை என்று கேட்கப்போகிறோம்? இந்த நம்முடைய கண்கள் இவ்வுலகில் அவர் முகத்தைப் பார்க்கமாட்டாது. நமது ஜீவிய சம்பவங்கள் யாவும் தற்செயலாய் நடப்பவையல்ல; நமது வாழ்வு, தாழ்வு, இன்பம், துன்பம், ஜீவன், மரணம் யாவும் தேவகரத்தின் நடத்துதலாயிருக்கின்றன. நாம் நிர்விசாரிகளாய்த் தூங்கும்போது ஆண்டவர் நம்மைத் தட்டி எழுப்புகிறார். இவர் மரணத்தால் ஆண்டவர் இப்போது வல்லமையாய்ப் பேசுகிறார். நம்மைத் தாழ்த்துவோமாக. தன் ஏகபுத்திரனைச் சாகக்கொடுத்த ஸ்திரீ "என் பாவத்தை நினைப்பூட்ட என்னண்டைக்கு வந்தீரோ' என்று தீர்க்கதரிசிக்குச்சொல்லி, தனக்கு நேரிட்ட பெரிய துக்கத்தில் தன் பாவத்தை நினைத்தாள். அது போலவே நாமும் நமது பாவங்களைச் சற்று நினைப்போமாக, ஆம் இந்தப் பெரிய துக்கத்தில் மூழ்கி இருக்கிற நாம் நம்முடைய பாவங்களை உணரவேண்டியதவசியமே. இன்னும் பகலாயிருக்கும்போதே நமது சகோதரனுடைய சூரியன் அஸ்தமித்தது. ஆனதினால் நாம் எவ்வளவு விழிப்புள்ளவர்களாயிருக்கவேண்டும். அவர் தமது ஓட்டத்தை முடித்தார் நாம் என்ன நோக்கத்தோடு இங்கே திரள் கூட்டமாய் வந்திருக்கிறோம். நமது அனுதாபத்தைக் காட்டிவிட்டுப்போகவோ அல்லது நமது அருமை சகோதரனில் காணப்பட்ட சிறந்த இலட்சணங்களைக்குறித்துப் புகழ்ந்து பேசிவிட்டுப்போகவோ இங்கே கூடி வந்திருக்கிறோம். ஆம், ஆனால் இது விசேஷித்த நோக்கமல்ல; அவரைப்போல நாம் ஜீவிக்கத் தீர்மானம் செய்யவேண்டும். இல்லாவிட்டால் நாம் கூடிவந்ததில் யாதொரு பிரயோஜனமுமில்லை. மரித்துப்போன நமது அருமை சகோதரனில் காணப்பட்ட குணாதிசயங்களைப்பற்றிச் சற்றுக் கவனிப்போமாக.

முதலாவது சுயவெறுப்பு. அவர் பெரிய கல்விமான். மேலான அந்தஸ்தை உடையவர். மாதம் ஒன்றுக்கு ஏறக்குறைய ஐந்நூறு ரூபாய் சம்பாதித்தவர். பரீட்சைகளில் முதல் வகுப்பில் தேறினவர். அநேக பிரபுக்களால் கண்ணியமாய் எண்ணப்பட்டவர். திருநெல்வேலி ஜில்லாவில் பேர்பெற்ற லாயராயிருந்தவர். அவருக்கு லாபமாயிருந்தவைகள் எவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினார். அது மாத்திரமல்ல, கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் குப்பையாகத் தள்ளிவிட்டார். உலக ஞானம், உலக டம்பம், உலகமேன்மை, சுகவாழ்வு இவைகளை எல்லாம் இழந்து ஏதுமற்ற ஒரு அகதியைப்போல அவர் நமது மத்தியிலே ஜீவித்துவந்தார். மச்சு வீட்டில் வாழ்ந்தவர் எட்டடிசதுரமுள்ள ஒரு சிறு அறையிலே வாசம்பண்ண நேரிட்டது.

இரண்டாவது சிறந்த தேவபக்தி. அவர் குணப்பட்ட நாள் முதற்கொண்டு மரண பரியந்தம் ஆண்டவருக்குச் சிறந்த சாட்சியாக விளங்கினார். திறந்துவைக்கப்பட்ட ஒரு நிருபத்தைப்போல ஜீவித்துவந்தார். அவர் இருதயம் மகிமையால் நிறைந்திருந்தது. அப்படி மகிமையால் நிறைந்திருந்தபடியினாலே அவர் உள்ளத்திலிருந்து ஜீவதண்ணீருள்ள நதிகள் பாய்ந்

துகொண்டேயிருந்தன. ஞானத்தின் ஆவி, உணர்வின் ஆவி, ஆலோசனையின் ஆவி, ஆத்தும பெலனையருளும் ஆவி, அறிவின் ஆவி, மெய்த் தேவபக்தியின் ஆவி, பரிசுத்த பயத்தின் ஆவி முதலிய இந்த ஏழு ஆவியின் வரங்களும் அவருக்குள் நிறைந்திருந்தன. சோதனைகளும் நஷ்டங்களும் கார்மேகம்போலக் குமுறி கடல்போல கொந்தளித்து அவர் மேல் எழும்பி வந்தாலும், எத்தனை அம்புகளும் கொடுமையான குண்டுகளும், அவர்மேல் ஊடுருவப்பாய்ந்தாலும் அவர் அஞ்சாமல் அசையாத விளக்கைப்போல விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருந்தார். கஷ்டநஷ்டங்கள், வியாதி வருத்தங்கள், மரணங்கள் அவர் குடும்பத்தில் உண்டானபோதிலும் அவர் விசுவாசத்தில் தளர்ந்துபோகவில்லை. தெய்வசித்தத்துக்கு தம்மை முழுவதுமாய் ஒப்புக்கொடுத்து மன சமாதானமுள்ளவராயிருப்பார். கடைசிபரியந்தம் அவர் தேவனைப் பிதாவாகவும் இயேசுகிறிஸ்துவைத் தன் இரட்சகராகவும் பரிசுத்த ஆவியானவரைத் தன் தேற்றரவாளனாகவும் வேதத்தை வழிகாட்டியாகவும் மோட்சத்தைத் தமது சொந்த வீடாகவும் பாவித்து "நமது குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது" என்பதை உணர்ந்தவராய் ஜீவித்துவந்தார். இந்தப் பக்தன் ஆண்டவருடைய பேரன்பைத் தியானிக்கும்போதெல்லாம் அவர் கண்கள் அருவியாய் கரைந்துபோகும். ஆண்டவருடைய திருப்பாடுகளையும் மரணத்தையும் அவர் நினைவு கூறும்போதெல்லாம் தாங்கக்கூடாதவராய் விம்மி விம்மி அழுது கண்ணீர் சிந்துவார். அவர் ஜெபம், வேதவாசிப்பு, பிரசங்கங்களெல்லாம் கண்ணீர் கலந்ததாயிருந்தன. இப்படி அவர் அழுதபடியினால் அநேகர் அவரைப் பரிகாசம் பண்ணினதுண்டு. இவர் இப்படி ஏன் அழவேண்டுமென்று அநேகர் கேட்டதுண்டு. பெருமைக்கென்று அழுதாரோ அப்படி அழவில்லை. ஆவியானவர் அவரிலே வல்லமையாய்க் கிரியைசெய்துகொண்டிருந்தார். பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் அன்பை அவருக்கு உணர்த்தி அவர் இருதயத்தை விலாசமாக்கும்போது அவர் அழாமலிருக்கக்கூடுமோ? கிறிஸ்துவின் சொல்லிமுடியாத அன்பையும் நமது சகோதரன் குணப்படுமுன் செய்த பல பாவங்களையும் உணரும்போதெல்லாம் மெய் மனஸ்தாபக் கண்ணீர் சிந்தாமலிருக்கக்கூடுமோ? இது மாம்சத்தின் கிரியையல்ல. மாம்சக்கிரியையினால் ஒரு மனுஷன் இவ்விதமாய் அழுது கண்ணீர் சிந்த முடியாது. மரணம் நேரிடும்போது ஜனங்கள் அழுவார்கள். தங்களுக்குப் பொருள் நஷ்டம் நேரிடும்போதும் பெருமூச்சுவிட்டுக் கண்ணீர் சிந்துவார்கள். ஆனால் தங்கள் பாவங்களை உணருகிறது யார்? அதற்காக உத்தம மனஸ்தாபப்பட்டு கண்ணீர் சிந்துகிறவர்கள் யார்? மரித்துப்போன நமது சகோதரனே தமது பாவத்தை நினைத்து நினைத்து அழுதார். மற்றவர்களுடைய பாவத்தை நினைத்து அழுதார். பவுலைப்போல அவர் கண்ணீர் சிந்தினார். எரேமியாவைப்போல எல்லாருக்காகவும் அழுது புலம்பினார். ஆண்டவரை அதிகமதிகமாய் அறியவேண்டுமென்றும் அவரை



எப்படியாவது ஆதாயம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்றும் அவரை மகிமைப்படுத்தவேண்டுமென்றும் அவரைப்போல அவர் ஜீவிக்கவேண்டுமென்றும் அவருக்காக எப்பொழுதும் ஜீவிக்கவேண்டுமென்றும் அவருக்குள் எப்பொழுதும் இருக்கவேண்டுமென்றும் அவர் வருகையில் பங்குபெறவேண்டுமென்றும் அவர் அதிகமாய் பிரயாசப்பட்டுவந்தார். மேலான வரங்களைப் பெறவேண்டுமென்கிற ஆசை அவருக்குள் அதிகமிருந்தது. அவைகளை எப்படியாவது அடையவேண்டுமென்று அவர் அதிக ஆவல் கொண்டார். ஆவியின் அபிஷேகத்துக்காக 23 நாள் இரவும் பகலும் ஆண்டவருடைய பாதத்தில் காத்திருந்து அதைப் பெற்றுக்கொண்டார். அவருக்கு ஆத்துமாக்கள் பேரிலே விசேஷித்த தாகமிருந்தது. அதினாலே அவர் எப்பொழுதும் தெருக்களிலும் கிராமங்களிலும் சென்று இரட்சகரைப் பிரசங்கித்து வந்தார். திருநெல்வேலி இன்னும் மற்ற இடங்களிலே அவர் இந்த விசேஷித்த வேலையை மிகுந்த ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் அநேக வருஷக்காலங்களாய்ச் செய்துவந்தார். எப்படியாவது ஒரு பாவியை ஆண்டவருடைய பாதத்தில் கொண்டுவரவேண்டுமென்கிற ஆசை பவுல் அப்போஸ்தலனைப்போல இவருக்குமிருந்தது. அவர் கிறிஸ்துவைத் தம்முடைய சொந்த சரீரத்தில் சுமந்துகொண்டு திரிந்தாரென்று சொல்லலாம்.

ஜெபத்தின் ஆவலையும் விண்ணப்பத்தின் ஆவியையும் உடையவராயிருந்தார். ஜெபம் பண்ணாமல் யாதொரு காரியத்தையும் தொடங்கமாட்டார். இரவும் பகலும் அவர் ஜெபம் செய்வதில் ஓய்ந்து போகவுமில்லை, களைத்துப்போகவுமில்லை. நடக்கும்பொழுதெல்லாம் கூட அவர் உதடுகள் அசைந்துகொண்டிருந்தன. ஆம், இந்தப் பக்தன் எப்பொழுதும் எந்நேரமும் ஜெபத்தியானமுடையவராயிருந்தார். இவர் ஜெபத்தினாலேயே ஜீவித்தார் என்பதற்குச் சந்தேகமில்லை.

அவர் பெரிய பக்திமான். முற்றிலும் தேவனையே நம்பி ஜீவித்தவர். தனக்கு மற்றவர்கள் உதவிசெய்யவேண்டுமென்று ஒருவரையும் எதிர்பார்க்கவில்லை. அவர் சிநேகிதர்களும் பந்துக்களும் அவருக்குப் பணஒத்தாசை செய்யும் போது அதை அவர் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. அப்படிப்பட்ட பணம் சுவாமிக்கென்று அனுப்பப்படாமல் தமதுபேரில் வைத்த ஒரு அனுதாபத்தினால் அனுப்பப்பட்ட பணமென்று ஏற்றுக்கொள்ளவில்லை. விசுவாசத்தினால் வராததெல்லாம் பாவம் என்று சொல்லுவார். இவருடைய விசுவாசமாகிய கரங்கள் மோட்சத்தின் சிகரங்களை எட்டிப்பிடித்துக்கொண்டிருந்தன. ஆண்டவர் அவரை விசேஷித்த பிரகாரம் ஆசீர்வதித்தார். அவரை அறியாத அநேகருடைய இருதயங்களை ஆண்டவர் ஏவிவிட்டு அவர்கள் மூலமாய் இவருக்கு வேண்டிய பண ஒத்தாசை செய்துவந்தார்.

மெய்யாகவே இந்த நீதிமான் கைவிடப்பட்டதுமில்லை ஒருக்காலமும் வெட்கப்பட்டுப் போனதுமில்லை.

அவர் உலகத்திலிருக்கும்போது ஆண்டவரையே தமக்கு ஆத்தும சரீர வைத்தியராகப் பாவித்து வைத்திய சிகிச்சை ஒன்றும் செய்கிறதில்லை. அப்படியே கடைசி பரியந்தமும் அவர் தம்முடைய ஊழியத்தை நிறைவேற்றிவந்ததில் வியாதி வருத்தத்தினால் ஒரு இடையூறும் நேரிடவுமில்லை. என்றாலும் மனுஷர் யாவரும் மரிக்கவேண்டியது அவசியம். அவர் விசுவாசத்துக்கு ஏற்றபடியே வியாதிப்படுக்கையிலிருந்து கஷ்டப்படாமல் நல்ல மரணம் அதாவது நீதிமானின் மரணத்தை அடைந்துகொண்டார். இப்போது நீதிமான்களின் ஆவிகள் இளைப்பாறும் ஸ்தலத்தில் பிரவேசித்திருக்கிறார். மனுஷருடைய கரங்களில் விழுவதைப்பார்க்கிலும் ஜீவனுள்ள தேவனுடைய கரத்தில் விழுவதையே அவர் தெரிந்துகொண்டார்.

மூன்றாவது சுறுசுறுப்பு. அவர் மிகவும் சுறுசுறுப்புள்ளவர். ஆண்டவருக்காக இரவும் பகலும் ஊழியஞ்செய்வதில் அவர் சோர்ந்துபோகவில்லை. நடு ராத்திரியிலும் கூட அவர் வேதம் வாசித்து ஜெபம் செய்துகொண்டிருந்தார். மற்ற நேரங்களில் புஸ்தகங்கள் மற்றும்பிரதிகள் முதலியவைகளை எழுதிக்கொண்டிருப்பார். அநேக பிரயோசனமுள்ள பக்திக்குரிய புஸ்தகங்களையும் அவர் எழுதி அச்சிட்டிருக்கிறார். எந்தத் தூரத்தையும் எப்படிப்பட்ட வெயிலின் கஷ்டத்தையும் அவர் கவனிக்கமாட்டார். எந்தக்கூட்டத்துக்கும் போவார். வீடுகள்தோறும் சென்று ஜெபம்செய்து வருவார். ஆண்டவருக்காக அவர் எவ்வித கஷ்டத்தையும் எடுத்துக்கொள்ளுவார். அவைகளை ஒரு பொருட்டாக நினைத்ததேயில்லை.

நான்காவது அன்பு. களங்கமற்ற அன்பை ஆடையாய் அணிந்திருந்தார். அவர் வார்த்தை எப்போதும் அன்பு நிறைந்தாயிருந்தது. அவர் எல்லார்பேரிலும் அன்பாயிருந்தார். எல்லாருக்காகவும் ஜெபம் செய்வார். அவரிடத்திலே யாதொரு வித்தியாசமுமிருந்ததில்லை. யார் என்ன சொன்னபோதிலும் ஒரு சிறு பிள்ளையைப்போல் விசனப்படாமல் ஏற்றுக்கொள்வார்; அவர் புத்திக்குச் சரியாயிருந்தால் ஏற்றுக்கொள்வார். இல்லாவிட்டால் பொறுமையான பதில் சொல்லிவிடுவார். ஆலயங்கள் விஷயமாய் அவர் ஒரு மெம்பராக இருந்து ஊழியஞ் செய்யாதது ஒரு பெரிய குறைவு என்று அநேகர் சொன்னதுண்டு. இப்படிக் குறைவு சொல்வது கிஸ்துவின் ஆவிக்கு முற்றிலும் விரோதமானது. என் பிரியமானவர்களே வரங்களில் வித்தியாசம் உண்டு, அவனவனுக்குரிய வரமுண்டு. அது ஒருவனுக்கு ஒரு விதமாயும் மற்றொருவனுக்கு வேறு விதமாயும் இருக்கிறது. மேலும் வரங்களில் வித்தியாசம் உண்டு, ஆவியானவர் ஒருவரே, ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே, கிரியைகளிலே



வும் வித்தியாசங்கள் உண்டு. எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே. விசேஷித்தவிதமாக மார்க்க எழுப்புதலை உண்டாக்கவும் தங்களைக் கிறிஸ்தவர்களென்று சொல்லிக்கொள்ளுகிறவர்களும் திருச்சபையின் அவயவங்களாயிருந்தும் திருச்சபையின் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளாமல் போகிறவர்களையும் மாயக்காரர்களையும் ஆதிகாலத்துப் பரிசேயனைப்போல் பிறனை அற்பமாய் எண்ணித் தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்ளுகிற தற்காலத்துப் பரிசேயர்களையும் இன்னும் கிறிஸ்துவை அறியாதவர்களையும் குணப்படுத்தும்படி அவர்களோடு பேசி அவர்களுக்காக ஜெபிப்பதே அவர் விசேஷித்த வேலையாயிருந்தது. சர்வலோகத்து நியாயாதிபதியானவரே அவரை நியாயம் தீர்க்கவேண்டியதேயன்றி அற்ப மனுஷரும் அவர் கல்வியிலாவது அந்தஸ்திலாவது கொஞ்சமும் ஈடாகாத நம்மைப்போலொத்தவர்களும் எப்படி அவரை நியாயம் தீர்க்கத் துணியலாம். இந்தியா தேசத்தில் சுவிசேஷ ஊழியம் செய்தவர்களில் இவர் ஒருவர் தான் பீ. ஏ. பீ. எல். ஆம். பக்தன் ஆர்தர் ஒருவரே பீ. ஏ. பீ. எல். இதை உணருகிறது யார்? மேலும் நம்முடைய சகோதரனாகிய ஆர்தருடைய ஊழியம் கிறிஸ்துவின் சித்தத்திற்கு முற்றிலும் உகந்ததென்று நான் சொல்லுவதற்குப் போதுமான ஆதாரமிருக்கிறது. 'அப்பொழுது யோவான் அவரை நோக்கிப் போதகரே! நம்மைப் பின்பற்றாதவன் ஒருவன் உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதைக் கண்டோம். அவன் நம்மைப் பின்பற்றாதவனானதால், அவனைத் தடுத்தோமென்றான். அதற்கு இயேசு அவனைத் தடுக்கவேண்டாம் என் நாமத்தினாலே அற்புதம் செய்கிறவன் எளிதாய் என்னைக் குறித்துத் தீங்கு சொல்லமாட்டான். நமக்கு விரோதமாயிராதவன் நமது பக்ஷத்திலிருக்கிறான்' St. Mark 9: 38. இப்படித் தம்மைப் பின்பற்றாத ஒரு மனுஷன் தம்முடைய ஊழியத்தைச் செய்யத் துணிந்தபோது அதை அசட்டை செய்யாமல் அதையும் ஏற்றுக்கொண்ட கருணாகரக் கடவுள் தம்மை முற்றிலும் நம்பி தமக்காக உலக மேன்மையையும் சுகத்தையும் வெறுத்து இரவும் பகலும் பாடுபட்ட அந்தப் பக்தனுடைய சிறந்த ஊழியத்தை ஏற்றுக்கொள்வது அதிக நிட்சயமல்லவா?

ஐந்தாவது வைராக்கியம். இவர் மார்க்க விஷயத்தில் காட்டின வைராக்கியத்துக்குக் கங்குகரையில்லை. காலஞ்சென்ற மகான்களாகிய Wesley, Luther, Whitfield முதலானவர்களின் வகுப்பைச்சேர்ந்தவர். உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை. இவர் சத்தியத்தைச் சத்தியமாகவும் பாவத்தைப் பாவமாகவும் கண்டித்து உணர்த்துவார். இந்த நீதிமான் சிங்கத்தைப்போலே தைரியமுள்ளவர் ஆம் இடிமுழக்கத்தின் மக்களில் ஒருவரான பரிசுத்த யோவானின் ஆவி இவருக்குள்ளிருந்தது. இவர் பிரசங்கங்களின் மூலமாய் அநேகர் குணப்பட்டார்கள் இந்துக்கள் முத

லாய் இவர் செய்த வல்லமையான பிரசங்கங்களைக் கேட்டு ஆச்சரியப்பட்டு நடுங்கினார்கள். இவரைப்போல் நமது தேசத்தில் ஒரு மனுஷனைக் கண்டதுமில்லை இனி காணப்போகிறதுமில்லை. மிகுந்த மனத்தாழ்மை பரோபகார சிந்தை முதலான இன்னும் அநேக நற்குணங்கள் இவர் ஜீவியத்தில் சிறந்து விளங்கின. அவைகள் எல்லாம் பன்னியுரைக்கக் காலம்போதாது என் பிரியமான சகோதரர்களே! இந்தப் பக்தனுடைய ஜீவியத்தில் நமக்கு ஒரு படிப்பினையில்லையோ? இந்தக் கூடாரத்தில் அவர் இருந்தமட்டும் நம்மை நினைப்பூட்டி எழுப்பிவிட்ட காரியங்களை நாம் எப்பொழுதும் நினைத்துக்கொள்ளப் பிரயத்தனம் பண்ணக்கடவோம் நீ உத்தமனை நோக்கிச் செம்மையானவனைப் பார்த்திரு, அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம் சங். 37: 37. நீதிமான் மடிந்துபோகிறான், ஒருவரும் அதை மனதில் வைக்கிறதில்லை; பக்திமான்கள் எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள். ஆனாலும் தீங்கு வராததற்குமுன்னே நீதிமான் எடுத்துக்கொள்ளப்படுகிறான் என்பதைச் சிந்திப்பாரில்லை. நேர்மையாய் நடந்தவர்கள் சமாதானத்துக்குள் பிரவேசித்து, தங்கள் படுக்கைகளில் இளைப்பாறுகிறார்கள். ஏசா 57 1-2. பிரியமானவர்களே தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப பின்பற்றுங்கள். எபிரேயர் 13: 7.

### சந்தாவரவு

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Rev. C. N. Eames | 3 | 0 | 0 | Miss Warley | 1 | 14 | 0 |
| Miss Kurduwitch | 2 | 2 | 0 | Mr. S. Thangamuthu | 0 | 8 | 0 |
| M. J. Joseph | 0 | 8 | 0 | ,, A. E. Easho | 1 | 2 | 0 |
| James Narayanasami | 0 | 12 | 0 | ,, G. Y. Tucker | 0 | 12 | 0 |
| A. David, Pal Evan. | 1 | 14 | 0 | ,, P. Duraisami | 0 | 7 | 0 |
| Miss Elwin | 10 | 11 | 0 | ,, G. Asirvatham | 0 | 7 | 0 |
| Mr. M. Devaprasatham | 0 | 7 | 0 | ,, Thomas Peter | 0 | 8 | 0 |
| C. H. Cooke Esq. | 1 | 13 | 0 | Rev. James Rowland | 0 | 15 | 0 |
| Mr. Gnana Desigar | 0 | 7 | 0 | Mr. D. Thangiah | 0 | 8 | 0 |
| ,, R. Gopalakrishnan | 0 | 9 | 0 | ,, John Devasagayam | 1 | 5 | 0 |
| ,, J. P. Thomas | 3 | 7 | 0 | Mr. S. G. Ponnammal | 0 | 7 | 0 |
| ,, C. G. Isaac | 0 | 8 | 0 | ,, D. Samuel | 0 | 7 | 0 |
| ,, J. E. Vinayagam | 0 | 8 | 0 | Ensign Yudha Daksha | 0 | 8 | 0 |
| ,, A. V. Manikam | 1 | 0 | 0 | Mr. N. S. Christian | 0 | 8 | 0 |
| ,, S. Joseph | 0 | 7 | 0 | | | | |

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

August, 1915. Registered—No. M. 316

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

" என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." (யோவான் 7: 38)

Vol. XVI ஆகஸ்ற்று **1915**

## மூன்று கண்ணாடிகள்

**'கண்ணாடியிலே தன் சுபாவமுகத்தைப்பார்க்கிற மனுஷன்'** யாக். 1: 23.

கண்ணாடி மிகவும் பிரயோஜனமுள்ளது. அதிலே நமது சாயலைக் காண்கிறோம். பெரிய கடைக்குள் பிரவேசிக்கிறவர்கள் திடீரெனத் தங்கள் சாயலை எதிரேயிருக்கும் கண்ணாடியில் கண்டு பிரமிப்பதுண்டு. முகக் கண்ணாடி, பாதிச்சரீரத்தைக் காட்டும் கண்ணாடி, முழுச்சாயலையும் காண்பிக்கும் கண்ணாடியெனப் பல அளவான கண்ணாடிகள் இருக்கிறது. முகவசீகரமுள்ளவர்கள் தங்கள் அழகைப் பார்க்கும்படி அடிக்கடி கண்ணாடி முன் நிற்பார்கள். அழகில்லாதவர்கள் தங்கள் சாயலைக் கண்டமாத்திரத்தில் கண்ணாடிக்கு விலகிக்கொள்வார்கள். இப்பொழுது நமது முகத்தையல்ல நமது உள்ளான குணத்தைக் காட்டும் மூன்றுவகைக் கண்ணாடிகளைப் பார்ப்போம்.

1. **வசனக்கண்ணாடி.** கர்த்தருடைய திருவசனமே நமது உள்ளான ஜீவியத்தை வெளிப்படுத்தும் ஞானக்கண்ணாடி. நாம் அவ்வசனங்களை வாசிக்கும்போதும் அல்லது மற்றவர்கள் வாசிக்க நாம் கவனமாய்க் கேட்கும்போதும் அல்லது அவ்வசனங்களை எடுத்து மற்றவர்கள் பிரசங்கிக்கும்போதும் நமது உள்ளான சாயலை நாம் காண்கிறதில்லையா? வேதபாரகனாகிய எஸ்றா சபையாருக்குமுன் நின்று நியாயப்பிரமாணப் புஸ்தகத்தை வாசித்து, அர்த்தஞ்சொல்லி, அவைகளை விளக்கிக்காட்டினபோது ஜனங்கள் யாவரும் அழுதார்களல்லவா? கர்த்தர் தமது வசனத்தின் மூலமாய்

யோடு பேசத்தொடங்கினபோது, அவன் தன் சாயலைக்கண்டு தூசியிலும் சாம்பலிலும் தன்னைத் தாழ்த்தினானே. சபையைப் பாழாக்கின சவுல் கர்த்தரின் வார்த்தையைக் கேட்டுக் கீழே விழுந்து பாவிகளில் பிரதானமான பாவி என்று அறிக்கையிட்டானே. பேதுரு திருவசனத்தைக் கூறி அறிவித்தபோது மூவாயிரம்பேர் இருதயத்தில் குத்தப்பட்டு இரட்சிப்புக்காகக் கதறினார்களே.

சகோதரரே! இந்தக் கண்ணாடியை அடிக்கடி பார்ப்போமாக. பார்க்காவிட்டால் ஆத்துமாவின் சீரை அறியமாட்டோம். இருதயம் அழுக்கடைந்து அருவருப்பாய்ப் போனாலும் உணரமாட்டோம். உள்ளம் சுத்திகரிக்கப்படவும், பரிசுத்தமாகவும் நாடமாட்டோம். முகத்தைக் காட்டும் கண்ணாடி அழுக்கைக் காண்பித்தபோதிலும் அதை நீக்கும் வல்லமை அதற்கில்லை. திருவசனக் கண்ணாடியின் மூலமாய் தேவன் நமது கெட்டுப்போன நிலைமையை நமக்குக் காட்டுவதுமன்றி அவ்வசனத்தைக் கொண்டே நம்மை சுத்திகரித்து இரட்சிக்கக்கூடியவராயிருக்கிறார். வல்லமையுள்ள திருவசனமாகிய கண்ணாடியை இடைவிடாமல் நோக்கிப்பார்த்து உங்களை அலங்கரித்துக்கொள்ளுங்கள்.

2. **மனுஷக்கண்ணாடி.** இந்தக் கண்ணாடியை ரோமர் 2: 1-ல் பார்க்கிறோம். 'மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி, போக்குச்சொல்ல உனக்கு இடமில்லை; நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ, அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களைக் குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய்.' மற்ற மனுஷரில் நம்முடைய சாயலைக் காண்கிறோம். அவர்கள் நம்மை நமக்குக் காட்டும் கண்ணாடிகள்போலிருக்கிறார்கள். தேவகிருபையினால் நாம் இரட்சிக்கப்பட்டு அநேக பொல்லாங்குக்கு நாம் விலகினவர்களாயினும், மற்றவர்கள் நம்முடைய மறைவான நோயை நமக்கு வெளிப்படுத்தி நம்மை வெட்கப்படுத்துகிற கண்ணாடிகளாயிருக்கிறார்கள். புறம்பான மனுஷருடைய ஜீவியத்தையும் ஜாடைகளையும் நோக்கங்களையும் கவனிக்கும் பக்தர்களுக்கு இது நன்றாகத்தெரியும். ஒருவேளை நம்மை அவர்கள் அறியாதிருக்கலாம். என்றாலும் நமது உள்ளான பாவசுபாவத்தை அவர்கள் தங்கள் பேச்சினால் அல்லது செய்கையினால் உணர்த்திவிடுகிறார்கள். அப்படி நாம் உணர்த்தப்பட்டது முதலாய் அவர்களுக்குத் தெரியாதிருக்கலாம்.

தேவபக்தியாய் ஜீவிக்க விரும்பின ஒரு உபாத்திச்சி தன் மாணாக்கிகளில் ஒருத்தி ஒரு பாவத்தைச் செய்தபோது அதே தப்பிதம் தனக்குள்ளிருப்பதை உணர்ந்து அக்குற்றத்தை விசாரிக்கத் தைரியமற்றுப்போனாள். அந்தப் பிள்ளையின் நடக்கையில் தன் சாயலைக்கண்டு தன்னைத் தாழ்த்தும்படியாயிற்று. ஒரு முற்கோபி தன் கோபத்துக்கு இடங்கொடாமலிருந்தா



லும் இன்னொருவன் கோபங்கொண்டு பெரும்பாதகத்தைச் செய்தானென்று கேள்விப்படும்போது தன் சாயலைக் கண்டுகொள்ளுகிறானல்லவா? இப்படியே மற்றவர்கள் தங்களுடைய நடக்கையினால் நமக்குள் மறைந்திருக்கும் பொல்லாத சுபாவத்தை வெளிப்படுத்தும் கண்ணாடிகளாயிருக்கிறார்கள்.

ஆனாலும் எல்லாரும் இப்படிக் காண்கிறதில்லை. தாங்கள் எவ்வளவு அக்கிரமத்தைச் செய்தாலும் தங்களுக்கு அது தோன்றுகிறதில்லை. ஆகையால் மற்றவர்களிடத்தில் தப்பிதத்தைக் காணும்போது அவர்களை ஆக்கினைக்குட்படுத்தத் தீவிரிக்கிறார்கள். அவர்கள் மற்றவர்களிடத்தில் குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ, அவைகளை அவர்களே செய்கிறபடியால், அவர்கள் மற்றவர்களைக் குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே தங்களைத் தாங்களே குற்றவாளிகளாகத் தீர்க்கிறோமே என்பதை அவர்கள் அறிகிறதில்லை. ஒரு கிராமத்தில் ஒரு மனுஷன் துன்மார்க்கமாய் நடந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டான். அவனைப் பிடித்தவர்கள் அவனை நடத்தின விதம் இவ்வளவென்று சொல்லமுடியாது. முகத்தில் துப்புகிறதும், மண்ணைவாரிப்போடுகிறதும், சாணியைக் கரைத்துத் தலைமேல் ஊற்றுகிறதும், கீழே போட்டு உதைக்கிறதும் இழுக்கிறதுமாகப் படாதபாடுபடுத்தினார்கள். இவனுக்கு இப்படிச் செய்தவர்கள் யாரென்று விசாரித்தால் அவனிலும் மகா துன்மார்க்கர் எனத் தெரியவந்தது. அவனோ ஒருநாள் துன்மார்க்கன், இவர்களோ நீடித்த துன்மார்க்கர். என்றாலும் தங்கள் கேடான நிலைமையை அவர்கள் அறியவில்லை. கண்ணாடியில் தன் சாயலைக்கண்ட புலி, தானே அதுவென்று அறியாமல், அதை வேறே புலியென்று நினைத்துச் சீறிப் பாய்ந்து விழுந்து கண்ணாடியையும் உடைத்து தன்னையும் காயப்படுத்திக்கொண்டதுபோல இவர்களும் தங்களையே ஆக்கினைக்குட்படுத்திக் கொள்ளுகிறார்கள். ஆண்டவர் நம்மை நமக்குக் காட்டுவாராக.

ஏதோ குற்றத்தினிமித்தம் இருவர் விலங்கிடப்பட்டுக் கொண்டுபோகப்பட்டார்கள். ஒரு பக்தன் அதைப் பார்த்துக்கொண்டிருந்தார். சிலர் அவரைப் பார்த்து ஐயா! அக்கிரமக்காரர் அகப்பட்டுக்கொண்டதை பார்த்தீராவென்று பரிகாசமாய்ப் பேசினார்கள். அதற்கு அவர் அப்படி ஒருபோதும் சொல்லவேண்டாம். தேவகிருபை என்னைக் காக்காவிட்டால் நான் அவர்களில் ஒருவனாயிருந்திருப்பேன் என்றார். சகோதரரே, பிறருடைய தவறுதல் அக்கிரமங்களைக் குறித்து நாம் கேள்விப்படும்போது சந்தோஷப்படாமலும், தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும் இந்த ஆயக்காரனைப்போலவும் இராததினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன் என்று பெருமையாய்ச் சொல்லாமலும், 'நான் இருக்கிறது தேவகிருபையினால் இருக்கிறேன்' என்று தாழ்மையோடு சொல்வோமாக.

**3. மக்கள் கண்ணாடி.** இது நாம் பெற்ற நமது சொந்தக் கண்ணாடிகள். பெற்றோர் தங்கள் சாயலைத் தங்கள் பிள்ளைகளில் காண்கிறார்கள். முகச்சாயலைப்பற்றி நான் பேசுகிறதில்லை. 'தாயைப்போல மகள்' என்று வேதத்தில் சொல்லியிருக்கிறது (எசேக். 16: 44). 'ஆதாம் தன் சாயலாகத் தன் ரூபத்தின்படியே ஒரு குமாரனைப் பெற்றான்' என்றும் வாசிக்கிறோம். பிள்ளைகள் சில வேளைகளில் சரியாய்த் தாய் தகப்பன் சாயலாகப் பிறக்கிறதுண்டு. சில வேளைகளில் இருசாயலும் சேர்ந்து பிறக்கிறதுண்டு. சில வேளைகளில் தாய்வழி, தகப்பன் வழியைச் சேர்ந்த இனத்தார் சாயலாகவும் பிறக்கிறதுண்டு. நாம் இப்பொழுது பிரதானமாய்க் கவனிக்கிற சாயல் மாம்ச சாயல் அல்ல. உள்ளான சாயலே நமது தியானமாயிருக்கிறது.

ஆதாம் பாவம் செய்தபோது தன் மனைவிபேரில் குற்றத்தைச் சாட்டினான். காயீன் ஆபேலைப் பகைத்துக் கொலைசெய்தபோது தகப்பன் தன் பாவசாயலைக் காணவில்லையா? யாக்கோபு தன் எத்தைத் தன் மக்களிடத்தில் காணவில்லையா? தாவீது தன் பாவத்தைத் தன் பிள்ளையினிடத்தில் காணவில்லையா? பெற்றோர் தேவகிருபையால் தேவபக்தியுள்ளவர்களாயிருந்தபோதிலும் அடிக்கடி தங்கள் பிள்ளைகளிடத்தில் தங்கள் சாயலைக்கண்டு தங்களைத் தாழ்த்தவேண்டியதாயிருக்கிறதே. நாத்தான் தாவீதைப் பார்த்துச் சொன்னதுபோல, பிள்ளைகள் தங்கள் தகாத செய்கையினால் 'நீயே அந்த மனுஷன்' என்று பெற்றோரைக் கடிந்துகொள்ளுகிறதுபோலிருக்கிறதே. தேவபக்தனான ஒரு சிநேகிதன் எனக்குண்டு. அவர் பிள்ளைகளில் ஒருவன் கோபங்கொண்டபோது, இது என்ன கோபம் அப்பா! என்று சொன்னார். பக்கத்தில் நின்ற என் சிநேகிதனின் தாயார் உடனே மகனைப் பார்த்து: அது நீர்தான் மகனே, நீர் சிறுவயதாயிருந்தபோது உமது கோபத்துக்கு எல்லையுண்டாவென்றார்கள். பெற்றோரே! உங்கள் குணத்தை மறந்துபோனீர்களோ? உங்கள் பெலவீனம் உங்களுக்குத் தெரியவில்லையோ? உங்கள் சிறுபிள்ளைகளைக் கவனித்துப்பாருங்கள். உங்களைத் தாழ்த்துங்கள். அவர்களுக்காக ஜெபியுங்கள். தேவனுக்குப் பயந்தவரும் ஜனங்களுக்குப் பிரியமானவருமான ஒரு ஐயா இருந்தார். அவருடைய சின்னமகனைப்பற்றி இன்னின்னபடி உங்கள் மகன் செய்தான் என்று சிலர் அவரிடத்தில் வந்து சொன்னார்கள். உடனே அவர் முகம் துக்கமாகமாறிற்று. தன் தலையைக் கவிழ்ந்துகொண்டார். ஒருவரும் ஒன்றும் பேசக்கூடாமற்போயிற்று. கண்ணாடியாகிய தன் பிள்ளையில் தன் சாயலைக் கண்டாரோ? நமது பிள்ளைகள் பிறக்கும்போதே இரட்சிக்கப்பட்டிருந்தால் எவ்வளவு பாக்கியம். ஆகிலும் மாம்ச பிறப்பு வேறே; மறுபிறப்பு வேறே. இப்படிப்பட்ட கண்ணாடிகளில் நமது சாயலைக்கண்டு அதை மறந்துவிடாமல் நாமும் நமது பிள்ளைகளும் தேவனுடைய ராஜ்யத்



துக்கு ஆளாகத்தக்கதாக தேவனுடைய சகல பரிபூரணமும் நிறைந்த கர்த்தராகிய இயேசுவை என்றும் பற்றிக்கொள்வோமாக.

என் இரட்சகா, நீர் என்னிலே மென்மேலும் விளங்கும்
பொல்லாத சிந்தை நீங்கவே சகாயம் புரியும்.
மாசற்ற திவ்ய சாயலை உண்டாக்கியருளும்;
என்னில் தெய்வீக மகிமை மென்மேலும் காண்பியும்.

## வேதாகம ஆராய்ச்சி

### வேதபாடம் 16

ரூத்தின் ஆகமத்தை நாம் வாசித்துக்கொண்டு வருகையில் இதற்கும் நியாயாதிபதியின் புஸ்தகத்திற்கும் ஒரு பெரிய வித்தியாசத்தைக் காண்போம். நியாயாதிபதிகளின் புஸ்தகமானது குழப்பங்களுள்ள ஒரு காலக்கிரமமான சரித்திரம். அதில் இருண்டதும், பயங்கரமானதுமான சம்பவங்கள் எழுதப்பட்டிருக்கிறது. ரூத் ஆகமமோ ஒரு இன்பமான சரித்திரமடங்கிய ஒரு பாட்டாகமம். குழப்பங்களுக்கிடையில் சமாதானமான காலம். எங்குபார்த்தாலும் ஆண்கள், பெண்கள் வேலை செய்கிறார்கள். அன்பாயிருக்கிறார்கள். சந்தோஷம் கொண்டாடுகிறார்கள். பெத்லகேமிலே அலப்புகிறவர்கள் நகோமி திரும்பி வந்ததைப்பற்றி பேசிக்கொள்ளுகிறார்கள். போவாஸ் வயலறுப்பு எஜமானாய் நிற்கிறான். யுத்தத்தின் சத்தம் அப்போது கேட்கப்படுவதில்லை. இக்காட்சியானது பாலைவனத்தின் மத்தியிலே காணப்படும் நீரூற்றுள்ள செழிப்பான இடம்போலிருக்கிறது.

திவ்ய அதிகாரமுள்ள ஆகமங்களின் வரிசைக் கிரமத்தில் காலக்கிரமத்தின்படி இவ்வாகமம் நியாயாதிபதிகளின் புஸ்தகம் 8–ம் அதிகாரத்திற்குப் பின் வரவேண்டும்.

**இவ்வாகமத்தின் பெயர்.** இச்சரித்திரத்தின் விசேஷித்த ஆளாகிய மோவாபிய ஸ்திரீயான ரூத் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

**ஆக்கியோன்** இப்புஸ்தகம் நியாயாதிபதிகளின் ஆகமத்திற்கு அநுபந்தமாக சாமுவேலால் எழுதப்பட்டிருக்கலாமென்று அனுமானிக்கப்படுகிறது.

இவ்வாகமத்தில் வருகிற தனித்தனி ஆட்களைக்கொண்டு விசேஷித்த போதனைகள் கற்றுக்கொள்ளலாம்.

**எலிமெலேக்** (தேவனே இராஜா). தேவன் நியமித்திருக்கும் குடியிருப்பை விட்டுப்போகுதல் எவ்வளவு மதியீனம் என்று இவனுடைய சரித்திரத்தால் அறிகிறோம்.

அவன் இரண்டு மக்கள்;

**மக்லோன்** (நோய்கொண்டவன்).

**கிலியோன்** (மெலிந்துபோனவன்).

இவ்விரண்டுபேருடைய சரித்திரத்தால் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாததால் வரும் பாவமும் மதிகேடும் பார்க்கிறோம். அந்நிய பெண்களை விவாகம்பண்ணி நியாயப்பிரமாணத்தை மீறினதால் அவர்களுடைய ஜீவியநாட்கள் குறுகிப்போயின என்று ஒரு கல்தேய வசனமுண்டு.

எலிமெலேக்கின் மனைவியாகிய **நகோமி** (இன்பம், பிரியம்). இவளிடமிருந்து நம்முடைய பரம தகப்பனின் இடைவிடாத பாதுகாப்பும், அன்பான கரிசனையும் தெளிவாகிறது. மக்லோனின் மனைவியாகிய **ரூத்** (தோழமை, அழகு). தேவனிடத்தில் உறுதியாயிருப்பதின் முக்கியமும் அதனால் வரும் ஆசீர்வாதமும் இன்னதென்று இவள் நமக்குக் கற்பிக்கிறாள்.

கிறிஸ்துவே நான் விரும்புவது எல்லாம் நீரே.
எல்லாவற்றையும்விட உம்மில் அதிகம் காண்கிறேன்.

கிலியோனின் மனைவியாகிய **ஓர்பாள்** (நடினம், பாவனை) இருமனதினால் உண்டாகும் முடிவை இவள் காட்டுகிறாள்.

**போவாஸ்** (சுறுசுறுப்புள்ளவன்). தெய்வபக்தியுள்ளவனிடத்தில் காணப்படும் நற்குணமும், ஆசீர்வாதமும் இவனிடத்தில் காண்கிறோம்.

I. மோவாபுக்குக் குடியிருக்கப் போகுதல். 1-ம் அதி.
  1. எலிமெலேக்கும் அவன் மக்களும் 1 அதி. 1—5.
  2. நகோமியும் அவள் மருமக்கள்மாரும் 1 அதி. 6—22.

II. போவாசும் ரூத்தும் 2-ம், 3-ம் அதிகாரங்கள்.
  1. போவாஸ் 2 அதி. 1—16.
     அவன் வயல் ,, 2, 3.
     அவன் விசாரணை ,, 4—16.
  2. ரூத் ,, 17—23.
     கதிர் பொறுக்குதல் ,, 17.
     திரும்புதல் ,, 18—23.
  3. நகோமி 3 அதி.
     ரூத்துக்கு ஆலோசனை ,, 1—6.
     ரூத்தும் போவாசும் ,, 7—18.

III. முடிவு 4-ம் அதிகாரம்.
  1. **சுதந்தரவாளி 1—8.**
  2. **விவாகம் 9—12.**
  3. **முடிவு 13—22.**

I. மோவாபுக்குக் குடியிருக்கப் போகுதல். நியாயாதிபதிகள் 6-ம் அதி. 3-ம், 4-ம் வசனங்களில் சொல்லப்படும் பஞ்சத்தில் இஸ்ரவேலருக்கு ஆகாரம் ஒன்றுமில்லாமற் போய்விட்டது. இது அவர்களுடைய கீழ்ப்படியாமைக்கு ஒரு தண்டனை (உபா. 28: 48). இப்பஞ்சத்தினால் எலிமெலேக்கும் அவன் மனைவி நகோமியும் அவன் இரண்டு மக்களாகிய மக்லோனும் கிலியோனும் யூதேயா நாட்டு பெத்லகேமிலுள்ள தங்கள் வீட்டை விட்டு மோவாப் தேசத்தில் போய் சஞ்சரித்தார்கள். அங்கே அவர்கள் மக்கள் இரண்டுபேரும் மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாக (உபா. 7: 3) மோவாபிய பெண்களை விவாகம் பண்ணினார்கள்.

நகோமியும் அவள் இரண்டு மருமக்கள்மாரும் (ஓர்பாள், ரூத்) தங்கள் புருஷர்மாரை இழந்தார்கள். தங்களுடைய குடும்ப ஜீவனத்துக்குச் சம்பாதித்துக்கொண்டிருந்த மூன்று ஆண்களும் இறந்தபின், நகோமி மறுபடியும் யூதேயா நாட்டு பெத்லகேமுக்குப் போகத் தீர்மானம் பண்ணினாள். ஓர்பாள் தன் சொந்த தேசமாகிய மோவாபிலேயே இருக்கவேண்டுமென்று நினைத்தாள். ரூத், நகோமியிடத்தில் தான் எவ்விதமும் அவளோடேகூட வருவதாகச் சொல்லி நகோமியை விடாப்பிடியாய் பிடித்துக்கொண்டாள். அவள் அச்சமயத்தில் நகோமியிடத்தில் சொன்ன வசனம் மனதை உருகச் செய்கிற வார்த்தைகள், அவளுடைய தீர்மானத்தைக் காட்டுகிற வார்த்தைகள், அவளுடைய தீர்மானத்தைக் காட்டுகிற உறுதியான வார்த்தைகள், பரிசுத்த சிநேகத்தைத் தெரிந்துகொள்ளவேண்டியதற்கு முன்னடையாளமான வார்த்தைகள். இருதயம் கசப்பாகி, நகோமி பெத்லகேமுக்குத் திரும்பினாள், மனம் நொந்தவளாகவும், கைவிடப்பட்டவளாகவும், தன்னுடைய துக்க அனுபவங்களை நினைத்து 'என்னை மாராள் என்று சொல்லுங்கள் சர்வவல்லவர் எனக்கு மிகுந்த கசப்பை கட்டளையிட்டார்' என்றாள். நமக்கு நேரிடும் அநேக துன்பங்கள், நமது சொந்த மதியீனத்தினாலும், அக்கிரமத்தினாலும் உண்டாகின்றன. சர்வ வல்லவர்மேல் அதைச் சாட்டுவது தகாது. இழந்துபோன ஆசீர்வாதத்தை மறுபடியும் பெற்றுக்கொள்வது நாம் அதை எந்த இடத்தில் இழந்தோமோ அதே இடத்திற்குத் திரும்ப வருவதுதான்.

II. போவாசும் ரூத்தும். அவன் வயல் வாற்கோதுமை அறுப்பு துவக்குகிற காலத்தில் நகோமியும், ரூத்தும் பெத்லகேமுக்கு வந்தார்கள். அதாவது ஏப்ரல்மாசக் கடைசி.

ரூத் போவாசின் வயலில் கதிர் பொறுக்கினாள். மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி (லேவி. 19 அதி. 9, 10); (உபா. 24: 19) ஏழைகளுக்கும், அன்னியர்களுக்கும், விதவைகளுக்கும் செய்யப்படுகிற உபகாரம். அறுக்கிறவர்கள் பிறகே கதிர்பொறுக்க இடங்கொடுத்தது வயல் சொந்தக்காரனின் உபகாரம். அவள் தற்செயலாய் போவாசின் வயலுக்குப்

போனாள். அவளுடைய காலடிகள் அவளை அங்கே வழிநடத்தினது (நீதி. 3: 6).

**அவனுடைய விசாரணை.** தனது வயல் அறுப்பை மேல்பார்க்க பெத்லகேமிலிருந்து வருகிறான். 'கர்த்தர் உங்களோடிருப்பாராக' என்று சொல்லி அறுக்கிறவர்களை வாழ்த்துகிறான். அதற்கு அவர்கள் 'கர்த்தர் உம்மை ஆசீர்வதிப்பாராக' என்றார்கள். அன்றாட ஜீவியத்திலும் எவ்வளவு மார்க்க அனுசரிப்பு! எஜமானுக்கும் வேலைக்காரருக்கும் எவ்வளவு சந்தோஷமான சம்பந்தம்! ரூத்தைப்பற்றியும் விசாரிக்கிறான். அதினால் அவள் தைரியமடைகிறாள். பாதுகாப்பும் கிடைக்கிறது, பொறுக்குகிறதிற்கும் கதிரை அதிகமாக சிந்தும்படி சொல்லுகிறான். ரூத் தான் அன்னிய ஸ்திரீயாயிருக்க ஏன் அவன் கண்களில் கிருபை கிடைத்ததென்று போவாசை கேட்கிறாள். கர்த்தர் உன் செய்கைக்குத்தக்க பலனைக் கட்டளையிடுவாராக என்றான்.

**ரூத்.** அறுப்புக்கு எஜமானான போவாசின் கிருபையினால், ரூத், தன் மாமிக்கு அதிகமான தானியம் சேர்த்துக்கொண்டு போகிறாள். அங்கே தனது குடும்பத்திற்கு போவாஸ் நெருங்கின இனத்தான் என்று கேள்விப்பட்டாள். இதுதான் இந்த சரித்திரத்தின் முக்கியமான மத்திப சம்பவம். மீட்பைப்பற்றிய எண்ணம் இதில் ஆரம்பிக்கிறது.

**நகோமி, ரூத்துக்கு ஆலோசனை.** ரூத், அவளுடைய புருஷன் வீட்டில் சுகமாய் வாழ்ந்திருக்கவேண்டுமென்று நகோமி விரும்பினாள். இது விவாகத்தின் உயர்ந்த நோக்கத்தைக் குறிக்கிறது. விசுவாசிக்கும், அவருடைய மீட்பருக்குமுள்ள மேலான ஐக்யத்திற்கு இது கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட அடையாளம். ஆதலால் ஐக்யத்துடன் இளைப்பாறுதலும் (வாழ்வு) சம்பந்தப்பட்டிருக்கிறது (மத். 11: 28).

**போவாசும் ரூத்தும்.** ரூத் எளிமையான தன்னையே போவாசின் பாதத்தில் கொண்டுவந்து வைக்கிறாள், சபை கிறிஸ்துவின் பாதத்தில் வெறுமையான தன்னைக் கொண்டுவந்து வைக்கவேண்டும். விதவையான ரூத்துக்கு கிட்டின இனத்தானுடைய பராமரிப்பு அவசியம் என்பதை போவாஸ் உணர்ந்தான். ஆகையால் ரூத்தின் செய்கையை அங்கிகரித்தான். பெண்ணின் தலைமேல் மாப்பிள்ளை தன் போர்வையின் ஓரத்தை விரிப்பது கிழக்கத்திய நாட்டாரின் கலியாணச் சடங்கில் ஒன்று. ரூத் இவ்வித சடங்கை நிறைவேற்றியதால், நியாயப்பிரமாணத்தின்படி போவாஸ் அவளை விவாகம் பண்ண கடமைப்பட்டவனானான் (உபா. 25: 5).

**III. முடிவு. சுதந்தரவாளி.** போவாஸ் எலிமலேக்கின் நெருங்கின சுதந்தரவாளியிடமிருந்து நகோமியின் நிலத்தை மீட்டுக்கொண்டான். அதோடு ரூத்தையும் மீட்டு தனக்கு மனைவியாக்கினான். இது பட்டண வாசலில் மூப்பர்கள் முன் நடந்தது.



**விவாகம்.** விவாக ஆசீர்வாதம்.

**முடிவு.** ரூத் ஓபேத்தைப் பெற்றாள். அவன் ஈசாயின் தகப்பன், ஈசாய் தாவீதின் தகப்பன், தாவீதின் வம்சத்தில் கிறிஸ்து பிறந்தார்.

**புதிய ஏற்பாட்டு ஒத்துவாக்கியம்.** ரூத். 4: 18–22; மத். 1: 1–6; லூக். 3: 31–33. ரூத்தாகமம் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவைப்பற்றிய சுவிசேஷ சத்தியம் அடங்கியது. அவர் நமக்கு சுதந்தரவாளியாகிய மீட்பரும் புறஜாதிகளின் இரட்சிப்பை உண்டுபண்ணினவருமாயிருக்கிறார். ஆகையால் இவ்வாகமம் வேதாகமத்தின் ஒரு பாகமாயிருப்பது அவசியமே, என்று டாக்றர் டோனல்டு பிரேஸர் சொல்லுகிறார்.

போவாசைப் பார்க்கிலும் பெரியவர் இங்கேயிருக்கிறார். கிறிஸ்துவே அறுப்புக்கு எஜமானும், தேவையானவைகளை பரிபூரணமாய்க் கொடுக்கிறவரும், சுதந்தரத்தை மீட்டவரும், திருச்சபைக்கு இளைப்பாறுதலை (வாழ்வை) கொடுக்கிறவரும், நெருங்கின இனத்தானும், மணவாளனுமாயிருக்கிறார்.

வேதாகமத்தில் இவ்வாகமமே ஒரு ஸ்திரீயின் சரித்திரமாத்திரம் அடங்கியது.

இரண்டு ஆகமங்கள் ஸ்திரீயின்பேரால் அழைக்கப்படுகிறது. ஒன்று ரூத், இவள் ஒரு எபிரேய புருஷனை விவாகம்பண்ணின புறஜாதியாள். மற்றொன்று எஸ்தர், இவள் ஒரு புறஜாதி புருஷனை விவாகம்பண்ணின யூதப்பெண்.

## நீ பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறாயா ?

இது மிக்க அவசியமான கேள்வி. உன் ஆத்துமா உயிரடைந்து வாழ்வதற்குப் பரிசுத்த ஆவியானவரின் அநுக்கிரகமும், கிரியையுந்தான் ஜீவ ஆதாரம். 'கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல' (ரோம. 8: 9) என்று வேதம் கூறுகிறது. ஜலமானது சரீரத்தைக் கழுவுவதுபோல், ஆவியானவர் உன் இருதயத்தைச் சுத்திகரித்து, உன்னை மறுபடியும் ஜெநிப்பிக்காவிட்டால், நீ தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டாயென்று உனக்குத்தெரியுமல்லவா? (யோவா. 3: 5). உன் இருதயமாகிய நிலத்தில், தேவனுடைய வசனமாகிய வித்து விதைக்கப்பட்டு, ஆவியின் அருள்மாரி பொழியாவிட்டால், உனக்கு ஞானஜீவன் ஏது? (1 பேது. 1: 23; தீத்து 3: 5; யாக். 1: 18). நீ மறுபடியும் பிறந்தபின், உன்னை முற்றிலும் தேவனுக்கு ஒப்புக்கொடுப்பதினால் (ரோம. 8: 13, 19, 20), உன் இருதயம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகா பரிசுத்த இரத்

தத்தினாலே சுத்திகரிக்கப்பட்டு (1 யோவா. 1: 7), கிறிஸ்து உன் உள்ளத்
தில் உருவாகி (கலா. 4: 19), விசுவாசத்தினாலே அவர் உன் இருதயத்தில்
வாசம்பண்ணி (எபே. 3: 17), உன் உள்ளான மனுஷனில் அவர் பலப்பட,
ஆவியானவரின் பலத்த கிரியை அவசியம்வேண்டியது (எபே. 3: 16; 2:
1 கொரி. 3: 16). நீ கிறிஸ்துவின் அவயவமாகி, நீ உன் பூரண அளவிற்கு
வளர (எபே. 4: 11, 15) சத்திய ஆவியாகிய தேற்றரவாளன் என்றென்
றைக்கும் உன்னோடு தங்கியிருக்கவேண்டியதல்லவா? (யோவா. 14: 16).
உன்னை மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையிட்டு (எபே. 1: 13, 14;
4: 30), இயேசு மகாராஜாவின் வருகையிலே, உன் சரீர மீட்பாகிய புத்திர
சுவிகாரத்தை உண்டுபண்ணி, (ரோம. 8: 23) சாவுக்கேதுவான உன் சரீ
ரத்தை உயிர்ப்பிக்கிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய பரிசுத்த
ஆவியானவரல்லவா? (ரோம, 8: 11). அப்படியானால் அவரைப் பெற்றுக்
கொள்ளவேண்டியது அதிக அவசியம் என்று சொல்லவும்வேண்டுமோ?
ஆவியானவர் என் உள்ளத்தில் வாசமாயிருப்பதை நான் எப்படி அறியக்
கூடும் என்று கேட்பாயோ? அதைப்பற்றி நீ கொஞ்சமும் சந்தேகிக்க ஏது
விராதபடி, மகா தெளிவான அத்தாட்சிகள் வேதத்தில் சொல்லப்பட்டிருக்
கின்றன. அவைகளைக்கொண்டு, நீ பரிசுத்த ஆவியைப்பெற்றிருக்கிறாயோ,
இல்லையோவென்று திட்டமாய் அறிந்துகொள்ளலாம். அவைகளில் சில
வற்றை இங்கு எடுத்துரைக்கிறேன். வேதபுஸ்தகத்தை உன் முன் வைத்
துக்கொண்டு, ஒவ்வொரு குறிப்பையுங் கருத்தாய் வாசித்துப்பார்.

தேவனுடைய ஆவி உன்னில் வாசமாயிருந்தால், நீ மாம்சத்துக்குட்
பட்டவனாயிராமல், ஆவிக்குட்பட்டவனாயிருப்பாய். (ரோம. 8: 9). மாம்
சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் போரா
டுவதை நீ உன் அநுபவத்தில் அறிந்திருக்கிறாயா? (கலா. 5: 17). உன்னில்
இரண்டு பிரமாணங்களுண்டல்லவா? ஒன்று கிறிஸ்து இயேசுவிலுள்ள
ஜீவனுடைய ஆவியின் பிரமாணம்; மற்றொன்று பாவம் மரணம் என்பவை
களின் பிரமாணம் (ரோம. 8: 2) இவ்விரண்டில் எந்தப் பிரமாணம் உன்னை
ஆளுகிறது? நீ மாம்சத்திற்குட்பட்டவனா, ஆவிக்குட்பட்டவனா? நீ ஆவிக்
குட்பட்டவனானால், உன்பழைய மனுஷன் சிலுவையிலறையுண்டு, மரித்து,
அடக்கம்பண்ணப்பட்டு (ரோம. 6: 6). (இவ்விதமாக) நீ பாவத்தினின்று
விடுதலையாக்கப்பட்டிருப்பாய் (ரோமர் 6: 6; 8: 2) நீ இன்னும் பாவத்தைச்
செய்து, அதில் நிலைத்திருப்பாயானால், தேவனுடைய ஆவியானவர் உன்
னில் வாசம்பண்ணவில்லை என்பது நிச்சயம். பாவத்தில் நிலைத்திருப்ப
வனே! நீ யாருடைய பிள்ளையென்று வேதம் சொல்லுகிறது. கவனிப்பா
யாக. (1 யோவா. 3: 6, 8).

நீ தேவனுடைய ஆவியைப்பெற்று, அவருடைய சுவிகாரப்புத்திரனா
யிருப்பாயானால், ஆவியானவர் தமது சாட்சியை உன் இருதயத்தில் கூறி,
தேவனை நோக்கி: அப்பா, பிதாவே என்று உன்னைக் கூப்பிடப்பண்ணுவார்



(ரோம. 8: 15, 16), நீ அநுதினமும் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லி
உன் உதடுகளால் 'பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே' என்று கூப்பிடு
கிறாயே, அதைப்பற்றி நான் இங்கே பேசவில்லை. ஆவியானவர் உன் உள்
ளத்திலிருந்து உன்னைக் கூப்பிடப்பண்ணுவதைப்பற்றிப் பேசுகிறேன்.
ஆவியானவரின் சாட்சி, நீ கொஞ்சமும் சந்தேகிக்க ஏதுவிராமல், அவ்வ
ளவு தெளிவாயிருக்கும். இது உன் அநுபவமா? இல்லாவிட்டால், நீ
ஆவியானவரைப் பெற்றிருப்பதாக எப்படி நினைக்கலாம்?

நீ தேவனுடைய ஆவியினாலே அநுதினமும் நடத்தப்படுகிறாயா?
(ரோம. 8: 14). நீ வலதுபுறமாய்ச் சாயும்போதும் இடதுபுறமாய்ச் சாயும்
போதும்: வழி இதுவே, இதிலே நட என்று உனக்குப் பின்னாலே சொல்
லும் வார்த்தையை உன் காதுகள் கேட்டதுண்டா? (ஏசா. 30: 21). வெள்
ளம்போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு
விரோதமாய்க் கொடியேற்றுவதை நீ அறிவாயா? (ஏசா. 59: 19). ஆவியா
னவர் உன் பலவீனங்களில் உனக்கு உதவிசெய்வதையும், வாக்குக்கடங்காத
பெருமூச்சுகளோடு உன் இருதயத்திலிருந்து பிதாவை நோக்கி வேண்டுதல்
செய்வதையும், உன் அனுபவத்தில் உணர்ந்திருக்கிறாயா? (ரோம. 8: 26).

பரிசுத்த ஆவியானவர் உன்னைப் பாவத்தைக் குறித்தும், நீதியைக்
குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்துங் கண்டித்து உணர்த்தினதுண்டா,
உணர்த்துகிறாரா? (யோவா 16: 8). சகல சத்தியத்திற்குள்ளும் உன்னை
நடத்தி, வரப்போகிற காரியங்களை உனக்கு அறிவித்து (யோவா. 16: 13)
கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவைப்பற்றி சாட்சி கொடுத்து (யோவா. 15:
26), அவரை உன் இருதயத்திலும் ஜீவியத்திலும் மகிமைப்படுத்தின
துண்டா? (யோவா. 16: 14). உன்னத ஆவியானவர் உனக்குப் போதித்து
உனது அருமை இரட்சகர் சொன்ன எல்லாவற்றையும் உனக்கு நினைப்பூட்
டுகிறாரா? (யோவா. 14: 26). நீ வேதத்தை வாசிக்கும்பொழுது, ஆவியா
னவர் உனக்குப் போதித்து உணர்த்துவதால், உன்னுடைய இருதயம்
உனக்குள் கொழுந்துவிட்டு எரிகிறதா? உன் சலிப்பிலும், தவிப்பிலும் நீ
மனம் நொந்து, திகைத்து நிற்கும் வேளையிலும், இளைப்படைந்தவனுக்கு
சமயத்திற்கேற்ற வார்த்தைகள் சொல்வதுபோல் (ஏசா. 50: 4), ஆவியான
வர், இரட்சகரின் வார்த்தைகளை உனக்கு ஞாபகப்படுத்தி, தேற்றிவருகி
றாரா?

கலாத்தியர் 5: 22, 23ல் சொல்லப்பட்டிருக்கும் அன்பு, சந்தோஷம்,
சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்
சையடக்கமாகிய ஆவியின் கனி உன்னிலுண்டா? 1 கொரி. 12: 7—10ல்
சொல்லப்பட்டிருக்கும், ஞானத்தைப் போதிக்கும் வசனம், அறிவை உணர்
த்தும் வசனம், விசுவாசம், குணமாக்கும் வரம், அற்புதங்களைச் செய்யும்
சக்தி, தீர்க்கதரிசனம் உரைத்தல், ஆவிகளைப் பகுத்தறிதல், பற்பல பாஷை

களைப் பேசுதல், பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலாகிய ஆவியின் வரங்களில், எந்தெந்த வரங்கள் உனக்குண்டு?

நான் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுவது எப்படி என்று கேட்பாயோ? ஆவியைப் பெற்றுக்கொள்ளும் முறையும் வேதத்தில் வெகு தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலர் 1–ம், 2–ம் அதிகாரங்களை வாசித்து, சீஷர்கள் ஆவியில் நிறைவை எவ்விதமாய்ப் பெற்றுக் கொண்டார்கள் என்று கவனித்துப்பார். 'நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்' (அப். 1: 4) என்ற வாக்கை விசுவாசித்து, 'பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்' (அப். 1: 5) என்ற கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, ஒருமனப்பட்டுக் காத்திருந்து (அப். 1: 14, ஆவியானவரின் நிறைவைப் பெற்றார்கள். அப்படியே, நீயும் 'பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக்கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?' (லூக். 11: 13) என்ற வாக்குத்தத்தத்தை விசுவாசித்து (கலா. 3: 14), தேவனுக்குக் கீழ்ப்படிந்து (அப். 5: 32), காத்திருப்பாயானால் பரிசுத்த ஆவியின் நிறைவைப்பெறுவாய்.

மேற்சொன்ன குறிப்புகளை வாசித்த எனது அன்புள்ள சகோதரனே, சகோதரியே, நீ வாசித்த அத்தாட்சிகளைக்கொண்டு உன்னைச் சோதித்துப் பார்த்து, இந்தக் கேள்விக்கு மாறுத்திரம் சொல்லுவாயாக. நீ **பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறாயா?** தேவனுடைய வார்த்தை ஒன்றுதான் சத்தியம்; உன் நடக்கையும், விசுவாசமும் அதற்கேற்றதாயிருக்கவேண்டும்; அதுதான் உன்னை நியாயந் தீர்க்கப்போகிறது. மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதிக்கிறவர்களுக்குச் செவிகொடாதே (மத். 15: 9) மனிதருடைய போதனை தேவனுடைய வார்த்தைக்கேற்றதாயிராவிட்டால், அதைத் தள்ளிப்போடு. உன் பாவத்தை உனக்குக் கண்டித்து உணர்த்தி, அதற்காக நீ மெய் மனஸ்தாபப்பட்டு, அதை வெறுத்துத்தள்ள உனக்குக் கிருபை அளித்து, இவ்விதமாக நீ மனந்திரும்பினபின், உன் இரட்சகரை ஆவியானவர் உனக்குக் காட்டுகிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால், தேவவசனமாகிய அழிவில்லாத வித்தைக் கொண்டு, ஆவியானவர் நம்மை மறுபடியும் ஜெநிப்பித்து, நமது ஆண்டவரின் பரிசுத்த இரத்தத்தினாலே நமது இருதயத்தைச் சுத்திகரித்து, நமது இருதயத்தை நிரப்பி, அதைத் தமது வாசஸ்தலமாக்கிக்கொண்டு, என்றென்றைக்கும் நம்மோடிருக்கும் தேற்றரவாளனாயிருக்கிறார். இது நமது ஆத்தும வாழ்வுக்குரிய நித்தியந்துக்கடுத்த காரியம். வெகு சாவதானமாய், நாம் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருக்கிறோமாவென்று நம்மை நாம் சோதித்து அறிவோமாக.



# கடைசிக்கால சம்பவங்கள்.

1. திருச்சபை சேர்க்கப்பட்டு வருகிற காலம்.
2. கிறிஸ்துநாதர் தம்முடைய சபையை எடுத்துக்கொள்ள வரும் காலம்.
3. மிகுந்த உபத்திரவம் நடக்கும் காலம்.
4. கிறிஸ்து நாதர் தமது சபையோடு வந்து யூதர்களை குணப்படுத்தும் காலம்.
5. ஆயிர வருஷ அரசாட்சி காலம்.
6. பிசாசு விடுதலையாகிக் கடைசி யுத்தம் செய்யும் காலம்.
7. தேவனுடைய நித்திய ராஜரீக காலம்.

## 1. திருச்சபை சேர்க்கப்பட்டு வருகிற காலம்.

நடபடி 15. 14—17.

1. தேவன் தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தை தெரிந்து கொள்ளும்படி அவர்களுக்குக் கடாட்சித்தருளின விதம்.

2. நான் இதற்கு பின்பு திரும்பிவந்து விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து.

3. மற்ற மனுஷரும் சகல ஜாதிகளும் கர்த்தரைத் தேடும்படி செய்வேன்.

1. ஒரு ஜனத்தைத் தெரிந்துகொள்ளுதல். யோவான் 15: 19.
2. யூதர்களைக் குணப்படுத்தல். மத். 24: 32.
3. சகல ஜாதிகளும் கர்த்தரை தேடுதல். பரி. மத். 24: 14.

அவர் வருமுன் எல்லாரும் குணப்படமாட்டார்கள். லூக்கா 18: 8. 2 தீமோ. 3. 1—5. 13, யூதா. 14. 15.

மூலபாஷையில் சபை என்பது—தெரிந்து எடுக்கப்பட்ட கூட்டம் என்று அர்த்தம். அப்போஸ்தலருடைய நடபடி வகை என்னவென்றால் இங்கே சிலரும், அங்கே சிலரும் சபையாக சேர்க்கப்பட்டார்கள்.

## II. கிறிஸ்துநாதா தம்முடைய சபையை எடுத்துக்கொள்ள வரும் காலம்.

1. தெச. 4. 15–17

முதலாம் உயிர்த்தெழுதல். வெளி. 20. 5–5, தானியேல். 12: 2. யோ. 5. 28, 29

i கொரி. 15. 23 (நீதிமான்களுக்காக மாத்திரம்)
(திருஷ்.) லாசரு—உயிர்த்தெழுந்த சபை.

ஆகாயத்தில் வருதல், அப்புறம் ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் அந்த கலியாணம் இன்னும் நடக்கவில்லை.

ii. கொரி. 11. 2. நியமிக்கப்பட்டவள். விவாகம்—வெளி. 19. 6-9.

சபைக்காக வருவது வேறே
சபையோடு வருவது வேறே.

## III. மிகுந்த உபத்திரவம் நடக்கும் காலம்.

(திருஷ்.) சோதோமிலிருந்து லோத்து புறப்பட்டுபோன பின்பு அக்கினியும், கந்தகமும் வருஷித்தது. மத்தேயு, 24. 21, வெளி. 15. 7. கோபகலசங்கள், வெளி. 17, வெளி. 18.

பாபிலோனாகிய கள்ள சபையைத் தண்டித்தல். வெளி 18: 21.

அதினாலே ஒரு வேளை அநேகர் குணப்பட்டாலும் குணப்படுவார்கள். ஏசா. 26: 9, வெளி. 7. 14.

## IV. கிறிஸ்து நாதர் தமது சபையோடு வரும் காலம்.

வெளி. 19. 11–21, சகரியா. 14. 5, 1. தெச. 3. 13, கொலோ. 3. 4, அர்மகெதோன் வெளி. 16. 11–16, 19–17. 21, சகரி. 12. 4, ஏசா. 66: 15-18.

மிருகமாகிய அந்திக்கிறிஸ்துவை நாசம் செய்தல்.

### யூதர்கள் குணப்பட்டு மேசியாவை நம்பும் காலம்.

குணப்படவேண்டும். ரோமர். 11. 1–2. 25, 26, 15, சகரியா. 12–10; நடபடி. 3. 19–21, சங்கீதம். 67. ஏசா: 60. 1–5 10-15. 22. இன்னும் நிறைவேறவில்லை.



1. குணப்படாதவர்களாயிச் சுயதேசத்திற்குத் திரும்புதல்—எரே: 3. 14. ஏசா: 18. 7.

2. உபத்திரப்படுவார்கள்—சகரியா. 12. 9.

3. மேசியா உதவி வந்து,பிரசன்னமாகவே குணப்படுவார்கள்.

சகரியா. 12. 5; 12: 10–14. ரோமர். 11. 26. 27. வெளி. 1–7.

## V. ஆயிர வருஷ அரசாட்சி காலம்.

வெளி. 20. 1–4, தானியேல். 7 18. 22–27. 1. கொ. 6. 2, லூக்கா, 22: 28, 29, ஏசா. 35-ம் அதி. ஏசாயா. 60 அதி. இப்போது சபை, அப்போது ராஜியம்.

நீதியின் ராஜியம்: சங்கீ. 72–1–2. சங்கீ. 96-12, ஏசா. 32. 16-17, ஏசா. 61–11.

சமாதானத்தின் ராஜியம்: ஏசா. 9: 6–7. ஏசா: 66: 12, எசே. 34–25 மீகா: 4-3.

தேவ அறிவு பரம்பின ராஜியம்: ஆப: 2–14, எரே: 31-34: பிலி: 2. 9–11,

யூதர் மூலமாய் சுவிசேஷம் எங்கும் பரம்பும். மீகா: 5–7, ஏசா, 2: 2–35, ஏசா. 62: 1–7.

(திருஷ்) தேவாலயம்.

1. மகா பரிசுத்த ஸ்தலம்—சபையாகிய மணவாட்டி.
2. பரிசுத்த ஸ்தலம்—ஊழியக்காரராகிய குணப்பட்ட யூதர்.
3. வெளிப்பிரகாரம்—மற்ற ஜனங்கள்.

பூமியின் பேரிலுள்ள ராஜியம்: வெளி: 5, 9–10: வெளி: 11–15, சகரி: 14: 4, 9,

## VI. பிசாசு விடுதலையாகிக் கடைசி யுத்தம் செய்யும் காலம்

வெளி: 20: 7–10, ஏசா: 26: 10, சங்கீ: 18: 44. அப்புறம் வெள்ளை சிங்காசனமும் நியாயத் தீர்ப்பும்.

## VII. தேவனுடைய நித்திய ராஜரீக காலம்.

i கொரி: 15: 24-28. பிதாவினிடத்தில் குமாரன் ராஜியத்தை ஒப்புவித்தல், தானி: 7: 27.

பூரண நிறைவேறுதல், வெளி: 21: 1-5, 2: பேதுரு. 3: 13–14.

காலம் சமீபம் என்பதற்கு ஆதாரங்கள்.

1. **கடைசிக்காலம்**—தானி: 12: 9. 10: வெளி: 1: 3.

அறிவு:—இப்போது எங்கும் இந்த விசாரணை நடக்கிறது இந்த உணர்வும் உண்டாகிறது. கிறிஸ்து முந்தின விசைவரும்போது அப்படியே.—(திருஷ்) தானி: 9: 2, 3.

2 நாளா: 36. 21: எரே. 25: 11-12.

70 வருஷம் என்று அறிந்தான், ஆனால் எத்தனையாவது வருஷத்திலிருந்து அந்த 70 வருஷம் துவக்கும் ?

2 நாளா: 36: 6—7-ல் காட்டப்பட்ட வருஷமா?
„ 9-10-ல் „
„ 11-21-ல் „

மெத்த வித்தியாசம், உத்தேசம் 20 வருஷம். ஆகையால் தானியேலுக்கு அந்த 20 வருஷம் கடைசிக்காலம் போலிருந்தது. அந்தக் கடைசிக்காலத்தில் எந்த வருஷத்திலாவது அந்த 70 வருஷம் முடிந்துபோகலாம். ஆகையால் அவன் அதிகமாய் வேதம் வாசித்து ஜெபம் பண்ணித் தேவனுடைய சித்தத்தை அறியவேண்டியதிருந்தது.

அப்படியே தீர்க்கதரிசிகளின் வசனங்களாலும், தற்கால சம்பவங்களாலும் இது கடைசி காலம் என்று தெரியும். ஆனாலும் எத்தனையாவது வருஷத்தில் புறஜாதியாருடைய காலங்கள் முடிந்து, கிறிஸ்து நாதர் வருவார் என்று திட்டமாய்த் தெரியாது. காலம் அதிக சமீபம் என்று மாத்திரம் தெரியும்.

(இன்னும் வரும்).

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

September, 1915. Registered—No. M. 316

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." (யோவான் 7: 38)

Vol. XVI செப்றெம்பர் 1915

## 'ஆபிரகாம் தசமபாகம் கொடுத்தான்'.

'உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் இராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டுவந்து, ஆபிரகாமை ஆசீர்வதித்து, வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிரகாமுக்கு உண்டாவதாக. உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னான். இவனுக்கு ஆபிரகாம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்'. ஆதியாகமம 14: 18—20.

ஆதியாகமத்தில் சொல்லியபடி, மனித சரித்திர ஆரம்ப காலத்தில் ஏற்பாடான பல நியமுகங்கள் உண்டு. அவைகளில் ஒன்றும் மாறிப்போகும் தன்மையை உடையதல்ல. மனுஷ ஜாதி உள்ளளவும் உறுதியாய் நிலைக்கும்படிக்கே, அவைகள் நியமிக்கப்பட்டிருக்கிறது. ஏதேனில் ஆரம்பமான ஓய்வுநாள் ஆசரிப்பும் விவாக சம்பந்தமும் இவைகளில் முக்கியமானவைகள். பாவம் பிரவேசித்தபின்பு, விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமிலிருந்துவந்த விசுவாசத்தால் நீதிமானாகும் முறை, வாக்குத்தத்த உடன்படிக்கை, தசமபாக ஏற்பாடு முதலியவைகளும் இவைபோலொத்தவைகளே. இவைகளில் ஒன்றாகிய வாக்குத்தத்த உடன்படிக்கையைக் குறித்துப் புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருப்பது இவைகளெல்லாவற்றையும்பற்றிச் சொல்லப்பட்டதாம். 'ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன. கிறிஸ்துவை முன்னிட்டு தேவனால் முன் உறுதிபண்ணப்பட்ட உடன்படிக்கையை நானூற்றுமுப்பது வருஷத்திற்குப் பின்பு உண்டான நியாயப்பிரமாணமானது தள்ளி வாக்குத்தத்தத்தை வியர்த்தமாக்கமாட்டாது. கலாத்தியர் 3: 16, 17 இவைகளில் தசமபாக ஏற்பாடோ காலம் செல்லச்செல்ல, பெலத்தின்மேல் பெலமடைந்துகொண்டேபோனது என்று பார்க்கலாம். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இது பூரண பெலனுள்ளதாயிருக்கிறது. தேவன் வேதமுழுவதிலும் தசமபாக ஏற்பாட்டை எவ்வளவாய் முக்கியப்படுத்தியிருக்கிறார் என்று இக்காலத்து சபை அறிவது மகா அவசியமாயிருப்பதால், இச்சரித்திரத்தை இங்கு எடுத்துக் காட்டுகிறோம். அதை உணரவும் அதின்படி செய்யவும் தேவ ஆவியானவர் தாமே சபைகளை எவி எழுப்புவாராக.

1-வது, விசுவாசிகளின் தகப்பனால் இது ஆரம்பிக்கப்பட்டது. 'ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது'. அதினால் அவன் 'தேவனுக்கு முன்பாக நம்மெல்லாருக்கும் தகப்பனானான்'. அவன் காட்டின மாதிரிப்படியே நாமெல்லாரும் தேவனை விசுவாசித்து நீதிமான்களாக்கப்படுகிறோம். தசமபாக முறைமையும் அவனிலிருந்து ஆரம்பிக்கும்படி ஆண்டவர் சித்தங்கொண்டது ஆச்சரியமாயிருக்கிறது. விசுவாசிகளெல்லாருக்கும் அவன் இதிலேயும் மாதிரியாயிருக்கும்படிக்கே இது அவனிலிருந்து ஆரம்பித்தது என்று சொல்லலாம். மேலும் இது ஆரம்பிக்கப்பட்டவிதமும் சமயமும் இதைப்பற்றிய பின்னான சரித்திரங்களுக்கு ஒத்ததாகவே இருக்கிறது. ஆபிரகாம் நான்கு இராஜாக்களை ஜெயித்துத் திரும்பிவருகையில் உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த மெல்கிசேதேக்கு அவனுக்கு எதிர்கொண்டுவந்து, அவனுக்குக் கிடைத்த ஜெயத்துக்காக ஆண்டவரைத் துதித்து, அவனை ஆசீர்வதிக்கிறான். அப்பொழுது ஆபிரகாம் அவனுக்கு எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுக்கிறான். உன்னதமான தேவனுடைய நாமத்தினால் விசுவாசிகளை ஆசீர்வதிக்கிற அவருடைய ஆசாரியனுக்கு அவனால் ஆசீர்வாதம் பெறுகிறவர்கள் தங்களுக்குரிய எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று இது போதிக்கிறது.

2-வது, யாக்கோபு தேவனுக்குத் தசமபாகம் கொடுப்பதாகப் பொருத்தனை பண்ணினான். பெத்தேலிலே தேவன் அவனுக்குத் தம்மை வெளிப்படுத்தின இரவிலே, யாக்கோபு 'கர்த்தர் எனக்குத் தேவனாயிருப்பார்; நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் தேவனுக்கு வீடாகும்; தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன் என்று சொல்லிப் பொருத்தனைபண்ணிக்கொண்டான் 28: 22. இந்தச் சங்கதியிலிருந்து மூன்று சிறு குறிப்புகளைக் கவனிக்கலாம். ஆபிரகாமுடைய பேரனான இவன் திடமான தசமபாகத்தைப்பற்றிப் பொருத்தனை பண்ணிக்கொள்வதைப் பார்க்கும்போது, ஆபிரகாமில் ஆரம்பித்த இக்காரியம் அவன் காலத்திலும் ஈசாக்கின் காலத்திலும் அவர்கள் குடும்பத்தில் வழக்கமாய்க் கைக்கொள்ளப்பட்டுவந்திருக்கவேண்டும் என்பதாகத் தோன்றுகிறது. மேலும் குடும்ப தெய்வத்தைத் தன் சொந்த தெய்வமாக ஏற்றுக்கொண்ட நாளில், அவருக்குத் தான் செய்யவேண்டிய முக்கிய கடமைகளில் ஒன்றாக யாக்கோபு தசமபாகப்பொருத்தனையைப் பண்ணிக்கொள்ளுகிறான். மூன்றாவது, ஆண்டவர் கொடுக்கும் எல்லாவற்றிலும் தசமபாகம் அவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படவேண்டும் என்றும் அவன் காட்டுகிறான். இம்மூன்று குறிப்புகளும் கவனிக்கப்படத்தக்கதே.

3-வது, தசமபாகம் எல்லாம் கர்த்தருக்கு உரியது என்று நியாயப்பிரமாண காலத்தில் தேவன் தெரிவித்தார். 'தேசத்திலே நிலத்தின் வித்திலும் விருக்ஷங்களின் கனியிலும் தசமபாகம் எல்லாம் கர்த்தருக்கு உரியது; அது கர்த்தருக்குப் பரிசுத்தமானது. கோலின் கீழ்ப்பட்ட ஆடுமாடுகளிலே பத்தில் ஒரு பங்காகிறதெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தமானது. அது நல்லதோ இளப்பமானதோ என்று அவன் பார்க்கவேண்டாம், அதை மாற்றவும் வேண்டாம்'. லேவியராகமம் 27: 30, 33. 'தேசம் என்னுடையது' 25: 23,) அதின் வருமானமெல்லாம் என்னுடையது; இதை நீங்கள் ஒப்புக்கொள்ளுவதற்கு அத்தாட்சியாக தசமபாகத்தையெல்லாம் எனக்குக் கொடுங்கள் என்று ஆண்டவர் சொல்லுகிறார். இங்கே ஊழியரைப்பற்றி ஒரு வார்த்தையும் கிடையாது. அவர்களுடைய சவரட்சணைக்கென்று தசமபாகம் கொடுக்கவென்று ஆண்டவர் சொல்லவில்லை. நீ என்னுடையவன் உனக்குள்ள யாவும் என்னுடையது என்று விளங்கச்செய்யும்படி நீ எனக்குத் தசமபாகம் கொடு என்று அவர் சொல்லுகிறார். தசமபாகம் எல்லாம் அவருக்குரியது, அவருக்குப் பரிசுத்தமானது. அவருக்குரிய பரிசுத்தமானதை அவருக்குக் கொடாதிருக்கும்போது, அது நமக்குச் சாபத்திடாயிருக்கும் என்று வேதம் போதிக்கிறது. யோசுவா 6: 15—19.



4-வது, தமக்குரிய தசமபாகத்தைத் தேவன் தமது பணிவிடைக்காரருக்குச் சுதந்தரமாகக் கொடுத்தார். 'இதோ, லேவியின் புத்திரர் ஆசரிப்புக் கூடாரத்தில் பணிவிடை செய்கிற அவர்களுடைய வேலைக்காக இஸ்ரவேலருக்குள்ளவை எல்லாவற்றிலும் தசமபாகத்தை அவர்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன்' என்று கர்த்தர் சொன்னார். எண்ணாகமம் 18: 21. மேலும் லேவியரைத் பார்த்து அவர், நான் உங்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்த தசமபாகத்தை நீங்கள் வாங்கும்போது, தசமபாகத்தில் பத்தில் ஒரு பங்கை கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் படைப்பாகச் செலுத்தவேண்டும் என்கிறார். அது ஆசாரியனுக்குரியதாகும் என்று சொல்லுகிறார்(26–28வ). இப்படி சுவாமி தமக்குரிய பாகத்தைத் தமது பணிவிடைக்காரருக்குச் சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். சபையார் தசமபாகத்தை ஊழியருக்குச் செய்யும் தர்மம்போல் எண்ணிக்கொடாதபடிக்கும், ஊழியர் அதை மனிதரிடத்தில் பெற்றுப் பிழைப்பது போல் எண்ணாதபடிக்கும், இப்படி சுவாமி வெகு ஞானமாய் ஏற்பாடு செய்தார்.

5-வது, தசமபாகத்தை வேறே நோக்கத்துக்குச் செலவிடாமல் எருசலேமுக்குக் கொண்டுவந்து கொடுக்க தேவன் கட்டளையிட்டார். உங்கள் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஓர் இடம் உண்டாயிருக்கும். அங்கே நீங்கள் நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் உங்கள் சர்வாங்க தகனங்களையும், உங்கள் பலிகளையும், 'உங்கள் தசமபாகங்களையும்', உங்கள் கை ஏறெடுத்துப் படைக்கும் படைப்புகளையும், உங்கள் பொருத்தனைகளையும், உங்கள் உற்சாகப் பலிகளையும், உங்கள் ஆடு மாடுகளின் தலையீற்றுகளையும் கொண்டுவந்து, நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் உங்கள் வாசல்களிலிருக்கிற லேவியனும் சந்தோஷப்படுவீர்களாக. உபாகமம் 12: 5, 11. பலியோ, தகனபலியோ, உற்சாக பலியோ, படைப்போ, பொருத்தனையோ இவை முதலான ஒன்றுக்காகிலும் தசமபாகத்திலிருந்து எடுக்கக் கூடாது என்று இங்கே பார்க்கிறோம். அவைகளையும் கொடுக்கவேண்டும், தசமபாகத்தையும் கொடுக்கவேண்டும். இக்காலத்துக் கடமையும் இதுவே. தசமபாகத்தை ஊழியக்காரருக்குக் கொடுத்ததுக்கு மேலாக ஓய்வுநாள் காணிக்கைக்கும் மிஷனெரி சங்கத்துக்கும் தர்ம ஊழியங்களுக்கும் ஏழைகளுக்கும் நாம் உதவி செய்யவேண்டும். பலவித காணிக்கைகளைப் போக்காகவைத்து, தசமபாகத்தைக் குறைப்பது தேவ ஏற்பாட்டுக்கு நேர் விரோதம் என்று நாம் அறிவோமாக.

6-வது, மார்க்க எழுப்புதல் உண்டான காலத்தில் தசமபாகம் பரிபூரணமாய்க் கொடுக்கப்பட்டது. எசேக்கியா இராஜாவின் காலத்தில் மகா பெரிய மார்க்க எழுப்புதல் உண்டாயிற்று. ஆலயம் சுத்திகரிக்கப்பட்டது. பஸ்கா ஆசரிக்கப்பட்டது, விக்கிரகங்கள் அகற்றப்பட்டது, லேவியர், ஆசாரியர் முறைமைகள் ஒழுங்குபடுத்தப்பட்டது. அப்பொழுது, 'இஸ்ரவேல் புத்திரர் சகலத்திலும் தசமபாகத்தைப் பரிபூரணமாய்க் கொடுத்தார்கள். இஸ்ரவேல் புத்திரரும் யூதா புத்திரரும் தசம்பாகத்தைக் கொண்டுவந்து குவியல் குவியலாக வைத்தார்கள்.' இந்தக் காணிக்கையை கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டுவரத் தொடங்கினது முதல் நாங்கள் சாப்பிட்டுத் திருப்தியடைந்தோம் என்று ஆசாரியரும் லேவியரும் சொன்னார்கள். 2 நாளாகமம் 81: 5—10. சபைகள் உயிர்ப்பிக்கப்படாததே இக்காலத்திலும் தசமபாகம் கொடுக்கப்படாததற்குக் காரணம். 'கர்த்தாவே, உயிர்ப்பியும்.'

7-வது, கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணினவர்கள் பத்தில் ஒரு பங்கை தேவனுடைய ஆலயத்திலுள்ள பொக்கிஷ அறைகளில் கொண்டுவரத் திட்டம்பண்ணினார்கள். நெகேமியாவின் காலத்தில் இதைப் பார்க்கலாம் (10: 37). நெகேமியாவும் பல பிரபுக்களும் இந்த உடன்படிக்கைக்குக் கையெழுத்துப்போட்டார்கள். பின்பு நெகேமியா இல்லாத காலத்திலே திரும்பவும் இது ஒழுங்கீனமாகிவிட்டது. நெகேமியா வந்தபின்பு திரும்பவும் இதை ஒழுங்குபடுத்தினான். 'அப்பொழுது யூதர் எல்லாரும் தானியம் திராட்சரசம் எண்ணெய் என்பவைகளில் தசமபாகத்தைப் பொக்கிஷ அறைகளில் கொண்டுவந்தார்கள்' (13: 12). இதைப் பக்தி வைராக்கியமாய்

நடப்பித்த நெகேமியா, 'என் தேவனே, இந்தக் காரியத்திலே என்னை நினைத்தருளும்' என்று ஜெபித்தான் (14 வா). கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணிக்கொண்ட பக்தர்கள் பலர் பக்தி வைராக்கியங்கொண்டு எழும்பி, சபைகளிலே இந்த தசமபாக காரியத்தை ஒழுங்குபடுத்தி நற்சீருக்குக் கொண்டுவருவார்களானால் சுவாமி அவர்களை நினைத்தருளி ஆசீர்வதிப்பார் என்பதற்குச் சந்தேகமுண்டோ?

8-வது, யூதசபை கெட்டுப்போனதற்கும் தள்ளப்பட்டதற்கும் தசமபாக ஈகையின் தவறுதலே முக்கிய காரணம். மல்கியாவின் புஸ்தகத்திலே இதைப் பார்க்கிறோம். தசமபாகமும் காணிக்கைகளும் அற்பமாய் எண்ணப்பட்டு நிறுத்தப்பட்டுப்போனதின் நிமித்தம் கர்த்தர் தமது ஜனத்தைச் சபிக்கிறார், அவர்கள்பேரில் தமக்குப் பிரியமில்லை என்று தள்ளிப்போடுகிறார் என்று பார்க்கிறோம். 'மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள். தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே. நீங்கள் சபிக்கப்பட்டவர்கள். ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள்' என்று ஆண்டவர் சொல்லுகிறார் (3: 8, 9). தசமபாகக் காணிக்கையே திருச்சபைக்கு அஸ்திபாரம். யூதசபையின் சரித்திரச் சுருக்கம் என்ன? ஜனங்கள் லேவியருக்குத் தசமபாகங்களைக் கொடுக்கவில்லை. ஆதலால் லேவியரிடத்திலிருந்து தசமபாகமாக ஆசாரியருக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. லேவியருக்கும் ஆசாரியருக்கும் பிழைப்புக்கு வேறே வழியில்லாததால் அவர்கள் தரித்திரப்பட்டு பிச்சை எடுத்துப் பிழைக்கப்போனார்கள். ஆலயம் அடைபட்டது. தேசம் இருளடைந்தது. தேவன் தமது சபையைச் சபித்துத் தள்ளினார். உலகத்தில் மெய் தேவனைப்பற்றிய சாட்சி அற்றுப்போயிற்று. இக்காலத்தில் கர்த்தருடைய சபைக்குத் தசமபாகம் கொடாதிருக்கிறவர்களே, இவைகளைச் சிந்தித்து, உங்கள் கிரியைகளின் முடிவை உணர்ந்துகொள்ளுங்கள்.

9-வது, இயேசு சுவாமி தசமபாகம் கொடுப்பதை உறுதிப்படுத்தியிருக்கிறார். 'பரிசேயரே, உங்களுக்கு ஐயோ, நீங்கள், ஒற்தலாம் மருக்கொழுந்து முதலிய சகலவித பூண்டுகளிலும் தசமபாகம் கொடுத்து, நியாயத்தையும் தேவ அன்பையும் விட்டுவிடுகிறீர்கள்; இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விடாதிருக்கவேண்டுமே. பரி. லூக்கா 11: 42. ஊழியத்தை முடிக்கப்போகிற காலத்தில் திரும்பவும் இப்படியே சொன்னார். 'மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தயத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள். இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விடாதிருக்கவேண்டுமே. பரி. மத்தேயு 23: 23. நீதியும் இரக்கமும் விசுவாசமும் விசேஷித்தவைகள்தான். ஆனால் சுவிசேஷகாலத்தில் இவைகள்தான் அவசியம், தசமபாகம் இனி அவசியமில்லை என்று இயேசு இராஜா சொல்லவில்லையே! தசமபாகத்தை விடாதிருக்கவேண்டும் என்றுதானே அவர் சொல்லுகிறார். மேலும் தசமபாக கடமையை அவர் எவ்வளவு கண்டிப்பாக்குகிறார் என்று பாருங்கள். ஒற்தலாம், மருக்கொழுந்து, வெந்தயம், சீரகம் முதலிய அற்பமான பூண்டுகளின் வருமானத்திலிருந்துகூட தசமபாகம் கொடுப்பது நியாயம் என்றும் அதை முதலாய் விட்டுவிடுவது சரியல்ல என்றும் அவர் இங்கே போதிக்கிறாரே. சில வரும்படி, உயர்ந்த சம்பள வருமானம் முதலியவைகளில் தசமபாகம் கொடாதிருப்பது சரியென்று அவர் ஒப்புக்கொள்ளுவாரோ? சிறிதான வருமானங்களிலிருந்து தசமபாகம் கொடுப்பதை விட்டுவிடாதிருக்கச் சொன்ன எஜமான் பெரிதான வருமானங்களிலிருந்து தசமபாகம் கொடுக்காவிட்டால் பரவாயில்லை என்று சொல்லுவாரோ? தசமபாகத்தைக் கொடுத்தும், விசுவாசத்தைக் கையாடாதவர்களைப் பயங்கரமாய் எச்சரித்த சுவாமி, விசுவாசத்தைப் பிடித்திருக்கிறேன் என்று சொல்லி, தசமபாகத்தை விட்டுவிடுகிறவர்களைப்பற்றி ஒரு வார்த்தையுமே சொல்லமாட்டாரோ? தம்மால் சுகமாக்கப்பட்ட குஷ்டரோகிகளைப் பார்த்து, மோசே நியமித்த காணிக்கையைச் செலுத்தச் சொன்னவர், விசுவாசத்தையுடையவனே, தசமபாகத்தையும் நீ செலுத்து என்று சொல்லமாட்டாரோ? தசமபாகத்தை விடாதிருக்கவேண்டும் என்று சொன்ன ஒரே வார்த்தையினாலே, தசமபாகத்தைக் குறித்து பழைய ஏற்பாட்டில் கட்டளையிடப்பட்ட யாவையும் அவர் உறுதிப்படுத்திவிட்டாரல்லவா?



10-வது, ஆபிரகாமின் கையில் தசமபாகம் வாங்கின மெல்கிசேதேக்கின் முறையே நித்தியகால ஆசாரிய முறையாய் இப்போது நியமிக்கப்பட்டிருக்கிறது. இடையில் வந்த நியாயப்பிரமாண ஆசாரிய முறைமை ஒழிந்துபோயிற்று. மெல்கிசேதேக்கின்படிக்கான முறைமை இப்போது நித்திய முறைமையாக நியமிக்கப்பட்டிருக்கிறது. இதைக் குறித்து வேதம் என்ன சொல்லுகிறது? 'இங்கே மரிக்கிற மனுஷர்கள் தசமபாகம் வாங்குகிறார்கள். அங்கேயோ பிழைத்திருக்கிறான் என்று சாட்சி பெற்றவன் வாங்கினான். அன்றியும் மெல்கிசேதேக்கு ஆபிரகாமுக்கு எதிர்கொண்டுபோனபோது, லேவியானவன் தன் தகப்பனுடைய அரையிலிருந்தபடியால், தசமபாகம் வாங்குகிற அவனும் ஆபிரகாமின் மூலமாய்த் தசமபாகம் கொடுத்தான் என்று சொல்லலாம்' எபிரேயர் 7: 8-10. ஆதியிலே ஆபிரகாமிடத்திலிருந்து முதலாய் தசமபாகம் வாங்கின ஆசாரிய முறையே இப்போது வந்திருக்கிறது என்றும், தசமபாகத்தைப் பெற்று உழைத்த ஆரோனின் முறைமை முதலாய் இம்முறைக்குத் தசமபாகம் கொடுத்தது என்றும் இங்கே ரூபித்திருக்கிறது. இம்முறையான ஊழியத்துக்குத் தசமபாகம்கொடுக்கவேண்டியதில்லை என்று யார் சொல்லத்துணியலாம்? 'சிறியவன் பெரியவனாலே ஆசீர்வதிக்கப்படுவான் இவன் ஆபிரகாமின் கையில் தசமபாகம் வாங்கி வாக்குத்தத்தங்களைப் பெற்றவனை ஆசீர்வதித்தான்' (6, 7 வா). ஆபிரகாம் தசமபாகத்தைக் கொடுத்து ஆசீர்வாதத்தைப் பெற்றான். இக்காலத்தில் தசமபாகத்தைக்கொடாமல் ஆசீர்வாதத்தைத் தேடலாமோ? விசுவாசிகளின் தகப்பன் நமக்கு இப்படி மாதிரி காட்டவில்லையே!

கடைசியாக, 'சகோதரரே, ஆண்டவருடைய போதனையைக் கேட்டுக் கீழ்ப்படிவோமாக' 'என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டுவாருங்கள். அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். பூமியின் கனியைப் பட்சித்துப்போடுகிறவைகளை உங்கள் நிமித்தம் கண்டிப்பேன். அவைகள் உங்கள் நிலத்தின் பலனை அழிப்பதில்லை. வெளியிலுள்ள திராட்சக்கொடி பழமில்லாமற் போவதுமில்லை என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது எல்லா ஜாதிகளும் உங்களைப் பாக்கியவான்கள் என்பார்கள். தேசம் விரும்பப்படத்தக்கதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்'. மல்கியா 3: 10-12.

## காலங்களின் அடையாளங்கள்

கிறிஸ்துவின் முதலாம் வருகையைக் காட்டும் அநேக குறிப்புகள் பழைய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டிருந்தன. யூதர்கள் கிறிஸ்துவுக்காக எதிர்பார்த்துக்கொண்டிருந்தபோதிலும் அவர்களுடைய இருதயம் கடினமாயிருந்ததால், அக்காலங்களின் அடையாளங்களை அவர்கள் நிதானித்துக் கொள்ளக்கூடாமற்போயிற்று. ஆகையால் சாந்தமுள்ள இயேசு அவர்களைப் பார்த்து, 'மாயக்காரரே, வானத்தின் தோற்றத்தை நிதானிக்க உங்க

ளுக்குத் தெரியுமே, காலங்களின் அடையாளங்களை நிதானிக்க உங்களால் கூடாதா’? என்று சொல்ல நேரிட்டது. மத். 16: 3. அப்படியே கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்கும் அநேக அடையாளங்கள் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளை நாம் யூதர்களைப்போல மனக்கடினத்தோடல்ல, உண்மையுள்ள இருதயத்தோடு நிதானிப்போமாக.

**I. ஜுவாலிக்கிற இரதங்கள்.** அவன் தன்னை (அவர் தம்மை) ஆயத்தம்பண்ணும் நாளிலே இரதங்கள் ஜுவாலிக்கிற கட்கங்களை உடையதாயிருக்கும்; ஈட்டிகள் குலுங்கும். இரதங்கள் தெருக்களிலே கடகடவென்றோடி, வீதிகளில் இடசாரி வலசாரி வரும்; அவைகள் தீவட்டிகளைப்போல விளங்கி, மின்னல்களைபோல வேகமாய்ப் பறக்கும்’ நாகூம் 2:3, 4.

ரெயில்வண்டி வந்த துவக்கத்தில் அதுதான் இத்தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலென்று அநேகர் நினைத்ததுண்டு. ஆனால் அது தெருக்களிலும் வீதிகளிலுமல்ல, வயல்களிலோடுகிறது. அப்படியானால் இது டிராம் வண்டியைக் குறிக்குமா? இது பெரிய வீதிகளில் ஓடுகிறது, ஆனால் சிறு தெருக்களில் ஓடுகிறதில்லை. மேலும் இது மின்னல்களைப்போல வேகமாய் பறக்கிறதுமில்லை. நாகூமின் தரிசனம் தற்காலத்திலுண்டாயிருக்கும் மோட்டார் வண்டிகளைக் குறிக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை. இவைகளே ஜுவாலிக்கிற தீவட்டிகளைப்போல விளங்கி மின்னல் விரைவாய் வீதிகளிலும் தெருக்களிலும் ஓடுகின்றன. 26 செக்கண்டில் 1 மைல், அதாவது ஒருமணிநேரத்தில் 138½ மைல் வீதம் இவ்வண்டிகள் ஓடக்கூடும் இவைகள்தோன்றி சொற்பநாட்களுக்குள் எத்தனையோ வண்டிகள் இடத்துக்கிடம் பெருகிப்போய்விட்டன. இவ்வண்டிகள் கிறிஸ்துவின் வருகையின் காலத்திற்கு ஒரு முன் அடையாளமே. இது ‘ஆயத்தம்பண்ணும் நாள்.’

**II. பிரயாண வேகம்.** ‘அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள். அறிவும் பெருகிப்போம்’ தானி, 12: 4.

தானியேலின் காலத்தில் தீவிரமான சவ்வாரி குதிரை சவ்வாரியே. தேசத்தின் ஒரு மூலையில் நடக்கும் சங்கதி அதின் அடுத்த மூலைக்குத் தெரியவேண்டுமானால் எவ்வளவோ நாட்கள் பிடிக்கும். தேசத்தின் ஒரு பாகத்திலுள்ளவர்கள் அடுத்த பாகத்திலுள்ளவர்களுக்கு முற்றிலும் அந்நியராயிருந்தார்கள். இப்பொழுதோ எல்லாம் மாறிவிட்டது. வெகுதீவிரமாய்ச் செல்லக்கூடிய விதவிதமான வாகனங்கள் இப்பொழுது சொற்பகாலங்களுக்குள் உண்டாகிவிட்டது. ஒருமணிநேரத்தில் 60 மைல் ஓடும் ரெயில் வண்டிகளும், 90 மைல் பறக்கும் ஆகாயக்கப்பல்களும், மேற்சொன்னபடி 138½ மைல் ஓடக்கூடிய மோட்டார்கார்களும் இடத்துக்கிடம் உண்டாகிவிட்டது. இவைகளைத்தவிர தந்தியும் கம்பியில்லாத தந்தியும் பெருகிவிட்டது. உலகத்தில் ஒரு முனையில் நடக்கும் சங்கதி அதின் மறுமுனைக்கு



இப்பொழுது அதே நாளில் எட்டிவிடுகிறது. இக்காலத்தில் தோன்றியிருக்கும் ஆகாயக் கப்பல்களைப்பற்றி ஏசா. 60: 8-ல் குறிப்பாய்ப் பார்க்கிறோம்.

**III. பிரயாணிகளின் மிகுதி.** மேற்சொன்ன வாக்கியம் பிரயாணிகளின் மிகுதியையும் குறிக்கிறது. தானியேலின் காலத்தில் உலகமெங்கும் ஒருவருஷ முழுதும் பிரயாணம் செய்தவர்களைப் பார்க்கிலும், இக்காலத்தில் ஒருநாளில் பிரயாணம் செய்கிறவர்களின் தொகை ஜாஸ்தி. விரைவான வாகனங்கள் பெருகிவிட்டதால், பிரயாணிகளும் பெருகிவிட்டார்கள். ஒவ்வொருநாளும் எத்தனை லட்சக்கணக்கான ஜனங்கள் தற்காலத்தில் கப்பல்களிலும், ரெயில்களிலும் மற்றும் வாகனங்களிலும் பிரயாணம் செய்துவருகிறார்கள்.

**IV. அறிவின் பெருக்கம்.** மேற்சொன்ன வாக்கியம் அறிவின் பெருக்கத்தையும் ஒரு அடையாளமாகச் சொல்லுகிறது. தானியேலின் காலத்திலுள்ள பெயர்போன ஞானிகளுக்குத் தெரிந்த மொத்த அறிவைப் பார்க்கிலும், தற்காலத்தில் காலெஜில் படிக்கும் ஒரு மாணாக்கனுக்கு ஜாஸ்தியாய்த் தெரியுமென்று சொல்லலாம். ஒவ்வொருவகை சாஸ்திர அறிவும் இக்காலத்தில் முன்னொரு காலத்திலுமில்லாத விதமாய் பெருகிவிட்டது.

**V. கள்ளக் கிறிஸ்துகள்.** ‘ஒருவனும் உங்களை வஞ்சியாதபடி எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் அநேகர்வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு, நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்’ (மத். 24: 4, 5).

தற்காலத்தில் தங்களைக் கிறிஸ்து என்று அழைத்துக்கொள்ளுகிற
வர்கள் உலகத்தில் 32 பேரிருக்கிறார்களென்று தெரியவருகிறது. இவர்
கள் ஒவ்வொருவருக்கும் அவர்களைப் பின்பற்றுகிற கூட்டமுண்டு. இவர்
களெல்லாரிலும் பெயர் பிரஸ்தாபமானவன் பெர்சியா தேசத்தானான அப்துள்
பாகா என்பவன். அவன் அக்கா என்ற இடத்தில் குடியிருக்கிறான்.
பாகாவின் கூட்டம் சிலகாலமாய் அதிகமாய் பரம்பிவருகிறது அமெரிக்
காவிலுள்ள படிப்பாளிகளான ஆண்களும் பெண்களும் முதலாய் இதில்
சேர்ந்துவருகிறார்கள். தற்காலத்தில் பாகாவின் கூட்டத்தைச் சேர்ந்தவர்
களின் மொத்தத் தொகை 12,000,000.

**VI. யுத்தங்களும் யுத்தங்களின் செய்திகளும்.** ‘யுத்தங்களையும்
யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்
கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே; ஆனாலும்
முடிவு உடனே வராது. ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்
துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்’ (மத். 24: 6, 7).

தற்காலத்தில் ஐரோப்பாவில் நடந்துகொண்டிருக்கும் யுத்தம் கவனிக்கத்தக்கதே. உலக சரித்திரத்தில் இப்பேர்ப்பட்ட யுத்தம் எக்காலத்திலும் உண்டானதேயில்லை. இந்த யுத்தத்தில் இம்மட்டும் பத்து ஜாதிகள் தலை

யிட்டிருக்கின்றன. இவர்களின் மொத்த யுத்தவீரர் இரண்டுகோடிக்கு மேல். அயின்நதி பக்கத்தில் இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் யுத்தத்தில் யுத்தவீரர் இருபக்கமும் அணிவகுத்து நிற்பது 250 மைல்! யுத்தகழனியில் ஒவ்வொருநாளும் மாளுகிறவர்களின் தொகை ஏறக்குறைய 10,000. இவர்கள் உபயோகிக்கும் யுத்த ஆயுதங்கள் மகா பயங்கரமானவைகள். தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் யுத்தம் நடக்கிறது. இந்த யுத்தம் கிறிஸ்துவின் வருகைக்கு முன்னடையாளமென்று நினைக்க இடமுண்டு.

VII. கொள்ளை நோய், &c. ‘பஞ்சங்களும் கொள்ளைநோய்களும் பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்.’ மத். 24: 7.

நமது தேசத்திலுண்டாயிருக்கும் பஞ்சத்துக்கும் பிளேக்குக்கும் இன்னமும் முடிவைக் காணோம். பிளேக் நமது தேசத்தில் வந்தது போதாதென்று மற்ற இடங்களுக்கும் போனதுண்டு. இப்போதுண்டாயிருக்கிற யுத்தத்தால் இடத்துக்கிடம் பஞ்சமும் உண்டாகிவருகிறது. பூமியதிர்ச்சி எக்காலத்திலுமிருந்து வந்தபோதிலும், இந்நூற்றாண்டு தொடங்கின முதல் மூன்று வருஷங்களுக்குள்ளாக 48 பூமியதிர்ச்சிகள் உலகமெங்கும் உண்டாயிருந்ததாக தெரியவருகிறது. அப்படிப்பார்த்தால் இந்த நூற்றாண்டுக்கு 1600 மொத்தமாகும்! போனமாசந்தான் சிம்லாவிலும் சிமிர்ணாவிலும் உண்டான பூமியதிர்ச்சிகளைக் குறித்துக் கேள்விப்பட்டோம்.

VIII. அன்பு தணிதல். ‘அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்’ (மத். 24: 12).

பெந்தெகொஸ்தே நாள் தொடங்கி கிறிஸ்துவின்வருகை மட்டுமுள்ள காலத்தை ஏழுகாலங்களாகப் பிரிப்போமானால், இவ்வேழுகாலத்து சபைகளுக்கும் வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லியிருக்கும் ஏழு சபைகளும் அடையாளங்களாயிருந்ததென்று பார்க்கலாம். கடைசிகாலத்து சபைகளுக்கு அடையாளமாயிருந்த லவோதிக்கேயா சபையின் சீர்கேடுகளெல்லாம் தற்கால சபைகளில் காணப்படுகிறது. வெளி. 3: 15–17. குளிருமல்ல, அனலுமல்லவென்பதே தற்கால சபைகளின் ஸ்திதி. தான் நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருப்பதை அறியாமல், தான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், தனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் சொல்லியே தற்கால சபைகள் சுயதிருப்தியுள்ளவைகளாய் தங்களை வஞ்சித்துக்கொண்டிருக்கின்றன. ‘என்னவென்றாலும் சரி, சுட்டெரிப்பின் ஆவி மட்டும் வேண்டாம்’ என்று பிரெஞ்சுக்காரர் சொல்லுகிறதுண்டாம். தற்கால சபைகளுக்கும் இது பொருந்தினதாகவேயிருக்கிறது. லவோதிக்கேயா சபையைப்பார்த்தே, ‘இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்’ என்று கர்த்தர் சொன்னார் (வெளி. 3: 20). ‘அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்’ மத். 24: 33.



IX. சுவிசேஷ அறிவிப்பு. ‘ராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும். அப்போது முடிவுவரும்’ (மத். 24: 14).

மனுஷ சஞ்சாரமுள்ள உலகத்தின் ஏறக்குறைய எல்லாபாகங்களிலும் தேவ ஊழியர் சென்று, சுவிசேஷத்தை இக்காலத்தில் எல்லா ஜாதிகளுக்கும் பிரசங்கித்துவருகிறார்கள். சகல ஜாதிகளுக்குமென்று சொல்லியிருக்கிறதேயன்றி, ஒவ்வொரு மனுஷனுக்குமென்று சொல்லப்படவில்லை. மேலும் சுவிசேஷம் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படுமென்றும் சொல்லியிருக்கிறதேயன்றி, எல்லாரும் குணப்படுவார்களென்று சொல்லப்படவில்லை. இங்கே ‘முடிவு’ என்று சொல்லப்பட்டிருப்பது கிறிஸ்து தமது பரிசுத்தவான்களுக்காகவரும் வருகையைக் குறியாமல், தமது பரிசுத்தவான்களோடே வரும் வருகையையே குறிக்கிறது.

X. விசுவாசத்துரோகம். ‘ஏனெனில் விசுவாசத்துரோகம் முந்திநேரிட்டு, கேட்டின் மகனான பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய அந்த நாள் வராது’ 2 தெச. 2: 3.

இங்கே சொல்லியிருக்கும் ‘நாள்’ என்பது மேலே சொன்ன ‘முடிவு’ என்பதின் காலத்தையே காட்டுகிறது. தற்காலத்தில் விசுவாசத்தை மோசம் போக்கும் அநேக நூதன கொள்கைகள் உண்டாயிருக்கிறதைப் பார்க்கிறோம். New Theology, Higher Criticism Spiritualism, Antichristian Socialism, Christian Science, Millennial Dawnism, Theosophy. Sacredotalism முதலிய நூதன கொள்கைகள் வலு சர்ப்பத்தின் வாயிலும், மிருகத்தின் வாயிலும், கள்ள தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து புறப்பட்ட தவளைகளைப்போலப் புறப்பட்டு (வெளி. 16: 13) விசுவாசத்துரோகத்தை நேரிடச்செய்திருக்கிறது. இவைகளின் போதனையால் கிறிஸ்தவர்களென்றும் தேவ ஊழியக்காரரென்றும் அழைக்கப்படுகிறவர்களில் அநேகர் கிறிஸ்துவின் தெய்வீகத்தையும், தெய்வீகப்பிறப்பையும், இரண்டாம் வருகையையும், வேதாகமம் ஆவியானவரின் ஏவுதலினால் எழுதப்பட்டிருப்பதையும், ஆவியினால் மறுபடியும் பிறக்குதலையும் விசுவாசிக்கிறதில்லை. இப்பொழுது சொற்பகாலத்துக்குமுன் பாஸ்றன் என்ற பட்டணத்தில் 23 பாப்டிஸ்ற் போதகர்கள் கூடின கூட்டத்தில் 20 போதகர்கள் கிறிஸ்துவின் தெய்வீகத்தை விசுவாசியாதவர்களாயும், 3 பேர்மட்டும் விசுவாசித்தவர்களாயுமிருந்தார்களாம்! ‘அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதை

களுக்குச் சாய்ந்துபோகுங் காலம்வரும்' என்று அப்போஸ்தலன் சொன்ன காலம் இப்பொழுதே வந்திருக்கிறது. 2 தீமோ. 4: 3.

XI. **கொடிய காலங்கள்.** 'மேலும், கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள்......... தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து, அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயுமிருப்பார்கள்' 2 தீமோ. 3: 1-5.

தற்காலத்து சபைகளில் நாஸ்திகர் அநேகருண்டு; வேதபுஸ்தகத்தைக் குறை கூறுகிறவர்கள் பெருகிவிட்டார்கள்; ஜெபம் பண்ணாதவர்களுக்குக் கணக்கில்லை. சபைகளில் சடங்காசாரம் அதிகமாகிவருகிறது, பக்தியின் வேஷம் ஜாஸ்திப்படுகிறது, சாரமோ குறைவுபடுகிறது. தற்காலத்தில் பற்பல சபைகள் ஒன்றுக்கொன்று பெயருக்கு ஐக்கியமாகப் பார்க்கின்றன. ஆவியிலோ ஐக்கியம் கிடையாது. இது கொடிய காலமல்லவா?

XII. **ஐசுவரியவான்களின் பொக்கிஷங்கள்.** 'ஐசுவரியவான்களே......கடைசி நாட்களில் பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள்' யாக். 5: 3.

ஐசுவரியவான்கள் எக்காலத்தில் பணம் சேர்த்ததிலும் இக்காலத்தில் சேர்த்துவருகிறது கவனிக்கத்தக்கதே. தொழில்சாலை முறைகளாலும் (Factory System), பொறுப்பு முறைகளாலும் (Trust System) லக்ஷக்கணக்கான ஜனங்கள் கொஞ்சப்பேருக்காக உழைப்பதினால், இச்சிலருக்குண்டாகும் லாபத்திற்குக் கணக்கில்லை; அவர்கள் பணம் குவிந்துபோகிறது. ஒரு காலத்திலுமில்லாத வண்ணமாய் கோடீஸ்பரர்கள் இக்காலத்தில் எவ்வளவாய் பெருகியிருக்கிறார்கள்.

XIII. **கூலிக்காரருடைய கூக்குரல்.** 'இதோ உங்கள் வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூலி உங்களால் அநியாயமாய்ப் பிடிக்கப்பட்டு கூக்குரலிடுகிறது. அறுத்தவர்களுடைய கூக்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில் பட்டது' யாக். 5: 4.

ஐசுவரியவான்கள் கூலிக்காரருடைய கூலியைப்பிடிப்பது எக்காலத்திலுமுண்டென்று சொல்லக்கூடினும், இக்காலத்து விசேஷமென்னவென்றால், சில வர்த்தகசாலைகளில் ஒருவன் வேலைக்கு அமர்ந்தால் அவனுடைய முதல் இரண்டு வாரத்து சம்பளத்தையும் பிடித்து வைத்துக்கொள்வது சட்டமாகிவிட்டது. 20,000 அல்லது 30,000 ஜனங்கள் வேலைசெய்கிற வர்த்தகசாலைகளுண்டு. இவர்களெல்லாரிலுமிருந்து பிடிக்கப்படும் பணம் எவ்வளவதிகமாயிருக்கும். இதை அந்த வர்த்தகசாலைகள் தங்கள் சொந்த வகைக்கு உபயோகப்படுத்திக்கொள்ளுகின்றன. இப்படி பிடித்துவைத்த பணத்தை அந்த வேலையாள் வேலையை விடும்பொழுது அல்லது மரித்துப் போகும்பொழுது, அவனாகிலும் அவனுடைய வகையாளாகிலும் தாவா செய்தால் மட்டும் கொடுக்கிறது, மற்றப்படி கொடுக்கிறதில்லை!



மேலும் வேலையாட்களுக்குள் தற்காலத்தில் உண்டாயிருக்கும் சங்கங்களும், கூலி போதுமானதில்லையென்று அவர்கள் அடிக்கடி ஒன்றுசேர்ந்து வேலைக்குப் போகாமலிருந்துகொள்வதும் (Strikes) இவ்வாக்கியத்தை ருசுப்படுத்துகிறதல்லவா?

XIV. **பின்மாரி.** 'கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்........என்னுடைய ஊழியக்காரர் மேலும் என்னுடைய ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள்.' யோவே. 2: 28, 29; அப். 2: 17, 18.

இந்த தீர்க்கதரிசனம் பெந்தெகொஸ்தே நாட்களில் நிறைவேறினது வாஸ்தவம். ஆனாலும் அப்பொழுது இது பூராவாய் நிறைவேறிவிடவில்லை. 'கடைசிநாட்கள்' என்பது ஒருநாளைக் குறியாமல் ஒரு காலத்தைக் குறிக்கிறது. அக்காலத்தின் துவக்கம் பெந்தெகொஸ்தே நாட்கள், அக்காலத்தின் அந்தம் நாமிருக்கும் இந்நாட்களே. கடைசி காலத்தின் துவக்கத்தில் முன்மாரி பெய்தது. இப்பொழுது கடைசி காலத்தின் முடிவில் பின்மாரி பெய்யத் தொடங்கியிருக்கிறது. சபை உண்டாக முன்மாரி வேண்டியதிருந்தது. முதற்பலனைச் சேர்க்க இப்பொழுது பின்மாரி பெய்கிறது. ஆவியானவர் பூமியின்மேல் பெய்யும் முன்மாரியைப்போலவும் பின்மாரியைப்போலவும் நம்மிடத்தில் வருவதைப்பற்றி ஓசியா 6: 3–ல் பார்.

XV. **புறஜாதியாரின் காலம்.** 'புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்' லூக். 21: 24.

கிறிஸ்துவின் வருகையின் நாளையாவது நாழிகையாவது இங்கே குறிப்பிடுவது நமது நோக்கமேயில்லை. ஆனால் 'ஞானவான்களோ உணர்ந்துகொள்ளுவார்கள்' என்று சொல்லப்பட்டிருக்கிறபடி (தானி. 12: 10), புறஜாதியாரின் காலத்தைப்பற்றி அவர்கள் உணர்ந்துகொண்டதை இங்கே சுருக்கமாய்க் கவனிப்போம்.

புறஜாதியாரின் அரசாட்சி முழுவதும் நேபுகாத்நேச்சார் கண்ட சிலையில் குறிப்பிட்டிருக்கிறது. தானி. 2. அவ்வரசாட்சியின் காலம் முழுவதும் புறஜாதியாரின் காலம். அது ஏழுகாலங்கள். இதை இஸ்ரவேலருக்கு அடையாளமான யாக்கோபு புறஜாதியாருக்கு அடையாளமான ஏசாவை ஏழுவிசை (Seven times) தரைமட்டும் குனிந்து வணங்கினதிலும் (ஆதி. 33: 3), இஸ்ரவேலருக்குக் கூறப்பட்ட தண்டனையிலும் (லேவி. 26: 18. 21, 24, 28), புறஜாதிகளின் அரசாட்சியின் தன்மையைக் காட்டும் நேபுகாத்நேச்சாரின் பைத்தியத்திலும், (தானி. 4: 16 23, 25, 32). குறிப்பாய்ப் பார்க்கிறோம். ஒரு காலமென்பது 360 நாட்கள். cp. வெளி. 12: 6, 14. ஆகையால் ஏழு காலங்கள் 2,520 நாட்கள் ஆனால் ஒரு நாள் என்

பது ஒரு வருஷத்தைக் குறிக்கும். எசே. 4: 6. cp. எண். 14: 34; தானி. 9: 24. ஆகையால் புறஜாதியாரின் காலமென்பது 2520 வருஷங்கள். அது கிறிஸ்து பிறக்க 600 வருஷங்களுக்குமுன் யூதர்கள் நேபுகாத்நேச்சரால் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போனபொழுது தொடங்கினது. அவ்வருஷங்களோடு கிறிஸ்து பிறந்த பின்னுள்ள வருஷங்களைக் கூட்டினால் புறஜாதியாரின் காலம் முடிய நெருங்கிவிட்டதென்று பார்க்கிறோம்.

வெளி. 16: 12-ல் சொல்லியபடி, ஐபிராத்து நதியின் தண்ணீர் (துர்க்கி அரசாட்சி) வற்றிக்கொண்டு வருகிறது. அதின் கைக்குள்ளிருந்த கிரீஸ், செர்வியா, மொல்டேவியா, மொராக்கோ, அல்ஜீரியா, எகிப்து, பாஸ்னியா, பல்கேரியா, பால்க்கன்ஸ்டேட்ஸ் முதலிய நாடுகள் இப்பொழுது சிறிது காலங்களுக்குள்ளாக துர்க்கியிலிருந்து விடுதலை பெற்றுக்கொண்டன. எருசலேம் தற்காலத்தில் துர்க்கி கைக்குள்ளிருக்கிறது. தீர்க்கதரிசனம் நிறைவேற கானான்தேசம் புறஜாதியின் ஆளுகையினின்று விடுதலையடையவேண்டும். தற்காலத்தில் நடக்கும் சண்டையில் துர்க்கியும் தலையிட்டுக்கொண்டதென்று பார்க்கிறோம். காரியம் எப்படி முடிகிறதோ பார்ப்போம்.

‘இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்து பார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள் என்றார்’ லூக். 21: 28.

‘ஜாமக்காரனே, இரவு எவ்வளவு சென்றது’? ‘விடியற்காலம்வருகிறது இராக்காலமும் வருகிறது. நீங்கள் கேட்க மனதானால் திரும்பிவந்து கேளுங்கள்.’ ஏசா. 21: 11, 12. ‘விடியற்காலம் வருகிறது.’ அதாவது கிறிஸ்து தமது சம்பத்தைச் சேர்க்கவரும் சந்தோஷகாலம்வருகிறது. விடியற்காலம் யாருக்கு? அவருடைய வருகைக்கு ஆயத்தமாயிருக்கிறவர்களுக்கே அவர்களே கிறிஸ்து வரும்போது மகிமையடைவார்கள். ‘இராக்காலமும் வருகிறது.’ அதாவது அந்திக்கிறிஸ்துவின் துன்பகாலம் வருகிறது. இராக்காலம் யாருக்கு? கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமில்லாதவர்களுக்கே. பாத்திரத்தில் எண்ணெய் கொண்டுபோன யுத்தியுள்ள கன்னிகைகளே ஆயத்தமாயிருந்தார்கள். அவர்களே மணவாளனுடன் கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள். கர்த்தருடைய கை எலியாவின் மேலிருந்ததினால் தான் ரதத்தில்போன ஆகாபுக்குமுன் அவன் ஓடினான். 1 இரா. 18: 46. பிலிப்பு ஆவியைப்பெற்றிருந்ததினால்தான் கர்த்தருடைய ஆவியானவர் அவனைக் கொண்டுபோய்விட்டார். அப். 8: 39. இதை வாசிக்கிறவனே, நீ ஆவியைப் பெற்றிருக்கிறாயா? பின்மாரியின் ஆசீர்வாதத்தை ஜாக்கிரதையோடே தேடு. ஏனோ தானோவென்றிராதே. ஆவியினால் நிறைந்துகொண்டிரு எபே. 51: 8. கர்த்தர் வருகிறார். ‘மெய்யாகவே நான் சீக்கிர



மாய் வருகிகிறேன் என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்’ வெளி. 22: 20. ‘ஜாமக்காரனே, இரவு எவ்வளவு சென்றது’? ஏசா. 21: 11. ‘பிள்ளைகளே, இது கடைசி நேரமாயிருக்கிறது’ 1 யோவா. 2: 18.

## ‘ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்படுவோம்’

1 கொரி. 15: 51.

மறுரூபமடைவதற்கு மறுரூப ஆவிவேண்டும். மறுபிறப்பில் அப்பா பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவி வருகிறது. நாம் தேவனுடைய பிள்ளைகள்தானென்று ஆவியானவர் நமது ஆவியுடனே சாட்சி பகருகிறார். ஆனால் இயேசுவானவர் வரும்நாளில் நாம் இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்படவேண்டுமானால் பரம அழைப்பினால் வரும் மறுரூப ஆவிவேண்டும். பரம அழைப்பினால் இழுக்கப்படுகிறவர்கள் இனிவரும் உலகத்தின் பலன்களை ருசிக்கிறார்கள். பரலோகத்தில் அவர்கள் தங்கள் குடியிருப்பை வைத்துக்கொள்ளுகிறார்கள். பூலோகத்தில் அவர்கள் பரதேசிகளாய்த் தங்கி, தவித்து, தங்களுடைய பரம வாசஸ்தலத்தைத் தரித்துக்கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறார்கள். இதுவே ஆவியானவரால் வருகிற மறுரூப ஆவி. மறுரூபமாக்கப்படுவோம் என்று நிச்சயப்படுத்துகிற அத்தாட்சி இதுவே.

மறுரூப ஆவி எப்படி வரும்? ஒரு அனுபவமாக அதை நாடுவதினால் அது வரமாட்டாது. ஆவியானவரின் நிறைவும் ஆளுகையும் உள்ளத்திலும் ஜீவியத்திலும் அதிகப்படவேண்டும் என்று நாடுவதினால் மாத்திரம் அது வரும். ஜீவியத்திலும் ஊழியத்திலும் ஆவியானவர் தன்னை மேலான நிலைமைக்கு உயர்த்தவேண்டும் என்று யார் வாஞ்சிக்கிறார்களோ அவர்களுக்கு மறுரூப ஆவி தன்படியே வரும். கிறிஸ்தவர்கள் மேலான ஜீவியத்துக்கு எழும்பும்போது, அவர்களுக்குள் வாசமாயிருக்கும் ஆவியானவர் மறுரூப ஆவியை இயற்கையாய் அவர்களுக்குள் உண்டாக்குவார். ஆனால் அவர்களும் அந்த ஆவி அவர்களுக்குள் வரும்படி வாஞ்சிக்கவேண்டும், அதற்காக ஜெபிக்கவேண்டும். ஆவியானவர் அந்த ஆவியை தங்களில் உண்டுபண்ணுவாரென்று நம்பவேண்டும். அந்த ஆவிக்கு எதிரிடையான யாவையும் அவர்கள் தங்களை விட்டு அகற்றவேண்டும்.

விசுவாசத்தினாலே ஏனோக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான்’. அவன் முன்னூறு வருஷம் தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான். அதின் முடிவிலே தான் மரணத்தைக் காணாமல் எடுத்துக்கொள்ளப்படுவேன் என்ற விசுவாசம் அவனுக்கு வந்தது. அந்த விசுவாசத்தினாலே ஏனோக்கு எடுத்

துக்கொள்ளப்பட்டான். புது விசுவாசிகளுக்கும் நெடுங்கால விசுவாசிகளுக்கும் இவ்விதமாய் மறுரூப ஆவி வரவேண்டும். கடைசிகாலத்தில் ஜீவிக்கிற கிறிஸ்தவர்கள் மறுரூப ஆவியுள்ளவராய் ஜீவிக்கப் பார்த்துக்கொள்ளவேண்டியது மகா முக்கியமான காரியம்.

சிலருக்கு இந்த ஆவி திடீரென வரலாம். வெள்ளம்போல ஊற்றப்படலாம். சிலருக்கு இந்த ஆவி மெதுவாய் அறியாத பிரகாரமாய் வரலாம். புதிய விசுவாசிகளுக்கு ஆவியானவரே இந்த ஆவியை அருளினதுபோல காணப்படலாம். சிலருக்கு விசேஷித்த ஆவிக்குரிய ஊழியத்தின் மூலமாய் இந்த ஆவி வரலாம். ஒருவருக்கு உள்ளான அத்தாட்சியின் மூலமாயும், சிலருக்கு வெளியான அத்தாட்சியின் மூலமாயும் இதைப்பற்றிய நிச்சயம் வரலாம். ஆனால் ஒரே ஆவியானவர் இந்த ஆவியைக் கொடுக்கிறார். அவர் எந்தவிதமாய்க் கொடுத்தாலும் சரி, மறுரூப ஆவியை நிச்சயமாய்ப் பெற்றிருப்பதுதான் காரியம். பரலோக கவர்ச்சியும், பரம வாசஸ்தல வாஞ்சையும், இயேசுவின் பிரசன்னமாகுதலை எதிர்நோக்கி ஜீவிப்பதும் அதின் மெய்யான அடையாளங்களாயிருக்கும். சொப்பனங்களும், தரிசனங்களும், வெளிப்படையான பல வரங்களும் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி. ஆவியானவர் கொடுக்கும் ஊழிய வரம் பலருக்குப் பலவிதமாயிருக்கும். ஆனால் மறுரூப ஆவியோ பலருக்கும் பலவிதமாய் வந்தபோதிலும் எல்லாருக்குள்ளும் ஒன்றுபோல பரம வாஞ்சையைக் கொடுக்கும்.

**மறுரூப ஆவியை எப்படிக் காத்துக்கொள்ளலாம்?** ஆவியானவர் மூலமாய் வந்த ஆவி அவர் மூலமாய் மாத்திரம் காக்கப்படலாம். ஆவியானவரோடு இசைந்து ஜீவிக்கப் பழகவேண்டும். ஆவியானவரால் உபயோகிக்கப்படுவதற்கு ஜீவியமும் ஊழியமும் ஒழுங்குபடுத்தப்படவேண்டும். ஆவியானவர் இதற்கு வேண்டிய போதனையைக் கொடுக்கும்படி கேட்கவேண்டும். மறுரூப ஆவி குறைகிறதா பெருகுகிறதா என்று சோதித்துப் பார்த்து, குறைகிறதற்குக் காரணத்தைக் கண்டுபிடிக்கவேண்டும். நாம் சம்பந்தப்படுகிற ஒவ்வொரு காரியமும் நமது ஆவியை பெலப்படுத்துமோ கெடுத்துவிடுமோ என்று சோதித்துப் பார்க்கவேண்டும். மறுரூப ஆவியை பெலவீனப்படுத்தும் யாவையும் அகற்றிவிடுவதினாலே பெரிய ஜெயம் வரும்.

மறுரூப ஆவி ஆண்டவருக்குப் பிரியமும் சபைக்குப் பிரயோஜனமுமாயிருக்கிறபடியே, அது பிசாசுக்குப் பகையாகவும் வெறுப்பாகவுமே இருக்கும். அந்த ஆவியைக் கெடுக்க அவன் வெகு பிரயாசப்படுவான். மனித விரோதத்தை எழுப்பிவிடுவான். மாய்மால ஏமாற்றங்களை உண்டுபண்ணுவான். விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் கெடுக்கப் பார்ப்பான். சுவாமியுடைய சித்தத்தின் பாதையைவிட்டுத் திருப்பும்படி பிரயாசப்படுவான். ஆனால் அவனுடைய தந்திரங்கள் ஆவியானவரால் நடத்தப்படுகிறவர்களுக்குத் தெரியும். அவர்களை அவன் ஏமாற்றமுடியாது. ஆயினும் நிற்கிறேன்



என்றெண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கவேண்டும். இடைவிடாத விழிப்பினாலேயே சாத்தானின் தந்திரங்களை நாம் மேற்கொள்ளலாம்.

மாம்சமும் உலகமும் மறுரூப ஆவியைக் கெடுக்கக்கூடும். மாம்சம் உலகத்துக்கு இழுக்கிறது. உலகத்தின் கவலைகளும் கஷ்டங்களும் வேலைகளும் வருத்தங்களும் மறுரூப ஆவியைத் தணித்துவிட ஏதுவானவைகளே. ஆனால் மறுரூப ஆவியைப் பெற்ற கிறிஸ்தவன் இவைகளில் அவசியமில்லாத யாவுக்கும் விலகிக்கொள்வதினாலும், அவசியமானவைகளினால் தன் ஆவியை இழந்துவிடாதபடிக்கு ஆவியானவரின் சகாயத்தைத் தேடிக்கொள்வதினாலும் உலகத்தினாலும் மாம்சத்தினாலும் வரும் சோதனைகளுக்குத் தப்பிக்கொள்ளுவான். மறுரூப ஆவி உலகத்திலுள்ளவைகளால் திருப்தியடைய நாடமாட்டாது. நிலையானதொன்றும் அதற்கு இங்கே இல்லை. வரப்போகிறதையே அது நாடித்தேடும்.

**மறுரூப ஆவியை உபயோகிக்கும் விதம்.** மாம்சத்தினால் பிறந்தது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறந்தது ஆவியாயிருக்கும். மறுரூப ஆவி கிறிஸ்தவர்களை ஆவியாக்கும். அவர்கள் உலகத்தை மறந்து தங்கள் சரீரத்தைக் கீழ்ப்படுத்தி ஆவியாகிய கர்த்தரோடு அதிகமாய் ஜீவிப்பார்கள். அதினால் அவர்கள் அதிகமதிகமாய் மறுரூபமாவார்கள். சீக்கிரம் வெளிப்படப்போகிற இரட்சகரை அவர்கள் எதிர்நோக்கி ஜீவிப்பார்கள். அவர் 'தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்' அவர்கள் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுவார்கள். 'நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய் புத்தி சொல்லவேண்டும்'. 'வருகிறவர் இன்னுங் கொஞ்சக்காலத்தில் வருவார், தாமதம் பண்ணார்'. இன்னும் கொஞ்சக் காலத்தில் இயேசு இராஜாவைப் பார்க்கலாம் ஆதலால் இப்போதே மறுரூப ஆவியைப் பெறுவோமாக. உலக சம்பவங்களினால் நாம் எச்சரிப்படைவோமாக இக்காலத்தில் நிர்விசாரமாய் ஜீவித்தால் அவர் வரும்நாளில் வெட்கப்பட்டுப் போக நேரிடலாம். விசுவாசத்தால் ஏனோக்கு மரணத்தைக் காணாமல் எடுத்துக்கொள்ளப்பட்டான். மறுரூப ஆவியுடையவர்களாய் நாம் எடுத்துக்கொள்ளப்படுவோமென்ற விசுவாசத்தோடே ஜீவித்து வருவோமாக.

'மறுரூப ஆவி வேண்டுமென் சுவாமி;
மனமெல்லாம் புதிதாக்கிடும், சுவாமி;
சிறுமைப்பட்டடியேன் கேட்கிறேன், சுவாமி;
தேற்றிடும், புதுபெலன் ஊற்றிடும், சுவாமி'.

## கடைசிக்கால சம்பவங்கள்

(தொடர்ச்சி).

2 புற ஜாதியாரின் காலங்கள் முடிந்துபோகிறது.

லூக்கா 21-24—தானியேல் 2: 31—35-யில் கண்ட சிலை அவைகளைக் குறிக்கிறது. பாபிலோன், பெர்சியா, கிரேக்கு, ரோம ராஜ்ஜியங்கள். தானி: 4: 23, 32.

தீர்க்கதரிசன புஸ்தகங்களில் 'காலம்' என்பது 360 வருஷங்களாம் ஆகையால் 7 காலங்கள்—2520 வருஷங்கள் லேவியாகமம் 26: 18, 21, 24, 28.

பூமி சூரியனை சுற்றி ஓட 365 நாள் செல்லும், சந்திரன் பூமியை சுற்றி ஓட 28 நாள் செல்லும். 12 விசை சுற்றி ஓட 356 நாள் செல்லும். இதற்கும் அதற்கும் வித்தியாசம். தானியேல் 12: 12.

'ஏழத்தனை'—7 காலங்களாம். தானி. 4: 32. $3\frac{1}{2}$ காலங்கள். தானியேல். 12: 7 வெளி. 12: 14=1260 வருஷங்கள்

```
 360        2/2520
   7        ------
 ----         1260
 2520       ------
 ----
```

747—பாபிலோன் ராஜ்ஜிய ஆரம்பம்; 2520 யிலிருந்து 747ஐ கழித்தால் 1773.

```
2520
 747
----
1773 கி. பி.
----
```

பாபிலோனியர் 587-ம் வருஷத்தில் யூதருடைய ராஜ்ஜியத்தை முற்றிலும் அழித்து எருசலேம் தேவாலயத்தை நிர்மூலமாக்கினார்கள். 2520-யிலிருந்து 587ஐ கழித்தால் 1933.

```
2520
 587
----
1933
----
```

புறஜாதியாருடைய காலங்கள் இந்த இரண்டு தேதிகளுக்கும் இடையில் முடிந்தாலும் முடியும்.

(இன்னும் வரும்).

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

October,. 1915. Registered—No. M. 316

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

"...விடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." (யோவான் 7: 88)

Vol. XVI அக்றோபர் 1915

## இருதயக்கடினம்

'உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்' எபி. 3: 15. இக்கடைசிகாலம் கொடியகாலமென்று எங்குமுள்ள தேவனுடைய பிள்ளைகள் எல்லாரும் உணருகிறார்கள். மனுஷனுடைய அக்கிரமும் பாவமும் காலத்தைக் கெடுத்ததேயல்லாமல் மற்றப்படியல்ல. பாவத்துக்குமுன் தேவன் எல்லாவற்றையும் பார்த்து நன்றாயிருக்கிறதென்று மகிழ்ந்தார். பாவத்துக்குப்பின்போ சகலமும் கெட்டுப்போனதாகக் கண்டு மனஸ்தாபப்பட்டார். பாவத்தினால் மனுஷனுக்குண்டான கேடுகள் அநேகம். நல்லதேவனை விட்டுப்பிரிந்தான். அக்கிரமத்துக்கு அடிமையானான். புத்தியின் கண்களைக் குருடாக்கிக்கொண்டான். சமாதான ஜீவியத்தைப் போக்கடித்தான். தன் சரீரத்தையும் கெடுத்துக்கொண்டான். இவைமாத்திரமல்ல, தன் இருதயத்தையும் கடினப்படுத்திக்கொண்டான். ஆ, இருதயக்கடினம் எல்லாவற்றிலும் மோசம். ஆகையால், ஆவியானவர் இருதயக் கடினத்தைக்குறித்துப் பேசும்போது இஸ்ரவேலரைத் திருஷ்டாந்தமாக எடுத்துக்காண்பிக்கிறார். அவர்கள் தேவனுடைய அதிசயங்களையும் நடத்துதல்களையும் அவருடைய மகிமையையும் கண்ணாரக்கண்டிருந்தும் அவருக்குப் பயப்படாமலும், விசுவாசியாமலும், கீழ்ப்படியாமலும், போய் தங்கள் இருதயங்களை அதிகமாய்க் கடினப்படுத்தி தேவகோபத்துக்குள்ளானார்கள், இச்சிக்கப்படத்தக்க நல்ல தேசத்தை இழந்து வனாந்தரத்தில் மாண்டுபோனார்கள். சகோதரரே! இன்று நாம் அவருடைய சத்தத்தைக் கேட்போமானால் நமது இருதயங்களைக் கடினப்படுத்தாதபடி எச்சரிக்கையாயிருப்போமாக.

I. இருதயக்கடினம் எப்படி உண்டாகும்?

(1) கிருபையின் ஆவிக்கு எதிர்த்து நிற்பதினால். 'என் ஜனமோ என் சத்தத்துக்குச் செவிகொடுக்கவில்லை; இஸ்ரவேல் என்னை விரும்பவில்லை, ஆகையால் அவர்களை அவர்கள் இருதயத்தின் கடினத்திற்கு விட்டுவிட்டேன்' (சங். 81: 13). ஆவியானவர் மனுஷனோடு போராடுகிற காலமுமுண்டு, அவர் போராட்டம் நிற்கிற காலமுமுண்டு. இதை வாசிக்கிற என் சகோதரனே! இதை மறந்துபோகாதபடி உன்னைப் பணிவாய்க் கெஞ்சுகிறேன். பூர்வ உலகத்தாரோடு வெகுகாலம் போராடினார். அப்புறம் போராட்டம் நின்றது. அவர்கள் தேவசத்தத்திற்குச் செவிகொடாமற்போனபடியால் ஆவியானவர் அவர்களை விட்டுவிலகினார். 'என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை' என்று கர்த்தர் சொன்னார். பார்வோனோடு தேவன் பலமாய்ப் பேசினார். பலத்த செய்கைகளினால் அவனோடு போராடினார். தேவகரம் அவனுக்கு விரோதமாய் நிற்கும்போது ஒருவிதமாகவும், அது நீங்கும்போது வேறுவிதமாகவும் தன்னைக் காண்பித்தான். அவன் தேவனை விரும்பவில்லை, அவர் சத்தத்திற்குச் செவிகொடுக்கவுமில்லை. கிருபை அவனைவிட்டு விலகிற்று. கல்லைப்போல் கடினப்பட்டுப்போனான். சகோதரரே! உங்கள் இருதயங்களின் நிலைமை எப்படியிருக்கிறது? ஆண்டவர் பலவிதமாய் உங்களோடு பேசுகிறார். உங்களை ரட்சிக்கவும் பரிசுத்தமாக்கவும் தமக்கு உத்தம ஊழியர்களாக்கவும் எவ்வளவோ பிரயாசப்படுகிறார். அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்தீர்களா? அல்லது கர்த்தரை விரும்பாமல் அவருடைய ஆவிக்கு எதிர்த்துநிற்கிறீர்களா? இந்த நேரத்தில் உங்கள் இருதயம் ஆண்டவருடைய பார்வையில் எப்படியிருக்கிறதென்று சோதித்துப்பாருங்கள்

(2) அறிந்த சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற் போவதினால். மாற்கு மூன்றாம் அதிகாரத்தில் நம் ஆண்டவரை ஓர் ஜெப ஆலயத்தில் பிரவேசிக்கக் காண்கிறோம். சூம்பின கையையுடைய ஒரு மனுஷன் அங்கேயிருந்தான். அது ஒரு ஓய்வுநாளாயிருந்தது. இவனைச் சொஸ்தப்படுத்தினால் அவரைக் குற்றப்படுத்தலாமென்பது அவர்களுடைய நோக்கம். அவர்களைப் பார்த்து: ஓய்வுநாட்களில் நன்மைசெய்வதோ தீமைசெய்வதோ, ஜீவனைக் காப்பதோ அழிப்பதோ எது நியாயம் என்று கேட்டார். அவர்கள் ஒன்றும் பேசவில்லை. அவர்களுடைய இருதயம் எவ்வளவு தூரம் கடினப்பட்டதாயிருந்ததென்று அவர் அறிந்தபோது அவர் விசனப்பட்டுக் கோபத்துடனே சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்து, சூம்பின கையையுடைய மனுஷனைச் சொஸ்தமாக்கி அனுப்பினார். இந்தக் கிருபையின் ஐசுவரியத்தைப் பட்டப்பகலைப்போல் அவர்கள் பார்த்திருந்தும், அக்கடினப்பட்ட பாவிகள் அவரைக் கொலைசெய்யும்படி புறப்பட்டுப்போனார்களென்று வாசிக்கிறோம்.



நம்முடைய தனி ஜீவியமானாலும் சபை ஜீவியமானாலும் ஆசீர்வதிக்கப்படுவதற்கு வேறே நூதனமான போதனைகள் வேண்டுமென்றல்ல. இதுவரை நாம் அறிந்ததும் உபதேசிக்கக் கேட்டதுமான சத்தியங்களுக்கு நாம் கீழ்ப்படிவது மெய்யானால் அதிசயமான மாறுதலை நம்மில் காணலாம். நாம் கீழ்ப்படியும் ஒருசத்தியம் நம்மில் எவ்வளவோ மாறுதலை உண்டாக்க வல்லமையுள்ளதாயிருக்கிறது. கீழ்ப்படிவது அதாவது சத்தியத்தைக் கைக்கொள்ளுவது ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் கீழ்ப்படியாமற்போவது இருதயக்கடினத்திற்கும் ஏதுவாயிருக்கிறது. திருஷ்டாந்தமாக: நாம் வேதத்தை வாசிக்கும்போது 'நீங்கள் மனந்திரும்பாமற்போனால் கெட்டுப்போவீர்கள்' என்கிற வசனத்தை வாசிக்கிறதாக வைத்துக்கொள்ளுங்கள். அந்தச் சத்தியம் நமது செவியில் தொனித்தும் நாம் பாவத்தில் நிலைத்திருப்போமானால் அவ்வசனத்துக்கு நாம் கீழ்ப்படியாமற் போவதினாலே இருதயம் கடினப்பட ஏதுவாகிறது. இப்படியே ஏராளமான சத்தியங்கள் தங்களிலே வல்லமையுடையதாயிருந்தும் நாம் அவைகளுக்குக் கீழ்ப்படியாமற் போவதினாலே அவைகள் நமது விஷயமாய் வல்லமையற்றதுபோலாகிறது. இந்தச் சபை எப்படிப்பட்டது என்று ஒருவர் இன்னொருவரைக் கேட்க: அதற்கு அவர் இது திருவசனத்தைக் கேட்டுக்கேட்டுக் கடினப்பட்ட சபை என்றார். வசனத்தைக் கேட்டதினாலே அல்ல, வசனத்தைக் கேட்டும் அதற்குக் கீழ்ப்படியாமற்போனதினாலேயே இருதயக்கடினம் உண்டாகிறது.

(3) பாவத்தின் வஞ்சனையினால். 'உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதேயுங்கள்' என்று ஆவியானவர் எச்சரிக்கிறார் (எபி. 3: 13). பாவத்தினால் உண்டாகக்கூடிய பலகேடுகளில் இருதயக்கடினமும் ஒன்று. சூரிய உஷ்டணம் மண்ணிலுள்ள ஈரத்தை இழுத்துக்கொள்ள களிமண் கல்லாய் இறுகிப்போவதுபோல் பாவமானது மனுஷனுடைய உள்ளத்திலுள்ள நல் உணர்ச்சிகளை மாற்றி மனதைக் கல்லாக்கிப்போடுகிறது, எத்தனையோபேர் விஷயத்தில் இன்று இதைக் காண்கிறோம். ஓர் காலத்தில் இயேசு என்றால் உள்ளம் உருகும். வேதத்தில் அவ்வளவு வாஞ்சை. ஜெபத்தில் அவ்வளவு ஊக்கம். ஜீவியத்தில் அவ்வளவு சுத்தம். இன்று அவர்களுடைய இருதயம் கல்லைப்போல் கடினமாயிருக்கிறது. அவ்வளவு நல்ல ஜீவியம் இவ்வளவு கேவலமாய் போனதின் காரணமென்னவென்று விசாரிக்கப்போனால் ஏதோ பாவத்தினால் இப்படியாயிற்று என்று தெரியவரும். சகோதரரே! பாவம் நுழைந்து இருதயம் கடினப்பட்டுப்போகாதபடி வேதத்தியானத்தையும் ஜெபத்தியானத்தையும் கையாடிவாருங்கள்.

II. இருதயக்கடினத்தினால் உண்டாகும் நஷ்டங்கள் எவை?

அவைகள் மிகுதியாயிருக்கிறது. சிலதைமாத்திரம் கவனிப்போம்.

(1) **வேதப்பிரியமற்றுப்போகுதல்.** வேதமானது மதிப்பில் பொன்னிலும் பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கது. ருசியில் தேனிலும் தெளிதேனிலும் மதுரமானது. அது நமது வழிக்கு ஒளி. சத்துருவை மேற்கொள்ளக் கருக்கான பட்டயம். ஆத்ம உயிரும், ஞானப்பிரகாசமும், நம்பிக்கை விசுவாசமும், ஆறுதலும் தேறுதலும், சமாதான சந்தோஷமும், சகல நல் ஈவுகளும் வேதத்தின் பலனாயிருக்கிறது. தேவமக்கள் இந்தப்பாலில் எவ்வளவு வாஞ்சையாயிருக்கிறார்கள்! தேவஊழியர் இந்த ஆகாரத்தில் எவ்வளவு பிரியமாயிருக்கிறார்கள்! இருதயம் கடினப்பட்டவர்களுக்கு இந்தப் புஸ்தகம் ஒன்றுமில்லை. வாசிக்கவும் விரும்பார்கள். வாசித்தாலும் அறியார்கள். வேதம் இருதயத்துக்குரியதேயன்றி வாய்க்குரியதல்ல.

(2) **ஜெபவாஞ்சையற்றுப்போகுதல்.** பக்தர்களுக்கு ஜீவனாயிருக்கிற ஜெபம் இவர்களுக்கு மகா பாரம். ஜெபம் செய்வது மகாகஷ்டம். ஜெபிக்க நேரிட்டாலும் வெறும் வார்த்தையேயல்லாமல் வல்லமையிராது, எத்தனை ஜெபம் செய்தாலும் உத்தரவைக் காணார்கள். இவர்கள் செய்கிற மற்றப் பாவங்களோடு இவர்களுடைய ஜெபமும் பாவமாக எண்ணப்படுகிறது.

(3) **ஊழியம் நஷ்டமாகுதல்.** இருதயம் கடினமாயிருக்கும்போது ஆத்துமவாஞ்சை ஏது? ஆத்துமவாஞ்சையில்லாவிட்டாலும் கடமைக்கு ஊழியம்செய்வார்கள். இது எவ்வளவு பரிதாபம்! வேதத்தைப் பிரசங்கிப்பது எவ்வளவு அற்பமாகப்போய்விட்டது. இருதயத்திலிருந்து இருதயத்துக்குப் பேசாமல் வாயிலிருந்து காதுகளுக்குப் பேசுகிறார்கள். கடினப்பட்டவர்களின் ஊழியம் வீண்நேரமும் பெரும் நஷ்டமுமாம்.

(4) **ஜீவியம் கெட்டுப்போகுதல்.** 'தேவனுக்கு விரோதமாகத் தன்னைக் கடினப்படுத்தி வாழ்ந்தவன் யார்'? (யோபு. 9: 4). 'எப்பொழுதும் பயந்திருக்கிறவன் பாக்கியவான், தன் இருதயத்தைக் கடினப்படுத்துகிறவன் தீங்கில் விழுவான்.' 'அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றி சடுதியில் நாசமடைவான்' (நீதி. 28: 14; 29). இவ்வாக்கியங்கள் சத்தியமென்பதற்கு எத்தனையோ திருஷ்டாந்தங்கள் உண்டு.

(5) **இளைப்பாறுதல் அற்றுப்போகுதல்.** தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தின இஸ்ரவேலரைக்குறித்து 'என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன் என்றார்;' உப்பானது சாரமற்றுப்போனால் எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும் மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமேயொழிய மற்றொன்றுக்கும் உதவாது. கிருபையை இழந்து இருதயத்தைக் கடினப்படுத்துவோரின் நிலைமை எவ்வளவு பயங்கரம்! கடினப்பட்ட எகிப்தியர் செங்கடல் சமுத்திரத்தில் அமிழ்ந்தார்கள். கடினப்பட்ட



இஸ்ரவேலர் வனாந்தரத்தில் மாண்டார்கள். கடினப்பட்ட கிறிஸ்தவர்கள் என்னத்தைக் காண்பார்கள்? தேவனிடத்தில் பட்சபாதமில்லை. கேட்டுக்குப்போகிற வழியும் உன் முன்னிருக்கிறது, ஜீவனுக்குப்போகிற வழியும் உன் முன்னிருக்கிறது. தெரிந்துகொள்ளவேண்டியது உன் கடமை.

III. **இருதயக் கடினம் எப்படி நீங்கும்?** இது உன்னால் கூடிய காரியமல்ல. மனுஷன் தன்னைக் கெடுப்பான், ரட்சிப்பானோ? தன்னைக் கறைப்படுத்துவான். கழுவமாட்டான். பாவம் செய்வான் மன்னிக்கமாட்டான். இழந்துபோவான் சம்பாதிக்கமாட்டான். நன்மையானதொன்றும் மனுஷனில் இல்லை. நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது. அப்படியே கடினப்பட்ட பாவியும் தானே தன் கடினத்தை நீக்கிக்கொள்ளமாட்டான். மனுஷனால் கூடாதது தேவனால் கூடும். அப்படிச்செய்வதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். 'உங்களுக்கு நவமான இருதயத்தைக்கொடுத்து உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்' என்கிறார் (எசேக். 36: 26). மனுஷன் தன் இருதயத்தைக் கெடுக்கிறான். தேவனோ அந்தக் கேட்டை எடுக்கிறார். இதற்காக நாம் செய்யவேண்டியதின்னதென்று 37-ம் வசனத்தில் சொல்லியிருக்கிறது. 'நான் இதை அனுக்கிரகம் செய்யும்படி அவர்கள் என்னிடத்தில் விண்ணப்பம் பண்ணவேண்டும்' என்கிறார். அவருடைய வாக்கை நம்பி அவருக்குமுன் முழங்கால்படியிட்டு இந்தக் கல்லான இருதயம் எடுபடவும் நொறுங்குண்ட சதையான இருதயம் அருளப்படவும் ஜெபிப்போமாக.

நீர் பெருங்காற்றைப் போலவும்
வந்தசைத்தருளும்.
கல் நெஞ்சை மாற்றி, போன்பை
நன்குணரச் செய்யும்.

## 'அவர் ஜெபம்பண்ணுகையில்'

**'ஜெபம்பண்ணுகிறதற்கு ஒரு மலையின்மேல் ஏறினார், அவர் ஜெபம்பண்ணுகையில்' லூக். 9: 28, 29.**

சுவிசேஷகர்கள் எழுதினவைகள் மாத்திரந்தான் இயேசுவானவர் ஜெபித்த நேரங்கள் என்று நாம் எண்ணலாகாது. அவர்களுக்கு முன்பாக அவர் ஜெபித்த நேரங்களுமுண்டு. அவர்களைவிட்டுப் பிரிந்துபோய் ஜெபித்த நேரங்களுமுண்டு அவர்கள் கண்டவைகளையும் அறிந்தவைகளை

யும் எழுதிவைத்திருக்கிறார்கள். ஆகிலும் அவர் உள்ளத்திலிருந்து ஜெபதூபம் எழும்பாத நேரமிருந்ததில்லை. வீட்டிலும் வழியிலும், கடலிலும் மலையிலும், ஒருவர் முன்னும் திரள் ஜனத்தின் நடுவிலும், இரவும் பகலும் இடைவிடாமல் அவர் இருதயம் பிதாவை வாஞ்சித்துக்கொண்டேயிருந்தது. இந்த ஜெபசிந்தை நம்மிலுமிருப்பதாக.

அவர் ஜெபம்பண்ணுவதற்கு ஒரு மலையின்மேல் ஏறினார் என்று இங்கே சொல்லியிருக்கிறது. அது உயர்ந்தமலை என்று மத்தேயு சொல்லுகிறார். தனித்திருக்கும்படி மலையிலேறுவது மனசுக்கு எவ்வளவோ பரவசத்தைக் கொடுக்கிறதென்பது நமக்குத் தெரியும். உலகத்தையும் அதின் சந்தடியையும் காலின் கீழேவிட்டு உன்னத சிகரத்திலேறி பிதாவோடு சம்பாஷித்து அவரோடு முகமுகமாய்ப் பேசுவதுபோலயிருக்கும். அடிக்கடி மலையிலேறி ஜெபிக்கும் சிலாக்கியம் நமக்குக் கிடைக்காவிட்டாலும் நமது ஜெப அறையிலிருந்து மனதின் மூலமாய் உன்னதத்திற்கேறுவோமானால் அதுவே பாக்கியம். ஆண்டவருக்கு ஜெபம் அவசியமானால் அவரடியாருக்கு அது எவ்வளவு அவசியம்! அவர் ஜெபம்பண்ணுகையில் நடந்த இரண்டு மூன்று குறிப்புகளைச் சுருக்கமாய்க் கவனிப்போம்.

1. அவருடைய முகரூபம் மாறிற்று. 'அவருடைய முகம் சூரியனைப்போல் பிரகாசித்தது, வெளிச்சத்தைப்போல் அவருடைய வஸ்திரம் வெண்மையாயிற்று' என்று மத்தேயு எழுதுகிறார். அம்மலைச்சிகரத்தில் ஜெபிக்க முழங்காலூன்றினவுடனே அவர் முகம் மாறிவிடவில்லை. ஆனால் அவர் ஜெபிக்க ஜெபிக்க வரவர முகத்தில் மகிமைதோன்றிச் சூரியப்பிரகாசம் போலாகிவிட்டது. மோசே நாற்பது நாள் முகமுகமாய் தேவனோடு சம்பாஷித்து மலையிலிருந்து இறங்கினபோது அவன் முகம் தேவ மகிமையினால் பிரகாசமடைந்திருந்தது. மற்றவர்கள் அவன் முகத்தைப் பார்க்கக்கூடாதிருந்தது.

ஜெபம் முகத்தை மாற்றுவது மெய்யே. முகத்தில் தோன்றும் ஓர்வித அழகினாலே ஜெப பக்தர் இன்னாரென்று நாம் கண்டுகொள்ளலாம். தேவனுடைய பிள்ளை ஒருவரை நான் அறிவேன். அவர் பதினெட்டு வருஷங்களுக்குமுன் சொன்னது இப்பொழுது என் ஞாபகத்துக்கு வருகிறது. ஒருநாள் அவர் தேவனோடு வெகுநேரம் தனித்துப் பேசிக்கொண்டிருந்தாராம். அப்படியிருக்கும்போது பரம சந்தோஷம் அவர் உள்ளத்தை நிரப்பினதினால் அடக்கக்கூடாமல் தேவ சமுகத்தில் மிகுந்த பூரிப்படைந்தாராம். பின்பு கோவிலுக்குப் போகும்படியாக உடுத்திக்கொள்ளும்படி கண்ணாடிக்கு முன் அவர் நின்றபோது தன் முகரூபம் மாறிப் பரம அழகுகொண்டிருந்ததைக் கண்டதாகச் சொன்னார்.

நம்முடைய முகத்தில் தேவ அழகு குடிகொண்டிருப்பது நல்லது அதைப் பார்க்கிலும் நமது ஜீவியம் மறுரூபமடைவதே விசேஷம். ஒரு



வேளை நமது முகங்கள் இயேசுவைப்போலும் மோசேயைப்போலும் பிரகாசிக்கிறதாகயிருந்தால் மற்றவர்கள் பயந்து நமது முகங்களைப் பார்க்காதபடி முக்காடு போட்டுக்கொள்ளவேண்டியதாயிருக்கும். நமது முகங்கள் மாத்திரமல்ல, நமது முழுச்சரீரமும் மறுரூபமாகிப் பிரகாசிக்கிற காலம் சீக்கிரம் வருகிறது. இப்போது நாம் பிரதானமாய்த் தேடவேண்டியது உள்ளான மறுரூபமே. 'உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்' என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். இயேசுவின் முகம் பிரகாசிக்குமுன்னே அவருடைய அகம் பிரகாசித்தது என்பதை அறியவேண்டும். அகத்தின் அழகு முகத்திலே தோன்றிற்று. உள்ளத்தை மறுரூபப்படுத்தும் வல்லமை ஜெபத்துக்குண்டு. நமது முகங்களில் கவலை, மூர்க்கம், பெருமை, பேராசை இப்படிப்பட்ட சாயல்கள் காணப்படுகிறது. அவைகள் நமது இருதயத்தை ஆண்டுகொண்டு அங்கே தங்கும்படி இடங்கொடுத்தபடியினாலே படிப்படியாய் அச்சாயல்கள் நமது முகத்துக்கு வந்துவிட்டது. தேவன் இருதயத்திலுள்ள எல்லா விக்கிரகங்களையும் உடைக்கவும் நம்மைச் சுத்திகரிக்கவும் அவரை நோக்கி கெஞ்சுவோமாக. நமது உள்ளமும் முகமும் தேவ அழகு பொருந்தியிருக்கத்தக்கதாக தனி ஜெபத்தில் அதிகநேரம் செலவிடுவோமாக.

II. பரிசுத்தவான்களோடு ஐக்கியம் உண்டாயிற்று. மோசே எலியா என்னும் இரண்டுபேரும் மகிமையோடே காணப்பட்டு அவருடனே சம்பாஷணைபண்ணிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அவருடைய முகரூபம் மாறினது மாத்திரமல்ல, அநேக வருஷங்களுக்குமுன் சென்றுபோன பரிசுத்தவான்கள் அவரோடு பேசுகிறதும் அவர் அவர்களோடு பேசுகிறதுமான காட்சியைக் காண்கிறோம். ஜெப மனுஷன் பரத்தில் வசிக்கிறான். அவனுடைய குடியிருப்பு பரலோகத்திலிருக்கிறது. பரலோகவாசிகள் அவன் தோழர்கள். அவர்களுடைய ஐக்கியம் மரணத்தினால் பிரிந்து போகிறதில்லை.

பரிசுத்த பவுல் ஜெப பக்தன். ஜெபம் அவருக்கு ஜீவனாயிருந்தது. அவர் எவ்வளவுக்கு ஜெபித்தாரோ அவ்வளவுக்கு பரத்துக்குரியவரானார். அவருடைய சரீரம் பூமியிலிருந்தாலும் அவர் தமது ஆவியில் பரத்தில் உலாவினார். அவருடைய நிருபங்களில் இதைக் காணலாம். அவர் மூன்றாம் வானம்வரை எழும்பிப் போனதும் ஆச்சரியமல்ல. அவர் உலகத்திலிருந்த பக்தர்களை மறந்தவரல்ல. பாவிகளை இரட்சிக்கும்படி போராடாதவரல்ல. ஆகிலும் எல்லாவற்றிற்கும் மேலாக சென்றுபோன பரிசுத்தவான்களை எவ்வளவாக நினைக்கிறார்! எபிரேயர் 11ல் எவ்வளவோ காலத்துக்கு முன்னுள்ள விசுவாசிகளை ஆபேல் தொடங்கி ஒவ்வொருவராக அவர் சொல்லி விஸ்தரிக்கிற விதம் எவ்வளவு எழுப்புதலாயிருக்கிறது! பின்னும் நான் என்ன சொல்லுவேன்? கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாமு

வேல் என்பவர்களையும் தீர்க்கதரிசிகளையும் குறித்து நான் விபரம் சொல்ல வேண்டுமானால் காலம் போதாது என்கிறார். அவர்களுடைய விசுவாசத்தையும் அதினால் அவர்கள் அடைந்த ஜெயங்களையும் விஸ்தரித்தபின், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்கிறபடியினால் நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடக்கடவோம் என்கிறார். சென்றுபோன தேவ பக்தர்கள் யாவரையும் கண்ணாரக்கண்டவர்போல் அவர்களுடைய ஜீவியத்தில் விளங்கின முக்கியமான லட்சணங்களைப் பின்பற்றினவராக இப்படிப் பேசுகிறார்.

தற்காலத்தில் பரிசுத்தவான்கள் எவ்வளவு சீக்கிரமாக மறக்கப்பட்டுப் போகிறார்கள். நாம் கண்ணாரக்கண்ட பக்தர்கள் திடீர் திடீரென நம்மை விட்டுப் பிரிந்துபோனார்கள். அவர்களை நினைப்பாரில்லை. இனம் இனத்தை விரும்புவது இயற்கை. சபையின் நிலைமை எப்படிப்பட்டதென்று அறிய வேண்டுமானால் அது நாடுகிற ஆட்கள் எப்படிப்பட்டவர்கள் என்று விசாரிக்கவேண்டும். உலகத்தில் உயர்ந்தோர், கல்வியில் உயர்ந்தோர், பணத்தில் உயர்ந்தோர், விசேஷித்த பிரக்யாதி பட்டம்பெற்றோர் இப்படிப்பட்டவர்களைத் தேடுவதும், இப்படிப்பட்டவர்களை பீடத்தில் ஏற்றுவதும் சபைகளுக்கு வழக்கமாயிருக்கிறது. பக்தியும் கல்வியுமுள்ளவர்களை நாம் கனம்பண்ணவேண்டும். அவர்களை அடிக்கடி அழைத்து அவர்களுடைய ஆழமான நற்போதனைகளைக் கேட்கவேண்டியது நியாயம். இரட்சிக்கப்படாத உலகமக்களை அவர்களுடைய உலக அதிகாரத்தின்நிமித்தம் பீடத்தில் ஏற்றுவோமானால் உலக ஆவி நம்மையும் ஆண்டுகொண்டதென்பதற்குச் சந்தேகமில்லை.

நாம் ஜெபத்தில் வளருவது மெய்யானால் உலகசிந்தை நீங்கிப் பரலோக சிந்தையுண்டாகும். நம்முடைய ஐக்கியம் உலகத்தாரோடல்ல, பூமியிலுள்ள விசுவாசிகளோடும் சென்றுபோன திரளான பரிசுத்தவான்களோடும் இருக்கும். அவர்களை மறக்கமுடியாது. அவர்கள் வரிசையாய் நமது கண்முன் வருவார்கள். அவர்களுடைய தேவ பக்தியான ஜீவியமும் ஊக்கமான ஊழியமும், நமக்குச் சிறந்த மாதிரியாயிருக்கும். அவர்கள் எவ்வளவு காலத்துக்குமுன் இவ்வுலகைவிட்டுப் போயிருந்தாலும் நாம் ஜெப மனிதராயிருந்தால், தேவன் அவர்களை நமது மனதின் கண்களுக்கு எவ்வளவு பிரத்தியக்ஷமாகக் காட்டுவார். சென்றுபோன பக்தர்களையும் உயிரோடிருக்கிற விசுவாசிகளையும் நாம் மறந்துவிட்டது மெய்யானால் ஜெப ஜீவியம் நம்மை விட்டுப் பறந்துவிட்டது என்பதும் மெய். அவர் ஜெபம்பண்ணுகையில் மோசேயும் எலியாவும் தோன்றி அவரோடு பேசினார்கள்.

**III.** சீஷர்களிடத்தில் பயபக்தி உண்டாயிற்று. இதுவரை இப்படிப்பட்ட அதிசயமான காட்சியை அவர்கள் கண்டவர்கள் அல்ல. அவரைப் பின்பற்றின அது முதல் அவருடைய ஜீவியம், உபதேசம், கிரியைகளைப்



பார்த்து அவர்மேல் விசேஷித்த ஒரு மதிப்பு தங்களுக்கு இருந்தபோதிலும், இச்சமயத்தில் அவருடைய முகம் சூரியனைப்போல் பிரகாசித்ததையும் வெளிச்சத்தைப்போல் அவருடைய வஸ்திரம் வெண்மையாக மாறிவிட்டதையும், அது மாத்திரமல்ல, உன்னதத்திலிருந்து பிதாவாகிய தேவன் 'இவர் என்னுடைய நேச குமாரன் இவருக்குச் செவிகொடுங்கள்' என்று திருவுளம்பற்றினதையும் கேட்டபோது மிகுந்த பயபக்தியுள்ளவர்களாகி முகங்குப்புற விழுந்துவிட்டார்கள். இந்த பயபக்தி ஒருக்காலும் அவர்கள் ஞாபகத்தைவிட்டு நீங்கவில்லை. இதைக்குறித்து யோவானும் பேதுருவும் வெகுகாலத்துப்பின் எழுதியிருக்கிறார்கள். 'அவருடைய மகிமையைக் கண்டோம் அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது' (யோ. 1: 14). 'அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டோம்; இவர் என்னுடைய நேச குமாரன் இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும் மகிமையையும் பெற்றபோது அவரோடேகூட நாங்கள் பரிசுத்த பர்வதத்தில் இருக்கையில் வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக் கேட்டோம்' (2 பேது. 1: 16-18). தங்களோடு கூடயிருந்தவர் சாதாரணமானவரல்ல, அவர் தெய்வத்துக்குத் தெய்வமானவர் என்பதை அன்று அறிந்துகொண்டார்கள்.

சகோதரரே! இந்த மூன்றாம் குறிப்பில் நான் அதிகமாய்ச் சொல்லவேண்டியதில்லை. நமதாண்டவரிடத்தில் விளங்கிய வல்லமை அவரடியாரிடத்திலும் ஒருவாறு விளங்குகிறது. நாம் ஜெபத்தின் மூலமாய் தேவனோடு உறவாடி உன்னதத்தோடு ஐக்கியப்படும்போது அவ்வல்லமை மறைந்திருக்கமாட்டாது. நான் பக்திமான், நான் ஜெபம்பண்ணுகிறவனென்று பறைசாற்றத் தேவையில்லை. மற்றவர்கள் தாமாய் அறிந்துகொள்ளுவார்கள். சிநேகிதர்கள் கண்டுகொள்ளுவார்கள். ஜெப பக்தர்களைப்பற்றிய பயபக்தியை தேவன் அவர்களில் உண்டாக்குகிறார். பொல்லாத துஷ்டரும் கூட எப்போதும் வணங்கிப்போகத்தக்கதான ஒரு அச்சத்தை ஆண்டவர் அவர்களால் உண்டாக்குகிறார். ஒருவேளை சில துணிகரக்காரர் ஜெப பக்தர்களுக்கு விரோதமாய் எழும்பலாம். அப்படி எழும்புவது அவர்கள் கெட்டுப்போவதற்கு ஏதுவாயிருக்கும்.

மற்றவர்கள் பயபக்தியுள்ளவர்களாவது மாத்திரமல்ல, இவர்களிடத்தில் வந்து, இவர்களிடத்தில் கற்றுக்கொள்ளவேண்டுமென்கிற ஆசையை தேவன் அவர்களில் உண்டாக்குகிறார். தங்களிடத்திலில்லாத அநேக நல்ல விஷயங்கள் ஜெப பக்தர்களிடத்திலிருக்கிறதாக தேவன் அவர்களுக்கு வெளிப்படுத்தும்போது தேவ சித்தத்தையும், இரட்சிப்பின் வழியையும், தேவபக்தியின் பாக்கியமின்னதென்பதையும் அறிந்துகொள்ள வாஞ்சைகொள்ளு

கிறார்கள். இந்த மூன்று அடையாளங்களும் ஜெபத்தின் பலனை நம்மில் நிறைவேற தேவன் கிருபைசெய்வாராக.

ஜெபத்தின் ஆவலை
என் நெஞ்சில் அருளும்
தேவாவி லோக நேசத்தை
என்னை விட்டகற்றும்.

# ரசல் என்பவரின் தப்பறையான போதகமும் கனம். ஏ. சி. டிக்ஷன் பீ. ஏ. டீ. டீ. ஐயரவர்களால் அப்போதகத்தைப்பற்றிய கண்டனையும்.

சொற்பமான வேதாகம அறிவையுடையயர்களுக்குங்கூட ரசல் என்பவரின் போதகங்கள் போதுமான எதிர் விவாதமாயிருப்பதற்குக் காரணமாகும் என்று எண்ணி அப்போதனைகளைப்பற்றிய குறிப்பு எழுதுவது என்னுடைய நோக்கம்.

ரசல் என்பவரால் அவருடைய நினைவுகளுக்கேற்றபடி பின்பற்றின போங்குகளைப் பொது நன்மைக்காக மற்றவர்களுக்குப் பகிரங்கமாக எடுத்துக் காட்டுவது அவசியம்.

ரசல் என்பவரின் போதனைகள் கிறிஸ்து தாம் பூமிக்கு வருமுன் தெய்வீகமுடையவரல்லவென்றும், தூதரைவிட மேலான பதவியிலுள்ள சிருஷ்டிக்கப்பட்ட ஒரு ஆவியென்றும், எவ்விஷயத்திலும் அவர் தேவனல்லவென்றும் போதிக்கிறது.

கிறிஸ்து பூமிக்கு வந்தபோது ஆவியின் தன்மையை நீக்கிவிட்டு மனிதத் தன்மையாகி மனிதனும் தேவனும் சேர்ந்திராமல் சரீரம், ஆத்துமா, ஆவி முழுவதும் மனிதனாகவேயிருந்து தெய்வீகமில்லாதவராயிருந்தார் என்றும் மனிதனுக்கு மேலுமல்ல, கீழுமல்லவென்றும், சிலுவையில் ஒரு மனிதனாக மரித்தார் என்றும், பாவத்துக்காக என்ன பிராயச்சித்தம் செய்யப்படவேண்டியதோ, அது ஒரு சாதாரண மனிதனின் பலியினாலேயே செய்யப்பட்டது என்றும் போதிக்கிறது. கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டபோது மறுபடியும் 'அவர் ஆவியானார் என்றும், அப்போது மனிதத் தன்மை எடுபட்டதென்றும், நாம் உயிர்த்தெழுதல் என்று எண்ணுவது, கிறிஸ்து மாம்சத்திலிருந்த காலத்தில் அவரிடத்தில் காணப்பட்ட கீழ்ப்படிதலுக்கு வெகுமதியாக ஒரு பூரண ஆவிக்குரிய தன்மையுடையவராய் மறுசிருஷ்டிப்படைந்தார் என்றும் போதிக்கிறது.



**உயிர்த்தெழுதலின் மறுதலிப்பு.** கிறிஸ்துவினுடைய சரீரத்தின் உயிர்த்தெழுதல் ஒருபோதும் சம்பவித்ததில்லை என்றும், அவருடைய செத்த சரீரத்திற்கு என்ன சம்பவித்ததென்று நமக்குத் தெரியாதென்றும், வாயுக்களாய் மாறியிருக்கலாம் அல்லது ஒரு பொருட்காட்சிசாலையில் அது பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருக்கலாமென்றும், அத்தேகத்திற்குச் சரீர உயிர்த்தெழுதல் ஒரு போதும் இருந்ததில்லையென்றும் ரசல் சொல்லுகிறார்.

கர்த்தராகிய இயேசு இரண்டாவதாக ஆவியான தன்மையில் இப்பூமிக்கு 1875-ம் வருஷத்தில் திரும்பிவந்ததாகவும் இதுவே அவருடைய இரண்டாவது வருகையென்றும் ரசலிசம் போதிக்கிறது. முன் பரிசுத்தவான்களாய் மரித்திருந்தவர்கள் 1878-ம் வருஷத்தில் எழுப்பப்பட்டு ஆவியின் தன்மையடைந்தார்களென்றும் கிறிஸ்து ஆவியாய் மாறினதுபோல மரித்த எல்லா பரிசுத்தவான்கள், தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்; இரத்தச் சாட்சிகள், மற்றும் எல்லாரும் 1878-ம் வருஷத்தில் வெளிப்பட்டு ஆவியாகிய கிறிஸ்துவுடன் இந்தப் பரிசுத்தவான்களாகிய ஆவிகளும் அது முதல் பூமியில் சஞ்சரிக்கின்றனவென்றும், இவ்விஷயம் ரசல் என்பவருக்கும் அவருடைய சீஷர்களுக்குமே தவிர வேறொருவரும் அதை அறியவில்லையென்றும் போதிக்கிறது.

இரண்டாவது வருகை நடந்தாயிற்று என்பதற்கு அத்தாட்சி என்ன? என்று ரசல் என்பவரைக் கேட்கும்போது அவர் சொல்லும் ஒரே விதமான உத்தரவு என்னவென்றால் உலகத்தையும் அதிலுண்டாகும் தேர்ச்சியையும் கவனிப்பதினால் அறியக்கூடும். அதின் நாகரீகம் விர்த்தியடைகின்றது. சமாதானத்தைக்கோரும் காங்கிரஸ் கூட்டங்கள் கூடுகின்றன' என்பதே. சமாதானத்தைக் கோரும் காங்கிரஸ் கூட்டங்களினாலே யுத்தமில்லாமல் உலகம் அமைதியாயிருப்பதற்கு நல்ல குறிப்பு காணப்படுகிறது என்று அவர் எண்ணினார். ரசல் என்பவரின் போதனைப்படி கிறிஸ்துவின் ஆவிக்குரிய வருகையில் பிரதான தூதனின் எக்காளச் சத்தத்தை உலகம் கேட்டிருப்பதாக ஒவ்வொரு குறிப்பும் காட்டுகிறதாம்.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் நிறைவேறுதல் 1914-ம் வருஷம் அக்டோபர்மீ 1உ இருக்குமென்றும், புறஜாதிகளின் காலம் நிறைவேறுமென்றும், ஆயிரம் வருஷ அரசாட்சிஆரம்பிக்குமென்றும் ரசல் என்பவர் போதித்தார்.

ஆனால் இப்போதோ அவர் குறிப்பிட்ட காலத்திலிருந்து சாத்தானின் காலம் ஆரம்பித்தது போலவும், இன்னும் வெகுகாலத்திற்கு நீடித்திருக்கிறதுபோலவும் காணப்படுகிறது. 1914-ம்வரு அக்டோபர்மீ 1உ நெருங்கினஉடனே ரசல் என்பவர் தான் சொன்ன தீர்க்கதரிசனம் நிறை

வேறுகிறகாலம் கொஞ்சம் சந்தேகமாயிருக்கிறதென்றும் 1915-ல் ஆவது 1916-ல் ஆவது 1920-ல் ஆவது நடக்குமென்பது நிச்சயமில்லை என்றும் சொல்ல ஆரம்பித்துவிட்டார்.

மரணத்தைப்பற்றி ரசல் என்பவர் போதிப்பதாவது, 1881-ல் தேவன் கிறிஸ்துமார்க்கத்தின் சபைகளைப் புறக்கணித்தாரென்றும் தெரிந்துகொண்டவர்களின் நிமித்தம் அவர்களைத் தள்ளிவிட்டாரென்றும், தெரிந்துகொண்டவர்கள் இன்னதென்று அறியும்படியாக நமக்கு விடப்பட்டிருக்கிறதென்றும் சொல்லுகிறது. மரணம் என்பதற்கு அர்த்தம் ஒன்றுமில்லாமல் போகிறதாம். துன்மார்க்கர் பரிசுத்தவான்களாகிய எல்லா மனுஷஜாதியும் ஆயிர வருஷ அரசாட்சியில் எழுப்பப்படுவார்களென்றும் சொல்லுகிறது. அதாவது அவர்கள் மறு சிருஷ்டிப்படைவார்களாம், ஒன்றுமில்லாமையிலிருந்து உண்டாகுவார்களாம். இந்த நம்பிக்கை அக்கிரமக்காரருக்கு அவர்கள் இப்போது இருப்பதைவிட இனி வரப்போகிற காலத்தில் நல்ல நிலைமையடையலாம் என்று காட்டுகிறது. ஆகையால் அமெரிக்காவிலுள்ள ஒருவர், கிறிஸ்தவப் பெற்றாரிடத்தில் பிறந்த தனது சிநேகிதர் ஒருவர் பின்வருமாறு சொல்லக்கேட்டிருக்கிறார். இப்போதுதான் ரசல் என்பவரின் போதனைகளடங்கிய புஸ்தகங்களை வாங்கியிருக்கிறேன். அவைகளை முழுவதும் வாசிக்கப்போகிறேன். நரகமில்லையென்று அவர் போதித்ததாக நான் கேட்டிருக்கிறேன். இப்போது இருக்கிறதைவிட மறுமையில் நல்ல பதவி கிடைக்கும். நான் பரிசுத்த ஜீவியம் செய்யவில்லை. ரசல் சொல்லுவது நன்றாயிருக்கிறது. அது உண்மையா என்று கண்டுபிடிக்கப் போகிறேன். அது உண்மையானால் நான் ஆறுதலடைவேன்' என்பதே. வாஸ்தவத்தில் ஆண்களும் பெண்களும் இப்போது இருக்கிறதைவிட மரணத்திற்குப்பின் மேலான பதவி கிடைக்குமென்பது நிச்சயமானால், பாவத்தில் ஜீவிக்க ஏவப்படுவார்கள். அக்கிரமக்காரராய் மரித்தோர் ஆயிர வருஷ அரசாட்சியில் எழுப்பப்பட்டு மோட்சத்தைச் சேரும் சலாக்கியத்தையடைவார்கள். அல்லது ஒன்றுமில்லாமற்போகும் நிலைமையடைவார்கள். இது விஷயம் அவ்வளவு முக்கியமானதல்லவென்றால் வேதாகமத்திலிருந்து இப்படிப்பட்ட வீண் தோற்றமான வியாக்கியானங்களைப் பிறப்பித்து இவ்வித அர்த்தத்திற்கு அவர்களை வழிநடத்தினது வாஸ்தவத்தில் இகழத்தக்கதே.

ஒரு அரிதான வியாக்கியான திருஷ்டாந்தம். ஐசுவரியவானையும் லாசருவையும் பற்றிய உவமையின் வியாக்கியானத்தைக் கவனிப்போம். ரசலிசம் என்ற கொள்கையின்படி ஐசுவரியவான் யூதரைக் குறிக்கிறது அதாவது பென்யமீன் யூதாக் கோத்திரத்தாரைக் குறிக்கிறது. ஒவ்வொரு சகோதரனுக்கு 2 கோத்திரமாக 5 சகோதரரும் 10 கோத்திரத்தைக் குறிக்கிறது. இவ்வித வியாக்கியானத்திற்கு வேதாகமத்தில் யாதொரு குறிப்புமில்லை. லாசரு புறஜாதிகளைக் குறிக்கிறதாம். ஆனால் அக்காலத்தில் புறஜாதிகள் ஆஸ்திக்காரராயும், யூதர்கள் இடுக்கணில் அகப்பட்ட ஏழைகளாயுமிருந்தார்



கள். ரோமராஜ்யம் யூதர்களைக் கொள்ளையிட்டது, ஐசுவரியவான் ஒரு துளி தண்ணீருக்காக கெஞ்சினது யூதஜாதியாருக்கு சகாயம் கிடைக்கும்படி அமெரிக்காவின் யூனைட்டெட் ஸ்டேட்ஸ் மாகாணத்தார் முறைப்பாடு பண்ணினதில் கொஞ்சம் நிறைவேறிற்றாம். இவ்வித வீண் தோற்றமான கொள்கையை மற்றவர்கள் குற்றப்படுத்தாதபடி ஒரு சாமர்த்தியமுள்ள மனிதன் எடுக்கிற பிரயாசத்தைக் கவனிக்கிறபோது யாவருஞ் சிரிக்கக்கூடியதே. இந்தப் பொருளின்மேல் கைப்பிரதி எழுதின ஓகியோ பட்டணத்து யூனைட்டெட் பிரஸ்பிட்டீரியன் வேதாகம கலாசாலையைச் சேர்ந்த உவ்லியம் ஜி. மூர்ஹெட், டீ. டீ. போதகாசிரியர் ஒருவர் ரசலிசத்திற்கும், மார்மானிசம் என்ற கொள்கைக்கும் நெருங்கின ஒற்றுமை இருக்கிறது என்கிறார். மார்மானிசம் என்ற கொள்கை மனிதர் தேவர்களாகிறார்கள் என்றும், ஆதாம் அநேக பெண்ஜாதிகளையுடைய ஒரு தேவனென்றும் அதேவிதமாக நாமும் தேவர்களாகலாமென்றும் சொல்லுகிறது. மார்மானிசம் பல தேவர்கள் உண்டென்ற கோட்பாடுகளை உடையது. ரசலிசத்தின் போதனையும் அதன் தெளிவான அர்த்தத்திற்கு கொண்டுவரப்படும்போது நாம் ஒரு வகையாய் தேவர்களாகலாம் என்பதே.

ரசல் கொள்கையைப் பின்பற்றுகிறவர்கள் இதை அறியாமலிருக்கிறார்கள் ஆனால் திருத்துவத்தை மறுதலிப்பதிலும் நம்முடைய கர்த்தரின் நித்திய தெய்வீகத்தை மறுதலிப்பதிலும், பரிசுத்தாவியினுடைய தெய்வீகத்தின் மறுதலிப்பும் அடங்கியிருக்கிறது. கிறிஸ்து தமது மரணத்திற்குப்பின் தேவனானார் என்று ரசல் சொல்லுகிறபடி நாமும் தேவர்களாகலாம் என்கிற போதனை மார்மோனிஷக் கொள்கைக்கு ஒப்பாயிருக்கிறது என்று மூர்ஹெட் போதகாசிரியர் சொல்லுகிறார். இரத்தத்தின் மூலமாய் மீட்புண்டென்பதைப்பற்றி ரசல் அதிகம் சொல்லுகிறார். ஆனால் ரசலின் கொள்கையை ஆராய்ந்து பார்க்கும்போது மரணத்தில் முற்றிலும் அழிந்துபோன ஒரு சாதாரண மனிதனின் இரத்தத்தினால் மீட்புண்டாயிருக்கிறது என்று சொல்லுகிறது. யாதொரு மனிதத்தன்மையல்லாத ஒரு சிருஷ்டிக்கப்பட்ட ஆவியே கல்லறையிலிருந்து வெளிப்புறப்பட்டதாம். வேதாகமமோ மனுஷ குமாரனைப்பற்றியும், தேவ குமாரனைப்பற்றியும் பேசுகிறது. ஆனால் ரசல் கிறிஸ்துவில் இரண்டு தன்மைகள் இல்லையென்று சொல்லுகிறார். அப்படிப்பட்ட தன்மையை ரசல் இருஜாதி கலந்த பொருள் என்கிறார்.

**மனிதனும் அவன் வழிகளும்.** ரசலிசத்தின்படி இரட்சிப்புக்குச் செய்யப்பட்ட ஏற்பாடு நரக ஆக்கினைக்குச் செய்யப்பட்ட ஏற்பாடாகும். இஜ்ஜீவியத்தில் மறுபிறப்பு இல்லையென்றும், தற்சமயத்தில் இரட்சிப்பு இல்லையென்றும், மறுபிறப்பு என்று நாம் அழைப்பது இனிவரும் உயிர்த்தெழுதலோடு சம்பந்தப்பட்டதென்றும், மறு சிருஷ்டிப்பும், ஆத்துமாவின்

ரட்சிப்பும், உயிர்த்தெழுதலிலாவது, அதற்குப் பின்பாவது நேரிடுமென்றும் இந்த ஜீவியத்தில் நமக்கு இயேசுக்கிறிஸ்துவினால் பூரண இரட்சிப்பு இல்லையென்றும் கூறுகிறது. ரசல் என்பவரின் முதலாம் பகுதிப் புஸ்தகத்தில் கிறிஸ்து இயேசுவினால் எல்லாருக்காகவும் கொடுக்கப்பட்ட மீட்கும் கிரயம் நித்திய ஜீவனுக்காவது மனுஷருடைய ஆசீர்வாதத்திற்காவது பாதுகாப்புக் கொடுக்கவில்லையென்று கூறுகிறது. இவர் ஒரு சபைக்காவது பாஸ்ற்றராயிருந்தவரல்ல, அமெரிக்காவில் ஒரு சபையாவது இவரைக் கோவிலில் பிரசங்க பீடத்தில் ஏறிநின்று பிரசங்கிக்க இடங்கொடுத்ததில்லை. ரசல் என்பவர் அங்கும் இங்கும் போய் பெரிய மண்டபங்களையும், உபயோகமில்லாமல் கிடக்கிற வெறும் ஆலயங்களையும் வாடகைக்கு அமர்த்தி தான் ஒரு பாஸ்ற்றர் என்று பிரஸ்தாபித்துக்கொண்டு திரிகிறவர். தமது சொந்தக் கொள்கைக்குத் தாமே மேலதிகாரியாக இருக்கிறார். அவரும் அவருடைய ஊழியக்காரரும் பலவிதமான வேஷங்களோடு இவ்வித கொள்கைகளை நிலைநிறுத்தப் பிரயாசப்படுகிறார்கள். போனகிராப் என்ற யந்திரத்தின் உதவியைக்கொண்டும் படங்காட்டியும் இவ்வித கொள்கைகளைப் பிரசங்கிக்கிறார். ஆயிர வருஷகாலம் உதித்ததுபோல் ரசலிசம் ஆரம்பித்தது. ஆனால் அமெரிக்காவில் அநேகர் அதைப் பங்கப்படுத்த ஆரம்பித்ததால் ஜனங்களுக்கு அது பிரியமில்லாமல் போயிற்று. ரசல் என்பவர் புரூக்லின் என்ற பட்டணத்துக்குப்போய் ஹென்ரி உவார்ட் பீச்சருடைய சபையின் ஆதீனத்திலிருந்த மிஷன் கட்டடத்தை வாடகைக்கு அமர்த்தி அதை புரூக்லின் ஆசரிப்புக்கூடாரம் என்று பேரிட்டார். இச்சம்பவம் அங்கே பேர்போன பாஸ்ற்றராயிருந்த டாக்ற்றர் தால்மேஜ் என்பவரின் மரணத்திற்குப்பின் நடந்தது. பாஸ்ற்றர் ரசல் என்பவர் புரூக்லின் பட்டணத்திலுள்ள டாக்ற்றர் டீ. உவிட் தால்மேஜின் ஸ்தானத்தில் வந்தவர் என உலகமெங்கும் பேர்பெற்றார்.

**பொய்யான காரியங்கள் பரவின விதம்.** பின்பு அவர் லண்டனுக்கு வந்து இதே விதமாய் ஒரு கட்டடத்தை வாடகைக்கு அமர்த்தி லண்டன் ஆசரிப்புக்கூடாரம் என்று பேரிட்டு ஒரு லண்டன் பத்திரிகையில் சார்லஸ் எய்ச் ஸ்பர்ஜன் என்பவரைப்போல் தான் வேலை நடத்துவதாகப் பிரசுரித்தார். பின்பு அமெரிக்கா முழுவதும் பத்திரிகைகளில் பாஸ்ற்றர் ரசல் என்பர் சார்ல்ஸ் எய்ச் ஸ்பர்ஜன் என்பவர் ஸ்தானத்தில் வந்தவர் எனப் பிரசுரிக்கப்பட்டது. கனடாவிலுள்ள கனம் ஜெ. ஜெராஸ் ஐயரவர்களுக்கு விரோதமாக ரசல் என்பவர் தம்மை அவர்கள் பழிப்பு கூறினதாக பிராது கொண்டுபோனார். கோர்ட்டில் அற்றோர்னி என்பவர் உமக்கு கிரேக்குப்பாஷை தெரியுமா என்று கேட்க ரசல் ஆம் என்றார். உவெஸ்றக்கர்ட், ஹார்ட் என்ற இருவர் ஒரு கிரேக்க புதியேற்பாட்டைக் கையில் கொடுத்து 447 பக்கம் உச்சியிலுள்ள அரிவரி எழுத்துக்களை வாசிக்கச் சொன்னபோது அவ்வெழுத்துக்களையுங்கூட வாசிக்கத் தெரியவில்லை பின்பு மிஸ்ற்றர் ஸ்டாண்டன் என்பவர் கிரேக்கப்பாஷையில் பழகியிருக்கிறீரா என்று கேட்க யாதொரு வெட்கமுமில்லாமல் இல்லை என்றார். ரசல் என்பவர் அன்னிய மிஷன்களைப்பற்றி படிக்கும்படியாக ஒரு கமிற்றிக் கூட்-



டத்தையும் கூட்டிக்கொண்டு உலகமெங்கும்போய் வருஷாவருஷம் அன்னிய மிஷன்களுக்கு விரோதமாய் பேசும்படியாக நியூயார்க் என்ற பட்டணத்தில் ஹிப்போடிரோம் கட்டடத்தில் கூட்டங்கள் வைப்பதாக விளம்பரம் பண்ணினார். இவ்வித நடபடிக்கைகளை நடத்த அவர் காணிக்கைகள் சேகரிக்கிறதில்லை. ஆனால் தம்மிடத்தில் நெருங்கிவருகிறவர்களை விடாப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டு கர்த்தருடைய வருகை சீக்கிரம் வருகிறது. தங்களுடைய பணத்தை உபயோகிக்கலாம். காலம் சுருக்கம்தான் என்று அழுத்தமாய்ப்பேசி பணஞ்சேகரிக்க வகை தேடுகிறார். பென்சில்வேனியாவிலுள்ள இரண்டு ஆஸ்திக்காரப்பெண்கள் அவருக்கு லட்சக்கணக்காய் பணங்கொடுத்திருப்பதாக அமெரிக்காவிலுள்ள ஒருவர் சொல்லுகிறார். அன்னிய மிஷன்கள் தங்களுடைய வேலையில் முழுவதும் சித்திபெறவில்லையென்றும், மிஷனெரிமார் அதைரியமடைந்தார்களென்றும், அஞ்ஞானிகள் மிஷனெரிமாருடைய வேலையில் யாதொரு வாஞ்சையும் காட்டவில்லையென்றும், அவர்களுக்கிருந்த பசி ரசல் என்பவர் போதித்த ராஜ்யத்தின் சுவிசேஷத்தில் மாத்திரம் என்றும், அவர் பிரசங்கித்தபோது அஞ்ஞானிகள் அதிக ஆவலாய்க் கேட்டார்களென்றும் ரசல் என்பவர் பிரசங்கித்தார். ரசல் என்பவர் உலகமெங்கும் சுற்றினதைப்பற்றி நுட்ப விசாரணை செய்யப்பட்டது. ஒரு துறைமுகத்தில் அவருடைய படகு வந்து தங்கினதாகவும், ஆனால் அவர் அங்கு பிரசங்கிக்கவாவது ஒரு ஜனத்தை சந்திக்கவாவது செய்யவில்லையென்றும், சில துறைமுகங்களில் அவர் ஏறியிருந்த கப்பல் நிலக்கரி ஏற்றிக்கொள்ளவும், ஜாமான்கள் இறக்கிக்கொள்ளவும் எவ்வளவுநேரம் பிடிக்குமோ அவ்வளவு நேரந்தான் ரசல் என்பவர் தாமதித்ததாகவும், அஞ்ஞான உலகத்திலுள்ள ஒரு மிஷனெரியிடமாவது மிஷன்களைப்பற்றி அவர் பேசவில்லையென்றும் அமெரிக்கன் பத்திராதிபரான மிஸ்ற்றர் டிப்ளியு. டீ. எலிஸ் சொல்லுகிறார். இவ்வித காரியங்களைக்காட்டுவது எனக்கு மனவருத்தத்தைக் கொடுக்கிறது. ஆனால் சில நல்லவர்களும் பயங்கரமுள்ள தப்பிதமான இந்தக் கடும்புசலுக்குள் இழுத்துக்கொள்ளப்படுகிறார்கள் என்பதைக் கவனிக்கும்போது கடவுள் என்னைக்கொண்டு எச்சரிப்பாகிய சிவப்புச் செண்டாவை உயர்த்தும்படி விரும்புகிறார் என்று உணருகிறேன்.

## காலங்களின் அடையாளங்கள்

### 1. பிரசங்கம்.

**இதோ திருடனைப்போல் வருகிறேன்—வெளி. 16: 15.**

இப்படி பேசுகிறவர் அருமை இரட்சகர், கிறிஸ்து நாதர். வெளிப்படுத்தின விசேஷத்தில் 6 விசை 'வருகிறேன்' என்கிறார்.' அவர் இவ்விதமாய்த் திரும்பத் திரும்ப வற்புறுத்திப் பேசுவார்.

அவர் வருவது நிச்சயம் (உதாரணமாக) நான் சீர்மைக்குப் போகும்போது கொடுத்த வாக்கு, பின்பு அடிக்கடி எழுதின வார்த்தை நிறைவேறிற்று. 'திருடனைப்போல்' இது உவமானமான வார்த்தை. கிறிஸ்து நாதர் திருடனோ? அல்ல அவர் மகாதயாபரர்—ஆத்துமநேசர், அருள்நாயகர், சர்வஜன இரட்சகர், என்றாலும் ஒரு திருடன் எப்படி ரகசியமாயும், சடுதியாயும், நினையாத பிரகாரமாயும் வருகிறானோ அப்படியே நம்முடைய கர்த்தாதி கர்த்தர் வருவார் என்பது இதின் கருத்து. நாம் அந்த ரகசியத்தைக் கவனிப்பது அவசியம். ஏனென்றால் இந்த ஒரு வசனத்தில் மாத்திரமல்ல

இன்னும் 6 வசனங்களிலும் இதே காரியம் வரும். 7 தரம் ஆண்டவருடைய வருகை திருடன் வருகிறப்பிரகாரம் இருக்குமென்று வாசிக்கிறோம். சேவனோ வீண்வார்த்தைகளைப் பிரயோகிக்கிறதில்லை. அலங்காரமாகவாவது சாதூரியமாகவாவது பேசமாட்டார். அவர் சொல்லும் ஒரு வாக்கியம் மறுபடியும் மறுபடியும் வருகிறதைக் கண்டால், அதில் ஒரு விசேஷித்த கருத்தும் பெலனுமுண்டென்று அறியலாம் கிறிஸ்துநாதரும், பவுல் அப்போஸ்தலனும் பேதுருவும், யோவானும் நமது ஆண்டவருடைய இரண்டாம் வருகையை திருடனுடைய வருகைக்கு ஒப்பிட்டுப் பேசியிருப்பதால் இது ஒரு முக்கியமான சத்தியம் என்பதற்கு சந்தேகமில்லை.

## திருடன் வருவது எந்த விதம்.

1. **ரகசியமாய்**—பறைசாற்றி, சத்தம்போட்டு வரான். கதவைத் தட்டி ஆரவம் காட்டி வரான். ஜனங்களை எழுப்பி, கூக்குரலிட்டு வரான். சத்தமில்லாமலும் மூச்சுக்காட்டாமலும் வருவான். சவுல் ராஜா ரகங்களிருக்கிற இடத்தில் நித்திரைசெய்கையில் தாவீதும் அபிஷாயும் ரகசியமாக அல்லவா வந்து அவன் தலைமாட்டிலிருந்த ஈட்டியையும் தண்ணீர் செம்பையும் எடுத்துக்கொண்டுபோனார்கள். அவர்கள் வருவது ஒருவருக்கும் தெரியாது, போவதும் ஒருவருக்கும் தெரியாது. 'இதோ! திருடனைப்போல் வருகிறேன்' இயேசுநாதர் ரகசியமாக வருவார். தம்முடைய சொந்தப் பிள்ளைகளை எடுத்துக்கொண்டு போவார். திருடன் வருவது எவருக்கும் தெரியாது. (உதாரணம்) இரண்டு திருடர் லண்டன் பட்டணத்தில் கடையில் நுழைந்து கடைக்கார ஸ்திரீயைப் பிடித்துக்கொண்டு பணத்தை எடுத்துக்கொண்டார்கள். இது எல்லாம் அந்தரங்கத்தில் நடந்தது. அப்படிப்போல கிறிஸ்து இரட்சகருடைய வருகையும் அந்தரங்கமானது. பாவிகள் அதை விரும்பமாட்டார்கள். ஆனாலும் அவர் வரவேவருவார்.

2. **சடுதியாய்**—திருடன் திடீரென்று சடுதியாக வருவான். (உதாரணம்) கூட்டத்தில் ஒரு அம்மாளுடைய பணத்தை ஓர் திருடன் ஒரு கணப்பொழுதில் (நொடியில்) எடுத்துப்போட்டான்.

(உதாரணம்) Carr ஐயாவர்களும் அம்மாளும் நானும் வண்டியில் தூங்கும்போது கள்ளர் திடீரென்று வந்து சூழ்ந்துகொண்டார்கள். 'சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது அழிவு சடுதியாய் அவர்கள் மேல்வரும். அவர்கள் தப்பிப்போவதில்லை.' (1. தெச. 5–13)

ஆம்! ஆண்டவர் திடீரென்று வந்துவிடுவார். அப்போது மனந்திரும்பவும் குணப்படவும் சமயம் கிடையாது. 'இதோ! திருடனைப்போல் வருகிறேன்' ஆகையால் ஆயத்தமாயிருங்கள். நாளும் தெரியாது, நேரமும் தெரியாது. சடுதியாக மின்னல் திடீரென்று பிரகாசிக்கிறதுபோலிருக்கும்.

3. **நினையாத பிரகாரமாய்**—நாம் எதிர்பார்க்கும் சமயத்தில் திருடன் வராமல் நினையாத நேரத்திலேயே வருவான் (மத் 24: 43.)

(உதாரணம்) போலீஸ் துரை, பக்கத்துப் பங்களாவில் சிப்பந்திக்காரரோடு இருக்க ஆபீசைக் கன்னமிட்டது. ஆ! நினையாத நேரத்தில் வருவார் (மத். 24: 44) ஆயத்தமாயிருங்கள், விழித்திருங்கள்.

Printed at the Plamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

November, 1915. Registered—No. M. 316

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

" என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." (யோவான் 7: 38)

Vol. XVI நவம்பர் 1915

## "இதோ! சாலொமோனிலும் பெரியவர் இங்கே இருக்கிறார்."

(மத். 12. 42.)

சேபாவின் ராஜஸ்திரீயின் சரித்திரத்தை வாசிக்கவும் சிந்திக்கவும் நல்ல சமயம் நமக்குக் கிடைத்திருக்கிறது. அது மெத்த எழுப்புதலான சரித்திரம். அவள் செய்த நீண்ட பிரயாணத்தையும், சாலொமோனைப் பார்க்கும்படி எடுத்த பிரயாசையையும், பார்த்தபின்பு அவள் அறிக்கை செய்த விசேஷங்களையும் நமது இரட்சகர் அவளைக்குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசினதையும் நாம் கவனிக்கும்போது அது நம்மெல்லாருக்கும் அதிக பிரயோஜனத்தைக் கொடுக்கத்தக்கதான சரித்திரம் என்பதற்குச் சந்தேகமில்லை. அதிலே சில விவரங்களைக் கவனித்துப் பார்ப்போம்.

I **ராஜாவின் ஞானத்தைக் கேள்விப்பட்டு வந்தாள்.** அவள் தூர தேசத்து ராஜஸ்திரீ. தென்தேசத்து ராஜஸ்திரீ. சொந்த தேசத்திலிருக்கும்போது சாலொமோன் ராஜாவின் கீர்த்தி பிரதாபம் அங்கே வந்து எட்டினது. அவனுடைய வர்த்தமானங்களையும் ஞானத்தையும் குறித்துச் செய்திகேட்டாள். அவனுடைய மகிமையையும் ஐசுவரியத்தையும் கண்டறிந்தவர்கள் அந்தத் தென்தேசத்தில் வந்து அதைப் பிரசித்தப்படுத்தினார்கள். 'அந்த இராஜாவைப்போல இவ்வுலகத்தில் ஞானிகள் ஒருவருமில்லை. அவருடைய மேன்மைக்கும் மகத்துவத்திற்கும் நிகருமில்லை, இணையுமில்லை' என்பதாக அறிவித்தார்கள். 'அவருடைய கல்வித்திறமைக்கு வரம்புமில்லை, அவருடைய ஆஸ்திக்குக் கணக்குமில்லை. அவருடைய போஜனபான பாத்திரங்கள் எல்லாம் பொன்பாத்திரங்கள், அவரு

டைய சிங்காசனம் யானைத் தந்தத்தாலே கட்டப்பட்டு, பசும்பொன் தகட்டால் மூடப்பட்டதாம். அதற்கு ஆறுபடிகளும் அந்தப்படிகள் மேலும் இரண்டு பக்கத்திலும் பன்னிரண்டு சிங்கங்களும் இருக்கின்றனவாம்' என்பதாகத் தெரிவித்தார்கள். 'அவருடைய ஞானமோவென்றால் அது மகா சிறந்தது. நீதிமொழிகளைத் தாராளமாய்ச் சொல்வாராம்- சமயத்துக்குத் தக்கதாக இனிமையான பாட்டுகளை உண்டாக்கிப் பாடுவாராம். சகல சாஸ்திரங்களும் அவருக்குத் தெரியுமாம்' என்று சொல்லி அவருடைய ராஜமேன்மையையும் கல்வித்திறமையையும் பிரஸ்தாபம் பண்ணினார்கள். இந்த விசேஷங்களையெல்லாம் கேள்விப்பட்டும் அந்த ராஜஸ்திரீ அதை நம்பவில்லை. 'இப்படிப்பட்ட புதுமையை நான் இதுவரை கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. ராஜாக்கள் பெரும்பாலும் ஐசுவரியவான்கள் என்றாலும் அவர்கள் அதிக ஞானவான்களாயிருப்பது அபூர்வமான காரியமே! இது வீண் பேச்சு. வெறும் பிரஸ்தாபம். நம்புகிறதற்கு ஏதுவில்லை' என்று சந்தேகம் கொண்டாள். ஆனாலும் அவள் மகா புத்திசாலி. ஆதலால் 'நானே போய் இக்காரியத்தின் உண்மையை அறிந்துகொள்ளுவேன் என்று தன் மனதிலே தீர்மானம் செய்து பிரயாணத்துக்கு ஆயத்தம்பண்ணினாள். ஆ! பாருங்கள்! அது லேசான பிரயாணமல்ல. வெகுதூரம் போகவேண்டும். அதிக செலவு செய்யாமல் போகக்கூடிய பிரயாணமுமல்ல மிகவும் பிரயாசையும் எடுக்கவேண்டும். பொருள் செலவும் அதிகம். 'பூமியின் எல்லைகளிலிருந்து சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்கவந்தாள்.' (மத், 12. 42). அநேக தேசங்களைத் தாண்டியும் பல வருத்தங்களைச் சகித்தும் சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்கவந்தாள். 'மிகுந்த பரிவாரத்தோடும் சுகந்தவர்க்கங்களையும் மிகுதியான பொன்னையும் ரத்தினங்களையும் சுமக்கிற ஒட்டகங்களோடும் எருசலேமுக்கு வந்தாள். (1. ராஜா. 10. 2) கேள்வி, பிரஸ்தாபம் போதாது, நான் போய்க் கண்ணாரப்பார்த்து வரவேண்டுமென்று ஆத்திரத்தோடு புறப்பட்டு வந்தாள். தான் கேள்விப்பட்ட சங்கதியைப் பார்த்துப் பரிசோதித்தறியுமட்டும் அவள் கவலைப்படாமல் இருக்கவில்லை.

பிரியமானவர்களே! 'சாலொமோனிலும் பெரியவர் இங்கே இருக்கிறார்.' சாலொமோனிலும் கிறிஸ்துநாதர் மகா பெரியவர். ஞானத்திலோ? 'அவருக்குள் ஞானம், அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது.' (கொலோ. 2. 3). அவருக்கு தேவ ஞானம் என்று பெயர். 'அவருக்குச் சர்வஞானமுமுண்டு. பரமரகசியங்கள் அவருக்குத்தெரியும். வரும் காரியங்களும் அவருக்குத் தெரியும், மனுஷருடைய உள்ளிந்திரியங்களும் அவருக்குத் தெரியும். ஐசுவரியத்திலோ? வானமும் அவருடையது. பூமியும் அவருடையது. சமஸ்தமும் அவருடையது. ஒரு காலத்தில் ஒரு தேசத்து மந்திரி மற்றொரு தேசத்து மந்திரிக்குத் தன் ராஜாவின் திரவியங்களையெல்லாம் காண்பிக்கும் நோக்



கமாய்ப் பொக்கிஷசாலைக்கு அவனைக் கூட்டிக்கொண்டு போனான். அங்கேயிருந்த திரவியப்பெட்டிகளைத் திறந்து சகல நாணயங்களையும் இரத்தினங்களையும் பெருமையோடு காண்பித்தான். இன்னொரு திரவியப்பெட்டியில் ஒரு கோலிட்டுத் தடவிப் பார்த்தான். 'ஏன் அப்படிச் செய்கிறீர்' என்று அந்த மந்திரி கேட்க, இவன், 'இந்தப் பெட்டிக்கு அடியுண்டோ' என்று பார்க்கிறேன். ஏனென்றால் என் எஜமானுடைய திரவியப்பெட்டிக்கு அடியுமில்லை, அவருடைய ஐசுவரியத்திற்கு வாம்புமில்லை' என்றான். பார்த்தீர்களா? கிறிஸ்துநாதர் எல்லாரிலும் திரவிய சம்பன்னர். அவருடைய தனத்திற்கும் ஆஸ்திக்கும் கணக்கில்லை. அது அளவிறந்ததாயிருக்கிறது.

மகிமையிலோ? அவருக்கு மகிமையின் ராஜா என்று பெயர். வானோர் எல்லோரும் அவரைப் புகழ்ந்து போற்றி தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக என்று ஸ்துத்தியம் செய்து வருகிறார்கள். சகோதரரே! இயேசு ராஜாவின் மேன்மையையும் ஞானத்தையும் குறித்துக் கேள்விப் பட்டிருக்கிறீர்களே! பார்கப் போனீர்களா? அவரைக்கண்டு அறிந்தீர்களா? தூரத்தில் நின்று கேள்விப்படுவது போதாது. கேள்விக் கிறிஸ்தவர்கள் அநேகர்—அனுபோகக் கிறிஸ்தவர்களோ சிலர்—நீங்கள் யேசுவண்டையில் வந்து சேரவேண்டும், அவரை அண்டிக் கொள்ளவேண்டும். அந்த ராஜ ஸ்திரீ பூமியின் எல்லைகளிலிருந்து சாலமோனுடைய ஞானத்தைக் கேட்டுவந்தாளே. நீங்களோ, நீண்ட பிரயாணம் போகவேண்டாம். சாலொமோனிலும் பெரியவர் இங்கே இருக்கிறார்-உங்கள் பக்கத்திலே அதோ நிற்கிறார்-அவரை நோக்கிப் பாருங்கள், நம்பிக்கொள்ளுங்கள்-அந்த ராஜஸ்திரீ மிகுந்த பரிவாரத்தோடு வெகுமானங்களோடு விலையேறப் பெற்ற வஸ்துக்களோடு வந்து சாலோமோனைச் சந்தித்துக் கனப்படுத்தினாள்-நாமோ பாவிகள். நாம் காணிக்கையாகக் கொண்டுவரத்தக்கதான வஸ்துக்கள் ஒன்றுமில்லை, சுகந்தவர்க்கங்களுமில்லை. ரத்தினங்களுமில்லை-நாம் ஏசுவண்டையில் சுமந்து கொண்டு வருவது பாவபாதகமே யல்லாது வேறல்ல. என்றாலும் வரக்கடவோம். ஏற்றுக் கொள்ளுவார், இலகுவாக்குவார்-ஆசீர்வதிப்பார்.

11 **பார்த்து நம்பி ஸ்தோத்திரம் செய்தாள்.** தென்தேசத்து ராஜாத்தி எருசலேம் நகரத்தில் சுகமாய்ச் சேர்ந்து ராஜமாளிகையில் இறங்கினாள். அப்புறம் ராஜாவின் சந்நிதானத்தில் போய் நின்றாள். அவனுடைய ஞானத்தைச் சோதித்துப் பார்த்தாள். 'தன் மனதிலிருந்த எல்லாவற்றையுங்குறித்து அவனிடத்தில் சம்பாஷித்தாள்,' அவள் கேட்டவைகளையெல்லாம் விடுவித்தான்; விளக்கிக் காட்டினான். அவன் அறிவுக்கு மிஞ்சின ஒரு கேள்வியுமில்லை; அவன் புத்திக்கு எட்டாத ஒரு காரியமுமில்லை. 'ஒன்றாகிலும் ராஜாவுக்கு மறை பொருளாயிருக்கவில்லை' ராஜஸ்திரீ அவன் ஞானத்தைப் பார்த்து ஆச்சரியமடைந்தாள். பிரமித்துக்கொண்டாள்,

அப்புறம் அவன் கட்டின தேவாலயத்தையும் சுற்றிப்பார்த்தாள். அதின் சர்வ அலங்காரத்தையும் கண்டறிந்தாள், ராஜ அரமனையில் சென்று அதின் சிங்கார விநோதங்களைக் கண்ணுற்று அதிசயப்பட்டாள். எல்லாவற்றையும் பார்த்த பின்பு ராஜனைப் பணிந்து, 'உம்முடைய வர்த்தமானங்களையும் . . . . . அதிகமாயிருக்கிறது.' (1 இராஜா 10.6,7) பார்த்தீர்களா? அவள் போய்ப் பார்க்கவே அவள் அவிசுவாசம் எல்லாம் நீங்கிப்போயிற்று. அவள் சந்தேகம் முற்றிலும் தெளிந்துவிட்டது. மனப்பூர்வமாய் நம்பிக்கொண்டாள். தான் கண்ட விசேஷங்களினிமித்தம் இஸ்ரவேலின் தேவனை ஸ்தோத்திரித்தாள்.

என் பிரியசிநேகிதரே: இயேசுரக்ஷகரைக் காண்பது பெரிய பாக்கியம் அவருடைய முகத்தின் பிரகாசத்தில் நடப்பதே பேரானந்தம். அவருடைய அன்பில் பாதியாகிலும் நமக்கு அறிவிக்கப்படவில்லை, அது மனசுக்கும் புத்திக்கும் எட்டாத அன்பு. அவர் கிருபையில் பாதியாகிலும் நமக்கு அறிவிக்கப்படவில்லை. அது மட்டற்ற கிருபை, அவரை அறிந்த அறிவில் நாம் வளர வளர—அவருடைய ஜீவபாதையில் நாம் செல்லச்செல்ல—அவருடைய ஞானவசனத்தை நாம் கேட்கக்கேட்க—அவருடைய ஞானஒளி நமது மனசில் வீசவீச, ஆச்சரியமடைந்து, ஆனந்தப் பரவசமாகி 'அருள் நாயகா! உமது அன்பு, கிருபை ஞானசெல்வங்களில் பாதியாகிலும் எனக்கு அறிவிக்கப்படவில்லை' என்று துதிசெலுத்த இடமாகும் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆ! கிறிஸ்துவின் அருமை தெரியுமென்றால், உலக காரியங்களில் சிக்கிக்கொள்ளமாட்டோம், இயேசுவின் அன்பு தெரியுமானால் ஜெபமுறைமையையும் வேதவாசிப்பையும் அசட்டை செய்யமாட்டோம். தேவனுடைய கிருபை நமக்குக் கிடைத்ததென்றால் மேலான காரியங்களை நாடித்தேடுவோம். சகோதரரே! இந்த ராஜதரிசனம் உங்களுக்குக் கிடைத்ததா? அவருக்கும் உங்களுக்கும் அறிமுகமும் ஐக்கியமும் உண்டா? மற்றெல்லாவற்றிலும் அவரை அதிகமாய் நேசிக்கிறீர்களா? சீமைதேசத்தில் ஒரு மனிதன் சாகும் நிலமையிலிருந்தான். மரண இருளின் பள்ளத்தாக்கில் அவன் இறங்குகையில் அவன் புத்தி சற்றுமயங்கினது. அப்படியிருக்கும்போது அவன் மகன் கிட்டப்போய் அலறி அழுது—'ஐயா, நான் இன்னான் என்று உங்களுக்குத்தெரியுமா? நான் உங்கள் மூத்தமகன், என்னை அறியமாட்டீர்களா ஐயா? என்று கேட்டான்—தகப்பனோ அவனை இனம் அறியவில்லை. அப்போது அவன் நேசமனைவி கிட்டப்போய், என்னையாவது அறியமாட்டீர்களா? நான் உங்களுடைய மனைவி' என்று கண்ணீரோடு கேட்டாள். அவனோ மனைவியையும் இனம் அறியவில்லை, அப்புறம ஒருவன் கிட்டப்போய் 'இயேசு சுவாமியை அறிவீரா? என்று மெள்ள விசாரித்தாள். இயேசு என்ற வார்த்தையைக் கேட்டவுடனே அவன் முகம் மலர்ந்தது; கண்திறந்து சுற்றிப்பார்த்தான்; வாய்திறந்து பேசினான். 'ஆம்! இயேசுவை அறிவேன்—நன்றாய் அறிவேன், என்னோடு கூட இருக்கிறார்—இயேசுவே! அருமைரக்ஷகா! என்று சொல்லி மரித்துப்



போனான். ஆ! மனைவு மக்களைப்பார்க்கிலும் தன் நேச ரக்ஷகரை நன்றாய் அறிந்தான். பற்றிக்கொண்டான்-நேசித்தான்-உங்கள் காரியம் என்ன? மகிமையின் ராஜாவைக்கண்டறிந்து நேசிக்கிறீர்களா?

**3. பின்பு சாட்சி சொல்லி அநேகரைக் குற்றப்படுத்துவாள்.** இயேசுவானவர் இதைப்பற்றிச் சொல்லுகிறதைக் கேளுங்கள், 'ஆதலால் நியாயத்தீர்ப்பு நாளிலே அந்த இராஜஸ்திரீ இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று இவர்கள் மேல் குற்றஞ்சுமத்துவாள்' என்கிறார், இவர் பூமியின் எல்லைகளிலிருந்து சாலொமோனைப் பார்க்கவந்தார்—இயேசு சுவாமியோ இந்தச் சந்ததியின் மத்தியில் பிரசங்கித்தார்—இவருடைய ஞானத்தைக் கேட்க இவர்கள் பிரயாணம் செய்ய அவசியமில்லை. அவர்கள் இருந்த இடத்திலிருந்தே அதைக்கேட்கலாம். ஆனால் அவர்களோ தங்கள் மத்தியில் பிரசங்கித்த சாலோமோனிலும் பெரியவராகிய இயேசுவை அவமதித்தார்கள். நியாயத்தீர்ப்பு நாளில் இதற்குக் கணக்குக்கேட்கப்படும், அன்று யாருக்கு உலகத்தில் பெரியசிலாக்கியம் கொடுக்கப்பட்டிருந்ததோ அவர்களுடைய குற்றங்கள் மகா பெரிதாய் எண்ணப்படும். ஆனால் யார் சுவாமியைத்தேடுவதற்கு மகா பெரிய சுயவெறுப்பைக் கையாடினார்களோ அவர்கள் அன்று புகழப்படுவார்கள். இந்த இரண்டு சத்தியங்களையும் இந்தச் சரித்திரத்தின் மூலமாய் இயேசு சுவாமி நமக்குப் போதிக்கிறார். சிலாக்கியங்களின் அளவுக்குத் தக்கதாகக்குற்றம் பெரிதாகும். சுயவெறுப்பின் அளவுக்குத்தக்கதாக புகழ்ச்சி பெரிதாகும். நியாயத்தீர்ப்பு நாளை எதிர்நோக்குகிற நாம் இவைகளைச் சிந்தித்துக் கொள்வோமாக. அந்நாளில் நாம் புகழப்படதக்கதாக அதிகமதிகமாய்ச் சுவாமியைத் தேடுவோமாக.

T. WALKER.

## பரிசுத்த பேதுரு

தேவகுமாரனாகிய நமதருமை ஆண்டவரின் அப்போஸ்தலரில் முந்தினவன் 'என்னப்பட்ட சீமோன்பேதுரு பன்னிருவரில் விசேஷித்தவர்களுள் ஒருவர். நம்முடைய கர்த்தர் பூலோகத்திலிருந்த சமயத்திலும் அவர் பரமேறினபின் சுவிசேஷ பிரபல்லியதொடக்க காலத்திலும் இவர் முன்னுக்கு நிற்கப்பார்க்கிறோம். மும்முறை மறுதலித்த இவர் குற்றம் ஒருவகையாய்ச் சொல்லில், இவர் மும்முறை செய்த அறிக்கையாலும், நமதாண்டவர் மும்முறை இவருக்குக் கொடுத்த கட்டளையாலும் மறைக்கப்பட்டுப்போகிறது. இவர் ஒருதடவை செய்த நல்ல அறிக்கையால் 'இந்தக் கல்லின்மேல் என் சபையைக்கட்டுவேன்; பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்' என்ற நமது ரக்ஷகரின் வார்த்தைகள், விசுவாசமாகிய கதவு முதலாவது யூதருக்கும் பின் புறசாதிகளுக்கும் இவரால் திறக்கப்பட்டது என்பதில் நிறைவேறினதாகக் காணு

கிறோம். இவர் 'நம்பிக்கையின் அப்போஸ்தலன்' என்றழைக்கப்படுகிறார். அப்போஸ்தலர் நடபடிகளிலும் தம்முடைய நிருபங்களிலும் இவர் கொடுக்கும் சாட்சியம் இயேசுவானவர் உயிரோடெழுந்து மகிமையடைந்தார் என்ற சத்தியத்தை வற்புறுத்துகிறது. இவருடைய வைராக்கிய வாஞ்சையும், உற்சாகத்தோடு உழைக்கும் ஆத்திரமும், ரக்ஷகர்பேரிலுள்ள குன்றாத அன்பும், சில தவறுகளுள்ளபோதிலும், தேவனுக்குப் பிரியமானதாய் உலகத்தை அசைத்தது என்று துலங்குகிறது.

இவரின் அழைப்பு, படிப்பு. உழைப்பு, சிறப்பு இவைகளைக் குறித்து சில காரியங்கள் கவனிப்போம்.

1. அவரின் அழைப்பு. நமது ஆண்டவரால் இவர் அழைக்கப்படுமுன் 'மேசியாவைக்கண்டோம்' என்ற தன் சகோதரன் அந்திரேயாவின் சாட்சியத்தைக் கேள்வியுறவே, ஆவலுடன் இயேசுவிடம் வந்தார்: சகலத்தையுமறிந்த நமது ரக்ஷகபெருமான் தம்முடம் வந்த இவருடைய தன்மையை அறிந்தவரானதால் உடனேயே 'நீ யோனாவின் குமாரனாகிய சீமோன் நீ கேபா (பேதுரு) என்னப்படுவாய்' என்றார். சில நாட்கழிந்ததின் மேல் இவர் கலிலேயாக் கடலோரத்தின் கண் படவு நிறுத்தி வலையை அலசிக்கொண்டிருக்க கிறிஸ்துவானவர் கண்டு, இவருடைய படகைக் கொஞ்சநேரப் பிரசங்கத்துக்கென்று இரவல் வாங்கி, அதற்குப் பிரதி உபகாரமாக திரளான மீன்கள் இரண்டு படவுகள் நிறம்புமளவு கிடைக்கச் செய்து அதின் மூலம் 'என் பின்னேவா; இது முதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய்' என்று அழைத்தார். அந்த அழைப்பைப்பெற்ற இவர் அதுமுதல் நமதருள் நாதரின்பின் சென்று, அவர் ஏவின பணிவிடைசெய்து அவர் சொற்படி நடந்தாரென்று பார்க்கிறோம்.

நமது அருமை ஆண்டவர் தமது புண்ணியத்தை நம்பும் தமதடியார் ஒவ்வொருவரையும் தமக்கு ஊழியஞ்செய்யும்படி அழைக்கிறார். கிறிஸ்தவர்களனைவரும் மிஷனெரிமாராயிருக்கவேண்டும். அதற்கென்றே ஒவ்வொருவரையும் அழைக்கிறார். ஆண்களையும் பெண்களையும் பெரியோரையும் சிறியோரையும், கற்றோரையும் மற்றோரையும் ஐசுவரியவான்களையும் ஏழைகளையும் அழைக்கிறார். ஏழையான ஒருமனுஷன் தான் மிஷன்வேலைக்குப் பணஉதவிசெய்ய முடியாதென்றாலும் இந்த அன்பை அறியாத மற்றவர்களுக்குச் சொல்வேன் என்றான். இந்தப் பத்திரிகையை வாசிக்கும் சகலரையும் நமது ஆண்டவர் மிஷனெரி ஊழியஞ் செய்யும்படி கிருபையாக அழைக்கிறார். இந்தக் கிருபையான அழைப்பை அல்லத் தட்டாதிருப்போமாக. திருநெல்வேலி நாட்டாராகிய நாம் மானுக் கோட்டைத் தாலுகாவிலும் மலைப்பளியருக்குள்ளும் நடத்திவரும் மிஷனெரி வேலை தளராதபடி பார்த்துக் கொள்வோமாக.

2. அவரின் படிப்பு. மிஷனெரி ஊழியத்துக்கு அழைக்கப்படுபவர் அந்தச் சிறந்த ஊழியத்துக்கென்று பயிற்சியடைய வேண்டிய அவசியமல்ல



வா? இஸ்ரவேலரை எகிப்திலிருந்து வழி நடத்தும்படி ஆண்டவர் தெரிந்துகொண்ட மோசே வனாந்தரத்தில் ஆடுகள் மேய்த்துப் பக்குவமடைந்தார். இஸ்ரவேலரை ஆளும்படி அபிஷேகம் பெற்ற தாவீது விசேஷித்த விதமாய் பயிற்சிபெற்றார். எந்தச் சமையத்திலும் முந்திப் பேசுகிறவராகிய இவர் அடிக்கடி புத்தியீனமாய்ப் பேசி நமது ஆண்டவரால் கண்டிக்கப்பட்டு சரிப்படுத்தப்பட்டார். மாமிசமும் ரத்தமும் வெளிப்படுத்தாமல், பரலோகத்திலிருக்கிற பிதா தாமே வெளிப் படுத்தின அறிவாகிய 'இயேசுவானவர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து' என்னும் சத்தியத்தைக் கற்றுக்கொண்டார். கோழைத் தனமாய் தன் எஜமானை மும்முறை மறுதலித்த போதிலும் கருணையாளரின் கடைக் கண் பார்வையால் தன் குற்றத்துக்காக மிகவுங் கண்ணீர் விட்டு மன்னிப்புப் பெற்று கிருபையுள்ள ஆண்டவரின் ஆடுகளையும் ஆட்டுக் குட்டிகளையும் மேய்க்கத் தகுதியுள்ளவரானார்.

ரக்ஷகருக்கு ஊழியஞ் செய்ய விரும்பும் ஒவ்வொரு மிஷனெரியும் இப்படியே பயிற்றுவிக்கப் படவேண்டும்; ஆண்டவரின் பாதத்திலுட்கார்ந்து கற்றுக் கொள்ளவேண்டும். அவரைப் பின்சென்று அவருடைய அருமையை உணர்ந்து கொள்ளவேண்டும். கெட்டுப் போன தன் இருதயத்தின் சீர்கேட்டை அறிந்து தேவாவியானவரின் சகாயத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும். ரக்ஷகருக்குத் தன்னை ஒப்புக்கொடுக்கும் ஒவ்வொரு விசுவாசியும் இப்படி தேர்ச்சியடையாத விஷயத்தில் தன் அருமை எஜமானுக்கு ஊழியஞ் செய்யத் தகுதியற்றவனாவான். கிறிஸ்துவின் ஆவியானவர் நம்மொவ்வொருவரையும் போதித்துப் பிரகாசிக்கும்படி காத்திருப்போமாக.

3. அவரின் உழைப்பு. காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றி வருவேனென்று சொன்னபோதிலும், பயங்காளித் தனத்தினால் ரக்ஷகனை மறுதலித்து பின்வாங்கின பேதுரு அப்போஸ்தலன் ஆவியானவரின் வல்லமையைப் பெந்தெகொஸ்தே நாளில் பெறறுக் கொண்டபோதே திரள் கூட்டத்தின் முன்னே தைரியமாய் நின்று 'நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று தைரியமாய்ப் பேசி யூதரின் குற்றத்தை உணர்த்தவே, தேவாவியானவர் மூவாயிரம் பேரை அசைத்து அவர்கள் மனந்திரும்பி சபையில் சேரும்படி செய்தார். பற்பல இடங்களில் சென்று சபைகளைநாட்டினார் சபைகளைத் திடப்படுத்தினார். பாபிலோனிலும் அவர் உழைந்து வல்லமையான கிரிகைகளைச் செய்தார். தமது அந்திய காலத்தில் தாம் போதித்த சத்தியத்தை திருச்சபைக்கு என்றும் அழியாத சுதந்தரமாக வைக்கும் நோக்கமாய் இரண்டு அருமையான நிருபங்களை எழுதிவைத்திருக்கிறார். அவருடைய உண்மையான வாஞ்சையும், அழியாத அன்பும், ஊக்கமான வைராக்கியமும் அவைகளில் விளங்குகின்றன.

கிறிஸ்து இயேசுவின் அடியாராகிய அருமையானவர்களே; நாம் ஒவ்வொருவரும் நம்முடைய காலத்தில் உத்தமமாய் உழைக்கிறவர்களாயிருப்போமாக, நமக்காகத் தமது ஜீவனைக் கொடுத்த நமது கர்த்தருடைய வேலையில் உண்மையும் ஊக்கமுமாயிருப்போமாக. நமது குற்றங்களை வெறுத்துத் தள்ளிவிட்டு சபையிலும் சபைக்கு வெளியேயும், வீதிகளிலும் ஆலயங்களிலும, ஊர்கள்தோறும் வைராக்கியமாய் ஊழியஞ்செய்யும்படி தேவாவியானவரின் வல்லமையைப் பெற்றுக்கொள்வோமாக. நாமல்ல கர்த்தரே நம்மைக்கொண்டு கிரியை செய்யும்படி நம்மை முற்றும் அவருக்குக் கையளிப்போமாக. நித்திய ஜீவனாகிய கிருபையை நமக்குத்தரும்படி சீக்கிரம் நம்மைச் சந்திக்கவரும் நமது அருமை எஜமானுடைய வருகைக்கு மெய்யாய் ஆயத்தமாகிக் காத்திருப்போமாக. உலகத்தையும் ஆயத்தப் படுத்துவோமாக.

4. அவரின் சிறப்பு (அதாவது அவருக்குக் கிடைத்த பலன்). ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக் கடவன் நான் எங்கேயிருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்' என்று தமதடியாருக்குச் சொன்னவரும், 'நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக நான் எங்கேயிருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்' என்று தமதருமைப் பிதாவை நோக்கி மன்றாடினவருமாகிய நமது ஆண்டவர் தாம் உயிரோடெழுந்த பின் கலிலேயாக் கடலில் இரண்டாம் விசை தமது சீஷருக்கு அற்புத மீன் வேட்டை கிட்டச்செய்து தம்மைப் பின்பற்றிவரும்படி பேதுருவை திரும்பவும் அழைத்து சிலுவை மரணத்தின் மூலம் அவர் தம்மை மகிமைப் படுத்துவதாக அறிவித்த பிரகாரம் அவர் ரோமபுரியிலே சிலுவையில் தலைகீழாய் அறையப்பட்டு மரித்து, ரத்தச் சாட்சியின் கிரீடம் பெற்றுத் தமதருமை எஜமானருகேயிருக்கும் சலாக்கியம் பெற்றுக் கொண்டார். அவர் தாமே எழுதியபடி பிரதான மேய்ப்பர் வெளிப்படும் போது அவரும் மகிமையுள்ள வாடாத கிரீடம் பெறுவார்.

ரக்ஷகருக்காக ஊழியஞ் செய்யும்படி அழைக்கப்படும் அருமையான சகோதரரே! சகோதரிகளே! நாமும் கர்த்தருக்காக உழைப்போமென்றால் நாமும் நமதன்புள்ள ஆண்டவருடன் பரலோகத்தில் வாழும் சலாக்கியமும், அவர் கரங்களிலிருந்து மகிமையின் கிரீடமும் பெறுவோம் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆதலால் எனக்குப் பிரியமான சகோதரரே! கர்த்தருக்குள் நாம் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நாம் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும் கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயுமிருப்போமாக. நம்முடைய கர்த்தரும் ரக்ஷகருமாகிய அவருக்கு மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்.



## உம்முடைய வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?

மத். 25—3.

முக்கியமான கேள்வி. ஆண்டவர் பாடுபட்ட வாரம் செவ்வாய்க்கிழமை இது கேட்கப்பட்டது. அவர் வருவது நிச்சயம்; அவர் வரும்போது மகா விசேஷங்கள் நடப்பதும் நிச்சயம். அப்படியானால் அவர் எப்படி வருவார். அவர் வருகைக்கு அடையாளம் என்ன? திட்டமான அடையாளங்களைக் காட்டியிருக்கிறார். இந்த 24-ம் அதிகாரத்தை 4 பங்காகப் பிரிக்கலாம்:—

(1) வசனம் 4–14. ரட்சகர் பாடுபட்டது முதல் அவர் மறுபடியும் வருமட்டுமுள்ள பொதுவான விசேஷங்கள்.

(2) வசனம் 15-20. எருசலேம் பட்டணத்தின் அழிவைப்பற்றின விசேஷங்கள்.

(3) வசனம் 21–28. எருசலேமின் அழிவும் கடைசிக்காலத்துச் சங்கதிகளும் கலந்து வருகிற தீர்க்கதரிசினங்கள்.

(4) வசனம் 29–47. கிறிஸ்துவின் வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கடுத்த விசேஷங்கள்.

முதற் பங்கில் புறஜாதியாருடைய காலங்களாகிய இந்த நாட்களில் 5 அடையாளங்கள் நடக்கிறதாகச் சொல்லியிருக்கிறது. அப்புறம் அவருடைய வருகைக்கு அடையாளமான விசேஷங்கள் குறிக்கப்பட்டன.

### I. புறஜாதியாரின் காலத்து அடையாளங்கள் ஐந்து

i கள்ளக்கிறிஸ்துக்கள்—'அநேகர் வந்து என் நாமத்தைத் தரித்துக்கொண்டு நானே கிறிஸ்து என்று சொல்லி அநேகரை வஞ்சிப்பார்கள். (உதாரணம்) Piggot, Dowie, New Theology, Christian science etc., வசனம் 5.

ii யுத்தங்கள், பஞ்சங்கள் etc.—கிறிஸ்துவின் காலமுதல் இதுவரை நடக்கின்றன. தற்காலத்தில், 3 தேசங்களில் யுத்தம் உண்டு (China, Tripoli, Persia) கலகங்களுமுண்டு Russia பக்கம். இந்தியா—கொள்ளை நோய், பூமியதிர்ச்சி (உதாரணம்) நான் வழியில் கண்ட பாழ் கடிப்புகள் (Messina தீவின் அழிவு.) வசனம் 6–8.

iii உபத்திரவங்கள்—கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்திக்கொல்வது. ஆதிமுதல் இதுமட்டும் (உதாரணம்) Asia Minor அர்மீனியருக்கு மகமதியரால் நடந்த துன்பம். வசனம் 9, 10.

iv கள்ளத்தீர்க்கதரிசிகள்—மகமதியர். வசனம் 11.

V **அக்கிரமத்தின் மிகுதி**—ஓய்வுநாளை மீறுவது, கர்த்தர் இல்லையென்று சாதிப்பது, பரிசுத்த விவாகத்தை அசட்டை செய்வது, அநேகருடைய அன்பு தணிந்துபோவது, இவ்வைந்து அடையாளங்கள் நடந்தாயிற்று என்று சொல்லலாம். மறுபடியும், மறுபடியும் தோன்றின குறிப்புகள் தானே. ஒன்றாவது தவறவில்லை: கர்த்தருடைய வார்த்தை மெய். அப்படியானால் பின்னாலே காட்டிய அடையாளங்களும் நிச்சயமாயிருக்கும். வசனம் 12, 13.

## II. இரண்டாம் வருகையின் அடையாளங்கள் நான்கு.

**1. சுவிசேஷப்பிரபல்லிய அடையாளம்.** வசனம் 14.

இது இந்த நாட்களில் நடந்தேறி வருகிறது. என் காலத்தில்தான், யாப்பான், ஏனா, கொரியா. ஆப்பிரிக்காவின் உள்நாடுகள் etc., எங்கும் சுவிசேஷம் பிரபல்லியமாயிற்று. நிசந்தான். திபேத்து தேசத்திலும், நேபாளம் முதலிய நாடுகளிலும், இன்னும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கக் கதவு திறக்கப்படவில்லை. என்றாலும் அங்கேயும்கூட சுயபாஷையில் திருத்தப்பட்ட வேதாகமங்கள் போகிறது. சுதேச கிறிஸ்தவர்களும் இந்த ஊழியத்திற்கு அதிகமதிகமாய் ஏற்படுகிறார்கள். இவ்வடையாளத்தைப் பார்த்தால் இரண்டாம் வருகை மிகவும் சமீபமாய் தோன்றுகிறது.

**2. வானத்தின் அடையாளங்கள்.** வசனம் 29.

பழைய ஏற்பாட்டில், வான ஜோதிகள் உலக ராஜா, அதிகாரி வல்லமைகளுக்குக் குறிப்பு.

(உதாரணம்) Isaiah 13: 10, 13. பாபிலோன் ராஜாங்கத்தார், Isaiah 44: 4, 5. ஏதோம் ராஜாங்கத்தார்—எசேக்: 32: 7, 8. எகிப்து ராஜாங்கத்தார், இப்படிப்பட்ட காரியங்கள் தேசாதேசத்தில் நடக்கிறது French Revolution, Portuguese Revolution, Chinese Revolution, Turkish Changes, இந்திய கலகங்கள், கொலை பாதகங்கள்—வருகை சமீபம்.

**3. வசந்தகால அடையாளங்கள்.** வசனம் 32-35.

அத்திமரம்—யூதஜாதி. இளங்கிளை துளிர்விடுவது யூதர்கள் அதிகம் அதிகமாய்ப் பலஸ்தீனாவுக்குப் போகிறார்கள். எருசலேமில் ஜாஸ்தி, சீயோன் சங்கம் (Zionist Movement) இது நம்முடைய காலத்திற்குள் நடந்த விசேஷம்.

1838-ம் வருஷ எருசலேமிலுள்ள யூதர் தொகை 3,000. 1912-ம் வருஷ ஏப்பிரல் மீ அவர்கள் தொகை 65,000. கிறிஸ்துவின் வருகை சமீபம்.

**4. விழிப்புள்ள ஜெப அடையாளம்.** வசனம் 42-51.

மற்றவர்கள் புசித்துக் குடித்துவருகையில், உத்தம விசுவாசிகள் எஜமான் வர விழிப்போடு காத்திருந்து ஆயத்தம்பண்ணுவது. அதிகமான



கிறிஸ்தவர்கள் 'ஆண்டவர் வர நாள் செல்லும்' என்று உலக நேசத்தால் நடக்கையில், இக்கூட்டத்தார் விழித்திருப்பார்கள். மகா சமீபம்.

---

## 'முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவான்'

வெளி. 20-6.

தீர்க்கதரிசன வசனங்களை வாசித்துக் கைக்கொள்ளுகிறவனும் (1-3, 22-7), கர்த்தருக்குள் மரிக்கிறவர்களும் (14-13) தன் வஸ்திரத்தைக் காத்துக்கொள்ளுகிறவனும், (16-15) பாக்கியவான்களென்று பார்க்கிறோம். இன்னும் பாக்கியவான்களுண்டு. Illus. மரணத்தருவாயிலிருந்த ஓர் பக்தனான பையன் 'அங்கே சிறந்த கிரீடத்தைச் சூடிக்கொள்ளுவேன்' என்று சொன்னான்.

**1. ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்திற்கு அழைக்கப்பட்டவன் பாக்கியவான்**—(வெளி. 19-9) பரம மணவாளனாகிய கிறிஸ்து ரட்சகர் தம்முடைய ஞான மணவாட்டியாகிய மெய்ச்சபையை எடுத்துக் கொள்ளவும், வாழ்விக்கவும் வருகிறார். (வெளி. 19: 7-8.) பெரிய விசேஷம்! அவர்களுடைய துன்பம் இன்பமாகவும், தாழ்வு வாழ்வாகவும் மாறும். அந்த விருந்தும் ஆனந்தமும் என்னமாயிருக்கும். அதற்கு அழைக்கப்பட்டவன் பாக்கியவான் (உ-ம்.) இளவரசனுடைய கலியாணத்திற்கு அழைக்கப்பட்டவர்களின் சிலாக்கியமும் பாக்கியமும் பெரிது. மற்றவர்கள் தூரத்தில் நின்று எட்டிப்பார்ப்பது. (உ-ம்.) மாணாக்கன் கண்ட சொப்பனம். மணவாளன் வந்து தமது ஜனங்களை எடுத்துக் கொண்டதாகவும் தானோ விடப்பட்டதாகவும் கண்டான். கலியாண வஸ்திரம் (19-8); சந்தோஷம் (21: 2-4) மகத்துவம் 21, 9, 10, 11, 26) (உ-ம்.) 'மணவாளனுடைய முகத்தைப் பார்த்துக் களிகூறுவேன்' (பாட்டு சுவிசேஷ கீதம் 17, 6-ம் கவி.)

**2. முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவான்**—20: 6. இரண்டு உயிர்த்தெழுதல் உண்டு. நீதிமான்கள் உயிர்த்தெழுதல் வேறே; அநீதிமான்கள் உயிர்த்தெழுதல் வேறே. அவர்கள் நித்திய ஜீவனுக்கும், இவர்களோ நித்திய நிந்தைக்கும், இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள். குறைந்தது, இந்த முதலாம் உயிர்த்தெழுதலுக்கும் மற்றவர்கள் உயிர்த்தெழுதலுக்கும் இடையில் 1,000 வருஷம்

செல்லும் (20-5) கிறிஸ்துநாதர் வருவார். அப்போது கிறிஸ்துவுக்குள் மரித்த விசுவாசிகள் முதலாவது எழும்புவார்கள் (1 தெச. 4.14) ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண விசேஷம் நடந்தபின் அவரோடு மகிமையடைந்தவர்களாய் வந்து இப்பூமியில் அரசாளுவார்கள். சிங்காசனம் கிடைக்கும். அதிகாரம் கொடுக்கப்படும் (20 4.) ராஜ்யபாரம் அருளப்படும் (வசனம் 4). ஆசாரியத்துவம் இருக்கும் (வசனம் 6). (உ-ம்.) பரதேசியான தாவீதோடு துன்பப்பட்டு அலைந்து திரிந்த அபியத்தார் (i Sam. 2 23). யோவாப் முதலியோர் பின்பு அவன் ராஜரீகத்திலும் மேன்மையிலும் பங்கு பெற்றார்கள். மற்றவர்களோ, வெகு காலத்திற்குப் பின்பு உயிரோடெழுந்திருந்து வெள்ளைச் சிங்காசனத்திற்குமுன் நின்று ஆக்கினைத்தீர்ப்பு அடைவார்கள்.

3. தன் வஸ்திரத்தை வெளுக்கிறவன் பாக்கியவான் 2.-1-4. தமிழ்த் திருப்புதலில் 'அவருடைய கற்பனைகளின் படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்.' ஆனால் மூலபாஷையின்படி 'தங்கள் வஸ்திரங்களை வெளுக்கிறவர்கள் பாக்கியவான்கள்' என்றிருக்கிறது. (7-14) இவர்கள் தான் உள்ளே வந்து சொல்லி முடியாத பேரின்பத்தைப் பெற்று வாழ்வார்கள்.

(a) வாசல்கள் வழியாய் நகரத்துக்குள் பிரவேசிப்பார்கள். முத்து வாசல் (21-21) அங்கே காவல் செய்கிற தூதர்கள் (21-13); வெண் வஸ்திரத்தைக் கண்டு உள்ளே விடுகிறார்கள். உ-ம் இந்துக்களுடைய ஆலயம் எங்களைப்போலீஸ்காரர் உள்ளே போகாதபடி தடுத்தது. உத்திரவில்லாமல் உள் பிரவேசிக்கலாகாது உ-ம்] சாக இருந்த வாலிபன். உன் முகம் வெளுத்துப் போயிற்றே? ஆம் அதைவிடச் சீக்கிரம் அதிக வெண்மை என்னில் காணப்படும். வெண் வஸ்திரம் தரித்துக்கொண்டு மோட்ச வீட்டில் நிற்பேன்! என்றான்.

(b) ஜீவ விருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவார்கள். பூரண நித்திய ஜீவன்: ஒழியாத ஜீவன். அதின் கனியைப் புசித்து ஆனந்திப்பது.

## நேபாள தேசத்து முதல் மிஷனெரியும் யுத்த வீரனுமான ஓர் கூர்க்கன்

வட இந்தியாவில் உள்ள ஐக்கிய மாகாணத்தின் வடகோடியில் சுதேச அரசாட்சிக்குட்பட்ட நேபாளம் என்ற ஓர் தேசமுண்டு. கொராக்பூரிலுள்ள மிஷனெரிமார் அங்கே சுவிசேஷம் அறிவிக்கப்பட ஓர் திறந்தவழி உண்டாக வெகுவாய் முயன்றும் பயன்படவில்லை. ஏனென்றால் ஒரு மிஷ



னெரியாவது அங்கே அங்கீகரிக்கப்படமாட்டார். அத்தேசம் ஓர் சுதேச அரசனால் ஆளப்பட்டு வருகிறது புறத்தேசத்தார் அந்நியமாய் அருவருக்கப்படுகிறார்கள். அவர்களை கிறிஸ்துவின் மந்தையில் சேர்க்க எடுக்கப்படும் எவ்வித முயற்சியும் கடுமையான விரோதத்திலேயே முடியும் என்பதற்கு ஆட்சேபனையில்லை.

மாரிகாலங்களில் ஆகாயம் வெளிவாங்கியிருக்கும்போது நேபாளத்தையடுத்த ஆங்கிலேய இந்தியாவிற்குள்பட்ட கொராக்பூர் அல்லது மற்ற எந்த ஜில்லாவிலுமிருந்து பார்த்தால் பனிக்கட்டியால் மூடப்பட்டுள்ள பல பர்வதங்கள் வடக்கே அடிவானத்தை அளாவி வெகு மகத்தானவைகளாய்க் காணப்படும். நேபாளத்தையும் தீபேத்தியாவையும் பிளக்கிற மலைச்சிகரங்கள் இவைகளே. இவைகளே நமக்காக தைரியமாய் யுத்தம்பண்ணும் கூர்க்க போர்வீரர் வசிக்கும் எல்லைகளைக் குறித்துக்காட்டுகிறது. இவைகளின் பிரமாண்ட பரிமாணமும் ஓயா பனிக்கட்டியும் மனிதசஞ்சார மின்மையும் யாருத்தன்மையும் நம்மைத் திகிலடையச் செய்யுமென்பதற்கு யாதொரு சந்தேகமேயில்லை. ஆனால் நம்மெண்ணங்கள் அம்மலைச்சார்புகளின் வழியாக இறங்கி அதில் வசிக்கும் ஜனங்கள் எப்படிப்பட்டவர்களென்று அறிய அதிக ஆசையுண்டாகும். இந்த நேபாளர் யார்? பள்ளத்தாக்கில் தோன்றின வெளிச்சத்தைக்குறித்து இவர்களுக்கு என்ன தெரியும்.

இப்பொழுது நான் சொல்லப்போகிற சரித்திரம் மிஷனெரி முயற்சிகளில் அதிக உன்னதமானதாயும் கடவுள் எவ்வளவு ஆச்சரியமான பிரகாரமாக தமக்கு வழி உண்டாக்குகிறார் என்பதையும் திட்டமாக விளக்கிக் காட்டுகிறது. கருங்கடலின் ஓரத்திலும் சின்ன ஆசியாவின் வடபாகத்தில் உள்ளதுமான பித்தினியா தேசத்தை சுத்த சுவிசேஷத்தின் வெளிச்சத்திற்குக் கொண்டுவர பரி: பவுல் அப்போஸ்தலன் தன் இருதயத்தில் தீர்மானித்துக்கொண்டதை நாம் நம்முடைய ஞாபகத்துக்குக் கொண்டுவருவோமாக. அவர்கள் போக எத்தனித்தபோதிலும் பரிசுத்த ஆவியானவர் அவர்களை போகவிடவில்லை. பின்னால் நடந்த சம்பவங்களை நாம் கவனிக்கும் காலையில் அப்போஸ்தலனுக்கு இதைவிட அநேக பெரிய வேலைகள் ஆயத்தமாக்கப்பட்டிருந்ததாக நாம் பார்க்கிறோம். பவுல் அப்போஸ்தலன் ஓர் தரிசனத்தின் மூலமாய் ஐரோப்பாக் கண்டத்திலுள்ள பிலிப்பு தேசத்துக்குப் போக ஏவப்பட்டார். அத்தேசத்திலேயே அவரது வேலையின் முதற்பலனாகிய ஓர் ஆசியா நாட்டானும் ஓர் கிரேக்கனும் ஓர் ரோமாபுரியானும் ஆகிய மூவர் கிறிஸ்தவர்களானார்கள். தியாத்தீராவில் செல்வாக்குள்ள லீதியாள் என்னும் பெண்ணே ஆசியாவின் முதல் கிறிஸ்தவள். லீதியாள் தன் சொந்த ஜனங்களுக்கு சுவிசேஷத்தின் ஒளியை வீசச்செய்ததினால் பித்தனியா தேசத்திலுள்ளவர்கள் கிறிஸ்துவின் மந்தையில் சேர ஏதுவாயிருந்தார் என்பது கூடிய காரியம். இவை எப்படி இருந்தாலும் பித்தினியா ஓர் கிறிஸ்தவ தேசமானதையும் கி. பி. 325-ம் ஆண்டில் அதின் அருகாண்

மையிலுள்ள நைசிபட்டணத்தில் பெரிய ஆலோசனைச் சபைகூடியதையும் யாவரும் மறுக்கவே முடியாது. இந்த நைசிபட்டணத்திலிருந்தே நைசிய விசுவாசப்பிரமாணம் முதல் முதலாய் உண்டானது.

நேபாள தேசம் ஐரோப்பிய மிஷனெரிகளுக்கு அடைபட்டிருந்தபோதிலும் கடவுள் தமக்கென்று ஓர் உத்தம ஊழியனை ஆயத்தம்பண்ணிக் கொண்டிருந்தார். அந்நிய தேசத்தார் அருவருக்கப்படுகிற ஓர் தேசத்திற்குள் ஓர் சுதேசி போகக்கூடுமாதலால், ஓர் சுதேச கிறிஸ்தவனால் சுவிசேஷம் நேபாள தேசத்திற்குள் கொண்டுபோகப்பட்டது. ஆனால் இந்த நேபாளர் தங்கள் தங்கள் தேசத்திற்கு வெளியேயே கிறிஸ்துவைக்கண்டு கொள்ளவேண்டுமென்பது அவசியமாய்க் காணப்பட்டது.

இந்த நேபாள தேசத்தில் கூர்க்கர்களே வசிக்கிறார்கள். அவர்களில் அநேகர் ஆங்கிலேய இந்தியாவில் சுதேச படைகளில் சேர்ந்திருக்கிறார்கள். இச்சரித்திரத்தின் முக்கியஸ்தனாகிய குமான்சிங் (Gumansing) என்பவன் நேபாள தேசத்தில் பிறந்தவனும் கூர்க்கனுமாயிருந்தான். இவன் படையில் சேர விரும்பி ஓர் கூர்க்கசேனையில் வாத்தியம் வாசிக்கிறவனாய் நியமுகம் பெற்றான்.

குமான்சிங் மங்கோலிய தோற்றமுடையவன். அவன் வளர்த்தியில் கட்டையாயும் தடியானவனாயுமிருந்ததுமல்லாமல் தட்டையான முகமும் சாய்ந்த கண்களும் மங்கின வெள்ளை நிறமாயும் கருங்கூந்தலும் மயிரில்லாத முகமுள்ளவனாகவுமிருந்தான். அவன் ஜெபிக்கையில் அவனது வலதுகரம் அதிக துரிதமாக அசையும். அவன் ஐரோப்பியரையும் இந்தியரையும் வந்தனம்செய்யும் விதமானது அவனுடைய மாயமற்ற தன்மையை காட்டுகிறதுமல்லாமல் பல சுதேசிகளுடைய நயவஞ்சகமான தாழ்மைக்கு அதிக வித்தியாசமானதாய் தோன்றும். அவனுடைய முகம் எப்பொழுதும் ஆனந்தத்தினால் ஜொலிக்கிறதுமல்லாமல் அதே சமயத்தில் அவனுடைய பரிசுத்த ஜீவியத்தின் ஆழம் அதில் காணப்படும். அவனுடைய பட்டாளத்துடன் பல இடங்களுக்கும் செல்லும்பொழுது கிறிஸ்தவர்களோடும் இந்துக்களோடும் மகம்மதியரோடும் நெருங்கிச் சேரவேண்டியதாயிருந்தது. அவன் இரட்சகரைக்குறித்து சிறிது கற்றுக்கொண்டதுமல்லாமல் அசாமிலுள்ள காசிக்குன்றுகளில் நடைபெற்ற சில ஆவிக்குரிய கூட்டங்களுக்கும் போய்வந்தான். இவைகளினாலும் அதிகமாய் சுயமாய் இரட்சகரைத்தேடினதினாலும் அவருடைய அன்பை உணர்ந்தான். அவன் சொல்லுகிறபடி அவன் ஒருநாள் ஓர் தரிசனம் கண்டான். அதில் கிறிஸ்துவைக் கண்டதுமல்லாமல் தன் சொந்த ஜனமாகிய நேபாளருக்கு இரட்சிப்பின் செய்தியைக் கூறி அறிவிக்கச்சொன்ன அவர் சத்தத்தையும் கேட்டான். அவனுக்கு விடுமுறை கிடைத்தபோது அப்படியே செய்வதாக தீர்மானம் பண்ணிக் கொண்டான்.



அவனுக்கு ஆறுமாத ரஜா இருந்தபடியினால் அவன் அநேக மாதங்கள் காத்திருக்கவேண்டியதாயிருந்தது. இதனிடையில் அவனுடைய குணப்படுதலைக்குறித்து உத்தம சாட்சி பகர்ந்தான். அவன் தன் தோழருக்கு பிரசங்கித்து அவர்களையும் ஜெயிக்க விரும்பினான். அவனுடைய திடச்சித்தமும் வாஞ்சையும் அநேகர் அவனைப் பகைக்கும்படி செய்தது. அவனுக்குக் கடுமையான சோதனைகள் நேரிட்டது. ஓர்நாள் அவன் கூடச்சேர்ந்த போர்ச்சேவகர்கள் அவன்மேல் அதிகமாய் கோபமடைந்து அவன்மேல் பாய்ந்து அவன் கரத்தைப்பிடித்து தரையில் அதிகதூரம் இழுத்தார்கள். அவன் காலும் கிட்டதட்ட அறுந்துவிட்டது. அவனுக்குக் கடுமையான காயம் ஏற்பட்டதினால் அவன் வைத்தியசாலையில் சிலகாலம் இருக்கநேர்ந்தது. அவனுக்கு பேசக்கூடிய சக்தி வந்தவுடனே வைத்தியசாலை உத்தியோகஸ்தர்கள் அவனுக்கு கொடூரம் செய்தவர்கள்மேல் பிராதுகொடுக்கச் சொன்னார்கள். குமான்சிங்கோ அப்படி ஒருக்காலும் செய்யவே மாட்டேனென்று சொல்லிவிட்டான். அவனைத் துன்பப்படுத்தினவர்கள் கண்டுபிடிக்கப்படக்கூடிய யாதாமொரு குறிப்புமுதலாய் சொல்லமாட்டேனென்று மறுத்துவிட்டான். கிறிஸ்துவின் சிந்தை அவனில் எவ்வளவு தெளிவாய் விளங்கினது என்பதை இதன் மூலமாப் நாம் காண்கிறோம். 'பிதாவே இவர்களுக்கு மன்னியும். தாங்கள் செய்கிறது இன்னது என்று அறியாமலிருக்கிறார்கள்' என்று ரட்சகர் பெருமான் சிலுவையினின்று கூறிய வார்த்தைகளின் எதிரொலியையும் இதில் கேட்கலாம். ஆண்டவரே, இந்த குற்றத்தை இவர்கள்மேல் சுமத்தாதிரும்' என்றுமொழிந்த முதல் கிறிஸ்தவ இரத்தசாட்சியின் வார்த்தைகளும் நம்முடைய ஞாபகத்திற்கு வரலாம். கிறிஸ்துவின் அன்பு அவனை ஏவினதினால் எல்லோரையும் அவரது மந்தையில் சேர்க்க அவன் விரும்பினான்.

இந்த கிறிஸ்துவின் அன்பின் செய்தியை தன் சொந்த ஜனமாகிய நேபாளருக்கு அறிவிக்கவேண்டுமென்பதே அவனுடைய தீராவாஞ்சை. 'அவன் தன் சொந்த சகோதரனாகிய சீமோனைக்கண்டு'. என்று கர்த்தர் அழைத்த முதல் சீஷனைக்குறித்து எழுதியிருக்கிறது. இந்த ஆவியே அந்த நேபாள போர்வீரனையும் ஏவினது. தன் சுயதேசத்தாரும் தானடைந்த நன்மைகளில் பங்கடையவேண்டுமென்ற தீரா ஆவல் அவனுக்கு உண்டானது. கிறிஸ்து அவர்களுக்கு எவ்வளவு அவசியமாயிருக்கிறார் என்பதை நன்குணர்ந்தான்.

நேபாளம் ஆங்கிலேய இந்தியாவைச் சேர்ந்ததல்ல. அது அதே ஆளுகைக்குட்பட்ட ஓர் சுவாதீன ராஜ்ஜியம். 1857-ம் ஆண்டில் நடந்த பெரிய சிப்பாய் கலகத்தில் அவர்கள் ஆங்கிலேயரோடு சிநேகமாயிருந்து அக்கலகத்தை அடக்க சேனைகளை அளித்த செய்கையே அவர்கள் விஷயத்தில் நாம் அதிக சிரத்தையெடுக்க நம்மை ஏவுகிறது. ஆனால் நேபாளம் ஆங்கி

லேப இந்தியாவைச் சோதபடியினால் கிறிஸ்தவ அரசாட்சியினாலுண்டான அநேக நன்மைகள் அங்கு காணப்படுகிறதில்லை. கிறிஸ்தவ ராஜ்ஜியத்தில் செய்யப்படக்கூடாத அநேக காரியங்கள் அங்கே செய்யப்பட்டுவருகிறது. ஓர் விதமான, அடிமை வியாபாரம் அங்கு இன்னமும் காணப்படுகிறது. அடிமைகள் சொற்ப பணத்திற்கு கொள்ளப்படுகிறார்கள். ஆங்கிலேய இந்தியாவில் தடுக்கப்பட்டுள்ள 'உடன்கட்டை யேறுதல்' அங்கு இன்னமும் நடந்தேறிவருகிறது. 1877-ம் ஆண்டிலுங்கூட நேபாள தேசத்தின் மகா ராஜாவின் மூன்று மனைவிகள் தங்கள் கணவனுடன் உடன்கட்டை ஏறினார்கள். அவர்கள் ஜீவிய ஒழுக்கம் அதிக தாழ்வான நிலைமையிலிருக்கிறது. பலதாரமும் பல தெய்வ வணக்கமும் அவர்களுக்குள் சகஜமாய்க் காணப்படுகிறது. கிறிஸ்துவின் அடிமைத்தனத்தை அழித்து நாட்டை சுத்தமாய் அழகுப்படுத்தி ஆத்துமாக்களின் விலையை நன்றாய் உணரச்செய்யும் இவ்வித நன்மைகளை மட்டுமல்ல. அப்பிதமான நம்பிக்கைகளை வேரறச் செய்து பரமபிதாவின் அன்பை அவரால் மன்னிப்புப்பெற்று ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜனங்கள் உணரச்செய்யும்.

குமான்சில் தன் சுபதேசமடைந்ததும் சமயம் கிடைக்கும்போதெல்லாம் கிறிஸ்துவின் நற்செய்தியை கிராமங்கள்தோறும் பிரசங்கித்தான். அநேக கிராமங்களில் அவன் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமல்லாமல் அநேக நேபாளர் கிறிஸ்தவர்களாக தங்களுக்கு இருக்கும் ஆவலைக் காட்டினார்கள். நேபாளத்தில் சுவிசேஷவேலை ஆரம்பிக்கப்பட்டு அதனால் அநேக நன்மைகள் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த கூர்க்கன் (வாத்தியம் வாசிக்கிறவன்) அடைபட்டிருந்த நேபாள தேசத்திற்கு கிறிஸ்துவின் முன் தூதனாய் இருந்தானென்று சொல்லலாம். அவன் யாதொரு மிஷனெரி கூட்டத்தை சேராதவனாயும் சுதாவாய் அநேக முயற்சிகள் செய்தாலும் சொந்தத்திலேயே எச்செலவுகளையும் பார்த்துக்கொண்டாலும் கோராக்பூரிலுள்ள C. M. S. மிஷனோடு சேர்ந்து வேலைசெய்து லக்னவ் (Lucknow) அத்தியக்ஷரவர்களும்கூட அவனுக்கு சிபார்சு கடிதம் கொடுத்திருக்கிறார்கள்.

கோராக்பூரிலுள்ள மிஷனெரிமார் இந்த சுவிசேஷகன் மூலமாய் தாங்கள் நெடுநாள் நினைத்த நேபாள தேசத்திற்கு சுவிசேஷத்தை அனுப்ப ஏதுவடைந்தார்கள் என்று நாம் பார்க்கிறோம்.

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

January, 1916 Registered No. M 316.

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." யோவான் 7: 38

Vol. XVII ஜனுவரி௴ 1916

## ஜெபம்பண்ணப்போன இருவர்

'இரண்டு மனுஷர் ஜெபம் பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன்' பரி. லூக். 18: 10.

இவ்விரண்டு மனிதனையும் கவனித்துப் பாருங்கள். அவனுக்கும் இவனுக்கும் இருக்கிற வித்தியாசங்களைச் சற்றுநேரம் சிந்தித்துக்கொள்ளுங்கள்.

1. **கனத்தில் வித்தியாசம்.** இவன் வகுப்பு வேறே; அவன் வகுப்பு வேறே; இவன் ஜனம் வேறே; அவன் ஜனமும் வேறே; 'ஒருவன் பரிசேயன்.' பரிசேயன் என்றால் பிரிந்தவன் என்று அர்த்தமாம்; தீட்டான காரியங்களை எல்லாம் தன்னை விட்டு நீக்கினவன்; மார்க்க ஆசாரங்களைக் கிரமமாய்க் கைக்கொள்ளுவதற்கு மற்றவர்களை விட்டுப் பிரிக்கப்பட்டவன், பரிசேயரில் அநேகர் நியாயப்பிரமாணத்தை முழுவதுமாய் நிறைவேற்றினோம், இனி எங்களுக்கு ஒரு குறைவுமில்லை என்று சொல்லிக்கொண்டார்கள். ஆகையால் அவர்களுக்குப் பூரண நீதிக்காரர் என்று பெயர். வேறனேகர் அசுத்தமான காரியங்களைப் பாராதபடிக்குத் தங்கள் கண்களை மூடிக்கொள்ளத்தக்கதாக ஓர் வகையான குல்லாத் தொப்பியைப் போட்டுக்கொண்டு வந்ததினாலே அவர்களுக்குக் குல்லாக்காரர் என்ற பெயர் உண்டாயிற்று. இன்னமும் சிலர் மனிதர்களுக்கு முன்பாக மனத்தாழ்மையுள்ளவர்களாய்க் காணப்படும்படிக்குத் தங்கள் கண்களை ஒருபோதும் ஏறெடுத்துப் பாராமல் எப்பொழுதும் அதோமுகமாய் நடந்து போகப் பார்க்கையில் தள்ளாடித் திரிந்தார்கள்; ஆனதினால் அவர்களுக்குத் தள்ளாட்டக்காரர் என்று பேர். இப்படியாகத் தங்களுடைய சிறந்த பக்தி

20-1-16

யை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும்படியாக பலவித சேஷ்டைகளைக் காட்டிவந்தார்கள். வெளியரங்கமான கிரியைகளை மாத்திரம் கவனித்த சாதாரண ஜனங்கள் யதார்த்தமென்று நம்பி அவர்களைக் கண்ணியமாய் எண்ணிவந்தார்கள். பரிசேயன் மரிக்கும் சமயத்திலே தாங்கள் கூட மரிக்க நேரிட்டால் அவனுடைய புண்ணிய பலத்தினாலே தங்களுக்கும் மோட்சம் தவறாமல் கிடைக்கும் என்பது அநேகருடைய அபிப்பிராயம். **'மற்றவன் ஆயக்காரன்'**; மற்ற யூதர்கள் எல்லாரும் ஆயக்காரரை மகா நீசர் என்று எண்ணினார்கள். அவர்களைச் சபிக்கப்பட்டவர்கள் என்று சொல்லுவார்கள். அந்த வகுப்பார் எல்லாரையும் தங்கள் சபையிலிருந்து புறம்பாக்கினார்கள். அவர்களோடு சாப்பிடமாட்டார்கள். அவர்களுடைய சாட்சியை ஒப்பமாட்டார்கள். ஆயக்காரர் வேசிகளுக்கும், கள்ளருக்கும் சமம் என்று அவர்களை அவமானமாய்ப் பேசினார்கள். 'மிருகங்களில் கொடியது கரடியும் சிங்கமுமாம்; மனிதரில் கொடியவன் ஆயக்காரன்' என்பது அந்தத் தேசத்தில் வழங்கின வழக்கச்சொல். ஆ! சகோதரரே! அவ்விரண்டு மனிதர் அன்றைக்கு ஜெபம் பண்ணுகையில் நாம் அங்கே நின்று பார்த்தோம் என்றால் பரிசேயனை பக்திமான் என்றும், ஆயக்காரனை உதவாதவன் என்றும் தீர்த்திருப்போம் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனாலும், **'மனுஷன் பார்க்கிறபடி தேவன் பாரார்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்'** (1 சாமு. 16: 7). **'தன்னைத் தானே புகழுகிறவன் உத்தமனல்ல;** கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன்.' (2 கொரி. 10: 18).

2. **இடத்தில் வித்தியாசம்.** 'பரிசேயன் சமீபத்தில் வந்து நின்றான்' நல்ல இடத்தில் நின்று ஜெபம் பண்ணினான். ரபீ, சாஸ்திரி, கனவான் அல்லவா? ஆசாரியருடைய பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்கக்கூடாதவன் என்றாலும், கூடிய சமீபத்தில் போய் நின்றான். புறஜாதியார் பிராகாரத்தைக் கடந்து உள்ளே சென்றான். இரண்டாம் ஸ்தலமாகிய ஸ்திரீகளுடைய பிராகாரத்தையும் கடந்துபோனான். மூன்றாவது ஸ்தலத்தில் பிரவேசித்து அங்கே நல்ல இடத்தைத் தேடிப்பார்த்து, அங்கே பக்தியின் சந்தோஷத்தோடு நின்று நமஸ்கரித்து ஜெபஞ்செய்ய ஆரம்பித்தான். அவனுடைய வஸ்திரத்தைக் கவனித்தாலும் வெகு அலங்காரமாயிருந்தது; அவனுடைய அனுஷ்டானங்களைப் பார்த்தாலும் எல்லாம் கிரமமாய் இருந்தது. அவனைப் பார்த்தவர்கள் எல்லாரும் மகா பக்திமான் என்று நினைத்திருப்பார்கள். **'ஆயக்காரனோ தூரத்தில்'** நின்றான். உள்ளே பிரவேசிக்கத் தன்னை அபாத்திரன் என்று அறிந்துகொண்டான். புறஜாதியாருடைய வெளிப்பிராகாரத்திலே அவன் நின்றான் ஆக்கும்; பரிசுத்த தேவனுக்கும் பாவியாகிய தனக்கும் சம்பந்தம் ஏது என்பதுபோலக் கிட்டச்சேரத் துணியாமல் தூரத்தில் நின்று மன்றாடினான். யூதகனவான்களைத் தொட்டு [illegible] ஓரத்தில் நின்று ஜெபம்



செய்தான். இப்படிப் பார்க்கும்போது தேவனுக்குத் தூரமானவன் ஆயக்காரன், சமீபமானவன் பரிசேயன் என்று நினைக்கிறீர்களா? அப்படியல்ல. ஆயக்காரனுடைய இருதயம் கர்த்தரை அண்டிக்கொண்டது; பரிசேயனுடைய இருதயமோ அவரை விட்டுத் தூரமாக நீங்கினது என்பதற்குச் சந்தேகமில்லை. ஆயக்காரனே! நீ பயப்படாதே! **முன்னே தூரமாயிருந்த நீ இப்பொழுது கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானாய். அதை உணர்ந்து திடங்கொள்'** (எபே. 2: 13) பரிசேயனே! நீ மோசம் போக வேண்டாம். பரிசுத்த தேவன் கனவித்தியாசத்தைப் பாராமலும், இட வித்தியாசத்தைக் கவனியாமலும், இருதய வித்தியாசத்தையே கவனிக்கிறார்.

3. **நோக்கத்தில் வித்தியாசம்.** 'பரிசேயன் ... தனக்குள்ளே ஜெபம்பண்ணினான்'. மூல பாஷையில் 'தன்னை நோக்கி ஜெபம்பண்ணினான்' என்றிருக்கிறது. தேவனை அவன் நோக்கவில்லை, ஆண்டவனை அவன் தொழுதுகொள்ளவில்லை; கர்த்தரை அவன் மகிமைப்படுத்தவில்லை; தனக்குள்ளே தன்னை நோக்கித் தன்னையே புகழ்ந்து பேசினானே தவிர தேவதுதி அவன் நினைவிலுமில்லை; தேவ பயம் அவன் இருதயத்திலுமில்லை. ஆயக்காரனோவென்றால் தேவ சன்னிதானத்தில் நின்று ஆண்டவரை நோக்கி 'தேவனே' என்று மன்றாடினான். மெய்தான், தன்னுடைய அபாத்திரகுணத்தை நன்குணர்ந்ததால் தன் கண்களை வானத்துக்கு ஏறெடுக்க அவன் துணியவில்லை. என்றாலும் தன் இருதயத்தை ஏறெடுத்து தேவனை நோக்கிக் கெஞ்சினான் என்பது நிச்சயமான காரியம். வித்தியாசத்தைப் பார்த்தீர்களா? பரிசேயன் தன்னை நோக்குகிறான்; ஆயக்காரன் தேவனை நோக்குகிறான். பரிசேயன் தன் புண்ணியத்தைப் புகழ்ந் தேவாலயத்துக்குப் போகிறான்; ஆயக்காரன் தன் பாவத்தை அறிக்கைபண்ணத் தேவாலயத்துக்குப் போகிறான். பிரியமான சகோதரரே! நீங்கள் இன்றைக்குத் தேவாலயத்துக்கு வந்த நோக்கம் என்ன? முழங்காலில் நின்று ஜெபம் பண்ணும் போது உங்கள் இருதயம் எங்கே? யாரை நோக்கி ஜெபம் செய்தீர்கள்? இருதய சிந்தனைகளை அறிந்திருக்கிற கர்த்தர் உங்கள் விஷயத்தில் என்ன சொல்லுவாரோ? ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஜெபம்பண்ணும்படி தேவாலயத்துக்கு வருகிறார்கள்; அவர்களில் சிலர் பரிசேயர், மற்றவர்கள் ஆயக்காரர் என்று சொல்வாரா? என் சிநேகிதனே! உன் நோக்கத்தைப் பார்த்தால் நீ பரிசேயனா? ஆயக்காரனா?

4. **ஜெபத்தில் வித்தியாசம்:** பரிசேயனுடைய ஜெபத்தில் ஒரு விண்ணப்பமுமில்லை; ஒரு மன்றாட்டுமில்லை. தேவனுடைய ஒத்தாசை தனக்குத் தேவை என்று உணராமல் தன்னுடைய உதவி தேவனுக்கு வேண்டும் என்று எண்ணினான். '[illegible]' என்கிற வார்த்தை அவன் வாயில் காணப்படவே தவிர 'வேண்டுகிறேன்' என்ற வார்த்தையைக் காணோம். 'உபவாசிக்கிறேன், தசமபாகம் செலுத்திவருகிறேன்.'

தேவரீருக்கு உபகாரம் செய்து வருகிறேன்; என்னாலே உமக்கு மிகுந்த லாபமுண்டு' என்பதுபோல் மேட்டிமை சிந்தையோடு ஜெபம்பண்ணினான். சுயநீதிக்காரன்; பெருமைக்காரன்; மதியீனன். ஆயக்காரனுடைய ஜெபமோ எவ்வளவோ வித்தியாசமானது. தன் பாவத்தை உணர்ந்தவனாய், தன்னை முற்றிலும் வெறுக்கிறவனாய், பாவக்கரத்தால் தன் மார்பிலே அடித்துக் கொண்டு புலம்புகிறவனாய், தன்னைப்போல் இவ்வுலகத்தில் நீசபாவி ஒருவனும் இல்லை என்று அறிக்கை செய்கிறவனாய், 'தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்' என்றான். மூலபாஷையில் இந்த ஜெபத்தை வாசித்துப் பார்த்தால் அதிலே மெத்த சிறந்த கருத்து விளங்குகிறது. 'பாவியாகிய என்மேல்' என்று மாத்திரம் சொல்லாமல், 'நான் ஒருவனே பாவி, பாவிகளில் பிரதான பாவி நான்: என்னைப்போல நிர்ப்பந்த பாவி வேறொருவருமில்லை' என்பது போலவும் மனங்கசந்து புலம்புகிறான். மேலும் 'கிருபையாயிரும்' என்பதில் பாவநிவாரண பலியைப் பார்த்துத் திரு ரத்தத்தினிமித்தம் கிருபையாயிரும்' என்பதாகக் கெஞ்சுகிறான். இங்கே கிருபை என்ற வார்த்தை பாவப்பிராயச்சித்தத்தின் சம்பந்தமாக வழங்கப்பட்ட வார்த்தை. அது சாயந்தரவேளையானால் அந்தச்சமயத்தில் ஆசாரியர் அந்திப்பலியாக ஆட்டுக்குட்டியைப் பலிபீடத்தின்மேல் கட்டி அதின் ரத்தம் சிந்தி பலி செலுத்தியிருக்கலாம். ஆயக்காரன் அந்த ஆட்டுக்குட்டியை நினைத்து இப்படி ஜெபித்தானோ தெரியாது. எப்படியும் பலியின் சம்பந்தமாக வழங்கின வார்த்தைகளை உபயோகப்படுத்தி தேவகிருபையைக் கெஞ்சிக் கேட்டான். பிரியமான சகோதரரே! 'ரத்தம் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு உண்டாகாது'.

பாவிகளாகிய நமக்கு கிறிஸ்துநாதருடைய புண்ணிய ரத்தம் அவசியம் வேண்டும். ஒருவிசை கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற ரத்தத்தைப்பற்றி நான் பிரசங்கிக்கும்போது, பிரசங்கம் முடிந்த பின்பு ஒரு அம்மாள் என்னிடத்தில் வந்து, 'நீங்கள் இயேசுவின் திருரத்தத்தை எடுத்துக் காட்டினது மெத்த நல்லது. மனிதருக்கு அதுவே தேவையானது, பாவிக்கு வேறே என்ன தஞ்சம் உண்டு? ஆண்டவருடைய திருரத்தத்தின் விசேஷத்தை எப்போதும் கூறி அறிவியுங்கள்' என்று ஏவினாள். இராப்போஜனத்தின் மூலமாய் அதை நினைவு கூர்ந்து, அதினாலே புதுப்பெலனையும், பரிசுத்தத்தையும் பெற்றுக்கொள்ள வருகிறோம். வரும்போது 'தேவனே! பிரதான பாவியாகிய என்மேல் கிருபையாயிரும். இயேசுவின் பிராயச்சித்தத்தினிமித்தம் கிருபையாயிருமென்று' ஆயக்காரருடைய ஜெபத்தை வழங்குவோமாக.

5. **லாபத்தில் வித்தியாசம்.** இருபேரும் ஜெபம்பண்ணியாயிற்று. இவனும் போய்விட்டான். அவனும் போய்விட்டான். பரிசேயன் எல்லாராலும் புகழப்பட்டான்; ஆகையால் அவன் அடைந்த லாபம் அதிகம்



என்று நினைக்கிறீர்களா? ஒருபோதும் அப்படியல்ல. இவனுடைய விஷயத்தில் கிறிஸ்து நாதர் தீர்ப்புச் சொல்லுகிறார். அவனுடைய விஷயத்திலும் தீர்ப்புச்சொல்லுகிறார். பரிசேயனைப்பற்றி பைசல் சொல்லுகிறார், 'நீதிமானாக்கப்பட்டவன் அவனல்ல' என்கிறார். பரிசேயன் நீதிமானல்ல; பக்திமானல்ல; புண்ணியவான் பாத்திரவானல்ல; வெறும் வேஷக்காரனே, என்பது ஆண்டவருடைய தீர்மானம். ஆயக்காரனுடைய விஷயத்திலும் பைசல் சொல்லுகிறார். 'இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான்.' ஆயக்காரன் மற்றவர்களால் புறக்கணிக்கப்பட்டவன். என்றாலும் மகா பாக்கியவான். 'எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ அவன் பாக்கியவான்'. (சங். 32: 1). கிருபையின் சுவிசேஷம் என்று கவனித்துப் பாருங்கள். தூரமாய் நின்ற மனிதனை நீதிமானாக்கி ஆசீர்வதிக்கிறார். ஆயக்காரனாகிய சகேயுவின் வீட்டில் போய்த் தங்குகிறார். ஆயக்காரனாகிய மத்தேயுவைத் தெரிந்துகொண்டு அப்போஸ்தலனாக்குகிறார். தமது ராஜ்யத்தில் அனந்த ஆயக்காரரையும் பாவிகளையும் சேர்த்துக்கொள்ளுகிறார். அருள்நாதர் 'பாவிகளின் நேசர்', உலக ரட்சகர்.

## படிப்பினையாகச் சில வார்த்தைகளைச் சொல்லுகிறேன்

(*a*) சபையார் யாவரையும் இரண்டு வகுப்பாராக பிரித்துப்பார்க்கிறார். 'ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன்'. நீ எந்த வகுப்பைச் சேர்ந்தவன் (ள்)?

(*b*) இருவகுப்பார்மேலும் கவனம் வைக்கிறார். நிற்கிற இடத்தையும், காட்டுகிற குணத்தையும், சொல்லுகிற வார்த்தைகளையும், சகல விவரங்களையும் கவனித்து அறிகிறார்.

(*c*) இருவகை ஜெபங்களையும் கேட்டு எழுதிவைக்கிறார். பரிசேயனுடைய வார்த்தைகள் ஆனாலும் சரி; ஆயக்காரனுடைய வார்த்தைகள் ஆனாலும் சரி; ஒவ்வொன்றும் திட்டமாக எழுதப்பட்டதுபோல, நம்முடைய ஜெபத்தையும் மறவாமலிருக்கிறார். கள்ள ஜெபத்தைக் கவனிக்கிறார். உத்தம ஜெபத்தையும் கேட்கிறார்.

(*d*) இருவகுப்பாருக்கும் தீர்ப்புச் சொல்லுகிறார். அவன் நீதிமானல்ல: இவனே நீதிமான் என்று தீர்மானிக்கிறார்.

பிரியமானவர்களே! இன்றைக்கு நமது காரியம் எப்படி? நீதிமானாக்கப்பட்டவர்களாய் நம்முடைய வீட்டுக்குத் திரும்பிப்போவோமா? இன்னமும் மன்னிக்கப்படாதவர்களாய் போவோமா?

## ஒன்று.

**மதிகேடனின் ஒன்று.** களஞ்சியங்களை நினைத்து ஆஸ்தியையும், தன் விளைவுபொருட்களையும் அடைய இடமில்லையே என்று நினைத்த மதிகேடன் (லூக். 12: 18-ல்) நான் ஒன்றுசெய்வேன் என்கிறான். பணத்தின்மீதே அவன் கவனம். ஆஸ்தியைச் சேர்ப்பதே அவன் தவனம். கட்டடங்களைக் கட்டி களஞ்சியத்தை பெரிதாக்க விரும்புவதே அவன் நோக்கம். உலகத்தார் இப்பேர்ப்பட்டவனை புத்திசாலி, செயலாளி, பாக்கியவானுக்கு என்ன குறை என்று புகழ்ந்துகொண்டாடுவார். நித்திய பேரன்பரின் பார்வையோ முற்றும் விபரீதம். மனுஷன் பார்க்கிறபடி அவர் பார்க்கிறவரல்லவே. மனுஷன் புத்திமான், பாக்கியன் என்று போற்றக்கூடிய இவனை, அக்கினி கண்களையுடைய தேவகுமாரன் மதிகேடன் என்கிறார். வாசிப்போனே! நீ வெளிக்கு நெஞ்சில் அடித்து ஜெபிக்கலாம். ஆவிக்குரியவர்களின் நடை உடை பாவனை உனக்கு இருக்கலாம். ஆனால் உன் இருதயத்தின் அந்தரங்கம் 'ஒன்று' எது, பணம் அல்லவா? கேயாசின் ஒன்று அதுவே. இக்காலத்திலும் இந்த தவ ஊழியத்தை அவ ஊழியயாக்கிவிடுவது எது? இந்த ஒன்றேதான். முன்னே அனலோடும் ஆவியோடும் ஊழியம்செய்த சிலர், இப்போது ஆவியுமற்று அனலுமற்று போட்ட வேஷச் சட்டையை கழற்றி தங்கள் மெய்ரூபத்தைக் காட்டிவிடுகிறார்கள். ஓ! தேமாவின் பின்னடியாரே! உங்கள் காலை பந்தயஓட்டத்தில் தட்டி மடித்துவிட்ட இடறுதலின் கல் எது? இந்த ஒன்றுதான். எல்லா கற்பனைகளையும் என் சிறுவயதுமுதல் கைக்கொண்டுவந்தேன் என்ற நல்ல வாலிபன் தலைகவிழ்ந்துபோக நேர்ந்ததேது? இந்த ஒன்றேதான் காரணம். தமிழ் நாட்டிலுள்ளவர்கள் பேச்சென்ன? ஒன்று செய்யவேண்டும். நல்ல பணத்தைச் சம்பாதிக்கவேண்டும். யாவரும் நமது காலில்தானேவந்து விழுவார்கள் என்பதுதான். ஊழியர்களின் உள்ளத்தையும், குடும்பத்தையும் நகைப் பிசாசு என்னும் அரிபிளவை விழுந்து அரிக்கிறது. எல்லா ஜெபமும் பிரசங்கமும் வெளியே வாய்வீரியம்தான். வீட்டிலே ஐயாவுக்கும், அம்மாளுக்கும் ஆத்துமாவையும் ஜீவியத்தையும் கொன்று வதைக்கிற ஆத்தும உயிர்க்கொல்லி எது இந்தப் பொருளாசை என்னும் விஷப் பாம்பே. மதிகேடரே! எது முக்கியம்! ஆத்துமாக்களா? ஆயிரம் ரூபாய் நகையா? ஆண்டவரா? இந்த அநித்தியப்பொருளா? இன்றே உன்னைக் கெடுக்கிற இந்த ஒன்றையும் அகற்றிப் போடமாட்டாயா? ஒரு போதகர் ஆலயத்தில் நின்று ஏழைகளுக்கு இரங்குவதைப்பற்றி மிகவும் பரிதபித்து மனம் உருகிப் போதித்தார். இவர் பிரசங்கத்தை தன் வீட்டை இழக்கநேரிட்ட ஏழை வயோதிப வியாதிஸ்தன் கேட்டிருந்து பிரசங்கம் முடிய இவர் வீட்டில்போய் 'ஐயா' 30 ரூபாய் வாடகை என்மீது சுமந்ததினிமித்தம் என் தள்ளாண்மையான காலத்தில் வியாதிஸ்தனாகிய நான் வீட்டைவிட்டுப்போகவேண்டியது நேர்ந்தது. இந்த



மாரிகாலத்தில் எனக்குத் தங்க இடமுமில்லை தாபரிக்க ஓர் ஸ்தலமுமில்லை. கர்த்தர் இன்று காலையில் தங்கள் அருமையான பிரசங்கம் கேட்கச்செய்தார். ஏழைக்கு ஏதாவது உதவிபுரியுங்கள், எனக்கெஞ்ச, இந்தக் கன்னெஞ்சன், ஐயோ! வந்துவிட்டானே! பிரசங்கித்தபிந்தடியில் என்னசெய்ய என்று கையை நெறித்து பணப்பெட்டியில் 30 ரூபாய் எடுத்துக்கொடுத்து போய்வா என்று அனுப்பி அப்படியே விசாரத்தில் கட்டிலில் படுத்தவர்தான். காய்ச்சல் வந்தது. சபையார் பலர் வந்துபார்த்தனர். இந்த ஏழையும் வந்து பட்லரைக் கண்டு ஐயாவுக்குக் காய்ச்சலா அப்பா என வினவ, என்ன காய்ச்சல் பணக்காய்ச்சல்தான். அந்த முப்பது ரூபாயை இப்போது கொண்டுகொடும் உடனே காய்ச்சல் போய்விடும் என்க அப்படியே இந்த ஏழை அதைத் திருப்பிக் கொடுத்துவிடக் காய்ச்சல் நின்றுவிட்டதாம். இதை வாசிக்கிற என் உடன் ஊழியனே! உமது இராவின் தியானம் எது? அந்தரங்க வாஞ்சை எது? அகத்தின் நோக்கம் எது? ஆத்துமாக்களா? பணமா?

**மரியாள் தெரிந்துகொண்ட தேவையான ஒன்று (லூக். 10: 42).** ஓர் பேர்போன வைத்தியர் பிணியாளிகள் நிறைந்த ஓர் ஆஸ்பத்திரியைச் சுற்றிவரும்போது அந்தந்த நோயாளிக்கும் தேவை எதுவென்று சீட்டில் குறித்துப்போகிறார். ரணபரிகாரியும், குணபரிகாரியுமாகிய நமது ஆத்தும வைத்தியர் இதோ இப்பூவுலகிலுள்ள சகல நோயாளிகளையும் பார்க்கவந்தபோது, அநேக காரியங்களுக்காய்க் கவலையுற்றுக் கலங்கிய மார்த்தாளைப் பார்த்து பரிதபித்து 'தேவையானது ஒன்றே' என்றார். மார்த்தாளைப்போல பற்பல காரியங்களினால் கவலைகொண்டு அலைவாய்த் துரும்புபோல ஆடி அலைகிற பாவியே! உன் ஆத்ம நாயகரின் அமிர்த மொழியைச் சற்று உற்றுக்கேள். இதுவே உன் தளர்ந்த கைகளையும், தள்ளாடிய முழங்கால்களையும் பலப்படுத்த தகுந்த தங்கமொழி. அருள்நாதரை மார்த்தாள் தன் வீட்டில் ஏற்றுக்கொண்டாள். ஆனால் மரியாள் அவர் பக்கத்திலிருக்க ஆசைகொண்டாள். மார்த்தாள் அவருக்காய் ஓடி ஆடி பலவேலைகள் செய்தாள். ஆனால் அவர் திருவடிகளண்டை உட்கார்ந்தவள் மாத்திரம் முறுமுறுப்பும், படபடப்புமின்றி, அயலாரை யாதொரு குறை குற்றம் கூறாது அமரிக்கையும் நம்பிக்கையுமாயிருக்கிறாள். வாசிக்கும் சகோதரியே! என்றைக்குப் படபடப்பும், கோபமும், முனக்கமும், பிறரைக் குறைகூறுதலும் விடுவதேன்? நீ இன்னும் ஓயாமல் உன் அன்புள்ள நாயகன் பாதத்தில் இருக்கப் படிக்கவில்லை. நீ இயேசுவை இருதயத்தில் ஏற்றுக்கொண்டாய். ஆனால் ஓயாது அவர் இன்பமுகம் நோக்கிப் பேசிக்கொண்டிருக்கப் பழகவில்லை. உன் முற்கோபமும், முன்னூறு குணமும், படபடப்பும் தீரவேண்டுமா? தேவையானது ஒன்றே. மரியாளைப்போல எப்போதும் இயேசுவின் திருப்பாதத்திலிரு. வேலைசெய்யாது இருக்கவேணுமென்றல்ல, எந்தவேலைசெய்

தாலும், தன் உடன்பிறவி இறந்த வேதனை நேரத்திலும், விருந்து நடந்த நேரத்திலும் திருப்பாதத்தருகிலேயே பார்க்கிறோம்.

அன்பரே! எந்த இன்பமும் துன்பமும் இந்த அன்பின் நேசரைவிட்டு நம்மை அணுவளவு பிரியாதிருப்பதாக. அவரைவிட்டுத் தூரமாய்ப் போகிறவர்கள் நாசமடைவார்கள். அவரைவிட்டுச் சோரம்போகிற அனைவரையும் சங்கரிப்பார். அவரை அண்டிக்கொண்டிருப்பவர்கள் மாத்திரமே பாக்கியவான்கள். தாவீது (சங். 27: 4-ல்) தெரிந்துகொண்டபடியே நமது தேவாலயமாகிய அருமை ரட்சகருக்குள் தங்கியிருப்பதையே தெரிந்துகொள்வோமாக!

வாசிப்போனே! உலகத்தையா? மார்த்தாளின் சோலியையா? மரியாளின் நல்ல பங்கையா எதைத் தெரிந்துகொள்ளுகிறாய்? இந்தத் தேவையான ஒன்றையே மாத்திரம் தெரிந்துகொள்வோமாக! இம்மைக்கும் மறுமைக்கும் சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் நித்தியம்வரை தேவையானது அருமை இயேசுவின் பொற்பாதமே!

**மெய்பக்தரின் சாட்சியும் ஒன்றே.** (யோசு. 23: 14; யோ. 9: 25; பிலி. 3: 13). நான் குருடனாயிருந்தேன் இப்பொழுது காண்கிறேன் இது ஒன்றுதான் எனக்குத் தெரியும் என்பதே பிறவிக்குருடனின் சாட்சி. குணப்பட்ட தேவனுடைய பிள்ளையே! நீயும் இருளின் அதிகாரத்தைவிட்டு, ஒளியைக் கண்டதற்கு இவ்வித சாட்சி பகருகிறாயா?

இப்பிரபஞ்சத்தின் தேவனால் குருடாக்கப்பட்ட உன் மனக்கண்களை ஆவியானவர் கல்வாரி கலிக்கமிட்டு தெளிவாக்கியதற்கு சாட்சி பகருகிறாயா?

தேவ ஊழியனாகிய பவுல்:—'நான் ஒன்றுசெய்கிறேன் பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளைத் தேடி கிறிஸ்து இயேசு என்னை அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக லக்கைநோக்கித் தொடருகிறேன் என்கிறார். கலப்பையின்மீது கையைவைத்து பின்னிட்டுப் பார்த்தலோத்தின் மனைவியைப்போன்ற தேவனுடைய பிள்ளைகளே! நீங்கள் முன் ஓடியஓட்டம் எங்கே? இப்போ ஜெபத்தில் தூக்கம். சாட்சியில் தூக்கம். பிரசங்கத்தில் ஊக்கம் குறைகிறதே! ஐயோ! இனிவரும் மகிமையை எறிட்டு நோக்கி ஓடுங்கள். உங்கள் எஜமான் இதோ வருகிறார் அல்லவா? இது நித்திரைபண்ணும் வேளையல்லவே!

'பக்தரே! உற்சாகத்தோடே
எழும்பிப் பிரகாசிப்பீர்
ஆத்துமாக்கள் இயேசுவண்டை
வந்துசேர உழைப்பீர்!



## சத்திய வேதமே ஜெயிக்கும்

இத்தாலியா தேசத்திலுள்ள ஜெனிவாப் பட்டணத்தில் வோல்டெயர் என்னும் ஓர் பலத்த நாஸ்திகன் இருந்தான். இவன்: கிறிஸ்துமார்க்கத்தை ஸ்தாபிக்க பன்னிரு அப்போஸ்தலர் வேலைசெய்ய வேண்டியதாயிருந்தது. இதோ! என் ஒரே கையினாலே இந்த மார்க்கத்தை சீக்கிரத்துக்குள்ளாகக் கவிழ்த்துப்போடுகிறேன் என்று சொல்லி, ஒரு பெரிய அச்சயந்திரசாலை நியமித்து அதிலே கர்த்தரின் திருவசனத்திற்கு விரோதமாய் மிகவும் அவதூறான புஸ்தகங்களையே எழுதி அச்சிட்டுக்கொண்டிருந்தான். அந்த அச்சயந்திரசாலையின் கம்பவுண்டு முகப்பில் நசரேயனாகிய இயேசுவின் மார்க்கத்தை நாசம்பண்ணிவிடுவேன் என்று எழுதிவைத்ததுமன்றி, சர்வ வல்லவரின் பரிசுத்த புஸ்தகத்தைப் பலவாறாய் தூஷித்து, அநேக புஸ்தகங்களை மிகவும் வீரியமாய் அச்சிட்டான். என்றாலும் தேவ வசனம் வளர்ந்துபெருகிற்று.

இப்படிக் கர்த்தருக்கு விரோதமாய்த் தன் குதிங்காலைத் தூக்கிய இந்த நாஸ்திகன் சில வருஷங்களுக்குள் மாண்டு மண்ணுக்குள் புதைக்கப்பட்டான். அவன் வைத்திருந்த அச்சுக்கூடமும் அவன் தோட்டமும் ஓர் பக்தியுள்ள துரையின் வசமாயின. அவர் அதிலிருந்து எத்தனையோ ஆயிரக்கணக்கான வேதபுஸ்தகங்களை அச்சிட்டு கிறிஸ்துமார்க்கத்தைப் பரவச்செய்தார். முந்திய நாஸ்திகன் தூஷித்த பரிசுத்த மார்க்கத்தின் பிரபல்லியத்திற்கென்றே தமது வரும்படியையும், பணத்தையும் செலவழித்தனர். புல்லைப்போல முளைத்தறுப்புண்டு போகும் மானிடன் எந்நாளும் நிலைத்திருக்கும் பரமனின் வசனத்தை எதிர்த்து நிற்பதெப்படி?

பிரான்சு தேசத்தில் லையன்ஸ் (Lyons) என்ற ஓர் பட்டணம் இருக்கிறது. அதில் பீற்றர் உவால்டோ என்று ஓர் பெரிய வர்த்தகன் இருந்தான். அவன் ரோமைச் சபையைச் சேர்ந்தவனாயிருந்தபோதிலும் அதின் உபதேசங்களும் வீண் சடங்குகளும் அவன் மனதுக்கு இளைப்பாறுதலைக் கொடுக்கவில்லை. லத்தீன் பாஷையில் எழுதப்பட்டிருந்த ஓர் புதிய ஏற்பாடு அவன் கையில் கிடைக்கவே அவன் அதை வாசித்து அதின் மூலமாய் அருமை ரட்சகரின் அதிசய மீட்பைக் கண்டறிந்தான். இவன் உடனே லத்தீன் பாஷையிலிருந்த இந்தப் புதிய ஏற்பாட்டைப் பிராஞ்சுப் பாஷையில் திருப்பி ஆயிரக்கணக்கான புஸ்தகங்களை அச்சிட்டு தன் சுய நாட்டாருக்குக் கொடுத்து கர்த்தரின் வசனத்தைப் பரவச்செய்தான். இவனிருந்த ஊர் பிரதம அத்தியட்சர் இதைக் கவனித்துக் கடுங்கோபமூண்டு பாப்புவானவருக்குத் தெரிவிக்கவே ரோமை பாப்புவானவர் இவன் பதிதன் ஆகிவிட்டான் என்று பீற்றர் உவால்டோவைச் சபைக்குப் புறம்பாக்கி, அந்தப் புதிய ஏற்பாட்டை ஒருவரும் வாசிக்கவேகூடாது என்று

தமது நாமத்தால் நாடெங்கும் பறைசாற்றுவித்தார், பார்க்கக்கூடாதென்று பறைசாற்றப்படும் புஸ்தகம் எது? அதில் என்ன விசேஷம் எழுதியிருக்கிறதென்று பார்க்கவேண்டும் என்று நாட்டார் யாவரும் மிகுந்த ஆசையும் தாகமுங்கொண்டு இந்தப் புதிய ஏற்பாட்டைச் சொல்லிமுடியாத ஆவலுடன் வாங்கி வாசித்தனர். இதினால் அநேகருக்கு மிகுந்த துன்பம் வந்தபோதிலும் கர்த்தரின் வசனத்தை மிகவும் அவலுடனே பரவச்செய்தனர்.

பிளாரென்ஸ் என்னும் பட்டணத்தில் ஓர் பக்தியுள்ள கிறிஸ்தவன் இருந்தான். அவனிடத்தில் அருமையான ஒரு சிறு வேதாகமம் இருந்தது. இவன் அதிகமாய் அதை மதித்து வைத்திருப்பதை டஸ்கெனி இளவரசன் கேள்வியுற்று அதை அவன் கையிலிருந்து பலாத்காரமாய் பிடுங்கிக் கொண்டு வரும்படி தன் சேவகர்களுக்குக் கட்டளையிட்டான். இந்த அருமையான திருவசனத்தை மிகவும் வாஞ்சையுடனே வாசித்துவந்த அந்த ஆண்டவருடைய தாசன் சிந்தின கண்ணீர் கொஞ்சமல்ல. அந்தப் புஸ்தகத்தைக் கொண்டுவரவும் டஸ்கனியின் அரசன் மிகவும் ஆங்காரமாய் இந்த நீசப்புஸ்தகம் அடியோடே நாசமாய்ப்போகவேண்டும். இதை இந்நிமிஷமே அர்னோ நதியில் வீசியெறிந்து தொலைத்துவிடுங்கள் என்று ஆஞ்ஞாபித்தான். அவன் கிஷ்டூரக் கட்டளைப்படியே அந்த நதியில் அவ்வருள் வசனம் எறிந்துவிடப்பட்டது. என்றாலும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

திருவசனம் வளர்ந்து பெருகிற்று. அந்த அருமையான எபிரேய எழுத்துள்ள வேதாகமம் தெளிந்து அதிவேகமாய் ஓடிய அர்னோ நதியின் ஜலத்தில் மிதந்து இழுக்கப்பட்டு (Signa) இடமட்டும் வந்தது. அவ்விடத்திலுள்ள ஓர் யூத வாலிபன் நதியில் ஸ்நானம் செய்கையில் இதைக்கண்டு அதின் எபிரேய எழுத்துக்காய் அதை மதித்து மிகவும் வாஞ்சையுடனே வாசித்து குணப்பட்டான். தான் வாசித்ததுமட்டுமல்ல தன் சிநேகிதனுக்கும் கொடுத்தான். கடைசியாக, சிலர் சேர்ந்து ஒன்றாய் இரகசிய கூட்டம் கூடி வாசித்தனர். இதனால் உண்டான மகத்துவ பலன் என்ன? சிக்னாவிலும் அதைச் சூழ்ந்த கிராமங்களிலுமுள்ள மற்றநேகர் கர்த்தரிடம் திரும்பி மெய் விசுவாசிகளானார்கள். 'என் வசனம் வெறுமையாய்த் திரும்பாது' நான் அனுப்புகிற காரியம் ஆகும்படி வாய்க்கும் என்ற அருள்வள்ளலின் வாக்கு எந்நாளும் மெய்யே! பகைஞர் தூஷித்தபோதிலும் எதிரிகள் எத்தனையோ பேர் எழும்பி எத்தனை விபரீதங்களை எழுதிவிட்டாலும் கருணைக்கடலின் திருவசனம் வளர்ந்து பெருகிக்கொண்டே வருகிறதே.

1378-ம் வருஷம் மேமாதத்தின் ஓர் உஷ்டண நாளிலே லண்டனமாநகரில் பிளாக்பிரையர்ஸ் சன்னியாசி மடத்தின் பெரிய சபாமண்டபத்தில் அநேக நியாயாதிபதிகளுக்கு முன்பாக வயதுசென்ற ஒரு பெரியவர் நிறுத்தப்பட்டிருந்தார். அவர் வேத சாஸ்திரங்களுக்கும் கல்வியில் தேறின



வித்வான்களுக்குமுரிய அங்கிகள் தரித்தவராக நின்றார். இவரைச் சூழ எத்தனையோ ரோமைச் சந்நியாசிகள் பிஷப்மார் சிரேஷ்ட பிஷப்மார் யாவரும் சிலர் சீறின முகத்தோடும் அவரைப் பார்த்த கண்ணாயிருந்தனர். இந்த வயோதிப குற்றவாளி யார்? இவர் இந்த மண்டபத்தில் சபைக்கு முன் எது குற்றத்தினிமித்தம் கொண்டுவந்து நிறுத்தப்பட்டார்? இவர்தான் லட்டர்வர்த் (Lutterworth) பட்டணத்தின் குருவாகிய ஜாண் உவிக்லிவ் என்பவர். வேதாகமம் முழுவதையும் இங்கிலீஷ் பாஷையில் முதலாவதாக மொழிபெயர்த்துப் பிரசுரப்படுத்திய குற்றத்தினிமித்தமே இங்கே அவர் கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருந்தார்.

இதோ இந்தத் தைரிய போதகர் தனித்தவராய் அந்த மகா சபையில் நிற்கிறார். திரளான ஜனங்கள் அந்தச் சபாமண்டபத்தில் கூடிவந்திருந்தபோதிலும் அவர் பக்ஷமாய் நிற்பார் எவருமில்லை என்றாலும் அவர் தனிமையாய் நிற்பதாக எண்ணாது தம் பக்தரை ஒருபோதும் தனித்துவிடாத பரமபிதா கூடஇருப்பதை உணர்ந்து கிஞ்சித்தேனும் நெஞ்சமஞ்சாது சாந்த முகத்துடனே அமைதியாய் நிற்கிறார். விசாரணை நடக்கும்பொழுதே திடீரென்று நியாயாதிபதிகள் குற்றஞ்சாட்டுவோர் முதலியவர்களின் சத்தத்திற்கு மேலாய் ஓர் பயங்கர சத்தம் எழும்பிற்று. நியாய ஸ்தலத்தின் அஸ்திபாரங்கள் குலுங்கி அதிர்ந்தது. லண்டன் பட்டணம் பூமி அதிர்ச்சியினால் நடுங்கிற்று. கூடிவந்திருக்கிற சந்நியாசிகள் சிரேஷ்ட குருக்கள் எல்லாரும் திகிலடைந்து நடுங்கினார்கள். எதிரிகளில் ஒருவர் எழும்பி நின்று ஆண்டவன்மாரே பூதங்கள்கூட நமது திருச்சபையின் பகைஞனை இவன் பட்சத்திலிருக்கிறதுபோல் தோன்றுகிறதே. இந்த விசாரணையை நிறுத்திவிட்டால் என்ன என்று அபயமிட்டான். அதற்கு கோர்ட்னே என்னும் கந்தர்புரி பிரதம அத்தியக்ஷர் இல்லை இல்லை, விசாரணை நடக்கவேண்டும். இந்தப் பூமியதிர்ச்சி நமது ராஜ்யம் சுத்திகரிக்கப்படப் போகிறது என்று காட்டுகிறது. இந்தத் துஷ்ட மனுஷரால் வந்த தீவினைகளையெல்லாம் பூமியதிர்ச்சிதான் நீக்கவேண்டும் என்றாராம். இதற்குப்பின்னும் உவிக்லிவ் பயப்படாது வேதாகமத்தைத் திருப்பி விற்பதே சோலியாயிருந்தனர். உவிக்லிவ் வேதாகமத்தைத் திருப்பிக்கொண்டிருந்த காலத்தில் இங்கிலாந்துமுழுவதும் கொள்ளைநோயால் பீடிக்கப்பட்டு ஜனத்தொகையில் ஏறக்குறையப் பாதிப்பேரை வாரிக்கொண்டுபோய்விட்டது. அக்காலத்திலும் இவர் தமது புஸ்தகங்களைச் சுமக்க உதவிக்கு ஆட்களைச்சேர்த்துக்கொண்டு வீடுவீடாய் வேதாகமத்தைக் கொண்டுபோய்க்கொடுத்தனராம். இப்பயங்கர கொள்ளைநோயில் அகப்பட்டு திகிலடைந்து திகைத்த எத்தனையோ ஆத்துமாக்களுக்கு இந்தத் திருவசனத்தின் அமிர்த வாக்குகள் ஞான உயிரையும் புதுப் பெலனையும் அருளிச்செய்தது. அந்தக் காலத்தில் ஒரு மணிநேரம் வேதாகமம் வாசிக்கக் கிடைக்குமானால் அதற்கு ஒரு கட்டு சோதுமை வைக்கோல் கொடுப்பார்களாம். உவிக்லிவ் என்ற அருமையான

போதகர் தமது உதவியாட்களுக்கு வேதாகமத்தை மனப்பாடம்பண்ணச் சொல்லி அந்த வியாதியில் அகப்பட்டவர்களுக்குப்போய் போதிக்கும்படி ஏவிவிடுவாராம்.

சீர்திருத்தலின் விடிவெள்ளியாகிய ஜாண் உவிக்லிவ் என்பவர் தமது பழைய வேதாகமத்தில் 'திருவசனத்தை நன்றாய் அறியவும் அதைக் கைக்கொள்ளவும், அதற்காகச் சந்தோஷமாய்ப் பாடனுபவிக்கவும் தேவன் நமக்குக் கிருபை அருளிச்செய்வாராக' என்று எழுதிவைத்திருந்தார். இவர் மரித்து நூறு வருஷத்திற்குப் பின்பு உவில்லியம் திண்டேல் என்பவர் எழும்பி அவரும் வேதாகமத்தை மறுபடியும் மொழிபெயர்த்து அக்கினியிலே தகனிக்கப்பட்டார். இந்தப் பக்தன் தகனிக்கப்படும்பொழுது 'ஆண்டவரே இவ்வேதாகமத்தின் அருமையைப் பார்க்கத்தக்கதாக இங்கிலாந்து அரசனின் கண்களைத் திறந்தருளும்' என்று ஜெபித்தாராம். இங்கிலாந்தின் மேன்மைக்குக் காரணம் என்னவென்று கேட்ட அஞ்ஞான அரசனுக்கு காலஞ்சென்ற நமது மகா இராணியார் ஒரு பைபிளை ஒரு நல்ல பெட்டிக்குள் அடைத்தனுப்பி இங்கிலாந்தின் மேன்மைக்குக் காரணம் கர்த்தரின் திருவசனமே என்று எழுதியனுப்பினர். (மெனிலேக் என்னும் அந்த ராஜா இது விஷயத்தை தாமே இங்கிலாந்திலுள்ள சர்ச்சு மிஷன் சங்கத்து ஆபீசில் தம்முடைய வாயால் அறிக்கையிட்டார்). ஆம் மெய்யாகவே கர்த்தரின் வசனத்தை அறியும்படி அதை மதிக்கும்படி இங்கிலாந்தின் ராஜாவின் கண்களை அவர் திறந்திருக்கிறார். அவருக்கு ஸ்தோத்திரம்.

ஒருநாள் அதிகாலையில் பால்ய அரசனாகிய ஆறும் எட்வர்ட் தமது படிப்பறையில் உட்கார்ந்து, லத்தீன் கிரேக்கு பாஷைப் புஸ்தகங்களிலிருந்து சில அப்பியாசங்கள் செய்துகொண்டிருந்தார். அந்தச் சமயம் ஏதோ ஓர் புஸ்தகத்தை ஒத்துப்பார்க்க நேரிட்டபடியினால் தன் சமீபத்தில் நின்ற ஓர் வேலைக்காரப் பையனைக் கூப்பிட்டு அந்தப் புஸ்தகத்தை செல்பிலிருந்து எடுத்துவரச் சொல்ல இந்தப் பையனுக்கு அது எட்டாத உயரத்திலிருந்தபடியினாலே இவன் மேசையின்மேல் வைக்கப்பட்டிருந்த ஒரு பெரிய தோல் கட்டுப் புஸ்தகத்தை எடுத்துக் கீழேபோட்டு அதின்மேலே ஏறிநின்று எடுக்க எத்தனித்தான். அந்த புஸ்தகமோ ஒரு வேதாகமம் இந்த வேலைக்காரப் பையன் செய்த மதிகேடான காரியத்தைக் கண்டுகொண்ட பாலிய எட்வர்ட் ராஜாவுக்கு உண்டான துக்கமும் விசனமும் திகிலும் இம்மட்டென்றல்ல. அவர் கண்களில் கண்ணீர் ததும்ப தமது எழுதுகோலை வீசிவிட்டு எப்பொழுதும் சாந்தமும் முகமலர்ச்சியுமுள்ள அவர் மகா விசனத்துடனே எழுந்துபோய் அவனைக் கண்டித்தாராம். தமது எல்லா ஐசுவரியமும் உடைமையும் கண்ணியமும் இந்த விலைமதிக்கப்படாத வேத வசனமாகிய பொக்கிஷத்துடனே ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவைகள் யாவும் அவருக்கு ஒன்றுமில்லாமையும் மாய்கையுமாகவே காணப்பட்டது. ஆம், தாவீது அரசன் அநேகமாயிரம் பொன் வெள்ளியைப் பார்க்கிலும் நீர் விளம்பின வேதமே எனக்கு நலம் என்று சங்கீதம் பாடுகிறான்.



இதை வாசிக்கும் என் உடன் ஆத்துமாவே! உன்னிடம் மூன்று கேள்விகளைக் கேட்கிறேன்.

**1. இந்த சத்திய வசனத்தை** கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவே பிடித்துக்கொண்டு நீ சுடர்போல இலங்குகிறாயா? அவர்கள் வேதம் நல்லதுதான். யார் அப்படி நடக்கிறது? என்று இந்துக்கள் நமது வேதத்தை தூஷிக்க இடம்பண்ணாதே. 'உன்னிலுள்ள வேதமாகிய ஒளி உன் அன்றாடக ஜீவியத்தாலே' இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு.

**2. இந்த சத்திய வசனத்திற்காக உறுதியாய்ப் போராடுகிறாயா?** எத்தனைபேர் இதற்காய் ரத்தம் சிந்தியதுண்டு. இந்த வேதம் நமது கையில் வருமுன் எத்தனை பேர் ரத்தம் சிந்தியிருக்கின்றனர். இந்தக் கடைசியான கொடிய காலத்திலே சத்திய துரோகிகள் எழும்பி வேதத்திற்கு விரோதமான புதிய உபதேசங்களையும் நாஸ்தீகங்களையும் பரப்பும் இச்சமயம் நீ இதற்கு உண்மையாயிருக்கிறாயா? இந்த வேதாகமத்தின் சுத்தாங்க உபதேசத்திற்காக ஜீவனையும் கொடுப்பாயா?

**3. இந்த சத்திய வேதத்தை எப்போதும் பரம்பச் செய்கிறாயா?** உன் வாயில் இந்த வசனம் ஓயாது இருக்கிறதா? இதுவே உன் தியானமா? இரவில் இதே உன் எண்ணமாயிருக்கிறதா? இந்தச் சத்தியத்தை பரம்பச் செய்ய ஓயாத எண்ணத்தை ஆவியானவரே அருளுவாராக!

## 'என் நேசர் தம்முடைய தோட்டத்திற்கு வருவாராக'

உன்னதப்பாட்டு 4: 16.

திருச்சபையானது கர்த்தருடைய வேதத்தில் பலமுறையும் தோட்டத்துக்கு ஒப்பிட்டுப் பேசப்பட்டிருக்கிறது. தோட்டத்தின்பேரில் இயற்கையாய் யாவருக்கும் பிரியமுண்டு, உத்தம கிறிஸ்தவனுக்கோ அது மகா அருமையான போதனைகளுள்ளதாயிருக்கிறது. ஏதேன் என்னும் சிங்காரத் தோட்டத்தில் என்றும் வசிக்கவே ஆதியில் மனிதன் உண்டாக்கப்பட்டான். மனிதன் இழந்துவிட்ட பரதீசு தேவ மனிதனான இயேசு சுவாமியால் ஒரு தோட்டத்திலேயே திரும்ப மீட்கப்பட்டது. 'அவர் சிலுவையில் அறையப்பட்ட இடத்தில் ஒரு தோட்டமும் அந்தத் தோட்டத்தில் ஒருக்காலும் ஒருவனும் வைக்கப்பட்டிராத ஒரு புதிய கல்லறையும் இருந்தது' இவைகள் ஒரு உவமானம்போல் தோன்றுகிறது. மெய்க்கிறிஸ்தவன் தன் ஆண்டவருடனே சிலுவையில் அறையப்படும் அனுபவத்துக்குட்படும் போதுதான் அவன் ஆண்டவருக்கு அருமையான தோட்டமாகிறான். அவருடைய மரணத்தின் சாயலில் இணைக்கப்படாதவன் அவருடைய உயிர்த்தெழுதலின் சாயலை அடையமாட்டான். அவருடைய உயிர்த்தெழுதலின் சாயலே அலங்காரமான பூங்காவனம் போன்ற ஆவிக்குரிய அனுபவம். என் சகோதர சகோதரிகளே, நீங்கள் இவ்வருஷம் ஆண்டவருக்குச் சொந்தமும் அருமையுமான தோட்டமாவீர்களாக. உங்களிலுள்ள இயேசுவின் பரிசுத்த அலங்காரத்தையும் அன்பின் வாசனையையும் கண்டு, கர்த்தர் நித்தமும் உங்கள்பேரில் அகமகிழுவாராக! ஆதலால் கர்த்தருடைய தோட்டமாக உங்களில் காணப்படவேண்டிய இலட்சணங்களைப் பாருங்கள்.

**முதலாவது, தோட்டமானது ஒரு மனிதனுக்கு மாத்திரம் சொந்தமான சுதந்தரம் என்பதை சிந்தித்துப்பாருங்கள்.** ‘என் சகோதரியே! என் மணவாளியே! நீ அடைக்கப்பட்ட தோட்டம்’ (12 வா.). ஒரு நிலம் வேலியினால் அடைக்கப்பட்டவுடனே அது ஒரு மனிதனுக்கு மாத்திரம் சொந்தம் என்று அர்த்தம். ஒரு மனிதனுக்கும் சொந்தமல்லாத நிலம் அடைக்கப்படாமல் ஏக வெளியாகவே கிடக்குமல்லவா? ஆ, முதலாம் காரியம் இதுதான். தரிசு நிலம் தோட்டமாகவேண்டுமானால் அது ஒரு மனிதனுக்குச் சொந்தமாகவேண்டும். அதன் எப்பக்கத்தின் வழியாய் எவரும் உட்பிரவேசிக்கக்கூடாதபடி அது அடைக்கப்படவேண்டும். அதின் ஒரே வாசல் வழியாய் அதற்குச் சொந்தக்காரரான ஒருவர் மாத்திரம் உட்பிரவேசிக்கவேண்டும். இது என் சொந்தம் என்று இன்னொருவர் சொல்லுவதற்கு யாதொரு அற்ப இடமும் இருக்கக்கூடாது. என் சகோதரா சகோதரியே, நீ இவ்விதமாய் நீ ஆண்டவருக்குச் சொந்தமாகிவிட்டாயா? நீ என் சொந்தம் என்று அவர் உன்னைப்பார்த்துச் சொல்லுவாரா? நீ ஆயிரந்தரம் மாய்மாலமாய்ச் சொல்லுவதை விட்டுப்போடு. எப்பக்கத்திலும் நீ அடைக்கப்பட்டிருக்கிறாயா என்று பார். உலக சிற்றின்பம், உல்லாசம், தோழமை முதலியவைகள் உன்னை அற்பமாகிலும் அண்டுவதற்கு இடமில்லாதிருக்கிறதா? உன் இருதய சிந்தனையும் ஜீவிய நடக்கையும் இயேசுவுக்குப் பிரியமானதாயிருக்கிறதா? நீ இயேசுவுக்கு முற்றிலும் சொந்தமாகுமுன் அவருடைய தோட்டமாக முடியாது. பாவப் பழக்க வழக்கங்களிலிருந்து உள்ளும் புறம்புமாக அவர் உன்னை வேலியடைக்க நீ இடங்கொடுக்குமட்டும் அவர் உன்னைத் தமது சொந்தம் என்று அங்கீகரிக்கவுமாட்டார், உன்னை அலங்காரமான தோட்டமாக்கக் கவலைப்படவுமாட்டார் என்பது நிச்சயம்.

**இரண்டாவது, பாழான தரிசுநிலம் அலங்காரமான தோட்டமாகும்படி மிகுந்த பிரயாசம் எடுக்கப்படவேண்டும்.** தரிசு நிலம் தானாய்த் தேர்ச்சியடைந்து தோட்டமாகிவிடமாட்டாது. இயற்கையில் தானாய் உண்டான தோட்டத்தை எங்கும் காணமுடியாது. ஏதேனில் முதலாய் தேவனாகிய கர்த்தர் ஒரு தோட்டத்தைத் தாமே உண்டாக்கினார். இஸ்ரவேல் ஜனத்தைச் செழிப்பான திராட்சத் தோட்டமாக்கும்படி தாம் எடுத்துக்கொண்ட மிகுதியான பிரயாசத்தை ஏசாயா ஐந்தாம் அதிகாரத்தில் விஸ்தரித்துக் காண்பித்திருக்கிறார். தரையைப் பண்படுத்த தோட்டக்காரன் மாத்திரம் பிரயாசம் எடுக்கவேண்டும். ஆத்துமாவைப் பண்படுத்தவோ தேவனும் கிறிஸ்தவனும் சேர்ந்து பிரயாசம் எடுக்கவேண்டும். தேவன் தமது குமாரனின் உயிரைக் கொடுத்து மனித ஆத்துமாவை கிரயமாக வாங்கியிருக்கிறார். தமது தோட்டத்துக்காகத் தாம் செய்யக்கூடிய ஒன்றையும் அவர் செய்யாமலிருக்கமாட்டார். இங்கிலாந்தில் இராத்சைல்டு என்ற யூத பிரபு ஒரு பாழான சிறு குன்றை கிரயத்துக்கு வாங்கி, சில வருஷங்களுக்குள் அதை அலங்காரமான சிங்காரத் தோப்பாக்கிப் போட்டாராம். கர்த்தரால் கூடாதகாரியம் உண்டோ? எந்த மனிதனுடைய பாழான ஜீவியத்தையும் அவர் பரிசுத்த அலங்காரம் பொருந்தினதாக்கக்கூடும். மனிதன் மாத்திரம் அவருக்கு இடமுண்டாக்கும்படி ஜாக்கிரதையாய்க் கிரியைசெய்யவேண்டும். மிகுதியான வேத வாசிப்பு, மிகுதியான தனித்தியானம், மிகுதியான கிறிஸ்தவ ஊழியம் இவைகளே மனிதன்மேல் விழுந்த கடமைகள். ஆத்துமாவில் ஆண்டவருடைய கிரியை பலமாய் நடக்கும்படிக்கு இவைகள் இடமுண்டாக்கும். சோம்பேறியான எந்தக் கிறிஸ்தவனின் ஜீவியமும் பாழாகவே போய்விடும். ‘சோம்பேறியின் வயலையும் மதியீன



னுடைய திராட்சத்தோட்டத்தையும் கடந்துபோனேன்; இதோ, அதெல்லாம் முள்ளுக்காடாயிருந்தது; நிலத்தின் முகத்தைக் காஞ்சொறி மூடினது; அதின் கற்சுவர் இடிந்து கிடந்தது’ (நீதி. 24: 30, 31). சோம்பேறியின் தோட்டம் முள்ளுக்காடாய்ப் போவதுமாத்திரமல்ல, அதைச் சுற்றிக் கட்டப்பட்ட மதிலும் இடிந்துபோம். சர்வ ஜாக்கிரதையற்ற கிறிஸ்தவனைப் பாவம் ஆண்டுகொள்ளும். அதோடு அவன் ஆண்டவருக்குச் சொந்தமல்லாமலும் போவான். முன்னேறிச் செல்லாமல், முன்பெற்ற ஆசீர்வாதத்தையும் இழந்துபோவான்.

**மூன்றாவது, தோட்டம் தனக்காகவல்ல, தன்னைக் கொண்டவரின் சந்தோஷத்துக்காகவே உண்டாக்கப்படுகிறது.** ‘என் நேசர் தம்முடைய தோட்டத்துக்கு வந்து, தமது அருமையான கனிகளைப் புசிப்பாராக. நான் என் தோட்டத்தில் வந்தேன், என் வெள்ளைப்போளத்தையும் என் கந்தவர்க்கங்களையும் சேர்த்தேன்’ (உன். 4: 18; 5: 1). சொந்தக்காரனின் இன்பத்துக்கும் பிரயோஜனத்துக்குமாகவே தோட்டம் உண்டாக்கப்படுகிறது. அப்படியே நமது ஜீவிய நோக்கம் மகா திட்டமாயிருக்கவேண்டும். அருமை இரட்சகரைப்போல் எப்பொழுதும் பிதாவுக்குப் பிரியமானதைச் செய்வதே நமது நோக்கமாயிருக்கவேண்டும். பிழைத்தாலும் செத்தாலும் நாம் அவருக்குப் பிரியமாயிருக்கவே நாடவேண்டும். அவரை நாம் பிரியப்படுத்தும்போது, அவரும் மகா பிரியத்தோடு தமது தோட்டத்துக்கு வருவார். ‘இது என்றென்றைக்கும் நான் தங்கும் இடம். இதை நான் விரும்பினபடியால் இங்கே வாசம்பண்ணுவேன்’ என்பார்.

**நான்காவது; தோட்டத்தின் செழிப்பு முற்றிலுமாய் தோட்டக்காரன் கையிலேயே இருக்கிறது.** எந்தத் தோட்டமும் செழிப்பாகும்படி மிகுதியாய்த் தண்ணீர் பாய்ச்சப்படவேண்டும். ‘தோட்டங்களுக்கு நீரூற்றும், ஜீவத்தண்ணீரின் துரவும், லீபனோனிலிருந்து ஓடிவரும் வாய்க்கால்களும் உண்டாகிறது’ உன். 4: 15. அப்படியே சூரியனின் உஷ்டணமும், பூமியின் பனியும், ஆகாயத்தின் காற்றுகளும் தோட்டத்துக்கு வேண்டும். ‘வாடையே! எழும்பு; தென்றலே! வா; கந்தப்பிசின்கள் வடிய என் தோட்டத்தில் வீசு’ (4: 16). கிறிஸ்தவர்களே, ஆண்டவருடைய தோட்டமாகிய நமக்கு, உள்ளாக ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய பரிசுத்த ஆவியானவரும், வெளியாக உலகப்பிரகாரமான இன்ப துன்ப அனுபவங்களும் வேண்டும். நம்மைக் காயப்படுத்துகிற வடகாற்றாகிய உபத்திரவங்களும், நம்மை ஆற்றித் தேற்றுகிற தென்றலாகிய ஆறுதல்களும் ஒன்றுபோல நமக்கு அவசியமே. ஆண்டவரே, உமது ஆவியானவரை என்பேரில் பொழியும், உமது ஆலோசனையின்படி என்னை நடத்தும் என்று இடைவிடாமல் கெஞ்சி, என்னாளும் அவரைச் சார்ந்துநின்று ஜீவிப்பதே நமது கடமை.

**ஐந்தாவது, அலங்காரமான பூ வகைகளும் இன்பமான பழவர்க்கங்களுமுள்ள தோட்டத்துக்கு மிகுதியான மோசங்களுண்டு.** ‘திராட்சத்தோட்டங்களைக் கெடுக்கிற குழிநரிகளையும் சிறு நரிகளையும் நமக்குப் பிடியுங்கள்; நம்முடைய திராட்சத் தோட்டங்கள் பூவும் பிஞ்சுமாயிருக்கிறதே’ (2: 15). காட்டுப்பன்றி அதை உழுதுபோடும், வெளியின் மிருகங்கள் அதை மேய்ந்துபோடும் (சங். 80: 13). காட்டுப் பன்றியைப் போன்ற துணிகரமான பாவங்களுக்கும், வெளியின் மிருகங்களைப்போன்ற பெரும் பாதகமாகிய பாவங்களுக்கும், குழிநரிகளைப்போன்ற மறைவான

756



பாவங்களுக்கும், சிறுநரிகளைப்போல் அற்பமாய்த் தோன்றுகிற பாவங்களுக்கும் நாம் விலகி ஜீவித்தால்மாத்திரம் சகல மோசங்களுக்கும் தப்புவோம். நாம் உத்தமராயிருக்கும்போது கர்த்தர் தாமே நம்மைக் காப்பார். 'கர்த்தராகிய நான் அதைக் காப்பாற்றி, ஒருவரும் அதைச் சேதப்படுத்தாதபடிக்கு அதை இரவும் பகலும் காத்துக்கொள்வேன்' ஏசா. 27: 3. இவ்விதமாய் 'கர்த்தர் உன்னை நித்தமும் நடத்தி, வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்; நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போலவும் வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்' ஏசா. 58! 11, இந்தப் பாக்கியம் இதை வாசிக்கிற யாவருக்கும் அவர்கள் ஜீவகாலமெல்லாம் கிடைப்பதாக!

## நோட்டீஸ்

இப்பத்திரிகை இவ்வளவு பிந்திப்போனதற்காக மெத்தவும் துக்கப்படுகிறோம். சந்தாதாரான நண்பர் யாவரும் மிகவும் மன்னிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறோம். மார்ச்சு மாசத்துப் பத்திரிகையில் இதன் காரணங்கள் தெரியவரும். யாவரும் உற்சாகமாய் இதற்குக் கைகொடுக்கவும் பேருக்கேற்ப இது ஜீவத்தண்ணீராகவே யெங்குமிடமெங்கும் விளங்கவும் அருள்நாதர் இப்பத்திரிகை எழுதுகிறவர்களுக்கும் வாசிக்கும் நண்பருக்கும் தமது ஆவியைப் பொழிந்தருளுமாறு ஜெபிக்கவேண்டுகிறோம். ஜனுவரிப் பத்திரிகை முதலிலும் பெப்ருவரி பத்திரிகை அடுத்த வாரத்திலும் மார்ச்சு பத்திரிகை மாதம் முடியுமுன்னும் ஏப்ரல் பத்திரிகை ஏற்ற காலத்திலும் வெளியாகுமென்று நம்புகிறோம்.

பத்திரிகை வேண்டுவோர் வழக்கப்படி மானேஜருக்கு அடியிற்கண்ட விலாசத்துக்கெழுதக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

Rev. R. V. Asirvadam
*Palamcottah.*

Printed at The Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

February, 1916 Registered No. M - 316.

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

THE REGIST... 21 FEB 1916

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." யோவான் 7: 38

Vol. XVII பெப்ருவரி 1916

## இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள்

சங்கீதம் 95: 8.

இந்த வசனம் வேத வாக்கியங்களில் ஓர் விசேஷித்த வசனம் என்று சொல்லவேண்டும். பழைய ஏற்பாட்டில் மாத்திரமல்ல புதிய ஏற்பாட்டிலும் 3 விசையாக எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. யூதச்சபைக்குமட்டுமல்ல கிறிஸ்து சபைக்கும் எச்சரிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒய்வுநாள்தோறும் நமது ஜெப புஸ்தகத்தின் முறைமையின்படி இந்தவார்த்தைகளை வாசித்தும் பாடியும் வருகிறோம். அதுமாத்திரமல்ல திருச்சபை ஒழுங்கின்படி மாதத்தின் 19-ம் தெய்தி காலை ஜெப ஒழுங்கில் வாசிக்கப்படும் சங்கீதங்களிலும் ஒன்று. இப்படியாக இந்த வார்த்தைகள் விசேஷித்த பிரகாரமாக நம்முடைய காதுகளில் தொனித்துக்கொண்டே வருவதால் அவைகளைச் சற்றுநேரம் யோசித்துத் தியானிப்பது உசிதம் என்று தோன்றுகிறது. இந்த வசனத்தில் ஓர் திட்டமான காலமும் ஓர் விசேஷமான சத்தமும், ஓர் பெரிதான மோசமும் குறிக்கப்பட்டிருக்கிறது. இந்த மூன்றையும் விஸ்தரித்துக்காட்ட நேரம் போதாது. ஆகையால் அவைகளைச் சுருக்கிக்காட்டமாத்திரம் யோசிக்கிறேன்.

I. **திட்டமான காலம்.** 'இன்று'. நாளையத்தினம் இன்றைபத்தினம்போலவும் இதற்கு அதிகமாகவும் இருக்கும் என்று நினையாதேயுங்கள் (ஏசா. 56: 12). பாவியானவன் மனந்திரும்பி ரக்ஷண்ய நிலைமைக்கு வருகிறதற்குத் தேவன் வருங்காலத்தைக் குறிக்காமல் நிகழ்காலத்தை

20-2-16

மாத்திரம் குறித்திருக்கிறார். 'இதோ, இப்பொழுதே அனுக்கிரக காலம், இப்பொழுதே ரக்ஷண்யநாள்' கிருபையுள்ள கர்த்தர் நமது நித்திய வாழ்வை விரும்பி நமது மனதைத்தட்டி எழுப்பி காலதாமதம் செய்யாதே. இன்று குணப்படு. இன்றைக்கே உன் ரக்ஷிப்பைத் தேடு என்று வருந்தி அழைக்கிறார். திரும்பத்திரும்ப வேத வசனங்களைக்கொண்டு இன்று, இன்றைக்கு என்று சொல்லுகிறார். இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடக்கிறவர்களைப் பார்த்து 'இதோ, ஜீவனையும், நன்மையையும், மரணத்தையும், தீமையையும் இன்று உனக்கு முன்னே வைத்தேன், நீ ஜீவனைத் தெரிந்துகொள்,' என்று ஏவுகிறார். (உபா. 30: 15, 19). இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்யப் பிரயாசப்படும் புத்தியீனரை எச்சரித்து 'தேவனையோ உலகப் பொருளையோ, யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்' என்று வற்புறுத்திப் பேசுகிறார். காலத்தை ஆதாயப்படுத்தாமல் கடைத்தெருவில் சும்மா நிற்கிற ஜனங்களைக் கண்டித்து 'ஒருவரும் கிரியை செய்யக்கூடாத ராக்காலம் வருகிறது. மகனே, மகளே, நீ போய் இன்றைக்கு என் திராட்சத்தோட்டத்தில் வேலைசெய்' என்று கட்டளையிடுகிறார். இயேசுவைக் காணவும் ஏற்றுக்கொள்ளவும் மனதாயிருக்கிற பாவிக்கு ஆறுதல் உண்டாக 'நீ சீக்கிரம் இறங்கிவா, இன்றைக்கு உன் வீட்டிலே (இருதயத்திலே) நான் தங்கவேண்டும்' என்கிறார். (லூக். 19: 5). 'உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்' என்று எச்சரித்துப் பேசுகிறார். இரண்டு வாலிபர் ஒரே கல்விச்சாலையில் வாசித்து வந்தார்கள். இரண்டுபேருக்கும் பாவ உணர்வுண்டாகி ரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்யவேண்டும் என்று விசாரப்பட்டார்கள். அவர்களில் ஒருவன் இதுவே ரக்ஷண்யநாள் என்றறிந்து உடனே இயேசுவைப்பற்றிப் பிடித்து உத்தம கிறிஸ்தவனானான். மற்றவனோ கொஞ்சம் தாமதம்பண்ணினாலும் பரவாயில்லை. நான் படித்துத் தீரட்டும். அப்புறம்தான் என் பாவங்களை வெறுத்துவிடுவேன் என்று கடத்திவைத்தான். அவன் படிப்பில் தேறினபின்பு தேவாவியானவர் திரும்ப வந்து அவன் மனதைத்தட்டி எழுப்பினபோது 'இன்னமும் கொஞ்சம் பொறுத்துப் பார்ப்பேன், கலியாணம் செய்தபின்பு சீர்ப்படுவேன்' என்று கடத்திப்போட்டான். கலியாண செய்து முடிந்தது. நல்லாவியானவர் மறுபடியும் அவனுக்குப் பாவ தண்டனையை உணர்த்திக்காட்டினபோது அவன் இன்னமும் கடத்தி 'நான் அலுவல் பார்க்கப்போகிறேன். நான் முன்னுக்குவந்து ஸ்திதிபந்தனானபிற்பாடு தாமதம்பண்ணாமல் ரட்சகருக்கு என்னை ஒப்புக்கொடுப்பேன்' என்று மறுத்தான். அவனை அப்புறம் கண்டு பேசினபோது இருதயம் கடினப்பட்டுப்போயிற்று. யாதொரு நல்லாசையும் உணர்வுமில்லை. பார்த்தீர்களா? காலதாமதம் மனக்கடினமுண்டாக்கிற்றல்லவா?



II. விசேஷமான சத்தம். 'அவருடைய சத்தத்தை'. எவ்வளவு அன்பான சத்தம், எத்தனை வல்லமையுள்ள சத்தம். இது ஆதிமுதல் இந்நாள்வரைக்கும் மனுப்புத்திரரை வருந்தி விரும்பியழைக்கும் சத்தம். 'ஆதாமே' நீ எங்கேயிருக்கிறாய்? 'என்று ஏதேனில் தொனித்த சத்தம். சீனாய்பர்வதம் மிகவும் அதிர எக்காள சத்தம் பலமாய்த் தொனிக்க மலையின்மேல் மின்னல் பிரகாசிக்க மோசேயோடு பேசின பலத்த சத்தம். எலியா தீர்க்கதரிசி மனம் சோர்ந்து ஓரேப் கெபியில் துக்கமுறவனாகப் புலம்பும் சமயத்தில் அவனுக்குத் தைரியத்தையுண்டாக்கின அமர்ந்த மெல்லிய சத்தம்'. பேதைகளே, நீங்கள் பேதமையை விரும்புவதும், நிந்தைக்காரரே, நீங்கள் நிந்தையில் பிரியப்படுவதும், மதியீனரே நீங்கள் ஞானத்தை வெறுப்பதும் எதுவரைக்கும் இருக்கும்?' என்று வீதிகளில் கூப்பிடும் ஞானத்தின் சத்தம். பாபிலோன் ராஜா பெருமைகொண்டு தன் ராஜ மேன்மையையும் பராக்கிரமத்தையும் புகழ்ந்து பேசும்போது அவன் பாவத்தைக் கண்டிக்கவும் அவன் தண்டனையைக் காட்டவும் வானத்திலிருந்துண்டான சத்தம். சவுல் என்பவன் கெர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தும்படி கோபாவேசத்துடனே தமஸ்கு ஊருக்குப் புறப்படும்போது சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்' என்று அவன் மனம் கலங்கப்பண்ணின தெய்வீக சத்தம். கெட்ட குமாரன் தூர தேசத்திலிருந்து வீட்டுக்குத் திரும்பினபோது அவனை அன்போடு சேர்க்கவும் வாழ்விக்கவும் நிற்கிற பரம பிதாவானவருடைய சத்தம். காணாமற்போன ஆடுகளைத் தேடவும் ரட்சிக்கவுமே அதிக ஆவலோடு வந்திருக்கிற நல்ல மேய்ப்பனுடைய நேச சத்தம். நம்முடைய பாவங்களைக் கண்டித்து ரக்ஷா பெருமானுடைய புண்ணிய பலன்களை நமக்கு உணர்த்திக் காட்டுவதற்கு நீடிய பொறுமையோடு காத்திருக்கிற தேவாவியானவருடைய அமர்ந்த மெல்லிய சத்தம். என் பிரிய சிநேகிதரே, இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள். அதோ, ஒரு மனுஷனிருக்கிறார், நன்றாய்ப்படித்துத் தேறிப் பின்பு வக்கீல் ஆகி அயவாறாகக் காலக்ஷேபம் பண்ணத்தீர்மானிக்கிறார். நல்ல மனுஷன், திறமைசாலி, தேவபயமோ அவர் மனசிலில்லை. உல்லாசக்காரன், உலக நேசன், இப்படியிருக்கும்போது தேவனுடைய பரிசுத்த ஓய்வுநாளைத் தன்னிஷ்டப்படி உலக இன்பமாய்க் கழிக்க ஓரிடத்துக்குப் புறப்பட்டுப்போகிறார். அங்கே தேவாலயம் ஒன்றிருந்தது. கோவிலுக்கு வர அவரைக் கேட்டுக்கொண்டார்கள். சம்மதித்துப் போனார். என்றாலும் தேவனை ஆராதிக்கவும் கிறிஸ்துவைத் தரிசிக்கவும் அவர் போகவில்லை. ஏதோதானோவென்று குணப்படாத இருதயத்தோடு அங்கே போனார். அந்த ஆலயத்தில் அன்றைக்குத் தேவனுடைய பரம சத்தம் அவருக்குக் கேட்கப்பட்டது. அந்தச் சத்தம் பலத்தோடு பேசினது. தன் பாவத்தை உணர்ந்தார். தன் ரட்சகரைக் கண்டறிந்தார். மனமாறி முற்றிலும் புதுமனுஷனானார். அன்று தேவனுடைய சத்தத்தைக் கேட்டார். தன் மனதைக் கடினப்படுத்தவில்லை. கிறிஸ்துநாதருடைய ஊழியத்துக்குத்

தன்னைச் சமூலமாய் ஒப்புக்கொடுத்துக் குருப்பட்டம்பெற்றுச் சீன தேசத்துக்குப்போய் வெகு வைராக்யத்தோடு சுவிசேஷத்தை அறிவித்துவந்தார். சீக்கிரத்துக்குள்ளாகத் தன் பிராணனையும் அருமையாக எண்ணாமல் ரத்தச் சாட்சியாக மரணமடைந்தார். பிரியமானவர்களே, பேசுகிறவருக்கு நீங்கள் செவிகொடுக்கமாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாய் இருங்கள். ஏனெனில் பூமியில் பேசினவருக்குச் செவிகொடுக்கமாட்டோமென்று விலகினவர்கள் தப்பிப் போகாமலிருக்க பரலோகத்திலிருந்து பேசுகிறவரை நாம் விட்டுவிலகினால் எப்படித் தப்பிப்போவோம்?' எபி. 12:25.

**III. பெரிதானமோசம்.** உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள். நம்முடைய இருதயம் கடினப்பட்டுப்போவது மகா மோசமான காரியம். பார்வோனுடைய இருதயக் கடினத்தினிமித்தம் அவனுக்கும் அவன் ஜனங்களுக்கும் நேரிட்ட நாசமானது உங்கள் எல்லாருக்கும் தெரியும். இந்த வசனத்தில் காட்டியபடி இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய சத்தத்திற்குச் செவிகொடாமல்போய்த் தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தின பாவத்தினிமித்தம் சம்பவித்த பயங்கரங்களும் தெரியும். 'கானான்தேசத்தில் பிரவேசிக்கக் கூடாதபடி அவர்கள் சவங்கள் வனாந்தரத்தில் விழுந்துபோயிற்றே.' பரிசேயருடைய இருதயக் கடினத்தினிமித்தம் கிறிஸ்துநாதர் விசனப்பட்டதும் அவர்கள் விஷயத்தில் அவர் பேசின கடினமான வார்த்தைகளும் தெரியும். இருதயக்கடினம் சிலருக்குமாத்திரம் ஏகதேசம் உண்டாகிறது என்று நினைக்கவேண்டாம். அது எந்தசச்பையிலும் வெகு சாதாரணமான பாவம். முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணும்போது வாயினால் ஜெபித்தாலும் இருதயம் தேவனைவிட்டுத் தூரமாக மற்ற விஷயங்களில் நிற்கிறது. அருள் சத்தியங்கள் பிரசங்கிக்கப்படும்போது காதாரக்கேட்டாலும் அவைகளைக் கொஞ்சமென்கிலும் உணராமற்போகிறது. பரிசுத்த பந்திக்கு வரும்போது புறம்பான அடையாளங்களைப் பெற்றுக்கொண்டாலும் உள்ளான கிருபையைச் சற்றாகிலும் அடையாமற்போவது. கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாமல் வழக்கம் என்றும் கடமை என்றும் வந்துசேருகிறது. இப்படிப்பட்ட பாவத்திற்கு இடம் கொடுப்போமானால் பெரிய மோசம். சில ஜனங்களுக்கு ஓர் வழக்கமுண்டு. அதிகாலையில் எழுந்திருக்கவேண்டுமென்று விரும்பி alarm என்று சொல்லப்பட்ட ஒரு வகையான கடியாரத்தைத் தங்கள் பக்கத்தில் வைத்துக்கொள்ளுகிறார்கள். காலையிலே அந்தக் கடியாரத்தின் மணி அதிகச் சத்தமாய் அடிக்கும். அடித்து நித்திரை தெளிய அவர்களை எழுப்பும். அதின் சத்தத்துக்குச் செவி கொடுத்து உடனே எழுந்திருப்பார்களானால் நாள்தோறும் தவறாமல் குறிக்கப்பட்ட நேரத்தில் அதின் சத்தம் தங்கள் காதுகளில் தொனிக்கும். எழுந்திருப்பார்கள். ஆனால் அந்தச் சத்தம் கேட்கும்போது நித்திரை மயக்கத்துக்கு இடங்கொடுத்து உடனே எழுந்திராமல் இன்னமும் தூங்குவார்களானால் வரவர அதின் சத்தத்துக்கு அவர்கள் காது மந்தமாய்ப்



போகும். கடைசியில் அது எவ்வளவு சத்தமாய் அடித்தாலும் அந்தச் சத்தத்தைக் கொஞ்சமாவது கேளாமல் அயர்ந்த நித்திரையாய்த் தூங்குவார்கள். ஆ! பாருங்கள். தேவன் பேசும்போது அவருடைய பரம சத்தத்துக்குச் செவிகொடுப்போமாக. ஆவியானவர் நம்முடைய இருதயத்தைத் தட்டும்போது காதுகொடுத்துக் கேட்போமாக. இல்லாவிட்டால் நம்முடைய ஞானக்காது மந்தமாய்ப்போகும். நம்முடைய இருதயம் கடினப்படும். அப்பொழுது எத்தனை பிரசங்கங்களைக்கேட்டாலும் இயேசுவானவர் எவ்வளவு அன்போடு அழைத்தாலும் உணராமலும் கேளாமலும் மோசம் போவோம். ஒரு வகையான தண்ணீருண்டு. அதற்குக் கல்லாக்கும் (Petrifying) ஜலம் என்றுபேர். அதிலே இயல்பாக அதிகச் சுண்ணாம்பு இருக்கிறதால் அந்தத் தண்ணீர் எந்தப் பொருளின்மேல் விழுந்தாலும் சிலமாசக் காலத்துக்குள் அந்தப்பொருள் சுண்ணாம்பினாலே மூடப்பட்டுக் கல்போலத்தோன்றும். மாமோ, முட்டை யோடுகளோ, இப்படியாக அநேக சாமான்களை வைக்கிறார்கள். சுத்த ஜலம் அவைகள் பேரில் துளிதுளியாக விழவிடுகிறார்கள். காலம் செல்லச்செல்ல வரவர அந்தப் பொருட்களெல்லாம் கல்லாக மாறினதை நான் பார்த்திருக்கிறேன். சகோதரரே, தேவன் நம்மோடு பேச, பல பிரசங்கங்களைக் கேட்க செவி கொடாமற்போனால் காலம் செல்லச் செல்ல கொஞ்சம் கொஞ்சமாக வரவர நம்முடைய இருதயம் கடினப்பட்டுப்போகும். நம்முடைய நெஞ்சம் கல் நெஞ்சமாகும். நம்முடைய முன்னிலைமையைப் பார்க்கிலும் நம்முடைய பின்னிலைமை மகா கேடுள்ளதாயிருக்கும்.

Rev. T. Walker.

---

## 'எனக்கு நியாயஞ் செய்யவேண்டும்'

லூக்கா 18: 3.

'சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணவேண்டும் என்பதைக்குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார். ஒரு பட்டணத்திலே ஒரு நியாயாதிபதி இருந்தான்; அவன் தேவனுக்குப் பயப்படாதவனும் மனுஷரை மதியாதவனுமாயிருந்தான். அந்தப் பட்டணத்திலே ஒரு விதவையும் இருந்தாள்; அவள் அவனிடத்திலே போய்: எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாஞ்செய்யவேண்டும் என்று விண்ணப்பம் பண்ணினாள். வெகுநாள் வரைக்கும் அவனுக்கு மனதில்லாதிருந்தது. பின்பு அவன்: நான் தேவனுக்குப் பயப்படாமலும் மனுஷரை மதியாமலும் இருந்தும், இந்த விதவை என்னை எப்பொழுதும் தொந்தரவு செய்கிறபடியினால், இவள் அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடி இவளுக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான் என்றார். பின்னும் கர்த்தர் அவர்களை

நோக்கி: அநீதியுள்ள நியாயாதிபதி சொன்னதைச் சிந்தித்துப்பாருங்கள். அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ்செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகிலும் மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ என்றார்.? லூக்கா 18: 1—8.

இந்த உவமையில் மூவருடைய பேர் வருகிறது. அநீதியுள்ள ஒரு நியாயாதிபதி, அவனிடத்தில் வழக்கைக் கொண்டுபோன ஒரு விதவை, அந்த விதவைக்கு எதிராளியாயிருந்த ஒரு சத்துரு ஆக மூன்று பேரைப் பார்க்கிறோம். சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணவேண்டும் என்பதை விளக்கிக்காட்டும்படி இந்த உவமை சொல்லப்பட்டபடியால் இம்மூவரைப்பற்றியும் நமக்குத் திட்டமான அறிவு இருக்கவேண்டியது அவசியம். இக்காலத்திலே நாம் ஜெபத்திலே சோர்ந்துபோகக்கூடாது, இன்னோர் வருஷம் ஆரம்பித்திருக்கிறது; தேவனுடைய பிள்ளைகளின் ஜெபங்களுக்கு உத்திரவாகப் பெரிய மாறுதல்களைக் காணோம். அநேக ஆண்டவருடைய பிள்ளைகள் அதைரியப்பட்டுபோனதுபோல் தெரிகிறது. ஆதலால் சோர்ந்துபோகாதிருப்பதற்கென்று அருமை இரட்சகர் சொன்ன இந்த உவமையை நாம் சரியானபடி அறியவேண்டியது மகா அவசியமாயிருக்கிறது.

முதலாவது, இந்த உவமையில் சொல்லப்பட்டிருக்கிற விதவை யார் என்று பார்ப்போம். விதவையின் நிலைமை மகா பரிதாபம். மனுஷ உதவியும் ஆதரவும் அவளுக்குக் கிடைக்காது. ஒரு காலத்தில் ஒரு மனுஷன் அவளை அன்பாய் நேசித்து அருமையாய் ஆதரித்துவந்ததுண்டு. இப்போதோ அந்த மனுஷன் அவளைவிட்டு எடுபட்டுப்போனான். ஆதலால் அவள் பூமியிலே அநாதியாய் விடப்பட்டிருக்கிறாள். ஆதரவற்ற இக்காலத்தில் அவளுக்கு ஒரு எதிராளியும் எழும்பிவிட்டான். இவள் பட்சத்தில் அந்த எதிராளிக்கு விரோதமாய் நிற்கக்கூடிய ஒருவரும் இல்லை. நியாயம் இவள் பட்சத்தில்தான் இருக்கிறது. ஆனால் வல்லமை எதிராளி பட்சத்தில் இருக்கிறது. அவன் தன் பலத்தால் இவளுக்குச் சொந்தமானதை அபகரித்துக்கொண்டான். ஐயோ, ஏழை விதவை என்னசெய்வாள்! ஒரே வழி மாத்திரமே அவளுக்குத் தெரிகிறது. அவள் பட்டணத்திலே ஒரு நியாயாதிபதி இருக்கிறான். அவனிடத்தில் போய்த் தன் வழக்கைச் சொல்லுகிறாள். அவனோ அநியாயக்காரனாயும் இருக்கிறான். அதைக்கண்டவுடன் அவளுடைய உள்ளம் எவ்வளவாய் அங்கலாய்த்திருக்கவேண்டும்! ஆயினும் தன் வழக்கைத் தீர்க்கவும் நியாயம் கிடைக்கவும் வேறே வழியில்லாததால் அந்த நியாயாதிபதியை அவள் அடிக்கடி அலட்டினாள், எப்



பொழுதும் தொந்தரவு செய்தாள். தனக்கு நியாயஞ்செய்யப்படுமளவும் அவள் அமர்ந்திருப்பதுமில்லை, அந்த நியாயாதிபதியை அமர்ந்திருக்கவிடுவதுமில்லை.

இந்த விதவை யாரைக் குறிக்கிறாளென்று கர்த்தராகிய இயேசுதாமே விளக்கிக் காட்டுகிறார். 'தேவனை நோக்கி-இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்' தான் இந்த விதவையால் குறிக்கப்பட்டவர்கள் என்கிறார். (வா. 7) இப்படித் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் கூட்டம்தான் திருச்சபை. திருச்சபையின் நாயகனாகிய இயேசு சுவாமி பரலோகம் போய்விட்டபடியால், அது விதவையின் நிலைமையிலேயே இருக்கிறது. இப்பிரபஞ்சத்தின் துரைத்தனங்களிலும் அதிகாரங்களிலும் லோகாதிபதிகளிலும் அதற்குக் கைகொடுப்பார் யாருமில்லை. ஆதரவற்ற இக்காலத்தில் திருச்சபைக்கு எதிராளியான பெரிய சத்துராதியும் உண்டு. திருச்சபைக்குரிய சுதந்தரம் அந்தச் சத்துருவின் ஆதீனத்தில் போய்விட்டது. அதைத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு ஜெபத்தைத் தவிர வேறே வழியில்லை. ஆனால் நெடுங்காலம் ஜெபித்தும் பலன் பெறாததால், தேவனுடைய பிள்ளைகள் தளர்ந்துபோகிறார்கள். இந்த விதவையைப்போல் விடாமுயற்சியாய் ஜெபிக்காமற்போகிறார்கள். திருச்சபைக்கு நியாயம் கிடைப்பதற்கு ஜெபமே ஒரே முறையாயிருப்பதுபோல, விடாமுயற்சியே ஜெபத்துக்கு இருக்கவேண்டிய முக்கிய இலட்சணமாயும் இருக்கிறது. தேவனை 'எப்பொழுதும் தொந்தரவு' செய்து 'அடிக்கடி அலட்டி'னால் மாத்திரம் திருச்சபைக்குத் தீவிரமாய் நியாயஞ்செய்யப்படும்.

இரண்டாவது, இந்த விதவையின் எதிராளி யார் என்று பார்ப்போம். விதவையாகிய திருச்சபைக்கு 'சத்துருவும் பகைஞனுமாகிய' எதிராளி சாத்தானேயல்லாமல் வேறல்ல. இவன் இந்த விதவைக்கு மாத்திரமல்ல, அவளுடைய நாயகனுக்கும் முன்னமே எதிராளியாயிருந்தான். இயேசு சுவாமியாகிய திருச்சபையின் நாயகனிடத்தில் எதிராளியாகிய சாத்தான் பலமுறையும் போருக்கு வந்தான். வஞ்சகத்தால் ஜெயிக்க முடியாதென்று சாத்தான் கண்டு கடைசியாய் நேருக்கு நேரே கொடிய போருக்கு வந்தான். அந்தக் கொடிய போர் திருச்சபையின் நாயகனுக்கு மரணமாய் முடிந்தது. நரகத்தின் பிசாசுகளுக்கு எக்களிப்பு உண்டாயிற்று. ஆயினும் மூன்றாம் நாளில் இயேசு சுவாமி உயிரோடு எழும்பினபோது பிசாசின் தலை நசுக்கப்பட்டது. ஆனால் சாத்தான் பொய்யனானபடியால் தன் தோல்வியை ஒத்துக்கொள்ளுகிறதில்லை. எஜமானின் மேலுள்ள பகையை எல்லாம் அவருடைய மனையாட்டியாகிய திருச்சபையின் பேரில் காட்டுகிறான். அதற்கென்று இப்பிரபஞ்சத்தின் துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் லோகாதிபதிகளையும் தன் துணைக்குக் கூட்டிக்கொண்டான். தான் மறைந்துகொள்வான். இவைகளை

எழுப்பி விட்டுவிடுவான். அவனுக்கும் பெரிய சொந்தச் சேனை உண்டு. வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளுக்கு இவன் தலைவன், அவைகளைக்கொண்டும் இவன் திருச்சபையைத் துன்பப்படுத்துகிறான். இவ்விதமாய் இந்த எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல திருச்சபையை விழுங்கிப்போடலாம் என்று வகைதேடித் திரிகிறான்.

ஆனால் விதவையாகிய திருச்சபையோ இக்காலத்தில் தன் சத்துருவை மறந்துபோய்விட்டது. ஜெபம் இரண்டு பேருக்கு மாத்திரம்' அதாவது தேவனுக்கும் தனக்கும் மாத்திரம் உள்ள சம்பந்தம் என்று எண்ணுகிறது. ஜெபத்தில் சம்பந்தப்பட்ட மூன்றும் ஆளை அதிகமாய் நினைக்கவில்லை. திருச்சபையில் அநேகர் சாத்தானைக் கண்டதேயில்லை. அவன் தங்களுக்கு என்ன தீமை செய்கிறான் என்பது அவர்களுக்குத் தெரியமாட்டாது. ஆதலால் அவர்களுக்கும் சாத்தானுக்கும் யாதொரு வழக்குமில்லை. அவனுக்கு விரோதமாய் ஜெபிப்பதற்கு அவர்களுக்கு யாதொரு அவசியமும் இல்லை 'எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயஞ்செய்யவேண்டும்' என்று அவர்கள் விண்ணப்பம் பண்ணினதேயில்லை. காரணம் என்ன? அவர்கள் மனையாட்டியின் அவயவமல்ல, ஐயோ, சாத்தானுக்குச் சிநேகிதர். கிறிஸ்து சபையில் ஏராளமான பேர் இருக்கிறார்கள். சாத்தானுக்கு விரோதமாய் ஜெபிக்கப் பயந்த ஏராளமான பயங்காலிக் கிறிஸ்தவர்களும் உண்டு.

**மூன்றாவது, இந்த விதவையின் வழக்கு என்ன என்று பார்ப்போம்.** திருச்சபைக்கும் சாத்தானுக்கும் ஒரே வழக்குத்தான் உண்டு. அது உலகத்தின் சுதந்தரத்தைப்பற்றிய வழக்குத்தான். 'பூமியும் அதின் நிறைவும் உலகமும் அதிலுள்ள குடிகளும் காத்தருடையது.' அவைகளை ஆளும்படி தேவன் உலகத்தில் மனிதனை ஏற்படுத்திவைத்தார். மனிதனோ உலக ஆளுகையைச் சாத்தானுக்குக் கொடுத்துவிட்டான். ஆதலால் தேவன் உலகத்தையும் அதின் ஆளுகையையும் தம்மிடமாய்த் திருப்பிக்கொள்ளும்படிக்கு, தமது குமாரனை பூமிக்கு அனுப்பினார். வானத்திலும் பூமியிலும் சகலமும் பிதாவினால் அவருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது. வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் அவருக்குக் கொடுக்கப்பட்டது. சாத்தான் இதை ஒப்புக்கொள்ளுகிறதில்லை. ஆதலால் ஆரம்பத்திலேயே அவன் அவரை ஒரு உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய் உலகத்தின் சகல இராஜ்யங்களையும் காண்பித்து, 'இவைகள் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது, எனக்கு இஷ்டமானவனுக்கு இவைகளைக் கொடுக்கிறேன், நீர் என்னைப் பணிந்துகொண்டால் எல்லாம் உம்முடையதாகும்' என்றான். இயேசு நாயகனோ அவனைத் தமக்குப் பின்னாகப் போகச் சொல்லி அவன் தலையை நசுக்கிப்போட்டு பரலோகம் போனார்.



போகையில் தமது மனையாட்டியை அழைத்து, தமக்குச் சொந்தமான பூமியைச் சுதந்தரமாக்கிக் கொள்ளும்படி கட்டளை கொடுத்துப்போனார். என் எஜமானின் உலகம் எனக்குக் கொடுக்கப்படவேண்டும் என்பதே விதவையாகிய திருச்சபையின் வழக்கு. எதிராளியாகிய சாத்தானுக்கு உலகத்தின்பேரில் யாதொரு பாத்தியதையும் இல்லை. இந்த விதவைக்கோ பூரண பாத்தியதை உண்டு தன் நாயகனின் சுதந்தரத்துக்கு இவளுக்கே சர்வசுதந்தர பாத்தியதை உண்டு; அதற்காக இவள் வழக்காடுகிறாள்.

ஜெபத்தில் வழக்காடவேண்டிய பொருள் என்ன? என் தேவனே, நான் இயேசு எஜமானின் மனையாட்டியில் ஒரு மெம்பர். என் தேசம் என் எஜமானுக்குச் சொந்தமாகவேண்டும். சாத்தான் அதை விட்டுத் துரத்தப்படவேண்டும். என் வேண்டுதலுக்கு என் நாடும், என் மன்றாட்டுக்கு என் ஜனங்களும் எனக்குக் கட்டளையிடப்படுவதாக. என் ஊரையும் சபையையும் விட்டு சாத்தான் துரத்தப்படவேண்டும். என் பர்த்தாவின் நாமத்தில் நான் அதைச் சுதந்தரித்துக்கொள்ளவேண்டும். இன்னின்ன குடும்பம், ஆள்,......என் இயேசுவுக்கென்று ஆதாயம்பண்ணப்படவேண்டும். என் எதிராளிக்கு இவர்கள்மேல் யாதொரு பாத்தியதையுமில்லை. என் எஜமானுக்கோ சர்வ சுதந்தர பாத்தியதை உண்டு. என் தேவனே, எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயஞ்செய்யும் என்று சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணவேண்டும். எப்பொழுதும் தொந்தரவு செய்யவேண்டும், அடிக்கடி அலட்டவேண்டும். இவ்விதமாய் அலட்டாததினால்தான் சுதந்தரத்தை விட்டு சத்துரு அகற்றப்படவில்லை என்று இயேசு எஜமான் இங்கே போதிக்கிறார். வழக்காடாத விஷயத்தில் எதிராளி சுதந்தரத்தைத் தானாய் விட்டுவிடுவதுண்டோ? தேவனுடைய பிள்ளைகளோ சாத்தானுக்கு விரோதமாய் வழக்காடி ஜெபிக்கிறதில்லை. நியாயம்பாராட்டி ஜெபத்தில் வழக்காடுகிற ஆட்களையும் இடங்களையும் மாத்திரம் ஆண்டவருடைய சபை சாத்தானிடமிருந்து திருப்பிக்கொள்ளும். கட்டாயமாய் விடநேரிடுகிறவைகளை மாத்திரம் சாத்தான் விடுவானேயல்லாமல் வேறொன்றையும் அவன் விடுவதில்லை.

**நான்காவது, உவமையில் சொல்லப்படுகிற நியாயாதிபதி யார் என்று பார்ப்போம்.** அவன் அநீதியுள்ள நியாயாதிபதி என்று இயேசுவானவர் சொல்லுகிறார். அவனிடத்தில்தான் அந்த விதவை விண்ணப்பம்பண்ணுகிறாள். நாமோ நமது தேவனிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறோம். அவர் அநீதியுள்ளவரல்லவே! இதுதான் இந்த உவமையில் மகா ஆச்சரியமான காரியம்! நமது தேவனுக்கு நேர் எதிரிடையான ஒருவனை இங்கே நியாயாதிபதியாகக் காட்டியிருக்கிறது. எதிரிடையான குறிப்புகளினாலே நமது தேவனுடைய மகத்துவத்தை விளக்கிக் காட்டியிருக்கிறது. தேவனுக்கு பயப்படாதவன் அநியாயஞ்செய்ய பயப்படமாட்டானே! மனி

தனை மதியாதவன் ஏழை விதவையை மதிப்பதெப்படி? நமது தேவனோ நியாயத்துக்குச் செவிகொடுக்கிறார். இயேசுவும் அவர் மனையாட்டியும் சேர்ந்து, நியாயத்துக்காகக் கெஞ்சும்போது அவர் கேளாதிருப்பதெப்படி? இயேசு நாம மகிமைக்கென்று ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படும்படி ஜெபிக்கிற எந்தப் பேதையையும் மதிக்கிறார். எந்த அற்பனுடைய ஜெபத்தையும் அவர் அருமையாய்க் கேட்கிறார்.

ஆனால் அநீதியுள்ள நியாயாதிபதியிடத்தில்தான் அநேக நாள் ஜெபிக்கவேண்டியதாயிருந்தது. உத்தம ஜெபத்தைக் கேட்க ஆயத்தமாயிருக்கிற தேவனிடத்தில் வெகுநாள் விடாமுயற்சியாய் ஜெபிக்க அவசியமென்ன? இரவும் பகலும் நெடுநாள் கூப்பிட நிமித்தமென்ன? அநீதியுள்ள நியாயாதிபதியைப்போல் தொந்தரவு பொறுக்கமாட்டாமலும், அதிகத் தொந்தரவுக்கு இடமில்லாதிருக்கும்படிக்கும்தான் ஆண்டவர் கடைசியாய் உத்தரவு அருளுகிறாரோ? அல்ல, அல்ல. நமது தேவனிடத்தில் சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணுவதற்கு வேறே முகாந்தரம் உண்டென்று இயேசு சுவாமி சொல்லுகிறார். உத்தரவு வரத் தாமதமாவதற்கு வேறே முகாந்தரமிருக்கிறதாம். காரணமென்ன?

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கேட்கிற காரியங்களின் விஷயத்தில் தேவன் இரண்டு காரியங்கள் செய்யவேண்டுமாம். ஒன்று நீடிய பொறுமை, அடுத்தது சீக்கிரத்தில் நியாயஞ்செய்யுங் கடமை. ஒரு பட்சத்தில் நீடிய பொறுமை, அடுத்த பட்சத்தில் தீவிர கிரியை. சாத்தானாகிய எதிராளியின் விஷயத்தில் நீடிய பொறுமை, நியாயங் கிடைக்கவேண்டிய தமது பிள்ளைகளுக்காகத் தீவிர கிரியை. தேவனுடைய பிள்ளைகள் ஜெபிக்கத் துடங்கினவுடனே தேவன் உத்தரவு கொடுத்துவிடுகிறார். அதை நிறைவேற்ற அவருடைய தூதர்கள் தீவிரிக்கிறார்கள். சாத்தானோ அவர்களுக்கு எதிர்த்து நிற்கிறான். காலம் இன்னும் வரவில்லை என்று போராடுகிறான். என் சுதந்தரத்தை விடமாட்டேன் என்று மல்லுக்கு நிற்கிறான். ஆகவே, இரண்டு இடத்தில் போராட்டம் நடக்கிறது. கீழே பூமியில் தேவனுடைய பிள்ளைகள் ஜெபத்தில் போராடுகிறார்கள். மேலே வானமண்டலத்தில் பொல்லாத ஆவிகளின் சேனைகள் தேவ தூதரோடு போராடுகிறது. சாத்தானின் சேனைகள் தேவ உத்தரவைச் சிலகாலமட்டும் தடுக்கலாமேயல்லாமல், ஒருக்காலும் வராமல் நிறுத்திப்போடவே முடியாது. ஆனால் சிலகாலம் தாமதிப்பதற்குள் தேவனுடைய பிள்ளைகள் தளர்ச்சியடைந்துபோய்விடுவதால் காரியமெல்லாம் கெட்டுப்போகிறது. ஜெபிக்க ஐக்கியப்பட்டவர்கள் பிரிந்து குலைந்து குளிர்ந்துபோக இடங்கொடுத்துவிடுவதால் நியாயம் கிடைக்காமற்போகிறது. அவர்கள் மாத்திரம் பிரிக்கப்பட்டுப் போகாமலும் சோர்படைந்து போகாமலும் ஜெபத்தில் 'வேது நாள்' உறுதியாய்த் தரித்திருப்பார்களாகில் அவர்கள் வேண்டிக்கொண்டதற்கும் நினைத்ததற்கும் அதிகமாக வல்லமையான கிரியைகள் நடந்துவிடும்.



ஆதலால் திருச்சபையாகிய விதவையைச் சேர்ந்தவர்களே, நாம் 'சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணவேண்டும்.'

---

## 'மனுஷரைப் பிடிக்கிறவன்'

ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணுகிறதில் பவுல் அப்போஸ்தலனிலும் மிஞ்சினவர்கள் கிடையாது. கிறிஸ்துவுக்காக மனுஷரைப் பிடிக்க ஆசிக்கும் ஊழியர் அவருடைய மாதிரியிலிருந்து பல நற்குறிப்புகளைக் கற்றுக்கொள்ளலாம். சுவிசேஷ பிரபல்ய ஊழியத்தை விசேஷித்துச்செய்ய ஆரம்பித்திருக்கிற நமக்கு இது ஓர் ஏற்ற செய்தி. அவைகளில் சிலவற்றை இங்கே கவனிப்போமாக.

### 1. ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணுகிறவனுடைய சிந்தை.

'அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ! (1 கொரி. 9: 16).

வேண்டா வெறுப்புக்கல்ல, வழக்கமாகிப் போய்விட்டதினாலல்ல, பிரசங்கியாமலிருக்க முடியாததினாலேயே பிரசங்கித்தார். இவ்வித சிந்தை நமக்குண்டா?

### 2. தன்னையே ஒப்புக்கொடுத்துவிட ஆயத்தமாயிருந்தார்.

'நாங்கள் உங்கள்மேல் வாஞ்சையாயிருந்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல், ஜீவனையும் உங்களுக்குக்கொடுக்க மனதாயிருந்தோம். 1 தெச. 2: 8.

'மேலும் உங்கள் விசுவாசமாகிய பலியின்மேலும் ஊழியத்தின்மேலும் நான் வார்க்கப்பட்டுப்போனாலும், நான் மகிழ்ந்து உங்களனைவரோடுங்கூட சந்தோஷப்படுவேன்' பிலி 2: 17.

சுவிசேஷத்தைக் கொடுப்பது லேசு. நம்மைக் கொடுப்பதோ வருத்தம். கர்த்தருடைய வசனத்தை ஈவது எளிது; நமது ஜீவனையும் சுகத்தையும், சகவாசத்தையும் ஜனங்களை விசுவாசத்தில் ஊன்றக்கட்டுவதற்காக ஈந்துவிடுவதோ அரிது. தன் ஜீவனைக் கொடுத்துவிடுவதும், தன்னைப் பலியாக மற்றவர்கள் நிமித்தம் வார்த்துவிடுவதும் பவுலுக்குச் சந்தோஷமும் மகிழ்ச்சியுமாயிருந்தது. அல்லது, இப்படிச் செய்துவிட்டதினால் அவர்கள் அதற்குப் பதிலுபகாரம் செய்யவேண்டும் என்ற எண்ணமும் அவர் மனதில் உதிக்கவில்லை. அது தனக்குக் கிடைக்கும் ஓர் சலாக்கியம் என்றும், அவர்கள் தன்னோடுகூட சந்தோஷப்படவேண்டும் என்றுமே விரும்பினார். இவ்வித சிந்தை நம்மில் உண்டாகவேண்டுமே!

### 3. தன் பாத்தியதையை விட்டுவிட்டார்.

'கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு யாதொரு தடையும் உண்டாகாதபடிக்கு, நாங்கள் இந்த அதிகாரத்தைச் செலுத்தாமல் எல்லாப்பாடும்படுகிறோம்' 1 கொரி. 9: 12.

தன் நியாயம், தன் பாத்தியதை, தன் அதிகாரம் ஒன்றையும் அவர் பாராட்டவில்லை. இப்படிச் செய்வதினால் கிறிஸ்துவின் சுவிசேஷம் தடைபடும் என்று கண்டார். இந்தக் காரியத்தில் தவறிப்போகும் ஊழியர் எத்தனை அனந்தம்! சுயபாத்தியதை, சுயஅதிகாரம் முதலியவற்றை விட்டுவிடும்போதே கிறிஸ்துவின் சுவிசேஷம் நமது மூலமாய் மகிமைப்படும்; ஆத்துமாக்களும் ரட்சிக்கப்படுவார்கள்.

### 4. ஆத்துமாக்களுக்காகத் தன்னைத் தாழ்த்தினார்.

'நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படி என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன்' 1 கொரி. 9: 19.

ஆத்துமாக்களுக்கு மேலாக நின்று பிரசங்கிப்பதினாலல்ல, அவர்களுக்குக்கீழே இறங்கி, அவர்களை உயர்த்துவதினாலேயே நாம் பிரயோஜனமுள்ளவர்களாவோம். அதிகாரம் செலுத்தியல்ல, அடிமைபோல ஊழியம் செய்தே ஆத்துமாக்களை ரட்சிக்கக்கூடும். அநேகர் மற்றவர்களுக்குப் பிரயோஜனமான ஊழியஞ் செய்யக்கூடாமற்போவதற்குக் காரணம் இதுதான். தாழ்ந்துபோக அவர்களுக்கு மனமில்லை. தாங்கள் ஆதாயப்படுத்தவேண்டிய ஆத்துமாக்களின்பேரில் அதிகாரம் செலுத்தப் பார்க்கிறார்கள். பவுல் அப்போஸ்தலனைப்போல 'எல்லாருக்கும் அடிமை' யானால் மாத்திரம் அவரைப்போல எல்லாரையும் ஆதாயம்பண்ணலாம்.

### 5. சபையார்பேரில் அவருக்கிருந்த அன்பு.

'இயேசுகிறிஸ்துவின் உருக்கமான அன்பிலே உங்களெல்லார்மேலும் எவ்வளவோ வாஞ்சையாயிருக்கிறேன்' பிலி. 1: 8.

'நான் உங்களில் எவ்வளவு அதிகமாய் அன்புகூறுகிறேனோ, அவ்வளவு குறைவாய் உங்களால் அன்புகூறப்பட்டிருந்தாலும் மிகவும் சந்தோஷமாய் நான் உங்கள் ஆத்துமாக்களுக்காக செலவுபண்ணவும் செலவுபண்ணப்படவும் விரும்புகிறேன்' 2 கொரி. 12: 15.

அவருடைய சபையார் அவரைப் பகைத்தாலுங்கூட அவருடைய அன்பு மாறவில்லை. தம்மிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்காக மாத்திரமல்ல, தம்மைப் பகைக்கிறவர்களுக்காகவும் தம்மை ஒப்புக்கொடுக்க ஆயத்தமாயிருந்தார். அருள்நாதரும் இவ்விதமாகவே திருவுளம்பற்றினாரே. 'உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால் உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்களல்லவா?' (மத். 5: 46). தேவ ஊழியரே, இவ்வித அன்பு நம்மிடத்தில் காணப்படுகிறதா? அநேகரை நாம் ஆதாயம்பண்ணக்கூடாமற்போவது அவர்களை நமக்கு எதிராளிகள்போல எண்ணி நடத்துவதினாலல்லவா? ஒரு விஷயத்தில் தவறினவனை அப்பால் ஆதாயப்படுத்தும்படி நாம் எடுத்துக்கொள்ளும் பிரயாசம் உண்டா? இன்னொரு விஷயத்தில் அவனை எவ்வாறு சங்கடத்துக்குட்படுத்தி புத்திவரப்பண்ணலாம் என்றே நினைத்துவிடுகிறோமல்லவா? அன்பே ஆதாயப்படுத்தும் என்பதை நினைத்துக்கொள்ளுவோமாக.



### 6. சபையாருடைய ஆவிக்குரிய வளர்ச்சியின் பேரில் அவருக்குண்டாயிருந்த தாபந்தம்.

'என் சிறு பிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன்' கலா. 4: 19.

கிறிஸ்துவண்டை ஆத்துமாக்களை நடத்தினவுடனே எல்லாம் முடிந்துபோயிற்றென்று பவுல் எண்ணவில்லை. கிறிஸ்துவின் சாயல் அவர்களில் காணப்படும் வரைக்கும் அவருள்ளத்தில் திருப்தியில்லை. இதற்காக அல்லும் பகலும் ஜெபித்தார். இதற்காகவே தமது அருமையான நிருபங்களையும் எழுதினார். இது நம்முடைய தாபந்தந்தானா? நம்முடைய சபையிலிருக்கும் மெய் விசுவாசிகளை ஊன்றக்கட்டும்படி நாம் எடுத்துவரும் முயற்சி என்ன? ஆராய்ந்துபார்ப்போமாக.

### 7. ஒவ்வொருவர் பேரிலும் அவருக்கிருந்த வாஞ்சை.

'எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறோம்' கொலோ. 1: 28.

அவருடைய சகல பிரயாசத்தின் நோக்கமும் இதுதான். ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவின் சாயலை அணிந்து, அவருக்குள் பூரண புருஷனாகும்படி முயன்றார். அரை குறை போதனையும், அரை குறையான பலனும் ஒருபோதும் அவரைத் திருப்திசெய்யவில்லை. இது நமக்கு அவசியம் வேண்டிய ஓர் போதனை. தேவ ஊழியரில் பலர் குணப்படுதலைப்பற்றியே ஓயாமல் பிரசங்கிப்பார்கள். மெய்யான மறுபிறப்பு உண்டாவதே காரியம் என்று நினைத்து அதிலேயே நின்றுவிடுகிறார்கள். பூரண சுவிசேஷம் குணப்படுதல் மாத்திரமல்லவே. மறுபிறப்படைவது விசேஷந்தான், ஆனால் தேவாவியினால் பிறந்து தேவ புத்திரரானவர்கள் வளர்ந்து, புருஷராகி, கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாகவேண்டியதும் முக்கியமல்லவோ?

### 8. ஆத்துமாக்களுக்காக அவர் கொண்ட கவலை.

'நான்...உங்களுக்காக தேவவைராக்கியமான வைராக்கியங்கொண்டிருக்கிறேன் ...உங்கள் மனது கிறிஸ்துவைப்பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்'.

'ஒருவன் பலவீனனானால் நானும் பலவீனனாகிறதில்லையோ? ஒருவன் இடறினால் என் மனம் எரியாதிருக்குமோ? 2 கொரி. 11: 2, 3, 11.

கிறிஸ்து சபை சுத்தமாயிருக்கவேண்டுமென்று அவருக்கிருந்த கவலை எத்தனை! ஆத்திரம் எவ்வளவு! தமது சபையில் ஒருவன் பாவத்தில் விழுந்துவிட்டால் இவரும் பலட்சியமடைவாராம். ஒருவன் இடறினால் அவர் உள்ளம் கொதிக்குமாம். நமக்கு இந்தக் கவலையும், கொதிப்பும், இந்த ஆத்திரமும் உண்டா?

### 9. இதெல்லாவற்றிற்கும் இரகசியம்.

'கிறிஸ்துவின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது' 2 கொரி. 5: 14.

'நான் இருக்கிறது தேவ கிருபையினாலே இருக்கிறேன் அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்; ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவகிருபையே அப்படிச் செய்தது' 1 கொரி. 15: 10.

'எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்' கொலோ. 1: 29.

கிறிஸ்துவின் கல்வாரி அன்பே அப்போஸ்தலனுடைய சகல பிரயாசத்திற்கும் ஆதிகாரணம். 'அவர் நம்மில் முந்தி அன்புகூர்ந்தபடியினாலே நாமும் அன்புகூறுகிறோம்.' அவருடைய கல்வாரி அன்பு நெருக்கி ஏவினாலன்றி பிறர்பேரில் இவ்வித அன்பு வருமோ? சகோதரனே, நானும் நீயும் இந்த அன்பிலே மூழ்குவோமாக. ஆவியானவரால் நெருக்கி ஏவப்படக் கெஞ்சுவோமாக. அப்போதுதான் நாமும் பவுலின் மாதிரியைப் பின்பற்றக்கூடும்.

---

## கிறிஸ்துவில் காணப்படாத காரியங்கள்

'இதோ, நான் தெரிந்துகொண்ட என்னுடைய தாசன், என் ஆத்துமாவுக்குப் பிரியமாயிருக்கிற என்னுடைய நேசன்; என் ஆவியை அவர்மேல் அமரப்பண்ணுவேன். அவர் புறஜாதியாருக்கு நியாயத்தை அறிவிப்பார். வாக்குவாதம் செய்யவுமாட்டார், கூக்குரலிடவுமாட்டார்; அவருடைய சத்தத்தை ஒருவனும் வீதிகளில் கேட்பதுமில்லை. அவர் நியாயத்துக்கு ஜெயம் கிடைக்கப்பண்ணுகிறவரைக்கும், நெரிந்த நாணலை முறிக்காமலும், மங்கியெரிகிற திரியை அணைக்காமலும் இருப்பார். 'அவருடைய நாமத்தின்மேல் புறஜாதியார் நம்பிக்கையாயிருப்பார்கள்.' ஏசாயா 42: 1; மத்தேயு 12: 18—21.

கர்த்தராகிய கிறிஸ்துவின்பேரில் தேவன் தமது ஆவியை அமர்ந்திருக்கப்பண்ணினார்; அதினால் அவருடைய ஜீவியத்தில் ஐந்து காரியங்கள் காணப்படவேயில்லை. அவர் வாக்குவாதம்செய்யவில்லை, கூக்குரலிடவில்லை, அவருடைய சத்தம் வீதிகளில் கேட்கப்படவில்லை, அவர் நெரிந்த நாணலை முறிக்கவுமில்லை, மங்கியெரிகிற திரியை அணைக்கவுமில்லை என்று மேற்சொல்லிய வாக்கியங்களில் காட்டியிருக்கிறது. பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம்பண்ணப்பட்ட கர்த்தராகிய கிறிஸ்துவில் காணப்பட்ட அன்பு, ஞானம், வல்லமை முதலிய குணங்கள் மகா அதிசயத்தைக் கொடுக்கிறபடியே, அவரில் காணப்படாதிருந்த காரியங்களும் அதிசயத்தைக் கொடுக்கக்கூடியவைகளாயிருக்கிறது. இப்படியே ஆவியானவரால் நிறைந்திருக்கிற மனிதனிலும் இருக்கவேண்டும். அவனில் பலத்த விசுவாசமும், ஞானமும், வல்லமையும், அன்பும், தைரியமும், பரிசுத்த ஆவியானவரால் உண்டாகிறபடியே, அவனுடைய ஜன்ம சுபாவத்திற்குரிய இயற்கையான குணங்கள் அவனைவிட்டு எடுபடவும் வேண்டும். உலகத்தாரிடத்தில் காணப்படுகிற



ஜன்ம சுபாவ குணங்கள் ஆவியினால் நிறைந்த தேவனுடைய பிள்ளைகளில் காணப்படாதிருக்கவேண்டும். அப்பொழுது உலகத்தான் அவனைப் பார்க்கும்போது தனக்கில்லாத நற்குணங்களை அவனில் கண்டு ஆச்சரியப்படுகிறபடியே, தனக்குள்ள லௌகீக குணங்களை அவனில் காணாததைக்குறித்தும் ஆச்சரியப்படுவான். நற்குணங்களை அருளுவது ஆவியானவரின் கிரியையாயிருக்கிறபடியே லௌகீக சிந்தைகளை எடுத்துப்போடுவதும் ஆவியானவருடைய கிரியையாகவே இருக்கவேண்டும். பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருக்கிற தேவனுடைய பிள்ளைகளே, நமது எஜமானில் காணப்பட்ட நற்குணங்கள் நம்மில் சிறந்து விளங்கும்படி நாம் வாஞ்சிக்கிறபடியே, அவரில் காணப்படாதிருந்த குணங்கள் நம்மைவிட்டு எடுபடவும் நம்மில் காணப்படாதிருக்கவும் வாஞ்சிப்போமாக. அப்பொழுது நம்மில் விளங்குகிற நற்குணங்களாலும் நம்மில் காணப்படாதிருக்கிற பழைய சுபாவத்துக்குரிய குணங்களாலும் நமது எஜமானுக்கு நாம் சாட்சிகளாயிருப்போம். ஆதலால், ஆவியானவரைப் பெற்றிருக்கிறவர்களில் காணப்படாதிருக்கவேண்டிய குணங்களென்ன என்று பார்ப்போம்.

**1-வது, இயேசு சுவாமியின்பேரில் ஆவியானவர் அமர்ந்திருந்தபடியால் அவர் வாக்குவாதம் செய்யவில்லை.** அவரை, வாக்குவாதம் செய்யப்பண்ணும்படி சாத்தான் ஓயாமல் மனிதரை எழுப்பிவிட்டுக்கொண்டேயிருந்தான். சடங்காசாரங்களைக் குறித்தும், பாரம்பரியங்களைக்குறித்தும் பரிசேயர் முதலானவர்கள் இயேசுவோடு தர்க்கிக்கும்படி பலமுறையும் ஆரம்பித்ததுண்டு. இயேசு சுவாமியோ ஒருக்காலும் சடங்காசாரங்களையும் பாரம்பரியங்களையும் கவனித்து நடந்ததுமில்லை, அவைகளைப்பற்றி தர்க்கமாடும்படி எப்போதாகிலும் நேரத்தைச் செலவிட்டதுமில்லை. ஒன்றின்பின் ஒன்றாய் அவர் தமது இரட்சிப்பின் கிரியைகளை நிறைவேற்றிக்கொண்டேபோனார். வாக்குவாதத்துக்கு அவர் இடங்கொடுக்கவேயில்லை. ஆவியானவர் அவர்மேல் அமர்ந்திருந்ததினாலேயே அவர் வாக்குவாதம் செய்யாதவராய் ஜீவித்தார். அப்படியே, இக்காலத்திலும் குணப்படாதவர்களின் கூட்டத்தில்தான் வாக்குவாதங்களைப் பார்க்கலாம். அவர்கள்தான் தர்க்கங்களையும் வாக்குவாதங்களையும்பற்றி நோய்கொண்டவர்களாயிருக்கிறார்கள். அவர்களும், அற்பமான வீண் சடங்காசாரங்களைக் குறித்து வாக்குவாதம் செய்கிறார்களேயல்லாமல் உலக இரட்சிப்புக்கடுத்தவைகளைப் பேசுகிறதேயில்லை. மேலும், தாங்கள் எடுத்துப்பேசுகிற காரியம் ஜெயிக்கவேண்டுமென்றல்ல, ஒருவரையொருவர் ஜெயிக்கவேண்டுமென்றே தர்க்கிக்கிறார்கள். ஆதலால் இப்படிப்பட்ட தர்க்கங்கள் மாம்ச அகங்காரத்துக்கும் கேட்கிறவர்களைக் கவிழ்த்துப் போடுவதற்குமே ஏதுவாகிறது. தர்க்கங்களில் சிக்கிக்கொள்ளாதிருக்க வேண்டுமானால் ஆவியினால் நிறைந்திருக்கவேண்டும். ஆவியானவரால் நிறைந்திருக்கிறவன் மாத்திரம் தன் எஜமானைப்போல் ஆத்தும இரட்சிப்புக்கேதுவான ஆழமான காரியங்களைச் சிந்தித்து முயற்சித்துக்

கொண்டிருப்பான். ஆதலால் அற்பமான காரியங்களைப்பற்றி உண்டாகும் வாக்குவாதங்களால் அவன் இழுக்கப்படமாட்டான். ஆவியினால் நிறைந்திருக்கிற தேவனுடைய பிள்ளைகளே, புத்தியீனமான வாக்குவாதங்களுக்கு இடங்கொடாதேயுங்கள். கர்த்தருடைய ஊழியக்காரன் வாக்குவாதம் பண்ணுகிறவனாயிருக்கக்கூடாது. 2 தீமோ. 2: 24.

2-வது, இயேசு சுவாமியின்பேரில் ஆவியானவர் அமர்ந்திருந்தபடியால் அவர் கூக்குரலிடவில்லை. வியாபாரக்காரர் தெருக்களில் கூக்குரலிடுகிறதைப் பார்க்கலாம். தங்கள் பொருட்களை விளம்பரம் பண்ணும்படியாக அவர்கள் உரத்த சத்தம்போட்டு கூக்குரலிடுகிறார்கள். வேஷக்காரரும் வேடிக்கைக்காரரும் தம்புரு அடித்து விளம்பரம் செய்வதுண்டு. இயேசுசுவாமியோ வேடிக்கை காட்ட வரவில்லை. சாத்தான் அவரை ஆரம்பத்திலேயே வேஷங்காட்டும்படி ஏவினான். எருசலேமிலே தேவாலயத்தின் உப்பரிக்கையிலிருந்து தாழக் குதிக்கச்சொன்னான். இயேசுவோ, உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்று சொல்லிவிட்டார். அப்படியே நாசரேத்தூரார் அவரைப் பார்த்து, கப்பர்நகூமில் செய்தபடி இங்கேயும் அற்புதங்களைச் செய்யும் என்று கேட்டுக்கொண்டார்கள். நீங்கள் என்னை அங்கீகரிப்பதற்கு அற்புதங்கள் அவசியமில்லை என்று அவர் சொல்லிப்போட்டார். அவர் தம்மை விளம்பரம்பண்ணும்படிக்கு அற்புதம் செய்ததேயில்லை. சாத்தான் சொன்னபடி எருசலேமின் கோபுரத்திலிருந்து குதித்திருந்தால், தேவகுமாரனென்று இயேசு சுவாமி ரூபிக்கப்பட்டிருக்கவேமாட்டார். சுறுக்க முறையாய் அது தோன்றலாம். ஆனால் கெடுதியான முறை. இயேசுவோ தம்மை தேவனுடைய குமாரனென்று பலமாய் ரூபிப்பதற்கு சிலுவையின் மரணத்தையும் உயிர்த்தெழுதலின் வெற்றி சிறப்பையுமே தெரிந்துகொண்டார். ஆவியானவரைப் பெற்றிருக்கிற இயேசுவின் தாசனே, நீயும் கூக்குரலிடாதே. உன்னை நீயே விளம்பரம் பண்ணாதே. உன்னை உலகம் அறியாமல் அவமதிக்கலாம். உன் திறமைகள் தெரியப்படாதிருக்கலாம். உனக்குரிய கனம் கொடுக்கப்படாதிருக்கலாம். ஆயினும், உன் வாயைத் திறவாதே. என் திறமையைக் காட்டப்போகிறேன் என்று கூக்குரலிட்டுவிடாதே. சிலுவையின் முறையைத் தெரிந்துகொள், பொறுமையைக் கையாடு, அநியாயத்தைச் சகித்துக்கொள். அப்பொழுது நீயும் உயர்த்தப்படுகிற காலம் வரும். ஆவியானவரால் நிறைந்திருக்கிறவன் மாத்திரமே கூக்குரலிடாமல் சகிக்கக்கூடும். இயேசு சுவாமி காட்டிய சிலுவை முறையைக் கையாடக்கூடும்.

(இன்னும் வரும்).

Printed at The Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

March, 1916 Registered No. M. 316.

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." யோவான் 7: 38.

23 FEB

Vol. XVII மார்ச்சு௴ 1916

## நமது பத்திரிகை

ஜீவத்தண்ணீர் என்னும் இப்பத்திரிகையின் வயது 17. 1891-ம் வருஷம் நவம்பர்௴ 1௳யன்று திருநெல்வேலி சி. யம். காலேஜ் ஹாஸ்டலில் ஆரம்பமான கிறிஸ்தவ சகோதர ஐக்யக் கூட்டத்தைச் சேர்ந்த சகோதரரால் இப்பெயருடன் பிரசுரிக்கப்படுகிறது. இப்பத்திரிகைக்கு இடைக்கிடையே பல விக்கினங்கள் ஏற்பட்டதுண்டு. நாளது வரை நடைபெற உதவிபுரிந்த கிருபையுள்ள தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். மேலும் இப்பத்திரிகையைப் பெருமான கிரயத்துக்கு வாங்கி தங்கள் ஆசாமிகளெல்லாருக்கும் கொடுத்துவரும் திருநெல்வேலி சி. யம். எஸ். ஜில்லா ஆலோசனைச் சங்கத்தாருக்கும், இடையறாது பத்திரிகையை நேசித்து ஒழுங்காய்ச் சந்தா செலுத்திவரும் நண்பர்கள் பலருக்கும் நம் நன்றி உரித்தானதே. 1913-ம் வருஷ பணக்கஷ்டம் மேலிட்டு 500 ரூ போல் கடன் ஏற்பட்டு பத்திரிகை நின்றுபோகும்படியான நிலைமையிலிருக்கும்போது ஷை கூட்டத்தைச்சேர்ந்த சகோதரரில் ஒருவராகிய மகாகனம் சோர்லைக்கல் அத்தியக்ஷகர்கள் பாளையங்கோட்டைக்கு வந்திருக்கும் சமயத்தில் இவைகளைக் குறித்து ஆலோசித்து கடன் நீங்கத்தக்க முறைகளைக் கையாட ஏற்பாடுசெய்தார்கள். அவர்களுக்கும் நன்றிசொல்லுகிறோம். போன வருஷத்தின் கடைசியில் இப்பத்திரிகையின் பத்திராதிபரான கனம். எஸ். ஜி. மதுரம் ஐயரவர்கள் பாளையங்கோட்டையிலிருந்து மாற்றப்பட்டு வடதிருநெல்வேலி சி. யம். எஸ். சபைகளை மேல்பார்க்கும்படியாகக் கோயில்பட்டியில் ஸ்தாபனமாயிருக்கிறார்கள். அவர்கள் மாறுதல் நடக்கும் சமயமானதால் ஜனுவரி௴ பத்திரிகை வெளியாக சற்று பிந்திப்

20-3-16
16

போய்விட்டது. சந்தாதாரான நம் நண்பர் யாவரும் மன்னிக்கும்படி கேட்கிறேன். இனிமேல் தேவ ஒத்தாசையை முன்னிட்டு யாதொரு தாமதமுமின்றி ஒழுங்காய் நடத்திவரலாமென்று கர்த்தருக்குள் தீர்மானமாயிருக்கிறோம். சந்தாப்பாக்கி வைத்திருக்கிறவர்கள் தயவுசெய்து அடியிற்காட்டிய விலாசத்துக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்,

ஜெப ஸ்தோத்திர விஷயங்களும், தேவனுடைய பிள்ளைகள் தங்கள் ஜீவியத்தில் அனுபவத்தால் அறிந்த தேவ நடத்துதல், திவ்ய பராமரிப்பு முதலியவற்றைக் குறித்துக் கொடுக்கும் சாக்ஷிகளும் அடுத்த மாசமுதல் பிரசுரிக்க யோசிக்கிறோம். ஆகையால் மேற்கண்ட விஷயங்களைக் கவனித்து, இதை வாசிக்கும் தேவனுடைய பிள்ளைகள் யாவரும் ஒருவருக்காக ஒருவர் ஜெபித்து ஸ்தோத்திரித்து இவ்விதமாய் நமெல்லாருக்குள்ளும் 'பரிசுத்தவான்களின் ஐக்கியம்' பெருகவும், மற்றவர்களுக்கு எழுப்புதலும், உற்சாகமும் உண்டாகத்தக்க அனுபவ சாக்ஷியங்களை எழுதி ஒருவரையொருவர் எவியெழுப்பவும் மனதுள்ளவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு அனுப்பக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

Rev. R. V. Asirvadam,
*Manager, Water of Life, Palamcottah.*

## நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்.

யோவான் 8: 31.

கிறிஸ்தவன் எவனும் இயேசுநாதருடைய சீஷனாயிருக்கிறான். ஒரு காலத்தில் கனம் Sargent அத்தியக்ஷரவர்கள் இந்துக்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்பொழுது, அந்தப் பிரசங்கத்தைக் கேட்ட சைவ மார்க்கத்தாரொருவன் தன் உத்திராட்சத்தைக் கழற்றிப்போட்டுக் கண்காணியார் அவர்களுடைய பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்து 'இதுமுதல் நான் உங்களுடைய சீஷன்' என்று அறிக்கையிட்டான். அதாவது 'உங்களோடு சேர்ந்து கிறிஸ்தவனாவேன்' என்பது கருத்து. இருக்கட்டும், நாம் எந்த மனுஷனுக்கும் சீஷனாகவேண்டாம். பெரியோர் என்றாலும் அவர்களுடைய பாதத்தில் பணிந்துகொள்ளவும் வேண்டாம். ஆனாலும் ஞானஸ்நானம் பெருஞ்சமயத்தில் ஆண்டவருடைய பாதத்தில் விழுந்து, உத்திராட்சத்தை அல்ல நம்முடைய துர்ச்சுபாவத்தை எல்லாம் வெறுத்துவிட்டு 'கிறிஸ்துநாதரே! என்னை ஆட்கொண்ட பெருமானே! இதுமுதல் நான் உம்முடைய சீஷன்,' என்பதுபோல் அறிக்கையிடுகிறோம். ஆயினும் பாருங்கள்! நான் கிறிஸ்துவின் சீஷன் என்று வாயினால் சொல்வது



போதாது, சீஷனாகவும் நடக்கவேண்டும். ஆகையால் இந்த விஷயத்தில் நாம் தவறிப்போகாதபடிக்கு உத்தம சீஷனிடத்தில் விளங்கவேண்டிய நாலு விசேஷங்களை எடுத்துக் காட்டுகிறேன்.

**1. உத்தம சீஷன் சிலுவையை எடுத்துச் சுமந்துகொள்ளவேண்டும். 'தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப்பின் செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்'. லூக். 14: 27.**

சிலுவையானது மெத்தக் கனமும் பாரமுமான மரம். அதைச் சுமக்கிறது வெகு கஷ்டம். ஆகையால் சிலுவையை எடுத்துச் சுமந்துகொண்டு எனக்குப் பின்சென்று வாருங்கள் என்று நமதாண்டவர் சொல்லும்போது, என்னிமித்தம் வருத்தங்களையும், கஷ்டங்களையும், துன்பங்களையும் பொறுமையோடு சகித்து ஜீவியம் செய்யவேண்டுமென்பதே அர்த்தம். கிறிஸ்துநாதர் இந்த வார்த்தைகளைப் பேசும்பொழுது திரளான ஜனங்கள் அவரைப் பின்பற்றி வந்திருக்கிறவர்களாகக் காணப்பட்டார்கள். அவருடைய அற்புதக் கிரியைகளைப் பார்க்கவும் அவர் கொடுக்கும் போஜனத்தைப் புசிக்கவும் அவர் சொல்லும் அருள் வசனங்களைக் கேட்கவும் அவர்களுக்கு மிகுந்த ஆசை இருந்தது. சீஷர்கள்போல் காணப்பட்டார்கள். ஆனாலும் உள்ளபடி அவர்கள் சீஷர்களல்ல. ஆகையால் இயேசுவானவர் அவர்களிடமாய்த் திரும்பிப் பார்த்து இப்படி எச்சரித்துப் பேசுகிறார். எந்த சீஷனுக்கும் ஒரு சிலுவை, சுமை, துன்பம், கஷ்டம் இருக்கவேண்டுமாம். இல்லாவிட்டால் அவன் சீஷனல்ல. பிரியமானவர்களே! 'நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டும்'. 'கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாய் இருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்'. 2 தீமோ. 3: 12). கிறிஸ்தவர்களாயிருப்பதினால் துன்பங்களில்லையென்று நினையாதேயுங்கள். துன்பங்கள் இருக்கத்தான் செய்யும். என்றாலும் எல்லாவற்றையும் சகித்து மேற்கொண்டு வெற்றி சிறக்கும்படி தேவன் கிருபைசெய்வார். நாகர்கோவிலிலிருந்த தேவதாசன் ஐயர் பிராமணக் குடும்பத்தில் பிறந்தவர். அவர் குணப்பட்டுக் கிறிஸ்தவனாகும்பொழுது அஞ்ஞானிகள் அவரை அடித்தார்கள். கீழேதள்ளி மிதித்தார்கள் அவருடைய சமுசாரம் அவரோடே இராதபடிக்கு அவளை அடைத்துப்போட்டார்கள். பல இம்சைகளைப்பட்டாலும் அவர் பொறுமையோடே இருந்து தன் சிலுவையை எடுத்துச் சுமந்துகொண்டு உத்தம சீஷனாக விளங்கினார். எங்கும்போய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, 'இயேசுவை நம்புங்கள், இயேசுவை நம்புங்கள் என்று எல்லாரையும் ஏவிவந்தார்.

கனம் Ragland ஐயரவர்கள் பிரசங்கிக்கும்போது, பிராமணர்கள் எல்லாரும் ஏகோபித்து அவர்களைத் தூஷித்தார்கள், அடித்தார்கள், அவர்கள் மேல் கல்லெறிந்தார்கள். கலெக்டர் துரை அதைக் கேள்விப்பட்டு ஐயரவர்களிடம் சேவகனை அனுப்பிப் பிராது கொடுக்கச்சொன்னார். அவர்

களோ உத்தம சீஷனாய் விளங்கி, 'வேண்டாம், எல்லாவற்றிற்கும் மேலான அதிகாரியாகிய தேவனுக்கு அதைத் தெரியப்படுத்தியிருக்கிறேன், அவரே பார்த்துக்கொள்வார்' என்று அந்தத் துன்பத்தைச் சகித்தார்களாம்.

சகோதரனே, நீ சீஷனானால் உன் சிலுவை எங்கே? சிலுவையில்லாமல் கிறிஸ்தவனுடைய காரியம் தீராது. துன்பம் வந்தால் பொறுமையோடு சகிக்கவேண்டும். சிலுவை தோன்றினால், தைரியத்தோடு அதை எடுத்துக்கொள்ளவேண்டும். பாரமென்றாலும் நல்மனதோடு அதை சுமக்துவரவேண்டும், சிலுவை இல்லையென்றால், மோட்சமுமில்லை. கிறிஸ்துவோடு நீ பாடுபட்டால் மாத்திரம் அவரோடுகூட மகிமைப்படுவாய்.

2. உத்தம சீஷன் முடிவுபரியந்தம் நிலைத்திருக்கவேண்டும் [யோவான் 8: 31]. இந்த வசனம் முழுவதையும் வாசித்துப் பாருங்கள். இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி இப்படிப் பேசுகிறார். அவர் அருமையான வார்த்தைகளை அச்சமயத்தில் சொல்லியிருந்தார். அம்புபோல் பாய்ந்து அவ்வசனம் அநேகருடைய மனதில்பட்டது. 'அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்'. விசுவாசிக்கிறோம் என்று சொன்னார்கள். கிறிஸ்துவானவரோ அவர்களைப் பூரணமாய் நம்பவில்லை. பலர் பின்வாங்கிப்போவார்களென்று அவருக்குத் தெரியும். ஆகையால் கொஞ்சம் கண்டிப்போடு பேசுகிறார். 'நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் என் சீஷராயிருப்பீர்கள்' என்கிறார். இன்னொரு சமயத்தில், 'முடிவுபரியந்தம் நிலைத்திருக்கிறவனே இரட்சிக்கப்படுவான்' என்று அறிவித்தார். தேமா என்பவன் பவுல் அப்போஸ்தலனோடு வெகுகாலம் சேர்ந்தவனாய் தேவ ஊழியம் பார்த்துவந்தான். கிறிஸ்துமார்க்கத்தினிமித்தம் சிறைச்சாலையில் போட்டு துன்பப்பட்டானென்று அனுமானமாய்ச் சொல்லலாம். ஆனாலும் கடைசியில் உலகவாழ்வை விரும்பிப் பின்வாங்கிப்போனான்.

3. உத்தம சீஷன் அன்புள்ளவனாயிருக்கவேண்டும். [யோவான் 13: 35]. 'நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்'. யூத ஜனங்கள் தங்கள் வஸ்திரங்களின் ஓரங்களிலே தொங்கல்களை உண்டாக்கி, ஓரத்தின் தொங்கலிலே ஒரு இளநீல நாடாவைக் கட்டவேண்டுமாம். அந்த இளநீல நாடா எல்லாருக்கும் வெளியரங்கமான அடையாளம். அதைப்பார்த்தவுடனே யூதனென்று அறிந்துகொள்ளலாம் [எண்ணாகமம் 15: 38]. கிறிஸ்தவர்களாகிய நமக்கு ஏதாவது அடையாளம் கொடுக்கப்பட்டதா, உண்டு. நம்முடைய வஸ்திரத்தில் கட்டத்தக்க அடையாளம் அல்ல. நம்முடைய நடக்கையில் விளங்கவேண்டிய அடையாளமே, அன்பு அடையாளம். அன்பு இல்லாவிட்டால் கிறிஸ்தவனல்ல. சகோதர சிநேகம் கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்ட நித்திய அடையாளம். சகோதரரே, இந்த அடையாளம் நமக்கு உண்டா? நம்மைக் கிறிஸ்துவின் சீஷரென்று



சொல்லுகிறோம். அவசியமாய் விளங்கவேண்டிய இந்த விசேஷித்த லட்சணம் நம்மில் காணப்படுகிறதா? மனஸ்தாபங்களும் கட்சிகளும் இருந்தால் நம்முடைய அன்பு எங்கே? ஆறுமுகநேரியில் சனம் Knight ஐயரவர்கள் சபையாரை மட்டுமல்ல, புறமதஸ்தரையும் மிகுந்த அன்போடும் பட்சத்தோடும் நடத்திவந்தார்கள். அவர்கள் திடீரென்று இறந்துபோனபோது இந்துக்களும் மகம்மதியரும் சொன்னது என்னவென்றால் 'மற்றவர்களுடைய முடிவு எப்படியிருந்தபோதிலும் Knight ஐயர் மோட்சத்திற்குப் போனது நிச்சயம், அவர் அன்புள்ளவராயிருந்தாரே' என்று பேசிக்கொண்டார்கள். பார்த்தீர்களா! அவர்கள் அந்த அடையாளத்தை அறிந்துகொண்டார்கள்.

4. உத்தம சீஷன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் [யோவான் 15: 8]. 'நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுத்ததினால் என் பிதா மகிமைப்படுவார் எனக்கும் சீஷராயிருப்பீர்கள்'. ஞானஸ்நானம்பெற்ற கிறிஸ்தவன் கிறிஸ்துநாதருடைய தோட்டத்தில் நடப்பட்ட விருட்சம் என்று சொல்லலாம். கனிகளைக்கொடுக்க நாம் அங்கே வைக்கப்பட்டோம். சகல நற்குணங்களும் நல்ல கிரியைகளுமே நாம் கொடுக்கவேண்டிய கனிகள். மற்றவர்களோடு அன்பாய்ப் பேசுகிறது ஒரு கனி, தீமைக்குத் தீமை செய்யாமல் நன்மை செய்கிறது ஒரு கனி. வேத சத்தியங்களை ஆராய்ந்து தியானம்பண்ணுவது ஒரு கனி. ஜெபத்தில் தங்கித் தரித்து தேவனோடு சஞ்சரிக்கிறது ஒரு கனி. பாவிகள் நமக்கு நயங்காட்டினாலும் அவர்களோடு சம்மதியாதிருப்பது ஒரு கனி. பொய் வார்த்தைகளைப் பேசாமல் எப்பொழுதும் சத்தியத்தைமாத்திரம் பேசுவது ஒரு கனி. இப்படிப்பட்ட நல்ல கனிகளைக் கொடுக்கிறோமா?

REV. T. WALKER.

## 'நீ ஆதியில் கொண்டிருந்த அன்பு'

வெளிப்படுத்தின விசேஷம் 2: 4.

'உன்பேரில் எனக்குக் குறை உண்டு' என்று இயேசு எஜமான் எபேசு சபைக்குச் சொல்லி அனுப்பினார். அவர்கள்பேரில் அவர் மூன்று குறைகள் சொன்னார். 1-வது, நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய்; 2-வது, நீ ஆதியிலிருந்த நிலைமையிலிருந்து விழுந்தாய்; 3-வது, நீ ஆதியில் செய்த கிரியைகளைச் செய்யாமல் விட்டுப்போட்டாய் என்று சொன்னார்.

1-வது எபேசு சபையார் ஆதியில் கொண்டிருந்த அன்பு என்ன? அது பெந்தெகொஸ்தே அன்பாயிருந்தது. பரிசுத்த பவுல் அங்கே போனவுடனே பன்னிரண்டு பேர் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு,

பல பாஷைகளைப் பேசி, தீர்க்கதரிசனம் சொன்னார்கள். அப்போஸ்தலர் 19. 6, 7. அவர்களிலிருந்து அந்தச் சபை பெந்தெகொஸ்தே சபையாய் ஆரம்பித்தது. ஆவியானவரின் அக்கினி அவர்களுக்குள் பற்றி எரிந்தது. ஆனால் அவர்கள் இயேசு சுவாமியை ஊக்கமாய் நேசித்தார்கள். அவர் பேரில் அவர்களுக்குள்ளே அதிகமான அன்பு பொங்கிவிட்டது. ஆவியானவர் அந்த அன்பை அனல் மூட்டிவிட்டார். அந்த அன்பு தணிந்துபோகாதிருக்கும்படி ஆவியானவரால் நிறைந்தவர்களாகவேயிருங்கள் என்று ஆண்டவர் அவர்களுக்குப் புத்தி சொன்னார். அந்த ஆலோசனையின்படி அவர்கள் நடக்கவில்லை. ஆவியானவரின் நிறைவை அவர்கள் இழந்தார்கள். ஆதலால் அவர்களுடைய அன்பு தணிந்துபோய்விட்டது. அந்தக் குறையை அவர்கள் அறியாமல்போனபடியால் அதை அவர்கள் சரிப்படுத்தவில்லை. உன்பேரில் எனக்குக் குறை உண்டென்று இயேசு சுவாமி பரலோகத்திலிருந்து சொல்லி அனுப்புவதற்கு அவர்கள் இடம்பண்ணிக்கொண்டார்கள். மெய்க்கிறிஸ்தவனே, பெந்தெகொஸ்தே அன்புக்கு அடையாளத்தைச் சொல்லுகிறேன், அவ்வித அன்பு உன்னிடத்தில் உண்டா என்று உன்னைச் சோதித்துப்பார்.

பெந்தெகொஸ்தே அன்புக்கு அடையாளங்களாவன:—

(1) அது முற்றிலும் தன்னயமற்றது, மற்றவர்களால் ஏவப்படாதிருக்க எப்பொழுதும் தானாய் உண்டாகிற அன்பு.

(2) இயேசு சுவாமி அழைக்கும்போது லாப நஷ்டங்களைக் கணக்குப் பாராமல் அந்த அன்பு உடனே பின் செல்லும்.

(3) இயேசுவினிமித்தம் எல்லாம் கொள்ளையாடப்பட்டுப்போனாலும் அது சந்தோஷப்படும். பெரிய சுயவெறுப்பைக் கையாடச் சொல்லும், பாரமான சுமைகளை ஏற்றுக்கொள்ள ஏவும். ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசு பெறுமான மாய வித்தைப் புஸ்தகங்களை எபேசு சபை ஆதி அன்பினால் ஏவப்பட்டுச் சுட்டெரிக்கவில்லையா?

(4) இந்த அன்பு கட்டளை பிறக்கட்டும் என்று காத்திராது. எஜமானுடைய சித்தம் அற்பமாய்த் தெரிந்தவுடனே கீழ்ப்படிந்துவிடும்.

(5) எஜமானுக்கு எது அதிக இன்பத்தைக் கொடுக்கும் என்று இந்த அன்பு கவலையோடு கண்டுபிடித்து அதைச் செய்ய ஏவிவிடும்.

(6) கஷ்டமும் நஷ்டமும் நேரிட்டு, இவை எல்லாம் எனக்கு விரோதமாய் நேரிடுகிறதென்று எண்ண இடமுண்டாகும்போதுங்கூட இந்த அன்பு இயேசுவின்பேரில் சந்தேகங்கொள்ளாது.

(7) அருமையான ஒரே மகன் ஈசாக்கையும் மோரியா மலையில் ஒப்புக்கொடுத்துவிட்டு, என் இயேசு எனக்கு இருக்கிறாரே, அது போதும் என்று இந்த அன்பு சொல்லிவிடும்.



(8) எஜமானின் சமுகம் மறையும்போது மிகுந்த வேதனைப்பட்டபோதிலும் அவர் என்னோடிருக்கிறார் என்று விசுவாசத்தால் நம்பும்.

(9) அவரைச் சொந்தமாக அணைத்துக்கொள்ளவும் அவரால் சொந்தமாக ஆளப்படவும் வைராக்கிய வாஞ்சைகொள்ளும்.

(10) அவர் சமுகத்தில் அதிக நேரம் அமர்ந்திருந்து, ஆசைதீரப் பார்த்துக்கொண்டிருக்க விரும்புகிற அன்பு.

(11) ஆளில்லாத இடத்தில் இருதயம் பொங்கப் போற்றிப் புகழும் அன்பு.

(12) இந்த அன்பு வார்த்தையினால் விஸ்தரிக்கக்கூடாத அன்பு.

சிநேகிதரே, நமது அருமை எஜமான் இவ்வித அன்புக்குப் பாத்தியப்பட்டவர் என்பதை அறியக்கடவோம். இவ்வித அன்புதான் அவரைத் திர்ப்திசெய்யும். இவ்வித அன்பே ஆவியானவரால் நிரப்பப்பட்டிருக்கிறவனுடைய உள்ளத்திலிருந்து இயற்கையாய்ப் பொங்கி எழும்பும். எபேசு சபையார் ஆரம்பத்தில் இப்படியே நேசித்தார்கள். இதைக்கொண்டே இயேசுசுவாமி அவர்களுடைய பிற்கால ஜீவியத்தை நிறுத்துப்பார்க்கிறார். கிறிஸ்தவனே, நீ எக்காலத்திலாகிலும் இயேசு சுவாமியை இவ்விதமாய் நேசித்ததுண்டா? இப்போது இவ்வித அன்போடு அவரை நேசிக்கிறாயா? இல்லாவிட்டால், உன்பேரில் அவர் குறைசொல்லுவது நியாயந்தானே! அவருடைய கடிந்துகொள்ளுதலை கவனிக்கமாட்டாயா?

2-வது, எபேசு சபையார் ஆதியில் இருந்த நிலைமை என்ன? எபேசியர் நிருபத்தைப் பார்த்தால் இது தெரியவரும். அதிகமான அன்பைக் காட்டின அவர்களை தேவன் அதி உன்னத நிலைமையில் வைத்திருந்தார்.

(1) கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் ஆசீர்வதிக்கப்பட்ட நிலைமையிலே அவர்கள் இருந்தார்கள் 1: 3. பாவ மன்னிப்பாகிய மீட்புமுதல் தேவ மகிமையடைதலாகிய முடிவுவரை சகல ஆசீர்வாதங்களையும் தேவன் அவர்களுக்கு அருளியிருந்தார். பெந்தெகொஸ்தே அன்பினால் கிறிஸ்து இயேசுவை நாம் நேசிக்கும் காலமெல்லாம், கிறிஸ்துவுக்குள்ளான சகல இரட்சிப்பின் ஆசீர்வாதங்களை நாமும் அனுபவிக்கலாம்.

(2) கிறிஸ்துவுக்குள் அவர்கள் தேவனுடைய சுதந்தரமாயிருக்கும்படி தெரிந்துகொள்ளப்பட்டிருந்தார்கள் (1: 12). தேவனுடைய சுதந்தரமாகிய அவர்களிடத்தில் தேவனுக்கு மகிமையின் ஐசுவரியம் இருக்கிறதாக தேவனே சொல்லியிருந்தார் (1: 18). தமது சுதந்தரமாகிய அவர்களைப் பாதுகாக்கவும் பரிசுத்தமாக்கவும் தேவன் தமது பலத்த சத்துவத்தின் வல்லமையையும் உபயோகித்து வந்தார் (1: 19). கிறிஸ்து இயேசுவை ஊக்கமான அன்போடு நேசிக்குங் காலமெல்லாம் அவர்கள் இந்த உன்னத நிலைமையைக் காப்பாற்றிவந்தார்கள்.

[3] கிறிஸ்து இயேசுவுக்குள் அவர்களை தேவன் அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடுகூட உட்காரவைத்திருந்தார் [2: 7]. உன்னத அன்பால் அவர்கள் இயேசுவை நேசித்தார்கள். உன்னத பதவிக்கு தேவன் அவர்களை உயர்த்தியிருந்தார். பரலோக தேவனின் சிம்மாசனத்தில் இப்போதே வீற்றிருக்கிறவர்களாக அவர்கள் எண்ணப்பட்டார்கள். கிறிஸ்துவின் அன்புக்குள்தான் இந்த உன்னத நிலைமை அவர்களுக்குக் கிடைத்திருந்தது.

[4] இயேசுவைப்பற்றும் விசுவாசத்தால் இயேசுவுக்குள் அவர்களுக்குத் தைரியமும், திடநம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சலாக்கியமும் உண்டாயிருந்தது [3: 12]. மனுஷருக்குள் விசேஷித்த அன்பினால் இயேசுவை நேசித்த அவர்கள், தேவனிடத்தில் கிட்டிச்சேர்ந்து, இயேசுவில் விளங்கிய தேவ அன்பின் அகலம், நீளம், ஆழம், உயரம் இன்னதென்று உணர்ந்துகொள்ளக்கூடிய சிலாக்கியம் அவர்களுக்கு அளிக்கப்பட்டது. இயேசுவின் மேலுள்ள அவர்களுடைய அன்பு தணிந்தவுடனே தேவனிடத்தில் சேருவதற்கு வேண்டிய தைரியமும் திடநம்பிக்கையும் அற்றுப்போகுமல்லவா? இயேசுவுக்குள்ளிருக்கையில் இந்தச் சிலாக்கியத்தை அனுபவிக்கலாமேயல்லாமல் மற்றப்படியல்ல.

[5] அவர்கள் இயேசுகிறிஸ்துவின் சரீரமான சபையாகவும் அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரிமையை உடைய ஞான மணவாட்டியாகவும் அறிக்கைசெய்யப்பட்டார்கள் [5: 30]. ஆதலால் அவர்கள் அன்பினால் அவருக்கு ஊழியஞ்செய்துவருங் காலமெல்லாம், அவர் அவர்களைப் போஷித்துக் காப்பாற்றி, சுத்திகரித்துப் பரிசுத்தமாக்கி, கறை திரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாகத் தமக்குமுன் நிறுத்திக்கொள்ளுவதற்கு அவர்களை ஆயத்தப்படுத்திவந்தார். அவர்கள் ஆதியில் கொண்ட அன்பை விட்டபோதே, இந்த மகிமையின் நிலைமைக்குத் தங்களை அபாத்திரராக்கிக் கொண்டார்கள்!

ஐயோ, அவர்கள் ஆதியில் கொண்டிருந்த அன்பைவிட்டதால் ஆண்டவருக்கும் அவர்களுக்கும் உண்டான நஷ்டத்தை யார்தான் மதிப்பிடக்கூடும்? அவர்களுக்கு உண்டான நஷ்டத்தைப் பார். இரட்சிப்பின் உன்னத ஆசீர்வாதங்களை இழந்தார்கள்; தேவனுடைய சுதந்தர பாத்தியதையை இழந்தார்கள்; உன்னத சிம்மாசன பதவியை இழந்தார்கள்; தேவனிடத்தில் திடநம்பிக்கையோடு சேரும் சிலாக்கியத்தை இழந்தார்கள்; இயேசு சுவாமியுடைய ஞான மணவாட்டியின் பங்கை அவமதித்தார்கள். 'நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினை' என்று இயேசு சுவாமி பரலோகத்திலிருந்து முகாந்தரமில்லாமல் சொல்லவில்லை என்று இதினால் பார்க்கிறோம். இயேசு சுவாமியின்மேல் வைத்த ஆதி அன்பை இழந்துவிட்ட சகோதரனே, நீயும் இவைகளை நினைத்துப்பார்.



பின்பு, அருமை எஜமானுக்கு நேரிட்ட நஷ்டத்தைப்பார். எபேசு சபையார் மற்றவர்களைவிட அதிக அன்பைக் காட்டினபடியால், இந்த மேலான நிலைமையின் பாக்கியங்களை யெல்லாம் அவர் அவர்களுக்கு வெளிப்படுத்தி அருளிச்செய்தார். இவைகளுக்கெல்லாம் அவர்கள் இயேசுவுக்குச் சாட்சிகளாயிருந்தார்கள். இவர்களைப் பார்த்து மற்ற சபைகளும் இந்த மேலான பதவியை நாடும்படி அப்படிச்செய்தார். இவர்கள் இந்த உன்னத நிலைமையிலிருந்து விழுந்துபோனபடியால், உச்சமான அன்பினாலே இயேசு சுவாமியை மகிழ்ப்பண்ணுகிறவர்களுமில்லை, இந்த உன்னத நிலைமைக்குச் சாட்சிகளுமில்லை. ஆ, இயேசு சுவாமியின் அங்கலாய்ப்பை யார் அளவிடலாம்! விசுவாசிகளே, நம்மையல்லாமல் யார் நம்முடைய இயேசு சுவாமியை மகிழ்ப்பண்ணக்கூடும்? நம்மையல்லாமல் யார் அவருக்குச் சாட்சிகளாகக்கூடும்? ஆதியில் கொண்ட அன்பை இழந்து, ஆதி நிலைமையிலிருந்து விழுந்துபோன விசுவாசிகளே, உங்கள் மூலமாய் உங்கள் எஜமானுக்கு உண்டாகிற நஷ்டத்தையும் நினைத்துப்பாருங்கள்!

**3-வது, எபேசு சபையார் ஆதியில் செய்த கிரியைகள் என்ன?** ஆதியில் அவர்கள் செய்துவரும்படி கொடுக்கப்பட்ட கிரியைகள் மூன்று உண்டு.

[1] சுவிசேஷ பிரபல்லியம்: பரிசுத்த பவுல் மூன்று வருஷகாலமாய் அவர்களோடிருக்கையில் இவர்கள் அவரோடு சேர்ந்து விடாமுயற்சியாய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். அதினால் 'ஆசியாவில் குடியிருந்த யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள்' அப். 19: 10. இப்போதோ சுவிசேஷ ஊழியமும் அதற்கென்று எடுத்த சுயவெறுப்போடுகூடிய கஷ்டமும் நின்றுபோயிற்று, அன்பைக் கைவிட்டு, நிலைமையை இழக்கவே, உத்தம ஊழியமும் போய்விட்டது. மாய்மாலமும் வீணும் வியர்த்தமுமான ஊழியம் இப்போதும் உண்டு. சுவிசேஷ ஊழியமோ இல்லை.

[2] அக்காலத்துக்கும் வருங்காலத்துக்கும், பூமியின் மனிதருக்கும் உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும், தேவனுடைய கிருபையின் மகாமேன்மையான ஐசுவரியத்தையும் தேவனுடைய அநந்த ஞானத்தையும் இவர்கள் வெளிப்படுத்தவேண்டும் [எபே. 2: 6; 3: 10]. தங்களுக்கு தேவன் கொடுத்திருந்த உன்னத நிலைமை எப்படி மற்றவர்களுக்கும் கிடைக்கக்கூடுமென்பதைப்பற்றி அவர்கள் திட்டமாய் சாட்சிகூறிவரவேண்டும். அந்த நிலைமையிலிருந்து விழுந்துபோகவே, அதைப்பற்றிச் சாட்சி சொல்லுகிற ஊழியமும் அவர்களை விட்டு எடுபட்டுப்போகுமே!

[3] கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்பட்டு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொண்டு, பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நின்று போராடும் ஊழியம் [எபே. 6:

10-20]. அவர்கள் இந்தப் போராட்டத்தில் நிலைநின்று, பிசாசின் தந்திரங்களை ஜெயித்துக்கொண்டே போயிருப்பார்களாகில், தங்களுடைய உன்னத நிலைமையிலிருந்து விழுந்துபோயிருக்கமாட்டார்கள்.

**4-வது, எபேசு சபைக்கு இயேசு சுவாமி பரலோகத்திலிருந்து சொல்லி அனுப்பிய மூன்று கட்டளைகள்:**

[1] 'நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாய் என்பதை நினை'. சிந்தனை செய்யாமற்போவதினாலேயே மனிதர் உணர்வற்றுப்போகிறார்கள். காடுகளில் போய் தனித்தியானம் செய்யப் பழகினவனை பசாசு லேசாய் அசைத்துப்போட முடியாது. சிநேகிதரே, அமரிக்கையாயிருந்து சிந்தனை செய்யுங்கள். விட்டுப்போட்ட ஆதி அன்பைக் குறித்தும், இழந்துவிட்ட நிலைமையைக் குறித்தும் சிந்தனை செய்யுங்கள். சிந்தனை செய்யும் நேரங்களை ஜீவியத்தில் அதிகப்படுத்துங்கள்.

[2] மனந்திரும்பு. திரும்பிப்போய் உன் அருமை எஜமானின் முகத்தை நோக்கிப்பார். சகல பாவங்களையும் மனப்பூர்வமாய் மன்னிப்பார். சகலத்தையும் நீ அறிக்கையிட்டு விட்டுவிடு. அப்போது பழைய நிலைமையைத் திரும்பக்கொடுப்பார். பழைய அன்போடு அவரை நேசிக்கத்துவக்கு

[3] ஆதியில் செய்த கிரியைகளைச் செய். பின்வாங்கிப்போன அநுபவத்தினால் புத்தியும் பிரயோஜனமும் அவடங்கவனாய் நடந்துகொள். உனக்குரிய மூன்று கடமைகளையும் உத்தமமாய் நிறைவேற்று. இவ்விதமாய் நடந்து, இயேசுவை நேசி, நிலைமையைக் காத்துக்கொள், ஊழியத்தை நிறைவேற்று. கர்த்தர் அதற்கென்று தமது கிருபையை அளவில்லாமல் அருளிச்செய்வாராக!

---

## ஒரு தகப்பனின் ஜெபம்

மிக்கேல் என்ற பேருள்ள ஒரு கப்பல் தலைவன் இருந்தான். இவன் நல்ல தேவ பக்தன். இவனுடைய மனைவி முதல் பிள்ளைப் பெறுவதற்குச் சிறிதுகாலத்துக்குமுன் அவன் அவளை விட்டுப்போட்டு கப்பலில் பிரயாணம் போக நேரிட்டது. அவன் நடுச்சமுத்திரத்தில் பிரயாணம் செய்கையில் ஒருநாள் பயபக்தியான சிந்தை உண்டாயிற்று. அவன் அதிக நேரம் தெய்வ தியானம் செய்தபின்பு தன் மனைவிக்காகவும் பிறக்கப்போகிற பிள்ளைக்காகவும் ஒரு ஜெபத்தை எழுதி அதைத் தன்னுடைய பெட்டிக்குள் வைத்தான். அவன் அந்தப் பிரயாணத்திலிருந்து திரும்பி வரவில்லை. கடலிலேயே மரித்து அடக்கம்பண்ணப்பட்டான். அவனுடைய பெட்[illegible] சாமான்களும் அவனுடைய மனைவியிடம் கொடுக்கப்பட்டது. [illegible] புஸ்தகங்களும் கடிதங்களுமடங்கிய இந்தப் பெட்டியை அவள் திறந்து பார்க்க



வேயில்லை. தன் மகனுக்கு அவைகள் பிற்காலத்தில் பிரயோசனப்படலாம் என்று சொல்லி அவைகளைப் பத்திரமாய் வைத்திருந்தாள். இந்த மகன் பதினாறு வயதானபோது போஸ்டன் பட்டணத்துக்குப் போய், பட்டாளத்தில் சேர்ந்துகொண்டான். அங்கே அவன் மகா கொடிய துன்மார்க்கனாய் ஜீவித்தான். அவனுக்கு ஐம்பத்து நான்கு வயதானபோதுங்கூட அவன் துன்மார்க்கமாய் ஜீவித்துக்கொண்டிருந்தான். அப்படி இருக்கையில் ஒருநாள் அவனுடைய தகப்பனுடைய பெட்டியைத் திறந்து அதற்குள் இருக்கிறவைகளையெல்லாம் பார்க்க நேரிட்டது அந்தப் பெட்டியின் அடியிலே சிவப்பு நாடாவால் கட்டப்பட்டிருந்த ஒரு தாளை அவன் கண்டான். அதின் மேலே: மிச்சேல் என்பவன் தன் மனைவிக்காகவும் பிள்ளைக்காகவும் செய்த ஜெபம் என்று எழுதியிருந்தது. அதைத் திறந்து வாசித்தான். தன் மனைவியும் பிறக்கப்போகிற பிள்ளையும் கிறிஸ்துவினுடையவர்களாக ஜீவிக்கவேண்டுமென்று அவன் மிகுந்த வாஞ்சையோடு ஜெபித்திருந்தான். ஐம்பத்து நான்கு வருஷங்களுக்குப் பின்பு அவனுடைய மகன் அந்த ஜெபத்தை வாசித்தான். இந்தச் சபிக்கப்பட்ட பெட்டியை இனி ஒருக்காலும் திறக்கமாட்டேன் என்று சொல்லி, அந்தத் தாளையும் உள்ளே போட்டுப் பூட்டிப்போட்டான். அதைத் திரும்பத் திறக்க அவசரமில்லை. அந்த ஜெபம் அவனுடைய இருதயத்துக்குள் புகுந்துகொண்டது. அந்த இருதயத்தைப் பெட்டிக்குள் பூட்டிப்போட அவனால் கூடுமா? அவன் மனமெல்லாம் குழம்பிப்போயிவிட்டது, கலங்கித் தியங்கினவனாய் அவன் அலைந்து திரிந்தான். காரணமென்ன என்று அவனோடு சேர்ந்த அக்கிரம ஸ்திரீ கேட்டாள். தன் தகப்பனுடைய ஜெபத்தைப்பற்றி அவளுக்குச் சொன்னான். அவளும் அவனுடைய கெட்ட தோழரும் கேலி பண்ணிப் பார்த்தார்கள். அவனுடைய இருதயத்துக்குள் பாய்ந்த அம்பைப் பிடுங்கிப்போட அவர்களால் கூடவில்லை. அவன் மெய்யாய் மனந்திரும்பி உண்மையாய்க் குணப்பட்டு உத்தம கிறிஸ்தவனானான். அவனோடு சம்பந்தப்பட்ட கெட்ட ஸ்திரியும் தோழரும் குணப்பட்டார்கள். அந்த ஸ்திரீயைச் சபை முறைப்படி அவன் விவாகஞ் செய்துகொண்டான். அதன் பின்பு அவன் அதிக தேவ பக்தியாய் ஜீவித்து; தன் தகப்பனின் தேவனைச் சேவித்துவந்தான். ஐம்பத்துநான்கு வருஷங்களுக்குமுன் செய்த ஜெபத்தைக் கர்த்தர் மறந்துபோகவில்லை. அதின் மூலமாய்ப் பெரிய ஆசீர்வாதம் உண்டாகும்படி அவர் கிருபை செய்தார். பெற்றோரே, உங்கள் பிள்ளைகளுடைய குணப்படுதலுக்காக விடாமுயற்சியாய் ஜெபியுங்கள். உங்களுடைய ஜெபங்களில் ஒன்றாகிலும் வீணாய்ப்போகும்படி கர்த்தர் இடங்கொடுக்கமாட்டார். ஐம்பத்துநான்கு வருஷங்களுக்குப் பின்புதான் கேட்பார் என்றெண்ணவேண்டாம். பூரண வயதுள்ள பரிசுத்தவானாய் மரித்த ஹட்சன் டேயிலர் பதினைந்து வயதாயிருக்கையில் அவருடைய தாயார் எண்பது மைலுக்கப்பால் அவருடைய குணப்படுதலுக்காக ஜெபித்துக்

கொண்டிருந்த நேரத்திலேயே தேவன் அவரைக் குணப்படுத்தினரே! நாம் ஆத்திரத்தோடு உண்மையாய் ஜெபிப்போமாக! எப்படியாவது நமது ஜெபம் கேட்கப்படும் என்ற நிச்சயத்தோடு ஜெபிப்போமாக! கர்த்தர் அப்போது தமக்குச் சித்தமான நேரத்தில் உத்தரவு அருளிச்செய்வார். 'இந்தப் பிள்ளைக்காக விண்ணப்பம் பண்ணினேன்; நான் கர்த்தரிடத்தில் கேட்ட என் விண்ணப்பத்தின்படி எனக்குக் கட்டளையிட்டார்' என்று நாமும் சொல்லக்கூடியவர்களாயிருப்போம். பிள்ளைகளுக்காக ஜெபிக்காத பெற்றோரைப் பார்த்து, 'நீங்கள் விண்ணப்பம்பண்ணாமலிருக்கிறதினாலே பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்' என்று ஆண்டவர் சொல்லுகிறார்.

## 'மனுஷகுமாரன் மகிமைப்படுகிறார்'

யோவான். 13: 31.

பூமியில் பிறந்த எந்த மனிதனாலும் இயேசு சுவாமி மகிமைப்பட வேண்டும். எந்த மனிதனும் மெய்க்கிறிஸ்தவனாகி இயேசுவை மகிமைப் படுத்தலாம். அப்படிச்செய்யாதவனுக்கு வரும் ஆக்கினையே இயேசுவை மகிமைப்படுத்தும். பெல்ஷாத்சார் இராஜாவைப் பாருங்கள் (தானி. 5-ம் அதி). தானியேல் அவன்பேரில் நான்கு குற்றங்களைச் சாட்டினான். உமது இருதயத்தை நீர் தாழ்த்தவில்லை, பரலோகத்தின் ஆண்டவருக்கு முன்பாக உம்மை உயர்த்தினீர், தேவனுடைய ஆலயத்தின் பாத்திரங்களில் திராட்ச ரசம் குடித்தீர், தமது கையில் உமது சுவாசத்தை வைத்திருக்கிறவரும் உமது வழிகளுக்கெல்லாம் அதிகாரியுமாகிய தேவனை நீர் மகிமைப்படுத்த வில்லை என்கிறான். எந்தமனிதனுடைய ஜீவனும் சுவாசமும் தேவனுடைய கரத்தில்தான் இருக்கிறது. ஆகையால் எந்தமனிதனும் தேவனை மகிமைப் படுத்தவேண்டும். தாழ்மையில்லாததினாலே மனிதர் தேவனை மகிமைப் படுத்துகிறதில்லை. தங்கள் நிலைமையைப்பற்றிய சரியான அறிவில்லை. ஆதலால் அவர்களுக்குள் தாழ்மையில்லை. ஆனால் தேவனை மகிமைப்படுத் தாதவன் தன்னை மகிமைப்படுத்துகிறான். தன்னை மகிமைப்படுத்துகிற வனையோ தேவன் தண்டியாமல் விடுகிறதில்லை. ஆதலால் மனிதரே, தேவனை மகிமைப் படுத்துங்கள்.

என்னென்ன காரியங்கள் தமக்கு மகிமை உண்டாக்குகிறதென்று இயேசு சுவாமி யோவான் சுவிசேஷத்தில் திட்டமாய்ச் சொல்லியிருக்கிறார். அந்த வழியாய்த்தான் அவருக்கு மகிமை உண்டாகக்கூடும். அம்முறை யாய் நம்மால் அவருக்கு மகிமை உண்டாகிறதா என்று சோதித்துப் பார்க்கக் கடவோம். அவ்விதமாய் உண்டாகவில்லை என்றால் வேறுவிதமாய் உண்டாகவில்லை என்று அறியக்கடவோம். இவ்விஷயத்தில் அநேகர் தங்களை எளிதாய் வஞ்சித்துக்கொள்ளுகிறார்கள். தங்கள் மன இஷ்டப்படி



யாதாமொரு வேலையைச் செய்துகொண்டு, நானும் ஆண்டவரை மகிமைப் படுத்துகிறேன் என்று வீணாய் எண்ணிக்கொள்ளுகிறார்கள். சிநேகிதனே, உன் வேலையைக் குறித்து இயேசு சுவாமி சாட்சி சொல்லட்டும். தம்மை மகிமைப்படுத்துவதாக அவர் சொல்லுகிறவைகளை யெல்லாம் நீ செய்து வருகிறாயா என்று உன்னைச் சோதித்துப்பார். ஆண்டவருக்கு மகிமை வருவிக்காதவைகளுக்கெல்லாம் கடைசி நாளில் பலன் கிடைக்கமாட்டாது. ஆகையால் வீணான வேலைகளையெல்லாம் விட்டுப்போட்டு, இயேசு சுவா மிக்கு மகிமை வருவிக்கிற வேலைகளை மாத்திரம் நடப்பித்து வருவது நலமா யிருக்கும்.

முதலாவது, இயேசு சுவாமியின்பேரில் அநேகர் விசுவாசம் வைப் பது அவரை மகிமைப்படுத்துகிறது. தமது சீஷரின் விசுவாசத்தைப் பலப்படுத்த அவர் ஏழு அடையாளமான அற்புதங்களைச் செய்தார். மரித்து அடக்கம்பண்ணப்பட்ட லாசருவை உயிரோடே எழுப்பினதே அவைகளில் கடைசியான ஏழாம் அடையாளம். 'இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவா யிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது, தேவ னுடைய குமாரனும் அதினால் மகிமைப்படுவார்' என்று இயேசு சொன்னார். அன்று தேவ குமாரனுக்கு உண்டான மகிமை என்ன? அன்று அவர் உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் விளங்கினார். அதினால் அவருடைய சீஷர் கள் விசுவாசமுள்ளவர்களாவதற்கு ஏதுவுண்டாயிற்றென்று அவர் சந்தோ ஷப்பட்டார் (15 வா). சீஷர்கள் மாத்திரமல்ல, லாசருவின் சகோதரி களும் இயேசுவின் பேரிலுள்ள விசுவாசத்தில் பலப்படுத்தப்பட்டார்கள். 'நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்..இதை விசுவாசிக்கிறாயா'? என்று இயேசு மார்த்தாளைப் பார்த்துக் கேட்டார் (25, 26 வா). நீ விசு வாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா என்று அவர் திரும்பவும் சொன்னார் (40 வா). இவர் கள் மாத்திரமல்ல, சூழநின்ற ஜனங்களும் விசுவாசிக்கும்படியாக இயேசு ஜெபித்தார் (42 வா). அப்படியே அதைக்கண்டவர்களாகிய யூதரில் அநே கர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள் (45 வா). அதைக் கேள் விப்பட்ட அநேகரும் போய் இயேசுவினிடத்தில் விசுவாசம் வைத்தார்கள் (12: 10). இவ்விதமாய் லாசரு என்ற, ஒரே மனிதனில் நடப்பிக்கப்பட்ட கிரியையின் மூலமாய் அநேகருடைய விசுவாசம் பலப்படுத்தப்பட்டது, புதி தாய் அநேகரும் இயேசுவினிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். இக்காலத்தி லும் இயேசுவின் வல்லமைக்குப் பலத்த அடையாளங்கள் தேவை. அடை யாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால் மனிதர் இக்காலத்திலும் விசுவாசிக்க மாட்டார்கள் (4: 48). அநேகர் விசுவாசிப்பதற்கென்று கிறிஸ்து சபையில் அடையாளமாயிருக்கிறவன் பாக்கியவான். அவனா லேயே இயேசுவின் நாமம் மகிமைப்படுகிறது. இயேசுவே, என்னில் உமது அற்புத கிரியையை நடப்பித்து, என்னை அடையாளமாக்கும்; என் மூலமாய் அநேகர் இயேசுவை விசுவாசிக்கும்படி செய்யும் என்று ஜெபிப்போமாக!

இரண்டாவது, அநேகர் கூடி இயேசுவைக் காணவருவது அவரை மகிமைப்படுத்துகிறது. பண்டிகைக்கு எருசலேமுக்கு வந்திருந்த கிரேக்கர் கூடி, 'ஐயா, இயேசுவைக் காண விரும்புகிறோம்' என்று கேட்டார்கள். அவர்கள் இயேசுவினிடத்தில் வந்தபோது அவர்: 'மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான வேளை வந்தது' என்று சொன்னார் [12: 23]. புறஜாதியார் தம்மைப் பார்க்க வந்தவுடனே, தாம் மகிமைப்படும்படியான வேளை வந்துவிட்டதென்று கண்டு, இதோ, எல்லா மனிதரையும் இழுத்துக்கொள்ளும்படி நான் உயர்த்தப்படப்போகிறேன்; பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும் என்கிறார். இயேசு சுவாமி பூமியிலிருந்து முதலாவது சிலுவைக்கு உயர்த்தப்பட்டார்; பின்பு தேவனுடைய வலதுபாரிசத்துக்கு உயர்த்தப்பட்டார். அவரை அவ்விரண்டு இடத்திலும் மாத்திரம் காணலாம். குணப்படுகிற பாவிகள் ஜீவனைப் பெறும்படி சிலுவையில் அவரைக் காணவேண்டும். குணப்பட்டவர்கள் மறுரூபமாகும்படி அவரைச் சிம்மாசனத்தில் பார்க்கவேண்டும். கர்த்தருடைய சமுகத்தில் காத்திருந்து தெய்வ தியானம் செய்கிறவர்கள் புது பெலனடைந்து புது ஜீவியம் செய்வார்கள். இவ்விதமாய் இயேசுவைக் காணச் சிலுவையினடியிலும் சிம்மாசனத்தடியிலும் அநேகர் கூடிவருவதே அவருக்கு மகிமை உண்டாக்குகிறது. இயேசுவின் சமுகத்தை இடைவிடாமல் தரிசிக்கிறவர்கள் பாக்கியவான்கள். அவர்களாலேயே அவருடைய நாமம் மகிமைப்படுகிறது. அனுப்பப்படாதிருந்தும் ஊழியஞ்செய்ய ஓடுகிறவர்கள் அநேகர் உண்டு. இயேசுவின் சமுகத்தில் பயபக்தியாய் நின்று சேவிக்கிறவர்களோ மகா சொற்பம். ஆனால் இயேசுவைக் காண வாஞ்சிக்கிறவர்களாலேயே அவர் மகிமைப்படுகிறார். கிறிஸ்தவனே, இந்த வாஞ்சை உன்னிடத்தில் எவ்வளவு உண்டு?

**மூன்றாவது, யூதாஸ் சீஷர் கூட்டத்தைவிட்டுப் புறப்பட்டுப்போனபோது மனுஷகுமாரன் மகிமைப்பட்டார்.** இயேசுவுக்கு தைல அபிஷேகம் செய்யப்பட்டபோது இந்த வீண்செலவு என்னத்துக்கு என்று அவன் சொன்னான். அவன் திருடனானபடியால் அப்படிச்சொன்னான் என்று வேதவாக்கியம் கூறுகிறது. மூன்று வருஷம் இயேசுவோடிருந்தும் இயேசுவின் அருமையை அவன் அறியவில்லை. இயேசுவைவிடப் பணம் அவனுக்கு அதிக அருமையாயிருந்தது. தேவ ஊழியக்காரரின் கூட்டத்துக்கு அவன் மகா கெடுதியாயிருந்தான். அவன் அவர்களோடிருக்குமட்டும் பொறாமையும் எரிச்சலும் ஒழியாதிருந்தது, அன்பின் பிரமாணம் கிரியை செய்யவில்லை. அவன் புறப்பட்டுப்போனதோடே சீஷர்களுக்குள்ளிருந்த பொறாமையும் அன்புத்தாழ்ச்சியும் ஒழிந்துபோய்விட்டது, அன்பும் ஐக்கியமும் மேலிட்டுவிட்டது. ஆதலால் அவன் புறப்பட்டுப் போனவுடனே இயேசு நாமம் மகிமைப்பட்டது. தேவனும் இயேசுவில் மகிமைப்பட்டார். தேவ ஊழியரே, யூதாசின் ஆவி நம்மைவிட்டு ஒழிந்துபோவதாக. யாராகி



லும் இயேசுவை கனம்பண்ணுவதைவிட்டு ஒருவருக்குள்ளும் எரிச்சல் எழும்பவேண்டாம். ஊழியர்களுக்குள் எரிச்சலையும் விரோதத்தையும் அன்[illegible]யையும் எழுப்புகிற பிசாசின் ஆவி புறப்பட்டுப்போய்விடுமானால் இயேசுவின் நாமம் அளவில்லாமல் மகிமைப்படும். இப்போதோ தமிழ்நாட்டு மிஷன் ஊழியர்களுக்குள் இருக்கிற யூதாசுகள் அநேகர் உண்டு. அவர்கள் புறப்பட்டுப் போய்விடுவார்களானால் எத்தனை மகிமையாயிருக்கும்!

**நான்காவது, பெரிய கிரியைகளைச் செய்கிற ஊழியக்காரன் மூலமாய் குமாரனில் பிதா மகிமைப்படுகிறார் (14: 12–14).**
'மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான். நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்'. தமிழ்நாட்டு கிறிஸ்தவர்களே நீங்கள் உங்கள் காலத்தில் இயேசுவுக்காக ஏதாவது ஒரு பெரிய காரியத்தைச் செய்ததுண்டா? பெரிய கிரியையைச் செய்வதினாலே தேவனுடைய நாமம் மகிமைப்படுமென்று இயேசுசுவாமி சொல்லுகிறாரே! நமது நாட்டில் பெரிய கிரியைக்கு இடமில்லையா? கிறிஸ்தவர்களே, நமது தேவன் பெரியவராயிருக்கிறார்; பெரிய காரியங்களைச் செய்வதாக வாக்குப்பண்ணியிருக்கிறார்; பெரிய காரியங்கள் நடப்பதற்கு நமது தேசத்தில் அனந்தம் இடமிருக்கிறது. இப்படியிருந்தும், நமது தேசத்தில் பெரிய காரியங்கள் நடக்காததற்குக் காரணமென்ன? அவிசுவாசந்தான். தமிழ்நாட்டுச் சக்கடாவண்டிகளைப்போலவே தமிழ்நாட்டுக் கிறிஸ்தவர்களும் இருக்கிறார்கள். முன்போன தடத்தின்மேலேதான் அவர்கள் இருவருக்கும் போகத்தெரியும். வழக்கமே அவர்களுக்கு மகா பிரதானமாயிருக்கிறது. ஆனால் வேதம் முழுவதும் பார்த்தால், தேவன் தமது ஊழியர்கள் ஒவ்வொருவரையும் புதுப்புது முறையாகவே உபயோகித்துப் பெரிய காரியங்களை நடப்பித்திருக்கப் பார்க்கிறோம். நமது பெரிய தேசத்தின் இரட்சிப்புக்கென்று தமிழ் நாட்டுக் கிறிஸ்தவர்கள் இயேசுவின் நாமத்தினாலே புதிதும் பெரிதுமான காரியங்களைச்செய்ய ஆரம்பிக்கும் நாளிலேதான் இயேசுசுவாமியின் பெரிய நாமம் மிகுதியாய் மகிமைப்படும். அப்படிப்பட்ட பெரிய காரியங்களைச் செய்யலாம் என்ற விசுவாசமும், அவைகளுக்காகப்பண்ணும் பலத்த ஜெபங்களும் தமிழ் நாட்டில் தேவன் எக்காலம் எழும்பச்செய்வாரோ?

**ஐந்தாவது, மெய்க்கிறிஸ்தவர்கள் மிகுதியான கனிகளைக் கொடுப்பதினாலே இயேசு சுவாமியின் பிதா மகிமைப்படுகிறார்.** 'நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்' [15: 8]. உத்தம ஊழியன் நடப்பிக்கும் பெரிய இயு

யைகளின்மேல் ஆண்டவருக்குப் பிரியந்தான். ஆனால் அதிலும் அதிகமாக ஆண்டவருடைய பிள்ளைகளுடைய அமர்ந்த முதிர்ந்த ஜீவியத்தின்மேல் அவருக்கு அதிகப்பிரியமுண்டு. கனிகள் பிரயாசத்தின் பலனல்ல, இயற்கையின் பலன்கள். இயேசுவில் நிலைத்திருக்கிறவன் இயற்கையாய் ஆவியின் கனிகளைக் கொடுப்பான் ஆண்டவரின் பேரிலுள்ள அமரிக்கையும் நம்பிக்கையும், உடன் கிறிஸ்தவர்கள் பேரிலுள்ள அன்பும் அநுதாபமுமே இயேசுவில் நிலைத்திருக்கிறவர்களுக்குரிய இலட்சணங்கள். இவ்வித அமரிக்கையையும் நம்பிக்கையையும் உண்டாக்கும்படிக்கே தேவன் பலமுறை தமது பிள்ளைகளை உபத்திரவத்தின் மூலமாய்ச் சுத்திகரிக்கவேண்டியதாயிருக்கிறது. சுத்திகரிப்புக்குப் பின்பு மிகுந்த அமரிக்கைக்கென்று அவர்களுடைய மாம்சத்தை மரண நிலைமைக்குக் கொண்டுவரவேண்டியதாயிருக்கிறது. இயேசுவிடத்தில் கற்றுக்கொள்ளுகிறவன் அன்பைக் கற்றுக்கொள்ளவேண்டும். இவ்விதமாய் விசுவாசத்தையும் அன்பையும் கையாடுகிறவன் இயேசுவில் நிலைத்திருப்பான், மிகுந்த கனிகளைக் கொடுப்பான், ஆவியின் கனிகளால் நிறைந்திருப்பான். அதினால் இயேசுசுவாமியின் நாமம் மகிமைப்படும் இயேசுவின் பிதாவும் நம்மால் மகிமைப்படுவார். இயேசுசுவாமிக்கும் நாம் சிநேகிதராயிருப்போம்.

## சந்தா வரவு—1915.

| | R. | A. | P. |
|---|---|---|---|
| Mr. S Muthuswami, Melasaithalai | 0 | 7 | 0 |
| „ M. Duraiswami, Kunnathoor | 1 | 4 | 0 |
| „ D T. Simeon, Musulipatam | 0 | 7 | 0 |
| „ G. A. Rowlands, Kandy | 0 | 8 | 0 |
| „ D. J. Rajanayagam | 0 | 7 | 0 |
| Rev. J. C. Perkins | 6 | 12 | 0 |
| „ G. P. George, Kodai | 0 | 8 | 0 |
| Mr. V. Abraham, Mookupuri | 0 | 15 | 0 |
| „ V. Devasagayam, Palamcottah | 0 | 4 | 0 |
| Rev. I. Yesudian, Poona | 0 | 7 | 0 |
| Mr. G. D. Joshua, Neyur per S. D. B. | 0 | 9 | 6 |
| „ George Asirvatham, Jaffna | 0 | 8 | 0 |
| „ D. A. Jacob, Paraichalai | 0 | 8 | 0 |
| „ G. Sundram, Ulaudurpet | 0 | 8 | 0 |
| Rev. Christian David, Kotahenal | | 0 | 0 |
| Mr. L Paul Burma | 0 | 7 | 0 |
| „ M Pakinnathan, Perandur | 0 | 7 | 0 |
| „ M. Muthusami Pillai | 0 | 8 | 0 |
| „ M C. Abrahnm, Valavan | 0 | 15 | 0 |
| „ A P. Joseph, Burma | 0 | 7 | 0 |
| „ S Masillamoni, Ceylon | 1 | 9 | 0 |
| „ M. David, Pussalawa | 0 | 7 | 0 |
| „ Masih Dayal, Ceylon | 0 | 7 | 0 |
| „ D. Arumanayagam, „ | 2 | 0 | 0 |
| „ T Samuel, Madras | 0 | 7 | 0 |
| „ G. D. Rhenius, Balangoda | 0 | 7 | 0 |
| Miss H. E. Dunhill, Bangalore | 0 | 8 | 0 |
| Rev. G. Bunyan, Madras | 1 | 8 | 0 |
| Mrs. Kandamma, Vadakarai | 0 | 8 | 0 |
| „ G A Chelliah, Pallavaram | 0 | 8 | 0 |
| Rev. A. Paramanandam, Bangalore | 1 | 1 | 0 |

Printed at The Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

23 FEB 1917 MADRAS

Aprli 1916 Registered No. M. 163

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." யோவான் 7: 83

Vol. XVII ஏப்ரல்௴ 1916

☞ கனம். S. பரமானந்தம் ஐயரவர்கள் வருவார்கள்.

## 18-ம் வருஷ கன்வென்ஷன் கூட்டங்கள்—1916.

டக்கரம்மாள்புரம் மே௴ 8—11௳ முடிய (சித்திரை௴ 26—29௳)

### 'உயிர்ப்பிக்கிற கர்த்தர்'

'நித்திய வாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார். உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான் பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும் நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும் நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுவேன்'. ஏசா. 57: 15.

'வருஷங்களின் நடுவில் தமது கிரியையை உயிர்ப்பிக்கிற' (ஆபகூக். 3: 2) இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் திருநெல்வேலி நாட்டுப் பிள்ளைகளையும் உயிர்ப்பிக்கச் சித்தமுள்ளவராய் இந்த 18-ம் கன்வென்ஷன் கூட்டத்தை நடத்தும்படி கிருபைசெய்த தயவுக்காக அவருக்கே ஸ்தோத்திரம் செலுத்துவோமாக. ஐரோப்பாவின் தேசங்களனைத்தும் யுத்த சத்தத்தாலும் கலக்கத்தாலும் நிறைந்திருக்கும் இவ்வருஷத்தில் நாம் மிகுந்த சமாதான சௌக்கியமுள்ளவர்களாய்க் குடியிருக்கவும் விசேஷமாக வருஷத்தின் மத்தியில் அவருடைய சமுகத்தைத் தேடிவரவும் கிருபை செய்கிறதை நினைக்கும்போது நமது உள்ளம் நன்றியறிதலால் பொங்கவேண்டாமா? கர்த்தர் மெய்யாகவே நம்மை உயிர்ப்பிக்கச் சித்தமுள்ளவராயிருக்கிறார். நம்மிடத்திலிருக்கவேண்டிய இரண்டு காரியங்களுண்டு.

20-4-16
16

மூன்றாவது: பணிந்த ஆவிவேண்டும். நம்மை நாமே தாழ்த்தவேண்டும். தேவன் பரிசுத்தர், நாம் அசுத்தர்; தேவன் மகத்துவம்பொருந்தினவர் நாம் அற்பர்; தேவன் உன்னதமானவர், நாம் தாழ்விலுள்ளவர்கள். ஆகையால் நாம் நம்மைத் தாழ்த்தவேண்டுமல்லவா? பணிந்தவர்களின் ஆவியைத்தான் அவர் உயிர்ப்பிப்பார். பணிந்த ஆவியுள்ளவர்களிடத்தில்தான் அவர் வாசம்பண்ணுவார். உன் மனமேட்டிமையையும் எவ்விதமான பெருமையையும் சகோதாரில் அற்பமானவர்களுக்கும் மேலாக நீ உன்னைப்பற்றிக் கொண்டிருக்கும் சிந்தையையும் உன்னை விட்டகற்றி தேவசமுகத்தில் உன்னைத் தாழ்த்தி 'ஆண்டவரே, என்னைத் தாழ்த்தும், தாழ்த்தும்' என்று ஜெபிப்பாயாக.

இரண்டாவது: நொறுங்குண்ட இருதயம் வேண்டும். தேவன் நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தைப் புறக்கணியார். உன் பாவங்களை நினை, உன் தவறுதல்களை நினை. கர்த்தர் உன்னை எத்தனைதரமோ தமது ஆவியினால் தட்டி எழுப்பியும் நீ அதை அலட்சியம் பண்ணினதை நினை. நீ உன் ஜீவியத்தினால் எத்தனைபேரோ இடறிப்போவதற்குக் காரணமாயிருந்தாயே, அதை நினை. மற்றவர்களுக்குமுன் உன் தேவனைக்குறித்துச் சாட்சிபகர வெட்கப்பட்டு அவரை மறுதலித்தாயே, அதை நினை. அற்ப உலக இன்பத்துக்காகவோ, ஆதாயத்துக்காகவோ உன் நேசரைக் காட்டிக்கொடுத்தாயே, அதை நினை. மனங்கசந்து அழு. உன் இருதயத்தை அவருக்கு முன்பாக நொறுங்குண்டதாகப் படை. அப்பொழுதுதான் உன் இருதயம் தாழும், உன் ஆவி பணியும்.

அருமையான சகோதரரே, நம்மை உயிர்ப்பிக்கிறதற்கும் நம்மிடத்தில் வாசம்பண்ணவும் இதோ உன்னதமானவர், பரிசுத்தர் என்னும் நாமமுள்ளவர் வருவேன் என்கிறார். அவர் நித்தியவாசி. நம்மை நித்தமும் உயிர்ப்பிப்பார். நம்மிடத்தில் நித்தமும் வாசம்பண்ணுவார். நாமெல்லாரும் சேர்ந்து அவர் சந்நிதியில் வருவோம்.

நம்மை விசேஷித்த ஊழியம்செய்ய அழைக்கிறாரே. தேவனை அறியாத ஆத்துமாக்கள் குணப்படுவதற்கு நாம் கருவிகளாக விரும்புகிறாரே. இது என்ன சலாக்கியம்! சகோதரரே; வாருங்கள், தேவசமுகத்தில் மூன்றுநாள் காத்திருப்போம். தேவ சத்தத்தைக் கேட்போம். உயிர்ப்பிக்கப்பட்டவர்களாய்த் திரும்புவோம்.

கன்வென்ஷன் நடத்தும் சகோதரருக்காக,

R. V, Asirvadam.



# No. 10.

## 'அவர் உயிர்த்தெழுந்தார், அவர் இங்கே இல்லை'.

மாற்கு 16: 2.

கிறிஸ்துநாதருடைய கல்லறையைக் கவனித்துப் பாருங்கள். அங்கே காணத்தக்க விசேஷங்களை அறிந்துகொள்ளுங்கள். பக்தியுள்ள சில ஸ்திரீகள் அங்கே வந்துவிட்டார்கள். அன்பைப் பாராட்ட அங்கே வந்தார்கள். ஊழியம் செய்ய அங்கே வந்தார்கள். துக்கங்கொண்டாட வந்தார்கள். கண்ணீரோடும் விசாரத்தோடும் வந்தார்கள். அந்திய கிரியைகளைச் செய்யும் ஆண்டவருடைய திருச் சரீரத்துக்கு சுகந்த வர்க்கங்களிடவும் வந்தார்கள். 'வாரத்தின் முதலாம்நாள் அதி காலையிலே' இயேசுவின் கல்லறையண்டையில் வந்து சேர்ந்தார்கள். அந்தச் சமயத்தில் வானத்தில் சூரியன் உதயமாயிற்று. அவர்களுடைய மனசிலோ வெளிச்சம், பிரகாசம் கொஞ்சமாவது இல்லை. அவர்களுக்கு அன்பு இருந்தது. நம்பிக்கையோ யாதொன்றுமில்லை. துக்கம் நிறைந்தவர்களாய், நம்பிக்கையற்றவர்களாய், கதியில்லாதவர்களாய், கிலேசப்படவும் துக்கித்துப் புலம்பவும் அங்கே வந்து நின்றார்கள். அந்தக் கல்லறையை அவர்கள் வந்து பார்க்கவே எவ்வளவு பெரிய மாறுதலைக் கண்டடைந்தார்கள். உயிர்த்தெழுதலின் அருணோதயம் அவர்களுடைய இருதயத்தில் உதயமாகவே,—அந்த காரம்—அவிசுவாசம்—அவநம்பிக்கை முற்றிலும் நீங்கி, ஆறுதலடைந்து மகிழ்ந்தார்கள். என் பிரிய சகோதரரே! இந்தத் திருநாள் காலையில் நாமும் இயேசுவின் கல்லறையண்டையில் வருவோமாக. அங்கே நடக்கும் விசேஷங்களை அறிந்து மகிழ்ச்சிகொண்டாடுவோமாக.

### இயேசுவின் கல்லறையினிடத்தில்

1. **வருத்தங்கள் யாவும் நீங்கிப்போகும்.** அந்த ஸ்திரீகள் நடந்து போகையில் அவர்களுடைய மனசில் சந்தேகமுமிருந்தது. அவர்களுடைய பேச்சில் பயம் விளங்கினது. அவர்களுடைய பாதையில் விக்கினமுமிருந்தது. ஆண்டவருடைய சரீரத்துக்கும் அவர்களுக்கும் இடையில் ஓர் பெரிய கல் வைக்கப்பட்டிருந்தது. கல்லறையின் வாசலில்வைத்து முத்திரை போடப்பட்டுப் போர்ச்சேவகரால் காக்கப்பட்டிருந்ததால் நீங்காத விக்கினம்போல அந்த ஸ்திரீகளுக்குத் தோன்றினது. அந்த முத்திரையை உடைக்க யாரால் கூடும்? அந்தக் காவலைக் கடந்துபோக யாரால் முடியும்? அந்தக் கல்லைப் புரட்டித்தள்ள எவனால் ஆகும்? இவர்களோ பெண்பிள்ளைகள்தானே. பெலவீனப் பாண்டமாச்சுதே! என்ன செய்வார்கள்? பேதுரு, யாக்கோபு, யோவானைக் கூப்பிட்டு உதவிசெய்யக் கேட்கலாமா? அப்போஸ்தலர் எல்லாரும் வந்தாலும் அந்தத் தடையை நீக்க அவர்

களால் கூடாது. தங்கள் கண்ணீராலும் வேண்டுதலாலும் அந்தக் காவற்காரரை வசப்படுத்தப் பார்ப்பார்களா? அதுவும் முடியாது. அவர்களுக்கு வகை தெரியவில்லை. இருக்கட்டும்! எப்படியும் போவோம்! பார்ப்போம்; புலம்புவோம் என்று சொல்லி கல்லறையினிடத்தில் வந்துவிட்டார்கள். அங்கே வந்து பார்க்கையில்— கல் எங்கே? தடை எங்கே? விக்கினம் எங்கே? வருத்தம் எங்கே? 'அவர்கள் ஏறிட்டுப்பார்க்கிறபோது அது தள்ளப்பட்டிருக்கக் கண்டார்கள்' (0, 4). அது எப்படியாயிற்று? தேவனுடைய வல்லமையாலே அல்லவா? சகல 'தீவுகளையும் ஓர் அணுவைப்போல தூக்குகிற' அவருக்கு ஒரு சின்னக் கல்லை எடுத்துப்போடுவது வருத்தமான காரியமா? கிறிஸ்தவ சிநேகிதரே! இயேசுவின் கல்லறையிடத்தில் சகல விக்கினங்களும் நீங்கலாகும்.

இன்றைக்கு—உங்கள் மனதில் விசேஷித்த வருத்தம், விசாரம், கவலை, சந்தேகம் உண்டா? உங்கள் வீட்டில் வியாதி இருக்கிறதினாலே வருத்தப்படுகிறீர்களாக்கும். உங்கள் நேச பந்துக்கள் ஜீவித்துப்போன நிமித்தம் கிலேசப்படுகிறீர்களாக்கும். உங்களுக்கு என்ன சங்கடமிருந்தாலும் உயிர்த்தெழுந்த நாதரால் நீங்கிப்போகும். அந்தக் கல்லைத் தள்ளின தேவனுக்கு உங்கள் வருத்தங்களை நீக்க வல்லமை இல்லையா? பாதாளத்தினின்று இயேசுவை உயர்த்தி எல்லா அதிகாரத்துக்கும் வல்லமைக்கும் மேலானவராக்கி உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்தில் உட்காரவைத்த தேவ பெலனுக்கு உங்கள் பெலவீனங்களைத் தாங்குவது கூடாத காரியமா? அந்த ஸ்திரீகளைப்போல ஏறிட்டுப் பாருங்கள். பார்க்கையில் கல் போயிற்று; விக்கினம் நீங்கிற்று என்று அறிந்துகொள்ளுங்கள்.

2. **பெரிய மாறுதல் காணப்படும்.** அவர்கள் கல்லறைக்குள் பிரவேசிக்கும்போது வெள்ளையங்கி தரித்த தேவ தூதரை அங்கே கண்டார்கள். அவர்களுடைய 'ரூபம் மின்னல் போலவும்' அவர்களுடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போல வெண்மையாகவும் இருந்தது '(மத். 28: 3). அதிசயம் அல்லவா? கல்லறைக்குள் இருள் இருப்பது இயல்பான காரியம். கிறிஸ்துவின் கல்லறையிலோ வானஜோதி வீசினது. மேலும் சாத்தானுக்கு 'மரணத்துக்கு அதிகாரி' என்று பேர் (எபி. 2: 14). கல்லறையானது அவனுடைய பலத்த கோட்டையாம். அங்கே உட்கார்ந்து ஆண்டுகொள்வது அவனுக்கு மெத்தப் பிரியம். ஆனாலும் உயிர்த்தெழுதலின் விசேஷத்தைக் கவனித்துப் பாருங்கள். மரணத்துக்கு அதிகாரியான சாத்தான் ஓடிப்போய்விட்டான். இரண்டு தேவதூதர்கள் அவன் கோட்டையைப் பிடித்துக்கொண்டு அங்கே உட்கார்ந்து வெற்றி சிறந்து பிரகாசிக்கிறார்கள். 'மரண இருளின் பள்ளத்தாக்கிலே' இதோ வானஜோதி வீசுகிறது; பாதாள வாசலில் மோட்ச வாசிகள் கெம்பீரிக்கிறார்கள். பிசாசின்



வல்லமை அழிந்து அவன் சிங்காசனத்தின்மேலே தேவதூதர் ஜெய கெம்பீரமாய் உட்கார்ந்து வெற்றிசிறக்கிறார்கள். மரணம் ஜீவனாய் மாறினது; அந்தகாரம் வெளிச்சமாய் மாறினது; பாதாள வாசல் மோட்ச வாசலாய் மாறினது. பிசாசின் ராஜ்யம் இயேசுவின் ராஜ்யமாகிவிட்டது. பெரிய மாறுதல் அல்லவா? உத்தம விசுவாசி ஒருவன் சாகும் சமயத்தில் மரண இருளின் பள்ளத்தாக்கிலே வெகு தைரியத்தோடே நடந்து போனான். கிறிஸ்துவின் பிரகாசமடைந்தவனாயும் சொல்லிமுடியாத சந்தோஷம் உடையவனாயும் அந்நேரத்தில் காணப்பட்டான். தன் பந்துக்களைப் பார்த்து 'நீங்கள் துக்கப்படவேண்டாம். என் இரட்சகர் என்னைத் தாங்குகிறார்' என்று சொன்னதுமல்லாமல் 'மரணத்தின் கூர் எங்கே, அதை நான் காணவே காணேன். எனக்கு வருத்தம் ஒன்றுமில்லை' என்று சொல்லி அப்புறம் ஜீவனைவிட்டு மோட்சம் சென்றான். சகோதரனே! சகோதரியே! நீ இயேசுவின் பிள்ளையானால்—மரணத்துக்குப் பயப்பட வேண்டாம். அவருடைய கல்லறையில் எட்டிப்பார். அங்கே கூருமில்லை இருளுமில்லை, அழிவுமில்லை, பிசாசுமில்லை. ஆறுதல்சொல்ல தேவதூதர் வந்திருக்கிறார்கள்; வழிகாட்ட வானவெளிச்சம் பிரகாசிக்கிறது.

III. **பயந்தமனம் தைரியமாகும்.** அந்த ஸ்திரீகள் கல்லறை வாசலில் நின்று தூதருடைய மகிமையைக் காணும்போது பயந்து கலங்கினார்கள். அவர்கள் அப்படிப் பயந்துபோனது இயல்புதானே! அங்கே முன்நின்ற காவலாளர் போர்வீரரும் பெலசாலிகளுமாயிருந்தபோதிலும் அந்தத் தூதனைக் கண்டவுடனே பயந்து திடுக்கிட்டு செத்தவர்கள்போலானார்கள் என்று பார்க்கிறோமே (மத்: 28, 4). அப்படியானால் இந்த ஸ்திரீகள் கலங்கினது ஆச்சரியமல்ல என்றாலும் அவர்கள் பயம் முற்றிலும் நீங்க ஆறுதலான வார்த்தைகள் அவர்கள் காதிலே தொனித்தது. 'பயப்படா**திருங்கள்'** சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள். அவர் உயிர்த்தெழுந்தார். அவர் இங்கே இல்லை; இதோ, அவரை வைத்த இடம்' என்பது.

பிரியமானவர்களே! இந்தத் திருநாள் காலையில் தேவன் சொல்லுகிற ஆறுதலான வார்த்தைகளைக் கேளுங்கள் '**பயப்படாதிருங்கள், இயேசுநாதர் உயிர்த்தெழுந்தார்**' என்கிறார்.

(a) உங்களுக்கு நரகபயம் (பாவசஞ்சலம்) உண்டா? நான் செய்த பாவம் அதிகம். என் அக்கிரமங்கள் என்னைத் தொடர்ந்து பிடித்தது? நான் நிமிர்ந்து பார்க்கக்கூடாதிருக்கிறது. அவைகள் என் தலைமயிரிலும் அதிகமாயிருக்கிறது. ஆகையால், எனக்கு நரகமே கதி' என்று மனம் கலங்கிப் புலம்புகிறீர்களா? அதோ! இயேசுவின் கல்லறையில் எட்டிப்பாருங்கள். உங்கள் பாவத்தைச் சுமந்தவராக ஆண்டவர் அதிலே இறங்கினார். இப்போதோ தேவதூதனைக் காணலாமேதவிர அந்தப் பாவபலியையாவது உங்கள் பாவப் பாரத்தையாவது அங்கே காணவேகாணோம். 'அக்

காலத்திலே இஸ்ரவேலின் அக்கிரமம் தேடப்பட்டாலும் அது காணாதிருக்கும்: யூதாவின் பாவங்கள் தேடப்பட்டாலும் அவைகள் கிடையாதிருக்கும்' (எரே. 50 20) என்பதுபோலக் கிறிஸ்துவின் சமாதியிலே விசுவாசியினுடைய பாவம் காணாமற்போயிற்று. இயேசுவை நம்பும் சகோதரரே! 'பயப்படாதிருங்கள். உங்கள் பாவநாசகர் உயிர்த்தெழுந்தார். உங்கள் பாவப்பாரம் இங்கே இல்லை' இதோ அவரை வைத்த இடம்.'

(b) உங்களுக்கு மரணபயம் உண்டா? 'முன்னோர்கள் எல்லாரும் போய்விட்டார்களே! என் இனத்தார் ஜனத்தார் போய்விட்டார்களே! நானும் போய்விடவேண்டும். தனிமையாய் நான் போகவேண்டும். நினையாத நேரத்தில் போகவேண்டும். மரண இருளின் பள்ளத்தாக்கிலே இறங்கவேண்டும். பயங்கரமான ஸ்தலத்தில் நடக்கவேண்டும். அதை நினைக்கும்போது என் மனம் சோர்ந்துபோகிறது. எனக்குத் தைரியமில்லை' என்று கலங்குகிறீர்களா? அப்படிக் கலங்கின ஒரு அம்மாளை அறிவேன். அவள் மரண வாசலில் அஞ்சிநிற்கும்போது 'பயப்படாதிருங்கள்' என்ற அருள்வாக்கு கேட்கப்பட்டது. குருவானவர் 16-ம் சங்கீதத்தை வாசிக்கக்கேட்டாள். 'என் ஆத்துமாவை பாதாளத்தில் விடீர். உம்முடைய பரிசுத்தவானை அழிவைக்காணவொட்டீர். ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர். உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும் உம்முடைய வலதுபாரிசத்தில் நித்தியபேரின்பங்களும் உண்டு.' என்ற வார்த்தைகளைக் கேட்கும்போது முகமலர்ந்து அகமகிழ்ந்து கெம்பீர சத்தத்தோடு போய்விட்டாள். திரும்பச்சொல்லுகிறேன். இயேசுவின் கல்லறையில் எட்டிப்பாருங்கள். அங்கே பயங்கரங்கள் ஒன்றுமில்லை. 'பயப்படாதிருங்கள்' இயேசுவானவர் உயிர்த்தெழுந்தார், நீங்களும் வெற்றியோடு எழுவீர்கள்.

IV. **திவ்விய கட்டளை கொடுக்கப்படும்.** அந்த ஸ்திரீகள் தேவதூதனைக் கண்டு பேசும்பொழுது ஆறுதலான வார்த்தைகள் மாத்திரமல்ல, விசேஷித்த உத்தரவும் அருளப்பட்டது. 'நீங்கள் அவருடைய சீஷரிடத்திற்கும் பேதுருவினிடத்திற்கும் போய் . . . . அவரைக் காண்பார்கள் என்று அவர்களுக்குச் சொல்லுங்கள்' என்றான். 'போய்ச் சொல்லுங்கள்' 'ஆண்டவர் உயிர்த்தெழுந்தார் என்பதைப் போய்ச் சொல்லுங்கள்' உயிரோடே அவரைக் காண்பீர்களென்று போய்ச்சொல்லுங்கள்'. 'உயிர்த்தெழுதலின் நற்செய்தியைப் போய்த் தெரியப்படுத்துங்கள்'. 'சீஷருடைய மனந்தேறவும் அவர்கள் புது நம்பிக்கைகொள்ளவும் போய் அறிவியுங்கள்' என்றான். அப்படியே 10, 13, 20-ம் வசனங்களில் நாம் வாசிக்கிறபடி அந்த ஸ்திரீகள் மாத்திரம் அல்ல. சகல சீஷரும் உயிர்த்தெழுதலின் சுவிசேஷத்தை **எங்கும் போய்** பிரஸ்தாபம்பண்ணினார்கள். என் பிரிய சகோதரரே! நம்மை மீட்டு ரக்ஷித்த நாதர் சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறார். முற்றுமுடிய நம்மை ரக்ஷிக்கவும் ராஜ்யபாரம் தாங்கவும் அவர்



உயிரோடிருக்கிறார். அதுமாத்திரமல்ல—எந்தப் பாவிகளுக்கும் 'மனந்திரும்புதலையும் பாவ மன்னிப்பையும் 'அருளுகிறதற்காக அவரை அதிபதியாகவும் தலைவராகவும் தமது வலது கரத்தினாலே தேவன் உயர்த்தினார். (அப். 5: 31). யாக்கோபினுடைய வயோதிப காலத்தில் அவன் மனம் சோர்ந்துபோனவனும் அவநம்பிக்கையுள்ளவனும் மரணம் எப்போது வரும்என்று காத்திருக்கும்பொழுது நல்லசெய்தி அவனுக்கு சொல்லப்பட்டது. அவன் குமாரர் வந்து 'யோசேப்பு உயிரோடிருக்கிறான்; அவன் எகிப்து தேசத்துக்கெல்லாம் அதிபதியாயிருக்கிறான்' என்று அவனுக்கு அறிவித்தார்கள். (ஆதி. 4[illegible]. 26). அது வாஸ்தவம் என்று அறிந்தவுடனே 'யாக்கோபின் ஆவி உயிர்த்தது' என்று வாசிக்கிறோம் (வா. 27). அந்த நற்செய்தி அவனுக்கும் புது ஜீவனையும் பெலனையும் தந்தது. மனந்தேறி மகிழ்ந்தான். 'யோசேப்பு இன்னும் உயிரோடியிருக்கிறானே. இதுபோதும். நான் அவனைப் போய்ப்பார்ப்பேன்' என்றான் (வா. 28). ஆ! சிநேகிதரே! விருத்தாப்பியமான யாக்கோபைப்போல இந்த உலகம் நாள்பட்டதும் நம்பிக்கையற்றதுமாயிருக்கிறதென்று சொல்லலாம். நம்மைச் சூழ்ந்திருக்கிற ஜனங்களுக்கு மனப்பாக்கியமுமில்லை, நல்நம்பிக்கையுமில்லை. உயிர்த்தெழுதலின் நற்செய்தியைப் போய் அறிவியுங்கள். 'கிறிஸ்துநாதர் இன்னும் உயிரோடிருக்கிறார். அவர் வானத்துக்கும் பூமிக்கும் அதிபதியாய் இருக்கிறார். அவர் சர்வஜன ரக்ஷகராயுமிருக்கிறார்' என்பதைத் தெரியக் காட்டுங்கள். (மற்ற முறைகளைக் கையாடுவதோடுகூட வேதாகம சங்கத்துக்குச் சகாயம் செய்து இவ்விதமாக ஊழியம் செய்யுங்கள்).

இப்படியாக:—இயேசுவின் கல்லறையிடத்தில்

1. வருத்தங்கள் நீங்கவும்.
2. அதிசயங்களைக் காணவும்.
3. தைரியமடையவும்.
4. கட்டளையைப் பெறவும்.

நாம் எல்லாரும் வந்து நிற்போமாக.

Rev. T. Walker.

## கிறிஸ்துவில் காணப்படாத காரியங்கள் (தொடர்ச்சி)

**2-வது, இயேசு சுவாமியின்பேரில் ஆவியானவர் அமர்ந்திருந்தபடியால் அவர் கூக்குரலிடவில்லை.** வியாபாரக்காரர் தெருக்களில் கூக்குரலிடுகிறதைப்பார்க்கலாம். தங்கள் பொருட்களை விளம்பரம் பண்ணும்படியாக அவர்கள் உரத்த சத்தம்போட்டு கூக்குரலிடுகிறார்கள். வேஷக்காரரும் வேடிக்கைக்காரரும் தம்புருஅடித்து விளம்பரம்செய்வதுண்டு. இயேசு சுவாமியோ வேடிக்கை காட்ட வரவில்லை. சாத்தான் அவரை ஆரம்பத்திலேயே வேஷங் காட்டும்படி ஏவினான். எருசலேமிலே தேவாலயத்தின் உப்பரிகையிலிருந்து தாழக் குதிக்கச் சொன்னான். இயேசுவோ, உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்று சொல்லிவிட்

டார். அப்படியே நாசரேத்தூரார் அவரைப் பார்த்து, கப்பர்நகூமில் செய்தபடி இங்கேயும் அற்புதங்களைச் செய்யும் என்று கேட்டுக்கொண்டார்கள். நீங்கள் என்னை அங்கீகரிப்பதற்கு அற்புதங்கள் அவசரமில்லை என்று அவர் சொல்லிப்போட்டார். அவர் தம்மை விளம்பரம்பண்ணும்படிக்கு அற்புதம் செய்ததேயில்லை. சாத்தான் சொன்னபடி எருசலேமின் கோபுரத்திலிருந்து குதித்திருந்தால், தேவ குமாரனென்று இயேசு சுவாமி ரூபிக்கப்பட்டிருக்கவேமாட்டார். சுருக்க முறையாய் அது தோன்றலாம். ஆனால் கெடுதியான முறை. இயேசுவோ தம்மைத் தேவனுடைய குமாரனென்று பலமாய் ரூபிப்பதற்கு சிலுவையின் மரணத்தையும் உயிர்த்தெழுதலின் வெற்றி சிறப்பையுமே தெரிந்துகொண்டார். ஆவியானவரைப் பெற்றிருக்கிற இயேசுவின் தாசனே, நீயும் கூக்குரலிடாதே. உன்னை நீயே விளம்பரம்பண்ணாதே. உன்னை உலகம் அறியாமல் அவமதிக்கலாம். உன் திறமைகள் தெரியப்படாமலிருக்கலாம். உனக்குரிய கனம் கொடுக்கப்படாதிருக்கலாம். ஆயினும் உன் வாயைத் திறவாதே. என் திறமையைக் காட்டப்போகிறேன் என்று கூக்குரலிட்டுவிடாதே. சிலுவையின் முறையைத் தெரிந்துகொள், பொறுமையைக் கையாடு, அநியாயத்தைச் சகித்துக்கொள். அப்பொழுது நீயும் உயர்த்தப்படுகிற காலம் வரும். ஆவியானவரால் நிறைந்திருக்கிறவன் மாத்திரமே கூக்குரலிடாமல் சகிக்கக்கூடும். இயேசு சுவாமி காட்டிய சிலுவை முறையைக் கையாடக்கூடும்.

**மூன்றாவது, இயேசுவின்மேல் ஆவியானவர் அமர்ந்திருந்தபடியால் அவருடைய சத்தத்தை ஒருவனும் வீதிகளில் கேட்கவில்லை.** எருசலேமின் வீதிகளில் அடிக்கடி கேட்கிற ஒரு சத்தம் உண்டு. அது பரிசேயர் முதலிய வேஷக்காரரின் ஜெப சத்தம்தான். தங்கள் கிரியைகளையெல்லாம் மனிதர் காணவேண்டுமென்று அவர்கள் செய்தார்கள். தர்மம் செய்யப்போனால் ஆலயங்களிலும் வீதிகளிலும் தாரை ஊதுவித்துவிடுவார்கள். மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று நீண்ட ஜெபம் பண்ணுவார்கள். அவர்களுடைய ஜெப சத்தம் வீதிகளில் வெகு நேரம் கேட்டுக்கொண்டிருக்கும். இயேசு சுவாமியின் ஜெப சத்தத்தையோ ஒருவனும் வீதிகளில் கேட்டதில்லை. ஜெபம் செய்யும்படி அவர் காடுகளுக்கும் மலைகளுக்கும் போவார். அதிக இருட்டோடே போவார். இராமுழுதும்கூடப் பின்னிடுவார். சில முக்கிய தடவைகளில் தவிர அவருடைய தனி ஜெப சத்தத்தை அவருடைய சீஷர்கள் முதலாய்க் கேட்டதில்லை. அதுபோலவே, அவர் தமது சொந்த ஜீவியத்தில் உபயோகித்துவந்த மற்ற முறைகளும் அந்தரங்கமாகவே இருந்தது. ஆவியைப்பெற்ற சிநேகிதரே, அருமை இயேசுவின் மாதிரியைப் பின்பற்றுங்கள். ஆவியானவரைப் பெறாத குணப்படாதவர்கள் பரிசேயரைப்போல தங்கள் கிரியைகளையெல்லாம் மனிதர் காணும்படி செய்துவரட்டும். நாமோ, நமது சத்தத்தை ஒருவனும் வீதிகளில் கேட்கவிடாதிருப்போமாக.



யாயத்தையெல்லாம் அகற்றுவோமாக. இயேசு சுவாமியே நமக்கு மாதிரியாயிருப்பாராக. கிறிஸ்து சபையின் உயர்ந்த நிலைமையிலிருந்தும், ஆவியானவரைப் பெறாமல், மாய்மாலத்தில் உயர்ந்த பரீட்சை கொடுத்திருக்கிற ஒருவரும் நமக்கு மாதிரியாயிருக்கவே வேண்டாம். தேவனுடைய பிள்ளைகளே, நாம் மிகுந்த உத்தமத்தோடு ஜீவிப்போமாக. இயேசு சுவாமியின் கட்டளைப்படி அறைவீட்டைப் பூட்டி ஜெபிக்க இடமில்லாதிருந்தால், இயேசு சுவாமியின் மாதிரிப்படி காடுகளுக்குப்போய் ஜெபிப்போமாக. எல்லா விஷயத்திலும் உள்ளத்தில் உண்மையுள்ளவர்களாயிருப்போமாக. அதற்கென்று நாம் ஆவியானவரால் எப்போதும் நிறைந்தவர்களாகவே யிருப்போமாக.

**நான்காவது, இயேசு சுவாமியின்மேல் ஆவியானவர் அமர்ந்திருந்தபடியால், அவர் நெரிந்த நாணலை முறிக்கவுமில்லை, மங்கி எரிகிற திரியை அணைக்கவுமில்லை.** நாணல் குச்சி எளிதாய் நெரிந்துபோகக்கூடியது. அதை ஒரு வழிபோக்கன் பிடுங்கி ஊன்றிக்கொண்டு போவானாகில், சற்று பலமாய் ஊன்றினவுடனே அது நெறிந்துவிடும். பின்பு அவன் அதை யாதொரு பிரயோஜனத்துக்கும் உதவாததாக முறித்தெறிந்துபோடுவான். மனிதரும் இயற்கையாய் நாணல் குச்சைப்போல எளிதாய்க் கெட்டுப்போகக்கூடியவர்கள். கெட்டுப்போனவர்களையோ, உலகம் நெரிந்த நாணல் குச்சைப்போல மகா அற்பமாய் எண்ணுகிறது, அற்பமாகக் கெடத்துவக்கினவுடனே முழுவதுமாய்க் கெடுத்துப்போடுகிறது. அதன் பின்பு அவர்களை ஒன்றுக்கும் உதவாதவர்களாகத் தள்ளிப்போடுகிறது. அல்லது ஒருவன் இப்படிக் கெட்டவனாயிருக்காமல் நல்லவனாய் ஜீவித்துவருவானாகில், கெட்ட உலகமானது அவன் எப்போது தவறுவான் என்று பார்த்துக்கொண்டேயிருக்கிறது. அவனுடைய நடைகள் சற்றே பிசகத் துவக்கும்போது, மங்கி எரிகிற திரியை அணைத்துப்போடுகிறதுபோல, அவனுடைய ஆவியை முழுவதுமாய் அணைத்துப்போடுகிறது. ஐயோ, கெட்ட உலகம் அக்கிரமக்காரனுக்காகப் பரிதபிக்கிறதுமில்லை. நல்லவனுக்காக அனுதாபத்தைக் காட்டுகிறதுமில்லை. கிறிஸ்து சபையிலுங்கூட இப்படிப்பட்ட பாதகர் உண்டு. அற்பப் பாவியை அவர்கள் முழுப் பிசாசாக்கிப் போடுவார்கள். விழுந்துபோன தேவ பக்தரைப் பழித்துப் பகடிபண்ணுவார்கள். விழாதிருக்கிற பக்தர்கள் எப்போ விழுவார்களென்று விழிப்பாய்ப் பார்த்துக்கொண்டேயிருப்பார்கள். இப்படிப்பட்ட உலகமக்களை விட்டுப்போட்டு, இயேசு சுவாமியை நோக்கிப் பார்ப்பது என்னே அருமையாயிருக்கிறது. நெரிந்த நாணலின் அருமையை அவர் மட்டும் அறிவார். நெரிந்த நாணல் குச்சை இன்ப வீணையாக்க அவர் வல்லமையாயுமிருக்கிறார். ஏழு பிசாசுகள் பிடித்த மகதலேனாள் என்ற நெரிந்த நாணலை அவருடைய வல்லகரம் அன்பின் சேவியாக்கவில்லையா? பட்டணத்துப் பாவியைப் பூராவாய் மாற்றிப்போடவில்லையா? ஐந்து கள்ளப் புருஷரை வைத்திருந்த சமாரிய ஸ்திரீ

யைப் பலத்த பிரசங்கியாக்கிவிடவில்லையா? அப்படியே தம்மை மறுதலித்த பேதுரு மங்கி எரிகிற திரியைப்போல் குன்றிப்போகையில் இயேசு சுவாமி அவன் விசுவாசத்தைப் பெலப்படுத்தி, பெந்தெகொஸ்தே நாளில் அவன் ஆவியானவரின் அக்கினிபற்றி எரியும்படி செய்யவில்லையா? ஆ, இயேசுவின் முறை எத்தனை அருமையானது! ஆவியானவரைப் பெற்ற தேவனுடைய பிள்ளைகளே, உங்கள் இயேசு எஜமானைப் பின்பற்றுங்கள். உலக மக்கள் ஆத்துமாக்களைக் கெடுத்து, கேலிபண்ணிக்கொண்டு திரியட்டும். நீங்களோ, கெட்டுப்போனவர்களுக்காகப் பரிதபித்து அவர்களைத் தேடி இரட்சியுங்கள். பெலவீனப்படுகிற உங்கள் சகோதரரை ஸ்திரப்படுத்துங்கள். ஒருவரையும் அற்பமாய் எண்ணாதேயுங்கள். இதற்கென்றே உங்கள் எஜமானைப்போல் உங்களுக்கும் ஆவியானவரின் அருள்மாரி அருளப்பட்டிருக்கிறதே.

## ‘நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்’

### 1. யோவான் 5: 21.

‘என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்’ என்பதே தேவன் தம்முடைய தாசனாகிய மோசேக்கு மலையில் கொடுத்த முதல் கற்பனை. இக்கற்பனை ஆயிரக்கணக்கான வருஷங்களுக்குமுன் கொடுக்கப்பட்டிருந்தாலும் அதிலடங்கியிருக்கும் பொருள் இக்காலத்துக்கும் ஏற்றதாகவேயிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் பற்பல ஜாதிகள் வணங்கிவந்த விக்கிரகங்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. தேவன் கற்பலகைகளில் எழுதின இந்த முதல் கற்பனையை இஸ்ரவேல் ஜனங்கள் அலட்சியம்பண்ணினதினால்தான் அவர்கள் தாழ்ந்துபோனார்களென்று பார்க்கிறோம்.

தேவனை வணங்குகிறவர்களென்று நாம் பேர்பெற்றிருக்கிறோம் ஆனால் நம்மில் அநேகருடைய ஜீவியத்தில் தேவனுக்குப் பதிலாக ஏதாவது ஒரு விக்கிரகம் முதன்மையான இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. தேவனுக்குரிய முதலிடத்தில் வைக்கப்பட்டிருக்கிறதும், தேவனுக்கும் ஆத்துமாவுக்கும் இடையில் வரும் எந்தக் காரியமும் நம்முடைய விக்கிரகம் என்று சொல்லலாம். அது கைகளினால் செய்த ஒரு வஸ்துவாயிராமல் பொதுவாய் நாம் காணக்கூடாதபடி இருதயத்தை ஆண்டுகொண்டிருக்கும் மறைவான ஒரு காரியமாயிருக்கிறது. வெளியே தோன்றாமல் மறைந்திருக்கிறபடியால் ஆத்துமாவுக்கு அது அதிக மோசம் செய்யக்கூடியதாயிருக்கிறது.

அநேகருக்கு பண ஆசை ஒரு பெரிய விக்கிரகமாயிருக்கிறது. பணமென்பது அதை உடையவனுக்கு அதிகாரத்தைக் கொடுக்கிறது. பணம்



அதிகப்பட அதிகப்பட அதைப்பற்றிய ஆசையும் அதிகப்படுகிறது. ஒரு காலத்திலும் இல்லாத பிரகாரம் தற்காலத்தில் பணம் உலகத்தில் வணங்கப்பட்டு வருகிறது. அதுவே எல்லாவற்றிலும் எல்லாமுமாயிருக்கிறது. பணத்திற்கு உலகத்தில் அதிக வல்லமையிருப்பதால் அநேகர் அதற்கே சரணம்பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அமெரிக்காவிலுள்ள கோடீஸ்வரன் ஒருவன் தன்னுடைய அழகான பெரிய மாளிகையையும் அதைச் சேர்ந்த தோட்டங்களையும் தன் சிநேகிதன் ஒருவனுக்குக் காட்டி, ‘சர்வவல்லமையுள்ள காசு இதை உண்டுபண்ணினது. பணம் செய்யக்கூடாதது எது?’ என்று சொன்னானாம். அப்போ அந்த சிநேகிதன், ‘எகிப்து தேசத்திலிருந்து எங்களைப் புறப்படப்பண்ணின தெய்வம் இதுதான் என்று சொல்லி பொன் கன்றுக்குட்டியை வணங்கின இஸ்ரவேல் ஜனங்களைப்போல நீர் இருக்கிறீர். வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்தை சுதந்தரிக்கப்போகும் பிரயாணத்தில் அது அவர்களுக்கு ஒரு பெரிய தடையாயிருந்தது. உம்முடைய காசும் உமக்கு அப்படி ஒரு தடையாயிருக்கலாமே என்று பதிலுரைத்தாராம்.

எந்த விக்கிரகமும் நம் மனதுக்குத் திருப்தி கொடுக்கக்கூடாது. தேவனில்லாமல் பணஆசை நம் இருதயத்தை ஆண்டுகொண்டிருக்கும்போது அது மன நிர்பாக்கியத்தையும் திருப்தியின்மையையுந்தான் கொடுக்கும். சில சமயங்களில் பணஆசை மரணத்தையும் வருவிக்கிறது. போலாந்து தேசத்தில் ஐஸ்வரியவானான ஒரு பிரபு இருந்தார். அவருக்கு 10 லட்சம் ஏக்கர் நிலமும் 7 மாளிகைகளும் 4 அரண்மனைகளும் இருந்தது. என்றாலும் இன்னும் அதிகம் வேண்டுமென்ற ஆசை உண்டானது. தன் நிலத்துக் கருகாமையிலுள்ள கொஞ்ச ஏக்கர்கள் கொண்ட ஒரு நிலத்தின்பேரில் ஆசைகொண்டு அதற்குடையவனிடத்தில் அதைக் கிரயத்திற்குக் கேட்டபோது அவன் அதை விற்கமாட்டேன் என்று சொல்லிவிட்டதால் அந்த ஐஸ்வரியவான் தன்னைச் சுட்டுக்கொண்டு மாண்டான்.

தற்காலத்தில் ஜனங்கள் அதிகமாய் வணங்கிவருகிற இன்னொரு விக்கிரகம் உண்டு. அது சிற்றின்பம் என்கிற விக்கிரகந்தான். இந்த விக்கிரகம் அநேக விதமாய் வணங்கப்பட்டு வருகிறது. ஐசுவரியவானும் ஏழையும் விளையாட்டு வேடிக்கைக்காக இங்குமங்கும் ஓடி அலைகிறார்கள். நாடகப்புரைகளோ, சர்க்கஸ் ஆட்டம், விளையாட்டு வேடிக்கை இவைகள் காட்டப்படும் இடங்களோ, சங்கீதப் புரைகளோ இவைகளுக்கு மனிதர் விரைந்து செல்லுகிறார்கள். தங்கள் பணங்களையும் இப்பேர்ப்பட்ட வேடிக்கைகளுக்காகத் தாராளமாய்ச் செலவழிக்கிறார்கள். வாரத்தின் ஆறு நாட்கள் காணாதென்று பரிசுத்த நாளாகிய ஓய்வுநாளையும் சிற்றின்பத்திலேயே செலவழிக்கிறார்கள். தேவனைத் தள்ளிவிட்டு சிற்றின்பம் என்கிற இராஜா சிங்காசனத்தில் வீற்றிருக்கிறதுபோலிருக்கிறது.

பரிசுத்த யோவான் சுவிசேஷகன் கொடுத்த இந்தக் கட்டளை இக்காலத்திலும் நமக்கு அதிக அவசியமாயிருக்கிறது. ஏனென்றால், நம்முடைய நேரத்தையும் ஐம்புலன்களையும் சந்தோஷமாய் அனுபவிக்கவேண்டுமென்கிற ஆசையில் நித்தியத்தை அடுத்த காரியங்களைக் கவனியாமல் விட்டுவிடுகிறோம். மெய்க் கிறிஸ்தவனுங்கூட உலக இன்பத்தினால் இழுப்புண்டு முதன்மையாய் இருக்கவேண்டியதைத் தேடாமல் விட்டுவிடுகிறான்.

கிறிஸ்து ஒருவரே திருப்திசெய்யக்கூடும் என்பது இப்போதும் எப்போதும் ஒப்புக்கொள்ளக்கூடிய சத்தியமாயிருக்கிறது. தேவனைத் தள்ளி எந்த விக்கிரகத்தையும் முதலிடத்தில் வைத்திருக்கிற எந்த ஆத்துமாவும் கெட்டு அழிந்தேபோகும். தேவனுக்கேயல்லாமல் வேறொன்றுக்கும் முதலிடம் கொடுக்கப்படக்கூடாது. அவர் தம்முடைய மகிமையை வேறெந்த வஸ்துவுக்கும் கொடார். இந்த முதலாம் கற்பனையை நாம் கைக்கொண்டு விக்கிரகங்களுக்கு நம்மை விலக்கிக் காத்துக்கொள்ளுவோமானால் நம்முடைய ஜீவியம் முழுவதையும் தேவன் ஆண்டு நடத்தும்படி ஒப்புக்கொடுத்துவிடுவோம். அவரை நம்முடைய இராஜாவாக்கி அவரையே எல்லாவற்றிற்கும் ஆண்டவராக முடிசூட்டுவோமானால் இராஜ்ஜியத்தின் புத்திரருக்குரிய சுதந்தரத்துக்கும், சுயாதீனத்திற்கும், மகிமைக்கும் பங்காளிகளாவோம்.

## ஆவிக்குரிய ஜீவியத்தில் பின்வாங்கிப்போவதற்கு முகாந்தரம்.

வாரத்திற்கு இரண்டு பிரசங்கம் கேட்டால் போதுமென்று நினைத்துக்கொண்டு, சோம்பலினால் ஜெபக்கூட்டங்களுக்கும், வாசிப்புக் கூட்டங்களுக்கும்போக வருத்தப்பட்டு வீட்டிலிருந்துகொண்டால் பின்வாங்கிப் போவதற்கு யாரைக் கேட்கவேண்டும்? நாளொன்றுக்கு இரண்டு தடவைக்குக்குறையாமல் வயிற்றுக்குச் சாப்பிடுவாய். ஆத்துமாவுக்கு வாரத்துக்கு இரண்டு தடவை சாப்பாட்டு முன்போய் உட்கார்ந்து எழுந்திருந்தால் போதுமா? நீ கோவிலுக்குப்போகிறது அப்படித்தானே இருக்கிறது! சும்மா எழுந்திருந்து வராவிட்டால் பிரசங்கத்தில் அது தப்பிதம், இது தப்பிதம் என்று சொல்லுவாய். ஒரேநாள் ஒரே நேரம் உன் சாப்பாட்டுக்கு முன் போய் உட்கார்ந்து, அதில் கல் கிடக்கிறதென்றும், சோறு வெள்ளையாயில்லை என்றும் சொல்லிவிட்டு சாப்பிடாமல் எழுந்திருந்து வந்துவிடு. வயிறு நிறையுமா என்று பார். நிறையாதே. அப்படியானால் உன் ஆத்துமா வளரும் என்று நீ எப்படி யோசனையில்லாமல் நினைத்தாய்? நான் பின் சொல்லுகிற பிரகாரம் நடப்பாயானால் நீ ஒருவாரத்திற்குள் தேவனைவிட்டுப் பின்வாங்கி லேசாய் சாத்தான் வலையில் சிக்குண்டு முழுவதும் கெட்டுப் போவாய் என்று நினை.



1. ஜெபம்பண்ணும்போதெல்லாம் கவலைபற்றவிதமாய் கடமைக்காகப் பண்ணுவது,

2. பிரசங்கம் கேட்கும்போது உன் ஆத்துமாவைக் குறித்து நினைக்காமல் மற்றவர்களையே நினைத்துக்கொண்டிருப்பது.

3. வேதம்வாசிக்கும்போதெல்லாம் கடமைக்காக கவனமில்லாமலும் ஜெபம்பண்ணாமலும் வாசிப்பது.

4. விளையாட்டு, உல்லாசம், வேடிக்கை ஆகியவைகளில் அதிக நேரத்தைச் செலவிடுவது.

5. முழுநேரமும் உன் வேலையைப்பற்றியும் தொழிலைப்பற்றியும் நினைத்து உன் மனதை அதிலேயே செலுத்துவது.

6. மற்றவர்களிடத்தில் குற்றம் கண்டுபிடித்து அதைக் குறித்து எப்போதும் மற்றவர்களிடத்தில் பேசிவிட்டு உள்ளதைத்தானே சொல்லுகிறேன் என்று சொல்லி மனதைத் தேற்றிக்கொள்ளுவது.

7. மற்றவர்கள் ஆண்டவரிடத்தில் இழுக்கப்படுவதற்கு யாதொன்றும் செய்யாமற்போவது.

இந்த ஏழு காரியங்களையும் நீ யோசியாமல் செய்துவிடுவாயானால் கூடியசீக்கிரத்தில் நீ பிசாசின் பிள்ளையாய்ப்போவாய் என்பது நிச்சயம்.

## ஓர் எச்சரிப்பின் கடிதம்.

அருமையான சகோதரனே,

வேதத்திலுள்ள ஒரு வாக்கியத்தை உனக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதாவது: 'கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்திற்குத் தகுதியுள்ளவனல்ல' என்பதே. நீ தேவனுடைய ராஜ்யத்திற்கு தகுதியுள்ளவனல்ல என்று துக்கத்தோடு சொல்லுகிறேன். தேவனுடைய ராஜ்யத்திற்குத் தகுதியில்லாதவன் அதில் பிரவேசிக்கமாட்டானே,

முன்னே சாப்பாட்டுமுன் உட்கார்ந்தவுடனே ஜெபம்பண்ணுவாய். இப்போதோ அப்படிசெய்கிறதில்லை. முன்னே உன் வீட்டில் குடும்ப ஜெபம் தவறாது. இப்போதோ குடும்ப ஜெபம் எத்தனையோ நாளாய்க் காணோம். முன்னே வேதம் வாசித்துத் தனிஜெபம் செய்வதில் அதிக நேரம் செலவழிப்பாய். இப்போதோ ஒன்றைக்குப் பாகத்தை எப்போது முடிக்கலாமென்று யோசித்தவனாய்ப் படபடவென்று வாசிக்கிறாய். சில வேளைகளில் அதுவுங்கூடத் தவறிப்போகிறது. முன்னே ஜெபக்கூட்டங்களில் அனலாய் ஜெபம்பண்ணுவாய். இப்போதோ அதிலும் தளர்ந்துபோனாய். முன்னே வேதவாசிப்புக்கூட்டம், ஜெபக்கூட்டம், தேவாராதனை ஆகியவைகளுக்கு ஒருநாளும் தவறமாட்டாய். இப்போதோ அக்கூட்-

டங்கள் நடக்கிறதா என்றுங்கூட உனக்குத்தெரியாது. முன்னே பரிசுத்தத்தில் வளரவேண்டும். தேவனோடு நெருங்கி ஜீவிக்கவேண்டுமென்பதே உன் வாஞ்சை. இப்போது பணம் சம்பாதிப்பதும், வியாபாரத்தைப் பெருக்குவதுமே உன் கவலை. முன்னே தேவனுடைய பிள்ளைகள் உன் சிநேகிதர்; அவர்களோடு வேதகாரியங்களைப் பேசுவது உன் விருப்பம். இப்போது உலகத்தின் பிள்ளைகள் உன் சிநேகிதர். அவர்களோடு உல்லாசமாய்ப் பேசுவதே உனக்குப்பிரியம். முன்னே மற்ற ஆத்துமாக்களுக்காகக் கவலைப்பட்டு அவர்களிடத்தில், ஆத்தும விஷயத்தைக் குறித்துப்பேசுவாய். இப்போது அந்த எண்ணம் உன் மனதில் வருகிறதில்லை. ஆ! அன்பனே! நீ பின்வாங்கிப்போய்விட்டாய் அல்லவா? இப்போதாகிலும் விரும்பக்கூடாதா?

## 'துன்மார்க்கத்துக்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்திருங்கள்'

எபே. 5: 18.

ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் அவனுக்குரிய சிறு பெந்தெகொஸ்தே சம்பவமுண்டு. இதை வாசிக்கிற ஒவ்வொருவருக்கும் பரிசுத்த ஆவி முதலாவது ஊற்றப்பட்ட பெந்தெகொஸ்தே நாளைப்பற்றிய சரித்திரம் நன்றாய்த் தெரியும். அப்போஸ்தலர் நடபடிகளின் இரண்டாம் அதிகாரத் துவக்கத்தில் அவர்களெல்லாரும் பரிசுத்தாவியினாலே நிரப்பப்பட்டார்களென்றும், அவர்களைப் பார்த்த மற்றவர்கள் 'அவர்கள் மதுபானத்தால் நிறைந்திருக்கிறார்களென்று சொன்னார்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மேலே கொடுத்திருக்கும் வாக்கியத்திலும் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. நிறைந்திருப்பதும், மதுபான வெறிகொள்வதும் இரண்டு இடத்திலும் ஒரே மாதிரி சொல்லப்பட்டிருக்கிறபடியால் பவுல் அப்போஸ்தலன் பெந்தெகொஸ்தே நாளை நினைவுகூர்ந்தவராய் எபேசியருக்கு இந்த வாக்கியத்தை எழுதியிருக்கவேண்டும். அப்போஸ்தலர் நடபடிகள் 19-ம் அதிகாரத்தில் சொல்லியிருக்கிற பிரகாரம் எபேசு சபையாரும் தங்களுக்குள் ஒரு சிறு பெந்தெகொஸ்தே நாளை அனுபவித்திருந்தார்கள். மதுபானத்தினால் வெறிகொள்ளாமல் ஆவியினால் உற்சாகப்படுங்கள் என்கிறார். மதுபானத்தை உபயோகிக்கும் வெகு சொற்ப பேர்தான் துன்மார்க்கத்துக்கு விலகியிருக்கிறார்கள். வெறிகொள்ளும் எந்த வஸ்துவையும் நாளுக்குநாள் அதிகம் சாப்பிட்டால்தான் ஒரே அளவான சக்தியைக்கொடுக்கும். ஆகவே இயற்கையாகவே அதை அளவுக்கு மிஞ்சி சாப்பிட ஏதுவாகிவிடுகிறது. ஆனால் ஆவியினால் நிரப்படுவதற்கு அளவுக்கு மிஞ்சி என்பது இல்லை. நாம் கொள்ளக்கூடிய அளவு ஆவியினால் நிரப்பப்படலாம். என்றாலும் வெறிகொள்ளாமலும் புத்தி மயங்காமலுமிருக்கலாம்.



இதிலிருந்து மூன்று குறிப்புகளைக் கவனிக்கலாம். முதலாவது, வெறுமையாகுதல், இரண்டாவது, நிரப்பப்படுதல், மூன்றாவது, வழிந்தோடுதல். தேவன் செய்யக்கூடாத சில காரியங்களும் உண்டு. நிறைய இருக்கும் ஒரு பாத்திரத்தை முதலாவது வெறுமையாக்கினாலொழிய அதைத் திரும்ப நிரப்ப தேவனால் கூடாது. ஒவ்வொரு உத்தம சீஷனையும் விசேஷமாய் ஒவ்வொரு உத்தம ஊழியக்காரனையும் நிரப்புகிற வேலையை தேவனுக்காக ஆவியானவரே செய்கிறார். தேவ ஆவியானவரென்றால் என்ன என்பதைச் சற்று கவனிப்போம். ஒரு விசுவாசி தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் எல்லா ஆசீர்வாதங்களும் தேவ ஆவியானவரென்று சொல்லலாம். தெய்வம்வந்து மனுஷனை ஆட்கொள்வதே தேவ ஆவியானவராம். ஒரு மனிதனிடத்தில் விளங்கும் தெய்வ ஜீவன், தெய்வ வெளிச்சம், தெய்வ அன்பு, தெய்வ வல்லமை இவையும் தேவ ஆவியானவரைக் குறிப்பிடும். தேவனைப்பற்றி வெளிப்படுத்தப்படுகிறவைகளெல்லாம் தேவ ஆவியானவராலே வெளிப்படுத்தப்படுகிறது. ஆகவே, தேவனைப்பற்றி அறியக்கூடிய எல்லாவற்றையும் ஆவியானவர் நமக்கு வெளிப்படுத்தி நம்மிலே விளங்கச்செய்வதே ஆவியானவராலே நிரப்பப்படுவதாம். முன் சொல்லப்பட்டபடி வெறுமையாக்கப்படாதிருக்கிற ஒரு பாத்திரம் தேவனால் நிரப்பப்படமுடியாது. ஆகையால் நாம் நிரப்பப்படுமுன் வெறுமையாக்கப்படவேண்டும். நாம் எப்படி வெறுமையாகக்கூடும்? அதற்காகச் செய்யப்படவேண்டிய மூன்று காரியங்கள் உண்டு. முதலாவது, நமக்குத் தெரிந்த பாவங்களை வெறுக்கவேண்டும். இரண்டாவது, நம்முடைய விக்கிரகங்களையெல்லாம் அகற்றவேண்டும். மூன்றாவது தன்னையே வெறுக்கவேண்டும். அப்படியானால்தான் நாம் வெறுமையாகக்கூடும்.

முதலாவது, பாவம் எந்த ஆத்துமாவில் குடிகொண்டிருக்கிறதோ அந்த ஆத்துமா தேவனை வெளியேவிட்டு அடைத்திருக்கிறதென்று சொல்லலாம். ஒரு இருதயத்தின் மூலை முடங்குகளில் ஒரு சிறு பாவம் அந்தரங்கமாய் மறைத்துவைக்கப்பட்டிருக்குமானால் அந்த இருதயமுழுவதிலும் தேவன் வாசம்பண்ண முடியாது நிசந்தான்; இயற்கையிலேயே முழுவதும் பரிசுத்தமாயிருக்கும் வாசஸ்தலத்தை மாத்திரம் தேவன் விரும்புவாரானால் அவர் மனிதரோடு வாசம்பண்ணவே முடியாது. ஆனால் ஒளித்து பத்திரமாக்கிவைக்கப்பட்டிருக்கும் எந்த அசுத்தமும் இருதயத்தில் காணப்படக்கூடாது. 'என் இருதயத்தில் அக்கிரம சிந்தைகொண்டிருந்தேனானால் தேவன் எனக்குச் செவிகொடார்', என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான். 'என் இருதயத்தில் அக்கிரமத்தை உடையவனாயிருந்தால் தேவன் எனக்குச் செவிகொடார்' என்று அவன் சொல்லவில்லை. அக்கிரமத்தை இருதயத்தில் அருமையாய்ப் பேணிவைத்து பத்திரமாய்க் காக்கவேண்டிய வஸ்துவைப் போல பத்திரப்படுத்தி வைத்திருப்போமானால், நாம் எத்தனை வருஷத்துக்

759



கிறிஸ்தவர்களாயிருந்தாலும் தேவன் நம்மில் வசிக்கமாட்டார். தப்பிதம் பாவம் என்று கழக்குக் காணப்படுகிற எந்தக் காரியத்தையும் இருதயத்தை விட்டு அப்புறப்படுத்தி அதைக் கொன்றுபோடவேணுமென்று தேவன் விரும்புகிறார். இயற்கையிலேயே நாம் பரிசுத்தமுள்ளவர்களாயிராவிட்டாலும், சுத்தமாக நம் இருதயத்தைக் காத்துக்கொள்வோமானால் அவர் நம்மில் வசிக்க விரும்புவார். அநேக காரியங்கள் தங்களிலே நன்மையானவைகளாயிருந்தாலும் நம்முடைய ஆத்துமாவுக்கு அவைகள் தீமை செய்கிறவர்களாயிருக்கலாம். உதாரணமாக் உலக சந்தோஷம் தன்னிலே நல்லதுதான். ஆனால் அதை எல்லாவற்றிலும் அதிகமாக நம் ஜீவியத்தில் முக்கியப்படுத்துவோமானால் அது ஒரு விக்கிரகத்தைப்போலாகிவிடுகிறது. இப்பேர்ப்பட்ட விக்கிரகங்களையும் நம் இருதயத்திலிருந்து வெளியேற்றவேண்டும். இப்படியாக நம்முடைய ஆத்துமாவில் மறைந்திருக்கும் பாவங்களையும் அதில் குடிகொண்டிருக்கும் விக்கிரகங்களையும் அப்புறப்படுத்தி அதை வெறுமையாக்குவோமானால், அப்போது தேவன் அதை நிரப்புவார்.

(இன்னும்வரும்).

## சந்தா வரவு—1915

| | | | |
|---|---|---|---|
| Rev. S. Loomis, Vellore | 0 | 8 | 0 |
| Mr. S. A. Devasagayam | 2 | 6 | 0 |
| „ Matthew Antony, Bethel | 0 | 7 | 0 |
| Miss Clara / „ P. Siromoni / „ C. Sornam } Madura | 1 | 8 | 0 |
| Mr. D. A. Pillay, Rangoon | 1 | 14 | 0 |
| Mrs. F. W. Arumanayagam, Cuddalore | 1 | 2 | 0 |
| Mr. A. S. Dason, Yatiantota | 2 | 0 | 0 |
| „ S. Abraham, Kualampur | 0 | 12 | 0 |
| „ P. S. Yesuadian, Ceylon | 1 | 0 | 0 |
| „ S. Jacob, Nazareth | 1 | 5 | 0 |
| Miss S. R. Howland, Ceylon | 12 | 4 | 0 |
| Mrs Claudia Samuel, Bangalore | 0 | 15 | 0 |
| „ R. Samuel, Rangoon | 1 | 0 | 0 |
| Mr. P. Rajaratnam, Burma | 0 | 7 | 0 |
| „ Chnna Vedamoni Ram. | 1 | 2 | 0 |
| „ V. James, Kallakurichi | 2 | 6 | 0 |
| „ N. Packiam, Madura | 0 | 7 | 0 |
| Mrs. Appasami, Palamcottah | 0 | 8 | 0 |
| Mr. V. David „ | 0 | 14 | 0 |
| Miss Loghurst, Virudupatti | 1 | 0 | 0 |

| | | | |
|---|---|---|---|
| Mr. V. M. David | 0 | 14 | 0 |
| „ P. E. Cochikunjoo | 1 | 4 | 0 |
| „ J. S. Gnanamuthoo Ceylon. | 1 | 0 | 0 |
| „ J. Samuel, Penang | 1 | 12 | 0 |
| Mrs. Katie David | 0 | 4 | 0 |
| „ Yesuadial David | 0 | 4 | 0 |
| „ V. S. Chelliah Nadar, B. A. | 0 | 7 | 0 |
| „ S. Samuel, Tiruvadi | 0 | 7 | 0 |
| Mrs. M. Muthiah, Madurentakam | 1 | 12 | 0 |
| Rev. D. Jesudason, Paneiadipatti | 9 | 4 | 0 |
| Mr. T. D. Maduranayagam, Colombo | 0 | 7 | 0 |
| Mr. James Gibb, Ceylon | 1 | 0 | 0 |
| Miss Franklin | 1 | 14 | 0 |
| Mr. S. Sam. Pakkiam, Vilupuram | 0 | 7 | 0 |
| Rev. M. Thiruthuvathason, Melur | 0 | 14 | 0 |
| Mr. D. David Catechist, Ceylon | 2 | 6 | 0 |
| „ V. Joseph | 1 | 0 | 0 |
| Rev. S. Isaac, Cumbam | 0 | 14 | 0 |
| „ C. Samuel, Calcutta | 0 | 14 | 0 |

Printed at The Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

OFFICE OF THE REGISTRAR ... 23 FEB 1917

May 1916 Registered No. M. 163

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." யோவான் 7: 88

Vol. XVII மே௴ 1916

## No. 11 'என்னில் நிலைத்திருங்கள்' யோவா. 15. 4.

இந்தச் சிறுவாசகத்தில் பரிசுத்த ஜீவியம் முழுவதும் அடங்கியதென்று சொல்லலாம். கிறிஸ்துநாதர் நம்மைப்பார்த்துச் சொல்வது என்னவென்றால் 'நீங்கள் பூரண பரிசுத்தராகவேண்டுமென்றால் நீங்கள் மோட்சவழியில் தவறாமலும் இடறாமலும் நடக்கும்படி விரும்பினால் நீங்கள் சகல பாவங்களையும் ஜெயித்துத் தேவனுக்கு உத்தமபிரியமானவர்களாய் ஜீவியஞ்செய்யவேண்டுமானால் இதுவே முறை. வேறே வழிஇல்லை; என்னிலே நிலைத்திருங்கள்' என்கிறார். இந்த உபதேசத்தை விளக்கிக் காட்டும்படி மூலாதாரமான மூன்று சத்தியங்களை முதலாவது ஸ்தாபிக்கிறேன்.

1. **சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள் இருக்கிறது.** அதாவது கிருபையின் ஐசுவரியங்களோ, தெய்வீக வல்லமை ஞானம் மகிமையின் பொக்கிஷங்களோ மனுஷனுக்கு வேண்டிய நித்திய ஜீவன், நீதி, பெலன், பரிசுத்தம் இவைகளோ சமஸ்தமும் பாக்கியில்லாமல் அவருக்குள் அடக்கம் என்பது. சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்க அவருக்குப் (பிதாவுக்கு) பிரியமாயிற்று. (கொலோ. 1. 19). அவர் ஞான திரவியங்களெல்லாம் அடங்கிய பொக்கிஷசாலை. அவர் பரம ஆகாரங்கள் அனைத்தும் சேர்க்கப்பட்ட அருள் களஞ்சியம். சகல மனிதருக்கும் வேண்டிய ஞான நன்மைகள் எல்லாவற்றையும் தேவன் ஒன்றாகத் திரட்டிச் சேர்த்துக் கிறிஸ்துவுக்குள்ளே வைத்திருக்கிறார். அவருக்குள் கிருபா திரவியங்கள் எல்லாம் இருக்கிறது. அவராலேயல்லாமல் ஒரு துட்டாவது கிடையாது. ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன் கேளுங்கள். எகிப்து தேசத்தில் கொடிய பஞ்சம் உண்டான காலத்தில் பார்வோன் ராஜா புத்தியோடு நடந்து சகல அதிகாரத்தையும் யோசேப்புக்கு ஒப்புக்கொடுத்தான்.

20-5-16

·16

யோசேப்பிலே சகல வல்லமையும் அதிகாரமும் வாசமாயிருக்கப் பார்வோனுக்குப் பிரியமாயிற்று என்று நாம் சொல்லலாம். தானிய தவசங்களோ, களஞ்சியங்களோ, திறவுகோல்களோ, யோசேப்பின் வசமாக ஒப்புக்கொடுத்தான். அவனுடைய கையிலே கொடுத்துவிட்டான். அப்பொழுது யோசேப்பு என்ன செய்தான்? **'அளவிறந்ததாய்க் கடற்கரை மணலைப்போல மிகுதியாக தானியத்தைச் சேர்த்துவைத்தான்'.** (ஆதி 41. 49). சரீரப்பிரகாரமாய்ப் பார்த்தால் ஜனங்களுடைய சவரக்ஷணைக்கு வேண்டிய ஆகாரங்கள் சகல பரிபூரணமும் யோசேப்புக்குள் இருந்தது. பட்டினியால வருந்திய ஏழைகள் பார்வோனிடத்தில் வந்து உணவுக்காகக் கெஞ்சி ஓலமிட்டபோது அவன் கொடுத்த உத்தரவு என்ன? **'நீங்கள் யோசேப்பினிடத்துக்குப் போய் அவன் உங்களுக்கு சொல்லுகிறபடி செய்யுங்கள்' என்றான் அல்லவா?** அப்படியே அவர்கள் யோசேப்பினிடம் ஓடி வேண்டவே அவன் 'களஞ்சியங்களை எல்லாம் திறந்து' தன்னுடைய சம்பூரணத்திலிருந்து அவர்களுக்குக் கொடுத்து இவ்விதமாக ஜீவரட்சை செய்துவந்தானும். அப்படிப்போலவே,— ஞானப்பிரகாரமாய்ப் பார்த்தால் சகல பரிபூரணமும் இயேசுவுக்குள் இருக்கிறது. பரிசுத்த ஜீவியஞ் செய்யத்தக்க வல்லமையையும் சகல பாவங்களையும் பிசாசின் வல்லமையையும் நம்முடைய பாதத்தின்கீழ் மிதித்து ஜெயிக்கும் சத்துவம் நாம் மிகுந்த கனிகளைக் கொடுக்கத்தக்கதான ஞானசக்தி எல்லாம் கிறிஸ்துவுக்குள் நமக்காக வைக்கப்பட்டிருக்கிறது. ஆ! பாருங்கள்! பார்வோன்ராஜா கொடுத்த கட்டளை வெகு இலேசான கட்டளை. ஆனாலும் போதுமானதாயிருந்தது, 'யோசேப்பினிடத்துக்குப் போங்கள்' என்று உத்தரவு கொடுத்தான். இந்த வார்த்தையை உங்கள் மனதில் வைத்துக்கொள்ளுங்கள். நம்மை நாமே பரிசுத்தப்படுத்துவது கூடாத காரியம். சகோதரரே! பரிசுத்தம்பெற இயேசுவினிடத்துக்குப் போங்கள். அந்தக் கோபக்குணத்தை முற்றிலும் மாற்றிவிட இயேசுவினிடத்துக்குப் போங்கள். அந்தப் பொருளாசையை அழித்துப்போட இயேசுவினிடத்துக்குப் போங்கள். அந்த அசுத்த எண்ணங்களை அகற்றிவிட இயேசுவினிடத்துக்குப் போங்கள். அந்தப் பெருமையான சுபாவத்தைத் திருத்தும்படி இயேசுவினிடத்துக்குப் போங்கள். **'களஞ்சியங்களை எல்லாம் திறந்து'** வேண்டிய சகாயம் செய்வார். வேறெங்கும் பரிசுத்தம் கிடையாது. பொறுமை, அன்பு, இச்சையடக்கம், வல்லமை வேறெங்கும் கிடையாது. ஏனென்றால் 'சகல பரிபூரணமும் அவருக்குள் வாசமாயிருக்கிறது.'

2. **அந்தப் பரிபூரணம் நமக்காக வைக்கப்பட்டிருக்கிறது.** 'சகல பரிபூரணமும் அவருக்குள் வாசமாயிருக்க தேவனுக்குப் பிரியமாயிற்று.' ஏன்? என்னத்துக்கு? ஆ! பாருங்கள்! விசுவாசிகளாகிய நாம் அதை அடைந்துகொள்ளவும், பெற்றனுபவிக்கவும் அந்தப் பரிபூரணம் கிறிஸ்துவுக்குள் வைக்கப்பட்டது. **அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லா**



**ரும் கிருபையின்மேல் கிருபை பெற்றோம்.'** (யோவா. 1. 16). மூலபாஷையில் இதை வாசித்துப்பார்த்தால் அதிகத் தெளிவாய் இருக்கிறது.' **'அவருடைய பரிபூரணத்திலிருந்து நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபை பெற்றோம்'** என்றிருக்கிறது. அவருடைய பரிபூரணத்தில் எடுத்துப் பெற்றநுபவித்தோம் என்று சொல்லலாம். பரிசுத்தவான் எவனும் இப்படியே அறிக்கையிடுவான். அவருடைய பரிபூரணத்திலிருந்து பெற்றேன். இவ்விதமாகப் பரிசுத்தமானேன்' என்று சொல்லுவான். ஆ! சகோதரரே, பரிசுத்தமாகிறதற்கு இதுவே தேவனால் ஏற்படுத்தப்பட்ட முறை. நம்முடைய ஜெப தவங்களால் முடியாது. நம்முடைய முயற்சி பிரயாசங்களால் முடியாது. இயேசுவினாலே மாத்திரமாகும். அவருடைய பரிபூரணத்திலிருந்து நாம் பெறவேண்டும். கிருபையின்மேல் கிருபை நாம் பெறவேண்டும். அவரில் நாம் நிலைத்திருக்கவேண்டும். உங்களுக்கு ஞானபெலன் வேண்டுமோ? ஜெபசிந்தை வேண்டுமோ? பொறுமைக் குணம் வேண்டுமோ? பரிசுத்த சுபாவம் வேண்டுமோ? ஒரு காலத்தில் ஒரு குரு கிறிஸ்து மார்க்கத்துக்கு ஏற்ற சகல நற்குண கிரியைகளைக் குறித்துப் பிரசங்கம் பண்ணினார். வெகு சாதுரியமான பிரசங்கம். அன்பு, தயவு, பொறுமை முதலான சுகுணங்களை எடுத்துக்காட்டி வெகு நேர்த்தியாக வர்ணித்துப் பேசினார். அந்தப் பிரசங்கத்தைக் கேட்ட ஒரு பக்திமான் பிற்பாடு சொன்னது என்னவென்றால் 'ஆம், நல்ல பிரசங்கம்தான். என்றாலும் அதைக்கேட்கும்போது என் மனதில் பட்டது என்னவென்றால் முத்துவியாபாரியை விவாகம் செய்து என் சொந்தமாக்கிக்கொள்வேன், அப்பால் அவருடைய முத்துக்களும் ரத்தினங்களும் எல்லாம் என்னுடையதாகும், கிறிஸ்துநாதரோடு ஐக்கியப்பட்டு அவரில் நிலைத்திருந்தால் அவருடைய பரிபூரணத்தில் நின்று அன்போ, தயவோ, பொறுமையோ சகலத்தையும் பெற்றநுபவிக்கலாமே' என்பதாக தெரியப்படுத்தினான். என் பிரிய சகோதரரே, இதுவே பரிசுத்த ஜீவியம். கிறிஸ்துவின் பரிபூரணத்திலிருந்து பெறுகிறது; தினந்தோறும் பெறுகிறது; நிமிஷந்தோறும் பெறுகிறது. மென்மேலும் பெறுகிறது.

3. **கிறிஸ்தவனுடைய பரிசுத்தம் தன்னால் உண்டாகாமல் இன்னொருவர் கொடுக்க அவன் பெற்றுக்கொள்ளும் பரிசுத்தம்.** எந்தக் கிறிஸ்தவன் என்றாலும் அவன் தன்னிலே பரிசுத்தமுள்ளவனல்ல. அவன் பரிசுத்தம் சுயமாய் உண்டாகவில்லை. **'அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்'** (1 கொரி. 1. 31). இதிலே அநேகம்பேர் தவறிப்போகிறதுண்டு. தங்களுக்குச் சுயநீதியில்லை என்று ஒப்புக்கொள்ளுவார்கள். நீதிமானாக்கப்படுவதற்கு இயேசுவை நம்பிப் பற்றிக்கொள்ளவேண்டுமென்று அறிவார்கள். அதிலே சுயமுயற்சியும் சொந்தக் கிரியைகளும் உதவாது என்று உணருகிறார்கள், என்றாலும் பரிசுத்தமாவதற்காக சுயமுயற்சி உதவும், சுயகிரியைகள் மெத்த அவசியம் என்று

நினைக்கிறார்கள்: தப்பிதம். 'அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியு மாத்திரமல்ல, பரிசுத்தமுமானார்' என்று வாசிக்கிறோம். எந்தவிதமாய் நீதிக்காக வெறுமையுள்ளவர்களாய் இயேசுவினிடத்தில் வந்து அதை விசுவாசத்தால் பெற்றுக்கொண்டோமோ அவ்விதமாகவே பரிசுத்தத்துக்காகவும் இயேசுவினிடத்தில் வந்து அதைப் பெற்றுக்கொள்ளவேண்டும். திராட்சக் கொடியைக் கவனித்துப்பாருங்கள். அவைகளின் ஜீவன் சாரம் கனி அலங்காரம் எங்கேயிருந்து வந்தது? திராட்சச் செடியிலிருந்து அல்லவா? கொடியானது தன்னிலே பெலனுள்ளதுமல்ல. அழகுள்ளதுமல்ல. அதற்குச் சுயஜீவன், சுயசாரம், சுயகனி யாதொன்றுமில்லை. நவகிரகங்களையும் கவனித்துப்பாருங்கள். அவைகளின் உயிரும் ஒளியும் சூடும் எங்கேயிருந்துவந்தது? சூரியனிலிருந்து அல்லவா? அவைகளில் சொந்த ஒளியாவது உஷ்ணமாவது கிஞ்சித்தேனுமில்லை. அப்படிப்போல கிறிஸ்தவனுடைய ஞானமும் நீதியும் பரிசுத்தமும் முழுவதும் இயேசுவினிடத்திலிருந்து வந்தது.

அநேக வருஷங்களுக்குமுன் ஜெர்மனி தேசத்தில் ஒரு ராஜா இருந்தான். அவன் ராஜ்யம் அதிகாரம் எல்லாம் அந்தக்காலத்திலிருந்த சக்கரவர்த்தி அவர்களால் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. இதை உணராமல் தன்னுடைய ராஜ்யம் சுயாதீனராஜ்யம்; தன்னுடைய அதிகாரம் சுய அதிகாரம் என்று மேன்மைபாராட்ட ஆரம்பித்தான். அப்பொழுது சக்கரவர்த்தி பெரிய சேனையோடு வந்து அந்த ராஜாவை ஜெயித்துக் கீழ்ப்படுத்தினார். கீழ்ப்படுத்தினது மாத்திரமல்ல. அவன் அதிகாரத்தை எல்லாம் எடுத்துக் கொண்டார். பின்பு தன்னுடைய ராஜ்யபாரம் திரும்பக் கிடைக்கத்தக்கதாக அந்த ராஜன் சக்கரவர்த்தியினுடைய சந்நிதானத்தில் வந்து அவர் பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து தனக்குச் சொந்த அதிகாரம் ஒன்றுமில்லை என்று ஒப்புக்கொண்டு மேலானவருடைய கையில் அவருடைய உத்தரவின்பேரில் தன்னுடைய ராஜ்யத்தையும் அதிகாரத்தையும் பெற்றுக்கொள்ளவேண்டியதாயிருந்தது. பிரியமானவர்களே! உங்களைப் பரிசுத்தப்படுத்த உங்களால் கூடுமென்று நீங்கள் எண்ணினதுண்டா? 'எங்களுக்கு சுயசக்தி; சொந்த பெலன் உண்டு, கொஞ்சமாகிலும் உண்டு' என்று நீங்கள் நினைக்கிறதில்லையா? அப்படிப்பட்ட வீண்நினைவுகளை விட்டுவிடுங்கள், கிறிஸ்துநாதருடைய பாதத்தில் விழுந்து உங்கள் சுயாதீனத்தை விட்டுவிட்டு அவர் கொடுக்கும் பெலனைப் பெற்றுக்கொள்ளுங்கள். அவரையே உங்கள் பரிசுத்தமாகுமென்று அறிந்துகொள்ளுங்கள்.

இப்பொழுது மூன்று காரியங்களைப் பார்த்தோம்; கிறிஸ்தவர்களாகிய நமக்கு சுயபரிசுத்தம் ஒன்றுமில்லை என்றாலும் சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள் வாசமாயிருக்கிறது. மேலும் இந்தப்பரிபூரணம் நமக்காக வைக்கப் பட்டிருக்கிறதென்று கவனித்தோம். ஆகையால் என்ன? பரிசுத்த



மாகவேண்டுமானால், தேவனுக்கேற்ற கனி கொடுக்கவேண்டுமானால் நாம கிறிஸ்துவுக்குள் இருக்கவேண்டும். நாம் அவரிலே நிலைத்திருக்கவேண்டும். அதினாலேதான் "என்னில் நிலைத்திருங்கள்" என்கிறார்.

படிப்பினையாக இரண்டு காரியங்களை மாத்திரம் சொல்லுகிறேன்.

**1. பரிசுத்த ஜீவியம் செய்ய கிறிஸ்துவில் நிலைத்திருங்கள்.** 1 யோவான். 1. 7; 3. 16; **"அவருடைய குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவின் ரத்தம் ..... நம்மை சுத்திகரித்துக்கொண்டிருக்கிறது."** பரிசுத்த நிலைமை இதுவே ;— கிறிஸ்துவின் ரத்தம் நிமிஷந்தோறும் நம்மைச் சுத்தம் பண்ணிக்கொண்டிருக்கும்படிக்கு அவரிலே இடைவிடாமல் நிலைத்திருப்பது. சீமை தேசத்தில் ஓர் தெப்பக்குளத்தை அறிவேன். அடிக்கடி அதிலே குளித்துமிருக்கிறேன். அதின் பக்கத்தில்— மலையிலே ஒரு நீரூற்றுண்டு. அந்த ஊற்றிலிருந்து சுத்த ஜலம் எப்போதும் ஓடிக்கொண்டிருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக அல்ல. அதிகமாய் ஏராளமாய் தாராளமாய் அந்தத் தெப்பக்குளத்தில் ஓடி அதின் வழியாய்ச் சென்று போகிறது. இப்படியாக அந்த சுத்தத் தண்ணீரின் வெள்ளமானது இடை விடாமல் ஓடிக்கொண்டே வருவதால், அந்தத் தெப்பக்குளத்தில் அழுக்கு அசுத்தம் யாதொன்றுமில்லை. அதை எங்கே பார்த்தாலும் பளிங்கு போல சர்வ சுத்தமாய்த் தோன்றுகிறது. காரணம் என்ன? மலையிலிருந்து ஊறும் ஜலமானது பெரிய வெள்ளமாக நிமிஷந்தோறும் இடை விடாமல் அதின் வழியாய் ஓடிக் கொண்டே வருவதால் அல்லவா? சீமை தேசத்தில் இன்னொரு தெப்பக் குளத்தை அறிவேன். அது ஓர் பெரிய பட்டணத்திலுண்டு. வாரத்துக்கு ஒரு விசை மாத்திரம் அதிலே புது ஜலம் ஓடும். அநேகம் பேர் அதிலே குளித்து வருகிறார்கள். ஆதலால் வாரத்தின் கடைசி நாட்களில் அதின் தண்ணீர் அசுத்தமாகும். வாரந்தோறும் கெட்ட தண்ணீரை எடுத்து அந்தக் குளத்தை சுத்தம் பண்ணி அதிலே புது ஜலத்தை விடுகிறார்கள். இந்தத் தேசத்திலே சில தெப்பக்குளங்களை அறிவேன். அதிலிருந்து அழுக்கை எடுத்து அதைச் சுத்தம் பண்ணி அநேக வருஷம் ஆயிற்று. அதினாலே தண்ணீரின் துர் நாற்றம் எந்தப் பக்கத்திலும் அடிக்கிறது. ஆ! சகோதரரே, ஏகதேசம் மாத்திரம் சுத்தி கரிக்கப் படுவது போதாது. அல்லது வாரத்துக்கு ஒரு விசை மாத்திரம் பரிசுத்த ஓய்வு நாளிலே இயேசுவோடு ஐக்கியப் படுவதும் சுத்தம் பெறுவதும் சரியல்ல. அந்த முதலாம் தெப்பக்குளத்தைப் போல சுத்தம் செய்யும் அந்த வெள்ளத்தோடு இடைவிடாமல் சம்பந்தப் படவேண்டும். ஏகதேசம் என்றல்ல வாரத்துக்கு ஒரு விசை மாத்திரமல்ல. இயேசுவில் எப்போதும் நிலைத்திருக்கவேண்டும்: பிரியாத ஐக்கியம்; இடைவிடாத சம்பந்தம்!

**2. மிகுந்த கனியைக் கொடுக்க கிறிஸ்துவில் நிலைத்திருங்கள்.** (யோவா. 15. 5), லண்டன் பட்டணத்தில் நம்முடைய ராணியவர்களு

டைய அரமனையைச் சேர்ந்த தோட்டத்தில் ஒரு பெரிய திராட்சச்செடி உண்டு. அதைப் பார்த்திருக்கிறேன். அதின் விசேஷம் என்னவென்றால் மிகுந்த கனியைக் கொடுக்கிறது. வருஷத்துக்கு ஆயிரம் இரண்டாயிரம் திராட்சக் குலைகள் அதிலே இருக்கும். முதல் தரமான கனி. அதைப் பார்த்தால் மெத்த சேர்த்தியாய்த் தோன்றும். பழங்கள் எல்லாம் குலை குலையாக அதிலே தொங்குகிறது. இத்தனை கனிகளைக் கொடுக்கிறதற்கு முகாந்தரம் என்னவென்று பரிசோதித்துப் பார்த்தார்கள். பார்க்கும்போது, அந்தச் செடியின் வேர் பூமியிலே வெகுதூரம் ஓடி (Thames) தேம்ஸ் என்னும் நதியோரமாயுள்ள மண்ணிலே ஊன்றி அந்த நதியின் தண்ணீரை எப்போதும் உட்கொள்ள அந்தச் செடியானது சாரத்தினாலே நிறைந்து செழித்து ஓங்கித் திரளான கனிகளைக் கொடுக்கிறது என்று அறிந்துகொண்டார்கள். அந்தச் செடியின் வேரானது எப்போதும் நல்ல தண்ணீரில் நிலைத்திருப்பதால் மிகுந்த கனியைக் கொடுக்கத்தக்க பெலன் உண்டாகிறது என்று பார்க்கிறோம். அப்படிப் போலவே நாம் கனி கொடுக்கவேண்டுமானால் வேறே வழி இல்லை. இயேசுவில் நாம் நிலைத்திருக்கவேண்டும். யோபு. 29. 19,20 க்காணவும். ஆ! அநேகம் பேர் கனி கொடாத காரணம் இதுவே. கிறிஸ்துவில் அவர்கள் நிலைத்திருப்பதில்லை, திராட்சக் கொடியைக் கேட்டு விசாரிப்போமாக. 'கொடியே, நீ மெத்த சின்னது என்றாலும் மிகுந்த கனியைக் கொடுக்கிறாய். காரணம் என்ன? என்று நாம் கேட்டால் அந்தக் கொடியானது 'நான் பெரிய காரியங்களைச் செய்கிறதில்லை. கனிகொடுக்க நான் பிரயாசைப்படுவதுமில்லை. செடியிலே நிலைத்திருக்கிறேன். அதின் உயிர் என்னில் நன்றாய்ப் பிரவேசிக்கிறது. அதின் சாரம் என் வழியாய் ஏறி கனிபாகத்தோன்றுகிறது. வேறே ஒன்றுமில்லை' என்று சொல்லும் அல்லவா? ஆ! பாருங்கள் கிரியை வேறே. கனிவேறே. நம்முடைய சொந்தப் பிரயாசத்தால் கிரியை செய்யலாம். ஆனாலும் நாம் எவ்வளவாய்ப் பிரயாசப்பட்டாலும் கனியை உண்டாக்கமல் முடியாது. ஒரு குரு இருக்கிறார். அநேக பிரசங்கங்களைப் பண்ணுகிறார். ஜாக்கிரதையோடு வேலைசெய்கிறார்., சபைகளை மேல் விசாரிக்க அதிக தூரம் நடந்து போகிறார் என்றாலும் ஜெபத்தினாலும் தியானத்தினாலும் விசுவாசத்தைக்கொண்டு இயேசுவில் நிலைத்திராவிட்டால் அது கனி அல்ல. வீண் பிரயாசையே, திரும்பச்சொல்லுகிறேன். கிரியை வேறே கனி வேறே. செடியின் சாரத்தினால் உண்டானதே கனி. நாம் கிறிஸ்துவில் நிலைத்திருந்து தினந்தோறும் தேவாவி என்னும் பரிசுத்த சாரத்தை அவரிடத்திலிருந்து பெற்றுக்கொண்டு அந்த சாரத்தின் பெலனால் நாம் செய்கிற கிரியைகள் மாத்திரம் கனியாம். மற்றப்படி நம்முடைய சுய சக்தியால் நாம் நடப்பிக்கிற ஏராளமான பிரயத்தனங்கள் எல்லாம் விருதாவான வேலை.

Rev. T. Walker.



## புதிதாகுதலின் வழி.

பாவம். உலகத்தில் பாவமானது துன்பம், துக்கம், வறுமை, வியாதி முதலானவைகளுக்குக் காரணமாயிருக்கிறது. அநேக ஜனங்கள் வெளித்தோற்றத்துக்கு வெகு நல்லவர்களும் நன்மைசெய்கிறவர்களுமாகக் காணப்படலாம். ஆனால் உள்ளாகவோ பாவத்தினால் நிறைந்து அதின் வல்லமையிலிருந்து விடுவிக்கப்படாதவர்களாயிருக்கிறார்கள். உலகத்தின் பாவம் எவ்வளவு பெரிதாயிருக்கிறதென்பதைத் திருச்சபையானது உணரவேண்டியது அதிக அவசியமாயிருக்கிறது.

கிறிஸ்துவாலல்லாமல் சோதனையில் ஜெயமும், அசுத்தம் நீங்க சுத்திகரிப்பும், நிலையான சமாதானமும், நித்தியஜீவநம்பிக்கையும் சத்தியத்தைப் பற்றிய அறிவும், தேவனிடத்தில் சேரும் வழியும் கிடையாது. உலகம் பொல்லாங்குகளுக்குள் கிடக்கிறதைக் குறித்தும் கிறிஸ்துவால் உலகத்துக்குக் கிடைக்கக்கூடிய இந்நன்மைகளைக் குறித்தும் நாம் அமைதியாயிருந்து தியானிப்போமானால், இவை எல்லாவற்றையும் அறிந்திருக்கிற ஒருவர் இருக்கிறாரென்பது நமது ஞாபகத்துக்குவருகிறது. 'அவர்கள் இடுகிற கூக்குரலைக்கேட்டேன். அவர்கள் படுகிற வேதனைகளை அறிந்திருக்கிறேன். அவர்களை விடுதலைபாக்க இறங்கினேன்' என்று அக்காலத்தில் இஸ்ரவேல் ஜனங்களைக் குறித்து சொன்ன ஆண்டவர் இக்காலத்திலும் நம்மைக்குறித்து அப்படியே சொல்லுகிறார். ஆனால்! அவர் அவர்கள் கூக்குரலைக் கேட்டு வேதனைகளை அறிந்திருக்கிறாரென்பதை அவருடைய ஊழியக்காரனாகிய மோசே அவர்களுக்குச் சொன்னபின்தான் அவர்கள் அறிந்தார்கள். அதுபோல் இக்காலத்திலும் எல்லாவற்றையும் அறிந்திருக்கிற ஆண்டவரைப்பற்றி அவருடைய பிள்ளைகள் மற்றவர்களுக்கு அறிவியாவிட்டால் அவர்கள் அவரை அறியமாட்டார்கள்.

நம்முடைய தேசத்தைச் சற்றே கவனிப்போம். அதில் எவ்வளவு ஜாதி வித்தியாசம், எவ்வளவு ஜாதிப்பெருமை, ஒருவருக்கொருவர் எவ்வளவு விரோதங்கள் காணப்படுகிறது. அக்கிரமும் வேசித்தனமும் அதிகப்படுகிறது. கோயில் தாசிகளின் தொகை அதிகரிக்கிறது. வியாதி வறுமை என்பவைகள் முன்னைவிட இப்போ அதிகமாய்த் தேசத்தில் காணப்படுகிறது. இப்பேர்ப்பட்டவைகளிலிருந்து ஒரு தேசத்தை விடுவிக்க மனிதனால் ஏற்படுத்தப்பட்ட எந்தச் சட்டத்தினாலும் அல்லது எந்த முயற்சியினாலும் கூடாது. நெருக்கப்பட்டு ஒடுக்கப்படுகிறவர்கள் வியாதியால் வருந்துவோர், மனம்நொந்து அயர்ப்படுவோர் இப்பேர்ப்பட்டவர்களுக்கு நம்பிக்கையும் சமாதானமும் எங்கிருந்து வரும்? தேசாபிமானம் ஒரு தேசத்தை இரட்சிக்கக்கூடுமோ? இந்தியா தேசத்தை உயர்த்தி. பழைய ஜீவியத்திலிருந்து அதைச் சுத்திகரித்து அதைப் புதுப்பிக்கக்கூடிய வல்லமை எங்கேயிருக்கிறது?

தற்காலத்தில் கீழ் தேசங்கள் எல்லாவற்றிலும் ஒருவகையான மாறுதல் காணப்படுகிறது. அறிவு அதிகப்படுகிறதினால் பழைய வழக்கங்களை விட்டுவிட்டு புதுவிதமாய் ஜீவிக்க ஆரம்பிக்கிறார்கள். ஜீவியத்திற்குப் புதிய நோக்கம் உண்டாகிறது. பெண்களுடைய நிலமை சீர்ப்படுகிறது. மார்க்க விஷயமாயும் தாங்கள் வணங்கிவந்த விக்கிரகங்களெல்லாம் தங்களைத் திருப்திசெய்யக்கூடாதவைகளென்று கண்டுகொண்டதால் அவைகளை விட்டுவிட்டு மெய்வழியைக் கண்டுகொள்ளவேண்டுமென்று பிரயாசப்படுகிறார்கள். இத்தேசங்களில் கிறிஸ்துவின் வல்லமை வெகு சொற்பப்பேரில் மாத்திரம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த வல்லமையை கிறிஸ்துவை அறியாத பலர் பார்த்து, 'இந்தக் கிறிஸ்துமார்க்கத்தில்தான் நமக்கு அவசியமான வல்லமையும் புது ஜீவனும் இருக்கிறதோ?' என்று ஆராய்ச்சிசெய்கிறார்கள். பின்னும் அவர்கள் 'கிறிஸ்தவ தேசங்களில் இந்தக் கிறிஸ்து மார்க்கம் என்ன சீர்திருத்தம் உண்டாக்கியிருக்கிறது. நமக்கவசியமான மாறுதல்களை அது அவர்களில் உண்டாக்கியிருக்கிறதா?' என்றும் கேட்கிறார்கள். இப்படி அவர்கள் கிறிஸ்தவர்களை நோக்கிப்பார்க்கிறது இயல்புதான். அவர்கள் கிறிஸ்தவர்களில் என்னத்தைக் காண்கிறார்கள்? கீழ் தேசங்களில் கிறிஸ்துமார்க்கம் அதிகமாய்ப் பரம்பாததற்குக்காரணம் கிறிஸ்து சபையில் காணப்படும் உத்தமம் இன்மையே என்று வெட்கத்தோடே நாம் சொல்லலாம் அல்லவா? ஒரு இந்திய தனவான் தன் மகன் தன்னிடமிருந்தால் அவன் கிறிஸ்தவனாகிறதற்குரிய ஏதுக்கள் அங்கிருக்கிறது. ஆகையால் பயந்து, என் மகனை லண்டன்பட்டணத்துக்கு அனுப்பினால் அவன் கிறிஸ்தவனாகமாட்டான் என்று சொல்லி அவனை லண்டன் பட்டணத்துக்கு அனுப்பினானாம். ஐயோ! கிறிஸ்துமார்க்கத்துக்கு என்ன அவமானம்! கிறிஸ்துவின் இராஜ்ஜியம் பரம்புவதற்குத் தடை புறமதஸ்தர்களில்லை; கிறிஸ்தவ சபையிலேயேயிருக்கிறது. உலகத்தின் நன்மைக்காகவும், நம்முடைய தேசத்தின் நன்மைக்காகவும், நமது நன்மைச்ககவும் நமக்குள் மார்க்க எழுப்புதல் உண்டாகவேண்டியது அதிக அவசியமாயிருக்கிறது.

### தியானித்து ஜெபம் செய்யவேண்டிய விஷயங்கள்.

சில நிமிஷங்களுக்கு உன் மனதை அடக்கி தேவனையே நோக்கி அமர்ந்திரு. சிலருக்கு இது அதிகக் கஷ்டமாயிருக்கலாம். ஆனால் பரிசுத்த ஆவியானவர் உனக்கு உதவிசெய்வார்.

பயபக்தியான ஒரு காரியத்தைப்பற்றி கொஞ்சம் சிந்தித்தோம். நம்மில் காணப்படும் தப்பிதம் என்னவென்றால் பாவத்தையும் அதினால் விளையும் தீமைகளையும் நாம் இலேசாய் எண்ணுகிறோம். பரிசுத்த ஆவியானவர்தான் அதின் பயங்கரத்தை நமக்கு உணர்த்தவேண்டும். ஆகையால் தாழ்மையாய் முழங்கால்படியிட்டு அவருடைய உதவியைத் தேடு. தேவன்



பாவத்தைப் பற்றிக்கொண்டிருக்கும் அதே எண்ணங்களை அவர் உனக்கும் கொடுக்கும்படி அவரைக் கேள். பரிசுத்த ஆவியானவரின் உதவியினால் தேவன் எவ்வளவு பரிசுத்தமானவர் என்பதை அமைதியாய்த் தியானம் பண்ணு. இது இலேசானதல்ல. ஆனால் ஆவியானவர் உன்க்கு உதவி செய்வார்.

தேவன் உண்டாக்கின மனிதருக்குள் பாவம் நடப்பித்திருக்கும் பயங்கர கிரியைகளைச் சிந்தித்துப்பார்.

உன்னுடைய பாவங்களையும் யோசித்துப்பார்.

தேவனே, உண்மையில்லாத எல்லாக் காரியங்களிலுமிருந்து என்னை இரட்சியும். நான் அறியக்கூடிய அளவு உம்மையும் உம்முடைய பரிசுத்தத்தையும் எனக்கு வெளிப்படுத்தும். பாவத்தின் பயங்கரத்தையும் எனக்கு உணர்த்திக்காட்டும். என்னுடைய பாவங்களையும் எனக்கு எடுத்துக்காட்டும். உலகத்தை நீர் பார்க்கிற பிரகாரம் நானும் காண நீர் கிருபை செய்யும். கர்த்தாவே பாவம் என் முகத்தை மூடியிருக்கிறபடியால் நான் அதிகமாய் வெட்கப்படுகிறேன். என்மேல் கிருபையாயிரும், சுவாமி இயேசு கிறிஸ்துவின் நிமித்தமே ஆமென்.

---

## இரக்ஷிப்பின் அதிபதி

எபிரேயர் 2: 10.

ஐயோ பாவம்! என்று பலர் வாயிலிருந்து பல சமயங்களில் வருகிறதுண்டு. ஆம் உலகத்திலுண்டான சகல கேட்டுக்கும் நிர்ப்பந்தத்துக்கும் காரணம் பாவம்தான். 'பாவத்தின் சம்பளம மரணம்' 'பாவஞ்செய்கிற ஆத்துமா சாகும்'. தான் சாக மனுஷன் சாப்பிடுகிற விஷம் பாவமே. தன் சுகத்துக்கும் சந்தோஷத்துக்கும் கேடாய் நடந்துகொள்ளுகிறவன் யார்? பாவத்தில் பழகினவன்தானே. தன் பேரையும் புகழையும் கெடுக்கிறவன் யார்? பாவத்தில் பலக்கிற பாவிதானே. ஐயோ, மனுஷனின் முகம் அடிக்கடி வாடியிருக்கிற காரணமென்ன? அவன் உள்ளம் கலங்கி மனம் பதைக்க நேருகிற நிமித்தமென்ன? பாவம்தானே, அதுமாத்திரமா? உலகத்தில் எத்தனை கசப்பு, அங்கலாய்ப்பு, நோவு, நொம்பலம், பாடு, மரணம், துன்பம் துயரம், அழுகை, கண்ணீர், சாவு, சஞ்சலம், பசி, பட்டினி, யுத்தம், பஞ்சம் இவற்றிற்கெல்லாம் காரணம் என்ன? பாவமே. ஐயோ! நான் என்ன செய்வேன் சுவாமி. பாவ மரண சரீரத்திலிருந்து தவிக்கிறேனே, பாவம் என்னைப் பங்கப்படுத்துகிறதே, செத்த மனுஷனை என் தேகத்தில் சுமக்கிறவன்போலிருக்கிறேனே. என் பாவம் நாற்றமெடுக்கிறதே. பாவகுஷ்டம் என்னை பதைபதைக்கச்செய்யுதே. பாவத்திமிர் பிடித்து பரமபாதை செல்லக்கூடாதவனாயிருக்கிறேனே. பிசாசு என்னை ஏமாற்றிவிட்டானே. பாவம் என்னை ஆண்டுகொண்டதே. பாவத்துக்கும் உலகத்துக்கும் பேய்க்கும்

அடிமையானேனே. பாவச்சிறைக்குள்ளிருந்து பரிதபிக்கிறேனே என்று பலவாறாய் மனுஷனை அங்கலாய்க்கச்செய்கிறதென்ன? பாவமே.

இதுவுமன்றி தேவனையும் மனுஷனையும் பிரிக்கிறதும் பாவமே. மனுஷனுக்குத் தேவன் கொடுத்த தேவசாயல் பாவத்தால் மங்குகிறது. திவ்விய சுபாவம் தீயசுபாவமாய்த் திரும்புகிறது. ஞானம் பரிசுத்தம் பாக்கியம் மாறி, அறிவீனம், அசுத்தம் நிர்ப்பாக்கியமென்றாகிறது. உன்னத நிலைமைக்குரிய மனுஷன் ஈனத்தனமானவனாகிறான். புகழ்ச்சிக்கும் பெருமைக்குமுரியவன் இகழ்ச்சிக்கும் நிந்தைக்கும் இலக்காகிறான். அருளடையவேண்டியவன் இருளடைகிறான். வானத்துக்குரியவன் பாதாளத்துக்குரியவனாகிறான். உயர்ந்து ஜீவிக்கவேண்டியவன் தாழ்ந்து தணிந்து கீழான ஜீவியம் செய்கிறான். இப்பேர்ப்பட்ட நிர்ப்பந்த நீசப்பாவிகளை ரக்ஷிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தாரென்பது எவ்வளவு சந்தோஷமான காரியம்! இந்த இயேசுநாதரைப்பற்றிக் கொஞ்சம் சிந்திப்போம். இரக்ஷிப்பின் அதிபதியாகிய இயேசு நமக்கு ரக்ஷணிய அவதாரியாகவும், ரக்ஷணிய உபகாரியாகவும், ரக்ஷணிய அதிபதியாகவுமிருக்கிறாரென்ற மூன்று காரியங்களைச் சிந்திப்போம்.

I. **ரக்ஷணிய அவதாரி** எபி, 2: 14. பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையுமுடையவர்களாயிருக்க அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையுமுடையவரானார். மனிதனாகிறதற்குமுன் இயேசுநாதர் எப்படிப்பட்டவராயிருந்தார்? பாருங்கள். 'அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும் சர்வசிருஷ்டிக்கும் முந்தினபேறுமானவர். ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. பூலோகத்திலுள்ளவைகளும், பரலோகத்திலுள்ளவைகளும், காணப்படுகிறவைகளும், காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும் சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர். எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது கொலோ 1: 15—17. ஆதிவஸ்தாகவும் தேவவஸ்தாகவும் ஜீவவஸ்தாகவும் காரணவஸ்தாகவும் (யோவா 1: 1—3) இருந்த இயேசுநாதர் நம்மைப்போல நீசமனுஷக்கோலமானார். நாம் தேவனைக் காணக்கூடாதவர்களும் தேவனிடம் சேரக்கூடாதவர்களாயிருந்தபோது தேவன் எப்படிப்பட்டவர் என்று நமக்குக் காண்பிக்கவும் தேவனிடம் நம்மைச் சேர்க்கும் ரக்ஷகராயிருக்கவும் மனுஷாவதாரமானார். 'அந்த வார்த்தை மாமிசமாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம்பண்ணினார்' தேவகுமாரனாகிய அவர் மனுஷகுமாரனானார். அதாவது மனிதராகிய நம்மில் ஒருவரானார். பாவியாகிய எனக்குமுனக்கும் ஏற்றவரானார். அவர் தாமே சோதிக்கப்பட்டு பாடுபட்டதினாலே அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார். எபி. 2: 18. நீ சரியான மனுஷனாய்த் திரியாதபடி



உன்னைத் தடுக்கிற உன் குறைவையெல்லாம் அவர் அறிவார். உன்னைக் குறைவுபடுத்தும் பாவத்தையறிவார். நீ குன்றின மனுஷனாய்க் காணப்பட உன்னைப் பங்கம்பண்ணுகிற உன் பெலவீனத்தை அறிவார். உன் கஷ்டமோ நஷ்டமோ நோவோ நொம்பலமோ சோதனையோ வேதனையோ யாவுமறிவார், ஆ இந்தப் பரமநேசர் நீ பாவியானதினால் அசட்டைபண்ணி உன்னைத் தள்ளிவிடுவாரோ. உன் பாவத்தையும் கேவலத்தையும் பார்த்துக் கேலிபண்ணுவாரோ. உன் நிர்ப்பந்தத்தை வேறு யாரிடத்திலும் சொல்லிக்காட்டுவாரோ. இல்லவே இல்லை. உன் பாவங்களை மன்னித்து உன் நோய்களை குணமாக்குகிற ரக்ஷகர் அவரே. பதினாயிரம்பேரில் சிறந்த இயேசுநாதர் பாவியை நேசிக்கும் பட்சமுள்ள நாயகராயிருக்கிறார். அவரே ஆத்துமநேசர். ஆவிக்கினிய அருமையுள்ள தோழர் இன்பம் பொங்கும் இனிய சகவாசர் கண்ணீர் துடைக்கும் கருணை வாசகர், அருள்மொழி உதடுள்ள ஆனந்த தேசிகர், அற்புதநாதர், அன்பின் வள்ளல், கண்மணிபோல் உன்னைக் காக்கும் கண் தூங்காக் காவலர். வழிக்குத்துணையாய் வந்துநிற்கும் வேதவிளக்கு. உன் பாவத்தை மன்னித்து உன்னைச் சுத்திகரித்து தம்முடைய சாயலைத் தரித்து தம்முடைய ஆவியை உனக்குத் தருகிறவரும் அவரே. அவரை நேசிக்கிற பாவியே, அவருடைய உண்மையுள்ள அடியானே, நீ 'அவருக்கு மெத்தப் பிரியமானவன் என்றறிந்துகொள். அவருக்கு நீ சொந்தம், உனக்கு அவர் சொந்தம், நீ அழ அவர்சகியாது. நீ மனம் வாட அவருள்ளம் நோகாமலிராது உன்னை யாரும் துன்பப்படுத்துகிறார்களோ உன் இயேசு தன்னைத் துன்பப்படுத்துகிறதாய் எண்ணுகிறார். யாருமுன்னைக் கேலிபண்ணுகிறார்களோ உன்னையல்ல தன்னைக் கேலிபண்ணுகிறதாய் நினைக்கிறார். உன்னைத் தொடுகிறவன் தன் கண்மணியைத் தொடுகிறானென்கிறார், நீ அவரைத் தேடுகிறாயோ அக்ஷணமே அவருனக்குத் தென்படுவார். நீ கூப்பிட்டால் உடனே கேட்பார். நீ எட்டிப்பார்க்கும்போது உன் கண்முன் நிற்கிறார். 'ஆ இயேசுவே நீர் எனக்கு எல்லாமாயிருக்கிறீர், நீர் ஒருவர் எனக்கிருந்தால் போதும். உம்மையல்லாமல் உலகத்தில் எனக்கென்ன வாஞ்சையுண்டு. சுவாமி, பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு வேறே விருப்பமேது? சுவாமி, நீரே என் துன்பத்தில் இன்பம், என் தொல்லையில் துணை. பிரியாச் சம்பந்தமாய் நானும்முடையவனானேன். உம்மை அறிவதே எனக்கு நித்திய ஜீவன், உம்மைச் சேவிப்பதே மெய்ச்சுயாதீனம்' என்று சொல்லு. அன்பினவதார அருமையுள்ள இயேசு உலகத்திலிருந்தபோது எப்படிப்பட்டவராயிருந்தாரென்று தெரியுமா? உன்னைப்போலும் என்னைப்போலும் குறைவுள்ள பாவிகளைத்தேடி அலைந்து கண்டுபிடித்து தம் கிருபை அளித்து வந்தார். பின்னும் அவர் எப்படிப்பட்டவரென்றால், பேதைகளுக்குப் போதகன், பிணியாளிகளுக்கு வைத்தியன், சீஷருக்குச் சற்குரு, எளியவர்க்குபகாரி, ஏதுமற்றவர்க்குறவாளி, நண்பர்க்கு நேசன், விரும்பினோ

ர்க்கு விருந்தாளி, பிச்சைக்காரருக்குப் பொக்கிஷதார், ஆடுகளுக்கு மேய்ப்பன், பாவத்துக்குப்பரிகாரி, பாவிகளுக்குப் பிணையாளி, வகையற்றவர்க்கு வக்கீல். இதை வாசிக்கிற சிநேகிதனே! இந்த அன்பின் அவதாரியை உன் சொந்தமாக்கிக்கொள். அவரே உன் இன்பநாயகராயிருப்பாராக.

அன்பினவதாரி ஆத்மநேசரே
இன்பம்பொங்கும் இனிய சகவாசரே
என்றும் உம்அன்பில் யான் கனிந்தொழுக
எனக்கருளும் கிருபை இயேசு நாதரே.

II. ரக்ஷணிய உபகாரி. எபி. 2: 14, 15. மத். 1: 21, ரக்ஷணிய அவதாரியாகிய அன்பின் ஆண்டவர் எனக்காகவும் உனக்காகவும் ரட்சிப்பைச் சம்பாதித்து ரக்ஷிப்பருளுகிற உபகாரியானார். துக்கம் நிறைந்தவரும் பாடனுபவித்தவருமாகிய இயேசுநாதர் நன்மை செய்கிறவராய்ச் சுற்றித்திரிந்த காலத்தில் யாருக்காவது தீமைசெய்தாரோ? இல்லவே யில்லை. அவரால் நன்மைபெற்றவர்கள், அவருடைய உபதேசத்தில் மகிழ்ந்தவர்கள், அவருடைய ஞானத்தை வியந்தவர்கள், அவருடைய அற்புதத்தில் ஆச்சரியப்பட்டவர்கள், அவருடைய அன்பை உணர்ந்தவர்கள் தேசமுழுவதிலுமுண்டு. ஆனாலும் 'நான் ஒருவனாய் ஆலையை மிதித்தேன். ஜனங்களில் ஒருவனும் என்னோடிருந்ததில்லை' (ஏசா. 63. 3.) 'என்றபடி எல்லாரும் அவரைக் கைவிட்டதுபோல காணப்பட்டது. உற்றார் உட்பகையானார்கள். ஊரார் வெருட்டித் துரத்தினார்கள். எருசலேம அவரை இகழ்ந்தது. யூதஜாதி அவரை வேத விரோதி என்றது. சீஷர் பேதகமானார்கள். பிசாசமுழு உக்கிரத்தோடு எதிர்த்து நின்றான், நன்மைபெற்ற மனுஷர் மறைந்துபோனார்கள். தாய் தயங்கி நிற்கிறவளானாள். ஐயோ! வேதபாரகரே, உங்கள் வேதநாயகரை நீங்கள் வெறுத்துவிட்டதென்ன? சதுசேயரே, உங்கள் சற்குருவை நீங்கள் சிந்தையில் வையாததென்ன? பரிசேயரே, உங்கள் பரமபோதகரை விட்டு நீங்கள் பிரிந்ததென்ன? பிரதான ஆசாரிமாரே! நீங்கள் பெருந்துரோகம் செய்து மகாபிரதான ஆசாரியரைப் பழிசெய்ய நினைத்தீர்களோ! தேசாதிபதிகளே உங்கள் அதிபதியைச் சிலுவையில் அறைய ஒப்புவித்துவிட்டீர்களோ? ஆபிரகாமின் மக்களே, ஆசீர்வாத சந்ததியை நீங்கள் அகற்றிப்போட்டீர்களோ? ஐயோ! யூதரே, உங்கள் குலகுருவை குருசிலறைய விட்டுவிட்டீர்களோ. 'சொந்தமானவைகளிலே வந்தார், சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை' என்றபடி நேர்ந்ததாக்கும். 'ஆ! என் இயேசுவே, நீர் அலைந்து திரிந்து நன்மைசெய்தும் எட்டிப்பார்ப்பார் யாருமில்லையோ, மோக்ஷவீடு ஆயத்தம் செய்யவந்த உமக்குத் தலைசாய்க்க இடமில்லையோ, என்றாலும் இழந்துபோனதைத் தேடவும் ரக்ஷிக்கவும் வந்த நீர் சரிவர எல்லாம் நிறைவேற்றினீரே. உமக்கே ஸ்தோத்திரம்' என்று சொல்லு. ரக்ஷணிய அதிகாரியாகிய இயேசு வேதத்தில் எழுதியவைகளையெல்லாம் சரியாய் நிறைவேற்றினார். சாந்தமுள்ள ராஜாவாகப்



பவனிவந்து தம் ராஜரீகத்தைக் காட்டினார். பஸ்காபண்டிகையில் பலியாகும்படி தெரிந்துகொள்ளப்பட்ட பஸ்கா, ஆடானார் பரிசேயர் முதலானவர்களின் வாயை அடைத்து உலக ஞானத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். எருசலேமின் அழிவைக்காட்டி கிறிஸ்து சபையின் நிலையைத் தெரியப்படுத்தினார். நியாயப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்றி கிருபை உடன்படிக்கைக்கு நாயகனானார். யூதர் சங்கம் ரோமதுரையவர்களால் நியாயம் விசாரிக்கப்பட்டவர் சர்வலோகத்துக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் அதிகாரமுடையவரானார். ஏதேனிலுண்டான சாபத்தைக் கெத்சமெனேயில் தீர்த்தார். மனுஷன் தன் அவயவங்களிலே செய்த பாவத்தை தம் அவயவங்களிலேபட்டுத் தீர்த்தார். மரத்தில் விளைந்த பாவம்போக மரத்தில் தொங்கிமரிக்கிறார், பட்டமரம்போன்ற பாவிகளுக்காக பச்சைமரமான அவர் பட்டமரத்தில் சாகிறார். மரங்களுக்குள் ஒளித்த ஆதி மனுஷரின் மக்களுக்காய் சிலுவை மரத்தை அடைக்கலமாக்குகிறார். பிராயச்சித்தப்பலியாகிய கிறிஸ்து சிலுவை யென்னும் பலிபீடத்தில் தகனமாகிறார். பூலோகத்தார் நோக்கிப்பார்க்கத்தக்க ரக்ஷகராக சிலுவையாகிய ஸ்தம்பத்தின்மேல் உயர்த்தப்படுகிறார். பரலோகத்துக்கு நடத்தும் ஏணியாக வானத்துக்கும் பூமிக்கும் நடுவாகத் தொங்குகிறார். உலகமே, பிதா உனக்குக் காட்டிய அன்பைப்பார் என்று சொல்லுகிறவராக கரம் விரித்துக்காட்டுகிறார். பாவியே? உனக்காய் நான் இவ்வளவு செய்தேன் என்னைப்பற்றி உனக்கு கவை இல்லையா என்கிறவராக பரிதபித்து நிற்கிறார்.

இயேசுநாதரே, என் பாடுகளை ஏற்றுக்கொண்ட என் புண்ணியநேசரே என் துக்கங்களைச் சுமந்த என் அன்பின் அவதாரியே, என் மீறுதல்களினிமித்தம் காயப்பட்ட என் பரம உபகாரியே, என் அக்கிரமங்களினிமித்தம் நொறுக்கப்பட்ட உருக்கமுள்ள உத்தமரே, உம்முடைய பாதம் பற்றிப் பிடிக்கிறேன். ஐயா, நீரே என் தஞ்சம அப்பனே, உம அடைக்கலம் தாரும் சுவாமி என்று சொல்லுவாயாக.

III. ரக்ஷணிய சேனாபதி. மரணமடைந்த இயேசு தம் மரணத்தால் மரணத்தின் அதிகாரியை ஜெயித்தார், பாதாளத்திலிறங்கி பாதாளத்தின் திறவுகோலை எடுத்துக்கொண்டார். வேதாளக் கணத்தை பாதாளத்திலடைக்கும் பலம் உடையவரானார். வீணாய்க்கெட்ட மனுஷ ஜென்மத்தை வானாட்டில் சேர்க்கும் வல்லவரானார். வையகமுழுவதையும் தம் சொந்தமாக்கும் வைதீக ராஜனானார். ரக்ஷணிய சேனாபதியாய்க் வெற்றிக்கொள்ளும் கிறிஸ்தவ சேனையின் தலைவரானார். அவரைப் பின்பற்றும் கிறிஸ்தவ அடியான் சிலுவையின் கொடிபிடித்து உலகத்தை ஜெயிக்குமுன் நேசக்கொடி பிடித்து பாவிகளின் நேசனாய்க் காட்டுகிறான்- சத்தியக்கொடி பிடித்து உத்தம சாக்ஷியாகிறான். கர்த்தரே என் கொடி என்று சொல்லி கர்த்தராலேயே ஜெயங்கொள்ளுகிறான். செத்தாலும் கர்த்தருக்கென்று

சாகிறான். பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறான். தனக்கு வருகிற கஷ்டத்தையும் நஷ்டத்தையும் பெரிதாயெண்ணாமல் தன் பிராணனையும் தத்தம்செய்கிறான். நல்லபோராட்டத்தைப் போராடி தன் எஜமானைப்போல் ஜீவகிரீடம் பெற ஆசைப்படுகிறான். இதை வாசிக்கிற சிநேகிதனே நீ இந்தச் சேனையில் உன் பேரை எழுதிவைத்திருக்கிறாயா? கிறிஸ்வின் உண்மையுள்ள சேவகனாய் விளங்குகிறாயா? இந்தியா இயேசுவுக்குச் சொந்தமாகவென்று போர்செய்துகொண்டிருக்கிறாயா? நீ உலகத்தை ஜெயிக்கிறவனானால் உலகம் உன்னை ஜெயிக்காதபடி பார். நீ சாத்தானை ஜெயிக்கிறவனானால் சாத்தான் உன்னை ஜெயிக்காதபடி பார். கிறிஸ்தவ சேனாவீரனே, நீ செல்லுகிற இடமெங்கும் உலகத்தை மேலது கீழதாய்ப் புரட்டுகிறவனாய் விளங்கு. இயேசுவின் வல்லமையைத் தரித்துக்கொள். முழங்காலில் நில். தேவசமுகத்தில் சஞ்சரி. ஆவியானவரால் நிரப்பப்படு. எழும்பிச்செல். பலங்கொண்டு திடமனதாயிரு. திகையாதே, கலங்காதே, நீ போகுமிடமெங்கும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடிருக்கிறார். கர்த்தருடைய சேனை தோல்வி காண்கிற சேனையேயல்ல. சிநேகிதனே இன்று முதல் உன்னைத் திடப்படுத்த உற்சாகமாய் வேலைசெய். 'தேவ ஊழியரின் திவ்விய சுதந்தரம் தருவர். தேவன் சம்பூரணம்' என்ற நம்பிக்கையோடு உழை. நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது' என்று சொல்லத்தக்கவனாய் பிழை.

---

# வேதாகமப் பாடமுறை

## 17—ம் பாடம்.

### சாமுவேலின் முதலாம் புஸ்தகம்.

1. சாமுவேல் 2, சாமுவேல். 1. இராஜாக்கள் 2 இராஜக்கள் 1 நாளாகம் 2 நாளாகமம் ஆகிய இவ்வாகமங்களில் இஸ்ரவேலருடைய இராஜாக்களின் உயர்வும் தாழ்வுமாகிய சரித்திரங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. சாமுவேலின் முதலாம் இரண்டாம் ஆகமங்கள் எபிரேய வேதாகமத்தில் ஒரே ஆகமமே. அவைகள் செப்துவஜின்ற மொழிபெயர்ப்புக்காரரால் இரண்டாகப் பிரிக்கப்பட்டன. அதற்குப்பின் வந்ததிருப்புதல்களிலும் இவ்வாறே இரண்டு ஆகமங்களாக ஒப்புக்கொள்ளப்பட்டன.

**ஆகமத்தின்பெயர்.** பூர்வத்திலிருந்தே இப்பெயர் இவ்வாகமத்திற்கு வழங்கி வந்திருக்கிறது. எப்படி வந்ததென்று நமக்குத்தெரியாது என்றாலும் இதில் சொல்லப்பட்டிருக்கிற சரித்திரத்தில் சாமுவேல் விசேஷித்தவர்.

**ஆக்கியோன்.** இதை எழுதினது சாமுவேலாயிருக்கலாம். ஆனால் திட்டமாய்ச் சொல்லமுடியாது. 1 நாளா. 29: 29 பார்க்க. இவ்வாகமத்தின் ஆக்கியோன் யார் என்பதைப்பற்றி தெளிவான அறிவில்லாத போதிலும்



அவைகளின் சரித்திர உண்மையைபபற்றி யாதொரு சந்தேகமுமில்லை, இதில் எழுதப்பட்டிருக்கும் சரித்திரத்திற்கு புதிய ஏற்பாடும் அத்தாட்சியாக இருக்கிறது. (மத். 12: 3; 4, ஐ 1 சாமு. 21: 1, 6 ஒடு ஒப்பிட்டுப் பார்க்க) அப். 13: 30—22ல் பவுல் அப்போஸ்தலன் தீர்க்கதரிசியாகிய சாமுவேலையும் இஸ்ரவேலின் இராஜாக்களாகிய, சவுல், தாவீதையும் எடுத்துக் கூறுகிறார், எபி. 11: 32ல் தாவீது, சாமுவேல் ஆகிய இவர்களின் பெயர் வருகிறது.

**இவ்வாகமத்தின் முக்கியமான பொருள்.** இஸ்ரவேலுக்கு ராஜ அரசாட்சி ஏற்படுத்தினது, சாமுவேல் தாமே நியாயாதிபதிகளின் வரிசையில் கடைசியானவரும், தாழ்மைசரியான ராஜாவாக மாறினவராகவும் எண்ணப்படலாம். இஸ்ரவேலில் சாமுவேலின் ஸ்தானமும், உத்தியோகமும் விசேஷித்தது, மோசேக்குப்பின் அவரைத் தவிர இஸ்ரவேலில் விசேஷித்த அதிபதி சாமுவேல் தான்.

**இவ்வாகமத்தில் அடங்கியவை:** தனி ஆட்களின் ஜீவிய சரித்திரத்தோடு தேச சரித்திரமுமடங்கியிருக்கிறது. முக்கியமான மூன்று பேர்களாகிய சாமுவேல், சவுல், தாவீது என்பவர்களோடு அவர்கள் காலத்து இஸ்ரவேலரின் சரித்திரமுமடங்கியிருக்கிறது.

**சாமுவேல்.** தேசாபிமானி, நியாயாதிபதி. தாழ்மையான பரிசுத்த இருதயமும், தேவனைச் சேவிப்பதில் கீழ்ப்படிதலான சிந்தையுமுள்ளவன்.

**சவுல்.** தன்னயமும், தன்னிஷ்டமும், பொறாமையுமுள்ள ராஜா. தன் கர்த்தருக்கு முன் குற்றவாளியும், அவிசுவாசியுமானவன்.

**தாவீது.** தேவனுடைய இருதயத்தோடு இசைந்த மனிதன். இஸ்ரவேலில் இனிமையான கவிராயன்,. ஜெபமும் துதியும் செலுத்துகிறவன் பரிசோதிக்கப்பட்டவன், பயிற்றுவிக்கப்பட்டவன், இடுக்கண்களிலிருந்தவன், கடைசியாக இஸ்ரவேல் முழுமைக்கும் முடி சூட்டப்பட்ட ராஜா.

### சாமுவேலின் முதலாம் புஸ்தகம்

| 1 சாமுவேல்—இராஜாக்களின் புஸ்தகம் | | |
|---|---|---|
| சாமுவேல் i—vii | சவுல் viii—xv | தாவீது xvi—xxxi |
| 1. பிறப்பு i–ii<br>2. அழைப்பு iii–iv<br>3. உடன்படிக் கைப்பெட்டி v—vii | 1. தெரிந்தெடுக்கப்பட்டது viii—x<br>2. ஆளுகை xi—xiv<br>3. தள்ளப்பட்டது xv | 1. அபிஷேகம் பண்ணப்பட்டது xvi—xx<br>கோலியாத் xvi<br>சவுல் xviii—xix<br>யோனத்தான் xx<br>2. தேசத்தை விட்டு ஓடுதலும் திரும்பிவருதலும் xxi—xxx<br>3. சவுல், யோனத்தான் என்பவர்களின் மரணம் xxxi. |

I. **சாமுவேல் 1—8** அதிகார சரித்திரங்கள். சாமுவேல் பிறந்த சமயம், நியாயாதிபதிகளின் ஆளுகை முடிவுக்கு வருகிற காலம். அநேக நூற்றாண்டுகளாக ஜனங்கள் யெகோவாவின் அரசாட்சிக்குள் இருந்திருக்கிறார்கள். தேவனே ராஜாவாய் இருந்திருக்கிறார். உண்மையான மார்க்

கமும், சன்மார்க்க ஜீவியமும் ஜெயத்திற்கு அவசியமாயிருந்தது. இஸ்ரவேலரின் வனாந்தரப்பிரயாணத்துக்கு அடுத்தாப்போல், தேவனுடைய சொந்த ஜனமாகிய இஸ்ரவேலர் ஓர் விசேஷித்த முக்கிய காலத்திற்கு வந்திருக்கிறார்கள். மோசேயைப்போல் அவனுக்கு இரண்டாவதான ஒரு தலைவன் அவசியமாயிருந்தது.

பழைய ஸ்தாபனங்களின் அழிவின் மத்தியில் புதிய ஸ்தாபனங்கள் உண்டாகும்படி சரியான யோசனை சொல்லத்தக்க ஓர் ஆலோசனைக்காரன் வேண்டியதாயிருந்தது. இஸ்ரவேலரின் சன்மார்க்கத்திற்கும், வாழ்விற்கும் பெலிஸ்தர் சதராதிகளாயிருந்தார்கள். உடன்படிக்கைப்பெட்டி, ஆசாரிப்புக் கூடாரம், கர்த்தரைத்தொழுது கொள்ளும் முக்கியஸ்தலம் ஆகிய இவைகள் எருசலேமுக்கு 17 மைல் தூரத்திலிருந்த சீலோவிலே இருந்தன. யேகோவாவை ஆராதித்தல் தேசத்தை விட்டு ஒழியவில்லை என்பதற்கு, ரூத, ஏலி, சாமுவேலின் பெற்றோர், இவர்களின் சரித்திரங்கள் அத்தாட்சி, ஏலியின் மக்கள் இன்னும் மற்றவர்களின் துர்நடக்கைகள் அக்காலத்தில் இஸ்ரவேலருக்குள் இருந்த அதிகமான அக்கிரமங்களைக் காட்டுகிறது.

1. **சாமுவேலின் பிறப்பு.** 1, 2. அதி. தன் தாயின் ஜெபத்திற்கு உத்தரவாகக் கிடைக்கப்பட்டவன். தேவனிடத்தில் கேட்கப்பட்டவன் என்றர்த்தம். சாமுவேல் என்றபிள்ளை கர்த்தருடைய ஊழியத்திற்கென்று கையளிக்கப்பட்டதால் பிறந்து 3 வருஷமானவுடன் கர்த்தருடைய ஆலயத்தில் தன் தாயினால் கொண்டுவந்து விடப்பட்டான் அங்கே கர்த்தரைப் பணிந்து கொண்டான். 1 சாமு. 1: 28

(*a*) அவன் ஒரு நசரேயன் 1: 11 சிம்சோனோடு ஒப்பிடுக. நியா. 13: 5.

(*b*) ஜெபசிந்தையுள்ளவன் 7: 8, 9.

(*c*) அதிகாரமும் சொற்சக்தியுமுள்ளவன், மனிதர் அவனுக்கு முன் நடுங்குவார்கள். 16: 4; 12: 1, 5.

(*d*) ஒரு தீர்க்கதரிசி 9: 7; அப். 3: 24; அப். 12: 20; எபி 11: 32 சாமுவேலின் சரித்திரம் சிறுபிள்ளைகளுக்கு மிகவும் வாஞ்சையைத்தரக் கூடியது.

2. **சாமுவேலின் அழைப்பு.** அதி. 3, 4. சாமுவேல் ஆசரிப்புக் கூடாரத்தில் வேலைசெய்தான், சாமுவேல் இன்னும் கர்த்தரை அறியவில்லை, தேவாவியானவர் அவனுக்கு இனமும் தம்மை வெளிப்படுத்தவில்லை. சிறுபிள்ளையாயிருந்தாலும் அவன் கர்த்தருக்கென்று பிரதிஷ்டையாக்கப்பட்ட ஊழியக்காரன். தேவன தமது சத்தத்தினாலே சாமுவேலுக்குத் தரிசனமளித்து அவனைக்கூப்பிடுகிறார். ஏலியின் குடும்பத்திற்கு தாம் நிறைவேற்றப்போகிற ஆக்கினையை சிறுபையனுக்குத் தெரிவிக்கிறார். தேவன் ஒரு சிறுபிள்ளையின் பெயரையும் அறிகிறாரென்பது ஒரு பெரிய காரியமல்லவா? தேவனுடைய அழைப்புக்கு மாறுத்தரம் சொல்ல நாம் சாமுவேலைப்போல் தயாராயிருக்கவேண்டும். தேனுடைய அழைப்பை நாம் அசட்டை பண்ணினால் மறுபடியும் அவருடைய அழைப்பைப்பெற முடியாது.

(இன்னும் வரும்).

Printed at The Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

OFFICE OF THE REGISTRAR ... 23 FEB 1917

June 1916 Registered No. M. 163

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." யோவான் 7: 88

Vol. XVII ஜூன்மீ 1916

## "நீங்கள் என்னிலும் நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்" யோவா. 14: 20.

நேற்றையத்தினம் சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள் இருக்கிறதென்பதையும் அந்தப் பரிபூரணம் நமக்காக வைக்கப்பட்டிருக்கிறதென்பதையும் பார்த்தோம். இன்றைக்கு அதற்கு மேலான ஒரு சத்தியத்தை நாம் கவனிக்கவேண்டும். சகல பரிபூரணமும் நிறைந்த கிறிஸ்துநாதர் நமக்குள்ளே நம்முடைய இருதயத்திலே வாசம்செய்ய வருகிறார் என்பதே. எனக்கு ஒரு சிநேகிதர் உண்டு. அவர் மலையிலே ஒரு நிலத்தை வாங்கிப் புதுவீடு கட்டினார். அதற்குப்பின்னே கொஞ்சதூரத்திலே நல்ல தண்ணீர் இருந்தது. அதற்குச் சமீபமான மலையிலே நீரூற்று இருந்ததாலே அதிலிருந்து ஒரு ஓடை புறப்பட்டு அந்த இடத்தின் வழியாய்ச் சென்றது. [illegible] என் சிநேகிதர் நாள்தோறும் தோட்டக்காரனை அனுப்பி [illegible] நல்லதண்ணீரை அங்கே இருந்து எடுத்துத் தன் வீட்டுக்குக் கொண்டுவந்தார். தோட்டக்காரனுக்கு மாத்திரம் வருத்தமிருந்தது. ஏனென்றால் அவன் கொஞ்சதூரம் போய்ப் பிரயாசத்தோடு அந்தத் தண்ணீரை எடுத்துக்கொண்டுவந்தான். இப்படியிருக்க ஒருநாள் என் சிநேகிதர் தன் சொந்த நிலத்தில் தோண்டிப் பார்க்கும்போது அங்கேயும் தண்ணீர் இருக்கிறதைக் கண்டார். [illegible] ஒரு சின்ன ஓடை பிரிந்து [illegible] என் சிநேகிதருடைய தோட்டத்தின் வழியாய் [illegible] இதை அறிந்து சந்தோஷப்பட்டு ஒரு சின்ன [illegible] இப்பொழுது நல்ல ஜலமானது எப்போதும் [illegible] இருக்கிறது. வேறே இடத்துக்குப்

20-6-16
16

போய் தண்ணீரை மொள்ள அவசியமில்லை. தோட்டக்காரனுக்கு முன்னிருந்த வருத்தமும் பிரயாசமும் இப்போது இல்லை.

ஆ! சகோதரரே, இதுவே கிறிஸ்து மார்க்கத்தின் விசேஷித்த உபதேசம். சகல பரிபூரணமும் அடங்கிய கிறிஸ்துநாதர் விசுவாசியினுடைய உள்ளத்திலே எழுந்தருளிவந்து வாசஞ்செய்து எந்நேரமும் அந்த ஆத்துமாவுக்கு வேண்டிய அருள்சகாயத்தை அநுக்கிரகித்துவருகிறார். இது அநேகருக்குத் தெரியாத சத்தியம். அந்த ஓடை என் சிநேகிதனுடைய கண்களுக்கு வெகுநாள் மறைந்ததுபோல இந்த உபதேசம் அநேக கிறிஸ்தவர்களுக்கு மறைந்ததாகத் தோன்றுகிறது. ஜீவதண்ணீரை எடுக்க வெகு தூரம் போய் வெகு பிரயாசத்தோடு அதைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள் என்று சொல்லவேண்டும். வீண்பிரயாசை! ரட்சகர் அருளின் திருவாக்கு என்ன? 'நான் .... கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்' என்றார். (யோவா. 4: 14).

இந்த அதிகாரத்தில் தம்முடைய சீஷர்களை விட்டுப் பிரியுமுன்னமே ஆண்டவர் அவர்களுக்கு ஆறுதலுண்டாக உறுதிவாக்கு அளித்தார். 'நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன். உங்களிடத்தில் வருவேன். [N.B. பரிசுத்த ஆவியை அனுப்புவேன் என்று மாத்திரம் சொல்லாமல் நான் வருவேன் என்றும் சொல்லுகிறார்]. நான் பிதாவிலும் நீங்கள் என்னிலும் நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்'. [N. B. நான் உங்களில் இருக்கிறதை அறிவீர்கள் என்றாரே. நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? உங்கள் உள்ளத்திலே அவர் சகல பரிபூரணத்தோடு வந்திருக்கிறதை அறிந்திருக்கிறீர்களா? அநேகர் அறியவில்லை]. ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான். அவனில் என் பிதா அன்பாயிருப்பார். நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்' என்றார். (வா. 18, 20, 23).

பாருங்கள்! இந்த அதிகாரத்தில் இரண்டு வகையான வாசஸ்தலங்களைக் குறித்து உபதேசிக்கிறார். 2-ம் வசனத்திலும் வாசஸ்தலம் என்கிறார். 23-ம் வசனத்திலும் வாசஸ்தலம் என்பதாகப் பேசுகிறார். நம்முடைய தமிழ் திருப்புதலில் வெவ்வேறான பதங்கள் வந்தாலும் மூலபாஷையில் ஒரே பதம் அந்த இரண்டு வசனங்களில் வழங்கியிருக்கிறது. 'என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு' என்று சொன்ன ரட்சகர் 'நாங்கள் அவனிடத்தில் (அதாவது மெய்விசுவாசியினிடத்தில்) வந்து அவனோடே வாசம்பண்ணுவோம். அவனை வாசஸ்தலமாக்கி அவனோடே தங்குவோம்' என்கிறார். மோட்ச வாசஸ்தலம் உண்டு என்று நம்புகிறீர்கள் அல்லவா? ஏன்? ஆண்டவர் அதை வாக்குக்கொடுத்ததினாலே அல்லவா? அப்படியானால் இந்த இரண்டாவது வாசஸ்தலத்தையும் நம்பவேண்டாமா? கிறிஸ்துநாதர் நிச்சயமாகவே வந்து தம்முடைய பரிபூரண [illegible]



உங்கள் இருதயத்திலே வாசம்செய்து அங்கே மகத்தான கிரியைகளை நடத்திவருவார் என்று விசுவாசிக்கிறதற்குத் தடையுண்டா? சகேயு என்பவன் முதல் விசையாக இயேசுவைக் காணும்போது அருள்வார்த்தைகள் அவனுக்குச் சொல்லப்பட்டது. ஆண்டவர் கிருபாகடாட்சத்தோடு அவனை நோக்கிப் பார்த்து 'இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும்' என்றார். (லூக். 19: 5). அதைக்கேட்ட அந்த ஆயக்காரன் ஆட்சேபனை சொல்லாமலும் சந்தேகப்படாமலும் அவிசுவாசத்தால் மனம் மயங்கிப்போகாமலும் 'சீக்கிரமாய் இறங்கிச் சந்தோஷத்தோடே அவரை அழைத்துக்கொண்டுபோனான்'. அப்புறம் என்ன? கிருபை நிறைந்த இயேசு அங்கே ரட்சகராக விளங்கி 'இன்றைக்கு இந்த வீட்டுக்கு ரட்சிப்பு வந்தது' என்று விளம்பினாரல்லவா? ஆ! சகோதரரே, 'இன்றைக்கு உன்னோடே வாசம்பண்ணுவேன். உன் இருதயத்தில் தங்குவேன்' என்று அவர் சொல்லும்போது ஏன் சந்தேகிக்கவேண்டும்? நம்பாமற்போவானேன்? சகேயுவைப்போல அவரைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளுங்கள். அவருடைய பூரண இரட்சிப்பு எந்நேரமும் உங்கள் இருதயத்தில் விளங்கத்தக்கதாக அவருக்கு இடங்கொடுங்கள். 'இதோ, வாசற்படியில் நின்று தட்டுகிறேன். ஒருவன் என் சத்தத்தைக் கேட்டுக் கதவைத் திறந்தால் அவனிடத்தில் நான் பிரவேசித்து அவனோடே போஜனம்பண்ணுவேன். அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்'. (வெளி. 3: 20).

நம்முடைய இருதயத்தில் வாசம்செய்கிறார்.

1. ஆளுகிறவராக. 1 பேது. 3: 15. 'கிறிஸ்துவை ஆண்டவராக உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்'. மூலபாஷையில் ஆண்டவர் என்பதை வற்புறுத்திப் பேசுகிறார். 'கிறிஸ்துவை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள், ஆண்டவராகவே அவரைப் பரிசுத்தம்பண்ணுங்கள்'. இங்கேதான் அநேகம்பேர் இடறிப்போகிறார்கள். இரட்சகராக அவரை ஏற்றுக்கொள்வார்கள். பாவதண்டனைக்கும் நரகவேதனைக்கும் தங்களை விலக்குகிறதற்கு இயேசுவுக்கு இடம் கொடுப்பார்கள். ஆனாலும் ராஜாவாக, எஜமானாக, ஆளுகிறவராக அவர் வந்து விளங்கும்போது பின்வாங்கிப்போகிறார்கள். அவருடைய பாதத்தின்கீழ் சகலத்தையும் அடக்கிப்போட அவர்களுக்கு மனமே இல்லை. எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, 'எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்க அவர்களுக்குச் சம்மதமில்லை. பரிசுத்தராகலாம். அதோடு தங்கள் சுயாதீனத்தையும் காத்துக்கொள்ளலாம் என்று நினைத்திருக்கிறார்கள். யுத்தியீனம். முடியாது! பரிசுத்தமாகவேண்டுமானால் இது முதலாம் காரியம். கிறிஸ்துவின் அடிமையாகவேண்டும். சகலத்தையும் அவருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் உங்கள் இருதயத்தில் அவர் வாசம்செய்கிறார் என்று நினைக்கவேண்டாம். பூரண இரட்-

சிப்பை அடைய விரும்பினால் 'கிறிஸ்துவை ஆண்டவராக உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்'. நீங்கள் முற்றிலும் கீழ்ப்படியவில்லை என்றால் அவர் உங்களை முற்றிலும் ரக்ஷித்தருளமாட்டார். ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன். கேளுங்கள். நியாயாதிபதிகளின் புஸ்தகம் 11-ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறபிரகாரம் கீலேயாத்தியர் மோசத்திலே அகப்பட்டார்கள். அம்மோன் புத்திரர் திரளான சேனையோடு வந்து அவர்களை ஒடுக்கவும் சிறுமைப்படுத்தவும் எத்தனித்தார்கள். அப்போது கீலேயாத்தின் மூப்பர் வேறே வகை தெரியாமல் தாங்கள் முன் துரத்தின யெப்தாவை அழைத்து 'நீர் உதவிசெய்யவேண்டும்.' இந்த ஆபத்திலிருந்து எங்களை ரட்சித்துக் காப்பாற்றவேண்டும்' என்று வெகுவாய் வேண்டிக்கொண்டார்கள். அவனோ உடனே சம்மதிக்கவில்லை. முதலாவது ஒரு கேள்வி கேட்டான். ஒரு காரியத்தை அறிய விரும்பினான். 'என்னை உங்களுக்குத் தலைவனாக வைப்பீர்களா? என்று கேட்டான். 'என்னைத் தலைவனாகவும் ராஜாவாகவும் ஏற்றுக்கொண்டால் மாத்திரம் உதவிசெய்வேன். இந்த நிபந்தனையின்பேரில் வருவேனேயல்லாமல் மற்றப்படி வரமாட்டேன்' என்று சாதித்தான். அதற்கு இசைந்து 'ஜனங்கள் அவனைத் தலைவனும் சேனாதிபதியுமாக வைத்தார்கள்'. உடனே அவன் வந்து அவர்களை விடுவித்துச் சகாயம் செய்தான். என் சிநேகிதரே! பாவத்தின் வல்லமையினின்று ரக்ஷிக்கப்பட விரும்புகிறீர்களா? பிசாசை ஜெயித்து உங்களுக்கு சமாதானத்தைத் தந்து உங்கள் பரிசுத்தத்தைப் பூரணப்படுத்த இயேசு ரட்சகரை அழைக்கிறீர்களாக்கும். நல்ல காரியம். ஆனாலும் ஒரு சிக்குமாத்திரமுண்டு. கேட்கிறார். 'என்னை உங்களுக்குத் தலைவனாக வைப்பீர்களா? 'சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்' தேவன் (எபே. 1: 23). அந்த வார்த்தையைக் கவனித்துக்கொள்ளுங்கள். 'எல்லாவற்றிற்கும் மேலான தலைவர்' அதற்கு நீங்கின ஒன்றுமில்லை. நம்முடைய சர்த்தத்துவங்களோ, நம்முடைய சரீர அவயவங்களோ, நம்முடைய ஆஸ்திபாஸ்திகளோ, நம்முடைய ஜீவன் சுகம் செல்வமோ எல்லாவற்றிற்கும் மேலான தலைவராக இயேசுவை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். என் பிரிய சகோதரரே, 'கிறிஸ்துவை ஆண்டவராக உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்' அவரே ராஜாவாக விளங்கி ஆளுகை செய்யட்டும். அவரே சுக்கானைப் பிடித்துத் திருப்பிக் கப்பலை நடத்தட்டும். அப்படியானால் மாத்திரம் பரிசுத்தமாவோம்.

II. காக்கிறவராக. 'கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் [உங்களில்] இருப்பதே அந்த ரகசியம்.' [கொலோ. 1:27]. அதாவது கிறிஸ்துவானவர் உங்கள் இருதயங்களில் உங்களைக் காக்கும்படி வாசம்செய்வதினாலே மகிமை அடைவோம் என்கிற நம்பிக்கை உண்டாகி இருக்கிறது. 'அதோடு 1 பேது. 1: 5. கடைசிக் காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற ரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்



தைக்கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது'! இரண்டு வாக்கியங்களை ஒன்றோடொன்று ஒத்துப்பார்த்தால் மகிமைக்கென்று தேவ பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிறோம் என்றும், அந்தத் தேவ பலனானது நம்முடைய இருதயத்தில் வாசம்செய்யும் கிறிஸ்துவென்றும் ஆகவே நம்மைக் காக்கிறவர் உள்ளே வசிக்கிற கிறிஸ்துவே என்றும் நாம் அறிந்துகொள்ளலாம். இது எவ்வளவு சத்தியமான உபதேசம். நம்மை நாமே காத்துக்கொள்வது கூடாத காரியம். தன்னுடைய சொந்த இருதயத்தைக் காக்க யாரால் கூடும்? பிசாசு உலகம் பாவம் ஆகிய சத்துருக்கள் அதை வளைந்துகொள்ளவே மெய்க்கிறிஸ்தவனும் வெகு லேசாய்த் தோல்வி அடைந்து மோசம்போகிறான். பிரான்சுதேசத்தில் கலேய்ஸ் (Calais) என்ற ஓர் பட்டணமுண்டு. முன்காலத்தில் அது இங்கிலீஷ்காரருடைய வசமாகி அங்கே பலத்த கோட்டை கட்டினார்கள். அப்புறம் அந்தப் பட்டணத்தைக் காக்கும்படி பட்டாளங்களை அதிலே வைத்துக்கொண்டார்கள். பிரேன்ஸ்காரர் அந்தக் கோட்டையைப்பிடிக்க அடிக்கடி பிரயாசப்பட்டாலும் அவர்களுக்குக் கூடாமற்போயிற்று. இப்படியிருக்க இங்கிலீஷ்காரருக்குப் பெருமை உண்டாயிற்று. இது ஒருவராலும் பிடிக்கக்கூடாத கோட்டை என்று மேன்மை பாராட்டினார்கள். அந்தக் கோட்டையின் வாசற்கதவின்மேல் ஒரு வாசகம் வரையப்பட்டது. என்னவென்றால், 'பிரேன்ஸ்காரர் இப்பட்டணத்தைப் பிடிக்கும்போது இரும்பும் ஈயமும் தண்ணீரில் மிதக்கும்' என்பதே. அதாவது, இதைப் பிடித்துக்கொள்வது கூடாதகாரியம் என்று அர்த்தம். இப்படியிருக்கும்போது ஒருகாலத்தில் திடீரென்று மோசம் வந்தது. மழைகாலமாயிருந்தது. மழைகாலத்தில் சத்துருக்கள் வரமாட்டார்கள் என்று பட்டாளத்தார் சொந்த தேசத்தில் இளைப்பாறப் போய்விட்டார்கள். அந்த பட்டணத்தைக் காக்கும்படி சிலர் மாத்திரம் இருந்தார்கள். இதுவே சமயம் என்று கண்டு ஒருவரும் நினையாத பிரகாரமாய் இராக்காலத்திலே சத்துருக்கள் வந்து அந்தக் கோட்டையை இலேசாய் பிடித்துக்கொண்டார்கள். அதுமுதல் அந்தப் பட்டணம் பிரென்சுக்காரருடைய வசமாயிற்று. ஆ! பாருங்கள், உங்கள் ஆத்துமாவைக் காக்க உங்கள் சொந்த பெலன் உதவாது. தேவபெலன் வேண்டும். கிறிஸ்துநாதர் பட்டாளமாக நம்முடைய உள்ளத்தில் பாளையம் இறங்கவேண்டும். அப்படியானால் மாத்திரம் பயமுமில்லை, மோசமுமில்லை. அப்போது பாடலாம். சங். 27: 1-3.

III. பரிசுத்தஞ் செய்கிறவராக. எபே. 3: 17, 18. விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும்...தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் (நீங்கள்) நிறையப்படவும் அவர் உங்களுக்கு அநுக்கிரகம்பண்ண வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்? தேவனாலும் அவருடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்

படுவதே பரிசுத்தமாம். அப்போஸ்தலன் இதை நன்றாய் அறிந்துகொண்டார். ஆகையால், எபேசு சபையாருக்காக விசேஷமாய் இந்த இரண்டு காரியங்களை விரும்புகிறார். விசுவாசத்தினாலே கிறிஸ்து அவர்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும்......தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் அவர்கள் நிறையப்படவும் ஜெபத்திலே போராடி வேண்டுகிறார். திருஷ்டாந்தம் சொல்லுகிறேன் கேளுங்கள். பெரியாறு என்னும் இடத்தில் நடந்தது உங்களுக்குத் தெரியும். மலையிலே ஒரு பள்ளத்தாக்கு. அதைக் குளமாக்கித் தண்ணீரால் நிரப்பினால் அந்தத் தண்ணீரை மதுரை பக்கத்தில் இறங்கச்செய்யலாம் என்று யோசித்து அந்த வேலையை ஆரம்பித்தார்கள். அந்தப் பள்ளத்தாக்கிலே அநேக பாறைகள் இருந்தது. நெருங்கின மரங்களும் இருந்தன அந்தப் பாறைகளை எல்லாம் எடுத்து மரங்களை வெட்ட வெகுகாலம் செல்லும். அவர்கள் அப்படிச் செய்யவில்லை. என்ன செய்தார்கள்? பள்ளத்தாக்கின் கடைசிப் பக்கத்திலே பிரமாண்டமான ஒரு அணையைக் கட்டினார்கள். அப்புறம் பெரியாற்றின் தண்ணீர் அந்தக் குளத்திலே ஓட இடம்பண்ணினார்கள். அவ்வளவுதான்! தண்ணீர் ஓட ஓட அந்தப் பெரியகுளம் தானாய் நிறையப்பட்டது. மரங்களின் முடிவு என்ன? தண்ணீர் பெருகப் பெருக மரங்கள் எல்லாம் தானாய் விழுந்து மறைந்துபோய்விட்டது. ஒருமரத்தையாவது வெட்ட அவசியம் இல்லை. தண்ணீரின் பெலத்தினாலே எல்லாம் போய்விட்டது. சகோதரரே! உங்கள் இருதயத்தில் இருக்கிற பாவமாகிய மரங்களை நீங்களே வெட்டப்போனால் வீண் பிரயாசை அதிகம். உங்களாலும் முடியாது. அநேகர் அப்படியே தங்களைப் பரிசுத்தப்படுத்தப் பார்க்கிறார்கள். இங்கே ஒரு மரம், அங்கே ஒரு மரம், இங்கே ஒரு இச்சை, அங்கே ஒரு ஆசை, இவ்விதமாக எடுத்துப்போடப் பிரயாசப்படுகிறார்கள். வேண்டாம், விசுவாசமாகிய அணையைக் கட்டிப் பரிசுத்த வெள்ளமானது உங்கள் இருதயத்தில் ஓடட்டும். அப்பொழுது துர்இச்சையோ, தகாத ஆசையோ, தீயகுணமோ உங்கள் சுயமுயற்சியால் அல்ல. ஜீவதண்ணீரின் சக்தியினாலே அழிந்துபோகும். இந்தச் சிறு ஜெபத்தில் பரிசுத்தமாவதற்கான முறை சூட்சமாகக் காட்டப்பட்டிருக்கிறது. விசுவாசத்தினாலே கிறிஸ்து நம்முடைய இருதயங்களில் வாசமாயிருக்கவேண்டும். தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நாம் நிறையப்படவேண்டும்.

REV. T. WALKER.

---

## சாமுவேலின் முதலாம் புஸ்தகம்

### 17-ம் பாடம். (தொடர்ச்சி)

4—ம் அதிகாரத்தில் ஆப்பேக்கில் இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு முன் முறியடிக்கப் பட்டதைப்பற்றியும், உடன்படிக்கைப்பெட்டி சத்துருக்கள்



வசமாகி ஏலியின் இரண்டு குமாரர்கள் யுத்தத்தில் செத்ததைப்பற்றியும் அத்துக்க சம்பவத்தை ஏலி கேட்டு இருதயமுடைந்து ஜன்னலிலிருந்து மூர்ச்சித்து விழுந்து, கழுத்து முறிந்து இறந்ததைப்பற்றியும், சொல்லியிருக்கிறது. இவ்விதமாய் இஸ்ரவேலின் பிரதான ஆசாரியனும், நியாயாதிபதியுமானவன் விழுந்தான். பினேகாசின்மனைவிக்குப் பிள்ளைபிறந்து அதற்கு அவள் சரியான பெயரிட்டவுடன் அவளுடைய பிராணன்போயிற்று, மகிமை நீங்கிற்று என்றர்த்தமுள்ள இக்கபோத் என்ற பேரிட்டாள், ஏலியினுடைய சூரியன் மேகத்திற்குள் அஸ்தமித்தது.

3. உடன்படிக்கைப்பெட்டி. அதி. 5—7 இப்பெட்டி பெலிஸ்தருக்கு யாதொரு சந்தோஷத்தையும் கொடுக்கவில்லை. அவர்கள் இதை வைத்திருந்த காலமெல்லாம் கடூரமாய் வாதிக்கப்பட்டார்கள். அவர்கள் அப்பெட்டியை கீரியாத்யாரீமுக்கு அனுப்பினார்கள். அது 20 வருஷகாலமாக அங்கே இருந்தது. இஸ்ரவேலர் சாமுவேலின் மூலமாய் மெய்மனஸ்தாபமடைந்து, மனந்திரும்பிப் புதிய எழுப்புதலடைந்தார்கள். கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணவும் தங்களைத் தாழ்த்தி உபவாசம் பண்ணவும் இஸ்ரவேலரின் சகல ஜனங்களையும் சாமுவேல் மிஸ்பாவிலே கூடிவரச் செய்தான். பெலிஸ்தர் இதைக் கேள்விப்பட்டு இஸ்ரவேலர் பெலன்கொள்ளாதபடி அவர்களை நசுக்கிப்போடவேண்டுமென்று அவர்களுக்கு விரோதமாய் படையெடுத்து வந்தார்கள். இஸ்ரவேலர் உதவிக்காக கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணினார்கள், கர்த்தர் பெலிஸ்தர்மேல் இடிமுழக்கங்களை முழங்கப்பண்ணி அவர்களைக் கலங்கடித்தார். இஸ்ரவேலருக்கு முன்பாக அவர்கள் முறிந்தோடிப் போனார்கள். தேவமகிமைக்காவும், இஸ்ரவேலருக்குத் தைரியமுண்டாகவும் சாமுவேல் ஒரு கல்தூணை ஜெயஸ்தம்பமாக நிறுத்தி அதற்கு எபெனேசர் என்று பெயரிட்டான். அதற்கு இம்மட்டும் கர்த்தர் நமக்கு உதவி செய்தார் என்றர்த்தம். நாம் பெற்ற ஆசீர்வாதங்களுக்காகவும், நமக்குக் கிடைத்த ஜெயங்களுக்காவும் நம்முடைய எபெனேசரை உயர்த்திக்காட்டமறவாதிருப்போமாக இவ்விதமாக இஸ்ரவேலில் 20 வருஷம் சமாதானமிருந்தது. சாமுவேலோடு நியாயாதிபதிகளின் காலம் முடிவடைகிறது. அக்காலத்தில் பாவத்தினாலும் கலகக்குணத்தினாலும் அடிக்கடி தம்மைவிட்டு வழிவிலகிப் போன இஸ்ரவேலருக்கு தமது மீட்பையளிக்கும்படி தேவன் இடைக்கிடையே பலத்த அதிசயங்களை நடப்பித்து கீர்த்திபெற்ற வீரரை எழுப்பி தமது பராமரிப்பை அவர்களுக்கு விளங்கப்பண்ணினார்.

II. சவுல் அதி. 8—15. சவுலின் சரித்திரத்தை மூன்று வார்த்தைகளினால் ஞாபகப்படுத்தலாம். தெரிந்து கொள்ளப்படுதல், ஆளுதல், தள்ளப்படுதல்.

(a) தெரிந்து கொள்ளப்படுதல். அதி. 8—9. சாமுவேலின் மக்கள் தங்கள் தகப்பனுடைய வழியில் நடவாமல் பண ஆதாயத்தை நாடினதி

ளே தங்களுக்கு ஒரு ராஜா வேண்டுமென்ற எண்ணம் இஸ்ரவேலருக்கு உண்டானது. இதற்குக் காரணம் தாங்கள் மற்ற ஜாதியாரைப்போலிருக்க வேண்டுமென்ற விருப்பமே. ஜனங்களுடைய விருப்பத்திற்குச் செவி கொடுக்கும்படி கர்த்தர் சாமுவேலுக்குக் கட்டளையிட்டார். அவர்கள் உன்னையல்ல, என்னையே தங்கள் மேல் ராஜாவாயிராதபடிக்குத் தள்ளிப் போட்டார்கள் என்று அவர் சொன்னார். ஓசி 13: 10, 11. அவர்களை ஆளப் போகிற ராஜா இன்னவிதமானவனென்று அவர்களுக்குக் காட்டினார். சாமுவேல் தேவகட்டளைப்படி சவுலை அபிஷேகம் பண்ணின் விபரம் அதிகாரம் 9ல் அடங்கியிருக்கிறது. சரீரத்தோற்றத்தில் மற்றெல்லா ஜனங்களும் அவன் தோளுக்குக் கீழாயிருக்கத்தக்க உயரமுள்ளவனாயிருந்தான். அதிக பெலவான், என்றாலும் திடச்சித்தமும் தீர்மானமுமில்லாதவன், உண்மையான ஆவியின் வரத்திற் குறைவுடையவனா? அவனுடைய உத்தியோகத்திற்கென்று அருளப்பட்ட ஆவியின் வரம் அவனுடைய இருதயத்தில் உள்ளான மாறுதலை உண்டாக்கவில்லை. 10: 6—9. ராஜ உத்தியோகத்தை ஒருவருக்கு ஒப்புவிக்கும்போது அவரை அபிஷேகம் பண்ணுவது கீழ்தேசத்தாரின் பூர்வீக சடங்காசாரம் 10: 1. அபிஷேகத்தைலம் தேவாவியான வருக்கடையாளம்.

ராஜாவாழ்க என்பது புது ராஜாவுக்குக் கூறப்படும் மங்கள வார்த்தை.

(b) ஆளுதல். அதி. 11—14 சாமுவேல் தன்னுடைய அதிகாரத்தை சவுலுக்கு ஒப்புவிக்கு முன் ஜனங்களுக்குத் தன்னுடைய ஆளுகையைப் பற்றிய பக்திவிநயமான ஒரு அறிக்கை பண்ணினான், தன்னுடைய உண்மையையும்; நீதியையும் விசுவாசத்தையும் பற்றி சாட்சி கூறினான் 12: 23ல் ஜனங்களுக்காகக் கர்த்தரிடத்தில் மத்தியஸ்த ஊழியஞ்செய்யாதிருத்தல் ஒரு பெரிய பாவமென்றும் 1தீமோ 2: 1—3ல் இதைத்தவிர வேறொன்றிலும் நாம் மற்றவர்களுககு அதிக உபயோகமாயிருக்க முடியாதென்றும் பார்க்கிறோம். அதி. 13ல் சொல்லப்பட்ட சம்பவம் சவுல் ராஜாவின் இரண்டாம் வருஷத்தில் நடந்தது. சவுலுடைய மூடத்தனமும், கீழ்ப்படியாமையும் உடனே தெரியலாயிற்று. சாமுவேல் அதற்காக அவனைப் பகிரங்கமாகக் கண்டிக்கிறான். அவனுடைய ராஜ்யம் விழுந்து போகுமென்பதையும் சாமுவேல் அவனுக்கு முன்னறிவிக்கிறான். சவுலும் யோனத்தானும், அவர்களைப் பின்பற்றினவர்களும் அழியுமட்டும் இஸ்ரவேலர் மிகுந்த க்ஷீணதசையடைந்தார்கள். பெலிஸ்தர் வலிமையடைந்தார்கள். 14: 6ல் விசுவாசத்தின் பெலன் காணப்படுகிறது, ஒருவேளை கர்த்தர் நமக்காக ஒரு காரியஞ்செய்வார். அநேகம் பேரைக்கொண்டாகிலும் கொஞ்சப் பேரைக்கொண்டாகிலும் ரட்சிக்கக் கர்த்தருக்குத் தடையில்லை. தேவன் இந்த விசுவாசத்திற்கு உத்தரவு அளித்தார். 14: 18—23.



(c) தள்ளப்படுதல். 15 அதி. தேவனுடைய கட்டளைகளுக்கு சவுல் இரண்டு வகையான கீழ்ப்படியாமை காட்டினான். இவைகள் தான் அவனுடைய குடும்பம் தாழ்ந்து போனதற்குக் காரணம்

1. சவுல் ஆசாரிய ஊழியத்தில் பிரவேசித்து முரட்டுத்தனமாய்க் கர்த்தருக்குப் பலியிடுதல். இதற்காக அவனுக்கும் அவன் குடும்பத்துக்கும் வருகிற தண்டனைக்கு முதல் எச்சரிப்பு கிடைத்தது.

2. சவுல் அமலேக்கியரோடு பண்ணின யுத்தத்தில் ஆகாகைக் கொல்லாமல் உயிரோடே வைத்தான். தேவ கட்டளையை துணிகரமாய் மீறினது. எண். 24: 20. உபா. 22: 17—19 பார்க்க. இச்சமயத்தில் சாமுவேல் திட்டமான ஆக்கினையைக் கூறினான். 15: 22, 23 27, 28. சவுல் தன்னுடைய பயங்கரமான நிலைமையை உணர ஆரம்பிக்கிறான். அவன் தன்னுடைய மீறுதலை, ஒத்துக்கொள்ளுகிறான். ஆனால் ஜனங்களுக்குப் பயந்து தான் அப்படிச் செய்ததாகச் சொல்ல ஆரம்பிக்கிறான், என்றாலும் சாமுவேலோ சவுல் தள்ளப்பட்டான் என்ற தேவாக்கினையைக்கூறி அந்நாளிலேயே ராஜ்யம் அவனைவிட்டு எடுபட்டுப்போயிற்று என்றும் சொல்லுகிறான். அந்த ஆக்கினை மாறாது. இஸ்ரவேலின் பெலமானவர் பொய் சொல்லுகிறவருமல்ல, மனமாறுகிறவருமல்ல. இதிலிருந்து நாம் படித்துக் கொள்ளுகிற பக்திவிநயமான பாடங்கள். (1) 22 வா. பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலே உத்தமம் சவுல் அமலேக்கியனாகிய ஆகாகைத் தண்டிக்கத்தவறினான். சவுல் யுத்தத்தில்மடிந்து கீழேவிழும்போது ஒரு அமலேக்கியன் அவன் கிரீடத்தையும் உடையையும் உரிந்துகொண்டான். ii சாமு. 1: 8, 9. (2) உன்னுடைய பாவத்தைக் கொன்றுபோடு, அல்லது அது உன்னைக்கொன்றுபோடும். மனிதர்கள் தேவனை எவ்விதமாய் பாராட்டினார்களோ அதற்குத்தக்கதாக அவர்கள் அவரால் பாராட்டப்படுவார்கள். அவரை ஏற்றுக்கொண்டவர்களை அவர் ஏற்றுக்கொள்வார், அவரைத்தள்ளுகிறவர்களை அவர் தள்ளிவிடுவார். ii சாமு. 22: 26, 27.

## III. தாவீது. அதி. 16—31.

1. அபிஷேகம்பண்ணப்படுதல் அதி. 16-20. சவுல் தள்ளப்பட்டது சாமுவேலுக்கு அதிகதுக்கம். ஏனெனில் அவனிடத்திலிருந்து அதிகம் எதிர்பார்த்தான். ஆனால் முழுவதும் ஏமாந்துபோனான், சவுலுக்குப் பயப்பட்டபோதிலும், தான் கர்த்தரிடத்தில் பெற்ற உத்தரவின்படி கர்த்தருக்குப்பலி செலுத்த பெத்லகேமுக்குப் போகிறான். அங்கே ஈசாயின் ஏழு மக்களும் அவனுக்கு முன்பாக நடந்துபோனார்கள். ராஜ உத்தியோகத்திற்கு இவர்களில் ஒருவனாவது தெரிந்து கொள்ளப்படவில்லை. தாவீது சாமுவேலினால் அல்லது ஈசாயினால் தெரிந்துகொள்ளப்படவில்லை.

தமது ஜனமாகிய இஸ்ரவேலருக்கு அதிபதியாக தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டான். தாவீதின் மேலிறங்கின ஆவிக்கு முற்றிலும் மாறாக சவுலின் மேல் ஒரு பொல்லாத ஆவி இறங்கி அவனைத் துன்பப்படுத்தினது. கர்த்தருடைய ஆவி அவனைவிட்டு நீங்கிற்று. அதி. 17ல் தாவீதுக்கும் கோலியாத்துக்கும் நடந்த சண்டை சொல்லப்படுகிறது.

போருக்கழைப்பு 17: 1—11. வீரன் 12—37. சண்டை 38—68.

ஒவ்வொரு ஜீவியத்திலும் ராட்சதருண்டு; அவர்கள் ஜெயிக்கப்படவேண்டும், அல்லது அவர்கள் நம்மை ஜெயிப்பார்கள். ஜீவனுள்ள கிறிஸ்துவில் ஐக்கியப்பட்டு அவர்களை எதிர்த்தோமானால் ஜெயம் நம்முடையதாகும். தாவீதுக்கும் யோனத்தானுக்குமுள்ள சிநேகம் சரித்திர விஷயமாய் மனிதருக்குள் விசேஷ லட்சணம் பொருந்தியது. தாவீதின் வீரத்தனம் யோனத்தானுக்கு ஆச்சரியத்தையும், உள்ளன்பையும் உண்டாக்கிற்று. தாவீதைத் தன்சொந்த ஆத்துமாவைப்போல் நேசித்தான். இச்சரித்திரம் 18—20 அதிகாரங்கள் பார்க்க.

2. தாவீது தேசத்தை விட்டு ஓடிப்போவதும், திரும்பிவருதலும் 20—30 அதி. தாவீதின் சரித்திரத்தில் கீர்த்தி, ஆபத்து, சிநேகம், யுத்தம் அன்பு, கலியாணம், உயிர்மோசம், குகை கெபிகளில் ஒளிதல், யூதாவனாந்தரத்தில் அலைதல், பெலிஸ்தர் நடுவில் அடைக்கலம் புகுந்து ஜீவித்தல் முதலிய சம்பவங்கள் அடங்கியிருக்கிறது. தாவீது உயர்த்தப்படுமுன் தாழ்த்தப்பட்டதையும், தள்ளப்பட்டதையும், அவன் பட்ட துன்பங்கள் காட்டின.

3. சவுல் யோனத்தான் என்பவர்களின் மரணம். 31 அதி. சவுலுன் மரணம் மிகுந்த புலம்பலைக்கொடுத்தது. அவனுடைய மூன்று மக்களும் பெலிஸ்தரோடு நடந்த சண்டையில் கொல்லப்பட்டார்கள். சவுல் கில்போவா மலையிலே தன் சொந்தக் கையினாலே தன்னைக்கொலை செய்தான். அவனுடைய மரணம் ஒரு துக்கமான சரித்திரம், அவனுடைய முடிவு பாவத்திற்கு இடங்கொடுத்ததினாலுண்டாகிய கடைசி முடிவைக் காட்டுகிறது. இயற்கைப்படி இருக்கிறதுபோல மானிட ஜீவியத்திலும் லேசான தவறுதல்களிருக்கின்றன. ஒருவன் அதில் இடறிவிழுந்து உருண்டால் அவன் மறைவாயிருக்கிற செங்குத்துப் பாறைகளில் விழுந்து திரும்ப ஒருபோதும் எழும்பாதிருக்கலாம்.

சவுலின் ஜீவியம் கேடான நிலைமைக்கு இறங்கினதைப்பற்றி, டாக்டர் ஏ. டி. பீயர்சன் என்பவர் பின் வருமாறு உரைக்கிறார்.

1. பாவத்தைச் சிநேகித்தல் 1 சாமு. 13: 8.
2. பாவத்திற்குஇடங்கொடுத்துக் கீழ்ப்படியாமைகாட்டுதல் 13:9-14
3. பாவத்திற்கு வழக்கமாய் இடங்கொடுத்தல். 15: 9—23.



4. தேவனால் தள்ளப்படுதல் 15; 23—36. 16: 4.
5. தன்னைத்தானே கைவிடுதல். 28: 6—20.
6. மற்றவர்களை அழிக்க விரும்புதல். 16: 9.
7. தன்னைத்தானே கொல்லுதல். 31: 4—6.

பாவத்தைச் சிநேகித்து, தேவனுக்குக் கீழ்ப்படியாமை காட்டுதலினால் உண்டாகிற பயங்கரமுடிவுகளை சவுலின் ஜீவியத்திலிருந்து அறிகிறோம்.

## சுவிசேஷ பிரபல்ய அழைப்பு

*நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம். (2 கொரி. 3: 18).*

**பிரியமான சகோதரரே!**

1. இயேசுகிறிஸ்து உண்மையுள்ள சாக்ஷியாயிருக்கிறார். தேவனுக்கு முன்பாக அவர் நம்மை இராஜாக்களும் ஆசாரியருமாக ஆக்குகிறார் (வெளிப்படுத்தல் 1: 5, 6). ஒரு ஆசாரியனுடைய வேலை கடவுளிடம் மற்றவர்களுக்காகப் பரிந்துபேசுகிறதும், ஜனங்களுக்காகப் பலிசெலுத்துகிறதுமாயிருக்கிறது. குணப்பட்ட ஒவ்வொரு மெய்க்கிறிஸ்தவனும் கடவுளுக்காக மற்றவர்களிடம் பரிந்துபேசுகிற ஸ்தானாபதியாயிருக்கிறான். ஜீவனாயிருக்கிற கிறிஸ்து நம்மில் நிலைத்து வசிக்கும்போது, பரிசுத்த ஆவியின் பலத்தினால் நாம் மெய்யான ஞானவுயிரடைந்து, ஆத்தும வளர்ச்சியடைகிறோம். அப்போது நாம் மற்றவர்களுக்கு தேவ கிருபையை முன்னிட்டு ஞான ஜீவியத்தை ஊட்டுவது நம்முடைய கடமையாயிருக்கிறது.

2. சில நாட்களாய் நாம் இப்பட்டணத்தில் நடத்திவரும் ஆத்தம ஆதாய முயற்சியில் படை சோர்ந்து போகாது, இடைவிடாமல் தொடர்ச்சியாய் உற்சாகமாயும் ஊக்கமாயும் உழைத்துவரவேண்டுமென்ற விருப்பத்துடன் இக்கடிதம் எழுதலானேன். இம்மட்டும் கடவுள் நம்மோடிருந்து; நமது முயற்சியை ஆசீர்வதித்து வந்திருப்பதற்காக நாம் அத்தியந்த ஸ்தோத்திரம் செலுத்துவோமாக. "என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி. அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.

3. வேதாகமத்தை வாசித்துவரத் தீர்மானித்திருக்கிற இந்துக்களான அநேகருக்குப் போதுமான உதவி ஒத்தாசை செய்யவேண்டியது நமது பொறுப்பு. ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னாலியன்ற உதவிபுரியவேண்டி

யது தன்னுடைய கடமையென உணரவேண்டும். நம்முடைய அஜாக்கிரதை மூலமாய் அவர்களில் யாரேனும் தன் தீர்மானத்தை நிறைவேற்ற ஏதுவில்லாமற்போனால், அவ்வாத்தும உத்திரவாத விஷயமாய்க் கடவுள் நம்மைப்பற்றி எப்படிச் சித்தங்கொள்வாரென்பதைக் கவனிக்கவேண்டியதல்லவா? மிஷனில் சம்பளம் பெற்று, சுவிசேஷ பிரசங்க ஊழியத்தைச் சிலர் நடத்தி வருகிறார்கள். மற்றக் கிறிஸ்தவர்களில் அநேகர் இப்பிரசங்க ஊழியப்பொறுப்பு தங்கள் சொந்தக் கடமையென உணராதிருக்கலாம். நானும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது என்னுடைய கடமையல்லவென்று அநேக வருஷக்காலமாய் நினைத்திருந்தேன். அந்த எண்ணம் இப்போ சிலகாலமாய் மாறி, சுவிசேஷத்தைக் கூறியறிவிப்பதும் ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவதும் என்னுடைய கடமைகளிலொன்றென உணருகிறேன். சுவிசேஷ நற்செய்தியைப் பிறருக்குக் கூறியறிவிப்பதினால், அறிவிப்பவர்களுக்கே மிகுந்த ஆசீர்வாதமுண்டாகிறது. 'எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்' (நீதி. 11: 25). அதாவது, எவன் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தைப் பிறருக்குக் கொண்டுபோகிறானோ அவன் ஆசீர்வதிக்கப்படுகிறான் என்பது அதின் கருத்து. என் அனுபவமும் அதற்கு ஒத்திருக்கிறது. அதின் பலாபலன்களையும் நான் அடைந்துவந்திருக்கிறேன்.

4. **இவ்வூழியத்தைச்செய்ய நான் ஏவப்பட்ட காரணம்.** சுமார் 20 வருஷங்களாய், வேனிற்கால வசதிக்காக இரண்டு மூன்று மாதம் நான் கொடைக்கானலுக்குப்போய், அங்கு வசித்து வருவது வழக்கம். பல மிஷன்களைச் சேர்ந்த 500 மிஷனெரிமாருக்குமேல் வேனல் வசதிக்காக வருஷாவருஷம் அங்கு கூடிவருவதுண்டு. அவர்களிலனேகர் மகா பிரபல்யஸ்தராகவும், வித்வான்களாகவும், விசேஷித்த பிரசங்கிகளாகவும், ஆவியில் அனல்கொண்ட தேவ பக்தர்களாகவுமிருப்பார்கள். அப்படிப்பட்ட தேவ ஊழியர் சிலர் ஒன்றுகூடி ஏற்பாடுசெய்து, அங்கே வந்திருக்கிற மிஷனெரிமார்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் பிரயோஜனமாக 3 முதல் 5 நாள் வரை ஆவிக்குரிய கூட்டம் (Spiritual Convention) நடத்துவார்கள். அதின் நோக்கம்: கூடுகிற ஒவ்வொரு ஆத்துமாவும் ஆவியின் அனல்மூண்டு, சீர்திருந்தி, வளர்ந்து, பிறர் பிரயோஜனார்த்தமாய் ஊழியஞ் செய்யவேண்டுமென்பதே. அதில் அநேகம் எழுப்புதலான பிரசங்கங்களும், ஊக்கமான ஜெபமும், பரவசமடையத்தக்க பாட்டுகளும் நடைபெறும். அப்படிப்பட்ட கூட்டங்களுக்கு என்னால் கூடிய அளவு தப்பாமற்போய்க் கவனமாய்க் கேட்டேன். அதே மாதிரியாய் மிஷன் அபிவிர்த்திக்கென்று அநேக ஆலோசனைக் கூட்டங்கள் (Conference) நடந்தேறும். அவைகளுக்கும் நான் தப்பாமற்போய்க் கவனமாய்க் கேட்பேன். அவ்வாவிக்குரிய கூட்டங்களின் மூலமாய் நான் அறிந்த நூதன விசேஷித்தவற்புறுத்தப்பட்ட சத்தியம் ஒன்றே, அதாவது, சுவிசேஷ நற்செய்தியைக்கூறி



அறிவிப்பது குணப்பட்ட ஒவ்வொரு மெய்க்கிறிஸ்தவனின் கடமையென்பதே. இதற்கு வேதாதாரங்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். பிதா என்னை அனுப்பினதுபோல நான் உங்களை அனுப்புகிறேன் (யோ. 20: 21). நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல், நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன் (யோ. 17: 18). நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களைக் கூறியறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாய் இருக்கிறீர்கள் (1 பேதுரு 2: 9). இவைகளை நான் தற்சோதனை பண்ணி, நன்றாய் ஆலோசித்துப் பார்த்ததில், அதிற்கண்ட கருத்து உண்மையானதுதான், விசுவாசிக்கவேண்டியதுதான், எல்லாக் கிறிஸ்தவர்களும் செய்யவேண்டியதுதான் என்று பட்டது. அதற்குரிய சுருக்க முகாந்தரங்களாவன: (a) ஒவ்வொரு கிறிஸ்தவனும் குணப்பட்ட பரிசுத்த ஜீவியமுடையவனாயிருக்கவேண்டும். (b) அந்தக் குணப்பட்ட பரிசுத்த ஜீவியநிலைமை குன்றாது, மழுங்காது அபிவிர்த்தியடைகிறதாயும், மரணபரியந்தம் கிறிஸ்துவில் தரித்திருக்கிற ஜீவியமாயுமிருக்கவேண்டும். (c) இந்த இரண்டும் மெய்யாயிருக்கும்போது, அந்தக் கிறிஸ்தவனிடத்தில் பொங்கி வடிகிற ஜீவியமிருக்கும். அதாவது குற்றாலம் அணையில் சோனாமாரியாய் மழை பெய்யும்போது அதிலிருக்கும் சுனை பொங்கித் ததும்பி வழிந்தோடுகிறதுபோலவும், அந்த ஜலம் ஓடுகிற ஆறு பாயுமிடமெல்லாம் இருபக்கமும் பயிர்களும், மிருகங்களும், மனுஷரும் செழித்திருப்பதுபோலவும் மெய்க் கிறிஸ்தவனும் பிறருக்கு ஆசீர்வாதத்தை அருளக்கூடிய கருவியாயிருப்பான். கிறிஸ்துநாதர் சென்ற இடமெல்லாம் அப்படியே இருந்தது. அவன் நீர்க்காலின் ஓரமாக நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து இலை உதிராத மரத்தைப்போலிருக்கிறான். அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். இப்படிச் செய்வதற்கு ஓர் பொது நியாயம்: கல்வியிற்றேர்ந்த பெற்றோர், தங்கள் பிள்ளைகள் அறிமுகத்தோர் கல்வியில் தேரும்பொருட்டு ஏவுகிறார்கள். திரண்ட சம்பத்துள்ள உத்தமர்கள் தானதர்மஞ்செய்யத் தங்கள் திரவியத்தைச் செலவிடுகிறார்கள். அதுபோல ஞானசம்பத்தை அடைந்திருக்கிறவர்கள் பிறர் பிரயோஜனார்த்தமாய் அதை உபயோகிக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

5. **பிரசங்கத்துக்குப் போதும்போது இருக்கவேண்டிய லக்ஷணம்.** நம்முடைய ஊழியம் ஜெபத்தின்பேரில் அஸ்திபாரம் போடப்பட்டதாயிருக்கவேண்டும். ஜெபத்தின் மூலமாய் நாம் கடவுளைப் பிரார்த்திப்பதினின்று அவரே நாம் பிரசங்கிக்கவேண்டிய இடம், சமயம், பொருள் முதலியவற்றை நமக்கு அருளுகிறவராக இருக்கவேண்டும். என்னாலேயல்லாமல் உங்களால் ஒன்றும் முடியாது என்று கிறிஸ்து பெருமான் திருவுளம்பற்றியிருப்பதைக் கருத்தில் வைத்தவர்களாய், நமது கல்வித்திறமை, சாதுரியம் முதலிய மனோ வல்லமையின்பேரில் மாத்திரம் முற்றிலும்

சாராமல், கடவுளுடைய ஆவியின் வல்லமையின்பேரில் சார்ந்து, மற்றவர்களை உபகரணங்களாக உபயோகித்து, தேவ ஊழிய வேலைசெய்ய ஆரம்பிக்கவேண்டும். 'பலத்தினாலும் பராக்கிரமத்தினாலுமல்ல, என்னுடைய ஆவியினால் எல்லாம் ஆகும்'.

மேலும், இந்துக்களிடம் பேசவேண்டிய விஷயத்திலும் வெகு ஜாக்கிரதையாய் நம்மை ஆயத்தஞ்செய்துகொள்ளவேண்டும். வேதாகமத்தை வாசிப்பதுடன் அதற்கு அனுசாரணையாயிருக்கப்பட்ட இந்துமார்க்க நூல்களையும் யாதொரு துவேஷமின்றி வாசித்து, கிறிஸ்தவ சத்தியங்களுக்கும் இந்துமதக் கோட்பாடுகளுக்குமுள்ள தாரதம்மியங்களை வெகு நுட்பமாய்க் கற்றறியவேண்டும். தெய்வம், ஆன்மா, பாவம், ரக்ஷிப்பு, நித்திய ஜீவன் ஆகிய பல விசேஷித்த விஷயங்களைப்பற்றி இரு சமயங்களும் போதிப்பதென்னவென்றும், கிறிஸ்து சமயத்தில் காணப்படும் சிரேஷ்டமென்னவென்றும் எடுத்துக்காட்டக்கூடியவர்களாயிருக்கவேண்டும். சில சத்தியங்கள் பொதுவாயிருக்கின்றன. அப்படியிருப்பதை நாம் ஒத்துக்கொள்ளலாம். அது கிறிஸ்துமார்க்கத்தில் மாத்திரம் இருக்கிறதென்று வற்புறுத்திச் சொல்லவேண்டாம். முக்கியமாய் வித்தியாசமானவைகளாவன:—(a) கடவுள் ஒருவரென்றொப்புக்கொண்டாலும், அவருக்கு விக்கிரக ஆராதனை வேண்டாது என்பது கிறிஸ்துமார்க்க சித்தாந்தம். (b) கிறிஸ்துபகவானின் பாடுகளினால் பாவம் இலவசமாய் மன்னிக்கப்படுவது. (c) அவரை ஏற்றுக்கொண்டு, அவரடிச்சுவடுகளில் நடக்கும்போது, குணமாறுதலடைந்து, மறுரூபப்பட்டு, பரம குணங்களால் அலங்கரிக்கப்படுவோமென்பது. அதுவே, அவர் முன்மாதிரியைப் பின்பற்றுவதாம். ஓர் பாத்திரம் ஏதாவது ஒரு பதார்த்தத்தினால் நிறைந்திருக்கும்போது, இன்னொரு பதார்த்தம் அதில் வைக்கக்கூடாததுபோல் ஒருவர் மனசிற்கொண்டிருக்கிற கொள்கை தப்பென்று அறிந்தாலொழிய, இன்னொரு கொள்கையின் உண்மையை தன் மனசில் அறிந்துகொள்ளமாட்டார். ஆனால் எவ்வித மார்க்க அறிவும் ஆராய்ச்சியுமில்லாத ஒருவனுக்கு இந்துமார்க்கத்தைப்பற்றி யாதொன்றுமே பேசாது, கிறிஸ்துவைப்பற்றி மாத்திரம் பேசினால் போதுமானது. கொஞ்சம் அறிந்தவர்களுக்கு இந்து சமயத்தில் நிழலாட்டம்போல் காணப்படும் பல சத்தியங்கள் எவ்வாறு கிறிஸ்துவிலும், அவரது கிரியையிலும் நிறைவேறி பூரணமடைகிறது என்று விஸ்தரித்துக் காட்டக்கூடியவர்களாயிருப்பது உசிதம்.

6. எவ்வாறு பிரசங்கிக்கும் இடத்தில் நடந்துகொள்ளவேண்டியது. யாரைத் தேடிப்போகிறோமோ, அவர்களுடைய அறிவு நிலையையும், மார்க்க நிலையையும், திட்டமாய் அறியவேண்டும். அவர்கள் பற்றியிருக்கும் மார்க்கத்தில் எம்மட்டும் அவர்களுக்குப் பற்றுதலுண்டெனக் கவனித்துக்கொள்ளவேண்டும். அவர்களிடம் நாம் நடந்துகொள்ளும் ஒழுக்கத்தின் மூலமாய் நாம் அவர்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டும். சிலருக்கு



இந்துமார்க்கத்தின் குறைவுகளை எடுத்துக்காட்டுவது பிரீதியாயிருக்கமாட்டாது. கோபத்தை மூட்டும். அப்பொழுது அதற்குத் தகுந்தபடி விஷயங்களைத் தெரிந்து, அவர்களுக்குக் கோபம் மூளாத விஷயமாய்ப் பேசவேண்டும்.

என் அனுபவத்தில் உள்ளதில் ஒன்றை சாக்ஷியமாய்ச் சொல்லுகிறேன். நாங்கள் சேர்மாதேவிக்குப் பிரசங்கிக்கப் போனபோது, செல்வந்தரான ஒரு பிராமணன் என்னை வருந்தியழைத்து, மார்க்க சம்பாஷணை செய்யவேணுமென்று கேட்டார். ஆனால் அவர் அதற்கு ஒரு நிபந்தனை ஏற்படுத்தினார். வழக்கமாய் ஜனங்கள் கிறிஸ்துநாதரை நம்புங்கள் என்று பிரசங்கிப்பதுபோல பிரசங்கிக்கக்கூடாதென்பதே அந்த நிபந்தனை. அதினால் 'நீதி யிரக்க சமரசம்' என்ற விஷயத்தை நான் தெரிந்துகொண்டு பிரசங்கிக்க ஆரம்பிக்கவே, பலரும் வந்து கூடினார்கள். ஜனங்கள் வர, வர பின்னிற்போருக்கு இடமில்லாதே போயிற்று. ஜனங்கள் வெகு கவனத்தோடும் ஆவலோடும் கேட்டார்கள். அதில் சிலர் வக்கீல்கள். கூட்டம் வெகு திருப்திகரமாய் முடிந்தது. பாவம், அதின் பயங்கரம், கடவுளே இரக்ஷிக்கவேண்டியது என்பவை என் உபந்நியாசத்தின் உட்பிரிவுகள். இவைகளுக்கு வேதாதாரங்களும், போது நியாயமும், இந்துமார்க்க அனுசரணையும் எடுத்துக்கூறி, இந்து சமய நூற்படி நீதியிரக்க சமரசத்தின் பொருட்டு தோன்றினோர் யாரேனுமுண்டோவென்ற கேள்வி கேட்டேன். பதில் சொல்ல முடியவில்லை. அது கிறிஸ்துநாதரில் மட்டும் நிறைவேறியிருக்கிறது என்று அவர்கள் மனதிற் பதியும்படி ஊன்றப்பேசி உபந்நியாசத்தை முடித்தேன். திரும்பவும் நான் போய் பிரசங்கிக்கவேண்டுமென மிகுந்த ஆவலுடன் கேட்டுக்கொண்டார்கள்.

நண்பர்களே? நாம் ஞானஸ்நானம் பெற்றபோது கிறிஸ்துவின் உண்மையுள்ள சேவகரும் ஊழியக்காரருமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு அத்தாக்ஷியாக சிலுவை அடையாளத்தைப் பெறவில்லையா? திடப்படுத்தல் பெற்றபோது நாம் சேவகரும் ஊழியக்காரராயுமிருக்கும் விஷயத்தை உறுதிப்படுத்தவில்லையா? போர்வீரரின் ஜோலியென்ன? ராஜ்யத்தைக் காப்பாற்றுவது மாத்திரந்தானா, ராஜ்யத்தை ஜெயிப்பதுமல்லவா? கிறிஸ்து இயேசுவாகிய நமது பரம ராஜாவுக்கு ராஜ்யத்தை ஜெயிப்பதென்றால், ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதுதானே. அவ்வூழியத்தைச் செய்யாவிடில், ஞானஸ்நானத்தில் நாம் செய்த பிரதிக்கினைக்கு அவமானம் பண்ணுகிறவர்களாகவும், அவர் நாம் செய்யும்படி எதிர்பார்ப்பதை வீணாக்குகிறவர்களாகவும் காணப்படுவோமல்லவா? வெட்கம், கூச்சம், வழக்கமின்மை ஆகிய இவற்றினிமித்தம் நம்மில் யாரேனும் கிறிஸ்துவைப்பற்றி அறிவிப்பதில் பின்வாங்கி நின்றால் 'என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுவானோ அவனைக் குறித்து மனுஷகுமாரனும் தமது பிதாவின் மகிமைபொருந்தினவராய்ப் பரிசுத்த தூதரோ

ென்கூட வரும்போது வெட்கப்படுவார்' (மார்க்கு 8: 38) என்று இரக்ஷகர் திருவுளம்பற்றவதை வாசித்துத் தியானிக்கட்டும். கோழைத்தனத்தினால் யாரும் பின்வாங்கினால், 'இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்' என்ற வாக்குத்தத்தத்தை ஞாபகப்படுத்துகிறேன். 'ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணுகிறவன் ஞானமுள்ளவன்' என்று நீதிமொழியில் கண்டிருக்கிற ஞானிகளின் வரிசையில் காணப்படத்தக்கதாய், 'உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்' என்ற கட்டளையை சகல கிறிஸ்தவர்களும் உணர்ந்து, தேவ ஊழியத்தை உற்சாகமாய்ச் செய்துவருவோமாக. அதைக் கடவுள் ஆசீர்வதிப்பாராக.

A. S. அப்பாசாமி.

---

## நோட்டிஸ்.

பழைய வருஷங்களின் பத்திரிகைகள் இப்போது ஒழுங்குபடுத்தப் பட்டிருக்கின்றன. 1905, 1906, 1908 முதலிய வருஷங்களுக்கு 5 அல்லது 6 மாசத்துப் பிரதிகளும், 1909, 1910 முதலிய வருஷங்களுக்கு 3 அல்லது 4 மாசத்துப் பிரதிகளும், 1907, 1911, 1912, 1913, 1914, 1915 முதலிய வருஷங்களுக்கு 10 அல்லது 11 மாசப் பிரதிகளும் கிடைக்கும். பழைய பிரதிகள் வேண்டியவர்கள் இப்போது எழுதினால் வருஷத்துக்கு பிரதி ஒன்றுக்கு அணா 3 வீதமாக அவைகள் அனுப்பப்படும். முந்தின வருஷங்களின் பிரதிகள் (1905—1911) சொற்பமாயிருப்பதால் அவைகளை முதலில்வரும் சில ஆர்டர்களுக்கு மாத்திரம் அனுப்பமுடியும். இப் பத்திரிகைகள் வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம். Mr. S. PANDIAN, Mary Arden School, Palamcottah.

---

சென்னை Y. M. C. A. யிலிருந்த A. A. குலசிங்கம் என்ற ஒருவர் சுற்று புத்திபேதமையினால் நாளது மீ 5 உ முதல் காணமல்போயிருக்கிறார். அவர் ஓர் உத்தம கிறிஸ்தவனான குலசேகரம்பிள்ளை என்பவரின் மருமகன். அவருக்கு வயது 35. கருத்தமேனியும், சரியான வளர்ச்சியும் உள்ளவர். அவரைக் கண்டுபிடிப்பவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதும்படியாகவும் இப்பத்திரிகையை வாசிக்கும் நண்பர் அவர் கண்டுபிடிக்கப்படும்படி ஜெபிக்கவும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

விலாசம்

Mr. KULASEGARAM PILLAI,
Pelagaswella, Elpittiya, Ceylon.

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

761

23 FEB 1917

Juley 1916 Registered No. M. 163

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

" என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." யோவான் 7: 38

Vol. XVII ஜூலை 1916

## கிறிஸ்துநாதரை ஏற்றுக்கொள்ளுதல்

'அவரைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார்கள்' லூக். 8: 40.

இயேசுநாதரை சந்தோஷமாய் ஏற்றுக்கொள்வது எவ்வளவு முக்கியமான காரியம். ஒரு காலத்தில் கனம். Sargent அத்தியக்ஷரவர்களோடு வண்டியில் ஏறி இராக்காலத்தில் பிரயாணம் போனேன். நடு இராத்திரியிலே ஒரு ஊருக்குப் போனோம். நடுச்சாமம் ஜனங்களெல்லாரும் படுத்துக்கொண்டு நித்திரை செய்யத்தக்க நேரம். ஆனாலும் அத்தியக்ஷரவர்கள் வருகிறார்களென்றறிந்து எல்லாரும் விழித்துக் காத்திருந்தார்கள். ஒருவரும் நித்திரை செய்யவில்லை. தீவட்டிகளைக் கொளுத்தி அவர்களை எதிர்கொண்டழைக்கப் புறப்பட்டுவந்தார்கள். தேவாலயத்தில் தீபங்களைப் போட்டு அதை அலங்கரித்து ஆயத்தமாகத் திறந்துவைத்தார்கள். அத்தியக்ஷரவர்களை அவர்கள் கண்ட மாத்திரத்தில் கீதங்களோடும் பாடல்களோடும் அவர்களைக் கூட்டிக்கொண்டுபோனார்கள். 'ஜனங்கள் எல்லாரும் அவருக்காகக் காத்திருந்தபடியால் அவரைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார்கள்'. அப்படிப்போல, இந்தச் சமயத்தில் கப்பர்நகூம் ஊரார் நம்முடைய ஆண்டவரைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார்கள். அவர் கொஞ்சக்காலம் அவர்களைவிட்டுப் பிரிந்துபோயிருந்தார். படவில் ஏறி கலிலேயாக் கடலின் அக்கரைக்குப்போய் அங்கே தங்கியிருந்தார். அவருடைய அற்புதகிரியைகளை மறுபடியும் காணவும் அவருடைய உபதேசத்தைக் கேட்கவும் அவராலே நன்மைகளைப் பெறவும் இவர்களுக்கு மிகுந்த ஆசையுண்டாயிற்று. எப்போது திரும்புவார் என்று ஆவலோடு காத்திருந்தார்கள். கடைசியில் அவர் திரும்பிவந்து படவிலிருந்து இறங்கின

20-7-16
16

வுடனே, 'ஜனங்களெல்லாரும் அவருக்காகக் காத்திருந்தபடியால் அவரைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார்கள்'. திரும்பவும் சொல்லுகிறேன். இயேசுநாதரை ஏற்றுக்கொள்வது மகா முக்கியமான காரியம். இதோ! தம்முடைய திருவாக்கின்படியே இந்த பரிசுத்த ஓய்வுநாளிலே நம்முடைய சபையின் நடுவில் திரும்பவந்து பிரசன்னமாகிறார். அவருக்காகக் காத்திருக்கிறோமா? நம்முடைய இருதயத்தில் அவரைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறோமா? இந்தப் பரிசுத்த இராப்போஜனத்தில் தம்முடைய புண்ணிய பலன்களைக்கொடுக்க அவர் கிருபை [illegible] நிற்கையில் அதிலும் அவரை ஏற்றுக்கொள்ளக் காத்து இருக்கிறோமா? 'அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்'. (சங். 2: 12). மூன்று வகையாய் கிறிஸ்துநாதரை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். மூவகையான ஏற்றுக்கொள்ளுதலுண்டு.

I. அவரை ரக்ஷகராக ஏற்றுக்கொள்ளுதல். 'அவர் தமக்குச் சொந்தமானதிலே' வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்'. (யோவா. 1: 11, 12). கானான் தேசம் அவருடைய சொந்த தேசம். அவருடைய அன்பினாலும் வல்லமையாலும சம்பாதிக்கப்பட்ட சுதந்தரம். இஸ்ரவேல் ஜனங்கள் அவருடைய சொந்த ஜனங்கள். அவருடைய கிருபையாலும சத்துவத்தாலும் பிரித்தெடுத்து மீட்கப்பட்ட ஜனங்கள். 'தமக்குச் சொந்தமானதிலே வந்தார்'. தம்முடைய சுதந்தரத்தைப் பார்க்க வந்தார். தம்முடைய வீட்டிலே வசிக்க வந்தார். தம்முடைய திராட்சத் தோட்டத்தின் கனிகளை வாங்க வந்தார். 'தமக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை'. சொந்த வீட்டார் அவரைப் புறம்பாக்குகிறார்கள். சொந்த இனத்தார் அவரைத் துரத்திவிட்டார்கள். சொந்த சபையார் அவரை ஆகாதவனென்று வெறுத்துத்தள்ளிக் கொலைசெய்தார்கள். இப்படிப்பட்ட துரோகத்துக்கு இவ்வுலகத்தில் நிகருண்டோ? சிலர் மாத்திரம் அவரை ஏற்றுக்கொண்டார்கள். அவருடைய ரக்ஷண்ய கிரியைகளை அறிந்து அவரைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார்கள். திருஷ்டாந்தம் வேண்டுமா? சகேயுவைக் கவனித்துப் பாருங்கள். இயேசுவைக்காண விரும்பினான். தன் மனம் மாற விரும்பினான். புது மனுஷனாகும்படி விரும்பினான். இயேசு அவனை நோக்கி, 'இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும்.' என்று சொல்லும்போது 'அவன் சீக்கிரமாய் இறங்கிச் சந்தோஷத்தோடே அவரை அழைத்துக்கொண்டு போனான்'. (லூக். 19: 6). கிரேக்கு பாஷையில் 'சந்தோஷத்தோடு அவரை ஏற்றுக்கொண்டான்' என்றிருக்கிறது. தம்முடைய அருள்நாதரை இரக்ஷகராக ஏற்றுக்கொண்டதினாலே அவன்



இருதயத்தில் எவ்வளவோ பெரிய மாறுதல் காணப்பட்டது. பொருளாசையை விட்டுவிட்டான். தான் அநியாயமாக வாங்கின ஆஸ்திகளை நாலத்தனையாகத் திரும்பச் செலுத்தினான். 'இந்த வீட்டுக்கு இரக்ஷிப்பு வந்தது' என்று ஆண்டவர் சொன்ன கிருபையான வார்த்தையைக் காது குளிரக் கேட்டான். 'அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்'.

ஒரு காலத்தில் அமெரிக்கா தேசத்தில் ஏராளமான அடிமைகளிருந்தார்கள். அவர்கள் பட்ட இம்சைகள் இவ்வளவென்று சொல்லி முடியாது. ஜீவன் முதலாய் அவர்களுக்குக் கசப்பாயிருக்கத்தக்கதாக அவர்களை அடித்தார்கள், மிதித்தார்கள், துன்பப்படுத்தினார்கள். President Lincoln என்னும் அந்தத் தேசத்து அதிபதி 'இப்படி அடிமை வியாபாரம் பண்ணுவது சரியல்ல' என்று அதைக் கட்டாயத்தினால் நிறுத்தினார். அதினிமித்தம் அந்தத் தேசத்தில் பெரிய சண்டையுண்டாயிற்று. என்றாலும் Lincoln என்பவர் தைரியத்தோடு நின்று 'இதுமுதல் இந்தத் தேசத்தில் அடிமைகளை வைக்கக்கூடாதென்று' சட்டத்தைப் பிறப்பித்தான். ஆயிரமாயிரமான அடிமைகளை விடுதலையாக்கிச் சுயாதீனப்படுத்தினார். அப்புறம் அவர்களுடைய நடுவில் அவர் போகும்போது அவர்களுடைய சந்தோஷத்துக்கு வரம்பில்லை. 'எங்கள் இரக்ஷகர் வந்துவிட்டார்' என்று சொல்லி ஆனந்தம்கொண்டாடினார்கள். சந்தோஷத்தின் மிகுதியினாலே கண்ணீர் விட்டார்கள். சந்தோஷப்படவேண்டாமா? அவர்களை அடிமைத்தனத்தினின்று விடுவித்தார். நீச நிலைமையிலிருந்து அவர்களை உயர்த்தினார். கடைசியாக அவர்கள் நிமித்தம் கொலையுண்டு மாண்டுபோனார். பிரியமான சகோதரரே! கிறிஸ்துநாதர் இரக்ஷகராக வந்திருக்கிறார். பாவத்தின் அடிமைத்தனத்தினின்று நம்மை விடுவிக்க வந்திருக்கிறார். பாவக் கட்டுகளை அவிழ்க்க வந்திருக்கிறார். பாவ விலங்குகளை முறித்துப்போட வந்திருக்கிறார். பிசாசின் அடிமைகளே! நீங்கள் இனி கஷ்டப்பட வேண்டியதில்லை. பாவத்தில் நிலைக்கவும் வேண்டாம். 'நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்' என்று புலம்பவும் வேண்டாம். சர்வ சுயாதீனத்தையும் அவர் கொடுக்கக்கூடும். பூரண விடுதலையும் கூறுகிறார். 'அவர் தம்முடைய ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரக்ஷிப்பார்'. மத். 1: 21. ஒருவாறாகப் பார்த்தால் இந்தச் சபையானது அவருக்குச் சொந்தம். அவருடைய நாமத்தைத் தரித்துக்கொண்டிருக்கிற சபை; அவர் மூலமாய் அநேக சிலாக்கியங்களைப் பெற்றனுபவிக்கிற சபை. 'அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார் &c. சகோதரனே! அவரை இரக்ஷகராக ஏற்றுக்கொண்டிருக்கிறாயா? சகேயுவைப்போல அவரை ஏற்றுக்கொண்டு உன் அநியாய

களையெல்லாம் வெறுத்துவிட்டுப் புது ஜீவியம் செய்கிறாயா? 'அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்'.

II. அவரைச் சகாயராக ஏற்றுக்கொள்ளுதல். (பிரசங்க வாக்கியம்). கப்பர்நகூம் ஜனங்கள் ஆண்டவருக்காகக் காத்திருந்த முகாந்தரம் இதுவே. அவரிடத்தில் சகாயத்தை நாடிக் காத்திருந்தார்கள். அதற்கு முன் அந்தப் பட்டணத்தில் அற்புதமூர்த்தியாய் அவர் விளங்கி இருந்தார். அங்கே வியாதிகளை நீக்கிவந்தார்; பிசாசுகளைத் துரத்தினார்; எல்லாருக்கும் உதவிசெய்து வந்தார். விசேஷமாய் இந்தச் சமயத்தில் அவஸ்தைப்பட்[illegible] அவருடைய உதவிக்காகக் காத்திருந்தார்கள். யவீரு என்பவன் தன் மகள் நிமித்தம் கவலைப்பட்டு ஆண்டவருடைய உதவியை விரும்பினான். பெரும்பாடுள்ள ஸ்திரீயும் அவருடைய வஸ்திரத்தைத் தொட ஆத்திரப்பட்டாள். துன்பம் அடைந்த அநேகர் எப்போது வருவார் என்று எதிர்நோக்கி இருந்தார்கள். ஆகையால் அவர் வந்தவுடனே அவருடைய சகாயத்தை விரும்பி அவரைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார்கள். அவரைப்போல சமயசகாயர் ஒருவருமில்லை. அதற்குத் திருஷ்டாந்தம் வேண்டுமோ? அதோ! 12 சீஷர்கள் படவில் ஏறிக் கடலின் அக்கரைக்குப் போகையில் பெருங்காற்று அடிக்கிறது. கடல் கொந்தளித்து அலைகள் எல்லாம் படவின்மேல் மோதுகிறது. அவர்கள் பிரயாசப்பட்டுத் தண்டுவலித்தாலும் பிரயோஜனமில்லை. கடல் கோஷத்தினாலே பயப்படுகிறார்கள். காற்றின் அகோரத்தினாலே வருத்தப்படுகிறார்கள். மோசமான சமயம்! சகாயம் கிடைக்காவிட்டால் மாண்டுபோவார்கள். ஆனால் சகாயம் கிடைத்தது. இயேசு கடலின்மேல் நடந்து சமீபத்தில் நின்று 'நான்தான் பயப்படாதிருங்கள்' என்கிறார். அந்தச் சமயத்தில் சகாயராக விளங்கினார். சீஷர்கள் அவரை அறிந்து 'அவரைப் படவில் ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தார்கள். (யோவா. 6: 21). உடனே மோசம் நீங்கிவிட்டது. 'படவு அவர்கள் போகிற கரையைப் பிடித்தது'. இயேசுவைச் சகாயராக ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் துன்பம் எல்லாம் இன்பமாக மாறிவிட்டது. சகோதரரே! இந்தத் திவ்விய சகாயரை நீங்களும் ஏற்றுக்கொள்ள மனதாயிருக்கிறீர்களா? படவிலல்ல உங்கள் இருதயத்தில் அவரை ஏற்றுக்கொள்ள மனமுண்டா? இந்த உலகமாகிய கடலை நாம் கடந்துபோகையில் எத்தனை அலைகள், எத்தனை கவலைகள், எத்தனை சோதனைகள் உண்டு! சொந்தப் பிரயாசத்தால் இது முடியும் என்று நினைக்கிறீர்களா? முழு பெலத்தோடு தண்டுவலித்தால் சித்திபெறலாம் என்று யோசிக்கிறீர்களா? ஒருபோதுமல்ல. அந்தச் சகாயர் இருந்தால்மாத்திரம் நம்முடைய படவு மோட்சகரையைப் பிடிக்கும். அவருடைய வார்த்தையால்மாத்திரம் காற்று நின்றுபோய் மிகுந்த அமைதலுண்டாகும். சில கிறிஸ்தவர்கள் இயேசுவை ரட்சகர் என்று



162438

அறிந்திருக்கிறார்கள். ஆனாலும் அவரை சமயசகாயராக அவர்கள் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களுடைய இருதயத்தில் இந்தப் [illegible] 'அமைதல்' இல்லவேஇல்லை. எல்லாம் கவலை, எல்லாம் கொந்தளிப்பு, எல்லாம் வருத்தம், எல்லாம் பிரயாசம், கவலைப்படாமலும், [illegible] இல்லாமலும் ஜீவியம் செய்யவேண்டுமானால் உங்கள் சொந்த [illegible]ராமலும் தண்டுவலிக்காமலும் இயேசுவைச் சகாயராக ஏற்றுக்கொண்டு இவ்விதமாக விசுவாசத்தினாலே பிழைத்துவரவேண்டும்.

III. அவரை ஆண்டவராக ஏற்றுக்கொள்ளுதல். 'நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே அவருக்குள் .... நடந்துகொள்ளுங்கள்'. (கொலோ. 2: 6). மூலபாஷையின் கருத்து வேறே. 'நீங்கள் கிறிஸ்து இயேசுவை ஆண்டவராக ஏற்றுக்கொண்டபடியே அவருக்குள் நடந்துகொள்ளுங்கள்' என்றிருக்கிறது. ஒருவனை எஜமானாக நாம் ஏற்றுக்கொண்டால், அவனுடைய சித்தத்தின்படி நாம் நடக்கவேண்டும். இஸ்ரவேலின் ராஜா ஆகாப் என்பவன் சீரியாவின் ராஜாவை ஆண்டவன் என்று ஏற்றுக்கொண்டு 'நானும் எனக்குண்டான யாவும் உம்முடையவைகள்' என்று ஒப்புக்கொள்ளும்போது அந்த அரசன் உடனே ஆட்களை அனுப்பி 'உன் வெள்ளியையும், உன் பொன்னையும், உன் ஸ்திரீகளையும், உன் குமாரர்களையும் நீ எனக்குக் கொடுக்கவேண்டும்' என்று கட்டாயப்படுத்திக் கேட்டான். (1 ராஜா 20: 45).

இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுக்கு ஒரு ராஜா வேண்டுமென்று கேட்கும்பொழுது தேவனுடைய உத்தரவின்பேரில் சாமுவேல் அப்படிப்பட்ட ராஜாவை நியமித்தால் இன்னவகையாய் அதிகாரம் செலுத்துவான் என்றும் தனக்கு இஷ்டமானதை எல்லாம் செய்வானென்றும் நீங்கள் அவனுக்கு வேலையாட்களாவீர்களென்றும் வெகு தெளிவாக அரசனுடைய காரியத்தை எடுத்துக் காட்டினான். ஆ! பாருங்கள், நம்முடைய ரட்சகராக மாத்திரமல்ல, நம்முடைய சகாயராகமட்டுமல்ல, நம்முடைய ஆண்டவராகவும் வருகிறார். இதற்கும் திருஷ்டாந்தம் சொல்லுகிறேன். கிறிஸ்துநாதர் கடல் ஓரத்தில் பிரசங்கிக்கும்போது ஒரு படவைக்கண்டு அதிலே ஏறி உட்கார்ந்தார்? அது சீமோனுடைய படவு. ஆனாலும் அதிலே கிறிஸ்துவானவர் ஆண்டவராக விளங்கி அதிகாரத்தோடு ஆழத்தில் தள்ளிக்கொண்டு போகவும் வலைகளைப்போடவும் உத்தரவுகொடுத்தார். அந்தச் சமயத்தில் பேதுரு அவரை ஆண்டவராக ஏற்றுக்கொண்டான் என்று பார்க்கிறோம். ஏனென்றால், அவருடைய உத்தரவுக்கு உடனே கீழ்ப்படிந்து 'ஐயரே! (ஆண்டவரே!) இராமுழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை. ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன்' என்றான். (லூக். 5: 45). 'நீர் என் ஆண்டவர்' ஆகையால் உம்முடைய உத்தரவு எனக்கு எப்படித் தோன்றினாலும் உம்முடைய வார்த்தையின்படியே செய்வேன்' என்று இணங்கினான். அதினாலுண்டான

லாபமென்ன? திரளான மீன் அகப்பட்டது. இயேசுவின் வல்லமையைக் கண்டு அறிந்தார்கள். என் சகோதரனே! உன் படவில், வீட்டில், இருதயத்தில் ஆண்டவன் யார்? ஆ! எத்தனை கிறிஸ்தவர்கள் இதிலே தவறிப் போகிறார்கள். தாங்களே கப்பலை நடத்தவும் வலைகளைப்போடவும் பார்க்கிறார்கள். இராமுழுவதும் பிரயாசப்படுகிறார்கள். ஒன்றும் அகப்படுகிறதில்லை. ஒரு தேர்ச்சியுமில்லை, யாதொரு ஞான வளர்ச்சியுமில்லை. காரணம் என்ன? கிறிஸ்துவை ஆண்டவராக ஏற்றுக்கொண்டு அவரைத் தங்கள் இருதயத்தில் [illegible] செய்யாதிருக்கிறார்கள், அவர்களுடைய [illegible]களை அவர் [illegible]வேண்டும்; நரகத்துக்குப் போகாதபடி அவர்களை [illegible] வேண்டுமென்று; அவர்களுக்கு வியாதிகளும் வருத்தங்களும் உண்டானால் [illegible] அவர் வந்து சகாயம்செய்யவேண்டும்.' ஆம்! [illegible] தங்களை ஆண்டவரென்று கிறிஸ்துவை தங்கள் சித்தத்தின்படி செய்யக் கட்டமைப்பட்டவரென்றும் பாவிக்கிறார்கள். மோசம்போகாதிருங்கள். அப்படிப்பட்ட உத்தியோகம் அவருக்கு வேண்டாம். சிநேகிதனே! உன் வேலைக்காரனாக வராமல் உன் ஆண்டவராக வந்திருக்கிறார். அவரை ஆண்டவராக ஏற்றுக்கொண்டால் தாறுமாறுகளை எல்லாம் அவர் ஒழுங்குப்படுத்துவார்; அர்வபூக்கப் பழக்கங்களையெல்லாம் அழித்துப்போடுவார். உன் காரியங்களை எல்லாம் ஆண்டு நடத்தி அநுகூலப்படுத்துவார். இஸ்ரவேல் ஜனங்கள் தாவீதை ராஜாவாக ஏற்றுக்கொண்டு எல்லாரும் அவருக்குக் கீழ்ப்படிந்து நடந்தபோது 'நான்கு திசைகளிலும் தேவன் அவர்களுக்கு இளைப்பாறுதலைக் கட்டளையிட்டார்' என்று வாசிக்கிறோம். (1 நாளா. 22: 18). உங்களுக்கு அப்படிப்பட்ட பூரண இளைப்பாறுதல் வேண்டுமா? கிறிஸ்து இயேசுவை ஆண்டவராக ஏற்றுக்கொள்ளுங்கள், ஏற்றுக்கொண்டு அவருக்குள் நடந்துகொள்ளுங்கள்.

T. WALKER.

---

## நாள் பார்க்குதல்

பூர்வகாலம் தொடங்கி இந்நாள்வரையும் இவ்வழக்கம் அஞ்ஞானிகளால் அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது. பாபிலோனியராலும், கானான் தேசத்து பூர்வ ஜாதிகளாலும் இவ்வாசாரம் கைக்கொள்ளப்பட்டு வந்ததாக வேதத்தில் குறிப்புகளைப் பார்க்கிறோம். அப்படியே இந்துக்களும் இம்முறையைப் பலமாய்க் கையாடிவருவதைப் பார்க்கிறோம். அஞ்ஞானக்குருக்கள் தங்கள் பிழைப்புக்கேதுவாக ஜோஷியம் என்ற சாஸ்திரத்தை உண்டு பண்ணி, பேதைமையான ஜனங்களை ஏமாற்றிப் பொருள் சம்பாதிக்கிறார்கள்.

புதுவீடு கட்டத் தொடங்கும்போதும், வீட்டில் புதிதாய்க் குடியேறும்போதும், தோட்டம் வயல் அறுக்கப்போகிறபோதும், தாலிகட்டுவதற்கும் கலி[illegible]



யாணம்பண்ணப் போகிறபோதும், முக்கியமான எந்தக் காரியங்களைச் செய்யப்போகிறபோதும், விசேஷமாய்க் கலியாணம் முடிக்கப்போகிறபோதும் ஜோஷியர்களிடம்போய் நல்ல மாசம், நல்ல நாள், நக்ஷத்திரம், லக்கினம் கேட்டுத்தான் செய்வார்கள். இல்லையானால் செய்யப்போகும் காரியாதிகள் கைகூடி க்ஷேமமாய் முடியாதாம்.

பிராமணர்களின் மாயவலைக்குள் அகப்பட்டுக்கிடக்கிற இந்துக்கள் நாள்பார்த்து தங்கள் சுவைகாரியங்களை நடப்பிக்கிறது இயல்பு. அவர்களுடைய அறிவீனமே இதற்குக் காரணம். அவர்கள் தேவவல்லமையையும், தேவ பராமரிப்பையும், தேவசித்தத்தையும், தேவ ஆசீர்வாதங்களையும் அறியாதபடியால் அப்படிச் செய்கிறார்கள். ஆனால், கிறிஸ்தவர்களும் இந்துக்களைப்போல் நல்ல மாசம், நல்லநாள் பார்த்து, தங்கள் முக்கிய காரியங்களை நடப்பிக்கிறதும், விசேஷமாய்க் கலியாணம் முடிக்கிறதும், எவ்வளவு வெட்கமும் துக்கமுமானது? அநேக தேவ ஊழியர்களும்கூட இதில் நம்பிக்கையுடையவர்களாயிருக்கிறார்கள் என்று தெரிகிறது எவ்வளவு துக்கமும், பரிதாபமுமான விஷயம். ஓர் தேவ ஊழியன், இன்னொரு தேவ ஊழியனோடு இது விஷயத்தைப்பற்றித் தர்க்கம் பண்ணிக்கொண்டிருக்கும்போது, நல்ல மாசம், நல்ல நாள் பார்ப்பது நியாயந்தான் என்று ரூபிக்கும்படியாய் 'நீர் புரட்டாசிமாசம் கலியாணம் செய்தபடியால்தான் உமக்கு அதிகப் பிள்ளைகள் இல்லை' என்று சொன்னாராம். ஆடி, புரட்டாசி, மார்கழி மாசங்களில் கலியாணம்செய்து எத்தனையோ பிள்ளைகளை உடையவர்களாயிருக்கிறவர்களை அவர் பார்த்திராரோ? தேவ ஊழியர்களுக்குள்ளும் இந்த அறிவீனம் போகவில்லையானால் சபையார்களைப்பற்றி என்னசொல்ல? இப்படிப்பட்ட ஊழியர்கள் நாள் பார்ப்பது சரியல்லவென்று சபையார்களுக்குப் போதித்து, அவர்களுக்கு எப்படி அறிவைப் புகட்டக்கூடும். 'குருடர்களுக்கு வழிகாட்டுகிற குருடர்களாயிருக்கிறார்களென்றே இவர்களைப்பற்றியும் சொல்லவேண்டும்.

திங்கள்கிழமை முகூர்த்தநாளென்று ஜோஷியன் சொல்வானானால் உடனே அந்த நாளில் கலியாணத்தை வைத்துவிடுவார்கள். முந்தினநாள் ஓய்வுநாளாச்சுதே, அதில் கலியாண வேலை ஜோலிகள் செய்ய நேரிடுமே, ஓய்வுநாளை மீறுவது சரியல்லவே என்ற எண்ணம் கொஞ்சமேனும் இல்லையாது. குருமார் திங்கள்கிழமை கலியாணம் வைத்திருக்கிறீர்களே, ஓய்வுநாளை மீறி வேலைசெய்ய நேரிடுமே, வேறே நாளில் கலியாணம் வைக்கக் கூடாதா என்று கேட்டால், ஐயா, பெண்வீட்டுக்காரர்கள் அப்படி நாளைக் குறித்துப்போட்டார்கள். இனத்தாருக்கு முந்தியே பாக்கு அல்லது [illegible] கொடுத்தாச்சுது: ஞாயிற்றுக்கிழமையில் யாதொரு வேலையும் [illegible]போட்டோம் என்று வீண்போக்குகளைச் சொல்லிவிடுவார்கள். மாப்பிள்ளை அல்லது பெண் அழைக்கப்போகிறதும் ஞாயிற்றுக்கிழமையி

லேயே; இலை காய்கறிகள் வாங்குகிறதும் ஞாயிற்றுக்கிழமையிலேயே. இப்படி பற்பல வேலைகள் ஞாயிற்றுக்கிழமைகளில் செய்து, திங்கள்கிழமையில் கலியாணம் செய்வதினால் தேவ ஆசீர்வாதம் அக்கல்யாணங்களில் எப்படித் தங்கும்? அப்படியே சிலர் சனிக்கிழமை நல்லநாளென்று ஜோஷியன் சொல்லிவிடுவானானால், அந்த நாளில் கலியாணம் வைத்துக்கொண்டு, அடுத்த நாளாகிய ஓய்வுநாளிலும் சகல வேலையும் கூசாமல் செய்வார்கள். ஆகையால் நாள் பாராமல், திங்கள், சனிக்கிழமைகளில் கலியாணம் வையாதிருப்பதே உத்தமம்; சிலர் அவசரத்தில் கலியாணம் முடிக்க நேரிட்டால், நல்ல மாசம் என்று சொல்ல மாசத்தில் மூன்று ஓலை கூறி, கலியாணம் முடிக்க நாளில்லையானால் உடனே ரிஜிஸ்திறர் கலியாணம் செய்துவிடுவார்கள்.

நாள் பார்த்து கலியாணம் வைப்பதினால் குருமார் ஒரே நாளில் இரண்டு மூன்று கலியாணங்கள் முடிக்க நேரிடும். நாள்மாத்திரமல்ல, நக்ஷத்திரம், லக்கனமும் பார்த்து, ஜோஷியன் குறிப்பிட்ட நேரத்தில் கலியாணம் முடிக்கவேண்டுமென்ற நோக்கமாய், 'என் வீட்டுக் கலியாணத்தை முந்தி முடிக்கவேண்டும், என் வீட்டுக் கலியாணத்தை முந்தி முடிக்கவேண்டுமென்று குருமாரைக் கஷ்டப்படுத்தும் சபையார்களுமுண்டு. முந்திமுடிக்கவில்லையானால் ஒழுங்கீன கலியாணம் செய்துவிடுவார்கள்: குருமார், சாவகாசமாயும், சந்தோஷமாயும் முடிக்கும் கல்யாணங்களில் தேவ ஆசீர்வாதம் அதிகமாய்த் தங்கும் என்பதற்குச் சந்தேகமில்லை.

இந்துக்களைப்போல் கிறிஸ்தவர்களும் நாள்பார்த்து, கலியாணம் செய்யும்போது அவர்களுக்கு நாம் நல்லமாதிரி காட்டுகிறதில்லையே. 'நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்'. என்று இரக்ஷாபெருமான் சொன்னபடி, இவ்விஷயத்திலும் நாம் இந்துக்களுக்கு மாதிரியாயிருக்கவேண்டியது நமது கடமை.

முதலாவது, நாள் பார்ப்பது தேவ கட்டளைக்கு விரோதமானது. 'யாதொன்றையும் இரத்தத்துடன் புசிக்கவேண்டாம். குறிகேளாமலும் நாள்பாராமலுமிருப்பீர்களாக. (லேவி. 19: 26); '. . . . நாள் பார்க்கிறவனும் . . . . . உங்களுக்குள்ளே இருக்கவேண்டாம்.' (உபா. 18: 107); 'நீ துரத்திவிடப்போகிற இந்த ஜாதிகள் நாள் பார்க்கிறவர்களுக்கும் குறி சொல்லுகிறவர்களுக்கும் செவிகொடுக்கிறார்கள். நீ அப்படிச் செய்கிறதற்கு உன் தேவனாகிய கர்த்தர் உத்தரவு கொடார்'. (உபா. 18: 14). தெளிவான இந்தக் கற்பனைகளை மீறுவது பெரிய குற்றமாகும்.

இரண்டாவது, இந்து மார்க்கத்தையும், இந்து தெய்வங்களையும் வெறுத்துத் தள்ளிப்போட்டு, சத்தியவேத போதனையை அறிந்து, சத்திய தெய்வத்தை நம்பி, வழிபட்டுவருகிற நாம் அஞ்ஞானிகளுடைய வீண்வழக்கங்களையும், மூடமைகளையும் அனுசரிப்பது நியாயமா? அப்படிச் செய்



வோமானால் அஞ்ஞான சாஸ்திரங்களும் மெய்யென்று நம்புவதுபோலாகுமே. ஆகையால் இந்துக்களுடைய பிரயோஜனமற்ற வழிகளில் நடவாதிருப்போமாக.

மூன்றாவது, வானஜோதிகளாகிய கிரகங்களினால் மனுஷருக்கு நன்மை, தீமை உண்டாகுமென்பது இந்துக்களுடைய எண்ணம். அப்படியே வைத்துக்கொண்டாலும், அவைகளையெல்லாம் சிருஷ்டித்தவர் யார்? சர்வ வல்லமையுள்ள தேவன் அல்லவா; அவரே எல்லாச் சிருஷ்டிகளுக்கும் மேலானவரும், எல்லாவற்றையும் ஆண்டுநடத்துகிறவருமாயிருக்கிறார். அவருடைய சித்தமில்லாமல் சிருஷ்டிகள் நமக்கு யாதொரு தீமையும் செய்யமுடியாது. 'வானத்தையும். பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்' என்று விசுவாசப் பிரமாண அறிக்கைசெய்கிற நாம் அவருடைய வல்லமையையும், வாக்கையும் நம்பி நமது காரியங்களை நடப்பிப்போமாக.

நாலாவது, தேவனே எல்லா நன்மைக்கும் ஊற்றும், காரணருமாயிருக்கிறார். 'நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது'. (யாக். 1: 17). தெய்வபக்தியுள்ளவர்களுக்கு அவர் எல்லா நன்மைகளைக் கொடுப்போமென்று வாக்குப்பண்ணியிருக்கிறார். (உபா. 7: 12—15; மத். 6: 33). நல்ல மாசம், நல்ல நாள், நக்ஷத்திரங்களினால் அல்ல, சர்வ நீதி தயாபரரான கடவுளே சகல ஆசீர்வாதங்களையும் அருளுகிறவர் என்று நம்பி அவரிடத்தில் கேட்டுப் பெற்றுக்கொள்வோமாக.

ஐந்தாவது, அறிவிலும் நாகரீகத்திலும் தேர்ச்சியடைந்த ஐரோப்பியர்கள், நாள் பார்த்து ஒன்றும் செய்கிறதில்லையே. அவர்களுக்கு என்ன பாக்கியம் குறைவாய்ப்போச்சுது. அவர்களே உலகத்தில் சகல ஜாதியாரைப் பார்க்கிலும் மேன்மையும் பாக்கியமும் பெற்றவர்களாய் விளங்குகிறார்களே. ஆகையால் அறிவில் குறைந்தவர்கள் அறிவில் தேர்ந்தவர்களுடைய நன்மாதிரியைப் பின்பற்றக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம்.

ஆறாவது, நம் தேசத்திலுள்ள மகமதியர்கள் ஆடி மாசத்தில் கலியாணம் செய்கிறார்களே. அவர்கள் புத்திர பாக்கியத்தில் குறைவுள்ளவர்களாயிருக்கிறார்களோ? இது விஷயத்தில் மகமதியரும் நமக்கு நல்ல மாதிரியாயிருக்கிறார்கள்.

ஏழாவது, கடவுள் எல்லாவற்றையும் உண்டாக்கி, அவைகள் நல்லதென்று கண்டார் என்று வேதம் சொல்லுகிறது. எல்லா மாசங்களும், எல்லா நாள்களும் அவருக்கு நல்லவைகளாகவே இருக்கிறன.' ஆகையால் தெய்வம் நல்லவைகள் என்று சொல்லுகிற மாசம், நாள்களை நாம் தீமையானதென்று சொல்வது பெரிய அறிவீனமும், அவபக்தியுமாகும். 'இதோ

உலகத்தின் முடிவுபரியந்தம், சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்' என்று திருவாக்கருளின இரக்ஷாபெருமான் எந்த நாளிலும் நமக்கு வேண்டிய ஆசீர்வாதங்களை அருளச் சித்தமுள்ளவராயிருக்கிறார்.

எட்டாவது, நல்ல நாள், நக்ஷத்திரம், லக்கனம் திட்டவட்டமாய்ப் பார்த்து கலியாணம் நடத்தும் பிராமணர்களுடைய வீடுகளில் அதிகமான விதவைகள் இருக்கிறார்களே காரணமென்ன?

ஆகையால் மேற்படி நியாயங்களைக் கவனித்து, நாம் நாள் பாராமல் நமது காரியங்களை நடப்பிப்போமாக.

தேவ ஊழியர்கள், சபையார்கள் நாள்பார்ப்பதான கெட்டவழக்கத்தை நிறுத்தும்படி அடிக்கடி பிரசங்கம்பண்ணுவது நலம்.

---

## வேதாகமப்பாட முறை. 18-ம் பாடம்

### 2 சாமுவேலின் புஸ்தகம்

இவ்வாகமத்தில் தாவீதின் சரித்திரம் கிட்டத்தட்ட முடிவுவரை அடங்கியது. தாவீது சிம்மாசனமேறியது முதல் அவனுடைய 40 வருஷ அரசாட்சியின் சம்பவங்கள் இதில் எழுதப்பட்டிருக்கின்றன. பொறுமை, விசுவாசம் இவைகளைப்பற்றிய சாதனையான போதகம் இதில் உண்டு. மாம்ச இச்சையான பாவத்தை மனதில் தைக்கத்தக்க விதமாய் எடுத்து உணர்த்தியிருக்கிறது.

**ஆக்கியோன்.** 2 சாமுவேலை எழுதினது நாத்தான், காத், என்னப்பட்ட இருவரென்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. (1 நாளா. 29: 29).

**பிரிவுகள்.** இவ்வாகமம் இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

1. தாவீதின் ஜெயங்கள். அதி. 1—10.
2. தாவீதின் துன்பங்கள். அதி. 11—24.

### சாமுவேலின் இரண்டாம் புஸ்தகம்

### 2 சாமுவேல்—இராஜாக்களின் புஸ்தகம்

I. தாவீதின் ஜெயங்கள். அதி. 1—10.

1. யூதாவின் மேல் ராஜா. அதி. 1—4.

(a) புலம்பல். அதி. 1. (b) அபிஷேகம். 2: 1—4. (c) உள் நாட்டுக் கலகம் 2: 5—4. அதி.

2. இஸ்ரவேலின் மேல் ராஜா. அதி. 5—10.



(a) முடி சூடினது. அதி. 5. (b) உடன்படிக்கைப் பெட்டி. அதி. 6. (c) மேசியா வாக்குத்தத்தம். அதி. 7. (d) ஜெயங்கள் அதி. 8. (e) மேவிபோசேத். அதி. 9.

II. தாவீதின் துன்பங்கள். அதி. 11—24.

1. தாவீது விழுதல். அதி. 11—21.

(a) பாவம் அதி. 11. (b) உணர்த்துதல் 12: 1—13. (c) தீர்ப்பு 12: 14—18 அதி. (d) அம்னோனின் பாவம் அதி. 13, 14. (e) அப்சலோமின் கலகம் அதி. 15—18. (f) எருசலேமுக்குத் திரும்புதல் அதி. 19—21.

2. முடிவுரையான சம்பவம் அதி. 22—24.

(a) சங்கீதம் அதி. 22, 23. (b) ஜனசங்கைக் கணக்கு அதி. 24.

I. தாவீதின் ஜெயங்கள் அதி 1—10.

1. தாவீது யூதாவின் மேல் ராஜா அதி 1—4.

(a) யுத்தத்தில் மரணமடைந்தவர்களுக்காகப் புலம்பல் அதி. 1.

சவுலும் யோனத்தானும் யுத்தத்தில் மடிந்த செய்தியை ஒரு அமலேக்கியன் தாவீதுக்கு அறிவிக்கும்படியாக வருகிறான். இந்த அமலேக்கியன் சொன்ன சரித்திரம் 1 சாமு. அதி. 31ல் முதல் ஆறு வசனங்களிலுள்ள சரித்திரத்திற்கு வித்தியாசமாயிருக்கிறது. இவன் புதிய ராஜாவினிடத்தில் தயவு பெறும்படியாக, உள்ளபடி நடந்த சங்கதியை வித்தியாசமாய் மாற்றிச் சொல்லியிருக்கிறான். தாவீதினிடத்தில் தயவு பெறுவதற்குப் பதிலாக, கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவருக்கு விரோதமாகத் தன் கையை உயர்த்தினதினிமித்தம், தாவீதால் கொல்லப்பட்டான். சவுல், யோனத்தான் என்பவர்களின் மரணத்திற்காகத் தாவீது ஒரு அழகான புலம்பல் பாட்டுப் பாடுகிறான். 'இஸ்ரவேலின் அலங்காரம் உயர்ந்த ஸ்தானங்களில் அதமாயிற்று. பராக்கிரமசாலிகள் விழுந்துபோனார்களே!' என்று பாடுகிறான்.

(b) அபிஷேகம் 2: 1—4.

தாவீது அரசாட்சியைத் தவர்ந்துகொள்ள ஆத்திரப்படவில்லை. தேவனால் நடத்தப்பட்டாலொழிய, தானாய் ராஜ்யத்தைப் பெறுவதற்கு யாதொரு பிரயத்தனமும் பண்ணவில்லை. தேவன் அவனை எபிரோனுக்குப் போகச் சொல்லுகிறார். அங்கே யூதாக் கோத்திரத்தின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்படுகிறான். கிலேயாத்திலுள்ள யாபேசின் மனுஷர் சவுலையும் அவன் மக்களின் உடல்களையும் எடுத்து அடக்கம்பண்ணின பட்சமான செய்கைக்காக தாவீது அவர்களுக்கு வந்தனம்சொல்லியனுப்பி, தான் யூதாவுக்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்ட செய்தியையும் அவர்களுக்கு அறிவிக்கிறான். (வர். 5—7).

(c) உள்நாட்டுக் கலகம். 2: 5—4 அதி.

இதே சமயத்தில் சவுலின் மக்களில் மீதியாயிருந்த இஸ்போசேத்தை அப்னேர் என்பவன் இஸ்ரவேலின்மேல் ராஜாவாக்கினான். தாவீதின் மனுஷருக்கும் அப்னேரின் மனுஷருக்கும் யுத்தம் உண்டானது. அதின் பலனாக, இஸ்ரவேலர் தோற்கடிக்கப்பட்டு ஆசகேல் கொல்லப்பட்டான். தாவீதின் குடும்பத்துக்கும் சவுலின் குடும்பத்துக்கும் யுத்தம் நடந்துகொண்டேயிருந்தது. சவுலின் குடும்பம் வரவரத் தாழ்ந்தது. தாவீதின் குடும்பம் பெலத்தது.

2. தாவீது இஸ்ரவேலரின் மேல் ராஜா அதி. 5—10.

(a) தாவீது முடிசூடினது. அதி. 5.

சவுலின் குடும்பத்துக்கும் தாவீதின் குடும்பத்துக்குமுள்ள யுத்தம் முடிந்தது. இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரும் தாவீதை ராஜாவாக ஏற்றுக்கொள்ள விரும்பினார்கள். இஸ்ரவேலனைத்தின்மேலும் ராஜாவானான்.

(b) உடன்படிக்கைப் பெட்டி அதி. 6.

தலைவர்கள், ஆலோசனைக்காரர், பயிற்சி பெற்ற சேனை, ராஜ விசுவாசமுள்ள குடிகள் ஆகிய இவர்கள் மத்தியில் தாவீது இருந்தபோதிலும், கவனிக்கப்படாத இடத்திலிருந்த உடன்படிக்கைப் பெட்டியைத் தன்னிடத்தில் கொண்டுவரும்படி விரும்புகிறான். அநேக வருஷங்களாய் கீரியாத் யாரீமிலிருந்த அப்பெட்டியைக் கொண்டுவரும்படி முப்பதினாயிரம் மனிதரைக் கூட்டிக்கொண்டு போனான். மூன்று மாதம் தாமதமாகி, பின்பு பெட்டியை லேவியர் தோளில்வைத்து சுமந்து அதிக ஆரவாரமான சந்தோஷத்துடன் எருசலேமுக்குக் கொண்டுவந்தார்கள்.

(c) மேசியா வாக்குத்தத்தம் அதி. 7.

தாவீதுக்குக் கிடைக்கும் பெரிய சலாக்கியம் அவனுக்கு வெளிப்படுத்தப்படுகிறது. கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டிக்கென்று ஒரு ஆலயம் கட்ட யோசிக்கிறான். தீர்க்கதரிசியாகிய நாத்தான், தேவ கட்டளைப்படி, அந்த சலாக்கியம் அவன் குமாரனுக்குரியதென்று தெரிவிக்கிறான். தாவீதுக்கு ஒரு வீட்டை உண்டுபண்ணுவேனென்றும் அவன் சந்ததியில் ராஜ்ய பாரத்தின் சிங்காசனத்தை என்றென்றைக்கும் நிலைக்கப் பண்ணுவேன் என்றும் தேவன் வாக்களிக்கிறார். (வா. 13—16). வாக்கியங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றிய, தீர்க்கதரிசனமடங்கியதாக எபி. 1: 8ல் சொல்லியிருக்கிறது. தாவீது கர்த்தருடைய சந்நிதியில் போய் தனக்கு இப்பெரிய சலாக்கியங்களை வெளிப்படுத்தினதற்காக அவருக்கு வணக்கமும் துதியும் செலுத்துகிறான் (வா. 18—29).

(d) தாவீதின் ஜெயங்கள் அதி. 8.



இந்த அதிகாரத்தில் தாவீது யுத்த மனிதனாகக் காணப்படுகிறான். தேவனுடைய பலத்தால் தன் சத்துருக்களை ஜெயித்தான். அவன் போன இடமெல்லாம் தேவன் அவனுக்கு ஜெயத்தைக் கொடுத்தார். விசுவாசிக்குத் தன் சத்துருக்களை ஜெயிக்கத் தன்னில் தானே வல்லமையில்லை. அவனுடைய பூரண வல்லமை தேவனிடத்திலிருக்கிறது.

(e) மேவிபோசேத்தினிடம் காட்டின பட்சம் அதி. 9.

யோனத்தானின் நிமித்தம் சவுலின் குடும்பத்திற்குப் பட்சம் காட்ட அந்த வம்சத்தில் யாராவது உண்டாவென்று விசாரிக்கிறான். இரண்டு காலும் முடமாயிருந்த யோனத்தானின் மகன் மேவிபோசேத், லோதேபாரிலிருக்கிறான் என்று கேள்விப்பட்டு அவனைத் தனது வீட்டுக்கு வரவழைத்து, ராஜ குடும்பத்துடன் போஜனம்பண்ண உத்தரவழித்து சவுலின் நிலங்களையும் அவனுக்குக் கொடுத்து ஆதரித்தான். இச்சம்பவம் தேவன் நமக்கருளுகிற சொல்லிமுடியாத கிருபையை ஞாபகப்படுத்துகிறது எபே. 1: 3. நாம் தேவனுக்குச் சுதந்தரவாளிகளும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரவாளிகளுமாயிருக்கிறோம்.

II. தாவீதின் துன்பங்கள். அதி. 11—24.

1. தாவீதின் விழுதல். அதி. 11, 12. தாவீதின் ஜீவியத்தின் இருண்ட பாகம் இதுதான். வேதாகமம் முழுவதிலும் தாவீதின் விழுதலின் சரித்திரத்தைப்போல பக்திவிசேஷமான எச்சரிப்புள்ளதும் அதிக பயங்கரமான சம்பவங்களடங்கிய அதிகாரம் வேறொன்றுமில்லை.

(a) பாவம். அதி. 11. இதுவரையிலும் தாவீது ராஜா வாஸ்தவத்தில் நல்லயான வாழ்வை அனுபவித்தான். மேலும், யுத்தவீரனாகத் தோல்வி என்னவென்பதை அவன் உணரமாட்டான். ராஜனாக தன் ஜனத்தின் விரோதத்தை அறியவில்லை. அவன் கவலையில்லாத ஜீவியத்தை அனுபவித்தான். யுத்தத்திற்குப் போவதற்குப் பதிலாக யோவாபைச் சண்டையை நடத்தும்படியாக அனுப்பிவிட்டு எருசலேமில் தாமதித்தான். இந்த சோம்பேறித்தனமான நேரம் தாவீதுக்குக் கண்ணியாக மாறினது. ஏத்தியனாகிய உரியாவின் மனைவி பத்சேபாளின்மேல் ஆசைவைத்து பயங்கரமான பாவத்திற்குள் விழுந்தான். ஒரு பாவம் தனிமையாய் நிற்பது அபூர்வம். மற்றப் பாவங்களுக்கும் வழிகாட்டுகிறது. தாவீது அறியத்தனத்திற்கும் சதியோசனைக்கும் ஆளாகிறான். உரியாவை யுத்தத்தின் போர்முனைக்கனுப்பி, சாகும்படி செய்கிறான். தாவீதின் பாவத்தைப் படிப்படியாய்க் கவனியுங்கள். 1. சோம்பேறித்தனம், 2. தன்னயம், 3. காமம், 4. விபசாரம், 5. வஞ்சகம், 6. சதியோசனை, 7. கொலை ஆகிய பாவங்களெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாய் நிமிஷமாய் தொடர்ந்து பிடித்தன. கிறிஸ்தவ ஜீவியத்தில் சோதனைக்கு அப்பாலுள்ள ஒரு படியுமில்லை. சாத்தான் நம்மில் கொஞ்ச வல்லமை செய்யும்படி இடங்கொடுத்தால் நம

றென்று நம்மை அவன் எவ்வளவுதூரம் பாதாளத்திற்கு இழுத்துக்கொண்டு போவான் என்பதை ஒருவராலும் சொல்லமுடியாது.

(b) உணர்த்தப்படுதல் 12: 1—13. தாவீது பாவத்தில் விழுந்து ஒரு வருஷமாகிறது. அவனிடத்தில் மனந்திரும்புதலின் குறிப்பே காணப்படவில்லை. நாத்தான் ஒரு நேர்த்தியான உவமானத்தின் மூலமாய் அவன் பாவத்தைக் கண்டிக்கிறான். தாவீது தன் பாவத்தை உணர்ந்து, தன் மீறுதலை உடனே ஒத்துக்கொண்டு, துக்கித்து மனந்திரும்பினான். அறிக்கையிடப்பட்ட பாவம் தொலைந்துபோன பாவமாகும். (1 யோவா. 1: 9).

(c) தீர்ப்பு. 12: 14—18 அதி. முடிய. தாவீதின் பாவம் உண்மையாகவே மன்னிக்கப்பட்டது. ஆனால் பாவத்தின் பலன் கட்டாயம் வரவேண்டியதே. மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். பட்டயம் அவன் வீட்டைவிட்டு விலகுவதில்லையென்று தீர்க்கதரிசி சொன்னபிரகாரம் தாவீதுக்குச் சம்பவித்தது. இப்படிப்பட்ட இருண்ட வேதனையுள்ள ஜீவியத்தை அவன் அநுபவித்தபோதிலும் தேவனுடைய கிருபை அவனுக்குக் கிடைத்தது. பத்சேபாள் சாலொமோனின் தாயானாள். இஸ்ரவேலர் உயர்வான நிலைமையிலிருக்கும்போது சாலொமோன் ராஜனாயிருந்தது மாத்திரமல்ல, கிறிஸ்துவின் பூர்வீக வம்சத்து முற்பிதாக்களில் ஒருவனானான். இவ்விதமாய் தேவகிருபையால் தாவீதின் துக்க சம்பவம் கிருபையையும் ஆசீர்வாதத்தையும் கொண்டுவருகிற வாய்க்காலாய் மாறினது.

13-ம் அதிகாரத்தின் பாவம், வெட்கம், அவமானம், கொலை முதலியவை தாவீதின் சொந்தக் குடும்பத்தில் விருத்தியாகிறது.

அதி. 15—18 அப்சலோமின் கலகம். அகித்தோப்பேலின் ஆலோசனை அப்சலோமுக்குத் தேவவாக்கைப்போலிருந்தது. அகித்தோப்பேலின் ஆலோசனையை அபத்தமாக்கும்படி தாவீதின் சிநேகிதனாகிய ஊசாய் அப்சலோமினிடம் சேர்ந்தான். ஊசாயின் ஆலோசனையை அப்சலோம் அங்கீகரித்ததனால் அகித்தோப்பேல் நான்றுகொண்டு செத்தான். அப்சலோம் யுத்தத்தில் முறிந்தோடித் தப்பி ஓடும்போது கர்வாலி மரத்தில் தொங்கி யோவாபால் வன்கொலை செய்யப்பட்டான். தாவீது அப்சலோமுக்காகப் புலம்பினான்.

(d) அதி. 19—21 தாவீது மறுபடியும் எருசலேமுக்கு வந்து நீதியாய் அரசாண்டான்.

அதி. 22 அதின் சங்கீதம். இவ்வதிகாரம் 18-ம் சங்கீதத்தோடு ஒத்திருக்கிறது. தேவனின் வல்லமையையும் அவர்மேல் தனக்கிருக்கும் நம்பிக்கையையும்பற்றிப் பேசுகிறான்.

அதி. 24 ஜனங்களைத் தொகையிடும்படி சாத்தான் தாவீதை ஏவினான். 1 நாளா அதி. 21: 1. தேவன் வாதையை அனுப்பினார்.



## சந்தா வரவு 1915

| | | | |
|---|---|---|---|
| Mr. M. P. Sivaram, Jalarpet | 0 | 14 | 0 |
| " Y. Swamikan, Sivakasi | 1 | 0 | 0 |
| " J.S. Pakkianathan, Panruti | 0 | 7 | 0 |
| Rev. N. David, Ramkote | 0 | 7 | 0 |
| Miss S. Monesamy, Coimbatore | 0 | 7 | 0 |
| Mr. A. Yesuadian, Rangoon | 2 | [illegible] | 0 |
| Rev. M. Gnanasigamoni, Malkanagiri | 0 | 14 | 0 |
| Mr. S. J. David, Kotiakalle | 0 | 7 | 0 |
| Rev. W. S. Sutherland, Chingleput | 8 | 0 | 0 |
| Mr. S. Jeevanantham, Nilakota | 1 | 11 | 0 |
| " A. R. Gnanamuthu, Gonekelle | 0 | 7 | 0 |
| " P. Abraham, Koselanda | 2 | 4 | 0 |
| " Arumanayagam, Trugangudi | 0 | 14 | [illegible] |
| " S. David, Middleton | 0 | 7 | 0 |
| " Sergunam J. Solomon, Rangoon | 0 | 7 | 0 |
| Miss Daniels, Ooty | 7 | 2 | [illegible] |
| Mr. Jonathan David, Blind-School | 0 | 6 | 0 |
| " J. D. Sathianathen, Badulla | 0 | 14 | 0 |
| Rev. C. N. Ramasamy, Mount Zion | 7 | 2 | 0 |
| Mr. V. P. Vathanayagam, Bangalore | 1 | 0 | 0 |
| Rev D. A. Samuel, Mannargudi | 0 | 14 | 0 |
| Mr P. D. John, Ceylon | 0 | 7 | 0 |
| " A. Gnanamoni, Nagerkoil | 5 | 4 | 0 |
| " M. Vedanayagam, Gobichetti Palyam | 0 | 7 | 0 |
| " F. J. Arulappa Pillai | 1 | 0 | 0 |
| Rev. C. D. Veluppillai, Ceylon | 9 | 4 | 0 |
| Mr. M. D. Adaikalam Nadar | 0 | 7 | 0 |
| " N. S. Ponniah, Evangelist | 0 | 7 | 0 |
| Rev. S. M. Devados, Madras | 1 | 6 | 0 |
| Mr. R. Pakkianathen, Matale | 1 | 14 | 0 |
| Mrs Elwood | 5 | 14 | 0 |
| " Dani Mariammal | 0 | 13 | 0 |
| Rev. G Kantayya, Masulipatam | 0 | 7 | 0 |
| Mr. B. V. Pandiyan | 1 | 0 | 0 |
| Rev. C. N. Eames, Pasumalai | 1 | 14 | 0 |
| Mrs. Achy Ammal | 0 | 7 | 0 |
| Mr. C. Samuel, Kantayya | 0 | 7 | 0 |
| Rev Christian David, Kotahena | 0 | 12 | 0 |
| " Arul Manickam | 1 | 0 | 0 |
| Mr. D. Pakkianathen | 4 | 8 | 0 |

## சந்தா வரவு 1916

| | | | |
|---|---|---|---|
| Rev G. Yesuadian, Shiyali | 0 | 7 | 0 |
| Mr. J. E. Vethanayagam, Colombo | 0 | 8 | 0 |
| Miss H. E. Dunhill, Bangalore | 1 | 0 | 0 |
| Mr. David Koilpillai, Mudalur | 0 | 14 | 0 |
| " A Gnanamoni, Nagerkoil | 1 | 10 | 0 |
| " D. Joseph, Mavallikarai | 0 | 7 | 0 |
| " Major Gnanathesigar | 0 | 7 | 0 |
| " S. David, Ceylon | 0 | 7 | 0 |
| Rev. Joseph John, Madanapalle | 0 | 7 | 0 |
| Mr J. S. Gnanamuthu | 0 | 9 | 0 |
| " V. K. Chakko, Tiruvalla | 2 | 0 | 0 |
| " J. S. Cornelies, Avanashi | 0 | 7 | 0 |
| " K. M. Thomas, Puthanpudicai | 1 | 6 | 0 |
| " W. T. Simeon, Masulipatam | 0 | 7 | 0 |
| " J. S. Paul, Palghat | 0 | 14 | 0 |
| Mrs. G. Ponnusamy, Salem | 0 | 7 | 0 |
| " Amirthanayagam " | 0 | 7 | 0 |
| " M. John | 0 | 14 | 0 |
| " Thabitha Isaac, Pakela | 0 | 7 | 0 |
| Mr. J. Barnabas, Manamadura | 3 | 0 | 0 |
| " A. V. Arumy, Pandaluoya | 0 | 14 | 0 |
| " G. Simon, Erode | 0 | 14 | 0 |
| " G. D. Joshua | 1 | 4 | 0 |
| " J. Lazarus | 0 | 14 | 0 |
| " G. D. Rhenius, Bolaugoda | 0 | 3 | 0 |
| " Moses Muthumalai | 1 | 0 | 0 |
| Miss C. Sornam | 0 | 7 | 0 |
| " P. Siromoni | 0 | 7 | 0 |
| " M. Clara | 0 | 7 | 0 |
| " N. Pakkiam | 0 | 7 | 0 |
| Mr. Daniel Kanthasamy | 0 | 7 | 0 |
| " A. S. Devavaram, Martandam | 0 | 7 | 0 |
| Rev. J. H. Maclian | 6 | 11 | 0 |
| Mr. Y. Jacob, Karuppatti | 0 | 7 | 0 |
| Miss A. Loghurst, Virudupati | 1 | 6 | 0 |
| Mr. Mathew Antony, Bethel | 0 | 7 | 0 |
| Mrs. Mary A. Chelliah, Udoovil | 8 | 12 | 0 |
| Mr. D. John, Natal | 0 | 10 | 0 |

| | | | |
|---|---|---|---|
| Miss Warbey, Pondicherry | 5 | 10 | 0 |
| Mr Gnanamuthu, Aruppukottai | 1 | 2 | 0 |
| Rev. D. J. Harris | 2 | 0 | 0 |
| Mr A. S Dawson, Yatiantota | 2 | 0 | 0 |
| ,, J. Samuel, Perak Road | 1 | 12 | 0 |
| ,, S. David, Mutwal | 2 | 6 | 0 |
| Miss S. R. Howland Inuvil | 27 | 0 | 0 |
| Mr. A. S. Devavaram, Martandam | 0 | 7 | 0 |
| ,, T. Samuel | 0 | 7 | 0 |
| ,, A. B. Samuel | 1 | 6 | 0 |
| Rev John D. Muthiah, Karur | 0 | 8 | 0 |
| Mr. John Yesuadian | 0 | 4 | 0 |
| ,, G. Devados, B. A. L. T. | 0 | 4 | 0 |
| Mrs. Ralph Hopper | 0 | 4 | 0 |
| Maragatham Ammal | 0 | 2 | 0 |
| Mr. E. P. Stephen, Rangoon | 0 | 10 | 0 |
| ,, P.E.Kotchukunjoo Tiruvalla | 2 | 4 | 0 |
| Rev. James Rowland, Madura | 0 | 15 | 0 |
| Mr. G.S.Nathaniel, Neyyathinkara | 0 | 8 | 0 |
| ,, Pakkianathan, Palawalkam | 0 | 8 | 0 |
| Rev. D. Jesudason, Paniadipati | 9 | 4 | 0 |
| Mr. G. B. Venkoba Saidapet | 0 | 7 | 0 |
| ,, R. S. Christian, Dolosbagie | 1 | 0 | 0 |
| ,, R. P. Hensman | 0 | 15 | 0 |
| ,, Gnanakkan | 0 | 8 | 0 |
| Mr. S. R. John | 0 | 8 | 0 |
| Mrs E. G. Vathiavaram | 0 | 8 | 0 |
| Mr. J.S.Asirvatham, Kangayam | 3 | 0 | 0 |
| ,, K.C Philip, Koothattukulam | 0 | 15 | 0 |
| ,, D. Devadason, Kolapatana | 0 | 15 | 0 |
| ,, J. Joseph, Ooty | 0 | 7 | 0 |
| ,, T Monickam, Clodagh | 0 | 7 | 0 |
| ,, S. P. Coilpillai, Mutwal | 1 | 6 | 0 |
| ,, P. Mathew, Nilgris | 0 | 8 | 0 |
| Mrs. Thabitha Isaac, Pakala | 0 | 8 | 0 |
| Ensign Yudha Daksha | 0 | 8 | 0 |
| Mr. M, Muthusamy Pillai, Rentachintala | 0 | 8 | 0 |
| ,, G. Y. Tucker Cuddalore | 0 | 7 | 0 |
| ,, D Solomon, Kangayam | 0 | 7 | 0 |
| ,, Pitchakkan, Paliapettai | 1 | 0 | 0 |
| ,, Gnanam Y. Isaac B.A. Trichy | 5 | 0 | 0 |
| ,, R. Pakkianathan, Madulsima | 1 | 7 | 0 |
| ,, J. Joseph, Ooty | 0 | 7 | 0 |
| ,, S. Asirvatham, Puthur Trichy | 0 | 8 | 0 |
| Miss Mitchell, Sachiapuram | 12 | 0 | 0 |
| Mr. John David, Erode | 1 | 0 | 0 |
| ,, S. Jacob, Nazareth | 0 | 14 | 0 |
| ,, Joel Nallathambi Pillai | 0 | 4 | 0 |
| ,, R. A. Peter Pillai | 0 | 4 | 0 |
| Miss Mitchell, Sachiapuram | 10 | 11 | 0 |

Printed at the Palamcottah Printing Press Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

762

OFFICE OF ... 23 FEB 1917 MADRAS

August 1916 Registered No. M. 168

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." யோவான் 7: 38

Vol. XVII ஆகஸ்டு 1916

## எக்காளசத்தம் தொனிக்கும்படி செய்யவேண்டும்

லேவி. 25: 9.

ஜூபிலி ஆண்டு யூதருக்குள் எவ்வளவு விசேஷித்த வருஷம்! [illegible] [illegible] வருஷத்தில் ஐசுவரியம் பெறுவான், அடிமை சுயாதீனனாவான், பரதேசியானவன் வீட்டுக்குத் திரும்பிவருவான், [illegible] [illegible] ஓய்வுவருஷம், மீட்பின் வருஷம், ஆனந்த வருஷம். யூதருடைய ஜனங்கள் குடும்பம் குடும்பமாக சந்தோஷங்கொண்டாடுவார்கள். வருத்தங்கள் நீங்கி ஆறுதலடைவார்கள். வேலை ஓய்ந்து இளைப்பாறி புதுபெலனையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்வார்கள். 50 வருஷத்துக்கு ஒரு விசை மாத்திரம் அந்த மகிழ்ச்சி காணப்படும். ஒருவனுடைய ஆயுசுகாலத்தில் பெரும்பாலும் ஒருதரம் மாத்திரம் ஜூபிலி ஆண்டு வரும். ஆகையால் அது வரும்போது இஸ்ரவேலர் எல்லாரும் சொல்லிமுடியாத சந்தோஷமடைந்து வெகு சிறப்போடும் உவப்போடும் அதை ஆசரித்துவந்தார்கள். எக்காளம் ஊதப்படும். எக்காளம் ஊதினவுடனே அந்த மீட்பும் மகிழ்ச்சியும் ஆரம்பமாகும். எக்காள சத்தம் கேட்டமாத்திரத்தில், யூதருடைய வருத்தங்கள் நீங்கலாயிற்று, அவர்கள் வறுமை தீர்ந்தது. அவர்கள் வேலை உழைப்பு எல்லாம் ஓய்ந்துவிட்டது. அப்படியானால், அந்த எக்காள சத்தம் யூதருடைய காதுக்கு எவ்வளவோ இன்பமாய் இருக்கும். மற்றெல்லா சப்தங்களைப்பார்க்கிலும் ஜூபிலி எக்காளச் சத்தம் அதிக இனிமையானது என்று சொல்லுவார்கள் அல்லவா!

காலஞ்சென்ற விக்டோரியா ராணியவர்களுடைய ரத்தின ஜூபிலி வருஷக்கொண்டாட்டத்தில், எளியவர்கள் அநேகர் போஷிக்கப்பட்டார்கள். [illegible] பலர் சிறைச்சாலையைவிட்டு விடுதலையானார்கள். எளியவர்

20-8-16
16-16

கள் ஊழியக்காரரில் அநேகர் உயர்ந்த அந்தஸ்தும் பிரபுத்துவமும் பெற்றுக்கொண்டார்கள். அக்காலத்தில் இங்கிலாந்து தேசத்தில் நடந்தேறின உற்சவத்தைப்போல் அதற்குமுன் ஒருபோதும் அப்படிப்பட்ட கொண்டாட்டம் நடக்கவில்லையென்று சொல்லப்பட்டது. ஆனாலும் அந்த உலக ஆடம்பரத்தை விசேஷித்துச்சொல்ல அவசியமில்லை. இன்னோர் யூபிலி ஆண்டு உண்டு. அதோ! நாசரேத்தூர் ஜெப ஆலயத்தில் கிறிஸ்துநாதர் எழுந்துநின்று எக்காளம் ஊதினதுபோல நற்செய்தியை அறிவித்து விளம்பரம் செய்கிறார். 'கர்த்தருடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார் ........ கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும் என்னை அனுப்பினார்' (பரி. லூக். 4: 18, 19) 'யூபிலி ஆண்டு வந்தது, மீட்பின் வருஷம வந்துவிட்டது, இதோ! இப்பொழுதே அனுக்கிரக காலம் இப்பொழுதே இரட்சணிய நாள் என்பதுபோல கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்த என்னை அனுப்பினார் 'என்று சுவிசேஷத்தின் எக்காளச் சத்தம் தொனிக்கும்படி செய்தார்' பிரியமான சகோதரரே, இந்த எக்காள சத்தத்தைக் கேட்டுக் குணப்பட்டிருக்கிறீர்களா? இந்தச் சுவிசேஷ வசனத்தை நாமும் பிரியத்தோடு ஏற்றுக்கொண்டு அதினாலே சீரடைந்து நடப்போமாக. சுவிசேஷ எக்காளத்தைக் கையில் பிடித்திருக்கும் தேவ ஊழியரான சகோதரரே, நீங்கள் ஆவியானவருடைய அபிஷேகம் முதலில் பெற்று, அப்புறம் போய் இந்தக் கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். 'கர்த்தருடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்' என்று முதலாவது நிச்சயமடைந்து அப்புறம் போய் கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்துங்கள், சுவிசேஷத்தின் எக்காளச் சத்தத்தை தொனிக்கும்படி செய்யுங்கள்.

**I. எக்காளச் சத்தம் தொனித்தகாலம்.** 7-ம் மாதம் 10-ம் தேதியில், பாவ நிவாரண நாளில் (வ. 9.) யூபிலி ஆண்டின் மகிழ்ச்சி 1-ம் மாதம் 1-ம் தேதியில் துவக்காமல் 7-ம் மாதம் 10-ம் தேதியில் மாத்திரம் துவக்கினது. அதுமட்டும் எக்காள சத்தமுமில்லை, மீட்பின் சந்தோஷமுமில்லை. காரணம் என்ன? பாவ நிவாரணம் உண்டாகவேண்டும். பாவ நிவாரண நாளிலே பிரதான ஆசாரியன் பலிசெலுத்தி கிருபாசனத்தின்மேல் ரத்தம் தெளித்தும் பிராயச்சித்தம் செய்யவேண்டும். அதின்பின்பு போக்காடாக விடப்படும் வெள்ளாட்டுக்கடாவின் தலையின்மேல் இஸ்ரவேல் புத்திரருடைய சகல அக்கிரமங்களையும் அறிக்கையிட்டு, அவைகளை அதின் தலையின்மேல் சுமத்தி, ஆள்வசமாக அந்த வனாந்தரத்துக்கு அனுப்பிவிடவேண்டும். பாவம் தீர்ந்தபின்பு, பாவ நிவாரணமானபின்பு மாத்திரம் எக்காள சத்தம் தொனிக்கும், மீட்பும் விடுதலையும் கூறப்படும். பிரியமானவர்களே! 'ரத்தம் சிந்துதலில்லாமல் பாவ மன்னிபபு உண்டாகாது' ரத்தம் சிந்துதலில்லாமல் மீட்பும் மகிழ்ச்சியும் உண்டாகாது. 'கெம்பீர சத்தத்தை அறியும் ஜனங்கள் பாக்கியமுள்ளவர்கள், கர்த்தாவே! அவர்கள்



உம்முடைய முகத்தின் வெளிச்சத்தில் நடப்பார்கள்' (அப். 89: 15.) நிசந்தான். ஆனால் கெம்பீர சத்தத்தை அறியவேண்டுமானால் அதினால் குறிக்கப்பட்ட எக்காள சத்தத்தைக் கேட்கவேண்டுமென்றால் சிலுவை மரத்தண்டை நாம் வந்து நிற்கவேண்டும். அங்கே, சிந்தின திரு ரத்தம் நம்முடைய இருதயத்தில் தெளிக்கப்படவேண்டும். உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியானவருடைய தலையின்மேலே நம்முடைய சகல அக்கிரமங்களையும் அறிக்கைசெய்து அவைகளை அங்கே சுமத்தி வைத்துவிடவேண்டும். சகோதரரே! பிசாசின் கையிலிருந்து உனக்கு மீட்பும் விடுதலையும் வேண்டுமா? இயேசுவின் திரு ரத்தத்தை நோக்கிப்பார்த்து நம்பிக்கொள். அதினாலேமாத்திரம் மீட்புண்டு. 'இவருடைய ரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது' (எபே. 1: 7). அந்த மகா பாவ நிவாரண நாளிலே சிந்தப்பட்ட மாசற்ற ரத்தத்தினாலேயன்றி நமக்கு மீட்சியுமில்லை, மன்னிப்புமில்லை. சிநேகிதனே, உனக்கு மகிழ்ச்சி வேண்டுமா? கிறிஸ்து செய்த பிராயச்சித்தத்தை ஏற்றுக்கொள், அதினாலே மட்டும் மகிழ்ச்சியுண்டு. 'இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நாம் தேவனைப்பற்றி மேன்மை பாராட்டுகிறோம்.' (ரோமர் 5: 11). ரட்சகரால் உண்டான பிராயச்சித்தம் ஒப்புரவாகுதலை ஏற்றுக்கொண்டால் மாத்திரம் இப்படி மேன்மை பாராட்டவும் ஆனந்தம் கொண்டாடவும் கூடும். சகோதரனே! எக்காள சத்தத்தை உன் இருதயத்தில் அறிந்திருக்கிறாயா? அது உன்னுடைய காதில் தொனிக்கிறதாக்கும்; உன் இருதயத்தில் கேட்கிறதா? ஆத்தும விசாரியான ஒருவன், பாவ நிவாரண நாளில் நடந்த விசேஷங்களை வாசிக்கும்போது 'யூதருக்குப் பிராயச்சித்தப்பலி இருந்ததுபோல, எனக்கும் பிராயச்சித்தம் செய்யப்பட்டது நிசந்தானோ? அவர்கள் அந்த ஆட்டின் தலைமேல் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டுச் சுமத்தினதுபோல நானும் ரட்சகருடைய தலையின்மேல் என் அக்கிரமங்களை அறிக்கைசெய்து வைத்துவிடலாமா? அப்படிச் செய்யலாமென்றால் இனி ஒரு நிமிஷமாவது தாமதம் பண்ணாமல் என் பாவங்களை அவர்மேல் செலுத்தி விடுவேன்' என்று சொல்லிச் சுவிசேஷத்தை நம்பி விசுவாசியானான்.

**II. எக்காளம் தொனித்த காரணம் அல்லது நோக்கம்.** 'தேசமெங்கும் அதின் குடிகளுக்கெல்லாம் விடுதலை கூறக்கடவீர்கள் .... அதிலே உங்களில் ஒவ்வொருவனும் தன்தன் காணியாட்சிக்கும் தன்தன் குடும்பத்துக்கும் திரும்பிப் போகக்கடவன். எக்காளம் ஏன் ஊதப்பட்டது? அதின் சத்தமானது மீட்சிக்கும் விடுதலைக்கும் அடையாளம். 'தேசமெங்கும் அதின் குடிகளுக்கெல்லாம் விடுதலை கூறக்கடவீர்கள்'. சிறியோரும் பெரியோரும் அந்தச் சந்தோஷ சத்தம் கேட்கவேண்டும். வறியோரும் செல்வரும் அந்த நல்ல செய்தியை அறிந்து ஆனந்தமடையவேண்டும்.

ஆகையால் 'எக்காள சத்தம் தொனிக்கும்படி செய்யவேண்டும்' அல்லது மூலபாஷையில் கண்டிருக்கிறபடி 'எக்காளத்தை எங்கும் அனுப்பவேண்டும்'. அந்தப்பிரகாரம் தேவபணிவிடைக்காரர் தேசமெங்கும் எக்காளம் ஊதி குடிகளுக்கெல்லாம் விடுதலை கூறிவந்தார்கள்.

பட்டணங்களிலும் ஊதினார்கள், கிராமங்களிலும் ஊதினார்கள். அந்த எக்காளச்சத்தம் எங்கெங்கே கேட்கப்பட்டதோ அங்கே எல்லாம் விடுதலை, உண்டாயிற்று. யூபிலி ஆண்டின் நல்லசெய்தி இதுவே! விடுதலை, விடுதலை, விடுதலை. இந்த வார்த்தை இந்த அதிகாரத்தில் திரும்பத் திரும்ப வருகிறதைப் பார்க்கலாம், ஒற்றிவைக்கப்பட்ட காணியாட்சி நிலங்களோ 'யூபிலி வருஷத்தில் விடுதலையாகும்' (28 வா). கடன் நிமித்தம் விற்பனையான வீடுகளோ? 'யூபிலி வருஷத்தில் அவைகள் விடுதலையாகும்' (வா,1; 33) ஐவேசில்லாமையினாலே தன்னை அடிமையாக விற்றுப்போட்ட எளியவனோ? இவனும் இவனோடேகூட இவன் பிள்ளைகளும் 'யூபிலி வருஷத்தில் விடுதலையாவார்கள்'. பிரியமான சகோதரரே! 'நீங்கள் சுயாதீனத்துக்கு (விடுதலைக்கு) அழைக்கப்பட்டீர்கள்'. (கலா 5: 13). தேவனுடைய கிருபையின் சுவிசேஷம் இந்த வாசகியத்தில் வெகு தெளிவாய் விளக்கியிருக்கிறது. 'உலகமெங்கும் அதின் குடிகளுக்கெல்லாம் விடுதலை கூறக்கடவர்கள்.' சபையெங்கும் அதின் ஜனங்களுக்கெல்லாம் விடுதலை கூறக்கடவர்கள்.

(a) பிசாசின் கையிலிருந்து விடுதலையுண்டா? அவன் மகா பெலவான், நாம் எத்தனைவிசை தப்பப்பார்த்தாலும் நம்மைப் பிடித்தும் அடைத்தும் சிறையாக்கியும் வருகிறான் (ஏசா 49: 24, 25).

(b) பாவத்தின் வல்லமையினின்று விடுதலையுண்டா? நாம் எவ்வளவாய் பிரயாசப்பட்டுப் போராடினாலும் பாவத்துக்குத் தோற்றுப்போய்த் திரும்பத் திரும்பத் தவறிவிழுகிறோம். நாம் விரும்புகிற நன்மையைச் செய்யாமல் விரும்பாத தீமையைச் செய்கிறோம். இதற்குப் போக்கு இல்லையா? உண்டு. [ரோ. 7: 24, 25]

(c) பலத்த சோதனையிலிருந்து விடுதலையுண்டா? நாம் பக்தியாய் நடக்க விரும்பினாலும் சோதனைக்காரன் வந்து நம்மை வருத்தப்படுத்துகிறான். அக்கினி அஸ்திரங்களை நமது மனசில் எய்து நம்மைக் காயப்படுத்துகிறான். அசுத்தமான எண்ணங்கள் எழும்பச்செய்கிறான். பகலிலும சோதனை இரவிலும் சோதனை, வீட்டிலும் சோதனை கோவிலிலும் சோதனை, நாம் என்னசெய்வோம். இதோ எல்லாருக்கும் விடுதலை, பூரண விடுதலை; உடனே விடுதலை. இதை அநேகம்பேர் நம்பமாட்டார்கள். கடைசி வரைக்கும் பிசாசு அதிகாரம் செலுத்துவான். பாவம் ஆண்டுகொள்ளும். கிறிஸ்துநாதர் சில பாவக்கட்டுகளை அவிழ்த்துவிட்டார். ஆனாலும் மற்றக் கட்டுகளை அவரால் அவிழ்க்கக்கூடாதென்று நினைக்கிறார்கள் தப்பிதம்! தப்பிதம்!! 'யூபிலி வருஷத்தில் அது விடுதலையாகும்'.



'நம்பிவந்தால் . . . மீட்பாண்டையில்
ரட்சிப்பாரே . . . இந்த நேரத்தில்.

யூபிலி வருஷத்தில் விடுதலைமாத்திரமல்ல மீட்சியும் கூறப்பட்டது. இந்த அதிகாரத்தில் ஒரு வார்த்தை அடிக்கடி வருகிறது (வா. 10, 15, 27, 28). என்னவென்றால், 'அவனவன் தன்தன் காணியாட்சிக்குத் திரும்பிப் போகக்கடவன்' என்பது. அடிமைத்தனத்தினின்று விடுதலையாகிப் போவது மாத்திரமல்ல சொந்த வீட்டுக்குத் திரும்பிப்போய் இழந்துபோன சுதந்தரத்தை மறுபடியும் பெற்றுக்கொள்வதும் அந்த வருஷத்தில் கிடைத்த சலாக்கியம். ஆ! மோட்ச சுதந்தரத்தையும் நாம் திரும்பப் பெற்று அனுபவிக்கலாம். தேவனுடைய குடும்பத்தில் நாம் திரும்பவந்து சேரலாம். பாவீ! நீ தகப்பனுடைய வீட்டுக்குத் திரும்பிவாராமல் தூரதேசத்தில் இன்னும் தங்கி பாடுபடுவது உன் புத்தியீனமல்லவா? 'யூபிலி வருஷத்தில் அவனவன் தன்தன் காணியாட்சிக்குத் திரும்பிப் போகக்கடவன்'.

III. எக்காள சத்தத்தால் மாறின ஜீவியம். 50-ம் வருஷத்தில் மாத்திரம் எக்காள சத்தம் தொனித்து அப்புறம் அதின் பிரயோஜனம் நின்றுபோனது. மற்ற 49 வருஷங்களில் ஒன்றும் இல்லை என்றல்ல, அந்தக் கெம்பீர சத்தத்தைக் கேட்டு விடுதலையான யூதன் அந்த விடுதலை வருஷத்தை மறக்காமல் சகல காரியங்களையும் அதற்கேற்றபடி நடக்கக் கடமைப்பட்டவனாய் இருந்தான். 'யூபிலி வருஷத்துக்குப் பின்வரும் வருஷங்களின் தொகைக்கேற்க' (வா. 15) கொடுக்கல் வாங்கல் விஷயங்களைத் தனக்கு நடத்தவேண்டும். யூபிலி வருஷத்தை அளவுகோல்போலப் பாவித்து அதற்கு முன்வரும் வருஷங்களின் தொகையையும் பின்வரும் வருஷங்களின் தொகையையும் கணக்கிட்டு அந்தக் கணக்கின்படியே நிலத்தின் கிரயத்தையும், வீட்டின் கிரயத்தையும் ஏற்படுத்தவேண்டும். மேலும் நாம் இங்கே விபரமாய் வாசிக்கிற பிரகாரம் யூபிலி சலாக்கியங்களைப்பெற்ற ஜாதியார் தரித்திரரை ஒடுக்கக்கூடாது பிறருக்கு அநியாயம் செய்யக்கூடாது, அந்நியரை உபசரிக்கவேண்டும், வேலைக்காரரை பட்சமாய் நடத்தவேண்டும். இவ்விதமாய் எக்காள சத்தம் கேட்ட யூதர்கள் பரிசுத்தமாயும், தேவ பக்தியாயும், பரோபகார சிந்தையோடும் நடந்துகொள்ள வேண்டும்.

பிரியமான சகோதரரே! எக்காள சத்தத்தைக் கேட்டிருக்கிறீர்களா? தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தை நம்புகிறீர்களா? அப்படியானால் தேவ கிருபையானது இவ்வுலகத்தில் தோன்றின நோக்கத்தைப் பாருங்கள் (தீத். 2: 11, 12) நம்முடைய சபையில் வேத அறிவுமுண்டு. மார்க்க வைராக்கியமுமுண்டு, பரிசுத்த ஜீவியம் வேண்டாமா? பாவங்களைப் பேணிக்கொண்டு பாவத்தில் நிலைத்திருந்து தேவ பக்தியாய் நடந்துகொள்வது கூடாத காரியம் (சங். 116: 8, 9).

# ‘இயேசுகிறிஸ்து மரணத்தைப் பரிகரித்தார்’

2 தீமோ. 1: 10.

மூலபாஷையின்படி ‘பரிகரித்தார்’ என்பது ‘அதின் சக்தியை எடுத்துப்போட்டார்,’ ‘அதை எண்ணக்கூடாததாக்கிவிட்டார்’ என்று கருத்துக்கொள்ளும். மனுஷ ஜீவியத்தின் பரிதாபக் காட்சி மரணக் காட்சியே. சுபாவ மனுஷன் மரணத்துக்குப் பயப்படுகிறான். மரணத்தைக்குறித்து நினைக்க, பேச விரும்புகிறதில்லை. சாதாரண சம்பாஷணையில்கூட, நான் செத்துப்போவேன் என்று வைத்துக்கொள்வோம் என்று ஒருவர் சொன்னால் மற்றவர்கள் ‘அப்படி ஏன் பேசுகிறீர்’ என்று சொல்லுகிற வழக்கமுண்டு. ஆனால் பரிசுத்த பவுலப்போஸ்தலனைப்போல ஜெய கெம்பீரமாய்ப் பேசக்கூடுமானால் எத்தனை நலம்? அப்படிப் பேசவேண்டுமானால் மரணத்தைக் குறித்து அவர் எப்படி நினைத்தார் என்று பார்க்கவேண்டும். கிறிஸ்து மரணத்தைப் பரிகரித்தார் என்று சொல்லும்போது நமக்குச் சரீரப் பிரகாரமான மரணம் இல்லையென்பது பரி. பவுலின் கருத்தல்ல. ஏனென்றால் மாம்சமும் ரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது. நாமெல்லாரும் ஒரு நிமிஷத்தில் கடைசி எக்காளம் தொனிக்கும்போது மறுரூபமடைவோம். மரணத்தின் கூர் அல்லது பயம் எடுபட்டுப்போனபடியால் மரண வேளையில் நமது அனுபவம் உலகத்துக்கு வித்தியாசப்படும் என்பதே கருத்து. அவ்வித வித்தியாசமான அனுபவம் உண்டாகத் தக்கதாகக் கிறிஸ்து நமக்காகச் செய்தது என்ன? மரணத்தைக்குறித்து புதிய ஏற்பாட்டில் உபயோகித்திருக்கிற மூன்று வார்த்தைகளை எடுத்துக்கொண்டு சிந்திப்போம். முதலாவது நித்திரை, இரண்டாவது யாத்திரை (Exodus), மூன்றாவது பிரிதல்.

**முதலாவது, நித்திரை.** நமது சிநேகிதனாகிய லாசரு நித்திரையாயிருக்கிறான். ‘சிறுபெண் நித்திரையாயிருக்கிறாள்’. இது நமது ரட்சகர் உபயோகித்த வார்த்தை. ஆவிக்குரிய நிலைமையைக்குறித்து ஆண்டவர் இப்படிச் சொல்லவில்லை. மரணத்தைக் குறித்த பயங்கரமும் துக்கமும் காணப்படாதபடி அதற்கிசைந்த கருத்துள்ள இவ்வார்த்தையை உபயோகிக்கிறார். நித்திரை இயற்கையின்படி மனுஷனுக்கு அளிக்கப்பட்ட இன்பமான இளைப்பாறுதல். நித்திரையில் என்ன நடக்கிறதோ அதுவே மரணத்திலும் நடக்கிறது என்ற கருத்தை நாம் அறிந்துகொள்ளும்படி அப்படிச் சொன்னார். நித்திரை செய்யும்போது ஜீவன் சரீரத்திலிருக்கிறது. நித்திரையில் சரீரத்தின் பாடு, கவலைநீங்கி இளைப்பாறுகிறோம். நித்திரை முடிந்தபின் சரீரம் முன்னிலும் அதிக உற்சாகத்தோடு வேலை செய்யக்கூடியதாயிருக்கிறது. அப்படியே மரணமும் இருக்கிறது என்ற கருத்தோடு ரட்சகர் உபயோகிக்கிறார்.



**இரண்டாவது, யாத்திரை.** பரி. லூக். 9: 31ல் யேசுவானவர் மறுரூபமான சமயத்தில் மோசேயும் எலியாவும் அவர் எருசலேமிலே நிறைவேற்றப்போகிற அவருடைய ‘மரணத்தை’ (Exodus) குறித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். யாத்திராகமத்தில் இப்பதம் எகிப்தைவிட்டுக் கானானுக்குப் போகச்செய்யும் பிரயாணத்தைக் குறிக்கிறது. மரணமும் ஓர் பிரயாணமே. எதை விட்டு? அநித்தியத்தை விட்டு நித்தியத்துக்குட்படும் பிரயாணம். நிழலைவிட்டு வெளிச்சத்துக்குட்படும் பயணம். துக்கத்தை விட்டு மகிமைக்குட்படும் பிரயாணம். எல்லாவற்றிலும் முக்கியமாய்க் கிறிஸ்தவனுக்குப் பாவம் செய்யாமலிருக்கும் ஓரிடத்துக்குச் செல்லும் பிரயாணம்.

**மூன்றாவது, பிரிதல்.** பரி. பவுலப்போஸ்தலன் ‘நான் தேகத்தைவிட்டுப் பிரியும் காலம் வந்தது’ என்று நமது மரணத்தைக்குறித்தே பேசுகிறார். அந்த வார்த்தையின் சரியான கருத்து ‘வஸ்திரத்தைக் களைதல்’ அல்லது ஏதாவதொன்றை உரிந்துபோடுதல் என்பதாம். துறைமுகத்தில் வந்தமர்ந்திருக்கும் ஓர் கப்பல் தன் நங்கூரத்தை எடுத்துப் பாய்விரித்துப் புறப்படுதல்போல விசுவாசியும் தான் சிலகாலம் தங்கவந்த இவ்வுலகத்தை விட்டுப் பிரிந்துபோகிறதைக் குறிக்கிறது.

மரணத்தைக்குறித்து இப்படித் தியானிப்பது எவ்வளவு இனிமையானது. அது நித்திரை, அது யாத்திரை, அது பிரிந்துபோதல். இதன் கசப்பைத்தான் நமது ரட்சகர் பரிகரித்தார் என்று பார்க்கிறோம். அவர் எவ்விதமாய் இதைப் பரிகரித்தார் என்று சற்று சிந்திப்பது பிரயோஜனமாயிருக்கும்.

**முதலாவது, தமது பரிசுத்த மாதிரியினால் மரணத்தைப் பரிகரித்தார்.** அவர் எப்படி மரித்தார்? கிறிஸ்துவின் மரணமே கிறிஸ்துமார்க்க சத்தியங்களிலெல்லாம் முக்கிய உபதேசம். அவருடைய மரணவேளையில் பேசின ஒரே வார்த்தையே நாம் அறியக்கூடாத ஆழமானது. ‘என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?’ இவ்வார்த்தைகளுக்கு முன்னும் அதற்குச் சற்று நேரத்துக்குப் பின்னும் தமது ஜீவகாலமுழுவதும் ‘பிதாவே’ என்றழைத்தார். இந்த ஒரே சமயத்தில் மாத்திரம் ‘தேவனே’ என்றழைக்கிறார். அந்தக் கொடிய அந்தகார நேரத்தில் ‘தேவனே’ என்று தமது பிதாவைக் கூப்பிட்டவுடன் அந்தகாரத்தினூடே தமது பிதாவைக் கண்டு ‘பிதாவே, இதோ வருகிறேன்’ ‘நான் உம்மிடத்திற்கு வருகிறேன்’ (யோவான் 17: 11) என்று சொல்லுகிறார். மரணம் அவருக்குப் பிதாவின் வீட்டுக்குப் போவதாம்.

**இரண்டாவது, தமது மரணத்தினால் மரணத்தைப் பரிகரித்தார்.** ‘அவர் மாம்சத்தில் பாடுபட்டார்’, ‘பாவத்துக்கென்று மரித்தார்’, ‘நமக்காக மரித்தார்.’ இம்மூன்று வார்த்தைகளையும் சேர்த்துப்பார்த்தால் அவர் தமது மரணத்தால் எப்படிப் பரிகரித்தார் என்று அறிந்துகொள்ளலாம். மரணத்-

தின் கூர் பாவம். அவர் நமது பாவங்களைச் சிலுவையின்மேல் தமது சரீரத்தில் சுமந்தார். தேனீ, அல்லது தேள் நல்ல திருஷ்டாந்தமாகும். இவை கொட்டும்போது கொட்டுகிற இடத்தில் தன் கூரைப் பதித்துவிடுகிறது. தன் கூரை இழந்த தேனீ, அல்லது தேளைக் கையில்வைத்துவிடலாம். கூரையிழந்த தேனீ திரும்பக் கொட்டாது. வெகு காலம் பிழைத்தும் இராது. மரணமானது தன் கூரையெல்லாம் யேசுவின்மேல் பதித்துவிட்டது. மரணத்தின் பெலன் அற்றுப்போயிற்று. அதின் கூர் ஒடிந்தது பவுலப்போஸ்தலனைப்போல 'மரணமே உன் கூர் எங்கே, பாதாளமே, உன் ஜெயம் எங்கே' என்று ஜெயகீதம் பாடலாம். மரணத்தின் கூர் பாவம். பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயம் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

மரணத்தைக்குறித்து இவ்வித தியானம் செய்வதால் ஜனங்கள் மரண பயத்தினின்று விடுதலையாயிருக்கிறார்களா? கிறிஸ்தவனுடைய முதலாவது மரணத்தைப் பார்ப்போம். முதல் இரத்தச்சாட்சியாகிய ஸ்தேவானே அந்தத் திருஷ்டாந்தம். பழைய ஏற்பாட்டிலுள்ள மரணத்தைப் பார்ப்போம். எசேக்கியா நல்ல அரசன். அவன் மரணத்தைப் பார்க்கும்போது மறுமையைப்பற்றிய நம்பிக்கையற்றவன்போல ஜெபிக்கிறான். ஸ்தேவான் மரிக்கும்போதோ அவனுடைய முகம் தேவதூதனுடைய முகம்போல் பிரகாசிக்கிறது. அவன் அத்தருணத்தில் கண்ட யேசுவின் காட்சியே அவனுடைய முகத்தைப் பிரகாசிப்பித்தது. ஆகையால் அவனைக் கல்லெறிந்தபோது யேசுநாதர் உபயோகித்த அதே வார்த்தைகளை உபயோகிக்கிறான். 'கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்.'

பரிசுத்த பவுலப்போஸ்தலன் தன் ஜீவகாலத்திலேயே தன்னை மரணத்துக்கு ஆயத்தப்படுத்திக்கொண்டவராய் 'என் ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது' என்று சொல்லி தான் எப்பொழுதும் இத்தேகத்தை விட்டுப்பிரிய ஆயத்தமும் சந்தோஷமும் உள்ளவராய்க் காணப்பட்டார். இதுதான் கிறிஸ்து காண்பித்த மாதிரியும் அவர் நமக்காக மரணத்தை ஜெயித்த நோக்கமுமாம். மரணம் ஓர் ஜீவவாசலாக, தன்னிலே ஓர் முடிவாக அல்ல, இன்னோர் மகிமையான ஜீவனுக்கு ஆரம்பமாக இருக்கிறதென்பதை மறந்துபோகாதிருப்போமாக. தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணியிருக்கிற மகிமைக்குட்பிரவேசம் அதுவே. இவ்வித நிலைமையில் பிரவேசிக்க நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கும்படி நமக்காக மரணத்தைப் பரிகரித்த கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக. ஆமென்.



## வேதாகமப்பாட முறை

### பாடம் 19. ராஜாக்களின் முதலாம் புஸ்தகம்

ராஜாக்களின் இரண்டு ஆகமங்களும் யூதருடைய கனோனில் ஒரே புஸ்தகமாயிருக்கிறது. மூன்றாம் நூற்றாண்டில் அதை மொழிபெயர்த்தவர்கள் இரு ஆகமங்களாகப் பிரித்தார்கள். அதுமுதலுள்ள எல்லா மொழிபெயர்ப்புகளிலும் இரு ஆகமங்களாகவே காட்டப்பட்டிருக்கிறது. சாலோமோன் அரசாண்ட காலமுதல் எருசலேமின் அழிவுவரையுமுள்ள யூதஜாதியாரின் சரித்திரம் இவ்விரண்டிலும் அடங்கியிருக்கிறது. இவ்வாகமங்கள் தாவீது ராஜாவோடு ஆரம்பித்து பாபிலோன் ராஜாவோடு முடிகிறது. ஆலயம் கட்டப்பட்டதோடு ஆரம்பித்து அவ்வாலயம் சுட்டெரிக்கப்பட்டதோடு முடிகிறது. ராஜாக்களின் முதலாம் புஸ்தகத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளத்தக்கதாக அடியிற்காட்டிய அதிகாரப்பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதி. 1 சாலோமோன் ராஜாவாதல்
,, 2 தாவீதின் மரணம்
,, 3 சாலோமோன் தெரிந்துகொள்ளல்
,, 4 சாலோமோனின் ராஜ்யம்
,, 5 தேவாலயம்கட்ட ஆரம்பித்தல்
,, 6 தேவாலயம் கட்டிமுடித்தல்
,, 7 தேவாலயத்தை அலங்கரித்தல்
,, 8 தேவாலயப் பிரதிஷ்டை
,, 9 சாலோமோன் 2-ம் தரிசனம்
,, 10 ஷேபாவின் ராஜஸ்திரீ
,, 11 சாலோமோனின் விழுதலும் மரணமும்
,, 12 பத்துக்கோத்திரம் கலகம் செய்தல்
,, 13 வஞ்சிக்கப்பட்ட தீர்க்கதரிசி
அதி. 14 யெரொபெயாம் தள்ளப்படல்.
,, 15 ஆசாவின் நல்ல ஆளுகை
,, 16 இஸ்ரவேலின் ஐந்து ராஜாக்கள்
,, 17 எலியா முதல்முதல் காணப்படல்
,, 18 எலியா கர்மேல் பர்வதத்தில் காணப்படல்
,, 19 எலியா சூரைச்செடி நிழலில் காணப்படல்.
,, 20 சீரியர் படையெழுச்சி
,, 21 நாபோத்தின் திராட்சத்தோட்டம்
,, 22 யோசபாத்தும் ஆகாபும்

ஆக்கியோன். சிலர் எரேமியாவென்றும் வேறு சிலர் எஸ்றாவென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் 2 ராஜாக்களின் பின்பாகத்தையும், அதே சரித்திரத்தை எரேமியா எழுதுகிறதையும் ஒத்துப்பார்த்து இவ்விரண்டும் எழுதப்பட்ட பாஷை நடையைக் கவனிக்கும்போது ராஜாக்களின் புஸ்தகத்தை எரேமியாதான் எழுதியிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. எரேமியாவின் புஸ்தகத்துக் கடைசி அதிகாரமும் 2 ராஜாக்கள் 24-ம் அதிகாரம் 18ம் வசனமுதல் முடிவரையுள்ள வசனங்களும் பொருளில் ஏறக்குறைய ஒன்றுபோலிருக்கிறது.

இவ்விரண்டு ஆகமங்களும் திவ்ய அதிகாரமுள்ளவை யென்பதற்கு நமது ரட்சகர் இச்சரித்திரத்திலிருந்தெடுத்துச் சொல்லும் திருஷ்டாந்தங்களே போர்ந்த அத்தாட்சியாம். அவையாவன:—

1. எலியா சரேப்தாவுக்குப் போனது. 1 ராஜா. 17: 9.

2. குஷ்டரோகியாகிய நாகமான் சொஸ்தமானது. 2 ராஜா, 5: 14 லூக். 4, 26: 27.

3. சேபாவின் ராஜஸ்திரீ சாலோமோனைக் காணவந்தது. 1 ராஜா. 10: 1. மத். 12: 42.

4. சாலோமோனின் மகிமையை லீலி புஷ்பங்களுக்கு ஒப்பிடல் 1 ராஜா 10: 23. மத், 6: 29.

பிரிவுகள். I. தாவீது. அதி. 1—2: 11.

II. சாலோமோன், 2: 12—11.

III. ரேகோபெயாம் அதி. 12—16.

IV. எலியா. அதி. 17—22.

I. தாவீது. அதி. 1—2: 11. தாவீது உத்தேசம் 75 வயதுள்ளவனாயிருந்தான். அவன் நேசமகன் அதோனியா தன்னை ராஜாவாக்க முயற்சித்தான். தாவீது இதையறிந்து சாலோமோனையே ராஜாவாக்கினபடியால் அதோனியா பயந்து ஓடினான். தாவீது சாலோமோனுக்குக் கட்டளை கொடுத்தான் அதி. 2: 1—4. அப்புறம் யோவாப், பர்சிலாய், சிமேயி இவர்களைப்பற்றி ஆலோசனை சொன்னான். கடைசியாக அவன் தன் பிதாக்களோடு நித்திரைசெய்தான்.

II. சாலோமோன். அதி. 2: 12—11.

1. சிங்காசனமேறல். ராஜாவாகும்போது அவனுக்கு 19 அல்லது 20 வயதிருக்கலாம். இஸ்ரவேலரின் சரித்திரத்தில் சிறப்பான காலம் இதுவே. தகப்பனாகிய தாவீதின் ஆலோசனைகளின்படி நடக்க ஆரம்பித்தான். அதோனியா மறுபடியும் ராஜபட்டம் கிடைக்கும்படியான உபாயங்கள் தேடுகிறான்: ஆனகயால் சாலோமோன் அவனுக்குக் கொடுத்த வாக்கை மாற்றி அவனைக் கொன்றுபோட்டான். அபியத்தாரை ஆசாரியனாயிராதபடி தள்ளிப்போட்டான். யோவாபையும் சிமேயியையும் கொலைசெய்தான். இவ்விதமாய் அவனுடைய சத்துருக்கள் அனைவரும் முடிவடைந்தார்கள். மொர்தேகாயும் எஸ்தர் ராணியும் இந்தச் சிமேயியின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள். எஸ்தர் 2: 5.

சாலோமோனுடைய அரசாட்சியின் துவக்கத்தில் தேவன் அவனுக்குச் சொப்பனத்தில் தரிசனமானார். இது தீர்க்கதரிசிகளுக்கும் தனித்தனியான ஆட்களுக்கும் தேவன் தம்மை வெளிப்படுத்தின முறையென்று



பார்க்கிறோம். (எண். 12: 6, யோபு. 33: 15, 16). சாலோமோன் தன் பெலவீனத்தை ஆண்டவரிடத்தில் அறிக்கைபிடுகிறான். அவன் கேட்டுக்கொண்ட விண்ணப்பத்தின்படி அவனுக்கு ஞானம் அளிக்கப்பட்டது. தேவன் தனக்கு அளித்த ஞானத்தைக்கொண்டு தேசத்தில் நியாயஞ்செய்ய ஆரம்பிக்கிறான். (அதி 3: 16–28).

மூன்று வருஷம் அரசாட்சி செய்தபின் தேவாலயத்தைக் கட்ட ஆரம்பித்தான். தேவாலயத்துக்குப்பின் தனக்கு ஓர் அரண்மனையைக் கட்டினான். இவ்விரண்டும் முடிய 20 வருஷம் சென்றது. தேவாலயத்துக்கு வேண்டிய சாமான்கள் சவதரிக்க 4 வருஷமும் அதை முடித்து அலங்கரிக்க 7½ வருஷமும் சென்றது. தேவாலயத்து வேலையில் 70,000 சுமைகாரரும், 80,000 கல் தச்சரும், 3,600 அமஞ்சியாட்களும், இஸ்ரவேலில் 30,000 மரவேலைக்காரரும் அமர்த்தப்பட்டார்கள். தேவாலயம் மோரியா மலையின் உச்சியாகிய சீயோன் மலையில் கட்டப்பட்டது. இதுவே ஆபிரகாம் ஈசாக்கைப் பலியிடக் கொண்டுபோன மலை. இதுவே தாவீதின் காலத்திலுண்டான கொள்ளைநோயில் தேவதூதன் காணப்பட்டதும் தாவீது பலியிட்டதுமான அருவனாவின் களம். இம்மலையைச் சுற்றிலும் ஓர் மதில் கட்டி இடையில் மண்போட்டு நிரப்பிச் சமதரையாக்கினான். கட்டடங்களைச் சுற்றிலும் இன்னோர் மதிலெழுப்பி அதில் ஆசாரியர், லேவியர் பணிவிடைக்கடுத்தவைகள் வைக்கவும் வெளிப்பிரகாரம் தேவாலயப் பணிவிடைக்குவேண்டிய திராட்சரசம, எண்ணெய், தானியம் முதலியவை வைக்கவுமாகக் கட்டினான். தேவாலயம் 70 முழம் நீளம் (128 அடி) 20 முழம் அகலம் (30 அடி), 30 முழம் உயரம் (54 அடி) உள்ளதாயும், முன் மண்டபம் 20 முழம் அகலம், 120 முழம் உயரமுள்ளதாயும் செய்யப்பட்டன. பரிசுத்த ஸ்தலம் 40 முழ நீளம், மகா பரிசுத்த ஸ்தலம் 20 முழ நீளமாயிருந்தது. தேவாலயம் கூடாரத்தின் மாதிரியில் செய்யப்பட்டு அதிலும் பெரிதாய் அமைக்கப்பட்டிருந்தது. உள்ளான அலங்காரங்கள் அறிதற்கரிதாயும் யாரும் பிரமிக்கத்தக்கவிதமாயும் செய்யப்பட்டன. பணிமுட்டுகள் யாவும் மிகுந்த விலையுயர்ந்த மரங்கள், லோகங்களால் செய்யப்பட்டுள்ளன. தேவாலயம்கட்டி முடிவானபின் ஜெபத்தோடு பிரதிஷ்டையாக்கப்பட்டது.

2. சாலோமோனின் தவறுதலும் மரணமும் அவன் இருதயம் மாறுதலடைந்தது. தேவ பயம் சற்று நீங்கி துராசைகள் மேலிட்டு விக்ரகாராதனைக்கும் சாய்ந்து தேவ கோபத்துக்குள்ளானான். இதெல்லாம் அவன் வயோதிபனான காலத்தில் நடந்தன. 50 வயதுக்கு அதிகப்பட்டிராது. சிற்றின்ப ஆசைகள் மேலிட்டு அவன் ஆயுசு நாட்களைக் குறைத்தது. இது தேவனுடைய பிள்ளைகளுக்கு எச்சரிப்பு. இதிலும் பயங்கரமானதென்னவென்றால் அவன் மனந்திரும்பினதாக வேத சரித்திரத்தில் சொல்லப்படவில்லை. என்றாலும் சாலோமோனைக் குறித்துத் தேவன் தாவீதுக்கு நாத்தான் மூலமாய்ச் சொல்லிய வார்த்தைகளில் தான் நம்பிக்கையுண்டு (2 சாமு. 7:14, 15).

III. ரேகொபெயாம் அதி. 12—16.

1. ரெகொபெயாமும், யெரொபெயாமும். அதி. 12—14. சாலொமோன் மரித்தவுடன் பிரிவினைக்கு ஆரம்பமுண்டாயிற்று. யூதாவும், பென்யமீனும் ரெகொபெயாமோடு சேர மற்றப் பத்துக் கோத்திரங்களும் பிரிந்து யெரொபெயாமை ராஜாவாக்கினார்கள். நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாம் இஸ்ரவேலைப் பாவஞ் செய்யப்பண்ணி இஸ்ரவேலையும் யூதாவையும் அழிவுக்குட்படச் செய்தான்.

2. யூத ராஜாக்கள் 15: 1-24. அபியா அதி. 15: 1-8. ஆசா அதி. 15: 9-24.

3. இஸ்ரவேல் ராஜாக்கள். அதி.15: 25—16.

(1) நாதாப் அதி. 15: 25—27. இரண்டு வருஷம் ஆண்டு பொல்லாப்பு நடப்பித்தான்.

(2) பாஷா. அதி. 15: 28—16: 7. 26 வருஷம் ஆண்டான். இவன் காலத்தில் யாதொன்றும் விசேஷமாய் நடக்கவில்லை. ஆனால் கர்த்தருடைய பார்வையில் பொல்லாதவனாயிருந்தான்.

(3) ஏலா. அதி. 16: 8—14. துன்மார்க்கன், குடிகாரன் குடிவெறியில் இறந்தான்.

(4) சிம்ரி. அதி. 16: 15—20. 7 நாள் மாத்திரம் ஆண்டு அக்கினிக்கிரையானான்.

(5) உம்ரி. அதி. 16: 21—28. பொல்லாத அரசன் என்றாலும் பெலவான், ஜனங்கள் திப்னியை ராஜாவாக்க விரும்பினார்கள். சண்டையுண்டாயிற்று. நாலு வருஷம் யுத்தஞ்செய்தபின் உம்ரி ஜெயங்கொண்டு தானே அரசாண்டான். இவனும் பொல்லாத அரசன்.

(6) ஆகாப். அதி. 16: 28—34. 22 வருஷம் ராஜ்யபாரம்பண்ணினான். மிகவும் பொல்லாப்புச் செய்தான். தன் தகப்பனாகிய உம்ரியைப் பார்க்கிலும் அதிகமாய்ப் பொல்லாப்பு நடப்பித்தான். இவன் காலத்தில் எழும்பின தீர்க்கதரிசியை எதிர்த்துத் தன் பொல்லாப்பைப் பெருகப்பண்ணினான்.

IV. எலியா. அதி. 17—22.

இஸ்ரவேல் தீர்க்கதரிசிகளிலெல்லாம் சிறந்தவன். பழைய ஏற்பாட்டின் சரித்திரங்களிலெல்லாம் இவன் சரித்திரம் மனதைக் கவரத்தக்கது. இவன் பெரியவனென்பதற்கு புதிய ஏற்பாடும் சாட்சிகொடுக்கிறது. யூத ஜாதியாரும் இவனை மறக்கக்கூடாதபடி அவனுடைய ஊழியம் அவர்கள் மனதிற் பதிக்கப்பட்டது. அவனைப்பற்றிய சரித்திரக் குறிப்பு யாதொன்றும் முன் சொல்லப்படாமலே 'கிலேயாத்தின் குடிகளில் திஸ்பியனாகிய



எலியா' என்று வார்த்தைகளால் அவன் ஊழிய சரித்திரமே ஆரம்பிக்கிறது.

புதிய ஏற்பாட்டில் இவனைப்பற்றி வரும் குறிப்புகளாவன:—

(a) நம்மைப்போல பாடுள்ள மனுஷன். யாக். 5: 17.

(b) சரெப்தாவிலுள்ள கைம்பெண்ணுக்குக் காட்டினபக்ஷம். லூ. 4:25

(c) சகலத்தையும் புதிதாக்குவான். மத். 17: 11.

(d) மனுஷருடைய இருதயத்தைத் திருப்புகிறவன். மல்கி. 4: 5, 6; லூக். 1: 47.

இவன் தீர்க்கதரிசிகளிலெல்லாம் பெரியவன். அவன் சரித்திரம் மிகவும் அதிசயமானது. இவன் சரித்திரத்தை ஐந்து வார்த்தைகளால் பிரிக்கலாம்.

(1) ஆகாபுக்குமுன். அதி. 16: 1.

(2) கேரீத் ஆற்றண்டை. 17: 2—7.

(3) சரேப்தாவில். 17: 8—24. எலியா மூன்றுதடவை அற்புதமாய்ப் போஷிக்கப்பட்டான். (a) காகங்களால் அதி. 17: 8. (b) விதவையால் 17: 9. (c) தேவ தூதனால் 19: 5—6.

(4) கர்மேலில். அதி. 18.

(5) வனாந்தரத்தில். அதி. 19.

அதி. 20-22ல் ஆகாபின் கடைசி வர்த்தமானங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

---

## ஜெபம் வல்லமையான காரியங்களை நடப்பிக்கும்

(S. D. Gordon)

அருமை ரட்சகருடைய ஜீவியத்தின் பெரும்பாகம் ஜெபமே. ஜெபத்தின் சிறந்த வல்லமையைக் காட்ட அருமை ரட்சகர் ஜெபத்தைப்பற்றிச் சொல்லிய வார்த்தைகளையே சிந்திப்பது பிரயோஜனமாயிருக்கும். இங்கிலாந்திலுள்ள ஓர் துரைசானி ஓர் புத்தகத்தை வாசித்துக்கொண்டிருக்கும்போது அதில் 'லண்டன் பட்டணத்திலிருந்துகொண்டு 2,000 மைலுக்கப்பாலுள்ள ஓர் சிநேகிதனுக்காக ஜெபித்தாலும் அந்த ஜெபம் கிரியை செய்யும்' என்றெழுதியிருந்ததைக் கவனித்துக்கொண்டு, இந்து தேசத்திலுள்ள தன் சகோதரனுக்காக ஜெபிக்க ஆரம்பித்தார்கள். அந்தச் சகோதரன் குணப்படாத வாலிபன். ஆகையால் அந்தத் துரைசானி தன் சகோதரன் விஷயத்தில் ஜெபத்தின் வல்லமையைத் தான் பார்க்கவேண்டுமென்று விரும்பி ஜெபித்து வந்தார்கள். இப்படி ஜெபித்துக்கொண்டு வரும்போது தான் சகோதரனுக்கெழுதின ஓர் கடிதத்தில் மற்ற விசேஷங்களின் மத்தியில், தம்பி, உன்

ஜீவியத்தில் ஏதாவது விசேஷித்த மாறுதல் நேரிட்டிருப்பதுண்டா? என்றும் கேட்டெழுதினார்கள். அக்கடிதத்துக்கு வந்த பதில் கடிதத்தில், 'அக்காளே, ஆம், ஓர் விசேஷம் நடந்தது. இரண்டு மாசங்களுக்குமுன் நான் திடீரென்று தேவனை அறியவேண்டுமென்று என் மனதைத் திருப்பினேன். யாதொரு புஸ்தகம் வாசித்ததினாலுமல்ல, ஏதாமொரு பிரசங்கம் கேட்டதினாலுமல்ல, நான் பிரசங்கம் நடக்கும் ஜெபங்களுக்காவது ஜெபக்கூட்டங்களுக்காவது போனதே கிடையாது. என்றாலும் என் மனது தேவனுக்கு நேராகத் திரும்பிற்று. நான் ரட்சகருக்கு என் இருதயத்தை ஒப்புக்கொடுத்திருக்கிறேன். இக்கடிதத்தை எழுதும்போதுதான் நான் மெய்யான கிறிஸ்தவன்' என்றெழுதியிருந்தான். அந்தத் துரைசானி தான் ஜெபிக்க ஆரம்பித்த காலமும் தன் சகோதரன் குணப்பட்டகாலமும் ஒன்றுபோலிருக்கிறதென்று கண்டு ஜெபத்தின் வல்லமையை நம்பினார்கள்.

மெய்யாகவே நான் மற்றவர்களுக்காக ஜெபிக்கும்போது எப்படியும் தேவன் கிரியை செய்வார் என்று நம்பலாம். நாம் தனிமையாய், அல்லது இரண்டு, மூன்று பேர் கூடி ஜெபிக்க ஆரம்பிக்கும்போது நாம் தேவனோடு கொஞ்ச நேரம் பின்னிடுவதில் பழகி ஜெபசிந்தையுள்ளவர்களாவோம்.

மேலும் இப்படி ஜெபிப்பதால் மற்றவர்களுக்காக ஊழியம்செய்ய ஏவப்படுவோம். கிறிஸ்துவின் ஆவியானவர் நம்மில் ஜெபசிந்தையை எழுப்புவதோடுகூட ஆத்துமாக்களின் பேரில் அனுதாபத்தையும் உண்டாக்குகிறார். ஓர் நல்வார்த்தை பேசி ஓர் அன்பின் கிரியை நடப்பித்து ஓர் வகுப்புக்குப் போதித்து இவ்விதமான நல் ஊழியத்தில் பழகுவோமானால் கிறிஸ்துவின் சிந்தை நமக்குண்டாகி ஆண்டவருக்காக ஊழியஞ்செய்யவேண்டுமென்ற ஆசை பெருகும். நாம் மற்றவர்களுக்காகச் செலவழிக்கவும் செலவழிக்கப்படவும் வேண்டும். இந்த வாஞ்சை பெருகவேண்டுமானால் நாம் கிறிஸ்துவோடு ஜெபத்தில் அதிக நேரம் செலவழித்து அவருடைய வசனத்தைத் தியானிப்பதில் பின்னிட்டு, மனிதர் கூட்டுறவைச் சற்று தள்ளி மனிதருக்காக உழைப்பதில் பின்னிடுவோமானால் எத்தனை இன்பமாயிருக்கும்.

நாம் மற்றவர்களுக்காக ஊழியம் செய்யவேண்டிய விஷயத்தில், ஆத்துமாக்களோடு நேரில் பழகிக் கிரியைசெய்யும்போது சில ஆட்களோடு மாத்திரம் சம்பந்தப்படுவோம். ஆனால் ஆத்துமாக்களுக்காக ஜெபிக்கிற ஊழியத்திலேயோ, அநேக ஆட்களுக்காக ஜெபித்து நமது சிந்தை விசாலமாகி சில ஆத்துமாக்களுக்காகத் தனித்தனியாய் மாத்திரமல்ல, சில ஜாதிகளுக்காகவும் ஜெபிக்கக்கூடும். தனிஜெபம் செய்யும்போது நமது இஷ்டப்படி சத்தத்தோடு ஜெபிக்கலாம். தேவனுடைய வல்லமை ஒரு தேசத்தில் மட்டுமல்ல தேசாந்தேசங்களிலும் கிரியை நடப்பிக்கும்படி கெஞ்சலாம்.



இவ்விதப் பழக்கம் நமக்கு உண்டாகுமானால், நான் ஜெபத்தில் அதிகநேரம் செலவழிக்கவும் நமது உள்ளம் வாஞ்சைகொள்ளும்போதெல்லாம் ஜெபிக்கவும், ஆத்திரத்தோடு படபடப்பாய்ச் சில வார்த்தைகள் சொல்லிவிட்டுப் போகவல்ல, அமைதலாய், அவருடைய உள்ளத்துக்கிசைவாய் ஜெபித்து, அவருடைய சித்தத்தை அறியத்தக்கதாக நமது உள்ளம் தெளிவடைந்து நாள்தோறும் இவ்வித தியானத்தில் பெருகி வளரலாம். நாம் ஜெபித்த அளவைப்பார்க்கிலும் அதிகமாய்த் தேவன் கிரியை செய்வார். அதை நாம் அறியாதிருக்கலாம். நமது ஜெபத்தின் பலனை யறிந்து நாம் ஜெபிக்க ஏவப்படுவோமானால் நமது ஜெபவாஞ்சை குறையும். ஆனால் ஜெபத்துக்கு ஆண்டவர் கொடுத்திருக்கும் வாக்குகளைக் கவனித்து ஜெபிப்போமானால் நாம் உற்சாகமடையக் காரணமுண்டாகும்.

பரலோகத்துக்குப் போனபின் தேவனுடைய பிள்ளைகள் துக்கப்படக் காரணமில்லை. அப்படித் துக்கப்பட நேரிட்டால் இரண்டு காரியங்களுக்காகத் துக்கப்படுவார்கள்.

ஒன்று. 'நான் அதிகமாய் அமைதலான தனி ஜெபம் செய்யவில்லையே. அதிகமாய்ப் போராடி ஜெபித்தேனில்லையே' என்பதே. கர்த்தராகிய யேசு கிறிஸ்துவின் வல்லமை எல்லாவிடங்களிலும் கிரியை நடப்பிக்கத்தக்க அளவான விண்ணப்பமும் போராட்டமும் நம்முடைய ஜெபத்தில் காணப்படுகிறதில்லை.

இரண்டாவது. 'நான் தேவனை நம்பவேண்டிய அளவு நம்பி ஜெபித்தேனில்லையே' என்பதே. ஜெபத்தின் வல்லமையைக்குறித்தும் நம்முடைய ஜெபக்குறைவைக்குறித்தும் பரலோகத்திலிருக்கும்போது நாம் அறியக்கூடிய பிரகாரம் இவ்வுலகத்திலிருக்கும்போதும் அறிந்து உணரக்கூடுமானால் நமது ஜெபங்கள் எவ்வளவு விசுவாசத்தோடு கூடியவைகளாயிருக்கும்.

நமது வீடுகளில் ஜெப அறைகளுண்டா? மற்ற அறைகளின் நிலைப்படிகள் தேய்ந்திருப்பதுபோல ஜெப அறையின் வாசற்படிகள் தேய்ந்திருக்குமா? இந்த விஷயத்தைச் சற்று யோசித்துப்பார்ப்போம். நாம் தினந்தோறும் ஒழுங்காய் ஜெபித்துவருவோமானால், நமக்கு அவசியமென்று காணப்படுகிற ஒவ்வொரு விஷயத்துக்காகவும், நமக்கு ஆலோசனைவேண்டிய ஒவ்வொரு வேலையின் அவசரத்துக்காகவும், நம்முடைய ஊழியத்தின் மூலமாய்ச் சம்பந்தப்படும் ஒவ்வொரு ஆத்துமா, சபைகள், ஜாதிகளுக்காகவும் நாம் ஒழுங்காய் ஜெபிக்கப் பழகுவோமானால் மற்ற அறைகளின் கதவுகளையும் நடைகளையும்விட ஜெப அறையின் கதவுகளும் படிகளுமல்லவா அதிகமாய்த் தேய்ந்திருக்கவேண்டும்.

ஜெப வாஞ்சையும், ஜெபத்தைப்பற்றிய நம்பிக்கையும் நம்மில் பெருகத்தக்கதாக ரட்சகர் ஜெபத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிற இரண்டொரு வார்த்தைகளை எடுத்து ஞாபகப்படுத்திக்கொள்வது நல்லது. நமது ரட்சகர் தமக்குச் சத்துருக்களும் எதிரிகளும் எவ்வளவுக்கு அதிகமாய்ப் பெருகினார்களோ அவ்வளவுக்கதிகமாய் ஜெபம் செய்தது மாத்திரமல்ல, ஜெபத்தைப்பற்றிய அவருடைய போதனையும் அதிகப்பட்டிருக்கிறது. தாம் மரணத்தை உத்தரிக்கப்போவதையும், எருசலேமில் தமக்கு மிகுந்த போராட்டம் உண்டென்பதையும் அவர் அதிகமாய் உணர்ந்தபடியால் தமது ஜீவியத்தின் பிந்தின பாகத்தில் தமது சீஷர்களுக்கு ஜெபத்தை

பற்றி அதிகமாய் போதித்திருக்கிறார். ஜெபத்தின் வல்லமையைக் குறித்து அவர் பேசின வார்த்தைகளைப்போல அவ்வளவு ஊக்கமும் கருத்துமுள்ள வார்த்தைகளை வேறு சம்பாஷணைகளில் உபயோகித்ததில்லையென்றே சொல்லவேண்டும்.

(இன்னும் வரும்)

---

## யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபு

### அப். 12: 2.

இந்த அப்போஸ்தலனைக் கர்த்தர் தமது ஊழியத்துக்கென்று பக்குவப்படுத்தின முறையைக் கவனிப்பது நமக்குப் பிரயோஜனமாயிருக்கும்.

1. கிறிஸ்துவின் வல்லமையைக் கண்டான். மாற். 5: 37. யவீரின் மகளை உயிரோடெழுப்பும்போதுகூட இருந்த மூன்று சீஷர்களில் ஒருவன்.

2. கிறிஸ்துவின் மகிமையைக் கண்டான். மத். 17: 1. மறுரூப மலையிலிருந்த மூன்று சீஷர்களும் தூங்கிக்கொண்டிருந்தபோதிலும், பரி. பேதுருவும், பரி. யோவானும் 'அவருடைய மகிமையைக் கண்டோம்' என்று சாட்சிகொடுக்கிறபடியால் இவனும் அதைக் கண்டிருக்கவேண்டும்.

3. கிறிஸ்துவின் அன்பைக் கண்டான். லூக். 9: 54. சமாரியர் யோவான் 4ல் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள். அப். 8ல் சமாரியரில் அநேகர் பிலிப்புவின் பிரசங்கத்தைக் கேட்டுக் கிறிஸ்துவை விசுவாசித்தார்கள். இதற்கிடையில் ரட்சகர் உயிரோடிருந்த காலத்தில அவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. யாக்கோபும், யோவானும் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பக்ஷிக்க உத்தரவு கொடுக்கக் கேட்டபோது ரட்சகர் அதற்கிடங்கொடுக்கவில்லை. இதில் கிறிஸ்துவின் பொறுமைக் கண்டான்.

4. கிறிஸ்துவின் சிந்தை எப்படிப்பட்டதென்று கண்டான். மாற். 10: 35. கிறிஸ்துவின் மகிமையில் சகோதரராகிய யாக்கோபும் யோவானும் வலதுபாரிசத்தையும் இடதுபாரிசத்தையும் கேட்டபோது தமது சிந்தை இன்னதென்பதை அவர்களுக்கு விளங்கக்காட்டினார். மனுஷகுமாரன் ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியஞ்செய்யும்படி வந்தார் என்று சொன்னார்.

5. கிறிஸ்துவின் ஞானத்தைக் கண்டான். மாற். 13: 3. ஒலிவ மலையில் இருக்கும்போது கிறிஸ்துவின் வருகைக்குரிய அடையாளங்கள் எவை என்று கேட்டவர்களில் இவனும் ஒருவன். இவன்தான் முதலில் கேள்வியை ஆரம்பித்தவன்.

6. கிறிஸ்துவின் பாடுகளைக் கண்டான். மாற். 14: 32. கெத்சேமனேயில் ஆத்துமப்பாடுகளைப் பார்க்கத்தக்க சமீபத்தில் கொண்டுபோகப்பட்ட மூன்று சீஷரில் ஒருவன்.

7. அவருடைய உயிர்த்தெழுதலுக்கு இவன் சாட்சி, 1 கொரி. 15: 7.

8. பரிசுத்தாவிக்காக எதிர்பார்த்துக்கொண்டிருந்தவர்களில் இவனும் ஒருவன். அப். 1: 13.

9. இவன் கிறிஸ்துவுக்கென்று ரத்தச்சாட்சியாய் மரித்தான். அப். 12: 2.

---

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

23 FEB 1917 MADRAS

September 1916 Registered No. M. 163

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." யோவான் 7: 38

Vol. XVII செப்டம்பர் 1916

## சுத்த இருதயம்

'இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்'. இருதயம் வெறுமையாயிருப்பதில்லை. எந்தப் பாத்திரமும் வெறுமையாயிருப்பதில்லை. ஏதோ ஒரு பொருள் அல்லது ஜலம் அல்லது ஆகாயம் அதிலிருக்கும். குணப்படாதவனுடைய இருதயம் சாத்தானுக்கு ஆதீனம். ரட்சிக்கப்பட்டவனுடைய உள்ளத்தில் கிறிஸ்து வாசம்பண்ணுகிறார். மனுஷன் செய்யும் பாவங்கள் அவன் இருதயத்திலிருந்து புறப்படுகிறது. ஊற்று கசப்பு தண்ணீரும் கசப்பு. பாவத்தால் தீட்டுப்பட்டவன் பரிசுத்த நகரத்தில் பிரவேசிப்பதில்லை. ரட்சிக்கப்பட்டு சுத்தாங்கம் அடைந்தவன் பரம வெளிச்சத்தில் உலாவுவான். தாவீதைப்போல் பாவ மன்னிப்பையும் சுத்த இருதயத்தையும் தேடுவோமாக. இருதய சுத்தம் மேலான பாக்கியம்!

1. தேவ வசனம் நன்மைசெய்ய சுத்த இருதயம் வேண்டும். வசனத்துக்கும் இருதயத்துக்கும் நெருங்கின சம்பந்தம் உண்டு. விதைக்கிறவனுடைய உவமையில விதையை வசனத்துக்கு ஒப்பிட்டார். நிலத்தை இருதயத்துக்கு ஒப்பிட்டார். கர்த்தர் பேசின நாலு வகையான நிலங்கள் நாலு விதமான இருதயங்களைக் காட்டுகிறது. நாலு நிலங்களில் விதைகள் விதைக்கப்பட்டபோதிலும் ஒரு நிலத்தில் மாத்திரம் பலன் கிடைத்தது. திருவசனத்தைக் கேட்கிற அநேகர் பலன்கொடாமல் போகிறதற்குக் காரணமென்ன? தேவ வசனம் வல்லமையற்றுப்போயிறதோ? அல்ல, அது அவரைப்போலவே மாறாத வல்லமையுள்ளதாயிருக்கிறது. இருதயங்களின் நிலைமையே அதற்குக் காரணம். சிலருடைய இருதயம் கற்பாறைபோல் கடினப்பட்டிருக்கிறது. சிலருடைய இருதயம் உலகத்துக்குரியவைகளால் நெருக்கப்பட்டுப்போயிருக்கிறது. சிலருடைய இருதயத்தில் சாத்தான் பொறுக்கிப்போடுகிற வேலை பலமாய் நடக்கிறது.

20-7-16
16

நல்ல இருதயமோ விதையை வாங்கி அதைப் பத்திரமாய்க் காத்து ஏற்ற காலத்தில் மிகுதியான பலனைக் கொடுக்கிறது. வேதத்தைத் தியானிக்க எஸ்றா தன் இருதயத்தை ஆயத்தப்படுத்தினான். 'செம்மையாய் நடக்கிறவனுக்கு என் வார்த்தைகள் நன்மை செய்யாதோ' என்று கர்த்தர் கேட்கிறார். என் ஆண்டவரே, உமது திருவசனம் என்னில் நன்மை செய்யத்தக்க இருதயத்தை எனக்குத் தாராட்டீரா?

2. **ஜெபித்துப் பெற்றுக்கொள்ள சுத்த இருதயம் வேண்டும்.** ஜெபத்தின் வல்லமை இருதய சுத்தமே. பாவமுள்ள ஜெபம் பலிக்காது. 'என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்குச் செவிகொடார்'. செவிகொடார் என்றால் செவி கொடுப்பார் என்று அர்த்தமல்ல. உள்ளத்தின் அக்கிரமத்தோடு தங்கள் வாயைத் திறக்கிறவர்கள் வீண் அலப்புக்காரராயிருக்கிறார்கள். அநேக ஜெபங்கள் வீண் அலப்புதலே. சரியான இருதயம் சரியான ஜெபஞ்செய்யும். சகோதரனே, உன் இருதயத்தைப் பார். அங்கே சுத்தமுண்டோ, அசுத்தமுண்டோ? கர்த்தருக்கு அது உகந்த உள்ளமோ அல்லது கள்ளர் குகையோ? சுத்த இருதயமுள்ள தானியேல் விண்ணப்பம்பண்ணத் தொடங்கினபோதே உத்தரவு புறப்பட்டுவிட்டது. குமாரன் எப்பொழுதும் பிதாவுக்குப் பிரியமாய் நடந்தார். ஆகையால் பிதா எப்பொழுதும் குமாரனுக்குச் செவிகொடுத்தார். தேவன் சொன்னபடி நாம் செய்தால், நாம் சொன்னபடி தேவன் செய்வார். நமது இருதயமே நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்த்தால் நாம் தைரியமாக ஜெபிப்பதெப்படி? 'நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால் நாம் தேவனிடத்தில் தைரியங்கொண்டிருந்து .... நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம்'. ஆண்டவரே, உம்மிடத்தில் ஜெபித்துப் பெற்றுக்கொள்ளத்தக்க சுத்த இருதயத்தை எனக்குத் தாரும்.

3. **ஊழியத்தில் பலன் காண சுத்த இருதயம் வேண்டும்.** ஒரு துன்மார்க்கன் அல்லது ஒரு தூஷண வாயன் நெல் விதைத்தால் முளைக்கலாம். அதுபோல ஒருவன் பொல்லாதவனாயிருந்தாலும் அவன் ஊழியத்தில் பலனுண்டாகுமென்று எண்ணக்கூடாது. ஊழியனைப்போலவே அவன் ஊழியமும் இருக்கும். 'நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக்காட்டுகிறான்; பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான்; இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும்'. அநேகருடைய ஊழியத்தில் பலனில்லாமற்போகிறதற்குக் காரணம் அவர்களுடைய நடக்கையில் சுத்தமில்லாததினால் அல்லவா? 'ஒருவன் இவைகளைவிட்டுத் தன்னைச் சுத்திகரித்துக்கொண்டால் அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்'. சற்று மாற்றிச்



சொல்லுகிறேன். பாவங்களில் நிலைத்திருக்கிறவன் அசுத்தமானதும், எஜமானுக்கு உபயோகமில்லாததும், எந்த நற்கிரியைக்கும் ஆகாததுமான கனவீனமுள்ள பாத்திரமாயிருப்பான். பாத்திரங்கள் தங்களைத் தாங்களே உபயோகித்துக்கொள்ளுகிறதில்லை. மற்றவர்கள் அவைகளை உபயோகிக்க வேண்டும். தேவ ஊழியர் பாத்திரங்களுக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறார்கள். இப்பாத்திரங்களை எடுத்து உபயோகிக்கிறவர் தேவனே. அசுத்தம் நிறைந்த பாத்திரத்தை அவர் ஒருபோதும் உபயோகியார். சுத்திகரிக்கப்பட்டவர்களை அவர் தாராளமாய் உபயோகிப்பார். சகோதரனே, கர்த்தர் உம்மை ஊழியத்தில் உபயோகிக்கிறாரா? பலன் காண்கிறீரா? ஆண்டவரே, என்னைச் சுத்திகரியும்; என்னை எடுத்து உபயோகியும், எனக்குப் பலன்தாரும்.

4. **எக்காலும் தேவனை நல்லவரென்றுபோற்ற சுத்த இருதயம் வேண்டும்.** உத்தமர்களுக்கு தேவன் உத்தமராகவும், புனிதருக்குப் புனிதராகவும், மாறுபாடுள்ளவர்களுக்கு அவர் மாறுபடுகிறவர் போலவும் தோன்றுவார். அவர் மாறுபாடுள்ளவரல்ல. ஆனால் மாறுபாடுள்ளவர்களுக்கு அவர் அப்படித் தோன்றுகிறார். அப்படித் தோன்றுகிறது யார் தப்பிதம்? அவர்களுடைய தப்பிதமே. இதுபோலவேதான் பூர்வத்திலிருந்த இஸ்ரவேலரும், தேவனிடத்திலிருந்து இரக்கங்களையும், நன்மைகளையும் பெற்றுக்கொள்ளும்போது தேவன் எவ்வளவு நல்லவர் என்று போற்றுவார்கள். ஆனால் காரியங்கள் தங்கள் நோக்கத்திற்கு விரோதமாய் நேரிடும்போதும் தாங்கள் விரும்பினது கைகூடாதிருக்கும்போதும் அவர்களிடத்தில் காணப்படும் மாறுபாடும் முறுமுறுப்பும் இவ்வளவென்று சொல்லமுடியாது. ஆகிலும் அவர்களுக்குள் 'சுத்த இருதயமுள்ள இஸ்ரவேலருக்கோ தேவன் நல்லவராகவே இருந்தார்.' தேவன் அவர்களை நடத்தின பாதை இன்பமாயிருந்தாலும், கரடுமுரடாயிருந்தாலும்; அது தங்கள் புத்திக்கு விளங்கினாலும், விளங்காமற்போனாலும், தேவன் நல்லவரென்றே அவரைப் புகழ்ந்தார்கள். ஏனென்றால் அவர்களுடைய இருதயம் சுத்தமாயிருந்தது. நாம் நமது நல்ல பிதாவைப்பற்றி எவ்வளவு குறைவாய் நினைத்திருக்கிறோம். நமக்குத் துன்பம் துயரம் சம்பவித்த காலத்திலும், எடுத்த முயற்சி தவறிப்போன காலத்திலும் நம்முடைய இருதயம் முறுமுறுத்ததில்லையா? நமது நாவு பதறிப்பேசினதில்லையா? ஐயோ, அதற்குக் கணக்குண்டா? நமது சொந்த இருதயத்தின் கேடே இதற்குக் காரணம். என் பிதாவே, எக்காலத்திலும், எந்தக் கஷ்டத்திலும், எந்த நஷ்டத்திலும் 'கர்த்தர் நல்லவர் அவர் செய்வதெல்லாம் நன்மையே' என்று சொல்லத்தக்க இருதயத்தை எனக்குத் தாரும்.

5. **சகலமும் செம்மையாய்த் தோன்ற சுத்த இருதயம் வேண்டும்.** தோற்றத்தின்படி தீர்ப்புச்செய்வது நமக்குச் சகஜமாய்ப்போய்விட்டது. காரியத்தின் உண்மையைக் கண்டுகொள்ள நமக்கு ஞானமில்லை. கண்கள் நமக்கிருந்தும் இருதயத்தைக்கொண்டுதான் பார்க்கிறோம், அதற்கேற்ற

படிதான் தீர்க்கிறோம்: சிவப்புக்கண்ணாடி போட்டவனுக்கு எல்லாம் சிவப்பே. பச்சைக்கண்ணாடி போட்டவனுக்கு எல்லாம் பச்சையே. கறுப்புக்கண்ணாடி போட்டவனுக்குச் சகலமும் இருளே. எவ்வளவோ அலங்காரமும் சோதியுமான தோற்றங்கள் உலகத்திலிருந்தாலும் அவைகளெல்லாம் மங்கிப்போகிறது. எல்லாம் ஏக இருளாகத் தோன்றுகிறது. 'சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கும்; அசுத்தமுள்ளவர்களுக்கும் அவிசுவாசமுள்ளவர்களுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது; அவர்களுடைய புத்தியும் மனச்சாட்சியும் அசுத்தமாயிருக்கும்.' தீத்து. 1: 15. அசுத்த இருதயமுள்ள ஒருவன் எங்கே போனாலும், யாரைப் பார்த்தாலும், தன் உள்ளம் போலவே நினைப்பான், பேசுவான். தனக்குள் துன்மார்க்கம் இருப்பதால் மற்றவர்களையும் அப்படியே எண்ணுவான். தனக்குள் கபடு இருப்பதால் மற்றவர்களை நம்பமாட்டான். கெடுதல்புத்தி தனக்கு இருப்பதால் மற்றவர்கள் தன்னைக் கெடுக்கப்பார்க்கிறதுபோல் தோன்றும். அப்படிப்பட்டவர்கள் நாம் சொல்லும் யோசனையை மோசமென்று நினைப்பார்கள். நமது அன்பை ஏமாற்று என்று நினைப்பார்கள். எல்லாவற்றையும் தங்கள் இருதயத்துக்கேற்றபடி திருப்புவார்கள். அவர்களுக்கு ஒன்றும் சுத்தமாயிராது. ஐயோ! இப்படிப்பட்டவர்களுடைய நிலைமை எவ்வளவு பரிதாபம். நான் ஜனுவரிமீ யாழ்ப்பாணத்துக்குப் போனபோது மதவாச்சி ஸ்டேஷனில் ராத்திரி வண்டிக்குள் ஒரு பயங்கரமான காட்சி கண்டேன். ஒரு மனுஷன் தன் பக்கத்திலிருந்த மனுஷனைக் கனத்த செம்பினால் தலையில் அடித்துப் படுகாயப்படுத்திப்போட்டான். ஏனென்று விசாரிக்க: அவன் ஒரு ஸதுபந்தனென்றும், மற்றவர்கள் தனக்கு மோசம் செய்து தன் ஆஸ்தியை அபகரித்துக்கொள்ளுவார்கள் என்கிற பயத்தை எப்பொழுதும் மனதில் உடையவனென்றும், அச்சமயத்தில் அந்தப் பொல்லாத எண்ணம் அதிகரிக்கவே பக்கத்திலிருந்தவர்கள்மேல் சமுசயப்பட்டுப் பாய்ந்துவிழுந்து காயப்படுத்தினான் என்று தெரியவந்தது. அநேக பகைகளுக்கும், சண்டைகளுக்கும், பிரிவினைகளுக்கும் காரணம் வீண் சமுசயமே. கண்ணாடி நிறம்போல தோற்றம். அவர்கள் இருதயம் அசுத்தமாயிருப்பதால் ஒன்றும் அவர்களுக்குச் செம்மையாய்த் தோன்றாது. என் ஆண்டவரே! தேவரீர் பார்க்கிறபடி நான் பார்க்கவும்; தேவரீர் தீர்க்கிறபடி நான் தீர்க்கவும் எனக்குச் சுத்தமும் ஞானமும் உள்ள இருதயத்தைத் தாரும்.

S. பரமானந்தம்.

---

## 'கர்த்தர் அவனை நோக்கி; உன் கையிலிருக்கிறது என்ன என்றார். ஒரு கோல் என்றான்.' யாத்: 4. 2.

### Indroduction.

கோலானது மெத்த பிரயோஜனமுள்ளது. மூன்று வருஷத்துக்கு முன் நான் சீமை தேசத்தில் இருக்கும்போது என் காலில் ஒரு சிறு



எலும்பு முறிந்துபோயிற்று. காலூன்றவும் ஏலாது. நடக்கவும் கூடாது. மூன்று, நாலு மாசகாலமாய் நொண்டியாயிருந்தேன். ஒற்றைக் காலால் கொஞ்சத்தூரம் சிந்தி நடக்க மாத்திரம் கூடும். அப்போது இரண்டு பெரிய கோல்களை வாங்கினேன். (ஊன்றுகோல்) (கக்கதண்டம்). வலது கையில் ஒரு கோலைப் பிடித்துக்கொண்டேன். இடது கையில் மற்றக் கோலையும் பிடித்துக்கொண்டேன். அந்த ஊன்றுகோலின் உதவியினாலே கொஞ்சம் நடமாட ஆரம்பித்தேன். அதிலே பழகப்பழகப் பிற்பாடு வெகு ஜல்தியாய் நடக்கக் கூடியவனானேன். என் காலுக்குப் பெலன் உண்டாகுமட்டும் அப்படியே ஊன்றுகோலால் நடந்துவந்தேன். அப்படிப்போல கோலானது பல காரியங்களுக்கும் உதவும். சில சமயங்களில் நான் தெருவில் நடக்கும்போதும் ஒரு கெட்ட நாய் வந்து குலைத்துக் கடிக்கும்படி கிட்ட வரும்போது என் கைக்கோலை அதற்குக் காட்டுவேன் உடனே ஓடிப்போய்விடும். அதை அடிக்கிறதுமுண்டு. நல்லது! இன்றைக்கு உங்கள் முன்புக்கு நாலு வகையான கோலை வைக்கப்போகிறேன் ஒவ்வொரு கோலுக்கும் பேர் கொடுப்பேன். ஒவ்வொரு கோலுக்கும் வேதவாக்கியம் சொல்வேன். ஒவ்வொரு கோலைப்பற்றியும் சிலசங்கதிகளைத் தெரியப்படுத்துவேன்.

I. கைக்கோல். யாத்; 4. 2. பாருங்கள், மோசே இஸ்ரவேல் ஜனங்களை விடுதலைபண்ணப் புறப்பட்டுப்போகிறார். அவர் கையில் பட்டயமுமில்லை. ஈட்டியுமில்லை, வேலாயுதமுமில்லை. என்ன இருக்கிறது? ஒரு கோல் மாத்திரமுண்டு. நம்முடைய பார்வைக்கு அது சாதாரணமான கோலாகத் தோன்றுகிறது. பார்க்கிறதற்கு நேர்த்தியாயிருந்ததென்று நான் நினைக்கிறதில்லை. என்றாலும் அதிலே ஒரு பெலன்—வல்லமை இருந்தது. அதைத் தரையிலே போடும்போது சர்ப்பமாயிற்று. எகிப்து தேசத்தின்மேல் அதை நீட்டும்போது தண்ணீர் எல்லாம் ரத்தமாக மாறினது. திரளான தவளைகள் எங்கும் வந்து தத்தினது. வெட்டுக்கிளிகளும் செடிகள் பயிர்களை எல்லாம் தின்றுபோட்டது. அப்புறம் அவர் அந்தக் கோலை நீட்டினவுடனே சிவந்த சமுத்திரம் இரண்டாகப் பிரிந்தது. அதினாலே கற்பாறையை அடிக்கும்போது அது பிளந்து நல்ல தண்ணீர் புறப்பட்டுவந்தது. அந்தக் கோலினாலே இஸ்ரவேல் ஜனங்களை மீட்டுக் கொண்டார். அந்தக் கோலினாலே அவர்களை வனாந்தரத்தில் நடத்தினார். அந்தக் கோலினாலே அநேக அற்புத அதிசயங்களையும் செய்தார். ஏன்? அதிலே தேவவல்லமை இருந்ததினாலே அல்லவா? ஒரு துரை இருந்தார். அவர் இங்கிலீஷ் சேனையில் ஒரு தளகர்த்தன். அவர் சீனதேசத்துக்குப் போனார். அங்கே பெரிய சண்டை நேரிட்டது. பெரிய யுத்தங்களும் நடந்தது. அவர் ஒரு பட்சத்தில் தலைவராயிருந்தார். யுத்தம் நடக்கும்போது யுத்தவீரருக்கு முன்னாலேபோய் அவர்களுக்கு வழிகாட்டி அவர்களைத் தைரியத்தோடு நடத்துவாராம். அந்த யுத்தத்திலும் அவர் செலித்துப்

போட்டார். ஆனாலும் அவர் கையில் பட்டயமுமில்லை, துப்பாக்கியுமில்லை. ஒரு கைக்கோலை மாத்திரம் எடுத்துக்கொண்டு போவாராம். எதிராளிகள் அவரைச் சுடும்படி துப்பாக்கிகளையும் பீரங்கிகளையும் பிரயோகித்தாலும் அவர் ஒன்றுக்கும் பயப்படாமல் தன் கோலை மாத்திரம் பிடித்துக்கொண்டு அதை வீசி தன் ஆட்களை உற்சாகப்படுத்தி எப்போதும் ஜெயம்பெற்றார். அதினாலே அந்தச் சேனைக்காரருக்குப் பயமுண்டாயிற்று. அந்தக் கோலில் ஏதாவது விசேஷம்—பெலன்—வல்லமை இருக்கவேண்டும் என்று திகில் அடைந்து அவருக்கு அடங்கிப்போனார்களாம். ஆனால் சொல்லவேண்டுமென்றால் அவரைக் காப்பாற்றிவந்தது தேவனுடைய கிருபையேயல்லாது அந்தக் கோலின் பெலனல்ல.

நமக்கும் ஓர் பலத்த கோல் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏசா. 11. 4 காண்க. "பூமியை தமது வாக்கின் கோலால் அடித்து." தேவனுடைய வசனம் ஒரு கோலாயிருக்கிறதாம். அதைக்கொண்டு ஆச்சரியமான கிரியைகளை அவர் செய்கிறார். அதினாலே நாமும் ஜெயம் பெறலாம். மோட்சபாதையில் நாம் நடக்கத்தக்கதாக—நமக்கு ஊன்றுகோல் இது—கெட்ட நாய் கடிக்காதபடி என் கைக்கோலை நான் காட்டுகிறது போல பிசாசானவன் நம்மைக் கெடுத்துப்போடவந்தால் அவனைப் பயப்படுத்தித் துரத்திவிட இந்த வேதக்கோலை நாம் காட்டவேண்டும். பெரிய காரியங்களைச்செய்யும் ஜர்மனிதேசத்தில் ஓர் சிறுபையன், ஆறு வயசுப் பையன். வேதத்திலிருந்து இயேசுவின் அன்பை எடுத்து அவனுக்குக் காட்டினார்கள். அவன் மனதில் பட்டது, குணப்பட்டான். அதுமுதல் கிறிஸ்துநாதருடைய பிள்ளையாக வளர்ந்தான். வாலிபனாகி ஜெபக்கூட்டங்களை நடத்தினான். ஒரு நல்ல சபையை ஸ்தாபித்தான். அவன் ஸ்தாபித்த அந்தச் சிறுசபை அதிகமாய் விருத்தியடைந்து இப்போது அதிலிருந்து அநேக ஆட்கள் உலகமெங்கும்போய் பற்பல தேசங்களில் சுவிசேஷத்தை அறிவித்துவருகிறார்கள்—பார்த்தீர்களா? அந்தச் சிறுபையனுடைய இருதயத்தில் தேவனுடைய வசனம் கிரியை செய்தது. வேதமாகிய கோலானது அவன் பாவக்குணத்தை அடித்து நொருக்கி அழித்துப் போட்டது. அதினாலே திரளான ஜனங்களுக்கு ஆசீர்வாதமானான். இந்தக் கோலை உறுதியாய் பிடித்துக்கொள்ளுங்கள். வேதவாக்கியங்களை வாசித்துப்பாருங்கள். எனக்குத்தெரிந்த ஒரு சங்கதியைச் சொல்லுகிறேன், வாஸ்தவமாய் நடந்த ஒரு சங்கதி. ஒரு மனுஷன் இருந்தான். நல்ல மனுஷனல்ல, குடிகாரன். ஒருநாள் அவனுக்கு ஒரு தாள் பிரதி (tract) கொடுக்கப்பட்டது. அதை வாசியாமல் தன் சேப்பிலே போட்டுக் கொண்டான். அப்புறம் முன்போல குடித்துக்கொண்டு மயக்கமடைந்து தன்னைக் கொன்றுபோட எத்தனித்தான். ஒரு கத்தியை எடுத்து வீசி தன் குரல்வளையை அறுக்க அவன் இருக்கும்போது, தேவசெயலாய் அவன் சேப்பிலிருந்து அந்தத் தாள் பிரதி விழுந்துவிட்டது. இதென்ன



வென்று எடுத்து வாசித்துப் பார்த்தான். அதில் ஒரு வேதவாக்கியமிருந்தது. "எங்கே போகிறாய்" என்பது. உடனே அவனுக்குப் புத்தி தெளிந்தது. "ஐயோ, இப்படிச் செத்தேன் ஆனால் நரகத்துக்குப் போவேன்" என்று உணர்ந்து கத்தியை எறிந்துவிட்டு முழங்கால்படியிட்டு ஜெபம் பண்ணினான். அது முதல் புதுமனுஷனானான், குடிவெறியை விட்டுவிட்டு நல்ல கிறிஸ்தவனானான். வேதவசனமாகிய கோல் இவன் பெரிய பாவத்தை அழித்து அவனை வசப்படுத்தினது.

II. ஆயக்கோல். அதாவது மேய்ப்பனுடைய கோல். 'உம்முடைய கோலும் உம்முடைய தடியும் என்னைத் தேற்றும்' சங். 23:4. கானான் தேசத்தில் இடையருடைய கோல் வளைவாயிருக்கும். மேய்ப்பன் எங்கே போனாலும் தன் கோலை எடுத்துக்கொண்டு போவான். அவன் அடிக்கடி தன் கோலோடு முன்னாலே போவான். ஆடுகளும் ஆட்டுக்குட்டிகளும் எல்லாம் பின்னாலே போகும். தன் கோலைக்காட்டி ஆடுகளையெல்லாம் அழைத்துக்கொண்டு போவான். அந்தக் கோல் ஆடுகளுக்கெல்லாம் நன்றாய்த்தெரியும்.

ஓநாய் அவைகளைப் பட்சித்துப்போட வந்தால் அந்தக் கோலால் அதை அடிப்பான். ஏதாவது ஆடு அல்லது ஆட்டுக்குட்டி மேய்ப்பனைப் பின் தொடராதபடி காட்டிலே ஓடிப்போகப் பார்த்தால் அந்தக் கோலால் அதைக் கொஞ்சம் சிட்சிக்கவேண்டியும் வரும். அப்புறம் ஒரு விசேஷம். சாயங்காலத்தில் சூரியன் அஸ்தமிக்கும்பொழுது மேய்ப்பனானவன் தன் ஆடுகளை எல்லாம் காட்டிலிருந்து தொழுவத்துக்குக் கூட்டிக்கொண்டுவருவான். இடையில் வந்தவுடனே எல்லாம் வந்துவிட்டதோ ஏதாவது ஒரு ஆட்டுக்குட்டி தவறிப்போய்விட்டதோ என்று அறியும்படிக்கு அவைகளை எல்லாம் எண்ணிப் பார்ப்பான். எப்படி எண்ணிப்பார்க்கிறது? தொழுவத்தின் வாசலில் தன் கோலைக் குறுக்கே வைத்துக்கொள்வான். ஒவ்வொரு ஆடும் ஆட்டுக்குட்டியும் அதின் கீழே போகவேண்டும். அப்படி ஆடுகள் கீழே போகையில் இடையன் 1, 2, 3 .... என்று எண்ணுவான்.

லேவி. 27:32ல் அப்படியே வாசிக்கிறோம். 'கோலின் கீழ்ப்பட்ட ஆடு மாடுகளிலே பத்தில் ஒரு பங்காகிறதெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தமானது'

ரோமாபுரியில் ஓர் படமுண்டு. அதிலே நல்ல மேய்ப்பன் ஒருவர் தன் கோலைப் பிடித்துக்கொண்டு அங்கங்கே வனாந்தரத்தில் சிதறியிருக்கிற ஆடுகளையும் ஆட்டுக்குட்டிகளையும் அழைக்கிறார். தொழுவத்துக்கு வரும்படி அவைகளை எல்லாம் பேர் சொல்லி அழைக்கிறார். அவைகளில் ஒரு ஆடானது அவர் சத்தத்தைக்கேட்டு அவரை அன்போடு பார்த்து அவர் பிறகாலே நடக்க எத்தனிக்கிறது. இன்னொரு ஆட்டுக்குட்டி நல்ல மேய்ப்பன் பிறகாலே, உடனே புறப்பட்டு ஓடுகிறது. இன்னும் ஒரு ஆடு அவ

ருடைய சத்தத்தைக் கவனியாமல் காட்டிலே முளைக்கிற நெரிஞ்சி முள் இலைகளைத் தின்று மேய்ந்துகொண்டிருக்கிறது. தனக்கு நல்ல மேய்ச்சல் வேண்டாம், கிடையின் சுகமும் வேண்டாம் என்பதுபோல தன் இஷ்டப்படி போகிறது. பிரியமான பிள்ளைகளே! இயேசுநாதர் நல்ல மேய்ப்பனை தம்முடைய கோலைப் பிடித்துக்கொண்டு உங்களை அழைக்கிறார். அவருக்குப் பின்செல்லும் அவருடைய ஆட்டுக்குட்டிகளாயிருக்கிறீர்களா? அல்லது அந்தப் பக்தியீன ஆட்டைப்போல பாவக்காட்டிலே அலைந்து திரிந்து மோசமான நிலைமையிலிருக்கிறீர்களா? இந்த விசேஷித்த நாளில் பின்தொடர்ந்துவரும்படி உங்களை அழைக்கிறார். சங்கீதக்காரன் எப்படிப் பாடுகிறான். "நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்" என்கிறான். அவன் கருத்தென்ன? முன் சொன்னேனே. சாயந்தர வேளையில் ஆடுகள் எல்லாம் கிடைக்கு வரும்போது மேய்ப்பனானவன் தன் கோலின்கீழ் அவைகளைப் போகும்படி செய்து எண்ணிப்பார்ப்பான். இந்த ஆடு வந்துவிட்டது, அந்த ஆடு வந்துவிட்டது என்று அறிந்து சந்தோஷப்படுவான். ஆ! இங்கே பக்திமான் சொல்லுகிறான். 'நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் ஒன்றுக்கும் பயப்படேன்.' ஏன்! ஏனென்றால் சாயந்தரமாயிற்று. பரம கிடைக்குப் போகிறேன். மோட்ச தொழுவத்தில் இப்போது பிரவேசிக்கிறேன். மேய்ப்பனுடைய கோலின்கீழ் இப்போது போகிறேன். ஆகையால் அவருடைய கோலும் அவருடைய தடியும் என்னைத் தேற்றுகிறது என்று சொல்லுகிறான். நல்ல மேய்ப்பனுடைய ஆடுகளின் சாவு என்னவென்றால் அவருடைய கோலின்கீழே சென்று மோட்சத்தில் சேருகிறதாம்.

சீமை தேசத்தில் ஒரு பையன் சாகிறான். ஒரு பெரிய பிரபுவின் மகன். அவன் பிழைத்துப் பெரிய மனுஷனானால் பிரபுவாயிருப்பான். அவனுக்கு ஆஸ்தியும் இருக்கும். கிரீடமும் கிடைக்கும். அவனும் சாகிறான். பந்துக்கள் எல்லாரும் அழுதுகொண்டு நிற்கிறார்கள். 'ஐயையோ, நீ கிரீடம் தரிக்கமாட்டாமல் செத்துப்போகிறாயே என்று புலம்புகிறார்கள். அவனோ நல்ல கிறிஸ்தவன்; இயேசுநாதரின் ஆட்டுக்குட்டி; இந்தச்சமயத்தில் மேய்ப்பனுடைய கோலின்கீழே மோட்சத்துக்குப் போகிறான். சொல்லுகிறான். 'இந்தக் கிரீடம் எனக்கு வேண்டாம். அங்கே ஜீவகிரீடத்தைப் போட்டுக்கொள்வேன்.' என்கிறான். அந்தச் சமயத்தில் மேய்ப்பனுடைய கோல் அவனைத் தேற்றினது.

III. செங்கோல். 'உமது ராஜ்யத்தின் செங்கோல் நீதியின் செங்கோலாயிருக்கிறது.' சங். 45: 6. தேசங்களை ஆளும் ராஜாக்களுடைய கையில் சில விசேஷித்த சமயங்களில் ஒரு கோல் இருக்கும். அதற்கு செங்கோல் என்று பெயர். அவர்களுடைய மேன்மைக்கும் அதிகாரத்துக்கும் அடையாளம். எஸ்தருடைய சரித்திரம் உங்களுக்குத்



தெரிந்திருக்கலாம். ஆகாஸ்வேரு ராஜாவின் சமுகத்தில் அவர் உத்தரவில்லாமல் ஒருவரும் வரக்கூடாதாம். புருஷனானாலும் சரி, ஸ்திரீயானாலும் சரி அரசனுடைய உத்தரவின்றியில் யாராவது ராஜ சந்நிதானத்தில் வந்தால் அவர்கள் சாகவேண்டுமாம். அவனும் தன்னுடைய இரக்கத்தைக் காட்டும்படி அவர்களுக்கு ராஜா தன் செங்கோலை நீட்டினால் அவர்கள் சாக வேண்டாம். பிழைக்கலாம். எஸ்தர் என்னும் ராஜாத்தி தன்னுடைய ஜனங்களாகிய யூத ஜாதியாரைக் காப்பாற்றும்படி அவர்களுக்காக சிபாரிசு செய்ய ராஜாவின் உத்தரவில்லாமல் அவருடைய சன்னிதானத்தில் போகத் துணிந்தாள். பயத்தோடும் நடுக்கத்தோடும் போனாள். 'நான் செத்தாலும் சாவேன்' என்று பயந்து அங்கே போனாள். ராஜா தன் சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிறார். எஸ்தர் முற்றத்தில் நிற்கிறதைப் பார்க்கிறார். கோபப்படுவாரோ? கிருபை செய்வாரோ! அதோ! அவள்பேரில் பிரியம் வைத்து அவள் சாகாதபடிக்குத் தன் செங்கோலை அவளுக்கு நேராக நீட்டுகிறார். அவளையும் காப்பாற்றினார் யூதரெல்லாரையும் உயிரோடு காப்பாற்றினார். அந்தத் தங்கச் செங்கோல் நீட்டப்பட்டதினாலே எவ்வளவு நன்மை உண்டாயிற்று. அப்படிப்போல தேவன் ஒரு பெரிய ராஜா. ராஜாதி ராஜா. உத்தரவில்லாமல் ஒருவரும் அவர் சந்நிதானத்தில் வரக்கூடாது. 'பரிசுத்தமில்லாமல் ஒருவரும் தேவனைத் தரிசிப்பதில்லை'. நாமோ பாவிகள் பாத்திரவான்களல்ல என்றாலும் இயேசுவின் மூலமாய் நாம் வரலாம். அதோ! அவர் கையில் ஒரு செங்கோல் இருக்கிறது. அது தங்கச் செங்கோல். அதற்கு நீதியின் செங்கோல் என்று பேர். 'நான் ஒரு சிறு பிள்ளை; எனக்கு நீட்டுவாரோ' என்று நினைக்கவேண்டாம். 'என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை' என்கிறார். எனக்குச் செங்கோலை நீட்டினார். நான் இரக்கம் பெற்றேன். ரக்ஷிக்கப்பட்டேன் என்று நீங்கள் சொல்லக்கூடுமோ?

அமெரிக்கா தேசத்தில் ஒரு போர்ச்சேவகன் இருந்தான். வாலிபன். யுத்தவீரர் எல்லாரும் பாளயமிறங்கும்போது துப்பாக்கியைப் பிடித்து ராத்திரி எல்லாம் காவல் காக்க அவனுக்கு முறை வந்தது. அவனோ அதிக இளைப்பினாலே நித்திரை மயக்கமடைந்து தூங்கிவிட்டான். இது அந்த சேனைத் தலைவருக்குத் தெரிந்துபோயிற்று. ஆகையால் அந்த வாலிபன் சாகவேண்டும். துப்பாக்கியினால் அவனைச் சுடவேண்டுமென்று உத்தரவு கொடுத்தார். அவன் இனத்தார் இதைக் கேள்விப்பட்டவுடனே அந்தத் தேசத்தின் கவர்னர் (Governer) யிடத்தில் ஓடி மன்னிப்பைக் கெஞ்சிக் கேட்டார்கள். அவர் இரக்கம் என்னும் செங்கோலை நீட்டினார். அந்த வாலிபன் செய்த குற்றத்தை மன்னித்தார். அதினாலே அந்த வாலிபனுக்குண்டான நன்றியறிதல் கொஞ்சமல்ல. Governerருடைய படத்தை வாங்கி தன் சேப்பிலே அதை எப்போதும் வைத்துக்கொண்டான். அடிக்கடி அதை எடுத்துப்பார்த்து சந்தோஷப்பட்டான். தன் வேலையை ஜாக்

கிரமையோடு செய்துவந்தான். யுத்தத்துக்குப்போய் தைரியத்தோடு நின்றான். அங்கே ஒரு குண்டினாலே அடிபட்டு செத்துப்போனான். அவன் பிரேதத்தை அவர்கள் எடுத்துச் சோதித்துப் பார்க்கும்போது அந்த Governorருடைய படம் அதோடு அகப்பட்டது. இயேசு மகாராஜா தம்முடைய செங்கோலை நீட்டி நம்முடைய பாவங்களை மன்னித்தாரானால் நம்முடைய நன்றியறிதல் எங்கே? அவருடைய படம்—சாயல் நம்முடைய இருதயத்தில் காணப்படுகிறதா?

IV. சிட்சைக்கோல் அதாவது பிரம்பு. 'பிள்ளையின் நெஞ்சில் மதியீனம் ஒட்டியிருக்கும்; அதைத் தண்டனையின் பிரம்பு அவனை விட்டு அகற்றும்' நீதி. 22: 15. பிரம்பு உங்கள் எல்லாருக்கும் தெரிந்த கோல். பெற்றோர், வாத்திமார் சமயா சமயங்களில் பிள்ளைகளுக்குப் பிரம்புபோட வேண்டியதாய்வரும். நான் சிறுபிள்ளையாயிருக்கும்போது என் தகப்பனுக்கு இப்படிப்பட்ட பிரம்பு இருந்தது. அடிக்கடி என்னை அடித்துமிருக்கிறார். பிள்ளையின் நெஞ்சில் என்ன ஒட்டியிருக்கும்? மதியீனம், புத்தியீனம். அது எதினாலே போய்விடும்? பிரம்பினாலே. கனம். கார் ஐயரவர்கள் சிறு மகன் உங்களில் அநேகருக்குத் தெரியும். நாலு வயசுப்பையன்; கூடியமட்டும் நல்ல பிள்ளை ஆனாலும் சில வேளை கீழ்ப்படியாமையைக் காட்டுவான். அப்போது அம்மாளவர்கள் அவனைத் தனித்துக்கூப்பிட்டு கொஞ்சம் சிட்சிப்பார்கள், கொஞ்சம் அடிப்பார்கள். காரியம் அந்த சிறு பிள்ளைக்கு நன்றாய்த் தெரியும். அவன் தப்பிதம் செய்தால் பின்பு தாயாரிடம் வந்து அதை ஒப்புக்கொண்டு 'என்னை அடிக்கவேண்டும்' என்று தானாய்க் கேட்பான் பாருங்கள். சிட்சையினாலே அவன் மனசில் ஒட்டியிருந்த புத்தியீனம் வரவர நீங்கிப்போயிற்று.

பரமபிதாவும் தம்முடைய பிள்ளைகளை சிட்சிக்கிறதுண்டு. நமக்கு நன்மை உண்டாக அப்படிச் செய்கிறார். 'கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்'. எபி. 12: 6. ஆம்! தேவனுக்கும் பிரம்பு உண்டு. நமக்கு வியாதி வந்தால் நம்முடைய பாவத்தை உணர்ந்து 'நான் சுகப்பட்டால் நல்ல பிள்ளையாய் நடப்பேன். இனி கெட்ட காரியங்களைச் செய்யமாட்டேன்' என்று நாம் சொல்லுகிறதில்லையா? நான் ஒரு மனுஷனை அறிவேன். அவன் ஒரு காலத்தில் பக்திமான் அல்ல. மனம்போன போக்கிலே நடந்துவந்தான். அவனுக்கு ஒரு மகனிருந்தான். ஒரு நாள் அந்தச் சிறுபையன் தெருவிலே விளையாடிக்கொண்டிருக்கும்போது திடீரென்று குதிரைவண்டி வெகு ஜல்தியாக அந்த வழியே வந்தது. அந்தச்சிறு பிள்ளை பயத்தினால் விழுந்து குதிரையால் மிதியுண்டு செத்துப்போனது. அப்போது தகப்பனுக்கு இருந்த துக்கம் துயரம் எவ்வளவு! ஆ! அவன் நல்ல மனுஷனல்லாததால் தேவன் அவனுக்குத் துக்கத்தை அனுப்பி பிரம்பினாலே அடித்தார். அவனுக்கு நல்ல உணர்வு வந்தது. அதுமுதல் நல்ல



ஜீவிக்கலானான். அவனுக்கு ஒரு சகோதரன் உண்டு. கூடப்பிறந்த சகோதரன் தம்பி. அவனும் பக்திமானல்ல. அண்ணன் குணப்பட்டாலும் அவன் சீர்ப்படவில்லை. ஆகையால் அண்ணனைத் தண்டித்த தேவன் தம்பியையும் சிட்சிக்க நேரிட்டது. அவனுடைய சிறுமகன் வியாதிப்பட்டு செத்துப்போனது பாருங்கள். தேவன் தம்முடைய பிரம்பை எடுத்து அவனையும் சிட்சித்தார். அவனும் அதினாலே குணப்பட்டான். இரண்டு பேரும் என் சிநேகிதர்கள்.

REV. T. WALKER.

## செம்மையானவைகளைப் பேசு

ஏசாயா 33: 15.

பேச்சு தேவனளித்த ஓர் பாக்கியம். பேசும் வல்லமை எத்தனை விசேஷம். சோனைமாரியாய்ப் பெய்யும் மழைத்திரள் செம்மையாய்ப் புரண்டோடும்போது எத்தனை பயிர்வகைகளைச் செழிப்பாக்குகிறது. வறண்ட வெளிகள் பூரித்து மகிழ்கிறது. ஆனால் செம்மை தப்பி அணைகடந்தோடும் வெள்ளம் எத்தனை அனந்த நாசம் வருவிக்கிறது. செம்மையாய்ப் பேசப்படும் வார்த்தைகள் மனம் வாடி நிற்கும் எத்தனைபேரை சந்தோஷிப்பிக்கிறது. வரைகடந்த வார்த்தைகளால் மனம் வருந்தி மாளும் எத்தனை பேருளர்; தன் வாயை அலப்புகிறவன் மூடன். மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும். (நீதி 18: 21). உன் வாயின் வார்த்தைகளால் நீதிமான் அல்லது குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய். மத். 12: 37. ஒருவன் தன் வாயை அடக்காமல் தன் இருதயத்தை வஞ்சித்து தன்னை தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவன் தேவபக்தி வீணாயிருக்கும். யாக். 1: 26 என்பது சத்திய வசனம்.

1. எவை செம்மையான பேச்சு அல்ல? i. பிறருடைய குற்றங்களையே குறை கூறி எடுத்துப்பேசும் பேச்சு செம்மையான பேச்சு அல்ல ரோமர். 2: 1. மத்; 7. 1, 2. நமது தமிழ் நாட்டுச்சபையின் ஆவிக்குரிய ஜீவனை* அரித்துத் தின்னும் பச்சைப்புழுக்கள் இவைகளே. நேர்த்தியாய்ப் படர்ந்திருக்கும் ஓர் அவரைப்பந்தலில் அற்பமாய்த் தோன்றி அடர்ந்து மொய்த்துக்கொண்ட நசுவணிகள் அதின் எல்லாப் பலன்களையும் கெடுத்து விடுவதுபோல் பிறர் குறைகளையே தூற்றும் சிறு சிறு வார்த்தைகள் நமது சபையின் அலங்காரத்தைப் பட்சிக்கிறது. படிப்பாளிகளின் கூட்டங்கள் பக்தியின் சம்பாஷணைகளிலல்ல, மற்றவர்களைப்பற்றிப் பேசும் பகடி சம்பாஷணைகளாக நிறைந்திருக்கின்றன. பட்டணக்கரைச் சபைகள் பக்கத்துக் கிராமத்துச் சபைகளுக்கு பக்திப் பேச்சை பரப்ப அல்ல, பற்பலரை அவதூறுசெய்யும் துர்ப்பழக்கமானதைப் பரப்பிவிட உறைவிடமாயிருக்கிறது. ஆலயத்தில் போய் ஊக்கமான பிரசங்கங்களைக் கேட்கிறார்

கள். விழுந்த ஞான விதை முளைக்காமற்போக களைகளை விதைக்கப் பல கூலியாட்களை சத்துரு வைத்திருக்கிறான். இப்படிப் பிறரைக் குற்றப்படுத்துதல் கடைசிக்காலத்தின் அறிகுறியானது. ii தீமோ. 3: 2. எந்த மனுஷனும் பாவிதான், எந்த மனுஷனிடத்திலும் பலவீனமுண்டு. ஆனால் ஓர் மனுஷனுடைய நற்குணங்களை வியந்து பேசுவதை விட்டுவிட்டு அவனுடைய துர்க்குணங்களையே தூக்கியலைந்து திரிவது சர்க்கார் முனிசிபல் வண்டிகள் செய்யும் வேலை. அவ்வண்டிக்காரராவது ஒவ்வொரு வீட்டின் அசுத்தங்களையும் வீட்டுப் புறவாயில் வழியே எடுத்து ஊருக்கு வெளியே கொண்டுபோய் கண்ணுக்குத் தெரியாமல் மூடிப்போடுகிறார்கள். இந்தக் குறை தூக்கும் வண்டிக்காரரோ ஒவ்வொரு மனுஷனிடமும் காணப்படும் குற்றங்களை விரித்துக்காட்டியலைகிறார்கள். இதினால் கிறிஸ்துவின் நாமம் புறஜாதிகளுக்குள்ளே தூஷிக்கப்படுகிறது.

ஐயோ பாவம்! சங்கரிக்கும் சகல வார்த்தைகளையும் விரும்பும் கபடமுள்ள இந்த நாவுக்காரர், தங்கள் வார்த்தைகளைப் பட்டயத்தைப்போல் கூர்மையாக்கி மறைவுகளில் உத்தமர்மேல் எய்யும் பொருட்டு கசப்பான வார்த்தைகளாகிய தங்கள் அம்புகளை நாணேற்றிக்கொண்டு; வீட்டுக்குவீடு போய், ஐயோ! அந்த ஆளைப்பற்றி இப்படியல்லவோ கேள்விப்பட்டேன். ஐயோ பாவம்! நாம் ஒன்றும் சொல்லக்கூடாது என்று நாடியின்மேல் கை வைத்து வீடுதோறும் சொல்லிவிட்டு, வந்து தான் சாப்பிடுவார்கள். இவ்விதம் பேச்சு தேவசமுகத்தைவிட்டு விலகி இருப்பதற்கோர் அடையாளம். தேவசமுகத்தில் நிலைத்திருக்கவேண்டுமானால் தன் அயலான்மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை எடுக்காமலும் (காது கொடுத்துக் கேளாமலிருக்கவும்) வேண்டும். சங். 15: 1, 3. அந்த ஆள் அடுத்த ஆளைப் பற்றி அவதூறாய்ப்பேசும்போது நீயும் அதற்குடன்பட்டு, ஆவலாய்க் காது கொடுத்து திட்டமாய்ச்சொல், நானும் அப்படித்தான் நினைத்தேன் சாடையாய்ப் பார்க்கும்போது அப்படித்தானிருந்தது என்று விருப்பமாய்க் கேட்க ஆரம்பித்தாயானால் உன் கர்த்தரைவிட்டு விலகிப்போனாயென்பதற்கு இதுவே அடையாளம். ஆனால் அப்படிச் சொல்லாதே, என்று உன் காதை அடைத்துக்கொள்வாயானால் கர்த்தர் உன்னோடிருக்கிறார் நீயும் கர்த்தரில் நிலைத்திருக்கிறாய் என்று அறிந்துகொள். பிறர் குறைகளைக் கூறுகிறவர்களிடத்தில் சாத்தான் குடிகொண்டிருக்கிறான் என்பதற்குச் சந்தேகமில்லை. ஏனென்றால் இரவும் பகலும் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் சாத்தான். (வெளி. 12: 10) கர்த்தருடைய தாசராகிய யோபின்மேலும் யோசுவாவின் மேலும் குற்றஞ்சாட்ட நின்றவன் இவனே. அடுத்தவர்களை எவ்வளவு பேசுகிறாயோ அவ்வளவுக்குச் சாத்தான் உனக்குள்ளிருக்கிறான் என்பது அளவிடுகிறது. அடுத்தவர்கள் குறைகளை எவ்வளவு மூடுகிறாயோ அவ்வளவுக்கு அன்பின் ரட்சகர் உனக்குள்ளிருக்கிறார் என்பதை அறிந்துகொள்.



ஏனென்றால் அன்பு திரளான பாவங்களை மூடும். பிறர் குறைகளை நீ எவ்வளவு மூடுகிறாயோ, அப்பொழுதுதான் சாந்தமுள்ள பரிசுத்தாவியானவர் உனக்குள்ளே இருக்கிறார். நீ மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப்பெற்ற பரிசுத்தாவியை உன் கசப்பு வார்த்தைகளால் துக்கப்படுத்தாதிருப்பாயாக.

II. **செம்மையாய்ப் பேசுவதெவ்விதம்?** துன்மார்க்கன் நமக்கு முன் இருக்குமட்டும் நம்முடைய நாவைக் கடிவாளம்போட்டு அடக்க வேண்டுமென்பதும் நலமானதையும் பேசாமல் அமர்ந்திருக்கவேண்டுமென்பதும் சத்தியமே. அப்படியானால் பேசக்கூடாதா? வீதிகளில் சத்தமிடாமலும் வையப்படும்போது பதில் வையாமலும் வாய் மூடிநின்ற நமது மகிமையின் கர்த்தரைப்பற்றி ஒருதரம் அவரைப் பிடிக்கப்போன சேவகர்கள், அவர் பேசினதுபோல் ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை. என்றார்கள். பரி. பவுலைப்பற்றி இந்த வாயாடி என்ன பேசப்போகிறான் என்று சொல்லத்தக்கதாக அவரும் பேசினார். இவர்கள் பேச்சுகள் சுவிசேஷங்களாகவும் நிருபங்களாகவும் நித்தியமட்டும் நிற்கிறது. இவர்கள் யாவரும் செம்மையானவைகளைப் பேசினார்கள். முற்கால தேவ புத்திரரின் பாஷை நடை எவ்விதமாயிருந்தது என்று கவனித்து அவர்கள் சென்ற பாதையில் நாமும் செல்வோமாக!

1. **தேவனுடைய மகத்துவங்களைக் குறித்துப் பேசினார்கள்.** அப். 2: 11. இவர்கள் தேவனுடைய மகத்துவங்களைக்குறித்துப் பேசக் கேட்கிறோமே என்று சொன்னார்கள். இக்காலத்துச் சபைகளிலும் சங்கங்களிலும் அங்கங்களிலும் குடும்பங்களிலும் நுழைந்து பார்த்தால் அவர் இப்படி, இவர் அப்படி, என்று பலவாறாய் தேவனுடைய மகத்துவங்களைத் தூஷிக்கக் கேட்கிற சத்தமல்லவா நமது காதைத் துளைக்கிறது. நாராசத்தைக் காய்ச்சி நடுச் செவியில் விட்டதுபோலிருக்கிறதே. 2 பேது. 2: 10. பரிசுத்த ஆவியே எங்கள் நாட்டுச் சபையைச் சுத்திகரியும் சுவாமி.

2. **தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பேசினார்கள்.** (அப். 1: 3). இதுவே நமது ரட்சகர் அன்பருடன் செய்த இன்ப சம்பாஷணை. இதுவே துக்கித்தோரைத் தேற்றத்தகுந்த வசனம். இதுவே தற்கால சபையைத் தட்டியெழுப்பத் தகுந்த மொழி. இக்கால சுவிசேஷப் பணிமுயற்சியை சமமந்தயாய்ப்பேச ஏற்ற பேச்சு இதுவே. பிறர் குற்றத்தை எடுத்துப் பேசாமல் பிறர் ரட்சிப்பைப்பற்றிப் பேசுவோமாக. பிறர் இடறத்தக்க பேச்சுகளைவிட்டு, எழுப்புதலையடையத்தக்கப் பேச்சுகளை பேசுவோமாக. பிறர் ஊக்கத்தைக் குறைக்க அல்ல, பிறரை உற்சாகப்படுத்தத்தக்க வார்த்தைகளைப் பேசுவோமாக.

3. **கிறிஸ்துவைக் குறித்துப் பேசினார்கள்.** கிறிஸ்துவை சிலுவையிலறையப்பட்ட அவரைக் குறித்தே பேசினார்கள். பாடித் துதித்தார்கள்.

என்வாய் உமது துதியினாலும், நாள்தோறும் உமது மகத்துவத்தினாலும் நிறைந்திருப்பதாக என்பது இஸ்ரவேலின் இன்ப கவிஞனின் சங்கீத வசனம். சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவையே பேசுவேனென்பது பரிபவுலின் முழுத் தீர்மானம். இதுவே செம்மையான பேச்சு. எம்மாவூருக்குப்போன இரண்டு சீஷர்களின் சம்பாஷணைகளும் இதுவே. கிறிஸ்துவே நமது பேச்சையும், பிரசங்கத்தையும், கடிதங்களையும் நிறப்புவாராக. (லூக். 24: 14) இப்படியே நமது வழிப்பாதையின் பேச்சும் சம்பாஷணையுமிருப்பதாக.

4. இந்த நவீனமான கொடிய காலத்தில் இன்பமான பிரசங்கம் செய்ய ஆரம்பித்திருக்கும் பலர் வாயில், கிறிஸ்து என்ற உப்புப்போடப்படவேயில்லை. ஆனால் பரிசுத்த பவுல் ரோமச் ஜெயிலிலிருந்து, பிலிப்பியருக்கு எழுதிய கடிதத்தில் கிறிஸ்து, கிறிஸ்து என்று 36 தரம் கிறிஸ்துவை உயர்த்துகிறார். என் நேச கர்த்தராகிய கிறிஸ்துவின் இன்பமுள்ள நாமம் என்ற ஊற்றுண்ட தயிலம் உங்கள் மீது வீசுவதாக! உங்கள் நாவின் கீழ் கிறிஸ்து என்ற திருவசனமாகிய களங்கமில்லாத, பாலும் தேனும் வழிந்தொழுகுவதாக. சர்ப்பத்துக்கொப்பான விஷம் உங்கள் உதடுகளிலிருந்து அநேகரைத் தீண்டாதபடி, உங்கள் உதடுகள் கர்த்தருடைய திருவசனத்தினால் நிரம்பியிருப்பதாக. ஆமென்.

## வேதாகமப் பாடமுறை. 20-ம் பாடம்

### 2 ராஜாக்கள்

இவ்வாகமம் இஸ்ரவேல் ஜாதியாரைப்பற்றிய சரித்திரத்தின் தொடர்ச்சியாயிருக்கிறது. யோசபாத்தின் மரணமுதல் எருசலேமின் அழிவு வரையுமுள்ள சரித்திரமடங்கியது. யூதா, இஸ்ரவேல் ராஜ்யங்கள் கவிழ்க்கப்பட்டது வரையும், பற்பல ராஜாக்களின் கீழ், அந்த ஜாதியாரின் சரித்திர வரலாற்றை இப்புஸ்தகம் கூறுகிறது.

**பிரிவுகள்.** இவ்வாகமம் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

i எலியாவும் எலிசாவும் 1—9: 10.

1. எலியா. 1—2: 11.

(a) அகசியாவுக்கு அனுப்பிய செய்தி. 1: 1—18. இப்புஸ்தக சரித்திரங்களின் ஆரம்பத்தில் ஆகாபுடைய குமாரனாகிய அகசியாவின் நடபடி அடங்கியிருக்கிறது. இந்த அகசியா தன் அரண்மனையின் மேல்மெத்தையிலிருந்து விழுந்து, கொடிய காயப்பட்டான். அச்சமயத்தில் அவன் தான் சுகமடைவேனோ என்று விசாரிக்கும்படி எக்ரோனிலுள்ள பாகால் சேபூப் என்னும் விக்கிரகத்தினிடத்திற்கு ஆட்களை அனுப்பினான். மறைவாய்



வசித்து வந்த எலியா திடீரென்று அந்த ஆட்களுக்கு எதிர்ப்பட்டு, ராஜா சுகமடையமாட்டான் என்று சொல்லச்சொன்னான். அதன்பேரில் அகசியா அவனைக் கொல்லும்படி ஐம்பது சேவகரையும் ஒரு தலைவனையும் அனுப்பினான். வானத்திலிருந்து உண்டான அக்கினி அவர்களைப் பட்சித்தது. மற்றொரு கூட்டத்தாரும் அதே கதியை அடைந்தார்கள். ராஜா வேறெந்த விதத்திலாவது தீர்க்கதரிசியின் செய்திகளை ஏற்றுக்கொள்ள மனமில்லாதிருந்தான்.

(b) எலியா எடுத்துக்கொள்ளப்பட்டது. 2: 1—11. கடைசியாக எலிசா சந்தித்த இடங்களைப் பார். கில்கால் (2: 1), பெத்தேல் (2: 2), எரிகோ (2: 4), யோர்தான் (2: 7).

எலியா எடுத்துக்கொள்ளப்பட்ட முறைக்கும் அவன் ஜீவிய சரிதைக்கும் ஒற்றுமையிருந்தது. சுழல்காற்றின் மனிதன் அச்சுழல் காற்றிலேயே பரலோகத்திற்கு ஏறிப்போனது ஏற்றதே. நமது ரட்சகரின் பரமேறுதலோடு ஒப்பிடுக. (அப். 1).

2. எலிசா 2. 12—9: 3.

(a) அவனுடைய அற்புதங்கள். அவை யாதெனில்:—

யோர்தான் பிரிக்கப்பட்டது. 2: 14.
தண்ணீர் ஆரோக்கியமானது. 2: 21.
காட்டிலிருந்து கரடிகள் வந்து பீறிப்போட்டது. 2: 24.
ராஜாக்களுக்குத் தண்ணீர் புறப்படச்செய்தல் 3: 20.
விதவைக்கு எண்ணெய் பெருகச்செய்தல். 4: 1—16.
பிள்ளை கொடுத்தல். 4: 16—17.
உயிரோடெழுப்புதல். 4: 35.
பானையின் தோஷம் நீக்கினது. 4: 41.
அப்பம் பெருகினது. 4: 43.
நாகமான் சுகமாக்கப்பட்டது. 5: 10.
கேயாசி தண்டிக்கப்பட்டது. 5: 27.
இரும்பு மிதந்தது. 6: 6.
வேலைக்காரனின் கண் திறக்கப்பட்டது. 6: 17.
குருட்டாட்டம் பிடிக்கச்செய்தல். 6: 18.
திரும்பப் பார்வை அளித்தல். 6: 20.
எலும்புகளினால் உயிரடைதல். 13: 21.

அனல்கொண்ட தீர்க்கதரிசியின் மேலிருந்து விழுந்த சால்வையை எலிசா எடுத்துக்கொண்டது அவனுடைய ஆவியின் வரத்தை இரட்டிப்பாய்ப் பெற்றுக்கொண்டதற்கு அடையாளமாயிருந்தது. "எலிசா அநேக விஷயங்களில் தன் எஜமானுக்கு எதிரிடையாயிருந்தான். தோற்றத்

764



தில் அவன் அதிக அமைதியும், சாந்தமும், உருக்கமுமுடையவனுமிருந்தான்'' என்று 'கெய்க்கீ' எனும் ஒருவர் சொல்லுகிறார். ஆவிக்குரிய விஷயமாய் இருவரும் ஒருவருக்கொருவர் மிகுந்த ஒற்றுமையுடையவர்களாயிருந்தார்கள். எலிசா 29 தரம் 'தேவனுடைய மனிதன்' என்று அழைக்கப்படுகிறான்.

எலியாவுக்கும் எலிசாவுக்குமுள்ள வேற்றுமை:

| எலியா | எலிசா |
| --- | --- |
| 1. முன்னடையாளமான தீர்க்கதரிசி. | அற்புதங்களைச் செய்கிறவர். |
| 2. நீண்ட சுருள் முடியுள்ளவர். | மொட்டைத் தலையுள்ளவர். |
| 3. வனாந்தரவாசி. | நகரவாசி. |

(b) எலிசாவின் மரணம்:—

பதின்மூன்றும் அதிகாரத்தில் அவனுடைய மரண சம்பவம் அடங்கியிருக்கிறது. மரிக்கும்போது எண்பது வயதுள்ள வயோதிபனாயிருந்திருக்கலாம்? சமாரியாவில் மரணமடைந்தான். எலிசா பெரிய காரியங்களைச் செய்தபோதிலும், மரணமடைந்தபோது சாதாரணமான ஒரு மனுஷனைப் போல அடக்கஞ்செய்யப்பட்டான். (13: 20). கேயாசி அபாத்திரனாய்ப் போனபடியால் (5: 27) அவனுடைய சால்வையை எடுக்க ஒருவனுமிருந்ததில்லை. இவன் காலத்திலிருந்த தீர்க்கதரிசிகள் யாரெனில்:— கீர்த்திப் பிரஸ்தாபம் அடையாத 'தேவனுடைய மனுஷன்' ஆகிய அகியா, ஆமோஸ், ஓசியா, யோனா என்பவர்களே. அவர்களுடைய வார்த்தைகளுக்கு ஜனங்கள் செவிகொடாதே போனபடியால், கர்த்தர் தாம் சொன்னபடியே இஸ்ரவேலரை தமது சமுகத்தினின்று நீக்கினார். (இன்னும் வரும்)

## சந்தாவரவு—1915.

| | | | |
| --- | --- | --- | --- |
| Mr. M. P. Sivaram, Jalarpet | 0 | 14 | 0 |
| " Y. Swamikan, Sivakasi | 1 | 0 | 0 |
| " J. S. Pakkianathen, Panruti | 0 | 7 | 0 |
| Rev. N. David, Ramkote | 0 | 7 | 0 |
| Miss. S. Monesamy, Coimbatore | 0 | 7 | 0 |
| Mr. A. Yesuadiam, Rangoon | 2 | 0 | 0 |
| Rev. M. Gnanasigamoni, Malkamagiri | 0 | 14 | 0 |
| Mr. S. James David, Kotiakalle | 0 | 7 | 0 |
| Rev. W. S. Sutherland, Chingleput | 8 | 0 | 0 |
| Mr. S. Jeevanantham, Nilkota | 1 | 10 | 0 |
| Mr A. R. Gnanamuthu, Gonekelle | 0 | 7 | 0 |
| " P. Abraham, Koselanda | 2 | 4 | 0 |
| " Arumanayagam, Irugangudi | 0 | 14 | 0 |
| " S. David, Middleton | 0 | 7 | 0 |
| " Sargunam J. Solomon, Rangoon | 0 | 7 | 0 |
| Miss Daniels, Ooty | 7 | 2 | 0 |
| Mr. Jonatham David, Blind School | 0 | 6 | 0 |
| " J.D. Sathianathan, Badulla | 0 | 14 | 0 |
| Rev. C. N. Ramasamy, Mount Zion | 7 | 2 | 0 |

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Chirstian Brotherhood Association, Tinnevelly.

23 FEB 1917

October 1916 Registered No. M. 163

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." யோவான் 7: 38

Vol. XVII அக்டோபர் 1916

## 'பேழைக்குள் பிரவேசியுங்கள்' ஆதி. 7: 1.

பூமியில் மனுஷர் பெருகத் தொடங்கினார்கள். அவர்களுடைய அக்கிரமமும் கூடப்பெருகிற்று. சிருஷ்டிகருக்கு இது விசனமாயிருந்தது. அவர்களை அழிப்பது எவ்வளவேனும் அவருக்குப் பிரியமில்லை. அவர்கள் மனந்திரும்பிப் பிழைப்பதையே விரும்பினார். அதற்காகப் பிரயாசப்பட்டார். அவருடைய பக்தனும் பிரசங்கித்தான். ஆவியானவர் வெகுவாய்ப் போராடினார். யாதொரு மாறுதலையுங் காணோம். தேவ கோபத்திற்காளானார்கள். ஜலப்பிரளயம் அவர்களை அழித்தது. தேவ பக்தன் நோவா கிருபை பெற்றான். அவனையும் அவன் குடும்பத்தையும் கர்த்தர் இரட்சித்தார். இச்சரித்திரத்தில் ஆயத்தம், அனுபவம், அசட்டை என மூன்று விஷயங்களைக் கவனிக்கலாம்.

1. ஆயத்தம். தேவன் பேழையை ஆயத்தம் செய்தார். பேழை நோவாவின் ஆலோசனையால் உண்டானதல்ல. கொப்பேர் மரத்தைத் தெரிந்துகொண்டது தேவன். அறைகளைச் செய்யச்சொன்னவர் தேவன். உள்ளும் புறம்பும் கீல் பூசச்செய்தவர் தேவன். பேழையை உண்டாக்க வேண்டிய மாதிரியைக் கற்றுக்கொடுத்தவர் தேவன். அதின் அகல உயர நீளம் சொன்னவர் தேவன். ஜன்னல் கதவுமற்ற அறைகளுக்கு இடங் குறித்தவர் தேவன். ஜீவப்பிராணிகளையும் ஆகாரங்களையும் உள்ளே சேர்க்கச்சொன்னவர் தேவன். சகலமும் தேவனாலேயே ஆயிற்று.

சகோதரரே, இரட்சிப்பு மனுஷரால் உண்டானதல்ல. அவன் ஆலோசனையால் உண்டானதல்ல. அவன் பிரயாசத்தால் உண்டானதல்ல. இரட்சிப்பு கர்த்தருடையது. அதை ஆயத்தம் பண்ணினவர் கர்த்தரே. மனுஷனை உண்டாக்குமுன்னே அவன் குடியிருக்கத் தோட்டத்தை ஆயத்தம்

20-10-16
16

பண்ணினார். பட்சிகளை உண்டாக்குமுன்னே அவைகள் தங்கப் புசிக்கக் கனி விருட்சங்களை ஆயத்தம்பண்ணினார். மிருகங்களை உண்டாக்கு முன்னே புல் பூண்டுகளை ஆயத்தம்பண்ணினார். இஸ்ரவேல் சுதந்தரிப்ப தற்கு கானானை ஆயத்தம் பண்ணினார். தாங்கள் நட்டாத தோட்டங்களை யும் வெட்டாத கிணறுகளையும் கட்டாத வீடுகளையும் அனுபவித்தார்கள். என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கொரு பந்தியை ஆயத்தப்படுத் தினீர் என்று சங்கீதக்காரன் பாடினார். விருத்தாப்பிய சிமியோன் ஏசு பாலகனைத் தன் கையிலேந்தி 'தேவரீர் சகல ஜனங்களுக்கு முன்பாக ஆயத்தம் பண்ணின உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது' என்றார்.

சகோதரனே, நீர் உண்டாகுமுன்னே தேவன் கிறிஸ்துவுக்குள் உமது இரட்சிப்பை ஆயத்தம் பண்ணியிருக்கிறார். நீர் யோசிக்குமுன்னே, அதைத் தேடுமுன்னே, அதைப்பற்றி அறியுமுன்னே அது ஆயத்தமாயிருக்கிறது. இது தேவ தயவு! இது தேவ கிருபை! நம்முடைய இரட்சணிய பேழை கர்த்தராகிய இயேசுவே. ஜீவனுள்ள நித்திய பேழை அவரே. எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது வாருங்கள் என்கிறார். நானே வாசல், ஒருவன் என் வழியாய் உட்பிரவேசித்தால் அவன் இரட்சிக்கப்படுவான் என்று சொன்ன வரும் அவரே.

2. அனுபவம். பேழை ஆயத்தமானபோது கர்த்தர் நோவாவிடம் வந்து: நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள் என்றார். உடனே உட்பிரவேசித்து அவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள். நோவாவுக்கும் அவன் குடும்பத்துக்கும் பேழை வாசம் புதிய அனுபவமே. பழையவைகள் ஒழிந்தன, எல்லாம் புதிதாயின. பேழைக்குள் இருக்க விரும்புகிற நோவா பூமிக்குரியவைகளை விட்டுவிடவேண்டும். அவனுடைய நிலங்கள், தோட்டங்கள், ஆடு மாடுகள், வீடு ஆஸ்திகள் யாவையும் விட்டான். இவைகளை விடாமல் பேழைக்குள் பிரவேசிப்பது கூடாது.

சகோதரனே, ஜீவனுள்ள பேழையாகிய கிறிஸ்துவுக்குள் பிரவேசித்தி ருக்கிறீரா? கிறிஸ்துவுக்குள் இருக்கிறீரா? அவருக்கு வெளியே இருக்கி றீரா? ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்தன, எல்லாம் புதிதாயின. கிறிஸ்துவுக்குள்ளிருக் கிறவன் இருந்தபடி இருப்பதுகூடாது. வல்ல கிறிஸ்து தம்மைப்பற்றி னோரை மாற்றுகிறார். அவரைச் சந்தித்தவர்களும் அவரைத் தொட்டவர் களும் ஆச்சரிய மாறுதலையடைந்தார்கள். பவுலைத் தொட்டார் அப்போஸ் தலனானார். பவுல் கிறிஸ்துவுக்குள் இருக்கிறவராக காணப்படும்படி விரும் பினார். கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு எல்லாவற்றை யும் குப்பையென்றும் நஷ்டமென்றும் விட்டார். அதற்காக அவர் ஒரு போதும் துக்கப்படவில்லை. ஏனென்றால் கிறிஸ்துவுக்குள் அவர் கண்ட



ஐசுவரியம் எல்லாவற்றிலும் மேலானதும் நித்திய மகிமையுள்ளதுமா யிருந்தது.

பேழைக்குட்சென்ற நோவா ரட்சிக்கப்பட்டது மாத்திரமல்ல அவ னுக்கும் அவன் குடும்பத்துக்கும் தேவையானதெல்லாம் பேழைக்குள்ளி ருந்தது. அவனுக்கு யாதொரு குறைவுமிருந்ததில்லை. ஜீவனுள்ள பேழை யாகிய கிறிஸ்துவுக்குள் வசிக்கும் விசுவாசிகளுக்கும் குறைவு இருக்கமாட் டாது. என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால் அவன் ரட்சிக்கப்படு வான் என்றும், அவன் உள்ளும்புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடை வான் என்றும் நமது ஆண்டவர் சொன்னார்.

3. அசட்டை. அழிந்துபோன ஜனங்களைப்பற்றிக் கொஞ்சம் கவ னிப்போம். இவர்கள் இரக்கம்பெறத்தக்கதாக சமயமும் சிலாக்கியமும் அருளப்பட்டிருந்தாலும் கெட்டுப்போனார்களே. அதற்குக் காரணமென்ன? அவர்களுடைய அவிசுவாசமும் அசட்டையுமே காரணம். நோவா எவ்வ ளவோ எச்சரித்தான். ஆவியானவர் எவ்வளவோ போராடினார். ஆகிலும் கர்த்தரின் சத்தத்திற்குக் கீழ்ப்படியவில்லை. பேழையைக் கண்ணால் கண் டார்கள். அது செய்யப்படுவதற்கு அவர்கள் உதவிசெய்தார்கள். தச்சர் கள் மரவேலை செய்தார்கள். கம்மாளர் இரும்புவேலை செய்தார்கள். வாணக் காரர் கீல் பூசினார்கள். இன்னும் அநேகர் பல வேலைகள் செய்தார்கள். அநேகர் வந்து உள்ளும்புறம்பும் சுற்றிப் பேழையைப் பார்வையிட்டார்கள் அது என்னத்திற்காக செய்யப்படுகிறதென்பதையும் அறிந்துகொண்டார் கள். அப்படியிருந்தும் அவர்களெல்லாரும் ஏகமாய் அழிந்துபோனார்கள். 'அசட்டைக்காரரே! பாருங்கள், பிரமித்து அழிந்துபோங்கள்' என்று கர்த்தர் சொல்லுகிறார். அசட்டைக்காரருக்கு அழிவே அல்லாமல் ரட்சிப்பில்லை.

கிறிஸ்துவைப்பற்றி அதிகமாய்க் கேள்விப்பட்டிருக்கிறோம். அநே கந்தரம் அவர் பேரைச்சொல்லி ஜெபித்திருக்கிறோம். அவரைக் குறித்து மற்றவர்களுக்கு அறிவித்திருக்கிறோம். பேழையைக் கண்டும் பேழை யைப்பற்றி அறிந்தும் இருக்கிறோம். பேழையாகிய கிறிஸ்துவுக்குள் இருக்கிறோமா? கிறிஸ்துவுக்குள்ளிருக்கிறவர்கள் ஆக்கினைக்குத்தப்பி ரட் சிக்கப்படுகிறார்கள். புறம்பேயிருக்கிறவர்கள் கெட்டுப்போவார்கள்.

ஐதிராப்பாத்தில் வெள்ளம் வருமென்று அறிவிக்கப்பட்டது. அவ வார்த்தையை நம்பினவர்கள் ஜீவன்தப்பிப் பிழைத்தார்கள். அசட்டையா யிருந்தவர்களோ ஆபத்துக்குள்ளானார்கள். இவ்வளவு பெரிதான ரட்சிப் பைக்குறித்து ஒருவன் கவலையற்றிருப்பானானால் தண்டனைக்கு எப்படித் தப்புவான்?

சகோதரனே, நீ பயங்கரமான ஆக்கினையடையாதபடி நோவா உட்பிர வேசித்து ரட்சிக்கப்பட்டதுபோல நீயும் கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டு ரட்சிக்கப்படுவாயாக.

S. பரமானந்தம்.

# கிறிஸ்துநாதரும் பாலியரும்

நமதருமை ரட்சகருடைய ஜீவிய சரித்திரத்தில் பாலியரைப்பற்றி அநேக சங்கதிகள் வருகின்றது. ஆண்டவருடைய பிறப்பின் விஷயத்தில் அவர்களுக்கு ஒரு விசேஷித்த பங்குண்டு. அவர் நிமித்தம் எத்தனையோ பாலகர் ஏரோது ராஜாவின் கட்டளையினாலே கொலையுண்டு ரத்த ஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். அவருடைய உபதேசத்திலும் பாலியருடைய வரலாறுகள் தெளிவாக விளங்குகின்றன. 'பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது' என்றார். 'நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போல ஆகாவிட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்' என்று திருவுளம்பற்றினார் (மத். 18: 3), 'அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள்' என்று அறிவித்தார் (மத்: 18: 10). அவருடைய ஊழியத்திலும் பாலியருடைய சங்கதிகள் மெத்த விசேஷம். சிறுவரைத் தம்முடைய திருக்கரத்தில் ஏந்திக்கொண்டு ஆசீர்வதித்தார். தலைவனுடைய சிறுகுமாரத்தியைக் குணமாக்கி உயிரோடே பெற்றோருக்கு ஒப்புக்கொடுத்தார். விதவையினுடைய ஏகமகனை உயிர்ப்பித்துத் தாயாருடைய இருதயத்தைச் சந்தோஷப்படுத்தினார். சந்திரரோகியான பையனை, பிசாசைத் துரத்தி, சொஸ்தமாக்கினார், சீரோபேனிக்கியா ஸ்திரீயின் விசுவாசத்தைக் கண்டு அதிசயமடைந்து அவளுடைய மகளைச் சுகப்படுத்தினார். நித்தியஜீவனை விரும்பித் தம்மண்டையில் வந்த வாலிபனை அன்போடு பார்த்துச் சிலுவையை எடுத்துப் பின்சென்றுவா அழைத்தருளினார். வனாந்தரத்தில்,—திரளான ஜனங்கள் பசியினாலே வருந்தும்போது ஒரு சிறு பையனைக் கருவியாக வைத்துக்கொண்டு அவனுடைய ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் அசட்டைசெய்யாமல் அவைகளை ஏற்றுக்கொண்டு ஆசீர்வதித்துப் பெருகப்பண்ணினார். அவர் பாடுபட்ட வாரத்திலும் சிறியோர்வந்து தைரியமாய் நின்று அவருடைய பட்சத்தில் காணப்பட்டார்கள். பரிசேயரும் பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் நமது அருள்நாதரைக் கொலைசெய்ய வகை பார்க்கையில பாலியர் எல்லாரும் ஏகமாய்க்கூடி தேவாலயத்தில் ஆர்ப்பரித்து 'தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா' (மத்: 21: 15. 16) என்று கெம்பீரமாய்ப் பாடினார்கள். ஆண்டவரே! 'குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர்'. அது மாத்திரமல்ல. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலிலும் பிள்ளைகளுக்கு ஒரு விசேஷித்த பாகமுண்டு. உயிரோடே எழுந்த ரக்ஷகர்,—மரணத்தை ஜெயித்து வெற்றி சிறந்த ஆண்டவர் பாலியரை மறந்துபோகவுமில்லை,—அவர்களுடைய பெலவீனத்தை அவர் அலட்சியம் செய்யவுமில்லை. தம்முடைய அப்போஸ்தலனுக்குப் பரிசுத்த ஊழியத்தை ஏற்படுத்தி 'என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக' என்று உத்தரவருளினார். (யோவா. 21: 15). பெரிய ஆடுகளை மேய்க்க உத்தரவுகொடுக்குமுன்னமே ஆட்டுக்குட்டிகளை



மேய்க்கச்சொல்லுகிறார். அப்படியானால் அவர் பாலியர்பேரில் கரிசனையுள்ளவராயிருக்கிறார் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. சகோதரரே! நாமும் சிறியோருடைய விஷயத்தில் முயற்சிசெய்யவேண்டும். சீர்மைதேசத்தில் ஒரு பக்திமான் அநேகருடைய குணப்படுதலின் வரலாறுகளைத் திட்டமாய் விசாரித்ததில் மிச்சமானவர்கள் இளமைப்பிராயத்திலே குணப்பட்டார்களென்றும் சிலர்மாத்திரம் நடுவயதில் குணப்பட்டார்களென்றும், வயோதிபர்கள் குணப்படுதலோ மகா சொற்பம் என்றும் தொலங்கினது. அதற்கு இசைவாக வேத வசனமும் கூறுகிறது. 'நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை'. (பிர. 12: 1.) 'சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள். அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்.' (மாற். 10: 14).

I. கிறிஸ்துநாதர் பாலியர்பேரில் வைத்த கவனம். அவர் இளைஞரோடு அதிகமாய்ப் பேசினதாக நாம் வாசிக்கிறதில்லை. இரண்டொரு விசைமாத்திரம் அப்படிப்பேசினார். என்றாலும் அவர்கள்மேல் பிரியம் வைத்து அவர்களை நேசித்தும் விசாரித்தும்வந்தார் என்பதற்குச் சந்தேகமில்லை. இங்கிலாந்து தேசத்தில் ஓர் நல்ல குரு இருந்தார். சிறியோர் பேரில் அவருக்கு மெத்தப்பிரியம். அதினாலே அவருக்குப் பாலியருடைய நேசன் என்ற பெயர் உண்டாயிற்று. அவரைக் கண்டவுடனே பிள்ளைகள் எல்லாரும் சந்தோஷப்படுவார்கள். ஒருநாள் ஒரு சிறுபெண் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்குவந்து மலர்ந்தமுகமாய் தன் தாயாரிடம் ஓடி 'இன்றைக்கு எனக்கு ரெம்ப சந்தோஷம், வீட்டுக்கு வருகையில் பாலியருடைய நேசனைக் கண்டேன்' என்று சொன்னாள். அதற்குத் தாயார் 'இவ்வளவு சந்தோஷம் உனக்குண்டாகும்படி அவர் உனக்கு என்னசொன்னார்' என்று கேட்டதற்கு அந்தப் பிள்ளை 'அவர் ஒன்றும் சொல்லவில்லை, என்றாலும் என்னை அன்போடு நோக்கிப்பார்த்தார்' என்றாள். பார்த்தீர்களா! அந்தப் போதகருடைய அன்பு விளங்குவதற்கு வாய்விசேஷம் வேண்டியதில்லை. அவருடைய கண்பார்வை (கண்ணோக்கு) ஒன்று மாத்திரம் போதும். அப்படிப்போல நமதாண்டவர் வாய்மொழியாக பாலியரோடு அதிகமாய்ப் பேசாவிட்டாலும் அவர்கள்பேரில் கவனம்வைத்தார் என்பது நிச்சயம்.

(அ) அவர்களுடைய விருப்பங்களைக் கவனித்தார். சமயா சமயங்களில் சிறியோருக்குப் பசி உண்டாகும், அப்போது சோறு வேண்டும் என்று கேட்பார்கள். நல்ல சாப்பாட்டை விரும்புவார்கள். தங்களுக்கு வேண்டிய நன்மைகள் கிடைக்குமட்டும் பெற்றோருக்குத் தொந்தரவுசெய்வார்கள். நான் சிறுபையனாயிருக்கும்போது எனக்கு இஷ்டமான ஒரு துரை இருந்தார். தெருவில் அவரைக்கண்டால் உடனே பிடித்துக்கொண்டு இனாம் தரவேண்டும் என்று கேட்பேன். அவர் தருமட்டும் நான் அவரைப் போகவிடேன், ஆ! பாருங்கள். சிறியோருடைய சுபாவம் ஆண்டவருக்கு நன்றாய்த் தெரியும். 'உங்களில் எந்த மனுஷனாகிலும் தன்னிடத்தில் அப்பத்

னைக்கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக்கொடுப்பானா? மீனைக்கேட்டால் அவனுக்கு பாம்பைக் கொடுப்பானா? ஆகையால் பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது பரலோகத்தில் இருக்கிற உங்கள்பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக்கொடுப்பது அதிக நிச்சயமல்லவா'? (மத்.7: 9–11). யவீரின் சிறுமகளை உயிரோடு எழுப்பினபோது மற்றவர்கள் எல்லாரும் (பெற்றோரும்கூட) பிரமித்து நிற்கையில் இயேசுவானவர் அல்லவா அந்தப்பிள்ளையின் ஆசையை அறிந்து 'அவளுக்கு ஆகாரம் கொடுக்கும்படி சொன்னார். (மாற். 5: 43.) அந்தச் சமயத்தில், தாய் தகப்பனைப்பார்க்கிலும் அந்தப் பிள்ளையின் அவசரத்தை அறிந்துகொண்டார்.

(b) **அவர்களுடைய விளையாட்டையும் கவனித்தார்.** சிறியோர் விளையாட்டின்மேல் பிரியமுள்ளவர்களென்று இயேசுநாதருக்குத் தெரியும் அவர்கள் விளையாடும்போது பக்கத்தில் நின்று பார்த்திருப்பார். அந்தத் தேசத்தின் விளையாட்டுக்கும் நம்முடைய தேசத்து விளையாட்டுக்கும் வித்தியாசமுண்டு. அங்கே ஒருவிளையாட்டு என்னவென்றால், கொண்டாட்டம் என்று சொல்லி சிலர் குழல் ஊதுகையில் மற்றவர்கள் கூத்தாடுகிறது. இன்னொரு விளையாட்டு துஷ்டி என்றுசொல்லி தங்களைப் புலம்பல்காரராகப்பாவித்து சிலர் கூக்குரலிடுகிறது. மற்றவர்கள் சேர்ந்து அழுதுகொள்ளுகிறது. இப்படி விளையாடும்போது பிள்ளைகளுக்குள் அற்பம் சொற்பமாய் மனஸ்தாபங்கள் நேரிடக்கூடியது. இதையெல்லாம் பார்த்த ஆண்டவர் சொல்லுகிறார். 'இந்தச் சந்ததியை யாருக்கு ஒப்பிடுவேன்? சந்தைவெளியில் உட்கார்ந்து ஒருவரையொருவர்பார்த்து உங்களுக்காகக் குழல் ஊதினோம், நீங்கள் கூத்தாடவில்லை. உங்களுக்காகப் புலம்பினோம் நீங்கள் அழவில்லை என்று குறைசொல்லுகிற பிள்ளைகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.' (லூக். 7: 31—32).

(c) **அவர்களுடைய விசுவாசத்தையும் கவனித்தார்.** பொதுவாகப்பார்த்தால் பெரியோருடைய குருட்டாட்டம், இருதயக்கடினம் அதிகம். வேதசத்தியங்களை லேசாய் நம்பமாட்டார்கள். இயேசுவானவர் அற்புதங்களையும் அதிசயங்களையும் தங்கள் நடுவில் செய்தபோதிலும் எத்தனையோ ஜனங்கள் நம்பாமற்போனார்கள். இதில் ஏதோ ஒரு தந்திரமிருக்கிறது. பிசாசுகளின் தலைவனால் இபபடிச்செய்கிறாராக்கும் என்று புத்தியீனமாய்ச் சொன்னார்கள். பிள்ளைகளுக்கோ அந்தச் சுபாவமில்லை. தேவன் சர்வ வல்லவர். ஆகையால் அவருக்குக் கூடாதகாரியம் ஒன்றுமில்லை என்று சந்தேகப்படாமல் உடனே நம்பிகொள்வார்கள். சூரியன் அஸ்தமிக்கும்போது அதினுடைய ஜோதிமகிமைப் பிரகாசத்தைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு சிறுவன் சந்தோஷப்பட்டு தன் தகப்பனைக்கூப்பிட்டு 'பாருங்கள்! அதோ! தேவன் சூரியனில்வந்து தம்முடைம பிரகாசத்தைக் காட்டுகிறார்! என்'



றான். பிள்ளையினுடைய புத்தியீனம் என்று நினைக்கிறீர்களா? அல்ல! அல்ல! அந்தப் பிரகாசத்துக்குத் தேவன் காரணர் என்று அவன் இயல்பாகவே அறிந்துகொண்டான். அப்படியே லோக ரட்சகர் இவ்வுலகத்தில் சஞ்சரித்த காலத்தில் சிறியர் அநேகர் அவரைப்பற்றிக்கொண்டார்கள் என்று சொல்வதற்கு இடமுண்டு. 'என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியர்' (மத். 18: 6) என்று அவர் தாமே சொல்லுகிறார். 'பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்' (மத். 11: 25) என்று அகமகிழ்ந்தார். அப்படித் தம்மை விசுவாசித்த சிறுவரில் ஒருவனைச் சீஷர்கள் நடுவில் நிறுத்தி எல்லா மனிதரும் அவனைப்போலவே மனத்தாழ்மையுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்று கட்டளையிட்டார்.

II. **கிறிஸ்துநாதர் பாலியருக்குச்சொன்ன வசனம்.** நான் முன் சொன்னதுபோல ரக்ஷகர் அவர்களோடு அடிக்கடி பேசவில்லை. அவர்களுக்கு அநேக வார்த்தைகளை அவர் சொல்லவுமில்லை. அவர் பாலியருக்குச் செய்த பிரசங்கம் மெத்த சுருக்கமான பிரசங்கம். அவர் வாலிப தலைவனிடத்தில் சொன்னதை விட்டுவிடுவோம். அதுவும் மெத்த எழுப்புதலான வசனம். 'உனக்குண்டானவைகளை எல்லாம் விற்று தரித்திரருக்குக்கொடு. பின்பு என்னைப் பின்பற்றிவா' என்றார். (மத். 19: 21). உலகநேசத்தை வெறுத்துத்தள்ளி தமக்குப் பின்சென்றுவர உத்தரவு கொடுத்தார். ஆனாலும் அவன் சற்று பெரியமனுஷன். ஆகையால் விட்டுவிடுவோம். அவனைத்தவிர வேறே இரண்டுபேரோடும் கிறிஸ்துநாதர் பேசினார். கைம்பெண்ணுடைய மகனோடு பேசினார். யவீரின் மகளோடும் பேசினார். இருபேரும் சிறியோர். இருபேரும் செத்தவர்கள். இருபேருக்கும் ரக்ஷகர் சொன்னவசனம் ஒரேவசனம். விதவையின் குமாரனைப்பார்த்து 'வாலிபனே! எழுந்திரு' (லூக். 7: 14) என்று உத்திரவருளினார். தலைவனுடைய குமாரத்தியின் கையைப்பிடித்து 'சிறு பெண்ணே! எழுந்திரு' (மத். 5: 41) என்று கற்பித்தார். ஆண்பிள்ளைக்கும் பெண்பிள்ளைக்கும் ஒரே உத்திரவு, ஒரே வார்த்தை, ஒரே வசனம். 'எழுந்திரு' என்பதே கிறிஸ்துநாதர் பாலியருக்கு உரைக்கிற எழுப்புதலான் வார்த்தைகள். அவர் அவர்களுக்காக செய்கிறவேலை எழுப்புகிற வேலை. ஆ! பாருங்கள். சிறியோர் என்றாலும் சகலரும் அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருக்கிறார்கள். புது உயிர்,—ஞான ஜீவன் அவர்களுக்கு அவசியம் வேண்டும். ஆனாலும் வாலிபப்பிராயத்தில் எழுந்திருப்பது சற்று லேசானகாரியம். லாசருவைக் கவனியுங்கள். அவனை எழுப்பினதில் அநேக வருத்தங்கள் இருந்தன. அவனுடைய பிரேதம் நாறத்தக்க நிலைமையிலிருந்தது. மேலும் பெரிய கல்லை எடுத்துப்போடவேண்டியது; அதுவுமல்லாமல் அவன் உயிரோடு

வந்தபோதிலும் அவன் கால்களும் கைகளும் பிரேதச்சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது. பெரியோர் குணப்படுவது மெத்த பிரயாசை. குணப்பட்டாலும் பலவித பாவக் கட்டுகளை அவிழ்க்கவேண்டியது. காரியத்தைப் பார்த்தால் இளமையில் குணப்படுவது எவ்விதத்திலும் நல்லது.

REV. T. WALKER.

## ஜெபம் வல்லமையான காரியங்களை நடப்பிக்கும்

(தொடர்ச்சி)

ரட்சகருடைய ஜீவியத்தின் கடைசி ஆறு மாசங்களில் ஜெபத்தைப் பற்றி ஆறு விசேஷங்கள் சொல்லியிருக்கிறார். இந்த ஆறு விசேஷங்களையும் தொகுப்பாய்க் கவனித்து அவைகளைப் புதிதாய் நமது மனதில் பதித்து அவைகளுக்கேற்க ஜீவிப்போமானால், மிகுந்த போராட்டத்தின் மத்தியிலுங்கூட புதிதான காரியங்களை நடப்பிக்கலாம். ஏனென்றால் போராட்டத்தின் மூலயாய் ஜெபத்தின் வல்லமை ஜெயமாக விளங்கும்.

தேவன் எங்கெங்கே செல்லுகிறாரோ, அங்கெல்லாம் சாத்தானும் காணப்படுகிறான். தேவன் ஏற்படுத்தும் வழிகளிலெல்லாம் அவனும் சென்று திருடனைப்போல அவருடைய வழிகளையெல்லாம் தனக்குக் கருவிகளாக்குகிறான். புது மிஷனெரிமார் ஊழியஞ்செய்யும் இடங்களிலெல்லாம் இவனும் சென்று அங்கே விரோதத்தை எழுப்புகிறான். எவ்வளவுக்கு அதிகமாய் ஜெபசிந்தையுண்டாகிறதோ அவ்வளவுக்கதிகமாய் விரோதம் எழும்பும். ஆனால் அந்த விரோதம் எல்லாவற்றிற்கும் மேலான ஜெயம் முடிவில் கிடைக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை.

முதலாவது, மேலே சொன்ன ஆறு வாக்குத்தத்தங்களையும் வாசிப்போம். முதலாவது, மத். 18. 19ல் 'மறுபடியும் உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளுகிற எந்தக் காரியத்தைக்குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால் பரலோகத்திலிருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும்.' 'உங்களில் இரண்டு பேர்' தனி ஜெபத்தினாலும் அதிசய வல்லமை விளங்கும். ஆனால் கூட்டமான சிலர் ஜெபிக்கும்போது அதிக வல்லமை விளங்கும். 'இரண்டு பேர்' என்று சொல்லும்போது குறைந்த பட்சம் இரண்டு பேர் அல்லது ஒரு ஆளுக்கதிகம் என்பதைக் குறிக்கும். தெய்வீகத்தில் நிறைந்த எண்ணம் மூன்று. மனுஷீகத்தில் குறைந்த எண்ணம் இரண்டு. ஒரு மனுஷன் அல்லது ஒரு ஸ்திரீயல்ல. ஒரு மனுஷனும் ஒரு ஸ்திரீயும் என்றாகும். தெய்வீகத்தில் மூவர் சேர்ந்து பூரண வல்லமையுள்ள தெய்வீகத்தைக் குறிக்கிறது போல, மனுஷரில் இருவர் அல்லது அதற்கு



மேலானவர்கள் சேர்வது வல்லமைக்கடையாளம். ஐக்யத்தில் வல்லமை விளங்கும்.

'உங்களில் இரண்டு பேர்.........ஒருமனப்பட்டிருந்தால்' ஒற்றுமை என்று வழங்குகிற இப்பதம் ராகஇயானத்துக்கடுத்தது. உங்களில் இருவருடைய மனமும் 'சங்கீதத்தில் ஒற்றுமை காணப்படுவதுபோல் ஒற்றுமையாயிருந்தால்' 'உங்கள் இருவருடைய உள்ளத்தின் வாஞ்சையில் இன்ப கீதம் எழும்புமானால்' என்பது ஒருமனம் என்பதில் அடங்கிய கருத்து. 'உங்களில் இரண்டுபேர் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால்' பூமிதான் ஜெபம் செய்கிற இடம். ஏனென்றால் பூமிதான் போராட்ட ஸ்தலம். பூமியிலே இருப்பதில் விசேஷித்த வல்லமை இருக்கிறது. பூலோக ஓட்டம் முடிந்துபோய் எஜமானின் சமுகத்திலிருந்தால் நன்றாயிருக்குமே என்று எப்பொழுதாவது நினைத்தாயா? அல்லது இந்தப் போராட்டமும் கஷ்டமும் முடிந்து, பரமசிங்காசனத்தினருகில் நீட்கப்பட்ட சேனையோடே நின்றால் என்ன சந்தோஷமாயிருக்குமென்றும் எண்ணினாயா? ஆம் எஜமானோடிருப்பது மாகுமைமயாய்த் தானிருக்கும். ஆனால் ஒருகாரியத்தைக் கவனி பூமியிலிருக்கும்போது, போராட்டச் சாலையிலிருப்பதால் விசேஷ வல்லமை விளங்கிய ஸ்தானத்திலிருக்கிறோம். இது சுளுவான ஜீவியம் செய்யும் இடமல்ல, முற்றும் சந்தோஷம் அனுபவிக்கும் ஸ்தலமுமல்ல. எஜமானின் சமுகத்தைத் தரிசித்து ஆச்சரிய சமாதானத்தை அடையும்போது சொல்லி முடியாத ஆனந்த சந்தோஷமடைவோம். ஆனால் நாம் இப்போ தங்குகிற உலகம் போராட்டச் சாலையானதால் வல்லமை விளங்கும் இடமாயிருக்கிறது. நாம் போராட்டச் சாலையிலிருந்து செய்யப்படும் மன்றாட்டுக்கு விசேஷித்த வல்லமை உண்டு. தற்கால மன்றாட்டு எதிராளியாகிய தீயோனின் பலத்தைத் தணித்து, அவனுடைய காரியம் சித்தியாகாதபடி செய்கிறது. ஆகையால் திடனடைந்து சந்தோஷப்படுவோமாக. உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் இந்தப் போராட்டச் சாலையிலே சங்கீதம் உண்டாக்கினால் .........அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் என்பதில் 'மனங்கண்டபடி எந்தக் காரியத்தையும் கேட்கச்சொல்லியிருக்கிறதா? இல்லை. மனங்கண்ட எந்தக் காரியத்தையும் கேட்கலாம் என்றல்ல, அநேக காரியங்களைக் கேட்கலாம் என்பது தான் பொருள். நாம் கேட்கக்கூடிய காரியங்களுக்கு மட்டில்லை. இரண்டுபேர் தங்கள் ஜெபத்தில் சங்கீதம் உண்டுபண்ணுவார்களானால் அந்த கீதம் எஜமானுடைய உள்ளத்துக்கு ஒத்த கீதமுமாகுமானால் முற்றிலும் எஜமானுக்கும் நமக்கும் ஒற்றுமையாகிறது. அந்தப்படி ஒற்றுமையாகிற எந்த ஜெபத்துக்கும் பதிலுடனே கிடைக்கும்.

ஒரு மனுஷனுடைய சித்தத்தை மாற்றுகிற விஷயம் எல்லாவற்றிலும் மகா கஷ்டமான காரியம். பணவிஷயத்தில் ஒருவன் விடுதலை

யடைதல் அரிதான விஷயமே. ஏனென்றால் அது, ஒரு மனுஷனுடைய சித்தத்தைப்பற்றியது. பணத்தைப்போல் மனுஷனை அடிமைப்படுத்துகிற காரியம் வேறில்லை. பண விஷயத்திலிருந்தும் மற்றெல்லா அடிமைத்தனத்திலிருந்தும் நாம் விடுதலையடைவது அவ்சியம்.

'உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால் பரலோகத்திலிருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்குண்டாகும்.' ஏன் கொடுக்கப்படும் என்பதற்குக் காரணம் சொல்லியிருக்கிறது. நம்முடைய ஊக்கமான ஜெபத்தினாலேயா, அல்லது நம்முடைய விசுவாசத்தின் மூலமாயா? அதெல்லாம் வேண்டியதுதான். அதைப்பற்றி இங்கே ஒன்றும் சொல்லப்படவில்லை. இங்கே சொல்லப்படுகிறது என்னவென்றால் எங்கே இரண்டு அல்லது மூன்று பேர் அதாவது ஒருவருக்கதிகம் ஒன்று கூடினால் பரிசுத்த ஆவியானவர் கிரியைசெய்து மனம் ஒன்றுசேர்ந்தால் கிடைக்கும்' என்பது கருத்து.

'இரண்டுபேர் அல்லது மூன்றுபேர் என் நாமத்தில் கூடிவருகிற இடத்தில் நானிருக்கிறேன்' என்கிறார். 'எந்தக்காரியத்தையும்' என்பதின் பொருளை அறியவேண்டுமானால் நான் என்பதில் அடங்கிய கருத்தை உணரவேண்டும் நான் கூட இருக்கிறேன் என்று சொல்லுகிறவர் வரத் தடைப்பட்டால் எந்தக்காரியத்தையும் கேட்கலாம் என்பதில் குறைவு காணப்படும். நான் அவர்கள் நடுவிலிருப்பேன் என்பதால் இரண்டுபேர் ஜெபம் செய்தால் மூன்று பேராகிறது. மூன்றுபேர் ஜெபம் செய்தால் நாலு பேராகிறது. நான் கூட இருக்கிறேன் என்று சொல்லுகிற நம் எஜமான் நம் ஜெபத்தை ஏற்றுக்கொண்டு அந்த ஜெபத்தைத் தம்முடையதாக்குகிறார்.

## வேதாகமப் பாடமுறை (தொடர்ச்சி)

### 20-ம் பாடம் II ராஜாக்கள்

**II. இஸ்ரவேலும் யூதாவும் 9: 11—17: 41.**

இப்பாகத்தில் இஸ்ரவேல், யூதா ராஜாக்களின் சரித்திரங்கள் மாறி மாறி வருகின்றன. அநேக பொல்லாத ராஜாக்களின் சரித்திரம் நெடுக வருகிறது. (பத்துக் கோத்திரத்தாரின் கலகத்திற்குமுன் சவுல், தாவீது, சாலோமோன் ஆகிய மூவரும் ஒவ்வொருவரும் 40 வருஷக்காலமாக, கி. மு. 1095லிருந்து கி. மு. 975 முடிய அரசாண்டார்கள்).

இஸ்ரவேல் ராஜ்யத்தில் பத்தொன்பது வித்தியாசமான ராஜ வம்சத்தைச்சேர்ந்த பத்தொன்பது அரசர்கள் அரசாண்டார்கள். சமாரியாவின்



அழிவுவரை ராஜ்யம் 250 வருஷக்காலம் நிலைத்திருந்தது. பிற்பாடு மீட்சியற்றவிதமாய் நிலைகுலைந்துபோயிற்று. ஆனதுபற்றி இறந்துபோன பத்துக்கோத்திரங்கள் என்று அழைக்கப்படுகிறது. i ராஜாக்களின் கடைசி அதிகாரங்களில் யெரோபெயாம், பாஷா, ஏலா, சிம்ரி, உம்ரி, ஆகாப், அகசியா முதலியவர்களின் வரலாறு அடங்கியிருக்கிறது. பொன் கன்றுக்குட்டிகளை உண்டுபண்ணினதால் யெரொபெயாம் 10 கோத்திரத்தார் மேல் அழிவுக்கு ஏதுவான சாதனத்தை ஏற்படுத்திப்போனான். (1 ராஜா 12: 28). மேலே சொல்லப்பட்ட அரசர்களில் ஒருவராவது அந்தப் பாவத்தின் வல்லமைக்குத் தப்பவில்லை. ஒருவர்பின் ஒருவராய் பொல்லாப்பைச் செய்தார்கள். இரண்டாம் புத்தகம் பலவீனனும் பொல்லாதவனுமான அகசியாவின் அரசாட்சியுடன் ஆரம்பிக்கிறது. யோராமின் அரசாட்சி கொடுமையினால் சீக்கிரத்தில் முடிவடைந்தது. (9: 23, 24). பின், பலவானும் முரடனும் இணங்காதவனுமான ஏகூ பட்டத்திற்கு வந்து இருபத்தெட்டு வருஷம் அரசாளுகிறான். யோராம் மரணமடைந்த நாளில் பொல்லாதவளான "ஏசபேல்" அழிந்தாள். (9:30—35; (1 ராஜா. 21: 13). ஏகூ பாகாலை வணங்குகிறவர்களைத் தேசத்திலிருந்து அழித்தான். (9:28). ஆனாலும் யெரொபெயாமின் பாவங்களைவிட்டு விலகவில்லை. இரண்டாவது, யெரொபெயாமைத்தவிர பின் அரசாண்ட அரசர்களெல்லாரும் மிகுந்த பலவீனராயிருந்தார்கள். இஸ்ரவேலின் கடைசி அரசனான ஓசெயா வரை (18-ம் அதிகாரம்) மீதியான அரசர்களின் காலங்களிலெல்லாம் ஒழுங்கீனமும், சதிமோசமும், சதிகொலையும், குரூரமும், கொலையும் விசேஷமாய் விளங்கினது. அசீரியர் தனக்கு விரோதமாய் வந்ததினிமித்தம் கலங்கி எகிப்தின் இராஜாவிடத்தில் உதவி தேடினான். என்றாலும் பிரயோஜனமில்லை. இஸ்ரவேலரின் அழிவு வந்துவிட்டது. ஓசெயா சிறையாக்கப்பட்டான். சமாரியா பிடிக்கப்பட்டது. தேசத்தின் குடிகள் சிறைகளாகக் கொண்டு போகப்பட்டார்கள்.

யூத ராஜ்யத்தின் சரித்திரம் பற்பலவிதமான மாறுதலுடையதாயிருந்தது. இஸ்ரவேல் ராஜ்ஜியத்தைப்போல அவ்வளவு துரிதமாய் அழிவுக்கு வரவில்லை. ஆசா, யோசபாத், எசேக்கியா, யோசியா முதலிய அரசர்களின் கீழ் இடைக்கிடையே மார்க்க எழுப்புதல் உண்டானது என்றபோதிலும் பொதுப்பட அது கீழ்நோக்கிச் சென்றுகொண்டேவந்தது. ரெகோபெயாம் பட்டத்திற்கு வந்ததிலிருந்து முன்னூற்று எண்பத்தெட்டுவருஷம் நிலைத்திருந்து ஒரே வம்சத்தைச் சேர்ந்த பத்தொன்பது அரசர்களால் கடைசியாக பாபிலோனியரால் கவிழ்க்கப்பட்டது. யூதாவின் சரித்திரம் இரண்டு நாளாகமத்தில் திட்டவட்டமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

**III. யூதா. அதி. 18—25.**

**1. எசேக்கியா 18—20.** இப்பொழுது ராஜ்ஜிய விஷயமாய் சந்தோஷிக்கத்தக்கதான மாறுதலைப் பார்க்கிறோம். ஏனென்றால் எசேக்கியா

வைப்பற்றி 'கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்' என்று வாசிக்கிறோம். அவனுக்குப்பின்னால் சீர்கேடான கோத்திர வரிசை இருந்தது. ஏனென்றால் அவனுடைய தகப்பன் பொல்லாதவனாயிருந்தான். எசேக்கியாவின் நல்ல சுபாவத்திற்குரகசியம் 1 8: 5, 6-ல் காணப்படுகிறது. அவன் 'நம்பினான்', 'சார்ந்தான்' 'கைக்கொண்டான்'. தற்கால ஜீவியத்திலும் காணப்படவேண்டியது இவைகளல்லவா? அதிகமான நம்பிக்கையும் அதிகமாகக்கர்த்தரைச் சார்ந்திருப்பதும் அதிகமாய் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதுமல்லவா?

எசேக்கியா 14 வருஷம்போல் யூதாவின்மேல் அரசாட்சி செய்தபோது சனகரீப் அவனுக்கு விரோதமாகவந்தான். வாஸ்தவத்தில் இந்த யுத்தம் யெகோவாவுக்கும் அவரை நிந்தித்த அகந்தைக்காரனான விக்கிரகவணக்கக்காரனுக்கும் நடந்ததென்று சொல்லலாம். (19: 20-22; 28—37).

சனகரீப் தோற்று ஓடிப்போனதை வாசிக்கும்போது, 48-ம் சங்கீதத்தை வாசித்துப்பார். ஒருவேளை அது இதே சம்பவத்தைக் குறிக்கிறது என்று சொல்லலாம்.

எசேக்கியாவின் கடைசி நாட்களின் சரித்திரம் மனுஷ சுபாவத்தின் பலவீனத்தைக் குறிக்கிறது.

மனாசே, ஆமோன் முதலியவர்களின் அரசாட்சியின்கீழ் யூதாராஜ்ஜியம் திரும்பவும் ஐம்பத்தேழு வருஷகாலமாக பொல்லாப்புக்கு ஏதுவாக விலகிப்போயிற்று. மனாசே தன் தகப்பனுடைய கிரியைகளை கெடுத்துப்போட்டான். ஆலயத்திற்குள் பாகாலினுடைய சொரூபத்தைக் கொண்டுவைத்தான். (23: 4, 11, 12). இவ்விதமாக எசேக்கியாவின் காலத்திலுண்டான மார்க்க எழுப்புதலுக்குப்பின்னால் அதிகமான சீர்கேடு உண்டானது.

யோசியா பட்டத்திற்கு வந்தபோது யூதாவில் திரும்பவும் எழுப்புதலுண்டானது. யோசியா கர்த்தருக்குப் பயந்தவனும் பெரிய சீர்திருத்தக்காரனுமிருந்தான். அவனைப்பற்றி II நாளாகமம் 34: 2-3ல் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கவும். கொல்லப்பட்ட தன் தகப்பனாரின் ஸ்தானத்தில், எட்டு வயதாயிருக்கும்போது பட்டத்திற்குவந்த ஒருபிள்ளை விக்கிரகங்களால் நிறைந்த தேசத்தில் ராஜாங்கத்தின் சீர்கேடுகளுக்கு எதிர்த்துநிற்கவேண்டுமானால் ஸ்திரமான மனதும் நன்மைசெய்யவேண்டுமென்ற ஆவலும சுற்றிலும் உள்ளவர்களின் வல்லமை எத்தனை அதிகமாயிருந்தபோதிலும் அதிலிருந்து ஒரு மனுஷனுடைய சுபாவத்தை தீர்மானிக்கமுடியாது. அவ்வித சொற்சகுக்கு இணங்குகிறோமோ அல்லது எதிர்த்துநிற்கிறோமோ என்பது நம்மைப் பொறுத்தது.

இந்த ஜாதியின் அழிவுக்கு முன்னதாகவே யோசியா மரணமடைந்தான். இக்காலத்தில் யோவேல், ஏசாயா, மீகா, நாகூம் முதலியவர்களின் எச்சரிப்பின் சத்தமும் கண்டிப்பும போதனையும் இவர்களுக்குக் கிடைத்



தது. கடைசியாக நேபுகாத்நேச்சார் தேசத்தின்பேரில் படையெடுத்து ராஜதானி பட்டணத்தைப் பிடித்து பரிசுத்த ஸ்தலங்களைச் சுட்டெரித்து ராஜாவையும் குடிகளையும் சிறையாகக் கொண்டுபோனான். அங்கே அவர்கள் பாபிலோனின் ஆறுகளின் அருகே உட்கார்ந்து அந்நிய தேசத்தில் கர்த்தருடைய பாட்டைப்பாட மனமற்று அழுதார்கள் (சங். 137).

## மகனே, நீ போய் இன்றைக்கு என் திராட்சத் தோட்டத்தில் வேலைசெய். மத். 23: 28.

குமாரனானால்தான் உக்கிராணக்காரனாகலாம். தேவன் நம்மை 'பிள்ளைகளே', 'குமாரரே' என்றழைக்காமல் 'போய் வேலைசெய்' என்று சொல்லவேமாட்டார். ஆகையால் நாம் அவருக்கு ஊழியம் செய்யவேண்டுமானால் முதலாவது அவரோடு நமக்கு இனசம்பந்தமுண்டாகவேண்டும். அதற்கு மூன்று முகாந்தரங்களுண்டு.

முதலாவது, குமாரனாதலே ஜீவனுக்கு ஆரம்பம். நாம் பரிசுத்தாவியினால் மறுபடியும் ஜெனிப்பிக்கப்பட்டபோது தேவனுக்குப் பிள்ளைகளானோம். அதுமுதல் ஆவிக்குரிய ஜீவன், திவ்ய ஜீவன் நமது ஆத்துமாவுக்குக் கிடைத்தது. இவ்விதமாய் ஜீவனைப் பெற்றவர்கள் அந்த ஜீவனை மற்றவர்களுக்கும் கொடுக்கக்கூடும். இதுதான் கிறிஸ்தவன் அழைக்கப்படுகிற ஊழியம். மரம்தான் கனிகொடுக்கிறதேயொழிய மரத்தோடு நட்டப்பட்ட வெறுங் கம்பு அல்லது தூண் கனிகொடுக்கிறதில்லை. ஏனென்றால் மரத்தூணில் ஜீவன் இல்லை. மரத்திலோ ஜீவனைக்கொடுக்கும் சாரம் ஓடிக்கொண்டிருக்கிறது. ஆகையால் கனிகொடுக்கும். ஆகவே நாம் ஜீவனையடையுமட்டும் மற்றவர்கள் நம்மிலிருந்து ஜீவனைப் பெற்றுக்கொள்வது கூடாத காரியம்.

இரண்டாவது, குமாரனானால்தான் அன்பு உண்டாகிறது. நீ தேவனுடைய பிள்ளையானால அவர் உன்னை நேசிக்கிறார். நீ அவரை நேசிக்கிறாய். இவ்வித அன்புதான் கிறிஸ்துவுக்கென்று ஊழியஞ்செய்ய நம்மை ஏவிவிடும். நீ தேவனுக்கென்று செய்கிற ஊழியம் பிரயோஜனப்படவேண்டுமானால் அது கடமைக்கென்று செய்யப்படாமல் அன்பினால் ஏவப்பட்டுச் செய்யப்படவேண்டும். அன்பினாலேயே நமது ஊழியம் வளரவேண்டும். 'நீ எனக்காக வேலைசெய், நான் உன்னை பிள்ளையாக்குவேன்' என்று தேவன் ஒருபோதும் சொல்லாமல், 'நான் உன்னை என் பிள்ளையாக்கியிருக்கிறேன், என் பிள்ளையே, போய் வேலைசெய்' என்றழைக்கிறார். ஆகையால் உன் ஊழியமெல்லாம் அன்பின் கிரியையாகவேயிருக்கவேண்டும். அன்பிருந்தால்தான் ஊழியம்செய்ய ஆவலுண்டாகும். அன்பில் சுறுசுறுப்புண்டு. எப்படியாகிலும் அன்பு தன்னை வெளிப்படுத்தி,

தான் நேசிக்கிற ஒன்றிற்காகச் சுயவெறுப்பைக் காட்டும். மேலும் அன்பினால் செய்யப்படுகிற ஊழியம்தான் மனப்பூர்வமும் மனச்சந்தோஷமுமுள்ள ஊழியமாயிருக்கும்.

நீ யாரையாவது சிநேகித்தால், சிநேகிக்கப்பட்ட அந்த ஆளுக்காக உன்னால் கூடிய எதையும் செய்வாய். விசேஷமாய் சிநேகத்துக்குரிய ஆள் ஏதாவது கஷ்டமடைந்து, மோசத்திலகப்பட்டு, வியாதிப்பட்டிருக்குமானால் அப்படிப்பட்ட சமயங்களில்தான் அன்பின் கிரியை அவசியமாயிருக்கும். இவ்வித அன்பின் ஊழியம் செய்யும்போது சரீரத்துக்குண்டாகும் இளைப்பு, களைப்பு இவைகள்கூட மறக்கப்பட்டுப்போம். ஆகவே நமது ஊழியமெல்லாம் அன்பிலிருந்துதான் உண்டாகவேண்டும். பிள்ளைகளானதால் அவரில் அன்புகூருகிறோம். அவருக்கு ஊழியம்செய்யாமலிருக்க முடியாது. அவருக்கும் ஊழியம்செய்ய ஆட்கள் தேவை. அன்பினால் ஏவப்பட்டு ஊழியம்செய்யாததால் கிறிஸ்தவ ஊழியங்களிலநேகம் அரைகுறையாயிருக்கிறது.

மூன்றாவது, குமாரனால் ஜெபம் அவசியம். நாம் தேவனை அறிந்துகொள்ளும்போது அவரோடு பேசுகிறோம். நாம் தேவனை நேசிக்கிறதினாலே அவரோடு பேசுகிறோம். அவர் நம்முடைய பிதா. அவரோடு இன்ப சகவாசம் செய்கிறோம். அப்படிச் சகவாசம் செய்யும் சமயத்தில் அவருக்காக நாம் செய்யவேண்டிய வேலை இன்னது என்பதை அறிகிறோம். பலிதமுள்ளதும் நற்பலன் கொடுக்கக்கூடியதுமான ஊழியம் ஜெபத்தினாலேயே உண்டாகிறது. ஜெபிக்காமலேபோய் வேலைசெய்தால், சில வேளைகளில் அவருடைய சித்தத்துக்கேற்காத வேலையையும் செய்துபோடுவாய்; நமக்கு அவர் குறித்திருக்கிற வேலையை விட்டுவிட்டு அவர் குறிக்காத வேலையைச் செய்கிறவர்களாய்க் காணப்படுவோம். நாம் வெகு பிரயாசத்தோடு செய்யலாம். ஆனால் நாம் செய்யும்படி அவர் குறித்த வேலையாயிராது. ஏனென்றால் நாம் ஜெபத்தினால் அல்லது ஜெபத்தின் பலனாக அந்த வேலையைக் கண்டுபிடித்துச் செய்யாமல் நமது சொந்த யோசனையின்படி செய்கிற வேலையாகும். அவர் நம்முடைய பிதா, நாம் அவருடைய பிள்ளைகள். ஆகையால் நாம் ஜெபத்தில் மூழ்கி அவர் நமக்கு நியமித்த வேலையைச் செய்வோமாக. ஓர் குருவானவர் தமது மேடைக்குமுன் 'பலனற்ற சுறுசுறுப்பான ஜீவியத்தைக் குறித்து எச்சரிக்கையாயிரு' என்னும் வாசகத்தைத் தூக்கி வைத்திருந்தார். நாம் தேவனுடைய ஊழியர். ஆனால் பலன் கொடாத வெறும் ஊழியத்தில் சுறுசுறுப்பாயிருப்பது மோசம். நாம் ஜெபித்துக்கொண்டேயிருப்போமானால் நாம் செய்யவேண்டிய ஊழியம் நமக்குக் காட்டப்படும். அது ஒருக்காலும் பலனற்றதாய்ப்போகாது. அறுக்கிறவன் தன் அரிவாளைத் தீட்டுகிற நேரம் வீண் நேரம் அல்லாதது போல தேவ ஊழியத்தைச்செய்கிற எவனும் ஜெபத்தினால் தன்னை ஆயத்தப்படுத்தி இடைகட்டிக்கொள்ளவேண்டியது மெத்த அவசியம்.

---



## ஸ்கோத்லாந்து தேசத்து ஸேண்ட் அன்ட்ரு சர்வகலாசாலை.

## ஜெபம் என்ற பொருளின்பேரில் எழுதும் வியாசங்களுக்குப் பரிசுகள்.

தற்கால பிராணசேத சம்பவங்களினால் ஜெபத்தின் முக்கியம் எவ்வளவு அருமையானதென்று யாவரும் உணருவதால் அதின் கருத்தையும், பலத்தையும் அறிந்திருக்கும் பலருடைய அபிப்பிராயங்களையும் ஒன்றுசேர்த்து மற்றோருக்குப் பிரயோஜனமாயிருக்குமாறு பிரசுரஞ்செய்ய இப்பொருள் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது.

'ஜெபம்': அதின் கருத்து, உண்மை, வல்லமை; தனித்தனி ஆளுக்கும் சபைக்கும், ராஜ்யத்துக்கும் ஜெபத்தின் பிரயோஜனமும் அவசியமும்; நாடோடிய ஜீவியத்திலும், வியாதி, நோய்களைக் குணமாக்குவதிலும்; துன்பகாலத்திலும், ஓர் ஜாதியாக அடையும் இடுக்கணிலும், ஓர் தேசத்தார் முனைவைத்து நடக்கும் பிரமாணம், உலகதேர்ச்சி முதலிய விஷயங்களிலும் ஜெபத்தின் ஸ்தானம்.

இவ் வியாசம் 4000 முதல் 6000 வரையுள்ள வார்த்தைகளடங்கியதாயிருந்தால் நல்லது. ஆனால் எவ்வளவு நீளமாயிருந்தாலும் இருக்கலாம்.

உலகத்தின் எப்பாகத்திற்கும் பிரயோஜனமாகக் காணப்படும் முதற்தரமான வியாசத்திற்கு 100 பவுண் (1500 ரூ-) இனாம் அளிக்கப்படும். உலகின்கண் எங்குமிருக்கும் யாவரும் எழுதலாம். (எந்தப் பாஷையிலும் எழுதலாம்).

கவனிப்பு. அவசியமென்று கண்டால் வேறு பரிசுகளும் கொடுக்கப்படலாம். பரி. அந்திரேயா சர்வகலாசாலையைச் சேர்ந்த மாணவருக்கும் பட்டதாரிகளுக்கும் விசேஷித்த பரிசுகள் அளிக்கப்படும்.

நிபந்தனைகள்:—

1. ஒவ்வொரு வியாசமும் கவருக்குள் அடைக்கப்பட்டு முத்திரிக்கப்பட்டிருக்கவேண்டும். கவரின்மேலே பிரைஸ்பெற முயலுவோர் தெரிந்துகொண்ட மோட்டோ (Motto) ஒன்றும் "Walker Trust Essay on Prayer (open prize)" என்றும் எழுதியிருக்கவேண்டும். பிரைஸ்பெற முயலுவோரின் பெயராவது மேல்விலாசமாவது வியாசத்தில் எந்தப் பாகத்திலாகிலும் அல்லது முத்திரிக்கப்பட்ட கவரிலாகிலும் காணப்படக்கூடாது. ஆனால் அந்த பாக்கெட்டுக்குள் முத்திரிக்கப்பட்ட ஒரு கவருக்குள் அதை எழுதினவரின் பெயரும், விலாசமும், அவ்வியாசம் முழுவதும் தன் சொந்தப் பிரயாசத்தால் எழுதப்பட்டது என்று உறுதிமொழி கூறி கையெழுத்து போட்ட டிக்ளரேஷனும் வைத்தனுப்பவேண்டும். இக்கவருக்கு மேல் மேற்சொல்லிய mottoவும் எழுதப்பட்டிருக்கவேண்டும்.

2. இதை மேல்பார்த்து நடத்துவோருக்கு, பிரைஸ் கொடுக்கப்படும் வியாசங்களைப் பிரசுரிக்க சுதந்தர பாத்தியதை உண்டு. 1917-ம௵ ஜூன்௴ முதலாம் தேதிக்குப்பின் ஒருவருஷம் தாங்கள் மட்டும் அதைப் பிரசுரிக்கும் பாத்தியதையுடையவர்களாயிருப்பார்கள்.

3. வியாசங்கள் கூடுமானால் கடுதாசியில் ஒரு பக்கத்தில் மட்டும் டைப் பண்ணப்பட்டதாயிருக்கவேண்டும் அல்லது அச்சிடப்பட்டிருக்கவேண்டும்.

4. இதை மேற்பார்த்து நடத்தும் Walker Trustees என்பவர்களே பிரைஸ் யாருக்குக் கொடுப்பது என்று தீர்மானிப்பார்கள்.

5. எல்லா வியாசங்களும் 1917௵ ஜூன்௴ 1௳க்குள் பின்கண்ட விலாசதாரின் கையிலிருக்கவேண்டும்.

The Secretary, The University, St. Andrews, Scotland

பிரைஸ் எடுத்தவரின் பெயர் 1917-ம் வருஷம் அக்டோபர் மீ 1ந் தேதி Athenaelum என்னும் பத்திரிகையிலும் அக்டோபர் 17-ம் தேதியில் வெளியாகும் 'Times' பத்திரிகையிலும் 1917 அக்டோபர் 20வ பிரசுரமாகும் வாராந்த "British Weekly" என்னும் பத்திரிகையிலும் பிரசித்தம் பண்ணப்படும்.

The University
St. Andrews, May 1916.

Andrew Bennett
Secretary

## நோட்டீஸ்

நாளது வருஷம் செப்டெம்பர் மாசத்துப் பத்திரிகையில் மறதியாக ஜூலைமாசத்தில் பிரசுரித்த சந்தாவரவுகளைத் திரும்பவும் அச்சிட்டிருக்கிறது. அதைத் தயவுசெய்து மன்னித்து இரண்டுதடவை சந்தா செலுத்தினதாக எண்ணாதிருக்கக் கேட்கிறேன். ஜூலை மாசத்தின் தொடர்ச்சி இதனடியில் வருகிறது. மேலும் 1916-ம் வருஷத்துக்குரிய சந்தாப் பாக்கியுள்ள சிநேகிதர் உடனே அனுப்புவிக்கும்படி கேட்கிறேன். 1917-ம் வருஷத்துக்கும் முன்பணம் செலுத்தவேண்டிய காலம் சமீபிக்கிறதென்று ஞாபகப்படுத்துகிறேன்.

### சந்தா வரவு. ஜூலை 1916.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Mrs. Katie Ammal Palamcottah | 0 | 4 | 0 | Mr. A. Rajaratnam, Salem | 0 | 7 | 0 |
| „ Yesuadial David „ | 0 | 4 | 0 | „ A. Edward Israel, Wattegama | 0 | 8 | 0 |
| Mr. V. S. Chelliah, Salem | 0 | 7 | 0 | „ A. Kulescharam Pillai | 3 | 5 | 0 |
| Mrs. T.R. Jothinayagam Ammal, Palamcottah | 0 | 4 | 0 | „ G. S. Nathaniel | 1 | 5 | 0 |
| Mr. T.E. Matthan, Kozenchery | 0 | 7 | 0 | „ I. Joseph, Nanjagampalyam | 0 | 7 | 0 |
| Rev. N. Vethamuthu, Jacobpuram | 0 | 8 | 0 | „ E. P. Stephen, Rangoon | 0 | 13 | 0 |
| Mr. G. Sundaram, Ulundurpet | 0 | 8 | 0 | „ K. E. Cherriyan, Haripad | 2 | 5 | 0 |
| „ D. Solomon, Andipatti | 0 | 5 | 0 | Rev. A. Paramanandam, Bangalore | 1 | 0 | 0 |
| Rev. P. Samuel, Munaar | 0 | 9 | 0 | Mrs. Simpson, Olive Estate | 0 | 14 | 0 |
| Mrs. Tabitha Isaac, Pakala | 1 | 8 | 0 | Mr. M. D. Adaikalam Nadar | 0 | 14 | 0 |
| Mr. A. Thambiah, Jaffna | 1 | 5 | 0 | „ G. Manuel | 0 | 14 | 0 |
| Mrs. S. Samuel Pakiam, Villupuram | 0 | 7 | 0 | Rev. K.P. Gnanakan, Vandalur | 0 | 7 | 0 |
| Mrs. M. Devaprasatham, Tenkasi | 0 | 7 | 0 | Mrs. D Samuel, Sholingar | 0 | 7 | 0 |
| | | | | Mr. M. Devanesan, Ongole | 0 | 14 | 0 |
| | | | | „ J. Jebamoni David | 1 | 1 | 0 |

N. B. பத்திரிகைக்குச் சந்தாப்பாக்கியுள்ள சகோதரர் அதை உடனே அனுப்பவும் அதோடு 1917-ம் வருஷத்துச் சந்தாவை யாவரும் முன் பணமாக அனுப்பிவிக்கவும் விரும்பிக்கேட்டுக்கொள்கிறேன்.

R. V. Asirvadam, *Manager.*

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Chirstian Brotherhood Association, Tinnevelly.

November 1916

Registered No. M. 163

27 FEB 1917

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." யோவான் 7: 38

Vol. XVII நவம்பர் 1916

## எந்தமட்டும்?

'எந்தமட்டும் அக்கிரம நினைவுகள் உன் உள்ளத்திலே தங்கும்?'
எரே. 4: 14.

நற்கிரியையாலும் துர்க்கிரியையாலும் அது நினைவிலே பூப் பூத்து, வார்த்தையில் காய்காய்த்து, செய்கையில் கனிகொடுக்கிறது. நல்நினைவு நற்செய்கைகளையும், தீயநினைவு தீயசெய்கைகளையும் பிறப்பிக்கின்றன. நாம் நமது வார்த்தைகளைக் குறித்து ஜாக்கிரதையாயிருக்கிறோம். ஏனென்றால் மற்றவர்கள் அவ்வார்த்தைகளைக்கொண்டு நாம் எப்படிப்பட்டவர்கள் என்று தீர்க்கக்கூடியவர்களாயிருக்கிறார்கள். நமது செய்கைகளைக் குறித்தும் நமக்கு ஜாக்கிரதையுண்டு. நமது நினைவுகளைக் குறித்து நமக்கு அச்சமில்லை. தகாத நினைவுகள் தாராளமாய் உள்ளத்தில் தங்க இடங்கொடுக்கிறோம். சில வருஷங்களுக்குமுன் ஒரு குரு பிரசங்கித்தபோது: பகல் 12 மணி நேரத்திற்குள் நமது இருதயத்தில் தோன்றும் துர்நினைவுகளைத் தேவன் வெளிப்படுத்துவாரானால் எவ்வளவு வெட்கமாயிருக்கும் என்றார். நினைவுகளை மனுஷர் அறியாவிட்டாலும் தேவன் அறிவாரே. 'என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர்.' சங். 139: 2.

1. அக்கிரம நினைவுகளுக்குப் பல சாயல்களுண்டு. மனுஷருடைய உள்ளத்தில் தோன்றும் நினைவுகளுக்குக் கணக்கில்லை. தகாத நினைவுகள் பலவிதமாய்த் தோன்றுகின்றன. வேதவாக்கியங்களையும் தேவவல்லமையையும் அறியாமல் தேவனைக்குறித்தும் கிறிஸ்துவைக்குறித்தும் சுவிசேஷத்தைக்குறித்தும் உண்டாகும் தப்பெண்ணங்கள் எவ்வளவு! கர்த்தாவுடைய நடத்துதலை அறியாமல் முறுமுறுக்கும் நினைவுகள் எத்தனை! தேவன் என்னைக் கவனிக்கிறதேயில்லை, எனக்கு உதவிசெய்கிறதேயில்லை, என்னை முற்றிலும் கைவிட்டார் என்கிற அவிசுவாச நினைவுகள் எத்தனை! பிறர் நன்றாயிருந்தால் அதைச் சகிக்கமாட்டாத பொறாமையான நினைவுகள்

20-11-16
16

எத்தனை! தன்னைக் குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணுகிற பெருமையான நினைவுகள் எத்தனை! மற்றவர்களைக் கெடுக்கும்படி யோசிக்கிற சதியாலோசனையான நினைவுகள் எத்தனை! மூர்க்கமும் எரிச்சலுமான நினைவுகள் எத்தனை! துன்மார்க்கத்துக்கு இசைவான அசுத்த நினைவுகள் எத்தனை! வருங்காலத்தைப்பற்றிய மனோராஜ்ய நினைவுகள் எத்தனை! இதைப்போல் எத்தனையோ தகாத நினைவுகள் மனுஷருடைய இருதயத்தில் தங்குகின்றன. இப்படிப்பட்ட நினைவுகளால் என்ன தோஷம் என்று நாம் நினைக்கலாம். கர்த்தரோ நம்மைப்பார்த்து: எந்தமட்டும் அக்கிரம நினைவுகள் உன் உள்ளத்தில் தங்கும் என்று கேட்கிறார்.

2. நினைவே மெய்யான மனுஷன். 'அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ அப்படியே அவன் இருக்கிறான்'. நீதி. 23: 7. மனுஷன் வெளித்தோற்றத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ இருதயத்தின் நினைவுகளைப் பார்க்கிறார். நாம் வெளித்தோற்றத்தைப் பார்த்துத் தீர்ப்பிடுகிறோம். ஆண்டவரோ அவனவனுடைய நினைவைக்கொண்டு அவன் இப்படிப்பட்டவன் என்று பேர்கொடுக்கிறார். அவர் வேதபாரகர் பரிசேயரைப் பார்த்து உங்களுக்கு ஐயோ, நீர் மனுஷருக்கு முன்பாக புறம்பே நீதிமான்களென்று காண்பிக்கிறீர்கள். தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார். உங்கள் உள்ளத்தில் மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள் என்றார். சகோதரரே நமது இருதயங்களைப் பார்க்கும் ஆண்டவர் நமைக் குறித்து என்ன சொல்லுவார்? இருதய நிலைமையே மெய்யான மனுஷன் கிறிஸ்தவர்களாக நாம் ஜெபிக்கலாம்; வேதம் வாசிக்கலாம், பாடலாம், ஆராதிக்கலாம், பிரசங்கிக்கலாம், ஆகிலும் நமது இருதயம் கர்த்தருக்கு முன்பாக அருவருப்பாயிருக்கலாமே. பரிசுத்தத்தைப்பற்றி நாம் எவ்வளவு பேசினாலும் காரியமில்லை. நமது உள்ளத்தில் சுத்தமுண்டா? மற்றவர்களை ஆதாயம்பண்ணும்படி நாமெவ்வளவோ ஆலோசனை சொல்லலாம். ஆனால் இருதயத்தில் ஆத்தும வாஞ்சை உண்டா? ஆ! நமது இருதயம் அக்கிரம நினைவிலும் நமது கிரியைகள் மார்க்க எழுப்புதலிலும் முயற்சியாயிருப்பது எவ்வளவோ பயங்கரம். மற்றவர்கள் நமது கிரியைகளைப் பார்த்து பக்திமான்கள் என்று நினைத்தாலும் உள்ளத்தைப் பார்க்கிற கர்த்தர் நம்மை அக்கிரமக்காரர் என்று தீர்ப்பாரல்லவோ.

3. தீயநினைவுகளுக்குவரும் தண்டனை. 'நான் அவர்கள் நினைவுகளின் பலனாகிய தீங்கை வரப்பண்ணுவேன்' என்று கர்த்தர் சொல்லுகிறார். எரே 6: 19.

வெடிமருந்துப் பட்டரையில் நெருப்பு விழுவது தேசத்திற்கு அழிவாகும். வயலில் பூச்சிவிழுவது பயிருக்குச் சேதமாகும். ஆகாரத்தில் நஞ்சு சேர்வது உயிருக்கு மோசமாகும். உள்ளத்தில் பாவநினைவு தங்குவது ஆத்துமாவுக்குக் கேடாகும். நினைவுகளின் பலனாகிய தீங்கு என்று



கர்த்தர் சொல்லுகிறார். ஆகையால் தகாத நினைவுகளைக் குறித்து நாம் கணக்குக் கொடுக்கவேண்டியதுவரும். மனுஷர் செய்யும் அக்கிரமச் செய்கைகளை தேவன் நியாயம் விசாரிப்பார். மனுஷர்பேசும் வீணான வார்த்தைகளை அவர் நியாயம் விசாரிப்பார். அப்படியே மனுஷருடைய பொல்லாத நினைவுகளையும் நியாயம் விசாரிப்பார். கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்கு முன்னே யாதொன்றையுங்குறித்துத் தீர்ப்புச் சொல்லாதிருங்கள். இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி இருதயங்களின் யோசனைகளையும் அவர் வெளிப்படுத்துவார்' என்று சொல்லியிருக்கிறது. 1 கொரி. 4: 5. சகோதரரே, நம்முடைய நினைவுகளைக் கர்த்தர் நியாயந்தீர்க்காமலும் நினைவுகளின் தீங்கு நமக்கு நேரிடாமலுமிருக்கவேண்டுமானால்; நமது பொல்லாத நினைவுகளைவிட்டு நாம் மனந்திரும்பவேண்டும். மாய வித்தை சீமோன் தேவவரத்தைப் பணத்தால் சம்பாதிக்கலாமென்று நினைத்தான். பேதுரு அவனைப்பார்த்து உன் துர்க்குணத்தைவிட்டு மனந்திரும்பி தேவனை வேண்டிக்கொள். ஒருவேளை உன் இருதயத்தின் நினைவு உனக்கு மன்னிக்கப்படலாமென்றார். அப்படியே துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டுத் திரும்பக்கடவன்' என்று சொல்லியிருக்கிறது. இப்போது நினைவின் ஜீவியத்தில் நான்கு காரியங்களை கவனிக்கிறோம். அக்கிரம நினைவுகளைக் கர்த்தர் கவனிக்கிறாரென்றும், நினைவுகளை அவர் நியாயந்தீர்க்கப்போகிறாரென்றும், அக்கிரம நினைவுகளைவிட்டு நாம் மனந்திரும்ப வேண்டுமென்றும் அப்படி மனந்திரும்பும்போது நினைவுகளின் பாவத்தை கர்த்தர் மன்னிக்கிறாரென்றும் அறிகிறோம்.

அக்கிரம நினைவுகளைத் தடுப்பதற்கு நாம் செய்யக்கூடியதென்ன?

முதலாவது, என்னுள்ளத்தில் அக்கிரம நினைவுகள் எழும்பும்பொழுது கிறிஸ்து என் பக்கத்தில் நின்று என்னைப்பார்த்து; நீ உன் இருதயத்தில் இப்படிச் சிந்திக்கிறதென்னவென்று கேட்கிறார் என்பதை உணரவேண்டும் (மாற். 2: 8). இரண்டாவது மாற்று மருந்தைக் கையாடவேண்டும். சங்கீதக்காரன் செய்ததுபோல வேததியானத்தின் மூலமாய் வீண் நினைவுகளை நாம் வெறுக்கக்கூடும். (சங். 119: 113). மூன்றாவது எந்த நினைவையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்தவேண்டும். (2 கொரி. 10: 5). இவ்விதமாய் வேராகிய நமது நினைவுகள் பரிசுத்தமாயிருந்தால் கிளைகளாகிய வார்த்தைகளும் கனிகளாகிய செய்கைகளும் பரிசுத்தமாயிருக்கும்.

கிருபை நிறைந்த பிதாவே! நினைவுகளின் பாவங்களை எங்களுக்கு மன்னித்து உன்னத ஆவியினாலும் ஆட்டுக்குட்டியின் திரு ரத்தத்தினாலும் எங்களிருதயத்தின் சிந்தனைகளைச் சுத்தம்பண்ணியருளும். ஆமென்.

S. பரமானந்தம்.

## பரம தரிசனம்

**'நான் அந்தப் பரம தரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை.' (அப். 26: 19).**

'இந்த நாட்களில் திருச்சபையின் பொறுமையைச் சிந்தித்துப் பார்த்தோம். வெற்றி சிறப்பின்காலம் இன்னமும் வரவில்லை. மணவாளன் வரக் காத்திருக்கிறோம. அப்புறம் போனவாரம் திருச்சபையின் சாட்சியையும் கவனித்தோம். 'கர்த்தர் வருமளவும்' அவருடைய மரணத்தைத் தெரிவிக்கவேண்டியது மெய் விசுவாசியினுடைய கடமை. இராப்போஜன முறைமையிலும் நம்முடைய பரிசுதத ஜீவியத்தினாலும் அந்தப் புண்ணியமரணத்தின் மகத்துவத்தை எடுததுக் காட்டுவோமாக. இன்றைககுத் திருச்சபையின் வேலை, முயற்சி; ஊழியம இவைகளை கருதித்து நாம் தியானம் பண்ணுவது மெத்த அவசியம். ரக்ஷணிய பிரபுவாகிய கிறிஸ்துநாதர் தம்முடைய சீஷர்களை விட்டுப்பிரிந்து பரத்துக்கு ஏறிப்போகு முன்னமே சுவிசேஷ திரவியங்களை அவர்களிடத்தில் ஒப்புவித்து 'நான் திரும்பி வருமளவும் இதைக்கொண்டு வியாபாரம் பண்ணுங்கள்' என்று உத்தரவு அருளினார். (லூக. 19: 13). அப்படியே செய்துவருகிறோமா? லோக வியாபாரம் பண்ணுகிறோம ஆககும். கல்வி வியாபாரம் செய்கிறோமாக்கும். சுவிசேஷ வியாபாரம் செய்கிறோமா? தங்கள் வசம் ஒப்புவிக்கப்பட்ட இந்த அருமையான திரவியங்களை ஒரு சீலையிலே வைததுக்கட்டி அதை மறைத்துப்போட்ட கிறிஸதவர்கள் ஒருவருமில்லையா? சகோதரரே! 'ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம வருகிறது.' நாம் நித்திரை தெளிந்து எழும்பிப் பிரகாசிப்போமாக. இங்கிலாநதிலுள்ள ஒரு ராணியவர்கள் அந்தியகாலம் வந்தவுடனே அதிகமாயப் பிரலாபித்து 'இன்றைக்கு நான் சாக வேண்டும். இனி ஒருநாளாவது உயிரோடிருககக்கூடுமானால் என் ராஜ்யததை எல்லாம் சந்தோஷமாய்க் கொடுப்பேன்' என்று வருத்தப்பட்டுப் போனார்களாம். ஆ! பரம எஜமான் திரும்பிவரும்போது அநேக கிறிஸ்தவர்கள் அப்படியே பிரலாபிக்க வேண்டியதாய்வரும். 'இனி ஒருநாளாவது சுவிசேஷததைப் பிரசங்கிக்க, ஆததுமாககளை ஆதாயப்படுத்த, இயேசுவின் நாமத்தை மகிமைப்படுத்த, சிலாக்கியம் பெறுவேன் ஆனால் என் பூஸ்திதியை விட்டுவிடுவேன், என் உலகக கவலைகளை விட்டுவிடுவேன். எந்தத் தடை இடையூறுகளையும் தள்ளிபபோட்டு விடா முயற்சியாய் ஊழியம் செய்வேன்' எனறு அப்போது கெஞ்சிக்கேட்பது விருதா. சிநேகிதரே! காலம சுருக்கம 'ராஜாவின் காரியம் அவசரமானபடியால' நாம் ஆத்திரப்பட்டு சுவிசேஷ வியாபாரம் செய்வோமாக.

பவுல் அப்போஸ்தலனை திருஷ்டாந்தமாக வைத்துக்கொள்வோம். **'இனி இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருப்பவர்களுக்குத் திருஷ்டாந்தம் உண்டாகும்பொருட்டு......இரக்கம் பெற்றேன்' என்று அவரே சொல்லுகிறார். (1 தீமோ. 1: 16).**



அவருடைய குணப்படுதலைப் பார்த்தாலும் நமக்கு முன்மாதிரியாயிருக்கிறார். கிறிஸ்துநாதர் தரிசனமானவுடனே அவருக்குக் கீழ்ப்படிந்தார்; உலகக் கீர்த்தியோ, கல்விமேன்மையோ, வம்சப்பெருமையோ சகலத்தையும் சமூலமாக வெறுத்துவிட்டார். இனி 'கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்' என்று தீர்மானம் பண்ணினார். ஒரு கையினால் கிறிஸ்து மார்க்கத்தையும் மற்ற கையால் உலக நேசத்தையும் பற்றிக்கொள்ள அவர் நினைக்கவே இல்லை. மனமாறுதல், நடக்கை மாறுதல், பூரண மாறுதல். அவருடைய ஊழியத்தைக் கவனித்தாலும் நமக்கு ஏற்ற மாதிரியாயிருக்கிறார். குணப்பட்டவுடனே இயேசுவைப் பிரசங்கித்தார். வருத்தம் நேரிட்டாலும் ஊழியம்செய்தார். அப்புறம் அவர் எடுத்த பிரயாணங்கள் எத்தனை! அவர் சந்தித்தபட்டணங்கள் எத்தனை; அவர் அனுபவித்த மோசங்கள் எத்தனை; கிறிஸ்துவின் அன்பினாலே நெருக்கி ஏவப்பட்டு அவர் ஆதாயமாக்கின ஆத்துமாக்கள் எத்தனை; நல்ல போர்ச்சேவகன்; உண்மையுள்ள ஊழியக்காரன்! உத்தம அப்போஸ்தலன்! அவருடைய ஊழியப் பிரயாசம், பிரயத்தனம், ஜீவியம் இவைகளை எல்லாம் ஒன்றாகத்திரட்டி ஒரு வார்த்தையில் சாட்டவேண்டுமோ? இதோ! இந்தச் சிறுவசனத்தில் அடங்கியிருக்கிறது. **'நான் பரம தரிசனத்துக்குக் கீழ்ப்படியாமலிருக்கவில்லை.'** பவுல் அப்போஸ்தலனே, உம்முடைய ஊக்கம் வைராக்கியத்துக்குக் காரணம் என்ன? என்று கேட்போமானால் இவ்விதமாக மறு உத்தரவு சொல்வார். **'நான் பரம தரிசனத்துக்குக் கீழ்ப்படியாமலிருக்கவில்லை.'** மூன்று விசேஷித்த சமயங்களில் பரிசுத்த பவுல் தரிசனம் கண்டார். அந்த மூன்று தரிசனங்களாலே உண்டான பலனும் மாறுதலும் இவ்வளவென்று சொல்லிமுடியாது.

I. **திருவுளச் சித்த தரிசனம்.** அப். 26: 13—20. சவுல் என்பவனுக்கு நம்முடைய இரட்சகர் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தினார். அந்த மனிதன் கர்வங்கொண்டு கிறிஸ்து மார்க்கத்தை அழித்துப்போட சீறிவந்த சமயத்தில் ஆண்டவர் கிருபைசெய்தார். அவனைத் தயவோடு சந்தித்தார். அவனைக் குணப்படுத்தினார். அது மாத்திரமா? அந்தச் சண்டாளத் துரோகியைத் தம்முடைய சிநேகிதனாகச் சேர்த்துக்கொண்டார். அந்தப் பிரதான பாவியைப் பணிவிடைக்காரனாக ஏற்றுக்கொண்டார். அந்தக் கொடிய விரோதியை அப்போஸ்தலனாக்கினார். 'சூரியனுடைய பிரகாசத்திலும் அதிகமான ஒளி வானத்திலிருந்து அவனைச்சுற்றிப் பிரகாசித்தது' என்று வாசிக்கிறோம். ஆம்! அதோடுகூட அவருடைய இருதயத்தில் ஞான வெளிச்சமும் உதயமாயிற்று. அந்த வெளிச்சத்தினாலே பரம இரகசியங்களை அறிந்துகொண்டார். ஆண்டவருடைய சித்தத்தையும் அறியலானார். கிறிஸ்துநாதர் காணாமற்போன ஆடுகளுக்காகப் பரிதபித்து அவர்

ள்மேல் மனதுருகி, அவர்களை ரட்சிக்கச் சித்தமுள்ளவராக அந்த சமயத்தில் விளங்கினார். உலகத்தாருடைய அபாய ஸ்திதியைச் சவுலுக்குக் காண்பித்தார். 'அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும் சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன்' என்று திருவுளம்பற்றினார். பவுல் அப்போஸ்தலன் அந்தப் பரம தரிசனத்தைக்கண்டு மாறுதலடைந்தார். 'எல்லா மனுஷரும் ரக்ஷிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்' என்று அறிந்துகொண்டார். அந்தத் தரிசனத்தினாலும் அறிவினாலும் புது மனுஷனானார். பூமியிலிருந்து எழுந்து காலூன்றி நிற்கும்போது எஜமானுடைய சித்தத்துக்குத் தம்மை ஒப்புக்கொடுத்தார். அதுமுதல் அவருக்கு வேறே யோசனை, வேறே ஆசை ஒன்றுமில்லை. குணப்படாத பாவிகள் மனந்திரும்பவும் ஆண்டவருடைய சித்தம் நிறைவேற வேண்டுமென்பதே அவருடைய முழுவாஞ்சை. 'அருள்நாதருடைய சித்தம் அறிந்தேன். அந்தப் பரம தரிசனத்துக்கு நான் கீழ்ப்படியாமலிருக்கவில்லை'

மொரேவியர் (Moravians) சபையைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். சுவிசேஷ பிரபல்லிய விஷயத்தில் அது முதல்தரமான சபை. அதிலே,—தாய்ச் சபையின் தொகையைவிட—சுதேச சபைகளின் தொகை அதிகமாம். அந்தச் சபையின் சம்பந்தமாக இந்த வேலைக்கென்று தங்களை ஒப்புக்கொடுத்த அவர்களுடைய சங்கதி தெரியுமா? தூரதேசத்திலிருந்து ஒருவன் வந்து காப்பிரி ஜனங்களுடைய நிலைமையைக் குறித்து விபரமாய்த் தெரியப்படுத்தினான். அவர்கள் அடிமைகளும் முற்றிலும் அறிவீனரும் கிறிஸ்துவைப்பற்றிக் கேள்விப்படாத மிலேச்சருமாயிருக்கிறதாக அறிவித்தான். மேலும் அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டுமென்றால் வேறே வகையில்லை. அவர்களைப்போல அடிமைகளாகி அவர்கள் நடுவில் வாசம்பண்ணி அவர்களைப்போல அடிமைவேலை செய்தால் மாத்திரம் முடியும்; மற்றப்படி முடியாது என்றும் தெரிவித்தார். அதைக்கேட்ட சபையார் பரிதாபப்பட்டு வெகுநேரம் ஜெபம்பண்ணின பின்பு இரண்டு மனுஷர் இரட்சகரின் நிமித்தம் தங்களை அடிமைகளாக விற்றுப்போடுவோம் என்று தீர்மானித்து தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். அடிபட்டாலும் சரி, படாத பாடுகளை எல்லாம் அநுபவித்தாலும் சரி, அந்த மிலேச்ச ஜனங்களுக்கு ரக்ஷிப்பின் சுவிசேஷத்தை அறிவிக்கிறது அருள்நாதருடைய சித்தம் என்று நிச்சயித்து அந்தத் திருவுளச் சித்தத்தை நிறைவேற்றத் தங்களைப் பிரதிஷ்டை செய்தார்கள். பார்த்தீர்களா? 'பரம தரிசனத்துக்கு அவர்கள் கீழ்ப்படியாமலிருக்கவில்லை' நிசந்தான். அவர்கள் நினைத்தபிரகாரமாய் காரியம் நடக்கவில்லை. அடிமைகளாகப்போக நேரிடவில்லை. அவர்களில் ஒருவனுக்குத் தச்சுவேலை தெரிந்ததாலே அந்த



அஞ்ஞான தேசத்தில்போய்ச் சேரும்போது தச்சனாக ஜீவனம்பண்ணினான். அவனுக்குக் கிடைத்த தச்சுக்கூலியால் இரண்டு பேரும் சாப்பிட்டுச் சந்தோஷத்தோடு ரக்ஷண்ய சத்தியத்தைக் கூறிவந்தார்கள். சகோதரரே! ஆண்டவருடைய சித்தம் இன்னதென்று நமக்கு நன்றாய்த் தெரியும். 'உலகமெங்கும் போய்ச் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்' அப்படியானால் கீழ்ப்படிகிறோமா? ஆ! முதலாவது நாமே குணப்படவேண்டும். இரட்சகரை அறியாத மனிதன் இதிலே ஏற்பட்டு ஊழியம்செய்வது எப்படி? முதலாவது குணப்படவேண்டும். அப்புறம் ஊழியம்செய்யவேண்டும். உயிரில்லாத வஸ்து இந்தப் பலிப்பீடத்துக்கு உதவாது. ஜீவனற்ற ஆத்துமா இந்த வேலையில் பிரயோஜனப்படாது. சகோதரனே! சகோதரியே! நீ மெய் விசுவாசியானால் 'உன்னை அனுப்புகிறேன்' என்று சொல்லுகிறார். (Enlarge). திருவுள சித்தத்துக்கு இணங்கிப் பரம தரிசனத்துக்குக் கீழ்ப்படிய ஆயத்தமா?

II. உலக ஸ்திதி தரிசனம். அப். 16: 9, 10. பவுல் அப்போஸ்தலன் கிறிஸ்துநாதருடைய சித்தத்தை அறிந்து புறஜாதியார் இரட்சிப்பை அடையும்படி இயன்றமட்டும் பிரயாசப்பட்டுவந்தார். ஒரு தரிசனத்தைக் கண்டிருந்தார்; இன்னொரு தரிசனத்தையும் அவர் கண்டறியவேண்டும். முதல்படியில் நின்றார். இரண்டாம்படியில் அவர் ஏறிநிற்கவேண்டும். ஆண்டவருடைய சித்தத்தை உணர்ந்துகொண்டார். பாவிகளுடைய அபாய ஸ்திதியையும் அவர் உணரவேண்டும். சின்ன ஆசியாவிலே தங்கிப் பிரசங்கம்பண்ணப் பார்த்தார். தூரதேசத்துக்குப்போக அவர் நினைக்கவில்லை. சில இடங்களில் சுவிசேஷத்தைக் கூற அவர் பிரயத்தனம் செய்தும் வேலை அநுகூலப்படவில்லை. தேவாவியானவர் அவரைத் தடுத்தார். இன்னும் அக்கம்பக்கத்தில் தேசாந்தரவேலை செய்யலாம் என்று புறப்பட்டார்; அங்கேயும்போக ஆவியானவர் ஒட்டாதிருந்தார். (அப். 16: 7, 8). அப்போது அப்போஸ்தலன் துரோவா பட்டணத்தில் வந்து காத்திருந்தார். அது கடல் ஓரமாயுள்ள ஒரு பட்டணம். கடலுக்கு அப்பாலே ஐரோப்பாக் கண்டம் இருந்தது. கடலைப் பார்க்கும்போது அவர் மயங்கி இருக்கலாம். கடலைக் கடந்து தூரதேசத்துக்குப்போக எனக்கு இஷ்டமில்லை என்று அவர் நினைத்திருக்கலாம். அல்லது ஜெபத்தில் போராடி ஆண்டவருடைய சித்தத்துக்குத் தன்னை ஒப்புவித்து 'எனக்கு வழிகாட்டும் என்னை அங்கே அனுப்பினாலும் போக ஆயத்தமாயிருக்கிறேன்' என்று அவர் மன்றாடியிருக்கலாம். எப்படியும் 'ராத்திரியிலே பவுலுக்கு ஒரு தரிசனமுண்டாயிற்று' &c. (Read). அங்கே நின்று அழைத்த மனிதன் அந்நியனும் அஞ்ஞானியுமாய் இருந்தான். தன்னுடைய தேசத்தின் பரிதாபங்களைக் காட்டினாற்போல, தன் கைகளை நீட்டி மன்றாடியும் அல்லது கிறிஸ்தவனுடைய பாததில் விழுந்து கெஞ்சிக்கேட்டும் 'நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவிசெய்யவேண்டும்' என்று வேண்டிக்கொண்டான்,

அப்போஸ்தலன் பார்த்தார், இறங்கினார்; திடீரென்று அந்தத் தரிசனம் போய்விட்டது. அந்நியனும் போய்விட்டான். என்றாலும் பவுல் அப்போஸ்தலன் உணர்வு அடைந்தார். 'அந்தப் பரம தரிசனத்துக்கு அவர் கீழ்ப்படியாமலிருக்கவில்லை' இது தேவனுடைய சித்தம் என்று நிச்சயித்து தாமதம் செய்யாமலும் ஆட்சேபனை சொல்லாமலும் உடனே மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டுப்போனார். சகோதரரே! உங்களைச் சூழ்ந்திருக்கிற புறமதஸ்தருடைய நிலைமையை உணருகிறீர்களா? குணப்படாத பாவியின் முடிவு நித்திய மரணம் என்று உணருகிறோமா? நம்முடைய சங்கத்தார் இந்த மூன்று வருஷங்களில் அதிகப் பிரயாசை எடுத்துக் கொண்டிருக்கையில் நாம் சுகமாய் உட்கார்ந்து சோம்பலாயிருக்கலாமா? அப்படியானால் நாம் கிறிஸ்தவர்களா? சுவிசேஷ திரவியங்களை உங்கள் சீலையில் கட்டிக்கொண்ட சிநேகிதரே! எஜமான் வருமுன் மனந்திரும்பி வேலைசெய்யுங்கள்.

சீர்மை தேசத்தில் ஓர் உத்தம குரு இருந்தார். அவர் பேர்போன பிரசங்கி. சொந்த ஜனங்களுடைய நடுவிலே அநுகூலமான ஊழியத்தைச் செய்துவந்தார். அநேகருடைய ரக்ஷிப்புக்குக் கருவியானார். அவர் எங்கே போனாலும் அவர் பிரசங்கத்தைக் கேட்கத் திரளான ஜனங்கள் கூடிவருவார்கள். ஆனால் ஆப்பிரிக்கா தேசத்தில் சுவிசேஷத்தை அறிவிக்க தேவனால் அழைக்கப்பட்டார். குருவாகப்போக ஆயத்தப்படும்போது அவருக்கு அத்தியக்ஷப்பட்டம் கொடுத்தார்கள். வேண்டாம் என்று அவர் திரும்பத் திரும்ப மறுத்தும் அத்தியக்ஷராக அவரை ஏற்படுத்தினார்கள் அவரை அறிவேன். அவருடைய முழு ஆசை என்னவென்றால் ஆப்பிரிக்காவில் இயேசுவை மகிமைப்படுத்தவேண்டுமென்பது. ஆப்பிரிக்கா தேவனுடைய பலிப்பீடம் அந்தப் பலிப்பீடத்தின்மேல் சிலர் வந்து தங்களைக் கட்டிவைத்து தகனிக்கப்படுகிறதற்குத் தங்களை ஒப்புக்கொடுக்க தேவன் காத்திருக்கிறார்' என்று சொல்லுவார். நடந்த காரியம் தெரியுமா? சமுசார சகிதமாய் புறப்பட்டுப்போனார். கொஞ்சக் காலத்துக்குள் ஒரே நாளில் அவரும் அவர் மனைவியும் திடீரென்று வியாதிப்பட்டு மரித்தும் போனார்கள். கர்த்தருடைய பலிப்பீடத்தில் தங்களை மனமறியக் கட்டி வைத்தார்கள். சுகந்தவாசனையாகத் தங்களைத் தகனித்துச் சர்வாங்கபலியாகச் செலுத்தினார்கள்.

பிரியமான சகோதரரே! ஆண்டவருடைய சித்தத்தை நாம் அறிந்துகொள்வோமாக. அதோடு உலகத்தாருடைய மோசமான நிலைமையையும் உணருவோமாக.

III. காரியசித்தி தரிசனம். அப். 18: 9, 10. இப்போது இந்த உத்தம அப்போஸ்தலன் அதிக உற்சாகத்தோடு சுவிசேஷ சத்தியங்களைப் பிரசித்தப்படுத்திவருகிறார். கிறிஸ்துநாதருடைய சித்தத்தை அறிந்தவராகவும் பாவிகளுடைய நிலைமையை உணர்ந்தவராகவும் சுற்றித்திரிந்து முழு



பெலனோடும் அதிக வைராக்கியத்தோடும் அருமை ரட்சகருடைய போன்பை எங்கும் அறிவித்துவருகிறார். ஆனாலும் அநேக இடையூறுகள் நேரிட்டது விரோதம் செய்வார் பலர். குணப்பட்டு விசுவாசிகளானவர்களோ சிலர் அடிக்கடி அவருடைய மனம் சோர்ந்துபோகத்தக்கதாக துன்பங்களும் விரோதங்களும் நேரிட்டன விசேஷமாய் கொரிந்து பட்டணத்தில் பலவித வருத்தங்கள் உண்டாயின. அதிக ஊக்கத்தோடு பிரசங்கித்தும் ஒருவரும் குணப்பட இல்லை. அவருடைய மனமடிவு அதிகம். யூதஜனங்கள்மேல் விசனமாகி 'உங்கள் ரத்தப்பழி உங்கள் தலையின்மேல் இருக்கும்' என்று தன் வஸ்திரங்களைச் சாட்சியாக உதறவேண்டியதாய் நேரிட்டது. அப்புறம் புறஜாதியாருக்குப்போய்ப் பிரசங்கிக்கும்போது சிலர் நம்பி விசுவாசித்துக் கிறிஸ்தவர்களானார்கள். 'ராத்திரியிலே கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி, நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே. நான் உன்னுடனே கூட இருக்கிறேன்:..................இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு' என்றார். அதாவது சோர்ந்துபோன மனதை ஆற்றி உற்சாகப்படுத்தும்படி 'நீ உண்மையோடு ஜீவ விதையை விதை. அது கெட்டுப்போகாமல் நல்ல பலனைக்கொடுக்கும். இந்த வயல் நிலங்களில் ஏராளமான விளைச்சல் உண்டாகும்' என்பதுபோல தம்முடைய ஊழியக்காரனைத் தைரியப்படுத்தினார். Krapt என்பவர் ஆப்பிரிக்கா தேசத்தின் கீழ்பாகத்தில் உழைக்கும்போது மனைவியையும் அருமைப்பிள்ளையையும் சாகக்கொடுத்தார். அப்புறம் தனிமையாயிருந்தார். சுதேச கிறிஸ்தவர்கள் ஒருவருமில்லை. என்றாலும் அவருடைய காதிலே ஆண்டவருடைய உறுதிவாக்கு தொனித்தது.

'இந்த தேசத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு' என்பதே. தைரியமடைந்து ஊழியம் செய்தார். இப்போது பாருங்கள்! உகந்தா தேசத்தைக் கவனித்துப்பாருங்கள். உண்டான பலன் எவ்வளவு ஏராளம். பாளையங்கோட்டை சபையாரே! உங்கள் எஜமானுடைய கட்டளையைக் கேளுங்கள். 'நீ பயப்படாமல் பேசு. இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு' போய்ச்சொல்லுங்கள். மவுனமாயிராதேயுங்கள்.' பவுல் அப்போஸ்தலன் 'அந்த பரமதரிசனத்துக்குக் கீழ்ப்படியாமல் இருக்கவில்லை', பேசினார். பிரசங்கித்தார்; அந்தப் பட்டணத்தில் ஒரு பெரிய சபை உண்டாயிற்று. இப்படிப்பட்ட வேலை ஒருபோதும் பலனற்றதாய்ப்போகாது. தேவனே! என்னை ரக்ஷிக்கும் தேவனே! ரத்தப் பழிக்கு என்னை நீங்கலாக்கிவிடும்.

இப்போது இந்த மூன்று தரிசனங்களைச் சிந்தித்துப் பார்த்தோம்; கீழ்ப்படியப்போகிறோமா? ஒருகாலத்தில் இங்கிலாந்தில் புது வியாபாரம் என்று சொல்லி ஒரு கம்பெனியை ஸ்தாபித்தார்கள், அதிக லாபம் கிடைக்கும் என்று ஏறக்குறைய எல்லாரும் அதிலே சேர்ந்துகொண்டார்கள். பிரபுக்களும் அதற்கு ஓடிவந்தார்கள்; ஏழைகளும் தங்கள் பணத்தை ஒப்பு

வித்தார்கள். எங்கேபோனாலும் அது ஊர்ப்பேச்சாயிருந்து வியாபார வைத்தியம் எங்கள் தேசத்தைப் பிடித்ததுபோலிருந்தது. கொஞ்சக் காலமான பிற்பாடு அது நீர்மேல் குமிழிபோல ஒன்றுமில்லாமல் போய்விட்டது. எல்லாரும் நஷ்டமடைந்தார்கள். தங்கள் சொத்துக்களை எல்லாம் இழந்துவிட்டார்கள். அதினாலே அதற்கு 'நீர்குமிழி கம்பனி' என்று பேர். இத்தக்காலத்திலும் (சொல்லவேண்டுமானால் இந்தச்சபையிலும்) நீர்க்குமிழி கிறிஸ்தவர்கள் இல்லையா? கிறிஸ்துநாதருடைய வியாபாரம் அப்படி அல்ல. என்றைக்கும் நிலைக்கத்தக்க சுவிசேஷ திரவியங்களை நம்முடைய கையில் கொடுத்து 'நான் திரும்பிவருமளவும் இதைக்கொண்டு வியாபாரம் பண்ணுங்கள்' என்கிறார். திரவியம் மெத்த அருமையானது; அதின் வியாபாரமும் கண்ணியமானது; லாபமும் அதிகம். ராஜாவினுடைய வருகையும் சமீபம். பரமதரிசனத்துக்குக் கீழ்ப்படிந்து நம்மை முற்றிலும் ஒப்புக்கொடுத்து ஊழியம் செய்வோமாக.

Rev. T. Walker.

## ஜெபம் வல்லமையான காரியங்களை நடப்பிக்கும்

(தொடர்ச்சி)

ஜெபத்தைப்பற்றி நான் சொல்ல விரும்புகிற இரண்டாவது வசனம் பரி. மாற்கு சுவிசேஷத்திலிருக்கிறது. பரி. மாற்கு 11: 22. இந்த வார்த்தைகள் ரட்சகருடைய ஜீவியத்தின் கடைசி வாரத்தில் பேசப்பட்டவைகள். அத்திமரத்தைப்பற்றிய சம்பந்தமாய் வருகிறது. ரட்சகர் அத்திமரத்தைச் சபித்தார். அது பட்டுப்போயிற்று. ஒரே வார்த்தை சொல்ல இப்படி நடந்ததை ஜனங்கள் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். ஜெபத்தைக் குறித்த போதனை மாத்திரமல்ல, வேறு போதனைகளும் இந்தச சரித்திரத்திலிருந்து அறியலாம. இஸ்ரவேல் ஜனங்களுடைய நிலைமையைக் காட்டும் ஓர் உவமையென்று சொல்லலாம். அந்த அத்திமரம் இஸ்ரவேல் ஜனங்களைக் குறிக்கிறது என்று சொல்லக்கூடுமேயல்லாமல், ரட்சகர் அதைச் சபித்ததின் திட்டமான முகாந்தரம் இன்னதென்று நமக்குத் தெரியாது. இஸ்ரவேலர் தங்களுக்கு ஜீவனாக வந்தவரை ஏற்றுக்கொள்ளாமல் தள்ளிவிட்டதால் அவர்களுக்கு மரணம் குறிக்கப்பட்டது. இப்படி சீக்கிரமாய் நடந்ததைச் சீஷர்கள் கண்டு பிரமித்தார்கள். காலையில் அத்திமரத்தோடு பேசினார். சாயங்காலத்தில் அது பட்டுப்போயிற்று. அவர்கள் இதைக குறித்துப் பிரமித்துக்கொண்டிருக்கும்போது 'தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்' என்று ரட்சகர் சொன்னார்.

ஜெபத்திற்கு விசுவாசம் அத்தியாவசியமென்றாலும் அதுதான் முக்கியமானதல்ல. ஜெபத்தில் முக்கியமானவர் தேவன். நாம் நோக்கிப்பார்க்கவேண்டியது நமது விசுவாசமல்ல, தேவனே. அவரிடத்தில் விசுவாசமா



யிருக்கவேண்டும். ரட்சகருடைய வார்த்தையைப் பாருங்கள். உலகமுழுவதிலும் செய்யக்கூடாத ஓர் காரியத்தை அதாவது ஒரு மலை பெயர்ந்து கடலில் போய்விழும் என்கிறார். 'எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி' நீ ஒரு மலைப்பிரதேசத்தில் வாசித்தால், அல்லது மலைநாடான ஓர் தேசத்தை உன் மனதில் நினைத்துக்கொண்டால் அப்போது நீ பார்க்கிற அல்லது நினைக்கிற மலையானது தானாய்ப் பெயர்ந்து சமுத்திரத்தில் போய்விழும் என்று எண்ணக்கூடுமா? கூடாது. மனுஷர் தங்கள் ஆயுதங்களைக்கொண்டு மலையைப் பெயர்த்துத் தள்ளுவார்கள். ஆனால் மலை பெயர்ந்து தானாய்த் தள்ளுண்டுபோம் என்பது இங்கே சொல்லப்படுகிற காரியம்.

அந்த மனுஷன் குணமாகிறது கூடாத காரியம், அல்லது அந்தத் தடை நீங்குவது நடக்கிற காரியமல்ல என்று நீ நினைக்கலாம்.

நம் எஜமான் நாம் இப்படிப் பலவிதமாய் சிந்திப்போம் என்றெண்ணி அவர் சொல்லுகிற விதத்தை கவனியுங்கள். 'நீங்கள் இந்த மலையைப் பார்த்து நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ' என்பீர்கள் என்கிறார். ஜெபம் மலையில் கிரியை செய்கிறது என்பதை கவனியுங்கள். மலையென்பது கஷ்டத்தைக் குறிக்கிறது. அதாவது தடைகளைக் காட்டுகிறது. ஜெபத்தின் முக்கிய நோக்கம் தடைகளை நீக்குவதுதான். ஜெபம் உள்ளாக மனுஷனின் இருதயத்துக்குள் கிரியைசெய்து வெளியாக கஷ்டத்தை நீக்குகிறது.

இருதயத்தில் சந்தேகியாமலிருக்கவும் வேண்டும். இதுதான் விசுவாசமின்னதென்று தெரிவிக்கிறது. ரக்ஷகர் ஜெபம் செய்யத்தாவக்கு கிறபோது 'இந்தக் காரியம் நடக்குமா? நான் கேட்கிறபடி நடக்கிறது அரிதுதான், ஆனாலும் நடக்கும் என்று நம்புகிறேன்' என்று பூரண நிச்சய முடையவராயிருந்தார். இருதயத்தில் சந்தேகியாமல் என்றால் பூர்வத்தில் சாராள் கூடாரத்தின் மறைவிலிருந்து இப்படி நடக்குமா என்று நகைத்தது போல் இராமலிருப்பதே. தேவன், தொண்ணூறு வயதான இந்த ஸ்திரீயினிடம், இயல்பின் ஒழுங்குமாறி ஒரு பையன் இந்தக் கூடாரத்தை சந்தோஷிப்பிப்பான் என்றார். சாராளோ நகைத்தாள இந்தக் காரியம் நடக்க முடியாது என்று சந்தேகித்தாள். எஜமானே கூடாரத்தின் மறைவிலே நின்று நகைக்கவேண்டாம் அதாவது இருதயத்தில் சந்தேகிக்கவேண்டாம். கர்த்தர் சொன்னபடி நடக்கும் என்று நம்பு அப்பொழுது உனக்குண்டாகும் என்கிறார்.

அடுத்த வசனங்களையும் கொஞ்சம் வாசிப்போம். அது மன்னிப்பைக் குறித்துச் சொல்லுகிறது, விபரமாய்ச் சொல்லுகிறது. 'நீங்கள் நின்று ஜெபம்பண்ணும்போது ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்

களை உங்களுக்கு மன்னிக்கும்படி அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்' அதாவது நீ ஜெபம்செய்யும்போது தேவனுக்கேற்காத ஏதாவது காரியம் உன்னிலிருக்கக் காண்பாயானால் அந்தக் காரியம் நீங்குகிறது. ஜெபம் பரிசோதிக்கிறது. இருதயத்தைக் காட்டுகிறதற்கு முழங்காலைப்போல் நல்ல கண்ணாடி வேறில்லை. முழங்காற்படியிடும்போது அவருக்குப் பிரியமில்லாத காரியத்தை நீ கண்டாயானால் அது நீங்கவேண்டியதாயிருக்கிறது என்று எஜமான் சொல்லுகிறார். நீ அமரிக்கையாய் முழங்கால்படியிடும் போது ஆவியானவர் மெல்லிய சத்தமாய் உன்னைப் பார்த்து, 'உன் ஜீவியத்தில் இன்னமாறுதல் செய்யப்போகிறேன்' என்பாரானால் அது உடனே நடக்கிறது.

---

## 'ஸ்திரீயே, உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய்'.

பரி. லூக். 13: 12.

நமது அருமை ரட்சகர் ஓய்வுநாளில் நடப்பித்த எழு அற்புதங்களில் இது ஒன்று. இயேசுவின் அற்புதங்கள் சரீரக்குறைவை நீக்குகிறவைகளாயிருந்தாலும் ஆவிக்குரிய ஞானபோதனைகளைப் புகட்டுவதே ரட்சகரின் நோக்கம். திமிர்வாதக்காரனை சொஸ்தமாக்கின சமயத்தில், 'பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரமுண்டென்பதை நீங்கள் அறியவேண்டும்' என்று சொல்லி திமிர்வாதக்காரனை நோக்கி, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்றார். கூனியான இந்த ஸ்திரீயைச் சுகமாக்கின விஷயத்திலும் நமக்கு நல்ல ஞானபோதனைகளுண்டு.

முதலாவது, அவளுடைய நோய். இந்த நோய் விசேஷித்தது. இந்த நோயின் முகாந்தரமும் விசேஷித்தது. 'பலவீனப்படுத்தும் ஆவி' என்றும் 'சாத்தானால் கட்டப்பட்டவள்' என்றும், 'எவ்வளவும் நிமிரக்கூடாத கூனி' என்றும் சொல்லியிருக்கிறது.

சாத்தானால் கட்டப்பட்டவள். சாத்தானுக்கும் வியாதிக்கும் சம்பந்தமிருக்கிறதாக ஆண்டவர் தாமே சொல்லுகிறார். பழைய ஏற்பாட்டில் யோபின் சரித்திரத்தைப் பார்க்கும்போது தேவன் உத்தரவுகொடுத்தால் மாத்திரம் சாத்தானுக்கு நமது சரீரத்தின்மேல் உத்தரவுகொடுத்த அளவு மட்டும் அதிகாரமுண்டு. சாத்தான் சரீரத்தைப் பலவிதமாய்க் கட்டப்பார்க்கிறான். ரட்சருடைய அற்புதங்களில் இவற்றைப் பார்த்தால், 'ஊமையான ஆவி' அசுத்த ஆவி, நுரைதள்ள அலைக்கழிக்கும் ஆவி, பலவீனப்படுத்தும ஆவியாகிய பலவித ஆவிகள் மனுஷரைப் பிடித்திருக்கிறது. இதினால் அசுத்த ஆவிதான் வியாதிகளுக்கெல்லாம் காரணமென்றாவது வியாதிகளுக்கு மருந்து உபயோகிப்பது கூடாது என்றாவது சாதிப்பது



காலின்கீழ்
புத்தியீனம். சாத்தானுடைய தலை அருமை ரட்சகருடைய
சிலுவைமரத்தில் நசுக்கப்படும் வரைக்கும் சாத்தான் மிகுந்த பலமாய்த்
தேவ குமாரனோடு போர்செய்ய இடம் கொடுக்கப்பட்டது என்று சொல்ல
லாம். ரட்சகர் ஜெயவேந்தராய் உயிர்த்தெழுந்தபின் அப்போஸ்தலருடைய
சரித்திர காலத்திலாவது ஆதிச் சபையின சரித்திரத்திலாவது சாத்தான்
இவ்வளவு பலமாய் மனுஷருக்குள் கிரியை நடப்பித்ததாக நாம வாசிக்கிற
தில்லை. ஆனால் சாததான் ஆவிக்குரிய பிரகாரமாய் அநேகரைக் கட்டிப்
பலவீனப்படுத்துகிறான். யார் யாரை என்னென்ன பாவம் ஆட்கொண்டி
ருக்கிறதோ அவர்கள் சாத்தானால் கட்டப்பட்டுப் பலவீனப்படுத்தும
ஆவியை உடையவர்களாயிருக்கிறார்களென்றே சொல்லவேண்டும். பெருமை
சரப்பணியைப்போல் சிலரைக் கட்டிக்கொள்ளுகிறது. தன்னயம், உலக
நேசம், பொருளாசை, பொறாமை முதலிய அசுத்த ஆவிகள் பலரைச் சுற்
றிக்கொள்ளுகிறது. அவர்கள், அந்தக் கட்டை அவிழ்க்கக்கூடாமல் அப்
பாவங்களால் நாளடைவில் பெலவீனப்படுகிறார்கள். மலைகளில் ஓர்விதப்
பெரிய பாம்புண்டு. அதற்கு இங்கிலிஷில போவா கான்ஸ்றிரிகற்றர்
(boa constrictor) என்று பேர். அது இரைபிடிக்கும் விதம என்னவென்
றால் ஓர் மரத்திலேறி பாதையருகேயுள்ள மரக்கிளைகள் ஒன்றில் வாலைச்
சுற்றிக்கொண்டு தலைகீழாக ஆடிக்கொண்டிருக்கும். தனக்கேற்ற இரைக்
குரிய மிருகம் வரும்போது தன் உடம்பால் அம்மிருகத்தைச் சுற்றிக்
கொண்டு அதின் சதை, எலும்பு முதலியவைகளை இறுக்கத்தக்கதாக மறுப
டியும தலை பாகத்தை மரக்கிளையில் மாட்டிக்கொண்டு பலமாய் அம்மிரு
கத்தை நசுக்கி அம்மிருகம் தன் வாய்க்குள் நுழையத்தக்கதாக இறுக்கின
பின் மெதுவாய் அம்மிருகத்தைச் சமூலமாய் விழுங்கிப்போடும். இவ்வித
மாகவே சாத்தான் நம்மிலும் சிலரைக் கட்டியிருக்கிறான். அருமையான
வர்களே, நம்மைச சாத்தான் கட்டியிருக்கிறானோ? அவன் கட்டு நம்மைப்
பலவீனப்படுத்துகிறதா? அவனுடைய கண்ணிகளில் விழுந்து பாவத்துக்
காளாகிறோமா? ஜாக்கிரதையாயிருப்போம். சீக்கிரத்தில் விழுங்கிவிடுவான்.

நிமிரக்கூடாத கூனி. மனுஷனுக்குத் தேவன் இயற்கையாய்
நிமிர்ந்துபார்க்கும் தன்மையைக் கொடுத்திருக்கிறார். மற்ற மிருகங்
களுக்கு இவ்விதத் தன்மையில்லை. அவைகளெல்லாம் மண்ணை நோக்கும்.
மனுஷனோ விண்ணை நோக்குவான். கூனியாகிய இந்த ஸ்திரீயோ தன்
சுபாவப் பார்வையை இழந்து எவ்வளவும் நிமிரக்கூடாத விதமாய்த் தரை
யையே நோக்கிக்கொண்டிருக்கும்படியான நிலைமையிலிருந்தாள். எவ்
வளவும் நிமிரக்கூடாத கூன் அவளுக்குப் பதினெட்டு வருஷமாயிருந்தது.
இது அநேகம் கிறிஸ்தவர்களுடைய ஆவிக்குரிய நிலைமையைக் குறிப்பாய்க்
காட்டுகிறது. அவர்கள் தேவனையும் அவருடைய நீதியையும் தேடாமல்
பூமியையும் பூமிக்கடுத்தவைகளையும் தங்களையும் மாத்திரம நோக்குகிறார்
கள். மோக்ஷ பிரயாணத்தில் வியாக்கியானியின் வீட்டிலுள்ள ஓர் காட்சி

இதை நன்றாய்ப் போதிக்கிறது. கையில் துடைப்பத்தை வைத்துக்கொண்டு தரையில் தூசியையே பெருக்கிக்கொண்டிருக்கிற மனுஷன் தனக்கு மேலாக கிரீடத்தை வைத்துக்கொண்டு அதைக்கொடுக்க விரும்பியும் அதைக் குறித்துச் சற்றும் சட்டைபண்ணாதிருந்தான். மேலானவைகளை நோக்காமல் அற்பமான உலக வாழ்க்கையும் ஆதாயத்தையுமே தேடுகிறவர்களுக்கு இவை நல்ல திருஷ்டாந்தங்கள். தன் பெலவீனத்தையும் சுய நீதியையும் சார்ந்துகொண்டு கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக்கொள்ளாத மனுஷன் எவ்வளவு நிர்ப்பாக்கியன்.

**இரண்டாவது ஸ்திரீக்குக் கிடைத்த சுகம்.** இவ்வளவு பெலவீனமுள்ள ஸ்திரீ ஜெப ஆலயத்துக்கு வந்திருந்தாள். வழக்கமாய் வருகிறவளோ, இந்தச் சமயத்தில் இயேசு சுவாமியைப் பார்க்கத்தான் வந்தாளோவென்பது சொல்லப்படவில்லை. என்றாலும் அவள் அந்த நேரம் ஆலயத்துக்கு வந்திருந்ததே அவளுக்குள் திரி மங்கியெரிந்ததென்பதைக் காட்டுகிறது. வழக்கமான ஜெப ஆராதனைகளை அற்பமாயெண்ணி அசட்டை செய்வது நல்லதல்ல. மேலும் கூனியான அந்த ஸ்திரீயினிடத்தில் நல் வாஞ்சையிருந்ததோடுகூட நல்ல செய்கையும் காணப்பட்டது. இயேசு அவளைக் கண்டு தம்மிடத்தில் அழைத்தார். அவள் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவரண்டை போனாள். அவர் தமது கைகளை அவள் மேல் வைக்கத்தக்கதாக (வா. 12, 13) அவரண்டை சமீபித்துப் போனான். இவ்வளவு அற்ப விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் அவளிடத்தில் கண்ட இரட்சகர் அவளை 'ஆபிரகாமின் குமாரத்தி' (வா. 16) என்றழைக்கிறார். இவ்வித சொற்ப விசுவாசத்திற்குப் பலனாக இரட்சகர் அளிக்கும் நன்மை எவ்வளவு பெரிது! 'உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய்' என்ற சொல் பிறக்கவே 18 வருஷமாய்ச் சாத்தான் கட்டியிருந்த கட்டு அவிழ்க்கப்பட்டது. இயேசுவின் கரம் அவள்மேல் வைக்கப்பட்டது. உடனே அவள் நிமிர்ந்தாள். அவள் கூன் போய்விட்டது. பலவீனம் நீங்கினது. இயேசுவை நேராய்ப் பார்த்தாள்.

சாத்தானுடைய கண்ணிகளால் பலமாய்க் கட்டப்பட்டு தன்னை அடிமைப்படுத்தும் பாவங்களால் பலவீனப்பட்டிருக்கும் சகோதரனே, நீ எத்தனை வருஷங்களாய்க் கட்டப்பட்டிருந்தாலும் எவ்வளவும் இயேசுவை நோக்கிப் பார்க்கக்கூடாதபடி உன் ஜீவியத்தில் குன்றிப்போயிருந்தாலும், இதோ, உன்னைப் பலப்படுத்தும் கை உனக்காக நீட்டப்படுகிறது. உனக்குப் பூரண விடுதலை முன்னமே கூறப்பட்டாயிற்று. அவர் பாவிக்கு விமோசனம் அளிக்கும்போதெல்லாம் 'உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது'. 'உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய்' என்று முன்னமே நடந்த சம்பவமாகவே கூறுகிறார். அவருடைய இரட்சிப்பு பூரணமானது. அது முன்னமே ஆயத்தமாயிருக்கிறது. நாம் அதை ஏற்



றுக்கொள்ளவேண்டியதுதான் நமது கடமை. விசுவாசத்தோடுகூடிய ஓர் பார்வை. கீழ்ப்படிதலோடுகூடிய ஐக்கியம் பூரண விடுதலைகொடுக்கும்.

**மூன்றாவது சுகத்தின் பலன்.** (1) வா. 13-ல் அவள் நிமிர்ந்து தேவனை மகிமைப்படுத்தினாள் என்று பார்க்கிறோம். இரட்சிப்பின் பலன் கெம்பீர சத்தம். விடுதலையின் பலன் சந்தோஷம், புதுப்பாட்டு. நமது பெலவீன ஜீவியத்தினால் தேவனுடைய நாமம் தூஷிக்கப்பட்டதற்குப் பதிலாக அவருடைய நாமம் மகிமைப்படவேண்டாமா? முதலாவது நாமே அவருக்குத் துதி செலுத்தி அவரை மகிமைப்படுத்துவோம். பிறபாடு நமது ஜீவியத்தினாலே மற்றவர்களும் பிரகாசமடைந்து தேவனை மகிமைப்படுத்துவார்கள். மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.'

(2) விரோதம் உண்டாயிற்று. (வா. 14). இவைகளைக் கவனித்துக்கொண்டிருந்த ஜெப ஆலயத் தலைவனும் தேவனை மகிமைப்படுத்துகிறதற்குப் பதிலாக அவன் உள்ளத்தில் வீண் வைராக்கியமோ, பொறாமையோ மேலிட்டு ஜனங்களிடத்தில் கோபமாய்ப் பேசுகிறான். ஓர் நெடுநாள் வியாதி சுகமாவதிலும் ஓய்வுநாள் ஆசரிப்பை முக்கியப்படுத்துகிறான். மாயக்காரன். மேலும் வா. 15-ல் இரட்சகர் அவனைப்பார்த்து, ஜனங்கள் செய்ததைப் பார்க்கிலும் அதிகமான வேலை மாயக்காரனாகிய அவனே செய்கிறதாகச் சொல்லுகிறார். வியாதிக்காரன் ஜெப ஆலயத்துக்கு வந்து சொஸ்தமடைகிறதைப் பார்க்கிலும் ஓர் மனிதன் தன் மாட்டைத் தொழுவத்திலிருந்து அவிழ்த்துக்கொண்டுபோய்த் தண்ணீர் காட்டுகிறது பெரிய வேலையென்று அவனுக்குக் காட்டுகிறார். அந்த வேலையே ஓய்வுநாளில் செய்யலாமென்றால் இவ்விதக் காரியம் ஓய்வுநாளில் செய்யத்தக்கதே என்று நியாயத்தோடு காட்டுகிறார். மாட்டைப் பார்க்கிலும் ஆபிரகாமின் குமாரத்தியும் தொழுவத்தின் கட்டைப் பார்க்கிலும் சாத்தானின் கட்டும் எவ்வளவு முக்கியம் என்று ரூபிக்கிறார். தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். இடறல்கள் வராமற்போவது கூடாத காரியம்.

(3) வா. 17-ல் ஜனங்களெல்லாரும் சந்தோஷப்பட்டார்கள். இயேசுவின் பிறப்பு எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தையுண்டாக்கும் நற்செய்தி. அப்படியே இயேசுவின் இரட்சிப்பில் பங்கு பெறுகிற யாவருக்கும் சந்தோஷமும் மகிழ்ச்சியும் பங்காகக் கிடைக்கும். சங். 23-ல் சொல்லியதுபோல சத்துருக்களுக்கு முன்பாகக் கர்த்தர் நமக்குப் பந்தியை ஆயத்தம்பண்ணியிருக்கிறார் அது 'தானியமும் திராட்ச ரசமும் பெருகியிருக்கிற காலத்தின் புறச் சந்தோஷமல்ல' பரிசுத்தாவியினாலுண்டாகும் உள்ளான சந்தோஷமே.

---

## பிலிப்பென்னும் சுவிசேஷன் அப். 21: 8.

அப்போஸ்தலர் நடபடிகளை நாம் வாசித்துவரும்போது பலருக்குப் பல சிறந்த நாமங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறதைப் பார்க்கிறோம். பக்தன், ஆறுதலின் மகன், நல்லவன், நற்பாத்திரம், தேவ சாக்ஷி என்ற சிறப்புப் பெயர் சிலருக்குக் கிடைத்திருக்கிறது. ஏழு உதவிக்காரரில் ஒருவராகிய

பிலிப்புவுக்குச் சுவிசேஷன் என்ற பட்டப்பேர் கிடைத்திருக்கிறது. சிநேகிதனே, நீ இருக்கிற ஊரில் சபையில் உனக்கு என்னபேர் கொடுக்கத் தகும் என்று சிந்தித்துப்பார்.

பிலிப்பென்பவருடைய சுவிசேஷ வேலை துன்பத்தில் துவக்கினது என்று காணலாம். அப். 8: 1—5. எருசலேமில் சாலொமோன் மண்டபத்திலும் கிறிஸ்தவர்களின் வீடுகள் கூட்டங்களிலும் வேலைசெய்துகொண்டுவந்தவர்கள், ஸ்தேவான் ரத்தச் சாக்ஷியாய் மடிந்தபின் சவுலாலும் மற்றும் சில விரோதிகளாலும் சபைக்கு இச்சட்டு வந்ததினால்தான் எங்கும் சிதறி அலைந்து சுவிசேஷ வேலையைச்செய்ய ஆரம்பித்தார்கள். இந்தச் சுவிசேஷ வேலை சொகுசிலும் பவுசிலும் உலக இன்பத்திலுமிருக்கிறவர்கள் செய்கிற வேலையல்ல. துன்பத்தில் துவக்கி இன்பத்தை உண்டாக்குகிற வேலையே இது. அல்லாமலும் துன்பத்தினிமித்தம் தேசமெங்கும் சிதறி வேலைசெய்தார்கள். நிலத்தில் அங்குமிங்கும் வித்து விழுந்து முளைக்கிறதுபோல கிறிஸ்தவர்கள் அக்காலத்தில் இங்குமங்கும் சிதறினார்கள். ஜீவவித்து எல்லா இடங்களிலும் முளைத்தெழும்பினது, தேச முழுவதிலும் சுவிசேஷ நற்செய்தி பரவினது. சகோதரரே, நாம் இருக்கிற இடங்களிலெல்லாம் ஜீவவித்து முளைத்து சுவிசேஷம் பரம்புக காரணமாயிருக்கிறோமா? சுவிசேஷ வேலைசெய்த ஒருவராவது தங்கள் சுயபெலத்தில் அல்லது சாதூரியத்தில் செய்யவில்லை. பரத்திலிருந்துபெற்ற பரிசுத்தாவியின் பெலத்தில் திவ்ய வரம்பெற்று வாக்கிலும் செய்கையிலும் வல்லவராகி சரீர நோய்களை நீக்கி பிசாசின் ஆளுகையிலிருந்து விடுதலை உண்டாக்கி சுவிசேஷம் பரப்பினார்கள். பிலிப்பு என்பவரைக் கவனிக்கும்போது தன்னுடைய சுய ஆலோசனைப்படி இந்த ஊழியத்தைச் செய்தார் என்றெண்ணமுடியாது. கர்த்தருடைய தூதன் போ என்று சொன்னபடி போனார். 8: 26. ஆவியானவர் செய் என்றபடி செய்தார். 8: 29. கர்த்தருடைய ஆவியால் நடத்தப்பட்டே எல்லாம் செய்தார். 8: 39. சமாரியாவில்போய் வேலை செய்தபோது, தேவசெயல் எவ்வளவு மகத்துவமானது, மனுஷ வல்லமையைவிட எவ்வளவு மிஞ்சியது என்று காட்ட அற்புத அடையாளம்செய்து மாயவித்தைக்காரனுடைய வேலையையெல்லாம் அதமாக்கிவிட்டாரல்லவா?

(இன்னும் வரும்).

## சந்தா வரவு Oct. 1916.

| | | | |
|---|---|---|---|
| Rev. C. D. Velu pillai, Tellapalai | 3 | 4 | 0 |
| Miss. S. James, Colombo | 0 | 7 | 0 |
| ,, J. D. David, Ragoon | 0 | 14 | 0 |
| Rev. W. W. Sutherland, Chengleput | 8 | 0 | 0 |
| Miss. S. Masillamoni, Deniarra | 1 | 6 | 0 |
| ,, D. A. Jacob, Sariachalai | 0 | 7 | 0 |
| Miss. Danials, Nilghiris | 4 | 12 | 0 |
| Rev. J. H. Maclern, Madras | 7 | 6 | 0 |
| Rev. G. Kantayya, Masulipatam | 0 | 8 | 0 |
| Mr. Chinniah Joseph | 1 | 0 | 0 |
| ,, C. Samual, Calcutta | 0 | 14 | 0 |
| ,, V. Vethamuthu, Trichy | 0 | 7 | 0 |

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Chirstian Brotherhood Association, Tinnevelly

23 FEB 1917 MADRAS

December 1916 Registered No. M 161.

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." யோவான் 7: 38

Vol. XVII டிசம்பர்மீ 1916

## அதிசய அன்பு

'பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்' யோ. 15: 9.

கர்த்தராகிய இயேசுவின் அன்பு ஆச்சரியமே. ஏனென்றால் நம்மை ரட்சிக்கும்படிக்கு அவர் அடைந்த கஷ்டங்களும் பட்டபாடுகளும் அதிகம். வானைவிட்டு இப்புவியில் வந்தார். மகிமையை அகற்றி தரித்திரனானார். பசியிலும் தாகத்திலும் இருந்தார். தாபரிக்க இடமற்று வனாந்தரங்களில் தங்கினார். நிந்திக்கப்பட்டார், துப்பப்பட்டார், அடிக்கப்பட்டார். சிலுவை மரத்தில் அறையப்பட்டு மகா குரூரமும் வேதனையுமான மரணம் அடைந்தார். இவைகளைப்பார்க்கும்போது அவர் அன்பு அதிசயமே என்று பேசிக்கொள்ளுகிறோம். ஆனாலும் அது எவ்வளவு பெரிய அன்பென்று நாம் கண்டதுண்டா? அதைத்தான் ஆண்டவர் இங்கே சொல்ல விரும்புகிறார். 'என் பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல' என்கிறார். பிதாவுக்கும் நித்திய சுதனுக்கும் உள்ள அன்பின் பெருக்கத்தை அறிந்தவன் யார்? அது இவ்வளவுதான் என்று சொல்லக்கூடியவன் யார்? பிதா தமது அருமைக்குமாரன்பேரில் வைத்திருக்கும் நேசத்துக்கு அளவுண்டோ? அது சமுத்திரம்போன்றதோ அல்லது அதிலும் விசாலமோ? என் பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல என்கிறார், பிதா குமாரன்பேரில் வைத்திருக்கும் அன்பு எவ்வளவு பெருக்கமோ, அதே பெருக்கமாய் அவர் என்னிடத்திலும் அன்பாயிருக்கிறார் என்பதல்லவா வசனத்தின் கருத்து. இந்த நீசப்பாவியை இவ்வளவு நேசிக்க இவன் எம்மாத்திரம்? கர்த்தரே இதைச் சொல்லியிராவிட்டால் வேறே யார் இதைத் துணிந்து சொல்லக்கூடும்?

20-12-16

வேறே யார் சொன்னபோதிலும் நாம் எப்படி நம்பக்கூடும்? ஆ! பாவிக்கு தேவன் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிது!

கிறிஸ்துவின்மூலம் விளங்கின இந்த அதிசய அன்பில் நாம் நிலைத்திருக்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார். நிலைத்திருப்பது என்றால் சோர்ந்துபோவதல்ல, குளிர்ந்துபோவதல்ல, பிரிந்துபோவதல்ல, மாறிப்போவதல்ல, எக்காலத்திலும் செடியில் கொடி ஒட்டிக்கொண்டிருக்கும வண்ணமாய் அவரது பேரன்பில் வேரூன்றி நிலைபெற்றிருக்கவேண்டும். அந்த அன்பு எப்படிப்பட்டதென்று பார்ப்போம்.

I. அது பகைவரை மேற்கொண்ட பலத்த அன்பு. நாம் அவரை நினைக்கவில்லை. நாம் அவரைத் தேடவில்லை. நாம் பக்தியாய் நடக்கவில்லை. அக்கிரமத்திலும் பாவங்களிலும் மரித்தவர்களாயிருந்தோம். நமது துர்க்கிரியைகளினால் தேவனுக்குச் சத்துருக்களாயிருந்தோம். தேவனோ இவைகள் ஒன்றையும் எண்ணாமல் எப்படியாவது நம்மை இரட்சிக்குமபடி சித்தமானார். ‘குறித்தகாலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்!’ இபபடி ‘நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணினார்,’

அன்பைப்போல் பாவியின் நெஞ்சை உருக்கக்கூடியது வேறொன்றுமில்லை. அன்று சீனாமலையில் இடிமுழக்கத்தோடும், மின்னலோடும், அக்கினி புகைக்காடோடும், பலதத எக்காள சத்தத்தோடும்’ பூமி அதிர்ச்சியோடும் கர்த்தர் தமது ஜனங்களைச் சந்திக்கவந்தபோது, ஜனங்கள் எல்லாரும் பயந்து நடுநடுங்கிப்போனார்களா. தேவனைச் சந்திக்கவோ, அவா சத்தம் கேட்கவோ ஜனங்களுக்குப் பிரியமேயில்லை.. இதோ நாஙகள் பாளையத்துக்கு ஓடிப்போகிறோம் என்றார்கள். அனறு ரட்சிபபைத்தேடினவன் யாா? அககாட்சி அவ்வளவு பயங்கரமாயிருக்கும்போது கர்த்தரை எவன் கிட்டிச் சேருவான்?

அனபு ஜெயிததது! நான் பெரும் தோஷியாயிருக்க அவர் என்னை வெறுததுத தளளாமல் என்னை மீட்கத் தம உயிரை விட்டாரே. இது அதிசய அன்பல்லவா? நான் இனி அவரை எப்படி மறப்பேன்? என் அன்பருக்கு விரோதமாக நான் எப்படிப் பாவம் செய்வேன் என்று விசுவாசி அவருடைய அன்பில் மயங்கிப்போகிறான். ஒரு தாய்க்கு இரண்டு பிள்ளைகள், மூத்தவன் பையன் இளையது பெண். பையன் பொல்லாதவன், தன் தஙகச்சியை அடித்துவைப்பதும், அது அழுகிறதைப் பார்ப்பதும் அவனுக்கு ரொம்பச் சந்தோஷம். தாய் மகனுக்கு எவ்வளவோ புத்தி சொல்லியும் பிரயோஜனமில்லை. ஒரு நாள் வெளியே விளையாடிக்கொண்டிருக்கும்போது தஙகச்சியை அடித்துப்போட்டான். பிள்ளை அழுதுகொண்டு தாயண்டை வந்தது. தாய்க்கு மிகவும் வருத்தம். ஆகிலும் ஒரு உபாயம் செய்தாள். மகளைப்பார்த்து: அம்மா உன் அண்ணனுக்கு எவ்வள



வோ புத்திசொல்லியும் பிரயோஜனப்படவில்லை. நீ ஒன்று செய்வாயானால் ஒருவேளை அவன் உள்ளம் உருகி உன்னை அடிப்பதை நிறுத்துவான் என்று எண்ணுகிறேன். நீ இப்படியே அழுதுகொண்டுபோய் உன் அண்ணன் கழுத்தைக்கட்டி அவன் முகத்தில் முத்தமிடு; அப்படியாவது அவனுக்குப் புத்திவரலாம் என்று சொன்னாள். பிள்ளை அப்படியேபோய் கண்ணீர் நிறைந்த தன் முகத்தை அவன் முகத்தில் வைத்து அவனை முத்தமிட்டது. கல்லான அவன் உள்ளம் அன்று உடைந்தது. தங்கச்சியை அடிப்பதை அன்றுவிட்டான். அன்பு ஜெயித்தது. சகோதரனே, சகோதரியே, உன் அருமை ரட்சகரின் அன்பு உன்னை ஜெயிதததா? அவர் கண்ணீரினால் மாத்திரமல்ல, முள்முடியிலிருந்து தமது முகத்தில் வடிந்த திரு உதிரத்தோடு உன்னை முத்தமிட்டாரே. உன் உள்ளம் உருகவில்லையா! அவர் பேரன்பு உன்னை மேற்கொள்ளவில்லையா? யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? என்று கேட்டார். ஆம் ஆண்டவரே உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். இதை வாசிக்கும் சகோதரனே! நீயும் அப்படிச் சொல்லக்கூடுமா?

II. அது சற்றும் மாறாத அன்பு. சாததானுக்கு வேதம் தெரியும் ஆனால் அவன் அதைத் தந்திரமாய், தப்பிதமாய் உபயோகிப்பான். அவன் வேதவாக்கியஙகளை எடுத்து நமது ஆண்டவரிடம் பேசினான், அவைகளை எவவளவு மாற்றிச் சொன்னான் என்பதைக் கவனியுங்கள்; வேதவாககியங்களை நாம் தியானிக்கும்போது ஆவியானவர் அதின் கருத்தை விளக்குகிறாரா? அல்லது சாததான் அதற்கு வியாக்கியானம் சொல்லுகிறானா என்பதைப்பற்றி நாம் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். கிறிஸ்துவின் அன்பைக்குறித்து நமக்குத் தப்பான எண்ணத்தை உண்டாக்குகிறவன் சாத்தான். நாம வேதம்வாசித்து, ஜெபம்பண்ணி, கொஞ்சம பக்தியாய் நடக்கும்போது ஆண்டவர் நமது பேரில் அன்புள்ளவராயிருப்பதுபோல் காட்டுவான். நாம் ஏதோ ஒரு தப்பிதத்தைச்செய்து, மனம் சோர்ந்து’ வாசிக்கவும் ஜெபிக்கவும் கூடாமலிருக்கும்போது கர்த்தர் நமது பேரில் கோபமாயிருப்பதாக மனதுக்குக் காட்டுவான். வேறே எதாவது ஒரு கஷ்டம், ஒரு நஷ்டம் நமக்கு நேரிடுமானால் உடனே ஆண்டவர் உன்னை மறந்தார், உன் பேரில் கோபமாயிருக்கிறார், உன்னைக் கைவிட்டார் என்று மனதில் பேசுவான். நாமும் அப்படிப்பட்ட எண்ணங்களை நம்பி மனம் சோர்ந்து போவதுண்டு. நம்மை இன்னும் அதிகமாய்க் கெடுப்பதற்கு சாத்தான் செய்கிற உபாயம் அது.

ஆனால் யேசுவின் அன்போ ஒருபோதும் குறைவதுமில்லை, அவருடைய அன்பு மாறுவதுமில்லை. அவர் நேற்றும் இன்றும் என்றும் தமது கிருபையில், அன்பில் உருக்கத்தில் மாறாதவராகவேயிருக்கிறார். நாம் அடிக்கடி மாறிப்போகிறோமே யன்றி அவர் ஒருபோதும் மாறுகிறதில்லை. கெட்டகுமாரன் தகப்பனுடைய ஆஸ்தியை துன்மார்க்கத்தில் அழித்து,

பஞ்சத்தில் வறுமையடைந்து, பசியினால் தவிக்கும் காலத்தில் தகப்பனை நினைத்துப் புறப்பட்டுவந்தான். வருகிறவழியில் தகப்பனைப்பற்றி எத்தனையோ தகாத நினைவுகள் அவன் உள்ளத்தில் வந்தது. என் தகப்பன் என்னை ஏற்றுக்கொள்ளுவாரோ என்னமோ? மகன் என்று சொல்வாரோ என்னமோ? குற்றத்தை மன்னிப்பாரோ என்னமோவென்று சந்தேகத்தோடும் பயத்தோடும் வந்தான். தகப்பனண்டை வந்தபோதோ தான் நினைத்த நினைவெல்லாம் சுத்தத் தப்பென்றும் தகப்பன் அன்பிலும் உருக்கத்திலும் சிறிதும் மாறாதவராயிருந்தார் என்றும் கண்டு ஆச்சரியப்பட்டானல்லவா?

சகோதரனே, நீ பலதரமும் மாறுகிறாய். கொஞ்சநாள் பக்தியும் கொஞ்சநாள் அவபக்தியும்; கொஞ்சநாள் ஜெப ஜீவியமும் கொஞ்சநாள் பாவ ஜீவியமும்; கொஞ்சநாள் வேதவாசிப்பும் கொஞ்சநாள் கதைகள் வாசிப்பும்: கொஞ்சநாள் பக்தர் சகவாசமும் கொஞ்சநாள் துஷ்டர் சகவாசமும்; இப்படியாக உன் ஆண்டவர் பார்வையில் உன் ஜீவியம் மாறிமாறிப் போகிறது. ஆனாலும் உன் ஆண்டவருடைய அன்போ உன்பேரில் மாறவில்லை. நீ இன்று அவரிடம்போய் ஒரு கால்மணி நேரம் அவரோடு பேசிப்பார். அப்போது அன்பாயிருக்கிறாரோ கோபமாயிருக்கிறாரோ என்பதை நீயே கண்டுகொள்வாய். அவரிடத்தில் போகாமலிருந்துகொண்டு அவருடைய அன்பைச் சந்தேகிப்பது நியாயமா?

பூரண சந்திரன் பிரகாசித்த ஓர் இராவில் இரண்டு பையன்கள் ஒரு கிணற்றண்டை போனார்கள். கிணற்று ஜலத்தின்பேரில் சந்திரனுடைய சாயல் அழகாய்க் காணப்பட்டது. ஒருவன் அதைக் கண்டவுடனே ஆ! இது எவ்வளவு அழகான சந்திரன் பார் என்றான். மற்றவனோ குனிந்து ஒரு சிறு கல்லை எடுத்துத் தண்ணீரில் போட்டான். போட்டவுடனே சந்திரன் சாயல் உடைந்து மறைந்துபோய்விட்டது. ஐயோ சந்திரன் உடைந்துபோய்விட்டதே அது காணாமற்போய்விட்டதே என்று அந்தப் பையன் கதறினான். மற்றவனோ அவன் தலையைப் பிடித்து மேலே நிமிர்த்தி: சந்திரன் உடைந்துபோய்விட்டது என்கிறாயே, அதோ பார் ஆகாயத்தில் அழகான சந்திரன் அப்படியேயிருக்கிறது என்று காட்டினான். இதற்குள்ளாக கல்லால் கலங்கின தண்ணீர் அமர்ந்தது. மறுபடியும் முன்போல சந்திரனுடைய அழகான சாயல் தண்ணீரில் காணப்பட்டது. நமது இருதயம் கர்த்தருக்குமுன்பாக அமர்ந்திருக்கும்போது அவருடைய அன்பின் சாயல் நமது உள்ளத்தில் பிரகாசிக்கிறது. நாம் அதினால் எவ்வளவோ சந்தோஷப்படுகிறோம். ஆனால் ஒரு சிறு பாவமாகிய கல் உள்ளத்தில் விழுந்தவுடனே பெரிய குழப்பமுண்டாகி சமாதானத்தை இழந்துபோகிறோம். அவருடைய அன்பை அனுபவிக்கக்கூடாமல் சற்று நேரம் தத்தளிக்கிறோம். ஆனால் இயேசுவோ அன்பின் மயமாகவேயிருக்கிறார்.



நாம் பாவம் செய்வதினால் நமக்குள் மாறுதலைக் காண்கிறோமேயன்றி அவர் மாறுகிறதில்லை. நாம் அவரிடம் போய் தப்பிதத்தை அறிக்கையிட்டுச் சமாதானத்தைப் பெற்றுக்கொள்ளும்போது மறுபடியும் அவருடைய அன்பின் வடிவை நமது உள்ளத்தில் காணலாம்.

III. அது முற்றுமுடிய ரட்சிக்கும் அன்பு "அவர் தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார்." சீஷர்களிடத்தில் எவ்வளவோ குறைவுகள் காணப்பட்டது. அவரிடத்தில் அவர்கள் வைத்த விசுவாசமும் அன்பும் குறையக்கூடியதும் மாறக்கூடியதுமாயிருந்தது. ஆகிலும் அவரோ அவர்களிடத்தில் பூரணமாய் அன்புவைத்தார். முடிவுபரியந்தம் அப்படியே அன்பாயிருந்தார். அவர் மாறாத அன்பராயிருக்கிறபடியினாலே நம்மை இடையில் கைவிட்டுவிடாமல் முற்றுமுடிய ரட்சிக்கக்கூடியவராயிருக்கிறார்.

இங்கிலாந்திலிருந்து ஒரு மனுஷன் அமெரிக்காவுக்குப் போனான். கொஞ்சநாள்சென்று ஸ்பானியருடைய நாடாகிய கியூபா என்னும் இடத்துக்குப் போனான். அங்குள்ளவர்கள் இந்த மனுஷனை ஒரு வேவுகாரன் அல்லது ஒரு திருடன் என்று நினைத்துப் பிடித்துக்கொண்டார்கள். நான் திருடனல்ல வேவுகாரனுமல்லவென்று அவன் எவ்வளவோ சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. அங்கே அங்கிலேய ஸ்தானாபதியும் அமெரிக்கா ஸ்தானாபதியும் இருந்தார்கள். அவர்களிடத்தில் இந்த ஏழை மனுஷன் போய் தனக்கு நேரிட்டிருக்கிற ஆபத்தை அறிவித்து அவர்களுடைய உதவியைத் தேடினான். அவர்கள் ஸ்பானிய அதிகாரிகளிடம் சென்று இந்த மனுஷன் யாதொரு குற்றமற்றவனென்று நாங்கள் அறிவோம், நீங்கள் இவனுக்கு யாதொன்றும் செய்யக்கூடாதென்று கேட்டுக்கொண்டார்கள். அப்படியிருந்தும் அந்த மனுஷனைக் கொன்றுபோடும்படி ஒரு நாளைக்குறித்து அந்நாளில் அவனைக் கொலைக்களத்துக்குக் கொண்டுபோனார்கள். ஏழை மனுஷன் மரணத்திகிலால் வேர்வைகொண்டு மயங்கித் தவித்தவனாக குண்டுக்கு எதிர்பார்த்து நிற்கிறான். இத்தருணத்தில் இரண்டு ஸ்தானாபதிகளும் வண்டியில் வேகமாக வந்து, அதிகாரிகளிடத்தில் யாதொன்றும் பேசாமல், சாவை எதிர்நோக்கித் தூரத்தில் உட்கார்ந்திருக்கும் அந்த ஏழை மனுஷனிடத்தில் ஓடி, அங்கிலேய கொடியினாலும் அமெரிக்காக் கொடியினாலும் அந்த மனுஷனை மூடிவிட்டு, அதிகாரிகளைப்பார்த்து; உங்களுக்குத் தைரியமுண்டானால் இப்போது அந்த மனுஷனைச் சுடுங்கள் பார்க்கலாம் என்றார்கள். எவன் சுடத்துணிவான்? பெருந்திகில் அவர்கள்மேல் விழுந்தது. கொடியில் குண்டுபடாமல் மனுஷன் பேரில் படப்போகிறதில்லை. கொடிகளைச்சுட்டால் இரண்டு பெரிய ராஜ்யங்களின் விரோதம் உண்டாகி தங்களுக்கு அழிவு நேரிடும். ஆகையால் போர்வீரரும் அதிகாரிகளும் அப்படியே திரும்பிப் போய்விட்டார்கள் ஏழை மனுஷன் இவ்விதமாய் இரண்டு கொடிகளால் ரட்சிக்கப்பட்டான்.

நாம் ரட்சிக்கப்பட இரண்டு கொடிகள் உண்டு. ஏசாயா 59-ல் வருகிற ஆவியின் கொடி. 'வெள்ளம் போல் சத்துரு வரும்போது கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார்'! "என்னை விருந்து சாலைக்கு அழைத்துக் கொண்டுபோனார்; என்மேல் பறந்த அவருடைய கொடி நேசமே' உன்: 2-4. கர்த்தராகிய இயேசு தமது வல்ல ஆவியினாலும் தமது அதிசய அன்பினாலும் நம்மைப் பாதுகாக்கும்போது நமக்குப் பயமேது? அவருடைய வல்ல இருகரங்களுக்குள் நாம் தங்கும்போது நமக்குச் சேதமேது. அவருடைய கொடியின்கீழ் தங்கும்போது நம்மை ஜெயிப்பவன் யார்? நம்மை குற்றப்படுத்துகிறவன்யார? ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? அவருடைய பேரன்பு நம்மைத் தேடிக்கண்டு பிடித்தது. நமது திரளான பாவங்களை மூடிவிட்டது. நம்மை நீதிமான்களாக்கிவிட்டது. நம்மை தேவமக்களாக்கிவிட்டது. நம்மை உன்னதத்திற்கு உயர்த்திவிட்டது.

சகோதரனே, உன்னை நேசித்த ஆண்டவர் ஒருபோதும் உன்னைக் கைவிடார். மனுஷரால் உனக்கு என்ன நேரிட்டாலும், சாத்தானால் உனக்கு என்ன நேரிட்டாலும் நீ சோர்ந்து போகாதே. அன்பின் ஆண்டவர் உன்னை முற்றுமுடிய ரட்சிக்க வல்லவராயிருக்கிறார். இப்பேர்ப்பட்ட அன்பரில் நீ நிலைத்திருப்பாயாக. வேத வாசிப்பினாலும், ஜெப தியானத்தினாலும், பிறருக்கு அவரை அறிவிப்பதினாலும், பக்தர்களோடு கூடிய சகவாசத்தினாலும் கிறிஸ்துவின் அன்பில் நீ வளர்ந்து பெருகுவாயாக.

S. பரமானந்தம்.

## மாம்ச சிந்தை

**மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை, மாம்ச சிந்தை மரணம்'. ரோ. 8: 7, 6**

இரண்டு வகையான ஜனங்கள்:—மாம்சத்துக்குட்பட்டவர்கள், ஆவிக்குட்பட்டவர்கள் (9 வா). மாம்ச சிந்தையின்படி நடக்கிறவர்கள், ஆவியின்படி நடக்கிறவர்கள் (2, 4 வா) மாம்ச சிந்தையுடையவர்கள், ஆவியின் சிந்தையுடையவர்கள் (6 வா). ஆ! பாருங்கள், தேவனுடைய நினைவுகள் நம்முடைய நினைவுகளல்ல; நம்முடைய வழிகள் அவருடைய வழிகளல்ல. சகல ஜாதிகளையும் இரண்டு வகுப்பாகப் பிரிக்கும்போது யூதனென்றும் கிரேக்கனென்றும் அவர் பிரிக்கிறதில்லை; கிறிஸ்துமார்க்கமென்றும் அஞ்ஞானமார்க்கமென்றும் அவர் பிரிக்கிறதில்லை; கல்விமானென்றும் கல்லாதவனென்றும் அவர் பிரிக்கிறதில்லை; ஞானஸ்நானக்காரனென்றும் ஞானஸ்நானம் பெறாதவனென்றும் அவர் பிரிக்கிறதில்லை; மாம்ச சிந்தை என்றும், ஆவியின் சிந்தையென்றும் மாத்திரம் பிரிக்கிறார். மனுஷன் பார்க்



கிறபடி அவர் பாரார். 'மனுஷன் முகத்தைப் பார்ப்பான், கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்' 1 சா. 16: 7. 'கர்த்தர் இருதயங்களை நிறுத்துப் பார்க்கிறார்' நீதி. 21: 2. நம்முடைய எண்ணம், நினைவு, நோக்கம், சிந்தனைகளை எல்லாம் தம்முடைய தராசில் வைத்து நிறுத்துப் பார்க்கிறார். சிந்தையிலே, இருதயத்திலே, உள்ளத்திலே இந்த வித்தியாசம் காணப்படும். அதோ! ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரர்; கூடப்பிறந்த அண்ணன் தம்பி; ஒரே தகப்பனுடைய பிள்ளைகள்; ஒரே வீட்டில் வளர்ந்தவர்கள்; ஒரே மார்க்கத்தை அநுசரித்துவந்தவர்கள்; பிறப்பில் வித்தியாசமில்லை. குடும்பத்தில் வித்தியாசமில்லை; வீட்டில் வித்தியாசமில்லை; வளர்ப்பில் வித்தியாசமில்லை; கல்வியில் வித்தியாசமில்லை; மார்க்க சிலாக்கியங்களில் வித்தியாசமில்லை; ஆனால் இவனுக்கும் அவனுக்கும் மெத்த வித்தியாசமுண்டு. கர்த்தருடைய பார்வையில் மிகுந்த பேதமுண்டு 'யாக்கோபைச் சிநேகித்து ஏசாவை வெறுத்தேன்' என்று ஆண்டவர் சொல்லுகிறார். (ரோ. 9: 13). ஏசா யாக்கோபுக்குச் சகோதரனல்லவா? ஆனாலும் யாக்கோபை நான் சிநேகித்து, ஏசாவை நான் வெறுத்தேன் (மல். 1: 2, 3) ஏன்? ஏசா மாம்ச சிந்தையுடையவன்; பூமிக்கடுத்தவைகளை மாத்திரம் சிந்தித்தான்; இந்தச் சடத்தைப் பேணிக்கொண்டான்; இவ்வுலகத்தை நேசித்தான்; போஜனப் பிரியனாயிருந்தான்; அவன் சிந்தை எல்லாம் உலக சிந்தை; இழிவான சிந்தை; மாம்ச சிந்தை. யாக்கோபோ ஆவியின் சிந்தையுள்ளவன்; பரம காரியங்களை விரும்பினான்; தேவாசீர்வாதத்தை வாஞ்சித்தான்; மேலான நன்மைகளை நாடித் தேடினான்; அவன் தவறுதலுள்ளவன் என்றாலும் கர்த்தரைச் சார்ந்து ஆவிக்கடுத்தவைகளைச் சிந்தித்தான். இந்த வித்தியாசத்தினாலேயல்லவா 'யாக்கோபைச் சிநேகித்து, ஏசாவை வெறுத்தேன்' என்று தேவன் தீர்மானிக்கிறார். என் பிரிய சிநேகிதரே! உங்கள் சிந்தை எப்படிப்பட்ட சிந்தை? கர்த்தருடைய சந்நிதானத்தில் ஏறுகிறதா? பூமியை நோக்கிக்கொண்டே செல்லுகிறதா? ஐயோ! கிறிஸ்தவ சபையில் உலக சிந்தை, மாம்ச சிந்தை அதிகம். இவ்வுலகத்தை வெறுத்தவர்கள் எங்கே? சிலுவையை எடுத்துக்கொண்டு கிறிஸ்துவுக்குப்பின் செல்வோர் எங்கே? ஆவியின்படி நடக்கிறவர்கள் எங்கே? பவுல் அப்போஸ்தலன் கொரிந்து சபையாரைச் சுற்றிப்பார்க்கும்போது, ஆவியின் சிந்தை ஏகதேசம் மாத்திரம் தெரிந்தது. ஆகையால் அவர் பெருமூச்சுவிட்டு 'நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருக்கிறபடியால் இப்பொழுது உங்களுக்குப் பெலனில்லை' என்று புலம்புகிறார். (1 கொ. 3: 2). மோசம்! மோசம்! இது எங்கள் பெலவீனம்; இதிலே நாங்கள் என்ன செய்யக்கூடும்? இதற்குப் போக்கில்லை என்று சொல்லாதேயுங்கள். மாம்ச சிந்தை லேசான பாவமல்ல. 'மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை, மாம்ச சிந்தை மரணம்'. மாம்ச சிந்தையுடைய சகோதரனே! நீ தேவனைப் பகைக்கிறாய்! நீ இயேசுவின் சத்துரு! பவுல் அப்போஸ்தலன்

எலிமாவைப் பார்த்துச் சொன்னதுபோல 'எல்லாக் கபடமும் எல்லாப் பொல்லாங்கும் நிறைந்தவனே! பிசாசின் மகனே! நீதிக்கெல்லாம் பகைஞனே! கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் ஓயமாட்டாயோ?' (அப். 13: 10) என்று நான் உங்களையும் கேட்கிறேன். மாம்ச சிந்தையுள்ளவனே! நீ மனந்திரும்பிக் குணப்படாவிட்டால் சாவாய்; நரகத்துக்குப்போவாய். ஏனென்றால் மாம்ச சிந்தை மரணம். கொலை பாதகர் மாத்திரம் அல்ல, விபசாரக்காரர் மாத்திரமல்ல, குடிகாரர் மாத்திரமல்ல, மாம்ச சிந்தையுள்ளவர்கள் எல்லாம் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டுப் புறம்பான இருளிலே பங்கடைவார்கள். ஏனெனில் 'மாம்ச சிந்தை மரணம்' இந்தக் காரியம் நன்றாய் விளங்கத்தக்கதாக சில குறிப்புகளை எடுத்துக் காட்டுகிறேன்.

I. மேட்டிமையான சிந்தையெல்லாம் மாம்ச சிந்தை. மேட்டிமையான சிந்தை ஆவியினால் பிறவாமல் மாம்சத்தினாலேயே உண்டாகிறது. அதின் தகப்பன் மாம்சம், தாயும் மாம்சம், ஜெனனம் மாம்சம். கிறிஸ்தவர்களுக்கு மேட்டிமையான சிந்தை வேண்டாம். 'மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல் தாழ்மையானவைகளுக்கு இணங்குங்கள்' (ரோ. 12:16). 'மாம்சத்தின் இச்சையும் கண்களின் இச்சையும் ஜீவனத்தின் பெருமையும் பிதாவினாலுண்டானவைகள் அல்ல. அவைகள் உலகத்தினால் உண்டானவைகள் (I யோ. 2: 16). அதாவது ஆவியினால் உண்டானவைகள் அல்ல, மாம்சத்தினாலுண்டானவைகள் என்று சொன்னாலும் சொல்லலாம். நம்முடைய ஆண்டவர் 'நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன்' என்று சொன்னாரே! 'கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல. (ரோ. 8: 9.) கிறிஸ்துவின் சிந்தை இல்லாதவன் அவருடையவனல்ல. ஆகையால் மேட்டிமையான சிந்தையுடையவன் அவருடையவனல்ல. அகங்காரங்கொண்டவன் அவருடையவனல்ல. எல்லாப் பாவங்களிலும் மகா பிரபல்லிய பாவம் இதுவே. பெருமை, அகங்காரம் அகந்தை எந்தத் தேசத்திலும் அதைக்காணலாம். எந்த ஊரிலும் அதைக்காணலாம். எந்த சபையிலும் அதைக்காணலாம். திருஷ். (1) வடக்கே ஒரு ஊர். அந்த ஊரில் முக்கியமான மனுஷன் சபையில் பிரிவினை உண்டாக்கியிருக்கிறான். காரணமென்ன? தன்னைவிட மற்றவர்கள் அதிக சங்கப்பணம் கொடுக்கக்கூடாதாம். சபையில் சிலர் அதிகமான சங்கப்பணம்கொடுக்க மனமுள்ளவர்களாயிருக்கிறதாக அறிந்து தனக்கு ஓர் பெரிய அவமானம் நேரிட்டதாக நினைத்துப் பிரிவினை செய்திருக்கிறான். பெருமையல்லவா? (2) சபையான் ஒருவன் வண்டியில் ஏறிப்போகும்போது தலத்து ஐயரைக்கண்டான். குருவானவரோ! அவனைக்காணாமலும், இன்னான் என்று அறியாமலும் தன்வழியே போய்விட்டார். அதினாலே அந்த மனுஷன் விசனப்பட்டு குருவானவர் என்னோடு பேசவில்லையே என்று சொல்லி 'இனிமேல் கோவிலுக்கு வரமாட்டேன்' என்று சாதித்துப்போட்டான். குரு



வானவர் இதை அறிந்தவுடனே 'நான உம்மை அறியவில்லை, அறிந்தேனானால் பேசியிருப்பேன், சுகத்தை விசாரித்திருப்பேன் என்று நலவு பேசினபோதிலும் அவன் பெருமைகொண்டு தேவாலயத்துக்கு வருவதை நிறுத்தினான். கர்வம், அகந்தை, மாம்ச சிந்தை அல்லவா? (3) இரண்டு ஸ்திரீகள் மனஸ்தாபம். அவள் வீட்டிற்கு இவள் வரமாட்டாள்; இவள் வீட்டிற்கு அவள் போகமாட்டாள்; சமாதானமாயிருங்கள் என்று புத்தி சொன்னபோது, அவள் என் வீட்டிற்குவந்து மன்னிப்பைக் கேட்கவேண்டும்' இல்லை, இவள் என் வீட்டிற்குவந்து நல்ல வார்த்தை சொல்லவேண்டும்' என்று சொல்லி இரண்டுபேரும் பிதற்றினார்கள். பெருமை சுபாபம் அல்லவா? (4) ஒரு பெண்பிள்ளை பட்டுச் சேலை வாங்கிக்கட்டிக்கொண்டு கோவிலுக்கு வருகிறாள். அந்த வீட்டுக்காரி பெருமைகொண்டு 'என்னைவிட அவள் பெரியவளா? என்று சொல்லி, கடன் வாங்கியாவது தானும்' பட்டுச் சேலையைச் சம்பாதிக்கப் பிரயாசப்படுகிறாள். ஐயோ! பெருமை! பெருமை! பெருமை! பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது. அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது' (1 பேதுரு 3: 3, 4.) என்று அறியீர்களா?

பிரியமான ஜனங்களே! 'மாம்ச சிந்தை மரணம்' மேட்டிமை சிந்தை நரகத்தில் தள்ளிவிடும். நரகம் உண்டானதற்குக் காரணமென்ன? சாத்தானும் அவன் தூதர்களும் ஒருகாலத்தில் மோட்சலோக வாசிகளாயிருந்தார்களே. தேவனுடைய சந்நிதானத்தில் நின்று பாக்கியமடைந்து, பரிசுத்த சந்தோஷங்களை அனுபவித்து, கர்த்தருக்கு ஊழியம் செய்தார்களே. அந்த உயர்ந்த பதவியிலிருந்து எப்படி விழுந்தார்கள்? மேட்டிமை சிந்தை அவர்களுக்கு உண்டாயிற்று. தேவனைப்போலாவோம் என்று கலகம் செய்தார்கள். அதினாலே மோட்சத்திலிருந்து தள்ளுண்டு நித்திய சங்கிலியினாலே கட்டி அந்தகாரத்தில் அடைத்துவைக்கப்பட்டார்கள். மேட்டிமை சிந்தையானது மோட்சத்தை அடைத்து நரகமுண்டாக்கிவிட்டது. மோட்சவாசிகள் நரகவாசிகளாகும்படி செய்தது. பரிசுத்த தேவதூதர்களை பொல்லாத பிசாசுக்களாக்கிற்று. சந்தேகமில்லை. 'மாம்ச சிந்தை மரணம்.' இவ்வுலகத்தில் மரணம் வந்ததற்குக் காரணமென்ன? மேட்டிமை சிந்தையல்லவா? நீங்கள் தேவனைப்போலாவீர்களென்று பிசாசு சொன்ன வஞ்சகத்தை நம்பி, கனியைப் புசித்துக்கொண்டாள். அதினாலே சாபமும், மரணமும் துன்பமும் பூலோகத்தில் வந்தது. ஆ! இப்படிப்பார்த்தால் பெருமை என்னும் பாவம் மகா பொல்லாத பாவம். நல்ல பாம்பின் விஷத்தைப் பார்க்கிலும் மகா மோசமானது. பெருமைக்காரன் மோட்சத்துக்குப் போகமாட்டான். ஆண்டவருடைய சந்நிதானத்தில் பிரவேசிக்கமாட்டான். மன

மேட்டிமையுள்ளவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன். கையோடே கைகோர்த்தாலும் அவன் தண்டனைக்குத் தப்பான்' (நீதி. 16; 5). மற்றோர் தப்பித்தாலும் அவன் தப்பவேமாட்டான். 'மேட்டிமையான பார்வையும் அகந்தையான மனமுமுள்ள துன்மார்க்கர் போடும் வெளிச்சம் பாவமே' (நீதி. 21: 4). அவர்கள் பக்திவேஷம் தரித்துக்கொண்டு ஜெபம்பண்ணி மற்றவர்களுக்குப் போதித்தாலும் அது பாவமேயல்லாது வேறல்ல. மனந்திரும்பு.

II. உலக சிந்தை எல்லாம் மாம்ச சிந்தை. 'அவர்களுடைய முடிவு அழிவு; அவர்களுடைய தேவன் வயிறு; அவர்களுடைய மகிமை அவர்களுடைய லச்சையே; அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்'. (பிலி. 3; 19). ஐயோ! உலக சிந்தை இல்லாத சபை எங்கே? பிலிப்பியருடைய சபையில் முதலாய் அது நுழைந்ததென்று பார்க்கிறோம். அதுமாத்திரமா? அப்போஸ்தலருடைய கூட்டத்தில்கூட அது ஒரு தரம் விளங்கினது. இயேசுநாதர் தம்முடைய பாடுகளையும் சிலுவை மரணத்தையும் தமது சீஷர்களுக்கு முன் அறிவிக்கும்போது, சீமோன் பேதுரு விசனப்பட்டனன். ரக்ஷகர் பாடுபடுவது அவனுக்குப் பிரியமில்லை. உலக மகிமையை விரும்பினான். ஆண்டவர் ஒரு பெரிய ராஜ்யத்தை ஸ்தாபித்து, சீஷருக்கும், விசேஷமாய் தனக்கும் உயர்ந்த அந்தஸ்தையும், அதிகாரத்தையும் கொடுக்கவேண்டுமென்று ஆசைப்பட்டான். எல்லாம் உலகம்! உலகம்! உலகம்! 'ஆண்டவரே! இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்துகொள்ளத் தொடங்கினான்.' அப்போது ரக்ஷகர் அவனை விசனத்தோடு கண்டித்து, 'எனக்குப் பின்னாகப்போ சாத்தானே, நீ தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷனுக்கேற்றவைகளைச் சிந்திக்கிறாய்' என்றார் (மத். 16: 22, 23). பார்த்தீர்களா? உலக சிந்தையுள்ள சீஷனைச் சாத்தான், பிசாசு என்று அழைக்கிறார். அப்படியானால் கிறிஸ்தவ சபையில் எத்தனையோ சாத்தான் பிசாசுகளிருக்கிறார்கள். பயங்கரமான வார்த்தை! எச்சரிக்கையாயிருப்போமாக! உலக சிந்தை மாம்ச சிந்தை. திருஷ், (1) அந்தக் கிறிஸ்தவனைப் பாருங்கள். பொருளாசைக்காரன், அவன் எண்ணம் எல்லாம் கூடி பணம் சம்பாதிக்கவேண்டும். நிலங்களைச் சம்பாதிக்கவேண்டும். அவன் பேச்சு எல்லாம் பணம்பணம், நிலங்கரை, கொடுக்கல் வாங்கல், முதல்வட்டி; கர்த்தருடைய பரிசுத்த ஓய்வுநாளில் முதலாய் அந்த எண்ணத்தையும் பேச்சையும் விட்டுவிடாமல் கர்த்தருடைய கற்பனையைத் துணிந்து மீறுகிறான். அவன் சிந்தை பரத்துக்கு ஏறுவது கிடையாது. மோட்சத்துக்குப்போக அவனுக்கு ஆசையே கிடையாது.

ஆகையால் மரணம் வந்தால் பயப்படுகிறான், புத்தியீனனே! உலக சிந்தையினால் அனனியாவும் சப்பீராளும் கெட்டுப்போகவில்லையா? பொருளாசையினாலே யூதாஸ் நித்திய செல்வங்களை இழந்து அதோகதியாய்ப்



தோற்றத்தையும் நிதானிக்க 'உங்களுக்குத் தெரியுமே, இந்தக் காலத்தையோ நிதானியாமற்போகிறதென்ன'? (56 வா). எஜமான் வரும் நாளும் நேரமும் தெரியமாட்டாது. ஆனால் எஜமான் வரும் காலமோ நிதானித்து அறியப்படவேண்டுமென்று அவர் தாமே போதிக்கிறார். அவர் தாம் வரும் காலத்துக்குத் திட்டமான அடையாளங்கள் கொடுத்துப்போயிருக்கிறார். அவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது அவருடைய வருகையும், நமது மீட்பும், தேவனுடைய இராஜ்யமும் சமீபமாயிற்றென்று அறிந்துகொள்ளச் சொன்னார். அவ்வடையாளங்கள் எக்காலத்திலுமில்லாத பிரகாரமாய் இக்காலத்தில் நிறைவேற்றத் துவக்கிவிட்டதென்று சொல்லலாம். அப்படியில்லை என்று சொல்லத் துணிவார் இல்லை. ஆதலால் 'நீங்களும் ஆயத்தமாயிருங்கள்'.

இரண்டாவது, என்னென்ன விதமாய் ஆயத்தமாயிருக்கவேண்டும் என்று அவர் போதித்ததைப் பார்ப்போம். ஆயத்தமாயிருக்கச்சொன்னவர் ஆயத்தம் இன்னதென்றும் சொல்லியிருக்கிறார். எவரும் கடைசியில் போக்குச்சொல்ல இடமில்லாதபடிக்கு அவர் இதையும் திட்டமாய்ச்சொல்லிப்போட்டார். 'தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும் ஆயத்தமாயிராமலும் அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான்' (47 வா).

1-வது 'தேவனுடைய இராஜ்யத்தையே தேடுங்கள்' (31 வா). 'பழமையாய்ப்போகாத பணப்பைகளையும் குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்து வையுங்கள். உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்'. (33, 34 வா). நமக்கு இராஜ்யத்தைக்கொடுத்த பிதா பிரியமாயிருக்கிறார். (32 வா). இராஜா வரும்போது நமக்கு இராஜ்யமும் வரும். ஆனால் இக்காலத்தில் நாம் தேவனுடைய இராஜ்யத்தை மாத்திரம் தேடவேண்டும். பரலோக சிம்மாசனத்தில் வீற்றிருக்கிற இயேசு இராஜாவே நமது பொக்கிஷமாயிருக்கவேண்டும். நமது இருதயத்தின் ஆசையும் மனதின் சிந்தையும் பரத்திலேயே இருக்கவேண்டும். அப்பொழுது நம்முடைய குடியிருப்பு பரலோகத்தில் இருக்கும். அங்கிருந்து நமது இரட்சகர் வர நாம் எதிர்நோக்குகிறவர்களாயிருப்போம். இதுவே முதலாம் ஆயத்தம்.

2-வது. உங்கள் அரைகள் கட்டப்பட்டதாகவும் விளக்குகள் எரிகிறதாகவும் இருக்கட்டும். எஜமான் வந்து தட்டும்போது உடனே அவருக்குத் திறக்கும்படி எப்பொழுது வருவார் என்று காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாக இருங்கள், என்று இயேசு சுவாமி சொல்லுகிறார். (36 வா). கட்டப்படவேண்டிய அரைகள் சரீரத்தின் அரைகளல்ல 'நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்' என்று பரிசுத்த பேதுரு சொல்லுகிறார். (1 பேதுரு 1—13). ஒரு பட்டணத்தைப் பிடிக்கிறதைவிட, தன் மனதை அடக்குவதே வாசி. மனதிலே ஆவிக்குரிய சிந்தையும் கிறிஸ்துவின் சிந்தையும் உண்டாவதே கிறிஸ்துவின் வருகைக்குச் செய்யப்படவேண்டிய ஆயத்தம். அப்பொழுது ஜீவியம் பிரகாசிக்கும். இப்படிப்பட்ட ஜீவியமுள்ளவர்கள் மணவாளன் வரும்போது கலியாணவீட்டுக்குள் பிரவேசிப்பார்கள், மற்றவர்கள் வெளியே நின்று தட்டுவார்கள்.

3-வது, அதிகம் கொடுக்கப்படுகிறவனிடத்தில் அதிகம் கேட்கப்படும். ‘மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில் அதிகமாய்க் கேட்பார்கள்’ (48 வா). ஆதலால் எல்லாரும் அவரவருடைய தகுதிக்குத்தக்கதாகப் பிரயோஜனமுள்ளவர்களாயிருக்கவேண்டும். அதிகத் தாலந்துகளைப் பெற்றவர்கள் அதிகமாய அவைகளை மற்றவர்களுக்கென்று உபயோகிக்கவேண்டும். சோம்பேறி அவர் வரும் நாளில் பொல்லாதவன் என்று அழைக்கப்படுவான். கொஞ்சத்தில் உண்மையாயிருந்தவனே அநேகத்தின்பேரில் அதிகாரியாக வைக்கப்படுவான். இயேசு இராஜா வரும் நாளுக்குச் செய்யப்படவேண்டிய ஆயத்தங்கள் இவைகளே. இந்தவிதமாய் ‘நீங்களும் ஆயத்தமாயிருங்கள்’.

மூன்றாவது, ஆயத்தமாயிருக்கிறவர்களுக்குக் கிடைக்கும் பாக்கியம் இன்னதென்றும் பார்ப்போம். இதையும் இயேசு சுவாமி தெளிவாய்க் காண்பித்திருக்கிறார். ஆயத்தமாயிருக்கிறவர்கள் பாக்கியவான்களென்று அவர் பலமுறை சொல்லுகிறார்.

1-வது, ஆயத்தமாயிருக்கிறவர்கள் எஜமானை தரிசிப்பார்கள். எஜமான் கலியாணத்திலிருந்து எப்பொழுது வருவானென்றே அவர்கள் காத்திருக்கிறார்கள் (36 வா). அவரை தரிசிப்பதுதான் அவர்களுக்குக் கிடைக்கும் மேலான பாக்கியம். அவர்கள் தங்கள் இராஜாவை மகிமை பொருந்தினவராகக்கண்டு களிகூருவார்கள். இதற்கு நிகரான பாக்கியம் வேறொன்றுமில்லை.

2-வது, பரலோக இராஜ்யத்தின் விருந்தில் அவர்கள் பங்கு பெறுவார்கள். இயேசு இராஜா பந்தி விசாரணைசெய்வார். ‘அவர் அரை கட்டிக்கொண்டு அவர்களை பந்தியிருக்கச்செய்து, சமீபமாய் வந்து, அவர்களுக்கு ஊழியஞ்செய்வார் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (37 வா). எஜமான் ஊழியக்காரருக்கு ஊழியஞ்செய்வாராம்! என்ன மாட்சிமை! என்ன தாழ்மை! இயேசு எஜமானுக்கு ஸ்தோத்திரம்.

3-வது, பலன்கள் அளிக்கப்படும். ‘தனக்குள்ள எல்லாவற்றின் மேலும் அவனை விசாரணைக்காரனாக வைப்பான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்’ (44 வா). கொஞ்சத்தில் உண்மையாயிருந்தவன் அநேகத்தின்பேரில் அதிகாரம்பெற்று, எஜமானுடைய சந்தோஷத்துக்குள் பிரவேசிப்பான். ஆயத்தமாயிராத ஊழியக்காரன் கடினமாய்த் தண்டிக்கப்படுவான் (46 வா).

‘நீங்களும் ஆயத்தமாயிருங்கள்’ உலகம் முழுவதும் ஆயத்தமாகும் முறை எப்படி? ‘பூமியின்மேல் அக்கினியைப் போடவந்தேன், அது இப்பொழுதே பற்றி எரியவேண்டுமென்று விரும்புகிறேன்’ (49 வா). அக்கினி பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறபடியே, உபத்திரவத்தையும் குறிக்கும். பூமியின்மேல் இக்காலயுத்த அக்கினி போடப்பட்டிருக்கிறதென்று சொல்லலாம். ஐரோப்பாவின் இராஜ்யங்கள் அக்கினிக் குகைக்குள் அகப்பட்டு ஆண்டவருடைய வருகைக்கு ஆயத்தப்படுகிறது. இந்நாட்டிலும் அக்கினி போடப்படுமுன் இந்தியர்கள் சுவாமியுடைய வருகைக்கு ஆயத்தப்படமாட்டார்கள். சுவாமி! இந்தியருடைய நாட்டையும் உமது வருகைக்கு ஆயத்தப்படுத்தும்!

162438

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.



போகவல்லையா? ‘உலக சிந்தை மரணம்’. (2) அங்கே, தெற்கே கள்ளுக்கடை ஒன்றிருக்கிறது. நான் அந்தப்பக்கம் போகும்போதெல்லாம் ஜனங்கள் அதிலே கூடுகிறார்கள், குடிக்கிறார்கள், கெட்டுப்போகிறார்கள் சில கிறிஸ்தவர்கள் விசேஷமாய்க் கிறிஸ்தவ வாலிபர்கள் அங்கேபோய்க் கள் குடிப்பதுண்டு. உஷ்ணகாலத்தில் அதினாலே தேகத்தில் பெலனுண்டாகிறதென்று போக்குச்சொல்லுகிறார்கள். பார்த்தீர்களா? மாம்ச சிந்தை உலக சிந்தை. உலகத்தாருடைய சாக்குப்போக்கு. அருமையானவர்களே! மோசம்போகவேண்டாம; மாம்ச சிந்தை மரணம்’. ‘அசுத்தமானதைத் தொடாதிருங்கள்’. ‘திருடரும், பொருளாசைக்காரரும் வெறியரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை’ (1 கொ. 6: 10). (3) ஸ்திரீகளும் இந்தப் பாவத்துக்கு நீங்கினவர்களல்ல. அநேகருடைய எண்ணம் என்னவென்றால்—நகைகளைப் போடவேண்டும், நல்ல வஸ்திரங்களை வாங்கவேண்டும். ஒரு பெண்பிள்ளையை அறிவேன். அவளுக்கு ஒரு விசேஷித்த சேலையுண்டு. உத்தேசம் ரூ. 500 பெறும் சேலை! அப்புறம் புருஷன் பெரிய வீடு கட்டவேண்டும். ஊரில்தான் அதிகாரம் செலுத்தவேண்டும். எல்லாம் உலகம், மாம்சம், சரீரம்; மரியாளைப்போல நல்ல பங்கைத் தெரிந்துகொள்ளுவதில்லை. சகோதரரே! இந்த உலகசிந்தை மாறவேண்டும். இல்லாவிட்டால் மோட்சத்துக்குப் போகமாட்டோம். போனாலும் அங்கே இருக்க நமக்குப் பிரியமிராது. மனந்திரும்புங்கள்.

III. சுபாவ சிந்தை எல்லாம் மாம்ச சிந்தை. நான் பொருளாசைக்காரனுமல்ல, பெருமைச் சுபாவமுள்ளவனுமல்ல, வெறியனுமல்லவென்று உங்களைத் தேற்றிக்கொள்ளவேண்டாம். ‘மாம்சத்தால் பிறப்பதெல்லாம் மாம்சமாயிருக்கும்’ (யோ. 3: 6). ஜெபம் ஆனாலும் சரி, வேத வாசிப்பு ஆனாலும் சரி, பிரசங்கம் ஆனாலும் சரி, அது தேவாவியால் பிறவாமல் நம்முடைய சொந்த சுபாவத்தினாலே பிறந்ததென்றால் அது மாம்சமே. ‘விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே’ (ரோ. 14: 23). தானதர்மம் என்றாலும், நன்கொடை என்றாலும, ஸ்தோத்திரபலி என்றாலும் உயிருள்ள விசுவாசத்தினாலே உண்டானதல்ல என்றால் பாவமே! அப்படிப்போல தேவாவியால் பிறவாத யாவும் மாம்சமே. அப்படியானால் மாம்ச சிந்தை எவ்வளவு! பரிசுத்த ஆவியினுடைய ஏவுதலினாலே பேசாத வார்த்தை யாவும் மாம்சவார்த்தை; அவருடைய கிருபையால் உண்டாகாத சிந்தை எல்லாம் மாம்ச சிந்தை. ‘மாம்ச சிந்தை மரணம்’. 2 தெச. 2: 19—22.

Rev. T. Walker.

# பிலிப்பென்னும் சுவிசேஷகன் அப். 21: 8.

(தொடர்ச்சி)

சுவிசேஷ வேலை செய்தார் என்றால் என்ன பிரசங்கம் செய்தார்?

1. கிறிஸ்துவைக்குறித்துப் பிரசங்கித்தார் 8: 5-35, கிறிஸ்துவை மேன்மைப்படுத்துகிறவன்தான் மேலான கிறிஸ்தவன். கிறிஸ்து நம்முடைய வாயினால் புகழப்படுகிறாரா? என்பதைக் கவனிக்கவேண்டும்.

2. தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றிப் பிரசங்கம் செய்தார். 8: 12. பரலோகராஜ்யம் சமீபமாயிருக்கிறது என்பது கிறிஸ்து ரக்ஷகருடைய விளம்பரமல்லவா. தேவனுடைய ராஜ்யத்தில் பங்குபெற அதை எதிர்பார்த்து நாம் ஜீவிக்கிறோமா? நாம் தேவனுடைய ராஜ்யத்தை நம்பி ஜீவிக்கிறவர்கள் என்று நம்மைப் பார்க்கிற மற்றவர்கள் நம்மைக்குறித்து சாக்ஷி சொல்லக்கூடுமா? பொல்லாங்கனுக்குள் கிடக்கிற இந்த உலகத்தில் அலைசடிப்பட்டு துயரப்படுகிற பாவிகளுக்குப் பரமராஜ்யத்தை பரீஷ்காரமாய்க் காட்டுகிறோமா?

3. தேவ வசனத்தைப் பிரசங்கித்தார். அதாவது கிறிஸ்துவைப் பற்றிச் சொன்னார். நாம் தேவ வசனத்தைப் பேசவேண்டியவர்களாயிருக்கிறோமே ஒழிய, சாஸ்திரங்களையும் உலக ஞானங்களையும் கலைக்கியானங்களையும் உயர்த்திப் பேசவேண்டியவர்களல்ல. சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப்பற்றிய தேவவசனத்தையே பிரசித்தப்படுத்துவோமாக.

பிலிப்புவுக்குச் சுவிசேஷகன் என்ற பேர் கொடுத்திருக்கிறது. 21: 8. உதவிக்காரன் என்ற அவருடைய பட்டப்பேரால் அல்ல சுவிசேஷகன் என்ற சிறப்புப் பேரால் அழைக்கப்படுகிறார். சுவிசேஷத்தை வாயிலுடையவனே சுவிசேஷகன். இதை வாசிக்கிற சகோதரனே, உனக்கும் எனக்கும் இந்தப் பேர் கிடைத்தால் எவ்வளவு நன்மையாயிருக்கும். அவரைப் பார்த்த கிறிஸ்தவ சகோதரர் அவரைச் சுவிசேஷகன் என்று கண்டார்கள். சபையில் அவருக்குக் கிடைத்தபேர் சுவிசேஷகன். தேவ சபையில் நமக்குக் கிடைக்கிற பேரென்ன? "சமாதானத்தைக்கூறி நற்காரியங்களை அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள்".

சுவிசேஷகனாகிய பிலிப்பு வார்த்தையிலும் செய்கையிலும் எப்படி விளங்கினார் என்று கொஞ்சம் பார்ப்போம்.

1. சுறுசுறுப்பாய் வேலைசெய்தவர், சமாரியாவிலிருந்து எருசலேம் 30 மயிலுக்குமேலாக இருக்கிறது. எருசலேமிலிருந்து காசா சுமார் 45 மயிலிலிருக்கிறது. எப்படியும் சமாரியாவிலிருந்து குறுக்கு வழியாய்ப் போனாலும் 60 மயிலுக்குக்குறையாத பிரயாணமாயிருக்கும். இவ்வளவுதூரம் வனாந்தரவழியாய், ஒருவேளை முன்தெரியாத பாதையாய், தனியேபோகிறது லேசானகாரியமல்ல, சொல்லவேண்டுமானால் கால் கடுத்துப்போயிருப்பார். இவ்வளவுதூரம் பிரயாணம் சென்றவரைப்பார்த்து, பரிசுத்தாவியானவர் சாரதியைப்போய்ச் சேர்ந்துகொள் என்கிறார். பிலிப்பு ஓடிப்போய்ப் பிடிக்கிறார். இவருடைய ஓட்டம் கேயாசின் ஓட்டமோ. மனம்போன போக்கில் போகிற ஓட்டமோ. சுயலாபத்தைக் கருதிய ஓட்டமோ. இல்லவே இல்லை. மந்திரியோடு செய்யவேண்டிய சுவிசேஷ வேலை முடிந்த பின் பரிசுத்தாவியானவர் பிலிப்புவைக் கொண்டுபோய்விட்டார் (8: 39) என்று பார்க்கிறோம். எவ்வளவு ஆத்திரமாய் வேலைநடக்கிறது. காசாவிலிருந்து 20 மயில் தூரத்துக்கப்பாலிருக்கிற ஆசோத்திலே காணப்படுகிறார். அப்பால் மத்தியதரை கடற்கரையருகில் 40 மயிலுக்கு மேலாகப் பிரயாணம் பண்ணி சுவிசேஷத்தைப்பரப்பி செசரியா வந்துசேர்ந்தார். சொகுசும் பிரயாண வசதியும் கிடையாது. சாப்பாட்டு விஷயம் கஷ்டம். என்றாலும் கர்த்தருடைய நாமத்துக்காய் சுவிசேஷ வேலையின்பொருட்டு இப்படிச் செய்தார். இந்த உத்தம சுவிசேஷகனை மாதிரியாக நினைப்போமாக. சுவிசேஷன் என்ற பேர் சும்மா லேசாகக் கிடைத்ததல்ல என்பதை அறிவோமாக.

2. நாட்டிலும் காட்டிலும் வேலைசெய்தவர். பிலிப்புவின் வேலை விசேஷமானது. யூதர் அற்பமாய் எண்ணித் தள்ளிவைத்திருந்த சமாரியாவில் போய் வேலைசெய்தார். அப்பால் புறஜாதியானை மந்தையில் முதலாவது சேர்த்தவர் இவரே. கந்தாகே என்பவளுடைய மந்திரியை அவன் புறஜாதியானாயிருந்தாலும் ஞானஸ்நானம் கொடுத்து அவன் கிறிஸ்தவனாகிறதற்கு சுவிசேஷவேலைசெய்தார். வனாந்தரத்திலும் கடலோரங்களிலும் வேலைசெய்ய ஆயத்தமாயிருந்தார்.

இயேசுவோடு எங்கும்
செல்லுவேன் செல்லுவேன்
இயேசுவோடு எங்கும்—நான்
எங்கும் செல்லுவேன்.

என்று நாம் சொல்ல ஆயத்தமாயிருப்போமாக.

3. குடும்பத்தை நல் வளர்ப்பில் வைத்த ஊழியர். அதி 21: 8, 9-ல் நாம் வாசிக்கிறபடி தீர்க்கத்தரிசனம் சொல்லுகிற நாலு குமாரத்திகள் அவருக்கிருந்தார்கள் என்று வாசிக்கிறோம்.

நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் என்று சொன்ன பக்தனைப்போல இவரும் இவருடைய குடும்பமும் கர்த்தரைச் சேவித்தார்கள். கர்த்தரைப் பிரஸ்தாபப்படுத்தினார்கள். தேவ ஊழியக்காரனுடைய பிள்ளைகள் கெட்டபிள்ளைகளாயிருந்தால் அவனுடைய ஊழியத்துக்கு மதிப்பு கிடையாது. தேவநாமத்துக்கு கனக்குறைச்சலாகக் காணப்படும். இந்த தேவ ஊழியக்காரனைப்போல அநேக சுவிசே

ஷகரை கர்த்தர் நம் நாட்டில் எழுப்புவாராக. அல்லாமலும் இந்தச் சுவிசேஷகன் ஊழியஞ்செய்த இடங்களிலெல்லாம சகோதரஷகாரணறுப் விளங்கினார். 8: 8, 39. நாம் இருக்கிற இடத்திலே சமாதானமும் திவ்விய சந்தோஷமும் பெருகக் காரணமாயிருப்போமாக.

நம் நாட்டிலும் பிலிப்புவைப்போலொத்த சுவிசேஷகர் அநேகரைக் கர்த்தர் எழுப்பியருளுவாராக.

---

## 'நீங்களும் ஆயத்தமாயிருங்கள்'

பரி. லூக்கா 12: 40.

கர்த்தராகிய இயேசுதாமே தமது இரண்டாம் வருகையைப்பற்றி மகா தெளிவாய்ப் போதித்திருக்கிறார். அவரைப்போல் அதைப் போதித்தவர்கள் எவருமில்லை. அவருடைய மறுரூப நாளுக்குப் பின்னான காலத்தில் அவர் அதைப்பற்றி அடிக்கடி மகா திட்டமாய்ப் போதித்தார். அப்போதனைகள் பரிசுத்த லூக்காவில் அதிகமாய் வருகிறது. அவைகளில் ஒன்றை இந்த அதிகாரத்தில் பார்க்கலாம். அருமை இரட்சகரின் பாததண்டை உட்கார்ந்து இந்தப் போதனையைக் கற்றுக்கொள்வோம்.

முதலாவது, நாம் ஆயத்தமாயிருப்பதற்கு அவர் கொடுக்கிற முகாந்தரங்களைப் பார்ப்போம். கர்த்தராகிய இயேசு இதைத் தெளிவாய்க் காட்டியிருக்கிறார். அவர் காட்டிய முகாந்தரங்கள் மகா முக்கியமானவைகள் என்று காணலாம். முகாந்தரங்கள் முக்கியமானால் ஆயத்தம் ஆத்திரமாய்ச் செய்யப்படவேண்டும்.

1-வது, வரப்போகிறவர் நிமித்தம் ஆயத்தமாயிருக்கவேண்டும். அவர் மணவாளனாக கலியாணத்திலிருந்து வருகிறார். (36 வா). அவர் வீட்டு எஜமானாக ஊழியக்காரரிடத்தில் வருகிறார் (43 வா). அவர் இராஜாவாக இராஜபத்தைக் கொடுக்கவருகிறார் (32 வா). இப்படிப்பட்டவருக்கு எப்போதும் ஆயத்தமாயிருக்கவேண்டும். அவருக்கு மகா பெரிய ஆயத்தமும் செய்யப்படவேண்டும். மணவாளன்பேரில் அன்பு பெருகவே, எந்த அளவான ஆயத்தமும் போதாதென்றே எண்ணப்படும். எஜமான் எப்பொழுது வருவார் என்று காத்திருக்கிற மனுஷர் பாக்கியவான்களாம். தமது இராஜ்யத்துக்கும் மகிமைக்கும் நம்மை அழைத்திருக்கிற ஆண்டவருக்குப் பாத்திரவான்களாய்க் காணப்படுவதற்கு எவ்வளவோ ஆயத்தம் செய்யப்படவேண்டும்.

2-வது, கால அநிச்சயத்தினிமித்தம் ஆயத்தமாயிருக்கவேண்டும். 'திருடன் இன்ன நேரத்திலே வருவான் என்று வீட்டெஜமானுக்குத் தெரிந்திருந்தால் அவன் விழித்திருந்து தன் வீட்டைக் கன்னமிடவொட்டான் என்று அறிந்திருக்கிறீர்கள். அந்தப்படியே நீங்கள் நினையாத நேரத்திலே மனுஷகுமாரன் வருவார். ஆகையால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள்'. (40 வா). திருடன் வரும் நேரம் தெரிந்த வீட்டெஜமான் எப்படி விழித்திருப்பானோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் நேரம் தெரியாதிருந்தாலும் அவருக்குக் காத்திருக்கவேண்டுமாம். இதுவே இயேசு சுவாமியின் போதனை. இந்தப்படி விழித்திராவிட்டால், 'நினையாத நாளிலும் அறியாத நேரத்திலும்' எஜமான் வந்துவிடுவார் (46 வா).

3-வது, இந்தக் காலத்து அடையாளங்களினிமித்தம் ஆயத்தமாயிருக்கவேண்டும். 'மாயக்காரரே, பூமியின் தோற்றத்தையும் வானத்தின்